லட்சுமி பாலாஜி பதிப்பகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நிழல்ஆட்ட யுத்தம் ★ முத்துலட்சுமி ராகவன்

முத்துலட்சுமி ராகவன்

நிழல்ஆட்ட யுத்தம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம்

லட்சுமி பாலாஜி பதிப்பகம் ★ நிழல்ஆட்ட யுத்தம் ★ முத்துலட்சுமி ராகவன்

முத்துலட்சுமி ராகவன்

நிழல்ஆட்ட யுத்தம்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய
நிழல் ஆட்ட யுத்தம்

Contents

அத்தியாயம்- 1
அத்தியாயம்- 2
அத்தியாயம் - 3
அத்தியாயம் - 4
அத்தியாயம் - 5
அத்தியாயம்- 6
அத்தியாயம்- 7
அத்தியாயம் - 8
அத்தியாயம்-9
அத்தியாயம் - 10
அத்தியாயம்- 11
அத்தியாயம் - 12
அத்தியாயம் - 13
அத்தியாயம்- 14
அத்தியாயம் - 15
அத்தியாயம் - 16
அத்தியாயம் - 17
அத்தியாயம் - 18
அத்தியாயம் - 19
அத்தியாயம்-- 20
அத்தியாயம்- 21
அத்தியாயம்- 22
அத்தியாயம் - 23
அத்தியாயம் - 24
அத்தியாயம்- 25
அத்தியாயம் - 26
அத்தியாயம்- 27
அத்தியாயம் - 28
அத்தியாயம் -29
அத்தியாயம் -30
அத்தியாயம் - 31

அத்தியாயம் -32
அத்தியாயம்- 33
அத்தியாயம் - 34
அத்தியாயம் -35
அத்தியாயம் -36
அத்தியாயம் -37
அத்தியாயம் -38
அத்தியாயம் - 39
அத்தியாயம் -40
அத்தியாயம் -41
அத்தியாயம் -42
அத்தியாயம் -43
அத்தியாயம் -44
அத்தியாயம் -45
அத்தியாயம் -46
அத்தியாயம் -47
அத்தியாயம் -48
அத்தியாயம் -49
அத்தியாயம் -50
அத்தியாயம் -52
அத்தியாயம் -53
அத்தியாயம் -54
அத்தியாயம் -55
அத்தியாயம் -56
அத்தியாயம் -57
அத்தியாயம் -58
அத்தியாயம் -59
அத்தியாயம் -60
அத்தியாயம் -61
அத்தியாயம் -62
அத்தியாயம் -63
அத்தியாயம் -64
அத்தியாயம் -65
அத்தியாயம் -66
அத்தியாயம் -67
அத்தியாயம் -68
அத்தியாயம் -69
அத்தியாயம் -70

அத்தியாயம் -73
அத்தியாயம் -74
அத்தியாயம் -75
அத்தியாயம் -76
அத்தியாயம் -77
அத்தியாயம் -78
அத்தியாயம் -79
அத்தியாயம் -80
அத்தியாயம் -81
அத்தியாயம் -82
அத்தியாயம் -83
அத்தியாயம் -84
அத்தியாயம் -85
அத்தியாயம் -86
அத்தியாயம் -87
அத்தியாயம் -88
அத்தியாயம் -89
அத்தியாயம் -90
அத்தியாயம் -91
அத்தியாயம் -92
அத்தியாயம் -93
அத்தியாயம் - 94
அத்தியாயம் -96
அத்தியாயம் -97
அத்தியாயம் -98
அத்தியாயம் -99
அத்தியாயம் -100
அத்தியாயம் -101
அத்தியாயம் -102
அத்தியாயம் -103
அத்தியாயம் -104
அத்தியாயம் -105
அத்தியாயம் -106
அத்தியாயம் - 107
அத்தியாயம் - 108
அத்தியாயம் -109
அத்தியாயம் -110
அத்தியாயம் -111

அத்தியாயம்- 1

உருவத்தோடு போராடலாம்..

நிழலோடு எப்படிப் போராடுவது..?

மாலை மயங்கிக் கொண்டிருந்த அந்த நேரத்தில் கடற்கரை மணலின் துகள்கள் தங்க நிறத்தில் தகதகப்பதை தனது செல்போனில் படம் பிடித்தான் சித்தார்த்தன்.. கடலோரக் கோவில்களின் சிற்ப நுணுக்கங்களை ஆச்சரியத்துடன் பார்வையிட்டவனுக்கு இதை உருவாக்கியவன் மகா கலைஞன் என்ற சிலிர்ப்பு ஏற்பட்டது..

உலகம் முழுவதும் அறியப்பட்ட அந்த சிற்ப நகரமான மாமல்லபுரத்தின் கடற்கரையில் அலைகள் கால் நனைக்க நின்றவனுக்கு.. இந்தக் கலை பொக்கிசங்கள் எங்களின் இந்தியத் திருநாட்டைச் சேர்ந்தவை என்ற பெருமிதத்தில் நெஞ்சு புடைத்தது..

"ஆ.. ஆ.. ஆ..."

மெலிதான ராகத்தில் அவன் தூக்கி வாரிப் போட திரும்பிப் பார்த்தான்.. மாலை மயங்கி இருள் சூழ்ந்து கொண்டிருந்த அந்த வேளையில் கடற்கரையில் ஜன நடமாட்டம் குறைந்திருந்தது..

கைவண்டிகளின் விளக்கு ஒளிர்வும்.. கடற்கரை ஓர உணவகங்களின் விளக்குகளும் அந்தக் கடற்கரையை வெளிச்சமிட்டுக் காட்டினாலும்.. சுற்றிப் பார்க்க வந்தவர்கள் அந்த இடத்தை விட்டு அகன்று கொண்டிருந்தார்கள்..

அங்கொருவரும்.. இங்கொருவருமாக இருந்த கடற்கரையில் அந்த சுகமான ராகம் எங்கிருந்து வருகிறது..?

சித்தார்த்தன் செல்போனை அணைத்துவிட்டு.. காற்றில் கலந்து வந்த ராகம் வந்த திசையை நோக்கி நடந்தான்..

'ஐந்து ரதங்கள்' எனப்படும் 'பஞ்ச பாண்டவரின் ரதங்கள்..' தெற்கிலிருந்து வடக்காக சரிந்த சிறு குன்றிலிருந்து செதுக்கப் பட்டிருந்தது... இவை ஒற்றைக்கல் கோவில்களாக.. சிறு தொகுதியாக கடற்கரை ஓரத்தில் கம்பீரமாக வீற்றிருந்தது.. பஞ்ச பாண்டவ ரதங்கள் என்று அழைக்கப்படும் இந்த ஐந்து ரதங்களுக்கும்.. மகா பாரதத்திற்கும்.. யாதொரு தொடர்பும் இல்லை.. எதனால் இந்தப் பெயர் உருவானது என்று யோசித்தபடி நடந்த சித்தார்த்தனை.. அந்த இருள் படறத் தொடங்கிய நேரத்திலும் மாமல்லபுரத்தின் சிற்பக்கலை கவர்ந்தது..

இயற்கையான பாறையை மேலிருந்து கீழ்நோக்கிச் செதுக்கித் தோற்றுவிக்கப்பட்ட ஒற்றைக்கல் கோவிலே 'ரதம்' என்று அழைக்கப்படுகிறது.. இதன் தோற்றம் 'தேர்' போலவே அமைந்திருப்பதால்.. 'தேர்' என்ற பொருள்படும் 'ரதம்' என்ற பெயர் இவற்றுக்கு சூட்டப்பட்டது.. இந்த ரதக் கோவில்களே.. பல்லவர்காலத்துக் கோவில்களுக்கு பின்னால் கட்டப்பட்ட கோவில்களுக்கு முன்மாதிரியாக அமைந்தன.. இவற்றின் மேல்பகுதி விமானம் என்று அழைக்கப்படுகிறது..

ஒவ்வொரு ரதக் கோவில்களிலும் தனி விதமாய் தூண்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன.. ஒவ்வொரு ரதத்திற்கும் ஒரு கருவறை உண்டு.. கருவறைக்கு இருபுறமும் வாயிற்காப்போரும் உண்டு..

அந்த ரதங்களை ஒட்டிய பகுதியிலிருந்துதான் அந்தப் பெண் குரலின் கானம் கேட்டது.. சித்தார்த்தன் தூண் மறைவில் ஏதேனும் பெண் இருக்கிறாளா என்று தேடியபடி ஐந்து ரதக் கோவில்களுக்குள் சுற்றினான்..

"ஏழு ஸ்வரங்களுக்குள்..

எத்தனை பாடல்..?"

உணர்வுமலைகளை ஒன்று சுமந்ததைப் போல நெகிழ்வுடன் வந்தது அந்த கீதம்.. காற்றினிலே வரும் கீதத்தைப் பாடும் நாயகி யாராக இருப்பாள் என்று சித்தார்த்தனின் உடல் சிலிர்த்துப் போனது..

ஐந்து ரதக் கோவில்களில் ஆள்கள் இல்லை.. அங்கொருவரும்.. இங்கொருவருமாக இருந்தவர்கள் கடற்கரை மணலில் நடமாடிக் கொண்டிருந்தார்களே தவிர.. ரதத்தின் அருகில் வரவில்லை..

'பின்னே.. இந்த இருட்டு வேளையிலே ரதக் கோவிலுக்குள்ளே வந்து எந்தச் சிற்பத்தைப் பார்க்கப் போகிறாங்க..?'

அப்படிப்பட்ட ஆளரவற்ற தனிமையில் கானம் இசைப்பவள் யாராக இருக்கக் கூடும்..?

'மோகினியா..?'

அவனுக்கு உடல் வியர்க்கவில்லை.. சிரிப்புத்தான் வந்தது.. மோகினிப் பேய்க்கு இவ்வளவு இனிமையான குரலா..?

'ஆயகலை அறுபத்தி நான்கும் கற்ற மோகினி போல..'

அவனுக்கு அந்த மோகினியைப் பார்த்தே ஆக வேண்டும் போல தோன்றிவிட்டது..

ஆளில்லாத இடத்தில் மோகினியே வந்த பாடும் போது ஆண்பிள்ளை சிங்கமான அவன் அஞ்சி விலகிப் போவதா..?

'யாரடி நீ மோகினின்னு மோகினிப் பேயை மீட் பண்ணிக் கேட்கலைன்னா நானெல்லாம் என்ன ஆம்பளை..?'

சித்தார்த்தன் அச்சமில்லாமல் அந்த பாடல் வந்த திசையில் காற்றினில் வந்த கீதத்தின் சுவடைப் பற்றியபடி கீதத்தின் மூலத்தைத் தேடிப் போனான்..

இப்போது மிக அருகில் அந்த பாடல் ஒலித்தது..

"ஏழு ஸ்வரங்களுக்குள்..

எத்தனை பாடல்..?

இதய ஸ்வரங்களுக்குள்..

எத்தனை கேள்வி..?

காணும் மனிதருக்குள்..

எத்தனை சலனம்..?

வெறும் கற்பனை சந்தோசத்தில்

அவரது கவனம்..

ஏழு ஸ்வரங்களுக்குள்..

எத்தனை பாடல்..?"

சித்தார்த்தன் நின்று விட்டான்.. பொருள் பதிந்த அந்தப் பாட்டில் அவன் மனம் லயித்தது.. இந்தப் பாடலை இதற்கு முன்னால் கேட்டிருக்கிறோமா என்று அவன் யோசித்தான்.. அவனது நினைவுக் குவியல் இல்லை என்ற பதிலைத் தந்தது..

அவன் இக்கால இளைஞன்.. நகரத்தில் பிறந்து வளர்ந்தவன்.. மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவன்.. காதைக் கிழிக்கும் பாப் இசைக்கும்.. டிஸ்கொதே ஆட்டங்களுக்கும் பழக்கப்பட்டவன்..

இதுபோன்ற ஆழ்ந்த குரலுடன் கூடிய அருமையான தத்துவப் பாடலை அவன் கேட்டதே இல்லை..

ஏனோ தெரியவில்லை.. அவன் இதயக் கதவை அந்தப்பாடலின் கேள்விகள் தட்டித் திறந்தன..

"காலை எழுந்தவுடன்

நாளைய கேள்வி..

அது கையில் கிடைத்த பின்னும்..

துடிக்குது ஆவி..

ஏனென்ற கேள்வியொன்று

என்றைக்கும் தங்கும்..

மனிதன் இன்பம் துன்பம் எதிலும்..

கேள்விதான் மிஞ்சும்..

ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்..?"

ரதத்தின் தூணில் சாய்ந்து நின்று கண்களை மூடிக் கொண்டான் சித்தார்த்தான்.. கடலலைகளின் சப்தம் அந்தப் பாடலுக்கான தாள லயம் போல அவனுக்குத் தோன்றியது.. ஓர் அலையாய் எழுந்து அவன் மனதை நனைத்த அந்தப் பாடலின் சங்கீதத் திவலைகளில் நனைந்தது அவன் மனது.

இதுபோன்ற நுட்பமான அலையுணர்வை இதற்கு முன்பு அவன் அறிந்ததில்லையென்று அவனது அறிவு அவனுக்கு அறிவுறுத்தியது. சித்தார்த்தன், அடுத்த ரதக் கோவிலுக்கு நகர்ந்தான்..

ஏனோ அவன் மனதில் பாரம் வந்தது.. இன்னதென்று விளங்காத ஏக்கம் அவன் மனதைச் சூழ்ந்தது.. ஏன்.. எதற்காக.. என்று தெரியாமல் அவனை காந்தம் போல வசியம் பண்ணி இழுத்த அந்தப் பாடலின் ஒலியின் சுவடைப் பிடித்த வண்ணம் குரலுக்குரிய மோகினியை அவன் தேடிக் கொண்டிருந்தான்.. அவன் கண்கள் பனித்ததிற்கான காரணம் புரியாமல் குழம்பினான்..

"எனக்காக நீ அழுதால்..

இயற்கையில் நடக்கும்..

நீ எனக்காக உணவு உண்ண

எப்படி நடக்கும்..?

நமக்கென்று பூமியிலே

கடமைகள் உண்டு..

அதை நமக்காக நம் கையில்

செய்வது நன்று..

ஏழுஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்.."

ஏன் இந்தக்குரல் அவனை ஈர்க்கிறது..? சித்தார்த்தன் பித்துப் பிடித்தவனைப் போல ஆனான்.. ஜென்ம.. ஜென்மமாக அவன் அறிந்த குரலைப் போல அந்தக் குரல் அவனை வசியப்படுத்தி இழுப்பதற்கான தாத்பர்யம்தான்

என்ன..? அதைப் பாடும் மோகினியை அவன் அறிவானா..? எந்தப் பிறப்பில் அவளை அவன் அறிவான்..?

"ஆரம்பத்தில் பிறப்பும்..

உன் கையில் இல்லை..

இதில் அடுத்தடுத்த நடப்பும்

உன் கையில் இல்லை..

பாதை வகுத்த பின்பு

பயந்தென்ன லாபம்..?

அதில் பயணம் நடத்திவிடு

மறைந்திடும் பாவம்..

ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்..?"

உருக்கமான தொனியில் ஒலித்த குரலை அவன் சமீபித்து விட்டான்.. ஐந்தாவது ரதத்தின் தூண்களில் ஒன்றில் சாய்ந்து நின்று பாடிக் கொண்டிருந்தாள் அந்தப் பெண்.. காலடியோசையில் திரும்பிப் பார்த்தவளின் பாடல் நின்றது.. அவளது விழிகள் சித்தார்த்தனின் முகத்தை கூர்ந்து பார்த்தன.. அதில் தெரிந்த தவிப்பு.. சித்தார்த்தன் கொண்ட தவிப்பிற்கு இணையாக இருந்தது.. இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி சிலைகளாக நின்றார்கள்..

அத்தியாயம்- 2

காற்றோடு பாடல் சொன்ன..

மோகினி நீயல்லவோ...!

அந்தப் பெண் அழகாக இருந்தாள்.. உயரமாக.. ஒல்லியாக.. சந்தனத்தையும்.. மஞ்சளையும் கலந்து அரைத்துப் பூசினதைப் போல அவளது மேனியழகு இருந்ததை அந்த மெலிதான வெளிச்சத்திலும் சித்தார்த்தனால் இனம் காண முடிந்தது..

'என்னவொரு அழகு..!'

அவனால் வியக்காமல் இருக்க முடியவில்லை.. மங்கிய நிலா வெளிச்சத்தில் ஒரு தேர்ந்த சித்திரக்காரன் வரைந்த ஓவியத்தைப் போல தோற்றமளித்தவளை மெலிதான ஆச்சரியத்துடன் அவன் பார்த்தான்..

'இவ்வளவு அழகை வைச்சுக்கிட்டு.. இந்த இருட்டு வேளையில.. மாமல்லபுரக் கடலோர ரதக் கோவிலில உட்கார்ந்து.. கச்சேரி பண்ணுகிறதைப் போல பாடிக்கிட்டு இருக்காளே.. இவளுக்குப் பயமாய் இல்லையா..?'

நினைத்ததை அவளிடம் கேட்பதற்கு வாய் திறக்கப் போனான்.. அவள் முகத்தைப் பார்த்தபோது ஏனோ அவனுக்குப் பேச தோன்றவில்லை.. அவளுடைய முகம் அறிமுகமான முகத்தைப் போல அவனுக்குத் தோன்றியது.. இதற்கு முன்னால் இந்த முகத்தை வெகு அருகினில் அவன் பார்த்திருக்கிறான்.. எங்கேயென்றுதான் அவனுக்கு நினைவு வரவில்லை..

அவளுக்கும் அதே நிலைதான் என்பது அவன் முகத்தில் பதிந்த அவளது பார்வை அவன் முகம் முழுவதும் படர்ந்து துழாவியதிலிருந்து தெரிந்தது.. வாய் விட்டுக் கேட்டு விடலாமா என்று நினைத்தான்.. எங்கே..? நினைக்கத்தான் அவனால் முடிந்தது.. கேட்க முடியவில்லை..

அவனுக்குத்தான் அந்த இஞ்சி இடுப்பழகியின் முகத்தைப் பார்த்தால் வேறு எதையும் பேசத் தோன்றவில்லையே..

அசையாமல் நின்ற இருவரில் முதலில் சுதாரித்துக் கொண்டவள் அந்தப் பெண்தான்.. அறிமுகமில்லாத வாலிபனின் முகத்தை அப்படிப் பார்த்துக் கொண்டிருக்

கிறோமே என்ற கூச்ச உணர்வுடன் அங்கிருந்து நகர முற்பட்டாள்..

அவள் கிளம்புவதை சித்தார்த்தனின் மனம் பதிவு செய்த அதே நொடியில் அவன் அவளிடம் பேசிவிட்டான்..

"எக்ஸ்கியூஸ் மீ.."

அவனின் குரலில் என்னவோ அவன்

'என்னங்க.. கிஸ்.. மீ..' என்று சொல்லி விட்டதைப் போல அவள் வெகுண்டாள்..

"என்ன மிஸ்டர்..? தனியா நிக்கிற பொண்ணுகிட்ட கலாட்டா பண்ண வந்தீங்களா..?"

அவளது படபடப்பில் அவனுடைய எங்கேயோ பார்த்த மயக்கம் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவிட்டது.. அவன் தனது வழக்கமான நிமிர்வு கலந்த மிடுக்குடன் அவளைப் பார்வையிட்டான்..

உச்சி முதல் உள்ளங்கால்வரை அளந்த அவன் பார்வையில்..

'மாப்பிள்ளை கெட்டார் போ..' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் அவள்..

நினைத்ததுடன் நிறுத்திக் கொள்ளாமல்..

"என்ன சார்..? என்னைப் பெண் பார்க்க வந்திருக்கீங்களா..?" என்று கேட்கவும் செய்தாள்..

"தேவைதான் எனக்கு.." என்றான் சித்தார்த்தன்..

"யார் தேவை..?"

"நிச்சயமா உங்க தேவை எனக்கில்லைங்க.."

"பிழைச்சீங்க.."

"இதைப்பாருடா.. இல்லைன்னா என்ன செய்வதாய் உத்தேசம்..? 'லேடி டான்' கையில் இருக்கிற துப்பாக்கியில சுட்டுப் பொசுக்கியிருப்பீங்களோ..?"

"ஆக.. உங்களைப் போல ஆள்கள் இருக்கிற இடத்துக்கு வருகிற பெண்கள்.. 'லேடி டானா'த்தான் இருக்கனும்ங்கிறிங்க..?"

"நிச்சயமா.."

"இல்லேன்னா நீங்க அடங்க மாட்டிங்க..?"

"ஷ்யூர்.. ஷ்யூர்.."

"ஓகே.. உங்க ஆசையைக் கெடுப்பானேன்.."

தோளைக் குலுக்கி கையை விரித்தவள் தனது ஹேண்ட் பேகிலிருந்து கைக்கு அடக்கமான அந்தப் பொருளை எடுத்தாள்..

"என்னது அது..?" சித்தார்த்தான் விசாரித்தான்..

"துப்பாக்கி..! நீங்க ஆசைப்பட்டிங்கள்ல.." இலகுவாக அவள் பதில் சொன்னாள்..

"அதுசரி.. என்னவோ நான் வைரம், வைடூரியம் மேலே ஆசைப்பட்டதைப் போல இல்ல பேசி வைக்கறிங்க.. இது கையில இருக்கிற தைரியத்திலதான் இந்த இருட்டு வேளையிலே தனியாய் நின்னு பாடிக்கிட்டு இருந்தீங்களா..?"

"தனியாய் பாடறதுக்கு ரசனையும், ஞானமும் தான் வேண்டியிருக்கனும்ன்னு கேள்விப்பட்டிருக்கேன்.. துப்பாக்கியும் இருக்கனும்ன்னு இப்ப நீங்க சொல்லித்தான் கேள்விப்படறேன்.."

"எந்தக் காலத்தில இருக்கீங்க நீங்க..? பொழுது விடிஞ்சு பொழுது போகிற வரைக்கும் பெண்கள் எத்தனை தொல்லைகளுக்கு ஆளாகிறாங்கன்னு டிவி நியூஸிலேயும்.. பேப்பரிலயும் பார்க்கறதில்லையா..?"

"இது சுதந்திர இந்தியா.."

"அதுக்கு..?"

"நள்ளிரவில் ஒரு கன்னிப் பெண் உடல் முழுக்க நகைகளைப் போட்டுக்கிட்டு ஊரைச் சுற்றி வந்தாலும்

பத்திரமா வீடு வந்து சேர்ந்தாகனும்.. அப்பத்தான் இந்தியா சுதந்திரம் வாங்கினதா அர்த்தமாகும்ன்னு சொல்லி யிருக்காங்க.."

"யாரும்மா..?"

"நம்ம தேசத்தந்தை மகாத்மா காந்தி.."

"சொன்னவரையே சுட்டுத்தள்ளி சொர்க்கத்துக்கு அனுப்பி விட்ட பூமிம்மா இது.. அதனால.. வீணாய் இது போல ரிஸ்க்கை எடுக்காமல் வீடு போய் சேருங்க.."

"ஆகட்டும் மகனே.."

"என்னது மகனா..?"

சித்தார்த்தனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. இருந்திருந்த இந்த அழகான பெண்ணுக்கு அவனுடன் சொந்தம் பாராட்ட வேறு உறவுமுறை கிடைக்க வில்லையா..?

"யாருக்கு யார் மகன்..?"

"ஏன்..? எனக்குத்தான் நீங்க மகன்.."

அவள் அலட்டிக் கொள்ளாமல் பதில் சொன்னாள்.. இதற்குப் பதில் அவள் கையிலிருக்கும் துப்பாக்கியால் சுட்டேவிடலாம் என்று அவன் வெறியாகிப் போனான்..

"என்னைத் தத்தெடுக்க நீங்க ரெடியாய் இருக்கலாம்.. தத்துவர நான் ரெடியில்லை.. என்ன உலகமடா இது..? தனியாய் நிற்கிறாங்களேன்னு அட்வைஸ் சொல்ல வந்தா.. இவங்க அதுதான் சாக்குன்னு தத்தெடுக்கப் பார்க்கிறாங்க.. மகனாமில்ல.." அவன் பொருமினான்..

"ஹலோ மிஸ்டர்.."

"மகன் போய் மிஸ்டர் வந்தாச்சா..?"

"மகன்னு உறவு கொண்டாடினது நீங்கதான்.. நானில்ல.."

"நானா..?"

"நீங்களேதான்.. யாரும்மா.. பூமிம்மா.. பாரும்மா.. வீடு போய் சேரும்மான்னு வார்த்தைக்கு வார்த்தை அம்மா போடறீங்க..

என்ன..? உங்க மனசில ஃபீடிங் பாட்டில் குடிக்கிற பாப்பான்னு நினைப்பா..?"

"சேச்சே.." அவன் அவசரமாக மறுத்தான்..

"உங்களைப் போய் ஃபீடிங் பாட்டிலோட இருக்கிற பாப்பான்னு யாராவது சொல்லுவாங்களா..? யாரு நீங்க..?"

அவன் கேட்ட விதத்தில் தான் யார் என்ற சந்தேகம் அவளுக்கே வந்து விட்டது.. அந்த கோபத்துடன்..

"அதை நான் சொன்னா நல்லாயிருக்காது சார்.. நீங்களே சொல்லுங்க.." என்றாள்..

'அப்பாடி.. மகனை விட்டு விட்டாள்..' அவனுக்கு சந்தோசம் வந்தது.. அந்த சந்தோசத்துடன்..

"துப்பாக்கி வைத்திருக்கிற லேடி டாண்..!" என்றான்..

"நினைச்சேன்.."

ஹேண்ட்பேகில் துப்பாக்கியை வைத்தபடி அவள் சொன்னாள்.. வெகு காலம் பழகியவளைப் போல வெகு இயல்பாக அவள் அவனுடன் வார்தையாடியதில் அவனுக்குள் இருந்த வியப்பு அதிகரித்தது..

ஐந்து ரதக் கோவிலின் படிக்கட்டில் அவள் இறங்கினாள்.. நியான் விளக்கின் மஞ்சள் ஒளியில் அவளின் மஞ்சள் நிறம் இன்னும் அதிகமாக பளீரிட்டதில் அவன் அசந்து போனான்..

"நீங்கள்ளாம் தனியா வர்றதே தப்புங்க.." மனது தாங்காமல் சொல்லி விட்டான்..

அவன் மனது புரிந்ததைப் போல அவள் மென்மையாக சிரித்தாள்..

"நான் தனின்னு யாருங்க சொன்னது..?" என்று கேட்டாள்..

'அப்படின்னா என்ன அர்த்தம்..? இவள் கல்யாணமானவளா..?'

அவன் பார்வை அவள் கழுத்தை ஆராய்ந்தது.. தடிமனான சங்கிலி தாலிக் கொடியைப் போன்று தோற்ற மளித்ததில் அவன் ஏமாற்றமாக உணர்ந்தான்..

'முட்டாள்.. இவள் சிங்கிளா இருந்தா மட்டும்.. தூக்கிக்கிட்டுப் போய் தாலி கட்டிவிடப் போறியா..?'

அவனது மனச்சாட்சி வக்கணையாக கேட்டு வைத்தது.. இது போன்ற சந்தர்ப்பங்கள் அதற்கு அல்வா கிடைத்ததைப் போல.. அதுவே சமயம் கிடைத்தால் அவனைப் போட்டுத் தாக்குவதற்காக காத்திருக்கும் கேட்டகிரி.. சான்ஸ் கிடைத்தால் விட்டு விடுமா..?

'ம்ம்ம்.. ஸ்வாஹா பண்ணிக்கிட்டு போகிறதுக்கு ஏற்றதைப் போலதான் இருக்கா..'

மனது ஜொள்ளு விட்டாலும் அவள் மாற்றானின் மனையாட்டி என்பதில் உற்சாகம் வடிந்து அடங்கியது..

"எங்கேங்க உங்க ஹஸ்பெண்ட்..? தனியா விட்டுட்டு எங்கே போனார்..? கூட வந்தவர் துணையாய் நிற்க வேணாமா..?" பகையாளியைப் பற்றி விசாரிப்பதைப் போல அவன் விசாரித்தான்..

"அவரைத்தாங்க நானும் தேடிக்கிட்டு இருக்கேன்.." என்றாள் அவள்..

"என்னது..?" அவனால் நம்ப முடியவில்லை..

கணவனைக் காணோம் என்று தேடிக் கொண்டிருப்பவள்.. ரதக் கோவில் தூணில் சாய்ந்து பாட்டுப் பாடிக் கொண்டிருப்பாளா..?

'ஒருவேளை.. அது குடும்பப் பாட்டா இருக்குமோ.. கூட்டத்தில் தொலைந்து போன கணவன் இந்தக் குடும்பப் பாட்டைக் கேட்டதும் ஓடி வந்திருவாருன்னு பாடியிருப்பாளோ..'

துடைத்து விட்டதைப் போன்ற அவள் முகத்திலிருந்து அவனால் எதையும் அனுமானிக்க முடியவில்லை..

அலைகடலின் ஓரத்திலே அவள் முகத்தை உற்றுப் பார்த்து உணர்வுகளைப் படிக்க அவன் முயன்றான்..

அத்தியாயம் - 3

நீயென் மணவாட்டியா..?

இல்லை மாற்றானின் மனையாட்டியா..?

'இது விநோதம்..' என்று தோன்றியது சித்தார்த்தனுக்கு..

இருள் நிறைந்த நேரத்தில் தனிமையாக ரதக் கோவிலின் தூணில் சாய்ந்து நின்று பாடிக் கொண்டிருக்கும் பெண்ணின் கைப்பையில் துப்பாக்கி இருக்கிறது.. தனியாக வந்தாளா என்றால் இல்லை என்கிறாள்.. எங்கே உனது கணவனென்றால் தேடிக் கொண்டிருக்கிறேன் என்கிறாள்..

'பேசாம வழியைப் பார்த்துக்கிட்டுப் போயிருக் கலாமோ..' காலங்கடந்த ஞானோதயம் அவனுக்குள் வந்தது..

அழகான பாடல் அவனை ஈர்த்ததில் வந்த வம்புதானே இது..?

"ஏங்க.. ஹஸ்பெண்டைத் தேடுகிறவங்க குடும்பப் பாட்டைப் பாடித்தான் தேடுவீங்களா..? அந்தப் பாட்டையும் யாருமில்லாத ரதக் கோவிலில போய் பாடிக்கிட்டு இருக்கீங்க.. உங்க ஹஸ்பெண்ட் என்ன அந்த ரதக் கோவிலிலா இருக்கார்..?"

கேட்டபடி திரும்பி ஐந்து ரதக் கோவிலைப் பார்த்தவனுக்குள் மின்னல் பாய்ந்தது.. உடல் தூக்கிப் போட பார்வையைத் திருப்பிக் கொண்டான்.. அவள் முகத்தைப்

பார்த்தான்.. வெளிறிப் போயிருந்த அவள் முகத்திலும் அவனைப் போலவே நூதன உணர்வு படிந்திருந்ததில்..

"என்னங்க..?" என்றான்..

"நத்திங்... அந்த ரதக் கோவில்களைப் பற்றிப் பேசாதீங்க.."

அவள் குரலில் இழையோடிய அச்சத்தில் அவன் புருவங்கள் உயர்ந்தன..

"ஏன்ங்க..?" அவளிடமே விசாரித்தான்..

"நத்திங்..."

"ஒன்றுமில்லாததற்கா இப்படிப் பயப்படறிங்க..?"

"இது பயமில்ல.."

"பின்னே.."

"உங்களால் புரிந்துகொள்ள முடியுமோ என்னவோ.."

"சொல்லுங்க.. புரிஞ்சுக்க முடியுதான்னு டிரை பண்றேன்.."

அவள் ஐந்து ரதக் கோவிலை ஓர் முறை திரும்பிப் பார்த்துக் கொண்டாள்.. அவள் முகத்தில் வந்து போன திகிலில் அவனையுமறியாமல் அவனும் அந்த ரதக் கோவில்களை பார்த்து வைத்தான்.. அவனை ஈர்த்த அந்தக் கோவிலின் வசிய சக்தியில் சட்டென்று தன் பார்வையை விலக்கிக் கொண்டான்..

'என்ன இது..'

அவனுக்கு அந்த இடத்தை விட்டு அகன்று விட வேண்டும் போல இருந்து.. புருவங்களை சுழித்தபடி அவளைப் பார்த்தான்..

"மத்தவங்களுக்கு தெரியாத ஓர் அமானுஷ்ய சக்தி உங்களுக்குத் தெரியுதுன்னு வையுங்க.. உங்களுக்கு எப்படியிருக்கும்..?"

'எப்படியிருக்கும்..?' ஐந்து ரதக் கோவிலைப் பார்ப்பதை மிகக் கவனமாக அவன் தவிர்த்தான்..

"நீங்க அப்படி ஃபீல் பண்றீங்களா..?"

"சம் டைம்ஸ்.."

"ஈஸிட்..? ஏன் நீங்க ஒரு டாக்டரை கன்சல்ட் பண்ணக்கூடாது..?"

"எதுக்கு..? பைத்தியம்ன்னு அவர் முத்திரை குத்தறதுக்கா..? எவ்வளவு நல்ல எண்ணம் சார் உங்களுக்கு.. நீங்கள்ளாம் ரொம்பவே நல்லா வருவீங்க.."

அவளுடைய கோபத்தில் அவன் ஐந்து ரதக் கோவிலை மறந்தான்.. சிரித்தான்..

"நம்புங்க.. நான் உங்களுக்கு ஐடியாதான் சொன்னேன்.."

"நம்பிட்டேன்.."

"நீங்க என்ன மாதிரியான அமானுஷ்யத்தை பார்த்தீங்க.."

"'பார்த்தீங்க' இல்லை.. பார்க்கறேன்.."

"இப்பவுமா..?"

"இப்பவும்ன்னா.. இந்த செகண்டிலன்னு இல்லை.. திடிர்ன்னு புகை போல கசமுசன்னு என் முகத்துக்கு நேரா ஒரு புகைப்படலம் வந்து நிற்குது..."

"தென்..?"

அவனுக்கு சுவராஸ்யம் வந்து விட்டது.. இதுபோன்ற நிகழ்வினை எதிர்பார்த்து அவன் மகாபலிபுரத்துக்கு வரவில்லை..

'ஜஸ்ட் எ ரிலாக்ஷேசன்..' என்றுதான் கிளம்பி வந்தான்..

வந்த இடத்தில் அடுத்தடுத்து நூதன அனுபவங்கள்.

"நான் முழிச்சுப் பார்த்தவுடனே அந்த புகை படலம் கலைந்து மறைஞ்சு போயிடறது.."

"ஓ.. எப்பவும் புகை போல்தான் வருமா..?"

"சம் டைம்ஸ்.. ஆரஞ்சு நிறத்தில இருக்கிற பூக்களைப் பிய்த்துப் போட்டா எப்படியிருக்கும்..? அப்படிவரும்.."

"அதுவும் கலைஞ்சு போயிரும்.. அப்படித்தானே..?"

"அப்படியேதான்.."

"இதை உங்க ஹஸ்பெண்ட்கிட்டச் சொன்னீங்களா..?"

"யார்கிட்டச் சொல்லச் சொல்கிறீங்க..?"

அவள் புரியாமல் கேட்டதில் அவனுக்கு என்னடா இது என்று ஆகிவிட்டது.. அவன் என்ன கடலில் போகும் கப்பல் மாலுமியிடமா சொல்லச் சொன்னான்..? கட்டிய கணவனிடம் சொல்லச் சொன்னான்.. அதற்குப் போய் இப்படியா பேந்த பேந்த விழித்து வைப்பாள்..?

"ஹஸ்பெண்டுங்க.. உங்க ஹஸ்பெண்ட்..!"

அவன் கழுத்தில் தாலி கட்டுவதைப் போல பாவனை செய்தபடி சொன்னான்.. அவள் முகம் மாறியதில் ஒருவேளை வேறு மதமாக இருப்பாளோ என்ற சம்சயத்தில் மோதிரம் மாட்டுவதைப் போலவும் பாவனை செய்து வைத்தான்..

"உங்க மோனோ ஆக்டிங்கை கொஞ்சம் நிறுத்தறிங்களா..? சகிக்கலை.." அவள் தலையில் அடித்துக் கொண்டாள்..

வழியோடு போகாமல் வாய் வளர்த்ததிற்கு இது தேவைதான்.. என்று நினைத்துக் கொண்டான் சித்தார்த்தான்..

"உங்களுக்கு என்னதாங்க பிரச்னை..? ஹஸ்பெண்ட் கூட வந்தவங்க அவரைக் காணோம்ன்னு தேடிக்கிட்டு இருந்தீங்கன்னா நானும் கூடச் சேர்ந்து தேடறேன்.. அதை விட்டுட்டு தலையில் அடிச்சுக்கிட்டு மூட் அவுட் பண்ணக் கூடாது.. என் மோனோ ஆக்டிங்கைவிட இது படு மோசமாக இருக்கு.." கடுப்புடன் சொன்னான்..

"ஏங்க.. எனக்கு கல்யாணமே ஆகலை.. அதை முதலில் தெரிந்துக்கங்க.. இல்லாத ஹஸ்பெண்டுகிட்ட சொல்லச் சொன்னா எங்கேன்னு போய் சொல்லுவேன்.." அவனைவிட அதிகமாக அவள் கடுகடுத்தாள்..

"வாட்..? உங்களுக்கு கல்யாணம் ஆகலையா..?"

சித்தார்த்தன் உற்சாகத்துடன் அவளை உற்று நோக்கினான்..

"ஆமாம் சார்.. அதுக்காக நீங்க கல்யாணம் பண்ணிக் கிட்டவளைப் பார்க்கிறதைப் போல பார்த்து வைக்க வேணாம்.." என்றாள் அவள்..

அவனுக்கு சிரிப்பு வந்தது..

"அப்புறம் எதுக்காக உங்க ஹஸ்பெண்டைத் தேடிக் கிட்டு இருக்கேன்னு சொன்னீங்க..?"

"இந்த உலகத்தில் எங்கே அவர் பிறந்திருக்கார்ன்னு தேடிக்கிட்டு இருக்கேன்னு சொன்னேன்.."

அவள் ஐந்து ரதக் கோவிலைப் பார்த்தபடி சொன்னாள்..

"அதைப் பார்க்காதீங்க.." என்றான் அவன்..

"ஏன்..?" அவள் விழிகள் மின்னின..

"என்னன்னு தெரியலை.. அங்கே ஏதோ ஒரு பவர் இருக்கிறதைப் போல நான் ஃபீல் பண்றேன்.." அவன் உடல் சிலிர்த்துக் கொண்டது..

"நீங்களுமா..?" ஆச்சரியத்துடன் அவள் கேட்டாள்.

"நீங்களும்ன்னா..? வாட்'ஸ் த மீனிங்..? நீங்களும் அதைப் ஃபீல் பண்ணினீங்களா..?"

"ம்ம்ம்.." அவள் தலையசைத்தாள்..

"அடிக்கடி ஃபீல் பண்றேன்.." என்று சொன்னவளை வியப்புடன் அவன் பார்த்தான்..

"அப்படி ஃபீல் பண்ற இடத்திலேயா தைரியமா தனியா நின்று பாட்டுப் பாடினீங்க..?"

"யெஸ்.. எதனால என்னை இந்த இடம் ஈர்க்குதுன்னு நான் தெரிந்துக்க வேணாமா..? அதோட.. இந்த மகாபலிபுரத்திலதான் நான் பிறந்து வளர்ந்தேன்.. பிறந்ததில் இருந்து என்னை இம்ப்ரெஸ் பண்ணும் அந்த

ஐந்து ரதக் கோவிலில என்ன இருக்குன்னு கண்டறியாம என்னால உறங்க முடியாதுன்னு ஆகிருச்சு.."

இப்படிப்பட்ட வார்த்தைகளை அன்றைய தினத்தின் காலைவரை சித்தார்த்தன் நம்பியிருக்க மாட்டான்.. கேட்க நேர்ந்திருந்தால் தோள்களைக் குலுக்கிக் கொண்டு போயிருப்பான்..

அப்போது அப்படிச் செய்ய அவனால் முடியவில்லை.. அந்தப் பெண்ணின் வார்த்தைகளில் உண்மை இருப்பதை அவன் மனம் உணர்ந்தது..

"தனியாய் வரலைன்னு சொன்னீங்களே.." இதமாய் வினவினான்..

"நான் தனியில்லைன்னு சொன்னேன்.. இந்தக் கடல்.. ஐந்து ரதக் கோவில்கள்.. இந்தப் பாறைகள்ன்னு எல்லாமே என் துணையாய் நிற்கறப்ப நான் தனின்னு ஃபீல் பண்ணினதே இல்லை.. அதைத்தான் சொன்னேன்.. மத்தபடி நான் இங்கே தனியாத்தான் வந்தேன்.."

"பயமாய் இல்லையா..?"

"இல்லை.. அமானுஷ்யம் பழகிருச்சு.. இது நான் பிறந்து வளர்ந்த ஊர்.. இங்கே எனக்கென்ன பயம்..?"

முத்துப்பற்கள் தெரிய சிரித்தவளிடம் காலம் காலமாய் பேசிப் பழகிய உணர்வை உணர்ந்தான் சித்தார்த்தன்..

"பை தி வே.. ஐ ஆம் சித்தார்த்தன்.." கை நீட்டினான்..

"நான் யாமினி.." அவள் கை குவித்தாள்..

அவன் தோள்களைக் குலுக்கியபடி கைகளை பேண்ட் பாக்கெட்டில் விட்டுக் கொண்டான்.. சற்று நேரம் அவனிடம் பேசிவிட்டு விடை பெற்றவளிடம் மீண்டும் எப்போது சந்திக்கலாம் என்று கேட்க நினைத்து.. அந்த நினைவை ரப்பர் கொண்டு அழித்தான் சித்தார்த்தன்..

அந்தக் கேள்வி.. அவனுக்கும் அவளுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் அந்த விசித்திர பந்தத்தை விகல்பபடுத்தி

விடலாம்.. வேண்டாம்..

அத்தியாயம் - 4

நீ யார்..? நான் யார்..?

நினைவில் வந்தது யார்.. யார்..?

'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸின்' தலைமை அலுவலகம் அமைந்திருந்த வளாகத்துக்குள் சித்தார்த்தனின் கார் திரும்பியது.. ஓங்கி உயர்ந்திருந்த கட்டிடத்தின் வெளிப்புறம் முழுவதும் கண்ணாடிச் சுவர்களால் மறைக்கப்பட்டிருந்தது.. உள்ளேயிருந்து வெளியில் பார்க்க முடிந்த கண்ணாடி அது.. வெளியில் இருப்பவர்களால் உள்ளே பார்க்க முடியாது.. கருமை கலந்த கண்ணாடி தடுப்புச் சுவரால் வேயப்பட்டிருந்த அந்தக் கட்டிடம்.. 'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனி'யின் செல்வச் செழுமையை சொல்லியது..

அகன்ற போர்டிகோவில் சித்தார்த்தனின் கார் நின்றதும் வாசலில் நின்றிருந்த செக்யூரிட்டி ஓடி வந்து கதவைத் திறந்தான்.. கம்பீரமாக இறங்கிய சித்தார்த்தன்.. மடமடவென படிகளில் ஏறிக் கதவருகே போவதற்குள் பாய்ந்து அவனுக்கு முன்னால் வந்து நின்று வாசல் கதவைத் திறந்து விட்டான்..

அந்த சுறுசுறுப்பை மெச்சிய புன்முறுவலுடன் லேசாக தலையசைத்தபடி உள்ளே போய் விட்டான் சித்தார்த்தன்.. ஜாக்பாட் அடித்ததைப் போன்ற சந்தோசத்துடன் நின்று விட்டான் செக்யூரிட்டி..

"என்ன குமாரு.. ஜெர்க் அடிச்சதைப் போல நின்னுட்ட..? சைட் ஏதாச்சும் வொர்க் அவுட் ஆகிருச்சா..?"

வெகு ஜாலியாக விசாரித்தபடி வந்து நின்றான் 'தாமு' எனப்படும் தாமோதரன்.. சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியின் ஜெனரல் மேனேஜர் அவன்தான் என்றாலும்

அந்தப் பதவிக்கான மமதையும் செருக்கும் இல்லாமல் அடிமட்ட ஊழியர் வரை கலந்து உரையாடுவான்..

தாமோதரனின் இந்த அணுகுமுறை சித்தார்த்தனின் மிகப் பெரிய பலம்.. சித்தார்த்தனின் வலது கரமாக மட்டுமல்லாமல் இடது கரமாகவும் இவனே செயல்பட்டுக் கொண்டிருந்தான் என்றால் அது மிகையாகாது..

"எம்.டி என்னைப் பார்த்து தலையை அசைச்சாரு சார்.." பூரிப்பாக சொன்னான் குமார்..

"அதுக்கே இப்படி ஆகிட்டயா..? கிழிஞ்சது போ.. நான்கூட ஏதாச்சும் சைட்டுக்கு 'ஸ்கெட்ச்..' போட்டுத் துக்கிட்டியோன்னு நினைச்சேன்.. கடைசியில் இவ்வளவு தானா..?" டையை சரி செய்தபடி சிரித்தான் தாமு..

"சைட்டுக்கு என்ன சார்..? மெனக்கெட்டா கிடைக்காமலா போயிரப் போகுது..?" குமார் சொன்னான்..

"ஆனாலும் உனக்கு அதீத நம்பிக்கைதான் குமாரு.. எதுக்கும் உன் மூஞ்சிய அடிக்கடி கண்ணாடியில பார்த்துட்டு ஸ்கெட்ச் போட உட்காரு.."

ஆலோசனை வழங்கிவிட்டு உள்ளே நடந்த தாமோ தரனுக்காக கண்ணாடி கதவை திறந்து விட்டான் குமார்..

"வெரிகுட்..! உன் மூஞ்சிக்கென்ன குமாரு.. விளக்கெண்ணை குடிச்ச குரங்காட்டம் அழகாகத்தானே இருக்கு.. நீ நடத்து குமாரு.. ஜெயிச்சுக் காட்டுவ பாரேன்.."

குமாரின் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு உள்ளே போனான்.. ரிசப்சனில் இருந்த வயலெட் இவனைக் கண்டதும் அவசரமாக போனை வைத்தாள்.. அதுவரை போனை காதுக்கு கொடுத்திருந்தவளைப் பார்த்தபடிதான் தாமோதரனும் வந்தான்.. உதடு பிரியாத அவளது பேச்சுச் சப்தம் எதிர் முனையில் இருப்பவருக்கு கேட்குமா.. கேட்காதா என்ற சந்தேகம் நீண்ட காலமாக அவன் நெஞ்சில் குடியிருந்தது.. அந்த அளவுக்கு பக்கத்தில் இருப்பவருக்குக் கூட கேட்காமல் பேசுவதில் வயலெட் கெட்டிக்காரி..

"குட்மார்னிங் சார்.."

அப்போதுதான் அவனைப் பார்த்ததைப் போல காலை வணக்கம் சொன்னாள் வயலெட் ஜோசபின்..

"குட்மார்னிங் வயலெட்.. உங்க செல்போனுக்கு மன்த்லி டென் ரூபிஸ் ஆகுமா..?" என்றான் தாமோதரன்..

"சார்..?" புரியாமல் விழித்தாள் வயலெட் ஜோசபின்

"ரீசார்ஜ் அமௌண்டைச் சொன்னேன்.."

நிற்காமல் போய் விட்டான் தாமு..

'இவனுக்கு கழுகுக் கண்..!' தலையை ஆட்டிக் கொண்டாள் வயலெட்..

'ரிசப்சனிஸ்டா இருக்கிறவளுக்கு இது கூட இல்லைன்னா எப்படி..? ம்ஹா..'

உதட்டைப் பிதுக்கிவிட்டு போனை எடுத்து.. விட்ட பேச்சைத் தொடர்ந்தவளுக்கு ஆச்சரியம் அலை மோதியது..

'அது எப்படி.. என் செல்போனுக்கு மன்த்லி ரீசார்ஜா பத்து ரூபாய்தான் செலவாகுதுங்கிறதை இவன் கண்டு பிடிச்சான்..'

அதுதான் தாமோதரன்.. சித்தார்த்தனின் நண்பன் மற்றும் ஜெனரல் மேனேஜர்.. சித்தார்த்தனின் அறைக் கதவை அவன் திறந்த போது.. மேஜையிலிருந்த லேப் டாப்பை நோண்டிக் கொண்டிருந்த சித்தார்த்தன் நிமிர்ந்து பார்த்தான்..

"வாடா.." என்றான்..

"வந்தேன் நண்பனே.." உற்சாகமாய் சித்தார்த்தனுக்கு எதிரில் இருந்த சோபாவில் உட்கார்ந்த தாமோதரன்..

"இன்றைக்கு உனக்காக என்னென்ன மீட்டிங் காத்திருக்குது.. நீ எந்த பிஸினெஸ் லன்ச்சை அட்டெண்ட் பண்ணனும்.. ஈவினிங் எந்தப் பார்ட்டிக்குப் போகனும்ங் கிறதையெல்லாம் ஒப்பிக்கிறேன்.. கேட்டுக்கறியா..?" என்றான்..

"அதுக்குத்தான் செக்கரட்டரி இருக்காளே.. நீ எதுக்காக இந்த வேலையையும் இழுத்து உன் தலைமேலே போட்டுக்கிற..? இருக்கிற வேலை போதாதா..?" லேப் டாப்பின் திரையிலிருந்து பார்வையை விலக்காமல் சொன்னான் சித்தார்த்தன்..

"கிழிஞ்சது போ.. இதையும் மறந்திட்டயா..? அப்பா சித்தார்த்தா..! போதி மரத்தடியை விட்டு கொஞ்சம் வெளியே வாப்பா.." தாமோதரன் தலையில் அடித்துக் கொண்டான்..

"தலை வலிக்கப் போகுது.."

"என் தலை..! வலித்தா வலி எனக்குத்தான்.."

"உனக்கு அடிபட்டா இரண்டு மடங்கு அதிகமா எனக்கு வலிக்கும்டா தாமு.."

"த்ச்சு.. த்ச்சு.. நெஞ்சைத் தொட்டுட்டடா சித்தார்த்தா.. இந்த டயலாக்கை விட்டுட்டு கொஞ்சம் என் மூஞ்சியைப் பார்க்கறியா..?"

"உன் மூஞ்சியிலே என்னடா இருக்கு..?"

"அதைச் சொல்லு.. என் மூஞ்சியில என்ன இருக்கப் போகுது..? நானென்ன டீன் ஏன் பெண்ணா..? கரடு முரடான என் மூஞ்சியில நீ பார்க்கிறதுக்கு எதுவுமே இல்லைதான்.."

தாமோதரன் பேசப்பேச.. சித்தார்த்தனின் மனதில் மகாபலிபுரக் கடற்கரை வந்தது.. கடலோர ரதக் கோவிலின் தூணில் சாய்ந்து நின்று பாடிக் கொண்டிருந்த அவளும் வந்தாள்..

"யாமினி..!" அவன் வாய் முணுமுணுத்தது..

"என்னது..? யார் நீயா..? அடேய் பாவி..! நான் உன் நண்பேண்டா.. இப்படிச் சொல்லித்தான் மொத்தக் கம்பெனியையும் அரட்டி வைச்சிருக்கேன்.. நீ வேற.. அதை இல்லேன்னு ஆக்கி விடாதேடா.. கோடி புண்ணியம் உனக்கே கிடைக்க காட் கிட்ட நான் ரெகமெண்ட் பண்றேன்.."

"போடா டேய்.." சித்தார்த்தனுக்கு சிரிப்பு வந்தது..

சிரிப்பின் ஊடே அவன் மனம் யாமினியிடமே மையம் கொண்டது.. அவள் முகத்தை மெலிதான வெளிச்சத்தில் பார்த்த தருணத்தை அவன் நினைவு கூர்ந்தான்..

'அவள் முகத்தில் என்ன இருந்தது..?'

"என்னடா ஆச்சு..? உனக்கு நீயா சிரிச்சுக்கற..? சித்தார்த்தா..? ஆர் யூ ஆல்ரைட்.." தாமோதரன் கவலையுடன் கேட்டான்..

"நத்திங்.." ஒரு கையை ஆட்டி எதுவும் இல்லையென்று மறுத்தவன் மீண்டும் லேப்டாப்பில் பார்வையை பதித்தான்..

"போதி மரத்தடியை விடவே மாட்டே..?"

"போதி மரத்தடியா..? எதைச் சொல்கிற.."

"உன் கையில் இருக்கிற லேப் டாப்பத்தான் சொல்கிறேன்.. கடையைக் கட்டு சித்தார்த்.. என்னைப் பாரு.."

"பொறுடா.. முதலில் இதைப் பார்த்துக்கறேன்.."

சித்தார்த்தன் மும்முரமாக லேப்டாப்பை ஆய்வு செய்து கொண்டிருந்ததில் தாமோதரன் மணி பார்த்தான்.. அதி முக்கியமான வேலைகள் அவர்களின் தலைக்கு மேல் குவிந்து கிடந்தன.. அவற்றின் நினைவின்றி சித்தார்த்தன் லேப் டாப்பில் ஆழ்ந்திருந்ததில் தாமோதரன் கவலை கொண்டான்..

'ஒருவேளை வீடியோ கேம் விளையாடறானோ..?'

செய்தாலும் செய்வான் என்ற நினைவில் எழுந்தான் தாமோதரன்.. எந்த விதமான கணிப்பிற்கும் அப்பாற்பட்டவன் சித்தார்த்தன்.. எதை எப்போது செய்வான் என்று யாராலும் சொல்லிவிட முடியாது.. உச்சி வெயிலில் சூடு பறக்கும் காபியையும் குடிப்பான்.. மார்கழிப் பனியில் நடுநிசி இரவில்.. சாலையோர ஜஸ் வண்டியில் ஜஸ்கிரிம் வாங்கிச் சாப்பிடவும் செய்வான்..

"நம்ம எம்.டி. வினோதமான பிறவிடி.."

மதிய உணவில் அந்தக் கம்பெனியின் பெண்களின் வாயில் உணவுடன் சேர்ந்து இந்த மதிப்பீடும் அரை படுவதை பற்றி சித்தார்த்தன் அறிவானா என்றிருந்தது தாமோதரனுக்கு..

அத்தியாயம் - 5

உன் முகத்தைப் பார்த்த போது..

எங்கேயோ பார்த்த நினைவு..!

தாமோதரனுக்கு மண்டை காய்ந்தது.. குவிந்திருக்கும் வேலைகளைப் பற்றிய நினைவின்றி இந்த சித்தார்த்தன் அவனை இந்த அளவுக்கு சோதிக்க வேண்டுமா என்றிருந்தது அவனுக்கு..

'எங்கேயாவது இதைக் கண்டிருக்கிறோமா..?'

சுவரில் முட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது தாமோதரனுக்கு..

தி கிரேட் 'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனி'யின் கிரேட் எம்.டியான மேன்மை மிகு சித்தார்த்தன்.. தனது அலுவலக அறையில்.. காலை வேளையில்.. லேப் டாப்பை மடியில் வைத்துக் கொண்டு வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருக்கிறான் என்று வெளியே சொன்னால் என்ன சொல்வார்கள்..?

'தலையில் அடித்துக் கொள்வார்கள்..'

அதைப் போல தன்னால் தலையில் அடித்துக் கொள்ள முடியவில்லையே என்று தாமோதரனுக்கு ஆற்றாமையாக இருந்தது..

"சித்தார்த்.." கூப்பிட்டுப் பார்த்தான்..

சித்தார்த்தனிடம் அசைவில்லை.. என்னவோ.. பன்னாட்டு நிறுவனத்துடன் வியாபார ஒப்பந்தம் போட்டுக் கொண்டிருப்பவனைப் போல வெகு தீவிரமாக லேப் டாப்பை உற்று.. உற்று பார்த்துக் கொண்டிருந்தான்..

'கழுதையில என்னத்தைத்தான் பார்த்துத் தொலைக்கிறான்..?'

தலைமுடியைப் பிய்த்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது தாமோதரனுக்கு.. இப்படியா ஒருவன் முதலாளியாக பிறந்து விட்ட மமதையிலே தோழனென்றும் பாராமல் தனது ஜெனரல் மேனேஜரைப் பித்துப் பிடிக்க வைப்பான்..?

'இவனைக் கூப்பிட்டா வேலைக்கு ஆகாது.. நானே போயி என்னன்னு பார்த்துத் தொலைக்க வேண்டியதுதான்.'

மனதுக்குள் நினைத்துக் கொண்ட தீர்மானத்தை உடனடியாக நிறைவேற்றும் திட்டத்துடன் சோபாவை விட்டு எழுந்து தாமோதரன் சுற்றி வளைத்து சித்தார்த்தனின் அருகே போய் அவனது சுழல் நாற்காலியின் பின்புறமாக நின்று.. குனிந்து.. அவன் லேப்டாப்பில் அப்படி என்னத்தைக் கிழித்துக் கொண்டிருக்கிறான் என்று பார்த்தான்.. பார்த்தவன் அரண்டு போனவனாக..

"பே.. பே.. பேய்.." என்று அலறி வைத்தான்..

"உஸ்ஸ்.." சித்தார்த்தன் ஆள்காட்டி விரலை வாயில் வைத்து தாமோதரனின் அலறலை அடக்கினான்..

"கீப் கொயட்.."

"நான் கொயட்டறது இருக்கட்டும்.. நீ எதுக்காகடா விட்ட விடிகாலையிலே.. லேப் டாப்பில.. பேயைப் பார்த்துக்கிட்டு இருக்க..? உனக்கே இது நல்லா இருக்கா சித்தார்த்..?"

"கொஞ்சம் கூட நல்லா இல்லைதான்.."

சித்தார்த்தன் ஆமோதித்ததில் தாமோதரனுக்கு 'அப்பாடி' என்றிருந்தது.. அவன் ஆசுவாச பெருமூச்சை விட்டான்..

'நண்பனுக்கு புத்தி வந்திருச்சு.. திருந்திட்டான்..'

இனி மேலாவது மேலப்டாப்பை மூடிவிட்டு.. அன்றைய அலுவல்களைப் பற்றி அவனுடன் மாட்டாடுவான் என்று தாமோதரன் பேராசைப்பட.. அந்தப் பேராசையில் இடியைக் கொண்டு வந்து இறக்கினான் சித்தார்த்தன்..

லேப்டாப்பில் தெரிந்த ஆவியின் உருவத்தை அப்படியும் இப்படியுமாக விரல்களை பல வடிவங்களில் ஒன்று சேர்த்து வியு பார்த்தவன் உதட்டைப் பிதுக்கினான்..

"இதைப் போய் நல்லா இருக்குன்னு எந்த இடியட்டாவது சொல்லுவானா..?" தாமோதரனிடம் கேட்கவும் செய்தான்..

"ஏண்டா டேய்..! உனக்கே இது நல்லாயிருக்கான்னு நான் இதைக் காட்டியாடா கேட்டேன்..?" தாமோதரனுக்கு அழுகையே வந்து விட்டது..

'இவன்கிட்ட ஜி.எம்மா வேலை பார்க்கிறதுக்கு என்னவெல்லாம் பாடாய் பட வேண்டியிருக்கு.. மனுசர் கூட கோர்த்து விட்டாப் பரவாயில்லை.. இவன் பேய்கூட கோர்த்து விடறானே.. இவன் பேசறதைக் கேட்டுட்டு.. என் மூஞ்சியாடா நல்லாயில்லைன்னு பேய் கொதிச்சு எழுந்துட்டா நான் என்ன பண்ணுவேன்..?'

மனதுக்குள் புலம்பிய தாமோதரனுக்கு லேப் டாப்பின் திரையைப் பார்க்கக் கூட தயக்கமாக இருந்தது..

"ஏண்டா இப்படி படுத்தற..?" நொந்து போய் கேட்டான்..

"அப்ப.. நீ இதைச் சொல்லலையா..?"

சித்தார்த்தன் 'அதை' விடவேயில்லை..

"பாருடா சித்தார்த்தா..? நீ எனக்கு படியளக்கிற பாஸா இருக்கலாம்.. அதுக்காக.. பேய்கிட்டயெல்லாம் போட்டுக் கொடுத்து.. கோள் மூட்டி விட்டு.. பேய்க்கும் எனக்கும் பகையை வளர்த்து விடாதே.. உன்னை கெஞ்சிக் கேட்டுக்கறேன்.." தாமோதரன் கையெடுத்துக் கும்பிட்டு விட்டான்..

"ஈஸிட்..? அப்படின்னா அது கூட பிரண்டா பழகறதுக்கு ரெடியாய் இருக்கே போல..?"

சித்தார்த்தன் 'ஆர் யூ ரெடி..? ரெடி..?' என்ற தினுசில் கேட்டு வைக்க.. தாமோதரன் தண்ணீர் பாட்டிலைத் தேடினான்..

உலர்ந்து போயிருந்த உதடுகளுக்கும்.. நீர் வற்றிப் போயிருந்த தொண்டைக்கும் உடனடியாக தண்ணீர் தேவைப்பட்டது..

"இந்தா.."

சித்தார்த்தன் எடுத்துக் கொடுத்த தண்ணீர் பாட்டிலை.. 'தேடினேன் வந்தது..' என்ற ரீதியில் ஆவலாக கைப்பற்றிய தாமோதரன் அவசரமாக தொண்டையில் சரித்து.. அரை பாட்டில் தண்ணீரைக் காலி செய்தான்..

"போதுமா..?"

தண்ணீர் பாட்டிலை திருப்பிக் கொடுத்த தாமோதரனிடம் வெகு அக்கறையாக சித்தார்த்தன் விசாரித்து வைத்ததில்.. தாமோதரனுக்குப் பற்றிக் கொண்ட வந்தது..

'காலாங்கார்த்தாலே தலையாலே தண்ணீர் குடிக்க வைச்சுக்கிட்டு அக்கறைப்படறான்.. படவா..!'

அந்தக் கடுப்புடனே அவன் நண்பனுக்குப் பதில் சொன்னான்..

"இப்போதைக்கு எப்படிடா மச்சான் தெரியும்..? எனக்கு இன்னும் கொஞ்சம் தண்ணீர் தேவைப்படுமா.. படாதாங்கிறது.. நீ லேப்டாப்பை மூடி வைக்கிறதிலதான் இருக்கு.."

"உன்னை இது என்னடா பண்ணுச்சு..?"

சித்தார்த்தன் என்னவோ லேப் டாப்பைக் காட்டி.. அது குறித்துத்தான் கேட்டு வைத்தான்.. ஆனால்.. அவன் விரல் நுனி காட்டிய திசையில் லேப் டாப்பின் திரையில் தெரிந்த ஆவியின் உருவப்படம் இருந்ததில் தாமோதரன் மறுபடியும் தண்ணீர் பாட்டிலைத் தேடினான்..

"உனக்காக கிணறு தோண்ட வைச்சிருவ போல இருக்கே.."

முழு பாட்டில் தண்ணீரையும் ஒரே மூச்சில் குடித்து விட்டு மூச்சு வாங்க உட்கார்ந்திருந்தவனிடம் கேலியாக கேட்டு வைத்தான் சித்தார்த்தான்..

"கேட்பேடா கேட்ப.. கேட்கிறவன் கேணை ஜி.எம்மா இருந்தா.. நீ லேப்டாப்புல பேயைக் கூப்பிட்டுக்கிட்டு வந்து கேள்விநேரம் நடத்துவ..? உனக்கு நான் என்னடா கெடுதல் பண்ணினேன்..?"

"ஒன்னும் பண்ணலையே.."

"அப்புறம் என்ன அலுவலுக்காகடா பேய்கிட்ட பிரண்ட் ரிகவஸ்ட் கொடுக்கச் சொல்கிற..?"

"வேண்டாம்ன்னா.. உன் சார்பா நான் அதுக்கு மெயில் அனுப்பட்டுமா..?"

"என்ன கழுதைக்கு..?"

"மூன்லைட் டின்னரை உன்கூட செலபரேட் பண்ணத்தான்.."

"அதை நீயே பண்ணு.. என்னை விட்டிரு.. இப்ப என்ன கழுதைக்கு பேய் முகத்தைப் பார்த்துக்கிட்டு இருக்க.."

"ஏண்டா..? பார்த்தா என்ன..?"

"பேசாதே.. கொலைவெறியில இருக்கேன்.. ஏழு கழுதைக்கு ஆகிற வயசாச்சு.. இன்னும் கல்யாணம் பண்ணிக்காம என்னைக் கலங்கடிக்கிறான்னு உன்

அம்மா பாவம்.. என்னைப் பார்க்கிறப்பல்லாம் சொல்லிப் புலம்பறாங்க.."

"அதுக்கு..?"

"பேய் முகத்தைப் பார்க்காம.. உன் அம்மா கை காட்டற பெண் முகத்தைப் பார்க்கப் போனாலாவது வேலைக்கு ஆகும்.."

"என்ன வேலை..?"

"உனக்குக் கல்யாணம் ஆகிற வேலைதான்.."

"பாருடா தாமு.. கோபம் வந்தா என் முதுகில நாலு மொத்து மொத்திக்க.. அதை விட்டுட்டு.. கல்யாணம்.. கில்யாணம்ன்னு என் அம்மா பேச்சைக் கேட்டுக்கிட்டு என்னை பிரெயின் வாஷ் பண்ண நினைக்கிற வேலையை விட்டிரு.. சொல்லிட்டேன்.."

"உக்கும்.. என்னை மட்டும் அந்தப் பேச்சைவிட்டிறச் சொல்லு.. நீ மட்டும் இந்த லேப்டாப்பை விட்டிராதே.."

"ஏண்டா.. இது உன்னை.."

சித்தார்த்தன் சொல்லி முடிப்பதற்குள் அவன் வாயைப் பொத்தி.. அவன் சொல்ல வந்த பேச்சை பாதியில் நிறுத்தினான் தாமோதரன்..

"திரும்பவும் இது உன்னை என்ன பண்ணுச்சுன்னு ஆரம்பிச்சு வைக்காதே.. எதுவும் என்னை எதுவும் பண்ணலை.."

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே.. அறைவாசலில் கதவில் 'டொக்.. டொக்' என்ற விரல் தட்டும் சப்தம் கேட்டது..

"யெஸ்.. கமின்.."

சித்தார்த்தனின் வாயை மூடிக் கொண்டிருப்பதை மறந்து தாமோதரன் சொல்லி விட்டான்..

"கேண்டிடேட்ஸ் வந்துட்டாங்க சார்.. அவங்களோட ஃபைல்ஸை கொண்டு வந்திருக்கேன்.. இண்டர்வியூ ஆரம்பிக்கிறதுக்கு முன்னாலே நீங்க ஒரு தடவை படிச்சுப் பார்த்துட்டா பெட்டரா இருக்கும் சார்.."

சொல்லிக் கொண்டே உள்ளே வந்த வயலெட்.. சுழல் நாற்காலியில் சரிந்திருந்த சித்தார்த்தனையும்.. அவன் பின்னால் நின்று அவன் கழுத்தை வளைத்து வாயைப் பொத்திக் கொண்டிருந்த தாமோதரனையும் கண்டு மிரண்டு பின் வாங்கினாள்..

"சார்.. எனிதிங் சீரியஸ்..?"

சித்தார்த்தனைப் பார்த்து அவள் கேட்ட கேள்வியில் உடனடியாக போலிஸை வரவழைத்து தாமோதரனைப் பிடித்துக் கொடுத்து விடும் உத்தேசம் மலையளவுக்கு இருந்தது..

'மகனே..! நான் பேசற போன்காலையா கணக்குப் பண்ற..?' அவள் விழிகளின் வன்மத்தில்.

"தேவைதான் எனக்கு.." என்றான் தாமோதரன்..

அத்தியாயம்- 6

காலங்கள் தோறும்

உன் நினைவு என்னைத் துரத்துமா..?

சித்தார்த்தனின் லேப்டாப்பில் இப்போது காட்சி மாறியிருந்தது.. கடற்கரையோரம் தெரிந்த ரதக் கோவில்களின் பிண்ணனியில் எதை உணர்ந்தானோ.. தாமோதரன் எக்கி.. சித்தார்த்தனின் தோள் வளைவில் குனிந்து லேப் டாப்பை அணைத்தான்..

முறைத்த சித்தார்த்தனை கண்டு கொள்ளாமல் வயலெட்டின் பக்கமா திரும்பியவன்..

"என்ன..?" என்றான்..

"எம்.டியை பார்க்க வந்தேன்.."

அவளது கடுப்பில் நீ எம்.டியா இல்லை ஜெனரல் மேனேஜரா என்ற கொதிப்பு தெரிந்தது..

'இருக்காதா பின்னே..? இந்தக் கம்பெனியில என்னைவிட்டா வேற எவன் இவள் பண்ணுகிற ஓசிப் போன் கால்களையெல்லாம் நோட் பண்றான்..?'

தாமோதரன் சித்தார்த்தனின் பக்கமாக கைகாட்டி..

"பார்த்துக்கங்க.. இவர்தான் எம்.டி." என்றான்..

'நக்கல்..?' வயலெட்டின் வன்மமான விழிகளில் அனல் பறந்தது..

அந்த அனல் வீச்சைப் பற்றித் துளிக்கூட அலட்டிக் கொள்ளாமல் 'ஹ..' என்று அதைத் தட்டி விட்டு விட்டு வெகு அலட்சியமாக சித்தார்த்தனின் எதிரே இருந்த சோபாவில் உட்கார்ந்தான் தாமோதரன்..

"யெஸ்.." ஒருவழியாக சித்தார்த்தன் அந்த ஒற்றை வார்த்தையை உதிர்த்து விட்டதில் மகா சந்தோசமாகிப் போன வயலெட்..

"இந்த ஃபைல்களை டேபிளில் வைத்துட்டுப் போகட்டுமா சார்..?" என்றாள்..

"வொய்..? உங்க டேபிளில் இடமில்லையா..?"

முகம் சுளித்த சித்தார்த்தன்.. எங்கே அவனுடைய லேப்டாப்பிற்கு டேபிளில் இடமில்லாமல் போய் விடுமோ என்று எண்ணமிட்டவனைப் போல.. லேப்டாப்பை நகர்த்தி டேபிளின் நடு மையத்தில் இழுத்து வைத்தான்..

தாமோதரன் சாய்ந்து லேப் டாப்பை சித்தார்த்தனின் பக்கமாக நகர்த்தி விட்டு..

"அது எங்கேயும் கால் முளைத்து ஓடிப் போகாது சார்.. உங்க லேப்டாப் ஒட்டுண்ணி போல உங்களோடதான் பசைபோட்டு ஒட்டிக்கிட்டு இருக்கும்.. ஸோ.. லீவ் திஸ் வொர்ரிங்.. நம்ம கம்பெனியின் சின்ஸியர் வொர்க்கர் கை நிறைய ஃபைலைச் சுமந்துகிட்டு வந்து நிற்கிறாங்க.. பாருங்க.. பாவம்.. அவங்களுக்கு கை வலிக்குமில்ல..? அவங்க பாரத்தை இறக்கி இந்த டேபிளில் வைச்சுட்டுப் போக பர்மிசன் கொடுங்க எம்.டி.சார்.." என்று வரவழைத்துக் கொண்ட பவ்யத்துடன் சொன்னான்..

"பாரம் சுமக்கிறது பெண்களுக்கு பழக்கமானதுதான் எம்.டி.சார்.." வயலெட் சீறினாள்..

"இப்ப நான் என்னத்தைச் சொன்னேன்னு ரிசப்சனிஸ்ட் எரிமலையா குமுறுகிறாங்க எம்.டி. சார்..?" கையை விரித்து

நியாயம் கேட்டான் தாமோதரன்..

"பத்துமாதம் குழந்தையைச் சுமக்கிறது பெண்கள் தான்.. ஆண்கள் இல்லை.." வயலெட்டின் முகம் சிவந்து போனது..

அந்தச் சிகப்பு நாணத்தினால் வந்ததல்ல.. கோபச் சிவப்பில் அவள் மூச்சிரைக்க நிற்க.. அவளை ஏற இறங்க பார்வையிட்டு அவளது ரத்த அழுத்தத்தை எகிற வைத்தான் தாமோதரன்..

"இன்னும் உங்களுக்கு மேரேஜ் ஆகலையில்ல..?"

அவனது கேள்வியில் எகிறிய வயலெட்டின் ரத்தம் கொதிநிலைக்கே போய்விட்டது.. யுத்தம் முற்றுவதற்குள்..

"தாமு.." என்று சித்தார்த்தன் குறுக்கிட்டுவிட்டான்..

'ம்ம்ம்.. இப்ப வந்து நாட்டாண்மை பண்ணு.. இவ்வளவு நேரமும் உணக்கையா வேடிக்கை பார்த்துக் கிட்டு உட்கார்ந்திருந்தயே. அப்பவே வந்து தீர்ப்பைச் சொல்லியிருக்க வேண்டியதுதானே..' தாமோதரன் பல்லைக் கடித்தான்..

"இதெல்லாம் என்ன ஃபைல்..?"

தொட்டு விட்டால் தோசம் வந்து விடும் என்று அஞ்சியவனைப் போல சித்தார்த்தன் சுழல் நாற்காலியை ஓரடி பின்னால் நகர்த்தி விட்டு அந்தப் ஃபைல்களை ஒட்டாமல் பார்த்து வைக்க.. தாமோதரன் மானசீகமாய் தலையில் அடித்துக் கொண்டு..

"அதெல்லாம் ஊரான் கம்பெனி ஃபைல் இல்லை சார்.. சாட்சாத்.. உங்க சொந்தக் கம்பெனியோட ஃபைல்தான்.." என்று வார்த்தைகளைப் பல்லிடுக்கில் கடித்துத் துப்பினான்..

"ஐ..ஸீ.." சித்தார்த்தன் தலையை ஆட்டினான்..

"வெறுமனே பார்த்தா மட்டும் போதாது சார்.. ஃபைலைத் திறந்து உள்ளே என்ன எழுதியிருக்குன்னு பார்க்கணும்.." வலியுறுத்தினான் தாமோதரன்..

"எனக்கென்ன வேற வேலையே இல்லையா..?"

சித்தார்த்தன் எரிந்து விழுந்ததில் வயலெட் விசித்திரமாக அவனைப் பார்த்துவிட்டு.. தாமோதரனையும் பார்த்து வைத்தாள்..

"இங்கே என்னத்துக்கு பார்க்கறிங்க..? எம்.டியைத் தானே பார்க்க வந்தீங்க..? அங்கே மட்டும் பாருங்க.."

தாமோதரன் கையை சித்தார்த்தன் இருந்த திசையில் நீட்டி வயலெட்டின் பார்வைக்கு வழி காண்பித்தான்..

'என்னடா இது..'

வயலெட் நொந்து போனாள்.. அவள் வருகின்ற போன் கால்களுக்கும்.. மனிதர்களுக்கும் பதில் சொல்லி வழியைக் காண்பிப்பாளா இல்லை.. நாள் முழுவதும் அந்த ஃபைல்களை கை கடுக்க சுமந்து கொண்டு.. கால் கடுக்க அங்கேயே நிற்பாளா..?

உதவி வேண்டி தாமோதரனை இறைஞ்சலுடன் பார்த்து வைத்தாள்..

'இதுக்குத்தானே நான் பேசினேன்.. நீ என்னவோ.. பாரம் சுமப்பது பெண்களின் உரிமைன்னு சண்டைக்கு வந்த..? இப்ப மாட்டிக்கிட்டு முழி.. உன் வம்புக்கு நான் வரமாட்டேன்..'

தாமோதரன் அவளது தவிப்பை கண் குளிர வேடிக்கை பார்த்தபடி கைவிரல்களால் சித்தார்த்தனின் டேபிளின் மீது தாளம் போட்டான்..

'சமயம் பார்த்து பழிவாங்கறான்..'

வயலெட் ஒரு முடிவுக்கு வந்தாள்.. சாட்சிக்காரனின் கால்களில் விழுவதைவிட சண்டைக்காரனின் கால்களில் விழுந்து விடுவதே சாலச்சிறந்தது.. சாட்சிக்காரன்தான் லேப்டாப்பைத் தவிர்த்து வேறு எதையும் டேபிளின் மீது வைக்க அனுமதிக்க மாட்டேன் என்று அடம் பிடிக்கிறானே...

"எம்.டியிடம் நீங்க ஒரு வார்த்தை சொல்லுங்க ஜி.எம் சார்..?" வயலெட் சற்று முன்னால் தாமோதரனிடம் போர் முரசைக்

கொட்டியதை மறந்து வெகு தன்மையாக பேசினாள்..

'இஃது..!' தாமோதரன் அவளை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான்.. அதில் அவள் முகம் சிவந்தது..

அந்தச் சிகப்பு கோபத்தினால் வந்ததல்ல... நாணத்துடன் ஃபைல்களைக் கட்டிக் கொண்டவளைப் பார்த்து..

'பாருடா..' என்று மனதுக்குள் சிலாகித்தான் தாமோதரன்..

'ஓசி போன் கால் அம்மணிக்கு வெட்கப் படக்கூடத் தெரியுமா..?'

போனால் போகிறதென்று அவளுக்கு உதவ தீர்மானித்தவனாக லேப்டாப்பை நோண்ட ஆரம்பித்த சித்தார்த்தனின் கைகளைத் தட்டி அவனது கவனத்தை ஈர்த்தான் தாமோதரன்..

"என்னடா..?"

கவனம் கலைந்ததில் தாமோதரனைக் கடித்து தின்று விடுவதைப் போல கத்தி வைத்தான் சித்தார்த்தன்..

அதில் அரண்டு போன வயலெட்.. திரும்பி ஓடி விடலாமா என்று யோசித்தாள்.. காத்துக் கொண்டிருந்த வேலை என்ன என்பது நினைவுக்கு வந்ததில் ஓட முடியாமல் கால்களில் இரும்புக்குண்டு கட்டப்பட்டதைப் போல அசைவில்லாமல் அங்கேயே நின்று விட்டாள்..

"இன்றைக்கு இண்டர்வியூ எம்.டி சார்.." தாமோதரன் அழுத்தமாக எடுத்துச் சொன்னான்..

"யாருக்கு..?" என்று கேட்டு வைத்தான் சித்தார்த்தன்..

"நிச்சயமா எனக்கு இல்ல.. நான் உங்க கம்பெனி ஜி.எம். இவங்களுக்கு இல்ல.. இவங்களை உங்களுக்கு அடையாளம் தெரியும்ன்னு நினைக்கிறேன்.."

"கொஞ்சநேரத்துக்கு முன்னாடி உன்னை ஒரு வழி பண்ணிடறதைப் போல உன்கூட சண்டை போட்டவங்க தானே..?"

"அருமையான அடையாளம் சொல்கிறிங்க எம்.டி. சார்.. அதை மட்டும் கவனிங்க.. இவங்களுக்கு இன்னொரு அடையாளமும் இருக்கு எம்.டி சார்.."

"இவங்க அன்மேரிடு.. அதுதானே..?"

"சுத்தம்..! ஏன்சார் இப்படி சோதிக்கறிங்க..? இவங்க உங்க கம்பெனியோட ரிசப்சனிஸ்ட்.."

"எனக்கே அடையாளம் சொல்கிறியா..?"

"வேற வழி..? சாருக்குத்தான் லேப்டாப்பைத் தவிர.. மிச்சமெல்லாம் மறந்து போயிருச்சே.. ம்ஹீம்.. சினிமாவில தான்.. இதைப்போல அம்னீஷியாவை பார்த்திருக்கேன்.."

"புலம்பாதேடா.."

"புலம்ப வைச்சிட்டிங்களே சார்.. இண்டர்வியூ எனக்கும்.. இவங்களுக்கும் இல்லை.. உங்களோட செக்கரட்டரி போஸ்டுக்கு.."

"ஏன்..? என் செக்கரட்டரி எங்கே போனாள்..?"

"கிழிஞ்சது போங்க.. அவங்களுக்கு மேரேஜ் ஆகி.. ஹஸ்பெண்ட்கூடப் போயிட்டாங்க.. அதைக் குற்றம்ன்னு நீங்க சொல்ல மாட்டிங்கன்னு நம்பறேன்.."

தாமோதரனின் இடக்குப் பேச்சில்.. சித்தார்த்தனின் செக்கரட்டரியாக வேலை பார்த்த தீபா திருமணமாகி போய் விட்டாள் என்ற விவரம் அவன் நினைவுக்கு

வந்தது..

"அந்த போஸ்ட் வேகண்டா இருக்கிறதினாலதான் நாம பேப்பரில அட்வெர்டைஸ்மெண்ட் கொடுத்தோம்.. அப்ளை பண்ணினவங்களுக்கு இண்டர்வியூ லெட்டர் அனுப்பினோம்.. அந்த லெட்டரை நம்பி வந்திருக் கிறவங்களோட பயோட டேட்டா அடங்கிய ஃபைல்கள் தான் இதெல்லாம்.."

வயலெட்டின் கையில் இருந்த ஃபைல்களை காட்டினான் தாமோதரன்..

அத்தியாயம்- 7

உன்னை நான் சந்தித்தது..

விதிக்கப்பட்ட விதியா..?

"ஓ.. ஐ.. ஸீ.."

சித்ததார்த்தனின் வார்த்தைகளில் மகிழ்ந்து போய் விட்டான் தாமோதரன்.. வயலெட்டைப் பார்த்து..

"இனிப் பார்த்துருவான் பாருங்க.." என்றும் சொன்னான்..

சித்தார்த்தனோ தாடையைத் தடவியபடி லேப்டாப்பை பார்க்க முனைய.. வயலெட் தாமோதரனிடம் கண் ஜாடை செய்து அதைக் கவனிக்கச் சொன்னாள்.. அதை உணராத தாமோதரன்.. அவள் அவனைப் பார்த்து கண்ணடித்து வைக்கிறாள் என்று தப்புக் கணக்கு போட்டு விட்டான்..

பதிலுக்கு கண்ணடிக்கும் ஆசை அவனுக்குள் வந்தது.. மனதிற்குள் சைவத்துள் சைவம்.. சிறந்த சைவமென்று.. ஏகாம்பரேஸ்வரன் ஆலயத்திலேயே குடியிருக்கும் தாயும், தந்தையும்.. இதை ஏற்றுக் கொள்வார்களா என்ற சந்தேகம் எழுந்ததில்.. நல்ல பிள்ளையாகி..

'வாட் இஸ் திஸ்..' என்று விதியை நொந்தபடி விழிகளால் வயலெட்டை அதட்டினான்..

"நினைப்புத்தான்.." வயலெட் வாய் விட்டே சொல்லி விட்டாள்..

ஒரு பெண்ணே வாய்விட்டு அவன் மீதான அவள் நினைவைச் சொல்லிய பின்பும் மரத்திலும் அசையாத நெடுமரமாய் நிற்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்ட தாமோதரன்..

"இது ஆபீஸ்.. இங்கே எந்த நினைப்பும் இருக்கக் கூடாது.." என்று வயலெட்டுக்கு சொல்வதைப் போல அவனுக்குச் சொல்லி வைத்தான்..

"ஆல்ரெடி.. எனக்கு ஆள் இருக்கு சார்.." கடுப்பாகி தனது ரகசியத்தைச் சொல்லி விட்டாள் வயலெட்..

'அப்புறம் என்ன கழுதைக்கு என்னைப் பார்த்து கண்ணடிச்சே..?' எரிச்சலடைந்த தாமோதரன்..

"அதான்.. நம்ம ஆபிஸ் டெலிபோன் ஆல்வேஸ் எங்கேஜ்டாவே இருந்து வைக்குதா..?" என்று கேட்டுப் பழிதீர்த்துக் கொண்டான்..

'சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு போட்டுத் தாக்கறானே..' தழைந்து போக எண்ணிய வயலெட்..

"அதை விடுங்க சார்.." என்று குழைந்தாள்..

"விடுகிறதா இருந்தா நீங்கதான்ம்மா விடனும்.. ஏன்னா.. அது உங்களோட ஆள்.." என்றான் தாமோதரன்..

'இவனுக்கு இருக்கிற கொழுப்பைப் பாரேன்.. என்ன அலுவலுக்காக என் ஆளை நான் விடனுமாம்..?' வயலெட் கொதிப்பேறிப் போனாள்..

"இப்படின்னு தெரிந்திருந்தா இந்த வேலையை நான் ஒப்புக்கிட்டிருக்கவே மாட்டேன் சார்..?"

"எந்த வேலையை.. மிஸ் வயலெட்..? ரிசப்சனிஸ்ட் வேலையையா..? இப்பவும் ஒன்னும் கெட்டுப் போகல.. உங்களுக்கு இவ்வளவு சலிப்பா இருந்தா தாராளமா உங்க வேலையை ரிசைன் பண்ணிட்டு உங்க ஆள் கூடப் போயிரலாம்.."

"எதுக்காக சார்.. என் வேலையை நான் ரிசைன் பண்ணனும்..? வேலையிருந்தாத்தான் ஆளும் நிலைப்பாங்க.."

"ஹ..! என்ன ஒரு காதல்..!"

"யதார்த்தமான காதல்..!"

"உண்மையை உரக்கச் சொன்னதுக்கு பாராட்டுக்கள்.."

"அதை நீங்களே வைச்சுக்கங்க.. எனக்கு வேணாம்.."

"அப்படிங்கறிங்க..?"

"ஆமாம்கறேன்.."

"ஓகே..! தகுதியில்லாதபோது பாராட்ட ஏத்துக் கறதுக்கு மனச்சாட்சிக்கு உறுத்தலாத்தான் இருக்கும்.. பரவாயில்லை... விட்டு விடுங்க... வேலையைச் சொல்லலைம்மா.. பாராட்டைச் சொல்றேன்.."

"வேலையை விட்டுவிட நான் ரெடியா இல்லை சார்.. நான் சொன்னது எனக்கான ரிசப்சனிஸ்ட் வேலையை இல்லை.. அடிசனலா ஒப்புக்கிட்ட இந்த வேலையைத்தான் சொன்னேன்.."

வயலெட் கையிலிருந்த ஃபைல்களைக் காட்டினாள்.. தாமோதரன் அவற்றுக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்று லேப்டாப்பை காதலியைப் பார்ப்பதைப் போல பார்த்துக் கொண்டிருந்த சித்தார்த்தனைப் பார்த்தான்..

"ஏன் சார்..?" வயலெட் கிசுகிசுத்தாள்..

'ம்ஹீம்..! ஆளிருக்குன்னு சொல்லிட்டு ஹஸ்கி வாய்சில பேசி வைக்கிறா..' அனல் பெருமூச்சுடன் அவளை ஏறிட்டான் தாமோதரன்..

"லேப்டாப்பில அப்படி என்னதான் இருக்கு..?"

"ம்ம்ம்.. இதுதான் இருக்கு.."

தாமோதரன் லேப்டாப்பைத் திருப்பிக் காண்பிக்க.. திரையில் தெரிந்த புகைவடிவத்தில் கையில் இருந்த ஃபைல்களை நழுவவிடப் போனாள் வயலெட்..

"பே.. பே.. பே.."

ஊமை போல உளறிக் கொட்டியவளிடம்..

"இதுக்குத்தான் பேசாம இருந்தேன்.. நீங்களா வினையை இழுத்து விட்டுக்கறிங்க.. ஃபைல்களை டேபிலில் வைத்துட்டுப் போங்க.." என்றான் தாமோதரன்..

"இண்டர்வியூ..?"

"இண்டர்காமில் சொல்றேன்.. வரிசையா அனுப்பி வையுங்க.."

"தேக்யு சார்.."

மனமார நன்றி சொல்லி விட்டு கைகளில் இருந்த ஃபைல்களை சித்தார்த்தனின் டேபிள் மீது இறக்கி வைத்தாள் வயலெட்.. வலித்த கைகளை உதறி விட்டுக் கொண்டவள்.. வெளியேறாமல் அங்கேயே நின்றதில்..

"இன்னும் என்ன..? இன்னொரு தரம்.. அந்த லேப்டாப்பைத் திருப்பிக் காட்டனுமா..?" என்று கேட்டு அவளை அலற வைத்தான் தாமோதரன்..

"நீங்க அரட்டறதிலேயே குறியாய் இருங்க சார்.."

"வேற எதிலே குறியாய் இருக்கனும்னு நீங்க நினைக்கறிங்க..?"

"நான் எதையும் நினைக்கலை.. ஏன் சார்.. நம்ம எம்.டி எதுக்காக அதையே உத்து உத்துப் பார்த்துக்கிட்டு இருக்கார்..?"

"ஏன்ம்மா..? அப்படியே உங்க ஆள் உங்களை உத்து உத்துப் பார்க்கிறதைப் போல இருக்கில்ல..?"

"ஆமாம் சார்.. எப்படிக் கண்டுபிடிச்சீங்க..?"

"யானைத் திருஷ்டியினாலதான்ம்மா.."

"யானை திருஷ்டியா...? அதை ஞானத் திருஷ்டின்னுல்ல சொல்லுவாங்க..?"

"நான் இப்படித்தான் சொல்லுவேன்.. நேரம்மா.. பேய்க்கு வாழ்க்கைப்பட்டா புளியமரம் ஏறனுமாம்.. பேயை காதலியைப் பார்க்கிறதைப் போல உத்து உத்துப் பார்க்கிற நண்பனுக்கு நண்பனா வாழ்க்கைப்பட்டா.. இப்படித்தான்.. ஞானத்திருஷ்டி.. யானை திருஷ்டியா மாறிரும்.."

தாமோதரனின் அங்கலாய்ப்பில்..

"த்ச்சு.. த்ச்சு.." என்று அனுதாபப் பட்டாள் வயலெட்.

"இந்த அல்ட்ரா மாடர்ன் ஆபிசிலேயுமா பல்லி சவுண்டு கொடுக்குது..?" தாமோதரன் விட்டத்தை உற்று உற்றுப் பார்த்தான்..

"வேணாம் சார்.. எம்.டி உத்து உத்துப் பார்க்கறதே போதும்.. நீங்களும் கூட்டுச் சேர்ந்துராதீங்க.." என்ற வயலெட்..

"என்னவோ போங்க.. இன்றைக்கு இண்டர்வியு உருப்பட்டாப்புலதான்.." என்று நல்வாக்குச் சொன்னபடி விட்டால் போதும் என்று அங்கிருந்து ஓடியே விட்டாள்..

'ம்ஹீம்.. அவளால் ஓட முடியுது.. என்னால அது முடியலையே..'

ஏக்கத்துடன் சித்தார்த்தனைப் பார்த்தான்.. அவன் அப்போதும் உன்னிப்பாக லேப்டாப்பைப் பார்த்துக் கொண்டிருக்க.. அதைப் பறிமுதல் செய்து மூடி வைத்தான்..

"டேய்.. டேய்.." என்ற சித்தார்த்தனை..

"கொன்னே போட்டிருவேன்.." என்று வெறி கொண்ட வேங்கையாக அதட்டி அடக்கி வைத்தான்..

"உன்னாலே எனக்குத்தாண்டா இம்சை.. இப்பப்பாரு.. அந்த வயலெட் நீ பேயைக் காதலிக்கறேன்னு கம்பெனி முழுவதும் தண்டோரா போடப் போறா.. ஏய்ய்.. அவ நடமாடும் பி.பி.சிடா.. போதாக்குறைக்கு கையில போன் வேற இருக்கு.. கர்ணனுக்கு கவசக் குண்டலம் போல அவளுக்கு அந்த போன்.. பசை போட்டதைப் போல அவ கையில எந்த நேரமும் போன் ஒட்டிக்கிட்டு இருக்கு.. நம்ம கம்பெனி பத்தாதுன்னு ஊரெல்லாம் போன் பண்ணி ஒலிபரப்பப் போறா பாரு.."

"விடுடா.."

"எதை விடச் சொல்ற.. லேப் டாப்பையா..?"

"பேச்சை விடச் சொன்னேன்..?"

"இப்ப என்ன அலுவலுக்கு லேப்டாப்பை நோண்டிக் கிட்டு இருக்க..? அதிலயும் கூகுலுக்குள்ள போயி வினோதமான

ஆப்சன்களைக் கேட்டுக்கிட்டு இருக்க..? என்னதாண்டா ஆச்சு..?"

"தாமு.."

சித்தார்த்தன் ஆழ்ந்த குரலில் அழைத்ததில் தாமோதரனின் புருவங்கள் உயர்ந்தன..

"என்னடா விசயம்..?"

"நேத்து ஈவினிங்ல மகாபலிபுரம் போனேன்டா.."

"அதுக்கென்னடா..? போனவன் சுத்திப் பார்த்துட்டு வந்திருக்க வேண்டியதுதானே..?"

"அப்படித்தாண்டா நானும் பிளான் பண்ணி யிருந்தேன்.. பட்.. கிளம்பறப்ப ஒரு பாட்டுச் சத்தம்..!"

சித்தார்த்தன் விவரித்தான்.. யாமினியைப் பற்றிச் சொன்னான்..

"அவளை முதன்முதலா பார்த்ததைப் போல எனக்குத் தோணலைடா.. காலம் காலமா அவளுடன் பழகியதைப் போல ஓர் ஃபீலிங்.. அதைவிட என்றைக்குமில்லாம.. அன்றைக்கு அந்த ஐந்து ரதக்கோவில்களைப் பார்த்தப்ப எனக்குள்ளே ஒரு வைப்ரேசன் ஃபார்ம் ஆச்சுடா தாமு.. அவளைக் கேட்டா அவளுக்கும் அப்படித்தான்னு சொல்கிறா.. போதாக்குறைக்கு.. புகை போல ஓர் அமானுஷ்யத்தை அவ அடிக்கடி பார்க்கிறாளாம்.. அந்த ஐந்துரதக் கோவில்கள் அவளை இம்ப்ரெஸ் பண்ணுதாம்.. அலைபோல இழுக்குதாம்.. எதனால அவளை மட்டும் அத இழுக்குதுன்னு தெரிஞ்சுக்க அடிக்கடி அங்கே வருவாளாம்.. மகாபலிபுரத்திலேதான் அவள் பிறந்து வளர்ந்தாளாம்.. அமானுஷ்யத்தைக் கண்டு அவள் பயப்படலைடா தாமு.. பழகிருச்சுன்னு சொல்றா.. ரதக் கோவில்கள் இம்ப்ரெஸ் பண்றதிலேயும் அவளுக்கு பயமில்லையாம்.. அவ தனியில்லைன்னு சொல்கிறாடா மச்சான்.. அந்தக் கடலும் வானமும்.. ரதக்கோவில்களும் துணையாய் இருக்கிறதைப் போல பேசறாடா.."

விழிகள் செறுகப் பேசிய நண்பனைக் கவலையுடன் பார்த்தான் தாமோதரன்.. இவன் மட்டும் ஏன் இப்படிப்பட்ட வினோதமான மனித ஜீவன்களை சந்தித்து வைக்கிறான் என்றிருந்தது அவனுக்கு..

'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனி..' என்பது ஒரு மிகப் பெரிய பரந்த சாம்ராஜ்யம்.. அதன் மன்னவனாக இருப்பவன் அதற்குரிய உயரத்தில் இருக்க வேண்டாமோ.. இப்படியா.. வினைகளைத் தேடிப் போய் தெரிந்து கொள்வான்..?

அத்தியாயம் - 8

எங்கோ உன்னைப் பார்த்த பொழுதில்..

என்னை நான் தொலைத்தேன்...

"எனக்கென்னவோ தாமு.. அவளை பர்ஸ்ட் டைமா நான் மீட் பண்றதைப் போலவே தோணல..."

"பின்னே..?"

"காலம் காலமா அவளை தெரிந்து வைத்திருக் கிறதைப் போல தோணுதுடா.."

'இது என்னடா வம்பாப் போச்சு..' என்றிருந்தது தாமோதரனுக்கு..

சித்தார்த்தனின் அப்பா மிகப் பெரும் கோடிஸ்வரர்.. விவேகானந்தன் என்றால் தெரியாத வி.ஐ.பிக்களே இருக்க மாட்டார்கள்.. அந்த அளவுக்கு அவர் ஹை சொசைட்டியில் பிரபல்யமானவர்.

சித்தார்த்தனின் தந்தை இப்படியென்றால்.. தாய் அவருக்கும் மேலே பிரபலமான அரசியல் தலைவரின் மகளாக இருந்தார். சித்தார்த்தனின் அம்மாவான

நிருபமாவின் அப்பா.. தேசிய அளவிலான மிகப்பெரும் அரசியல்கட்சியின் தமிழக் கிளையின் தலைவர்.. அனைத்து அரசியல் கட்சிகளின் நன்மதிப்பையும் கட்சி பேதமின்றி பெற்றவர். இந்தியாவின் தலைநகரம் வரை அவரது செல்வாக்கு பரவியிருந்தது.

இப்பேற்பட்ட தாய் தந்தைக்குப் பிறந்த சித்தார்த்தன் எப்படி இருக்க வேண்டும்..? அவனுக்குப் பின்னால் பிறந்த நீரஜாவைப் போல பரம்பரைப் பணத்திமிருடன் இருக்க வேண்டாமோ..?

"லீவ் தட் மேட்டர் சித்தார்த்.. நீ உன் தங்கையைப் போல இருக்க வேண்டாம்.. அட்லீஸ்ட்.. உன் பேரண்ட்ஸின் பெருமைக்கு பங்கம் வராததைப் போல இருக்கலாமில்ல..?"

"வாட் ஃபார்..? என் பேரண்ட்ஸின் நிழலில் நான் குளிர்காய விரும்பலைன்னு எத்தனை தரம் சொல்லியிருக்கேன்..? இந்த 'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனி' நான் எஸ்டாபிலிஷ் பண்ணினது.."

"இல்லேன்னு நான் சொன்னேனாடா..? இதோட.. நிருபமா குருப் ஆஃப் கம்பெனியின் வாரிசும் நீதான்ங்கிறது இல்லேன்னு ஆகிடுமாடா..?"

"அது என் அப்பாவோட கம்பெனி.."

"உன்னைத் திருத்த முடியாது.."

"தெரியுதில்ல..? அப்புறமும் ஏன் டயத்தை வேஸ்ட் பண்ற..?"

"டேய்.. உனக்காக உன் வீட்டில் பார்த்துக் கிட்டிருக்கிற பெண்களின் ஸ்டேட்டஸே வேறடா."

"இப்ப எதுக்காக இதைச் சொல்கிற..?"

"மனசு கேட்கலை.. ஸ்கூலில இருந்து கூடப் படிச்ச பிரண்டாச்சேன்னு சொன்னேன்.."

"தாமு.. நான் பார்த்த பெண்ணைப் பத்தின என் இனம் புரியாத ஃபீலிங்ஸைப் பத்தி உன்கிட்ட ஷேர் பண்ணிக் கிட்டேன்.. தட்ஸ் ஆல்.. அதுக்காக நீ மேரேஜ் வரைக்கும்

இமாஜின் பண்ணிக்கிட்டு அலற வேண்டாம்.. ஷி இஸ் எ இன்ட்ரெஸ்டிங் கேரக்டர்.. யு நோ.."

"அவ்வளவுதானா..?"

'அப்பாடி..' என்றிருந்தது தாமோதரனுக்கு..

அவன் நிலைமை சிக்கலானது.. சித்தார்த்தன் செய்து வைக்கும் கிறுக்குத்தனமான வேலைகளுக்கு அவனைப் பெற்றவர்களிடம் தாமோதரன்தான் பதில் சொல்லியாக வேண்டும்.. அவன் வாங்கிவந்த வரம் அப்படி.. சித்தார்த்தனை விட்டு விட்டு தாமோதரனை கேள்வி கேட்டே ஓர்வழி பண்ணி விடுவார்கள்..

இது எப்போது நடந்தது..? ஏன் நடந்தது..? தாமோதரன் கூடப் போனானா..? போனானென்றால் சித்தார்த்தன் இது போன்ற பித்துக்குளியை பார்த்துப் பேசும் போது எங்கே போயிருந்தான்..? வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தானா..? கூடப் போகவில்லையென்றால் ஏன் கூடப் போகவில்லை..? அதைவிட அவனுக்கு வெட்டி முறிக்கும் வேலை வேறு என்ன இருந்தது..?

இத்தனைக்கும் பதில் சொல்லி ஓய்ந்து போவதைத் தவிர்க்கத்தான் தாமோதரன் சித்தார்த்தனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தான்..

"ஓகே.. பிரண்ட்.."

"பிரண்டுதான்.. நான் உனக்கு பிரண்டுதான்.. இல்லேன்னா நான் சொன்னேன்..? அதுக்கு இப்ப என்னதான் பண்ணனும்கிற..?"

சித்தார்த்தனைப் பெற்றவர்களின் நினைவில் தாமோதரன் புலம்பி வைக்க.. சித்தார்த்தன் அவனை விசித்திரமாக பார்த்து வைத்தான்..

"என்னைச் சொல்லிட்டு உனக்கென்னடா ஆச்சு..?"

"இதுவரைக்கும் எதுவும் ஆகாம தப்பிச்சுக்கிட்டே வந்திருக்கேன்.. இனியும் இது கண்டினியூ ஆகணும்.."

"எல்லாம் கண்டினியூ ஆகும்.. நீ முதல்ல இந்த ஃபைல்களைப் பாரு.. இண்டர்வியூ முடிந்ததும் நெக்ஸ்ட் என்ன புரோக்ராம்..?"

"நீயும் நானும் சேர்ந்து இன்னைக்குத்தான் ரிலிஷான புதுபிலிமை.. முதல் ஷோவில.. முதல் ஆளா பார்க்கப் போறோம்.. போகலாமா..?"

கடுப்புடன் கேட்ட தாமோதரனை இமைக்காமல் பார்த்த சித்தார்த்தன்.

"ஏண்டா..?" என்றான்..

"பின்னே என்னடா.. இண்டர்வியூ முடிஞ்சவுடன் பிஸினெஸ்லன்ச் இருக்குது.. அதில் பாரின்காரர்கூட புது அக்ரிமெண்டைப் பத்திப் பேசி முடிவு பண்ணப் போகிற.. ஈவினிங் அக்ரிமெண்ட் சைன் ஆகப் போகுது.. இம்பார்ட்டன்டான இத்தனை வேலைகளை முன்னாலே வைச்சுக்கிட்டு.. நீ லேப்டாப்பைக் கொஞ்சிக்கிட்டு இருக்கிற.."

"பார்த்தியா.. இண்டர்வியூ ஞாபகத்தில லேப்டாப்பை மறந்துட்டேன்.. அதில முக்கியமான ஒன்னை செர்ச் பண்ணிப் பார்த்துக்கிட்டு இருந்தேன்.. கரெக்டா நீயும் வந்திட்ட.. ஒன் மினிட் வெயிட் பண்ணு.."

"என்ன கழுதைக்கு..?"

தாமோதரன் லேப் டாப்பை இழுத்து சித்தார்த்தனின் கைக்கு எட்டாத தூரத்தில் வைத்தான்.. சித்தார்த்தனின் கைக்கு எட்டும் தூரத்தில் இன்டர்வியூக்கு வந்திருப் பவர்களின் ஃபைல்களை வைத்தான்..

"இப்போதைக்கு இதைத்தவிர வேற எதுவும் உனக்கு நினைவுக்கு வரக் கூடாது.. ஒரு நிமிசம் உன் கம்பெனியோட இண்டர்வியூ லெட்டரை நம்பிக் கிளம்பி வந்திருக்கிற கேண்டிடேட்டை நினைச்சுப் பாருடா.. அவங்க பாவமில்ல..?"

நல்லவேளையாக இல்லை என்ற பதிலைச் சொல்லாமல் எதிரே இருந்த ஃபைல்களை ஆராய ஆரம்பித்தான் சித்தார்த்தன்..

தன் முயற்சியில் வெற்றி பெற்றவனாக ஒரு பாட்டில் தண்ணீரை தொண்டையில் சரித்து ஆசுவாசப் படுத்திக் கொண்டான் தாமோதரன்..

"பாதி ஃபைல்களை நானும் பார்க்கிறேன்.."

தாமோதரன் தன் பக்கமாக பாதி ஃபைல்களை இழுத்துக் கொண்டான்.. ஒரு பக்கத்தில் சிரிப்புமில்லாத.. சோகமுமில்லாத மலர்ச்சியான பெண்ணின் புகைப்படம் இருந்தது.. அதில் தெரிந்த வசீகரத்தை கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தவனுக்குள் ஏதோ ஒரு மின்னல் வெட்டியது.

'என்னடா இது.. இவன் சொன்ன கதையைக் கேட்டு நானும் ஜெர்க் ஆகறேன்..' தலையை ஆட்டி அந்த மின்னலை வழியனுப்பி வைத்துவிட்டு வேலையில் மூழ்கினான்..

"மிஸ் வயலெட்..! கேண்டிடேட்ஸை அனுப்ப ஆரம்பிங்க.."

சித்தார்த்தன் இன்டர்க்காமில் கட்டளையிட்டபோது.

'லேப் டாப்பை விட்டு வெளியில் வந்துட்டாரு போல..' என்று அவள் நினைத்துக் கொண்டாள்...

இண்டர்வியூ ஆரம்பமானது.. சித்தார்த்தன் பார்த்த ஃபைல்களை தாமோதரன் பக்கம் நகர்த்தி விட்டு.. அவன் பக்கமிருந்த ஃபைல்களை தன்பக்கமாக இழுத்துக் கொண்டான்..

வரிசையாக வந்தவர்களின் பதில்களும்.. தகுதிகளும் சிறப்பாகவே இருந்தன..

"இப்பல்லாம் முன்னைப் போல இல்லேடா.. செம நாலெட்ஜ் மச்சி.." என்றான் சித்தார்த்தன்..

"ஐ அக்ரி.." என்றான் தாமோதரன்..

"சிக்ஸ்த் படிக்கிறப்பவே கம்யூட்டரில் கரை கண்டவங்களா ஆகிடறாங்க.. படிக்கிற பாடத்துக்கு டியூசன் போறாங்களோ

இல்லையோ.. எக்ஸ்ட்ரா குவாலிபிகேசனுக்கு கோச்சிங் சென்டர் போயிடறாங்க.. இந்தியா சீக்கிரமாவே வல்லரசா ஆகிரும் மச்சான்.."

"அதே.."

சித்தார்த்தன் அடுத்த கேண்டிடேட்டை அனுப்பச் சொல்லும் பஸ்ஸரை அழுத்தியபடி தாமோதரன் சொன்னதை ஆமோதித்தான்..

"மே ஐ கமின் சார்.." அறைவாசலில் குரல் கேட்டது.

'குயிலினும் இனிய குரல்..' தாமோதரன் டையை சரிசெய்து கொண்டான்..

சித்தார்த்தனுக்குள் மின்சாரம் பாய்வதைப் போல இருந்தது.. அந்தக் குரல் எழுப்பிய அலைவரிசை அவனைத் தாக்கியது. அவனுக்கு வெகு பரிச்சயமான குரல் அவனை அழைப்பதைப் போன்ற பிரமையில் அவன் திணறிப் போனான்..

"யெஸ்.. கமின்.." தாமோதரன்தான் குரல் கொடுத்தான்..

உள்ளே வந்த பெண்ணைக் கண்டதும் சித்தார்த்தனின் உடலில் அதிர்வு ஏற்பட்டது.. அவன் சுழல் நாற்காலியை விட்டு எழுந்தே விட்டான்..

"நீ.. நீ.. நீ..."

அவனுடைய அதிர்ச்சிக்க குறையாத அதிர்ச்சியை தனது விழிகளில் பிரதிபலித்தபடி அங்கே யாமினி நின்று கொண்டிருந்தாள்..

"நீ எப்படி இங்கே..?" வியப்புடன் கேட்டான் சித்தார்த்தன்..

"இண்டர்வியூக்கு வந்தேன் சார்.. நீங்க இங்கே..?"

இண்டர்வியூக்கு வந்தவள் கேட்ட கேள்வியில் தாமோதரனுக்கு எரிச்சல் கிளம்பியது..

'இங்கே என்னதான் நடக்குது..? இவன் இவளை இண்டர்வியூ எடுக்கிறானா..? இல்லை.. இவ இவனை இண்டர்வியூ எடுக்கிறாளா..?'

"சார்தான் இந்தக் கம்பெனியோட எம்.டி. மிஸ் யாமினி.. யாமினிதானே உங்கள் பெயர்..?"

தாமோதரனின் கண்டிப்பான குரல் யாமினியை அதட்டியது.. அவனது கண்டிப்பான பார்வை சித்தார்த்தனை சுழல் நாற்காலியில் உட்கார வைத்தது..

"இந்தக் கம்பெனியோட எம்.டி இங்கேதான் இருப்பார்.. ஸோ.. அதில் நீங்க ஆச்சரியப்பட ஏதுமில்லைன்னு நினைக்கிறேன்.. டேக் யுவர் சீட்.."

கறாராக பேசினான் தாமோதரன்.. முகம் மாறிப் போனவளாக சீட்டின் நுனியில் அமர்ந்தாள் யாமினி.. அவளுடைய ஃபைலப் பார்த்தது தாமோதரன்தான்.. சித்தார்த்தனில்லை என்பதில் சித்தார்த்தன் அவளுடைய ஃபைலை புரட்டிப் பார்த்தான்.

அத்தியாயம்- 9

உன் சுட்டும் விழிப் பார்வையிலே

சொல்லி வரும் கதைகள் என்ன..?

'இவளை இங்கே வேலை பார்க்க விட்டு விடக் கூடாது..'

தாமோதரன் தீர்மானித்து விட்டான்.. யாமினியின் புகைப்படம் அவனை வசீகரித்ததைப் போல.. அவளின் தோற்றமும் அவனுக்குள் இனம் புரியாத ஒட்டுணர்வை ஏற்படுத்தித் தொலைத்ததில்..

'இவள் மாயக்காரி..' என்ற அவனது எண்ணம் வலுத்துவிட்டது.

தாமோதரன் யதார்த்தவாதி.. அவ்வளவு எளிதாக உணர்ச்சிவசப்பட்டு விடமாட்டான்.. அவனையே அவள் 'ஜெர்க்' அடிக்க வைக்கிறாள் என்றால்.. அவளிடம் படு உஷாராக இருக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்துத் தானே ஆக வேண்டும்..?

"ஹௌ நைஸ்..! நீங்க கோல்டு மெடலிஸ்டா..?"

சித்தார்த்தன் யாமினியின் பிளஸ் பாயிண்டுகளைக் கவனிக்க.. தாமோதரன் மைனஸ் பாயிண்டுகளை மட்டும்.. கண்களில் விளக்கெண்ணையை ஊற்றிக் கொண்டு தேடினான்..

"என்னத்த கோல்டு மெடலிஸ்ட்..? எல்லாம் உருப் போட்டு எக்ஸாம் பேப்பரில் கொட்டி விட்டு வருகிற கேட்டகிரி.. எக்ஸ்பீரியன்ஸ் இல்லை எம்.டி சார்.. நோட் திஸ் பாயிண்ட்.."

"வெயிட் தாமு.. எக்ஸ்ட்ரா குவாலிபிகேசன் இவங்க கிட்டே நிறைய இருக்கு.."

"பட்.. செக்கரட்டரி கோர்ஸ் படிக்கலையே.. அதை மறந்துட்டிங்களா சார்.."

முக்கியமான பாயிண்டை பிடித்து விட்டோமென்று தாமோதரன் தன்னைத்தானே..

'எங்கேயோ போயிட்டேடா தாமு..' என்று பாராட்டிக் கொண்டிருந்தபோது.. அதை உடைக்கவென்று அமைதியாக வெளிப்பட்டது யாமினியின் குரல்..

"நோ சார்.. நான் செகரட்டரி கோர்ஸையும் முடிச்சிருக்கேன்.. ரிசல்ட் வந்திருச்சு.. செர்டிபிகேட்டை இன்னும் வாங்கலை.. பட்.. அதைப்பத்தி என் அப்ளிகேசனில மென்சன் பண்ணியிருக்கேனே சார்.."

வினயமாக அவள் எடுத்துரைத்ததும்.. தாமோதரன். ஃபைலை அவன் பக்கமாக இழுத்துக் கொள்ளப் பார்த்தான்.. சித்தார்த்தன் கொடாக்கண்டனாக அதை இறுக கைப்பற்றி.. ஒவ்வொரு பக்கமாக ஆராய்ச்சி செய்வதைப் போல உற்றுப் பார்க்க ஆரம்பித்தான்..

'இவன் சும்மாவே ஆடுவான்.. இதில் ஃபைலில இருக்கிற பர்ட்டிகுலர்ஸை பார்த்து வைச்சிட்டான்னா அவ்வளவுதான்.. பிடிக்க முடியாதே..' தாமோதரன் தலைமேல் கை வைத்தபடி கவலையுடன் யாமினியை பார்த்து வைத்தான்..

அவன் கவலையில் அவளது புருவங்கள் ஏறின..

'இதுவேறயா..?' அவனுக்கு எரிச்சலாக இருந்தது.

வருமுன் காக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவனின் கவலையைப்பற்றி.. அவளுக்கு என்ன தெரியும்..?

'ஒருநாள் பார்த்து விட்டு வந்ததுக்கே.. ஃபாரின் அக்ரிமெண்டையும், முக்கியமான எங்கேஜ்மெண்டு களையும் மறந்து லேப்டாப்பில் பேய் உருவத்தை பார்த்துக் கிட்டிருக்கான்.. இந்த லட்சணத்தில இவளை இவனுக்கே பெர்சனல் செக்கரட்டரியா அப்பாயிண்ட் பண்ணினா அவ்வளவுதான்.. சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியை இழுத்து மூடி சீல் வைச்சிர வேண்டியது தான்..'

என்ன ஆனாலும் சரி.. யாமினியை கம்பெனிக்குள் நுழைய விடவே கூடாது என்ற தீவிரம் தாமோதரனிடம் வந்து சேர்ந்தது..

"யெஸ் தாமு.. இவங்க அப்ளிகேசனில கிளியரா மென்சன் பண்ணியிருக்காங்களே.. நீ கவனிக்கலையா..?"

நண்பனிடம் வினவிய சித்தார்த்தன் யாமினியைப் பார்த்து நட்புடன் சிரித்து வைத்தான்..

"ஐ ஆம் சாரி யாமினி.. உங்க ஃபைலை நான் பார்க்கலை.. இவன்தான் பார்த்தான்.." என்று விளக்கம் வேறு சொல்லி வைத்தான்..

'இப்ப இது ரொம்ப முக்கியம்.. அவ உன்கிட்ட வந்து கேட்டாளா..? கம்பெனிக்கு நீ எம்.டியா.. இல்லை அவ எம்.டியா..? இண்டர்வியூ எடுக்கிறது நீயா இல்லை அவளா..?'

தாமோதரனுக்கு தலைவேதனையாக இருந்தது..

"இண்டர்வியூவை ஆரம்பிக்கவே இல்லை எம்.டி. சார்.." குரல் கொடுத்தான்..

"இவங்க பிரில்லியண்ட் தாமு.. கோல்டு மெடலிஸ்ட்.."

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது.."

"எதுக்குடா புரியாத பழமொழியை எல்லாம் சொல்கிற..?"

"தியரிகல் வேறு.. பிராக்டிகல் வேறு.."

"இப்ப என்னதான் சொல்ல வர்ற..?"

"இவங்களுக்கு எக்ஸ்பீரியன்ஸ் இல்லை.. செக்கரட்டரி கோர்ஸ் முடிச்ச செர்டிபிகேட் இல்லை.. அப்புறம்.."

தாமோதரன் லொட்டு இல்லை.. லொசுக்கு இல்லை என்று நூதனமாக எதையெதையோ கண்டு பிடித்து அடுக்கினான்..

"உனக்கு என்னதாண்டா ஆச்சு..?" ஆச்சரியத்துடன் கேட்டான் சித்தார்த்தன்..

கூடவே யாமினியைப் பார்த்து..

"இவன் எப்பவும் இப்படி பேசி வைக்க மாட்டான்.. இன்னைக்கு என்னவோ மூட்-அவுட்டில் இருக்கான்.." என்று வேறு சொல்லி வைத்து தாமோதரனிடம் கடுப்பைக் கிளறி விட்டான்..

"பிரண்ட்ஷிப் வேற.. அபிஷியல் வேற.." என்றான் தாமோதரன்..

யாமினியை நிஷ்டூரமாக அவன் பார்த்து வைத்ததில் சித்தார்த்தனுக்கு உடன்பாடில்லை.. யாமினி சங்கடம் கொண்டதை அவளின் முக மாற்றம் அறிவித்தது.

"இன்னைக்குன்னு எதையெதையோ சொல்லிக் கிட்டு வர்ற.. வாட்'ஸ் தி மேட்டர்..?" சித்தார்த்தனுக்கு கோபம் வந்தது..

"நான் உங்களுக்கு பிரண்டுதான் எம்.டி. சார்.. பால்ய காலத்திலிருந்தே.. அதாவது ஃபீடிங் பாட்டிலை மறந்து ஸ்கூல் படியை மிதிச்ச காலத்தில இருந்தே நாம பிரண்ட்ஸ்.."

"அதுக்கென்ன இப்ப..?"

"பட்.. கம்பெனியில் நீங்க எம்.டி. நான் உங்க ஜி.எம். அப்படித்தான் நான் இருக்கிறேன்.."

"இல்லைன்னு யார்டா சொன்னது..?"

"இவங்களிடமும் அதையே நீங்க ஃபாலோ பண்ணினா பெட்டரா இருக்கும்ங்கிறது என்னோட ஒப்பினியன்.. எம்.டி சார் இருக்க மாட்டாம மகாபலிபுரக் கடற்கரைக்குப் போயிருக்கலாம்.. அங்கே.. 'ஓ.. ஓ..'ங்கிற தெய்வீக ராகத்தைக் கேட்டிருக்கலாம்.. பாடினது யார்ன்னு தேடிப் போயி மாட்டிக்கிட்டு.. கூடவே அவங்க பயமுறுத்தின அமானுஷ்யக் கதைகளுக்கும் தலையைத் தலையை ஆட்டியிருக்கலாம்.. அதெல்லாம் தனி.. அதையும்.. இந்த இண்டர்வியூவையும் மிக்ஸ் பண்ணக் கூடாது.."

அவன் எங்கே வருகிறான் என்று புரிந்து போனதில் யாமினியின் முகம் சிவந்து விட்டது.. அவள் கோபத்துடன் சித்தார்த்தனைப் பார்த்து படபடத்தாள்.

"எக்ஸ்யூஸ்மி சார்.. நீங்க யாருன்னே எனக்குத் தெரியாது. இந்தக் கம்பெனிக்கு நீங்கதான் எம்.டிங்கற விவரமே இந்த இண்டர்வியூ டயத்திலேதான் எனக்குத் தெரியும்.. மகாபலிபுரத்தில நீங்க இருக்கிற இடமா பாத்து நான் 'ஓ..ஓ..' ன்னு தெய்வீகராகம் பாடி உங்களைக் கூப்பிடலை.. தனியா நின்னு பாட்டுப்பாடிக்கிட்டு இருந்தவளை நீங்கதான் தேடிவந்து டிஸ்டர்ப் பண்ணினீங்க.. நான் ஃபீல் பண்ற அமானுஷ்யத்தைப்

பத்தி உங்ககிட்ட ஷேர் பண்ணிக்கிட்டது என்னோட முட்டாள் தனம் சார்.. நீங்க அதை ஊர் முழுவதும் தண்டோரா போடுவீங்களா..?"

நொடிப் பொழுதில் அவள் தாமோதரனை அன்னியனாக்கி அவளுக்கும்.. சித்தார்த்தனுக்குமிடையே புதுவிதமான பந்தத்தை உருவாக்கி விட்டதில்..

"சபாஷ்.." என்றான் தாமோதரன்..

எதற்காக அவன் சபாஷ் போடுகிறான் என்று புரியாமல் யாமினியும், சித்தார்த்தனும் அவனைப் பார்த்தார்கள்..

"உங்களை அப்ரிசியேட் பண்றேன்ம்மா.. நான் நினைத்ததைவிட நீங்க கெட்டிக்காரங்களா இருக்கீங்க.. இவன்கூட எல்.கே.ஜியில இருந்து ஒன்னாப் படிச்ச நான்

ஊரான்.. ஒருநாள் சாயங்காலம்.. ஒருமணி நேரம் இவன்கிட்ட கதையளந்த நீங்க.. இவனோட பெஸ்ட் பிரண்ட்.. உங்களை அடிச்சுக்க ஆளே வரமுடியாதுன்னு புரூவ் பண்ணிட்டிங்கம்மா.."

"தாமு.."

"போதும் எம்.டி.சார்.. உங்ககூட நிழல் போல ஃபாலோ பண்ணிக்கிட்டு வந்ததுக்கு... நேத்துப் பழகினவங்கள வைச்சு நல்லாப் பாடம் கத்துக் கொடுத்துட்டிங்க.."

"நான் கிளம்பறேன் சார்.."

யாமினி புறப்பட எழுந்தாள்.. சித்தார்த்தன் தாமோதரனை மறந்து விட்டு யாமினியை தடுத்து நிறுதத முனைந்தான்..

"இன்னும் இண்டர்வியூவே ஆரம்பிக்கலையே யாமினி.."

"முடிவு என்னவா இருக்கும்ன்னு இப்பவே எனக்குத் தெரிஞ்சு போச்சே சார்.."

"நீங்களா எதையும் நினைச்சுக்கக் கூடாது யாமினி.."

"ஈஸிட்..? அப்படி நீங்களும் நினைக்கறிங்களா..? உங்க மனச்சாட்சியைக் கேளுங்க சார்.. அது சொல்லும்.. வேலைக்கான ஆஃபைடப் பார்த்தேன்... அப்ளை பண்ணினேன்.. இண்டர்வியூக்கு கால் பண்ணி லெட்டர் வந்தது.. அட்டெண்ட் பண்ண வந்தேன்.. மத்தபடி உடனே இங்கே வேலை கிடைச்சிரும்.. ஜாயின் பண்ணிரலாம்ன்னு நினைச்செல்லாம் வரலை.. ஸோ.. எனக்கு எந்தவிதமான ஏமாற்றமும் இல்லை.. நீங்க என்னைக் கவனிக்கிறதை விட்டுட்டு காலம், காலமாய் பழகின உங்க பிரண்டைக் கவனிங்க.. சார் அப்படியே பொஸஸிவிலே துடிச்சுக்கிட்டு இருக்கார்.. பெஸ்ட் பிரண்ட்ஸை பிரிச்சு வைச்ச பாவம் எனக்கெதுக்கு..? இந்த மடம் இல்லேன்னா சந்த மடம்..! பை சார்.."

யாமினி போய் விட்டாள்.. அவள் பரப்பி விட்ட மாய அலைகளின் தாக்கத்திலிருந்து வெளிவந்த தாமோதரன்

நிம்மதியாக மூச்சு விட்டான்.. சித்தார்த்தனோ அவனை முறைத்தான்..

அத்தியாயம் - 10

பூப்பறிக்கத்தானே வந்தாய்..?

என்மனதை ஏன் பறித்தாய்..?

"இப்ப உனக்குத் திருப்திதானேடா..?"

சித்தார்த்தனின் கோபத்தில்.. 'ஆமாம், அப்படித்தான்' என்ற உண்மையை உரக்கச் சொல்லவிருந்த தாமோதரன் வாய் மூடிக் கொண்டான்.. எதற்கு வம்பு..? அவனுக்குத்தான் நினைத்தது நடந்து விட்டதே.. அதை வெளியில் சொல்லி சித்தார்த்தனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ள வேண்டுமா..?

"பரதேசி..!"

சித்தார்த்தன் யாரை இவ்வளவு அன்புடன் அழைக்கிறான் என்று தாமோதரன் கிஞ்சித்தும் சந்தேகிக்கவில்லை..

சாட்சாத் அவனைத்தான் சித்தார்த்தன் அன்போடு அழைத்து வைப்பான் என்று அவனுக்குத் தெரியாதா என்ன..?

"ஏண்டா அவளை விரட்டி விட்ட.?"

"பாரு சித்தார்த்.. அபாண்டமா என்மேல பழிபோடக் கூடாது. இண்டர்வியூவே ஆரம்பிக்கலைங்கறேன்.. அவ என்னடான்னா இந்த மடம் இல்லைன்னா சந்தமடம்ன்னு விட்டு விளாசிட்டுப் போறா.. இதுக்கு நானாடா பொறுப்பு.."

"அவளை நீ சொல்ல வைச்சே..?"

"எப்படி..? அவளுக்கு 'அ'னா, 'ஆ'வன்னா சொல்லிக் கொடுத்துச் சொல்ல வைச்சேனா..? போடா டேய்.."

"நீ பண்ற பம்மாத்து வேலையைப் பத்தி எனக்குத் தெரியாதுன்னு நினைக்காதே.."

சித்தார்த்தனின் கோபத்தில் இமைக்காமல் அவனையே பார்த்தான் தாமோதரன்..

"அப்படி என்ன பம்மாத்து வேலையைப் பண்ணிட்டேன்டா..?" நிதானமாகக் கேட்டான்..

"தாமு..."

"செக்கில் சைன் பண்ற பவரை நீ எனக்குக் கொடுத்திருக்க.. அதை மிஸ் யூஸ் பண்ணி கோடிக் கணக்கில் உன் பணத்தைச் சுட்டுட்டேனா..?"

"சேச்சே.."

"கம்பெனியோட எல்லாச் சீக்ரெட்ஸீம் உனக்கடுத்து எனக்கு மட்டும்தான் தெரியும்.. அதை எதிரிக் கம்பெனிக் காரன்கிட்டக் கொடுத்து காசு பார்த்திட்டேனா..?"

"அடிதாண்டா வாங்கப் போற.. நான் அப்படிச் சொன்னேனா..?"

"நீ எப்படிச் சொன்னேன்னு எனக்கெப்புடிடா தெரியும்..? காத்திருந்தவனோட பிரண்டை நேத்துப் பார்த்தவ தள்ளிக்கிட்டுப்போகப் பார்க்கிற கதையாயில்ல உன் கதை இருக்கு.."

"அவ என்னை தள்ளிக்கிட்டுப் போனாலும்.."

சித்தார்த்தன் ரசித்துச் சிரித்தான்.. தாமோதரன் சிரிக்கவில்லை.. இது சிரிக்கக்கூடிய விசயமல்ல.. தாமோதரன் அதை நன்கு அறிவான்.. அதனால்..

"அடுத்த கேண்டிடேட்டை வரச் சொல்லலாமா..?" என்று பேச்சை மாற்றி விட்டான்..

அடுத்து வந்தவர்களிடம் சித்தார்த்தன் எந்தவொரு கேள்வியையும் கேட்கவில்லை.. தாமோதரன்தான் ஃபைல்களை உணக்கையாகப் படித்துவிட்டு.. மாய்ந்து, மாய்ந்து கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தான்..

சித்தார்த்தனோ டேபிள் வெயிட்டை உருட்டியபடி யார் கம்பெனியின் இண்டர்வியூவோ என்பதைப் போல ஒட்டுறவுமில்லாமல் உட்கார்ந்திருந்தான்..

'இவனை என்ன செய்தால் தேவலாம்..'

தாமோதரன் பல்லைக் கடித்தாலும்.. அவனை எதுவும் செய்ய முடியாது என்பதினால் அந்த எண்ணத்தை விட்டு விட்டான்..

"ஃபைனலா இவங்க ரெண்டுபேரில ஒருத்தரை சூஸ் பண்ணலாம்.."

தாமோதரன் நீட்டிய பேப்பரை சித்தார்த்தன் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை.. அதற்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்ற தினுசில் அதை வெறிக்க வெறிக்கப் பார்த்து வட்டு..

"என்ன கழுதைக்கு இதை என்கிட்ட நீட்டற..?" என்றான்..

'என்னடா வேலை இது..? ச்சை.. மனுசன் இவன் கிட்ட ஜி.எம்மா மாட்டிக்கிட்டு முழிப்பானா..?' தாமோதரன் வெறுத்துப் போய்விட்டான்..

"கழுதையை லாயத்தில் கட்டிட்டு ஆகிற வேலையைப் பாரு சித்தார்த்.. இது வியாட்டுத்தன மில்லை.."

"என்னை பிளே பாய்ன்னு சொல்றீயா..?"

"ஏழு கழுதைவயசாகுது... உன்னைப் போய் 'பாய்'ன்னு யாராவது சொல்லுவாங்களா..?"

"இப்ப நீதான் கழுதையை லாயத்தில் கட்டாம கையில பிடிச்சுக்கிட்டு அலையற.."

"உனக்குப் பிரண்டாகித் தொலைச்சுட்டேனில்ல..? பழக்க தோசம்.. கழுதையை விட மாட்டேங்குது.."

"இந்தப் பேப்பரைத் தூக்கிப் போடு.."

சித்தார்த்தன் சுவாதீனமாய் சொல்லி வைக்க..

"என்னது..?..!" என்று தாமோதரனுக்கு கோபம் வந்துவிட்டது.

இதற்காகவா.. நாள் முழுவதும் தொண்டைத் தண்ணீர் காயும்வரை கேள்வி கேட்டு ஓய்ந்தான்..?

"பி சீரியஸ் சித்தார்த்.. நடந்து முடிந்திருக்கிறது உனது பெர்னல் செகரட்டரிக்கான இண்டர்வியூ.."

"அதை நீ எனக்குச் சொல்றியா..?"

"நேரம்டா.. காலையில இருந்தே நான்தான் உனக்குச் சொல்லிக்கிட்டு இருக்கேன்.. நீ யாருக்கு வந்த விருந்தோன்னு பார்த்துக்கிட்டு உட்கார்ந்திருக்க.. உன்னோட பெர்சனல் செக்கரட்டரிங்கிறது இம்பார்டண்ட் போஸ்டுடா.."

"இல்லேன்னு யார் சொன்னது..?"

"அதையும் சொல்லிருவியா..? டேய்.. மத்த வேலைகளைப் பிரிச்சு தர்றதைப் போல இந்த வேலையைப் பிரிச்சுத் தரமுடியாதுடா.. பார்த்தியில்ல.. சும்மா இந்த ஃபைல்களை ரெடி பண்ணிக் கொடுக்கிறதுக்கே வயலெட் எந்த அளவுக்கு அலுத்துக்கிட்டான்னு.."

"நீ ஸ்ட்ரிக்ட்டா வார்ன் பண்ணியிருக்கனும்.."

"என்னன்னு..?"

"ஆர்டர் போட்டா ஓபே பண்ணித்தான் ஆகனும்ன்னு.."

"அவ ஒபே பண்ண மாட்டேன்னா சொன்னா..? சொன்ன வேலையை செய்துட்டா.. பட் சித்தார்த்.. இந்த ஃபைல்களை ரிசப்சனில் வைச்சுப் பார்த்துக்கிட்டு இருக்கா.."

"ஸ்டுப்பிட்.. கான்பிடென்ஸ் ஃபைல்களை ரிசப்சனில் வைச்சுப் பார்க்கக் கூடாதுன்னு அவளுக்குத் தெரியாதா..?"

"அவ பார்க்கிறது ரிசப்சனிஸ்ட் போஸ்ட்.. அது உனக்குத் தெரியாதா..? அடிசனல் வொர்க் கொடுத்தா அவ சீட்டில வைச்சுத்தானே அவளாலே பார்க்க முடியும்..?"

"ஐ.. ஸீ.."

"உனக்குப் புண்ணியமாப் போகும் சித்தார்த்.. இந்தப் போஸ்டுக்கு இம்மீடியட்டா ஆளைப் போடு.. உன்னோட

எல்லா புரோக்ராமையும் டீல் பண்ண வேண்டியது உன் செக்கரட்டரிதான்.. டூ யு நோ இட்..?"

"சரி.. சரி.. அதுக்கு எதுக்காக இந்தப் பேப்பரை நீட்டற..?"

"இவங்கதான் எலிஜிபிள் கேண்டிடேட்ஸ்.."

தாமோதரன் தீர்க்கமாக சொன்னான்.. சித்தார்த்தன் அது பற்றி அலட்டிக் கொள்ளாமல் செல்போனை கையில் எடுத்தான்.. தாமோதரன் முறைப்பில்..

"ஆல்ரெடி.. நான் ஆளை செலக்ட் பண்ணியாச்சு.." என்றான்..

"நினைச்சேன்.." பல்லைக் கடித்தான் தாமோதரன்..

"யாரு..? அந்த மகாபலிபுர அமானுஷ்யமா..?"

"அவ பெயர் யாமினி.. மறந்துட்டுப் பேசக் கூடாது.."

"மறக்கலைப்பா.. மறக்கலை.. மறக்கக்கூடிய பேரா அது..?"

"ஏண்டா..? அந்தப் பேருக்கு என்ன..? தாமோதரன்ங்கற பேரைவிட அந்தப்பேர் எந்த விதத்தில் குறைஞ்சு போச்சு..?"

சித்தார்த்தனின் கேள்வியில் தாமோதரனுக்கு 'சுளீர்' என்று மனதில் வலித்தது.. ஆண்டாண்டு காலமாக அவனுக்கும், சித்தார்த்தனுக்கும் இடையில் வந்து நிற்கும் அந்த மாய மோகினியை மனமார அவன் வெறுத்தான்.. இதுபோல தாமோதரனைக் குறைத்து.. மற்றொருவரை உயர்த்திப் பேசுபவனல்ல சித்தார்த்தன்.. அவனுக்கும், தாமோதரனுக்கும் இடையில் இருக்கும் நட்பின் ஆழம் அத்தகையது.. தாமோதரனே தனது பெயரைத் தாழ்த்தி.. வேறொரு அழகான பெண்ணின் அழகான பெயரை உயர்த்திச் சொல்லியிருந்தாலும்.. அப்படியெல்லாம் இல்லவே இல்லை என்று அடித்துப் பேசக்கூடிய உயிர் நண்பன் அவன்.. அப்பேற்பட்டவனை ஒரு மாலைப் பொழுதின் மயக்கத்தில் மாற்றியமைத்து அனுப்பி விட்டாள் என்றால் அந்த யாமினியின் மாய சக்தியை குறைத்து மதிப்பிட முடியுமா..?

"அவள் வேண்டாம் சித்தார்த்.." உறுதியுடன் சொன்னான் தாமோதரன்..

"ஏன்..? அதுக்கான ஒரு கான்ங்ரீட் காரணத்தைச் சொல்லு.. நான் கேட்டுக்கறேன்.. உனக்குப் பிடிக்கலைங் கிறதுக்காக அவ திறமையை குறைச்சு மதிப்பிடக் கூடாது.. அதோட.. எனக்குப் பெர்சனல் செக்கரட்டரியா வரப் போகிறவளை நான்தான் செலக்ட் பண்ணனும்.."

என்னவோ வருங்கால மனைவியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பற்றிப் பேசுகிறவனைப் போல.. சித்தார்த்தன் உரிமைக்குரல் எழுப்பியதில் தாமோதரனுக்கு கோபமான கோபம் வந்தது..

"என் பக்கத்திலேயே இருக்கப் போகிறா.." சித்தார்த்தன் தொடர்ந்து சொன்னதில்..

'அதுக்காகத்தானேடா அவ வேண்டாம்ன்னு அடிச்சுக்கறேன்..' என்று நினைத்துக் கொண்டான் தாமோதரன்..

ஒருமாலைப் பொழுதின் மயக்கமான சந்திப்பிலேயே அவள் சித்தார்த்தனை மாற்றி அனுப்பி வைத்திருக்கிறாள் எனும் போது.. ஒரு நாளின் எட்டு மணி நேரத்தை சித்தார்த்தனின் கண்பார்வையில் அவள் செலவிட்டால்.. சித்தார்த்தன் என்ன கதியாவானோ என்ற பயம் பிடித்துக் கொண்டது தாமோதரனுக்கு.

'என்ன ஆனாலும் சரி.. அந்த யாமினியை இவன் பக்கத்தில் சோர்க்க விடக் கூடாது..'

தாமோதரன் என்னவோ சங்கல்பம் தான் செய்து பார்த்தான்.. ஆனால் அதை நிறைவேற்றுவது என்பது ஒன்றும் அத்தனை எளிதான காரியமாக அவனுக்கு இருந்து விடவில்லை..

அத்தியாயம்- 11

உன் காதலைத் தடுக்க எண்ணவில்லை..

மாயச்சூழலை தடுக்கவே எண்ணினேன்..

எக்கேடோ கெட்டுப் போடா.. எனக்கென்ன போச்சு என்று ஓர் நொடியில் சித்தார்த்தனை அவன் போக்கில் செயல்பட விட்டு விட்டு ஜெனரல் மேனேஜர் வேலையை மட்டும் பார்த்துக் கொண்டுப் போய்விட தாமோதரனுக்குத் தெரியாமல் இல்லை..

சற்றுமுன் வந்த 'மாய மோகினி யாமினி' சொன்னதைப் போல.. 'இந்த மடம் இல்லைன்னா சந்த மடம்..' என்று அவனும் எளிதாகச் சொல்லிவிட்டுப் போய் கொண்டே இருக்கலாம்தான்..

அவனுடைய வெளிநாட்டு எம்.பி.ஏ படிப்புக்கும்.. திறமைக்கும்.. சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனியில் ஜி.எம்மாக குப்பை கொட்டியவன் என்ற கூடுதல் தகுதிக்கும்.. பெரிய பெரிய கம்பெனிகள் எல்லாம் தாமோதரனைக் வலிந்துக் கூப்பிட்டு வேலை போட்டுக் கொடுப்பார்கள்தான்..

ஏற்கனெவே அதற்கான முயற்சிகளை சித்தார்த்தனின் போட்டிக் கம்பெனியின் எம்.டியான அகர்வால் பலமுறை செய்து விட்டான்.. அவன் சார்பாக அவனது ஜி.எம்மான முகேஷிம் பெர்சனல் மேனேஜரான பரத்தும் பலமுறை தாமோதரனைச் சந்தித்து பேரம் பேச முயன்றிருக்கிறார்கள்..

"இந்த விலை பேசற வேலையையெல்லாம் வேற எங்காவது போய் வைச்சுக்க.. உன் பணத்துக்கும், பகட்டுக்கும்.. நீ தூக்கிப் போடற எழும்புக்கும் வாலாட்டுகிற கூட்டம் நீ சொன்னபடி ஆடும்.. நான் ஆட மாட்டேன்.. எல்லாத்துக்கும் ஒருவிலை இருக்குன்னு நீ நினைக்கிற.. இறுதித் தீர்ப்பு கடவுளின் கையிலதான் இருக்குன்னு நான் நினைக்கிறேன்.. ஸோ.. இந்த ஆடுபுலி ஆட்டத்தை உனக்குக் காவடி தூக்கற ஆளுகிட்ட மட்டும் வைச்சுக்க.. என் பாதையில் கிராஸ் பண்ணாதே.."

தாமோதரன் பலமாக எச்சரித்தபோது தோள்களைக் குலுக்கிவிட்டுப் போய் விட்டார்கள்..

'தட்டி விட்டுப் போகிற ஜென்மங்கள்..'

தாமோதரனுக்குத்தான் தலையை வலித்தது.. இதையெல்லாம் சித்தார்த்தனின் காதுகளில் அவன் போட்டதே இல்லை.. அவனால் சித்தார்த்தனை விட்டுக் கொடுக்க முடியாது.. அவர்களுக்குள் நிலவிய நட்பு அப்படிப்பட்டது.

சித்தார்த்தன் அகர்வாலைப் பற்றிப் பேசினாலே டென்சன் ஆவான்..

"ஏண்டா அவனுக்கா தோண வேணாமா..? மத்தவங்களுக்குத் தோணினதைத்தான் தூண்டித் துருவி அவன் கம்பெனியின் புரடக்டாக்கிப் பணம் பார்ப்பானா..? கொஞ்சமாவது இது மத்தவங்களோட புத்தியில உதிச்சதுன்னு மனச்சாட்சி உறுத்தாதா..?"

"அவன் என்ன வைச்சுக்கிட்டா வஞ்சனை பண்றான்..? மனசுன்னு இருந்தாத்தானே மனச்சாட்சி அங்கே வரும்..? அவன் பணத்திமிரில் ஆடறான் சித்தார்த்.. விட்டு விடு.."

சித்தார்த்தன் விட்டு விட்டான்.. எதைப்பற்றியும் யோசிக்காமல் தனது புத்திக் கூர்மையை மட்டுமே முதலீடாக வைத்து சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியை ஸ்தாபித்தான்.. இரவு பகல் பாராமல் அவன் உழைத்த உழைப்பில் கம்பெனி வேர்விட்டு வளர்ந்து விருட்சமானது.

அப்படிப்பட்ட கம்பெனியில் சித்தார்த்தனின் தோளோடு தோள் நின்று.. கம்பெனியின் வேருக்கு நீர் பாய்ச்சுபவன் தாமோதரன்.

சித்தார்த்தனை விட்டு அவன் பிரிந்து செல்வதா..?

"லிஸன் சித்தார்த்.. இதுவரைக்கும் இந்தக் கம்பெனியின் ஜி.எம்ங்கிற முறையில நான் என் பவரை மிஸ்யூஸ் பண்ணினதில்லங்கிறது உனக்கே தெரியும்.."

"இப்ப என்ன அலுவலுக்கு மூச்சு விடாம இவ்வளவு லென்த்தியான ஸ்டேட்மெண்டை பேசி வைக்கிற..?"

"என் பேச்சுக்கு உன்கிட்ட மதிப்பிருக்கும்ங்கிற நம்பிக்கையில நான் வாக்குக் கொடுத்திட்டேன்.."

"இதைப் பாருடா.. இந்தப் பூனையும் மில்க்கை டேஸ்ட் பண்ணுமான்னு இருந்துட்டு.. இப்பக் காதல்.. கத்தரிக்காய்ன்னு கதை சொல்ற.. யாருடா அந்தப் பெண்..? எத்தனை நாளா காதலிக்கிற..? நீரஜாவுக்கு இதுபத்தித் தெரியுமா..?"

சித்தார்த்தன் உற்சாகமாய் தோளில் தட்டியதில் தாமோதரனின் தோள்பட்டை இறங்கி வைத்தது..

"இது ஒன்னுதான்டா குறைச்சல்.." அவன் வலித்த தோள் பட்டையைத் தடவிக் கொண்டான்..

"நீதானேடா வாக்குக் கொடுத்துட்டேன்னு சொன்ன..?"

"காதலிக்கு வாக்குக் கொடுத்தேன்னா சொன்னேன்..?"

"பின்னே..?"

"என் நண்பனுக்கு வாக்குக் கொடுத்தேன்னு சொன்னேன்.."

"எனக்கென்னடா வாக்குக் கொடுத்த..?"

"ஏண்டா இப்படிப் படுத்தற..? உனக்கு வாக்குக் கொடுத்தேன்னு எங்கேடா நான் சொன்னேன்..?"

"இப்பத்தானேடா சொன்ன..?"

"என்னத்தைச் சொன்னேன்..?"

"உன் நண்பனுக்கு வாக்குக் கொடுத்திருக்கன்னு சொல்லலை..?"

"அதுக்கு..?"

"உன் நண்பன் யாருடா..? நான்தானே.."

"ஓ.. நீ அப்படி வர்றியா..?"

தாமோதரனுக்கு தலையை வலித்தது.. சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது.. சித்தார்த்தன் படுத்தும் பாட்டிற்கு சுவரில் முட்டிக் கொள்வதாக இருந்தால்.. தலையின் ஒரு பாகம்கூட மிஞ்சாது என்று தெரிந்து வைத்திருந்ததினால் அந்த யோசனையை 'ஓடு.. ஓடு.' என்று ஓட்டி விட்டான்..

'ஊருக்குள்ளே பத்துப் பதினைஞ்சு பிரண்டைஸை வைச்சிருக்கிறவனுகெல்லாம் நிம்மதியா இருக்கானுக.. இவன் ஒருத்தன மட்டும் பிரண்டா வைச்சுக்கிட்டு நான் படற லோலும்.. இவன் படுத்தற லொள்ளும் இருக்கே.. அப்பப்பா.. முடியலைடா சாமி..'

தலையைப் பிடித்தபடி பரிதாபகரமாக பார்த்த நண்பனிடம்..

"நண்பேன்டா.." என்று சொல்லி மேலும் சோதித்து வைத்தான் சித்தார்த்தன்..

"கொஞ்நேரம் சும்மாதான் இருக்கியா..?" தாமோதரன் எரிந்து விழுந்தான்..

"அதுவும் சரிதான்.. நீ ரெஸ்ட் எடு.. நான் வயலெட்டைக் கூப்பிட்டு இந்த அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை யாமினிக்கு அனுப்பச் சொல்லிடறேன்.."

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருந்தான் சித்தார்த்தன்.. தாமோதரனுக்கு வெறி வெறியாக வந்தது..

"ஏண்டா.. நான் என்ன சொல்லிக்கிட்டு இருக்கேன்.. நீ என்ன பண்ணிக்கிட்டு இருக்க..? என் பிரண்டுக்கு வாக்குக் கொடுத்திருக்கேண்டா.." சித்தார்த்தனிடம் சீறினான்..

"நான்தான் உன்கிட்ட எந்த வாக்கையும் கேட்கலையேடா மச்சான்.."

"எனக்கு வர்ற கோபத்துக்கு என்ன செய்வேன்னே தெரியாது சித்தார்த்.. பிரண்டுன்னா நீ ஒருத்தன் மட்டும் தானா..? இந்த உலகத்தில வேற பிரண்ட்ஸே இருக்க மாட்டாங்களா..?"

"நேத்து வரைக்கும் அப்படித்தானடா இருந்துச்சு..?"

"நேத்து வரைக்கும் நீ கூடத்தான் காத்து, கருப்பு அடிக்காம ஒழுங்கா இருந்த.. இன்னைக்கு அப்படியா..? மகாபலிபுரம் போறேன்னு யோயிட்டு மந்திரிச்சு விட்டவனப் போலயில்ல திரும்பி வந்திருக்கிற..?"

"அதெல்லாம் ஒரு மண்ணுமில்ல.. உன் கண்ணில தான் ஏதோ கோளாறு.."

"இருக்கட்டும்.. நல்ல கண்டாக்டரை பார்த்து சரிபண்ணிக்கறேன்.. நீ முதல்ல இந்தப் பெண்ணுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை அனுப்பு.."

தாமோதரன் நீட்டிய ஃபைலில் இருந்த பெண்ணைப் பற்றிய விவரங்கள் யாமினிக்கு இணையாகத்தான் இருந்தன.. இண்டர்வியூவிலும் அந்தப் பெண் சிறப்பாகத்தான் பதில் சொல்லியிருந்தாள்..

'ஆனாலும்..' சித்தார்த்தனின் மனம் முரண்டியது.

"ஏன்..? யாமினிக்கு என்ன குறை..?"

"அவளைச் சுற்றிக்கிட்டு இருக்கிற மாய வலைதான் குறை.. அதைப்பத்தி எனக்கென்ன..? என்பிரண்டோட தங்கை இந்தப் பொண்ணு.. இவளுக்கு வேலை கொடுக் கிறேன்னு நான் அவனுக்கு வாக்குக் கொடுத்திட்டேன்.. என் வார்த்தையை நீதான் காப்பாற்றியாகனும்.."

சித்தார்த்தனைச் சுற்றி நூல்வேலியை போட்டு விட்டான் தாமோதரன்.. அதை அறுக்கும் மனத்திண்மை சித்தார்த்தனுக்கு இருந்ததில்லை.. எதிரிகளின் இரும்புத்திரையை உடைத்து நொறுக்குகிறவன்தான் அவன்.. ஆனால் நண்பனின் நூல்வேலிக்குக் கட்டுப் பட்டவன்.. அதைத் தொட்டுக்கூடப் பார்க்க மாட்டான்..

"ம்ம்ம்..?"

உதட்டைக் கடித்தபடி தாமோதரன் சொன்ன பெண்ணைப் பற்றிய விவரங்களை ஆராய்ந்தான்.. அறிவுக்களை கொட்டும் அழகான முகம்.. நிதானமான தன்மையுடனும்

அதே சமயம் அதிவேகத்துடனும் இண்டர்வியூவில் அவள் பதில் சொன்ன லாவகத்தை நினைத்துப் பார்த்தான்..

தகுதியில்லாதவர்களுக்கு தாமோதரன் சிபாரிசு செய்ய மாட்டான்.. அவனுடைய தேர்வு என்றுமே சோடை போனதில்லை.. அதிலும் சித்தார்த்தனின் பெர்சனல் செக்கரட்டரி எனும்போது தாமோதரன் கண்களில் விளக்கெண்ணையை விட்டுக் கொண்டு கூர்மையாக ஆராய்ந்துதான் தேர்வு செய்திருப்பான்..

அந்தப் பெண்ணிற்கு வேலை கொடுப்பதை மறுக்க எந்தவொரு காரணமும் சித்தார்த்தனுக்குச் சிக்கவில்லை..

"இதுவரை எனக்காகன்னு உன்னிடம் எதையும் கேட்டதில்லை சித்தார்த்.. முதல் முறையாக் கேட்கிறேன்.. என்வாக்கைக் காப்பாத்து.."

இப்படிச் சொல்பவனிடம் எப்படி சித்தார்த்தன் மறுத்துப் பேசுவான்..? தாமோதரன் கொடுத்த வாக்கு சித்தார்த்தனையும் சேர்த்துப் பிணைக்காதா..?

'இந்தப் பெண்ணை அப்பாயிண்ட் பண்ணியாகனும்..'

பெருமூச்சுடன் அந்தப் பெண்ணின் ஃபைலை மீண்டும் பார்த்த சித்தார்த்தனின் புருவங்கள் முடிச்சிட்டன. பார்வை கூர்மையானது..

'எதை இப்படி உத்து.. உத்துப் பார்க்கிறான்..?'

தாமோதரனுக்கு ஒரு மண்ணும் விளங்கவில்லை.

அத்தியாயம் - 12

பொய் சொன்னாலும்..

பொருந்தச் சொல்லித் தொலைக்க வேண்டும்.

சித்தார்த்தன் என்னவோ ஆய்வுக் கட்டுரையை சப்மிட் பண்ண வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறவனைப் போல

தாமோதரன் கொடுத்த ஃபைலை விழுந்து விழுந்து படித்தான்.. புரட்டிப் புரட்டி அதன் பக்கங்களை மனப்பாடம் செய்தான்..

'என்ன அலுவலுக்கு எக்ஸாமுக்கு படிக்கிறதைப் போல படிச்சு வைக்கிறான்..?' தாமோதரன் எரிச்சலடைந்தான்..

ஒருவழியாக படிக்க வேண்டியவற்றை படித்து முடித்துவிட்டு நிமிர்ந்த சித்தார்த்தன் தாமோதரனையே இமைக்காமல் பார்த்து வைத்தான்..

'என்னடா இது.. காதலிக்கிறவளைப் பார்க்கிறதைப் போல என்னைப் பார்த்து வைக்கிறான்..? இத்தனை நேரமும் படிப்பு.. இப்பப் பார்வையா..?'

தாமோதரன் பொறுமையை இழுத்துப் பிடித்து ஓடி விடாதே என்று உபதேசித்த வண்ணம் சித்தார்த்தனின் இமைக்காத பார்வையை சகித்துக் கொண்டிருந்தான்.. சித்தார்த்தனோ இமைக்க மறந்த விழிகளின் பார்வையைத் திருப்பிக் கொள்ளவே யில்லை..

'பார்வை ஒன்றே போதுமா..?

பல்லாயிரம் சொல் வேண்டுமா..?'

என்ற கண்ணதாசனின் வார்த்தைகளுக்கு உயிர் கொடுப்பதைப் போல நண்பனையே உற்றுப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்..

இப்படிப் பொறுமையை சோதித்தால் தாமோதரன் தான் என்ன செய்வான்..? அவன் பொறுத்தது போதுமென்று பொங்கி எழுந்து..

"அடச்சீ..!" என்று வெடித்தான்..

"இப்ப என்னத்துக்குடா என்னை இந்தப் பார்வை பார்த்து வைக்கிற..?"

"இவ.. உன் பிரண்டோட சிஸ்டர்..?"

சித்தார்த்தன் கையிலிருந்த ஃபைலைத் தூக்கிக் காண்பித்தான்..

"ம்ம்ம்.." புரியாமல் தலையாட்டினான் தாமோதரன்..

"அண்டப் புளுகன்.. ஆகாசப் புளுகனையெல்லாம் பார்த்திருக்கேன்.. உன்னைப்போல ஒரு புளுகனை எங்கேயும் பார்த்ததில்லைடா.. நீ அத்தனை பேரையும் தூக்கிச் சாப்பிட்டு ஏப்பம் விட்டுட்டியே.."

சித்தார்த்தனின் குற்றச்சாட்டில் தாமோதரனுக்கு கோபம் வந்துவிட்டது.

"எதுக்கும் ஒரு லிமிட் இருக்கு சித்தார்த்.. நான் உன் பிரண்டா இருக்கலாம்.. உன்கிட்ட கைகட்டி வேலை பார்க்கிற ஜி.எம்மா இருக்கலாம்.."

"எதைச் சொன்னா நீ எதைச் சொல்லிக்கிட்டு வர்ற..? நீ கை கட்டி வேலை பார்க்கிறேன்னு நான் சொன்னேனா..?"

"பிராங்காச் சொன்னாத்தானா..? அப்படித்தானே உன் மனசில நினைப்பிருக்கு.. எதைப் பேசினாலும் நான் கேட்டுக்குவேன்னுதான இப்படி நீ பேச ஆரம்பிக்கிற..? எதை நான் புளுகினேன்னு இப்படி ஒரு பழியை என் மேல போடற..?"

"இதைப் பார்த்துட்டுப் பேசுடா.."

சித்தார்த்தன் தூக்கிப் போட்ட ஃபைல் விரிந்து தாமோதரனின் முன்னால் விழுந்தது..

'எதைப் பார்க்கச் சொல்றான்..? ஒருவேளை இந்தப் பெண்ணோட போட்டோவைப் பார்க்கச் சொல்றானோ..'

தாமோதரன் அந்தப் போட்டோவை அப்போதுதான் நன்றாகப் பார்த்து வைத்தான்.. மூக்கும், முழியுமாக அந்தப் பெண் பார்க்க நன்றாகத்தான் இருந்தாள்..

"அழகாத்தான் இருக்கா.." சித்தார்த்தனிடம் சொன்னான்..

"அப்படிங்களா சார்..? உங்களுக்காக நான் வேணும்னா இவளைப் பெண் கேட்டுப் போகவா சார்..?" இடக்காக கேட்டான் சித்தார்த்தன்..

"ஆமாண்டா.. கண்ணுக்கு அழகா இருந்தா உடனே கல்யாணம் பண்ணிக்கிறதைப் பத்தித்தான் யோசிக்கனும்.. உன்புத்தி போகிற போக்கு இருக்கே.. அப்பப்பா.. அப்படிப் பார்த்தா ஒரு நாளைக்கு நான் முப்பது கல்யாணத்தைப் பண்ணித் தொலைச்சாகனும்.. ஏன்னு கேட்கறியா..? இப்பல்லாம் பொண்ணுக அழகா இருக்கிறாளுகடா.. எப்படித்தான் இப்படி அம்சமா இருந்து தொலைக் கிறாளுகளோ.. முப்பதுங்கிறதெல்லாம் குறைச்சல் மச்சி.. மூக்கும் முழியுமா இவளை விட பேரழகா ஒருநாள் ஒன்னுக்கு நூறுபேருக்குக் குறையாம மீட் பண்றேன்னா பார்த்துக்கயேன்.."

"இதுவரைக்கும் இதைப் பார்க்கலை.. எம்.டி வேலையை மட்டும்தான் பார்த்துக்கிட்டு இருந்தேன்.. இப்ப நீ சொல்லிட்டேல்ல.. எம்.டி வேலையை பேக்-அப் பண்ணிட்டு.. முழுநேர வொர்க்கா இதை மட்டும் பார்த்திட்டாப் போகுது.."

சித்தார்த்தன் சொல்லிய விதத்தில் இப்போது இமைக்காமல் அவனை முறைப்பது தாமோதரனின் முறையாகி விட்டது..

"என்ன..?"

அவன் பார்வையைப் பற்றி அலட்டிக் கொள்ளாமல் பதிலுக்கு முறைத்து வைத்தான் சித்தார்த்தன்..

"என்ன..?" பதிலுக்கு கேட்டு வைத்த தாமோதரன்.

"பிரண்டோட தங்கச்சிக்கு வேலை போட்டுக் கொடுடான்னு கேட்டுட்டேன்.. அதுக்காக அவளை உத்துப் பார்க்கச் சொல்லி அவ படத்தை என் முன்னாலே விட்டெறிஞ்சுட்டு நான் என்னவோ குற்றம் செய்துட்டதைப் போல முறைச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கிற..? என்னடா விசயம்..?" என்று எகிறினான்..

"உன்னை உத்துப் பார்க்கச் சொன்னது அந்தப் பெண்ணோட போட்டோவையில்ல..?"

"பின்னே..?"

"பயோடேட்டாவை.."

"இதில என்ன கழுதை இருக்கு..?"

"படிச்சுப் பாரு தெரியும்.."

"வேணாம் சித்தார்த்... நானே ஓய்ஞ்சு போயிருக்கேன்.. படிக்கிற வேலையை யெல்லாம் என் தலையில் கட்டாதே.. நான் படிக்கலைன்னா என்ன..? நீதான் எக்ஸாமில கோல்டுமெடல் வாங்கப் போகிறவனைப் போல அந்த ஃபைலை கரைச்சுக் குடிச்சியே.. நீயே சொல்லு.."

"இந்தப் பெண்.. வீட்டுக்கு ஒரே பெண்.."

"என்னடா இது..? இம்மாம் பெரிய சென்னையில இந்தப் பொண்ணு தனியாவா இருக்கு..? துணைக்கு யாரையாச்சும் வைச்சுக்கலாமே.."

"என்னது..?"

"கூப்பிட்டு வைச்சுக்கலாமேன்னு சொன்னேன்.. எல்லாத்திலேயும் டபுள்மீனிங் எடுக்காதே.."

"வீட்டுக்கு ஒரே பெண்.. வீட்டிலே தனியா.. ஒற்றையா இருக்கிற பெண்ணுன்னு அர்த்தமில்லேடா மடையா.."

"அதுசரி.. உன்கிட்ட ஜி.எம்மா குப்பை கொட்டறேன் பாரு.. மடையன் பட்டம் எனக்குத் தேவைதான்.. இப்ப என்ன கழுதைக்கு இந்தப் பெருமைமிகு பட்டத்தை எனக்குக் கொடுத்திருக்கேன்னு தெரிஞ்சுக்கலாமா..?"

"இம்சை அரசன் இருபத்தி நாலாம் புலிகேசி நீதாண்டா.."

"அடுத்த பட்டமா..?"

"அறிவு கெட்டவனே..! அந்தப் பெண்ணுக்கு அண்ணன், தம்பி, அக்காள், தங்கைன்னு யாருமில்லைடா.. பேரண்ட்ஸீக்கு ஒரே பெண்ணுடா.."

"ஈஸிட்..?"

"என்னத்த நோஸிட்..? தனியாப் பிறந்த பெண்ணுக்கு அண்ணன்னு உன் பிரண்டு எங்கேயிருந்துடா பிறந்து

வந்தான்..?"

சித்தார்த்தனின் இமைக்காத முறைப்பிற்கான அர்த்தம் அப்போதுதான் தாமோதரனுக்கு விளங்கியது..

'இவளுக்கு அண்ணன், தம்பி இல்லையா..?'

அவசரமாக அந்தப் பெண்ணின் பயோடேட்டாவை படித்துப் பார்த்தான்.. அந்தப் பெண் ஒற்றைக் காட்டு பெண்சிங்கம் என்பதை அந்த பயோடேட்டா உறுதி படுத்தியது..

'இதைப் பார்க்காம கோட்டைவிட்டுட்டேனே..' தாமோதரன் சமாளிக்க முடிவு செய்தான்..

"டங் ஸ்லிப்பாகிருச்சுன்னா.. நீ எதை வேணும்னாலும் பேசுவியா..?"

"டங்..? உனக்கு..? ஸ்லிப்பாகிருச்சு..?"

"ஆமாண்டா.. ஆமாம்.."

"ஓகே.. அதையும் கேட்டுரலாம்.. நீ அடுத்த புளுகு மூட்டையை அவிழ்த்துக் கொட்டு.."

"நானும்.. இவ அண்ணனும் பிரண்டில்ல.."

"இவளுக்கு அண்ணனே இல்லேடா.."

"அது என் குத்தமில்ல.."

"கொலைவெறியைக் கிளப்பாதே.. நானே செம கடுப்பில் இருக்கேன்.."

"எப்படியோ இருந்துட்டுப் போ.. எனக்கென்ன போச்சு.. இந்தப் பெண்ணோட அப்பாவும்.. என் அப்பாவும் தான் பிரண்ட்ஸ்.."

தாமோதரன் மாற்றி யோசித்தான்.. சித்தார்த்தன் தாமோதரனை முறைத்தான்.. வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாத ஒன்றும் அறியாக் குழந்தைப் பிள்ளையைப் போல தாமோதரன் முகத்தை வைத்துக் கொண்டதில் இது வேலைக்கு ஆகாது என்று செல்போனை கையில் எடுத்தான்..

"யாருக்குடா போன் போடற..?"

சீட்டில் சாய்ந்து கால்களை ஆட்டியபடி கேட்டான் தாமோதரன்..

"ம்ம்ம்.. உங்க அப்பனுக்கு.." சித்தார்த்தன் எரிந்து விழுந்ததில் என்னவோ மிகப்பெரிய ஜோக்கைக் கேட்டு விட்டவனைப் போல..

"எங்க அப்பனுக்கா..? ஹா.. ஹா.." என்று விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்..

'சிரிடா மகனே..! இப்ப இருக்கு உனக்கு..'

பற்களை நரநரத்தபடி.. போனில் நம்பர்களை அழுத்திய சித்தார்த்தன்.. மறுமுனையில் பதில் வந்ததும்..

"ஹலோ அங்கிள்.. சித்தார்த்தன் ஸ்பீக்கிங்.." என்றான்..

'எந்த அங்கிளைக் கூப்பிடறான்..?'

தாமோதரன் மேஜையில் சாய்ந்து விரல்களால் தாளம் போட்டான்..

அத்தியாயம் - 13

உன்னோடு பழகியவனுக்கு..

உன் மனதைத் தெரியாதா..?

தாமோதரன்தான் சாம, தான, பேத.. தண்டங்களை அறிந்தவன்.. அவனுடைய அப்பாவான ஈஸ்வரன் அதைப்பற்றியெல்லாம் அறியாதவர்.. பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காது என்பதில் அளவற்ற நம்பிக்கையை உடையவர்..

"என்னத்தன்னு சொல்லுவேன்..? தலைகீழா நின்னு தண்ணியைக் குடிச்சாலும்.. அவர் வாயில இருந்து ஒற்றைப் பொய் வந்து தொலைக்காதுடா.."

அது என்னவோ மாபெரும் குற்றத்தைப் போல புலம்பித் தொலைப்பான் தாமோதரன்.. கலப்படமில்லாத உண்மையை வைத்துக் கொண்டு எப்படி இந்த உலகத்தில் வாழ்வது என்ற கோபம் அவனுக்கு..

"மனுசன் காஞ்சிபுரத்தை விட்டு இந்தப்பக்கம்.. அந்தப்பக்கம் நகர்கிறது இல்லைடா.. வெளியில வந்து பார்த்தாத்தானே தெரியும்.. உண்மையை வைச்சுக்கிட்டு ஒரு மண்ணும் பண்ண முடியாதுன்னு.. குண்டுச் சட்டியிலேயே குதிரையை ஓட்டுகிறவரு.. பொய்யை ஓட்டாம என்ன செய்வாரு..? இந்த சென்னை மாநகரத்திலே இருந்து பார்த்தாத்தானே பொய்யோட மதிப்பைப் பத்தித் தெரியும்..?" பொங்குவான் தாமோதரன்..

அப்படி உண்மையை ஊன்றிப் பிடித்திருக்கும் ஈஸ்வரனுக்குத்தான் போனைப் போட்டிருந்தான் சித்தார்த்தன்..

"என்னப்பா.. சித்தார்த்து.. எப்படியிருக்கிறேப்பா..? என்புள்ள உன் கம்பெனியில நேர்மையா வேலை செய்கிறானாப்பா..?" ஈஸ்வரன் கேட்டார்..

'இதை மட்டும் உங்க மகன் காது கொடுத்துக் கேட்டிருக்கணும்..' சித்தார்த்தனுக்கு சிரிப்பு வந்தது..

"இந்த நீதி நேர்மையையெல்லாம் உங்களோட சொத்துப்பா... பெற்ற தகப்பனா இருந்தாலும்.. பிறத்தியார் சொத்தில கை வைக்க மாட்டான் இந்த தாமோதரன்.."

இப்படியாகப்பட்ட சுயமரியாதை டயலாக்கை ஈஸ்வரனிடம் தாமோதரன் சொல்லிக் கொண்டிருந்ததை சித்தார்த்தன் ஓர்முறை கேட்டிருக்கிறான்..

அன்று காஞ்சியில் சிரிக்க ஆரம்பித்தவன்.. சென்னைக்கு வந்து சேர்கிறவரைக்கும் சிரிப்பை நிறுத்த வேயில்லை..

"உன்னை.. என்னதாண்டா செய்கிறது..?"

இதை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கேட்டபடி அவன் காரோட்டியதில் டென்சனாகிப் போன தாமோதரன்..

"எதுவும் செய்ய வேணாம்.. முதல்ல ரோட்டைப் பார்த்துக் காரை ஓட்டு.." என்று கடுகடுத்தான்..

அப்படியாகப்பட்ட உண்மை விளம்பி ஈஸ்வரனிடம்..

"உங்களோட பிரண்டு முரளிதரன் எப்படியிருக்கார் அங்கிள்..?" என்று விசாரித்தான் சித்தார்த்தன்..

'முரளிதரனா..? யார் அது..?'

தாமோதரனின் விரல் தாளம் பலமானது.. யாரோ ஒரு அங்கிளிடம்.. யாரோ ஒரு முரளிதரனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் சித்தார்த்தனைப் பற்றிக் கவலை கொள்ளாமல் தன் போக்கில் மெர்சல் ஆகிட்டேனே என்று மனதுக்குள் பாடிக் கொண்டிருந்தான் அவன்..

"முரளிதரனா..? யாருப்பா அது..?"

ஈஸ்வரன் இப்படித்தான் கேட்டு வைப்பார் என்று சித்தார்த்தனுக்குத் தெரியும்.. இதை எதிர்பார்த்துத்தான் அவன் அவருக்குப் போன் பண்ணினான்.. எதைச் சொல்லியாவது அந்தப் பெண்ணுக்கு தாமோதரன் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை அனுப்பி வைத்துவிடத் துடித்ததின் பிண்ணனியைப் பற்றி அவன் அறிந்து கொள்ள வேண்டியிருந்தது..

"என்ன அங்கிள் இது..? அவர் உங்களோட பெஸ்ட் பிரண்டுன்னு நம்ம தாமு சொல்றான்.. நீங்க என்னடான்னா அவர் யாருன்னு கேட்கறிங்களே.."

தாமோதரனைப் பார்த்தபடியே செல்போனில் கேட்டான் சித்தார்த்தன்.. தாமோதரனின் தாளம் நின்றது.. அவன் பார்வை கூர்மையாக சித்தார்த்தனின் மீது படிந்தது.. சித்தார்த்தனின் பேச்சை உன்னிப்புடன் அவன் கவனிக்க ஆரம்பித்தான்..

"அவனுக்கென்ன..? ஏதாச்சும் மறதியிலே பேசியிருப் பான்.. என் பிரண்டைப் பத்தி அவனுக்கென்ன தெரியும்..? முரளிதரன்னு எனக்கு யாரையுமே தெரியாதுப்பா.. தெரிஞ்சாத்தானே பிரண்டா பழக முடியும்..?"

"தட்'ஸ் ரைட்.. தட்'ஸ் ரைட்.."

"தெரியாத ஆளுகூட எப்படிப் பழக முடியும்..?"

"முடியவே முடியாதுதான்.."

"முடியாத ஓர் விசயத்தைப் பத்தி எதுக்காக நாம பேசனும்..?"

"ஷ்யூர்.. ஷ்யூர்.."

"காலம் பொன் போன்றது சித்தார்த்.."

அடுத்து அவர் கடமை கண் போன்றது என்றுதான் சொல்லப் போகிறார் என்பதை சித்தார்த்தன் யூகித்து முடிப்பதற்குள்.. அவர்

"கடமை கண் போன்றது.." என்றார்..

'முடியலையே..'

தானாக மாட்டிக் கொண்ட பொறியிலிருந்து விடுபட முடியாத சித்தார்த்தன் தாமோதரனைப் பார்த்துப் பல்லைக் கடித்தான்..

'இவனால்தான் எல்லாமும்..'

"நீ புத்திசாலி சித்தார்த்.. கர்மவீரன்..! உனக்குச் சொல்லனும்னு இல்லை.. வினாடி நேரத்தைக்கூட வீனடிக்காதவன்தான் வாழ்க்கையில் ஜெயிக்க முடியும்.. அலெக்ஸாண்டர் என்ன சொல்லியிருக்கார் தெரியுமா..?"

ஈஸ்வரன் நீண்ட சொற்பொழிவுக்கு தயாராகி விட்டதைத் தெரிந்து கொண்ட சித்தார்த்தன்..

'இன்னைக்கு இவருக்கான பலி ஆடு நான்தானா..?' என்று தலையில் கை வைத்தான்..

வெட்டிப் பேச்சு பேசுவதால் மட்டும் நேரம் வீணாகாது.. இதுபோல பொன் பொழிகளை ஊம் கொடுத்துக் கேட்டாலும் வீணாகும் என்று ஈஸ்வரனைப் போன்ற சொற்பொழிவாளர்களிடம் யார் சொல்வது..?

உரலுக்குள் தலையைக் கொடுத்துவிட்டு எடுக்க மாட்டாமல் விழித்த நண்பனைப் பார்த்த தாமோதரன்.. நான்

சொல்கிறேன் என்ற ரீதியில்..

"போனை இங்கே கொடுடா.." என்று வாங்கிக் காதில் வைத்தான்..

மறுமுனையின் சொற்பொழிவில் இமை மூடித் திறந்தவன்..

"ஏன்ப்பா.. என் வேலைக்கு வேட்டு வைக்கனும்னு எத்தனை நாளா பிளான் போட்டிருந்தீங்க.." என்று கேட்டுவைத்தான்..

மறுமுனையில் ஈஸ்வரன் சித்தார்த்தனைப் பற்றி வினவியிருக்க வேண்டும்..

"அவன் என்ன உங்களைப் போல காஞ்சி புரத்திலேயே உட்கார்ந்துக்கிட்டு இருக்கானா..? சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டிப்பா அவன்.. உங்க பேச்சுக்கு ஊம் போட்டுக்கிட்டு இருந்தா அவன் கம்பெனி வேலையை யார் பார்க்கிறது.." என்று எரிந்து விழுந்தான்..

தாமோதரன் போட்ட போட்டில் அரண்டு போனவராக மறுமுனையில் போனை அணைத்துவிட்டார் ஈஸ்வரன்.. சித்தார்த்தனிடம் செல்போனை நீட்டியவனின் விழிகள் பார்வையிலேயே அவனைச் சுட்டன..

"தேவையாடா உனக்கு..?"

"இந்தத் தேவை உன்னால் வந்ததுடா தாமு.."

"இப்ப எதுக்காக இந்த ஷெர்லெக் ஹோம் வேலையையெல்லாம் செய்கிற..?"

"உன்னைக் கண்டுபிடிக்கத்தான்.."

"கண்டுபிடிச்சு என்ன செய்யப் போகிற..?"

"நீ எதுக்காக முரளிதரனை உன் அப்பாவோட பெஸ்ட் பிரண்டுன்னு பொய் சொன்ன..?"

"யாருடா அந்த முரளிதரன்..? நான் எப்ப அந்தாளை எங்கப்பாவோட பெஸ்ட் பிரண்டுன்னு சொன்னேன்..?"

"அதுவும் மறந்திருச்சா..? வெரிகுட்.. இதுக்கான பதிலும் இந்தப் பெண்ணோட பயோடேட்டாவிலதான் இருக்குது.."

"எதுக்கெடுத்தாலும் இதை ஒன்னைக் காட்டிருவேன்.."

சித்தார்த்தனைத் திட்டித் தீர்த்தபடியே அந்தப் பெண்ணின் பயோடேட்டாவை வேண்டா வெறுப்பாக பார்த்து வைத்தவனின் புத்திக்கு அப்போதுதான் அது உறைத்தது..

'ஆஹா..! மச்சான் சாச்சுப்புட்டானே.. இந்தப் பெண்ணோட அப்பன் பேரு முரளிதரன்னு போட்டிருக்கே..'

ஆக.. அந்தப் பெண்ணின் அப்பா உண்மையாகவே தாமோதரனின் அப்பாவின் நண்பர்தானா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளத்தான் சித்தார்த்தன் ஈஸ்வரனுக்கு போன் போட்டிருக்கிறான்..

'எப்படி பந்தைப் போட்டாலும் சிக்சர் அடிச்சுத் தொலைக்கிறானே..'

தாமோதரனுக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை.. அவன் முகத்தையே கூர்ந்து பார்த்த சித்தார்த்தனிடம்..

"ஏண்டா இப்படிப் பார்த்துத் தொலைக்கிற..? என் முகத்தில என்ன இருக்கு..?" என்று சண்டைக்குப் போனான்..

"பொய்யும்.. புனை சுருட்டும் இருக்கு.."

நிதானமாக சொன்ன சித்தார்த்தனை விட்டு விளாசி விட்டான் தாமோதரன்..

யாமினி என்ற மாயமோகினியால் நண்பர்களுக்குள் வாக்குவாதம் வந்தது..

அத்தியாயம்- 14

சொன்னது நீதானா..? - இல்லை

உனைப்போல் வேறொருவனா..?

"ஓ..."

உதட்டைக் குவித்த தாமோதரன் கசப்புடன் சிரித்தான்.. சித்தார்த்தனுக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. இது போன்ற கசந்த சிரிப்பை.. அதற்கு முன்னால் தாமோதரன் சிரித்து அவன் பார்த்ததில்லை..

"தாமு.."

"ஜி.எம்ன்னு கூப்பிடுங்க எம்.டி. சார்.. தட்'ஸ் பெட்டர்.."

"டேய்.."

"வேண்டாம் சார்.. நமக்குள்ளே அபிஷியலா பேசிக்கலாம்.."

"அபத்தமாக உளராதேடா மச்சான்.."

"மச்சானா..? யாருக்கு யார் மச்சான்..?"

"வில்லங்கமா பேசித் தொலைக்காதே.. நீரஜாவுக்குத் தெரிஞ்சா நீ 'கைம்மா' தான்.. மனசில வைச்சுக்க.."

நீரஜாவின் பெயரைக் கேட்டதும் கொஞ்சம் தனிந்தான் தாமோதரன்.. மௌனமாக சித்தார்தனை முறைத்தான்.. சித்தார்த்தனுக்குள் குற்றஉணர்வு வந்தது.. உயிர் நண்பனின் மனதை புண்படுத்தி விட்டதை உணர்ந்தான்..

'எப்படி சரி பண்ண..?'

துணி கிழிந்தால் தைக்கலாம்.. மனம் கிழிந்தால் தைப்பதற்கு எந்தக் கடையில் ஊசி கிடைக்கும்..? கிழிந்த மனத்தை தைத்து சரி செய்யும் ஊசியினை கடவுள் கொடுத்திருக்கிறாரா..?

"நீ செய்தது தப்புடா.. அதை முதல்ல புரிஞ்சுக்க.." சமாதானமாக பேச ஆரம்பித்தான்..

"எந்த வகையில் தப்பு.. அதையும் சொல்லிரு.. பொய்யும் புனைசுருட்டும் பண்ணி உன் கம்பெனி சீக்ரெட்ஸை யாருக்கு விலை பேசி வித்தேன் சித்தார்த்..?" ஊசி முனையைப் போல கேட்டு வைத்தான் தாமோதரன்..

"சீச்சீ.. என்ன பேச்சுன்னு பேசற..?"

"அட..! இதைத்தானடா நீ சொன்ன..?"

"நான் சொன்னதுக்கான மீனிங்கே வேற.."

"ரெண்டும் ஒன்னுதான்.. உன்கிட்ட பொய் சொல்லி.. புனை சுருட்டு பண்ணி நானொன்னும் பணம் சேர்த்துக்க போறதில்ல சித்தார்த்.. உன் கம்பெனிக்கு உண்மையா உழைக்கிறவன்.."

"இல்லேன்னு நான் சொன்னேனா..?"

"நீ பேசின வார்த்தை பெரிசு சித்தார்த்.."

"ஐ ஆம் ஸாரி.. போதுமா..?"

கொஞ்சம்கூட யோசிக்காமல்.. தயங்காமல்.. தான் அந்தக் கம்பெனியின் எம்.டி என்பதையும் தனது உயரத்தையும் மறந்து இறங்கி வந்து சித்தார்த்தன் மன்னிப்புக் கேட்டதில் தாமோதரனின் மனம் இளகி விட்டது..

"உன்கிட்ட இது ஒன்னு இருக்குடா.. பூ வேலியைப் போட்டு சிறை பிடிச்சு வைப்ப.." அலுத்துக் கொண்டான்..

"இது பூவேலிகூட இல்லை... நூல்வேலிதான்.. அதுக்காக நீ அறுத்துக்கிட்டுப் போயிருவியா தாமு..?" தீர்க்கமான பார்வையுடன் கேட்டான் சித்தார்த்தன்..

"இதுக்கொன்னும் குறைச்சலில்ல.. என்னமோ கட்டின பெண்டாட்டிகிட்ட கேட்டு வைக்கிறதப் போல கேட்டு வைப்பான்.." தலையில் அடித்துக் கொண்டான் தாமோதரன்..

"மூழ்காத ஷிப்பே பிரண்ட்ஷிப்தாண்டா.." சித்தார்த்தன் வியாக்கினம் சொன்னான்..

"மூழ்காத ஷிப்பைப் பத்தியெல்லாம் நீ பேசக்கூடாது.. ஆளைப்பாரு.. ஒரு செகரட்டரி வேலைக்கு நான் ரெகமெண்ட் பண்ற ஆளைப் போட முடியலை.. நானெல்லாம் ஒரு ஜி.எம்.. எந்தப் பக்கம் போனாலும் அந்தப் பக்கம் வந்து கதவை அடைச்சு வைக்கிற.. தலையால தண்ணி குடிச்சுப் பாத்தாலும் அசைஞ்சு கொடுக்க மாட்டேங்கிற.."

"நீயேண்டா எந்தப் பக்கமும் போற..? ஒரே இடத்தில நின்னு தொலைக்க வேண்டியதுதானே..? தலையாலே தண்ணி குடின்னு உன்கிட்ட நான் வந்து சொன்னேனா..?"

"இந்தப் பொண்ணுக்கு வேலை கொடுடான்னு கேட்டா நீ இந்தப்பாடு படுத்துவியா..?"

"எதுக்காக இந்தப் பொண்ணுமேல இந்த அளவுக்கு அக்கறைப்படற..? அதுக்கு ஒரு கான்க்ரீட் ரீசன் சொல்லு.."

"இதையே எத்தனை தடவைதான் கேப்படா..? எனக்கு அந்தப் பெண்ணை ரொம்பப் பிடிச்சிருக்கு.. போதுமா..?"

தாமோதரன் 'சுள்' ளென்று எரிந்து விழுந்ததற்கு..

"ஈஸிட்..?" என்ற கேள்வி அறை வாசலில் இருந்து வந்தது..

'எங்கேயோ கேட்ட குரல்..!'

தாமோதரன் உட்கார்ந்த வாக்கில் ஒருக்களித்து சாய்ந்து கழுத்தை அறுபது டிகிரி கோணத்தில் திரும்பிப் பார்த்தான்.. அங்கே நூறு டிகிரி வெப்பத்துடன் நின்றிருந்தாள் நீரஜா..! சித்தார்த்தனின் அருமைத்தங்கை..

'இவ எப்ப வந்தா..?'

அவசரமாக எழுந்து நின்று அவளை வரவேற்க முனைந்தான்.. தாமோதரன்..

"வாங்க.. வாங்க.. இப்பத்தான் வர்றீங்களா..?"

"ஊஹூம்.. நீங்க இந்தப் பெண்ணை வேலைக்குச் சேர்த்துத்தான் ஆகனும்னு உங்க பிரண்டுகிட்ட ரவுண்டு கட்டி பைட் பண்ணிக்கிட்டு இருந்தப்பவே வந்துட்டேன்."

ஒரு மார்க்கமாக அவனை முறைத்தபடி உள்ளே வந்தாள் நீரஜா.. பகைவனைப் பார்ப்பதைப் போல பந்த பாசத்துடன் தாமோதரனைப் பார்த்தபடி பக்கவாட்டிலிருந்த விருந்தினர் சோபாவில் 'தொபுக்கட்டீர்' என விழுந்தாள்.. அதுவரை யாரோ ஒருவரின் அறைக்கு வந்திருக்கும் யாரோ ஒருவரின் தங்கையைப் பார்ப்பதைப் போல சொந்தத்

தங்கையை அன்னியமாக பார்த்தபடி உட்கார்ந்திருந்த சித்தார்த்தன்..

"மெதுவா.. சோபாவுக்கு வாயிருந்தா அழுதிருக்கும்.." என்று சொன்னான்..

"அழுதா நீ வந்து கண்ணீரை துடைச்சு விடு.. உன் கம்பெனி சோபாதானே.." எரிச்சல் பட்டாள் நீரஜா..

எக்குத்தப்பாக மாட்டிக் கொண்டு விட்ட துயரத்துடன்..

"எதுக்குங்க கோபப் படறிங்க..?" என்று தழைந்து கேட்டான் தாமோதரன்..

"கோபமா..? நானா..? உங்களிடமா..? யாரு நீங்க..?" அடுக்கினாள் நீரஜா..

"நான் யாருடா..?" தாமோதரனே குழம்பிப் போய்விட்டான்..

"என்கிட்டக் கேட்டா..? நானா 'யார் நீ'ன்னு கேட்டேன்..? அவதான கேட்டா..? ஸோ.. நீ கொஸ்டின் பண்றதா இருந்தா அவளைத்தான் கொஸ்டின் பண்ணனும்.." நைஸாக கழன்று கொண்டான் சித்தார்த்தன்..

"அடப்பாவி..!" தாமோதரன் அங்கலாய்த்தான்..

"எதுக்கு அவனை பாவிங்கறிங்க..? உங்களுக்கு பிடிச்சவங்களுக்கு அவன் வேலை போட்டுத் தரலேங்கிறதுக்காகவா..?" குத்தலாக கேட்டாள் நீரஜா..

'இது வேறயா..?'

விரிந்து கிடந்த ஃபைலில் ஒட்டப்பட்டிருந்த அந்தப் பெண்ணின் படத்தை உற்றுப் பார்த்தான் தாமோதரன்..

'மூக்கும் முழியுமா நல்லாத்தான் இருக்கா..'

மனதில் ஓடிய எண்ணங்களை நீரஜா அறிந்து கொண்டால் அவன் நிலைமை என்னவாகும்..?

தர்மசங்கடத்துடன் அவன் நீரஜாவைப் பார்த்தான்.. அவளோ புகைப்படத்தில் இருந்த பெண்ணையே பார்த்துக் கொண்டிருந்தாள்..

'என்னத்தக் கேக்கப் போறாளோ..' அவனது அடிவயிறு கலங்கியது..

"என்ன பேரு..?"

திடிரென்று அவள் கேட்டு வைத்ததில்..

'இவளுக்கு என் பேர் மறந்து போனதா..?' என்று குழம்பிப் போனான் தாமோதரன்.. அந்தக் குழப்பத்தோடு..

"தாமோதரன்ங்க.." என்றான்..

சித்தார்த்தன் உரக்கச் சிரித்து வைத்தான்..

'உன்னாலதாண்டா எல்லாக் கருமாந்திர புலன் விசாரணையும் வந்து தொலைச்சிருக்கு..' தாமோதரன் அவனை பார்வையிலேயே எரித்தான்..

"ஊஹூம்..! என்னை முறைக்கக் கூடாது... அங்கே முறைக்கனும்.. இதுக்கும் எனக்கும் எந்தக் கனெக்சனுமில்ல... சொல்லிட்டேன்.." இரக்கமற்ற நண்பனாக கறார் குரலில் சொல்லி விட்டான் சித்தார்த்தன்.

'ஏண்டா சொல்ல மாட்ட..? மாமல்லபுரத்துக்குப் போனவன் சிலைகளை ரசிச்சுட்டு திரும்பி வராம.. சிலை போல இருக்கிற பொண்ணப் பார்த்து கவுந்து தொலைச்சிட்டு என்னையா மாட்டி விடற..? மகனே இருக்குடா உனக்கு.. உன்னை அந்த மாய மோகினிகிட்ட இருந்து காப்பாத்தனும்னு நான் கிடந்து தவிக்கிறேன்.. நீ என்னடான்னா என்னை உன் தங்கச்சிக்கிட்ட கோர்த்து விட்டுட்டு எனக்கென்னன்னு வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்கிற..'

தாமோதரனின் அக்கினிப் பார்வைக்கு மட்டும் சக்தி இருந்திருந்தால் அந்த இடத்திலேயே சித்தார்த்தன் பஸ்பம்தான்..

அப்படியில்லாமல் மானிடனாக அவன் பிறந்து தொலைத்து விட்டதினால் சித்தார்த்தனும் தப்பிப் பிழைத்து வைத்தான்..

"அங்கே என்ன முறைப்பு வேண்டிக்கிடக்கு..?" நீரஜா சீறினாள்..

"இதை நீதான் கேட்கனும்.. நான் கேட்டா துரோகிம்பான்.. அதுவே என் சிஸ்டர் கேட்டா உடம்பை எட்டு கோணலா மடக்கி வளைஞ்சுக்கிட்டு 'ஹி..ஹி'ன்னு சப்பைக் கட்டு கட்டுவான்..." சித்தார்த்தன் தூண்டி விட்டான்..

'ஆமடா மச்சான்.. உன் தங்கைக்கு பேசவே தெரியாது.. நீ எடுத்துக் கொடு..' தாமோதரன் பல்லைக் கடித்தான்..

அது ஒரு வியூகம்..! இன்னதென்று பெயர் சொல்ல முடியாத அந்த வியூகத்தில் வெளிவர விரும்பாமல் சிக்கிக் கிடந்தான் தாமோதரன்.. எட்டாக்கனிதான்.. அவனால் எட்டிவிட முடியாத உயரம்தான்.. இருந்தும் பொருள் கூற முடியாத புதிரான பார்வைகளின் பின்னால் ஏதேனும் ஒளிந்திருக்கக்கூடுமோ என்று அவனது அடிமனம் ஆசை கொள்கிறதே..

அத்தியாயம் - 15

இது விரும்பி நானே தொலைந்து போன

கண்ணாமூச்சி ஆட்டம்..!

காதல்..!

அனைத்தையும் கடந்தது.. அடைய முடியாததையும் அடையத் துடிப்பது.. புதிரானது.. பொருள் விளங்காதது.. தொட்டு விட முடியாத தொடுவானத்தையும் எட்டிப் பிடிக்க கனவு காண்பது..

தாமோதரன் பாவம்.. விரும்பியா அந்த மோக வலையில் வீழ்ந்தான்..? விடுபட முடியாத மாயவலைக்குள் சிக்கிக் கொள்ள அவனென்ன ஒன்றும் தெரியாத கைப்பிள்ளையா..?

இருந்தும் அவன் நீரஜாவின் கண்பார்வைக்கு அடிமையானான்.. சித்தார்த்தனின் அப்பாவான விவேகானந்தன் மிகப்பெரும் கோடிஸ்வரர்.. காஞ்சியின் முதன்மையான பணக்காரக் குடும்பத்தின் ஒரே மகன்.. அவர் காலத்தில் தொழில்களை சென்னைக்கு இடம் மாற்றி கொடி கட்டிப் பறக்கும் பிஸினெஸ் மேக்னெட்..

சித்தார்த்தனின் அம்மா நிரூபமாவோ.. மிகப் பெரிய அரசியல் தலைவரின் மகள்.. அணுக முடியாத பிரபல்யத்துடன் பிறந்து வளர்ந்தவள்.. அவளுக்கு சமதையில்லாத ஸ்டேட்டஸில் இருப்பவர்களிடம் நின்று கூடப் பேச மாட்டாள்.. அவ்வளவு ஏன்..? ஓர் பார்வை கூடப் பார்க்க மாட்டாள்..

இப்படிப்பட்ட பெற்றவர்களுக்கு இளைய மகளாகவும்.. குடும்பத்தின் செல்லப் பெண்ணாகவும் பிறந்த நீரஜா எப்படி இருப்பாள்..?

அவள் பெற்றவர்களையே தாண்டி விடும் வேகத்துடன் இருந்தாள்.. கர்வம் அவளின் உடன்பிறந்த சொத்து என்று காஞ்சியில் பலர் சொல்வதை காதார தாமோதரன் கேட்டிருக்கிறான்..

அப்படியிருந்தும் எந்த தைரியத்தில் அவளைக் கண்டதும் ஜெர்க் ஆகி.. வாயோரம் ஜொள் விட்டு.. ஒரு செகண்டைக்கூட வீணடிக்காமல் சைட் அடிக்க முற்படுகிறான் என்று அவனுக்கே பாவம் தெரிந்து தொலைக்கவில்லை..

"ஆனாலும் உனக்குச் செம தில்லுடா மச்சான்.."

காஞ்சிபுரத்தில் இருந்த வேறொரு நண்பன் ஒருவன் சொன்னான்.. அவன் தாமோதரனைப் போல மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவன்..

"அந்தப் பொண்ணு பார்க்கிற பார்வையே செம தெனாவெட்டா இருக்கும்.. நீயெல்லாம் எனக்கு ஈக்குவலாடான்னு கேக்காமல் கேக்கும்.. அப்படிப் பட்ட

பொண்ணுகிட்டப் போயி எப்படித்தான் சொக்கி நிற்கிறயோ..?"

"அப்படின்னு நான் உன்கிட்டச் சொன்னேனா..?"

"சொன்னாத்தானா..? அதான்.. அந்தப் பொண்ணைக் கண்டதும் என்னவோ மிலிடிரிக்காரனப் போல விறைச்சு நின்னு சல்யூட் வைக்கிற உன் கோலமே சொல்லித் தொலைக்குதேடா.. உனக்கு ஊருல.. உலகத்தில.. சைட் அடிக்க வேற பெண்ணரசிகளே கிடைக்கலியா..? அதான் உன்னோட வாய்ச் சவடாலை ரசிச்சு உனக்கு ரசிகையர் மன்றம் வைக்கிற அளவுக்கு ஊரு பூரா பொண்ணுகளை கிளப்பி விட்டிருக்கியேடா..? லைன் கட்டி நிற்கிற அவள்களில ஒருத்தியை சூஸ் பண்ணி சைட் அடிச்சுத் தொலைச்சா உன் வாழ்க்கை வாழ்க்கையா இருக்கும்டா மச்சான்.."

அப்படியா..? நீரஜாவின் பின்னால் போனால் வாழ்க்கை வாழ்க்கையாக இருக்காதா..?

தாமோதரனின் மனம் அதை ஏற்றுக் கொள்ள மறுத்து சண்டித்தனம் செய்தது..

"இங்கே பாருடா.. ஆயிரம்தான் இருந்தாலும் நாம ஆம்பளைங்க.."

"ஆயிரத்தொன்னா இருந்தாலும் நாம ஆம்பளைங்க தான்.."

"இதையெல்லாம் விம் போட்டுத் தேய்ச்சு விளக்கமாச் சொல்லு.. மத்தவங்க சொல்றதை மட்டும் காதில ஏத்திக்காதே.."

"அன்நெஸசரியா பேசாதே.."

"எல்லாம் நெஸசரியாத்தான் பேசறேன்.. காதலிக்கிற பொண்ணு முன்னால கம்பீரமா நிமிர்ந்து நிக்கனும்.. அத விட்டுட்டு இங்கிலீஷ் எழுத்து 'ளு' போல வளைஞ்சு நின்னா உருப்படுமாடா..?"

"எது..?"

"காதல்..!"

'போடா உருப்படாமப் போகிறவனே..!'

அந்த நண்பனைத் திட்டித்தீர்த்தான் தாமோதரன்.. மனதுக்குள்தான் வெளியே..

"உன் அட்வைஸீக்கு தேங்ஸ்டா மச்சான்.." என்று கட்டியணைத்து முத்தம் கொடுத்தான்..

அந்த அளவுக்கு அவனது நலம் விரும்பிய நண்பனையும் போடா போக்கத்தவனே என்று திட்ட வைத்தது நீரஜாவின் கண்பார்வை..

விவேகானந்தனின் மகனாகத் தப்பிப் பிறந்து விட்ட சித்தார்த்தனுடன் அவன் கொண்ட தோழமையால்.. அவனது காஞ்சி மாளிகைக்கு அடிக்கடி சென்றிருக்கிறான் தாமோதரன்.. அவர்களது சிறுவயதில் எல்லாம் விவேகானந்தனின் குடும்பம் காஞ்சியில்தான் இருந்தது..

சித்தார்த்தனின் கல்லூரிப் பருவத்தில்தான் சென்னைக்கு இடம் பெயர்ந்தது..

'நிரூபமா குரூப் ஆஃப் கம்பெனி' யைக் கவனிக்க விவேகானந்தன் மட்டும் காஞ்சியிலிருந்து காரில் சென்னைக்கு போய் வருவார்..

காஞ்சியை விட்டு அவர்கள் அகலாமல் இருந்ததிற்குப் பல காரணங்கள் இருந்தன..

காஞ்சியிலே விவேகானந்தன் முதன்மையான கோடிஸ்வரர்.. ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்.. அவருடைய வீட்டை அரண்மனை என்றே காஞ்சிபுரத்து மக்கள் அடையாளம் சொல்வார்கள்.. பல ஏக்கர் பரப்பளவில்.. மெயின் கேட்டிலிருந்து.. போர்டிகோவை அடையவே சில கிலோ மீட்டர்கள் தூரம் கொண்ட விவேகானந்தனின் பரம்பரை வீடு அரண்மனை போலதான் இருந்தது..

மெயின் கேட்டிலிருந்து வீடு வரை போகும் ரோட்டில் பதிக்கப்பட்டிருந்த சலவைக் கற்களும்.. பாதையின் இரு புறமும் கரை கட்டியிருந்த சலவைக்கல் விளிம்பின்

அழகும்.. அதையொட்டிய தோட்டத்தில் அமைக்கப் பட்டிருந்த கொடி வீடுகளும்... மலர்க் கொடிகளை வளைத்து ஆர்ச் போல அலங்கரித்திருக்கும் நுழைவாயில்களும்.. பச்சைப் புல்வெளியில் ஓடித்திரியும் முயல்களும்.. தோட்டத்தின் மையத்தில்.. பூஞ்செடிகளின் மத்தியில் நட்டு வைக்கப்பட்டிருந்த பறவைகளுக்கான மரக்கூடுகளும்.. அதில் குடியிருக்கும் பறவைகளும்.. அகன்ற அழகான ஏரியைப் போன்ற நீச்சல் குளமும்..

அதன் கரையோரமாக வரிசை கட்டியிருந்த அலங்கார டூம் விளக்குகளும்.. அதையொட்டி அமைக்கப்பட்டிருந்த சாய்வான மர பெஞ்சுகளின் வேலைப்பாடும்.. விவே கானந்தனின் செல்வச் செழுமையையும், பாரம்பர்யப் பெருமையையும் கட்டியம் கூறின..

மிடுக்காக பார்க்கும் விவேகானந்தனும்.. ஒரு மகாராணிக்கே உரிய கம்பீரத்துடன் பார்க்கும் நிருபமாவும்.. தாமோதரனை அந்த மாளிகைக்குள் சேர்த்துக் கொண்டதற்கு.. அவன் சித்தார்த்தனின் உயிர் நண்பன் என்ற ஒன்று மட்டுமே காரணமாக இருந்தது..

மற்றபடி அவர்களாவது.. தாமோதரனைப் போன்ற வர்களிடம் நின்று பேசுவதாவது..?

தாமோதரனும் அதை உணர்ந்துதான் இருந்தான்.. ஸ்டேட்டஸ் வித்தியாசம் பார்க்காமல் ஒரு மிடில் கிளாஸ் பையனிடம் பிரண்ட்ஷிப் பூண்டதற்கு சித்தார்த்தன் அவனைப் பெற்றவர்களிடம் வகையாக வாங்கிக் கட்டியிருப்பான் என்பது அவன் அறிந்ததே.. ஆரம்பத்தில் அவன் விலக்கம்தான் காட்டினான்.. சித்தார்த்தன்தான் அவனை விலக விடாமல் இறுக்கிப் பிடித்து வீட்டிற்குள் இழுத்து விட்டான்..

சித்தார்த்தனின் வீட்டிற்கு தட்ட முடியாமல் தாமோதரன் போய்வந்ததிற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது.. உண்மையில் சொல்லப்போனால் அதுதான் பலத்த காரணம்..

அந்தக் காரணம் நீரஜா..!

முதன் முதலாக அவன் அவளை சந்தித்த இனிய தருணத்தை இப்போதும் தன் நெஞ்சுக்குள் பொக்கிசம் போல போற்றிப் பாதுகாத்துப் பூஜை, புனஸ்காராமெல்லாம் பண்ணிக்கொண்டிருக்கிறான் தாமோதரன்..

"பால்.. பால்.."

அவன் சித்தார்த்தனைப் பார்ப்பதற்காக.. பத்தாம் வகுப்புப் படிக்கும் தறுவாயில் ஓர்முறை சென்ற போது தோட்டத்துக்குள் இருந்து இந்தக் குரல் கேட்டது..

தாமோதரன் விழுந்தடித்துக் கொண்டு ஓடினான்.. அங்கே நீச்சல்குளத்தின் கரையோரமாக பலசிறுமிகள் நின்றிருந்தார்கள்.. அவர்களில் எந்தப் பெண் கூப்பாடு போட்டாள் என்று அவனுக்குத் தெரியவில்லை.. யார் கூப்பாடு போட்டால் என்ன.. வந்த கொடுமைக்கு பாலைக் காப்பாற்றிக் கொடுத்து விட்டுப் போவோம் என்று அவன் பந்தைத் தேடினான்.. கரையோரம் பூச்செடிகளும்.. மரபெஞ்சுகளும்.. டீம் விளக்குத் தூண்களும்தான் இருந்தன.. பந்தை மட்டும் காணவே காணோம்..

"இல்லாத பந்துக்கா இப்படிச் சத்தம் போட்டிங்க..?"

அவன் சிறுமிகளிடம் அதட்டியபடி நீச்சல் குளத்தைப் பார்த்தான்... அங்கே தண்ணீரில் சிகப்பு வண்ணத்துடன் கூடிய பந்து ஒன்று மிதந்து கொண்டிருந்தது.. பந்தின் அளவையும்.. வடிவத்தையும் கணக்கீடு பண்ணாமல் தாமோதரன் வீராதி வீரனைப் போலத் தண்ணீருக்குள் தொபுக்கடிர் என்று குதித்து விட்டான்..

குதித்த பின்புதான் அவனுக்கு அதி முக்கியமான அந்த விவரம் நினைவுக்கு வந்து தொலைத்தது..

அது.. அவனுக்கு நீச்சல் தெரியாது என்பது..

"காப்பாத்துங்க.. காப்பாத்துங்க.."

கரையில் இருப்பது சிறுமிகள் என்பதையும் மறந்து அவன் குய்யோ.. முறையோ என்று கத்தியபோதுதான் பேசுவதற்கு சம்பளம் கேட்பதைப் போல வாயைத் திறக்காமல் அவன்

செய்து கொண்டிருந்த கிறுக்குத் தனமான வேலைகளை அளவிட்டுக் கொண்டிருந்த அந்தச் சிறுமி.. தண்ணீருக்குள் குதித்தாள்.. அவனருகில் வந்து.. அவன் பந்து என்று நினைத்த சிகப்பு வண்ண ரப்பர் டியுபை இழுத்து அவன் கையில் கொடுத்து பிடிக்க வைத்து விட்டு கரைக்குத் திரும்பி நீந்தி விட்டாள்..

அத்தியாயம் - 16

எனைக் கண்டதும் உன் விழிகளில் தோன்றும்

நகைப்பு.. எதைக் குறித்தானது..?

"இப்படியாடா என் மானத்தை வாங்குவ..?" தலையில் அடித்துக் கொண்டான் சித்தார்த்தன்..

சொட்டச் சொட்ட நனைந்திருந்த தாமோதரன் திருதிருத்தான்.. அவனைக் காப்பாற்றி கரை சேர்த்த புண்ணியவதி.. தன் ஜோட்டுச் சிறுமிகளுடன் பேசியபடி இவனை ஓரக் கண்ணால் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்..

'மனசுக்குள்ள சிரிப்பாளோ..?'

"சந்தேகம் வேண்டாம்.." என்றான் சித்தார்த்தன்..

"இப்ப அவ மனசுக்குள்ள சிரிச்சுக்கிட்டுத்தான் இருப்பா.. உனக்கு என் தங்கையைப் பத்தித் தெரியாது.. அவ சரியான குட்டிப் பிசாசு..! வாயைத் திறந்து பேச மாட்டா.. அழுத்தக் காரி..! என்னைவிட ஆறுவயசு இளையவ.. இப்பத்தான் பிப்த் ஸ்டாண்டர்டுக்கு வந்திருக்கா.. இருந்தும் நூத்துக்கிழவி போல எனக்கே அட்வைஸ் பண்ணக் கிளம்பிருவா.."

"அவ்வளவு புத்திசாலியா..?"

"அவ்வளவு கர்வி..! ஹெட் வெயிட் பிடிச்சவ.."

சித்தார்த்தனின் வர்ணனையை கேட்ட பின்பு நீரஜாவைப் பார்த்த தாமோதரனுக்கு அவன் உண்மையைத் தான் சொல்லியிருக்கிறான் என்று புரிந்தது..

நீரஜா அப்படித்தான் இருந்தாள்.. உடன் நின்றிருந்த சிறுமிகளை பேச விட்டு அவள் கேட்டுக் கொண்டிருந்தாள்.. எளிதில் வாய் திறக்கவில்லை.. அவளது விழியசைவிற்கு மற்ற சிறுமிகள் பணிந்து பதில் சொன்னார்கள்.. அவள் கண்ணால் சொன்னதை உடனே செய்து முடித்தார்கள்.. இவள் என்னவோ மகாராணி போல தோரணையாக போஸ் கொடுத்து நின்றிருந்தாள்..

"பாரேன்.. என்னவோ.. இந்த காஞ்சிக்கே இளவரசியைப் போல பில்ட் அப் கொடுத்துக்கிட்டு நிக்கிறதை.. இந்த பத்து வயசுக்கு இது அதிகம்டா தாமு.. தேவையா இது..?"

சித்தார்த்தனின் அங்கலாய்ப்பில் நீரஜாவை மீண்டும் பார்த்த தாமோதரனுக்கு அவள் இளவரசியைப் போலவே தெரிந்து வைத்தாள்..

"நீங்க ராஜ வம்சம்தானேடா..?"

"அதுக்கு..?"

"அப்ப.. உன் தங்கை இளவரசிதானே..?"

எதனால் அவளைத் தாங்கிப் பேசினான் என்று இன்றுவரை தாமோதரனுக்குத் தெரியவில்லை.. அது என்னவோ.. கர்வம் பிடித்த அந்தச் சிறுமியின் மீது சொல்லில் வடிக்க இயலாத ஈர்ப்பு அவன் மனதில் தோன்றி விட்டது..

"நீ தேற மாட்டடா.." என்றான் சித்தார்த்தன்..

எதற்குத் தேற வேண்டும் என்றிருந்தது தாமோதரனுக்கு.. இதில் தேறி என்ன செய்யப் போகிறான்..? மெடலா கொடுக்கப் போகிறார்கள்...

'அப்படி கொடுத்தாலும் அந்த மெடல் எனக்கு வேண்டாம்..'

கண்ணால் கண்ட அடுத்த நிமிடமே இப்படிப்பட்ட முடிவை எடுக்க வைத்தவள்தான் நீரஜா..

"ஏண்டா ஃபூல்..! உன்னைப் பாத்து அவ கேலி பண்ணி சிரிச்சுக்கிட்டு இருக்கா.. நீ என்னடான்னா அவளுக்கு சப்போர்ட் பண்ணிப் பேசிக்கிட்டு இருக்க.." சித்தார்த்தன் கடிந்து கொண்டான்..

"என்னையேண்டா அவங்க கேலி பண்ணப் போறாங்க..? இருக்காதுடா.." தாமோதரன் அதை மறுத்துப் பேசி வைத்தான்..

"எவங்க..?"

சித்தார்த்தன் சுற்று முற்றும் பார்த்தான்.. தாமோதரன் குறிப்பிட்ட அந்த 'எவங்க..' எவங்க என்று அவனுக்குத் தெரியவில்லை..

"யாரைடா சொல்கிற..?"

"அவங்களைத்தாண்டா.."

"அவங்களைன்னா..?"

"உன் தங்கையைத்தான் சொல்றேன்.."

"நீ திருந்தவே மாட்டேடா.. இத்தனூண்டு விடாசு..! அதுக்குப் போயி இவ்வளவு மரியாதையா..? கொஞ்சமாச்சும் என் பிரண்டு போல நடந்துக்கப் பாருடா.."

"உனக்குத்தாண்டா நான் பிரண்டு.. உன் தங்கைக்கில்ல.."

"எப்படியோ போய் தொலை.. உனக்கே நீச்சல் தெரியாதே.. என்ன அலுவலுக்கு தண்ணிக்குள்ள குதிச்ச..?"

"அவங்க பால்.. பால்..ன்னு அலறினாங்கடா.."

"பால்.. பால்ன்னா பந்துன்னுதான் அர்த்தமாகுமா..?"

"பின்னே..?"

"எனக்குன்னு வந்து பிரண்டா வாய்ச்சிருக்க பாரு.. விதிடா.. எங்க வீட்டு இளவரசியும்.. அதோட சுண்டெலி பிரண்டுகளும் ஸ்விம்மிங் ஃபூல் பக்கத்தில நின்னுக்கிட்டு இருந்திருக்காங்க.."

"அங்கேதான் இருந்தாங்க.."

"பரவாயில்லடா.. இதிலயாவது இத்தனை தெளிவா இருக்கியே.. இதுகளுக்கு டிரிங்ஸ் சப்ளை பண்ண எங்க வீட்டு சர்வண்ட் சர்வே எடுக்க வந்திருக்காங்க.."

"டிரிங்ஸா..?"

தாமோதரனின் விழி பிதுங்கியது.. நீரஜாவை அதிர்ச்சியுடன் பார்த்தான்..

'இந்தக் குட்டிப் பொண்ணு குடிக்குமா..? இது குடிக்கிறது பத்தாதுன்னு கூட இருக்கிறவங்களுக்கும் ஊத்திக் கொடுக்குமா..? நம்பவே முடியலையே..'

"கற்பனை குதிரையை பறக்க விடாதே.." என்றான் சித்தார்த்தன்..

"டிரிங்ஸ்ன்னா நீ நினைக்கிற டிரிங்ஸில்லை.. இந்த காபி.. டீ.. ஜூஸ்.. இப்படி இதையும் டிரிங்ஸ்ன்னுதான் சொல்லுவாங்க.."

'அப்பாடி..' நிம்மதிப் பெருமூச்சு வந்தது தாமோதரனுக்கு..

"வந்திருக்கிற விருட்டானில்ல ஒன்னு.. காபி.. டீ.. ஜீஸெல்லாம் சாப்பிடாதாம் அதுக்குப் பால்தான் வேணும்ன்னு 'பறக்கா வெட்டி' அந்தக் கத்து கத்தியிருக்கு.. நீ அதான் சாக்குன்னு ஓடிப்போய் தண்ணியில குதிச்சிருக்க.."

சித்தார்த்தன் சொல்லச் சொல்ல.. தாமோதரனுக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது..

அத்தியாயம் - 17

நீயென்ன மாயம் செய்தாய்..?

நிழல் மீது கோலம் போட்டாய்..

"அப்படின்னா அவங்க பந்து.. பந்துன்னு அலறலையா..?"

"இல்லை.."

"அப்படித்தாண்டா என் காதில விழுந்தது.."

"பந்து.. பந்துன்னா காதில விழுந்தது..?"

'இல்லைதான்..'

தாமோதரன் திரும்பி நீரஜாவின் அருகேயிருந்த வாண்டுகளை எரித்து விடுவதைப் போல பார்த்து வைத்தான்..

'இந்தப் பக்கிகள்ல எந்தப் பக்கி அப்படி சவுண்டு விட்டது..?'

"திரும்புடா.." அதட்டினான் சித்தார்த்தன்..

"பாரேண்டா.. விளையாட வந்தா விளையாடிட்டுப் போகாம இதுக டீ பார்ட்டிக்கு கிளம்பியிருக்குதுக... அப்படியே செவிட்டில நாலு அப்பு அப்பினால்தான் என் மனசு ஆறும்டா.."

"யாரை..? நீரஜாவையா அப்பப் போற..?"

"ஆத்தி..!" தாமோதரன் அலறிவிட்டான்..

"ஏண்டா சித்தார்த்.. இப்படிப் பழிவாங்கற..? அவங்களை அப்பனும்னு மனசிலகூட நான் நினைப்பேனா..?"

"அதானே பார்த்தேன்.. நீதான் வந்தவுடனே அவளுக்கு சாம்பிராணி காட்ட ஆரம்பிச்சுட்டியே.."

"அவங்க அப்பேற்பட்டவங்கடா.."

"இன்னொருதடவ என் முன்னாலே அவளை அவங்க.. இவங்கன்ன.. எனக்கு கெட்ட கோபம் வந்துரும்."

"வந்தா வந்துட்டுப் போகுது.."

சித்தார்த்தனின் கோபத்திற்கும் அஞ்சாமல் அவளைப் பார்த்தவுடன் பூ போட்டு.. சாம்பிராணிப் புகையை காட்ட வைத்தவள் தான் நீரஜா..!

சூடம் ஏற்றி வணங்காத குறையாக அவளை நொடிக்கொருதரம் பார்த்துக் கொண்டிருந்தவனைப்

பார்த்து மீண்டும் தலையில் அடித்துக் கொண்டான் சித்தார்த்தன்..

"அவளைப் பார்த்ததும் பூப்போட்டுக் கும்பிட்ட முத ஆள் நீதாண்டா.."

"உனக்கு ஏண்டா இத்தனை காண்டு..?"

"அவ எவ்வளவு பெரிய இம்சைன்னு உனக்குத் தெரியுமா..?"

"தெரிய வேணாம்.. அதுக்குப் பதிலா வேற ஒன்னு தான் தெரியனும்.."

"எதுடா..?"

"அவ கூட நிக்கிற விடாசுகள்ல எந்த விடாசு.. பால்.. பால்ன்னு பறந்தது..?"

"எதுக்கு..? நீ செவிட்டில நாலு அப்பு அப்பி பஞ்சாயத்தை கூட்டி வைக்கிறதுக்கா..? அதை த்ராட்டில விடு.. ஆமா.. தெரியாமத்தான் கேக்கறேன்.. அது எப்படிடா ரப்பர் டியுபை பந்துன்னு நினைச்சுக்கிட்டுத் தண்ணியில குதிச்ச..?"

"ஹி.. ஹி.. அது பந்தைப் போலதாண்டா தெரிஞ்சது..?"

"தெரியும்.. தெரியும்.. குதிச்சதுதான் குதிச்ச.. உனக்கு நீச்சல் தெரியாதுங்கிறதை மறந்துட்டு ஏன் குதிச்ச..?"

"ஹி.. ஹி.. அது ஒரு வேகத்தில குதிச்சிட்டேண்டா.."

"ஏன்டா..? உள்ளே விழுந்தது இந்தப் பக்கிகள்ல ஒன்னா இருந்தாக்கூட நீ குதிச்சதில அர்த்தமிருந் திருக்கும்.. வெறும் பந்துக்காடா உன் உயிரை பணயம் வைச்ச..?"

"ஹி.. ஹி.. அப்ப அதைப்பத்தி யோசிக்கத் தோணலைடா.."

"குதிச்சதுதான் குதிச்ச.. உன் பக்கத்திலதான ரப்பர் டியுபு மிதக்குது..? அதைப் பிடிச்சிருக்க வேண்டியது தானே...? அதை விட்டுட்டு காப்பாத்துங்க... காப்பாத்துங்கன்னு கத்தி என் மானத்தை வாங்கிட்ட..

இனி பாரு.. இதை வைச்சே என்தங்கை காலம் பூராவும் ஓட்டப் போறா.."

"ஹி.. ஹி.. அதை பந்துன்னு நினைச்சேண்டா.."

"உன்னை..."

சித்தார்த்தன் மூன்றாம் முறையாக தலையில் அடித்துக் கொண்டான்.. அதை நீரஜா பார்த்து விடக் கூடாதே என்ற கவலையுடன் அவள் இருந்த திசையில் பார்த்தான் தாமோதரன்.. அவள் அவர்களைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.. அதில் வேறு அவளுடன் நின்றிருந்த 'பக்கி' களில் ஒரு பக்கி..

"ஏன் நீரு.. உன் வீட்டில் ஹார்ஸ் இருக்கா..?" என்று கேட்டு வைத்தது..

"இந்த வயசில இவ ஏண்டா குதிரையைப் பத்திக் கேட்கிறா..?" தாமோதரன் சித்தார்த்தனிடம் கேட்டான்..

"என் தங்கைக்கு பிரண்ட்ஸா வந்து வாய்ச்சிருக்கு துகள்ல..? இதுக எதை வேண்டும்னாலும் கேக்குங்க.. இவ காத்து அடிச்சிருக்கும்.." சித்தார்த்தன் அதற்கும் நீரஜாவையே குற்றம் சொன்னான்..

கேள்வி கேட்ட சிறுமியை வினோதமாக பார்த்த நீரஜா..

"எங்க வீட்டில் ஹார்ஸா..? நோ சான்ஸ்.." என்றாள்..

"இல்லடி.. எங்க வீட்டுக்குப் பக்கத்தில குதிரை வண்டி ஒன்னு நிக்கும்.. அந்தக் குதிரை எப்பப் பார்த்தாலும் 'ஹி.. ஹி..' ன்னு கனைச்சுக்கிட்டு இருக்கும்.. இங்கேயும் அதே போல 'ஹி.. ஹி..' ங்கிற சவுண்டு கேட்டுச்சுடி.." அந்தச் சிறுமி விளக்கம் சொன்னாள்..

"டேய்.. அவ உன்னோட 'ஹி.. ஹி..' யைத்தாண்டா சொல்றா.."

சித்தார்த்தனின் பார்வையே தாமோதரனை அடித்துப் புரட்டி துவைத்து தோரணமாக்கி காய வைத்தது..

"நான் என்னடா பண்ணினேன்..?" தாமோதரன் நெளிந்தான்..

"எதைச் செஞ்சாலும் காமெடியன் மாதிரியே செஞ்சிட்டு இப்ப வந்து நானென்ன செஞ்சேன்னா கேட்கிற..? படவா..! இந்த நீரஜா இதையும் சேர்த்து ஓட்டுவாளே..."

இல்லை.. சித்தார்த்தன் கவலை கொண்டதைப் போல நீரஜா தாமோதரன் செய்து வைத்த கலாட்டாவைப் பற்றிய பேச்சையே எடுக்கவில்லை..

அத்தியாயம் - 18

உன்னிரு கண்களும் என்னுரு கண்டதும்

உரைப்பது என்னவோ..?

அன்று முதல் இன்றுவரை அதன் மர்மம் விளங்காமல் தலைமுடியை பிய்த்துக் கொண்டான் சித்தார்த்தன்.. எவரையும் மதிக்காத நீரஜா தாமோதரனை மட்டும் எப்படி மதித்தாள் என்பது ஓர் விடுவிக்க முடியாத விடுகதையாக தேங்கி விட்டது..

சித்தார்த்தனும், தாமோதரனும் பத்தாம் வகுப்பைத் தாண்டி ப்ளஸ் ஒன்னில் அமர்ந்தார்கள்..

"பாப்பா சிக்ஸ்த் ஸ்டாண்டர்டாம்.."

சித்தார்த்தன் நீட்டி முழக்கியதை தாமோதரன் கண்டு கொள்ளாததை அரைப் பார்வையில் நீரஜா கண்டு கொண்டாள்..

"பாருடா.." என்று வியந்து போனான் சித்தார்த்தன்..

"அவங்க மனசு தங்கம்டா..." சிலாகித்தான் தாமோதரன்..

"இதை அவ எதிர்க்க சொல்லிராதே.." எச்சரித்தான் சித்தார்த்தன்..

"ஏண்டா.. உனக்கு இம்புட்டுப் பொறாமை..? அவங்க யாருடா.. உன் தங்கை.. அவங்க மேலே பாசம் வைடா.. பொறாமை வைக்காதே.. அவங்க பாவம்டா.. தேவதை..!"

தாமோதரன் ஒர் அரைமணி நேரத்திற்கு நீரஜாவின் அருமை பெருமைகளை சொல்லி முடித்தான்.. எருமையின் பொறுமையோடு அதைக் கேட்டுக் கொண்டிருந்த சித்தார்த்தன்.. அவன் தனது நீண்ட உரையை முடித்ததும் நீளமாக ஒரு கொட்டாவியை விட்டான்..

"விட்டா இன்னைக்குப் பூரா பேசித் தள்ளியிருப்ப போல.. மைக் இல்லாமலே.. இப்படிக் கடிச்சுத் துப்பறயே.. உன் கையில எல்லாம் மைக்கைக் கொடுத்தா என்ன கதியாகிறது..?" என்று சிலிர்த்தும் போனான்..

தாமோதரன் அவசரமாக சித்தார்த்தன் செய்யும் கிண்டலை நீரஜா கேட்டுக் கொண்டிருக்கிறாளா என்று திரும்பிப் பார்த்தான்..

"அவ அப்பவே பரிவாரத்தோட வெளியே கிளம்பியாச்சு.." என்றான் சித்தார்த்தன்..

"நான் ஒன்னும் அவங்களைப் பார்க்கல.." வெட்கத்துடன் சொன்னான் தாமோதரன்..

"நம்பிட்டேன்.. அடேய் தாமு.. என் தங்கை இருக்காளே.. அவ பிளாட்டினம், வைரம் ரேன்ஜில இருக்கிறவ.. அவ கிட்டப் போயி தங்கம்ன்னு சொன்னேன்னு வைய்யி.. திரும்பிக்கூட பார்க்க மாட்டா.. நம்ம நல்லதுக்குத்தான் சொல்றேன்.. அவ ரேன்ஜீக்குத் தக்கபடி பேசிப்பழகு.."

மற்றவற்றில் எப்படியோ.. சித்தார்த்தன் தங்கையின் விசயத்தில் மட்டும் சரியான மதிப்பீட்டையே சொன்னான்..

நீரஜா சித்தார்த்தனின் வார்த்தைப் படிதான் இருந்தாள்.. காது.. கை.. கழுத்தில் வைரங்களைத் தவிர வேறு நகைகளை அவள் அணிந்ததில்லை.. உடைகளும் விலையுயர்ந்தவை..

சித்தார்த்தன் அப்படியல்ல.. எளிமையின் மறு வடிவமாக இருப்பான்.. தகப்பனாரின் ராஜவம்சப் பெருமையினை காதில் போட்டுக் கொள்ளவே மாட்டான்.. தாமோதரனின் தோள்மீது கை போட்டு சமதையாக பழகினான்..

ப்ளஸ் டூ முடித்தவர்கள் பி.பி.ஏ படிக்கப் போனார்கள்.. வெளிநாட்டுப் பல்கலைகழகத்தில் எம்.பி.ஏ பட்டத்தை தாமோதரன் வாங்கியதற்கு சித்தார்த்தன் மட்டுமே காரணமாக இருந்தான்..

"ஏம்ப்பா.. உங்க அப்பா ஒருத்தரோட சம்பளத்தில குடும்பத்த ஓட்டறதே பெரும்பாடா இருக்கு.. நீ எதுக்காக வெளிநாட்டுக்குப் படிக்கப் போகனும்..? அந்தப் படிப்பை இங்கேயே பக்கத்தில இருந்துக்கிட்டுப் படிச்சா ஆகாதா..?" தாமோதரனின் அம்மா அம்பிகா ஆனமட்டும் சொல்லிப் பார்த்தாள்..

"என்னால முடிஞ்சது இவ்வளவுதான்.." கைச் செலவுக்கு சில ஆயிரம் ரூபாய்களை கொடுத்ததோடு நிறுத்திக் கொண்டார் ஈஸ்வரன்..

சித்தார்த்தன்தான் ஒரே பிடியாக தாமோதரனை வெளிநாட்டுக்கு தள்ளிக்கொண்டு போய்.. தன்னுடன் படிக்க வைத்தான்.. அவனுக்கான அத்தனை தேவை களையும் தாமோதரன் கேட்காமலே சித்தார்த்தன் நிறைவேற்றி வைத்ததில் அவர்களுக்குள் பிரிக்க முடியாத பிணைப்பு உருவாகி விட்டது..

"அப்பாவோட நிழலில் இருக்கக் கூடாதுடா.."

சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியை சித்தார்த்தன் ஆரம்பித்த போது அதன் ஆணி வேராய் மாறிப் போனான் தாமோதரன்.. அவனுக்கு அனைத்துமாக இருந்த நண்பனுக்குச் செழுத்த வேண்டிய நன்றிக்கடனை செழுத்தும் வாய்ப்பு கிடைத்ததில் படு உற்சாகமாக அதைப் பயன் படுத்திக் கொண்டு உயர்ந்தான்.. கம்பெனியை உயர்த்தினான்..

வெகு விரைவில் சித்தார்த்தனை தாமோதரனிடம் நன்றிக்கடன் பட வைத்துவிட்டான்..

அத்தியாயம் - 19

உன் கண்வீச்சு - அந்த

கதிர்வீச்சை விட சக்தி வாய்ந்தது..

அந்த நீரஜா சித்தார்த்தனின் அறையில் இருந்த விருந்தினர் சோபாவில் சட்டமாக அமர்ந்து காலாட்டியபடி வெகு தோரணையாக தாமோதரனைப் பார்த்தால் அவன் கலவரம் கொள்ள மாட்டானா..?

ஏஸி ரூமிலும் தாமோதரனுக்கு வியர்த்துக் கொட்டியது.. சித்தார்த்தன் அவனுடைய கைக்குட்டையை எடுத்து நீட்டினான்..

"எதுக்குடா..?" தாமோதரன் அதற்கும் குழம்பினான்..

"துடைச்சுக்க.. அசடையில்ல.. வியர்வையை.." சித்தார்த்தன் தெளிவு படுத்தினான்..

தாமோதரனால் அதை வாங்கவும் முடியவில்லை.. வேண்டாமென்று சொல்லவும் முடியவில்லை.. இரண்டு மில்லாமல் மென்று விழுங்கியபடி..

"என்கிட்ட இருக்குடா.." என்றான்..

"இருந்தா எடுத்து முகத்தைத் துடைச்சுக்க.. இல்லேன்னா உனக்குக் கொட்டற வியர்வையில படகு விடறதைப் போல ஆகிரும்.."

'இருந்தாலும் இவன் நீரஜாவின் முன்னால் இந்த ஓட்டு ஓட்டக் கூடாது..' சங்கடப்பட்டான் தாமோதரன்..

கைக்குட்டையால் வியர்வைத் துளிகளை ஒற்றி எடுக்க முயன்றால் அது தொப்பல் தொப்பலாக நனைந்து தொலைத்தது.. பிழிந்தால் ஒரு குடமே நிரம்பி வழிந்து விடும் போல இருந்ததில் தாமோதரன் பரிதாபமாக நீரஜாவை பார்த்து வைத்தான்..

அவளோ இரக்கமில்லாமல் அவனை லேசர் பார்வை பார்த்துக் கொண்டிருந்தாள்.. சல்லடை.. சல்லடையாக துளைத்த அந்தப் பார்வையில்..

'இவ பேசாம மிலிடிரியல சேர்ந்திருக்கலாம்..' என்று நினைத்துக் கொண்டான் தாமோதரன்..

அவளுடைய மிடுக்கும் கம்பீரமும் அதுபோலதான் இருந்தன.

"பேர் என்னன்னு கேட்டேன்.." அழுத்தம் திருத்தமாக அவள் நினைவு படுத்தினாள்..

'அத விட்டு நகர மாட்டேங்கிறாளே..'

தாமோதரன் தலையைச் சொரியலாமா என யோசித்தான்.. ஏற்கனவே ஒரு குடம் வியர்வையை கொட்டி விட்ட முகத்துடன்.. கலைந்து.. குலைந்து.. பப்பரப்பா என்று படிந்து கிடக்கும் முடியை சொரிந்து வைத்தால் நீரஜா அவனை இந்த லேசர் பார்வையைக் கூடப் பார்க்காமல் விலகிச் சென்றுவிடும் அபாயம் இருந்ததில் விசப்பரிட்சை வேண்டாம் என விட்டு விட்டான்..

"தாமோதரன்னு சொன்னேனேங்க.."

"என்ன..? மனசுக்குள்ள பெரிசா ஜோக்கடிக்கிறதா நினைப்பா..?"

"யாருக்குங்க..?"

"உங்களுக்குத்தான்.. வேற யாருக்கு..?"

"ஏங்க..? உங்களுக்கே இது நியாயமா இருக்கா..? உங்க முன்னாலே எனக்கு வெறும் நினைப்பே வராது.. இந்த லட்சணத்தில ஜோக்கடிக்கற நினைப்பு மட்டும் வந்துட்டுத்தான் வேற வேலையைப் பார்க்குமா..?"

தாமோதரனின் அங்கலாய்ப்பை ரசித்து வாய்விட்டுச் சிரித்தபடி தலையில் அடித்துக் கொண்டான் சித்தார்த்தன்..

"எண்டா இப்படி இருக்க..? இவ முன்னாலே நிமிர்ந்து நிக்க வேணாமா..?"

"என்ன கழுதைக்கு..?"

தாமோதரன் சரணாகதியிலேயே குறியாய் இருந்தான்.. நீரஜா வாய்க்குள் அவனை முணுமுணுப்பாய் திட்டித்

தீர்ப்பதை மகா சந்தோசத்துடன் தாமோதரன் பார்த்ததில்..

"முடியல.." என்று தலையைப் பிடித்தான் சித்தார்த்தன்..

"இந்த டைவர்ட் பண்ற வேலையெல்லாம் இங்கே வேணாம்.. நான் பேர் என்னன்னு கேட்டது உங்களையில்ல.. இவளை.." நீரஜா சீறினாள்..

"எவளை..?" தாமோதரன் சுற்றுமுற்றும் பார்த்தான்..

"ஹா.. ஹா.." சித்தார்த்தன் பலமாக சிரித்து வைத்தான்..

நீரஜா தமையனை முறைத்த முறைப்பில் தாமோதரனுக்கு எழுந்து ஓடிவிடலாம் போல இருந்தது..

'அடுத்த பலிகடா நானா..?'

ஆமாம் என்றது அவளது அக்கினி பார்வை.. தாமோதரனின் முன்னால் அவன் வேலை கொடுக்கும்படி சிபாரிசு செய்த பெண்ணின் பயோடேட்டா அடங்கிய ஃபைலைத் தூக்கி விட்டெரிந்தாள்.. அது அலேக்காக தாமோதரனின் மடியினில் விழுந்து விரித்து வைத்தது.. அதில் அந்தப் பெண்ணின் புகைப்படம் சிரித்தது..

"ஃபைலுக்குக்கூட யார் மடியில விழுகனும்னு தெரியுது பாரு.. இங்கே நானும்தான் இருக்கேன்.. என் மடியில வந்து விழுந்துச்சா..? அதுக்கே தெரியுது.. உடந்தைப்பட்டவங்க யாரு.. வேத்து மனுசங்க யாருன்னு.. இல்லே.. நீரஜா..?"

ஒன்றும் அறியாத சின்னஞ்சிறுவனைப் போல சித்தார்த்தன் தங்கையைத் தூண்டி விட்டான்..

"டேய்ய்..! படுபாவி..!" அலறினான் தாமோதரன்..

"யாரைடா பாவிங்கற..? நீரஜாவையா..? த்ச்சு..த்ச்சு.. கேட்டுக்கிட்டியா நீரஜா..?"

"அவங்களையாடா 'டேய்'ன்னு சொல்லுவேன்..?"

"நீ சொன்னாலும் சொல்லுவடா.. உன் சீக்ரெட்டை நீரஜா கண்டு பிடிச்சுட்டாளேங்கிற காண்டு உனக்கு.."

"என்னது சிகரெட்டா..?"

பதட்டத்தில் தாமோதரன் உளறிக் கொட்டியதில்..

"ஓ.. அந்தப் பழக்கம் வேற உனக்கு இருக்கா..? கேட்டுக்க நீரஜா.."

சித்தார்த்தன் போட்டுக் கொடுத்தான்.. யாமினிக்கு வேலை கொடுக்க விடாமல் தடுத்துக் கொண்டிருக்கும் நண்பனை ஒரு வழியாக்க வழி கிடைத்து விட்ட சந்தோசம் அவனுக்கு..

அத்தியாயம்-- 20

உன் கடைக்கண் பார்வை எதற்கு..?

இதழ் சுழிப்பிலேயே இமயம் வென்று வருவேனே..

நீரஜாவின் அனல் பார்வையில் தீயணைப்பு வண்டிக்கு போன் போட்டு விடலாமா என்று யோசித்தான் தாமோதரன்..

'பயர் சர்வீஸ் காப்பாத்தினாத்தான் உண்டு.. இந்தப் பயலை நம்பி ஒரு பிரயோசனமும் இருக்கப் போவதில்ல.. யூஸ்லெஸ் ஃபெல்லோ.. இவனுக்காக நான் மண்டையை உடைச்சுப் பிளான் போட்டு அந்த யாமினிக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் போடாம வேற ஒருத்திக்கு போடுடான்னா இவன் புரிஞ்சுக்காம இம்சை செய்யறது மில்லாம இவன் தங்கச்சிகிட்ட போட்டுக் கொடுக்கிறான்.. பழிவாங்க சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு சந்துக்குள்ள சான்கைப் போடறான்.. இவளும் அதைப் புரிஞ்சுக்காம கண்ணகி மதுரையைப் பார்க்கிறதைப் போல என்னையும் பார்த்து வைக்கிறா..'

மனதுக்குள் புலம்பித் தள்ளினான் தாமோதரன்.. இதில் வேறு யதேச்சையாக விரிந்து கிடந்த ஃபைலில் அவன் விரல் பட்டுத் தொலைத்து விட்டது.. உக்கிரமான நீரஜா அவனை உறுத்துப் பார்த்ததில் புரியாமல் அவள் பார்வை போன திக்கில் போய் அவனுடைய விரலைப் பார்த்தவன்..

'ஆத்தீதீதீதீ...' என்று மனதுக்குள் அலறியபடி தீப்பட்டதைப் போல விரலை எடுத்துவிட்டான்..

"ஏன்..? பிடிச்சுத்தானே டச் பண்ணினீங்க... பின்னே.. எதுக்காக விரலை நகர்த்தனும்..?" எரிமலையாக பொங்கினாள் நீரஜா..

"ஏங்க நீங்க வேற.." தாமோதரன் விளக்கம் சொல்லப் போக அதுவே அவனுக்கு வினையாக வந்து முடிந்தது..

"ஓ..! நான் 'வேற..'ங்கிறதை கன்ஃபர்மே பண்ணிட்டீங்களா..?" உதட்டைக் குவித்து கேட்டு வைத்தாள் நீரஜா..

அந்த உதட்டுக் குவிப்பிற்கு உலகையே அவள் பெயருக்கு எழுதிக் கொடுத்து விடலாம் போல மயங்கிப் போனான் தாமோதரன்.. அதை உணராமல் அவன்

யாரோ.. அவள் யாரோ என்பதைப் போல அவள் பார்த்து வைத்தாள்..

"நான் சொன்ன 'வேற'யே வேறங்க.."

அழமாட்டாத குறையாக தாமோதரன் விளக்கம் சொன்ன விதத்தில் சித்தார்த்தன் உரக்கச் சிரித்து வைத்தான்..

"வேண்டாம்டா சித்தார்த்.. ஏற்கனெவே நான் கொலைவெறியில இருக்கேன்.. நீ வேற கிளப்பி விடாதே.." எச்சரித்தான் தாமோதரன்..

"வொய் திஸ் கொலைவெறி..?"

நீரஜா தாமோதரனை விட்டு விட்டு அவள் அண்ணனிடம் விளக்கம் கேட்டு வைத்து உண்மை யாகவே தாமோதரனுக்கு கொலைவெறியை வர வைத்தாள்..

'கொலைவெறியில இருக்கிறது நானா.. இல்ல.. இவ அண்ணனா..? என்கிட்ட கேட்க வேண்டிய கேள்விய அவன்கிட்ட கேட்டு வைக்கிறா.. அம்மணி என்கூட பேசவே மாட்டாளா..?'

தாமோதரனின் பிளட் பிரசர் எகிறி உச்ச கட்டத்தை அடைந்தது..

"அதுவா நீரஜா.. என் செக்கரட்டரி வேலையை ரிசைன் பண்ணிட்டுப் போயிட்டா.." சித்தார்த்தன் தங்கைக்கு விளக்கம் சொல்ல ஆரம்பித்தான்..

'டேய் பழி..! இந்த லட்சணத்தில விளக்கம் சொல்லாதேடா.. இவ எனக்கும் அவளுக்கும் முடிச்சுப் போட்டு வைக்கப் போறா..'

தாமோதரன் மனதுக்குள் அலறினான்.. அவன் எதை நினைத்தானோ.. அதுவே மிக நன்றாக நடந்தது..

"ஓ..!" மீண்டும் உதட்டைக் குவித்து 'ஓ' போட்டு வைத்தாள் நீரஜா..

'ஜெமினியில விக்ரம் கூட இத்தனை 'ஓ' போட்டிருக்க மாட்டாரு..'

தாமோதரனுக்கு அவளது உதட்டுக் குவிப்பின் மீது நேரம் கெட்ட அந்த நேரத்தில் மையல் வந்து தொலைத்தது.. அவனது மையலையெல்லாம் அந்த மயில் லட்சியமே செய்யவில்லை.. அதை விட்டுவிட்டு..

"உன் செகரட்டரி ரிசைன் பண்ணினா உன் பிரண்டுக்கு கொலை வெறி வருதா..? ஏனாம்.. அவ இவரைக் கழட்டி விட்டுட்டு வேற யாரையும் மேரேஜ் பண்ணிக்கிட்டு போயிட்டாளா..?" என்று அவளாகவே திரைக்கதை எழுதிக் கொண்டு விசாரித்து வைத்தாள்..

"என்னங்க நீங்க.. இப்படிக் கேட்டு வைக்கறிங்க..?"

ஊடே பாய்ந்த தாமோதரனை உதாசீனப்படுத்தி விட்டு..

"நீ சொல் அண்ணா..?" என்று சித்தார்த்தனின் பக்கமாக திரும்பி அமர்ந்து கொண்டாள் நீரஜா..

'இவன்தானே... வண்டை... வண்டையாய் சொல்லுவான்... சொல்லுடா... உன் ஆருயிர் தங்கை கேட்கிறா.. புளுகு மூட்டையை அவிழ்த்து விடு.. இவ கேட்டுட்டு என்ன கொத்து

புரோட்டா போடட்டும்.. அடுத்த சந்து கிடைச்சிருச்சுடா மச்சான்.. நீ சான்கைப் போட்டு பாட விடு.. உன் காட்டிலதான் இன்னைக்கு மழை கொட்டோ.. கொட்டுன்னு கொட்டித் தள்ளுதே..' தாமோதரனின் முகம் சிவந்தது அவன் கொண்ட நாணத்தினால் அல்ல..

"எப்படி நீரஜா இப்படிக் கரெக்டா பாயிண்டைக் கேட்ச் பிடிச்ச..?" சித்தார்த்தன் தாமோதரனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான்..

"நினைச்சேன்.." நீரஜாவின் முகமும் சிவந்தது.. இதுவும் நாணத்தினால் அல்ல..

'இதையெல்லாம் நினை.. என்னை மட்டும் நினைக்காதே..'

பேசாமல் நீயுமாச்சு உன் வேலையுமாச்சு என்று எழுந்து போய் விடலாமா என்றிருந்தது தாமோதரனுக்கு..

ஆனால் நினைத்ததைச் செய்ய அவனால் முடியாது.. அவனுக்கும் சித்தார்த்தனுக்குமான பாசப் பிணைப்பும்.. அவனுக்கும் நீரஜாவுக்குமான மாயப் பிணைப்பும் அவனை அதைச் செய்யவிடாது..

அத்தியாயம்- 21

உன்னைவிட இவ்வுலகில்

உயர்வு எது..? நீ கூறு..

தாமோதரனின் பார்வையில் நீரஜாவின் கோபம் அதிகமானது.. அது என்னவோ தெரியவில்லை.. அவள் மீதான அதீதக் காதலை அவன் வெளிப்படுத்த முனையும் போதெல்லாம் இது போலதான் ஏதாவது ஒரு சிக்கல் அவனை சிறைபிடித்து கைகொட்டி சிரிக்கிறது..

"ஸோ.. உன் செகரட்டரி வேலையை ரிசைன் பண்ணிட்டுப் போனதில உன் பிரண்ட் கொலை வெறியில இருக்கார்.."

"ஏங்க.. அவன் என்ன சொல்றான்..? நீங்க எதைப் பிடிச்சுக்கிட்டுத் தொங்கறிங்க..?" எரிச்சலுடன் தாமோதரன் கேட்டதில்..

"ஓ.." என்று உதட்டைக் குவித்தாள் நீரஜா.

அந்த உதட்டுக்குவிப்பு தாமோதரனுக்கு பிடித்தமான ஒன்றாக இருந்து வைத்தாலும்.. அந்த உதட்டுக் குவிப்பிற்குப் பின்னால் வரப்போகும் வார்த்தைகள் அவனுக்கு பிடித்தமானவையாக இருக்கப்போவதில்லை என்பதில் அவன் மனதில் திகில் பற்றிக் கொண்டது.

"இந்த 'ஓ'வைக் கொஞ்சம் ஓட்டி விடுங்க.."

"அது மட்டும் ஓடினாப் போதுமா.. இல்லை.. நானும் சேர்ந்து ஓடனுமா..?" இறுக்கமான முகத்துடன் கேட்டு வைத்தாள் நீரஜா..

"நீங்க எதுக்காகங்க ஓடனும்..? வேணும்னா சொல்லுங்க.. நான் இந்த இடத்தை விட்டு ஓடிப் போயிடறேன்.." தாமோதரன் சீட்டை விட்டு எழுந்தான்..

"பயல் எஸ்ஸாகப் பார்க்கிறான் நீரு.. விட்டு விடாதே.." சித்தார்த்தன் முடுக்கி விட்டான்..

"அடப்பாவி..! நான் எஸ்ஸாகி என்னடா பண்ணப் போறேன்..?" பரிதாபமாக நியாயம் கேட்டான் தாமோதரன்.

"யாருக்குத் தெரியும்.. இந்த ஃபைலில் இருக்கிற போட்டோவில் இருக்கிற பொண்ணுக்கு போனைப் போடலாம்.. அவ உடனே வந்தா ஊர் சுத்தப் போகலாம்.. அவ அதுக்கும் மேலே ஓகே சொன்னா அட்வான்ஸ் ஹனிமூனுக்கே போனாலும் போகலாம்.." சித்தார்த்தன் அடுக்கினான்..

"இதையெல்லாம் யார்டா செய்வா..?" சுவராஸ்யமாக கேட்டு வைத்தான் தாமோதரன்..

"வேற யாரு செய்வா..? எல்லாம் நீதான்.." இரக்கமில்லாமல் சொல்லி வைத்தான் சித்தார்த்தன்..

"நானா..?" தாமோதரன் அலறினான்..

"நீதாண்டா.. பின்னே நானா இதையெல்லாம் செய்யப் போறேன்..? நானே இந்தப் பெண்ணுக்கு வேலை கொடுக்கக் கூடாதுன்னு சொல்லிக்கிட்டு இருக்கேன்.." எரிச்சலுடன் சொன்னான் சித்தார்த்தன்..

"அந்தக் காண்டுதானேடா உனக்கு..?" தாமோதரன் உக்கிரமாக..

"ஹலோ.." என்றால் நீரஜா..

"யார்கிட்டங்க போன் பேசறிங்க.." என்றான் தாமோதரன்..

"நிச்சயமா உங்ககிட்ட இல்லை.."

"ஏங்க..?"

"என்ன மேன்..? பிரண்ட்ஸ் ரெண்டு பேரும் சேர்ந்துக்கிட்டு ப்ளே பண்றீங்களா..?"

"இவன்கூட விளையாடிட்டாலும்..! கழுதையில..! விளங்கிரும்.. இவனெல்லாம் பிரண்டுன்னு நீங்கதான் சொல்லிக்கணும்.."

"எதுக்காக நான் சொல்லனும்..? எனக்கு இவன் அண்ணன்..! உங்களுக்குத்தான் பிரண்டு.."

"அந்தக் கொடுமைக்குத்தான் பாயைப் பிராண்டற அளவுக்கு என்னை ஆக்கி வைச்சுக்கிட்டு இருக்கான்.."

"இந்தக் கதையெல்லாம் என்கிட்ட வேண்டாம்.."

"எந்தக் கதை..?"

"பேச்சை டைவர்ட் பண்றீங்களா..?"

"இல்லவே இல்லீங்க.."

"இவனோட செக்கரட்டரிக்கும் உங்களுக்கும் என்ன கனெக்சன்..?"

"என்னது..?"

தாமோதரனுக்கு ஹார்ட் அட்டாக்கே வந்து விட்டது..

"என்னங்க இப்படி அணு குண்டைத் தூக்கிப் போடறிங்க.. இவன் செக்கரட்டரிக்கும், இவனுக்கும் என்ன கனெக்சன்னு நீங்க கேட்டா அதில ஒரு மீனிங் இருக்கு.. எனக்கும் இவன் செக்கரட்டரிக்கும் என்ன கனெக்சன்னு கேட்டா அதில என்னங்க மீனிங் இருக்கு..?"

"அதைத்தான் நானும் கேட்கிறேன்.."

"என்னத்தைக் கேட்டிங்களோ.. எல்லாத்தையுமே ஏடா கூடமாவே கேட்டு வைக்கறிங்களே.. ஆனாலும் உங்களுக்கு என்மேல இந்த அளவுக்கு நம்பிக்கை இருக்கக் கூடாதுங்க.."

"ஹலோ.."

"இருக்கேன்.. கேட்குது.. சொல்லுங்க.."

"இவன் செக்கரட்டரி ரிசைன் பண்ணிட்டுப் போனா உங்களுக்கு எதுக்காக கொலைவெறி வரனும்..? டவுட் அங்கிருந்துதான் ஆரம்பிக்குது.."

"டவுட் மட்டுமில்லைங்க.. எல்லாமே அங்கிருந்து தான் ஆரம்பிக்குது.."

"அதுதான் அப்படின்னா.. இண்டர்வியூக்கு வந்த பெண்ணையும் கரெக்ட் பண்ண டிரை பண்றிங்க.."

"இன்னும் என்னைப்பற்றி என்னென்ன உயர்ந்த அபிப்ராயங்களை உங்க உள் மனசில ஒளிச்சு வைச்சிருக்கீங்க..?"

"கண்ணாலே பார்த்ததையும்... காதாலே கேட்டதையும் தான் நான் சொல்றேன்.."

"என்னத்தைப் பார்த்து.. என்னத்தைக் கேட்டிங்களோ.. இதுக்குத்தான் பெரியவங்க சொல்லி வைச்சிருக்காங்களோ..?"

"இது ரெண்டும் பொய்ன்ன்னா வேற எதுதான் உண்மை..?"

"தீர விசாரிக்கிறதுதான்.. வேற என்ன..?"

தாமோதரன் நீரஜாவிடம் மண்டிபோடாத குறையாக மன்றாடினான்..

அத்தியாயம்- 22

வாது புரிய நீ அழைத்தாலும்..

காதலுடன் தான் நான் வருவேன்..

என்னதான் கையேந்தி பவனின் டிபன் சாப்பிடுவதைப் போல தாமோதரன் மண்டியிட்டுக் கையேந்தினாலும் அசைந்து கொடுக்க மறுத்தாள் நீரஜா..

தங்கக் கம்பி என்று அவள் எண்ணிக் கொண்டிருந்தவன் தகரக் கம்பியாகக் கூட இல்லாமல் போய் விட்டானோ என்ற அவளின் சந்தேகத்தில் அவனை கூறு போட் டுவிடும் கோபத்தில் கொதித்துக் கொண்டிருந்தாள்..

"இங்கே மட்டும் என்ன செய்கிறேனாம்..? தீர விசாரிச்சுக்கிட்டுத்தானே இருக்கேன்..?"

"நீங்க..? தீர விசாரிக்கறிங்க..? ஏங்க நீங்க சிரிப்பை மூட்டறிங்க..? இதுக்குப் பேர்தான் தீர விசாரிக்கிறதா..? நீங்களா ஒன்னை முடிவு பண்ணிக்கிட்டு.. அதிலேயே அசையாம நின்னுக்கிட்டு என்னைக் குற்றவாளிக் கூண்டிலே ஏத்தறதுக்குப் பேர்தான் விசாரணையா..? குட் ஜோக்.."

"வேற என்ன செய்யலாம்ன்னு நினைக்கறிங்க.. சார்கிட்ட டயலாக் எழுதி வாங்கி.. அதில இருக்கிறதை படிச்சுக் காட்டறதுக்குப் பேர்தான் விசாரனைன்னு சொல்ல வர்றீங்களா..?"

"அப்படியும் சொல்லலை.. கொஞ்சமாவது என் சைடில என்ன சொல்றேன்னு காது கொடுத்துக் கேளுங்கன்னுதான் சொல்றேன்.."

தாமோதரனின் அங்கலாய்ப்பில் பேச்சை நிறுத்தினாலும் அவனை உர்ரென்று முறைத்தபடிதான் உட்கார்ந்திருந்தாள் நீரஜா..

அவன் மீதான நீரஜாவின் ஆளுமையில் உரிமை உணர்வு நிறைந்திருந்ததை தாமோதரனால் இனம் காண முடிந்தது.. அந்த கண்டு கொள்ளலே அவனுக்கு இனித்தது..

மனதுக்குப் பிடித்த பெண்.. மற்ற பெண்களைப் பார்க்கிறானா என்று திட்டித் தீர்ப்பதைக் கேட்பதுதான் எத்தனை சந்தோசமான விசயம்..! அவள் மொத்தினாலும் வாங்கிக் கொள்ளலாமே..

"இந்தா உட்கார்ந்திருக்கிற உங்க அருமை அண்ணன் கிட்டேயே கேட்டுப் பாருங்க.."

"எதைக் கேட்கச் சொல்கிற..?"

"உனக்கும் எனக்கும் பேச்சில்லை.. வாயை மூடிக்கிட்டு இரு.."

"அப்புறம் எதுக்காக என்கிட்டக் கேட்கக் சொல்கிற..?"

"அதை உன் தங்கைகிட்டச் சொல்லிக்கறேன்.."

"சொல்லிக்க.. எனக்கென்ன போச்சு..? பிரண்டாச்சே.. ஹெல்ப் பண்ணலாமேன்னு கேட்டேன்.."

"நீ பண்ணின ஹெல்ப்பே போதும்.."

"அப்படிங்கறே.."

"ஆமாம்கறேன்னு சொல்ல மாட்டேன்.. ஆல்ரெடி இந்த டயலாக்கை நிறையப் பேரு சுட்டுட்டாங்க.."

"அதனால உன்னோட பேவரிட் டயலாக்கெல்லாம் உன்னோடது இல்லைன்னு ஆகிருமா..? விட்டுத் தொலைடா.. என்னதான் மாஞ்சு மாஞ்சு மாத்தி யோசிச்சு அவங்க சொன்னாலும் கேட்கிறவங்க அதையெல்லாம் உன்னோட டயலாக்குன்னுதான் கேட்டுக்கிட்டு இருக்காங்கடா.. கன்னத்திலே மருஒட்டினா மாறு வேசமாம்டா மச்சி.. கண்டுக்காதே.."

"வேற வழி..? அதைத்தான் செய்துகிட்டு இருக்கேன்.. இப்ப உன் தங்கைக்கு விளக்கம் சொல்லனும்.. நீ வாய் மேல விரலை வைக்கறியா..?"

சித்தார்த்தனை அரட்டி விட்டு நிரஜாவின் பக்கம் திரும்பினான் தாமோதரன்.. நம்பாத பார்வையுடன் அமர்ந்திருந்தவளை அள்ளிக் கொள்ள வேண்டும் போல அவனுக்கிருந்தது.. அதை கண்களில் வெளிப்படுத்தியபடி விளக்கத்தை தொடர்ந்தான்..

"இவனோட ரிசைன் பண்ணிட்டுப் போன செக்கரட்டரி யோட மூஞ்சி எப்படியிருந்ததுன்னு கூட எனக்குத் தெரியாதுங்க.. இவனை இல்லேன்னு சொல்லச் சொல்லுங்க பார்க்கலாம்.."

"இல்லேன்னு சொல்லத்தான் செய்வேன்.. அது எப்படிடா என் கம்பெனியின் ஜி.எம்மா இருக்கிறவனுக்கு என் செக்கரட்டரியோட மூஞ்சி எப்படியிருந்ததுன்னு தெரியாமப் போகும்..? அந்த மூஞ்சியைப் பார்த்து நீ பேசினதே இல்லேன்னு வேணும்னா சொல்லலாம்.."

"கேட்டுக்கிட்டிங்களா..?"

தாமோதரன் கேட்டதில் கொஞ்சமாக மலையிறங் கினாள் நீரஜா..

"அப்புறம் எதுக்காக அந்த லேடி ரிசைன் பண்ணினதுக்கு நீங்க கொலைவெறியானீங்க..?"

சிந்துபாத்தின் கன்னித்தீவைப் போல அவளது சந்தேகங்கள் தீரவே மாட்டேனென்று அடம் பிடித்தன.. அதில் சோர்ந்து போனவனாக தலையில் கை வைத்தான் தாமோதரன்..

"அந்த மகராசி ரிசைன் பண்ணிட்டுப் போய் தொலைஞ்சதினாலேதானேங்க இந்த பிரஹஸ்பதி இண்டர்வியூக்கு கார்டு அனுப்பினான்..?"

"யாருக்கு..?"

"அப்ளை பண்ணினவங்களுக்குத்தான்.."

"அதில் உங்களுக்கு என்ன பிராப்ளம்..?"

"என்னத்தைன்னு சொல்லுவேன்..?"

தாமோதரனுக்கு தலையை வலித்தது.. ஒரிரு வார்த்தைகளில் கூறிவிடக் கூடிய விவரமல்ல அது.. மர்ம நிழலுடன் கூடிய ஒரு பெண்ணை மகாபலிபுரத்தின் ஐந்து ரதக் கோவிலில் சித்தார்த்தன் சந்தித்திருக்கிறான்.. அவளை சந்தித்த தினத்திலிருந்து அவனது செய்கைகள் அத்தனையும் விசித்திரமாக இருந்து தொலைக்கின்றன.. மகாபலிபுரச் சந்திப்பு மகாபலிபுரத்தோடு போகாமல் சித்தார்த்தனின் கம்பெனி வரைக்கும் வந்துவிட்டது.. அதைத் தடுத்தே ஆக வேண்டிய கட்டாயத்தில் தாமோதரன் இருக்கிறான்..

நீரஜாவின் வில் போன்ற புருவங்கள் வளைந்து நெளிந்து தாமோதரனை சோதித்து வைத்தன.. அவள் சும்மா ஓர் பார்வை பார்த்தாலே அவன் தாங்க மாட்டான்.. இந்த லட்சணத்தில் இப்படியெல்லாம் வில்லேந்தும் புருவங்களை வளைத்து நெறித்தால் தாங்குவானா..?

"ஏங்க ஐப்ரோவைப் போட்டு அந்தப் பாடுபடுத்தறிங்க.. விட்டிருங்க.."

நீரஜாவின் புருவங்கள் படும் பாட்டைக் காணச் சகிக்காமல் சிபாரிசு செய்தவனை யார் நீ.. என்று பார்த்து வைத்தாள் நீரஜா..

அதில் இடிந்து போன தாமோதரனை..

"இப்ப மட்டும் புதுசா பார்க்கிறதைப் போல சீன் காட்டறியேடா.. இவ எப்பவுமே உன்ன அப்படித்தான் பார்த்து வைக்கிறா.." என்று எடுத்துக் கொடுத்தான் சித்தார்த்தன்..

'அப்படியா..?'

தாமோதரனின் விழிகள் கேட்ட கேள்விக்கு நீரஜாவின் விழிகளில் வந்து போன மின்னல்கள் மேஜிக் வேலை

செய்து அவன் உடலுக்குள் மின்சாரத்தைப் பாய்ச்சின.. அவன் ஒரு மார்க்கமாக மந்திரித்து விட்ட கோழியைப் போல ஆகிப் போனான்..

"இவன் ஒருத்தன்.. இவ முன்னாலே அடிக்கடி கரண்ட் கம்பியைத் தொட்டுட்டவன் போல ஜெர்க் ஆகி வைப்பான்.." அலுத்துக் கொண்டான் சித்தார்த்தன்..

நீரஜா தலையை சாய்த்து தாமோதரனைப் பார்த்து வைத்தாள்.. அந்தப் பார்வையைக் கவ்விக் கொண்ட தாமோதரனின் பார்வை.. என் வார்தைகளைக் கொஞ்சம் கேளேன் என்று இறைஞ்சியது.. அவளின் புருவங்கள் பரத நாட்டியம் ஆடி வைத்தன.. சித்தார்த்தன் என்ற ஒருவன் அங்கே இருக்கிறான் என்பதை மறந்து அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் விழுங்குவதைப் போல பார்த்துக் கொண்டிருந்தில்..

"நான் வேணும்னா காரில் ஒரு டிரைவ் போயிட்டு வந்திரட்டுமா..?" என்று கேட்டான் சித்தார்த்தன்..

நீரஜாவின் முகம் சிவந்துவிட்டது.. தாமோதரன் சங்கடப்பட்டுப் போனான்..

"டேய்ய்.. வந்திருக்கிறது உன் தங்கைடா.."

"எனக்கு.. நீ இன்ட்ரொடுயூஸ் பண்ணி விடுகிறயா..? பிறந்ததில இருந்தே.. அதாவது அவ பிறந்ததில இருந்தே இவதான் என் தங்கைன்னு எனக்குத் தெரியும்டா..

மச்சி.. ஸோ.. இந்த அறிமுகப் படலத்தையெல்லாம் வேற எங்கேயாவது போய் வைச்சுக்க.."

"தங்கைகிட்ட பேசற பேச்சாடா இது..?"

"அண்ணன் பிரண்ட இவ ஏன் அரட்டிப் பார்க்கிறா..? இதுக்குப் பதில் சொல்லிட்டு மத்த அட்வைஸை பண்ணு.."

"அது.. அது.. அது.."

தாமோதரன் வார்த்தைகள் தந்தியடிக்க நீரஜாவைப் பார்த்தான்.. அவள் முகத்தில் லேசாக கோடிட்டு மறைந்த

செம்மையில் அவன் மனம் தடுக்கி விழுந்தது.. இனி வரும் நாள்களுக்கு இது போதும் என்று அவன் இதயம் ஜொள்ளியது.. அந்தச் சந்தோசத்துடன் அவன் நண்பனிடம் எகிறினான்..

"இவங்க அரட்டினதை நீ பார்த்தியா..?"

"பார்த்துக்கிட்டுத்தானடா இருக்கேன்.."

"இவங்களுக்கு பூப்போல மனசு..!"

வார்த்தைகளுக்கு வலிக்குமோ என்று மிக மென்மையாக தாமோதரன் ஜொள்ளிய விதத்தில் நீரஜாவே நிமிர்ந்து 'அப்படியா..?' என்ற ஓர் பார்வையை பார்த்து வைத்தாள்..

"பார்த்தாலும் பார்த்தேன்.. உன்னைப் போல அண்டப்புளுகன்.. ஆகாயப் புளுகனை நான் பார்த்ததே இல்லைடா..? இவளுக்காடா பூப்போல மனசு..? இரும்புத் திரைங்கிற வார்தையையே இவளைப் பார்த்துத்தான் உருவாக்கினாங்களாம்.."

"அப்படின்னு தமிழ்மொழி வந்து உன்கிட்டச் சொல்லுச்சா..?"

"தமிழ்மொழி சொல்கிறது இருக்கட்டும்.. இப்ப எனக்கு செகரட்டரியா உனக்கு வேண்டப்பட்ட பெண்ணைத்தான் அப்பாயிண்ட் பண்ணனும்னு நீ பிடிவாதம் பிடிக்கிறயே.. அதைப்பத்தி நீரஜாகிட்ட என்னத்தச் சொல்லப்போற..? நீயே கேளு நீரு.."

'மாட்டி விட்டுட்டானா..? இப்பத்தான் நெருப்பா இருந்தவ நீராய் மாறி கொஞ்சம் கொஞ்சம் பார்த்து வைச்சா.. அது இவனுக்குப் பொறுக்கலியே.. நீரும்மா..! நீ, நீரும்மா.. நெருப்பா ஆகாதே..'

தாமோதரனின் மனது மன்றாடியதை நீரஜாவின் மனது திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.. பெண்.. அதிலும் தாமோதரனுக்கு வேண்டப்பட்ட பெண் என்பதில் அவள் மலையேறி விட்டாள்..

"அப்படியா சேதி..?"

"எப்படியும் செய்தியில்லைங்க நீரஜா.. அவசரப்பட்டு எந்தவொரு முடிவுக்கும் வந்துராதீங்க.. நான் அப்பாவி.."

"இப்படிச் சொல்லியே எத்தனை பெண்களை ஏமாத்தினீங்க..?"

"ஏங்க இப்படி மனச்சாட்சி இல்லாம கேட்டு வைக்கறிங்க..? என்னைப் பார்த்தா பெண்களை ஏமாத்தற பித்தலாட்டக்காரன் மாதிரியா தெரியுது..?"

நீரஜாவின் நெருப்பைக் கக்கிய விழிகள் நான் பெண்ணில்லையா என்று கேட்டன.. என்னை நீ ஏமாற்றவில்லையா என்று குற்றம் சாட்டின..

"இதுக்கு மேலே தாங்க மாட்டேங்க.." தாமோதரன் சரணடைந்தான்..

"உண்மையைச் சொல்லிடறேங்க.."

அவன் என்னவோ சித்தார்த்தனை மயக்க வந்த மோகினியைப் பற்றிய உண்மையைத்தான் சொல்லப் போவதாக சொன்னான்.. அதையறியாத நீரஜா வேதனையுடன் விழிகளை இமைகளால் மூடிக் கொண்டாள்..

தாமோதரனின் ஒப்புதல் வாக்குமூலத்தைக் கேட்கப் போகும் துயரம் அவள் முகத்தில் அப்பிக்கிடந்ததில் தாமோதரனுக்கு தலையில் மடேர்.. மடேரென அடித்துக் கொள்ள வேண்டும்போல இருந்தது..

அத்தியாயம் - 23

காலங்கள் கடந்தும் உன்னடி தொடரும்

நிழலாக என்றுமே நானிருப்பேன்..

பெண்கள் எப்போதுமே கசப்பான உண்மை களைவிட இனிமை நிறைந்த பொய்களையே விரும்புவார்கள் என்று

தாமோதரனின் உல்லாச நண்பன் ஒருவன் போகிற போக்கில் கூறிய பொன்மொழி அவன் மனதில் எதிரொலித்தது.. சித்தார்த்தனைத் தவிர்த்து சில நண்பர்கள் அவனுக்கு உண்டு.. அதேபோல தாமோதரனைத் தவிர்த்து பல நண்பர்கள் சித்தார்த்தனுக்கும் உண்டு..

அப்படியாகப்பட்ட நண்பர்களின் ஒருவன் உரைத்தது உண்மையாக இருக்கக்கூடுமோ என்று தாமோதரனுக்குத் தோன்றி வைத்தது..

உண்மையைச் சொல்லு.. உண்மையைச் சொல்லு.. என்று அவனை பிராண்டி எடுத்த நீரஜா.. ஆகட்டும் உண்மையைச் சொல்கிறேன் என்று அவன் ரெடியானதும்.. கண்களை துயரத்துடன் இறுக்கி மூடிக் கொண்டதில் அவன் உண்மையாகவே தலையில் அடித்துக் கொண்டான்..

"கஷ்டம்..! இப்ப என்னத்துக்கு இப்படி போஸ் கொடுக்கறிங்க..?"

"வேற என்ன செய்யனும்னு நினைக்கறிங்க.. நீங்க சொல்லப் போகிற காதல்கதையைக் கேட்டு ஆஹான்னு மகிழ்ந்து போகனுமா..?"

"காதல் கதையா..? ஹலோ.. கற்பனைக் குதிரையை ஓவரா பறக்க விடாதீங்க.. கொஞ்சம் தட்டி வையுங்க.. எனக்கு எந்தக் காதல்கதையும் இல்லை.."

தாமோதரனின் எரிச்சலான தன்னிலை விளக்கத்தில் விழிதிறந்து அவனையே இமைக்காமல் நீரஜா பார்த்து வைத்ததில்..

'இது என்னத்துக்காக..?' என்ற திகில் தாமோதரனைப் பற்றிக் கொண்டது..

"ஓ.." அவள் திரும்பவும் 'ஓ' போட்டாள்..

'இந்த 'ஓ..' எந்த 'ஓ..'?' தாமோதரன் திரும்பவும் மண்டை காய்ந்தான்..

"உங்ககிட்ட எந்தக் காதல் கதையும் இருக்காதுதான்.." நீரஜா சொல்லிய விதத்தில் தாமோதரன் கதி கலங்கிப் போனவனாக..

"ஐயையோ.." என்று அலறினான்..

'பேசுவதையும் பேசிவிட்டுக் கூப்பாடா போடுகிற' என்று கொலைவெறியுடன் அவனை முறைத்த நீரஜாவிடம்..

"நான் அப்படி மீன் பண்ணலைங்க..?" என்று அழ மாட்டாத குறையாக விளக்கம் சொல்லப் போனான்..

"என்ன மீன் தாமு..? விரால் மீனா..? வஞ்சிரம் மீனா..?"

கன்னத்தில் கை வைத்து அவர்களின் வாக்கு வாதத்தை செவி மடுத்துக் கொண்டிருந்த சித்தார்த்தன் வெகு அக்கறையாக வினவி வைத்தான்..

"அதை உன் வீட்டு சமையல்காரங்ககிட்டப் போய் கேளுடா.."

"கேட்டுட்டாப் போச்சு... அதுக்கேண்டா நீ எண்ணையில போட்ட மீன் துண்டத்தப் போல இப்படிப் பொரியற..?"

"டேய்..! நண்பா..! சித்தார்த்தா..! கொஞ்சம் வாயை மூடிக்கிட்டு இருடா.."

"இல்லைன்னா..?"

"போதிமரத்துக்குப் போ.."

"புத்தனாகிற ஆசையெல்லாம் எனக்குக் கிடையாது.."

"அதெப்படி இருக்கும்.. நீதான் லேப்டாப்புல அமானுஷ்யத்தப் பத்தி ஆராய்ச்சி பண்ணுகிறவானச்சே.. அதையாவது நோண்டு.."

"நீதான் அப்ஜெக்ட் பண்ணினியே.."

"அது அப்ப.. இது இப்ப.."

"இப்ப எனக்கு மூடு மாறிருச்சு.. ஏன் நிறுத்தி விட்ட நீரு..? உன் சண்டையை கன்டினியு பண்ணு.."

"அண்ணா..! வேணாம்.. நான் கடுப்பில் இருக்கேன்.. உலகத்துல எத்தனை பேர் இருக்காங்க.."

"அதுக்கென்ன நீரு..?"

"உனக்கு உயிர் நண்பன்னு பிரண்டு பிடிக்க இவர்தான் கிடைச்சாரா..?"

"ம்ஹீம்.. விதி வலியது சிஸ்டர்.."

"உன்னாலேதான்.. உன் பெஸ்ட் பிரண்டுக்கிற தினாலதான் நான் இந்த மூஞ்சிகூடல்லாம் பேச வேண்டியிருக்கு.."

"ஐ கான்ட் பிலிவ் திஸ்.."

"எதை மீன் பண்ற..?"

"இவன் காத்து உனக்கும் அடிக்குதா..? மீனை விடு.. விசயத்துக்கு வா.. இவன் என் பிரண்டுங்கிறதுக்காகத்தான் உனக்கு இவன்மேல சாப்ட் கார்னர் வந்துச்சா..?"

"சாப்ட் கார்னரா..? இவர் மேலா..? நோ.. நோ.."

நீரஜா தாமோதரனை முறைத்த முறைப்பில் நிச்சயமாக மிருதுத்தன்மை இல்லை.. விட்டால் கல்லைத் தூக்கி அவன் தலையில் போட்டு விடும் கடினத் தன்மைதான் இருந்தது..

"அதானே.. உங்களுக்காவது.. என்மேலே சாப்ட் கார்னர் இருக்கிறதாவது.. அதெல்லாம் சுத்த ஹம்பக்ங்க.. ஹார்டு கார்னர் வேணும்னா இருக்கும்.."

அவளையே தீர்க்கமாக பார்த்தபடி.. தீர்மானமாக பேசிய தாமோதரனின் பார்வையைச் சந்தித்த நீரஜாவின் மனம் அவன் வார்த்தைகளில் புண்பட்டது.. அதை

அவளது கண்கள் உணர்த்தியதில் அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. யுகம்.. யுகமாய் அவளை அறிந்தவனைப் போன்ற உணர்வைக் கொண்டது அப்பார்வை..

அப்பார்வையில் பிணைந்த தனது பார்வையினை மீட்க முடியாமல் தவித்துப் போனாள் நீரஜா..

அப்பார்வைக்குப் பின்னால் மறைந்திருக்கும் மாயங்கள்தான் என்ன..?

மன்னன் மகள்..! மாளிகையில் வசிப்பவள்..! ஓட்டு வீட்டில் வசிக்கும் ஓர் சாமான்யனின் மீது சொந்தம் கொள்வாளா என்ன..?

வானத்து விண்மீனை அண்ணாந்து பார்க்கலாம்.. அதன் அழகினை வியக்கலாம்.. அந்த அளவுக்குத்தான் மண்மீனால் முடியும்.. அதன் அருகினில் நீந்த ஆசை கொண்டால் முடியுமா..?

தாமோதரன் அவ்வாசையைக் கொள்ளவில்லை.. வானத்து விண்மீனை தரைக்கு அழைக்க நினைக்க வில்லை.. வானத்தில் நீந்திவிட பேராசைப் படவில்லை..

அவனுக்கான எல்லைகளை என்றுமே அவன் கடந்ததில்லை.. அந்த எல்லைகளைச் சுற்றித் தன் பார்வையினால் நீரஜா வேலியிட்டபோது விருப்பத்துடன் அதில் சிக்கிக் கொண்டான்.. வேலியைத் தாண்ட விழைந்ததில்லை.. அது எதனால் என்ற ஆராய்ச்சிக்குள் போக நினைத்ததுமில்லை..

அது விடுபட விரும்பாத வியூகமாக இருந்தது.. அந்த வியூகத்தில் அவனை சிறைபிடித்த நீரஜாவின் மனதில் என்னதான் உள்ளது என்று ஆராயும் வேலைகளை அப்புறத்தில் தள்ளிவிட்டு.. நீரஜாவைப் பின்தொடரும் ஆட்டுக்குட்டியைப் போல ஆகிப் போனான் தாமோதரன்..

இது குறித்த சித்தார்த்தனின் கேலிகளுக்கும் கிண்டல்களுக்கும் அவன் கவலை கொண்டதில்லை..

"ஏண்டா இப்படி இருக்க..?"

"என்னவோ இருக்கேன்.."

"உனக்கு நான் பாஸா இல்லை என் தங்கை பாஸா..?"

"எதுக்குக் கேட்கிற..?"

"நான் ஒன்றைச் சொல்லி அதுக்கு எதிரா என் தங்கை ஒன்றைச் சொன்னா நீ அவ சொன்னதைத்தான் செய்து முடிக்கிற.. தாமு.. இது சித்தார்த்தன் குருப் ஆஃப் கம்பெனிஸ்.. நீரஜா குருப் ஆஃப் கம்பெனிஸ் இல்லை.."

"அதாண்டா எனக்கும் ஆச்சரியமா இருக்கு.."

"எது..?"

"உன் தங்கைக்கு இருக்கிற அறிவுக்கும், ஆர்கனைசிங் பவருக்கும் இந்நேரத்துக்கு அவங்க நீரஜா குருப் ஆஃப் கம்பெனிஸை ஆரம்பிச்சிருக்கனுமில்ல..? ஏன் ஆரம்பிக்கல..?"

"என்னை உனக்கு போஸ்ட் மேனா ஆக்கறியா..?"

"ஏண்டா..?"

"இந்தக் கேள்வியை அவகிட்டக் கேளு.. அவளுக்குத் தான் அறிவும் ஆர்கனைசிங் பவரும் இருக்கு.. என் மண்டையில களிமண்தான் இருக்கு.. வந்துட்டான் பேச.."

"உனக்கேண்டா இத்தனை பொறாமை..?"

"பேசாதே.. சொல்லிட்டேன்.. அவ கம்பெனி ஆரம்பிச்சா நீ என் கம்பெனியில இருந்து கழண்டுக்கிட்டுப் போயி அவ கம்பெனியில ஜி.எம்மா ஆகிருவ போல.."

இதைச் சொல்லும் சித்தார்த்தனை இமைக்காமல் பார்க்கும் தாமோதரன் ஒர்நாளும் அதை மறுத்துச் சொன்னதேயில்லை..

நண்பர்களைப் பிரிக்கும் பாவத்தைக் கட்டிக் கொள்ள வேண்டாம் என்று நீரஜா தனிக் கம்பெனியை ஆரம்பிக்கும் ஐடியாவை மேற்கொள்ளவே இல்லை.. அதற்கான காரணமாக அவள் நிருபமா குருப் ஆஃப் கம்பெனிஸை சுட்டிக் காட்டினாள்..

"அப்பாவோட கம்பெனியை கவனிக்கிறதுக்கு அவருக்கு ஒத்தாசையா நான் இருந்தாகனும்.. நீதான் தனிச்சு நிக்கனும்னு தனிக் கம்பெனியை ஆரம்பிச்சு அப்பாவை

தனியே விட்டேன்னா என்னாலயும் அதுபோல சுயநலமா யோசிக்க முடியாது.."

இதுதான் நீரஜா..! அவள் தனித்தன்மையுடன் இருந்தாள்.. அதே சமயத்தில் தன் தாய்தந்தையரின் பாரம்பர்யப் பெருமைகளையும், தொழில்களையும் கட்டிக் காப்பவளாகவும் இருந்தாள்.. நிருபமா குருப் ஆஃப் கம்பெனீஸில் விவேகானந்தனுக்கு அடுத்த இடத்தில் 'ஜாயின்ட் எம்.டி' என்ற பதவியுடன் நிர்வாகப் பொறுப்பேற்று வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருந்தாள்.

"அவங்க சாதிக்கப் பிறந்தவங்கடா சித்தார்த்..."

"நீ என்னை சோதிக்கப் பிறந்தவண்டா தாமு.."

"உங்க ஸ்டேட்டஸை மெயின்டெயின் பண்றதில கவனமா இருக்காங்க பாரு.. அங்க நிக்கிறாங்கடா அவங்க.."

"நீ அவளுக்கு காவடி தூக்கறதிலேயே கவனமா இரு.."

என்னதான் சித்தார்த்தன் இடித்துரைத்தாலும் தாமோதரன் நீரஜாவுக்கு பூப்போட்டு வணங்குவதை நிறுத்தவே மாட்டான்..

அதற்கான பிரதிபலனாக எதையுமே அவன் எதிர் பார்க்கவில்லை.. நீரஜாவின் ஒர் சிறு பார்வைக்கும் தன்னையும் அறியாமல் அடிபணிந்தான் தாமோதரன்..

அந்தப் பார்வையின் சுழல் வீச்சில் காலங்காலமாய் அவனைப் பிணைத்திருக்கும் இரும்புப் பிணைப்பு வெளிப்படுவதன் மாயம்தான் என்ன..?

அத்தியாயம் - 24

நிழலோடு நிழலாக...

நீ கரைந்து போனதெங்கே..?

என்னவோ அங்கே ஃபிலிம் பெஸ்டிவல் நடப்பதைப் போல படு ஆர்வத்துடன் கன்னத்தில் கையை வைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான் சித்தார்த்தன்.. வயலட்டின் முன்னாலும்.. மற்ற மாதர்குல மாணிக்கங்களின் முன்னாலும் புலியாக வலம் வருபவன் நீரஜாவின் முன்னால் எலியாக வாலை அசைக்கும் விந்தையை ரசித்து சிரிக்க வேறு செய்தான்..

'எத்தை'த் தின்றால் பித்தம் தெளியும் என்பதைப் போல எதைச் சொன்னால் நீரஜா மனம் இரங்குவாள் என்று முடியைப் போட்டுப் பிய்த்துக் கொண்டிருந்த தாமோதரன் தாடையைச் சொரிந்தபடி திரும்பினான்.. சித்தார்த்தன் சிரிப்பதை பார்த்து விட்டான்..

"என் பிழைப்பைப் பார்த்தா உனக்குச் சிரிப்பாய் இருக்கா..?" அவன் மேல் பாய்ந்தான்..

"பாரு.. இதுக்கும் எனக்கும் யாதொரு கனெக்சனும் இல்ல.. நான் போன் போட்டா நீரஜாவை வரச் சொன்னேன்..? இந்த டெலிபதி இருக்கில்ல.. டெலிபதி.."

"இப்ப எதுக்காகடா அக்கவுண்ட்ஸில இருக்கிற சபாபதியை வம்புக்கு இழுக்கிற..?"

"சபாபதியா..? சரியாப்போச்சு போ.. டெலிபதிடா மச்சான்.."

"டெலிபதியா..?"

தாமோதரன் விளக்கெண்ணையைக் குடித்தவனைப் போல முகத்தை வைத்துக் கொள்ள.. சித்தார்த்தன் அதற்கும் நீரஜாவிடம் போட்டுக் கொடுத்துப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டான்...

"பாரு நீரு.."

'என்ன ஒரு எதுகை மோனை...!' என்று தாமோதரனுக்கு இடம், பொருள், ஏவல், காவல், சேவல் எல்லாம் புரியாமல் தோன்றி வைத்துத் தொலைத்தது..

நல்லவேளையாக அதை வாய் விட்டுச் சொல்லாமல் மனதுக்குள் புதைத்து வைத்துக் கொண்டான்..

'அவ்வளவுதான்.. நீரஜா.. கீரு.. கீருன்னு.. கீறி எறிஞ்சுருவா.. வாயை வைத்துக்கிட்டு வனவாசம் போயித் தொலையாதேடா தாமு.. அடக்கி வாசி.. உனக்கு வினை பிரண்டுங்கிற ரூபத்தில பக்கத்திலேயே மையம் கொண்டிருக்கு.. பார்த்துப் பேசித் தொலைடா..!'

அவனது மாண்புமிகு மனச்சாட்சி அவனை எச்சரித்து வைத்தது.. தாமோதரன் வாயை பசை போட்டதைப் போல இறுக்கி மூடிக் கொண்டான்..

"என்னத்தை பார்க்கச் சொல்ற...?" நீரஜா சித்தார்த்தனிடம் எரிந்து விழுந்தாள்..

எவளோ ஒரு பெண்ணிற்கு வேலை கொடுக்கும்படி தாமோதரன் சித்தார்த்தனிடம் மல்லுக் கட்டிக் கொண்டிருந்ததை மன்னிக்க அவளுக்கு மனம் வரவில்லை.. கோபத்தில் அவள் மனம் கொதித்துக் கொண்டிருந்தது.. அத்தனை கோபத்தையும் விழிகளில் தேக்கி தாமோதரனை முறைத்துப் பார்த்தாள்.. அவன்தான் வரும் முன் காப்பவனாக அவள் பார்வையைச் சந்திக்காமல் விட்டத்தை அண்ணாந்து பார்த்து ஆராய்ந்து கொண்டிருந்தானே.. அதனால்.. அவள் பார்வையினால் பஸ்பமாகாமல் தப்பித்தான்..

"உன் கோபம் நியாயமானதுதான்.."

சித்தார்த்தன் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த நீராஜாவின் பொறாமையெனும் பெருந்தீயில் பெட்ரோல் கிணறைக் கொட்டிக் கவிழ்த்தான்..

'அடப்பாவி சித்தார்த்தா..! என்ன நியாயத்தைடா போதி மரத்துக்கு அடியில உக்காந்து கண்டு பிடிச்சிட்ட..?'

தாமோதரன் இப்பேற்பட்ட நண்பனைப் பெற என்ன தவம் செய்தானோ என்று பூரித்துப் போய் விட்டான்..

"இப்போக் கூடப் பாரேன்.. இவன் எவனோ ஒரு பொண்ணுகிட்ட மெரசலாயிட்டான்னு உன் மனசுக்குள்ள மணியடிச்சுருக்கு.." சித்தார்த்தன் தாமோதரனைப் பார்த்து நீரஜாவுக்குத் தெரியாமல் இமை சிமிட்டி வைத்தான்..

'எதுக்குத்தான் மெரசலாகிறதுன்னு ஒரு விவஸ்தையே இல்லையாடா மச்சான்..?' தாமோதரன் புழுங்கினான்..

"அந்த டெலிபதியோட பவர்தான் உன்ன இங்கே இழுத்துக்கிட்டு வந்து நிறுத்தியிருக்குன்னு சொன்னா.. இவன் டெலிபதியை சபாபதியான்னு கேட்டு வைக்கிறான்.. இதுதான் இவன் காதல்.."

'வேண்டாம்டா டேய்.. எதுக்காகடா டெலிபதியைக் கொண்டு வந்து இங்க கனெக்ட் பண்ற.. விட்டுருடா.. தாங்க மாட்டேன்..'

தாமோதரன் நீரஜாவை பரிதாபமாக பார்த்தான்.. அவளோ டெலிபதியைத் தெரியாத உன்னோடு எனக்கென்ன பேச்சு..? உன் பேச்சு காய் என்பதைப் போல முகத்தை திருப்பிக் கொண்டு தாமோதரனை சோதித்து வைத்தாள்..

அத்தியாயம்- 25

போகும் பாதை எங்கே என்பதை..

போகும் வழியிலாவது சொல்லிவிடு..

சொல்லி விட்டுப் போய் விட்டாய்..

சொன்ன சொல்லை எங்கே விட்டாய்..?

நீரஜாவின் கோபத்தை தாமோதரனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவனுடைய விளக்கத்தை கேட்க விரும்பாத நீரஜா எழுந்து கொள்ள முயன்றாள்.. தாமோதரன் சட்டென சரிந்து அவள் கை பற்றித் தடுத்தான்.. நீரஜா உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வுக்கு ஆளானாள்..

இயல்பாக தாமோதரன் நீரஜாவைத் தொட்டுப் பேசியதில்லை.. ஓர் பார்வையிலேயே மற்றவர்களை எட்ட

நிறுத்தி விடும் ஆற்றலும் ஸ்டேட்டஸீம் கொண்ட நீரஜா.. அப்படிப்பட்ட பார்வையை தாமோதரனை நோக்கி வீசவில்லை என்றாலும் தாமோதரன் அவளிடம் எப்போதுமே தள்ளி நின்றுதான் பேசுவான்..

அப்போது அந்த வழக்கத்தை மறந்து எப்போதும் இல்லாத விதமாக அவள் கரத்தை அவன் பற்றி விட்டதில் நீரஜாவின் முகம் சிவந்து விட்டது..

அது கோபச் சிகப்பா.. நாணச் சிகப்பா என்று ஆராய்ந்து கண்டறிய தாமோதரனிடம் நேரமில்லை.. இருந்தாலும்.. அவள் கையைப் பிடித்திருந்த தனது கையை விலக்கிக் கொண்டு..

"ஸாரி.." என்றான்..

மூக்கின் நுனி சிவந்திருந்த நீரஜா பரவாயில்லை என்று பதில் சொல்லவில்லை.. பேசாமல் வேறு திக்கில் பார்த்தாள்..

"கண்ணால் காண்பதும் பொய்.. காதால் கேட்பதும் பொய்ன்னு பெரியவங்க சொல்லுவாங்க.. மறந்துட்டிங்களா..?" தாமோதரன் அழ மாட்டாத குறையாய் ஆரம்பிக்க..

"எதுக்குடா மொட்டைத் தலைக்கும், முழங் காலுக்கும் முடிச்சைப் போடற..?" என்று ஊடே புகுந்தான் சித்தார்த்தன்..

"வேண்டாம் சித்தார்த்.. இதில நீ இன்டர்பியர் ஆகாதே.." என்hறன் சித்தார்த்தன்..

"நல்ல கதையாய் இருக்கே.. நீரஜா என் தங்கைடா..?"

"இல்லைன்னா நான் சொன்னேன்..? இவங்க உன் தங்கைதான்.. நீ பாசப்பயிறை வளத்து பாட்டுப் பாடிக்க.. யாரு வேணாம்ன்னு சொன்னது..?"

"நீ இதை ஏண்டா வேண்டாம்ன்னு சொல்லப் போற..? நீ வேலை கொடுக்கச் சொன்ன அந்தப் பொண்ணுக்கு வேலை கொடுக்கிறதை வேணும்ன்னா வேண்டாம்ன்னு

சொல்லிப்பாரு.. சொல்ல மாட்டியே.. அதை மட்டும் சொல்லவே மாட்டியே.. இந்த வேண்டாம்கிற வெர்டுஸெல்லாம் இங்கதான்.. அந்தப் பொண்ணு விசயத்தில இல்ல.. இத ஏன்னு கேளு நீரு.."

"கேளு.. கேளுன்னு சொல்லாட்டி உன் தங்கைக்கு கேள்வி கேட்கவே தெரியாதா..? நீயும் ஏண்டா ஏத்தி விடற..?"

"நீ ஜொள்ளினதைச் சொன்னா அது போட்டுக் கொடுக்கிறதும்.. ஏத்தி விடறதுமா ஆகிருமா..? நீரு.. இத என்னன்னு கேளு.."

"அவன்தான் கேளு.. கேளுன்னு சொல்றானில்ல.. நான் சொல்லவர்றத நீங்க காது கொடுத்துக் கேட்டாத்தான் என்னங்க..?"

தாமோதரனின் அங்கலாய்ப்பில் அவனையே தீர்க்கமாக பார்த்து வைத்தாள் நீரஜா.. அவள் பார்வையை நேருக்குநேர் சந்தித்த தாமோதரனின் பார்வையிலிருந்த நேர்மை அவள் மனதை அசைத்தது.. ஆனாலும்.. வேறு ஒரு பெண்ணிற்காக அவன் சிபாரிசு செய்ததை அவள் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை..

"சொல்லுங்க.. கேட்கிறேன்.. என்ன சொல்லப் போகிறிங்க..? அந்தப் பெண்ணுக்கும் உங்களுக்கும் தெய்வீக காதல்.. அதனால அந்தப் பெண்ணுக்கு நீங்க வேலை பார்க்கிற ஆபிசிலேயே வேலை போட்டுக் கொடுன்னு உங்க பிரண்டு கிட்ட நீங்க ஜொள்ளினதைச் சொல்லப் போறிங்களா..?"

நீரஜாவின் கேள்வியில் அவளையே இமைக்காமல் பார்த்து வைத்தான் தாமோதரன்.. அவள் பார்வை தழைந்தது..

"நீங்க எனக்கு நியாயம் செய்யலைங்க.." என்றான் தாமோதரன்..

"நீங்க செய்கிறது மட்டும் நியாயமா..?" என்றாள் நீரஜா

"நாணயத்துக்கு இரண்டு பக்கம் உண்டுங்க.. என்பக்கம் என்னன்னு கேட்காம நீங்களா எதையாவது

சொல்லக்கூடாது.."

"நீங்க ஜெள்ளினதை விடவா... நான் சொல்லிட்டேன்.."

"கடவுளே..!"

"அவரை எதுக்கு டிஸ்டர்ப் பண்றீங்க.. இதுக்கெல்லாம் பஞ்சாயத்துப் பண்ண அவர் வர மாட்டார்.."

நீரஜாவின் பிடிவாதமான கோபத்தை உடைக்க வழி தேடி சோர்ந்தான் தாமோதரன்..

'என்னடா வாழ்க்கை இது..' வெறுத்துப் போய் விட்டான் தாமோதரன்..

என்னதான் காலில் விழாத குறையாக கெஞ்சிக் கூத்தாடினாலும்.. மலையிறங்க மறுக்கும் மகராசியைக் காதலித்து விட்ட கொடுமையை எண்ணி நொந்து நூலானான்..

"ஓகேங்க.. நான் உங்க வழிக்கே வர்றேன்.." என்றான்.

"என்ன அலுப்பா சொல்றான் பாரு.." எடுத்துக் கொடுத்தான் சித்தார்த்தன்..

"ஏண்டா டேய்..! நீ அடங்கவே மாட்டியா..?" கொலைவெறி கொண்டான் தாமோதரன்..

"அண்ணாவை எதுக்கு முறைக்கறிங்க..?" நீரஜா முறைத்தாள்..

"நீங்க ஒருத்தர் முறைச்சாப் போதாதுங்களா..? ஊடே இவனும் சேர்ந்து ஏன் முறைக்கிறான்..? அதான் நான் மட்டும் ஏன் பாக்கி வைக்கனும்ன்னு நானும் சேர்ந்து முறைச்சு வைக்கிறேன்.." அழ மாட்டாத குறையாக விளக்கம் சொன்னான் தாமோதரன்..

"ஆனாலும் உனக்கு அசாத்திய மனோ தைரியமடா தாமு..!"

"எனக்கு..? மனோ தைரியம்..? அதை நீ சொல்ற..?"

"நான் சொல்லாம வேற யாரு சொல்லுவாங்க..?"

"அதைச்சொல்லு.."

"நீரஜாவோட காது கேட்க இந்தப் பெண்ணுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் கொடுத்தால்தான் ஆச்சுன்னு அடம் பிடிச்சுட்டு.. அது எப்படிடா எதுவுமே சொல்லாத குட் பாய் போல இப்படி சீன் காட்ற..?"

"நான் 'பாய்' இல்ல..?"

"அது நிஜம்தான்.. முஸ்லீம்ஸ்ல தாமோதரன்ங்கிற பெயர் கிடையாதுதான்.. வெல்செட்.."

"நாங்க நல்லாத்தான் பேசுவோம்... 'பாய்'ன்னா முஸ்லீம் மட்டும் இல்ல.. பையன்னும் சொல்லுவாங்க.."

"ஓ..! யு மீன்ஸ் 'பையா..'?"

"புரிஞ்சாச்சரி.. அதுசரி உனக்கா புரியாது.. நீதான் தெளிவா சிக்கல்ல மாட்டி விடறதுல கில்லாடி ஆச்சே.. நான் பக்கா ஜெண்டில் அன்ட் குட் மேன்.. இதை உன் தங்கையிடம் சொல்லு.."

"ஏன்..? அதை நீ சொல்லமாட்டியா..? நீ செஞ்ச தப்பைத் தட்டிக் கேட்டுட்டாங்கிற ஒரேயொரு ரீசனுக்காக நீரஜாகூட பேச்சு வார்த்தையையே முறிச்சுக்கிற அளவுக்கு போயிட்டியா..? அந்த அளவுக்கா அந்தப் பொண்ணு உன்னை அட்ராக்ட் பண்ணியிருக்கா..?"

"சித்தார்த்..! உனக்கே இது நியாயமாய் இருக்காடா..?"

தாமோதரன் கவலையுடன் நீரஜாவைப் பார்த்தான்.. அவளோ சித்தார்த்தின் டேபிளின் மேலிருந்த ஃபைலின் திறந்த பக்கத்தில் ஒட்டப் பட்டிருந்த அந்தப் பெண்ணின் புகைப்படத்தைப் பார்த்தாள்.. அவளது விழிகளில் தெரிந்த தவிப்பு.. அந்தப் பெண்ணின் புகைப்படம் தாமோதரனை ஈர்க்கும் அளவிற்கு வசீகரம் நிறைந்ததா என்று அவள் அறியத் துடிப்பதை இனம் காட்டியதில் தாமோதரன் துடித்துப் போனான்..

"என்னை யாரும் அட்ராக்ட் பண்ணல.." என்றான் வேகத்துடன்..

"நோட் திஸ் பாயிண்ட் நீரு.." என்றான் சித்தார்த்தன்..

"அதைத்தானே அண்ணா செய்துக்கிட்டு இருக்கேன்..?" துக்கத்துடன் சொன்னாள் நீரஜா..

"இவ எதைச் சொல்றா..?" தாமோதரனுக்கு விளங்கவில்லை..

"அதைத்தாண்டா சொல்றா.." சித்தார்த்தன் மிகத் தெளிவாக (?) விளக்கம் கொடுத்தான்..

"அடேய் நண்பா..! ஏண்டா இந்தப்பாடுபடுத்தற..?"

"நானா படுத்தறேன்..? நீதாண்டா நீருவோட மனசை ஹர்ட் பண்ற.."

"அவங்க மனசை ஹர்ட்பண்ண வேண்டி வந்தா.. நான் என் உயிரைக்கூட விட்டிருவேன்.. பட்.. அவங்க மனசை ஹர்ட் பண்ண மாட்டேன்.."

இந்த வாக்கியத்தில் நீரஜாவின் மனதை டச் பண்ணி விட்டான் தாமோதரன் அவள் முகத்தில் பரவிய வெளிச்சத்தில் உஷாரானான் சித்தார்த்தன்..

"நீரு..! இவன் உன்னோட சாப்ட் நேச்சரை புரிஞ்சுக்கிட்டு எதைச் சொன்னா உன் மனசு இளகும்ங்கிற வீக் பாயிண்ட் பிடிச்சுக்கிட்டு உன்னை அட்டாக் பண்றான்.. மசிஞ்சுராதே சிஸ்டர்.." என்று தங்கையை உஷார் படுத்தினான்..

"நீ ஒரு முடிவோடதான் இருக்கேடா.." தாமோதரன் தலைமேல் கை வைத்தான்..

"யாரும் இங்கே டிராமா போட வேண்டாம்.. சீன் கிரியேட் பண்ண வேணாம்.. அதான் தெளிவா தெரிஞ்சு போச்சே.." நீரஜா நொடித்தாள்..

"எதுங்க தெளிவா தெரிஞ்சு போச்சு..?"

"வேற எது..? உன் துரோகம்தான்.."

"நான் உன்னைக் கேட்கலை சித்தார்த்..?"

"நானும் உனக்காக பதில் சொல்லலைடா தாமு.. என் தங்கைக்காக பதில் சொல்றேன்.. அவ என் தங்கை.."

"இதையே எத்தனை தரம்டா சொல்லுவா..?"

"கூடப்பிறந்தவன்டா.. காலம் முழுக்கச் சொல்வேன்.."

"சொல்லித்தொலை.. அதை உன் வீட்டில சொல்லிக்க.."

"வெளியில சொல்லக் கூடாதுன்னு சட்டம் ஏதும் இருக்கா..?"

சித்தார்த்தன் எகனைக்கு மொகனையாக கேட்டு வைத்தான்.. தாமோதரன் பற்களை நறநறத்தான்.. நீரஜாவின் முகம் அக்கினிப் பிழம்பாக மின்னியது..

இந்த ஆட்டத்திற்கு முடிவே இல்லையா என்று தாமோதரனுக்கு வெறுத்துப் போனது..

அத்தியாயம் - 26

எங்கோ நீயும்.. எங்கோ நானும்..

பிறந்து ஏன் சந்தித்தோம்..?

சுட்டும் விழிச் சுடர் சொன்ன

சொந்தத்தினை நீ அறிவாயா..?

"என்ன ஒரு தைரியமிருந்தா இவனை யாராலேயும் அட்ராக்ட் பண்ண முடியாதுன்னு சொல்லுவான்..?"

சித்தார்த்தனின் கேள்விக்கு இறுகிய முகத்துடன் பதில் சொல்லாமல் அமர்ந்திருந்த நீரஜாவின் கோபத்திற்கான காரணத்தை சட்டென்று புரிந்து கொண்டான் தாமோதரன்.. அவன் மனதில் இதம் பரவியது.. நீரஜாவின் விழிகளுக்குள் ஆழமாக பார்த்தான்.. அவன் பார்வையில் அவளது இமைகள் படபடத்தில் அவனுக்குள் ரகசிய சந்தோசம் பரவியது.. சித்தார்த்தனின் டேபிள் மீதிருந்த ஃபைலைத் தூக்கிப் போட்டான்..

"இந்த ஃபைலில் இருக்கிற எந்த முகரையும் என்னை அட்ராக்ட் பண்ணலைடா சித்தார்த்.. இதைத்தான்

நான் சொன்னேன்.. உன் இஷ்டத்துக்கு வார்த்தையை விடாதே.." நீரஜாவின் முகத்தைப் பார்த்தபடி சித்தார்த் தனிடம் சொன்னான்..

"நான் இங்கே இருக்கேன்டா.." குரல் கொடுத்தான் சித்தார்த்தன்..

"இருந்துட்டுப் போ.."

"இல்ல.. நான்தான்னு நினைத்து நீ நீரஜாகிட்டப் பேசிக்கிட்டு இருக்கியோன்னு ஒரு டவுட்டு.."

"உனக்கெல்லாம் டவுட்டே வராதே... எதையும் கன்பர்மா போட்டுத் தாக்கறதில நீ கில்லாடியாச்சே.."

நீரஜாவைப் பார்த்துக் கொண்டான் தாமோதரன்.. அவள் முகத்தில் மென்மை திரும்பியிருந்தது.. தாமோதரனும் அவளுக்கு எதிராக திரும்பி அமர்ந்து அவள் விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்..

"தாமு.. ஐ ஆம் ஹியர்.." சித்தார்த்தன் குறுக்கிட்டான்

"உஸ்ஸ்.." வாயில் ஒற்றை விரலை வைத்து அவனை அடக்கினான் தாமோதரன்..

"உனக்கு நான் எம்.டியா..? இல்ல.. எனக்கு நீ எம்.டியா..?" போர்க்கொடி உயர்த்தினான் சித்தார்த்தன்..

"இதோ பார்.. இங்கே டெஸிக்னேசனைப் பத்தின பேச்சு நடக்கலை.. ஸோ.. கொஞ்ச நேரம் வாயை மூடிக்கிட்டு இரு.."

"அது எப்படி..? என் தங்கையின் மனம் ஹர்ட் ஆனா என்னால அதை வேடிக்கை பார்த்துக்கிட்டு இருக்க முடியாது.."

"யாரும்.. யாரையும் ஹர்ட் பண்ணலை..."

"அந்த யாரும்.. யாரும்.. யாரு..?"

"யாரோ.. யாரையோ ஹர்ட் பண்றதைப் பத்தி இங்கே பேசலை.. நான் உன் தங்கையை ஹர்ட் பண்ணலை.. அதைப்பத்தி மட்டும்தான் பேசனும்.. பாருங்க நீரஜா.."

"யாரைடா பார்க்கச் சொல்ற..?"

"நிச்சயமா உன்னைப் பார்க்கச் சொல்லை.. போதுமா..?"

"போதாது.. நீரஜா கோபத்தில் இருக்கிறா.."

"அந்த கோபத்தை குறைய விடாம பார்த்துக்க நீ இருக்கிற.."

"என் தங்கை கோபத்தில ஒரு நியாயம் இருக்கும்டா.."

"அதனாலதான் அவங்க கோபத்துக்கு நான் பயப்படறேன்.."

தாமோதரன் விடாமல் சிக்சர் அடித்தான்.. சித்தார்த்தன் பல்லைக் கடித்தான்.. நீரஜாவின் முகம் இளக்கமாகிக் கொண்டே இருந்ததில்..

'எப்படித்தான் பால் போட்டாலும் வளைச்சு ஆடிச்சுடறானே..' என்று யோசித்தான்..

"இந்தப் பெண்ணுக்கு ஏன் அப்பாயிண்ட் ஆர்டர் கொடுக்கனும்னு நான் சொன்னேன்னு உங்களுக்குத் தெரியுமாங்க..?" தாமோதரன் ஆரம்பித்தபோது..

"அது எங்களுக்கு எப்படிடா தெரியும்..? உனக்கும் அந்தப் பெண்ணுக்கும் ஆயிரம் இருக்கும்.." என்று சித்தார்த்தனும் ஆரம்பித்து வைத்தான்..

"நான் ஆர்கியுமெண்டை ஒரு முடிவுக்கு கொண்டு வரனும்னு பாடாய் படறேன்.. உங்க அண்ணன் அதை முடிக்க விடுவேனான்னு முதல்ல இருந்து ஆரம்பிச்சு வைக்கிறான்.. பிராப்ளம் என்னங்கிறதை நீங்க புரிஞ்சுக் கிறது அவசியம்ங்க.."

நீரஜாவின் முகத்தை நேருக்கு நேராக பார்த்துச் சொன்ன தாமோதரனின் குரலில் இருந்த உண்மையில் நீரஜாவின் புருவங்கள் முடிச்சிட்டன.. அவள் யோசனையுடன் தாமோதரனைப் பார்த்தாள்..

'ஆஹா..! இவயோசிக்க ஆரம்பிச்சுட்டாளே.. இவ யோசிக்கவே கூடாதே.. அது டேன்ஜராச்சே..' சித்தார்த்தன் இமைகளைச் சுருக்கித் தங்கையை பார்த்தான்..

"இப்போதைக்கு நீங்க அந்தப் பெண்ணுக்கு அப்பாயின்மெண்ட் ஆர்டர் கொடுக்கனும்னு லைக் பண்றீங்க.."

"நீ வேற நீரு.. இவன் அந்தப் பெண்ணையே லைக்பண்றான்.. மேரேஜ் எப்படா தாமு..! இப்பவே சொல்லிட்டேன்.. உன் மேரேஜ் செலவு பூராவும் என்னோடதுதான்.. என்ன நீரு நான் சொல்றது..? எத்தனை வருச பிரண்ட்ஷிப்..!. இவனுக்கு நான் இதைக்கூடச் செய்யலைன்னா எப்படி நீரு..?"

"ஐயையோ..! அந்தப் பெண் யாரோ.. எவரோ.. எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் யாதொரு கனெக்சனும் இல்லைங்க.."

தாமோதரன் அலறியடித்துக் கொண்டு விளக்கம் சொல்வதை ஒன்றும் அறியாத சின்னக் கண்ணன் போல ரசித்துக் கொண்டிருந்தான் சித்தார்த்தன்..நம்பியாரைப் போல கைகளை பிசைந்தபடி தாமோதரனைப் பார்த்து வில்லன் சிரிப்பொன்றையும் உதிர்த்து வைத்தான்..

"எல்லாம் இவனாலே வந்ததுங்க.." தாமோதரன் சித்தார்த்தனைக் காட்டிக் கொடுத்து விட முடிவு செய்து விட்டான்..

"நிங்க செய்கிற அழிச்சாட்டியத்துக்கு என் அண்ணனை எதுக்காக கை காட்டறிங்க..? அவரென்ன உங்களுக்கு இந்தப் பெண்ணை இன்ட்ரொடியூஸ் செய்து வைத்தாரா..?"

"ஒருவகையில் அப்படித்தாங்க.."

"என்னது..?!"

"யெஸ்.. மிஸ் நீரஜா..! உங்க அண்ணனோட செக்கரட்டரி வேலைக்கு அப்ளை பண்ணின பெண் என்கிற விதத்திலதான் எனக்கு அவங்களைத் தெரியும்.. இந்தப்

போட்டோவில பார்த்ததுதான்.. நேரில இந்த இண்டர்வியூவிலதாங்க பார்த்தேன்.."

"அட..! பர்ஸ்ட் சைட்லேயே லவ்வா..? கேட்டுக்கிட்டியா நீரு..! இது காதல்..!"

"அடிவாங்கப் போறடா சித்தார்த்.."

"எதுக்கு..?"

"ஊடே இன்டர்பியர் ஆகிறதுக்கு.. நீரஜா.. நீங்க இவன் பேசறதை கவனிக்காதீங்க.. இவன் உங்ககிட்ட உண்மை என்னன்னு சொல்லவிட மாட்டான்.. அதுக்குத்தான் டிராமா பண்ணிக்கிட்டு இருக்கான்.."

"யார்..? நான்..? டிராமா பண்றேன்..?"

"நீ.. நீ.. நீ.. நீதான் டிராம பண்ற.. போதுமா..?"

"அண்ணா ப்ளீஸ்.. அவர் பேச வந்ததை பேசவிடு.."

"யு டூ நீரு..?"

"யெஸ்.. ஐ டூ.. கொஞ்ச நேரம் வேற வேலை இருந்தாப் பாரேன்.. நான் இவர் என்னதான் சொல்றாருன்னு கேட்டுப் பார்க்கிறேன்.."

"நீ புத்திசாலி நீரு.."

"இப்ப எதுக்காக ஐஸ் வைக்கிற..?"

"இவன் ஜெகஜால கில்லாடி.."

"உன்னை விடவா..?"

"பேச்சிலேயே மயக்கிருவான்.."

"நான் மயங்க மாட்டேன்.."

"உண்மை போல பொய் பேசுவான்.."

"பேசித்தான் பார்க்கட்டுமே.. அதைக் கண்டு பிடிக்கலைன்னா நான் நீரஜா இல்ல.. என்னிடமே பிளே பண்ணுவாரா..?"

"டைம்தான் வேஸ்டாகும்.."

"வேஸ்டாகிறது என்னோட டைம்.. ஸோ, யு டோன்ட் வொர்ரி.."

நீரஜா பிடிவாதமாக இருந்ததில் சித்தார்த்தன் அடுத்து என்ன செய்வது என்று யோசித்தான்.. அவனுக்குத் தெரியும்.. என்னதான் கண் முன்பு ஆதாரங்கள் குவிந்து கிடந்தாலும் நீரஜா தாமோதரனின் மீது அவ்வளவு எளிதாக சந்தேகப்பட்டு விட மாட்டாள்.. அவன் மீதான அவளது மதிப்பீடு அப்பேற்பட்டது..

"தாமு பொய் சொல்லிட்டான் நீரு.." என்று கோள் சொன்னால்..

"எதுக்காக பொய் சொன்னார்..? யாரைக் காப்பாற்ற பொய் சொன்னார்..?" என்று கேட்டு வைப்பாள்..

அவ்வளவு நம்பிக்கை அவன்மீது..

யாரோ ஒரு பெண்ணிற்கு வேலை கொடுக்கும்படி அவன் சிபாரிசு செய்தாலும் அதில் அவன் தரப்பு நியாயம் என்னவாக இருக்கக்கூடும் என்று தான் அவள் யோசிப்பாள்.. அதுவரை அவள் முறைத்துக் கொண்டு இருந்ததே பெரிய விசயம்.. அந்த முறைப்பும் பெண்மைக்கே இயல்பான உரிமை உணர்வில் வந்தது..

"பாரு நீரு.."

"உன்னைப் பார்த்த வரைக்கும் போதும்.. நீ வொர்க்கைக் கவனி.. நீங்க சொல்லுங்க மிஸ்டர் தாமோதரன்.."

அவளின் மிஸ்டர் என்ற அழைப்பில் தாமோதரன் இமைக்காமல் அவளைப் பார்த்து வைத்தான்.. நீரஜாவின் இதழ்கள் வளைந்து சுழித்தன..

'அம்மணி பழிவாங்கறாங்களாக்கும்.. இவங்களை நாங்க மிஸ் நீரஜான்னு சொல்லிட்டோமாம்.. அதனால மிஸ்டர் தாமோதரன்னு இந்தப் போடு போடறாங்க..'

தாமோதரன் உதட்டை வளைத்தபடி அவளை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்தான் நீரஜாவின் கன்னத்தில் ரோஜாக்கள் பூத்தன.. அவன் பூந்தோட்டக் காவல்காரனாகி விட்ட போதை கொண்டான்..

"ஆக்சுவலா எனக்கு இந்தப் பெண்ணுக்கு வேலை வாங்கிக் கொடுக்கனும்னு இன்டென்சன் இல்லைங்க.. என் எய்மே வேற.."

"என்ன எய்மாம்..?"

"வேற ஒரு பெண்ணுக்கு இந்த வேலையைக் கொடுக்கனுமுன்னு உங்க அண்ணன் டிசைட் பண்ணினான்.. அதைத் தடுக்க எனக்கு வேற வழி தெரியலைங்க.. அந்தப் பெண்ணுக்கு வேலை கொடுக்கிறதை தடுத்து நிறுத்தனும்னா அந்த வேலையை வேறொரு பெண்ணுக்கு கொடுக்கனும்.. அதனால இந்தப் பொண்ணு வேண்டப்பட்ட பொண்ணுன்னு உங்க அண்ணன்கிட்ட உடான்ஸ் விட்டேன்ங்க.. இதுதாங்க உண்மை.."

தாமோதரன் சொல்லச் சொல்ல நீரஜாவின் முகம் மாறியது.. அவள் தாமோதரனை விடுவித்து விட்டு சித்தார்த்தனை முறைத்தாள்..

அத்தியாயம்- 27

தொடராமல் தொடரும்..

நிழல் போன்ற நம் உறவு...

எங்கேயோ உனைப் பார்த்தேன் - அது

எங்கேயெனும் தேடுதலில்

என் நாள்களைத்தொலைத்தேன்..

"இதை ஏன் நீ முதலிலேயே சொல்லலை அண்ணா.." கடுமையாக கேட்டாள் நீரஜா..

இருந்திருந்து எப்போதாவது ஒர் முறைதான் அவளால் தாமோதரனைப் பார்க்க முடிகிறது.. அப்பேற்பட்ட அரிய சூழல்களையும் சித்தார்த்தன் இப்படி வெடி வைத்து நாசமாக்க வேண்டுமா என்ற கடுங்கோபத்துடன் அவள் பல்லைக் கடித்தாள்.

"ஹேய்..! வாட்'ஸ் ராங் வித் யு மை டியர் சிஸ்டர்..? அவன் எதைச் சொன்னாலும் நீ நம்பிருவியா..? என்னோட செகரட்டரி போஸ்டுக்கு யாரை செலக்ட் பண்ணனும்கிறது என்னோட டிசிசன்.. அதில இவன் எதுக்கு இன்டர்பியர் ஆகிறான்..? அதைக் கேட்பியா அதை விட்டுட்டு என்னை கிராஸ் கொஸ்டின் பண்ண வர்றயே.."

"நீ எதுக்காக தாமு அப்ஜெக்ட் பண்ற கேண்டி டேட்டை செலக்ட் பண்ணனும்..?" கண்கள் இடுங்க கேட்டு வைத்தாள் நீரஜா..

"குட் கொஸ்டின்.." சித்தார்த்தனுக்கு கோபம் வந்து விட்டது..

"இந்த சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸீன் எம்.டிக்கு அவனோட செகரட்டரியா வருகிற கேண்டிடேட்டை செலக்ட் பண்ணக்கூட ரைட்ஸ் இல்லையா..? நீரு.. திஸ் இஸ் மை ஆபிஸ்..! மைண்ட் இட்.. நிருபமா குருப் ஆஃப் கம்பெனியில நான் மூக்கை நுழைச்சா அப்ப நீ ஏன்னு கேளு.."

"ஓகே..!"

கோபத்துடன் எழுந்து கொள்ள முயன்றாள் நீரஜா.. மீண்டும் அவள் கைபிடித்து தடுத்தான் தாமோதரன்..

"அட என்னங்க நீங்க..! இப்படி ரோசப்பட்டு நீங்க கிளம்பிப் போயிரணும்.. இவனை எந்த விதமான கொஸ்டினும் கேட்கக் கூடாதுங்கிறதுக்காகத்தானே அவன் உங்க ரோசத்தைக் கிளப்பி விடறதைப் போல பேசி வைக்கிறான்..? அது புரியாம நீங்க வெளிநடப்புப் பண்ணிட்டா உண்மை எப்படிங்க வெளியில வரும்..?"

"அப்படி என்ன உண்மையை கண்டுட்ட தாமு.. அடி வாங்கத்தான் போற.. அவதான் கிளம்பறால்ள..? ஏன் தடுத்து நிப்பாட்டற..? நீரு.. யு கேன் கோ.."

"போகாதீங்க.. இருங்க.. ஹலோ பிரண்ட்..! இத்தனை நேரமும் இவங்க என்னைக் காய்ச்சு.. காய்ச்சுன்னு காய்ச்சினப்ப போகச் சொல்ல உங்களுக்கு மனசு வரலை.. இப்ப உங்களைப் பத்தின கொஸ்டினைக் கேட்டதும்.. 'யு கேன் கோ'வா..? அராஜகமாடா பண்ற...? இது பெருத்த அட்டூழியமாள்ல இருக்கு... பர்ஸ்ட் இவங்க கேட்ட கொஸ்டினுக்கு ஆன்சர் பண்ணு.. நெக்ஸ்ட் இவங்க இங்கேயிருந்து கிளம்பறதைப் பத்தி யோசிக்கலாம்.."

"டேய்.. உனக்கு என்னதாண்டா வேணும்..? நீ கேட்டுக்கிட்ட அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைப் போட்டுத் தொலைக்கனுமா..?"

"அது அப்ப.."

"இப்ப..?"

"நீரஜாவோட கொஸ்டினுக்குப் பதில் வேணும்.."

தாமோதரனின் கண்டிப்பில் நீரஜா மனம் கனிந்தாள்.. அவனைப் பற்றி சித்தார்த்தன் போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தபோது காட்டாத கண்டிப்பை.. நீரஜாவின் மனம் புண்பட சித்தார்த்தன் பேசியவுடன் அவன் காட்டியதில் அவள் மனம் சிறகடித்தது..

"விடுங்க தாமு.. அவன் பெர்சனலிலே நான் தலையிடக் கூடாதுதான்.. பட்.. ஒரு செகரட்டரி விசயத்தில் இந்த அளவுக்கு பொசஸிவ்வா இவன் இருக்கனும்னா மிஸ்டேக் இவன்கிட்ட இல்ல.. இவன் செலக்ட் பண்ண நினைக்கிற அந்தப் பெண்கிட்ட இருக்கு.."

தான் புத்திசாலி என்பதை புரூவ் பண்ணி விட்டாள் நீரஜா..

"சபாஷ்..!" என்றான் தாமோதரன்..

"இப்ப என்ன இவ புரூ காபியா உனக்குப் போட்டுக் கொடுத்திட்டா..? இப்படி சபாஷ் போடற..?" எரித்து விடுவதைப் போல நண்பனைப் பார்த்தான் சித்தார்த்தன்..

"இது அதுக்கும் மேலே.." என்று சொல்லி சித்தார்த்தனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான் தாமோதரன்..

"இம்சையைக் கிளப்பாதேடா.." வெறுத்துப் போனவனாக லேப்டாப்பை உற்றுப் பார்த்தான் சித்தார்த்தன்..

"அந்தக் கருமத்தைத்தான் பார்த்துத் தொலைக் காதேன்னு காலையிலே இருந்தே அடிச்சுக்கிறேனா இல்லையா..?"

தாமோதரன் சித்தார்த்தனிடமிருந்து லேப் டாப்பை பறிக்க முற்பட்டான்.. அந்த இழுபறி போராட்டத்தில் நீரஜாவின் பக்கமாக லேப்-டாப் திரும்பிப் பார்த்து வைத்தது.. அதன் திரையை யதேச்சையாகப் பார்த்த நீரஜா.. அதில் தெரிந்த புகை வடிவத்தில் புருவங்களை உயர்த்தினாள்..

"வாட் இஸ் திஸ்..?" தாமோதரனிடம் கேட்டு வைத்தாள்..

சித்தார்த்தன் எரிச்சலுடன் தாமோதரனைப் பார்த்த பார்வையில் 'இதைத்தானேடா எதிர்பார்த்தாய் தாமோதரா..?' என்ற கேள்வி இருந்து..

"இந்தக் கொஸ்டின என்கிட்டக் கேட்டா..? நான் என்னத்தைன்னு ஆன்சர் பண்ணுவேன்..? லேப்-டாப்பும் என்னதில்ல.. அதில பார்க்கிற ஆவிக்கும் எனக்கும் எந்தவொரு கனெக்சனும் இல்ல.. ஆவிக்கும் எனக்கும் ஆகாதுங்க.. ஆவின்னாலே எனக்கு அலர்ஜி.. நான் ஆவி பறக்கிற காபி, டீயைக்கூட திரும்பிப் பார்க்க மாட்டேன்.. ஆவியில்லாம அது இதமான சூட்டோடே இருந்தாத்தான் தொட்டே பார்பேன்ங்க.. எங்கிட்டப் போய் ஆவியப் பத்தி கேட்டு வைக்கறிங்களே.. உங்களுக்கே இது நியாயமாய் இருக்கா..?"

தாமோதரனின் நீண்ட கேள்வியில் சித்தார்த்தன் அவனையே இமைக்காமல் பார்த்து விட்டு தண்ணீர் பாட்டிலை தாமோதரனின் பக்கமாக நகர்த்தி வைத்தான்..

"உன்கிட்ட தண்ணி காட்டச் சொல்லி நான் கேட்டேனா..?"

"தண்ணி காட்டறதில என்னை விட நீ கில்லாடி..! தொண்டையில் தண்ணியை சரிச்சுக்க.. போட்டுக் கொடுக்கற ஆர்வத்தில கேப் விடாம பேசினியில்ல.. தொண்டை வறண்டிருக்கும்.. தண்ணி இல்லாம

காய்ஞ்சிருக்கும்.. வத்திப்போன தொண்டைத் தண்ணியை ஈக்குவல் பண்ணியாகனுமில்ல.. டேக் இட்.."

"பரவாயில்லையே.. டேக் இட் ஈஸின்னு உன் தங்கைகிட்டச் சொல்லாம.. டேக் திஸ் வாட்டர்ன்னு என்கிட்ட பின்னிப் பிணையறயே.."

"விதிடா.. உன்னப் போல பிரண்ட் கிடைக்க நான் போன ஜென்மத்தில புண்ணியம் செஞ்சிருக்கனும்.. நீ எனக்கு பிரண்டா..? இல்ல இவளுக்குப் பிரண்டா..? எந்த பிரண்டாவது பிரண்டோட சிஸ்டர்கிட்ட பிரண்டைப் போட்டுக் கொடுக்கிற புண்ணியத்தைச் செய்வானாடா..?"

"நான் செய்வேன்... அந்த பிரண்ட் மட்டும் தன்னோட சிஸ்டர்கிட்ட அவனோட பிரண்டப் பத்தி பத்த வைப்பானாடா..?"

"உன்னைப் போல பிரண்ட் கிடைச்சா எந்தப் பிரண்டும் இதத்தான் செய்வாண்டா.. பிரண்டுக்கு லாயலா இருக்க மாட்டானாம்.. பிரண்டோட தங்கைகிட்ட லாயலா இருப்பானாம்.. கொடுமைடா சாமி.."

சித்தார்த்தன் தலையில் அடித்துக் கொள்ள.. தாமோதரன் அரைப் பார்வையாய் நீரஜாவை பார்த்து வைத்தான்.. அவளும் அப்போது அவனைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.. இருவர் பார்வைகளும் சந்தித்துக் கொண்டதில் அங்கே மின்னல் வெட்டியது..

நீரஜாவின் விழிகளில் கர்வம் வந்தது.. அது அண்ணனின் நண்பன் அண்ணன்காரனுக்கு உண்மையாக இருக்காமல்.. அவளுக்கு உண்மையாக இருப்பதில் உருவான கர்வம்..

சித்தார்த்தன்தான் தாமோதரனுக்கு படிப்பையும்.. உயர்தர வாழ்க்கைத்தரத்தையும் கொடுத்தவன்.. ஆனால், சித்தார்த்தனைவிட நீரஜாவின் கட்டளைக்குத்தான் தாமோதரன் கட்டுப்படுவான்.. அது எதனால் என்று அவனுக்கே தெரியாது..

நீரஜாவின் கண் வீச்சிற்கு தாமோதரன் அடிமை..!

"அன்னெஸசரியா எதையும் பேச வேணாம்ன்னு சொல்லுங்க தாமு.."

"யார்கிட்டங்க..?"

"வேற யார்கிட்டச் சொல்லச் சொல்லுவா..? எல்லாம் கூடப் பிறந்த அண்ணன்காரனான என்கிட்டத்தான் சொல்லச் சொல்லுவா.. இப்படி கூடப்பிறந்தவங்க மத்தியில சிசர் போட்டு வெட்டி விடறயேடா தாமு.. நீயெல்லாம் நல்லா வருவேடா.."

"இப்பவும் நீங்க நல்லாத்தான் இருக்கீங்க தாமு.. உண்மையைச் சொல்கிறீங்கன்னு யாரும் உங்களுக்கு சாபம் கொடுக்க வேணாம்.."

நீரஜா கடுமையாக எச்சரித்தாள்.. சித்தார்த்தன் தங்கையை இமைக்காமல் பார்த்தான்.. அவளோ 'யாரடா நீ..?' என்ற ஓர் அறிமுகமற்ற பார்வையை பார்த்து வைத்தாள்..

"நீரு...!"

"யாரும் என்கிட்டப் பேச டிரை பண்ண வேணாம் தாமு.."

"சைல்டிஷா பிஹேவ் பண்ணாதே.. நான் உன் அண்ணன்..!"

"ஹ..! அது இப்பத்தான் உனக்கு நினைவில வந்துச்சா..? உன் கம்பெனி விவகாரத்தில நான் மூக்கை நுழைக்கக் கூடாதுன்னு சொல்லி 'யு கேன் கோ..'ன்ன சொன்னியே.. அப்ப இந்தப் பாசம் எங்கே போயிருந்துச்சு..?" நீரஜாவின் கேள்விக்கு..

"மெரினா பீச்சில காத்து வாங்கப் போயிருக்குமோ.." என்று கேட்டு சித்தார்த்தனின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொண்டான் தாமோதரன்..

"ஏண்டா இப்படி இருக்க..?" ஆற்றாமையுடன கேட்டான் சித்தார்த்தன்..

"என்னவோ இருக்கேன்.. ஆமாம்.. தெரியாமத்தான் கேட்கிறேன்.. என்னவோ போட்டுக் கொடுக்கிற வேலையையும்.. கோள் சொல்கிற வேலையையும் நான்

மட்டுமே பாக்கிறதைப் போல பொங்கலா பொங்கறயே.. இந்த வேலையைத்தானே கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே நீயும் பார்த்துக்கிட்டு இருந்த..?"

தாமோதரன் சித்தார்த்தனை மடக்கினான்.

அத்தியாயம் - 28

ஏகாந்த மாலையிலே.. எதைச்சொல்ல..

எனைத் தேடிவந்தாய்..?

முற்பிறப்பில் நீ சொன்ன..

மொழிதன்னை நினைவில் கொள்...

"இது ஸில்லி மேட்டர் தாமு..! தேவையில்லாமல் இதுக்கு இம்பார்டன்ஸ் கொடுத்து எக்ஸ்போஸ் பண்றேன்னு சொல்லுவேன்.."

"நீ என்னத்தையோ சொல்லிக்க.. ஐ டோன்ட் கேர்.."

"கேர் பண்ணலைன்னா எதுக்காகடா இம்சை பண்ற..? விட்டுத் தள்ளிட்டு போய்கிட்டே இருக்க வேண்டியதுதானே..?"

கோபத்துடன் கேட்ட சித்தார்த்தனை ஏறிட்டுப் பார்த்தான் தாமோதரன்.. அவன் முகத்தில் இறுக்கம் வந்தது..

"ஸோ.. நீ வேலையை ரிசைன் பண்ணிட்டுப் போகச் சொல்ற..?"

இப்போது இமைக்காமல் தாமோதரனைப் பார்த்து வைப்பது சித்தார்த்தனின் முறையாயிற்ற.. அவன் முகத்தில் கோபம் அதிகரித்தது..

"மிரட்டறியா..?" என்றான்..

"என்ன தேவைக்கு..?" என்றான் தாமோதரன்..

"எதுக்கெடுத்தாலும் இதை ஒன்னைச் சொல்லி வைக்கிற..?"

"நீ சொல்றதைப் போல வைக்கிற.."

"வேண்டாம் தாமு.. இதைச் சொல்லியே என்னைக் கார்னர் பண்ணாதே.. நீ என் சுதந்தரத்தில் தலையிடற.."

"இல்லைன்னு நான் சொல்ல மாட்டேன்.. பட்.. அது என்னோட டியூட்டின்னு நான் நினைக்கிறேன்.."

"இது எப்படிடா உன் டியூட்டியாகும்..?"

"என் டியூட்டிதான் சித்தார்த்... நீ ஷேஃபா இருக்கனும்னு நான் பாடுபடறது என் டியூட்டிதான்.."

"இப்ப ஷேஃபா இல்லாம எப்படி இருக்கேன்..? என்னவோ அமேசான் காடுகளில அகப்பட்டுக்கிட்டவனைப் பேசறதைப் போல இல்ல பேசி வைக்கிற..?"

"எனக்கென்னவோ அப்படியேதான் தோணி வைக்குதுடா.. மகாபலிபுரத்துக்குப் போய் வந்ததில இருந்து நீ நீயாவே இல்லை.. ஆபிஸ் டயத்தில அன்னைசஸரியா பேசக்கூட மாட்ட.. இப்ப என்னடான்னா லேப்டாப்பில அமானுஷ்யங்களைப் பத்தி ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு உட்கார்ந்திருக்க.. இட்ஸ் நாட் பெய்ர்.. யூசுவலா நீ இப்படிச் செய்யற ஆளில்லை.. உன்னை நினைச்சு நான் படற கவலையைப் பத்தி உனக்குக் கவலையில்லை.. இந்த லட்சணத்தில உன்னைப் பித்துப் பிடிக்க வைத்த பெண்ணே உனக்குச் செகரட்டரியா வரனும்னு அடம் பிடிச்சு வைக்கிற.. அவ உனக்கு செகரட்டரியா வந்தா வேற வினையே வேணாம்.. ஆயுசுக்கும் உன்னை காட்டு, மேட்டில உண்மையைத் தேடிப் போறேன்னு அலைய வைச்சுட்டுத்தான் வேற வேலையைப் பார்ப்பா.."

"இட்ஸ் நாட் பெய்ர்ன்னு என்னைச் சொல்லிட்டு நீ பேசற விதம்தான் நாட் பெயர் தாமு.. உனக்குத் தெரியாத பெண்ணைப் பற்றி நீ பழி போட்டுப் பேசக்கூடாது.."

"ரீசனில்லாம நான் பேசலை சித்தார்த்.. இது உன் மனச்சாட்சிக்கே நல்லாத் தெரியும்.."

நண்பர்கள் இருவரும் அனல் பறக்கும் விவாதத்தில் ஈடுபட..

"ஸ்டாப் திஸ் ஆர்கியுமெண்ட்.." என்று சப்தம் எழுப்பினாள் நீரஜா..

சித்தார்தனும், தாமோதரனும் சண்டைக் சேவல் களைப் போல மூச்சிறைக்க ஒருவரை ஒருவர் முறைத்தபடி முகங்களைத் திருப்பிக் கொள்ள..

"வாட் இஸ் திஸ் கைஸ்..?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் நீரஜா..

"உங்க அண்ணனிடமே கேளுங்க.." என்றான் தாமோதரன்..

"ஏன்..? இவனுக்கு வாய் இல்லையா..? இவன் கிட்டேயே கேட்டுக்க.." என்று சொல்லி விட்டான் சித்தார்த்தன்..

"ஹேய்..! என்னப்பா ஆச்சு..? இரண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் விட்டுக் கொடுத்துக்க மாட்டிங்க.. இன்னைக்கு என்னன்னா கட்டி உருளாத குறையா சண்டை போட்டுக்கறிங்க..? ஏன்..? யாராலே இந்தச் சண்டை..?"

"ஒரு மோகினியாலே..."

சித்தார்த்தனை முறைத்தபடி தாமோதரன் சொன்னான்.. சித்தார்த்தனுக்கு கோபம் வந்து விட்டது..

"மைண்ட் யுவர் டங் தாமு..! உனக்குத் தெரியாத பெண்ணைப் பத்தி இப்படிக் கமெண்ட் பண்ணலாமா..?"

"ஏய்ய்..! நான் அப்படித்தாண்டா சொல்வேன்.. மோகினியை மோகினின்னு சொல்லாம வேற எப்படிச் சொல்கிறதாம்..?"

"தாமு.."

"உனக்கெதுக்கு கோபம் வருது..?"

"அவள் எனக்குத் தெரிந்தவள்.. அவளைப் பற்றி நீ மோகினின்னு கமெண்ட் பண்ணக்கூடாது.."

"கேட்டுக்கங்க.."

என்னவோ நோட்திஸ் பாயிண்ட் யுவர் ஆனர் என்று சொல்வதைப் போல தாமோதரன் கை விரிக்க.. நீரஜா புருவங்களை முடிச்சிட சித்தார்த்தனை உற்றுப் பார்த்தாள்..

"அண்ணா..? ஹீ இஸ் ஷி..?"

நீரஜாவின் கேள்விக்கு உடனடியாக பதில் சொல்ல முடியாமல் உதட்டைக் கடித்தான் சித்தார்த்தன்..

'உன்னால்தானே இந்நிலை..?'

சித்தார்த்தன் வெறியுடன் தாமோதரனை முறைத்தான்.. நண்பனது சினத்தை லட்சியம் செய்யாமல் தோள்களைக் குலுக்கிக் கைகளை விரித்தான் தாமோதரன்.

"உன் சிஸ்டர் கேட்கிறாங்கள்ல.. அவங்க கேள்விக்கு பதில் சொல்லு சித்தார்த்.."

சித்தார்த்தன் யோசனையுடன நீரஜாவைப் பார்த்தான்.. அவன் முகத்தில் கண்டிப்பு வந்தது..

"ஷி இஸ் ஜஸ்ட் எ பிரண்ட் நீரு.."

"பொய்.." என்றான் தாமோதரன்..

"இது பொய்ன்னா.. மெய் என்னன்னு நீயே சொல்லுடா.." பல்லைக் கடித்தான் சித்தார்த்தன்..

"நீரஜா..! ஒரே ஒரு நாள் ஈவினிங் டயத்தில மீட் பண்ற பெர்சனை நீங்க என்னன்னு சொல்லுவீங்க..?" என்ற தாமோதரனின் கேள்விக்கு..

"ஜஸ்ட் நோன் பெர்சன்னு சொல்லுவேன்.." என்றாள் நீரஜா..

"காதில விழுந்ததா..? ஜஸ்ட் நோன் பெர்சனாம்.." உரத்த குரலில் சித்தார்த்தனிடம் சொன்னான் தாமோதரன்..

"இதை எதுக்கு அண்ணாகிட்டச் சொல்கிறிங்க..?" நீரஜா குழம்பினாள்..

"வேற என்னத்தைச் செய்யச் சொல்கிறீங்க..? இவன் பிரண்டுன்னு சொன்னானே.. அந்தப் பெண்ணை ஒருநாள்

மகாபலிபுரத்துக்குப் போயிருந்தப்ப ஈவினிங் டயத்தில மீட் பண்ணியிருக்கான்.. அவ என்னடான்னா இவன்கிட்ட அமானுஷ்யம் அது, இதுன்னு அள்ளி விட்டிருக்கா.. அவளுக்கு அங்கே இருக்கிற ஐந்துரதக் கோவில்களைப் பாத்தா ஒரு வைப்ரேசன் உண்டாகுமாம்.. அதைக் கேட்டவுடனே நம்ம ஆளுக்கும் அதே வைப்ரேசன் உண்டாகித் தொலைச்சிருக்கு.. திரும்பி வந்தவன் அந்தப் பெண்ணைத் துரத்தர அமானுஷ்யம் எதுன்னு கண்டுபிடிக்க லேப்-டாப்பில ஆராய்ச்சி பண்ணிக்கிட்டு இருக்கான்... யு நோ நீரஜா.. இன்னைக்கு இண்டர்வியூங்கிற நியூஸைக் கூட இவன் மறந்து போயிட்டான்னா பார்த்துக்கங்க.. அந்த அளவுக்கு இதில இன்வால்வ் ஆகிட்டான்.."

"மை காட்..!" நீரஜா கவலையானாள்..

"நீயா அண்ணா இப்படியெல்லாம் செய்து வைக்கிற..? இதைத்தான் ஃபாரின் போய் படிச்சுட்டு வந்தயா..?"

"நீங்க வேற நீரஜா.. ஃபாரின்காரங்க நம்மள விட பைத்தியக்காரங்க.." என்றான் தாமோதரன்..

"உனக்குன்னு எப்படின்னா இதைப் போல விநோதமான கேஸ்களா வந்து மாட்டுது..?" முகத்தை அஷ்ட கோணலாக்கிக் கொண்டு கேட்டுவைத்தாள் நீரஜா..

"நல்லாக் கேளுங்க.. இதே கேள்வியைத்தான் நானும் கேட்டேன்.. பதில் சொல்லாம சண்டைக்கு வர்றான்.." தூண்டி விட்டான் தாமோதரன்..

"ஏண்டா..?" அலுத்துக் கொண்டான் சித்தார்த்தன்..

"உன்னாலே நான் பட்ட தலை வேதனையை உன் சிஸ்டரும் படட்டும்.. அப்பத் தெரியும்.. என் பாடு என்னன்னு.. ஏங்க.. நீங்களே சொல்லுங்க.. மகாபலி புரத்திலே இவனைக் கண்டவ.. அப்படியே போய் தொலைக்காம இவனோட செகரட்டரி வேலைக்கான இண்டர்வியூவில கேண்டிடேட்டா வந்து நிற்கிறா.."

"ஓ..! ஐ ஸீ..!"

இப்போதுதான் நீரஜாவுக்கு அனைத்தும் புரிந்தது.. அவள் மெச்சுதலும் நன்றியும் கலந்த பார்வையினை தாமோதரனை நோக்கிப் பார்த்து வைத்தாள்..

"கேட்ச் பிடிச்சுக்க.." எரிந்து விழுந்தான் சித்தார்த்தன்..

"இதைப் போல இவ பார்த்து வைக்கனும்னுதான என்னைப்பத்தி போட்டுக்குடுத்த..? நீயெல்லாம் ஒரு பிரண்டாடா..?"

"இவர் பிரண்ட் இல்லேன்னா வேற யாருக்கும் அந்தத் தகுதி கிடையாது.. பிரண்டுன்னா இவர்தான் பிரண்ட்.." சர்டிபிகேட் கொடுத்தாள் நீரஜா..

"ஏன் சொல்ல மாட்ட..? போட்டுக் கொடுக்கிற புண்ணியவான் கிட்ட மாட்டிக்கிட்டு நான் துடிக்கிறேன்.. நீ என்னடான்னா அவனைப் பத்தி புகழாரம் சூட்டறே.. ம்ஹீம்.. விதி..!"

"நீயே சொல்லுண்ணா.. உன்னைக் காம்ளிகேட்டா ஆக்கிற பெண்ணை சந்திச்சு வைச்சிருக்கிற.. அவளை மீட் பண்ணின நாளில இருந்து ஒரு மார்க்கமா இருந்து வைக்கிற.."

"ஒரு மார்க்கமாவா..? நீங்க வேற.. இவன் பல மார்க்கமா இருந்து தொலைக்கிறாங்க.." தாமோதரன் ஸ்குரு கொடுத்தான்..

"என்னை ஒருவழி பண்றதுக்கு நீ ஒருத்தன் போதும்டா.." மனமார வயிறெரிந்தான் சித்தார்த்தன்..

நீரஜா சட்டமாக அமர்ந்து கொண்டு சித்தார்த்தனை குடைய ஆரம்பித்தாள்..

அத்தியாயம் - 29

உனைத் தேடித் தேடி..

என் பாதம் நோகும்...

நான் செதுக்கும் சிற்பத்தில்..

உன் உருவம் எப்படி வந்தது..?

நீரஜாவின் விழிகளில் தெரிந்த கண்டிப்பில் சித்தார்த்தன் இருப்புக் கொள்ளாமல் டேபிளில் இருந்ததைக் கலைத்து வைத்தான்.. தாமோதரனுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது..

"ஹார்ஷா கேட்காதீங்க.. அவனே பாவம் குழம்பிப் போயிருக்கான்.." என்று நீரஜாவிடம் பரிந்துரை செய்தான்.

"நீ என்ன கேட்டகிரிடா..? இப்படியும் தூண்டி விடற.. அப்படியும் ரெகமென்டேசனுக்கு வர்ற.. உன்னை ரெகமன்ட் பண்ணுன்னு நான் வேண்டிக் கேட்டுக் கிட்டேனா..?" சித்தார்த்தன் எரிச்சல் பட்டான்..

"நான் என்ன கேட்டகிரின்னு உனக்குப் புரியாதா என்ன..?"

"நீதானே..? ரைட்டில இண்டிகேட்டர் போட்டுட்டு.. லெப்டில கையைக் காட்டிட்டு.. ஸ்ட்ரெயிட்டா வண்டியை ஓட்டி.. மத்த வண்டிகளக் கவிழ்க்கற ஆளாச்சே.. நீ ஸ்டடியாத்தான் இருப்ப.. உன்னை நம்பி உன் பின்னாலே வர்ற வண்டிகதான் பாவம்.. சேதாரத்துக்கு ஆளாகும்.."

"ஆஹா..! என்னைப் பத்தி எத்தனை தெளிவா புரிஞ்சு வைச்சிருக்கடா மச்சான்.. என் நெஞ்சத்தை டச் பண்ணிட்டடா.."

"கொலைவெறியை கிளப்பாதே தாமு... சொல்லிட்டேன்.."

நண்பர்கள் மோதிக் கொண்டிருக்க.. டேபிளின் மிதிருந்த ஃபைலை கையில் எடுத்துப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தாள் நீரஜா..

"இப்ப அதை எதுக்கு நோண்டற..?" என்று கடுப்பானான் சித்தார்த்தன்..

"இதில எந்தப் பெண்.. அந்தப் பெண்ன்னு தேடிப் பார்க்கறேன்.." நிதானமாகச் சொன்னாள் நீரஜா..

"உனக்கெதுக்கு இந்த வேலை..?" சித்தார்த்தன் நீரஜாவின் கையிலிருந்த ஃபைலை பறிக்க முயன்றான்..

நீரஜா அதை இறுக கைப்பற்றியவாறு தாமோதரனின் பக்கமாக சாய்ந்தாள்.. விரிந்திரிந்த அவளின் தலைமுடி தாமோதரனின் முழங்கையில் படிந்து அவனுக்குள் ரசாயன மாற்றத்தை உண்டு செய்தது.. அவள் கூந்தலின் மென்மைக்கு தன்னையே அவளுக்கு அடிமை சாசனம் எழுதிக் கொடுத்து விடத் தயாரானான் தாமோதரன்.. அந்தக் கூந்தலில் இருந்து வெளிப்பட்ட இதமான நறுமணம்..

'பெண்களின் கூந்தலுக்கு இயற்கையான நறுமணம் இல்லைன்னு யார் சொன்னது..?' என்று அவனை போர்முரசு கொட்டச் செய்தது..

'தாமோதரன் சொன்னாலும் குற்றம் குற்றமே..' என்று நக்கீரர் ஓலைச்சுவடியை கத்தியைப் போல கையில் பிடித்து தாமோதரனின் மார்புக்கு நேராக குறிபார்த்தபடி அவன் மனக்கண்ணில் தோன்றி வைத்தார்..

என்னதான் அவர் கீர்..கீரென கீறினாலும் நீரஜாவின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டு என்று எட்டுத் திக்கையும் சாட்சி வைத்து சத்தியம் செய்யத் தயாராகி விட்டான் தாமோதரன்..

அவளது கூந்தலின் மென்மையை உணர்ந்த அவனது முழங்கை..

'தன்யன் ஆனாய் தாமோதரன்..' என்றது..

அவன் மனதுக்குள் மெல்லிசை எழுந்தது..

'கூந்தல் மலரில் தேனைப் பருக..

காத்துக்கிடந்தேன் கால்கள் கடுக்க..

இதயம் துடிக்க..'

அவன் மனம் பாடிய பாடலை அவனது விழிகள் உணர்த்தியதில் நீரஜா தடுமாறிப் போனாள்.. அருகில்

சித்தார்த்தனை வைத்துக் கொண்டு அவன் விழிகளில் மயக்கத்தைப் பிரதிபலித்ததில் அவளுக்கு தர்ம சங்கடமாக இருந்தது..

"நீங்களே சொல்லுங்க.." அவள் பேச்சை ஆரம்பித்தாள்..

பேசினாலாவது அவன் மயக்கத்திலிருந்து வெளி வருவான் என்ற அவளின் கணிப்பு பொய்யானது.. அவளது வார்த்தைகளைக் கேட்டதும் இன்பத்தேன் காதினில் பாய்ந்ததைப் போன்ற ஆனந்தத்துக்கு ஆளான தாமோதரன்..

"எதைச் சொல்லச் சொல்கிறீங்க..?" என்று கிறங்கிப் போன குரலில் கேட்டு வைத்தான்..

அவன் விழிகளில் தெரிந்த மயக்கம்.. அவள், அவனை 'ஐ லவ் யு' சொல்லச் சொல்கிறாள் என்று யூகிக்க வைத்து விடும் அபாயம் இருந்ததில் நீரஜா நிமிர்ந்து அமர்ந்தாள்..

'அதுக்குள்ள விலகியாகனுமா..?' தாமோதரனின் விழிகளில் ஏமாற்றம் அப்பட்டமாகத் தெரிந்தது..

'போதும், போதும்.. இதுக்கே இப்படின்னா.. இன்னும் கொஞ்சநேரம் நான் சாஞ்சிருந்தா நீங்க என்னென்னத் தையோ உளறி வைப்பீங்க..' நீரஜா அவனை விழிகளால் அதட்டினாள்..

"இதைக் கொஞ்சம் பாருங்களேன்.."

நீரஜா மீண்டும் தாமோதரனின் கவனத்தை திருப்ப முயன்றாள்.. இனிய கனவிலிருந்து விடுபட முடியாமல் இங்கம் அங்குமாக திண்டாடிக் கொண்டிருந்த தாமோதரன் அவள் முகத்தைப் பருகு.. பருகு என்று பார்த்து வைக்க ஆரம்பித்தான்..

"கிழிஞ்சது போ.." என்ற சித்தார்த்தன்.

"என்னவோ லவ் ஸ்டோரி ஃபிலிம் பார்க்கிறதைப் போலவே இருக்கு.. நான் வேணும்னா வெளியில போயிரட்டுமா..?"

என்று போலியான அக்கறையுடன் வினவி வைத்தான்

"டேய்.." என்ற தாமோதரனின் முகத்தில் குடம், குடமாக அசடு வழிந்தது..

அதைக் காணாததைப் போல கண்ட நீரஜாவுக்கு சிரிப்பு வந்தது.. உள்ளங்கையில் நாசுக்காக அந்த சிரிப்பை மறைத்தாள்..

"அவ பாருன்னு சொன்னது அவ கையில இருக்கிற ஃபைலை.. அவ முகத்தை இல்லை.." சித்தார்த்தனின் குரலில் கேலி இருந்தது..

"ஐ நோ.. ஐ நோ.. ஐ நோ.." தாமோதரன் எதையாவது சொல்ல வேண்டும் என்பதற்காக உளறிக் கொட்டினான்..

"நீயென்ன ரகுவரனா..?" என்று கேட்டு iத்தான் சித்தார்த்தன்..

"நான் தாமோதரன்.."

"தெரியுதில்ல.. 'ஐ நோ..'வை விட்டு விடு.. அது பிழைத்து ஓடிப் போகட்டும்.."

"சான்ஸ் கிடைச்சிருச்சுன்னு போட்டுத் தாக்கறான் பாரு.. ஏங்க.. நீங்க எதைப் பார்க்கச் சொன்னீங்க..?"

தாமோதரன் ஒருவழியாக தன்னை சமாளித்துக் கொண்டு நீரஜாவின் கையில் இருந்த ஃபைலை வாங்கிக் கொண்டான்..

"எனக்கு அந்தப் பெண்ணைப் பார்க்கனும்.." என்றாள் நீரஜா..

"ஏங்க.. எனக்கும், அவளுக்கும்தான் யாதொரு கனெக்சனும் இல்லைன்னு கற்பூரம் ஏத்திச் சத்தியம் பண்ணாத குறையா சொல்லிட்டேனில்ல.. திரும்பவும் ஏங்க.. அந்தப் பேச்சை இழுக்கறீங்க..?"

"ம்த்சு..! நான் அந்தப் பெண்ணுன்னு சொன்னது இந்தப் பெண்ணையில்ல.."

"வேற எந்தப் பெண்ணைங்க..?"

"சொல்றேன்.. சொல்றேன்.. ஆமாம்.. அது என்ன..? திரும்பத் திரும்ப இந்தப் பெண்கிட்டயே பேச்சைக் கொண்டு வந்து நிப்பாட்டறிங்க..? என்ன விசயம்..?"

"ஹெய்யோ..! ஒரு விசயமும் இல்லைங்க.."

"நம்பலாமா..?"

"தாராளமா நம்பலாம்.. அடியேன் ஒரு பாவமும் அறியாதவன்.. என் மூஞ்சியைப் பாருங்க.. இந்த விளையாட்டையெல்லாம் என்னால ஆட முடியாதுன்னு எழுதி ஒட்டியிருக்கும்.. கள்ளம், கபடு இல்லாத பச்சை மண்ணுங்க நானு.. உங்களுக்கு என்னைப் பார்த்தா பாவமாத் தோணலை..?"

"தோணலை.."

உதட்டைச் சுழித்த நீரஜாவுக்குள் சந்தோசம் குமிழிட்டது.. அவள் முன்னால் மண்டியிடாத குறையாக அவன் கெஞ்சுவது அவளுக்குப் பிடித்திருந்தது.. அவன் மீதான பிரியம் அவளுக்குள் அதிகரித்தது..

"அது என்னோட பேட் டைம்ங்க.."

"டயத்தைப் பத்தி அப்புறமா ஒருநாள் டைம் இருக்கிறப்ப பேசலாம்.. இப்ப இந்த ஃபைலில இருக்கிற போட்டாக்களில எந்தப் போட்டோ அந்தப் பெண்ணின் போட்டோன்னு காட்டுங்க.. இந்தத் தடவையாது சரியாக் காட்டனும்.. அத விட்டுட்டு பழையபடி அந்தப் பெண்ணுக்கும் எனக்கும் யாதொரு கனெக்சனும் இல்லைன்னு ஆரம்பிச்சு வைச்சீங்கன்னு வையுங்க.. கனெக்சன் கன்ஃபர்ம்ன்னு சொல்லிட்டு நான் பாட்டுக்கு போய்க்கிட்டே இருப்பேன்.. மைண்ட் இட்.."

"ஹெய்யோ..! என்னங்க நீங்க.. இடியைத் தூக்கி என் தலையில போடறிங்க..?"

"நான் செய்ய நினைச்சதை என் தங்கை உனக்குச் செய்கிறாடா தாமு.."

"குருப் ஃபார்ம் பண்ண வராதேண்ணா.. இவ்வளவு நேரமும் கம்முன்னு எங்க டிஸ்கசன வேடிக்கை பார்த்ததைப் போல இப்பவும் பாரு.. அண்டர்ஸ்டாண்ட்..?"

"இங்க நீ மூத்தவளா..? இல்ல நான் மூத்தவனா..?"

"நீ மூத்தவனா இருக்கிறதாலே எனக்கொன்னும் நீ பாஸில்ல.."

"அதையேதான் நானும் சொல்றேன்.. நீ எனக்குத் தங்கையா இருக்கிறதாலே எல்லாத்துக்கும் என்னை கமாண்ட் பண்ணனும்னு அவசியமில்ல.. யு மைண்ட் இட்.."

அண்ணனும் தங்கையும் அடித்துக் கொள்ளாத குறையாக மல்லுக்கட்டிக் கொண்டு இருக்க.. தாமோதரன் அவன் கையிலிருந்த ஃபைலைப் புரட்டிப் பார்த்து..

"இதோ.. இந்தப் பெண்தான்.." என்று நீரஜாவின் பக்கமாக சரிந்தான்..

இப்போது மயங்கித் தொலைப்பது நீரஜாவின் முறையாகப் போனது.. அவள் பக்கமாக சரிந்த தாமோதரனின் அண்மையை உணர்ந்தவளுக்கு மூச்சுத் திணறிப் போனது.. தாமோதரனின் மீதிருந்து வந்த அவனை மட்டுமே நினைவுறுத்தும் பெர்ப்யூமின் நறுமணத்தில் அவள் கிறங்கிப் போனாள்..

அத்தியாயம் - 30

நெடுந்தூரம் கடந்து வந்த

பூங்கொடியே..! நீயாரோ..?

செல்வத்தில் பிறப்பெடுத்த..

செருக்குடனே வதைக்கிறாயோ ..?

நீரஜா தனது மனச்சலனத்தை வெகுவாக போராடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாள்.. தாமோதரன்

காட்டிய போட்டோவில் இருந்த பெண்ணை கவனித்தாள்.. அவள் முகம் மாறியது.. அவளுக்குள் இடம் பிடித்திருந்த இன்பமான உணர்வுகள் இருக்குமிடம் தெரியாமல் கலைந்து ஓடி விட்டன.. பார்த்த பார்வை மாறாமல் அவள் யாமினியின் போட்டோவையே உற்றுப் பார்த்தபடி இருந்தாள்..

"அதிக நேரம் இந்த போட்டோவைப் பார்க்காதீங்க.."

தாமோதரன் அவளை எச்சரித்தான்.. அவனை நிமிர்ந்து பார்த்த நீரஜாவின் முகத்தில் கலக்கம் இருந்தது.. அதில் தாமோதரன் கவலை கொண்டான்..

"இதுக்குத்தான் நான் சொன்னேன்..? எங்கே..? இவன் கேட்டாத்தானே..? பிடிவாதம் பிடிச்சு உங்களையும் இந்த நிழலாட்ட யுத்தத்துக்குள்ள இழுத்து விடறான்.." என்று அலுத்துக் கொண்டான்..

"ஏன் அப்படிச் சொல்கிறீங்க..?"

"நீங்க ஏன் இந்த போட்டோவை உத்து உத்துப் பார்க்கறிங்க..?"

"இல்லை தாமோதரன்.. இந்தப் போட்டோவில இருக்கிற பெண்ணை எங்கேயோ பார்த்ததைப் போல நிழலாய் எனக்குள் தோணி வைக்குது.. ஏதோ ஓர் கோபம் இவள்மேல் எனக்கு வருது.. அது ஏன்னுதான் புரியலை.. இந்தப் பெண் யார்..?"

"யாரோ..? யாருக்குத் தெரியும்..? எனக்கும் இந்தப் பெண்ணின் போட்டோவைப் பார்த்தப்ப இதைப்போல தோணி வைச்சுச்சு.. வினைங்க.. இவன் மகாபலிபுரத்துக்கு தேடிப்போய் இழுத்துக்கிட்டு வந்து சேர்ந்திருக்கான்.. சொன்னாலும் புரிஞ்சுக்க மாட்டேன்கிறான்.."

நீரஜா பதில் சொல்லாமல் அந்த போட்டோவையே மீண்டும் பார்த்தாள்.. ஆழ்ந்த பார்வையுடன் இருந்த அந்த போட்டோ நீரஜாவை ஏதோ ஒரு சுழலுக்குள் இட்டுச் சென்றது..

"ஏங்க..? அந்த போட்டோவைப் பார்த்தாத்தான் இல்லாத கற்பனையெல்லாம் வந்து தொலைக்குதில்ல..? அப்புறமும் என்ன கழுதைக்கு அந்தப் போட்டோவை திரும்பவும் உத்துப் பாத்துக்கிட்டு உக்காந்துக்கிட்டு இருக்கீங்க.. கொடுங்க அந்த ஃபைலை.."

தாமோதரன் ஃபைலை வாங்கிக் கொள்ள முற்பட்டான்.. நீரஜா ஃபைலை இறுக்கிப் பிடித்தபடி கொடுக்க மறுத்தாள்..

"இருக்கட்டும்.."

"எதுக்குங்க..? எங்கேயோ பார்த்த மயக்கம்ன்னு பாட்டு பாடறதுக்கா..?" தாமோதரன் கேட்டான்..

"நைஸ் சாங்.." சித்தார்த்தன் பரவசப் பட்டான்..

"கேட்டுக்கிட்டிங்கள்ல.. இந்த விளையாட்டே வேணாங்க நீரஜா.. விட்டுத் தள்ளுங்க.. நாம வேற ஒரு பெண்ணுக்கு அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டர் கொடுத்துட்டு கம்பெனி வேலைகளை பார்ப்போம்.."

தாமோதரனின் பேச்சில் விழிகளை உயர்த்தி அவனை ஓர்பார்வை பார்த்து வைத்தாள் நீரஜா.. அதற்கு என்ன அர்த்தம் என்று யோசித்தவன்.. அப்படியும் இருக்குமோ என்ற நினைவில்..

"ஊஹூம்.. நான் அந்த மீனிங்கில் சொல்லலைங்க.. நீங்க வேற தப்புத்தப்பா கால்குலேசன் போட்டு வைக்காதீங்க.. ஏங்க.. உங்களுக்கு என்னைப் பத்தி நல்ல அபிப்ராயமே தோணி வைக்காதா..?" என்று அழ மாட்டாத குறையாக வினவினான்..

"நான் எதுவும் சொல்லலையே.." என்றாள் நீரஜா..

"நீங்க சொன்னாத்தானா..? அதான் உங்க பார்வையே சொல்லுதே.. நீங்க வந்தப்ப நான் வேலை கொடுக்கனும்னு சொல்லிக்கிட்டு இருந்த பெண்ணுக்கு ஒன்னும் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் அனுப்பச் சொல்லலை.. வேற ஒரு பெண்ணுக்கு வேலை கொடுக்கலாம்ன்னுதான்

சொன்னேன்.. அந்த மீனிங்கில் சொல்லலை.." அங்கலாய்த் தான் தாமோதரன்..

நீரஜாவுக்கு சிரிப்ப வந்தாலும் அவளால் மனம் விட்டுச் சிரிக்க முடியவில்லை.. சிலந்தி வலை போன்ற சிக்கலுக்குள் அவள் அமிழ்வதைப் போல உணர்ந்தாள்.. கடலின் அடி ஆழத்தில் மூச்சுத் திணற மூழ்குவதைப் போன்ற ஓர் உணர்வு..!

"யாமினி..!"

ஃபைலில் இருந்த பயோடேட்டாவில் இருந்த பெயரை வாய் விட்டுப் படித்தாள்.. யாமினியின் பார்வை நீரஜாவை காந்தம் போல கவர்ந்திழுத்தது.. அவளுக்குள் சிலிர்ப்பு ஓடியது..

"நீரஜா.." கவலையுடன் அழைத்தான் தாமோதரன்..

"இந்தப் பெண்ணுக்கு வேலை கொடுக்கலைன்னா மட்டும் எல்லாம் சரியாகிருமா..?" கனவிலிருந்து பேசுவதைப் போல பேசி வைத்தாள் நீரஜா..

"நீரஜா..?"

தாமோதரன் அதிர்ச்சியுடன் வினவ.. சித்தார்த்தன் ஆச்சரியத்துடன் தலை நிமிர்ந்தான்.. நீரஜாவின் முடிச்சிட்ட புருவங்கள் சொல்லுவது எதை என்று அவர்கள் இருவருக்குமே புரியவில்லை..

தாமோதரனுக்கு அவன் செவிகளையே நம்ப முடியவில்லை.. சித்தார்த்தனாவது மகாபலிபுரத்தில் யாமினியை பார்த்திருக்கிறான்.. அவளுடன் பேசியிருக் கிறான்.. அவள்மீது அவனுக்குள் இனம் புரியாத பரிவு உண்டாகியிருக்கிறத.. அவளது நிலைகுறித்த பரிதாபம் எழுந்துள்ளது.. அவளுக்கு ஏற்படும் வினோதமான அனுபவங்களுக்கு விடை தேட முற்படுகிறான்.. அவனிடம் அவளே வேலை கேட்டு வந்ததில் அவளுக்கே அந்த வேலையைக் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறான்..

ஆனால் நீரஜா..?

அவள் மிகவும் கண்டிப்பானவளாயிற்றே.. சித்தார்த்தனின் நலன் மீது அக்கறை கொண்டவள்.. ஓர் மகாராணியைப் போன்ற கம்பீரம் கொண்டவள்.. எவரிடமும் சரிசமமாக நின்று பேசியறியாதவள்.. ஓர் வகையில் அவள் கர்வி..!

அவளா சித்தார்த்தனின் தெளிவான மனநிலையைக் குழப்பும் ஓர் பெண்ணுக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கொடுக்கச் சொல்லுகிறாள்..? சித்தார்த் தனுக்குத்தான் புத்தி பிசகி விட்டது என்றால்.. நீரஜாவுக்குமா அப்படி..? அவள் எளிதில் தடுமாறிவிடும் குணம் படைத்தவளில்லையே..

"என்ன சொல்கிறீங்க நீரஜா..?"

"அவ சொன்னது என்னன்னு புரிஞ்சுக்காத அளவுக்கு ஃபூலா நீ..?"

"பொறு சித்தார்த்..."

"என்ன அலுவலுக்கு..?"

"நீரஜா என்ன சொல்ல வர்றாங்கன்னு முழுசாக் கேட்கவிடு.."

"அவ என்ன அரைகுறையாவா சொன்னா..?"

"பிளீஸ் நீரஜா.. இவன் ஏற்கனெவே என்னைப் படுத்திக்கிட்டு இருக்கான்.. நீங்களும் சேர்ந்து படுத்தாதீங்க.."

"படுத்தினது நீயா..? இல்லை நானா..?"

"காரணமில்லாம படுத்தலை சித்தார்த்..."

வழக்கடித்துக் கொண்டிருந்த தாமோதரனை பெருமூச்சுடன் ஏறிட்டுப் பார்த்தாள் நீரஜா.. அவள் முகத்தில் படர்ந்திருந்த உணர்வலைகளில் தாமோதரன் துணுக்குற்றான்...

"நீரஜா...?"

"நீங்க அண்ணன்கூட வழக்கடிக்க வேண்டாம் தாமோதரன்.. எனக்கென்னவோ இந்தப் பெண்ணை அண்ணன் மீட் பண்ணனும்ங்கிறது விதின்னு தோணுது.. அவனால் அந்தச் சந்திப்பை அவாய்டு பண்ணியிருக்க முடியாதுன்னு தோணுது.."

"என்னங்க நீங்க.. என்னென்னவோ சொல்கிறீங்க..?"

"நம்மைச் சுத்தி என்னென்னவோ நடக்குதே.. நான் பேசாமல் இருந்தால் மட்டும் எல்லாமும் மாறி விடுமா..?"

நீரஜா விரக்தியுடன் பேசுவதைப் போல தோன்றி வைத்ததில் தாமோதரன் குழம்பிப் போனான்.. இது போன்ற மனநிலையுடன் நீரஜா பேசி அவன் கேட்டதில்லை..

"புரிஞ்சுதான் பேசறிங்களா..?"

"நம்மளைச் சுத்தி புரியாத பல விசயங்கள் நடக்கப் போகுதுன்னு என் மனசுக்குள்ள ஏதோ ஒரு பட்சி சொல்லுது தாமோதரன்.."

நீரஜா சோர்வுடன் சித்தார்த்தனை ஏறிட்டாள்..

"உன் நல்லதுக்காகத்தான் சொல்கிறேன் அண்ணா.. இந்தப் பெண்ணிடம் இருந்து நீ தள்ளி நில்லு.."

அவள் வார்த்தையில் தாமோதரன் குதூகலித்து...

"நான் சொல்லலை..?" என்று சித்தார்த்தனிடம் சொன்னான்..

"ஏன்..?" சித்தார்த்தனின் புருவங்கள் மேலேறின..

"இவளால் உனக்குத் தேவையில்லாத பிரச்னைகள் வரும்.." நீரஜா கவலைப்பட்டாள்..

"நீ என் தங்கையா..? இல்லை.. ஜோசியம் சொல்கிறவளா..?"

"ரெண்டும்தான்.. இந்தப் பெண்ணை செகரட்டரியாய் அப்பாயிண்ட்மெண்ட் பண்ணாதே.."

"பண்ணலைன்னா இவளைத் தேடிப் போய் நான் பார்க்க மாட்டேனா..? எனக்கும் அவளுக்கும் இடையில் என்ன

இருக்குன்னு ஆராய ஆரம்பிக்க மாட்டேனா..?"

நீரஜா பெருமூச்சுடன் தலையை ஆட்டி அதை ஆமோதித்தாள்..

"நீ செய்வ.. எனக்கு அது தெரியும்.. அதனாலதான் நான் சொன்னேன்.. இவளுக்கு வேலை கொடுக்காமல் இருந்தால் மட்டும் எல்லாம் சரியாகிருமான்னு.."

"நீரு ப்ளீஸ்.. டிரை டு அண்டர்ஸ்டாண்ட் மி..."

"டிரை பண்ணனும்ங்கிற அவசியமே இல்லை.. உன்னை நான் புரிஞ்சு வைச்சிருக்கிறேன்.."

"என்னால இந்தப் பெண்ணுக்கு வேலை கொடுக்காமல் இருக்க முடியாது.."

தாமோதரன் சித்தார்த்தனை ஆட்சேபித்து எதையோ பேசப் போனான்.. நீரஜா தலை அசைத்து அதை வேண்டாமென்று தடுத்து விட்டாள்.. ஓர் பெருமூச்சுடன் சித்தார்த்தனைப் பார்த்தாள்..

"உன் விருப்பம் போல செய்.."

"நீரஜா.."

"விடுங்க தாமு.. எது நடக்குமோ அதுதான் நடக்கும்.. நடக்கப் போகிறது நல்லதா நடக்கனும்.. அதுதான் என்னோட பிரார்த்தனை.."

நீரஜா வேகமாக அங்கிருந்து போய் விட்டாள்..

அத்தியாயம் - 31

முன்னம் ஒரு காலத்திலே..

முரசொலித்து வந்தாயோ...

உன் புன்னகையே போர்க்களமா..?

உன் மைவிழியே.. வாள் முனையா..?

"பஞ்ச பாண்டவர்கள் நாற்காலியோட கால்களைப் போல மூணு பேர்ன்னு ரெண்டு விரலைக் காட்டினானாம் ஒருத்தன்.. அந்தக் கதையைப் போல இல்ல இந்தக் கதை இருக்கு..?"

முகவாயில் கை வைத்து வியந்தபடி பக்கத்து வீட்டுப் பெண்ணிடம் கதை பேசிக் கொண்டிருந்தாள் அனுராதா.. யாமினிக்கு அவளைப் பார்க்கையில் பெறாமையாக இருந்தது..

அனுராதா அப்படித்தான்.. எதைக் குறித்தும் மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்ள மாட்டாள்.. ஆழ்ந்து சிந்திக்கவும் மாட்டாள்.. மேம்போக்காக யோசிப் பதைப் கூட கால விரயம் என்பாள்.. காலையில் எழுவது.. வாசல் கேட்டில் கட்டி விடப் பட்டிருக்கும் பையிலிருந்து பால் பாக்கெட்டை எடுத்து வந்து காபி போடுவது.. அதை வீட்டில் உள்ள அனைவரையும் அவரவர்க்குத் தக்கபடி சுப்ரபாதம் பாடி எழுப்பிக் கொடுப்பது என்று அனுராதாவின் ஓர் நாளின் பொழுது விடியும்..

அவள் பாடும் சுப்ரபாதம் அந்தக் குடும்பத்தின் அங்கத்தினர்க்கு ஏற்ப உருமாறும்..

அந்தக் குடும்பத்தின் தலைவனும்.. யதுநந்தன், யாமினியின் தகப்பனுமான பிரதாப்பை எழுப்பி விடும் போது..

"என்னங்க.. இன்னைக்கு கடைக்குப் போகனும்ங்கிற நினைப்பு இருக்கா இல்லையா..? காலாகாலத்தில எழுந்திருச்சு தோட்டத்துச் செடிகளுக்கு தண்ணிகாட்டிட்டு.. மார்க்கெட்டுக்குப் போயி காய் வாங்கி வந்துட்டு..

குளிச்சுக் கிளம்பினாத்தானே கடையைத் திறக்கப் போக முடியும்..? இப்படி இழுத்துப் போர்த்திக்கிட்டு படுத்திருந்தா.. வழியில் போகிறவங்களா வந்து செடிக்கு தண்ணி காட்டிட்டு.. காய்வாங்கிட்டு வந்து கொடுப் பாங்க.." என்று கேட்டு வைப்பாள்.

இது பிரதாப்புக்கான சுப்ரபாதம்..! இதைக் கேட்டவுடன் எழுந்து கொள்ளாவிட்டால்.. வழியில் போகிறவன் எவனாவது வந்து அவளுக்கே தண்ணி காட்டி விட்டால் என்ன செய்வது என்ற பதட்டத்துடன் பிரதாப் என்னதான் உறக்கம் வந்து இழுத்து அவரை படுக்கைக்குள் தள்ளினாலும் இமைகளைக் கொட்டி உறக்கத்தை விரட்டி விட்டு எழுந்து உட்கார்ந்து காபியை கைப்பற்றி விடுவார்..

'அஃது..'

வெற்றிப் பார்வையுடன் அடுத்ததாக யாமினிக்கு மூத்தவனாக பிறந்திருக்கும் யதுநந்தனை எழுப்பப் போவாள்.. அங்கே அவள் பாடும் சுப்ரபாதம் வேறுவிதமாக இருக்கும்..

யதுநந்தனின் முகத்தின் மீது தண்ணீர் துளிகளைத் தெளிப்பாள்..

"மழை..! மழை..! எங்கே என் கனவு தேவதை..?" என்று வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்காருகிறவன் கையில் காபிக் கப்பைத் திணித்து விட்டு..

"ஊம்..? அவ கல்பாக்கம் அனல் மின் நிலையத்தில் உனக்காக காத்துக்கிட்டு இருப்பா.. காலாகாலத்தில குளிச்சுட்டு ஆபிசுக்கு கிளம்பிப் போய் தேடு.." என்று நொடிப்பாள்..

"ஏம்மா..? கனவில செமத்தியான ஒரு ஃபிகர் கூட டூயட் பாடிக்கிட்டு இருந்தேன்.. அதைக் கெடுக்கனும்னு கங்கணம் கட்டி என் மூஞ்சியிலே தண்ணியைத் தெளிச்சு எழுப்பி விட்டுட்டு வாய் பேசறிங்களா..? இப்ப காபி இல்லேன்னு யார் அழுதா..?" கொதிக்கும் யதுநந்தனிடம்..

"நீ அழுக மாட்டேடா மகனே..! மகாபலிபுரத்தில பிறந்து வளர்ந்திட்டு இன்னமும் கனவில டூயட் பாடிக்கிட்டு உக்காந்திருக்கிற காதல் மன்னன் நீ..! உன் டூயட் முடிஞ்சு நீ எழுந்திருக்கிறதுக்குள்ள விடிஞ்ச பொழுது முடிஞ்சு போயிரும்.. அதுக்கப்புறம் நீ ஆபிஸ் போனா பூட்டுத்தான் உன்னை 'வா மச்சான் வா'ன்னு வரவேற்கும்.. தேவையா..?

உன் புத்தி தெரிஞ்சுதான் முகத்திலே தண்ணியடிச்சு எழுப்பி விட்டேன்.. டூயட் பாடறானாம் டூயட்..! வெறியேத்தாம பல்லைத் தேய்ச்சிட்டு குளிக்கப் போ.."

யதுநந்தன் வாய்க்குள் முணுமுணுத்தபடி பேஸ்டையும் பிரஷையும் தேடிப் போக.. அனுராதா யாமினியைத் தேடிப் போவாள்..

அது என்னவோ.. யாமினிக்கு விவரம் தெரிந்த நாள் முதலாய் அந்தக் குடும்பத்தின் மற்ற அங்கத்தினர்களுக்கு சுப்ரபாதம் பாடி எழுப்பி விடுவதைப் போல.. அவளுக்கும் சுப்ரபாதம் பாடி எழுப்பி விடும் வேலையை அனுராதாவுக்கு அவள் கொடுத்ததில்லை..

எப்போது அனுராதா போனாலும்.. அவள் கொட்டக் கொட்ட விழித்துக் கொண்டிருப்பாள்..

'இவ தூங்கவே மாட்டாளா..?'

இந்த சந்தேகம் நெடும்காலமாய் அனுராதாவின் மனதில் உண்டு.. அதற்கேற்றாற்போல.. சில இரவு வேளைகளில் அவள் தண்ணீர் குடிக்க சமையலறைக்கு வரும் போது யாமினியின் அறையில் நடமாட்டம் இருப்பதைக் கவனித்திருக்கிறாள்..

அனுராதா பயந்திருக்கிறாள்.. அடிமேல் அடியெடுத்து வைத்து மகளின் அறையை நெருங்கியிருக் கிறாள்..

'உள்ளே என் மக தனியா படுத்திருக்காளே.. பயந்து போயிட்டா என்ன செய்யறது..?'

பெற்ற மனம் அடித்துக் கொள்ள அவள் யாமினியின் அறைக்கதவைத் திறந்து பார்த்தால்.. அங்கே யாமினிதான் விளக்கைக் கூடப் போடாமல் அறையில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருப்பாள்.. சில சமயங்களில் அவள் ஜன்னல் கம்பிகளைப் பிடித்தபடி இருளில் தெரியும் வான்வெளியைப் பார்த்துக் கொண்டிருந்ததும் உண்டு..

'இருட்டுக்குள்ளே என்ன பண்றா..?'

அனுராதா கவலையுடன் விளக்கைப் போடுவாள்.. வெளிச்சவெள்ளத்தில் கனவு கலைந்தவளாக திரும்பிப் பார்க்கும் மகளைப் பார்க்கும்போது அனுராதாவின் அடி வயிற்றில் பயம் சூழும்..

'இவ ஏன் இப்படி இருக்கா..?'

தாயின் திகில் பார்வையை லட்சியம் செய்யாமல் யாமினி வெகு இயல்பாக.. என்னவோ பகல் வேளையில் அவள் ஜன்னலின் அருகே நின்று வான்வெளியை ஆராய்ச்சி செய்து கொண்டிருந்ததைப் போல முகத்தை வைத்துக்கொண்டு..

"என்னம்மா..?" என்று வினவி வைப்பாள்..

'என்னவா..? ஏண்டி.. கொள்ளிவாய் பிசாசுகளோட கூட்டணி போட்டிருக்கதைப் போல நட்டநடு ஜாமத்தில.. மோகினிப் பேய் போல உலாத்திக்கிட்டு.. போதாக்குறைக்கு ஜன்னல்கிட்டப் போய் இருட்டை உத்து உத்துப் பார்த்துக்கிட்டு நிக்கிறவ நீ..! என்னைப்பாத்து எதுவுமே நடக்காததைப் போல முகத்தை வைச்சுக்கிட்டு என்னன்னா கேட்கிற..?' அனுராதா மனதுக்குள் புலம்பித் தள்ளுவாள்..

அவற்றை மகளிடம் ஒர்நாளும் கேட்டுவிட மாட்டாள்.. அந்த விசயத்தில் அவள் சாதுர்யம் கொண்டவள்.. சராசரி அல்ல..

"என்ன யாமுக்குட்டி..! தூக்கம் வரலையா..?" என்றுதான் இதமாக கேட்டு வைப்பாள்..

"உம்..!"

யாமினியின் நெடுமூச்சு எதற்கானது என்று அனுராதாவுக்கு பிடிபட்டதே இல்லை..

'இவளுக்கு என்ன குறை..?'

அவர்கள் மிடில் கிளாஸ்தான் என்றாலும்.. அப்பர் மிடில்கிளாஸ் வகையைச் சேர்ந்தவர்கள்..

யாமினியின் அப்பா பிரதாப் நடத்திக் கொண்டிருக்கும் கடை லாபகரமாக இயங்கிக் கொண்டிருந்தது.. அண்ணன்

யதுநந்தனோ கைநிறைய மாதச் சம்பளம் வாங்கி.. அதை அப்படியே தங்கையின் திருமணத்துக்கென்று பேங்கில் போட்டு வருபவன்..

"அழகான பொண்ணுடா.. கைநிறைய சம்பாதிக்குது.. ஜாதகமும் பொருந்தியிருக்கு.. என்ன சொல்ற..?" என்று கேட்டால்..

"தங்கையோட கல்யாணம் முதலில் முடியட்டும்மா.. அதுக்குப்புறம்தான் எனக்கு.." என்று சொல்லிவிடும் பாசமலர் ரகத்தைச் சேர்ந்தான்..

தினந்தோறும் கனவில் வெவ்வேறு கனவுக் கன்னிகளுடன் டூயட் பாடுவான் என்பது வேறு விவரம்..

அம்மா அனுராதா அவளுடைய பிறந்த வீட்டுச் சீதனமாக வந்த அறுபது பவுன் நகைகளுடன்.. சேமிப்புப் பணத்தை நகைச்சீட்டுக் கட்டி சேர்த்து வாங்கி வைத்திருக்கும் எழுபது பவுன் நகைகளையும் சேர்த்து மகளுக்கே தாய்வீட்டுச் சீராக அளித்துவிடும் முடிவுடன் இருப்பவள்..

இப்பேற்பட்ட குடும்பத்தில் பிறந்த யாமினியின் மனதை அரிக்கும் கவலை எதுவாக இருக்கக் கூடும்..?

இதைத் தவிர்த்த கவலைகளும் ஒரு பெண்ணுக்கு வரக்கூடுமோ என்றிருந்தது அனுராதாவுக்கு..

ஒரு பெண்ணுக்கு என்ன வேண்டும்..? குறைவில்லாமல் நிரக்கச் சீர் செய்யும் தாய் வீடு வேண்டும்.. அனுராதாவின் பிறந்தவீடு அத்தகையதாகத்தான் இருந்தது.. அவர்களை விடவும் அனுராதா அவள் மகளுக்கு அதிமாக சீர் செய்வாளே.. அவளாவது நான்கு பெண்களில் ஒருத்தியாக பிறந்து வைத்தாள்.. யாமினி அவ்வாறு இல்லையே.. ஒரே அண்ணனுடன் பிறந்திருக்கும் ஒற்றைப் பெண்ணாயிற்றே.. அவளுக்காக தனது சம்பளப் பணத்தை சேமித்து.. தனது திருமணத்தையும் தள்ளிப் போடும் பாசமலர் அண்ணனின் உடன் பிறப்பாயிற்றே என்று அனுராதாவுக்கு குழப்பமான குழப்பமாக இருந்தது..

'படிச்சிருக்கா.. அழகா இருக்கா.. பணம் காசு இருக்கிற குடும்பத்தில பிறந்திருக்கா.. கலகலன்னு சிரிச்சுக்கிட்டு இருக்கிறதை விட்டுட்டு எதுக்காக மோட்டு வளையைப் பார்த்துக்கிட்டு இருக்கா..? அதையும் பகல் நேரத்தில் பார்க்காம ஜாமத்தில இல்ல பார்த்து வைக்கிறா..?'

அனுராதாவுக்கு தீராத தலைவேதனையாக இது மட்டுமே இருந்தது..

அத்தியாயம் - 32

என் மனப் பெட்டகத்தை..

இறுக்கமாக மூடி விட்டேன்...

தொடராமல் உனைத் தொடரும்..

சொந்தமடா.. எனது சொந்தம்..

யாமினியைப் பற்றிய கவலையைத் தவிர வேறு கவலை அனுராதாவுக்கு இல்லை.. அவள் யாமினியைப் போல வித்தியாசமான பெண்ணல்ல.. வெகு இயல்பான, சராசரி குணங்களைக் கொண்டவள்.. கணவனை வேலை ஏவுவதில் இன்பம் கொள்ளும் மனைவியாகப் பட்டவள்..

"என்ன ஆச்சு..? செடிகளுக்கு தண்ணி காட்டியாச்சா..?"

"ஏண்டி..! என்னவோ ஆடு, மாடுகளுக்கு தண்ணி காட்டிட்டயான்னு கேட்கிறதைப் போல செடிகளுக்கு தண்ணி காட்டியாச்சான்னு கேட்டு வைக்கிறயே.. உன்னை என்ன செய்தால் தேவலாம்..?"

"ஏன் செய்ய மாட்டிங்க.. உங்களுக்கும் உங்க பிள்ளைகளுக்கும் வாய்க்கு ருசியா வடிச்சுக் கொட்டறேனில்ல..? நீங்க இதுவும் சொல்லுவீங்க.. இதுக்கு மேலேயும் சொல்லுவீங்க.."

"இதுக்கு மேலே சொன்னா நீ சும்மாதான் விடுவ.."

அலுத்துக் கொண்டே தோட்டத்து செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சிவிட்டு.. காய்கறி வாங்க மார்க்கெட்டுக்கு போய் வருவார் பிரதாப்.. வியர்வை வழியும் முகத்துடன் காய்கறிப்பையை சுமந்து கொண்டு வருபவரிடம் ஐயோ பாவம் பார்க்காமல் அவர் வாங்கி வந்திருக்கும் காய்களில் ஆயிரத்தைந்து நொட்டை சொல்லுவாள் அனுராதா..

"இது என்ன பீர்க்கைங்காயா..? முருங்கைக்காய் போலவே வத்தலும், தொத்தலுமா இருக்கு... உங்களுக்குன்னு காய் கிடைக்குது பாருங்க... எங்கேயிருந்துதான் இதையெல்லாம் தேடிப் பிடிச்சு வாங்கிட்டு வருவீங்களோ.. உங்க மூஞ்சியைக் கண்டதும் கடைக்காரன் ஏமாந்த சோணகிரி எம்புட்டாச்சுன்னு விக்காத காயையெல்லாம் உங்க தலையில கட்டி அனுப்பறான் போல.. ம்ஹீம்..."

"அடி வில்லங்கத்துக்கு பேர் போனவளே.. உன் கையில இருக்கிற காயை உத்துப்பாருடி.."

"அது என்ன தேவைக்கு..?"

"அது முருங்கக்காய்தாண்டி இவளே.. பீர்க்கங்காய் இங்கே இருக்கு.. நொட்டை சொல்லனும்னு முடிவு பண்ணினவ கையில இருக்கிற காய் எதுன்னு பார்க்காமக் கூட நொட்டை சொல்லுவியா..?"

அப்போதுதான் கையில் இருக்கும் முருங்கக்காயை பார்த்து வைப்பாள் அனுராதா.. ஆனாலும் தோல்வியை ஒப்புக்கொள்ளவே மாட்டாள்.. அந்தக் காயிலிருந்து அடுத்த காய்க்கு வெகு இலகுவாக தாவி விடுவாளே..

"வெண்டைக்காயா இது..? முத்தலா இருக்கு.. முனையை உடைச்சுப் பாத்து வாங்க மாட்டிங்களா..?"

"மிளகாயோட முனையை உடைச்சுப் பாத்து வாங்கினேன்னு வைய்யி.. கடைக்காரன் என்னை கொத்து புரோட்டா போட்டிருவான்.. நல்லாப்பாரு.. உன் கையில இருக்கிறது மிளகா.."

அடுத்து தோல்வியைத் தழுவினாலும் அனுராதா அயரமாட்டாள்..

"தக்காளி என்ன இந்த லட்சணமா இருக்கு..?"

"வேற எந்த லட்சணமா இருக்கணும்..?"

"உருளைக்கிழங்கப் பாரு.. உருண்டை சைசா இருக்கு.."

"பின்னே..? தட்டை சைசிலயா இருக்கும்..?"

"வெங்காயம்.."

"புருசனை இப்படித்தான் திட்டுவியா..?"

"அட உங்களைச் சொல்லலைங்க.."

"அப்பாடி..! பிழைச்சேண்டி.."

"இந்த வெங்காயத்தைச் சொன்னேன்.. நன்னி, நன்னியா.. இப்படியா வெங்காயத்தை வாங்குவாங்க..?"

"எப்படி வாங்கினாலும் நீ நொனனாட்டியம் தான் சொல்லப் போற.. இதுக்கெல்லாம் கவலைப்பட்டா நான் விக்கி, விறைச்சு, இளைச்சுத் துரும்பாப் போயிருவேன்.."

நீ பாட்டுக்கு நொட்டை சொல்லிக் கொண்டிரு.. நான் பாட்டுக்கு கடையைத் திறக்கப் போகிறேன் என்று பிரதாப் குளிக்கப் போய் விடுவார்.. காலை டிபனையும், மகனுக்கான மதிய உணவையும் தயார் பண்ணி பிள்ளைகளையும் கணவரையும் உட்கார வைத்து பரிமாறி அனுப்பி வைத்து விட்டு.. வேலைக்காரப் பெண்ணிடம் வீட்டை சுத்தம் பண்ணச் சொல்லி விட்டு அனுராதா அக்கடா என்று பக்கத்து வீட்டுப் பெண்களிடம் அரட்டை அடிக்கக் கிளம்பி விடுவாள்.. ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரின் வீட்டு வாசல்படியை மீட்டிங் நடக்கும் ஸ்தலமாக மாற்றும் பெண்களின் கையில் மதிய உணவுக்கான கீரையும், வெங்காயமும் இருக்கும்..

கீரையை ஆய்ந்து, வெங்காயத்தை உறித்து முடிக்கும் போது காலை அரட்டை முடிந்திருக்கும்.. உச்சி வெயில் மண்டையைப் பிளக்கும் 12 மணி அளவில் பெண்கள் குழு

அவரவரின் வீட்டுக்கு.. மதிய உணவு சோற்றுக்கு என்று பிரிந்து சென்று மதிய உணவை தயாரிக்க ஆரம்பித்து விடும்..

மதிய உணவை தயாரிக்க ஒரு மணிநேரமே போதும் அனுராதாவுக்கு..

பிரதாப்பும் யாமினியும் சாப்பிட வரும் போது மதிய உணவு சுடச்சுட டைனிங் டேபிளில் இருக்கும்.. மதிய உணவுக்குப் பின்னால் எந்த ராணி எந்தக் கோட்டைக்குப் போனாலும் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டாள் அனுராதா..!

அவளுடைய படுக்கையறையில் ஏஸியைப் போட்டு விட்டு எதைப் பற்றியும் கவலை கொள்ளாமல் ஆழ்ந்து உறங்கி விடுவாள்.. மதியத் தூக்கம் என்பது அந்த அளவுக்கு அவளுக்கு இன்றியமையாதது..

ஆழ்ந்த உறக்கத்துப் பின்னால் அவள் எழுந்து கொள்ளும் போது மணி நான்கு என்று இருக்கும்.. முகம் கழுவி, தலைவாரி.. மாலை காபி டிபனைத் தயாரித்து விட்டு பூஜையறையில் விளக்கை ஏற்றும்போது யதுநந்தன் வேலையிலிருந்து திரும்பியிருப்பான்.. மாலை நேரக் காபி, டிபனுக்காக கடையை உதவியாள்களின் மேற்பார்வையில் விட்டு விட்டு பிரதாப்பும் வந்து சேர்ந்திருப்பார்..

அவர்களுக்கும்.. மொட்டைமாடியில் நின்று வெட்ட வெளியை வெளித்துக் கொண்டிருக்கும் யாமினிக்கும் காபி டிபனைக் கொடுத்து விட்டு டிவியின் முன்னால் உட்கார்ந்து விடுவாள் அனுராதா..

மாலையிலிருந்து.. இரவு எட்டு மணிவரை ஒளிபரப்பாகும் அத்தனை சீரியல்களையும் பார்த்து விட்டு இரவு டிபனுக்காக சமையலறையில் நுழைவாள்..

இரவு உணவுக்குப் பின்னாலும் சில சீரியல்களைப் பார்த்துவிட்டு பத்து பணிக்கெல்லாம் தூங்கப் போய் விடுவாள்.. படுத்த அடுத்த நொடியில் உறங்கியும் விடுவாள்..

யாமினிக்கு அது போன்ற உறக்கம் வாய்த்ததில்லை.. அவள் என்னதான் முயன்றாலும்.. எவ்வளவுதான் அலுப்பாக இருந்தாலும் படுத்தவுடன் உறக்கம் கொள்ள அவளால் முடிந்ததில்லை.. விடியும் வரை அறைக்குள்ளேயே நடந்து கொண்டிருப்பாள்.. சில சமயங்களில் ஜன்னல் வழி தெரியும் இருளை வெறித்துக் கொண்டிருப்பாள்.. அவளைச் சுற்றியிருக்கும் நூதனமான வினோதங்களுக்கான விடை தேடி அவள் மனம் தவிக்கும்..

அனுராதாவிற்கு இப்பேற்பட்ட இக்கட்டுக்களெல்லாம் பரிச்சயமானதல்ல.. அவளது உலகமே தனி.. அதில் அவள் எவ்விதமான மனச்சிக்கலும் இல்லாமல் வெகு இன்பமாக வாழ்ந்து கொண்டிருந்தாள்..

வார இறுதி நாள்களில் சினிமாவுக்கும், கடற்கரைக்கும் போயாக வேண்டும் என்பாள்.. வெள்ளிக்கிழமை கோவிலுக்கானது.. மாத இறுதியில் வெளியூர் பயணம்..

அனுராதாவின் இந்த விருப்பங்களை தட்டாமல் நிறைவேற்றி வைப்பார் பிரதாப்.. அவற்றில் யாமினி பங்கு பெற விரும்புவதில்லை என்பதில்தான் அனுராதா பயம் கொண்டாள்..

'இவ ஏன் இப்படி இருக்கா..?'

இந்தக் கேள்வியை அவள் மனதுக்குள் கேட்காத நாளில்லை.. மற்ற பெண்கள் குதூகலம் கொள்ளும் விசயங்களில் மனதைச் செலுத்தாமல்.. சதா சர்வ காலமும் மகாபலிபுரத்தின் சிற்பக் கோவில்களிலும்.. கடற்கரை யோரத்திலும் சுற்றி வருபவளை நினைத்து அவளது பயம் அதிகரித்தது.. பிரதாப்பிடம் அவற்றை பகிர்ந்து கொண்டால், அவர் அவளை...

"ஞான சூன்யம்.." என்றார்..

"சான்ஸ் கிடைச்சுருச்சுன்னு பேசிப் பாக்கறிங்களா..? நீங்களும் உங்க பரம்பரையும் ஞானத்தில பொங்கல் வைச்சவங்க.. நாங்க மட்டும் ஞான சூன்யமா..? நினைப்புத்தான்.."

"ஏய்ய்..! என் பொண்ணு கலா ரசிகைடி.."

"அப்படின்னா.. 'மானாட.. மயிலாட..' பாத்துக்கிட்டு வீட்டுக்குள்ளேயே அடங்கி இருக்க வேண்டியதுதான..?"

"அடிப்பாவி..! நான் சொன்ன கலா ரசிகைங்கிறது வேறடி.. நீ உடனே டான்ஸ் மாஸ்டர் கலாவோட ரசிகைன்னு நினைச்சுட்டியா..?"

"ஹலோ..! உடனே வானத்துக்கும் பூமிக்குமா எம்பி எம்பி குதிக்க வேணாம்.. சின்ன 'மிஸ் அண்டர்ஸ்டாண்டிங்..' அதுக்குப் போய் இத்தன பில்ட்-அப்பா..?"

"நான் சிற்பக் கலைக்கூடம்ன்னு கலை நுணுக்கத் தோட வாழறவன்... என் பெண்ணும் என்னைப் போல கலைகளை ரசிக்கிறவளா இருக்கான்னு சொல்ல வந்தேன்.."

"இப்பச் சொன்னதைப் போலவே அப்பவும் தெளிவாச் சொல்லியிருக்க வேண்டியதுதானே..?"

அதற்கும் பிரதாப்பை காரணம்காட்டி நொடித்து வைத்தாள் அனுராதா..

அத்தியாயம்- 33

கண்முன்னே தோன்றும் காட்சி..

கனவா..? இல்லை.. நனவா..?

வாழ்க்கை வகுக்கும் கணக்குகளை..

வாழ்ந்து பார்த்து அறிந்தவர் யார்..?

ஊரில்.. உலகத்தில் உள்ள மற்ற பெண்களைப் போல தமது பெண்ணும் இளமைப் பருவத்துக்கேயுரிய துடிப்போடும், கலகலப்போடும் இல்லையே என்று கவலைப் பட்டாள் அனுராதா..

அதைப்பற்றி பிரதாப்பிடம் அவள் பேச முனைந்தால்.

"என் பெண் வித்தியாசமானவடி.." என்று அவர் கொண்டாடி வைத்தார்..

"என்ன கழுதைக்கு வித்தியாசமா இருந்து தொலைக்கனும்..? ஊரைப்போல நாட்டைப் போல இருந்து தொலைச்சா ஆகாதா..?" அனுராதாவுக்கு கோபம் கோபமாக வந்தது..

ஒரு டிவி உண்டா..? சினிமா உண்டா..? ஊர்சுற்றல் உண்டா..? தோழிகளுடன் வம்பு பேசுதல் உண்டா..? லேப்டாப்பை நோண்டி பேஸ்புக்கே கதியென்று இருத்தல் உண்டா...? முகமறியாத தோழமைகளுடன் மணிக் கணக்கில் சாட் பண்ணுவது உண்டா..? செல்போனை காதோடு பசை போட்டு ஒட்டிக் கொண்டு இருபத்தி நான்கு மணிநேரமும் யாரோ ஒருவருடன் பேசுதல் உண்டா..? அதிலிருக்கும் மெஸேஜ் பகுதியை தூங்க விடாமல் தொந்தரவு செய்தல் உண்டா..?

ஊஹீம்.. இவை எதுவும் இல்லாமல்.. சதா.. மாமல்லபுர சிற்பங்களும்.. கடலோரமுமாக காலம் கழிக்கும் விசித்திர குணம் வாய்ந்த மகளைப் பெற்றிருப்பதில் நொந்து போனாள் அனுராதா..

"அக்கம் பக்கத்தில இருக்கிற டீன்-ஏன் பொண்ணுகள்ளாம் உன்னைப் போலவா இருந்து வைக்குதுக..?" மகளிடம் பொருமினாள்..

"அறிவு கெட்டவளே..! அதுக கெட்டழியறதைப் போல என் மகளையும் இருக்கச் சொல்றியா..?" கடிந்து கொண்டார் பிரதாப்..

மகளின் வித்தியாசமான தன்மையில் அவர் பெருமை கொண்டிருப்பது அனுராதாவின் தலைவேதனையை அதிகரித்தது..

"ம்ஹீம்...! இப்படியாப்பட்ட பொண்ணுக்கு இப்படியாப்பட்ட அப்பா.." என்று தலையில் அடித்துக் கொண்டாள்..

"நாங்கள்ளாம் சரியாத்தான் இருக்கோம்.. நீ முதல்ல உன் வம்பு மடத்தில அக்கப்போர் பேசறதை குறை.." என்றார் பிரதாப்..

"குறைச்சுட்டு.. நானும் உங்க மக கூட ஜோடி போட்டுக்கிட்டு கடலோரமா அலையட்டுமா..?" இடக்காக கேட்டு வைத்தாள் அனுராதா..

"அதுக்கெல்லாம் ஓர் மனசு வேணும்டி.."

"என்ன மனசு..?"

"ரெக்கை கட்டி பறக்கற மனசு..!"

"அதாவது பாரதியாரோட கவிதையில வர்றதைப் போல விட்டுச் சிறகடிக்கனும்னு சொல்கிறீங்க..?"

"அட..! உனக்கு பாரதியாரோட கவிதை கூடத் தெரியுமா அனு..?"

"ஏன் தெரியாது..? அவர்தானே இந்தப் பாட்டைப் பாடினவர்..?"

"எதைடி சொல்ற..?"

பிரதாப் என்னவோ.. 'பாரதியார்' சினிமாவில் வரும் குயிலப் போல பொண்ணு ஒன்னுன்னு அனுராதா பாடி வைப்பாள் என்ற நினைவில்தான் கேட்டு வைத்தார்.. அவளோ..

"மாட்டை வசக்கித்..

தொழுவினில் மாட்டும்

வழக்கத்தைக் கொண்ட வந்தே..

வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார்..

அதை வெட்டி விட்டோமென்று கும்மியடி.."

என்று பாடி வைத்தாள்..

'பாருடா.. இவ கூட பாரதியார் கவிதை சொல்கிறா..'

பிரதாப் அனுரதாவை ஏற இறங்க பார்த்து வைத்து விட்டு..

"அருமையான பாட்டு.." என்று சொல்லி வைத்தார்..

"இதுக்கே பாராட்ட ஆரம்பிச்சா எப்படி..? இன்னும் இருக்கு கேளுங்க.."

அனுராதா கிடைத்தது வாய்ப்பு என்று இன்னும் கொஞ்சம் கொட்டி முழக்கினாள்..

"ஏட்டையும் பெண்கள் தொடுவது..

தீமையென்றெண்ணியிருந்தவர்
மாண்டுவிட்டார்

வீட்டுக்குள்ளே பெண்ணை

பூட்டி வைப்போமென்ற

விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.."

அனுராதாவின் விழிகள் ஜ்வலித்த ஜ்வலிப்பை தாங்க மாட்டாத பிரதாப்..

"உன்னைப் போய் வீட்டுக்குள்ள பூட்டி வைக்க முடியுமாடி..? யாரு நீ..? சுனாமியாச்சே.. கதவை உடைச்சு எறிஞ்சுற மாட்ட..? வீணாய் புதுக்கதவை போடற வேலையை நான் ஏண்டி பார்க்கப் போறேன்..?" என்று சொல்லி விட்டார்..

அவ்வளவுதான்.. அனுராதா அவரை பிலுபிலு வென்று பிடித்து உலுக்கி எடுத்து துவைத்து தோரணம் கட்டி விட்டாள்..

"நான் சுனாமியா..? உங்க அம்மா சுனாமி..! அக்கா சுனாமி..! ஏன் அண்ணன் பெண்டாட்டியும் சுனாமி..! உங்க பாட்டி சுனாமி..! பூட்டி சுனாமி..! உங்க பரம்பரையே சுனாமி..! நீங்க என்னைப் பார்த்து சுனாமி பட்டம் கொடுக்கறிங்களா..?"

அவள் போட்ட போட்டிற்கு சுனாமியே தேவலை என்று பிரதாப்புக்குத் தோன்றி விட்டது.. தெரியாமல் வாய்விட்டு வாங்கிக் கட்டிக் கொள்வது ஒருரகம்.. தெரிந்தே வாய்விட்டு வாங்கிக் கட்டிக் கொள்வது பிரதாப் போன்றோரின் ரகம்..

விடியாத கருக்கல்கொண்ட அந்த வேளையில் பட்சிகளின் கூச்சலில் கண் விழித்தாள் யாமினி.. இருளிலும் அவள்

உணர்ந்த வெளிச்சத்தில் எழுந்து ஜன்னலோரமாக சென்று தோட்டத்தை ரசித்தாள்.. பனி படர்ந்த புல்வெளியும், செடிகளின் இலைகளும் அவளை 'வா'வென்று அழைத்ததில் அறையை விட்டு வெளியே வந்து ஹாலைக் கடந்து வாசல் கதவை விரியத் திறந்து தோட்டத்தின் படிகளில் இறங்கினாள்.. இருளின் போர்வையில் பனிபடர்ந்த செடிகளையும், புல்வெளியையும் தேடி நடந்தாள்..

குளிர் காற்றோடு கடல்காற்றும் இனைந்து வந்ததில் அவளது உடலில் புத்துணர்ச்சி பரவியது.. செடிகளில் பூத்திருந்த மலர்களை வருடிப் பார்த்தவள்.. இருள் வெளியில் புல்வெளியில் ஓடிய முயல் குட்டியுடன் ஓடி விளையாடினாள்.. பொழுது நகர்ந்தது.. லேசான வெளிச்சம் பரவியது..

"குக்கூ.." என்று கூவிய குயிலுக்கு இசைப்பாட்டாய்..

"குக்கூ.." என்று பதிலுக்கு கூவினாள் யாமினி..

இங்கே இவள் குயிலுடன் இசைப்பாட்டு படித்துக் கொண்டிருந்தபோது.. "ஹாவ்" என்ற கொட்டாவியுடன் கண் விழித்தாள் அனுராதா.. ஜன்னல் வழி தெரிந்த வெளிச்சகீற்றில் எழுந்து கொள்ள வேண்டுமே என்ற அலுப்புடன் எழுந்தவள்.. பாத்ரூமுக்குள் புகுந்தாள்.. முகம் கழுவி.. பிரஷ் பண்ணி.. உடை திருத்தி அறைக் கதவை திறந்து.. அன்னநடை போட்டு ஹாலைக் கடந்து வாசல் கதவை அணுகப் போனவள் அரண்டு போய் நின்று விட்டாள்..

வாசல்கதவு.. விரிய திறந்து கிடந்தது..

வழக்கமாக காம்பவுண்டு கேட்டில் கட்டித் தொங்க விடப் பட்டிருக்கும் பையிலிருக்கும் பால் பாக்கெட்டை எடுப்பதற்காக அவள் தான் கதவைத் திறப்பாள்.. அவளுக்கு முன்னரே அந்த வீட்டில் எவரும் கண்விழித்துத் தொலைக்க மாட்டார்கள்..

அப்படியிருக்கையில் அவள் வீட்டு வாசல் கதவு எப்படி விரியத் திறந்து கிடக்கிறது..?

"திருடன்..! திருடன்..!"

அவள் போட்ட சப்தத்தில் பிரதாப்பும், யதுநந்தனும் அலறியடித்துக் கொண்டு கண்விழித்து ஆளுக்கொரு ஆயுதத்தை கையில் பிடித்தபடி ஓடி வந்தார்கள்..

யதுநந்தனின் கையில் கிரிக்கெட் பேட் இருந்தது.. பிரதாப்பின் கையில் ஒட்டடைக் கொம்பு இருந்தது.. அதைப் பார்த்த அனுராதா அந்தநிலையிலும் வாய் விட்டு வைத்தாள்..

"யாராருக்கு எது சொந்தமோ.. அதைத் தூக்கிக்கிட்டு ஓடி வந்திருக்கீங்க.. வெரிகுட்..!"

மனைவி சொன்ன பின்புதான் தன் கையில் இருந்த ஒட்டடைக் குச்சியைக் கவனித்தார் பிரதாப்..

சிற்பக் கலைக்கூடம் வைத்திருப்பவருக்கு ஒட்டடைக் குச்சிதான் சொந்தமானதா..?

திருடனை விட்டுவிட்டு மனைவியின் தலையில் அந்தக் குச்சியை வைத்து மடேர், மடேர் எனப் போடும் ஆவேசம் அவருக்குள் வந்தது..

அப்படி அடித்து வைத்து அவள் விழுக நேர்ந்தால் ஹாஸ்பிடலுக்கு அவளை அவர்தான் அள்ளிக் கொண்டு போக வேண்டும் என்ற நினைவில் நிதானித்தார் அவர்..

"எங்கேடி திருடன்..?"

"அவனை என்ன நான் கர்ச்சீப்பிலா முடிஞ்சு வைச்சிருக்கேன்..?"

"அப்புறம் ஏண்டி திருடனை எதிர்க்க நிற்க வைத்திருக்கிறதைப் போலவே கத்தித் தொலைச்ச..?"

"நீங்க வேற என் வாயைப் பிடுங்கி வனவாசம் போக வைக்காதீங்க.."

"நீ வனவாசம் போனா வனமெல்லாம் உருப்பட்ட மாதிரிதான்.. அது பிழைச்சுப் போகட்டும் விட்டுவிடு.."

"சோக்கு..?"

"இல்லடி.. ஜோக்கு.."

"நக்கலு..? எனக்குச் சிரிப்புத்தான் வரலை.."

"என்னைக்குத்தான் அது உனக்கு வந்துச்சு..? எப்பப்பாரு உன் வாயில கூப்பாடுதான் வரும்.. எதுக்காகடி திருடன்.. திருடன்னு கத்தி வைச்ச..?"

"எப்பவும் நான்தானேங்க வந்து வாசக் கதவை திறப்பேன்..?"

"ஆமாம்.. அதுக்கென்ன..?"

"இன்னைக்கு என்னடான்னா நான் வருகிறப்பவே வாசக்கதவு விரியத் திறந்து கிடக்கு.."

அனுராதாவின் வார்த்தைகளில் பிரதாப்பும், யது நந்தனும் உஷாரானார்கள்.. அந்த வீட்டில் சேவலுக்கு அடுத்தபடி விழித்துக் கொள்வது அனுராதா மட்டும்தான்.. வேறு யாரும் அந்த அதிகாலையில் கண்விழிக்க மாட்டார்கள்.. அவள் வரும் போது கதவு திறந்திருந்தால் அதற்கான பொருள் ஒன்றே.. ஒன்றாகத்தான் இருக்க முடியும்..

"யது..! திருடன்தான் வந்திருக்காண்டா.."

"ஆமாம்ப்பா.."

தகப்பனும், மகனும் வந்திருக்கும் திருடன் எவனாக இருக்கக் கூடும் என்று தங்களுக்குள் பேசியபடியே வீட்டின் மூலை முடுக்குகளை அலசி ஓய்ந்தார்கள்.. மொட்டை மாடியில் தேடினார்கள்.. வாட்டர் டேங்கைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை..

அனைத்து இடங்களிலும் தேடி முடித்து அலுத்துக் களைத்து இறங்கி வந்தவர்கள் அப்போதுதான் யாமினியை தோட்டத்தில் பார்த்து வைத்தார்கள்..

அத்தியாயம் - 34

கொதிக்கின்ற கொதிகலனாய்..

கொந்தளிக்கும் எனது வாழ்க்கை..

எத்திசையில் திரும்பினாலும்..

நின் முகமே அங்கிருக்கும்..

"அப்பா..! அது யாமினிதானே..?"

தோட்டத்துப் புல்வெளியில் மண்டியிட்டு முயல் குட்டியைத் தூக்கி மடியில் வைத்து விளையாடிக் கொண்டிருந்த யாமினியைக் காட்டினான் யதுநந்தன்..

"யாமினிதாண்டா.."

பிரதாப் கோபத்துடன் அனுராதாவை பார்த்தார்..

"ஏண்டி.. வீட்டுக்குள்ள திருடன் வந்திட்டான்னு அலறினயே.. வீட்டுக்குள் இருந்த யாமினி எங்கே போனான்னு முதல்ல பார்த்தியா..?"

"என்னைக் கேட்கிறது இருக்கட்டும்.. யாமினியோட ரூமை நீங்களும், உங்க மகனும் அக்கு வேறு, ஆணி வேறா அலசி ஆராய்ஞ்சீங்களே.. அவ ரூமில் இல்லைன்னு உங்க ரெண்டு பேரோட மரமண்டையிலயும் ஏறலையா..?"

"அம்மா..!"

"என்னடா..?"

"அப்பாவை என்ன வேணும்னாலும் சொல்லிக்கங்க.. ஐ டோன்ட் கேர்.."

"அருமையான பிள்ளை..! ஏங்க.. உங்களைத்தானே.. உங்க புத்திரசிகாமணி சொன்னது உங்க காதில விழுந்ததா..?"

"விழுந்துச்சு.. விழுந்துச்சு.. இப்பேர்பட்ட பிள்ளையைப் பெற நான் என்ன தவம் செய்தேன்..!"

"ம்ப்ச்.. தேவையில்லாம டயலாக் பேசி சோதிக்கா தீங்கப்பா.. ஹஸ்பெண்ட் அண்ட் வொய்புக்குள்ள ஆயிரம் பேசிக்குவீங்க.."

"இந்த ஹஸ்பெண்ட் அண்ட் வொய்ப்தான் உன்னோட பேரண்ட்ஸ்.. மனசில இருக்காடா என் மகனே..?"

"ம்மா.."

"கன்னுக்குட்டியப் போல கத்தி வைக்காதே.. என்னன்னு சொல்லு.."

"அதெப்படி என்னைப் பாத்து நீங்க மரமண்டைன்னு சொல்லி வைக்கலாம்.. ஐ அப்ஜெக்ட் இட்.."

"அதுக்கு மரமண்டைதான் அப்ஜெக்ட் பண்ணனும்.. நீயேன் பண்ற..?"

அனுராதா போட்டுத் தாக்கியதில் கோபம் கொண்ட யதுநந்தன் யாமினியை எரிச்சலுடன் பார்த்து வைத்தான்..

அவளால் அல்லவா அவனது விடிகாலைத் தூக்கம் வீணாகப் போனது..?

"ஏய்ய்.. யாமினி..!" அதட்டல் போட்டான்..

முயல்குட்டியைக் கொஞ்சிக் கொண்டிருந்த யாமினி நிமிர்ந்து மொத்தக் குடும்பத்தையும் பார்த்து விட்டு..

"ஹாய்..! குட் மார்னிங் ஆல் ஆஃப் யூ.." என்று சொல்லி வைத்தாள்..

"காலங்காத்தால கட்டையைத் தூக்கிக்கிட்டு திருடனை தேட வைச்சிட்டு எவ்வளவு ஈஸியா குட்மார்னிங் சொல்றான்னு பார்த்தீங்களாப்பா..?" பல்லைக் கடித்தான் யதுநந்தன்..

எப்போதும் மகளின் பக்கமே நியாயம் பேசும் பிரதாப் அன்று மௌனம் சாதித்தார்.. அவர் விழிகள் யோசனையுடன் யாமினியைப் பார்த்தன.. அவர் மனதில் ஓர் கணக்கீடு ஓடியது..

'அனுராதா எழுந்திருக்கும் போதே லேசாத்தான் விடிஞ்சிருக்கும்.. அவ வந்து பார்த்தப்பவே கதவு திறந்து கிடந்ததுன்னா.. இவ எத்தனை மணிக்கு எழுந்திருச்சிப்பா..?'

ஏனோ.. அவர் மனதில் மெலிதான பயம் எழுந்தது..

"யாமினி..?" கனிவுடன் அழைத்தார்..

"அப்பா.." அவள் விழிகளை உயர்த்தி அவர் முகம் பார்த்தாள்..

"இங்கே என்னம்மா பண்ற..?"

அவரின் இதமான கேள்வியில் யதுநந்தன் கோபம் கொண்டான்..

"ஊம்..? பார்த்தாத் தெரியலை..? முயல்குட்டிகூட கொஞ்சிக்கிட்டு உட்கார்ந்திருக்காப்பா.."

"பொறு யது.. நீ எப்பம்மா எழுந்த..?"

"அப்பவே எழுந்துட்டேன்ப்பா.."

யாமினியின் பதிலில் அவருக்கு 'திக்' கென்று இருந்தது.. அவர் விழிகளும், அனுராதாவின் விழிகளும் சந்தித்துக் கொண்டன..

"அப்பவேன்னா..?"

"டைம் தெரியலைப்பா.. முழிப்பு வந்தது.. தோட்டத்தில குருவியெல்லாம் சத்தம் போட்டுச்சு.. தோட்டத்துக்கு வந்துட்டேன்.."

"விடிஞ்சும் விடியாத பொழுதில தோட்டத்துப் பக்கம் வரலாமாம்மா..?"

"நான் வந்தப்ப விடியலைப்பா.."

இயல்பாக கூறி அனைவரையும் அரள வைத்தாள் யாமினி..

"என்னது.. விடியலையா..?"

"ஆமாம்மா.. இருட்டாத்தான் இருந்துச்சு.. விடியப் போகிற சமயம் போல.. அதனாலதான் குயிலும், குருவியும் கூவுச்சு..?"

"உடனே நீ கதவைத் திறந்து வெளியில வந்துட்டியா..?"

"ம்ம்ம்.. ஆக்சுவலா அப்பா.. விடிகிற பொழுதோட ஒவ்வொரு வினாடியையும் நாம உணர்ந்து ரசிக்கிறதுல உள்ள சுகமே தனிப்பா.."

இப்படிக் கூறும் மகளைப் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்ட அனுராதா.. கணவரிடம் திரும்பி..

"கலாரசிகை சொல்றதை நீங்களே ஊம் கொட்டிக் கேளுங்க.." என்று கோபமாக சொல்லி விட்டு வீட்டுக்குள் போய் விட்டாள்

ஆனாலும் யாமினி இந்த அளவுக்கு சோதித்து வைக்கக் கூடாது என்று அன்று தோன்றி வைத்தது பிரதாப்புக்கு.. என்றுமே மகளுக்கு சப்போர்ட்டாய் குரல் கொடுப்பவரால் அன்று அந்தக் குரலை எழுப்ப முடிய வில்லை.. இப்படி இருட்டுக்குள் தோட்டத்தில் உலாவும் மகளைப் பெற்று வைத்துவிட்டு எந்த முகத்தோடு அவர் சப்போர்ட்டாய் குரல் எழுப்புவார்..?

அவருடைய சங்கடத்தை உணராதவளாக தன் போக்கில் முயல் குட்டியின் காதுகளை வருடி விளையாடிக் கொண்டிருந்தாள் யாமினி.. மகளின் விளையாட்டில் மனம் கனிந்து விட்ட பிரதாப்..

"எப்படி விளையாடறான்னு பாரு அனு..! அப்படியே அச்சு அசல் இவ ஆறு வயசுக் குழந்தைதான்.." என்று சொல்லியபடி அருகில் பார்த்தார்..

அங்கே அனுரதா இல்லை.. அவளுக்குப் பதிலாக யதுநந்தன்தான் நின்று கொண்டிருந்தான்..

"அம்மா அப்பவே இவ பண்ணின அழிச் சாட்டியத்தைத் தாங்கிக்க முடியாம வீட்டுக்குள்ளே போயாச்சு..

இந்நேரத்துக்கு எத்தனை பாத்திரம், பண்டம் உடைஞ்சிருக்குதோ.. ம்ஹீம்.. நீங்க என்னடான்னா இவள பச்சைக் குழந்தைங்கறிங்க.. எந்தப் பச்சைக் குழந்தை இருட்டுக்குள்ளே தோட்டத்தில வந்து உக்காந்து கோட்டான் போல கத்திக்கிட்டு இருக்குமாம்..?" யதுநந்தன் எரிந்து விழுந்தான்..

"டேய்..! அது குயில்டா.."

"இருட்டுக்குள்ளே குயில் கத்தினாலும் எனக்கு அது கோட்டான் சத்தம் போலதான் கேட்டு வைக்கும்.."

"நீ இருக்கியே..."

"அப்பா..! முதல்ல இவ எதுக்காக இருட்டுக்குள்ள தோட்டத்துக்கு வந்தான்னு கேளுங்க.. வயசுப் பெண்ணுப்பா.. மகாபலிபுரத்தில உள்ளூர்காரங்களை விட வெளியூர்காரங்க நடமாட்டம்தான் அதிகமா இருக்கு.. இவ இப்படின்னு நமக்குத் தெரியும்.. மத்தவங்களுக்கு என்ன தெரியும்.."

"இது நம்ம வீட்டுத் தோட்டம்டா.. இங்கே யார் வரப் போறா...?"

சொல்லும் போதே அதிலிருந்த அபத்தத்தை உணர்ந்தார் பிரதாப்.. ஒருநாளைப் போல எல்லா நாள்களும் இருக்காது என்பதை அறிந்தவர்தான் அவர்.. யாமினியின் அன்றைய செய்கையில் அவருக்கு துளிக்கூட உடன் பாடில்லை.. ஆனாலும் செல்ல மகளை விட்டுக் கொடுத்துப் பேச அவருக்கு மனம் வரவில்லை..

"உங்ககிட்டச் சொன்னா வேலைக்கு ஆகாதுப்பா.." யதுநந்தன் சீறினான்..

"அப்படியில்லடா யது.."

"என்னத்த நொப்படியில்ல..? நீங்க கொஞ்ச நேரம் பேசாம இருங்க சொல்றேன்.. யாமினி..! ஏய்ய் யாமினி..!"

முயல் குட்டியுடன் மும்முரமாக கதை பேசிக் கொண்டிருந்த யாமினி நிமிர்ந்து யதுநந்தனை இயல்பாக பார்த்து

வெள்ளையாக சிரித்து வைத்தாள்.. யதுநந்தனின் வேகம் குறைந்தது..

'இவகிட்ட என்னத்தைச் சொல்றது..?'

"என்ன அண்ணா..?"

"உன்னை புத்திசாலின்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன் யாமினி.."

"கூடப் பிறந்த பாசம்.. தெரியாம நினைச்சுட்ட.. நான் சுத்த மக்கு.. உனக்குத்தான் அது தெரியலை.."

யாமினி கலகலத்துச் சிரிக்க.. அவளை விட்டு விட்டு பிரதாப்பை முறைத்து வைத்தான் யதுநந்தன்..

"நான் என்னடா செய்வேன்..?" பரிதாபமாக கேட்டார் அவர்..

"அம்மா இவளைதிட்டறப்பல்லாம் சம்மன் இல்லாம ஆஜராவீங்கள்ல.. இப்ப என்ன சொல்லப் போறிங்க..?"

"எதுவும் சொல்ல மாட்டேண்டா.."

"எப்படிச் சொல்வீங்க..? எனக்கு வர்ற கோபத்துக்கு.."

"கண்ட்ரோல் யுவர் ஷெல்ப் மைடியர் சன்.."

"கண்ட்ரோல் ரூம் சர்விஸை இவகிட்டக் காட்ட வேண்டியது தானே..?"

தகப்பனும் மகனும் வழக்கடித்துக் கொண்டிருப்பதை வியப்புடன் கவனித்த யாமினி முயல்குட்டியை போனால் போகிறது என்று விடுவித்து விட்டு எழுந்தாள்.. அது தப்பித்தேன், பிழைத்தேன் என்று ஓடி மறைந்தது.. அவர்களுக்கு அருகில் வந்தவள்..

"ஏன் அண்ணா அப்பாகிட்ட கோபிச்சுக்கற..?" என்று பச்சிளம் மழலையாக கேட்டு வைத்தாள்..

அதில் யதுநந்தனுக்கு கோபம் தலைக்கேறியது..

"ஊம்..? உன்னைக் கண்ட்ரோல் பண்ணாம வளர்த்து வைச்சிருக்காரில்ல.. அதை ஏன்னு கேட்டுக்கிட்டு இருக்கேன்.." என்று தங்கையிடம் வெடித்தான்..

"என்னை எதுக்கு கண்ட்ரோல் பண்ணனும்..?" யாமினி முகம் மாறினாள்..

"இப்படி இருட்டுக்குள்ளே மோகினிப் பிசாசைப் போல கதவை பப்பரப்பான்னு திறந்து போட்டுட்டு கொஞ்சம்கூட பயம் பத்தில்லாம தோட்டத்துக்குள்ள உலவிக்கிட்டு இருக்கே பாரு.. அதை கண்ட்ரோல் பண்ணனும்னு சொன்னேன்.." யதுநந்தன் பொரிந்து தள்ளி விட்டான்..

அதிகாலைத் தூக்கத்தை தியாகம் செய்யநேர்ந்த கோபம் அவனுக்கு..

அத்தியாயம் - 35

ஓடும் மேகங்கள்

உனது நினைவை தந்து செல்லும்..

உன் கரம்பிடிக்கும் ஏக்கத்தோடு

யுகம், யுகமாய் தொடர்ந்து வந்தேன்..

யதுநந்தனுக்கு காலைத் தூக்கத்தை மிகவும் பிடிக்கும்.. எதற்காகவும் அவன் அதை விட்டுக் கொடுத்த தில்லை.. அன்று அதைவிட்டுக் கொடுத்து விட்டு வீடு முழுவதும் இல்லாத திருடனை தேட வேண்டி வந்து விட்டதில் எக்கச்சக்க கோபம் கொண்டிருந்தான்.. அந்த கோபத்தில் தங்கைக்கொரு கீதம் இசைக்கவோ.. பாசமலர் வளர்க்கவோ அவன் தயாராக இல்லை.. எனவே எதிரியைப் பார்ப்பதைப் போல யாமினியை பார்த்து வைத்தான்..

"இப்ப எதுக்காக என்கூட மோதற..?" யாமினிக்கும் கோபம் வந்திருந்தது..

"இப்படி யோசிக்காம காரியங்களை செய்துக்கிட்டு இருந்தா உன்மேல கோபப்படாம கொஞ்சவா செய்வாங்க..?"

"இதோ பார்.. நம்ம வீட்டுத் தோட்டத்துக்கு வர நான் எதுக்காக யோசிக்கனும்..? பாருங்கப்பா.."

"அவர் பார்த்துக்கிட்டுத்தான இருக்கார்..? வேற என்னத்தச் செய்றார்..? ஒரு நாளாவது உன்னைத் திட்டி வளர்த்திருந்தா நீ இப்படி மத்தவங்க தூக்கத்தோடு விளையாட மாட்ட.."

"பாருண்ணா.. எனக்கும் உன் தூக்கத்துக்கும் பேச்சில்லை.."

"பேச்சில்லாதப்பவே அதை துரத்தி அடிக்கிறதிலே குறியாய் இருக்கியே.. பிசாசே..!"

"யார் பிசாசு..?"

"நீதான்.."

"வேணாம் அண்ணா.. பிசாசுன்னு சொன்னே எனக்கு கெட்டகோபம் வந்திரும்.. ஆமாம்.."

"அதுக்கு பிசாசுதான் கோபப்படனும்.. நீயேன் கோபப்படற..?"

"அண்ணா..!"

"சும்மா சவுண்டு விடாதே.. நாள் முழுக்க முதுகொடிய வேலை பார்த்துட்டு அலுத்துக் களைச்சு வீட்டுக்கு வருகிறவனுக்குத்தான் தூக்கத்தோட அருமை தெரியும்.. உன்னைப் போல வீட்டிலே உட்கார்ந்துக்கிட்டு இருக்கிறதுகளுக்கு இப்படித்தான் தூக்கத்தோட அருமையும் தெரியாது.. நேரம் காலமும் தெரியாது.."

"நீ வேலைக்குப் போய் சம்பாதிக்கிற.. நான் வீட்டில வெட்டியா உட்கார்ந்துக்கிட்டு இருக்கேன்னு சொல்லிக் காட்டறியா..? நானும் அப்பாகூட கடைக்குப் போய் ஒத்தாசையாத்தான் இருக்கேன்.."

"உன் ஒத்தாசையை வெளியில சொல்லிராதே.. சும்மா சிலைகளைச் சுத்திச் சுத்தி வந்து அதுகளையே மணிக்கணக்கா பார்த்துக்கிட்டு நீ நிக்கிறதில வெளிநாட்டு டூரிஸ்டுக பயந்து போயிடறாங்களாம்.."

"நீ கண்ட..."

"நான் காணலை.. கண்டு வந்த பக்கத்து வீட்டு ஆண்ட்டி நம்ம அம்மாகிட்டச் சொல்லிக்கிட்டு இருந்தத காதால கேட்டேன்.."

"உன்னோட தூங்குமூஞ்சித் தனத்துக்கு என்னோட சிற்பங்கள ரசிக்கிற குணம் மேலானதுதான்.."

"வேலைக்குப் போய் பாரு.. அப்ப நீயும் தூங்கு மூஞ்சியாத்தான் மாறிருவ.. வெட்டியா வீட்டில இருந்தா இப்படித்தான் தோணிவைக்கும்.."

எப்படித்தான் என்று யாமினி கேட்கவில்லை... எக்கச்சக்க கோபத்துடன் இருக்கும் யதுநந்தன் அது குறித்த கேள்வியைக் கேட்டால் அவளை இன்னமும் அதிகமாக தாளித்து வைத்து விடுவான் என்பதினால் அடக்கி வாசிக்க முடிவு செய்து மௌனமானாள்..

"காபியை குடிச்சுத் தொலைங்க.."

காபி கப்புகள் அடங்கிய டிரேயுடன் அங்கே வந்து சேர்ந்தாள் அனுராதா.. வியப்புடன் மனைவியை பார்த்தார் பிரதாப்..

'இவ எப்ப பால்பாக்கெட்டை எடுத்துக்கிட்டுப் போனா..? இன்னைக்கு இருக்கிற கோபத்தில நாள் முழுக்க ஹோட்டல் சாப்பாடுதான்னு நினைச்சுக்கிட்டு இருந்தா இவ காலைக் காபியோட வந்து கலக்கறாளே..'

நினைத்ததை அவர்தான் வாய்விட்டுச் சொல்ல வில்லை.. யதுநந்தன் சொல்லி விட்டான்..

"என்னம்மா இது..? இன்னைக்கு பூராவும் கொலை பட்டினி போடுவீங்கன்னு பார்த்தா காபியோட வந்து நிக்கறிங்க..? ஆக்சுவலா நீங்க பச்சைத் தண்ணியைக் கூட இவங்க கண்ணில காட்டக் கூடாதும்மா.."

அவன் ஏற்றி விட்ட ஸ்குரூவில்.. பிரதாப் அரண்டு போனார்..

"ஏண்டா..?" என்றார்..

"என்னத்தை ஏண்டான்னு கேட்டு வைக்கறிங்க.. இந்த அழிச்சாட்டியம் பண்ணிக்கிட்டு இருக்கா.. இவளை ஏன்னு கேட்க மாட்டேங்கறிங்க.. என்னை மட்டும் ஏண்டாவாம்.. நீங்க ஒரு கண்ணில வெண்ணையும் இன்னொரு கண்ணில விளக்கெண்ணையும் விடறதில கில்லாடிப்பா.."

யாமினி புருவங்களைச் சுருக்கி யதுநந்தனைப் பார்த்த பார்வையில் யார் வெண்ணெய்..? யார் விளக்கெண்ணை..? என்ற கேள்வி இருந்தத..

மகனின் கேள்விக்குப் பதில் சொல்லாமல் அவனுக்கு புறமுதுகு காட்டி நின்று கொண்ட பிரதாப் வெற்றிகரமாக முதல் காபிக் கோப்பையை கைப்பற்றி உறிஞ்ச ஆரம்பித்தார்..

மகனுக்கு புறமுதுகு காட்டித் திரும்பி நின்றிருந்த கணவரின் தோளில் தட்டித் திருப்பி விட்டாள் அனுராதா..

"உங்க காபி உங்களுக்கேதான்.."

அனுராதாவின் வாக்குறுதியில் குழம்பிப் போனார் பிரதாப்..

"இதையேண்டி எங்கிட்டச் சொல்ற..?"

"இங்கே யாரும் உங்க காபியைப் பிடுங்கிக் குடிச்சிர மாட்டாங்க.. பயப்படாம ஒழுங்கா நின்னு குடிங்க.."

அனுராதாவின் வார்த்தைகளில் பிரதாப்பின் முகத்தில் குடம்.. குடமாக.. அசடு வழிந்தது.. அதற்குள் அடுத்த கப் காபியை கைப்பற்றியிருந்த யதுநந்தன் வண்டி, வண்டியாய் அவன் மனதில் மண்டிய எரிச்சலுடன் தகப்பனை ஜாடையாக பார்த்தபடி..

"சகிக்கலை.." என்றான்..

அனுராதா அவனை நிமிர்ந்து பார்த்ததில் அரண்டு போனவனாக...

"ஐயோ அம்மா.. உங்க காபியைச் சொல்லலை.." என்று அலறினான்..

"எனக்கும் தெரியும்டா.." கணவரின் முகத்தைப் பார்த்தபடியே அனுராதா சொல்லியதில்..

"ஹி.. ஹி.." என்று சிரித்து வைத்தார் பிரதாப்..

"எதுக்கும் காபி டிரேயை இறுக்கிப் பிடிச்சுக்கங்க.. இந்தச் சிரிப்பைப் பாத்து பயந்து டிரேயை நழுவ விட்டுறப் போறிங்க.." கரிசனம் கொண்டான் யதுநந்தன்..

"உங்க அப்பா சிரிக்க ஆரம்பிச்சப்பவே முகத்தைத் திருப்பிக்கிட்டேண்டா.. நீ பயப்படாதே.." மகனுக்கு தைரியம் கொடுத்தாள் அனுராதா..

"ஆனாலும் அம்மா.. வரும் முன் காக்கிறதில உங்களுக்கு ஈக்குவல் நீங்களேதான்.." மெச்சிப் போனான் யதுநந்தன்..

இவை எவற்றையும் கவனிக்காமல்.. செடியில் படிந்திருந்த பனித்துளியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மகளின் முதுகில் ஓங்கி ஒருபோடு போட்டாள் அனுராதா..

"அம்மா.." புல்வெளியில் போய் விழுந்தாள் யாமினி..

"எதுக்குடி குழந்தையை அடிக்கிற..?" பிரதாப் உடனடியாக சிபாரிசுக்கு வந்தார்..

"யது..! உங்க அப்பாகிட்ட சொல்லி வை.."

"அதெல்லாம் நிறையச் சொல்லியாச்சும்மா.. இவர்தான் அடங்குவேனான்னு அடம் பிடிக்கிறாரே.."

"ஏண்டா..? உனக்கு நான் அப்பாவா..? இல்ல எனக்கு நீ அப்பாவா..?"

"இந்த ரோசத்துக்கொன்னும் குறைச்சல் இல்லேடா யதுநந்தா..? சும்மா அப்பா.. அப்பான்னு சொல்லிக்கிட்டு இருந்தா மட்டும் போதாது.. அதுக்கேத்தபடி நடந்துக்கணும்.."

"என்னத்தடி நடந்துக்கலை..? ஒரு அப்பனா லட்சணமா இந்தக் குடும்பத்துக்கும் உனக்கும் உழைச்சுக் கொட்டலையா..?"

"இங்கே யாரும் ஊஞ்சலாடிக்கிட்டு இல்லை யது..! இதையும் அவங்க காதில ஓதிரு.."

"எவங்க காதிலடி..? அதோ அங்கே ரோட்டில போய்க்கிட்டு இருக்கானே.. அவன் காதில ஓதச் சொல்றயா..?"

"எனக்கு நல்லா வந்திரும் வாயில.."

"அதைத்தான் தினமும் கேட்டுக்கிட்டு இருக்கோமே.. விதி வலியதுடா யது..!"

"இப்ப என்னத்துக்கு உங்க கூட்டணியில என்னை இழுக்கறிங்க..? அதுக்கு உங்க மகளைக் கூப்பிட்டுக்கங்க.. நான் அம்மா கட்சிதான்.."

யதுநந்தன் கறாராக சொல்லி விட்டான்.. பலமான கூட்டணியின் பக்கம் தயவுதாட்சண்யம் காட்டாமல் போய் விட்ட மகனிடம்..

"யு டூ யது..?" என்று நியாயம் கேட்டார் பிரதாப்..

"யெஸ் டாட்.. ஐ டூ இட்.." என்று அவன் அறிவித்து விட்டதில் நொந்து நூடுல்ஸானார்..

புல்வெளியில் கிடந்த யாமினியின் தலையில் தட்டி அவள் கையில் காபிக் கப்பை கொடுத்தாள் அனுராதா.. அவள் தோதாக புல்வெளியில் காலை மடித்து வைத்து உட்கார்ந்தபடி காபியை சப்புக் கொட்டி குடிக்க ஆரம்பித்தாள்..

"செய்கிறதையெல்லாம் செய்து வைத்துட்டு எதுவுமே நடக்காததைப் போல காபியை மொக்கிறா பாருங்கம்மா.." என்றான் யதுநந்தன்..

"விடுடா.. அவளே குழந்தை..! உன் அம்மா காபியை கொடுத்ததும்தான் கொடுத்தா... அதை அடிக்காம கொடுத்திருக்கக் கூடாதோ..?" பிரதாப் கேள்வி கேட்டார்..

"ஏம்மா.. நீங்க காபியை அடிச்சீங்க..?" என்றான் யதுநந்தன்..

"இல்லவே இல்லைடா யது..! வேற ஒரு ஆளைத்தான் அடி கை வைக்கனும்னு ரொம்ப நாளா பிளான் போடறேன்.. என்

கழுத்தில கிடக்கிற மஞ்சள் கயிறு தமிழ் பண்பாடு, அது, இதுன்னு சொல்லி என் கையைக் கட்டிப் போட்டு வைச்சிருக்குடா.." கண்சிவந்தாள் அனுராதா..

மகளின் மீதுள்ள பாசத்தினால் மனைவியிடம் வன் முறையைத் தூண்டிவிடக்கூடாது என்ற ஞானோதயத்தில் பிரதாப் வாயை மூடிக்கொண்டார்..

அத்தியாயம் - 36

சுற்றுகிற சிலந்திவலை..!

சுழற்றுகின்ற சூழ்ச்சிவலை..

"எனக்கு வாய்ச்சதும் சரியில்லை.. பிறந்ததும் சரியில்லை.."

கோபம் வந்து விட்டால் பிரயோகிக்கும் வழக்கமான வார்த்தைகளை பிரயோகித்தாள் அனுராதா..

"அம்மா..!" யதுநந்தன் ஆட்சேபக்குரல் எழுப்பினான்..

"உன்னைச் சொல்லலைடா... ஒன்னைத்தான் சொன்னேன்.." என்றாள் அனுராதா..

"ஒன்னையா..? அப்படின்னா..?" பிரதாப்புக்கு ஒன்றும் புரியவில்லை..

"உங்களுக்கு புளிப்போட்டுத் தேய்த்து விளக்கிச் சொல்ல முடியாதுப்பா.. ரெண்டு பிள்ளைகள்ல ஒன்னைச் சொன்னாங்களாம்.." என்றான் யதுநந்தன்..

"ஓ.. அந்த ஒன்னு, இந்த ஒன்னா..?"

"ஆமாம்ப்பா.. ஆமாம்.."

"ஏண்டி அனு.."

"என்ன..?"

"அதையேண்டி எதிர்க்காரன்கிட்டக் கேட்கிறதைப் போல கேட்டு வைக்கிற..?"

"இருட்டுக்குள்ள உலாத்தற மகளுக்கு சப்போர்ட் பண்றவங்கள்ளாம் எனக்கு எதிர்க்காரங்கதான்.. அதுக்கு இப்ப என்னங்கறிங்க...?"

"ஒன்னும் சொல்லலை.."

"இதையே மெயின்டெயின் பண்ணுங்க.."

"வாய்ச்சது சரியில்லைன்னு ஏண்டி சொல்ற..? அப்படி என்ன நான் சரியில்லாம போயிட்டேன்..? குடிக்கிறேனா..? ஊர் சுத்தறேனா..? இல்லை.. சின்ன வீடு ஏதாவது செட்டப் பண்ணி வைச்சிருக்கேனா..?"

பிரதாப் நியாயம் கேட்ட விதத்தில் கையிலிருந்த கரண்டியை சமையலறை மேடையின் மீது விசிறி யெறிந்தாள் அனுராதா.. அது 'ணங்'கென்ற சப்தத்துடன் மோதி விழுந்தது.. பிரதாப் வாயை மூடிக் கொண்டார்..

"இப்ப மூடி என்ன செய்ய..?" என்று கேட்டான் யதுநந்தன்..

உக்கிரமாக சமையலறையை விட்டு வெளியே வந்த அனுராதா..

"டேய் யது..! நீ இன்னைக்கு ஆபிஸ் போக வேண்டாம்.." என்று மகனுக்கு உத்தரவிட்டாள்..

"ஏம்மா..?"

"நான் எங்க அம்மா வீட்டுக்கு பெட்டியைக் கட்டறேன்.. பிள்ளையாய் லட்சணமாய் என்கூட துணைக்கு வா.."

"ஏம்மா.. பிறந்த வீட்டுக்கு பெட்டியைக் கட்டற வயசா உங்களுக்கு..?"

"இதை உங்க அப்பாகிட்டக் கேளு.. சின்னவீடு செட்டப் பண்றதைப் பத்திப் பேசற வயசா அவருக்கு..?"

"கேட்கிறாங்கள்ல.. பதில் சொல்லுங்க.."

"டேய்.. வாய்ச்சது சரியில்லன்னு சொல்றாளேங்கிற ஆதங்கத்தில நியாயம் கேட்டுட்டேண்டா யது.."

"இந்த லட்சணமாவா நியாயம் கேட்டுத் தொலைப்பீங்க..?"

"இல்லைடா யது..! இதையெல்லாம் யோசிச்சுப் பார்த்திருப்பேனான்னுதான் கேட்டேண்டா.."

"ப்பா..! இதையெல்லாம் யோசிச்சுப் பார்க்கிற வயசையெல்லாம் நீங்க தாண்டிட்டீங்க.. இதையெல்லாம் யோசிக்கனும்னா நான்தான் யோசிச்சாகனும்.. யோசிக்கட்டுமா..?"

"டேய்.."

பிரதாப் பதறிவிட்டார்.. அனுரதாவின் சுடுகின்ற விழிச்சுடர்களை பார்க்க அவரால் முடியவில்லை..

"போதுமா..?" அவள் கேட்டாள்..

"அனு.."

"என்னத்த நொனு..? வயசுக்கு வந்துட்ட பிள்ளைகளை வளர்த்து விட்டா மட்டும் பத்தாது.. அதுக முன்னாடி கண்டதையும் பேசாம இருக்கனும்.."

"இல்லடி அனு.."

"என்னத்த நொல்லடி..? செஞ்சேனா.. செஞ்சேனான்னு நியாயம் கேட்டிங்க.. நான் செய்யட்டுமான்னு அவன் கேட்கிறான்.. போங்க.. போயி பதிலைச் சொல்லுங்க.."

"தெரியாமப் பேசிட்டேண்டி.."

"தெரிஞ்சுதான் பேசினீங்க.."

"இவன் இப்படிப் பேசுவான்னு தெரியாம பேசிட்டேண்டி.."

"அதானே பார்த்தேன்... நீங்களாவது... திருந்தராவது.. உங்களுக்கெல்லாம் இவன்தான் சரி.."

அனுராதா சமையலறையை விட்டு வெளிநடப்பு செய்து விட்டாள்.. அவள் படுக்கையறைக் கதவை ஓங்கி அடித்த விதத்தில் வீடே கிடுகிடுத்தது..

'ஓட்டல் சாப்பாடு நிச்சயம்தான்..' பிரதாப் தலைமேல் கைவைத்தார்..

"இப்ப எதுக்கு போஸ் கொடுக்கறிங்க.. அவங்க பாட்டுக்கு எதையும் மனசில வைச்சுக்காம காபிய போட்டு வேலையை ஆரம்பிச்சாங்க.. சின்னவீடு செட்டப் பண்ணனும்கிற உங்க அடிமனசு ஆசையைச் சொல்லி அவங்க கையில இருந்த கரண்டிய கீழே போட வைச்சுட்டிங்களேப்பா.."

"அடிமனசு ஆசையா..?" அலறினார் பிரதாப்..

"பின்னே..? அடிமனசில அந்த ஆசை இல்லாமலா வாயில வருது.." இரக்கமில்லாமல் கேட்டான் யதுநந்தன்..

"நீ ஒருத்தன் போதும்டா.. உங்கம்மாவ மலையிறங்க விடாம மந்திரிச்சு வைக்கிறதுக்க.."

"போங்கப்பா.. போயி.. டிபனுக்கு ஏற்பாடு பண்ணுங்க.. நான் ஆபிஸ் போயாகனும்.."

"நீ ஆபிஸீக்குப் போகனுமா..?"

"பின்னே..? வேணாம்ன்னா சொல்கிறிங்க..? அம்மா கேட்டுக்கிட்டதைப் போல அவங்களைக் கொண்டு போயி பாட்டி வீட்டில விட்டுட்டு வரனுமா..?"

"நீ அதிலேயே குறியாய் இரு.."

"அதுக்குத்தானேப்பா லீவு போடச் சொன்னாங்க..?"

"யது..! நான் பெத்த மகனே..! நீ குளிச்சுட்டு வாடா.. உனக்கு ஓட்டலில இருந்து வாங்கிட்டு வந்த டிபன் ரெடியா இருக்கும்.."

"அஃது.."

"மதியத்துக்கு என்ன பண்ணுவ..?"

"ஆபிஸ்கேண்டின் இருக்கே.."

"நைட்டுக்கு..?"

"உங்களுக்கானது.. எனக்கும்.."

"தெளிவாத்தான் இருக்கேடா.."

"நான் அம்மா பிள்ளைப்பா.. தெளிவோட ஒட்டிப் பிறந்த ரெட்டைப் பிறவி நான்.. உங்க பொண்ணுதான் அதை கிலோ என்ன விலைன்னு கேட்பா.."

"இப்ப ஏண்டா அவ பேச்சை இழுக்கிற..?"

"அவளால்தான் இன்னைக்கான சண்டை ஆரம்பிச்சது.."

"யது.."

"சொல்லுங்க.."

"உங்கம்மா நாளைக்கும் மலையிறங்கலைன்னா என்னடா பண்றது..?"

"வேற வழியில்லேப்பா.. யாமினிக்கு கல்யாணம் பண்ணி வைச்சிட்டுத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கு வேன்கிற என் தீர்மானத்தை மாத்தி அமைச்சுக்க வேண்டியதுதான்.."

"அமைச்சு..?"

"அவசரக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதான்.."

"ஏண்டா... அடுப்படி பிரச்னைக்கு அவசரக் கல்யாணமா..?"

"அதென்னப்பா அடுப்படி பிரச்னைன்னு ரொம்பச் சாதாரணமா சொல்லிட்டிங்க.. அதாம்ப்பா இருக்கிற பிரச்னைகளிலேயே பெரிய பிரச்னை.."

தகப்பனும், மகனும் வழக்கடித்துக் கொண்டிருக்கும் போதே அவர்களின் நாசியை சுவையான உணவின் வாசம் துளைத்தது..

'நம்ம வீட்டிலே இப்படியொரு வாசனையா..?'

இதை வாய் விட்டுச் சொல்லி விடாமல் சர்வ ஜாக்கிரதையாக மனதுக்குள் நினைத்தபடி தகப்பனும், மகனும் திரும்பிப் பார்த்தார்கள்..

யாமினி டைனிங் டேபிளில் பாத்திரங்களை பரப்பிக் கொண்டிருந்தாள்..

"என்னம்மா பண்ற..?" வியப்புடன் கேட்டார் பிரதாப்..

"சப்பாத்தி, குருமா பண்ணியிருக்கேன்ப்பா.. அண்ணனுக்கு லன்ச் பாக்ஸில லெமன் ரைஸ் வைச்சிருக் கேன்.. நமக்கு மதியத்தில ரெடி பண்ணிக்கலாம்.."

அவ்வளவுதான்.. வேலை முடிந்தது என்ற பாவனையில் யாமினி அகன்றுவிட... பிரதாப் ஆச்சரியத்துடன் டைனிங் டேபிளைப் பார்த்தார்..

"இவ எப்படா சமைக்கக் கத்துக்கிட்டா..?"

"யாருக்குத் தெரியும்..? அவளுக்கு என்ன தெரியும்.. என்ன தெரியாதுன்னு அவளுக்கே தெரியாதுன்னு நினைக்கறேம்ப்பா.."

"இந்த ஆராய்ச்சியை விட்டுட்டு ஆபிஸ்க்கு கிளம்பற வழியைப் பாரு.. அதான் சாப்பாட்டு பிரச்னை தீர்ந்திருச்சே.."

"ஆமாமில்ல.. அப்புறம் இன்னொன்னுப்பா.."

"என்னடா..?"

"அவசரக் கல்யாணத்தை கேன்சல் பண்ணிட்டேன்.."

என்னவோ அதி முக்கிய விவரத்தைக் கூறுவதைப் போல முகத்தை தீவிரமாக வைத்துக் கொண்டு சொன்ன யதுநந்தன் இமை சிமிட்டினான்.. பிரதாப்புக்கு சிரிப்பு வந்தது..

"போடா.." என்றார்.

பிரதாப்பும், யதுநந்தனும் கிளம்பிப் போன பின்பு யாமினி அனுராதாவைத் தேடிப் போய் தோப்புக்கரணம் போட்டு சாப்பிட வைத்தாள்.. வாசலில் காலிங்

பெல் ஒலித்தது.. கதவைத் திறந்தாள்.. அவளுக்கான கொரியரைக் கொடுத்து விட்டுப் போனான் கொரியர் பாய்..

'என்னவா இருக்கும்..?'

யாமினி யோசனையுடன் கவரைப் பிரித்தாள்..

அத்தியாயம் - 37

பிறவிகள் தோறும் உனைத்தேடி

பிச்சியென்ற பெயர் கொண்டேன்..

கண்ணெதிரே தோன்றும் நிழல்..

காட்டுகின்ற ஆட்டம் என்ன..?

யாமினி கையிலிருந்த கொரியர் கவரை யோசனையுடன் பார்த்தாள்..

'யார் அனுப்பியிருக்காங்க..?'

கவரின் ஃபிரம் அட்ரஸைப் பார்த்தவளின் விழிகள் இடுங்கின..

'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியா..? இவங்களோட இண்டர்வியூதான் நட்டுக்கிச்சே.. அதுக்கு மேலேயும் எதுக்காக கவரை அனுப்பித் தொலைக்கிறாங்க..? இனிமே எங்க கம்பெனியோட வான்டடு அட்வெர்டைஸ்மென்ட்ஸ் வந்தா அப்ளை பண்ணாதேன்னு ஸ்ட்ரிக்டா சொல்றானுகளோ..?'

அவளுக்கு சித்தார்த்தனின் நினைவு வந்தது.. அவளை இண்டர்வியுவில் கண்டதும் அவன் விழிகளில் தெறித்த மின்னலை நினைத்துப் பார்த்தவளுக்குள்..

'உனக்கும், எனக்கும் என்ன சம்பந்தம்..?' என்ற கேள்வி எழுந்தது..

அவள் கவரை ஆட்டியபடி தோட்டத்துப் பக்கம் போனாள்.. அங்கிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்தவள் கையிலிருந்த கவரை பக்கத்தில் போட்டுவிட்டு சிந்தனையுடன் காலை விந்தி ஊஞ்சலை ஆட்டினாள்.. லேசாக ஆடிய ஊஞ்சலுடன் அவள் மனமும் சேர்ந்து ஆடியது..

'அவன் எதுக்காக என்னைக் கண்டாலே ஜெர்க் ஆகிறான்..?'

அவன் மட்டுமல்ல.. அவளும் அவனைக் கண்டதும் ஜெர்க் ஆகி வைக்கிறாள் என்பதை அவளது உள்மனம் உணர்த்தியது..

"என்னவோ போடி யாமினி..! எதுவும் விளங்கல.." வாய் விட்டுச் சொல்லியவளை..

"என்னம்மா விளங்கல..?" என்ற கேள்வி திரும்பிப் பார்க்க வைத்தது..

அங்கே பிரதாப் நின்றிருந்தார்.. யாமினி அவசரமாக ஊஞ்சலை விட்டு எழுந்தாள்..

அதற்குள் மதிய உணவுக்காக பிரதாப் வீடு திரும்பி விட்டாரா..? அவள் மதிய உணவை சமைக்கவில்லை என்ற விவரம் அவளது நெஞ்சில் உறைத்தது..

"என்னப்பா.. எதையும் மறந்துட்டுப் போயிட்டிங்களா..?"

மதிய உணவுக்கான நேரம் நெருங்கவில்லை என்பதனை உறுதிபடுத்திக் கொள்ள அவள் முனைந்தாள்.

"இல்லையேம்மா.. எதையும் மறந்துட்டுப் போகலையே.."

அந்த நம்பிக்கையில் ஒரு லாரி மண்ணைக் கொண்டு வந்து கொட்டினார் பிரதாப்..

"இப்பத்தானேப்பா கடை திறக்கப் போனிங்க..? அதுக்குள்ள வந்துட்டிங்களே.."

யாமினி தோல்வியை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை..

"இல்லையேம்மா.. காலையில எட்டு மணிக்கே கடைதிறக்கப் போனவன்.. ரெண்டு மனிக்குத்தானம்மா லன்ச் சாப்பிட வந்திருக்கேன்..?"

பிரதாப் யாமினியின் இரண்டாவது கேள்வியையும் அடித்துத் தூள் பரப்பி விக்கெட்டுக்களை வீழ்த்தினார்..

"என்னது..?..! மணி ரெண்டாகிருச்சா..?"

யாமினி ஊஞ்சலையும்.. ஊஞ்சலில் இருந்த கடிதத்தையும் மறந்து வீட்டுக்குள் ஓடப் போனாள்..

"நில்லும்மா.." அவள் கைபிடித்து நிறுத்திய பிரதாப்.

"எதுக்கு இந்தப் பதட்டம்..?" என்று விசாரித்தார்..

"அதுப்பா.. நான் இன்னும் குக்கரை வைக்கல.." யாமினி நம்பியாரைப்போல கைகளை பிசைந்து வைத்தாள்.

"அதுக்கு ஏன்ம்மா பதட்டப்படற..? பிரட் இருக்கா..?"

"இருக்குப்பா.."

"தக்காளித் தொக்கு இருக்கா..?"

"அதுவும் இருக்குப்பா.."

"அப்புறம் என்ன..? பிரட்டை ரோஸ்ட் பண்ணி தக்காளித் தொக்கோட சாப்பிட்டுட்டா லன்ச் ஓவர்.. இதுக்குப் போயி கவலைப்படலாமா..? வா.."

பிரதாப் மகளை ஆறுதல் படுத்தியபடி வீட்டுக்குள் அழைத்துக் சென்றார்.. யாமினிக்கு வந்த கடிதம் அம்போ என்று ஊஞ்சலில் வீற்றிருந்தது..

அவர்கள் வீட்டுக்குள் போனபோது அனுராதா டைனிங் டேபிளில் பாத்திரங்களை பரத்திக் கொண்டிருந்தாள்..

"என்ன அது..?"

டைனிங் டேபிளை பார்வையிட்டபடி பவ்யமாக கேட்டு வைத்தார் பிரதாப்.. சப்தமாகப் பேசப் போய் அவள் மறுபடியும் மலையேறிவிட்டால் என்ன செய்வது..?

"ஊம்..? பிரட்டை ரோஸ்ட் பண்ணி.. ரெடிமேட் தக்காளித் தொக்கு பாட்டிலை வைச்சுக்கிட்டு இருக்கேன்.." நொடித்தாள் அனுராதா..

டைனிங் டேபிளிலில் இருந்த பாத்திரங்களில் ஆவி பறக்கும் சாம்பாரும்.. காலிபிளவர் பிரையும் 'வா'வென்று அழைத்ததில் யாமினி மகிழ்ந்து போய்..

"அம்மா.." என்று அனுராதாவைக் கட்டிக் கொண்டாள்..

முகமெல்லாம் கடுகடுப்பாக மகளை முறைத்த அனுராதாவின் குடும்பப்பொறுப்பில் மனம் நனைந்தவராக

காதலுடன் மனைவியைப் பார்த்தார் பிரதாப்..

"விடுடி என்னை.."

அனுராதா கோபம் போல மகளின் கையைப் பிடித்துத் தள்ளி விட்டாள்..

"ஏண்டி.. குழந்தையைக் கோவிச்சுக்கற..?" பிரதாப் மகளுக்கு பரிந்து கொண்டு வந்தார்..

"காலையிலே இருந்தே இவளைக் குழந்தைன்னு தாலாட்டியாகிறது.. விட்டா ஃபீடிங் பாட்டிலைத் தூக்கிக் கையில கொடுத்து.. தொட்டில்கட்டி தாலாட்டுப் பாடி தூங்க வைச்சிருவாங்க போல.. ஏண்டி..? நீயென்ன பச்சைக் குழந்தையா..?"

"இல்லைம்மா.. ஓட்டுப் போடற வயசுக்கு வந்திட்ட பெண்..!"

"அதை உன் அன்புள்ள அப்பாகிட்டச் சொல்லு.. சும்மாவும் சொல்லாதே.. அவர் காதோரமாக கத்திச் சொல்லு.. அப்பவாவது அவர் மண்டையில ஏறுதான்னு பார்ப்போம்.. குழந்தையாம் குழந்தை.. காலையிலே ஊஞ்சலாடப் போனவ, ஆடுறா.. ஆடுறா.. மணிக்கணக்கா ஆடிக்கிட்டு இருக்கா.. இவளை நம்பி மதியச் சாப்பாட்டை ரெடி பண்ணாம விட்டிருந்தா.. என்ன ஆகிறது..?"

"விடுடி.. அவ என்ன வேணும்னா பண்றா..? என்னவோ விளையாட்டுப் புத்தி.."

"ஊஹூம்.. இது விளையாட்டுப் புத்தியில்லைங்க.. 'மெகால்..' பிடிச்சதனம்..

அது என்ன வயசுப் பொண்ணானப் பட்டவ 'துணுக்குத்தண்ணி..' தெளிக்காம எனக்கென்னன்னு உலா வர்றது..?"

"போகப் போக மாறிருவா.. அனு.."

"இதையேதான் கீறல் விழுந்த கிராம போன் ரிகார்டைப் போல இவ பிறந்ததில இருந்தே சொல்லிக் கிட்டு வர்றீங்க.. வருசங்கதான் போகுது.. இவ மாறலை.."

"காலையிலே சப்பாத்திகுருமாவை இவதான பண்ணினா..? என்ன டேஸ்டா இருந்தது..? அது மட்டுமா.. யதுநந்தனுக்கு லன்ச் கட்டிக் கொடுத்தாளே.."

"அதிலயெல்லாம் குறைச்சலில்ல.. அதுக்கப்புறம் எதுக்காக தோட்டத்தில போய் மணிக்கணக்கா ஊஞ்சலாடினான்னு கேளுங்க.."

பிரதாப் கேட்கவில்லை.. அவருடைய பலவீனம் 'பாசம்'... யாமினியின் மீதான தகப்பன்பாசம் அவரை கேள்வி கேட்கவிடாமல் வாயைக்கட்டிப் போட்டிருந்தது.. மகளை பிரியத்துடன் பார்த்தவர்..

"உட்காரும்மா.. சாப்பிடலாம்.." என்றார்..

"இதுதான் கேட்கிற லட்சணமா..?" அனுராதா வெடித்தாள்..

"விடுடி.. சின்னப்பெண்கூட சரிக்குச் சரியா போராடிக்கிட்டு.." பிரதாப்புக்கு கோபம் வந்து விட்டது..

"யாரு..? நான் போராடுறேனா..?" அனுராதாவுக்கு அவரைவிட அதிகமான கோபம் கொப்பளித்தது..

"பின்னே..? இல்லையா..? இப்ப நீ செய்துக்கிட்டு இருக்கிற வேலைக்குப் பெயர் என்ன..?"

"இவ எதைச் செஞ்சாலும் கொஞ்சிக்கிட்டு இருக்கனுமா..? உங்களைப் போல இருக்க என்னால முடியாது.."

"முடியலைன்னா விட்டிரு.. பெத்தவ நீயே உன் பெண்ணை குறைவாப் பேசினா மத்தவங்க இவளை நோயாளின்னு பட்டம் கட்டிற மாட்டாங்களா..? அதை முதல்ல யோசிச்சயா..?"

பிரதாப்பின் கோபத்தில் இருந்த நியாயத்தில் மௌனமானாள் அனுராதா..

பிரதாப்பின் கோபத்தில் இருந்த நியாயத்தில் மௌனமானாள் அனுராதா.. யாமினிக்கு தர்ம சங்கடமாக இருந்தது.. அவளை வைத்துக்கொண்டே.. அவள் பொருட்டு பெற்றவர்கள் சண்டையிட்டதில் அவள் வேதனை கொண்டாள்..

"ஏதோ யோசனையாய் இருந்துட்டேம்மா.." தாய்க்கு விளக்கம் சொன்னாள்..

"அதைத்தான் என்ன யோசனைன்னு கேட்கிறேன்..?"

இறுகிய முகத்துடன் சொன்னாள் அனுராதா.. யாமினியால் பதில் பேச முடியவில்லை.. இந்தப் பேச்சிற்கு முடிவிருக்காது என்ற கோபத்துடன் பிரதாப் தட்டைத் தூக்கி 'டமால்' என்ற சப்தத்துடன் டைனிங் டேபிளில் வைத்தார்.

"பார்த்து.. உங்க வீரத்தை டைனிங் டேபிள் மேலே காட்ட வேணாம்.. உடைஞ்சிரப் போகுது.." என்றாள் அனுராதா..

"உடைஞ்சா புதுசு வாங்கிப் போட்டுக்குவேன்.. நீ வாயை மூடு.. வந்துட்டா நியாயம் பேச.. நீ சாப்பிட வா யாமினி.." பிரதாப் யாமினிக்கும் தட்டைப் போட்டார்..

யாமினி உட்காரவில்லை.. அனுராதாவுக்கு தட்டைப் போட்டு பரிமாறி அவளை உட்காரவைத்தாள்..

"சாப்பிடுங்கம்மா.. வேலை செஞ்சதில டயர்டா ஆகியிருப்பீங்க.."

மகளின் பாசத்தில் அனுராதாவுக்கு கண் கலங்கி விட்டது.. இப்படிப் பட்டவள் சில சமயங்களில் விந்தையாக நடந்து கொள்கிறாளே என்ற வேதனையுடன்..

"நீயும் அப்பா பக்கத்தில உட்கார்ந்து சாப்பிடு.." என்றாள் பிரதாப்பின் இதழ்களில் இளநகை படர்ந்தது..

அத்தியாயம் - 38

தேடுவது எதையென்று தெரியாத

தேடல் இது..!

வட்ட நிலா கையில் வந்து..

பேசுவது போல் ஓர் நினைவு..

யாமினியிடம் மனிதர்களின் மனதைவெல்லும் வித்தை இருந்தது.. அனுராதாவின் கடினமான கோபத்தை மிக

எளிதாக இளக்கி விடும் வல்லமை யாமினியின் பாசத்திடம் இருந்தது.. அந்த வல்லமையால் அவள் அப்போதைக்குத் தாயின் வாயைக் கட்டிப் போட்டாள்.. மகளின் அந்தத் திறமையில் பிரதாப்பின் மனம் குளிர்ந்தது.

"இனியாச்சும் கொஞ்சநேரம் கட்டையைச் சாய்க்கிறேன்.. யதுநந்தன் வாரப்ப டிபன் காபி ரெடியா இருக்கனும்.. இல்லைன்னா காட்டுக் கத்தலாக் கத்துவான்.. வேலை செய்ய எனர்ஜி வேணும்னா நான் கொஞ்ச நேரத்துக்காவது மதியத்தூக்கம் போட்டாகனும்.."

கண்களைச் சுழற்றிய தூக்கத்துடன் எழுந்து கொள்ளப்போன அனு பிரதாப்பைப் பார்த்து..

"நீங்க கடைக்குக் கிளப்பலையா..?" என்று கேட்டாள்..

அவளின் தொனி விரட்டும் தோரணையில் இருந்ததில்.. இவளுக்கு என்னவானது என்று ஆச்சரியப் பட்டுப் போனார் பிரதாப்..

"நான் கடைக்குக் கிளம்பறதுக்கும், நீ மதியத் தூக்கம் போடறதுக்கும் என்ன சம்பந்தம் அனு..? தூக்கம் வந்தா தூங்கப் போயேன்.."

"அதுசரி..! இந்த வீட்டுக்கு வாட்ச்-வுமனா மாறனும்கிற தலையெழுத்து வந்தபின்னாலே தூக்கம் வந்தவுடனே நான் தூங்கப் போயிர முடியுமா..? அந்தத் தலையெழுத்தா எனக்கு வாய்ச்சிருக்கு..?"

"இது என்னடி கொடுமையா இருக்கு..? உன்னை யாரு வாட்ச்-வுமனா இருக்கச் சொன்னது..?"

"வேணாங்க.. விட்டிருங்க.. இப்பத்தான் ஒருவழியா மலையிறங்கியிருக்கேன்.. திரும்பவும் மலையேத்தி விடாதீங்க.. நீங்க கிளம்பற வழியைப் பாருங்க...

நான் கதவைத் தாழ் போட்டு.. பூட்டி சாவியை கையில் பிடிச்சுக்கிட்டுத் தூங்கப் போகனும்.. நேரமாச்சு.. கிளம்புங்க.."

அவசரப்படுத்திய அனுராதாவை வினோதமாக பார்த்தார் பிரதாப்.. "இது என்னடி வழக்கமில்லாத வழக்கமா இருக்கு..? நீ மட்டும் தனியா இருந்தா நீ சொல்கிறது சரிதான்.. இந்த வீட்டில யாமினியும் உன்கூட இருக்காள்ல..? அதுக்கப்புறமும் எதுக்கு பயம்..?"

"எனக்கு பயமே இவளால்தான்.. தனியா இருந்த யாரு பயப்படப் போறது..?"

அனுராதா மகளை முறைத்தாள்.. யாமினி நெளிந்தாள்.. பிரதாப் மனைவியை அதட்டினார்..

"இப்ப எதுக்கு அனு அவளை வம்புக்கு இழுக்கற..? நீ தூங்கப் போனா கதவை இவ மூடி தாழ் போட்டுக்க மாட்டாளா..?"

"யாரு..? உங்கமக பத்திரமா கதவைப் பூட்டி வீட்டையும், அம்மாவையும் பாதுகாத்திருவா..? ஏங்க நீங்க வேற.. எனக்கு நல்லா வந்திரும் வாயில.. திடிர்ன்னு நினைப்பு வந்து கடலோரமா உலாவப் போயிருவா.. வீட்டுக் கதவு ஜாமத்துக்கு மேலே திறந்து கிடந்ததைப் போல பப்பரப்பான்னு திறந்து கிடக்கும்.. ஒருநேரம் போல ஒரு நேரம் இருந்து வைக்காது.. வீட்டை நோட்டம் போட்டுக் கிட்டிருக்கிற எந்தத் திருட்டுப் பயலாவது உள்ளே நுழைஞ்சு கைவரிசையைக் காட்டிட்டுப் போயிட்டா தலயில துண்டைப் போட்டுக்கிட்டு.. உன்னாலே நான் கெட்டேன்.. என்னாலே நீ கெட்டேன்னு குடும்பத்தில இருக்கிறவங்க ஒருத்தருக்கொருத்தர் அடிச்சுக்கிட்டு மண்டையைப் பிளந்துக்க வேண்டியது தான்.. தேவையா..?"

அனுராதா கேட்ட விதத்தில் தேவையில்லை என்று அலறிவிட வாயைத்திறந்த பிரதாப் யாமினியின் அடிபட்ட முகபாவத்தை உத்தேசித்து அடக்கிக் கொண்டார்..

கோபமாக சொன்னாலும் அனுராதாவின் வார்த்தைகளில் நூறுசதவிகிதம் உண்மை இருந்ததை அவர் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது.. மறுக்க முடிய வில்லை..

'ஆனாலும்..' மகளின் முகத்தை இரக்கத்துடன் பார்த்தார்..

"அனு நீ வீட்டைப் பூட்டி சாவியை கையில எடுத்துக்கிட்டுப் போயிட்டா யாமினி என்ன பண்ணுவா..?"

"தூங்கட்டும்.."

"தூக்கம் வரலைன்னா..?"

"அதைச் சொல்லுங்க.. இவளுக்கு ஜாமத்திலேயே தூக்கம் வந்து தொலைக்காது.. இதில மட்ட மதியானத்திலே எங்கேயிருந்து தூக்கம் வந்து சேரப் போகுது..? டிவியைப் பார்க்கச் சொல்லுங்க.."

"எவ்வளவு நேரம்தான் டிவி பார்ப்பா..?"

"அப்ப பேஸ்புக்கில தலையக் கொடுத்துக்கச் சொல்லுங்க.."

"அங்கேயும் ஒரு அளவுக்கு மேலே உட்கார முடியுமாடி..?"

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றிங்க..?"

"பாரதியாரே பாடியிருக்கார் அனு.."

"இவளைப் பத்தியா..?"

"அப்படித்தான் வைச்சுக்கயேன்.."

"என்னன்னு..?"

அனுராதா இடக்காக கேட்டும் போதே பிரதாப் நிறுத்தியிருக்கவேண்டும்.. அதைவிட்டு.. மகளின் சுதந்திரத்திற்காக போராடும் தந்தையாக அவர் பாரதியாரின் பாடலை சொல்ல ஆரம்பித்தார்..

யாமினிக்காக வந்த வேலை நியமன உத்தரவைப் பற்றிய கடிதம் பிரிக்கப்படாமல் அப்படியே தோட்டத்தின் ஊஞ்சலில் இருந்தது.. பலத்த காற்றடித்து.. தோட்டத்துச் செடிகள் குழுங்கின.. கடிதம் குழுங்கவில்லை.. புல்வெளியில் கிடந்த சருகுகள் பறந்தன.. கடிதம் பறக்கவில்லை..

மெலிதான காகித உரையைக் கொண்ட அந்தக் கடிதம்.. கனத்த இரும்புக் குண்டினைப் போல சட்டமாக ஊஞ்சலில் அமர்ந்திருந்தது..

"வீட்டுக்குள்ளே பெண்ணை..

பூட்டி வைப்போமென்ற

விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்.."

பிரதாப் வெகு கம்பீரமாக பாரதியாரின் பாடலை சொல்லிக் கொண்டிருந்தார்.. அனுராதா நொடித்தாள்..

"விந்தை மனிதரைப் பத்தியெல்லாம் ஜாமத்தில தோட்டத்தில உலாத்தற மகளைப் பெத்த நீங்க பாடக் கூடாது.."

"அனு..!"

"என்னத்துக்கு என்கிட்ட சவுண்டு விடறிங்க..? இந்தப் பாட்டு நான் பாடிக்காட்டின பாட்டுத்தான்.. பாரதி புதுமைப் பெண்ணைப் பத்தித்தான் பாடியிருக்கார்.. உங்க பொண்ணைப் போல மெகால் பிடிச்ச பெண்ணைப் பத்திப் பாடலை.."

"இப்ப என்னதாண்டி சொல்ற..?"

"நான் தனியா இருந்தாக்கூட வீட்டைத் தொறந்து போட்டுட்டு படுத்துத் தூங்குவேன்.. இவகூட இருக்கிறப்ப அதைச் செய்ய மாட்டேன்.."

"அப்ப நீ என் பெண்ணை வீட்டுக்குள்ள வைச்சு பூட்டி வைப்ப..?"

"ஊஹூம்.. என்னை வீட்டுக்குள்ளே வைச்சுப் பூட்டிக்குவேன்.. இவளைப் பூட்டி வைக்க என்னால முடியுமா..? காத்துக்கு வேலி போடறதும்.. கடலுக்கு மூடி போடறதும்.. இவளைப் பூட்டி வைக்கிறதும் ஒன்னுதான்.."

"யாமினி நீ கிளம்பு.."

"எங்கே..? அப்பாவும் மகளும் தூரதேசம் போறிங்களா..?"

"ஏண்டி.. உன் வாயிலே நல்ல வார்த்தையே வராதா..?"

"எனக்கும் ஆசைதான்.. இவளை மகளாய் பெத்த பின்னாலே அந்தக் கொடுப்பினைதான் எனக்கு டாட்டா காட்டிட்டுப் போயிருச்சே.."

அனுராதா எரிச்சலுடன் டிவியைப் போட்டாள்.. அதில்..

"ஆனந்த யாழை மீட்டுகிறாய் - நெஞ்சில்

ஆயிரம் வண்ணங்களை கூட்டுகிறாய்.."

என்ற பாடல் ஒலித்தது..

"போதும்டாசாமி..! வீட்டில படற ரோதனையே தாங்கலை.. இதில டிவியில வேற பாசமழையை கொட்டியாகிறது.." படக்கென்று டிவியை அணைத்து விட்டாள்..

நடக்கும் சண்டை யாமினியை கையமாக வைத்தது என்பதில் முகவாட்டம் கொண்டிருந்த மகளை கனிவுடன் பார்த்தார் பிரதாப்..

"கடைக்கு வா யாமினி.. உனக்கும் மாறுதலா இருக்கும்.."

"ஆமாமா.. இவ வீட்டுக்குள்ளேயே அடைஞ்சு கிடக்கிறா பாருங்க.. கடைக்கு வந்தா மாறுதலாத்தான் இருக்கும்.. அழைச்சுக்கிட்டுப் போங்க.."

"இவ கிடக்கிறா.. நீ வாம்மா.."

பிரதாப்பின் வற்புறுத்தலில் யாமினி அவருடன் கடைக்குச் செல்லக் கிளம்பினாள்.. தகப்பனும் மகளும் கிளம்பியவுடன் டாட்டா கூடச் சொல்லாமல் எரிச்சலுடன் கதவை அடைத்துக் கொண்டு போய் விட்டாள் அனுராதா.. ஊஞ்சலைக் கடந்து சென்ற யாமினியைப் பார்த்தபடி அசைவற்று கிடந்தது அக்கடிதம்..!

பிரதாப்பின் கடை கடலோரமாக அமைந்திருந்தது.. அடிக்கடி அங்கே வருவாள் யாமினி.. யதுநந்தனை விட அவள்தான் அந்தக் கடையின்மீது ஆர்வமாக இருப்பாள்.. அங்கேயிருக்கும் சிற்பங்களையும்.. பல்லவர்களின் ஆட்சிகாலத்தை நினைவுறுத்தும் பழங்காலத்து கலைப் பொருள்களையும்.. சேர, சோழ, பாண்டியர்களைப் பற்றிய கலைநயம் கொண்ட ஓவியங்களையும் பார்த்துப் பார்த்து ரசிப்பாள்.. சில நேரங்களில் அந்த ஓவியங்களின் அருகில் சென்று மணிக்கணக்கில் அதைப் பார்த்தபடி அசையாமல் நிற்பாள்..

அப்போதெல்லாம் அனுராதாவின் கோபத்தில் நியாயம் இருப்பதை உணர்ந்து வருத்தம் கொள்வார் பிரதாப்.. மகளின் மனதில் என்னதான் உள்ளது என்று அவரால் கண்டு பிடிக்க முடியவில்லை.. அடிக்கடி அவள் முகத்தில் குடிகொள்ளும் சோகத்திற்கான காரணம் பிடிபடாமல் திகைத்திருக்கிறார்..

யாமினிக்கு அந்த மாமல்லபுர கடற்கரையைப் பிடிக்கும்.. அதற்கு அடுத்தபடியாக அவள் வலம் வர விரும்புவது காஞ்சிபுரத்தை..

மகாபலிபுரத்தில் பிறந்தவள் காஞ்சியை எதற்காக விரும்புகிறாள் என்று தெரியாமல் தலைமுடியை பிய்த்துக் கொள்வாள் அனுராதா.. பிரதாப் அதுபோல செய்வதில்லை என்றாலும் அவர் மனதையும் அந்தக் கேள்வி குடைந்து கொண்டுதான் இருந்தது..

இவையெல்லாம் போதாது என்று யாமினி அடிக்கடி தஞ்சாவூருக்கு வேறு கிளம்பிச் சென்று விடுவாள்..

அத்தியாயம் - 39

கொட்டுகிற மழைத்துளியில்

யார் முகத்தைத் தேடுகிறாய்...?

கடந்து வந்த பிறவிகளின்

காலடிச் சுவடுகளைத் தேடுகிறேன்..

"தஞ்சாவூருக்கு எதுக்குப் போகனும்கிறா..?"

தலைமுடியை பிய்த்துக் கொள்ளாத குறையாக கேட்பார் பிரதாப்.. அவர்களுக்கு தஞ்சையில் உறவினர்கள் இல்லை.. நண்பர்களும் இல்லை.. யாமினியுடன் படித்த சிநேகிதிகள்

அங்கு இருக்கிறார்களா என்று கேட்டால் அதற்கும் அவள் இல்லையென்ற பதிலை சொல்லி வைத்தாள்..

"உனக்குத் தெரியுமாடி..?"

அனுராதாவை அவர் வினவியபோது.. அவள்..

"என்னைக் கேட்டா.. எனக்கென்ன தெரியும்..?" என்று அவரை முறைத்து வைத்தாள்..

"யது.. நீ சொல்லுடா.."

"பேசாம போயிருங்கப்பா.. நான் ஏற்கனெவே படு கடுப்பில இருக்கேன்.. இதில நீங்க வேற வந்து இம்சையைக் கூட்டாதீங்க.."

"இல்லேடா.. யாமினி எதுக்காக தஞ்சாவூருக்குப் போகனும்கிறா..?"

"அவளையே கேளுங்க.. அவ யாதும் ஊரே யாவரும் கேளிர்ம்பா.."

யாமினி அதைத்தான் சொன்னாள்..

"என்னங்கப்பா இது..? சொந்த பந்தம் இருந்தாத்தான் ஒரு ஊருக்குப் போகனுமா..? சுற்றிப் பார்க்கப் போகக் கூடாதா..?"

"ஆமாமில்ல.."

பிரதாப்புக்கு பதில் கிடைத்து விட்ட சந்தோசத்தில் 'அப்பாடா..' என்றிருந்தது..

"சுற்றிப் பார்க்கத்தான் போகனும்கிறாளாம் அனு.." அவர் மகிழ்ந்து போன போது..

"எனக்கு நல்லா வந்திரும் வாயிலே.." என்றாள் அனுராதா..

"ஏண்டி..?"

"உலகத்தில இருக்கிறவங்கள்ளாம் நம்ம ஊரைச் சுத்திப் பார்க்க வர்றாங்க.. இதில இவ மட்டும் தஞ்சாவூருக்கு சுத்திப் பாக்கப் போகனுமுன்னு கால்மானம் வைக்கிறா.."

"கால்மானமா..?"

பிரதாப்புக்கு விளங்கவில்லை.. இதுபோன்ற விளக்கம் கிடைக்காத வார்த்தைகள் அடுக்கடுக்காக அனுராதாவின் கைவசத்தில் இருந்தன.. அதற்கான விளக்கவுரையைச் சொல்லும் அகராதிகள் இவ்வுலகில் எங்குமே கிடைக்காது என்பதினால் அவற்றுக்கு அர்த்தம் தேடும் வேலையை அந்தரத்திலேயே விட்டு விட்டார் பிரதாப்..

"உங்களுக்கு விளக்கம் சொல்லிச் சொல்லியே என் வாழ்நாள் முடிஞ்சிரும் போல இருக்கு.."

"நான் விளக்கம் கேட்கலை அனு.."

"கேட்டுத்தான் பாருங்களேன்.."

"ஏண்டி.. நான் சண்டைக்கே வரலைங்கிறேன்.. நீ வம்படியா வழக்குக்கு இழுக்கறே.."

"உங்களை இழுத்துட்டாலும்.."

அனுராதா நொடித்துக் கொள்ளும் வேளைகளில் அதி அற்புதமான அழகோடு இருந்து வைப்பாள்.. அவளிடம் மோதவும் முடியாமல், இழையவும் முடியாமல் பிரதாப் தடுமாறிப் போவார்..

அதை அறிந்து வைத்துக் கொண்டுதான் அவரிடம் அவள் நொடித்து வைக்கிறாளோ என்ற ஆழ்ந்த சந்தேகம் நெடுநாள்களாய் அவரிடம் உண்டு..

"என்னை இழுக்காமலா ஒன்னுக்கு இரண்டா பிள்ளைகளைப் பெத்து வைச்சிருக்க..?"

ஓர்முறை அவர் கேட்டே விட்டார்.. அருகில் பிள்ளைகள் இல்லாத சூழலில் அவர் அவளிடம் கேட்டு வைத்தபோது அவளது வாயாடல் ஓடியே போய் விட்டது.. முகம் குங்குமமாக சிவக்க அவரை காதலுடன் பார்த்தபடி..

"பேசாம போயிருங்க.. இல்லேன்னா ஏதாச்சும் சொல்லிறப் போறேன்.." என்று அவர் மார்பில் கை வைத்து தள்ளி விட்டாள்..

அவர் மல்லாந்து விழுகாமல் கால்களை அகற்றி நின்று பேலன்ஸ் செய்தபடி அவர் மார்பிலிருந்த அவள் கையைப் பற்றி சுண்டி இழுத்தார்..

சுழன்று அவர்மீது சரிந்த அனுராதாவை கைகளில் ஏந்தி ஒரு ஹீரோவைப் போல படுக்கையறையை அவர் அடைந்தபோது உலகத்திலேயே என் கணவன்தான் தீரன் என்ற எண்ணம் அனுராதாவுக்கு வந்தது..

வாழ்நாளின் ஏதேனும் ஓர் தினத்தில் இதுபோன்ற ஓர் நினைவை அனைத்து கணவன்மார்களும் அவர்களின் மனைவிகளுக்கு அளிக்கத்தான் செய்கிறார்கள்..

பிரதாப்பும் அது போன்ற நொடிகளை அனுராதாவுக்கு அள்ளி வழங்குகிறவர்தான் என்றாலும்.. யாமினியின் குணாதிசியத்தால் அவருக்கும் அனுராதாவுக்குமிடையே அடிக்கடி வாக்குவாதம் வர ஆரம்பித்தது..

"மகாபலிபுரத்திலேயே பிறந்து வளர்ந்தவளுக்கு இந்தக் கடலும் கடலோர சிற்பங்களும் பார்த்துப் பார்த்து சலித்துப் போயிருக்காதா அனு..? ஒரு மாறுதலுக்கு தஞ்சாவூருக்கு போயிட்டு வரட்டுமே.."

"அதுக்கு தஞ்சாவூருக்குத்தான் போகணுமா..?"

இந்தக் கேள்வியில் பிரதாப் திகைத்தார்..

ஊர் சுற்றிப் பார்க்க விரும்புகிறவள் அவ்வூராக தஞ்சாவூரைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமா..? தமிழகத்தில் உள்ள வேறு எந்த ஊர்களும் அவள் நினைவுக்கு வரவில்லையா..? அது ஏன்..?

மறுக்க முடியாமல் யாமினியை அழைத்துக் கொண்டு தஞ்சாவூருக்கு சென்று வந்த அனுராதா அன்று முழுவதும் கணவனைத் திட்டித் தீர்த்தாள்..

"நான்தான் தலைப்பாடா அடிச்சுக்கிட்டேனில்ல.. இவ போடற தாளத்துக்கு ஆடாதேங்கன்னு.. என் பேச்சை யார் கேட்கிறா..?"

"ஏண்டி..? என்ன ஆச்சு..?"

"எரிச்சலைக் கிளப்பாதீங்க.. எனக்கு நல்லா வந்திரும் வாயிலே.."

"வந்துட்டுப் போகட்டும்.. நீ என்ன விசயம்ங்கிறதைச் சொல்லு.."

"தஞ்சாவூருக்குப் போனா இவ பிரகதீஸ்வரர் கோவிலையே வெறிச்சு வெறிச்சுப் பார்க்கிறா.."

"ரசிச்சிருப்பாடி.."

"அதான இல்ல.. என்னவோ பகையாளியைப் பார்க்கறதைப் போல பல்லைக் கடிச்சு வைக்கிறா.."

"என்னடி சொல்ற..?"

பிரதாப்புக்கு பயம் பீடித்துக் கொண்டது.. யாமினி காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரருக்கு பரம பக்தை..! அவளா பிரகதீஸ்வரர் கோவிலை வெறிக்க வெறிக்கப் பார்த்தாள்..?

"சாமியையெல்லாம் விழுந்து விழுந்துதான் கும்பிட்டா.." அலுத்துக் கொண்டாள் அனுராதா..

"என்னடி இது..! கோவிலை வெறிக்க வெறிக்கப் பார்த்தவ.. சாமிய மட்டும் விழுந்து விழுந்து கும்பிட்டாளா..?"

"ஆமாங்க.. ஏண்டின்னு கேட்டா.. அந்தக் கோவிலை ராஜராஜ சோழன் கட்டினாராம்.."

"ராஜராஜ சோழன் கட்டினா இவளுக்கென்ன..? இவளுக்கும் அவருக்கும் என்ன ஜென்மப் பகையா..?"

இந்தக் கேள்வியில் யாமினி அதிர்ந்து அவரைப் பார்த்தபோது அடுத்துப் பேச முடியாமல் பிரதாப்புக்கு வாயடைத்துப் போனது.. யாமினியின் அதிர்ந்த பார்வையில் அவர் மனதை பயம் பீடித்து ஆட்டியது..

"என்னம்மா..?"

"ஒன்னுமில்லைப்பா.."

ஒன்றுமில்லையா..? ஒன்றுமே இல்லையா..? ஒன்றும் இல்லாததிற்கா அவள் எதையோ தொலைத் தவளைப்

போல இருள் வெளியை வெறித்துக் கொண்டிருக்கிறாள்..? கடற்கரை சிற்பக் கோவில்களில் எதைத் தேடி சுற்றிக் கொண்டிருக்கிறாள்..?

'யாமினி..!' அவர் மனம் துயரம் கொண்டது..

பிரதாப்புடன் அவரது கடைக்கு வந்த யாமினி.. கலைப் பொருள்களை துடைத்து வைத்தாள்.. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அழகான ஆங்கிலத்தில் விளக்கம் கொடுத்தாள்.. சிற்பங்களைப் பற்றி விவரித்தபோது அவள் முகத்தில் தோன்றிய பெருமிதத்தில் அயர்ந்து போனார் பிரதாப்.. கலையைப் பற்றிக் கூறுவதைப் போல இல்லாமல் குடும்பக் கலையைப் பற்றி அவள் கூறுவதைப் போன்ற சொந்தத்துடன் அவள் பேசினாள்.. சிலைகளைப் பற்றியும்.. சிலை வடிப்பதைப் பற்றியும் கையை ஆட்டி.. விழிகளை விரித்து படு உற்சாகமாக அவள் பேசிய போது பிரதாப்புக்கு மயக்கமே வந்து விட்டது.. அவள் சொல்லியதில் பல விவரங்கள் அவருக்கே தெரியாது..

'இதையெல்லாம் இவ எப்போத் தெரிஞ்சுக்கிட்டா..?'

"மியூசியன் கையில இருக்கிற இன்ஸ்டுரூமென்டும். சிலை வடிக்கிற சிற்பி கையில இருக்கிற உளியும் ஒன்னுதாங்க.. அவங்க வாசிச்சா ராகம் வரும்.. இவங்க வடிக்கிற சிலையில உயிர்ப்பு வரும்.. ஒருவகையில இரண்டுமே ஸ்வரங்கள்தாங்க.." யாமினியின் விழிகளில் தெரிந்த ஜ்வலிப்பில் கவரப்பட்ட சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் கதை கேட்டார்கள்..

"இந்தச் சிலை பல்லவர்கால சிலைகளோட மாடலில் வடிக்கப்பட்டதுங்க.. இது சோழர் காலத்து சிலையின் மாடல்.. இது பாண்டியர் காலம்.."

யாமினி சொல்லிய வரலாற்றுப் பிண்ணணிகளைப் பற்றி எதுவும் அறியாத பிரதாப்..

'யாமறிவேன் பராபரமே..!' என்று திருதிருத்துக் கொண்டிருக்க.. அவரது கடையில் இருந்த பெரும்

பான்மையான சிலைகளை அன்று விற்றுத் தீர்த்து விட்டாள் யாமினி..

"எப்புடி..?"

வீட்டுக்குள் வந்தவர் பீற்றிக் கொண்டிருக்க யாமினியோ எதுவுமே நிகழாததைப் போல டிவியில் ஆழ்ந்து விட்டாள்..

"பாருடா..."

"யாரைடி சொல்ற..?"

"உங்களையில்லைங்க.."

பிரதாப்புக்கு தைரியம் கொடுத்து விட்டு மகளைப் பார்த்தாள் அனுராதா..

அத்தியாயம் - 40

ஏழுபிறப்பிலும் உனைத் தொடரும்

சொந்தமெந்தன் சொந்தம்..

தொன்றுதொட்டு வந்த மரபால்..

என்னை நீ துறந்தாயா..?

"என் மகளைச் சொல்கிறேங்க.."

"மகளை 'டா' போட்டுச் சொல்லுவியா..?"

"தோடா..!"

"இது வேறயா..? இதுவும் என்னைச் சொல்லலைன்னு உதார் விடுவியே.."

"மாட்டவே மாட்டேன்.. சாட்சாத் உங்களைத்தான் சொன்னேன்.. தோடா..! இதிலயும் சந்தேகமான்னேன்.."

"அது என்னவோடி அனு.. நீ உருப்படியாய் பேசினாலும் என்னைக் கேலி பண்றயோன்னு மனசுக்குள்ள ஒரு குறுகுறுப்பு.."

"வரும்.. வரும்.. ஏன் வராது..? அழகு மகளை பெத்து வைத்துக்கிட்டு என்கிட்ட உதார் விடறாரு.."

"இப்ப என்னதான் சொல்ல வந்த..? அதைச் சொல்லு முதல்ல.."

"பாருடா..! இவகூட கெட்டிக்காரத்தனமாய் வேலை பார்த்திருக்காளேன்னு சொல்ல வந்தேன்.. எங்கே சொல்ல விட்டிங்க..? பாருடான்னவுடனே என்னையான்னு ஆரம்பிச்சுட்டிங்க.."

இருந்திருந்து மகளைத் தன் வாயாலேயே பாராட்டி விட்ட மனைவியை காதலுடன் பார்த்தார் பிரதாப்.. அவள் கழுத்தை நொடித்தபடி உன் காதலும் வேண்டாம்.. கடற்கரை மணலும் வேண்டாம் என்று சமையலறைப் பக்கமாக நகர்ந்தாள்..

"யது வந்தாச்சா..?"

மனைவி மையல் கொள்ளவில்லையே என்ற ஏமாற்றத்துடன் வினவினார் பிரதாப்..

"இந்நேரத்துக்கு வந்திருக்கனும்.. ஏன் வரலைன்னு தான் தெரியலை.. அவன் வந்திட்டா எல்லாத்துக்கும் காபிக் கடையை விரிச்சு வைச்சு வேலையை முடிச்சிருவேன்.. ஆளுக்கொரு நேரத்துக்கு வந்தா என்னால வேலை செய்ய முடியுதா..?"

மனைவியின் அலுப்பில் அப்போதைக்கு அவள் காதல் பார்வையை பார்க்க மாட்டாள் என்பதை புரிந்து கொண்ட பிரதாப்.. காபியையாவது குடித்து வைக்கலாம் என்று சோபாவில் விழுந்தார்..

"ரிமோட் எங்கே..?"

"என்னைக் கேட்டா..? நானென்ன ரிமோட் கண்ட்ரோலை வைச்சா காபி கலக்கப் போறேன்..? கிச்சனில இருக்கிறவளுக்கு டிவி ரிமோட்டால என்ன வேலை ஆகப் போகுது..? உங்க மககிட்டக் கேளுங்க.."

"யாமினி.."

மகளை அழைத்தபடி டிவியைப் பார்த்த பிரதாப் தலையில் கைவைத்தார்..

ஏதோ ஒரு ஊரில் பூமியில் புதையுண்டிருந்த பழங்கால அரண்மனையை தொல்பொருள் துறை மீட்டியிருந்ததை டிவியில் ஒளிபரப்பிக் கொண்டிருந் தார்கள்.. என்னவோ அந்த ஊரையும் அரண்மனையையும் காலம் காலமாக அறிந்தவளைப் போல யாமினி கன்னத்தில் கை வைத்து டிவியில் ஆழ்ந்திருந்தாள்..

பிரதாப் அழைத்ததைக் கூடக் கவனிக்காமல் புதையுண்டு வெளிப்பட்டிருந்த அரண்மனையைப் பார்த்துக் கொண்டிருந்தவளை..

"யாமினி.." என்று உரத்த குரலில் மீண்டும் அழைத்தார் பிரதாப்..

"அப்பா..?" உலுக்கி விட்டவளைப் போல தந்தையின் முகம் பார்த்தவளைக் கவலையுடன் அவர் பார்த்தார்..

'ஏம்மா இப்படி இருக்கிற..?'

மகளிடம் வெளிப்படையாக கேட்க இயலாமல் மனதுக்குள் கேட்டுக் கொண்டவர்.. குற்ற உணர்வுடன் விழித்த மகளிடம்..

"ரிமோட்டைக் குடும்மா.." என்றார்..

"ஏம்ப்பா.. வேற புரோக்ராம் பார்க்கப் போகிறிங்களா..?" அவள் ஏமாற்றத்துடன் கேட்டாள்..

இந்த அளவுக்கு ஏமாற்றமடைய அவள் சீரியலையா பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்ற கேள்வி மனதில் எழ.. அவளது ஏமாற்றத்தைக் கவனிக்காதவரைப் போல

மகளின் கையிலிருந்த ரிமோட்டை ஏறக்குறைய பிடுங்கினார் பிரதாப்..

"இந்த புரோக்ராமே இருக்கட்டும்ப்பா.."

"வேணாம்மா.. கடையிலயும் இதைத்தானே பார்க்கிறேன்..? வீட்டுக்கு வந்தா என்டெர்டெயினா எதையாச்சும் பார்க்கணும்.. அப்பத்தான் மனசு ரிலாக்ஸா இருக்கும்.."

பிரதாப்பின் மறுப்பில் யாமினி எழுந்து வாசல் பக்கமாக போனாள்.. மகளின் கோரிக்கையை மறுத்து விட்ட வருத்தம் வந்த போதும்.. யாமினியை அவள் போக்கிலேயே விடக் கூடாது என்று மனதை சமாதானப் படுத்திக் கொண்டு காமெடி ஷோவை பார்க்க ஆரம்பித்தார் பிரதாப்..

தோட்டத்தின் ஊஞ்சலில் அவள் வைத்த இடத்தை விட்டு அகலாமல் ஏதோ கட்டளைக்கு கீழ்படிந்ததை போல அக்கடிதம் சட்டமாக உட்கார்ந்திருந்தது.. அவளைக் கண்டதும் ஆசுவாச பெருமூச்சைவிட்டது.. அவளது பார்வை தன்மீது விழாதா என்று கடிதம் காத்திருக்க.. வானத்தில் மின்னல் வெட்டியது.. யாமினி அண்ணாந்து பார்த்தாள்..

'மழைக்காத்து அடிக்குதே.. மழை வருமோ..?'

மழை வருவதற்கான அனைத்து அறிகுறிகளும் வான மண்டலத்தில் தென்பட்டன.. இருளைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்ட மின்னல் கோடுகள் கண்களை கூச வைத்தன.. இடி இடித்ததில் அதைவிட அதிகமாக அனுராதா சப்தம் போட்டாள்..

"ஏங்க.. இவ என்னத்துக்குங்க.. மின்னல் வெட்டற வானத்த கொட்டக் கொட்ட முழிச்சுக்கிட்டு பார்த்து வைக்கிறா..? உள்ளே வரச் சொல்லுங்க.. வானிலை ஆராய்ச்சி பண்றவன் கூட இப்படிப் பார்க்க மாட்டான்.."

யாமினி கதவை மூடினாள்.. அவள் பார்வையில் படாமல் போனதில் கடிதம் ஏமாற்றம் கொண்டது.. மழைக்காற்று வலுக்க ஆரம்பித்தது.. தோட்டத்துச்

சருகுகள் சூறாவளிக் காற்றில் சுழன்று கொண்டிருக்க.. கடிதம் மட்டும் இரும்பினால் செய்யப்பட்டதைப் போல எதற்கும் அசையாமல் வைத்தது வைத்த படி ஊஞ்சலில் இருந்தது..

"இந்த யது நேரத்தில வீட்டுக்கு வந்து சேரக் கூடாதா..?"

"ஆபிஸில வேலை முடிஞ்சிருக்காது அனு.."

"அது இந்த மழைக்குத் தெரியுமா..? கொட்டோ கொட்டுன்னு கொட்டிரும் போல இருக்கே.."

"மழைன்னா கொட்டத்தான் செய்யும்.."

பிரதாப் வியாக்கினம் செய்ததில் அனுராதா பல்லைக் கடித்தபடி அவரை முறைத்துப் பார்த்தாள்..

"இப்ப இந்த விளக்கத்தைச் சொல்லுங்கன்னு நான் அழுதேனா..?"

'நீ ஏண்டி அழப் போற..? மத்தவங்களைத்தான் அழ வைப்ப..'

மனதுக்குள் நினைத்துக் கொண்டார் பிரதாப்.. வெளியில் சொல்லவில்லை.. அதற்கான தைரியமெல்லாம் இது போன்ற மௌனங்களுடன் இருந்தாக வேண்டியிருக் கிறதே..

வேகமாக வீசிய மழைக் காற்றில் ஜன்னல் கதவுகள் தடதடத்தன.. அனுராதா பிரதாப்புக்கும், யாமினிக்கும் காபி டிபனை கொடுத்து விட்டு கவலையுடன் ஜன்னலைப் பார்த்தாள்..

"இப்படிக் காத்தடிக்குதே.."

"அடிச்சா அடிக்கட்டுமே அனு.."

"எனக்கு நல்லா வந்துரும் வாயிலே.. சும்மா எதையாச்சும் நொணநொணன்னு வியாக்கினம் பேசிக் கிட்டு இருக்கனுமின்னு வேண்டுதலோட பிறந்திருக் கீங்களா..?"

"இல்லடி அனு.."

"என்னத்த நொல்லடி அனு..? நானே யது இன்னும் வரலையேங்கிற கவலையில இருக்கேன்.. அடிக்கிற காத்தில கரண்ட் கட்டாகிட்டா என்ன செய்யறது..?"

"அதுக்குத்தான் இன்வெண்டர் இருக்கே.."

"இதுக்கும் பதில் சொல்லியாச்சா..? ஏங்க இப்படி இருக்கீங்க..? கொஞ்ச நேரம் பேசாமத்தான் இருங்களேன்.."

'அதைத்தாண்டி எப்பவும் செஞ்சுக்கிட்டு இருக்கேன்..?'

பிரதாப் பேசா மடந்தனாகி டிபன் காபியில் கவனமானார்.. யாமினி காபி தம்ளரை வாயில் வைத்தபடி ஏதோ சிந்தனையுடன் இருந்தாள்.. எட்டிப் பார்த்த அனுராதா மகளின் தலையில் ஒரு குட்டை வைத்தாள்..

"கடன்காரி..! ஒரு மொடக்கு காபியாவது உன் தொண்டையில இறங்கியிருக்குமாடி..? காபியைக் கொடுத்தாக் குடிச்சுத் தொலைக்கனும்.. இப்படியா கையில வைச்சுக்கிட்டு அழும்பு பண்ணுவ..? உன்கூட போராடிப் போராடி என் ஆவிதான் குறையுது.."

பேசா மடந்தனாக இருந்த பிரதாப்புக்கு மகளைத் திட்டுவதைக் கண்டு மனம் பொறுக்க வில்லை..

"ஏண்டி.. எப்பப் பார்த்தாலும் அவளைக் கரிச்சுக் கொட்டிக்கிட்டே இருக்கே..?" என்று கேட்டு விட்டார்..

அவ்வளவுதான்.. அனுராதா ருத்ர அவதாரம் எடுத்து விட்டாள்.. சமையலறையில் இருந்த பாத்திரங்கள் பறக்க ஆரம்பித்தன..

"வீடா இது..? ஒருத்தராவது சொல்பேச்சுக் கேட்கிறாங்களா..? ஒருத்தியா இவங்க கூட மல்லுக்கட்டி குடும்பம் நடத்தறதுக்கு சன்யாசம் வாங்கிட்டுப் போயிடலாம்.."

அனுராதாவின் கோபத்தில் யாமினி மடக்.. மடக்கென்று ஒரே மூச்சில் காபியை தொண்டையில் சரித்துவிட்டு காலி தம்ளரை சின்க்கில் போட சமையலறைக்குள் ஓடினாள்..

"இதை அப்பவே செஞ்சு தொலைக்கிறதுக்கு என்ன...?" அதற்கும் எரிந்து விழுந்தாள் அனுராதா..

"இல்லேம்மா.. காபியை ரசிச்சுக் குடிச்சேன்.." விளக்கம் சொல்ல யோசித்து கதை பிணைந்தாள் யாமினி..

அனுராதா முறைத்த முறைப்பில் அனல் பறந்தது.. சமையலறையின் ஜன்னல் வழியாக வந்த குளுமையான காற்றினால் அவளது கோபத்தை தணிக்க முடியவில்லை..

அத்தியாயம் - 41

மைவிழியை மயக்கி விடும்

மந்திரத்தை எங்கு கற்றாய்..?

பத்துவிரல் கொண்டு எண்ணினாலும்..

உன் முகத்தை மட்டுமே எண்ணத்தோன்றும்..

அனுராதாவின் பார்வை சொல்லியது என்ன என்று யாமினியால் அனுமானிக்க முடியவில்லை.. அப்படியொரு பார்வையை மகளை நோக்கிப் பார்த்து வைத்தாள் அனுராதா..

"என்னம்மா..?" தடுமாறினாள்..

"என்னத்த நொன்னம்மா..? நீ..? ரசிச்சு.. காபி குடிச்ச..? அதை நான் நம்பனும்..?"

"அம்மா.."

"பேசாம போயிரு யாமினி..! நானே செம கடுப்பில இருக்கேன்.. காலயில இருந்து நீ பண்ணி வைக்கிற கூத்தில கூறாம சன்யாசம் வாங்கிரலாம்ங்கிற முடிவோட இருக்கேன்.. நீ மேல.. மேல.. என்ன நோகடிக்காதே.."

"என்னம்மா இப்படியெல்லாம் கோவிச்சுக்கறிங்க..?"

"உன்னை கோவிச்சு எனக்கென்ன ஆகப் போகுது..? உங்கப்பா மாதிரியே நீயும் பேசாதே.. உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு.. நான் உன்னைக் காரணமில்லாம

கோவிச்சுக்கறேனா..? காலம் போன கடைசியில உங்கப்பாவுக்கும் எனக்கும் டைவர்ஸ் வாங்கிக் கொடுத்துரனும்ங்கிற கங்கணத்தோட இருந்துக்கிட்டு நியாயம் பிளக்கக் கிளம்பிட்டியா..?"

"அம்மா.."

"போனா போன இடம்.. வந்தா வந்த இடம்.. எப்பப் பார்த்தாலும் மெகாலு பிடிச்ச தனமா கடலோரமாவே சுத்திக்கிட்டு இருக்கிறது.. உனக்கென்னடி.. எனக்குப் பெண்ணா பிறந்து தொலைச்சிட்ட.. இதுவே உனக்கு ஒரு மகள் பிறந்து அவ இப்படி உன்னைக் கலங்கடிச்சா உனக்கு எப்படியிருக்கும்ன்னு நினைச்சுப் பாருடி.. அப்பத் தெரியும் என் துயரம்.."

அனுராதாவின் ஆற்றாமையைக் கேட்டுக் கொண்டிருந்த பிரதாப்பின் மனம் வலித்தது.. மனைவி படும் துயரை அவரால் தாள முடியவில்லை.. எழுந்து சமையலறைக்குள் வந்தார்.. அவரைக் கண்டதும் அனுராதா முகம் திருப்பிக் கொண்டாள்..

"ஸாரி அனு.." பிரதாப் குற்ற உணர்வுடன் மன்னிப்புக் கேட்டார்..

"அவரை ஹாலுக்குப் போகச் சொல்லு யாமினி.." கோபம் குறையாமல் பேசினாள் அனுராதா..

"ஏதோ ஒரு யோசனையில பேசிட்டேன் அனு.."

"இதை நம்ப நானொன்னும் கேணச்சியில்ல யாமினி.. இவர் சிந்திக்கிறாராம்.. ஒரு கூடை பூவையும் ஒட்டு மொத்தமா என் காதில சுத்த வேணாம்ன்னு சொல்லி வை.. யோசிக்கிற ஆளைப் பாரு.. அதுக்கெல்லாம் தனி மூஞ்சி இருக்கணும்.."

"ஏண்டி.. என் மூஞ்சிக் கென்ன..?"

"என் வாயைக் கட்டி இழுக்காம அவர் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போகச் சொல்லு.. கரிச்சுக் கொட்ட றேனாம்.. சொல்ல வந்திட்டாரு.. இவருக்கு மட்டும்தான்

மகள்.. எனக்கு தெருவில போகிறவளா..? பெத்தவருக்கே இப்படின்னா.. பத்து மாதம் வயித்தில சுமந்துவளுக்கு எப்படியிருக்கும்..?"

"அனு.."

"மனுசங்களோட நாக்கு எப்படியெல்லாம் பேசும்ன்னு எனக்கில்ல தெரியும்.. இவருக்கென்ன தெரியும்..? கடை விட்டா வீடு.. வீடு விட்டா கடைன்னு ஒத்தக் கோட்டில சுத்திவர்ற மனுசனுக்கு வயசுப் பெண்ணை எப்படி வளர்க்கனும்ங்கிற அறிவும், பொறுப்பும் எங்கிருந்து வரும்..?"

"இதுக்குத்தான் நான் கோபப் படறேன் அனு.. யாமினிக்கு என்னடி குறை..?"

"எதுவும் இல்லைன்னு நமக்குத் தெரியும்.. ஊருக்குத் தெரியுமா..? இவ வித்தியாசமா நடந்துக்கிறதை ஊர், உலகம் வேற மாதிரி பேசி வைத்துட்டா இவ எதிர்காலம் என்னவாகிறது..?"

மனைவியின் கேள்வியில் அர்த்தம் பொதிந்திருந்ததில் கதி கலங்கிப் போனார் பிரதாப்.. ஏற்கனெவே அது போன்ற சில கேள்விகளை அவர் எதிர்கொண்டிருந்தார்..

"ஏன் பிரதாப்..? உங்க டாட்டர் யாமினி.. இருட்டின பின்னாடியும் கடலோரமாவே சுற்றிக்கிட்டு இருக்கே.. ஏன்..? ஏதாச்சும் லவ் பெயிலியரா..?"

கேட்டவரின் முகரையைப் பெயர்க்க வேண்டும் போல கோபம் கொண்ட பிரதாப்.. அதற்கு இணையாக அந்த மனிதரைத் திட்டித் தீர்த்து விட்டார்.. பிரதாப் பேசிய பேச்சில் அந்த நபர் பின்னங்கால் பிடறியில் பட ஓடி விட்டாலும்.. வெகு நாள்கள் வரை அந்தக் கவலை பிரதாப்பின் மனதை அரித்துக் கொண்டே இருந்தது..

'இவன் மத்தவங்ககிட்டப் போயி என்ன சொல்லி வைப்பானோ..'

பிரதாப் மனைவி, மக்களின் மீது பாசம் கொண்டவர்.. அனுராதாவுக்கும், யதுநந்தனுக்கும் அவருடைய அதீத பாசத்தினால் ஏற்படும் பரிவும், காருண்யமும் தேவைப்பட்டதில்லை.. அவர்கள் சராசரி மனிதர்கள் எப்படியிருப்பார்களோ அப்படி இருந்தார்கள்..

யாமினி அப்படியில்லாமல் வித்தியாசமாக இருந்தில் அவரின் பரிவும், காருண்யமும் ஒட்டு மொத்தமாக அவளைக்காவல் செய்யும் பணியில் ஈடுபட்டன..

அனுராதாவின் தவிப்பும், துடிப்பும்.. அவரிடமும் இருந்தன.. ஆனால் அதைத் தாண்டிய கேள்வியொன்றும் அவர் மனதில் இருந்தது.

'யாமினி என்ன வேண்டும்ன்னா இதைப் போல செய்து வைக்கிறா..?'

இல்லை என்பதை அவர் அறிவார்.. யாமினி அப்படிப்பட்ட பெண்ணில்லை.. பெற்றவர்களின் மனம் நோக எதையும் செய்யக்கூடாதென்ற எண்ணம் கொண்டவள்.. அவளுடைய விசித்திரமான நடவடிக்கை களுக்கான காரணத்தைப்பற்றி அவளுக்கே எதுவும் தெரியாது எனும்போது அவளை நொந்து என்ன பலன் ஏற்பட்டுவிடப் போகிறது..?

"உன் மனசு எனக்குப் புரியலைன்னா நினைக்கிற அனு..?"

பிரதாப்பின் குரல் கரகரத்ததில் அனுரதாவுக்கு அழுகை வந்து விட்டது.. உதட்டைக் கடித்தபடி.. சமையலறையின் ஜன்னல் பக்கமாக திரும்பிக் கொண்டாள்.. பிரதாப்பின் கைகள் அவளது தோள்படிந்து அவளை அவர் புறமாக திருப்பின.. மனைவியின் கண்ணீரில் அவர் துணுக்குற்றார்..

"அனு..? அழுகிறயா..?"

"இல்ல.. சிரிக்கறேன்.."

"அனு.."

"உங்களைப் போல புருசனும்.. உங்க மகளைப் போல மகளும் கிடைச்சிருக்கிறவ.. சிரிச்சு மகிழாம அழுகவா

செய்வா..?"

என்னதான் இயல்பான பேச்சில் அவளது துயரத்தை திரை போட்டு மறைக்க முயன்றாலும் ஒரு கட்டத்திற்கு மேல் அனுராதாவால் நடிக்க இயலவில்லை.. அவள் தேம்பலுடன் அவர் மார்பில் சாய்ந்தாள்.

"அனு.."

மனைவியை அணைத்துக் கொண்ட பிரதாப்பின் விழிகள் பனித்தன..

மகள்மீது மனைவி கொண்டிருக்கும் பாசத்தை அவர் அறியாதவரா என்ன..? அறிந்தும் மனைவியின் மனம் நோக பேசி விட்டதில் அவரது மனம் வலித்தது. மனைவியின் முதுகு தடவி மன்னிப்புக் கேட்டார்..

"ஸாரி அனு.."

"உங்க ஸாரியைக் கொண்டு போய் குப்பையில் போடுங்க.."

"தெரியாம பேசிட்டேன்.."

"இந்த டயலாக்கைக் கேட்டுக் கேட்டு என் காது புளிச்சுப் போச்சு.."

"இல்லடி.."

"என்னத்த இல்ல..? பொழுது விடிஞ்சு பொழுது போகிறதுக்குள்ள இதைப் போல எத்தனை பேச்சை பேசி வைக்கறிங்க..? யாமினியைக் கண்டிச்சு ஒரு வார்த்தை சொல்ல விட மாட்டேங்கறிங்க.. அவ என்ன என்னோட சக்களத்தி மகளா..?"

"சேச்சே..! என்ன வார்த்தை பேசற..? நான் ஏக பத்தினி விரதன்டி.. உன் முகத்தைத் தவிர வேற ஒருத்தி முகத்த நிமிர்ந்து பாத்திருப்பேனா..? என்கிட்டப் போய் சக்களத்தி.. அது.. இதுன்னு சொல்லிக்கிட்டு..! நீயே சொல்லு.."

"என்னத்தச் சொல்ல..?"

"எதிர் வீட்டு நீலாம்பரி.. பார்க்கத் தகதகன்னு தங்கச்சிலைபோலவே இருக்கா.. அவ சிரிச்சா சூரியனே நமக்கு யாரு போட்டியா வந்திருக்கிறதுன்னு நின்னு பார்ப்பான்.."

பிரதாப் பாவம்.. அந்த ஊரில் உள்ள அவர் வயதுக்கு ஏற்ற நடுத்தர வயதுப் பெண்களின் அழகைப்பற்றிக் கூறி.. அவர்களையெல்லாம் அவர் திரும்பிப் பார்த்திருக்கிறாரா என்று மனைவியிடம் கேட்கத்தான் விளக்கம் சொல்ல ஆரம்பித்தார்..

அந்த விளக்கத்தில் அனுராதாவின் அழுகை நின்று விட்டது.. அவள் விலகி நின்று புருவங்களை சுருக்கி.. உதட்டை ஓர் மார்க்கமாக வளைத்து..

"ஓ.." என்றாள்..

அந்த 'ஓ' என்ற ஒலி எழுப்பிய வித்தியாசத்தில் ஒளிந்திருந்த விபரீதத்தை உணராமல் பிரதாப் உற்சாகத்துடன் தமது விளக்கவுரையில் கண்ணும் கருத்துமாக இருந்தார்..

"நம்ம பக்கத்து வீட்டு மேகலாவையே எடுத்துக்கயேன்.."

"நீங்கதான் எடுத்துக்கிட்டு இருக்கீங்களே.. அதையே கண்டினியு பண்ணுங்க.. நான் எடுத்தா நல்லாயிருக்காது.."

"அதுவும் சரிதான்.."

"நீங்க சொன்னா அது சரியாத்தானே இருக்கும்.."

அனுராதா பல்லைக் கடித்த சப்தம் வெளியில் இடித்த இடியின் சப்தத்தில் அமுங்கியது..

அத்தியாயம் - 42

சொந்தமில்லா சொந்தத்தினை..

சொந்தம் கொண்டு தேடுகின்றேன்..

நித்திரையின் சொப்பனத்தில்..

நின் முகமே வருவதும் ஏன்..?

மழைக்காற்று சுழன்றடித்து மழை வரும் தருணத்தை அறிவித்துக் கொண்டிருந்தது.. சுழன்றடித்த காற்றில் சிக்கிச் சுழலாமல் யாமினியின் வேலை

நியமன உத்தரவை தாங்கி வந்திருந்த கடிதம் அவள் கவனிப்பதற்காக தோட்டத்து ஊஞ்சலில் காத்திருந்தது..

அதை அறியாமல் யாமினி டிவியில் கவனமாக இருக்க.. சமையலறையில் மனைவியை சமாதானம் செய்ய வந்த பிரதாப்.. வந்த வேலையை மறந்து வாய் விட்டு வனவாசம் போய் கொண்டிருந்தார்..

"அவளோட கேரளத்து அழகில யாருடா இந்த மோகினின்னு நின்னு பாக்காத ஆம்பளை நம்ம தெருவில இருக்கானா..?"

"இல்லவே இல்லன்னு இப்ப நீங்க சொல்லித்தானே எனக்கே தெரியுது.." அனுராதாவின் விழிகள் தீம்பிழம்பாகின..

"நம்ம அடுத்த வீட்டு அம்புஜத்தைப் பாரு.."

"நீங்கதான் தினம்தினம் அவளைப் பாத்திருக் கீங்களே.. இது தெரியாத கேணச்சிகிட்டப் போயி அவளைப் பாக்கச் சொல்கிறீங்களே.. ஆனாலும் என் அயித்தானுக்கு இம்புட்டு எகத்தாளம் இருக்கக் கூடாது."

"ஹா.. ஹா.."

"எதுக்கு இந்த சிரிப்பு..?"

"நீ ஜோக் அடிச்சியே.."

"ஜோக்கு..? நான் அடிச்சேன்..? இருக்கட்டும்.. இருக்கட்டும்.."

"அந்த அம்புஜம் பேரிலதான் மாமி..! இந்தத்தெரு ஆம்பளைகளுக்கு அவதான் சாமி..!"

"நீங்களும் கற்பூரம் ஏத்தி சாம்பிராணி காட்டியிருப் பீங்களே.."

"பின்னே..? அந்தப் பொண்ணு அழகு தெய்வமில்ல.."

"அவ பொண்ணுக்கு போன வாரம்தான் கல்யாணமாச்சு.."

"இதையேண்டி இப்பச் சொல்ற..?"

"இல்ல.. அவள பொண்ணுன்னு சொன்னாப்புல இருந்தது.. அதான்.. தெளிவுரையை சொல்லி வைச்சேன்.."

"என் வயசுக்கு அவள பொண்ணுன்னுதான சொல்ல முடியும்..?"

"அதுசரி.. அதுசரி.. கணக்கெடுப்பு முடிஞ்சிருச்சா..? இல்ல.. இந்த மகாபலிபுரத்தில இருக்கிற அத்தனை வீட்டுப் பொம்பளைகளோட அழகை வர்ணிச்ச பின்னாடிதான் முடியுமா..?"

அதுவரை படு உற்சாகமாக வர்ணனை செய்து கொண்டிருந்த பிரதாப் அனுராதாவின் குரலில் ஒளிந்திருந்த புயலை இனம் கண்டு கொண்டவராக..

"அனு..!" என்று அரண்டு போனார்..

"அனுதான்.. இந்த வீட்டில குப்பை கொட்டற அனுராதாதான்.. எதுத்த வீட்டு நீலாம்பரி.. பக்கத்து வீட்டு மேகலா.. அடுத்தவீட்டு அம்புஜம்ன்னு அத்தனை பொண்ணுகளோட அழகையும் கட்டின பொண்டாட்டி கிட்டயே வர்ணனை செய்யற ஆம்பளைக்கு கழுத்தை நீட்டிட்ட வன்கொடுமைக்கு ஆளாகிட்ட பாவப்பட்ட பிறவிதான்.."

"ஐயோ அனு.."

"இந்த ஒப்பாரிய நான் போய் சேர்ந்த பின்னால வையுங்க.. ரொம்பப் பொருத்தமாக இருக்கும்.."

"இல்லடி அனு.."

"இல்லதான்.. அதான் வெட்ட வெளிச்சமா தெரிஞ்சு போச்சே.. உங்க மனசில நான் இல்லதான்.. ஊரில

இருக்கிற மத்த பொம்பளைகதான் இருக்காங்க.."

"அநியாயமாய் பேசாதேடி.."

"யாரு..? நானு அநியாயமா பேசறேன்..? அப்படி என்ன அநியாயத்தைப் பேசிப் புட்டேன்..? எதிர் வீட்டு ஏகாம்பரத்தோட அழகைப் பாத்து சூரியனே தெறிச்சு ஓடிப் போயிருச்சுன்னு சொல்லிட்டேனா..?"

"அனு..!" பிரதாப்புக்கு நெஞ்சுவலியே வந்து விட்டது..

அனுராதா அதைப் பற்றியெல்லாம் கண்டு கொள்வதாகே இல்லை.. அவள் சும்மாவே பிரதாப்பை வறுத்து எடுத்து விட்டுத்தான் வேறு வேலையைப் பார்ப்பாள்... இப்போதோ.. அவரைக் 'கைம்மா' பண்ணுவதற்கான அனைத்துக் காரணங்களையும் பிரதாப்பே லட்டு.. லட்டாய் அவளது கைகளில் கொடுத்து தொலைத்து விட்டார்... அவள் விட்டு வைப்பாளா என்ன..?

"இல்ல.. பக்கத்து வீட்டு பரமசிவத்தோட மலையாள அழகில மயங்காத பொம்பளைக இந்தத் தெருவிலேயே இல்லைன்னு சொல்லிட்டேனா..?" அவள் அப்பாவியாய் விழி விரிக்க..

"வேணாம்டி அனு.." என்று அலறிவிட்டார் பிரதாப்..

"இதுக்கே அலறினா எப்படி..? இன்னும் அடுத்த வீட்டு அன்பழகன் மாமாவைப் பத்திச் சொல்லியாகனுமே.."

"மாமாவா..?"

"ஆமா.. அம்புஜம் உங்களுக்கு மாமின்னா.. அன்பழகன் எனக்கு மாமாதான்.."

பிரதாப்பின் அமைதிக்கு வேட்டு வைப்பதிலேயே குறியாக இருந்தாள் அனுராதா..பிரதாப்புக்கு வார்த்தைக்கடல் வற்றி விட்டது.. அனுராதாவை மலையிறக்க அவரும் ஆன மட்டிலும் முயற்சிகளைச் செய்தார்..

"வேணாம்டி அனு.."

"வேணாம்தான்.. நீங்க எனக்கு வேணாம்தான்.."

"நான் உன் புருசன்டி.."

"இதப் பாருடா.. இது எனக்குத் தெரியாம போச்சே.. இவரு எனக்குப் புருசன்னா.. நான் இவருக்கு யாராம்..?"

"பொண்டாட்டி அனு.."

"அது இப்பத்தான் இவருக்கு நினைப்பு வந்துச்சா..? இந்தத் தெருவில இருக்கிற ஊரான் பொண்டாட்டிகளோட அழகை கட்டின பொண்டாட்டிகிட்டயே ரசிச்சு.. ரசிச்சு.. வர்ணிச்சப்ப வரலையா..?"

"அனு.."

"அப்ப இந்த நினப்பு எங்கே போயிருந்துச்சு..? அடுத்த தெருவில இருக்கிற ஆம்பளைங்களோட பொண்டாட்டிகள எப்படியெல்லாம் கட்டின பொண்டாட்டிகிட்ட வர்ணிக் கலாம்ன்னு பிளான் போடறதுக்கு ஓடிப் போயிருந்துச்சா..?"

"இல்ல அனு.."

"அது இல்லதான்.. உங்களுக்கு மனச்சாட்சிங்கறதே இல்லதான்.."

"நான் பாவம்டி.."

"அப்படித்தான் ரொம்பப்பேரு சொல்லிக்கிறாங்க.. அவங்களுக்கு உங்க வருணாச்சலத்த பத்தி என்ன தெரியும்..?"

"வேணும்னா நீ தெரியப்படுத்துடி.."

வெள்ளைக் கொடியை பறக்க விடுபவர்க்கு ரோசம் வரக் கூடாதென்ற அடிப்படை தத்துவத்தை அடியோடு மறந்து போனவராக வாய் விட்டுத் தொலைத்து வகையாக மாட்டிக் கொண்டார் பிரதாப்..

அவரை விரோதியைப் போல அனுராதா பார்த்த பார்வையில் அவரின் அடிவயிறு கலங்கியது..

"அனு.."

"இத்தனை நாளா தெரியப் படுத்தலை.. இனிமே அதுதான் என் முதல் வேலை.."

"என்னடி இப்படிச் சொல்ற..?"

"வேற எப்படிச் சொல்வேன்னு நினைக்கறிங்க..? எதிர்வீடு, பக்கத்து வீடு, அடுத்த வீடுன்னு ஒரு வீட்டைக்கூட மிச்சம் வைக்காம நீங்க சைட்டடிச் சிருக்கீங்க.. உங்களைப் போயி உத்தம புருசன்னு இந்த ஊரும் உலகமும் நம்பலாமா..? நம்ப நான் விடலாமா..?"

"சைட்டா..? நானா..?"

"பாருடா.. இந்தப் பூனையும் 'மியாவ்' சொல்லு மாங்கிறதைப் போல இவரு கொடுக்கிற போஸை..!"

"என்னைப் போயி இப்படிச் சொல்லிட்டயேடி.."

"உங்களைத்தான் சொல்லுவேன்.. பின்னே வழியில தேமேன்னு போயிக்கிட்டிருக்கிற ஊரான் எவனையாவதா சொல்லுவேன்..? சைட் அடிக்காமத்தான் அந்தப் பொம்பளைகளோட அத்தனை அழகும் ஐயாவோட தெய்வீகப் பார்வைக்கு தெரிஞ்சதாக்கும்..?"

"ஏய்ய்..! கல்யாண வயசில பெண்ணும், மகனும் வீட்டில இருக்காங்கடி.."

"அதுக ரெண்டும் அடங்கியிருக்கே.. நீங்க இல்ல ஆடறிங்க.."

"யது காதில விழுந்தா என்னடி நினைப்பான்..?"

"இத்தனை நாளா இந்தத் தகப்பனை ஒன்னும் தெரியாத சின்னக் கண்ணன்னு தப்பா எடை போட்டுட்டேமேன்னு நினைப்பான்.."

"ஸ்ஸ்ஸ்.."

பிரதாப் உதடுகளைக் குவித்து ஆள்காட்டி விரலை அதன் மேல் வைத்தபடி ஹாலை நோக்கி சைகை காட்டினார்.. அனு உதட்டைச் சுழித்து ஒரு மார்க்கமாக.. கோவை சரளாவைப் போன்ற தோரணையுடன்..

"என்ன..?" என்றாள்..

"யாமினிடி.."

"அவ யாமினிதான்.. நான் பெத்த மகளை எனக்கே அடையாளம் காட்டறிங்களா..?"

"அவ காதில விழுந்து வைக்கப் போகுதுடி.."

"இந்தக் கவலை அப்ப இல்லையே.. வயசுப் பொண்ணு காதில நாம பேசறது விழுந்து வைச்சிட்டா.. அவ நம்மளப் பத்தி என்ன நினைப்பாங்கிற எண்ணம் உங்க மனசில இருந்தாப்புல தெரியலையே.."

"நான் அப்பாவிடி அனு.."

"அதை நம்ப நான தயாரா இல்ல.."

"வெள்ளை மனசுடி என் மனசு.."

"பாலைப் போல வெள்ளையில்ல.. கள்ளைப் போல வெள்ளை.."

"சீச்சீ.. கள்ளைப் பத்தி நீ பேசலாமாடி..? ஒரு குடும்பப் பொம்பளை பேசற பேச்சாடி இது..?"

"ஆமாம் சாரே..! குடும்ப ஆம்பளைகள்ளாம் கூட்டுச் சேர்ந்தக்கிட்டு குடிக்கப் போங்க.. கும்மாளம் போடுங்க.. அடுத்த வீட்டு பொம்பளைகளோட அழகை கட்டின பொண்டாட்டிகிட்டயே பிட்டுப் பிட்டு வைங்க.. அதை ஏன்னு அவகேட்டா உடனே நீயெல்லாம் குடும்பப் பொம்பளையாடின்னு கேட்டு வையுங்க.. அடச்சே..! இந்தப் பொழப்பு எனக்கெதுக்கு..? நான் போறேன் எங்க அம்மா வீட்டுக்கு.."

அனுராதா பெட்டியைத் தூக்கி விட்டாள்...

அத்தியாயம் - 43

ஏதோ ஒரு மயக்கம்..

என் மனதை வாட்டுது..

சில நொடிகள் எனக்காக..

சிந்தித்தால் எனையறிவாய்..

பிள்ளையார் பிடிக்கப் போய் அது ஆஞ்சநேயராக மாறிவிட்டதில்.. கதி கலங்கிப் போய் கைகளை பிசைந்தார் பிரதாப்.. அதை கண்டு கொள்ளாமல் புயல் வேகத்தில் சமையலறையை விட்டு வெளியேறி படுக்கையறைக்குள் நுழைந்தாள் அனுராதா..

அவள் பின்னாலே ஆட்டுக் குட்டியைப் போல தொடுத்துக் கொண்டு ஓடின பிரதாப்..

"கிச்சனை விட்டு ஏன் வந்த அனு..?" என்று கேட்டு வைத்தார்..

அவர் சமாதானம் பேச முனைந்த லட்சணத்தில் அவரை நிமிர்ந்து பார்த்த அனுராதாவின் முகத்தில் கடுகு பொரிந்து கொண்டிருந்தது..

"வராம.. அங்கேயே குடியிருக்கச் சொல்கிறீங்களா..? கிச்சனை எனக்குன்னு பட்டாப் போட்டா கொடுத் திருக்கீங்க..?"

"என்னடி அனு இப்படிப் பேசற..?"

"ஏன்..? நல்லாத்தான பேசறேன்..? எதுத்த வீட்டுப் பொண்ணு மாதிரி பேசலையா..?"

"அவளை நீ விடவே மாட்டாயா அனு..?"

"எனக்கு நல்லா வந்திரும் வாயில.. நானா அவ பேச்சை பேசினேன்..? நொட்டை விட்டுக்கிட்டு அவ பேச்சை பேசி வைச்சது யாரு..?"

"நான்தான்.. நான்தான்.. அந்தக் குத்தத்தை செஞ்சு தொலைச்சது சாட்சாத் நானேதான்.. வாயாலே கெட்டேன் அனு.."

அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டு சரணாகதியாக.. அனுராதா கொஞ்சம் கூட இரக்கம் காட்டாமல் மலையேறுவதிலேயே குறியாக இருந்தாள்.. பெட்டியில் துணிகளை அவள் அடுக்கிய வேகத்தில் உண்மையாகவே அவள் வீட்டை விட்டு வெளிநடப்பு செய்யப் போகிறாள் என்பது பிடிபட்டுப் போக பிரதாப் கையெடுத்துக் கும்பிடாத குறையாக அவளிடம் கெஞ்ச ஆரம்பித்தார்..

நீ பாட்டுக்குக் கெஞ்சிக் கொண்டிரு... நான் பாட்டுக்கு என் பிறந்த வீட்டுக்கு பெட்டியைக் கட்டறேன் என்ற ரீதியில் அனுராதா தனது வேலையை செவ்வனே செய்து கொண்டிருக்க.. பிரதாப் ஊடே பாய்ந்து பெட்டியின் மீது விழுந்தார்..

"பாரு அனு.."

பிரதாப் பேச்சு வார்த்தைக்கு அவளை அழைக்கும் மார்க்கமாய் பேச்சை ஆரம்பிக்க.. அனுராதா நீதானே பார்க்கச் சொன்னாய்.. இதோ பார்த்து விட்டேன் என்ற திணுசில் அவரை நிமிர்ந்து 'யாரடா நீ..?' என்ற பாணியில் என்னவோ அவளுக்கும், அவருக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்ற ரீதியில் பார்த்து வைத்து விட்டு விட்ட வேலையை தொடர்ந்தாள்..

"சின்ன விசயத்துக்கெல்லாம் பெட்டியைத் தூக்கக் கூடாது அனு.."

"எது சின்ன விசயம்..? எதிர் வீடு.. பக்கத்து வீடு.. ஒரு வீடு விடாம நீங்க கடலை போடறதா சின்ன விசயம்..?"

"ஏய்ய்..! நீயே எனக்கு பட்டம் கட்டி விடுவ போல இருக்கே.. நீ சொல்ற வீடுகள்ல இருக்கிற பொண்ணுக கிட்ட கேட்டுப்பாருடி.. யாராவது சுட்டு விரலை நீட்டி என்மேல ஒரு சின்னக்குத்தமாவது சொல்றாங்களான்னு பாப்போம்.."

"எப்படிச் சொல்வாங்க..? இத்தனை வருசமா ஒரே வீட்டுக்குள்ள பொண்டாட்டின்னு குடித்தனம் பண்ணிக் கிட்டு இருக்கிற என்னாலேயே உங்க பொய் முகத்த கண்டுக்க முடியல.. அவங்க பாவம்.. அனுராதாவோட புருசன்.. உத்தம புருசன்னு நம்பிக்கிட்டு இருக்காங்க.. அவங்க எப்படி உங்க மேல சந்தேகப் படுவாங்க..? அதையாவது நினைச்சுப் பார்த்தீங்களா.."

"நினைச்சுப் பாக்காம என்னடி பண்ணிட்டேன்..?"

"பேசாம போயிருங்க.. நானே கொலைவெறியில இருக்கேன்.."

"என்னை என்ன வேணும்னாலும் செய்துக்க.. வேணும்னா நாலு மொத்துக்கூட மொத்திக்க.. ஆனா விட்டுட்டுப் போகணும்னு மட்டும் முடிவு பண்ணாதேடி.."

"இந்த அனுராதா சொன்னாச் சொன்னதுதான்.."

"இதுவரைக்கும் அப்படியிருந்திருக்கலாம்.. இனி மேலும் அப்படி இருக்கக் கூடாது அனு.. கொஞ்சமாவது மத்தவங்களையும் நினைச்சுப் பார்க்கனும்.. இப்படி எடுத்தேன்.. கவிழ்த்தேன்னு முடிவெடுக்கக் கூடாது அனு.."

"அதைப் பத்தியெல்லாம் நீங்க பேசக்கூடாது.."

"வேற யாருடி பேசுவா..? எதிர் வீட்டு ஏகாம்பரம் வந்து பேசுவானா..? இல்ல அடுத்த வீட்டு அன்பழகன் வந்து பேசுவானா..?"

மறுபடியும் வாயால் கெட்டார் பிரதாப்.. கோபம் தலைக்கேறிய அனுராதா பெட்டியைத் தூக்கி பிரதாப்பின் தலைமீது கவிழ்க்க.. உள்ளே அவள் அடுக்கி வைத்திருந்த துணிமணிகள் அவர் தலைமீது பூமாரி போல விழுகத் தொடங்கின..

எதற்காகவோ அனுராதாவைத் தேடி வந்த யாமினி அக்காட்சியைக் கண்டதும் ஆச்சரியத்துடன்..

"அட..!" என்றாள்..

தான் பெற்ற மகளா இப்படி 'அட' போட்டது என்று விரக்தியாகிப் போனார் பிரதாப்..

"தேவைதாண்டி எனக்கு.."

கொதிப்புடன் சொன்னாள் அனுராதா.. அவளது வார்த்தைகளில் இருந்த கொதிப்பை யாமினி கண்டு கொள்ளவில்லை.. அதற்கு காரணங்கள் பல இருந்தன.. அவற்றில் அதி முக்கியமான காரணம்.. அனுராதா யாமினியையும் அவளைப் பெற்ற பிரதாப்பையும் கண்டு விட்டாலே எரிமலையைப் போலக் கொதிக்க ஆரம்பித்து விடுவாள் என்பது..

யதுநந்தன் எரிமலையை குளிர வைப்பவன்.. சராசரி சிந்தனைகளையுடைய வெற்றிகரமான தாயின் சராசரி மகனாக.. சராசரி சிந்தனைகளின் சிகரமாக திகழ்ந்து அவள் மனதை குளிர வைத்துக் கொண்டிருப்பது யது நந்தன் மட்டுமே..

அனுராதா எட்டடி பாய்ந்தால் அவன் எண்ணூறு அடி பாய்ந்து அவளை பூரிக்க வைப்பான்..

"என்னடா யது.. கத்தரிக்காய் வாங்கச் சொன்னா வெண்டைக்காயோட வந்து நிற்கிற..?" அனுராதா விளக்கம் கேட்டால்..

"ம்ம்h..! கத்தரிக்காய் கால் கிலோ இருபது ரூபாயாம்.. அதுவே வெண்டைக்காய் கிலோ பத்து ரூபான்னு மார்க்கெட்டுக்கு வந்து குமிஞ்சிருக்கு.. பாத்தேன்..

கால் கிலோ கத்தரிக்காய் வாங்கற காசில இரண்டு கிலோ வெண்டைக்காயை வாங்கிட்டு வந்துட்டேன்.. இப்ப என்ன..? கத்தரிக்காய் வதக்கலுக்குப் பதிலா வெண்டைக்காய் பொரியலை பண்ணிருங்க.. நாளைக்கு வெண்டைக்காய் குழம்பு.. அடுத்த நாள் வெண்டைக்காய் தொக்குன்னு ஜமாய்ச்சிர மாட்டிங்க..?"

"நீதாண்டா என் புள்ள.."

"அப்ப யாமினி..?"

"அவ அப்பா புள்ள.."

அந்தக் கூட்டணியில் யது நந்தனுக்கு யாதொரு ஆட்சேபணையும் இருக்காது.. அவனுடன் இணையாக யோசிப்பது அம்மா மட்டுமே என்ற ஆழமான எண்ணம் அவன் மனதில் பதிந்திருந்தது.. பிரதாப்பின் எண்ணங்களை..

"கவைக்கு உதவாதுப்பா.." என்று விமரிசிப்பான்..

அதற்கேற்றார் போல யாமினியை கத்தரிக்காய் வாங்கிக் கொண்டு வரச் சொன்னால்.. அவள் வாடி வதங்கிய கத்தரிக்காயை வாங்கிக் கொண்டு வந்து சேருவாள்.. விலையும் அதிகமானதாக இருக்கும்..

"என்னடி..?" அனுராதா நெற்றிக் கண்ணைத் திறந்தால்..

"நீங்கதானேம்மா கால்கிலோ கத்தரிக்காய் வாங்கிட்டு வான்னு சொன்னீங்க..?" என்று அவளையே கேள்வி கேட்பாள்..

"அதுக்காக வதங்கிப் போனதையா வாங்கிட்டு வருவ..?"

"இதுதாம்மா இருந்துச்சு.."

"விலையும் முப்பது ரூபாய்.."

"இன்னைக்கு விலை கூடிப் போயிருச்சாம்.."

"கூடியிருந்தா வேற காயை வாங்கிட்டு வரது..?"

"எந்தக் காய்ன்னு நீங்க சொல்லலையேம்மா.."

'நான் சொன்னால்தான் எதையும் செய்வியா..? இருட்டு நேரத்திலே மகாபலிபுரக் கடலோரம் சுத்திக்கிட்டு இருன்னு நான்தான் உன்கிட்டச் சொன்னேனா..?'

அனுராதாவிற்கு ரத்தக் கொதிப்பு வந்து விடும்.. அந்தக் கருமாயத்துக்கு பயந்தே அவள் யாமினியை காய் வாங்க அனுப்பிவைக்கும் பரிசோதனையை மேற்கொள்வ தில்லை..

"காலே உடைஞ்சிருந்தாலும் உருண்டுக்கிட்டுப் போயாவது நான் காய் வாங்கிட்டு வந்துக்குவேனேயொழிய உங்க மகளை காய் வாங்க அனுப்ப மாட்டேன்.." பிரதாப்பிடம் சீறுவாள்..

"அவ பாவம் என்னடி பண்ணுவா..? நீ சொல்கிறதை உருப்படியா சொல்லி அனுப்பியிருக்கனும்.." பிரதாப் மகளுக்கு பரிந்து பேசுவார்..

"இப்படியாப்பட்ட உருப்படியை மகளா பெத்து வைச்சுக்கிட்டு நீங்க உருப்படியைப் பத்திப் பேசக் கூடாது.." அனுராதா நொடிப்பாள்..

"அவளோட சிந்தனைகளை நீ புரிஞ்சுக்க முயற்சி பண்ணனும் அனு.."

"என்ன கழுதைக்கு..? நான் உருப்படியா வீட்டில இருக்கிறது உங்களுக்குப் பொறுக்கலையா..? என்னையும் கடலே கதின்னு சுத்தி வரச் சொல்கிறீங்களா..?"

"அனு.."

"கத்தாதீங்க.. பிளட் பிரசர் எகிறப் போகுது.. விழுந்துக்கிட்டா உங்க மக பார்க்க வரமாட்டா.. நான் தான் ஓடி வந்து தொலைக்கனும்.. இருக்கிற இம்சைக பத்தாதுன்னு புதுசா எந்த இம்சையையும் கிளப்பாம வேலை வெட்டியை பாருங்க.."

இவ்வாறு அனுராதா இருத்தல் ஆகாது.. அவள் யாமினியை புரிந்து கொள்ளும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.. யாமினி வானத்தை வெறித்து வெறித்து பார்ப்பதன் பிண்ணனியில் உள்ள வான சாஸ்திரத்தை ஆராய வேண்டும் என்ற ரீதியில் யதுநந்தனை அவர் இழுத்து வைத்து மனக்குறைகளை கொட்டினால்..

"ஏன்ப்பா..?" என்று அவன் கேட்டு வைப்பான்..

"என்னடா இப்படி கேட்டு வைக்கிற..?"

அவருக்கு நெஞ்சுவலியே வந்துவிடும்.. அதைச் சொன்னால் அதற்கும் யாமினிதான் காரணமென்று

அனுராதாவும் யதுநந்தனும் பழி போட்டு விடுவார்கள் என்பதினால் அவர் வாய்மூடிக்கொள்வார்..

அத்தியாயம் - 44

உன்னிடத்தில் கேட்பதற்கு

ஒருகோடி கேள்வியுண்டு..

அன்றொரு நாள் நீ தழுவி

அடைக்கலம் கொண்டதை மறந்தாயா..?

"எதுக்காகடி 'அட' போடற..?"

அனுராதா அதட்டியதில் விளக்கம் சொல்ல வாய் திறந்தாள் யாமினி..

"அப்பா மேல பூமழை பொழியறதைப் போல டிரஸ் மழை பொழிஞ்சதா..? அதைப் பார்த்ததும் 'அட..!' அப்படின்னு தோணிருச்சும்மா.."

"தோணும்.. தோணும்.. இப்படி உருப்படியில்லாததுக் கெல்லாம் 'அட..!' போடு.. ஆச்சரியப்படவேண்டியதுக்கு இடிச்சு புளி மாதிரி எதையும் பேசாம மண்ணு போல நில்லு.."

அனுராதாவின் கோபத்தை கண்டு கொள்ளாமல் இருக்க வேண்டிய கட்டாயத்திலிருந்த பிரதாப்.. அந்தக் கட்டாயத்தை மறந்து போனார்.. மகளின் மனம் வருத்த மனைவி பேசியதை காணப் பொறுக்காமல் குறுக்கிட்டு விட்டார்..

"இப்ப எதுக்காகடி குழந்தையைப் போய் திட்டற..?"

எரிமலை பொங்கி வெடிக்க ஆயத்தமாகி பிரதாப்பை ஏறிட்டுப் பார்த்த பின்னால்தான் தனது தவறை உணர்ந்து நாக்கை கடித்துக் கொண்டு தன் விதியை நொந்து கொண்டார் பிரதாப்..

'ஆஹா..! சும்மா இருக்கிற பெண்சிங்கத்த சொடக்குப் போட்டுக் கூப்பிட்டாலே ஆபத்து..! இதில வேற சிலிர்த்துக்கிட்டு இருக்கிற பெண் சிங்கத்துக்கு சிடுக்கெடுத்து விட்டுட்டேனே.. இனி எப்படியெல்லாம் பொங்க வைக்கப் போறாளோ..'

"இவ...? குழந்தை...?" புயலின் அமைதியோடு கேட்டாள் அனுராதா..

"பெத்தவங்களுக்கு பிள்ளைக எப்பவுமே குழந்தைக தானேடி அனு..? எங்கம்மாவப் பாரு.. இப்பவும் என்னை பச்சைப் புள்ளன்னுதான் சொல்லுவாங்க.. அம்மாவப் போலதானேடி பிள்ளையும் இருப்பேன்.."

மறுபடியும் தவறு செய்தார் பிரதாப்.. உதாரணமாக சுட்டிக் காட்ட ஓராயிரம் உறவுகள் இருந்தும் அனுராதாவிற்கு பிடிக்காத மாமியாரைச் சுட்டிக்காட்டி எரியும் நெருப்பில் எண்ணைக் கிணறை கவிழ்த்து வைத்து மிகப்பெரும் சோதனைக்கு ஆளானார்..

"அஃது..!"

அனுராதாவின் குரல் கொடுத்த அழுத்தத்திலேயே வரப் போகும் வார்த்தை அம்புகளின் வீர்யம் எத்துனை சக்தி வாய்ந்ததாக இருக்கும் என்பதனை உணர்ந்து கொண்டார் பிரதாப்..

"அனு..?" அவர் குரல் நடுங்கியது..

"அம்மாவப் போல பிள்ளை..? அப்படியாப்பட்டவரு அம்மாவோட சேலை முந்தானைய பிடிச்சுக்கிட்டு சுத்தி வர வேண்டியதுதான..? எதுக்காக கல்யாணம்ங்கிற கண்றாவியப் பண்ணிக்கிட்டிங்க..?"

"கல்யாணம்ங்கிறது உனக்கு கண்றாவியா போயிருச்சா..? என்னடி அனு.. நேத்து வரைக்கும் நல்லாத்தானே இருந்த..?"

"இப்பவும் நல்லாத்தான் இருக்கேன்.. எந்தக் கேடும் எனக்கு வரலை.."

அப்புறம் வேறு யாருக்கு கேடு வந்திருக்கிறது என்று புரியாமல் திகைத்துப் போனார் பிரதாப்..

அவருக்குத்தான் கேடு வந்திருக்கிறதா..?

'இப்படியா இடி இடிச்சு மழை கொட்டறதைப் போல விடாம சண்டை போட்டுக்கிட்டே இருப்பா..?'

மனம் சலித்துப் போனார் அந்த மகானுபவன்..!

கருணை அடிப்படையில் மலையிறங்கச் சொல்லி அவளது கைபற்றி விண்ணப்பித்து விடலாமா என்ற சரணாகதி தத்துவம் அவர் மனதில் ஓடியது..

"கேணச்சியப் போல நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்.."

'நீயாடி கேணச்சி..? நீ உலகத்தையே கேணையாக்குவியே..'

"என் புருசன்தான்.. எனக்கு மட்டும்தான்னு.."

'இதில இவளுக்கு என்ன இம்புட்டு சந்தேகம்..? நான் இவளுக்கு மட்டுமில்லாம ஊருக்கேவா உடமைப் பொருளா இருக்கேன்..?'

சந்தேகத்தை மனதுக்குள்ளேயே குழி தோண்டி புதைத்து விட்டார் பிரதாப்.. அவளிடம் கேட்கப் போனால் அவள் எந்த லட்சணத்தில் வெடித்து வைப்பாள் என்று அவருக்குத் தெரியாதா என்ன..?

'இந்தப் புத்தி முதலிலேயே இருந்திருக்கலாம்..'

மௌனகுருவாக இல்லாமல் போனதின் வினையை எதிர் நோக்கி இற்றுப் போனார் பிரதாப்..

"புருசன்தான் முக்கியம்.."

'இவளா இப்படிச் சொல்றா..?'

இமை கொட்டி அவர் விழித்ததில் யாமினிக்கு சிரிப்பு வந்து தொலைத்தது.. வந்த சிரிப்பை சிரித்து விட்டால் அனுராதா அவளை உண்டு இல்லையென்று ஆக்கி விடும் அபாயம் இருந்ததால் சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.. அதை ஓரக் கண்ணால் பார்த்த பிரதாப் திருதிருத்தார்..

'என் மக முன்னாலே இவ என்ன காமெடியனா ஆக்கிக்கிட்டு இருக்காளே..'

அவருக்கு ஆற்றாமையாக இருந்தது.. அதை கண்டு கொள்ளாமல்..

"என் குடும்பம்தான் உலகம்ன்னு சின்ன வட்டத்துக்குள்ள நான் சுத்திக்கிட்டு இருந்தேன்.. இங்கே என்னடான்னா அம்மாவப் போல பிள்ளைன்னு டயலாக் பேசியாகிறது.. எனக்கு மட்டும் அம்மா இல்லையா..? தாயில்லாம நானில்லன்னு டயலாக் பேச எனக்குத் தெரியாதா..? அம்மா கோண்டுக்கு கல்யாணம் எதுக்கு..?"

அனுராதா அடுத்த தாக்குதலை ஆரம்பித்து விட்டதில் பிரதாப் களைத்துப் போனார்..

அனுராதா கோபப்படுவாள்தான்.. அந்த அளவுக்கு கோபப் படமாட்டாள்.. யாமினியின் எக்குத்தப்பான 'மெகாலு' பிடித்தத் தனத்தில் கோபப்பட்டாலும் சட்டென்று அந்த கோபத்திலிருந்து வெளியே வந்து இயல்பாகி விடுவாள்.. அவளிடமிருந்து அந்த குணாதி சியத்தினால்தான் பிரதாப்பின் வீடு.. வீடாக இருந்தது.. அவரின் வாழ்க்கையும் சிக்கலில்லாமல் ஓடிக் கொண்டிருந்தது..

இல்லையெனில் சிக்கலான மனநிலை கொண்ட யாமினியை மகளாக கொண்டவர்க்கு சிரித்த முகத்துடன் வாழும் வாழ்க்கை வாய்த்திருக்குமா..?

அதை அனுராதாதான் அந்த வீட்டில் இருந்த அனைவருக்கும் கொடுத்தாள்.. ஒரு வகையில் அவள் ஜீவ சக்தி..! அதை உணராத முட்டாளல்ல பிரதாப்..

என்னவோ அவரின் போதாத காலம்.. அன்று பொழுது விடிந்ததில் இருந்து நடைபெற்ற அனைத்துமே 'நான் சின்காக' அமைந்து தொலைத்து அவரை வாட்டி வதைத்தது..

மலையிறங்குவேனா என்று படு கோபத்துடன் இருந்த மனைவியை மலையிறக்கும் வகை தெரியாமல் திண்டாடிப் போனார் பிரதாப்.. அதுநாள் வரை யாமினியின்

விசித்திரமான செய்கைகளால் பலவகையில் அவள் பாதிக்கப் பட்டிருந்தாலும் இந்த அளவுக்கு கோபம் கொண்டதுமில்லை.. பெட்டியைத் தூக்கிக் கொண்டு பிறந்த வீட்டுக்குப் போகிறேன் என்று பயணப்பட்டது மில்லை...

"என்னடி ஆச்சு உனக்கு..?" அழமாட்டாத குறையாக வினவினார்..

"இன்னும் என்ன ஆகணும்ன்னு ஆசைப்படறிங்க..? சொல்லுங்க.. உங்க அடிமனசோட ஆசைகள அவுத்துக் கொட்டுங்க.. நானும் கண்டுக்கறேன்.." நிஷ்டூரமாக அவரை முறைத்தாள் அனுராதா..

"வேண்டாம்டி அனு.. நான் அப்பாவி.."

"நீங்களா அப்பாவி..?"

"பின்னே..? யாருடி நான்..?"

"படுபாவி..!"

"அனு..!"

"ச்சே..! என் பேரைச் சொல்லிக் கூப்பிடாதீங்க.. பத்திக்கிட்டு வருது.. அதுக்கான தகுதி உங்களுக்கில்ல.. சொல்லிட்டேன்.."

அனுரதாவின் வெறுப்பில் பிரதாப் ஸ்தம்பித்து விட்டார்.. யாமினிக்கு குற்ற உணர்வு வந்தது.. அவளால்தான் அவளுடைய அன்பான அப்பாவும்.. அருமையான அம்மாவும் அடித்துக் கொள்கிறார்கள் என்று அவள் துயரம் கொண்டாள்..

"ம்மா.."

அவளின் தீனமான அழைப்பில் அனுராதாவின் பெற்றவயிறு துடித்தது.. மகளின் துயரை அவளது தாய்மனம் உணர்ந்து கொண்டது..

"என்னடி..?" வரவழைத்துக் கொண்ட கோபத்துடன் கேட்டாள்..

"நிஜமாவே நான் விளையாட்டுக்குத்தான் சொன்னேம்மா.."

"எதைச் சொன்ன..?"

"'அட..' அப்படின்னு.."

"அதுக்குத்தான் நான் கோபமாயிருக்கேன்.. அப்படின்னு உன்கிட்ட நான் வந்து சொன்னேனா..?"

"அதுக்கில்லம்மா.."

"எதுக்கில்ல..?"

"அப்பா மேல டிரஸ்ஸாய் பூமழை போல விழுந்ததைப் பார்க்கிறப்ப பொயட்டிக்கா இருந்துச்சும்மா.."

"அந்த பொயட்டிக் எனக்கு இன்சல்ட்டிங்கா இருந்துச்சுன்னு உன்கிட்ட நான் வந்து சொன்னேனா..?"

"கோவிச்சுக்காதீங்கம்மா.."

"எதுக்கு கோவிச்சுக்க வேணாங்கிற.."

"இல்லேம்மா.."

"எதுக்கு இல்லே..?"

"வந்தும்மா.."

"எங்க வந்த..?"

"ம்மா.. ப்ளீஸ்.. வேண்டாம்மா.."

யாமினி கையெடுத்துக் கும்பிட்டதில் பிரதாப்புக்கு சிரிப்பு வந்து விட்டது.. அவர் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.. இல்லாவிட்டால் அவர் முகத்தின் சிரிப்பைப் பார்த்து விட்டு அனுராதா அவரை வாங்கு.. வாங்கென்று வாங்கி விட மாட்டாளா..?

யாமினி குனிந்து அனுராதாவின் காலைத் தொட்டு கண்களில் வெகு பவ்யமாக ஒற்றிக் கொண்டாள்..

"இப்ப என்ன அலுவலுக்கு செண்டிமென்ட் சீன கிரியேட் பண்ற..?" எரிமலையானாள் அனுராதா..

"இந்த வார்த்த விளையாட்டுக்கே நான் வரலைம்மா.. இந்த வாங்கு வாங்கினா நான் தாங்க மாட்டேன்ம்மா.. என்னப் பாத்தா உங்களுக்கு பாவம்.. பாவமா இல்லயா..?"

யாமினி இமை கொட்டி மூக்கை உறிஞ்சிய விதத்தில் இளகி விட்டாள் அனுராதா.. உண்மையிலேயே அவளுக்கு மகளைக் கண்டால் பாவம்.. பாவமாகத்தான் இருந்தது..

அத்தியாயம் - 45

சுழல்காற்று நினைவுகளில்

சுழன்றாடிப் போனேன் நான்..

தெளிவான வானத்திலே..

இடையூறாய் கரும் மேகம்..

அனுராதாவின் கோபம் குறைந்தது.. அவள் பெட்டியை கட்டிலில் வீசினாள்..

'ஹப்பா..!'

ஆசுவாச பெருமூச்சுடன் தன் நெஞ்சைப் பிடித்துக் கொண்டார் பிரதாப்.. அப்போதுதான் அவரால் நிம்மதியாக மூச்சுவிட முடிந்தது.. அந்த அளவுக்கு அனுராதாவின் மலையேற்றத்தில் அவர் அரண்டு போயிருந்தார்..

யாமினி குனிந்து அறைக்குள் சிதறிக் கிடந்த அனுராதாவின் துணிகளை மடித்து அலமாரியில் அடுக்க ஆரம்பித்தாள்.. மகளின் அனுசரனையில் கொஞ்ச நஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்த கோபமும் பறந்து போக அனுராதா பாத்ரூமுக்குள் புகுந்தாள்..

"தேங்க்ஸ்டா செல்லம்.." என்றார் பிரதாப்..

"தேங்க்ஸெல்லாம் வேணாம்ப்பா.. அதுக்குப் பதிலா இன்னைக்கு சொதப்பினதைப் போல என்னைக்கும் சொதப்பமாட்டிங்கன்னு பிராமிஸ் பண்ணுங்க.." என்றாள் யாமினி..

"சொதப்பினேனா..?"

பிரதாப் திகைத்தார்.. வந்த சண்டைக்கு காரணம் யாமினியல்லவா..? அவளுக்கு பிரதாப் பரிந்து கொண்டு வருகிறார் என்றுதானே அனுராதா கோபப்பட்டாள்..? அதனால்தானே அவர்கள் இருவருக்கும் சண்டை வந்தது..?

"இல்லைப்பா.."

துணிகளை அடுக்கியபடி நிதானமாக சொன்னாள் யாமினி.. அவளது முகத்தில் இருந்த தெளிவில்..

'இது என் மக யாமினிதானா..?' என்று கையைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டார் பிரதாப்..

"வேற என்னம்மா நடந்தது..?" அவளிடமே விளக்கம் கேட்டார்..

"என்னைக் குறை சொல்கிறது அம்மாவோட நேச்சர்.. நீங்க சப்போர்ட்டுக்கு வந்தா உங்க மேலே லேசா கோபப்படுவாங்க.. கொஞ்ச நேரத்திலே சரியாகிருவாங்க.. இன்னைக்கு அப்படியில்லைப்பா.."

அதுதான் அவருக்கு தெரிந்த விசயமாச்சே..

'என்னைக்குமில்லாம இன்னைக்கு ஏன் அனுராதா பொறந்த வீட்டுக்குப் போக பெட்டியைத் தூக்கினா..?' என்ற கேள்விக்கு விடை தெரியாமல் தானே அவர் அல்லாடிக் கொண்டிருக்கிறார்..

"இன்னைக்கு புதுசா என்னத்தம்மா அவ கண்டுட்டா..?" அவர் சலித்துக் கொண்ட போது..

"அம்மாவைத் தவிர.. மத்த லேடிஸையும் நீங்க சைட் அடிப்பீங்கன்னு கண்டுக்கிட்டாங்க.." என்று ஆழ்ந்த குரலில்

பதில் சொல்லி அவருக்கு தூக்கி வாரிப் போட வைத்தாள் அவர்மகள்..

"யாமினி..?"

"ஆமாம்ப்பா.. இத்தனை நாளா.. நீங்க உத்தம புருசன்..! மத்த லேடிஸை ஏறெடுத்தும் பார்க்காத ஜென்டில் மேன்..! அப்படின்னெல்லாம் நம்பிக்கிட்டு இருந்த அம்மாவோட நம்பிக்கை ஆட்டம் கண்டுருச்சு.. எதிர்வீடு.. பக்கத்துவீடு.. அடுத்த வீடுன்னு... இந்தத் தெருவில இருக்கிற அத்தனை வீடுகளிலயும் இருக்கிற லேடிஸின் பெயரைச் சொல்லி.. அவங்க அழகை வர்ணிச்சு.. அவங்க அருமை.. பெருமைகளை விலாவாரியா வர்ணிச்சுத் தொலைச்சுட்டிங்க.. அதைக் கேட்ட பின்னாடியும் அம்மா உங்ககூட இந்த வீட்டில இருப்பாங்கன்னு எந்த நம்பிக்கையில நீங்க கனவு காணறிங்க..?"

"அம்மாடி..! நான் அந்த மீனிங்கில பேசலைடா.."

"இருக்கலாம்ப்பா.. உங்க மனசு சுத்தம்.. அது எனக்குத் தெரியும் யதுக்குத் தெரியும்.. ஏன்.. அம்மாவுக்கும் தெரியும்.. அதுக்காக நீங்க அடுத்த வீட்டு லேடிஸை அம்மா காதுபட அட்மைர் பண்ணிச் 'ஜொள்ளுறது' ரொம்ப ஓவர் இல்லையா..?"

"இது எனக்குத் தோணாம போச்சேம்மா.."

"தோணணும்ப்பா.. ஒரு மனைவியா அவங்களின் மன உணர்வுகளுக்கு நீங்க மதிப்புக் கொடுக்கனும்.. நீங்க சொன்னதை 'இன்னொஸென்ஸ்'ன்னு சொல்கிறீங்களே.. அதுவே அம்மா எதிர்வீட்டு அங்கிளைப் பத்திப் பெருமையா சொன்னதும்.. ஒரு குடும்பப் பொம்பளை இப்படிப் பேசலாமான்னு அடிச்சுக்கிட்டிங்களே.."

"அவ அப்படிப் பேசலாமா..?"

"ஒரு குடும்ப ஆம்பளை மட்டும் அப்படிப் பேசலாமா..?"

"யாமினி..!"

தெள்ளத் தெளிவாக நெற்றியிலே ஆணியடித்ததைப் போல 'டாண்.. டாண்..' என யாமினி கேட்ட கேள்விகளில் பாத்ரூமில் முகம் கழுவி விட்டு வெளியே வர கதவைத் திறந்திருந்த அனுராதா பிரமித்துப் போய் நின்று விட்டாள்..

'என் மகளா இத்தனை தெளிவா பேசறா..?'

'இம்புட்டு அறிவாளியா.. தெளிவா இருக்கிறவள எதுக்காக கடவுளே இப்படி ஆட்டிப் படைக்கிற...'

அனுராதாவின் மனதில் விசனம் பொங்கியது.. அவள் மனதில் துக்கம் எழுந்தது... யாமினியின் அழகையும்.. அறிவையும் நினைத்துப் பார்த்து பூரிப்புக் கொள்ள முடியாமல் கதிகலங்க வைக்கும் அவளது நடவடிக்கைகளின் பிண்ணனி எதுவாக இருக்கக் கூடும் என்று அவள் குழம்பினாள்.

"ஸோ டாட்..! தப்பு உங்க மேலதான்.. அதனால அடக்கி வாசிங்க.."

"அது எனக்குப் பழக்கமான விசயம்தானே.. செஞ்சுட்டாப் போச்சு.."

தந்தையும், மகளும் மனம் விட்டுச் சிரித்துக் கொண்டிருந்த போது அவர்கள் பேசியதை காதிலேயே வாங்கிக் கொள்ளாதவளைப் போல பாத்ரூமை விட்டு வெளியே வந்தாள் அனுராதா.. பிரதாப்பின் பக்கம் திரும்பாமல் மகளின் பக்கம் திரும்பி..

"இப்ப எதுக்காக இம்புட்டுச் சந்தோசம் கொண்டாடற..? உங்கம்மா பொறந்த வீட்டுக்குப் பொட்டியக் கட்டறதில உனக்கு இம்புட்டுச் சந்தோசமா..?" என்று அதட்டினாள்..

"ஐயோ அம்மா..!" யாமினி அலறிவிட்டாள்..

"என்னத்த அம்மா..?"

"மலையிறங்கிட்டிங்கன்னு நம்பிக்கையா இருக்கேம்மா.. அந்த நம்பிக்கையில மண்ணை அள்ளிக் கொட்டிராதீங்கம்மா.. ப்ளீஸ்.. இன்னைக்கு இது போதுமே.."

"அப்ப.. மிச்சத்தை நாளைக்கு வைச்சுக்கலாம் கறியா..?"

"வேண்டாம்மா.. இதுவே ஒரு மாசத்துக்கு தாங்கும்ன்னு நினைக்கறேன்மா.. நாளைக்கும் கன்டினியூ பண்ணினீங்கன்னா அப்பா பாவம் தாங்க மாட்டார்.. கருணை அடிப்படையில அவரை மன்னிச்சு விட்டிருங்கம்மா.. ப்ளீஸ்..."

"போதும்.. விட்டா இன்னைக்குப் பூராவும் ப்ளீஸ் போடுவ.."

அனுராதா அறையை விட்டு வெளியே போகப் போனாள்..

"அனு.." தீனமாக அழைத்து வைத்தார் பிரதாப்..

அனுராதாவின் துணிகளை அலமாரியில் அடுக்கி முடித்திருந்த யாமினி.. அறையை விட்டு வெளியேறி விட்டாள்..

'இங்கிதம் தெரிந்த மகள்..' பிரதாப்பின் மனம் மகளுக்கு நன்றி சொன்னது..

அனுராதா பதில் சொல்லாமல் அவரை யாரோ.. எவரோ.. என்ற பார்வையை பார்த்து வைத்தாள்.. பிரதாப்புக்கு சுவரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது..

"என்னடி இப்படிப் பாக்கிற..?"

"எப்படிப் பாக்கறேன்..?"

"தெருவில போகிறவனைப் பாக்கிறதைப் போல பாக்கற..?"

"அவங்ககூட உங்களை விட மரியாதை தெரிஞ்சவங்களா இருப்பாங்க.. நீங்க அதுக்கும் கீழே.."

"ஒரு மனுசனுக்கு டங் ஸ்லிப்பாகிருச்சுன்னா அதையே பிடிச்சுக்கிட்டுத் தொங்கனுமா அனு..?"

"வேற என்னத்தைச் செய்கிறது..? பேய்க்கு வாழ்க்கைப் பட்டுட்டேன்.. புளிய மரத்தில தொங்கித்தான ஆகனும்..?"

"என்னடி இப்படிப் பேசற..?"

"வேற எப்படிப் பேசச் சொல்கிறீங்க..?"

"தெரியாம பேசிட்டேண்டி.. மன்னிக்கக் கூடாதா..?"

"மன்னிக்கிறதைப் போல நீங்க பேசலை.. மனசில இருந்தது வாக்கில வந்துருச்சு.. இதுதெரியாம இத்தனை நாளா.. என் புருசனைப் போல உண்டுமான்னு சந்தோசம் கொண்டாடிக்கிட்டு கூமுட்டை போல இருந்திருக்கேன்.."

"ஏண்டி நீ வேற.. என் மனசில என்ன இருந்துச்சு.."

"அதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னால வண்டி வண்டியாக் கொட்டிக் கவிழ்த்தீங்களே.."

"யதார்த்தமா வாய் விட்டுட்டா.. என்மேல குத்தம் சொல்வியா..?"

"யதார்த்தமா..? நீங்களா..? ஹ..! உங்களுக்கு அதுக்கும் ஏணி வைச்சாக்கூட எட்டாது.."

அனுராதாவின் வெறுப்பில் பிரதாப் மனம் அதிர்ந்தார்.. உண்மையாகவே அவரது மனைவி அவரை தவறாக நினைக்கிறாள் என்பது அப்போதுதான் அவரது அறிவுக்கு உறைத்தது.. அதுவரை அவளது கோபத்தை இயல்பான கோபம் என்று எண்ணிக் கொண்டிருந்தவர் அவளது கைகளை வலுக்கட்டாயமாக பற்றி இறுக்கிக் கொண்டார்.. அவளது விழிகளுக்குள் ஆழ்ந்து பார்த்தவரின் குரல் கரகரத்தது..

"என் முகத்தைப் பார்த்துச் சொல்லு அனு... நான் உன்னைவிட வேறொரு பெண்ணை உசத்தியா நினைப்பேனா..? எனக்கு நீதாண்டி உலகம்.. நீ மட்டும் தான் ரதி.. போதாத காலத்தில பேசத் தெரியாம பேசித் தொலைச்சிட்டேன்.. மத்தபடி என் மனசில

நீ மட்டும் தாண்டி.. உனக்கு இணை யாருடி..? மடத்தனமாக பேசிட்ட உன்புருசனை மன்னிக்க மாட்டியா அனு.."

அனுராதாவின் மனம் இளகி விட்டது... இருந்தும் அவளது இளகலை வெளிப்படுத்திக் கொள்ளாமல் கைகளை உருவிக் கொண்டு போய் விட்டாள்... மறைத்தாலும்

வெளிப்பட்டு விடும் அவளது மனதை பிரதாப் கண்டு கொண்டார்.. அவரது முகம் மலர்ந்தது...

அத்தியாயம் - 46

விதிவகுத்த வழியினிலே..

பயணம் செய்யும் பாவை இவள்..

காலம் காலமாய் உன்னடி தேடும்..

காதல் உணர்வுகள் என்றுனைச் சேரும்..?

அது எப்படித்தான் அவ்வளவு பெரிய சண்டை நடந்தும் எதுவுமே நடக்காததைப் போல அனுராதாவால் இயல்பாக இருக்க முடிகின்றதோ என்று இருந்தது பிரதாப்புக்கு..

அவர் அறையை விட்டு ஹாலுக்கு வந்த போது... அனுராதா சமையலறையில்

இரவு டிபனுக்கான வேலைகளை ஆரம்பித்திருந்தாள்.. இங்கும் அங்கும் நடமாடிக் கொண்டிருந்தவளின் இயல்பான தோற்றத்தில் இவளா சற்று முன்னர் பிறந்த வீட்டிற்குக் செல்லப் பெட்டியைத் தூக்கியவள் என்று ஆச்சரியம் அடைந்தார் அவர்..

அதுபோன்ற ஆச்சரியங்களை அள்ளி வழங்குவதில் அனுராதாவிற்கு நிகர் அவளேதான்..

மனைவியைக் குறித்த புன்னகையுடன் மகளின் பக்கத்தில் உட்கார்ந்தவர்.. ஜன்னல் பக்கம் பார்த்து விட்டு புருவங்களைச் சுருக்கினார்..

"இது என்னம்மா.. இந்த நேரத்திலேயே கும்மிருட்டா இருக்குது.. அதுக்குள்ளேயா இருட்டிருச்சு..?"

யாமினி ஜன்னல் பக்கம் பார்த்து விட்டு.. தோளைக் குலுக்கினாள்..

"மழையிருட்டுப்பா... இடி இடிச்சு மின்னல் வெட்டறதைக் கவனிக்கலையா..?"

"எங்கேம்மா..? உங்க அம்மா இடி இடிச்சு மின்னல் வெட்டி கொட்டற மழையாய் கொந்தளிச்சுக்கிட்டு இருந்தாளே.. அவளைக் கவனிப்பேனா..? மழையைக் கவனிப்பேனா..?"

"கஷ்டம்தான்.."

"யாருக்கும்மா.."

"உங்களுக்குன்னு சொல்ல மாட்டேன்ப்பா.."

யாமினியின் கறாரில் அவருக்கு சிரிப்பு வந்தது..

"சொல்லாட்டிப் போ.." என்றபடி எழுந்து வாசல் பக்கமாக சென்றார்..

"எங்கே போறிங்கப்பா..?" யாமினி குரல் கொடுத்தாள்..

"வாசல் கேட்டை பூட்டிட்டு வந்திர்ரேன்ம்மா.." பிரதாப்பும் பதில் குரல் கொடுத்தார்..

"இன்னும் யது வரலை.." அனுராதா அவள் பங்குக்கு சமையலறையிலிருந்து குரல் கொடுத்தாள்..

"தெரியுது... அவன் வர்றப்ப கேட்டைத் திறந்து விட்டுக்கலாம்.."

அவளுக்கு ஒர் குரலைக் கொடுத்து விட்டு வாசல் கேட்டைப் பூட்டப் போனார் பிரதாப்.. ஜன்னலில் தெரிந்த மின்னல் கீற்றைக் கண்ட யாமினி ஜன்னல் பக்கமாக போனாள்.. தோட்டத்து ஊஞ்சலில் காலையில் அவள் விட்டுச் சென்ற கடிதம் மின்னல் ஒளியில் படபடத்தது..

'என்ன அது..?..!'

அவள் ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்த போது.. அனுராதா வந்து விட்டாள்..

"மின்னல் வெட்டறது தெரியலையா..? இப்பவும் வானத்த உத்து உத்துப் பாக்கனுமா..?" என்று மகளிடம் ஓர் அதட்டலைப் போட்டாள்..

"இல்லேம்மா.." என்ற மகள்..

"என்னத்த.. நொல்லம்மா..?" என்ற தாயின் கோபத்தில் அரண்டு போய் ஜன்னலை விட்டு ஓடி வந்து விட்டாள்..

கடிதம் ஏமாற்றத்துடன் காற்றுக்கும் அசையாமல் காத்துக் கிடந்தது.. பிரதாப் வாசல் கேட்டை மூடிவிட்டு உள்ளே வந்து கதவைச் சாத்தி தாழிட்டார்..

ஹாலில் மகளுடன் உட்கார்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்த மனைவியிடம்..

"இது என்னடி அனு புதுசா இருக்கு..?" என்றார்..

"எதைச் சொல்கிறிங்க..? நம்ம தெருவில புதுசா குடிவந்திருக்கிறவங்க வீட்டுப் பொண்ணைச் சொல் கிறீங்களா..?"

யாமினி வாயைப் பொத்திக் கொண்டு சிரிக்க ஆரம்பிக்க..

"ஏண்டி..?" என்று பரிதாபமாக மனைவியிடம் நியாயம் கேட்டார் பிரதாப்..

"இப்ப என்ன அலுவலுக்கு பச்சப் புள்ள போல முகத்தை வைச்சுக்கறிங்க..?" அனுராதா எரிச்சல் பட்டாள்..

"எங்கேப்பா.. உங்க முகத்தைக் காட்டுங்க பார்க்கலாம்.."

யாமினி பிரதாப்பின் முகத்தை உன்னிப்பாக பார்த்து விட்டு..

"இல்லேம்மா.. பச்சைக் குழந்தையோட முகம் வேற மாதிரி இருக்கும்.." என்று அபிப்ராயம் தெரிவித்தாள்..

'இதுக என்ன.. என்னை வைச்சு காமெடி பண்ணுதுகளா..?' அழாக்குறையாக மனைவியைப் பார்த்த பிரதாப்..

"இடி இடிக்குது.. மின்னல் வெட்டுது.. ஊதக் காத்து அடிக்குது.. ஆனா மழைமட்டும் வரமே மாட்டேங்குதுன்னு சொல்ல வந்தா இப்படியாடி படுத்தி வைப்ப..?" என்று நியாயம் கேட்டார்..

அனுராதா அலட்டிக் கொள்ளாமல் அவரை பார்த்து வைத்தாள்.."உங்களுக்கு அந்தக்குறை வேற இருக்கா..?"

ஒரு மாதிரியான குரலில் அனுராதா கேட்டு வைத்ததும் 'திக்'கென்று ஆகி விட்டது பிரதாப்புக்கு..

'இதில் என்ன பொடி வைச்சிருக்காளோ..?'

மனிதர் பாவம் அரண்டு போனார்.. மாலையிலிருந்து அனுராதாவுடன் நடத்திய துவந்த யுத்தம் முடிவு பெற்று விட்டதா.. இல்லை.. இக்கன்னா போட்டுத் தொடர்ந்து கொண்டிருக்கிறதா என்று பயந்து விட்டார்..

"ஏண்டி.. நல்லாத்தான போய்க்கிட்டு இருக்கு..?"

"கிரிக்கெட்டையா சொல்கிறிங்க..? அதுக்கென்ன.. நாம ஜெயிக்கலைன்னாலும்.. மத்த மகராசன்கள் ஜெயிக்கிறாங்களே.. நல்லாத்தான் போய்க்கிட்டு இருக்கு.."

அனுராதா டிவியைப் பார்த்தபடி சொல்ல வெறுத்துப் போய் விட்டார் பிரதாப்.. இப்படியா ஒருத்தி எத்தைத் தின்னா பித்தம் தெளியும்ன்னு அவரை கதறடிப்பாள்..?

"நான் கிரிக்கெட்ட சொல்லலை.."

"அதைப் பத்தி தெரிஞ்சாத்தான் சொல்வீங்க.."

"இப்ப எனக்கு ஒரு விசயம் தெளிவா தெரிஞ்சாகனும்.."

"தெளிவுக்கும் உங்களுக்கும்தான் ரொம்ப துரமாச்சே..."

"வேணாண்டி அனு.. விட்டிரு.. தாங்க மாட்டேன்.."

பிரதாப்பின் கெஞ்சலில் போனால் போகிறதென்று பேச்சை நிறுத்திய அனுராதா டிவியை விட்டு விட்டு சுவர்கடிகாரத்தை பார்த்து வைத்தாள்.. அதைப் பார்க்காத பிரதாப்..

"நான் என்னத்தடி குறை பட்டேன்..?" என்று ஆதங்கப்பட்டார்..

"பின்னே..? யது இன்னும் வேலை முடிஞ்சு வீட்டுக்குத் திரும்பல.. அவன் வாரவரைக்கும் மழை வந்திரக் கூடாது

சாமின்னு நான் ஊரில இருக்கிற அத்தனை கடவுள்கிட்டயும் வேண்டிக்கிட்டு இருக்கேன்.. நீங்க என்னடான்னா மழை வரலையேன்னு வருத்தப் படறிங்க.. அப்ப உங்க மனசில என் மகனை நனைக்க மழை வரலையேங்கிற குறை இருக்குன்னுதான அர்த்தம்..?"

"அடிப்பாவி..! நீ இந்த ஆங்கிளில யோசிக்கிறயா..?"

"எல்லா அம்மாக்களும் பிள்ளைகளைப் பத்தின ஆங்கிளிலதான் யோசிப்பாங்க.. அப்பாக்கள்தான் அடுத்து வீட்டு ஆண்டியோட நினைப்பைக் கேட்டு அந்த ஆங்கிளில யோசிச்சுப் பார்ப்பாங்க.."

"அப்பாவும், அம்மாவும் சரி.. என்ன அலுவலுக்காக அடுத்த வீட்டு ஆண்ட்டியோட ஆங்கிளப் பத்திப் பேசற..?"

"ஹலோ..! அடுத்த வீட்டு ஆண்டியோட நினப்பக் கேட்டு அந்த ஆங்கிளில யோசிப்பாங்கன்னுதான் இங்கே சொன்னோம்.. டைரக்டா அடுத்த வீட்டு ஆண்டிக்கு தோதா ஆங்கிள் வைக்கச் சொல்லலை.."

அனுராதா மடக்கியதில்..

"நீ இருக்கியே.." என்று வெற்றிகரமாக ஜகா வாங்கினார் பிரதாப்..

"அஃது.." என்றபடி செல்போனை எடுத்து அனுராதா யது நந்தனுக்கு போன் போட்டாள்..

"எங்கடா இருக்க..? என்ன..? வந்துக்கிட்டு இருக்கியா..? மழை வரும் போல இருக்கேடா.. என்ன..? வந்தா வரட்டுமா..? ஊருக்கு நல்லதா..? உனக்கு நல்லதான்னு பாருடா.. மழையில நனைஞ்சா உனக்கு காய்ச்சல் வந்து தொலைக்குமே.. என்னது..? முதல்ல நான் போனை வைச்சுத் தொலைக்கவா..? ஏண்டா..? ஈ.சி.ஆர் ரோட்டில வண்டி ஓட்டிக்கிட்டு வர்றவன்கிட்ட செல்போனில கூப்பிட்டு தொணதொணக்கக் கூடாதா..? நேரம்டா.. உன்னைப் பத்திக் கவலைப் பட்டு மனசு கேக்காம போனை போட்டேன் பாரு.. என்னைச் சொல்லனும்.. என்னது..? இப்ப நான் போனை வைக்கலைன்னா

நீ போனைத் தூக்கிப் போட்டிருவியா..? டே.. டேய்..! காஸ்ட்லி போன்டா.. இப்பத்தான் வாங்கியிருக்க.. ஒரு மாச சம்பளத்தை ஒட்டு மொத்தமா சாப்பிட்ட போனுடா..

என்மேல இருக்கிற கோபத்தில விட்டு விளாசித் தொலைச்சிராதே.. நான் போனை வைச்சிடறேன்.."

அனுராதா போனை அனைத்து விட்டு நிமிர்ந்தாள்..

"வல்லவளுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு.." என்றார் பிரதாப்..

"என்னது..?" அனுராதா புருவங்களை நெரித்தாள்..

"சினிமாப் பேரைச் சொன்னேன்டி.." சமாளித்தார் பிரதாப்..

"அது வல்லவனுக்கு வல்லவன்..! ஐயா சாடை பேசறிங்களாக்கும்.. யாருகிட்ட..?" அனுராதா கழுத்தை வெட்டிய வெட்டில் அவருக்கு கழுத்து சுளுக்கி விடுமோ என்று பயந்து போனார் பிரதாப்..

சுளுக்குகிற கழுத்தா அனுராதாவின் கழுத்து..?

அத்தியாயம் - 47

நிழலான நினைவுகளில்

நிம்மதியை புதைத்து வைத்தேன்..

சேர வேண்டிய கைகளிலே..

சேர்ந்து விடும் காலம் வரும்..

அது என்ன மாயமோ.. மந்திரமோ.. அனுராதாவின் கழுத்து மட்டும் அவள் என்ன வெட்டு வெட்டினாலும் ஈடு கொடுத்து நொடித்துத் திரும்பும்.. சுளுக்குக்கும் அவள் கழுத்துக்கும் எட்டாத தூரம்..

'இதுக்குன்னு டிரெயினிங் எடுத்திருப்பாளோ..'

பிரதாப் தன் கடையில் இருக்கும் கலை நுணுக்கம் கொண்ட சிற்பங்களை நினைத்து வியந்து போவதைவிட அதிகமாக அனுராதாவின் கழுத்து வெட்டில் வியந்து போவார்..

"என்ன..? அப்படிப் பாக்கறிங்க..?"

அன்றும் அதுபோல வியந்து போனவரை ஓர் அதட்டல் போட்டு நனவுலகிற்கு இழுத்து வந்தாள் அனுராதா..

"அது ஒன்னுமில்லைடி அனு.."

"ஒன்னும் இல்லாததுக்கா இந்தப் பார்வை..? இதுக்கே இப்படின்னா.. ஏதாச்சும் இருந்தா எப்படியோ..?"

"அதை ஏதாச்சும் வரும் போது பாத்துக்கலாம்.. ஏண்டி.. ஈஸிஆர் ரோட்டில வண்டியோட்டறதும்.. சர்க்கஸில வண்டி ஓட்டறதும் ஒன்னு.. ஹெவி டிராபிக்கில சிங்கிள் ரோடை டபுள் ரோடாக்கூட மாத்தாம அரதப்பழசா மெயின்டெயின் பண்ணிக்

கிட்டு இருக்காங்க.. அட்லீஸ்ட், ரோட்டுக்கு ஊடே டிவைடரையாவது போட்டு வைக்கலாம்... அதுக்கும் பஞ்சம்... பாண்டிச்சேரிக்கும்.. சென்னைக்கும் இடையில நிக்காம வண்டிக ஓடிக்கிட்டு இருக்கு.. ஊரெல்லாம் 'ஃபோர் வே'யா மாறிக்கிட்டு வர்றப்ப.. தி கிரேட் ஈ.ஸி.ஆர் ரோட்ட 'சிங்கிள் வே'வா வைத்திருக்கிற பெருமை நம்ம ஆளுகளுக்கு மட்டும் தான் கிடைக்கும்.. இந்த லட்சணத்தில வண்டியோட்டறவன் கிட்ட செல்போனில பேசி வைக்கறியே.. உன்னை என்னன்னு சொல்றது..?"

"அனுன்னு சொல்றது.."

"நீ புத்திசாலின்னு நினைச்சேன் அனு.."

"நீங்க நினைக்கலேன்னாலும் நான் புத்திசாலிதான்.."

"உங்கிட்ட பேசி ஜெயிக்க முடியுமாடி..?"

"தெரியுதில்ல..? அதுக்கப்புறமும் எதுக்காக இந்த வேண்டாத வேலை..?"

மகனிடம் வாங்கிய வாங்கலை எல்லாம் பிரதாப்பிடம் அவள் இறக்கி வைத்துக் கொண்டிருந்த போது வாசலில் பைக் உறுமும் சப்தம் கேட்டது..

"யதுவா இருக்குமோ.."

அனுராதா சொல்லிக் கொண்டிருந்த போதே அவளின் செல்போன் அலற ஆரம்பித்து விட்டது..

"ஈஸிஆர்ல வண்டியோட்டறப்ப போன் பண்ணுங்க.. வீட்டு வாசல்ல வந்து நிக்கறவனுக்கு கேட்டை மூடி வையுங்க.."

"கேட்டு.. மூடியிருக்கா..? யாரு மூடினது..?"

"என்னக் கேட்டா..? வந்து பூட்டைத் திறந்து விடுங்கம்மா.. மழை வரப் போகுது.."

"இருடா வர்றேன்.."

அனுராதா சொல்லிக் கொண்டிருந்த போதே யாமினி எழுந்து வாசல் கேட்டின் சாவியை எடுத்துக் கொண்டு கேட்டைத் திறக்கப் போய் விட்டாள்..

"சமத்து.." அனுராதா மெச்சிப் போனாள்..

"அவ இல்லாதப்ப சொல்றத அவ இருக்கிறப்ப சொல்லக் கூடாதா..?" பிரதாப் அங்கலாய்த்தார்..

"வேலையைப் பாருங்க.."

யதுநந்தனுக்கான சூடான காபி, டிபனை எடுத்து வைக்க அனுராதா சமையலறைக்குள் போய் விட்டாள்..

பிரதாப் டிவியில் ஆழ்ந்திருக்க.. யாமினி வாசல் படியை விட்டு இறங்கி கேட்டை நோக்கிப் போய் கொண்டிருந்தாள்..

ஊஞ்சலில் இருந்த கடிதம் அசைந்தது.. அது நேரம் வரை.. அம்மிக் கல்லையும் பறக்க வைக்கும் ஆடிக் காற்றாக அடித்த ஊதக் காற்றில் கல்லுக் குண்டைப்

போல அசையாமல் வீற்றிருந்த கடிதம் காற்றில் எழும்பி பறந்தது..

"ஏன் இவ்வளவு நேரம்..?"

கேட்டின் பூட்டைத் திறந்தபடி கேட்டாள் யாமினி..

"வேலை இருந்துச்சு.. அப்பாவந்தாச்சா..?"

"வந்தாச்சு.."

யதுநந்தனின் பைக் உள்ளே பாய்ந்தது.. யாமினி கேட்டைப் பூட்டுப் போட்டு பூட்டி விட்டு.. வீட்டை நோக்கி நடந்தாள்.. வானத்தில் மின்னல் வெட்டியது.. காற்றில் பறந்து வந்த கடிதம் அவள் முன்னால் தரையில் விழுந்தது.. மின்னலின் வெளிச்சக் கீற்றில் கடிதத்தை எடுத்தவள்..

'இது காலையில் வந்த கொரியரில்ல..?' என்று யோசித்தாள்..

யோசனையுடன் அவள் யது நந்தனை பின் பற்றி வீட்டுக்குள் காலடி வைத்த மறுநொடியில் வானம் கிழிந்து விட்டதைப் போல இடி மின்னலுடன் மழை கொட்டோ கொட்டென்று கொட்ட ஆரம்பித்தது..

கையிலிருந்த கடிதத்தைப் பார்த்தபடி பிரமை பிடித்தவளைப் போல நின்று விட்டாள் யாமினி.. அவளது காதுகளில் இடியின் சப்தமும் கொட்டுகின்ற மழைத் தாரைகளின் சப்தமும் கேட்டபடியே இருந்தது..

"இம்புட்டு மழையும் நீ வாரதுக்காகவே காத்திருந்துச்சு போலடா.. நீ உள்ளே கால் வைக்கிற.. மழை கொட்டுது.."

யதுநந்தனிடம் இயல்பாக பேசிய அனுராதாவின் வார்த்தைகளில் யாமினியின் உடல் நடுங்கியது..

'யாருக்காக இந்த மழை காத்திருந்தது..?'

யதுநந்தனைப் பார்த்தாள்.. அவன் அனுராதாவிடம் சுவராஸ்யமாக எதையோ பேசிக் கொண்டிருந்தான்..

'இவனுக்காகவா இந்த மழை காத்திருந்தது..?'

அவள் ஜன்னலருகே சென்று மழையை வெறித்தாள்.. கன்னங்கரேலென்ற மழையின் கும்மிருட்டு.. அடர்ந்த நீர்த்தாரைகளின் சப்தம்.. இடைவிடாத பேய் மழை..!

'இந்த மழை கொட்டுகிறதை நிப்பாட்டி வைத்திருந்ததா..? ஏன்..?'

அவளது கையில் கனத்த கடிதத்தின் மீது அவளது பார்வை ஓடியது.. காலையில் கை நழுவி.. இரவினில் கைக்குக் கிடைத்த கடிதம்.. சிறு தூசிகூடப் படியாமல் புதுப் பெண்ணின் பொழிவோடு இருந்தது..

'எப்படி..?'

அவளின் உடல் நடுக்கம் அதிகமாகியது.. தோட்டத்தின் ஊஞ்சலைப் பார்த்தாள்.. அடித்துக் கொண்டிருந்த மழையின் வேகத்தில் அங்கும் இங்கும் அது ஆடி அவளை பயமுறுத்தியது..

'அந்த ஊஞ்சலில்தானே கடிதத்தை வைத்தேன்..?'

யாமினியின் இதயம் தடதடத்தது.. பகல்பொழுது முழுவதும் மழைக் காற்று சுழன்றடித்ததை நினைத்துப் பார்த்தாள்..

"தோட்டத்துக் குப்பையெல்லாம் இந்தக் காத்து வாசலில கொண்டு வந்து தள்ளிருச்சு.."

சலித்துக் கொண்ட அனுராதாவின் வார்த்தை களையும் நினைத்துப் பார்த்தாள்.. அப்பேற்பட்ட ஊதல்காற்று அந்தக் கடிதத்தை எதுவும் செய்ய வில்லையா..? மரத்தின் கிளைகள் கூடப் பறந்த சுழிக் காற்றில் கடிதம் பறக்காமல் பத்திரமாக இருந்ததா..?

"அங்கே என்னடி பண்ற..?" அனுராதா அதட்டினாள்.

"வேறென்ன பண்ணுவா..? இருட்டை வெறிச்சு வெறிச்சுப் பார்த்துக்கிட்டு நின்னுக்கிட்டு இருப்பா.. இவளுக்கு இதே பொழைப்பாப்போச்சு.." யதுநந்தன் அலுத்துக் கொண்டான்..

"யாமினி கதவை மூடிட்டு வா.."

"விடுடி.. குழந்தை மழையைப் பார்க்க ஆசைப்படறா.."

"இந்தப் பேய் மழையைப் பாக்க ஆசைப்படறாளா..? அறிவோடதான் பேசறிங்களா..? இதில இவ குழந்தையாம்."

"மழையை ரசிக்கவும் ஒரு மனசு இருக்கணும்.."

"உங்களுக்கும்.. உங்க மகளுக்கும் அந்த மனசு இருக்கில்ல.. அது போதும்.. ரெண்டுக்கு மேலே மறை கழண்ட கேஸீ இருந்தா இந்த வீடு தாங்காது.."

"அனு.."

"கத்தாதீங்க.. ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்காது.. அடிச்சுக்கிட்டிருக்கிற பேய் மழைய பகல்ல பாத்தாலே பயமா இருக்கும்.. இந்த லட்சணத்தில இவ கும்மிருட்டில கொட்டற மழைய முட்டக் கண்ணத் தொறந்து வைச்சுக்கிட்டு முழிச்சு முழிச்சு பாத்துக்கிட்டு இருக்கா.. பயந்து கியந்து தொலைச்சிட்டா என்ன பண்றது..? அதச் சொல்ல வந்தா இவரு குழந்த.. கிழந்தன்னு தொட்டில் கட்டி தாலாட்டுப் பாடக் கிளம்பறாரு.. யது இந்தக் கொடுமையை ஏன்னு கேட்க மாட்டியா..?"

"ஏம்ப்பா..?"

யதுநந்தனின் ஓட்டு மொத்த அலுவலக எரிச்சலையும் அந்த ஒற்றை வார்த்தை பிரதிபலித்ததில் பிரதாப் வாயை மூடிக் கொண்டு மௌன குருவானார்.. அனுராதா அடுத்த குறியாக யாமினியை நோக்கித் திரும்பினாள்..

"ஏய்ய்.. யாமினி.. இப்பத் கதவ மூடிட்டு வரயா இல்லயா..?"

யாமினியிடம் அசைவில்லை.. அனுராதா பேசியதை காதில் வாங்கிக் கொள்ளாமல் அவள் செதுக்கி வைத்த சிலையைப் போல ஜன்னலின் வழி தெரிந்த மழையின் இருட்டில் கடந்த காலத்தின் நிழல்களின் சுவடுகள் தென்படுகிறதா என்று துழாவிக் கொண்டிருந்தாள்..

"அவளையென்ன அப்பான்னு நினைச்சீங்களாம்மா.. அவ உங்களுக்கும் பெப்பே.. எனக்கும் பெப்பேன்னு சொல்லிருவா.. இடிச்சபுளிபோல நிக்கிறதில இவள மிஞ்ச யாராலயும் முடியாதும்மா.. கிட்டப் போயி முதுகில நாலு மொத்து மொத்திக் கூப்பிட்டுக்கிட்டு வாங்க.. இல்லேன்னா விடிய விடிய மழையைப் பாத்துக்கிட்டு அங்கேயே நின்னு தொலைப்பா.." எரிச்சல்பட்டான் யது நந்தன்..

என்னதான் அவன் எரிச்சலோடு சொன்னாலும் அதுதான் உண்மையாக இருந்து தொலைத்தது..

அத்தியாயம் - 48

காரிருளில் உன் முகம் தேடி

கால்கடுக்க நான் நடந்தேன்..

ஏழேழு பிறவிகளின்..

சொந்தமடி.. இந்த சொந்தம்..

யாமினி பிரதாப்பின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள்.. மகளைப் பார்த்து மென்மையாக புன்னகைத்தார் பிரதாப்.. மனதை மயில் இறகினால் வருடிக் கொடுக்கும் புன்னகையை அவரால் மட்டுமே கொடுக்க முடியும் என்ற நினைவுடன் பதிலுக்கு மலர்ந்து சிரித்தாள் யாமினி.. குளித்து உடைமாற்றி வந்த யதுநந்தனின் முகத்தில் அகோரப் பசியின் சுவடு தெரிந்தது..

"ம்மா.."

சமையலறையை நோக்கிக் கத்தினான்.. கன்றின் குரல் கேட்ட பசுவாக கையில் காபி டிபன் தட்டுடன் வெளிப்பட்டாள் அனுராதா..

"அம்மான்னா.. அம்மாதான்.." என்றபடி தட்டை கையில் வாங்கிக் கொண்ட யது நந்தனின் பார்வை பிரதாப்பின் மீது படிந்தது..

'ஏன் இப்படிப் பார்த்து வைக்கிறான்.. நானெல்லாம் சும்மான்னு பார்வையிலேயே சொல்றானோ..' பிரதாப்புக்கு இருப்புக் கொள்ளவில்லை..

"என்னடா..?" என்றார்..

"ஏன்ம்மா.. அப்பாவுக்கு காபி, டிபன் கொடுக் கலையா..?" என்று கேட்டு வைத்தான் யதுநந்தன்..

'இதை எதுக்கு இப்பக் கேட்டு வைக்கிறான்..?'

பிரதாப்புக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

'இவன் பார்வையும் புதிரா இருக்கு.. பேச்சும் புதிரா இருக்கு.. இந்த லட்சணத்தில் என் மகளப் போயி புதிருன்னு இவனும் இவன் அம்மாவும் பட்டம் கட்டறாங்க.'

பிரதாப் பிரியத்துடன் மகளைப் பார்த்தார்.. அதில் அனுராதா நொடித்தாள்.. மகனைப் பார்த்து..

"முடியலைடா.." என்றாள்..

"முடியலைன்னா ரெஸ்ட் எடுக்க வேண்டியது தானே..?" அக்கறைப் பட்டார் பிரதாப்..

"இது அந்த 'முடியலை' இல்லப்பா.. உங்களோட முடியலைன்னு அர்த்தப் படுத்திக்கனும்.." விளக்கம் சொன்னான் யதுநந்தன்..

'இதுக்கு மட்டும் புளி போட்டுத் தேச்சு விளக்கம் சொல்லிருவான்.. நான் 'என்னடா'ன்னு கேட்டா மட்டும் அப்பாவுக்கு காபி டிபன் கொடுக்கலையான்னு குழப்பித் தொலைப்பான்..'

அந்த அம்மா, மகனின் புரிதலில் பிரதாப்புக்கு அட்டூழியமான கோபம் வந்து தொலைத்தது.. அந்தக் கூட்டணி படு ஸ்ட்ராங்கான கூட்டணி என்பதால் அட்டூழியம் அமைதிகாக்க.. அனுராதா மகனை பாசத்துடன் பார்த்து..

"என் புள்ளைக்குத்தான் அவங்க அப்பாமேல எம்புட்டு அக்கறை..! அப்பாவுக்கு காபி டிபன் கொடுக்கலையான்னு கரிசனப் படறானே.. இந்த மனுசனும் இருக்காரே.. வேலைக்கு போன புள்ள வீடு திரும்பறதுக் குள்ள மழை வராம இருக்கனுமேன்னு நான் வேண்டாத தெய்வத்தை எல்லாம் வேண்டிக்கிட்டு இருந்தா இவரு வந்த புள்ளய வாசல்லயே நிப்பாட்ட கேட்டுக்கு பூட்டுப் போட்டுட்டு வர்றாரு.." என்று பெருமைப் பட்டுப் போனாள்..

"அதெல்லாம் ஒன்னுமில்ல.. அப்பா என் தட்டப் பார்த்து என்ன டிபன்டான்னு கேக்கறாரே.. அதனாலதான் அப்படிக் கேட்டேன்.." என்றான் அவளின் அருமந்தப் புத்திரன்..

"அடேய் யது..! நான் கேட்ட என்னடா.. இந்த என்னடா இல்லடா.. அது வேற 'என்னடா..'" என்று தெளிவாக விளக்க முயன்றார் பிரதாப்..

"ப்பா..! வரலைன்னா விட்டிருங்க.. எதுக்காக வலியக்க கயிற்றைப் போட்டுக் கட்டி இழுக்கறிங்க.. நீங்க கேட்டது டிபன் இல்லைன்னா வேற எதுவோவாவே இருக்கட்டும்.. அத என்னன்ன புரிஞ்சுக்கிட்டு விளக்கம் சொல்ற மூடில நானில்லை.." கட் அண்ட் ரைட்டாக சொல்லி விட்டான் யதுநந்தன்..

'எம்புட்டுக் கறாரா பேசறான் பாரு.. அப்புடியே அவங்க அம்மாவோட ஜெராக்ஸ்..' பிரதாப்புக்கு பொங்கியது..

அந்தக் கடுப்புடன் அவர் மகனைப் பார்க்க.. அப்போது தான் காபி, டிபனை முடித்திருந்த அவன் புருவங்களை உயர்த்தினான்..

"இப்ப என்ன அலுவலுக்கு இவன் கூட மல்லுக்கு வர்றீங்க..?" அனுராதா மல்லுக்கு வந்தாள்..

"என்னடி இது வம்பாப் போச்சு.. பெத்த மகனை ஒரு பார்வை பாத்தாக்கூட குத்தமாடி..?" பிரதாப் நியாயம் கேட்டார்..

"தேவைதான்ப்பா எனக்கு.." என்றான் யதுநந்தன்..

"என்னடா தேவையைக் கண்டுட்ட..?"

"என் வயசுக்கு என்னைப் பாக்க வேண்டிய ஆளுகளே வேற.. நீங்க வந்து பார்க்கலைன்னுதான் நான் தவம் கிடக்கிறேனா..?"

"யது.."

"சொல்லுங்க.."

"வேணாம்.. விட்டிரு.."

பிரதாப் என்னவோ பேச்சு வார்த்தை வளர்ந்தால் பிரச்னை வந்த தொலைக்கும்.. அதை விட்டுவிடு என்ற ரீதியில்தான் சொல்லி வைத்தார்.. அதை சம்பந்தமே யில்லாமல் அவர் சொல்லி வைத்த விதத்தில் ஒன்று சொன்னார்போல அனுராதாவும் யதுநந்தனும் கூட்டுச் சேர்ந்து கொண்டு அவரை வினோதமாக பார்த்தார்கள்..

"என்னப்பா இது..?" என்றான் யது நந்தன்..

"எது..?" என்று கேட்டார் பிரதாப்..

"என்னவோ மணிரத்னம் பிலிமில வர்றதைப் போல வேணாம் விட்டிருங்கறிங்க.. எதைவிடச் சொல்றீங்க..?"

"பேச்சை விடச் சொன்னேன்டா.."

"ஓ.. நீங்க அந்த அர்த்தத்தில சொல்லி வைச்சீங்களா..? இதைப் புரிஞ்சுக்காம நானும் அவசரப் பட்டு வாய்விட இருந்தேனே.."

"என்னத்தடா வாய்விட இருந்த..?"

"அவளை நிறுத்தச் சொல்லுங்க.. நானும் நிறுத்தறேன்னு சொல்லலாம்ன்னு இருந்தேன்.. ஹா..ஹா.."

யதுநந்தன் யாமினியைக் காட்டிச் சொல்லிவிட்டு விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்.. அனுராதாவும் அந்தச் சிரிப்பில் கூட்டுச் சேர்ந்து கொள்ள பிரதாப் தனக்கு ஆதரவாக இருக்கும் மகளைப் பார்த்தார்.. அவளோ நடந்து கொண்டிருக்கும் களேபரத்தை கண்டு கொள்ளாமல் பித்துப் பிடித்தவளைப் போல இலக்கில்லாமல் வெறித்துக் கொண்டிருந்தாள்..

'இவ வேற..' பிரதாப்புக்கு சலிப்பாக இருந்தது..

மற்ற நேரங்களில் வேண்டாம்.. இதுபோல அம்மாவும் மகனும் கூட்டுச் சேர்ந்து கொண்டு அவரை கேரோ பண்ணும் நேரத்திலாவது அவர் பெற்ற அருமை மகள் அவருக்கு கை கொடுக்க வர வேண்டாமா..?

"என்னத்த உங்க மகளைப் பாக்கறிங்க..? அவ முன்னாடி அவளப் பத்திப் பேசினாலே அவ காதில விழுந்து தொலைக்காது.. இந்த லட்சணத்தில உங்களப் பத்திப் பேசினதும் உங்க பாசமகள் ஓடோடி வந்துரப் போறாளாக்கும்..?"

அனுராதாவின் எகத்தாளத்தில் அவருக்கு கோபம், கோபமாக வந்தது.. யதுநந்தன் கைகளைப் பின்னால் கட்டி அதில் தலைசாய்த்த வண்ணம் அவரை கருடபார்வை பார்த்து வைத்தான்..

'எதுக்கு இப்படிப் பார்த்துத் தொலைக்கிறான்..?'

அந்தப் பார்வைக்கு அர்த்தம் என்னவென்று கேட்கப் போனவர் நிதானித்தார்..

'வேணவே வேணாம்.. இவன்கிட்ட என்னடான்னு கேட்டா அப்பாவுக்கு டிபன் கொடுத்தியா.. என்ன டிபன்னு என்னைக் கேக்கிறாரும்பான்..'

மகனின் பார்வையை கண்டு கொள்ளாமல் இருப்பதே சாலச் சிறந்தது என அவர் மகளின் பக்கம் திரும்பினார்..

"யாமினி.." மகளை அழைத்தார்..

"....." அவளிடம் பதிலில்லை..

"உன்னைத்தான் யாமினி.." உரக்கச் சொன்னார்..

"....." அதற்கும் அவள் அசையாமல் உட்கார்ந் திருந்தாள்..

"இப்படிக் கூப்பிட்டா அவ என்னப்பான்னு கேட்டுட்டுத்தான் மறுவேலையைப் பார்ப்பாளா..?" அனுராதா கேலிக்குரலில் கேட்டாள்..

பிரதாப் மகளின் மீதிருந்த கடுப்பையும்.. மகனின் மீதிருந்த கடுப்பையும் ஒட்டு மொத்தமாக சேர்த்து வைத்து மனைவியை முறைத்தார்..

அவளா அந்த முறைப்புக்கு அஞ்சுவாள்..?

"எதுக்கு முறைப்புங்கறேன்..?" என்று புருவங்களை உயர்த்தினாள்..

"எப்படா சான்ஸ் கிடைக்கும்.. யாமினியை வாரலாம்ன்னு காத்துக்கிட்டு இருப்பியா..?"

"இவளை வாரிட்டாலும்..!"

"பின்னே..? நீ செய்கிறதுக்கு பேரு என்ன..?"

"இவ ஏன் அந்த சான்ஸைக் கொடுக்கிறாங்கறேன்..?"

அனுராதாவின் கேள்விக்குப் பிரதாப்பால் பதில் சொல்ல முடியவில்லை.. யது நந்தனைப் பார்த்தால் அவன் புருவங்களை உயர்த்திப் பார்த்து வைத்துத் தொலைத்தான். என்னடா வினை இது என்று யாமினியைப் பார்த்தால் அவள் விட்டத்தில் ஓடும் பல்லிகளின் ரேஸை பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.. இது வேலைக்கு ஆகாது என்று மனைவியின் பக்கமே பார்வையைத் திருப்பிக் கொண்டார்..

"பாத்தீங்கள்ல.. உங்க அருமைப் பொண்ணு யாருக்கு வந்த விருந்தோன்னு அசையாம உக்காந்திருக்கிறத..?"

"விடுடி.."

"விடாம என்ன செய்ய..? பிடிச்சு வைக்கத்தான் முடியலையே.. நானும் இப்ப மாறுவா.. அப்ப மாறுவான்னு காத்துக் கிடக்கிறேன்.. இவ மாறின பாடா இல்லை.. இவளைக் காரணம் காட்டித்தான்.. இங்க.. இப்ப சண்டை நடந்துக்கிட்டு இருக்கு.. இவ முன்னாடிதான் அதுவும் நடக்குது.. அது கொஞ்சமாவது அவ புத்தியில உறைக்கு தான்னுதான் நான் கேட்கிறேன்.."

"அனு.."

"உங்க மகளை நீங்க கூப்பிடறாப்புலக் கூப்பிடா அவ திரும்பியே பாக்க மாட்டா.. இன்னைக்குப் பூராவும் தொண்டைத் தண்ணி வத்த நீங்க கூப்பிட்டுக்கிட்டே இருக்க வேண்டியதுதான்.. அவளைக் கூப்பிட வேண்டிய முறையே வேற.."

'எப்படிக் கூப்பிடனும்னு சொல்றா..?'

பிரதாப் புரியாமல் மனைவியை நோக்க.. அவளோ மகளை நோக்கிச் சரிந்து அவள் முதுகில் 'சுரீர்' என்று ஒரு போடு போட்டாள்..

அத்தியாயம் - 49

நிகழ்கின்ற நிகழ்வுகளை..

நிர்ணயம் செய்தது யார்..?

உனக்கும் எனக்குமான பந்தத்தை..

இந்த உலகம் அறியாது..

அனுராதா போட்ட போட்டில் 'சுரீர்' என்று முதுகு வலிக்க.. முதுகைத் தடவியவாறு திரும்பிப் பார்த்தாள் யாமினி..

"ப்பா..! எப்படி வலிக்குது.. ஏம்மா அடிச்சீங்க..?"

மகளின் கேள்வியில் மகளை விட அதிகமாக அனுராதாவுக்கு வலித்துத் தொலைத்தது.. அதை அவளது பார்வை பிரதிபலித்ததில்..

"இதுக்குத்தான் எதையும் செய்யறதுக்கு முன்னாலே.. ஒருதடவைக்குப் பத்துத் தடவை யோசிச்சுச் செய்யனும் கிறது.." என்றார் பிரதாப்..

"இவளை மகளா பெத்த பின்னாலே என்னதான் மண்டையில இருக்கிற மூளையைக் கசக்கிக் பிழிந்து யோசிச்சு வைத்தாலும் யோசனை வருவேனான்னு அடம் பிடிச்சு வைக்குதே.."

அலுத்துக் கொண்டாள் அனுராதா.. அவள் அடித்த அடியில் முதுகைத் தடவிக் கொண்டிருந்த மகளிடம்..

"ரொம்ப வலிக்குதா.." என்று கேட்கவும் செய்தாள்.

"என்னத்தை அட்டாக் பண்ணிட்டிங்கன்னு இந்த பில்ட் அப்பைக் கொடுக்கறீங்க..? லேசா எறும்பு கடிச்சாப்புல முணுக்குன்னு வலிச்சிருக்கும்.. விடுங்கம்மா.." என்றான் யது நந்தன்..

"உன்னை அடிச்சிருந்தாத் தெரியும்.." தமையனை முறைத்தாள் யாமினி..

"ஓ..! உனக்கு அந்த ஆசையா..? அடி வாங்கினதில இவளுக்கு வருத்த மில்லையாம்ப்பா.. அந்த அடியை நானும் சேர்ந்து வாங்கலைங்கிறதிலதான் இம்புட்டு வருத்தம்.."

"டேய்..! போடா.."

"எங்கே போகச் சொல்கிற..? கடலுக்கா..?"

"அதுக்கு இவ போய்க்குவா.. நீ வேலையைப் பாருடா யது.."

"எங்கேம்மா..? யாம் பெற்ற துன்பத்தை நீயும் பெறுகன்னு மல்லுக்கட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்காளே.."

"ஸ்டாம் இட் யது..! ஐ அப்ஜெக்ட் இட்.."

"அப்பா.. இது கோர்ட் இல்லை.. வீடு..! நீங்களும் லாயர் இல்லை.. எங்க அப்பா.."

"அவருக்கு அது தெரியாதுன்னா நினைக்கிற யது..?"

"ஊஹூம்..! நான் உங்க செல்லப் பிள்ளைம்மா.. அப்படியாப்பட்ட நினைப்பை யெல்லாம் நினைக்க மாட்டேன்.. அப்பா தெரிஞ்சுக்கிட்டேதான் நூல் விடறார்.."

"பாருடா.. இவர் நூல் விடற சங்கதி உனக்கும் தெரிஞ்சிருச்சா.."

"நூல் விட்டாரா..? அப்பாவா..? யாருக்கு..?"

"என்னங்க.. பிள்ளை யாருக்குன்னு கேட்கிறான்.. அடுத்தாத்து அம்புஜத்தைப் பத்தியும்.. எதுத்தாத்து சங்கதியைப் பத்தியும் நீங்க பிட்டுப்பிட்டு வைச்ச கதையை உங்க மகன்கிட்ட எடுத்து விடவா..?"

அனுராதா அணுகுண்டைத் தூக்கிப் போட.. பிரதாப்புக்கு நெஞ்சுவலி வந்துவிடும் போல ஆகிவிட்டது.

"அனு.." என்றார் பரிதாபமாக..

"பிழைத்துப் போங்க.." அவளும் அனுக்கிரகம் காட்டி அவரைப் பிழைத்துப் போக விட்டாள்..

யதுநந்தன் சோபாவில் வாகாக சாய்ந்து கொண்டு கால்களைத் தூக்கி டீப்பாயில் போட்டு சரிந்து அமர்ந்த வண்ணம் டிவியை பார்த்துக் கொண்டிருந்தான்..

அவன் கையிலிருந்த ரிமோட்டை அவன் அறியாதபடி பூனையைப் போல நைஸாக உறுவிய யாமினி.. வேறு சேனலை மாற்ற.. அவர்களுக்குள் யுத்தம் மூண்டது..

"யாரைக் கேட்டு சேனலை மாத்தின..?"

"யாரைக் கேக்கனும்..?"

"என்னைக் கேக்கனும்.."

"நீ யாரைக் கேட்டு ரிமோட்டைத் தூக்கின..?"

"யாரைக் கேக்கனும்..?"

"என்னைக் கேக்கனும்.."

"ஹலோ..! இது எங்க அப்பா வீட்டுச் சொத்து.."

"எனக்கும் இதே டயலாக்தான்.. இது எங்க அப்பா வீட்டுச் சொத்து.. நான் அவருக்கு செல்லப் பொண்ணு.."

"இருந்துக்க.. யாருக்கு வேணும் அவரோட செல்லம்..?"

"அவரோட செல்லம் மட்டும் வேணாம்.. டிவி மட்டும் வேணுமா..?"

"ஆமாம்ங்கிறேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

"ரிமோட்டைத்தர முடியாதுங்கறேன்.. அதுக்கு நீ இப்ப என்னாங்கிற..?"

"அதையும் பார்த்துரலாம்.."

யதுநந்தன் யாமினியின் மீது பாய்ந்து ரிமோட்டைப் பிடுங்கினான்.. பதிலுக்கு அவளும் பிடுங்கினாள்.. மறுபடியும் யதுநந்தன் யாமினியின் கையிலிருந்ததைப் பிடுங்க.. இம்முறை ரிமோட்டுக்குப் பதிலாக கொரியர் வந்து சேர்ந்தது..

"என்ன லெட்டர் இது..?"

யதுநந்தனின் கேள்விக்கு அப்புறம்தான் ஒட்டு மொத்தக் குடும்பமும் அந்த லெட்டரை பார்த்து வைத்தது.

ஒட்டு மொத்த குடும்பமும் கேள்வி கேட்ட பின்னால்தான்.. அதுவரை அந்த லெட்டரை கையில் வைத்துக் கொண்டிருந்த விவரமே யாமினியின் அறிவுக்கு உறைத்தது...

"கொரியர் போல இருக்கில்ல..?" அனுராதா கேட்டாள்..

யதுநந்தன் கையிலிருந்த கவரை இப்படியும்.. அப்படியுமாக... என்னவோ ஆராய்ச்சி பண்ணுகிறவனைப் போலத் திருப்பித் திருப்பிப் பார்த்துவிட்டு..

"அப்படித்தாம்மா தெரியுது.." என்றான்..

"அதைக் கண்ணால பாக்கிறப்பவே கண்டு புடிச்சிரலாமே.. இந்த அளவுக்கு புரட்டிப் பாக்கணுமா..?" என்றார் பிரதாப்..

"அதுக்கு இப்ப என்னாங்கறிங்க..?" என்றான் யதுநந்தன்..

"என்னமோ மலையைப் பொரட்டறவன் போல இம்புட்டு பில்ட்-அப்பு எதுக்குன்னுதான் கேட்டேன்ப்பா.. வேற ஒன்னுமே இல்லை.." ஜகா வாங்கினார் பிரதாப்..

"கேட்கிறதையும் கேட்டுட்டு... ஒன்னுமே இல்லையாமில்ல.. இம்புட்டு நேரமும் உங்க பொண்ணு கையில இந்த லெட்டர் இருந்துச்சே... அவ இந்த ஆராய்ச்சியையெல்லாம் பண்ணிப் பாத்திருக்க வேண்டியதுதானே..?"

மகனின் சார்பாக.. கணவரை கேள்வி கேட்டாள் அனுராதா.. மற்றவர்களுக்குத்தான் அது கேள்வி கேட்பது.. பிரதாப்பின் மனம் மட்டுமே அறியும்.. அவள் வாங்கு.. வாங்கு.. என்று வாங்குவதை..

'சான்ஸ் கிடைச்சா விட மாட்டாளே..' அவர் பல்லைக் கடித்தபடி மகளைப் பார்த்தார்..

அவள் எனக்கென்ன என்று விட்டத்தைப் பார்த்தாள். 'இவ பண்ணி வைக்கிற வேலையிலதான் நான் இம்புட்டு வாங்கை வாங்க வேண்டியிருக்கு..' நொந்து போனார் பிரதாப்..

"அதான் கொரியர்ன்னு தெரியுதில்ல.. அதுக்கப் புறமும் தேவையில்லாம ஏன் பேசனும்..?"

அவர் அனுராதாவின் வாங்கலை ஆட்சேபித்தார்..

"கொரியர்ன்னு தெரியுது.. அது இம்புட்டு நேரமும் எந்தத் தோட்டத்துக்கு புல் மேயப் போயிருந்ததுன்னு தான் தெரியல.." அனுராதா நொடித்தாள்..

"எவடி இவ.."

"அதுவும் தெரியலையா..? உங்க பிரியம் போல எதுத்த வீடு.. பக்கத்து வீடுன்னு.. ஏதாவது ஒரு பேரைச் சொல்லிக்கங்களேன்.." அனுராதா எடுத்துக் கொடுக்க..

"அனு.." என்று யதுநந்தனை நினைத்து நடுங்கிப் போனார் பிரதாப்..

'இவபாட்டுக்கு மகன் முன்னாடி போட்டுக் கொடுக் கிறாளே.. விசயம் தெரிஞ்சா இவன் என்னப் பார்வையாலேயே ஒருவழி பண்ணிருவானே..'

அவருக்குக் கண்களில் தண்ணீர் வந்து விடும் போல அகிவிட்டது..

"அட..! சாருக்கு என்பேர் கூட ஞாபகம் இருக்கு போல.. அதான் நான் யாருன்னு தெரிஞ்சு போச்சில்ல.. விசயம்

என்னன்னு சொல்லுங்க.." அனுராதா பேச்சை மாற்றி அவரைக் காப்பாற்றினாள்..

'அப்பாடா..!' நிம்மதியான பிரதாப்..

"கொரியர் எதுக்காகடி புல் மேயப் போகனும்..?" என்று சந்கேதம் கேட்டார்..

"பின்னே..? காலையில வந்த கொரியர் ராத்திரி வரைக்கும் உங்க மக கையிலதான் இருந்துச்சா..? கொரியர் பையன் காலையிலேயே வந்திட்டுப் போயாச்சு.."

அனுராதா சொன்னபின்னர்தான்.. மற்றவர்கள் அதை உணர்ந்தார்கள்.. யாமினி மதிய உணவுக்குப் பின்னால் கடைக்கு வந்து விட்டதை நினைத்துப் பார்த்தார் பிரதாப்..

"இவ கையிலேயே வைச்சுக்கிட்டுச் சுத்திக்கிட்டு இருந்தாளோ என்னவோ.." இலகுவாக சொன்னான் யதுநந்தன்..

'இது என்ன புதுசா..?' என்றிருந்தது அவனுக்கு..

போனால் போன இடம்.. வந்தால் வந்த இடம் என்று நிற்கும் யாமினி.. கொரியரை கையில் வைத்துக் கொண்டு சுற்றியதில் என்ன ஆச்சரியம் இருக்கக் கூடும் என்று நினைத்தான் அவன்..

"இல்லேண்னா.." என்றாள் யாமினி..

"இல்லைன்னா..?" புருவங்களை உயர்த்தினான் யதுநந்தன்..

"அம்மா சொன்னதைப் போல.. இது நம்ம வீட்டுத் தோட்டத்திலே புல் மேயத்தான் போயிருந்தது.."

"என்னடி புதிர் போடற..?"

"ஆமாம்மா.. காலையிலே கொரியர வாங்கினவுடனே தோட்டத்துக்குப் போனேனா..?"

"போன.."

"அங்கே ஊஞ்சல் இருந்துச்சா..?"

"இருந்துச்சு இல்ல.. இப்பவும் இருக்குது.."

"ஊஞ்சல்ல உட்கார்ந்து ஆடினேனா..?"

"ஆடின.. அதுக்கென்னடி இப்ப.. உன்கூட.. இந்தக் கடிதமும் உட்கார்ந்து ஆடுச்சா..?"

எரிச்சலுடன் கேட்ட அனுராதாவிடம் "ஆமாம்" என்றாள் யாமினி..

"பக்கத்தில இந்தக் கடிதத்த வைச்சதை மறந்து போயிட்டு ஊஞ்சலாடினேன்ம்மா.."

"அடிப்பாவி..! அப்புறம் என்ன ஆச்சு..?"

"அப்பா வந்தாரா..? அவர்கூட வீட்டுக்குள்ள வந்துட்டேன்.."

"அப்பவும் கடிதத்த எடுத்துக்கிட்டு வரலையா..?"

"இல்லேம்மா.." கைகளை விரித்தாள் யாமினி..

இப்படி ஒரு மகளைப் பெற்று விட்டோமே என்று நொந்து நூலாகி விட்டாள் அனுராதா..

"அப்பாகூட சாப்பிட்டேனா.. அதுக்கப்புறமா கடைக்குப் போயிட்டேன்ம்மா.." கதை சொன்னாள் யாமினி..

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு.. பல்லைக் கடித்து தன்னைச் சமாளித்தபடி மகளிடம் தொடர்ந்து விசாரித்தாள் அனுராதா..

"கடைக்குப் போனவ திரும்பி வந்தப்ப.. ஊஞ்சல்ல இந்தக் கடிதம் இருந்ததைப் பாத்து எடுத்துட்டு வந்தியா..?"

"அதுவும் இல்லேம்மா.. நான்.. நேரா வீட்டுக்குள்ள வந்திட்டேன்.."

"வேற எப்பத்தாண்டி எடுத்த..?"

"இப்ப.. யதுவுக்காக கேட்டைத் திறக்கப் போனேன்ல.. அப்ப இந்தக் கடிதம் காத்தில பறந்து வந்து விழுந்துச்சு.."

கதையைக் கேட்ட அனுராதா..

"கடவுளே..!" என்று தலையில் கை வைத்தாள்..

அப்படி வெளிப்படையாக கடவுளை அழைக்க முடியாத பிரதாப்.. ஆற்றாமையுடன் மகளைப் பார்த்தார்..

"எனக்கு வந்து இப்படியாப்பட்ட மகளா பிறக்கனும்..? வெளியே அடிக்கிற மழையைப் பாத்தியாடா யது..! இந்தக் கடிகதம் இவ கையில தானா வந்து சேராம இருந்தா என்ன ஆகியிருக்கும்..?"

'தானா வந்து..'

அனுராதாவின் வார்த்தைகளில் யாமினியின் உடல் குலுங்கியது.. அவள் பயத்துடன் கடிதத்தைப் பார்த்தாள்.. அதே பயம் பிரதாப்பின் மனதிலும் வந்ததில்.. அவர்..

"விடுடி.." என்று அனுராதாவைப் பார்த்து அதட்டினார்..

அவள் உதட்டைக் கடித்தபடி கணவரின் பார்வையை சந்தித்தாள்.. அவரது விழிகளில் தெரிந்த எச்சரிக்கையில் பெருமூச்சு விட்டவள்..

"அது என்ன கடிதம்ன்னு பாருடா யது..! முக்கியமான கடிதமா இருந்து தொலைக்கப் போகுது.. இவ படுத்தற பாட்டைப் பத்திப் பேசினா இன்னைக்குப் பூராவும் பேசிக்கிட்டே இருக்க வேண்டியதுதான்.. தீரவே தீராது.." என்று சொன்னாள்..

"அதைச் சொல்லுங்க.. இவதான் பொழுது விடிஞ்சு பொழுது போகிற வரைக்கும் எல்லாத்தையும் தலையாலே தண்ணி குடிக்க வைக்கிறாளே.."

தோள்களைக் குலுக்கி அலுத்துக் கொண்ட யதுநந்தன் கையில் இருந்த கடிதத்தைப் பார்த்தான்..

"இவ பேருக்குத்தான் வந்திருக்கும்மா.." என்றான்..

"பிரிச்சுப்படி.." என்றாள் அனுராதா..

"அது டீஸன்ஸி இல்லேம்மா.." என்றான் யதுநந்தன்..

"டேய் அண்ணா..! சும்மா ஃபிலிம் காட்டாதே.. அது ஒன்னும் லவ் லெட்டர் இல்ல.." எரிச்சல்பட்டாள் யாமினி..

"உன்னை லவ் பண்ண.. 'துணிவே துணை'ன்னு இருக்கிறவன்தான் வந்து சேரனும்.. அந்த சந்தேகமெல்லாம் எனக்கு இல்லே.." மிதப்பாகச் சொன்னான் யதுநந்தன்..

"உனக்கும் அப்படித்தான்.. ஆகாயத்தில் தொட்டில் கட்டற மங்கை ஒருத்தி வந்து சேருவா.. சும்மா அலட்டிக்காம லெட்டரைப் பாரு.." பதிலடி கொடுத்தாள் யாமினி..

"உனக்கு வந்த லெட்ரைப் படிச்சுட்டாலும்.." முணுமுணுப்புடன் லெட்டரைப் பிரித்துப் படித்தான் யதுநந்தன்..

"என்னடா எழுதியிருக்கு.. இவ மெகாலுப் பிடிச்ச தனமா யார் வீட்டு கண்ணாடி ஜன்னலையாவது கல்லை எறிஞ்சு உடைச்சு வைச்சிட்டாளா..? அவங்க நஷ்டஈடு கேட்டு லெட்டர் அனுப்பியிருக்காங்களா..?"

அனுராதா அநியாயத்துக்கும் கவலைப் பட்டதில் பிரதாப்புக்கு வெறி வெறியாக வந்தது..

"அப்படி எம்புட்டு நஷ் ஈட்டை நீ கொடுத்திருக்க.." என்று அவர் மனைவியிடம் உஷ்ணமானார்..

"இதைப் பாருடா.."

யதுநந்தனின் ஆச்சரியக் கூவலில் கணவன் மனைவியின் கனல் வீசும் மோதல் தேங்கி நின்றது..

"என்னடா யது..?"

"ம்மா..! என்னால நம்பவே முடியலைம்மா.."

"எதைடா.."

"இவளுக்குப் போயி வேலை கிடைச்சிருக்கும்மா.. இது அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர்.."

"என்னது..?"

அனுராதா ஆச்சரியப்பட.. பிரதாப்பின் மனம் நிம்மதி கொண்டது.. இலக்கில்லாமல் சுற்றிக் கொண்டிருக்கும்

யாமினியின் மீது ஒரு தளை விழுவதில் அவர் நிம்மதி கொண்டார்.. யாமினியினி விழிகளில்..

'எப்படி இது நடந்தது..?' என்ற கேள்வி வந்தது..

அவளுக்கு வேலை கிடைத்திருக்கிறதா..?

"இவளுக்கு எவன்டா வேலை கொடுத்திருக்கான்..?"

முகவாயில் கை வைத்து அதிசயப் பட்டுப் போன மனைவியின் முதுகில் நான்கு மொத்துக்களை வைத்தால் என்ன என்ற கோபம் வந்தது பிரதாப்புக்கு.. யதுநந்தனோ..

"எவனோ ஒரு கேணைம்மா.. பாவம்.." என்று பரிதாபப் பட்டு.. பிரதாப்பின் வெறியை அதிகரித்து வைத்தான்..

"யாருன்னு பாருடா.."

"பாத்துட்டாப் போச்சு.."

யதுநந்தன் அனுப்பியது யார் என்று முகவரியைப் பார்க்க.. அதை அறிந்து வைத்திருந்த யாமினியின் மனம் உலைக்களனாக உணர்வுகளின் ஆளுகையில் கொதித்தது..

"ம்மா.."

ஆச்சரியங்களின் மொத்தக் கலவையாக யதுநந்தன் கூவினான்.. அதில் பரபரத்துப் போனாள் அனுராதா..

"என்னடா யது..?"

ஊர்வம்பைக் கேட்கும் பாவனையில் அவள் கூவியதில் பிரதாப் அவளை முறைத்தார்.. அவள் அதை சட்டைசெய்யாமல் மகன் என்ன சொல்லப் போகிறான் என்ற ஆவலுடன் அவன் முகம் பார்த்தாள்..

"ஏய்ய்..! இவ நம்ம பொண்ணுடி.." பிரதாப் தலையில் அடித்துக் கொண்டார்..

"அதுக்கென்ன இப்ப..? நீ சொல்லுடா யது.."

"இட்'ஸ் எ மெடிகல் மிராக்கிள்..!"

"என்னன்னுதான் சொல்லேண்டா.."

"என்னால நம்பவே முடியலைம்மா.."

"எதைடா நம்ப முடியலை.."

"அந்தக் கம்பெனியா இவளுக்கு வேலை கொடுத்திருக்கு..? ஐ கான்ட் பிலிவ் திஸ்.."

"எந்தக் கம்பெனிடா..?"

"தி கிரேட் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிம்மா.."

"டேய்ய்.. நிசமாவா சொல்ற..?"

"நான் ஏம்மா பொய் சொல்லப் போறேன்..? அந்தக் கம்பெனி அட்ரஸ்தான் ஃபிரம் அட்ரஸா இருக்குது.."

"ஃபிரம் அட்ரஸ் சரி.. டு அட்ரஸ் யார் பேருக்கு இருக்கு.."

"ஏம்மா.. இப்பத்தானே லெட்டர் இவ பேருக்கு வந்திருக்குன்னு சொன்னேன்.. என்ன ஆச்சு..? இவ காத்து உங்க மேலேயும் அடிச்சிருச்சா..?"

"என்னவோ போடா யது..! இன்னும் என்னால இதை நம்பவே முடியலை.."

"எனக்கும்தான் முடியலை.."

"எதுக்கும் நான் வலிக்குதான்னு கிள்ளிப் பாத்துக்கறேன்.."

அனுராதா கிள்ளியது தன்னையல்ல.. பிரதாப்பை..

"ஸ்ஆ.. பிசாசே..! ஏண்டி கிள்ளறே..?" என்று அவர் அலறியதில்..

"இது கனவில்லடா யது.. நனவுதான்.." என்று அவள் உறுதிபடுத்திக் கொண்டாள்..

"ஆஹா..! உங்களோட அறிவே அறிவு..!" மனம் விட்டுப் பாராட்டினான் யதுநந்தன்..

"உனக்குத் தெரியறது மத்தவங்களுக்குத் தெரியலையே.. அவங்களுக்கு.. எதிர்வீடும்.. பக்கத்து வீடும்தானே தெரியுது.."

அனுராதா பெருமூச்சு விட்டதில் அவள் கிள்ளியதின் வலி மறந்து போனவராக அரண்டு போனார் பிரதாப்..

"ஏண்டா யது..? அந்தக் கம்பெனிக்கு என்ன மறை கழண்டு போச்சா..? எம்மாம் பெரிய கம்பெனி அது.. அதுல போயி இவளுக்கு வேலை கொடுத்திருக்காங்களா..? ஏண்டா இப்படி..?"

"என்னம்மா செய்யறது..? அவன் யோகம் அப்படி.."

"இதுவரைக்கும் அந்தக் கம்பெனி உச்சத்தில் இருக்குது.."

"இவ போய் சேர்ந்த பின்னால என்ன கதிக்கு ஆளாக்கப் போறாளோ.."

"விடுடா.. அவன் விதி அதுன்னா யாரு என்ன செய்ய முடியும்..?"

அனுராதா விளையாட்டாக சொன்னதில் யாமினியின் மனம் அதிர்ந்தது..

அத்தியாயம் - 50

உன்னை நான் கண்டது..

விதி வகுத்த விதியாலா..?

காற்றோடு கலந்து வரும்..

எனது குரல் கேட்கிறதா..?

'விதி..!'

யாமினி உள்ளம் அதிர யதுநந்தனின் கையிலிருந்த அப்பாயின்ட்மெண்ட் ஆர்டரைப் பார்த்தாள்..

அவளது மனம் படபடத்து ஆடியதைப் போல.. கடிதமும் படபடத்து ஆடி வைத்தது.. அதை உணராத யதுநந்தன்..

"உன்னையும் நம்பி ஒரு பெரிய கம்பெனி வேலை கொடுத்திருக்குங்கிற ஷாக்கில இருந்து வெளியே வரவே முடியலை போ.." என்று அலுத்துக் கொண்டான்..

"ஏண்டா..? என் பெண்ணுக்கென்ன..? இவ அறிவுக்கும் திறமைக்கும் ஓஹோன்னு வருவா பாரு.." பிரதாப் மகளின் தலை கோதினார்..

"வந்தாச் சரிதான்.." யதுநந்தன் யாமினியிடம் கடிதத்தை நீட்டினான்..

அதைத் கைநீட்டி வாங்கிக் கொண்ட யாமினியின் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வு ஏற்பட்டது.. விரல்கள் நடுங்க.. அந்தக் கவரைப் பிரித்துப் படித்தாள்..

யதுநந்தன் சொன்னது உண்மையாக இருந்தது.. சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனியில் அவளுக்கு எம்.டியின் பெர்சனல் செக்கரட்டரியாக வேலை கொடுக்கப் பட்டிருந்தது..

யாமினியின் புருவங்கள் வளைந்து.. நெளிந்து யோசித்தன.. அவள் மனதில் எச்சரிக்கை உணர்வுடன் கூடிய தாமோதரனின் முகம் வந்தது..

'எப்படி இந்த வேலையை எனக்கு கொடுக்க விட்டான்..?'

இண்டர்வியூ சமயத்தில் அவளுடன் சித்தார்த்தன் பேசி விடக்கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டு அவனைத் தடுத்த தாமோதரனின் நினைவில் நெற்றியில் ஒற்றை விரலால் தட்டியபடி யோசித்தாள் யாமினி..

"ரொம்பத் தட்டாதே.. ஓட்டை விழுந்திரப் போகுது.." கிண்டலுடன் சொன்னான் யதுநந்தன்..

"இவ எதுக்குடா இந்த அளவுக்கு யோசிக்கிறா..?" ஆச்சர்யத்துடன் கேட்டாள் அனுராதா..

"அதானே..? இவளுக்கு வேலை கொடுத்தவனே யோசிக்காம கொடுத்து வைச்சிருக்கான்.. அடிச்சது ஜாக் பாட்டுன்னு இவ ஓடிப்போயி வேலையில ஜாயின் பண்றதை விட்டுட்டு நெத்தியில சுத்தியலால் தட்டிக்கிட்டு இருக்கா.."

யதுநந்தன் சொன்னதில் தூக்கிவாரிப் போட்டவராக மகளைப் பதட்டத்துடன் பார்த்து வைத்தார் பிரதாப்..

"சுத்தியலால தட்டிக்கிட்டு இருக்காளா..?"

அவரின் பதட்டத்தில் அனுராதா தலையில் அடித்துக் கொண்டாள்..

"யாமினி ஒத்தை விரலால நெத்தியில ஓட்டை போட்டுக்கிட்டு இருந்ததைத்தான் இவன் இந்த லட்சணத்தில சொல்லி வைக்கிறான்.."

"அவ்வளவுதானா..? நான் பயந்தே போயிட்டேண்டி அனு.."

"எரிச்சலைக் கிளப்பாதீங்க.. அதுக்காக இப்படியா இவ கையில சுத்தியல் இருக்கான்னு தேடுவீங்க..?"

"ஹி.. ஹி.."

பிரதாப் அசடு வழிய சிரித்ததில் அனுராதா இமைக்காமல் அவரைப் பார்த்து வைத்தாள்..

"தேவையாப்பா..?" என்று கேட்டு வைத்தான் யதுநந்தன்..

"ஹி..ஹி.. இல்லைடா யது.." அவனுக்கு விளக்கம் சொல்ல முயன்றார் பிரதாப்..

"வேண்டாம்ப்பா.. ஆளை விடுங்க.." கறாராக சொல்லி விட்டான் அவன்..

"ஏண்டா..?"

பிரதாப்பின் ஒற்றை வார்த்தைக் கேள்வியில் ஒரு கோடி ஆதங்கங்கள் புதைந்திருந்தன..

"என்னத்த 'ஏண்டா..?' நீங்க சும்மா இருந்தாலாவது அம்மா சமாதானமாகியிருப்பாங்க.. இப்படி சகிக்க மாட்டாம சிரிச்சு

வைச்சா இருக்கிற கோபமும் கூடி வைக்காதா..?"

யதுநந்தனின் கேள்வியில்..

'என் சிரிப்பு அம்புட்டு மட்டக் கேவலமாக இருந்து வைச்சுச்சு..?' என்ற கவலையில் ஆழ்ந்தார் பிரதாப்..

அவரது கவலையைக் கண்ட அனுராதாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது..

"வீட்டுக்கு ஒரு ஆளு போதும்டா யது.. உங்கப்பாவை மககூட கூட்டுச் சேர வேணாம்ன்னு சொல்லி வை.." எரிச்சலாகச் சொன்னாள்..

"மககூட கூட்டுச் சேராம.. வேற யாருகூட கூட்டுச் சேர்றது..?"

இயல்பாக கேட்டபடி யதார்த்தமாக யதுநந்தனை அவர் பார்த்து வைக்க.. அவன்..

"அப்பா வேண்டாம்.." என்றான்..

"எதைடா வேண்டாம்ங்கிற..?"

"உங்க கூட்டைத்தான்.. ஆல்ரெடி அம்மாகூட நான் கூட்டணி போட்டாச்சு.. ஸோ.."

"ஸோ..?"

"உங்க கூட்டணியை யாமினி கூடவே போட்டுக்கங்க.."

இப்படிச் சொல்லும் மகனை நாலு மொத்து மொத்தினால் என்ன என்றிருந்தது பிரதாப்புக்கு.. அது முடியாது என்பதில் அவரது வழக்கமான..

"ஏண்டா..?" என்ற பரிதாபகரமான கேள்வியை கேட்டு வைத்தார்.. அதில் மூட்-அவுட்டாகிப் போன யதுநந்தன்..

"முடியல.. அம்மா.. நைட்டுக்கு டிபன் போடற உத்தேசமிருக்கா இல்லையா..?" என்று அனுராதாவின் பக்கமாக திரும்பி விட்டான்..

"இல்லேன்னா என்னடா செய்வ..?" என்று அனுராதா பதிலுக்கு கேட்டதில் அவள்மீது பொறாமையாகிப் போனார் பிரதாப்..

'இவ மட்டும் எப்புடி இப்புடி டகால்ன்னு பதில் கொடுக்கிறா..? என்னால அது முடிய மாட்டேங்குதே..' புதுக்கவலையில் அவர் ஆழ்ந்து போக..

"ஹீம்.." என்று பெருமூச்சு விட்டாள் அனுராதா..

"என்னம்மா..?"

"என் விதியை நினைச்சுப் பெருமூச்சு விட்டேண்டா.. நீ வா.. சாப்பிடலாம்..."

அனுராதா மகனை அழைத்ததில் பிரதாப்புக்கு பசிவந்து விட்டது..

"நானும் வரட்டுமா அனு..?" என்றார்..

"வாங்க.. கல்லைத் தூக்கிப் போடறேன்.." என்று அவரை அரள வைத்தாள் அவள்..

"என்னது..?! கல்லைத் தூக்கிப் போடப் போறியா..? யார் தலையில..? என் தலையிலயா..?" பிரதாப் அரண்டு போனார்..

அதற்கு அனுராதா எதற்காக அவள் தலையில் அவளே அடித்துக் கொள்கிறாள் என்றுதான் அவருக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

"எனக்குன்னு வந்து வாய்ச்சிருக்காரே.. கடவுளே..! அடுப்பில தோசைக் கல்லைத் தூக்கிப் போடப் போறேன்னு சொன்னா..! இவரு பாட்டுக்கு எதையோ சொல்லி வைக்கிறாரு.. கேட்டயாடா யது..?"

"இந்தக் கொடுமையையெல்லாம் கேக்காம டிபனைக் கொட்டிக்கிட்டு ரூமுக்குள்ள போய் விழுந்துரலாம்ன்னு தான் அடிச்சுக்கிட்டேன்.. எங்கே..? நீங்க காலாகாலத்தில டிபனைக் கண்ணில காட்டினாத்தானே..?"

"அதுக்குத்தானடா கல்லத் தூக்கப் போனேன்..?"

"மறுபடியும் கல்லா..? ம்மா.. நீங்க ஏன் தோசைக் கல்லில இருந்து நான்-ஸ்டிக் வகையறாவுக்கு மாறக் கூடாது..?"

"அதுசரி.. உங்களுக்காக நான் மாறனுமா..? என்ன கழுதைக்கு என்னை மாறச் சொல்ற..? அதுக்குப் பதிலா நீங்க மாறப் பாருங்கடா.."

பொத்தாம் பொதுவில் 'டா..' போட்டுவிட்டு அனுராதா அவளுடைய களமான அடுப்படியை நாடிப் போய் விட்டாள்.. பிரதாப் மகனைப் பார்த்தார்.. பதிலுக்கு அவன் இனம் புரியாத வழக்கமான பார்வையை பார்த்து வைத்து அவரைக் கலங்கடித்தான்.

"ஏண்டா யது.."

"என்னப்பா..?"

"இப்ப உங்க அம்மா 'பாருங்கடா'ன்னு சொல்லிட்டுப் போறாளே.. அதை உன்னை மட்டும்தானே 'மீன்' பண்ணிச் சொல்லிட்டுப் போறா..?"

கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும்.. கிழவியைத் தூக்கி மணவறையில் வை என்ற கதையாக.. வீட்டின் அத்தனை நடப்புகளையும் உடப்பினில் போட்டு விட்டு பிரதாப்

பட்ட கவலையில்..

"பாவம் எங்கம்மா.." என்றான் யதுநந்தன்..

"யாரு..? உங்கம்மாவா பாவம்..? இத நீ மட்டும் தாண்டா சொல்லி வைப்ப.. எதனால உங்கம்மாவ பாவம் பார்க்கிற..?"

"அவங்க கல்யாண விசயத்தில அவங்களப் பெத்தவங்க அவசரப் பட்டுட்டாங்கன்னு தோணுதுப்பா.."

அமர்த்தலாக வெடி குண்டை வீசி வைப்பதில் யதுநந்தனுக்கு நிகர் அவன் மட்டும்தான்..

"என்னது..???" என்று அதிர்ந்து போன பிரதாப்பை லட்சியமே செய்யாமல்..

"அம்மா..! டிபன் ரெடியா..?" என்று குரல் கொடுத்தபடி டைனிங்ஹாலுக்கு போய் விட்டான்..

'இவனுக்கு மட்டும் எப்புடி இப்படியாப்பட்ட சிந்தனையா வந்து தொலைக்குது..?'

பிரதாப்புக்கு வந்த பசி ஓடி விட்டது..

யாமினியின் கையிலிருந்த கடிதம் கனத்தது.. பெரும் பாறாங்கல்லை சுமந்து கொண்டிருப்பதைப் போல உணர்ந்தாள் அவள்.. அந்தக் கடிதத்தின் பொருள் அவளுக்கு அச்சத்தை அளித்தது.. அவளது மனக் கண்ணில் சித்தார்த்தனின் உருவம் எழுந்து நின்றது..

'நீ யார்..? நான் யார்..?'

அவள் இமைமூடி கேள்வி கேட்டாள்..

'உன்னைப் பார்த்தவுடன் எதற்காக என் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வு ஏற்பட்டது..?'

அடுத்த கேள்விக்குப் பதிலாக அவளது முதுகில் ஓர் மொத்துத்தான் விழுந்தது.. வலியில் கண்திறந்து பார்த்தாள்.. அனுராதா கோபத்துடன் நின்றிருந்தாள்..

"முழிச்சுக்கிட்டே தூங்க ஆரம்பிச்சுட்டியா..? ஏண்டி படுத்தற..? பகல்லதான் பகல்கனா காணனும்.. ராத்திரியிலே கொட்டிக்கிட்டுத் தூங்கப் போயிரனும்.. ம்ஹீம்.. உனக்கும் ஒருத்தன் வெத்தலை பாக்கு வைச்சு அழைச்சு வேலை கொடுக்கிறான் பாரு.. அவனைச் சொல்லனும்.. அங்கே போயி வேலை செய்யப் போறியோ.. இல்ல.. இப்படி முழிச்சுக்கிட்டே தூங்கி வைச்சு.. சீட்டைக் கிழிக்க வைக்கப் போறியோ.."

அனுராதாவின் புலம்பலில் அரண்டு போனவளாக யாமினி எழுந்து நிற்க.. ஈரக்கையை டவலால் துடைத்தபடி அங்கே வந்த யதுநந்தன்..

"கன்பர்மா அவங்க சீட்டைக் கிழிக்கப் போகிறது தான் நடக்கப் போகுதும்மா.." என்று அருள் வாக்கை சொல்லி வைத்தான்..

யாமினிக்கு கோபம் வந்து விட்டது..

"உனக்கு எத்தனை நல்ல புத்தி..!" என்று பாய்ந்தாள்..

"உன்னைவிட நல்ல புத்திதான்.." அவன் பதிலுக்கு யாமினியின் மூக்கை உடைத்தான்..

"ஹலோ பிரதர்..! கவர்ண்மென்ட் சர்வீஸ்ல இருக்கோம்கிற ஆணவத்தில ஆடாதே.."

"உன்ன கவர்ன்மெண்ட் சர்வீஸ்க்கு வர வேணாம்ன்னு யார் சொன்னது..? நான் சொன்னேனா..? ஒழுங்கா சர்வீஸ் கமிசன் பரிட்சை எழுதி வேலையைப் பிடிக்கத் துப்பில்ல.. பேச வந்திட்டா.. நீயும் கவர்ண்ட்மென்ட் வேலையில சேர்ந்துக்கிட்டு டிஸ்கோ ஆடேன்.. யாரு வேண்டாம்ன்னு சொன்னது.."

"ஏய்ய்..! அண்ணனைப் போல பேசுடா.."

"நீயும் தங்கச்சியைப் போலப் பேசுடி.. என் வேலையைப் பார்த்தா கண்ணு வைக்கிற..?"

"இந்த கண்ணு, காது வைக்கிற வேலையை யெல்லாம் நீதான் செய்வ.. எனக்குச் சுட்டுப் போட்டாலும் அது வராது.."

"உனக்கு எதுதான் வந்துச்சு..? ராத்திரி, பகல்ன்னு பாக்காம கடலைச் சுத்தி உலா வருவியே.. அது மட்டும் தான் உனக்கு வரும்.. உன்னப்பத்தித் தெரியாம.. உனக்கும் ஒருத்தன் வேலை கொடுத்திருக்கான் பாரு.. அவனைச் சொல்லனும்.."

யதுநந்தனின் வார்த்தையில் யாமினி அதிர்ந்து நின்றாள்.. யதுநந்தன் அறியாத.. அவளறிந்த உண்மை அவள் நெஞ்சத்தை தாக்கியது..

அவளைப் பற்றிச் சித்தார்த்தன் அறிவானே.. அறிந்தும் ஏன் வேலையைக் கொடுத்திருக்கிறான்..?

யதுநந்தனுடன் போட்டுக் கொண்டிருந்த சண்டையை மறந்து விட்டு அவள் இமைமூடி நெற்றியில் கை வைக்க..

"போச்சுடா.. இம்புட்டு நேரமும் உட்கார்ந்துக்கிட்டே தூங்கி வைச்சவ.. இப்ப நின்னுக்கிட்டே தூங்க ஆரம்பிச்

சுட்டாளா..?" என்றான் யதுநந்தன்.

"நான் ஒன்னும் தூங்கலை.." யாமினி படக்கென்று கண்களைத் திறந்தாள்..

"அத இப்பச் சொல்லு.. யம்மா.. இவளக் கொஞ்சம் 'தா'க்காட்டி கூப்பிட்டுக்கிட்டுப் போங்கம்மா.. நான் தூங்கப்போகனும்.."

"தூங்கப் போறவன் எதுக்காக என்கிட்ட வாயைக் கொடுத்து வம்பைக் கட்டியிழுக்கனும்னு நீங்களே கேளுங்கம்மா.."

"அம்மா.. இவள வாயை மூடச் சொல்லுங்க.."

"முதல்ல இவன் வாயை மூடச் சொல்லுங்கம்மா.."

இரண்டு பேரும் கத்திக் கொண்டிருக்க.. இடையில் வந்த பிரதாப் அவர்களின் தோள்களைத் தட்டி..

"அக்கட சூடுங்க புள்ளைகளா.." என்றார்..

இருவரும் ஒரே திசையில் பார்த்தார்கள்.. அங்கே ஹாயாக சோபாவில் தலையணையைப் போட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள் அனுராதா..

"என்னப்பா இது..? இப்பத்தானே என்னைச் சாப்பிடக் கூப்பிட்டாங்க..? ஏண்டா யது.. உனக்கும் தெரியுமே.."

"அதான..?"

"உங்களுக்கு மட்டுமில்ல.. எனக்கும் அது தெரியும்.. என்னையும்தான அவ சாப்பிடக் கூப்பிட்டா.."

"அப்புறம் எப்புடி படுத்துத் தூங்கறாங்க.. அதையும் பெட்ரூமில் தூங்காம ஹால் சோபாவில தூங்கறாங்களே.."

குழம்பிப் போன யாமினிக்கு பிரதாப் விளக்கம் சொன்னார்.. அதைக் கேட்டதும் யதுநந்தன் விழுந்து.. விழுந்து சிரித்தான்..

காற்றோடு உன் அழைப்பு வந்து..

என் காதுகளில் ஒலிக்கின்றது..

கடிதத்தை அனுப்பி விட்டாய்..

கன்னி மனம் கலங்குகிறதே..

யாமினியையும்.. பிரதாப்பையும் சாப்பிட அழைத்த அனுராதா அதை விட்டு விட்டு ஹால் சோபாவில் ஹாயாக படுத்துறங்குவதன் மர்மம் என்ன என்பதை பிரதாப் பிட்டுப் பிட்டு வைத்தார்..

"என்னத்தடா சொல்ல..? பசி வயித்தைக் கிள்ளுது.. பேசாம உன் கூடவாவது கொட்டிக்க உக்காந்திருக்கலாம்.. அதை விட்டுட்டு யாமினி பாவம்.. தனியாச் சாப்பிடனும்.. இல்லேன்னா அனுகிட்ட நாலு திட்டை வாங்கிக் கட்டிக் கிட்டே சாப்பிடனும்னு நினைச்சு.. மககூட சாப்பிடலாம்ன்னு தேங்கி நின்னேன் பாரு.. என்னச் சொல்லனும்.. இனி இவள வேற எழுப்பியகானும்.."

"எழுப்பறது இருக்கட்டும்ப்பா.. எதுக்காக இங்கே படுத்துத் தூங்கறாங்க..? அதச் சொல்லுங்க.. தூக்கம் வந்தா.. பெட்ரூமில போய் தூங்க வேண்டியதுதானே..?"

"ஏம்மா.. நீ எப்பேர்பட்ட கருணையுள்ளம் கொண்ட பொண்ணுன்னு நான் நினைச்சுக்கிட்டு இருக்கேன்.. நீ என்னடான்னா பெத்த தாய வெறும் வயித்தோடு தூங்கச் சொல்றியே.. அவ சமைச்ச டிபன நாமெல்லாம் மொக்கிட்டு.. நிறைஞ்ச வயிறோட தூங்கப் போகனும்.. அவ மட்டும் பந்திய வைச்சுட்டுப் பட்டினியாத் தூங்கனும்.. அப்படித்தான..? இதத்தான் ஒரு பாட்டில பந்தி வைச்ச குடும்பத்தலைவி.. பட்டினியாத் தூங்கப் போனதப் போல மனசு நிறைஞ்சிருக்குன்னு பாடி வைச்சிருக்காங்க போல.."

பிரதாப்பின் ஏற்ற இறக்கமான பேச்சில்..

"வாவ்..!" என்றான் யதுநந்தன்..

"சூபர்ப்.." என்று பாராட்டினாள் யாமினி..

"செம ஸ்பீச்சுப்பா.. ஆனா எல்லாமே வேஸ்ட்.. அம்மாவத் துங்க வைச்சிட்டு அவங்க தலைமாட்டில நின்னு தண்ணியக் கூடக் குடிக்காம உணக்கையா ஒரு முழ நீளத்துக்கு வசனம் பேசற கழுதைக்கு.. அவங்க முழிச்சிருக்கப்ப ஒரே வார்த்தையில பாராட்டித் தொலைக்காமில்ல..? உங்களுக்கு சண்டை தீர்த்து விடற வேலையாவது எனக்கு மிச்சமாகுமில்ல..?"

"நான் என்ன பேசனும்னாடா பேசித் தொலைக்கிறேன்..? தானா வந்து கொட்டுதுடா மகனே..!"

"அந்தக் கொட்டற அருவி.. அம்மா முழிச்சிருக்கப்ப வந்து கொட்டாதா..?"

"வந்து தொலைக்காதே.. அதான பிராப்ளமே.. உங்க அம்மா முன்னால.. ஒரு வார்த்தை என்ன.. ஒரு எழுத்துக்கூட வந்து சேராது.. ம்ஹீம்.."

"இனிப் பெருமூச்சு விட்டு என்ன பண்ண..? நடந்தது நடந்திருச்சு.."

யதுநந்தன் ஆறுதல் சொல்லிய விதத்தில் எது நடந்தது என்று அரண்டு போனார் பிரதாப்.. ஒருவேளை அனுராதா தூங்கிக் கொண்டிருப்பதைத்தான் அப்படிச் சொல்லித் தொலைக்கிறானோ என்று அவன் முகத்தை உற்றுப் பார்த்தார்.. அனுராதாவின் பக்கம் அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையென்பதில் அப்படி யெல்லாம் இல்லை என்று கண்டு கொண்டவராய்..

'இவன் எதைச் சொல்றான்..?' என்று குழம்பிப் போன பிரதாப்..

"என்னடா நடந்திருச்சு..?" அவனிடமே விளக்கம் கேட்டார்..

"உங்க கல்யாணத்தைத்தான் சொல்றேன்ப்பா.." அவன் அமைதியாக அணுகுண்டை வீசி வைத்தான்..

"டேய்ய்ய்ய்...."

அதற்கு மேல் மகனை என்னத்தைச் சொல்லித் திட்டுவது என்று புரியாமல் திகைத்து நின்றார் பிரதாப்..

"பின்ன என்னப்பா.. அம்மா தூங்கிக்கிட்டு இருக்கிறதைப் பத்திக் கேட்டா.. நீங்க அட்டாச்மெண்டா டயலாக் பேசிக்கிட்டு இருக்கீங்க.. ஒரு மனுசன் காலயில இருந்து நைட் வரைக்கும் ஆபிஸ்ல குப்பை கொட்டிவிட்டு வர்றானே.. அவனத் தூங்க விடுவோம்ன்னு கொஞ்சமாவது நினைச்சுப் பாக்கறீங்களா..? இந்தா.. நிக்கிறாள்ல.. இவளுக்குத்தான் தூக்கம் வந்து தொலைக் காது.. ராக்கோழி மாதிரி.. ராத்திரி முழுக்க தூங்காம உலாத்திக்கிட்டு இருப்பா.. நான் அப்படியில்லப்பா.. சேவல்..! பொழுதோட தூங்கப் போனாத்தான்.. பொழுது விடியறப்ப.. 'கொக்கரக்கோ'ன்னு கூவி எழுப்பிட்டு... அந்த கிரெடிட்டையும் கோழி கூவிருச்சுன்னு கோழிக்கு விட்டுக் கொடுத்துட்டு பொழப்பப் பாக்க ஓடியாகனும்.."

"இப்ப எதுக்குடா மூச்சு விடாம முழ நீளத்துக்கு டயலாக் பேசி வைக்கிற..?"

"இந்தக் கொடுமையில இருந்து தப்பிக்கவாவது அம்மா எதுக்காக இங்க படுத்துத் தூங்கறாங்கன்னு நீங்க சொல்லிற மாட்டிங்களாங்கிற பேராசைதான்ப்பா.. வேறென்ன..?"

இப்படியாப்பட்ட வியாக்கினத்தை வேறெங்கும் கேட்டிராத பிரதாப்.. மகனின் கேள்விக்குப் பதில் சொன்னால்தான் தப்பிக்க முடியும் என்ற நிலைமைக்குத் தான் தள்ளப்பட்டு விட்டதை உணர்ந்தவராக பதில் சொல்ல வாய் திறந்தார்.. அதற்குள் பொறுமை காக்க முடியாத யதுநந்தன்..

"இப்ப சொல்லப் போறிங்களா இல்ல.. லாரி லாரியா டயலாக்க கொட்டித் தள்ளட்டுமா..?" என்று மிரட்டி வைத்தான்..

"வேணாம்டா.. வேணாம்.."

அலறிவிட்ட பிரதாப்.. படுத்துறங்கும் அனுராதா என்ன சொல்லி விட்டு உறங்கப் போனாள் என்பதை விலாவாரியாக விளம்பி வைத்தார்..

"இதுக போடற சண்டை இன்னைக்குள்ளே முடியாதுங்க.. நானும் பொழுது விடிஞ்சு பொழுது போகிற வரைக்கும் வேலை.. வேலைன்னு ஓய்ஞ்சு போயிருக்கேன்.. இதுக சண்டையைத் தீத்து வைக்கவும் எனக்குத் தெம்பில்ல.. இதுக சண்டை தீருகிற வரைக்கும் காத்துக்கிட்டு நிக்கிறதுக்கு என் காலுக்கும் தெம்பில்ல.. நான் இப்படிக் கட்டயச் சாய்க்கிறேன்.. பொழுது விடியறதுக்குள்ள இதுக சண்டையை முடிச்சிருச்சுகன்னா என்ன எழுப்பி விடுங்க.. எழுந்திருச்சு.. உங்களுக்கும், உங்க மகளுக்கும் டிபனைப் போட்டுட்டு.. நானும் கொஞ்சம் கொட்டிக்கறேன்.."

"இல்லேன்னா..?"

"விடியக்கால காபியப் போட்டு அட்டெண்டென்ஸில சைன் பண்ணிட்டு நாளைய வேலைக்கு பிள்ளையார் சுழிய போட வேண்டியதுதான்.. வேற வழி..?"

"அப்ப நைட்டு டிபன்..?"

"அம்பேல்தான்.."

"எனக்குப் பசிக்குதேடி.."

"எனக்கு மட்டும் பசிக்கலையா.. உங்களுக்குத்தான் வயிறிருக்கு.. எனக்கு இல்லையா..? உங்களுக்கெல்லாம் சமைச்சு வைச்சு சாப்பிடக் கூப்பிட நானிருக்கேன்.. எனக்கு யாரிருக்கா..?"

அனுராதா ஹாலின் சோபாவில் ஹாயாக சுருண்டு படுத்துத் தூங்கி விட்டாள்.. பசிக்கும் வயிறோடு.. மகனும் மகளும் எப்போது சண்டையை முடிப்பார்களோ என்று பிரதாப் காத்துக் கொண்டிருக்கிறார்..

"இதாண்டா நடந்தது.."

என்னவோ சினிமாக் கதையில் வரும் பிளாஷ் பேக்கைச் சொல்லுவதைப் போல.. விட்டத்தைப் பார்த்தபடி பிரதாப் சொல்லி முடிக்க.. யதுநந்தன் விழுந்து.. விழுந்து சிரிக்க ஆரம்பித்தான்..

"இந்த அம்மா இருக்காங்களே.. ஹா.. ஹா.."

"போதும்டா.. பல்லு சுளுக்கிக்கப் போகுது.."

"விடு யாமினி.. அவன் சிரிச்சாச் சிரிச்சுட்டுப் போகட்டும்.. இதுக்கு வேற கேள்வியக் கேட்டு சண்டைய ஆரம்பிச்சு வைச்சிறப்போறான்.. பசிக்குது.."

"இந்த அப்பா அதை விட.. ஹா.. ஹா.."

"நான் என்னத்தடா பண்ணினேன்..?"

"அப்பா..! நீங்க விட்டத்தப் பாத்துக்கிட்டு.. கண்ணுக்கு முன்னாடி கொசுவர்த்திச் சுருளப் போல வளையம்.. வளையமா தெரியறதைப் போல பிலிம் காட்டிக்கிட்டு பிளாஸ்பேக்கச் சொன்னீங்க பாருங்க.. ப்ப்பா..! சான்ஸே இல்லப்பா.. ஹா.. ஹா.."

"இவன் கிடக்கிறான் விடுங்கப்பா.. நாம அம்மாவை எழுப்பலாம்.. பாவம்.. சாப்பிடாமத் தூங்கிக்கிட்டு இருக்காங்க.."

அவள் பசியையும்.. பிரதாப்பின் பசியையும் மறந்து.. தாயின் பசியை மட்டுமே நினைவில் கொண்ட மகளின் காருண்யத்தில் மனம் நெகிழ்ந்து போனார் பிரதாப்..

"நீ தங்கம்டா கண்ணம்மா.." என்றார்..

"அவதங்கம்ன்னா.. நானென்ன பித்தளையா..?" யதுநந்தன் யாமினியை மறந்து பிரதாப்புடன் சண்டைக்கு வந்தான்..

யாமினி எழுப்பி விட்டதினால் சின்னஞ்சிறு கொட்டாவியோடு தூக்கம் கலைந்து எழுந்த அனுராதா..

"நீ வைரம்டா கண்ணா.." என்றாள்..

"அது.."

"யது..!"

"ஓகே.. ஓகே.. இன்னைக்கு அளப்பறய இத்தோட மூட்டை கட்டிட்டு நான் தாய்ச்சுக்கப் போறேன்.. குட்நைட்.."

"தாய்ச்சுக்கப் போறானா..? என்னடி அனு..?"

"தூங்கப் போறதைத்தான் அப்படிச் சொல்லிட்டுப் போறான்.. விடுங்க.. இதுக்கு அவன்கிட்ட விளக்கம் கேட்டா.. விடிய விடிய சொல்லி வைப்பான். உங்களுக்கு என்ன வேணும்..? விளக்கமா..? டிபனா..?"

விளக்கம்தான் என்று சொல்ல பிரதாப்புக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது..? அவர் சமர்த்தாக டிபனை கை காட்டினார்..

பிரதாப்பின் இல்லம் அமைதியாக துயில் கொண்டிருந்தது.. பகல் முழுவதும் பானிபட் போர்க்களம் போல காட்சியளித்த வியட்நாம் வீடா இது என்று ஆச்சரியப்படும் அளவிற்கு அங்கே அமைதி நிலவியது.. தனது அறையில் தூக்கம் வராமல் விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்த யாமினிக்கு மட்டும் மனதில் அமைதி வரவில்லை.. புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள்.. அவள் மனதில் சித்தார்த்தனின் உருவம் வந்து நின்றது..

"யார் நீ..?" வாய் விட்டு வினவினாள்..

'உன்னைப் பார்த்தவுடன் எனக்குள்ளே எதற்காக ஓர் வெள்ளம் கரை புரண்டு ஓட வேண்டும்..?'

தாள முடியாத தவிப்புடன் கண்களை மூடிக் கொண்டாள்.. தாமோதரனைப் பற்றி நினைத்துக் கொண்டாள்.. யாமினியை வேலைக்குச் சேர்க்கக் கூடாது என்று அவன் பிடிவாதம் பிடித்ததை நினைத்துப் பார்த்தாள்..

'எப்படி அவனை மீறி எனக்கு இந்த வேலை கிடைச்சிருக்கு..?'

அவளால் நம்ப முடியவில்லை.. சித்தார்த்தன் அந்தக் கம்பெனியின் எம்.டி. அவனையே கேள்வி கேட்டு கட்டுக்குள் வைத்திருக்கும் பவரில் தாமோதரன் இருந்ததைத்தான் அவள் கண்கூடாகக் கண்டிருந்தாளே..

'இந்த வேலையை எனக்குக் கொடுக்கக் கூடாதுன்னு என் முன்னாலேயே வழக்கடிச்சவன்தானே அவன்..!'

யாமினிக்கு தன்னிரக்கம் வந்தது.. அவளை வேலைக்குச் சேர்க்கக் கூடாதென்று அவள் முகத்துக்கு நேராகவே சொல்கின்ற துயரத்தைக் காது கொடுத்துக் கேட்ட பின்பும் அந்த வேலைக்குப் போய்த்தான் ஆக வேண்டுமா என்று அவளின் சுயமரியாதை அவளை கேள்வி கேட்டது..

'போகாமல் இருந்து விடலாம்.. இந்த வேலை வேணாம்ன்னு வீட்டில் சொல்லி விடலாம்.. அப்பாவுக்கு வருத்தமாத்தான் இருக்கும்.. ஆனாலும் என்னை அவர் ஃபோர்ஸ் பண்ண மாட்டார்.. அம்மா கோபப் படுவாங்க.. சொல்லிக் காட்டுவாங்க.. ஆனாலும் அவர்களும் என்னைக் கட்டாயப்படுத்த மாட்டாங்க.. யது கிண்டல் செய்வான்.. உன்னால எல்லாம் முதுகு வளைய வேலை செய்ய முடியாதுன்னு ஹர்ட் பண்ணுவான்.. ஆனாலும் அவனும் என்னை இந்த வேலைக்குப் போயே ஆகனும்னு சொல்ல மாட்டான்..'

இலக்கிலாமல் எதையோ தேடிக் கொண்டிருக்கும் தெளிவற்ற சிந்தனையைக் கொண்டவள் என்று அனுராதாவாலும் யது நந்தனாலும் கூறப்படும் யாமினி

மிகத் தெளிவாக யோசித்துக் கொண்டிருந்தாள்..

சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸில் கிடைத்திருக்கும் அந்த வேலையை மறுத்தால் ஏற்படப் போகும் பின் விளைவுகளை சீர் தூக்கிப் பார்த்து சிந்தித்தது அவள் மனம்..

எப்படி யோசித்தாலும்.. அந்த வேலை வேண்டாம் என்ற முடிவை அவள் எடுத்து விட்டால் அவளது குடும்பத்தில் தடை ஏதும் சொல்ல மாட்டார்கள் என்ற பதிலே அவளுக்குள் கிடைத்தது.. அவளது குடும்பம் அப்படிப்பட்டது.. சொல்லிக் காட்டினாலும் சிறகுகளுக்கு அடியில் அவளைப் பொத்தி வைத்து பாதுகாக்கும் அம்மா.. தலையால் குட்டு வைத்து வம்புக்கு இழுத்து கிண்டல் செய்தாலும்.. அவளுக்காக எதையும் செய்யத் தயங்காத அண்ணன்.. அவளது மனம் நோக பேசியறியாத அப்பா என்று வரங்கள்

சொந்தங்களாகக் கிடைக்கப் பெற்ற பாக்கியசாலி அவள்.. அந்த வேலையை மறுக்க அவளுக்கு தடையேதும் இல்லை..

'ஆனால்..?'

இந்தக் கேள்விதான் அவளை இமை மூட விடாமல் அலைக்கழித்தது.. கட்டிலுக்கு அருகிலிருந்த அப்பாயிண்ட் மென்ட் ஆர்டரை அவள் பார்த்தாள்.. அவளது இதயம் தடதடத்தது..

காலை முதல் மாலை வரை யாருக்காக அந்தக் கடிதம் காத்திருந்தது..? தோட்டத்தில் சுழன்ற சூறாவளிக் காற்றினால் ஏன் அந்தக் கடிதத்தை சூறையாட இயலவில்லை..? கருத்திருந்த கார் மேகங்கள் மழை பொழிவதை ஏன் நிறுத்தி வைத்திருந்தன..?

'இதுதான் விதியா..?'

அத்தியாயம் - 52

காதலையும் நான் அறிவேன்..

காதலனையும் நான் அறிவேன்..

உன்னைக் காண வேண்டும் என்பது

விதி வகுத்த நியதியா..?

யாமினி அதிர்ந்தாள்.. உடல் தூக்கிப் போட எழுந்து உட்கார்ந்தாள்.. கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த டீப்பாயின் மேலிருந்த தண்ணீர் ஜக்கை எடுத்து தொண்டைக்குள் சரித்தாள்.. அவளது கைவிரல்கள் நடுங்கியதில் பாதித் தண்ணீர் தொண்டைக்குள்ளும்.. மீதித் தண்ணீர் நைட்டியின் மீதும் கொட்டி நனைத்தது..

ஈரமான நைட்டி உடலில் ஒட்டி.. கொஞ்ச நஞ்சமிருந்த தூக்கத்தையும் விரட்டியடித்தது.. கட்டிலை விட்டு இறங்கி ஜன்னலுக்குப் பக்கத்தில் போனாள்.. கதவைத் திறக்க கை வைத்தவளுக்கு வெளியில் கொட்டிக் கொண்டிருந்த மழையின் நினைவு வந்தது..

'திறக்கலாமா.. வேண்டாமா..?'

குழப்பத்துடன் நின்றவளின் கை.. என்றைக்கு நான் யோசித்துச் செயல்பட்டேன் என்று அவளிடம் வினவுவதைப் போல தன்னிச்சையாக கதவைத் திறந்து வைத்தது.. சில்லென்ற மழை நேரத்துக் குளிர்காற்று முகத்தில் மோதியதில்..

"ஸ்..ஆ.." என்று சிலிர்த்தவள் ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள்.. திகைத்தாள்..

என்னவோ வானமே கிழிந்து தோரணமாக தொங்கி விட்டதைப் போல.. 'சோ..' வென்ற பேரிரைச்சலுடன் கொட்டிக் கொண்டிருந்த காட்டுமழை நின்று விட்டிருந்தது.. மேகங்கள் அகன்ற நீலவானம்.. பௌர்ணமி முழு நிலவின் ஒளி வெள்ளத்தில் நிர்மலமாக காட்சியளித்தது.. அந்த நிலாவெளியில் நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன..

எப்படி அது சாத்தியமானது என்று யாமினி திக்பிரமை பிடித்து நின்று விட்டாள்..

'கொஞ்ச நேரத்துக்கு முன்னாலதான மழை கொட்டிக்கிட்டு இருந்துச்சு..?'

அவளுக்கு மழை வந்ததா.. இல்லையா..? அதுவும் அவளுடைய பிரமைதானா என்ற சந்தேகமே வந்து விட்டது..

'நான் மட்டும் மழையைப் பார்க்கலையே.. அம்மாவும்தான பார்த்தாங்க.. அண்ணாவும் சொன்னானே..'

அந்த நிலையிலும் அவளுடைய குடும்பத்தில் குழப்பமில்லாத தெளிந்த அறிவுடையவர்களாக அவள் அனுராதாவையும், யதுநந்தனையும்தான் கணித்தாள்.. பிரதாப்பை கணிக்கவில்லை..

அவளுக்குத் தெரியும்.. அவள் வருத்தப்படக் கூடாது என்பதற்காக.. அவள் கருமை நிறமுடைய கொக்கு பறக்கிறது என்று சொன்னாலும் உடனே அதை ஆமோதித்து..

"அட.. ஆமாம்மா.. அதோ.. அங்கே கருப்பு நிறத்தில கொக்கு பறக்குதே.." என்று பிரதாப் கை காட்டி விடுவார்..

அனுராதாவும்.. யதுநந்தனும் அந்த வேலையைச் செய்ய மாட்டார்கள்.. மாறாக.. அவளைக் குறித்த விமரிசனங்களை கடைபரப்பி.. அவளை அக்கு வேறு.. ஆணிவேறாக ஆக்கி விடுவார்கள்..

"என்னது.. 'கருப்புக் கொக்கு' பறக்குதா..?"

அனுராதா கேள்வி கேட்கும் தினுசிலேயே யாமினியின் அனைத்துப் பிரமைகளும் ஆளாய் பறந்து கொண்டு ஓடிவிடும்.. ஏற இறங்க மகளை அவள் பார்த்து வைக்கும் பார்வையில் மிச்சமிருக்கும் பித்தமும் தெளிந்து விடும்..

"கேட்டியாடா யது..! 'கருப்புக் கொக்கு' பறக்குதாம்.."

மகனிடம் படுநக்கலாக அவள் சொல்லும் விதத்தில் அங்கிருந்து பறந்து ஓடி விடலாமா என்று யாமினி யோசித்து வைப்பாள்..

யதுநந்தன் அனுராதாவை விட நக்கலடித்து வைப்பான்.. அவன் பேசும் பேச்சில் அனுராதாவே தேவலாம் என்று யாமினிக்கு ஆகி விடும்..

"இவதான..? என்ன வேணும்னாலும் சொல்லுவா.. கேக்கிறது கேணை அப்பாவா இருந்தா.. இவ வானத்தில வளையம் வரைஞ்சேன்னு கூட காது குத்துவா.. இவ பேசற பேச்சைப் போய் ஒரு பேச்சாக் கணக்கில எடுக்க அவரால மட்டும்தான் முடியும்மா.."

"அவர் தெய்வப்பிறவிடா மகனே..!"

"நீங்களும் நானும் சாதா மனுசப் பிறவியாவே இருந்து வைப்போம்.. இவ விசித்திரப் பிறவியா பிறந்து வைச்சிருக்கிறா.. அப்பாவோ தெய்வப் பிறவியா இருந்து வைக்கிறாரு.. இந்த ரெண்டு பிறவிகளையே வீடு தாங்கலை.. இதில.. நீங்களும், நானும் கூட்டுச் சேர்ந்திட்டா குடும்பம் தாங்காது.. நாம விலகியே நிக்கலாம்.."

"அதச் சொல்லுடா.. பக்கத்தில நின்னா இதுக புத்தி நமக்கும் தொத்திக்கும்.."

தாயும், மகனும்.. ஓட்டும் ஓட்டலில்.. யாமினிக்கு அழுகையே வந்து விடும்..

ஆனாலும்கூட.. ஒரு விசயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டுமானால் அவள் அனுராதாவிடமும்.. யது நந்தனிடமும் தான் ஆலோசனை கேட்பாள்.. பிரதாப்பிடம் கேட்க மாட்டாள்..

'அப்பா எனக்காகப் சொல்கிறதாய் நினைச்சுக்கிட்டு.. உண்மையைச் சொல்ல மாட்டார்.. மறைச்சுப் பேசி வைப்பார்..'

'அன்பான அப்பா..!'

அவளுடைய மனது நோகக் கூடாது என்பதற்காக.. அவரது சுபாவத்திற்கு மாறான இனிப்பான பொய்களைக் கூறும் அப்பாவை நினைத்து அவள் மனம் நெகிழ்ந்தது..

'அம்மா மட்டும் என்னவாம்..?'

அவள் மனதில் கேள்வி எழுந்தது.. அனுராதாவிற்கு யாமினி மீது அன்பு இல்லையா..?

இருக்கிறது.. கொள்ளை கொள்ளையாக பாசத்தை அவள் தன் மனதில் பூட்டி வைத்திருப்பதை யாமினி அறிவாள்.. என்ன ஒன்று.. பிரதாப்பைப் போல அவள் தனது பாசத்தை வெளிப்படையாக காட்டிக் கொள்ள மாட்டாள்.. மகள் மீதான பிரியத்தை மனதுக்குள் பொத்தி வைத்துக் கொண்டு வெளியே முள் போல வேசம் காட்டும் தாயின் அப்பழுக்கற்ற ஆழ்ந்த பாசத்தை பல தருணங்களில் யாமினி கண்டிருக்கிறாள்..

அனுராதாவின் பாசம் பலாப்பழத்தின் பழாச்சுளைக்கு நிகரானது.. உள்ளே இனிப்பான பழாச்சுளையின் தேன் கொட்டும் பாசத்தை ஒளித்து வைத்துக் கொண்டு.. வெளியே முள்ளாக மகளைக் குத்தும் தன்மை கொண்டவள் அனுராதா..

அந்த முள் போன்ற சிடுசிடுப்பையும் மகளை அவளுடைய பிரமையிலிருந்து வெளியில் கொண்டு வருவதற்காகவே அவள் பிரயோகிப்பாள்..

அனுராதாவின் அந்தத் தன்மை மட்டும் இல்லாது போயிருந்தால்.. யாமினி அவளைப் பிடித்து ஆட்டிக் கொண்டிருந்த ஆழ்ந்த பிரமைக்குள் புதையுண்டிருப்பாள்..

அனுராதாவின் 'சுளீர்' என வலிக்கும் பேச்சுக்களும்.. கொட்டுக்களும்.. மொத்துக்களும்தான்.. யாமினியை நடப்பு உலகிற்கு இழுத்து வந்து நிலை நிறுத்திக் கொண்டிருந்தது..

இதில் ஆபத்பாந்தவனாய்... அன்னைக்கு கரம் கொடுத்து உதவிக் கொண்டிருப்பவன் யதுநந்தன்..

"இவ மெகாலு பிடிச்ச கேஸீம்மா.."

கொஞ்சம்கூட இரக்கமேயில்லாமல் விமரிசிப்பான்.. என்னடா... இப்படி முகத்திற்கு நேராக சொல்லி வைக்கிறோமே.. இதனால் தங்கையின் மனம் பாதிக்கப் படுமே என்று கொஞ்சம்கூட ஈவு, இரக்கம் பார்க்க மாட்டான்.. தயவு, தாட்சண்யம் காட்ட மாட்டான்..

"ஏய்ய்.. தள்ளு.. எப்பப் பார்த்தாலும்.. சூரியனையும் நிலாவையும் உத்து உத்துப் பாத்துக்கிட்டு.. என்ன..? விண்வெளி வீராங்கனையா போகப் போறியா..?

அப்படி ஏதும் உத்தேசமிருந்தாச் சொல்லிரு.. நான் உலகத்துல இருக்கிற அத்தனை விண்வெளி ஆராய்ச்சி மையங்களுக்கும் இடத்தக் காலி பண்ணிட்டு ஓடிப் போயிருங்கப்பான்னு சேதி அனுப்பி வைச்சுடறேன்.. அவங்க தப்பிப் பிழைக்கட்டும்.." என்று சொல்லி வைப்பான்..

அவன் பேசும் பேச்சில் தடித்த தோல் இருப்பவர் களுக்கே 'சுள்..' ளென்று ரோசம் வந்து விடும்.

யாமினிக்கு மெல்லிய தோல்.. சிறு சொல்லைக்கூட அவள் தாங்க மாட்டாள்.. ரோசம் கொப்பளிக்க அவளுடைய

பிரமைகளை மூட்டை கட்டி மகாபலிபுர கடலில் போட்டு விட்டு யதுநந்தனிடம் சண்டைக்கு கிளம்பி விடுவாள்..

"ஏய்ய்.. அது உன்னோட பழக்கம்டா.."

"எது..?"

"விண்வெளி ஆராய்ச்சி பண்றது.."

"எனக்கெதுக்கு அந்த வேலை..? சூரியனையும்.. நிலாவையும் பார்த்து எனக்கென்ன ஆகப் போகுது.."

"இத நான் சொல்லனும்.. நீ சொல்லக் கூடாது.. யாரு கண்டது.. சூரிய குமாரியப் போல பெண்ணையும்.. நிலா மகளைப் போலக் காதலியையும் தேடி வைக்கிறயோ என்னவோ.."

"வேல மெனக்கெட்டு நான் ஏன் அந்த வெட்டி வேலையைப் பண்ணப் போறேன்..? எங்க ஆபிசில குமிஞ்சு கிடக்கிற சூரிய குமாரிகளையும், சந்திர குமாரிகளையும் பார்வையிட்டா ஆகாதா..?"

"உனக்கு ஆகும்.. அவர்களுக்கு ஆகனுமே.."

"என் கடைக்கண் பார்வைக்காக எத்தனை பொண்ணுக காத்துக்கிட்டு கிடக்காப்பன்னு தெரியுமா..?"

"எனக்கு மட்டுமில்லடா.. யாருக்குமே தெரியாது.. இருந்தானேடா அண்ணா தெரிஞ்சு வைக்கும்..?"

யதுநந்தனை வாரும் வேகத்தில் தனது பிரமைகளில் இருந்து வெளியில் வந்து விடுவாள் யாமினி..

அந்த வகையில் அவளது பிரமைகளை கொஞ்சம்கூட சட்டையே பண்ணாமல் அவளை இயல்பான பெண்ணாக இருக்க வைக்கும் பெருமை அனுராதாவையும், யது நந்தனையுமே சேரும்.. அவர்கள்தான் யாமினியை உலுக்கிப் பிரமையிலிருந்து வெளியே இழுத்துக் கொண்டிருந்தார்கள்..

பிரதாப் அப்படியல்ல.. மகளின் மனம் நோகக் கூடாது என்பதற்காக.. அவளை அந்தப் பிரமையிலிருந்து வெளியே

கொண்டு வராமல் அப்படியே அமிழ விட்டு விடுவார்..

கத்தியெடுக்காமல் ஆப்பரேசன் பண்ண முடியாது.. இதை அனுராதாவும் யதுநந்தனும் அறிவார்கள்.. பிரதாப் உணர மாட்டார்..

'அப்பா...!'

பிரதாப்பின் நினைவில் மனம் நெகிழ்ந்தாள் யாமினி.. அவளைப் போன்ற குணாதிசியம் கொண்ட மகளிடம் கடலளவு பிரியத்தைப் பொழிய அவரால் மட்டும்தான் முடியும் என்பதில் யாமினியின் கண்கள் கலங்கின..

அனுராதாவுடன் அத்தனை விசயங்களிலும் ஒற்றுமையாக போகிறவர் யாமினியின் விசயத்தில் மட்டும் அந்த ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தாமல் எதிர்ப்புக் குரல் எழுப்பி மனைவியிடம் செமத்தியாக வாங்கிக் கட்டிக் கொள்வார்..

அனுராதா 'எள்' என்று சொல்வதற்கு முன்பாகவே எண்ணெய் கேன்களை லாரியில் கொண்டு வந்து இறக்கி வீடு முழுவதும் நிரப்பி விடுபவர்.. மகளின் விசயத்தில் மட்டும் மனைவியின் வார்த்தைகளுக்கு எதிராக போர்க் கொடியை உயர்த்தினார்..

அனுரதாவிற்கும் பிரதாப்பிற்கும் இடையே வரும் அனைத்துச் சண்டைகளுக்கும் யாமினி மட்டுமே அடிப்படைக் காரணமாக இருந்தாள்..

"உன்னால உங்கப்பாவும் நானும் டைவர்ஸ் வரைக்கும் போய்த் தொலைக்கப் போகிறோம்டி.. பெத்தவங்கள துண்டு வெட்டற பெருமை உன்னைத் தாண்டி சேரும்.."

சில சமயங்களில் அனுராதா யாமினியிடம் இந்த வார்த்தைகளைச் சொல்லிப் பொருமுவது உண்டு..

அப்போதெல்லாம் யாமினி துடித்துப் போய் விடுவாள்.. ஏன் இந்தப் பிறப்பைப் பிறந்தோம் என்று நொந்து விடுவாள்..

'எங்கப்பாவையும், அம்மாவையும் ஒற்றுமையில்லாம பிரிச்சு வைக்கவா நான் இவர்களுக்கு மகளாப்

பிறந்தேன்..?'

அவளது மனதின் வலி கண்களில் தெரியும் போது அவளைவிட அதிகமாக அனுராதா துடித்துப் போவாள்..

'என் மகளே..!'

குற்ற உணர்வுடன் பேச்சை மாற்றி.. யாமினியை அதட்டி.. மிரட்டி.. திட்டி.. அந்தப் பேச்சை மறக்கடித்து விடுவாள்..

'என் அம்மா..!'

பெருமையுடன் நினைத்துக் கொண்டாள் யாமினி..

'அவங்களைப் போல யாரிருப்பாங்க..?'

ஜன்னலின் கம்பியில் முகத்தைப் பதித்துக் கொண்டாள் யாமினி.. விடாமல் கொட்டிய மழையினால் சில்லிட்டுப் போயிருந்த ஜன்னல் கம்பிகளில் ஏற்பட்ட ஜில்லென்ற உணர்வை ரசித்து அனுபவித்தாள்.. இருள் நிரம்பிய நடுநிசியைத் தாண்டிய அந்த நேரத்தில்.. இருளை விரட்டிக் கொண்டிருக்கும் முழுநிலவை... ஜன்னலில் முகம் பதித்து கொஞ்சம்கூட பயம் கொள்ளாமல் உற்றுப் பார்க்க யாமினியால் மட்டுமே முடியும்..

இருளுக்குள் தெரிந்த நிழல் போன்ற தோற்றங் களினால் யாமினியை பயப்படுத்த முடியவில்லை.. அவள் முழுநிலவின் அழகையே அள்ளிப் பருகுவதைப் போல பார்த்துக் கொண்டிருந்தாள்.. பார்க்கப் பார்க்க.. அவள் கண் முன்னால் முழுநிலவு அகன்று வானம் பூராவும் வியாபிப்பதைப் போல இருந்தது..

'இதே நிலாப் பொழுதில நானும்.. அவனும் கூடியிருக்கோம்..'

அவள் மனதில் வந்த நினைவின் துகளில் அவள் அதிர்ந்து போனாள்..

எப்படி இப்படியொரு நினைவு அவள் மனதில் வந்தது..? எந்த நிலாப் பொழுதில் எவனுடன் அவள் கூடினாள்..?

அவள் காதலை அறிந்தவளா..? இல்லை.. காதலனைத்தான் அறிந்தவளா..? இதுபோன்ற நினைவு அவள் மனதில் வரலாமா..?

அவள் மனம் துணுக்குற்ற போதே.. அவளது வாய் தன்னையுமறியாமல் பாடி வைத்தது.. ஜன்னல் கம்பிகளின் இடைவெளியில் தெரிந்த வானத்தின் பௌர்ணமி நிலவை ஆசையாசையாய் பார்த்தபடி.. தன்னை மறந்து அவள் பாட ஆரம்பித்தாள்..

"அன்றொரு நாள்..

இதே நிலவில்..

அவன் இருந்தான்..

என் அருகே..

நான் அடைக்கலம் தந்தேன்..

என் அழகை..

நீ அறிவாயே.. வெண்ணிலவே..!"

யாமினியின் முகம் மலர்ந்து விகசித்திருந்தது.. அந்தச் சமயத்தில் அனுராதா மட்டும் மகளைப் பார்த்திருக்க வேண்டும்.. நிச்சயமாய் மகளின் மனதில் எவனோ இருக்கிறான் என்ற முடிவிற்கு வந்திருப்பாள்..

அப்படியொரு மயக்கத்தை கண்களில் தேக்கி.. பார்வையை பரந்த வான் வெளியில் பதிய விட்டு.. கனவுலகில் சஞ்சரித்தபடி பாடிக் கொண்டிருந்தாய் யாமினி..

"அந்த ஒருநாள்..

ஆனந்தத் திருநாள்..

இன்று நினைத்தால்..

என்னென்ன சுகமோ.."

யாமினியின் இமைகள் மூடியும் மூடாமலும் கிறக்கத்துடன் செருகிக் கொண்டன.. காதலனுடன் கூடிக் கலந்தவள் அந்தக் கூடலைக் குறித்து நினைத்து இன்பங்

கொள்வதைப் போல.. அவள் அந்தப் பாடலைப் பாடி இன்பங் கொண்டாள்..

யாரை நினைத்துப் பாடுகிறாள் என்று அவளுக்குத் தெரியவே இல்லை.. நிலவின் ஒளியில் தெரிந்த நிழலோவியம் போன்ற உருவம் கனவா.. நனவா என்று இனம் விளங்க முடியாமல் அவள் மாய உலகத்தில் நுழைந்து கொண்டிருந்தாள்..

காதலனைக் குறித்த காதலியின் தவிப்பு தெள்ளத் தெளிவாக அவள் முகத்தில் தெரிந்தது.. அவள்தான் அப்படிப்பட்ட ஓர் தவிப்புடன் காதலனுடன் கூடி விட்ட பொழுதைக் குறித்த பாடலை ஆழ்ந்து பாடிக் கொண்டிருக்கிறாள் என்று அறியாமலே அவள் பாடிக் கொண்டிருந்தாள்..

"பாதி விழிகள்..

மூடிக் கிடந்தேன்..

வேந்தன் மேனியிலே..

நீ பார்த்தாயே..

வெண்ணிலவே...!"

வெட்கத்துடன் வெண்ணிலவை கேள்வி கேட்டு விட்டு.. வெண்ணிலவைப் பார்த்தால் வெட்கம் இன்னும் அதிகமாகும் என்பதைப் போல கட்டிலுக்குத் திரும்பினாள் யாமினி..

தலையணையில் முகம் புதைத்துக் கொண்டவளின் முகம் குங்குமமாய் சிவந்திருந்தது..

"ஆடும் கனியை..

ஆடாமல் எடுத்தான்..

வாடும் மலரை

வாடாமல் தொடுத்தான்.."

தலையணையில் முகவாயை ஊன்றியபடி ஜன்னலைப் பார்த்தவள்.. அதன்வழி தெரிந்த முழுநில விடம் தன் மனதைப் பகிர்ந்து கொள்வதைப் போல பாடி வைத்தாள்..

"சூடிக் கொடுத்தான்..

பாடி முடித்தான்..

பாவை மேனியிலே..

நீ பார்த்தாயே..

வெண்ணிலவே..!"

வெட்கத்துடன் கேட்டவளைப் பார்த்து.. நான் எப்போது இதையெல்லாம் பார்த்தேன் என்று நீ சாட்சிக்கு அழைக்கிறாய் என்று கேட்காமல்.. அவள் சொன்னதற் கெல்லாம் ஒப்புதலாய் தலையை ஆட்டுவதைப் போல.. நின்று.. நிதானித்துப் பின் மெல்ல நகர்ந்தது நிலவு...!

குடும்பத்தைத் தவிர வேறு தெரியாத யாமினி.. யாரை நினைத்து வெட்கிப் பாடினாள் என்ற ரகசியத்தை அவள் அறிய மாட்டாள்தான்..

ஆனால்.. யுகங்கள் பல கண்ட வெண்ணிலவு அறிந்திருக்கக் கூடுமோ..? அதனால்தான்.. அவள் பாடிய பாடலை ஒரு சிநேகிதி கேட்டுக் கொள்வதைப் போல நின்று, நிதானித்துக் கேட்டு விட்டு நகர்ந்ததோ..

கட்டிலில் படுத்திருந்த யாமினி.. யாமினியாக இல்லை.. அவள் முகத்தில் பரவசம் கலந்த வெட்கம் தெரிந்தது.. யாரை நினைத்தோ அவள் மயக்கம் கொண்டாள்.. நிலவுப் பொழுதில் அவனை சந்தித்த வேளையை சிந்தித்துப் பார்ப்பவளைப் போல இருந்தது அவளது பாடலும், நடவடிக்கையும்..

தனக்குத்தானே எதையோ மெல்லிய குரலில் முணுமுணுப்பதும்.. பாடுவதும்.. சிரிப்பதுமாக.. அவள் பண்ணிய அட்டூழியத்தை மூடிய கதவுகளுக்கு அப்பால் தங்களின் ரூம்களில் நிம்மதியாக உறக்கம் போட்டுக்

கொண்டிருந்த அனுராதாவும், பிரதாப்பும், யதுநந்தனும் அறியவில்லை..

இதைவிடக் கொடுமை என்னவென்றால்.. அவள் பண்ணிய அட்டூழியத்தைப் பற்றி யாமினியே அறிய வில்லை என்பதுதான்..

அத்தியாயம் -53

எங்கேயோ கேட்ட குரலை..

இனம் காண முடிகின்றதா..?

நிலவுப் பாட்டு பாடியவளை..

நிலவு கண்டு கொண்டதா..?

ஜன்னல் வழி வந்த சூரிய வெளிச்சத்தின் கதிர்கள் முகத்தின் மீது படிந்ததில்.. இமை சுருக்கி விழித்த யாமினி.. இமைகளை கசக்கி விட்டபடி எழுந்து உட்கார்ந்தாள்..

"யாமினி.. யாமினி.."

ரூம் கதவு தடதடத்தது.. அது அனுராதாவின் குரல் என்பதில் அலறியடித்துக் கொண்டு எழுந்தோடிப் போய் கதவைத் திறந்தாள் யாமினி.. காபிக் கோப்பையுடன் உள்ளே வந்த அனுராதா வேற்று கிரக வாசியைப் பார்ப்பதைப் போல மகளை விசித்திரமாக பார்த்து வைத்தாள்..

"கதவத் திறக்க இத்தன நேரமா..?"

"இல்லயேம்மா.. நீங்க கதவத் தட்டின சத்தம் கேட்டதுமே திறந்துட்டேனே.."

"கிழிச்ச.. ஒரு மணி நேரமாத் தட்டறேன்.. உன் காதில இப்பத்தான் விழுந்துச்சா..?"

"இப்பத்தாம்மா எழுந்திருச்சேன்.."

"அதச் சொல்லு.. அத விட்டுட்டு.. நீங்க தட்டினதும் தாவி வந்து கதவத் திறந்திட்டேன்னு கதை அளக்காதே.. இந்தா காபியப் பிடி.."

காபிக் கோப்பையை நீட்டிய அனுராதாவிடம் காபியை எப்படியம்மா பிடிப்பது என்று கேட்க வேண்டும் போல இருந்தது யாமினிக்கு..

'காபிக் கப்பை பிடின்னுல்ல சொல்லனும்..?'

பிழை திருத்தத்தை வெளியில் வாய் விடாமல் காபியைக் குடிக்க ஆரம்பித்தாள் யாமினி..

அனுராதா பேசும் பேச்சுக்கு பிழை திருத்தம் சொல்ல ஆரம்பித்தாள்.. அவள் ஆயிரம் பிழை திருத்தங்களை யாமினியிடம் சொல்லிக் காட்ட ஆரம்பித்து விடுவாளே..

ஆதலினால் அமைதி காத்த மகளை முறைத்தாள் அனுராதா..

'இப்ப எதுக்கு முறைக்கிறாங்க..?' யாமினி திருதிருத்தாள்..

"அறிவிருக்காடி உனக்கு..?"

"அது இருக்கிறதாலதான் ஒரு பெரிய கம்பெனியில எனக்கு வேலை போட்டுக் கொடுத்திருக்காங்கம்மா.."

"அவங்களுக்கு அறிவில்லடி.. இல்லேன்னா உனக்குப் போயி வேலை போட்டுக் கொடுத்திருப்பாங்களா..?"

"உங்க ஒருத்தர் செர்டிபிகேட் போதும்மா எனக்கு.. கிடைச்ச வேலை நிலைச்சிரும்.. இந்த பாராட்ட இங்கே சொல்லாதீங்க.. போயி வேலை கொடுத்த ஆபிசில சொல்லி வையுங்க.."

"இந்த வியாக்கினத்தில ஒன்னும் குறைச்சல் இல்ல.. ஏண்டி.. எந்த வடி கட்டின முட்டாளாவது.. ஏஸியை போட்டுட்டு ஜன்னலை 'பப்பரப்பா..'ன்னு திறந்து வைச்சிருப்பாளாடி..?"

"மாட்டாங்கதான்.."

"அப்புறம் என்ன அலுவலுக்கு நீ அந்த வேலயச் செஞ்சு வைச்சிருக்கே..?"

"நானா..?"

பேந்தப் பேந்த விழித்தபடி ஏஸியைப் பார்த்தாள் யாமினி.. அது மஞ்சள் நிற எண்களுடன் அவளைப் பார்த்து குட்மார்னிங் சொன்னது..

அலறியடித்துக் கொண்டு ஜன்னலைப் பார்த்தாள்.. அது அனுராதா சொன்னதைப் போலவே 'பப்பரப்பா..' என்று திறந்து சூரிய வணக்கம் சொல்லியது..

'கடவுளே..!'

யாமினி பரிதாபமாக அனுராதாவைப் பார்த்தாள்.. அனுராதாவோ கொதிகலனாக ஆகிவிட்டாள்.. அவளால் ஏஸியை ஓடவிட்டு ஜன்னலை திறந்து வைத்திருந்த யாமினியின் பொறுப்பில்லாத தனத்தைக் கூட சகித்துக் கொள்ள முடிந்தது.. எப்போது அதைச் செய்தாள் என்று தெரியாமல் மகள் திருதிருப்பதைத்தான் அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை..

"என்னடி..?"

வார்த்தையைக் கடித்துத் தப்பினாள்..

"எப்பத் திறந்தேன்னு எனக்கே தெரியலைம்மா.. பட்.. நான்.. ஏஸியை ஆன் பண்ணினப்ப ஜன்னல் மூடித்தான் இருந்துச்சு.."

இப்படிச் சொல்லும் மகளை என்ன செய்தால் தேவளம் என்கிற கொலை வெறிக்கு ஆளானாள் அனுராதா..

"இப்படி இருக்கிறவ பெரிய கம்பெனியில பொறுப்பான வேலையைப் பார்க்கப் போகிறேன்னு கிளம்பறயே.. எப்படிடீ அந்த வேலையைப் பார்ப்ப..?"

யாமினிக்கும் அந்த பயம் இருந்தது.. கூடுதலாக சித்தார்த்தனைப் பற்றி நினைத்தாலே உடலில் ஏற்படும் 'ஜெர்க்' கில் அவள் அரண்டு போயிருந்தாள்.. இத்தனையும்

போதாதென்று அவளை எதிரியைப் போல பார்த்து வைக்கும் தாமோதரன் வேறு அங்கிருந்தான்..

"நான் வேணும்னா இந்த வேலை வேணாம்ன்னு சொல்லிரவா அம்மா..?"

பரபரப்புடன் அவள் கேட்க.. பல்லைக் கடித்தாள் அனுராதா..

"இப்பத்தான் நீ பெரிய அறிவுக் களஞ்சியம்.. உன் அறிவுத் திறமையப் பாத்துட்டு இந்தக் கம்பெனியில உனக்கு பொறுப்பான வேலையத் தூக்கிக் கொடுத் திருக்காங்கன்னு பெரிய பருப்பப் போல பேசி வைச்ச.. இப்ப என்னடான்னா.. பயந்தாங்குளியப் போல..

இந்த வேலைக்கு நான் போக மாட்டேன்னு அடம் பிடிக்கிற..?"

"அம்மா.."

"இப்ப நீ இருக்கிற நிலைமைக்கு வேலைக்குப் போறதுதான் சரியா இருக்கும் யாமினி.. சும்மா இருக்கிற மனசு, சாத்தானோட உலைக்களம்ன்னு ஒரு கவிதயில சொல்லியிருக்கிறத படிச்சிருக்கேன்.. நீ சும்மா.. வெட்டியா.. பொழுதைப் போக்காதே.. வேலை.. வேலைன்னு ஓடிக்கிட்டே இரு.. அதுதான் உனக்கும் நல்லது.. இந்தக் குடும்பத்துக்கும் நல்லது.."

"ஆனாம்மா.. எனக்குத்தான் எந்த நேரம் எதைச் செய்து வைக்கிறேன்னே தெரிய மாட்டேங்குதே.."

மிரண்டு விழித்த மகளைப் பார்க்கப் பார்க்க.. அனுராதாவின் பெற்ற வயிறு பிசைந்தது.. மகளின் தவிப்பில் அவள் துயரம் கொண்டாள்.. அதை

வெளிவிடாமல் மகளை முறைத்துப் பார்த்து திட்டித் தீர்த்தாள்..

"எனக்குன்னு வந்து பிறந்து தொலைச்சிருக்க பாரு.. இந்த லட்சணத்தில இவளுக்கு எதிரா நான் செர்டிபிகேட் கொடுக்கிறேனாம்.. உனக்கான செர்டிபி கேட்டத்தான் நீயே

கொடுத்துக்கறியே.. இதுக்கு மேலே வேற என்ன வேண்டிக் கிடக்கு..? போ.. போய் ஊர் முழுக்க தம்பட்டம் அடி.."

"அம்மா.."

"உலகத்தில முக்காவாசிப் பேரு மெகாலு பிடிச்ச தனமா அலையறவங்கதான்.. நீ வெளியில சொல்லிக்கிற.. அவங்க சொல்லிக்காம ஒளிச்சு வைச்சுக்கிறாங்க.. அவ்வளவுதான் வித்தியாசம்.. உன் அப்பாவையே எடுத்துக்க.. எதையோ சொன்னா வேற எதையாச்சும் செஞ்சு வைச்சிட்டு வந்து நிப்பாரு.. என்னங்கன்னு கேட்டா.. ஏதோ நினைப்பில செஞ்சுட்டேண்டி.. ஹி.. ஹிம்பாரு.. அவரோட சிரிப்பைப் பாக்கிறதுக்கு

அவரு செஞ்சு வைச்ச காரியத்தப் பத்திக் கேள்வியே கேட்காம ஒப்புக்கிறதே பெட்டர்ன்னு நமக்குத் தோணிப் போகும்.."

பிரதாப்பைப் பற்றிய அனுராதாவின் கணக்கீட்டைக் கேட்ட யாமினிக்கு சிரிப்பு வந்தது.. மகள் முகத்தில் சிரிப்பைப் பார்த்த அனுராதாவின் மனம் கனிந்தது..

அவள் அந்தக் கனிவை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சிடுசிடுத்த முக பாவத்துடன் பேச்சைத் தொடர்ந்தாள்..

"உங்க அண்ணனையே எடுத்துக்க.. வயசுப் பொண்ணப் பாத்துட்டாப் போதும். ஜொள்ளு விட்டு இருக்கிற இடத்த கழுவி விட்டபடியே என்ன வேலயச் செஞ்சுக்கிட்டு இருக்கோம்கிறத மறந்து போயி வேற என்னத்தாவது செஞ்சு வைப்பான்.. ஏண்டான்னு கேட்டா.. விடுங்கம்மா.. இது வாலிப வயசும்பான்.."

இப்போது யாமினி விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.. மகளின் விரக்தி மனநிலையி லிருந்து அவளை வெளியில் கொண்டு வந்து விட்ட நிம்மதியுடன் அனுராதா ஏஸியை ஆஃப் பண்ணினாள்..

"இதுகள்ளாம் தொழிலப் பாக்கறேன்.. வேலையைப் பாக்கறேன்னு வெளியே கிளம்பும்போது உனக்கென்னடி பயம்..? நீ தைரியமா வேலைக்கு கிளம்புடி ராஜாத்தி.."

"அம்மா.."

அனுராதாவின் கழுத்தை இறுக்கிக் கட்டிக் கொண்ட யாமினி பாசத்துடன் தாயின் கன்னத்தில் முத்தமிட்டாள்..

"இதுக்கொன்னும் குறைச்சலில்ல.." மகளைத் தள்ளி விட்ட அனுராதா.. ஏதோ நினைத்துக் கொண்டவளாக..

"ஆமாம்.. நேத்து நைட்டு ஏண்டி அன்றொரு நாள் இதே நிலவில்ன்னு பாட்டுப் பாடி வைச்ச..?" என்று கேட்டு ஆழ்ந்த தூக்கத்திலும் அவளது புலன்கள் விழித்துக் கொண்டிருப்பதை புரூவ் பண்ணினாள்..

"பாட்டா..? நானா..? அன்றொரு நாள் இதே நிலவில்ன்னு பாட்டு இருக்காம்மா..? எனக்குத் தெரியாதே.."

யாமினி மறுபடியும் திருதிருத்தாள்.. உண்மையாகவே அவளுக்கு அந்தப் பாட்டைத் தெரியாது.. அதனால் அனுராதா அவளை மேற்கொண்டு கேள்வி கேட்காமல் நகர்ந்து விட்டாள்..

'நேத்து நைட்டில நான் பாட்டுப் பாடினேனா..?'

நெற்றிப் பொட்டு விண்.. விண்ணென்று தெரிக்க ஆரம்பிக்க தலையைப் பிடித்தபடி யாமினி அமர்ந்து விட்டாள்..

ஆம் என்று சாட்சி கூறும் வெண்ணிலவு பகலில் வராது என்பதினால் எனக்கென்ன என்று சூரியன் தன் போக்கில் நகர்ந்து கொண்டிருந்தான்..

கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள் யாமினி.. அழகான காட்டன் புடவையும்.. நீளப் பின்னலுமாக இருந்தவளின் தோற்றம் வெகு பாந்தமாக இருந்தது.. ஏதோ ஓர் யோசனையுடன் இருந்தவளை கண்ணாடியில் தெரிந்த அவளின் பாந்தமான அழகு ஈர்க்கவில்லை.. மாறாக.. அறிமுகமில்லாத எவரோ ஒருவரை உற்றுப் பார்ப்பதைப் போல தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவளை ஒரு மொத்து மொத்தி இந்த உலகத்திற்கு இழுத்து வந்தாள் அனுராதா..

"வேலைக்குத்தான கிளம்பற..?"

"ஆமாம்மா.. ஆமாம்.."

"இதையெல்லாம் உணக்கையாய் சொல்லிரு.. மத்ததில சொதப்பு.. கண்ணாடி பார்க்கிறவ, யாரையோ பாக்கறதைப்போல இப்படி ஏண்டி முறைச்சுக்கிட்டு நிக்கிற..? உலகத்திலேயே தன்னைத்தானே முறைச்சுக்கிற முத ஆளா நீதாண்டி இருப்ப.."

யாமினி பேசவில்லை.. அனுராதா இடித்துக் காட்டுவதில் இருந்த உண்மையில் அவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள்...

"சரி, சரி.. விடு.." என்றாள் அனுராதா..

"ம்ம்ம்.."

"இன்னைக்கு முதல்நாள்.. மயங்கி, மயங்கி நிக்காம கரெக்ட் டயத்தில ஜாயின் பண்ற வழியப் பாரு.."

அனுராதாவின் வார்த்தைகளில் நான் எவரிடம் மயங்கி நிற்கப் போகிறேன் என்ற கேள்வி யாமினியின் மனதில் எழுந்தது.. கூடவே சித்தார்த்தனின் உருவமும் வந்ததில் அவள் அரண்டு போனாள்..

'இதென்ன.. இவன் நினைப்பு வந்து தொலைக்குது.. இவன் யார்.. நான் யார்..?'

அவன் அவளுடைய எம்.டி என்ற புதிய பந்தத்தில் அப்போதுதான் நுழைய இருப்பவன் என்பதையும் தாண்டி அவனுடன் ஆண்டாண்டு காலமாக பழகியதைப் போன்ற சொந்தம் தன் மனதில் உருவாகியிருப்பதை திகைப்புடன் உணர்ந்தாள் யாமினி..

'இது மட்டும் அந்த தாமோதரனுக்குத் தெரிஞ்சது.. வேற வினையே வேணாம்.. இன்னைக்கே சீட்டைக் கிழிச்சு வீட்டைப் பாத்து நடையைக் கட்டுன்னு அனுப்பி வைச்சிருவான்..'

அலுவலகம் சென்றால் தாமோதரனையும் பார்க்க வேண்டி வரும் என்பதில் களைப்பாக உணர்ந்தாள் யாமினி.. அவளைக் கண்டவுடன் விரோதித்த முதல்

நபர் அவனாகத்தான் இருப்பான் என்று நினைத்துக் கொண்டாள்..

'என்னவோ அவன் பிரண்டை நான் கடத்திக் கொண்டு போகப் போகிறதை போலயில்ல பாத்து வைச்சான்..'

ஏன் அவன் அவ்வாறு நினைத்தான் என்று யாமினிக்கு புரியாமல் இல்லை.. அவளாக இருந்தாலும் அப்படித்தான் நினைப்பாள் என்று அவள் நினைத்துக் கொண்டாள்..

ஆரூயிர் தோழமையை பாதுகாவல் செய்ய விரும்பும் யாரும் அப்படித்தான் நினைப்பார்கள்..

"என்ன..? வேலைக்குக் கிளம்பற உத்தேசம் இருக்கா.. இல்லியா..?"

அனுராதாவின் குரல் வழக்கம் போல யாமினியை தன்னுணர்விற்கு மீட்டு வந்தது.. அனுராதாவின் முகத்தில் எரிச்சல் தெரிந்தது..

"இப்படி மெகாலு பிடிச்சத்தனமாக நிக்கிறவ.. எந்த தைரியத்திலடி வேலைக்குப் போகனும்னு கிளம்பி நிக்கிற..?" என்று எரிந்து விழுந்தாள்..

யாமினியின் முகத்தில் தெரிந்த குற்றஉணர்வு அனுராதாவின் கோபத்தை அதிகப்படுத்தியது..

"செய்யறதையும் செஞ்சுட்டு அறியாப்புள்ள மாதிரி முகத்தை வைச்சுக்கிறதில குறைச்சல் இல்ல.. கிளம்புடி முதல்ல.."

"ஆகட்டும்மா.."

"புத்தியோட பொழைச்சுக்க.. இந்த வேலை உனக்கான அடையாம்.. உன் சம்பளத்தை வாங்கி பொழப்பு நடத்தனும்னு ஒன்னும் யாரும் இங்கே காத்திருக்கல..

இதிலயாவது நீ மனசை செழுத்திருவியான்னுதான் நான் ஏங்கறேன்.."

அனுராதாவின் குரல் தழதழத்ததில் யாமினிக்கு துயரமாக இருந்தது.. அவளைப் பெற்றவளுக்கு அவள் கொடுக்கும் மன அமைதி இதுதானா..? அவளை முன்னிருத்தியே அனுராதாவுக்கும், பிரதாப்புக்கும் இடையே அடிக்கடி சண்டைகள் மூழ்வதை அவள் அறிவாள்..

'என்ன பிறப்பு.. என்பிறப்பு..!' மனம் நொந்தாள் யாமினி..

"உடனே முகத்தை தொங்கப் போட்டுக்காதே.. சிரிச்ச முகமா வேலைக்குக் கிளம்பு.. சாமிய கும்பிட்டுக்க.. நின்னா நின்ன இடம்.. உக்காந்தா உக்காந்த இடம்ன்னு இருக்காம நல்ல புத்தியோட பொழைக்கனும்னு வேண்டிக்க.."

அனுராதா பூஜையறையில் விளக்கேற்றி பூஜை செய்தாள்.. மகளுக்கு கற்பூர ஒளியைக் காட்டினாள்.. தொட்டு வணங்கிய மகளின் நெற்றியில் குங்குமமிட்டு வழி அனுப்பி வைத்தாள்..

யாமினி வேலையில் சேரக் கிளம்பினாள்..

அத்தியாயம் - 54

சென்றுவிடு என்று சொன்னால்..

சென்று விட முடியுமா..?

தேடி வந்தது நீயா..? இல்லை நானா..?

தாமோதரன் காரை நிறுத்தி விட்டு இறங்கி வேக நடையுடன் படிகளில் ஏறுவதைக் கண்ட குமார் அகலமான புன்னகையுடன் வாசல் கதவை விரியத் திறந்து விட்டான்..

"உன்னைப் பாத்தா டூத் பேஸ்ட் விளம்பரத்தப் பாக்கறதைப் போலவே இருக்கு குமார்.." என்றான் தாமோதரன்..

"ஏன் சார்..?"

"இப்படித் தினமும் முப்பத்திரண்டு பல்லையும் காட்டிச் சிரிச்சா வேற எப்படித் தோணுமாம்..?"

"ஹி..ஹி.."

"இன்னைக்கு இது போதும் குமார்.. மிச்சத்த நாளைக்குப் பாத்துக்கலாம்.."

குமாரைக் கடந்து உள்ளே போன தாமோதரனைக் கண்டதும் அவசரமாக காதோடு ஒட்டியிருந்த போனை பிய்த்து எடுத்து கீழே வைத்தாள் வயலெட்.. அவள் விழிகளில் 'வந்துட்டானா..' என்ற அலுப்பு இருந்தது..

"வந்துதான் ஆகனும்.." என்றான் தாமோதரன்..

'மனசைப் படிச்சிருவானே..'

வலிய புன்னகையை வரவழைத்துக் கொண்ட வயலெட்..

"எதைச் சொல்கிறீங்க சார்..?" என்று கேட்டாள்..

"உங்களுக்குத் தெரியாதில்ல..? பாவம்.."

'இப்ப இவன் பாவம் பாக்கிறதைப் போல என் நிலைமைக்கு என்ன கேடு வந்துருச்சு..?'

வயலெட் பல்லைக் கடித்தாள்.. அதை அலட்சியத்திலும் படு அலட்சியமாக தாமோதரன் பார்த்து வைத்ததில் அவளுக்கு ரத்தக் கொதிப்பு வந்தது.. உர்ரென்று அவனை முறைத்தாள்..

"இஃது..?" என்றான் தாமோதரன்..

"எது..?" முறைப்பை பலப்படுத்தினாள் வயலெட்..

"இந்த முறைப்பு.. இதுதான் உங்களுக்கு ஷீட் ஆகுது.. இத விட்டுட்டு உங்களுக்கு சரிப்பட்டு வராத சிரிப்ப எதுக்காக கட்டி இழுக்கறீங்க..? சகிக்கலை.."

"எதைச் சொல்கிறிங்க..?" உஷ்ணமானாள் வயலெட்..

"உங்க சிரிப்பச் சொல்கிறேங்க.. உங்களைச் சொல்ல முடியுமா..?"

"ஏன்..? சொல்லித்தான் பாருங்களேன்.."

"அது எதுக்கு வேண்டாத வேலை..? அதை உங்களோட 'ஆள்' சொன்னாத்தான் நல்லா இருக்கும்.. நான் சொன்னா நல்லாயிருக்காது.."

"வாட்.. வாட்.. வாட்..?"

வாத்தைப் போல கூவியபடி கொதித்துக் கொண்டிருந்த வயலெட்டை லட்சியம் செய்யாமல் போய்விட்டான் தாமோதரன்.. கொதிப்பைத் தணிக்க கொண்டு வந்திருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து தொண்டையில் சரித்துக் கொண்டாள் வயலெட்..

"என்னடி ஜோஸபின்.. காலையிலேயே தலையாலே தண்ணீர் குடிக்க வைச்சிட்டார் போல.."

அடுத்த சீட்டில் இருந்த ரேகா துக்கம் விசாரித்ததில் இன்னும் கடுப்பாகிப் போனாள் வயலெட் ஜோஸபின்..

"அதில உனக்கு சந்தோசம் போல.."

"சேச்சே..! என்னடி இப்படிச் சொல்லிட்ட..?"

"வேற எப்படிச் சொல்லச் சொல்ற..?"

"யாரு நீ..?"

"உன்னோட எனிமீ.."

"அப்படி நீயா ஒரு நினைப்ப வைச்சுக்கிட்டா நானென்னடி பண்ணுவேன்..?"

"எதையும் பண்ணாதே.. வேலையைப் பாரு.. இவ நினப்ப மனசில வைச்சுக்கிட்டு நான் என்னத்தப் பண்ண..? என் 'ஆள்' நினைப்ப மனசில வைச்சாலாவது வேலைக்கு ஆகும்.."

"அதையும் சொன்னாரே.."

"யாரு சொன்னது..?"

"ஜி.எம். சார்.."

"தாமோதரனா..?"

"பெயரைச் சொல்ல மாட்டேன்.."

"எங்க பாட்டிதான் தாத்தா பேரைச் சொல்ல மாட்டேன்னு அடம் பிடிப்பாங்க.. நீயேண்டி ஜி.எம். பெயரைச் சொல்ல மாட்டேங்கிற..?"

"வேண்டாம்.. வீணாய் வம்புக்கு வராதே.."

"அடச்சீ.. வாயை மூடு.. வந்துட்டா நியாயம் பேச.. என்னதான் நீ ஜொள்ளு விட்டாலும்.. அந்த ஆளு கல்லையும்.. மண்ணையும் பாக்கிறதைப் போல உன்னையும் பாத்து வைச்சிட்டுப் போயிருவான்.. அது தெரியாம நீ டிஸ்கொதே போடாதே.."

"உனக்கு ஜி.எம்மை பிடிக்கலைன்னா அது உன் பாடு.. எனக்கு அவரைப் பிடிச்சிருக்கு.. ஐ மீன்.. அவரோட சின்சியாரிட்டியைப் பிடிச்சிருக்கு.."

"இதை நான் நம்பனும்..?"

"நம்பாட்டிப் போ.. ஐ டோண்ட் கேர்.."

அவர்கள் வழக்கடித்துக் கொண்டிருந்த அந்த சுபயோக சுபவேளையில் அலுவலகத்தில் கால் பதித்தாள் யாமினி..

"எக்ஸ்யூஸ் மி.."

கிண்கிணி போன்ற அழகான குரலில் கவரப் பட்டவர்களாக தங்களின் யுத்தத்தை மறந்து ரேகாவும் வயலெட்டும் திரும்பிப் பார்த்தார்கள்.. புத்தம்புது மலர் போன்ற பொழிவுடன் நின்றிருந்த யாமினி அவர்களின் பார்வையைக் கண்டதும் நட்பாக புன்னகைத்தாள்..

"ஐ ஆம் யாமினி..!"

"ஸோ வாட்..?"

தன்னை விடவும் அழகாக ஒருத்தி இருப்பதா என்ற காண்டுடன் இகழ்ச்சியாக கேட்டு வைத்தாள் வயலெட்..

அந்தக் கேள்விக்கென்ன பதிலைச் சொல்வது என்று திகைத்துப் போனாள் யாமினி.. அதற்குள் வயலெட்டின் புகைச்சலைக் கண்டு கொண்ட ரேகா யாமினிக்கு கை கொடுத்து விட்டாள்..

"ஹாய்..! ஐ ஆம் ரேகா.."

அவள் கைநீட்டியதில் விடுதலை உணர்வை சுவாசித்த யாமினி அவளுக்கு கை கொடுத்தாள்..

"பரவாயில்லையே.. ஐ ஆம் ரேகான்னு இன்ட்ரொடூயூஸ் பண்ணிக்கிட்டா ஷேக் ஹேண்ட் கொடுத்து பிரண்டாக்கனும்ங்கிற மேனர்ஸ் தெரிஞ்ச வங்களா இருக்கீங்களே.. எங்கே நீங்களும் 'தத்தி' போல 'ஸோ வாட்'ன்னு கேட்டு வைச்சிருவீங்களோன்னு பயந்தே போயிட்டேன் தெரியுமா..?"

ரேகாவின் மறைமுகத் தாக்குதலில்..

'இண்ட்ரெஸ்டிங்..' என்று சுவராஸ்யமானாள் யாமினி..

வயலெட்டின் முகம் கன்றி விட்டது..

"மைண்ட் யுவர் வெர்டுஸ் ரேகா.." அவள் வெடித்தாள்..

"எதுக்காக என்னோட வெர்ட்ஸை நான் மைண்ட் பண்ணிக்கனும்னு நீ சொன்னாத் தேவலை வயலெட்.."

"யாருக்கு மேனர்ஸ் இல்லைங்கிற..? நான் ஊருக்கே மேனர்ஸை சொல்லித் தருகிறவ.. என்கிட்டேயாவா..?"

"ஏய்ய்.. அடங்குடி.. மார்னிங் டயத்தில உன்கிட்டயும் ஒருத்தங்க வந்து அவங்க பெயரைச் சொல்லி இன்ட்ரொடுயூஸ் செய்துக்கிட்டா.. நீ ஸோ வாட்டுன்னு கடுப்படிப்பியா..? இதுதான் ஊருக்கே நீ மேனர்ஸ் சொல்லித் தருகிற லட்சணமா..?"

"லுக் ரேகா.."

"'லுக்'கிட்டேன்.. என்ன வியாக்கினத்தைச் சொல்லப் போறியோ.. அதைச் சொல்லித் தொலை.."

"தொலை.. கிலைன்னே.. எனக்கு கெட்ட கோபம் வரும்.."

"உனக்கு நல்ல கோபம் வந்தாத்தான் ஆச்சரியம்.."

அலட்டிக் கொள்ளாத ரேகாவின் பதில்களில்... எப்படித்தான் இவள் எல்லா 'பால்களையும்' 'கேட்ச்..' பிடிக்கிறாளோ என்ற ஆச்சரியம் யாமினிக்கு வந்தது..

அதை கண்டு கொண்ட வயலெட்டின் கோபம் அதிகமானது..

'எவளோ ஒருத்தி.. எங்கிருந்தோ வந்து நிக்கிறா.. இவ அவ முன்னாலே சீன் காட்டி என்னை கலாய்க்கிறாளா..?'

விட்டேனா பார் என்ற வன்மத்துடன் ரேகாவை முறைத்தாள் வயலெட்..

"உன்னைப் போல லெசரான சீட் கிடைச்சா வருகிறவங்க போகிறவங்ககிட்ட குசலம் விசாரிச்சு ஷேக் ஹேண்ட் கொடுத்துக்கிட்டு இருக்கலாம்தான்.. எனக்கு அப்படியாப்பட்ட சீட் வாய்க்கலையே.."

"வேற எப்படியாப்பட்ட சீட் வாய்ச்சிருக்கு ஜோஸபின்..?"

"ரெஸ்பான்ஸிபிளா பதில் சொல்ல வேண்டிய சீட் கிடைச்சிருக்கு.. உன்னைப் போல 'ஓ.பி' அடிக்காம மாங்கு மாங்குன்னு வேலை செய்ய வேண்டிய சீட்.. நாங்க உழைக்கிற வர்க்கம்மா.."

"நான் மட்டும் முதலாளி வர்க்கமா..? நீ உழைக்கிற லட்சணத்தை வெளியில சொல்லிராதே."

"ஏன்.. ஏன்.. ஏன்..?"

"எதுக்கு இத்தனை ஏன் போடற..?"

"நான் உழைக்கிறேன்.. வெளியில சொல்லறேன்.. அதில உனக்கு என்னடி அப்ஜெக்சன்..?"

"உன் உழைப்பைப் பத்தி இந்த ஆபிஸீக்கே தெரியுமே.. எப்பப் பார்த்தாலும் போனை காதில கம் போட்டு ஒட்ட வைச்சுக்கிட்டிருக்கிற உழைப்பு.."

"ஹலோ... ரிசப்னிஸ்ட்டுன்னா அப்படித்தான் இருப்பாங்க.."

"எப்படி இருப்பாங்க.. ஆபிஸ் போனில சொந்த விசயத்த பேசிக்கிட்டு எப்பப் பார்த்தாலும் எங்கேஜ் டோனை வர வைச்சுக்கிட்டு இருப்பாங்களா..? உன்னோட அக்கப் போருக்காகவே ஒன்னுக்கு நாலு லைனை எம்.டி கனெக்ட் பண்ணியிருக்கார்.. நீ என்னடான்னா அந்த நாலு லைனிலயும் அட் எ டயத்தில பேசி வைக்கிற.. இதில நீ கின்னஸ் சாதனையே படைச்சிருவடி.."

ரேகாவின் கிண்டலில் யாமினியின் முகத்தில் சிரிப்பு தோன்றியதை வயலெட் ரசிக்கவில்லை.. அவள் ரேகாவை விட்டு விட்டு யாமினியை முறைத்தாள்.. அந்த

நேரம் பார்த்து எதற்காகவோ அந்தப் பக்கம் வந்த தாமோதரன் யாமினியைக் கண்டதும் ஸ்பீடு பிரேக் போட்டதைப் போல அங்கேயே நின்று விட்டான்.. அவன் முகம் கருத்து விட்டது..

'வந்து தொலைச்சிட்டாளா..?'

அவன் யாமினியை முறைத்ததில் வயலெட்டின் முறைப்பு மாறிவிட்டது..

அத்தியாயம் - 55

எங்கே நீ சென்றாலும்

அங்கே நான் ஏன் வருகின்றேன்..?

நீ சொன்ன வார்த்தைகள்..

நிழலாகத் தொடர்கின்றனவே..

அரசியலில் மட்டுமல்ல.. வாழ்விலும் நட்பும், பகையும் நிரந்தரமானதல்ல.. எதிரிக்கு எதிரி நண்பன் என்ற சாணக்கியனின் வாக்கு எக்காலத்திற்கும் பொருத்த மானது..

யாமினியைக் கண்டவுடன் தாமோதரனின் முகம் விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல மாறியதைக் கண்டுவிட்ட வயலெட் கள் குடித்த குரங்கானாள்..

'ஆஹா.. இந்த தாமுவுக்கு இந்தப் பொண்ணைக் கண்டா ஆகாதுல்ல..'

இண்டர்வியூவை நினைவுக்கு கொண்டு வந்த வயலெட்.. யாமினியை அடையாளம் கண்டு கொண்டாள்..

"அட..! நீங்களா..!"

ஆண்டாண்டு காலமாக பழகிய தோழியைக் கண்டு விட்ட பாவனையுடன் உற்சாகமாக யாமினியின் கையைப் பற்றி அவள் குலுக்கியதும் யாமினிக்கு

தான் காண்பது கனவா.. அல்லது நனவா என்ற சந்தேகம் எழுந்து விட்டது..

ரேகாவோ இமை கொட்டி விழித்தாள்..

என்னதான் வயலெட் ஒரு கணக்கில் சேர்த்துக் கொள்ள முடியாத பிரகிருதி என்றாலும்.. முறைத்துக் கொண்ட பெண்ணுடன் உடனடியாக கூட்டணி போடும் ரகமில்லை..

'திடிர்ன்னு எப்படி மலையிறங்கிட்டா..?'

ரேகா தலைமுடியைப் பிய்த்துக் கொள்ளாத குறையாக யோசித்து ஓய்ந்து விட்டாள்.. வயலெட்டின் திடிர் கூட்டணியைக் குறித்து தாமோதரனுக்கு எவ்விதமான ஆச்சரியமும் ஏற்படவில்லை..

"இனம் இனத்தோடு.." ரேகாவிடம் சொன்னான் அவன்..

'தாமு என்கிட்டப் பேசிட்டாரா..?' ரேகா மகிழ்ந்து போனாள்..

"இருக்கிற கடுப்பு போதாதுன்னு எங்கிருந்தோ கடுப்பு கிளம்பி வந்துச்சாம்.."

தாமோதரன் தொடர்ந்து சொன்ன பொன் மொழியின் அர்த்தம் என்னவாக இருக்கக் கூடும் என்று ரேகாவிற்கு ஒரு மண்ணும் விளங்கவில்லை..

அதைப் புரிந்து கொண்ட வயலெட் இகழ்ச்சியாக சிரித்து வைத்தாள்..

'இதுவே களி மண்ணு.. இதுக்கு எந்த மண்ணு புரியப் போகிறது..?' என்பதுவே அவளது மைண்ட் வாய்ஸாக இருந்து வைத்தது..

ரேகா வயலெட்டின் மைண்ட் வாய்ஸை படித்து விட்டாள் என்பது.. பதிலுக்கு மைண்ட் வாய்ஸை உணர்த்திய அவளது சிவந்த விழிகளில் இருந்தே தெரிந்தது..

'உனக்குத் தெரியுதில்ல..? அத்தோடு நிறுத்திக்க.. அந்த மண்ண தெரிஞ்சுக்கிட்டு எனக்கு ஆகப் போகிறது எதுவுமில்ல..'

அடிப்போடி பைத்தியக்காரி.. நான் அறியாதவளா உன்னைத் தெரியாதவளா என்ற பாவனையில் ரேகா உதாசீனமாக உதட்டைச் சுழிக்க வயலெட் உஷ்ணமானாள்..

அந்த உஷ்ணத்தை ரேகாவிடம் காட்ட முடியாமல் தாமோதரனிடம் காண்பித்தாள்..

"எதுவா இருந்தாலும் நேரடியாகச் சொல்லுங்க ஜி.எம். சார்.."

"ஏன்..? போனில சொன்னா கேட்டுக்க மாட்டிங் களா..? உங்களுக்கு போனில் பேசினாத்தானே பிடித்தமா இருக்கும்..?"

தாமோதரன் உடனடியாக வயலெட்டின் மூக்கை உடைத்ததில்..

"ஹா.. ஹா.." என்று சிரித்து மகிழ்ந்து போனாள் ரேகா..

"எதுக்காகடி இப்படி வயிற்றைப் பிடிச்சுக்கிட்டு சிரிச்சு பயமுறுத்தற..?" தாமோதரனை விட்டு விட்டு ரேகாவின் மேல் பாய்ந்தாள் வயலெட்..

"நம்ம ஜி.எம். சார் செம ஜோக் சொன்னாரே.."

"அது ஜோக்கு..?"

"உனக்கு ஜோக்கில்லம்மா.. எனக்கு ஜோக்காத்தான் தோணுச்சு.. ஹா.. ஹா.. நம்ம ஜி.எம் சாருக்கு நல்ல ஹியுமர் சென்ஸ், தெரியுமா..?"

"தெரியாது.."

பற்களை நறநறத்தபடி தாமோதரனைப் பார்த்தாள் வயலெட்.. அவனோ அவளைவிட அதிகமாக பற்களை நறநறத்தபடி யாமினியை முறைத்துக் கொண்டிருந்தான்.

'என்னடா இது..' இவன்தான் மத்தவங்களை கடுப்பேத்துவான்.. இவனையே இவ கடுப்பேத்தறான்னா பொண்ணு செம கில்லாடிதான்..

வயலெட் யாமினிக்காக சேரை இழுத்துப் போட்டு..

"உட்காருங்க.." என்று உபசரித்தாள்..

"ஆமாமாம்.. இல்லைன்னா இவங்களுக்கு கால் வலிச்சுரும்.."

இடக்காகச் சொன்ன தாமோதரனை முறைத்தபடி வயலெட் இழுத்துப் போட்ட சேரில் உட்கார்ந்தாள் யாமினி..

கோட்டை சரி செய்த வண்ணம் அலுவலகத்தில் நுழைந்த சித்தார்த்.. எதிர்பட்டவர்களின் காலை வணக்கத்திற்கு தலையை அசைத்தபடி கம்பீரமாக நடந்து வந்தான்..

இயல்பாக வயலெட்டின் சீட்டைப் பார்த்தவன் பிரேக் பிடித்ததைப் போல அப்படியே நின்று விட்டான்.. வயலெட்டின் அருகே உட்கார்ந்திருந்த யாமினி

அவனைக் கண்டதும் மரியாதை நிமித்தம் எழுந்து நின்றாள்..

'இப்ப என்ன செய்கிறது..?'

அவளுக்கு குழப்பமாக இருந்தது.. சித்தார்த்தன் அவளுடைய முதலாளி.. ஆனால்.. அவனிடம் பணிவைக் காட்ட அவளால் முடியவில்லையே.. அது ஏன்..?

சித்தார்த்தனுக்கும் அதே நிலைதான்.. வயலெட் டிடமும்.. ரேகாவிடமும் காட்டும் கண்டிப்பை யாமினியிடம் காட்ட

இயலாமல் நட்புடன் சிரித்து வைத்தான்..

'அப்பாடா..!'

விடுதலை உணர்வுடன் பதிலுக்கு சிரித்து வைத்த யாமினியை முறைத்து வைத்தான் தாமோதரன்..

"ரேகா.."

தாமோதரனின் திடிர் அழைப்பில் புளகாங்கிதப் பட்டுப் போனாள் ரேகா.. அவசர அவசரமாக..

"சார்..?..." என்றாள்..

"இவர் நம்ம கம்பெனியின் எம்.டி.."

சித்தார்த்தைக் காட்டி அவன் சொன்ன விவரத்தில் இதை எதற்காக அவளிடம் வேலை மெனக்கெட்டு அவன் சொல்லிக் கொண்டிருக்கிறான் என்று புரியாமல் திகைத்துப் போனாள் ரேகா.. அதை புரிந்து கொண்ட யாமினியின் முகம் மாறியது..

"ஐ நோ சார்.." குழப்பத்துடன் சொன்னாள் ரேகா..

"உங்களுக்குத் தெரிஞ்சது மத்தவங்களுக்கும் தெரியனுமில்ல.. அதான்.. ஞாபகப் படுத்தினேன்.." இடக்காகப் பேசிய தாமோதரனின் பார்வை யாமினியைச் சுட்டது..

'இவனுக்கு எதுக்காக என்மேல இத்தன காண்டு..'

யாமினி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. சித்தார்த்தனுக்கு கோபம் வந்தது.. புருவங்கள் முடிச்சிட அவள் தாமோதரனை முறைத்ததிற்கு யாதொரு பலனும் ஏற்படவில்லை.. அவன் யாரையோ முறைப்பதைப் போல தாமோதரன் முகம் மாறாமல் நின்றிருந்தான்..

"இங்கே ஏன் உட்கார்ந்திருக்கீங்க..? உங்க சீட் இங்கேயில்லை.."

சித்தார்த்தன் தாமோதரனைத் தவிர்த்து விட்டு யாமினியிடம் நேரடியாகப் பேசியதில் வயலெட்டும், ரேகாவும் ஆச்சரியமானார்கள்..

'கதை இப்படிப் போகுதா..? அதான் இந்த முசுடு.. (வயலெட் தாமோதரனை இப்படித்தான் மனதுக்குள் சொல்லிக் கொள்வாள்..) இவ்வளவு காண்டாகுதா..?'

வயலெட்டிற்கு சில்லென்று இருந்தது.. எம்.டியின் இணைபிரியாத நண்பன் என்ற ஹோதாவில்.. வானளாவிய அதிகாரத்துடன் வலம் வந்து கொண்டிருந்த தாமோத ரனுக்குப் போட்டியாக மற்றும் ஒரு நபர் அந்தக் கம்பெனிக்குள் நுழைந்திருப்பதில் அவளுக்கு வானளாவிய சந்தோசம் ஏற்பட்டது..

"எங்கே சார்..?" என்றாள் வயலெட்..

அத்தனை சுவாதீனமாக அவள் சித்தார்த்துடன் உரையாடியதில் தாமோதரன் பல்லைக் கடித்தான்.. சித்தார்த்தன் புருவங்களை நெரித்தான்..

'இப்போ போஸ் கொடு.. இத்தனை நாளா காண்பிச்ச கெத்தை காத்தில பறக்க விட்டுட்டு எவளோ ஒருத்திக்காக நின்று பேசினா இப்படித்தான் வந்து சேரும்..'

சித்தார்த்தனை நான்கு மொத்துக்கள் மொத்தினால் என்ன என்று கோபம்.. கொண்ட தாமோதரனின் சுட்டெரிக்கும் விழிச் சுடர்களைச் சந்திக்காமல் சர்வ ஜாக்கிரதையாக வயலெட்டைப் பார்த்து..

"எங்கேன்னு கொஸ்டின் பண்ணினா என்ன அர்த்தம்..?" என்று எரிந்து விழுந்தான் சித்தார்த்தன்..

"சார்..?" வயலெட் வினயத்துடன் குரல் எழுப்ப..

"'வாட் டு யு மீன்' அப்படின்னு கேட்கிறார்ம்மா எம்.டி.." என்று எடுத்துக் கொடுத்தான் தாமோதரன்..

"அம்மாவா..? யாருக்கு யார் அம்மா..?" வயலெட் சீறினாள்..

"இப்ப இந்தப் பஞ்சாயத்து தேவையா..? நிச்சயமா எனக்கு நீங்க அம்மா இல்லைம்மா.. எங்கம்மா காஞ்சிபுரத்தில ஏகாம்பரேஸ்வரரை கும்பிட்டுக்கிட்டு சத்தமில்லாம இருக்கிறவங்கம்மா.." என்று ஆயிரத்தைந்து 'அம்மா' போட்டான் தாமோதரன்..

"இப்படித்தான் சார்.. நியு ஜாயினிங்கா வந்திருக்கிற வங்களையும் கடுப்பேத்திக்கிட்டு இருந்தார் நம்ம ஜி.எம்... பாவம் இவங்க மிரண்டு போய் முழிச்சுக்கிட்டு நின்னாங்க.."

போட்டுக் கொடுக்கும் வேலைக்கு வெற்றிகரமாக பிள்ளையார் சுழி போட்டாள் வயலெட்..

அத்தியாயம் - 56

உனக்கும் எனக்குமான பந்தம் - இந்த

உலகம் அறியாதது..

உனக்காக நான பிறந்து..

ஊனுருக உனைத் தேடி வந்தேன்..

"கிழிஞ்சது போ.." என்றான் தாமோதரன்..

"என்னடா..?" சித்தார்த்தன் கடுப்புடன் கேட்டான்..

யாமினியை தாமோதரன் மீரள வைத்து விட்ட கோபம் அவனுக்கு.. அதைப் புரிந்து கொண்ட தாமோதரன்..

"தேவைதாண்டா எனக்கு.." என்றான்..

"நம்ம ஜி.எம் சாருக்கு எது தேவையோ இல்லையோ.. இவங்க தேவையில்லைன்னு நினைக்கிறார் போல இருக்கு சார்.."

போட்டுக் கொடுக்கும் புண்ணிய வேலையை செவ்வனே செய்து முடிக்க ஊடே புகுந்தாள் வயலெட்..

"நீங்க நடத்துங்கம்மா.." தாமோதரன் வழிவிட்டான்..

"இதைத்தான் நான்.. 'எங்கே சார்..'ன்னு சொன்னேன் சார்.."

"கேட்டுக்கப்பா சித்தார்த்தா.. 'வாட் டு யு மீன்'ங் கிறதுக்கான 'மீனிங்' இதுதானாம்ப்பா.. பாவம்.. நம்ம ரிசப்சனிஸ்ட் அம்மாவுக்கு எம்புட்டு மூச்சு வாங்குதுன்னு பாரு.. அதனால இந்த மீனிங்கை புரிஞ்சுக்கிட்டு.. மேற் கொண்டு எந்த மீனிங்கையும் கேட்காம விட்டிருப்பா.." பரிந்துரை செய்தான் தாமோதரன்..

"இன்னும் நான் முடிக்கலை.." வயலெட் அறிவித்தாள்..

"ஓ..! 'இன்னும்' இருக்கா..?" அர்த்த புஷ்டியுடன் 'இன்னும்' என்ற வார்த்தைக்கு அழுத்தம் கொடுத்துக் கேட்டான் தாமோதரன்..

"நிறைய இருக்கு.."

"பாருடா.. ரிசப்சனிஸ்ட் வேலையக்கூட இத்தனை ஆர்வமா பொறுப்பா இவங்க செஞ்சிருக்க மாட்டாங்க.. போட்டுக் கொடுக்கிற வேலையில எத்தனை ஆர்வம்..!" தாமோதரன் பாராட்டினான்..

"நான் ஏன் போட்டுக் கொடுக்கனும்..? உண்மை யைத்தான் சொன்னேன்.." மூக்கை விடைத்தாள் வயலெட்..

"ஆமாமாம்.. நீங்க பெரிய உண்மை விளம்பிதான்.. இந்த ஆபிஸ்ல வந்து சேர்ந்த நாள் முதலா நீங்க தினமும் விளம்பற உண்மைகள நான் கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன்.." அதற்கும் பதிலடி கொடுத்தான் தாமோதரன்.

"உங்களிடம் எனக்குப் பேச்சில்லை சார்.."

"சந்தோசம்.."

"ஜி.எம் சார் முறைச்ச முறைப்பில நடுங்கிப் போய் நின்னவங்களப் பாக்கப் பாவமா இருந்துச்சு சார்... அதான் நீங்க வருகிற வரைக்கும் இவங்களை காபந்து பண்ணலாமேன்னு சேர் போட்டு உட்காரச் சொன்னேன்.. தப்பா சார்..?"

அவள் இமைகளைக் கொட்டிக் கேட்ட விதத்தில் தாமோதரனுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.. அப்படியே அவளது கன்னங்களைப் பற்றி இனிமேல் இப்படி இமை

கொட்டுவாயா..? இமை கொட்டுவாயா..? என்று நான்கு அப்புக்களை அப்ப வேண்டும் போல வெறி கிளர்ந்தது..

"தப்பே இல்லைம்மா.." என்ற தாமோரன் வயலெட் எதிர்பார்க்காத ஒன்றைச் செய்தான்..

"ரேகா.."

அந்த அழைப்பில் 'போச்சுடா..' என்ற மானசீகமாக தலையில் கை வைத்தாள் வயலெட்.. தாமோதரனின் அழைப்புக்கு ரேகா என்ன பதிலைச் சொல்வாள் என்று அவளுக்கா தெரியாது..?

'இவதான் இந்த முசுடு எப்பக் கூப்பிடுவான்னு காத்துக்கிட்டு இருக்காளே.. இது பத்தாதா..?'

"சார்.." ரேகா வயலெட்டின் கணிப்பை மெய்யாக் கினாள்..

"இந்த நியு ஜாயினிங்.."

தாமோதரன் யாமினியின் பக்கம் கை காட்ட..

"ஏண்டா..? அவங்களுக்குன்னு பெயர் இல்லையா..?" என்று கடுப்பானான் சித்தார்த்தன்..

"பொறுடா.. இப்ப இவங்களை எந்தப் பெயர் சொல்லிக் கூப்புடுறோம்ங்கிறது முக்கியமில்ல.. நம்ம சின்சியாரிட்டி ரிசப்சனிஸ்ட் எந்த லட்சணத்தில இவங்களை இன்வைட் பண்ணினாங்க என்கிறது தான் முக்கியம்.."

"என்னவோ செய்து தொலை.."

"சொல்லுங்க ரேகா.. இந்த நியு ஜாயினிங்.. வந்தப்ப நான் இங்கே இருந்தேனா..?"

"இல்லையே சார்.. நீங்க உங்க கேபினுக்குப் போயிட்டிங்களே.. இவங்க வந்தப்ப நானும் வயலெட்டும் தான் இங்கே இருந்தோம்.. இவங்க வந்தாங்க.. ஐ ஆம் யாமினின்னு வயலெட்கிட்ட இன்ட்ரொடியூஸ் பண்ணிக் கிட்டாங்க.. இவ உடனே 'ஸோ வாட்..'டுன்னு இவங்களை கடுப்படிச்சு வைச்சா. நான்தான் இவங்களை ரிஸீவ் பண்ணிப் பேசிக்கிட்டு இருந்தேன்.. வயலெட்டைக் கூடக்

கண்டிச்சேன்.. ரிசப்சனிஸ்ட் போஸ்டில இருக்கிறவ ஆபிஸ்க்கு வருகிற வங்ககிட்ட சிரிச்ச முகமா பதில் சொல்ல வேணாமா..? எங்கே சார்..?"

வயலெட் சித்தார்த்தனிடம் கேட்ட 'எங்கே சார்..?' இடம் மாறி வாகாக ரேகாவிடம் வந்து அமர்ந்து கொண்டதில்.

"கேட்டுக்கடா சித்தார்த்..! கைக்கு கை மாறுவது பணம் மட்டுமில்ல.. வார்த்தைகளும்தான்.." என்றான் தாமோதரன்..

எது இன்று உன்னுடையதோ.. அது நாளை மற்றொருவருடையதாகும் என்ற பரந்தாமனின் வாக்கு வேறு எதற்குப் பொருந்துகிறதோ இல்லையோ.. படைக்கப் படும் வார்த்தைகளுக்கு மிகச் சரியாக பொருந்தி வருகின்றது..

இப்போதெல்லாம் நெற்றியடியான வார்த்தைகளுக்கு யாரும் வேலை மெனக்கெட்டு யோசித்துக் கொண்டிருப் பதில்லை.. மற்றவர்கள் சொல்லி வைத்திருப்பதை புரட்டிப் பார்த்து அதில் உள்ள வார்த்தைகளை 'கொக்கு' கவ்வுவதைப் போல கவ்விக் கொண்டாலே போதும் என்ற நிலை வந்து விட்டது..

இதைச் செய்வதற்கு அவர்கள் ரோசம் பார்ப்ப தில்லை.. இதைச் செய்து விட்டாயே என்று கேட்டு விட்டால் மட்டும் எப்படி என் திருட்டுத்தனத்தை நீ சுட்டிக் காட்டலாம் என்று வரிந்து கட்டிக் கொண்டு சண்டைக்கு வந்து விடுவார்கள்..

இது எத்தர்களுக்கான உலகம்..! அவர்களே இவ்வுலகில் வலியவர்கள்..! அனைத்து ஆளுமைகளையும் கையகப் படுத்தியுள்ளவர்கள்.. எந்த சட்ட திட்டங்களும் அவர்களைக் கட்டுப் படுத்தாது.. அவர்களின் ராஜாங்கம் தனியானது.. நிழல் உலகத்தில் கூட சில வரைமுறைகள் இருக்கும்.. இவர்களிடம் அவையும் இருக்காது.. ரத்தம் குடிக்கும் காட்டேரிகளும் இவர்களும் வேறு.. வேறல்ல..

ரேகா பாவம்.. இதைப் போல ஒன்றும் வார்த்தை களைக் களவாடி விடவில்லை.. இன்னும் சொல்லப் போனால்

வயலெட் சொல்லி விட்டாள் என்பதற்காகவே அந்த வார்த்தையைப் புறக்கணித்து விடும் இயல்பு டையவள்..

இருந்தும் அவள் 'எங்கே சார்..?' என்று வயலெட் கூறிய வார்த்தைக்கு மறு வடிவம் தந்தாள் என்றால் அதற்கான காரணம் வயலெட்டைக் கடுப்படிப்பது மட்டுமே..

"இந்த எங்கே சாருக்கான மீனிங் என்னங்க ரேகா..?"

தாமோதரனின் கேள்வியில்..

'என்னைப் பார்த்தா மட்டும் 'அம்மா..' போடறான்.. இவகிட்ட மட்டும் 'என்னங்க..' போடறான்.. எம்புட்டுக் கொழுப்பு..!' என்று காண்டானாள் வயலெட்..

"மீனிங் இதுதான் சார்.. வந்திருக்கிற நியு ஜாயினிங்க வயலெட் ரிஸீவ் பண்ணவேயில்லை.. எடுத்த எடுப்பில 'ஸோ வாட்'டுன்னு இவ கடிச்ச கடியில இவங்க வேலையிலே ஜாயின் பண்ணவே வேணாம்ன்னு திரும்பி ஓடிறப் பார்த்தாங்க.. நான்தான் ஹாய்..! ஐ ஆம் ரேகான்னு இவங்களுக்கு கைகொடுத்து பிரண்ட்லிhயப் பேசி இவங்க ஓடறத நிப்பாட்டி பிடிச்சு வைச்சேன்.. என்ன மாயமோ.. என்ன மந்திரமோ

தெரியலை சார்.. நீங்க வந்தவுடனே வயலெட்டோட மூடே மாறிருச்சு.. ஸோ வாட்டுன்னு கேட்டுத் துரத்தப் பார்த்தவங்களுக்கு சீட் போட்டு உட்கார வைச்சா.."

ரேகாவின் நீண்ட நெடும் விளக்கத்தை..

"கேட்டுக்கிட்டியாடா..?" என்றான் தாமோதரன்..

சித்தார்த்தன் வயலெட்டை முறைத்தான்.. அது போன்ற பல முறைப்புகளுக்குப் பழக்கப்பட்டுப் போயிருந்த வயலெட் புன்னகை மாறாமல் நின்று தனது தடித்த தோலின் கடினத்தை மெய்ப்பித்தாள்..

'இதுக்கெல்லாம் ரோசப்பட்டா வேலைக்கு ஆகுமா..?'

அவள் இதைப் போன்ற பல பதிலடிகளைப் பார்த்தவள்.. எதற்கும் அயராமல் வேலையைக் காப்பாற்றிக் கொள்ளும்

வித்தையை அறிந்தவள்..

"நீங்க வாங்க யாமினி..!"

"இவங்களை எதுக்குடா டிஸ்டர்ப் பண்ற..?"

"கடுப்படிக்காத தாமு.."

"அதைத்தான் காலங்கார்த்தாலேயில இருந்து மாறி மாறி செய்துக்கிட்டு இருக்கோமே.."

"இவங்க என்னோட பெர்சனல் செகரட்டரி.."

"இருக்கட்டுமே.. அதுக்காக அக்கவுண்ட்ஸ் செக்சனுக்குப் போயி ஜாயினிங் ரிப்போர்ட்டைக் கொடுக்காம நேரா வேலையைப் பாக்க முடியுமா..?

ரூல்ஸ் அண்ட் ரெகுலேசன்ஸ்ன்னு இருக்கிறதெல்லாம் எதுக்காக..?"

"இப்ப என்னதாண்டா சொல்ற..?"

"நீ வேலையைக் கொடுக்கனும்னு சொன்ன.. கொடுத்தாச்சு.. இவங்களும் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரைக் கையில பிடிச்சுக்கிட்டு வந்தாச்சு.. இதுக்கு மேலே என்ன..? இவங்க ரூல்ஸ்படி ஜாயினிங் ரிப்போர்ட்ட கொடுக்கட்டும்.. அதுக்கப்புறமா இவங்க சீட்டில வந்து உட்காரட்டும்.."

ஒவ்வொரு வார்த்தைகளையும் யாமினியைப் பார்த்தபடியே தாமோதரன் சொல்லி வைத்ததில் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸில் அவனுக்கிருக்கும் அசைக்க முடியாத செல்வாக்கை உணர்ந்து கொண்டாள் யாமினி..

'இவன் யாரா இருந்தா எனக்கென்ன..?'

எரிச்சலுடன் ஜாயினிங் ரிப்போர்ட்டைக் கொடுத்தவள் வெற்றிகரமாக சித்தார்த்தனின் பெர்சனல் செக்கரட்டரி வேலையில் உட்கார்ந்து விட்டாள்..

தாமோதரனின் மனது ஒரு நிலையில் இல்லாமல் தவிக்க ஆரம்பித்தது.. யாமினியைக் கண்டவுடன் சித்தார்த்தனின் முகத்தில் ஆயிரம் கோடி பல்புகள் ஒளிர் விடுவது ஒரு

புறத்தில் இருந்தாலும்.. அதைப் போன்ற ஓர் நூதன உணர்வு தாமோதரனையும் பிடித்து ஆட்டி வைப்பதில் அவன் பயந்து போயிருந்தான்.. ஆண்டாண்டு காலமாக யாமினியை அவன் அறிந்திருப்பதைப் போல ஏன் தோன்றி வைக்கிறது என்று அவனுக்கேப் புரியவில்லை.. யாமினியை அருகில் வைத்துக் கொண்டு உருப்படியாக வேலைகளைக் கவனித்து விட முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை.. ராக்கெட் வேகத்தில் உயர்ந்து கொண்டிருக்கும் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியின் வளர்ச்சியை யாமினியின் வரவு பாதித்து விடுமோ என்று கலங்கினான் தாமோதரன்..

இந்தக் கலக்கமெல்லாம் சித்தார்த்தனுக்கு இல்லை.. அவன் அருகில் உட்கார்ந்திருந்த யாமினியை நொடிக்கொரு தடவை பார்த்துக் கொண்டிருப்பதையே பிழைப்பாக வைத்திருந்தான்..

யாமினியும் சளைக்கவில்லை.. என்னவோ... அவள் வேலை பார்க்கப் போகும் சீட்டின் அனைத்து வேலைகளையும் தெள்ளத் தெளிவாக கரைத்துக் குடித்திருப்பதைப் போல சீன் காட்டியபடி கம்யூட்டரின் திரையை உற்று உற்று பார்ப்பதும்.. நிமிர்ந்து சித்தார்த்தனின் முகத்தை உற்று உற்றுப் பார்ப்பதுமாக பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தாள்.. இதில் கன்னச் சிகப்பு வேறு..

'கிழிஞ்சது போ..' வெறுத்துப் போய் விட்டான் தாமோதரன்.. சித்தார்த்தனின் பின்னால் போய் அவன் என்னத்தை எழுதிக் கொண்டிருக்கிறான் என்று எட்டிப் பார்த்தான்..

'முக்கியமான லெட்டர்ஸீக்கு ரிப்ளையை எழுதுகிறானோ..'

அடிமனதில் ஏகத்துக்கும் பேராசை வேறு அவனுக்கு.. சித்தார்த்தன் எழுதிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவனுக்கு கொலைவெறி வந்து விட்டது...

'என் பார்வையில்

உன் கன்னத்தில்

ரோஜாக்கள் பூக்கின்றனவே..

நீயென்ன ரோஜாத் தோட்டமா..?'

தலையில் கை வைத்து உட்கார்ந்து விட்டான் தாமோதரன்..

அத்தியாயம் - 57

நிழல்கூட நிஜமாகும்

தருணங்கள் கைகூடும்..

சொல்லாமல் மறைத்தவைகளில்

உறைந்திருக்கும் உண்மை கோடி..

ஸ்கூட்டியின் சப்தத்தைக் கேட்டதும் வாசல் கேட்டைத் திறந்து விட்ட அனுராதாவின் செய்கையில் மனம் நெகிழ்ந்தாள் யாமினி..

மகளின் வரவுக்காக அன்றைய நாள் முழுதும் அனுராதா காத்திருந்திருக்க வேண்டும்.. அதனால் தான் தெருமுனையில் கேட்ட ஸ்கூட்டியின் சப்தத்தை அவளால் இனம் கண்டு வாசலுக்கு வந்திருக்க முடிந்திருக்கிறது..

அனுராதாவின் பார்வை முகத்தை மொய்ப்பதை உணர்ந்தும் உணராதவளைப் போல யாமினி ஸ்கூட்டியின் வேகத்தை மிதப் படுத்தி உள்ளே ஓட்டிச் சென்று நிறுத்தினாள்..

வாசல்கேட்டை மூடிவிட்டு வந்த அனுராதாவைப் பின்தொடர்ந்து வீட்டுக்குள் போனாள்... ஆராயும் அனுராதாவின் பார்வையைச் சந்திக்காமல்..

"அப்பாவும், யதுவும் வந்தாச்சாம்மா..?" என்று கேட்டாள்..

"வந்திருந்தா அவங்களோட வண்டிக நின்னிருக் கனுமே.. நீ ஸ்கூட்டியை நிறுத்தினப்போ.. போர்டிகோ காலியாத்தான இருந்துச்சு..? அப்புறமும் கேக்கிற பாரு கேள்வி..! இப்புடியெல்லாம் கேக்க உன்னாலதான்டி முடியும்.."

"சரிம்மா.. தெரியாம கேட்டுட்டேன்.. போதுமா.."

"பாக்காம கேட்டுட்டன்னு சொல்லு.."

"ஓகே.. ஓகே.. பாக்காம கேட்டுட்டேன்.."

"இதையே பாக்காதவ வேலையை எப்படிடீ கவனமா பாத்திருக்கப் போற..?"

யாமினி பேசவில்லை.. அனுராதா இப்படித்தான் பேசுவாள் என்று கசப்புடன் நினைத்துக் கொண்டாள்.. அவளால் இப்படித்தான் பேச முடியும்.. அவளை இப்படி பேச வைத்தது யாமினியின் செய்கைகள்தான்.. இதில் அனுராதாவை எப்படிக் குற்றம் சொல்ல முடியும்..?

"வேலை எப்படிப் போச்சு..?"

'ஒரே அடிதடியாய் போச்சு..'

சொல்லாமல் மனதில் நினைத்துக் கொண்டாள் யாமினி.. அன்று முழுவதும் அப்படித்தான் இருந்தது.. சித்தார்த்தனின் பெர்சனல் செக்கரட்டரி என்றுதான் பெயர்.. அவனுடைய அறையில் சித்தார்த்தனுடன் கோந்து இல்லாமல் ஒட்டிக் கொண்டிருந்த தாமோதரன்தான் யாமினிக்கு வேலை சொன்னான்.. அதைச் செய், இதைச் செய் என்று.. ஒரு மாத காலமாக பெண்டிங்கில் இருந்த அத்தனை வேலைகளையும் அவள் தலையில் கட்டி விட்டுப் பிழிந்து எடுத்து விட்டான்.. தெரியாத வேலைகளை கற்றுக் கொடுக்கவும் இல்லை.. யாமினியாக கற்றுக் கொள்ள கால அவகாசமும் கொடுக்கவில்லை.. போதாக்குறைக்கு அவளை மட்டம் வேறு தட்டினான்..

"இதுகூடத் தெரியாம நீங்க எப்படி வேலைக்கு வந்தீங்க..?"

தாமோதரனுடைய தலையாய குறிக்கோள் என்னவாக இருக்கக்கூடும் என்று யாமினிக்கு உள்ளங்கை நெல்லிக் கனியைப் போலத் தெள்ளத்தெளிவாக தெரிந்தது..

அந்த வேலையை அவளால் பார்க்க முடியாது என்று தோல்வியை ஒப்புக் கொண்டு.. அவள் தானாகவே வேலையை ரிசைன் பண்ணி விட்டு ஓடி விடவேண்டும்..

'அதுதான் நடக்காது..'

யாமினி மனதுக்குள் சூளுரைத்தபடி வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தாள்.. அவளாக அனுமானம் பண்ணி.. இந்த வேலையை இப்படித்தான் முடிக்க வேண்டும் போல என்று தன் போக்கில் செய்து கொடுத்த வேலைகள் கரெக்டாக இருந்து தொலைத்ததில் தாமோதரனுக்கு வெறி வெறியாக வந்ததை அறிந்தும் அறியாதவளைப் போல அன்றையப் பொழுதை ஓட்டியிருந்தாள்..

அப்படியெல்லாம் வன்பாடு பட்டு கிடைத்த வேலையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமெல்லாம் யாமினிக்கு இல்லை.. இன்னும் சொல்லப் போனால்.. இனம் விளங்காத உணர்வுகளைத் தூண்டிவிடக் கூடிய சித்தார்த்தனின் அருகாமையிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்றே அவள் நினைத்தாள்..

அவனுக்கும் அவளுக்கும் இடையில் உள்ள பந்தத்தின் பெயர் என்ன..? எவ்வாறு அந்த பந்தம் உருவானது என்று தலையைக் குடையும் கேள்விகளுக்கு விடை தேடி அலைவதை விட.. அவனது அருகாமையி லிருந்து தப்பி ஓடி விடுவதே உசிதமானது என்று தான் அவளுக்குத் தோன்றி வைத்தது..

ஆனால் அதை அவளாகச் செய்ய வேண்டும்.. தாமோதரனின் டார்ச்சருக்குப் பயந்து கொண்டு செய்யக் கூடாது..

இதைக் கூறினால் அனுராதாவின் கவலை அதிகரிக்காதா..?

சித்தார்த்தனைச் சந்தித்ததைப் பற்றியோ.. அவனுக்கும்.. அவளுக்கும் இடையில் ஏதோ ஓர் இனம் புரியாத பந்தம் இருப்பதைப் போல.. அவர்கள் இருவருமே உணர்வதைப் பற்றியோ அவள் அனுராதாவிடம் சொல்லவே இல்லை..

அதற்குப் பின்பும் சித்தார்த்தனின் கம்பெனிக்கு இண்டர்வியூக்கு சென்றபோது நடந்த நிகழ்வுகளையும் அவள் அனுராதாவிடம் சொல்லாமல் மறைத்திருந்தாள்..

இத்தனைக்கும் மேலாக இண்டர்வியூவில் ஏற்பட்ட மோதலுக்குப் பின்னரும் அவளுக்கு அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர் கிடைத்து விட்டது என்பதையும் அவள் சொல்லவே இல்லையே..

இப்படி அனைத்தையும் மறைத்து விட்டு.. இப்போது அவற்றைச் சொன்னால் அனுராதா மகளைச் சும்மா விடுவாளா..?

"ஏற்கனெவே நீ மெகாலு பிடிச்சத்தனமா இருந்து வைக்கிற.. இந்த லட்சணத்தில நீ சொல்றதையும் காதில போட்டுக்கிட்டு உன்னைப் போலவே யோசிச்சு வைக்கிற ஒருத்தன் பக்கத்தில நாள் முழுக்க உக்காந்து வேலை செய்யனும்ன்னா வேற வினையே வேணாம்.. முதல்ல இந்த வேலைக்கு தலை முழுகு.." என்று சொல்லி விடுவாள்..

அதற்காகத்தானே அங்கே தாமோதரன் காத்திருக் கிறான்.. வேலைக்குச் சேர்ந்த முதல்நாளிலேயே அவனை வெற்றி பெற விட்டு விடுவதா..?

"கேட்டது காதில விழுகலையா..?" அனுராதா அதட்டினாள்..

'அம்மா என்னத்தைக் கேட்டாங்க..?'

அதற்குள் அதை மறந்து விட்டிருந்த யாமினி திருதிருத்தாள்..

"இன்னைக்கு வேலை எப்படிப் போச்சு..?"

அனுராதாவே அவள் என்ன கேட்டாள் என்பதைச் சொல்லிவிட..

'அப்பாடி.. அம்மாவே சொல்லிட்டாங்க..' என்ற நிம்மதியுடன்..

"ம்ம்ம்.. ஏதோ போச்சும்மா.." என்று அசுவராஸ்யமாய் பதில் சொன்னாள் யாமினி..

"ஏதோ போச்சுன்னா..?" அனுராதாவின் பார்வை மகளைத் துளைத்தது..

"போச்சுன்னா.. போச்சுதான்.." அலுப்புடன் பதில் சொன்னாள் யாமினி..

"உனக்குப் பிடிக்கலையா..?" அனுராதா விடவில்லை.. குடைந்தாள்..

"எதைம்மா..?"

"வேலையை.."

"அப்படின்னு சொல்ல முடியாது.. வேலை பிடிச்சிருக்கு.. பட்.."

"வேலை செய்கிற ஆபிஸைப் பிடிக்கலையா..?"

"அதுவும் பிடிச்சிருக்கும்மா.. பட்.."

"ஆனா..? என்னடி..?"

"அந்த சிச்சுவேசன் பிடிக்கலைம்மா.. நைநைன்னு இருக்கு.."

"அவ்வளவுதானே.."

நிம்மதியானாள் அனுராதா.. அவளுடைய மகள் ஒருநாள் முழுவதும் ஒரே இடத்தில் கால்பதித்து தங்கி.. ஒரே வேலையில் மனதைச் செழுத்தி.. அதைச் செய்து முடித்ததே பெரிய விசயம் என்பது அவளுக்கு தானே தெரியும்..?

நிச்சயமாய் போன சுருக்கில் மகள் வீட்டுக்கு ஓடி வந்து விடுவாள் என்றுதான் திடமாக அவள் நம்பினாள்..

அந்த நம்பிக்கையைத் தூள்தூளாக்கிவிட்டு தங்கம், தங்கமாய் வேலை பார்த்து வெற்றிகரமாய் ஒரு நாளைக் கழித்து விட்டு வந்திருக்கும் மகளுக்கு வீர.. திலகமிட அவள் தயார் நிலையில் இருந்தாள்..

"என் செல்லம்டி நீ.. வேலை செய்கிற ஆபிஸ் உனக்கு இன்னும் பழகலைல்ல.. அதனாலதான் செட் ஆகாம சிச்சுவேசன் சரியில்லைன்னு தோணுது.. இங்கே அப்பாவும், யதுவும் வேலைக்குப் போனதும் தனியாவே இருந்து பழகிட்டேல்ல.. அதனால அப்படித்

தோணியிருக்கும்.. வேற ஒன்னுமில்லடி.. இடம் பழகிட்டா இந்த ஃபீலிங் மாறிரும்.."

உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டே வந்த அனுராதாவுக்கு ஏதோ ஒன்று உறுத்தியதில் அவள் யோசனையாக மகளைப் பார்த்தாள்.. அதில் யாமினியின் அடிவயிறு கலங்கியது.. அனுராதா சும்மாவே ஆயிரம் கேள்விகளைக் கேட்பாள்.. இந்த லட்சணத்தில் யோசனை வேறு செய்து விட்டு கேள்விகளைக் கேட்டுத் தொலைத்தால் யாமினி தாங்குவாளா..? இப்போது என்னத்தைக் கேட்கப் போகிறாளோ..

"யாமினி.."

"அம்மா.."

"அங்கே சிச்சுவேசன் சரியில்லைங்கறியே.. யாராவது தப்பான ஆளுக.. எக்குத்தப்பா பேசி வைக்கிறாங்களா..?"

அனுராதாவின் கேள்வியில் தூக்கிவாரிப் போட..

"சேச்சே.." என்று மறுத்தாள் யாமினி..

தாமோதரன் அடாவடிக்காரன்தான் என்றாலும் கண்ணியமானவன்.. சித்தார்த்தனைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. இவர்கள் இருக்கும் இடத்தில் தவறு நிகழுமா..?

"நோ சான்ஸ்.. அங்கே வேலை செய்கிறவங்க தங்கத்திலும் தங்கம்மா.."

யாமினி கொடுத்த சர்டிபிகேட்டில் அனுராதாவின் நிம்மதி மீண்டது.. அதைப் போன்ற அமைதியுடன் அம்மாவை என்றுமே கண்டதில்லை என்பதில் யாமினிக்குள் பாசம் சுரந்தது..

'என் அம்மா..' அவள் மனம் நெகிழ்ந்தாள்..

"சரி.. சரி.. வளவளன்னு பேசிக்கிட்டு நிக்காம.. போயி குளிச்சு டிரெஸ் சேன்ஜ் பண்ணிக்கிட்டு வா.. உனக்குப் பிடிச்ச டிபனும், காபியும் ரெடியா இருக்கு ஓடு."

அனுராதா மகளைத் துரத்தியதில்.. வளவளவென்று பேசியது அவளா இல்லை யாமினியா என்ற குறுஞ்சிரிப்புடன் தன் அறைக்குள் போனாள் யாமினி..

அத்தியாயம் - 58

சொல்லத்தான் ஓடி வந்தேன்..

சொந்தமென நீயும் இல்லை..

காற்றோடு கலந்து போனது..

கடந்த காலக் காதலா..?

யாமினி குளித்து உடைமாற்றி வந்தபோது.. பிரதாப்பும், யதுநந்தனும் வந்திருந்தார்கள்.. பிரதாப் அனுராதாவைப் போலவே..

"வேலை எப்படி இருந்தது..?" என்று கேட்டார்..

யதுநந்தன் மட்டும் வித்தியாசமாக..

"உன்கிட்ட அந்த வேலை என்ன பாடு பட்டுச்சு..?" என்று கேட்டு வைத்தான்..

"உன்கிட்ட உன் வேலை பாடுபடறதைவிட அதிகமா ஒன்னும் பட்டுடலை.." யாமினி பதிலடி கொடுத்தாள்..

அதில் அனுராதாவின் முகத்தில் புன்னகை வந்தது.. இதுபோல யாமினி புத்திசாலித்தனமாக பேசும் போது.. அவள் எப்போதும் இப்படியே இருந்து விடக் கூடாதா என்று அனுராதாவின் மனம் துடிக்கும்..

அன்றும் அதே அபிலாசையுடன்..

"சரி சரி.. அண்ணனும் தங்கையும் வழக்கடிச்சது போதும்.. சண்டை போடத் தெம்பு வேணாமா..? ஆபிசில வேலைசெஞ்சு களைச்சுப் போய் வந்திருப்பீங்க.. காபி, டிபனை உள்ளே தள்ளி எனர்ஜியை ஏத்திக்கிட்டு சண்டை போடுங்க.." என்று விளையாட்டாய் அதட்டினாள்..

"அதுசரி.. ஆபிசில் வேலை செய்கிறவங்கதான் களைச்சுப் போய் வருவாங்களா..? கடையைத் திறந்து வைச்சிருக்கிறவன் ஊஞ்சலாடிட்டு வந்திருக்கானா..? எனக்கும் தான் களைப்பாயிருக்கு.. என்னையும் கொஞ்சம் கவனி.." பிரதாப் போட்டிக்கு வந்தார்..

"அடடா..! உங்க பங்கு எங்கேயும் கால் முளைச்சு ஓடிப் போகாது.. இப்படியா காபி டிபனுக்கு பறப்பீங்க..?" அனுராதா அலுத்துக் கொண்டபடி எல்லோருக்கும் காபி டிபனைக் கொடுத்தாள்..

பிரதாப் டிவியை உயிர்ப்பித்தார்.. அவர் நியூஸைப் பார்க்க..

"போர்.." என்ற யதுநந்தன் ரிமோட்டைக் கைப்பற்றி சேனலை மாற்றினான்.. ஸ்போர்ட்ஸ் வந்தது..

"இது வீடா இல்ல ஸ்டேடியமா..?" யாமினி கோபமானாள்..

இப்போது ரிமோட் அவள் கைக்கு தாவியிருந்தது.. அவள் 'டாக் ஷோ' வைப் போட..

"அதான் எப்பப் பார்த்தாலும் பேச்சு.. பேச்சுன்னு.. ஆளாளுக்கு மாறிமாறிப் பேசி.. இந்த வீட்டை சந்தைக் கடையாக்கி வைச்சிருக்கீங்களே.. அது போதாதா..? டிவியிலயும் கர்ரே.. புர்ரேன்னு ஆளாளுக்கு கருத்துச் சொல்றதக் கேட்கனுமா..?" அனுராதா போர்க்கொடியை உயர்த்தினாள்.. ரிமோட் அவள் கைகளில் செல்லப் பிராணியைப் போல பதுங்கியது.. அவள் சேனலை மாற்றினாள்..

"நாசமாப் போவே.." என்றாள் சீரியலில் வந்த ஒருத்தி..

"அருமையான ஆசிர்வாதம்.." நமட்டுச் சிரிப்புடன் சொன்னார் பிரதாப்..

யதுநந்தன் விழுந்து, புரண்டு சிரித்து வைத்ததில் அவரின் உற்சாகம் அதிகமானது.. அத்தி பூத்தாற்போல இதுபோன்ற சில தருணங்களில்தான்.. அவருடைய மகன் அவருடன் கூட்டணி போடுவான்.. அதுபோன்ற சந்தர்ப்பம் வாய்த்து விட்டதில் அகம் மகிழ்ந்து போனவர் அனுராதாவை இன்னும் கொஞ்சம் ஓட்ட ஆரம்பித்தார்..

"அது ஏண்டி சீரியல்களில மட்டும் வில்லன் இல்லாம வில்லிகளா வருகிறாங்க..? அதுவும் சும்மா வராம லேடி நம்பியாரப் போலக் கையைப் பிசைந்துக்கிட்டு வர்றாங்களே.."

"அதுவா மச்சான்.. சினிமாக்கள ஆம்பளைங் எல்லாம் ஒட்டு மொத்தமா குத்தகைக்கு எடுத்துக்கிட்டிங்கள்ல.. அதான்.. சீரியல நாங்க எடுத்துக்கிட்டோம்.." அவரை விட நக்கலாக பதில் சொன்னாள் அனுராதா..

"உன் கம்பெனி எப்படியிருக்கு..?" கன காரியமாக தங்கையிடம் விசாரித்தான் யதுநந்தன்..

யாமினிக்கா அண்ணன்காரனின் அக்கறையைப் பற்றித் தெரியாது..? அவள் வேலை செய்ய ஆரம்பித்தவுடன் அவளது கம்பெனி ஆட்டம் காணாமல் அப்படியே நிற்கிறதா என்றுதான் அவன் கேட்க ஆரம்பிக்கிறான் என்று இனம் கண்டு கொள்ள முடியாத முட்டாளா அவள்..?

"உன் ஆபிசைப் போலவே அருமை.. பெருமையா இருக்கு.." பதில் சொன்னாள் யதுநந்தனின் தங்கை..

"என் ஆபிசை விடு.. அது நல்லாத்தான் இருக்கும்.."

"ஏன்னா.. நீ அங்கே வேலை பார்க்கிற.." யாமினி எடுத்துக் கொடுத்தாள்..

"அஃதே.. அஃதே.." யதுநந்தன் ஆமோதித்தான்..

"ஆனாலும் உனக்கு இத்தனை தன்னம்பிக்கை ஆகாதுடா அண்ணா.. நீ வேலை பார்த்தே உன் ஆபிஸ் கச்சிதமா நிற்கிறப்ப.. நான் வேலை பார்க்கிற கம்பெனி அதைவிடக் கச்சிதமா நிமிர்ந்து நிக்கும்டா.."

"இத நீதான் சொல்லிக்கனும்.. வேற யாரும் சொல்ல மாட்டாங்க.."

"மத்தவங்கள ஏன் இழுக்கிற..? நீ சொல்ல மாட்டேன்னு சொல்லு.."

ஆரோக்கியமான அந்த அண்ணன், தங்கையின் மோதலில் தன் வீட்டில் எப்போதும் இந்த மகிழ்ச்சி நிலைத்திருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள் அனுராதா..

படிகளில் தாவி ஏறிய யாமினி தனது உற்சாகத்தைக் கண்டு ஆச்சரியப் பட்டாள்.. அவளா இத்தனை உற்சாகத்துடன் வேலைக்குப் போகிறாள்..?

சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியில் எம்.டியின் பெர்சனல் செக்கரட்டரியாக அவள் வேலைக்குச் சேர்ந்து இருவாரங்கள் ஓடி விட்டன.. இந்த இருவாரமும் நிழலைப் போல சித்தார்த்தனை விட்டுப் பிரியாமல் அடை காத்தான் தாமோதரன்.. அதில் யாமினிக்கு கோபம் கூட வந்தது..

'இவனோட பிரண்டை நான் என்ன செய்யப் போகிறேனாம்..? ஸ்வாஹா பண்ணி விடப் போகிறேனா..?'

தாமோதரன் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக் கிறான் என்பது அவனுடைய விழிகளில் மின்னிய சந்தேகத்திலிருந்து தெரிந்தது.. யாமினியைக் கண்டவுடன் அவன் விழிகளில் வந்து உட்காரும் எச்சரிக்கையிலும், சந்தேகத்திலும் யாமினி சங்கடம் கொண்டாலும்.. அதைக் கண்டு கொள்ளாமல் வேலை செய்ய பழகி விட்டாள்..

'அவனே இதை எதிர்பார்த்திருக்க மாட்டான்..'

தன்னம்பிக்கையுடன் கூடிய சிரிப்பு அவளுக்கு வந்தது.. தாமோதரன் அவளுடைய வேலைத்திறனை அங்கீகரித்ததில்லை.. அவள் எதைச் செய்தாலும் முகம் சுளித்தான்.. இப்படிச் செய்தால் அப்படிச் செய்ய வேண்டும் என்றான்.. அதை எதிர்பார்த்திருந்த யாமினி..

"இதோ.." என்று தயார் நிலையில் எடுத்து வைத்திருந்த ஸ்டேட்மெண்டைக் கொடுத்து அவன் மூக்கை உடைத்தாள்..

"இதை முன்னாடியே கொடுக்கிறதுக்கென்ன..?" அவன் எரிந்து விழுந்தால்..

"இதை இப்படியே கொடுத்திருந்தா.. வேற எப்படியாவது ஸ்டேட்மெண்டை முடித்திருக்கனும்னு நீங்க சொல்லி வைப்பீங்க சார்.. உங்க ஈகோவுக்காக தப்பான ஸ்டேட்மெண்ட் ஃபார்ம் ஆகிறதை நான் விரும்பலை.. அதான்.. எக்குத்தப்பான ஸ்டேட்மெண்டை முதல்ல காட்டிட்டு.. நீங்க இப்படின்னு சொன்னதும் அப்படியே நான் வொர்க் பண்ணி வைச்சிருந்த ஸ்டேட் மெண்டை சைனுக்கு நீட்டினேன்.." என்று அலட்டிக் கொள்ளாமல் விளக்கம் கொடுத்தாள்..

"குட் ஜாப்.." என்று சித்தார்த்தனின் கைதட்டலைப் பெற்றுக் கொண்டாள்..

தாமோதரனுக்கு தனது மூக்கு உடைபட்டதைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடிந்தது.. யாமினியைப் பாராட்டி சித்தார்த்தன் கை தட்டியதைத் தான் பொறுத்துக் கொள்ள முடியவில்லை..

"இப்ப என்னத்துக்கு டெண்ட் கொட்டகையில மசாலா சினிமாவைப் பாத்துட்டு தரை டிக்கெட்காரன் கை தட்டறதைப் போல கை தட்டற..?" என்று வெடு வெடுத்தான்..

"டேய்ய்.. யாமினியோட டேலண்டை அப்ரிசியேட் பண்ணனும்னு தோணுச்சு.. கை தட்டினேன்.. அது ஒரு தப்பா..?"

"தப்புத்தான்.. யாரு நீ..?"

"சித்தார்த்தன்.."

"வெறும் சித்தார்த்தன் இல்ல.. சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனீஸின் எம்.டி. இதை நினைப்பில் வைச்சுக்க.."

"இல்லேன்னா மறந்து போயிருமா..? ஹா.. ஹா.."

சித்தார்த்தனின் சிரிப்பில் யாமினிக்கும் சிரிப்பு வந்தது.. அவள் உதட்டைத் துடைப்பதைப் போல சிரிப்பை மறைத்தபடி தன் வேலையில் கவனமானாள்.. அதில்

தாமோதரனுக்கு கொள்ளை கொள்ளையாய் எரிச்சல் வந்தது..

"வேலையைத் தவிர மத்ததை எல்லாம் கவனி.."

யாமினியைப் பார்த்துப் பல்லைக் கடித்தபடி சித்தார்த்தனிடம் சொல்வதைப் போல அவன் சொன்னான்.. யாமினிக்கா அவன் யாரைச் சொல்கிறான் என்று தெரியாது..?

அவள் நீ பாட்டுக்கு சொல்லிக் கொண்டிரு.. நான் பாட்டுக்கு இந்தக் காதில் வாங்கி.. அந்தக் காதில் விட்டு விட்டு வேலையைப் பார்க்கிறேன் என்று எவருக்கு வந்த விருந்தோ என்பதைப் போல.. தனது வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்து தப்பித்தாள்..

தாமோதரன் தேளாக அவளைக் கொட்டினான்.. அவளுக்கு வலிக்கவில்லை.. தீயாக தகித்தான்.. அவளுக்குச் சுடவில்லை.. வார்த்தைக்கு வார்த்தை அவளை மட்டம் தட்டினான்.. அவளுக்கு உறைக்க வில்லை..

எவ்வளவுதான் அவன் கொடுமை செய்தாலும்.. அவனை வெறுத்து விலக முடியாமல் ஏதோ ஒரு பாசம் அவளைக் கட்டிப் போட்டது.. அது அவன் வீசிய சாட்டையடிகளை ஆனந்தமாக ஏற்றுக் கொள்ளச் சொன்னது.. அது.. எது..?

அத்தியாயம் - 59

உன் முகத்தைக் காணும் போது..

உடன் பிறந்த பாசம் வருவதேன்..?

காலங்களைக் கடந்தும் வாழ்வது..

காதல் மட்டுமல்ல.. பாசமும்தான்..

வாசல் கதவைத் திறந்து விட்ட செக்யூரிட்டியிடம் சிரித்தபடி குட்மார்னிங் சொன்னாள் யாமினி.. பதிலுக்கு அவன் அகலமான புன்னகையுடன் சல்யூட் வைத்தான்..

இதைப் போன்ற தோழமையை தாமோதரன் கொடுத்திருக்கிறானா என்று அவள் யோசித்தாள்..

இல்லை.. கொடுவாளாக அவளை வெட்டி வீழ்த்திவிடப் போவதைப் போல முறைப்பவன் ஓர்நாள் கூட தோழமையுடன் அவளைப் பார்த்ததில்லை.. இன்னும் சொல்லப் போனால் அவன் யாமினியை நேர் கொண்ட பார்வையுடன் ஓர்நாள் கூடப் பார்த்ததே இல்லை என்று தான் சொல்ல வேண்டும்..

அடிப்பார்வையில் முறைப்பான்.. ஓரப்பார்வையில் சுட்டெரிப்பான்.. மேல் பார்வையில் அவளை உதாசீனம் செய்வான்.. நேர்கொண்ட பார்வையால் மட்டும் அவளைப் பார்க்கவே மாட்டான்..

அப்படிப் பார்க்க நேர்ந்த ஓரிரு தருணங்களில் அவனது இமை துடிப்பதையும் விழிகளில் ஓர் அதிர்வு உண்டாவதையும் யாமினி கவனித்திருக்கிறாள்.. உடல் நடுங்க சட்டென்று அவன் நகன்றிருக்கிறான்..

அந்த அதிர்வு எதனால் அவனுக்குள் ஏற்பட்டது..? ஏற்படுகிறது..?

விசித்திரமான வகையில் யாமினிக்கு சித்தார்த்தனை விட அதிகமாக தாமோதரனைப் பிடித்திருந்தது.. அவனுடன் பேசும் போதும்.. சண்டையிடும் போதும்.. யது நந்தனுடன் பேசிச் சண்டையிடுவதைப் போல அவள் உணர்ந்தாள்..

அவளைப் புறக்கணிப்பவனின் மீது சகோதரபாசம் ஏற்படுகிறதா..? ஏன்..?

அதுதான் அவளுக்குப் புரியவில்லை..

"தாயின் முகம் இங்கு நிழலாடுது..

தந்தை மனம் இங்கு உறவாடுது..

கோவில் விளக்கொன்று..

கூடப் பிறப்பென்று..

பாடும் குரல் கேட்குது - அண்ணா..

பாடும் குரல் கேட்குது.."

இரண்டு நாள்களுக்கு முன்னர்.. இந்தப் பாடலைப் பாடியபடி அவள் வேலை செய்து கொண்டிருந்தாள்.. சித்தார்த்தன் இல்லை.. பிஸினெஸ் லன்ச்சிற்காக ஏதோ ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்குப் போவதாகச் சொல்லி விட்டுப் போயிருந்தான்.. அது திடிரென்று உருவான மீட்டிங்.. ஒருவாரம் கழித்து வர வேண்டிய பாரின் கம்பெனிக்காரர்கள் முன்கூட்டியே வந்து விட்டதால் அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட பிஸினெஸ் லன்ச் அது.

தாமோதரனுக்கு அது பற்றித் தெரியாது.. அவன் வழக்கம் போல ஆபிஸ் வந்ததும் சித்தார்த்தனை கண்காணிக்க வந்து விட்டு.. அடையாரில் இருந்த அவர்களின் கம்பெனி பிரான்ச்சிற்குப் போயிருந்தான்.. அவன் திரும்பி வருவதற்குள் பிஸினெஸ் லன்ச் முடிவாகி சித்தார்த்தன் கிளம்பியிருந்தான்..

"சித்தார்த்.." என்றபடி உள்ளே வந்தவன்.. அந்தப் பாடலைக் கேட்டதும் அப்படியே நின்றுவிட்டான்..

"அண்ணா.. பாடும் குரல் கேட்குது.." என்று பாடியபடி தலைநிமிர்ந்த யாமினியும் தாமோதரனின் பார்வையைச் சந்தித்ததும் அப்படியே உறைந்து போய் அமர்ந்து விட்டாள்..

அதுதான் முதன் முதலாக தாமோதரன் நேருக்கு நேராக யாமினியின் பார்வையைச் சந்தித்த முதல்பார்வை..!

அவனது இமையும்.. உதடுகளும் துடிக்க.. யாமினி கண்கலங்க.. அவர்கள் சிலை போல இருந்த போது.. வயலெட் அறைக்குள் வந்து விட்டாள்..

அவள் வந்ததைக் கூட அறியாமல் தாமோதரனும் யாமினியும் விழியோடு விழி கலக்க.. உறைந்து போய்

இருந்த நிலையைக் கண்டவள்.. யாமினியின் தோளில் ஓங்கித் தட்டி சுய நினைவுக்கு கொண்டு வந்தாள்..

"வாங்க.. வயலெட்.." யாமினி கம்யூட்டரில் கவனமாக.. தாமோதரன் தன்னிலைக்குத் திரும்பியவனாய் சித்தார்த்தன் எங்கே என்று யோசித்தான்..

"நான் அப்பவே வந்துட்டேன்.. உங்க ரெண்டு பேருக்கும்தான் அது தெரியல.. என்ன..? லவ்வா..?"

கேள்வி கேட்ட வயலெட்டின் மீது கனமான ஃபைல் வந்து விழுந்தது.. அதிர்ச்சியில் நிலை குலைய நின்றவளிடம்..

"கெட்.. லாஸ்ட்.." என்று உறுமினான் தாமோதரன்..

அதுபோன்ற ஆவேச நிலையில் அவனை அதற்கு முன்னால் யாருமே கண்டதில்லையென்று யாமினியிடம் வயலெட் சொன்னாள்..

"பூகம்பமே வந்தாலும் அலட்டிக்க மாட்டார்... அவர் மனசில என்ன ஓடுதுன்னு அவ்வளவு சுலபத்தில யாராலும் கண்டு பிடிச்சுர முடியாது.. உடம்பெல்லாம் கண்ணிருக்கும்.. வாசல்ல அவர் தலையைக் கண்டதுமே போனை வைச்சுருவேன்.. மனுசன் என்னைக் கிராஸ் பண்றப்ப நான் யாரோட பேசினேன்.. எவ்வளவு நேரம் பேசினேன்ங்கிற புள்ளி விவரத்த பிட்டுப்பிட்டு வைப்பார்.. என்ன நடந்தாலும் கல்லுளிமங்கன் போல ஒரு பார்வையிலேயே எல்லாத்தையும் ஆட்டி வைக்கிற மனுசனுக்கு இம்புட்டுக் கோபம் எங்கிருந்து வந்துச்சு..?"

வயலெட்டின் ஆச்சரியத்தில் உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தாள் யாமினி.. அவளது உள்ளம் கேட்டது..

'ஏன் வந்தது..?'

யாமினி யாரோ எவரோ.. தாமோதரனுக்கு எந்தவிதச் சம்பந்தமுமில்லாதவள்.. அவனுடைய நண்பனின் மனநிலையைக் கலைக்க வந்த காரிகையென்று தாமோதரனால் வெறுக்கப் படுபவள்.. அவளையும்,

தாமோதரனையும் இணைத்து வயலெட் பேசினால் அவனுக்கு முதலில் வர வேண்டியது..

'சீச்சீ..' என்ற வெறுப்பு அல்லவா..?

அதை விட்டு தார்மீகக் கோபம் ஏன் வந்தது..

"யாரோட யாரை இணை சேர்க்கிறதுன்னு விவஸ்தையே இல்லையா..? டாமிட்.."

அவன் போட்ட கூச்சலில் வயலெட் ஆடிப் போய் விட்டாள்..

"இந்தக் கம்பெனியில நான் ஜாயின் பண்ணின நாள் முதலா ஜி.எம். கிட்ட இருந்து திட்ட மட்டும்தான் மூட்டை, மூட்டையா.. வாங்கிக் கட்டிக்கிட்டு இருக்கேன்.. ஒரு நாள் கூடப் பாராட்ட வாங்கிக் கட்டிக்கிட்டதில்ல.. ஆனாலும் பாரு யாமினி.. அவர் திட்டறதைக்கூடக் கூலா.. வாழைப் பழத்தில ஊசியை ஏத்தறதைப் போல கொடுத்துக் கட்டற ஆளு.. இவ்வளவு கோபப்பட்டு நான் பார்த்ததில்ல.."

அப்படியா..? அந்த அளவுக்கு அதிர்வைக் காட்டாமல் எதிரியைத் தலையால் தண்ணீர் குடிக்க வைக்கும் வல்லவன்.. அன்று தன்னிலை மறந்து கத்தினானா..?

"ஆபிஸே வேடிக்கை பார்க்குது.. எனக்கில்ல ஷேமா போயிருச்சு..? நான் யதார்த்தமாத்தானே கேட்டேன்..?"

யாமினிக்கு எரிச்சல் வந்தது.. வயலெட்டின் யதார்த்தத்தில் அவள் கோபம் கொண்டாள்.. வயலெட் கேட்ட கேள்வியை இன்னமும் நியாயப் படுத்துவதை தாமோதனின் காதுகளில் போட்டுக் கொடுத்து புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளலாமா என்று கூட அவளுக்கு தோன்றி விட்டது.. அதை வயலெட்டிடம் சொன்ன போது..

"அடிப்பாவி..!" என்று அலறினாள்..

"பேசறதையெல்லாம் நீங்கபேசிட்டு என்னைப் பாவிம்பீங்களா..?"

"ஹேய்.. இதெல்லாம் யூசுவல் டயலாக்குப்பா.. இல்லேன்னா இல்லேன்னு சொல்லிட்டுப் போங்க..

அதுக்காக இடைவிடாம வீடு கட்டி வெளுத்து வாங்கு வீங்களா..?"

"டயலாக்கே தப்புங்கிறேன்.. அதில யூசுவல் டயலாக்குன்னு நீங்க சப்பைக்கட்டு கட்டறிங்களா..? அதெப்படி அவ்வளவு பெரிய வார்த்தையை பட்டுன்னு சொல்லுவீங்க..?"

"என்மேல தப்பில்ல யாமினி.. நீங்க ரெண்டு பேரும் உத்துப் பார்த்துக்கிட்டு அசையாம நின்னா நான் என்னன்னு சொல்றது..?"

"அதுக்காக எதை வேணும்னாலும் சொல்லிரு வீங்களா..? ஏங்க.. நீங்க அண்ணன், தம்பிகூடப்பிறந்த வங்கதானே.."

இந்த வார்த்தையை ஏன் கேட்டாள்.. எதற்காகக் கேட்டாள் என்று யாமினிக்கே தெரியவில்லை.. எப்படி அந்தக் கேள்வி அவள் வாயில் வந்தது என்றும் அவளுக்குத் தெரியவில்லை..

அவள் கேட்ட கேள்வியில் வயலெட் அயர்ந்து போனாள்..

அதுவரை அவள் அப்படியொரு கேள்வியைக் கேள்விப் பட்டதே இல்லை.. அக்கா, தங்கையுடன் பிறந்திருக்கிறீர்களா என்ற கேள்வியைக் கேட்டுப் பழகியிருந்தவளுக்கு இதுபோன்ற கேள்வி புதுமையாக இருந்தது..

"என்னப்பா.. இப்படிக் கேக்கறிங்க..?"

"வேற எப்படிக் கேட்கச் சொல்கிறீங்க..? உங்க அண்ணன், தம்பிகூட உங்களை இணைச்சுப் பேசினா உங்களுக்குக் கோபம் வருமா..? வராதா...?"

"கட்டாயம் வரும்.."

"அந்தக் கோபம்தான் இங்கேயும் வந்திருக்கு.."

"பாருடா.. அப்ப ஜி.எம் அண்ணன்.. நீங்க அவருக்குத் தங்கையா..? சொ..ல்..ல..வே.. இல்ல.."

வயலெட் இழுத்து ராகம் போட்டதில் இவளுக்கு தாமோதரன் நடத்திய மண்டகப்படி குறைவு என்று

பல்லைக் கடித்தாள் யாமினி...

"இப்படியும் ஒரு வியு இருக்கும்ன்னு நான் நினைச்சே பாக்கல.. ஆனா யாமினி.. அண்ணன் தங்கை பாசத்தைப் பத்தி உங்களுக்குத் தெரியும்.. அது ஓகே.. ஏன்னா.. உங்களுக்கு அண்ணன் இருக்கார்.. தாமோதரனுக்கு எப்படித் தெரியும்..? அவருக்குத்தான் அக்கா.. தங்கை இல்லையே.. வீட்டுக்கு ஒற்றை பிள்ளையாச்சே.." வயலெட் விடவேயில்லை..

அத்தியாயம் - 60

எந்தப் பிறவியிலே..

உருவான பந்தம் இது..?

எட்டாத உயரத்தில்

இருந்தாலும் உனைத் தொடர்வேன்..

'இதையெல்லாம் உணக்கையாய் தெரிஞ்சு வைச்சிருப்பாளே..'

வயலெட்டுடன் பேசவே பிடிக்கவில்லை யாமினிக்கு.. இவளெல்லாம் ஒரு மனுஷி என்று தலையைப் பிடித்தபடி கம்யூட்டரைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. வயலெட்டா பேச்சு வார்த்தையிலிருந்து பின்வாங்கு வாள்..? அவள் யாமினியின் தோளைப் பிடித்துக் குலுக்கினாள்..

"உங்க கிட்டத்தான் பேசிக்கிட்டு இருக்கேன் யாமினி.."

"எனக்கு வேலையிருக்குங்க.."

"எனக்கு மட்டும் வேலையில்லையா..? வெட்டியாவா பொழுதை ஓட்டிக்கிட்டு இருக்கேன்..?"

"அதைப்பற்றி எனக்கென்ன தெரியும்.. ஜி.எம் முக்குத்தான் தெரியும்.."

இகழ்ச்சியாக உதட்டை வளைத்தபடி சொல்லி விட்டாள் யாமினி.. அவளும்தான் என்ன செய்வாள்..? தாமோதரன் குடு..குடுவென்று குடுத்துக் கட்டிய பின்பு அவளுக்கு வயலெட்டைக் கடிந்து கொள்ள வேண்டிய தேவையே இல்லாமல் போய் விட்டது.. போய்த் தொலையட்டும்.. அவளுக்குத் தெரிந்தது இவ்வளவுதான் என்று எதையும் கண்டு கொள்ளாமல் இவள் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தால்.. அவள் அதற்கும் விடாமல் தொடர்ந்து தொல்லை கொடுப்பாளா..? வயலெட் வேலை பார்க்கும் லட்சணத்தைப் பற்றி இவளுக்குத் தெரியாதா..? அதுதான் தெரியாதவர்களுக்கெல்லாம் தெரிய வைக்கும் விதத்தில் தினமும் தாமோதரன் வயலெட் வேலை செய்யும் லட்சணத்தைப் பற்றிக் கிழி.. கிழியென்று கிழித்துத் தோரணம் கட்டித் தொங்க விட்டுக் கொண்டிருக்கிறானே.

யாமினி எதிர்பார்த்தபடியே வயலெட்டின் முகம் கருத்து விட்டது.. யாமினிக்கு ரொம்பவே திருப்தியாக இருந்தது..

'இவளுக்கு மட்டும்தான் பேசத் தெரியுமா..? எனக்குத் தெரியாதா..?'

அவள் புருவங்களை உயர்த்திய விதத்தில் வெகுவாக பாதிக்கப் பட்டாள் வயலெட்.. அமைதியின் சிகரம் போல இருந்த யாமினி இப்படிப் போட்டுத் தாக்குவாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லையே..

"இந்த ஜி.எம் பண்ற அழும்பில நேத்துப் பெய்த மழையில இன்னைக்கு முளைத்த காளான்களுக்கெல்லாம் சீனியர்கிட்ட எப்படிப் பேசிப் பழகறதுன்னு தெரியாம போயிருச்சில்ல..?"

"உங்களுக்குத்தான் தெரிஞ்சிருக்கே.. நீங்க வேணா எடுங்களேன்.."

"எதை..?"

"கிளாஸை.."

"நானென்ன டீச்சரா..? இந்த கிரேட் சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனீஸின் சீஃப் ரிசப்சனிஸ்ட் நான்தாம்மா.."

"சீஃப்ன்னு சொல்லிக்கறிங்க.. சீப்பா பேசறிங்க.."

"யாமினி.."

வயலெட் அலறினாள்.. யாமினி வலது கையின் ஆள்காட்டி விரலை உதட்டின் மீது வைத்து..

"உஸ்ஸ்ஸ்.." என்று அவளை எச்சரிக்கை செய்தாள்.

"என்னையே காம் டவுன்னு சொல்றியா..? தலையிருக்க வால் ஆடக் கூடாது யாமினி.. என் பவர் தெரியாம என்கிட்ட மோதாதே.."

"உன் பவரைப் பத்தி எனக்கா தெரியாது..? ஆனானப் பட்ட ஜி.எம்முக்கே அல்வா கொடுக்கப் பார்க்கற ஆள்தானே நீ.. என்ன சொன்ன..? நேத்துப் பெய்த மழையில இன்னைக்கு முளைச்ச காளானா..? ஆமாம்.. நான் காளான்தான்.. பிறக்கும் போதே மழையில நனையாம இருக்க குடையோடு பிறந்த காளான்.. தெனாவெட்டும் திமிரும் அதிகமாத்தான் இருக்கும்.. அமைதியா இருந்தா அப்பாவின்னு எடைபோட்டிராதே.. ஜி.எம்முக்கு கூடப் பிறந்தவங்க இல்லைங்கிற விவரம் உனக்கு எப்படித் தெரிஞ்சது..?"

"ஊம்.. விசாரிச்சேன்.."

"என்ன அலுவலுக்கு..? உன்னைப் போலவே நானும் கேட்கனும்னா.. நீயென்ன அவர் வீட்டுக்கு மருமகளாப் போகனும்னா நினைச்ச..? அவர் குடும்ப விவரத்த புள்ளி விவரத்தோட கேட்டு வைச்சிருக்க.."

"அந்தக் கொடுமையை நான் ஏன் இழுத்து விட்டுக்கப் போறேன்..? ஆபீசில படற இம்சை பத்தாதா..? வீடு வரைக்கும் அந்த இம்சை தொடரனுமா..?"

"அதை அவர் சொல்லனும்.."

"சொல்லிட்டாலும்..! இதோ பார் யாமினி.. நெருப்புன்னு தெரிஞ்சிருந்தும் விரலை நீட்டி சுட்டுக் கிறதுக்கு நான்

ஒன்னும் பைத்தியம் இல்லை.. லேடிஸ்ன்னு ஈவு இரக்கம் பாக்காம இந்தக் காய்ச்சு காய்ச்சறாரே.. இவருக்கெல்லாம் கூடப் பிறந்த அக்கா, தங்கை இருக்காதுன்னு கெஸ் பண்ணி விசாரிச்சேன்.. நான் நினைச்சதைப் போலவே அக்கா, தங்கையும் இல்லை.. கூடவே அண்ணன், தம்பியும் இல்லை.."

"நீ அதுக்கு மட்டும் விசாரிச்சிருக்க மாட்டியே.."

யாமினியின் சந்தேகத்தில் வந்த சில நாள்களுக்குள் என் புத்தியை இவள் இத்தனை தெளிவாக கண்டு வைத்திருக்கிறாளே என்று கடுப்பானாள் வயலெட்..

"உண்மைதான்.. என்னைக்காவது ஒருநாள்.. நீங்கள்ளாம் அக்கா, தங்கை கூடப் பிறந்திருந்திருந்தா பெண்களோட அருமை புரியும்ன்னு கேட்கிறதுக்காகத்தான் விசாரிச்சு வைச்சேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?" அவள் கேட்க நினைத்த கேள்வி அவளுக்கே திரும்பி விட்ட ஆத்திரத்தில் பொருமினாள் வயலெட்..

"வாட் எ ஜோக்..!"

யாமினி பொங்கிச் சிரித்தாள்.. அவளின் சிரிப்பை அடக்கும் வழி தெரியாமல் பல்லைக் கடித்தாள் வயலெட்..

"நீ ஜி.எம்மைப் பார்த்து உங்களுக்கு அக்கா, தங்கை இருந்தாத்தான் அந்த அருமை தெரியும்ன்னு சொல்ல நினைச்சியா..? உன்னைப் பார்த்து.. அண்ணன் தம்பி கூடப் பிறந்தவங்கதானேன்னு நான் கேட்டு வைச்சேன் பாரு.. அங்கே நிக்கிறாரு கடவுள்..! இதைத்தான்..

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் - தமக்கின்னா

பிற்பகல் தானே வரும்..

அப்படின்னு பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் அந்தக் காலத்துக் ஹைக்கூக் கவிதையான திருக்குறளில சொல்லி வைச்சார் போல.."

"வாட்..?"

"குறள்ம்மா.. திருக்குறள்..! அதுசரி.. உனக்கெங்கே இதெல்லாம் தெரியப்போகுது.. நீ ராக் மியூஸிக்கில நீச்சலடிக்கிற ஆளாச்சே.."

"நான் எந்த மியூஸிக்கிலயும் நீச்சலடிப்பேன்.. அதைப் பத்தி உனக்கென்ன..? மைன்ட் யுவர் ஓன் பிஸினெஸ்.."

"என்ன.. என்ன..? இப்ப மட்டும் மைண்ட் யுவர் ஓன் பிஸினெஸா..? இவ்வளவு நேரமும்.. ஜி.எம்முக்கு எத்தனை உடன் பிறப்புன்னு அலசி ஆராய்ஞ்சியே.. அது யாரோட ஓன் பிஸினெஸ்..?"

யாமினி இந்த அளவுக்குப் போட்டுத் தாக்குவாள் என்று நினைத்துக் கூடப் பார்த்ததில்லை வயலெட்..!

"அப்பாவியாய் முகத்தை வைச்சுக்கிட்டு.. சாது போல வேலையைப் பாத்துக்கிட்டு இருக்கிற இந்த அமுக்குணிக்கு இருக்கிற வாயைப் பாரேன்.."

அன்று முழுவதும் கண்ணில் எதிர்படுபவர்களிட மெல்லாம் இதைச் சொல்லியே புலம்பிக் கொண்டிருந்தாள் அவள் என்று காற்றுவாக்கில் செய்திகள் பறந்து வந்து யாமினியின் காதுகளில் நுழைந்தன..

அவள் தோள்களைக் குலுக்கிக் கொண்டு அவற்றை அலட்சியம் செய்து விட்டு வேலையில் ஆழ்ந்தாள்..

"சித்தார்த்.. எங்கே..?"

அவள் முகத்தைப் பார்க்காமல் எங்கோ ஓர் திக்கில் பார்த்தபடி எள்ளும், கொள்ளும் முகத்தில் வெடிக்கக் கேட்டான் தாமோதரன்..

மற்ற நாள்களாக இருந்திருந்தால்.. அவனுடைய பாராமுகத்தை யாமினி கண்டு கொண்டிருக்கவே மாட்டாள்.. அன்றைக்கு என்னவோ அது அவளை மிகவும் பாதித்தது.. வயலெட்டின் வார்த்தைகளினால் தான் அவன்.. அவள் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்க்கிறானோ என்று மனம் கலங்கிப் போனாள்..

"நீங்க புத்திசாலி சார்.. நான் சொல்லி நீங்க தெரிஞ்சுக்கனும்னு இல்லை.." பீடிகை போட்டாள்..

தாமோதரன் எரிச்சலானான்.. அவனுக்கு சித்தார்த்தனிடம் பேச வேண்டியிருந்தது.. அதி முக்கியமான விவரங்களைப் பற்றி விவாதிக்க வேண்டியிருந்தது.. நிலைமை புரியாமல் யாமினி சம்பந்தாசம்பந்தம் இல்லாமல் பேசியதில் அவன் கடுப்பானான்..

"லுக்..! உனக்கு என்ன வேலையைக் கொடுத் திருக்கோ.. அதை மட்டுமே செய்.. இந்த அட்வைஸ் பண்ணுகிற வேலையை எல்லாம் இங்கே வைத்துக் கிட்டேன்னு வை.. சீட்டைக் கிழித்து வீட்டுக்கு அனுப்பிருவேன்.. ஜாக்கிரதை.." சீறினான்..

கோபத்தில் அவன் யாமினியை 'நீ' என்று ஒருமையில் அழைத்ததை அவள் பெரிதாகவே எடுத்துக் கொள்ளவில்லை.. அதைப் பற்றிய நினைவு வந்தபோது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.. யாமினி இப்படி சுயமரியாதையை விட்டுக் கொடுப்பவள் அல்ல.. வயலெட் 'வா.. போ..' என்று வார்த்தை மாறிய மறுநொடியிலேயே.. அவளை ஆயிரத்தைந்து முறை 'வா.. போ..' என்று அழைத்துப் பேசியிவள்தான் அவள்..

இப்போது அந்த சுயமரியாதை எங்கே போனது..?

தாமோதரன் அவளை 'வா.. போ..' என்கிறான்.. அதைக் குறித்த சிந்தனை துளியளவு கூட இல்லாமல் இயல்பாக அதை அவள் ஏற்றுக் கொள்கிறாளே.. ஏன்..?

"உங்க இஷ்டம் ஜி.எம். சார்.. நீங்க என்ன டிசைட் பண்ணினாலும் எனக்கு ஓகே தான்.. பட்.. இந்த வயலெட்டெல்லாம் முட்டாள்தனமா ஒரு வார்த்தை சொல்லிட்டான்னு என் முகத்தையே பார்க்காம நீங்க கேள்வி கேட்கிறதுதான் எனக்குக் கஷ்டமாயிருக்க.."

தன்மையான குரலில் சொன்னாள் யாமினி.. சட்டென்று அவள் முகம் பார்த்தான் தாமோதரன்.. அவன் முகத்திலிருந்த கடுமை தானாக அகன்றது.. சொல்லத்

தெரியாத பந்தத்துடன் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"அவங்க பேசறதுதான் முட்டாள்தனம்ன்னு தெரியுதில்ல.. அதை நீங்களும் நோட் பண்ணனுமா..? லூசில விடுங்க யாமினி.. தன்னைப் போல் பிறரையும் நினைன்னு இயேசு சொன்னார்.. இவங்க.. இவங்களைப் போலவே மத்தவங்களையும் நினைக்கிறாங்க.. லீவ் இட்.. அதை மறந்திருங்க.. சித்தார்த் எங்கே..?"

அவன் இயல்பாகி விட்டதில் யாமினியின் மனதில் ஏன் அந்த அளவுக்கு நிம்மதி சூழ்ந்தது என்று அவளுக்கே தெரியவில்லை

அத்தியாயம் - 61

ஏதோ சொல்ல நினைத்தேன் - அது

என்னவென்பதை மட்டும் மறந்தேன்..

நான் கேட்கும் குழலின் ஓசை..

எனக்கான உன்மனதின் ஓசை..

அரிது.. அரிது.. என்று ஔவையார் பாடிய அத்தனை அரிதிலும் அரிது.. அவளுடன் தாமோதரன் இணக்கமாகப் பேசுவது என்பதில் இதம் கொண்டாள் யாமினி..

அந்த இதம் வெகு நேரம் நீடிக்கவில்லை.. சட்டென்று கடுமையான முகபாவத்திற்கு மாறிய தாமோதரன்..

"சித்தார்த்.. எங்கே..?" என்று சிடுசிடுத்தான்..

"பிஸினெஸ் லன்ச்சுக்குப் போயிருக்கார்ன்னு சொன்னேன் சார்.. மறந்துட்டிங்களா..?"

"ஏன்...? இன்னொரு தடவை சொல்ல மாட்டிங்களா..? சொன்னா வாய் வலிச்சிருமா..?"

"இல்லை சார்.."

"என்ன இல்லை.."

"எனக்கு வாய் வலிக்காது சார்.."

யாமினிக்கு தலை வலிக்க ஆரம்பித்தது.. இவன் வேண்டுமென்றே படுத்துகிறான் என்று நினைத்துக் கொண்டாள்.. வலிய வரவழைத்துக் கொண்ட கோபம் என்னும் முகமூடிக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு பூச்சாண்டியைப் போல அவளை மிரட்ட முயல்கிறான்..

அவனைப் பார்த்தாள்.. பூச்சாண்டி முகபாவத்துடன் அவனுடைய முகபாவம் பொருந்தி வருகிறதா என்று ஆராய்ந்தாள்..

'வாரான் வாரான் பூச்சாண்டி..

ரயிலு வண்டியிலே..

வாரணாசி ரோடு தாண்டி

மெயிலு வண்டியிலே..'

நேரம் காலம் தெரியாமல் அவள் மனதில் பூச்சாண்டிப் பாட்டு ஒலித்து வைத்தது.. அந்தப் பாட்டின் வரிகளில் அவளுக்குச் சிரிப்பு வந்து தொலைக்க.. தாமோதரன் அவளை உறுத்துப் பார்த்தான்.. யாமினி வாயை மூடிக் கொண்டாள்..

"என்ன..?" தாமோதரன் அதட்டினான்..

"நத்திங் சார்.."

"நத்திங்ன்னு சொல்லிக்கிட்டு அத்தனை அழும்பையும் பண்ணிக்கிட்டு உட்கார்ந்திருக்கீங்க.. நேற்று வரைக்கும்

சித்தார்த்தனுக்குப் பிக்ஸ் ஆகாத பிஸினெஸ் லன்ச் இன்றைக்கு மட்டும் எப்படி பிக்ஸ் ஆச்சு..?"

பேசாமல் யாமறியேன் பராபரமே என்று சொல்லி விடலாமா என்று யோசித்தாள் யாமினி.. என்னவோ கிரிக்கெட் பெட்டிங்கை பிக்ஸ் பண்ணினதைப் போல.. அவளை தாமோதரன் விசாரித்த ரேன்ஜில் அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

"திடிர்ன்னு அந்த ஃபாரின் காண்ட்ராக்ட் காரங்க சைன் வாங்க வந்திட்டாங்க சார்.. எம்.டி சார் அவசரமாக் கிளம்பிப் போனார்.. உங்களிடம் சொல்லலையா..?"

யாமினி என்னவோ இயல்பாகத்தான் கேட்டாள்.. ஆனால்... அவளுடைய கேள்வி தாமோதரனின் சுய மரியாதையை சீண்டி விட்டு விட்டது.. ஒரு தினுசாக யாமினியைப் பார்த்தான்..

'கடவுளே..! என்னத்தைச் சொல்லித் தொலைச் சேன்..? ஏன் இப்படிப் பார்க்கிறான்..?'

யாமினிக்கு ஏஸி அறையிலும் வியர்த்துக் கொட்டியது..

"ஸோ.. நேத்து வந்த உனக்குத் தெரிஞ்ச இன்பர்மேசன்.. அவன் கூடவே ஸ்கூல்ல இருந்து ஒன்றாப் படிச்சு குப்பை கொட்டின எனக்குத் தெரியலைன்னு சொல்லிக் காண்பிக்கிற..?"

தாமோதரனின் இடுங்கிய கண்களில் அரண்டு போனாள் யாமினி.. அவள் அந்த அர்த்தத்தில் சொல்ல வில்லையே என்ற பதட்டத்தில் அவன் அவளை ஒருமையில் கூப்பிட்டதை கவனிக்கவே இல்லை..

"நோ சார்.. நான் அப்படி மீன் பண்ணலை.."

"நோ.. நீ அப்படித்தான் மீன் பண்ணின.. இந்தக் கம்பெனியில ஜி.எம்மை விட பெர்சனல் செக்கரட்டரிக்கு பவர் அதிகமாகிருச்சில்ல..?"

"சார்.. ப்ளீஸ்.."

"நீ ஏம்மா ப்ளீஸ் போடனும்.. உன் பவர் என்னன்னு தெரியாம உன்கிட்டக் கேள்வி கேட்ட நான்தான் ப்ளீஸ் போடனும்.. உன்கிட்ட எனக்கென்ன பேச்சு..? நான் சித்தார்த்தன்கிட்டயே பேசிக்கறேன்.."

இதைமுதலிலேயே செய்து தொலைத்திருந்தால் என்ன என்று மனதுக்குள் எரிச்சல் பட்டாள் யாமினி..

இப்படியா ஒருவன் முன்னால் போனால் கடிப்பேன்.. பின்னால் போனால் உதைப்பேன் என்று அடம் பிடிப்பான்..?

அவள் எப்படிப் போனாலும் தாமோதரன் கடித்துக் குதறுவான் என்பது அவளுக்குப் புரிந்து விட்டது.. அவனுடைய நோக்கம் ஒன்றே ஒன்றுதான்.. அது யாமினி அந்தக் கம்பெனியில் வேலை செய்யக் கூடாது..

"நீ மாறிட்டடா.."

தாமோதரனின் குற்றச்சாட்டில் சித்தார்த்தன் தன்னைத் தானே ஓர்தடவை பார்த்துக் கொண்டான்..

"இல்லையே.. எந்தச் சேன்ஜீம் என் கண்ணுக்குத் தெரியலையே.."

எப்போதும் போல கைகளை விரித்துத் தோள்களைக் குழுக்கியவனை கடுமையாக முறைத்துப் பார்த்தான் தாமோதரன்.. அவனுடைய கடுமையில் புருவங்களை உயர்த்திய சித்தார்த்தனுக்கு நண்பனின் கோபத்தைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது..

"என்னடா..? எந்த உப்புச் சப்பில்லாத விசயத்துக்கு இத்தன டென்சனா இருக்க..?"

கழுத்து டையை லேசாக தளர்த்தி விட்டுக் கோட்டை அவிழ்த்து சுழல் நாற்காலியின் முதுகுப் பகுதியில் போட்டபடி கேட்டான் சித்தார்த்தன்.. தாமோதரனோ அவனை முறைத்தான்..

"என் டென்சனைப் பார்த்தா உனக்கு கிண்டலா இருக்கில்ல..?"

"ஹேய்.. ஈஸி தாமு.. வரவர எதுக்கெடுத்தாலும் நீ கட்டின பெண்டாட்டி மாதிரியே கோவிச்சுக்கறேடா."

"ஸோ..! உன்னைக் கட்டின பெண்டாட்டிக்குத்தான் உன்மேல அதிகாரம் இருக்கு.. எனக்கு இல்லன்னு சொல்லவர்ற.."

குதர்க்கமாகக் கேட்ட நண்பனை ஆச்சரியத்துடன் பார்த்தான் சித்தார்த்தன்.. இந்தத் தாமோதரனை இதற்கு முன்பு அவன் பார்த்ததில்லை.. சித்தார்த்தனின் உயிர் நண்பனான தாமோதரன் டென்சனுக்கே டென்சன் கொடுக்கும் வல்லமை கொண்டவன்.. திருநெல்வேலிக்கு அல்வா கொடுத்து விடும் கெட்டிக்காரன்..

இப்படித் தொட்டாச் சிணுங்கியாக சித்தார்த்தனுடன் எதற்கெடுத்தாலும் மல்லுக்கு நிற்கும் தாமோதரன் சித்தார்த்தனனின் கண்களுக்குப் புதியவனாகத் தெரிந்தான்..

"வாட் ஹேப்பன் டு யு தாமு..?"

"எங்கே போயிட்டு வர்ற..?"

"பாத்தியா.. கட்டின பெண்டாட்டி மாதிரியே கொஸ்டின் பண்ற..? ஹா.. ஹா.. இதைச் சொன்னா கோவிச்சுக்கிற.."

"ஐ நீட் யுவர் ஆன்ஸர் சித்தார்த்..."

"ஓகே.. ஓகே.. பிஸினெஸ் லன்ச்சுக்குப் போயிட்டு வரேன்.. போதுமா..?"

"இன்னைக்கு பிஸினெஸ் லன்ச் இருக்குன்னு என்கிட்ட ஏண்டா நீ சொல்லலை..?"

"எனக்கே ஆபிஸ் வந்த பின்னால்தான் அதைப் பத்தியே தெரியும் தாமு.. அந்த ஃபாரின் கம்பெனிக்காரங்க அக்ரிமெண்ட கைல பிடிச்சுக்கிட்டு மார்னிங் பிளைட்டில வந்து இறங்கிட்டாங்க.. பிஸினெஸ் லன்ச்சுக்கு வா.. அக்ரிமெண்டில சைன் போடுன்னு போன் வந்துச்சு.. அவசரமா கிளம்பிப் போனதில உனக்கு இன்பர்ம் பண்ண மறந்திட்டேன் தாமு.. தட்ஸ் ஆல்.."

"தட்ஸ்.. ஆல்..?"

ஒரு தினுசாக வினவிய தாமோதரனின் குரலில் தெரிந்த ஒட்டாத தன்மையில் துணுக்குற்றான் சித்தார்த்தன்..

"வாட்'ஸ் ராங் வித் யு தாமு..?"

"நத்திங்.. எனக்கென்னவோ நீ என்னைவிட்டு விலகி தூரமா போகிறதைப்போல இருக்கு சித்தார்த்..."

"ரப்பிஷ்..! நீயும் நானும் நகமும் சதையும்டா.. யாராலேயும் நம்மைப் பிரிக்க முடியாது.."

"அப்படியா..?"

மீண்டும் ஒட்டாத வெறுமையான குரல்.. என்ன சொல்லி நண்பனின் மனதில் பழைய தோழமையை கொண்டு வருவது என்று புரியாமல் திகைத்தான் சித்தார்த்தன்..

"எதனால் உனக்கு இப்படியொரு டவுட் வந்ததுன்னு சொல்லுடா.."

"நீ பிஸினெஸ் லன்ச் போகிற விசயம் யாமினிக்குத் தெரிஞ்சிருக்கு.. எனக்குத் தெரியலை.. அவளைக் கேட்டு நான் தெரிஞ்சுக்க வேண்டியதா இருக்கு.. இனிமே உன் சம்பந்தப்பட்ட எல்லாத்தையும் அவளைக் கேட்டுத்தான் நான் தெரிஞ்சுக்கனுமோ..?"

"டேய்ய்.."

தலையைப் பிடித்துக் கொண்டான் சித்தார்த்தன்.. தாமோதரனின் குடைச்சலால் யாமினி இருக்கும் திசையில் கூட அவன் திரும்பிப் பார்ப்பதில்லை.. யாமினியும் அப்படித்தான்.. வேலை விவரம் என்றால் கூட சித்தார்த்தனனின் முகம் பார்க்காமல்தான் பேசுவாள்.. இருந்தும் தாமோதரன் அவளையும் முறைப்பான்.. சித்தார்த்தனையும் சாடுவான்..

'யாமினியைக் கண்டாலே இவனுக்கு ஆகாது.. இப்போது இதுவும் சேர்ந்துக்குச்சா..' சித்தார்த்தனுக்கு தலைவேதனையாக இருந்தது..

அத்தியாயம் - 62

பாதை தெரியாத பயணம் இது..

உன் விழியில் தூசு பட்டால்..

என் விழியே கலங்குவதேன்..?

"தாமு.. அவள் என் பி.ஏ.."

"தெரியுது.."

"நீ என் கம்பெனியோட ஜி.எம்டா.."

"நீதான் மெச்சிக்கணும்.. ஜி.எம்மோட பவர்தான் இங்க பப்பரப்பான்னு ஊத்திக் கவிழ்ந்திருச்சே.. ஆப்டர் ஆல்.. நேத்து வந்த பி.ஏ..! என்னைவிட அவ உனக்கு உசத்தியாப் போயிட்டா.."

"ம்ப்ச்..! அநியாயமாய் பேசாதே தாமு.. நீ கோவிச்சுக்கறேன்னு நான் அவகிட்ட அன்னெஸசரியா ஒரு வார்த்தை கூடப் பேசறதில்ல தெரியுமா..?"

"பேசாமத்தான் நீ பிஸினெஸ் லன்ச்சுக்குப் போயிருக்கிற விவரம் அவளுக்கு மட்டும் தெரியுமா..? ஏண்டா டேய்.. அவகிட்டச் சொல்லியிருக்கியே.. அந்த நியுஸை ஒரு வார்த்தை என் காதிலயும் போட்டு வைக்கனும்னு உனக்குத் தோணலை பாத்தியா..?"

"ஓ... நோ.. தாமு..! அவகிட்ட நான் சொல்லனும்னு சொல்லலைடா.. பிஸினெஸ் லன்ச்சுக்கு கிளம்பற அவசரத்தில சீட்டை விட்டு எழுந்திருச்சேன்.. இவ

ஏதோ லெட்டர்ல சைன் வாங்கனும்னு கேபினுக்குள்ள வந்தா.. அர்ஜண்ட் கால்ஸ் அண்ட் விசிட்டர்ஸ் வந்தா நான் பிஸினெஸ் லன்ச்சுக்குப் போயிருக்கேன்னு சொல்லிருங்கன்னு சொல்லிக்கிட்டே சைன் பண்ணினேன்.. யார்கூட பிஸினெஸ் லன்ச் அட்டெண்ட் பண்ணப் போறிங்க சார்ன்னு அவ கேட்டா.. இன்னார்

கூடம்மான்னு நான் விவரம் சொன்னேன்.. இது எதையும் பிளான் பண்ணிச் சொல்லலைடா.. தானா நடந்தது.."

"இதை நான் நம்பனும்கிற..?"

"நம்பித்தாண்டா ஆகனும்.."

"இனி இப்படித்தான் நடக்குமில்ல.. இந்தக் கம்பெனியோட ஜி.எம்முக்கு கம்பெனியைப் பத்தின விவரம் வேணும்னா எம்.டியோட பி.ஏ. கிட்டக் கேட்டுத்தான் தெரிஞ்சுக்கனும்ல்ல..?"

"தாமு.. இது ரொம்ப ஓவர்.."

"நீ செஞ்சதும்.. செய்கிறதும்தான் ஓவர்.."

"இப்ப என்னதாண்டா வேணும் உனக்கு.. அந்தப் பெண்ணோட சீட்டைக் கிழிச்சு வீட்டுக்குப் பற்றி விட்டுட்டா நீ நிம்மதியா இருப்பில்ல..? என்னையும் நிம்மதியா இருக்க விடுவில்ல..? அதுதானே உன் பிராப்ளம்..?"

சித்தார்த்தனின் நேரடியான கேள்வியில் பல்லைக் கடித்தபடி முகத்தைத் திருப்பிக் கொண்டான் தாமோதரன்.. நண்பன் சொன்னதில் இருந்த உண்மை அவனைச் சுட்டது..

"நீ இன்செக்யூராய் ஃபீல் பண்றேன்னு நான் சொல்ல மாட்டேன்.. வெரி ஸ்ட்ராங் பெர்சன் நீ.. வேணும்னே இதை மாதிரி பேசி வைக்கிற.."

தாமோதரனை தீர்க்கமாகப் பார்த்தபடி சொன்னான் சித்தார்த்தன்.. தாமோதரன் அதை மறுக்கவில்லை.. ஏற்றுக் கொள்வதைப் போலவும் முகத்தை வைத்துக் கொள்ள வில்லை.. முகம் மாறாமல் சண்டைச் சேவலைப் போல சித்தார்த்தனை முறைத்துக் கொண்டிருந்தான்..

ஓர் அளவுக்கு மேல் சித்தார்த்தனால் முடியவில்லை.. அப்படியொரு கோபத்துடன் தாமோதரனை அவன் பார்த்ததே இல்லை.. எவ்வளவுதான் கோபமிருந்தாலும் ஓரிரு நிமிடங்களில் சரியாகி விடுவான்.. சித்தார்த்தன் தான் மூட்-அவுட் ஆவான்.. தாமோதரன் மூட் அவுட் ஆக மாட்டான்.. உறண்டை இழுக்கும் சித்தார்த்தனின் மூடை

சரிக்கட்டி இழுத்து விடுவான்.. எதைச் சொன்னாலும் "லூசில விடுடா.." என்பான்..

'அந்த தாமோதரனா இவன்..?'

சித்தார்த்தனுக்குத் தாங்கவில்லை..

"தாமு.." என்று அழைத்தபடி நண்பனின் தோளில் கை வைக்கப் போனான்..

"டோன்ட் டச் மீ.." கண்டிப்புடன் பின்னால் நகர்ந்தான் தாமோதரன்..

"அடச் சீ..." சித்தார்த்தனுக்கு வெறுத்துப் போய் விட்டது..

"ஏண்டா.. பிரண்டைப் போலவா பேசற..? என்னவோ ரேப் பண்ண வருகிற வில்லனப் பாத்து ஹீரோயின் பேசறதைப் போல பேசி வைக்கிற..? ஏண்டா இப்படி வெறுப்பேத்தற..?"

"வரும்டா.. வெறுப்பு வரும்.. புதுசு புதுசா ஆளுக வந்தாச்சுல்ல.. பழைய பிரண்டைப் பாத்தா உனக்கு வெறுப்பு வரத்தான் செய்யும்.. போடா.. போயி உன் பிரியத்த யாருகிட்ட காண்பிக்கனுமோ.. அவங்ககிட்ட மட்டும் காண்பி.. என்கிட்ட வெறுப்பக் காண்பி.."

தாமோதரன் விர்ரென்று கேபினைவிட்டு வெளியேறி விட்டான்.. வேகமாக அவன் போனதில் ஆடிய கதவைப் போல சித்தார்த்தனின் மனமும் ஆடியது.. தலையைப் பிடித்துக் கொண்டு கண்களை மூடியவனின் எதிரே காபித் தம்ளரும்.. தலைவலி மாத்திரையும் வைக்கப் பட்டன.. சத்தம் கேட்டு கண்விழித்தான்.. அருகில் நின்றிருந்த யாமினி மௌனப் பார்வை பார்த்தாள்.. ஓர் புரிதலோடு அவர்களின் பார்வைகள் சங்கமித்தன..

மௌனமாக இமைகளைத் தாழ்த்தி கீ போர்டில் கவனமாக இருந்தாள் யாமினி..

தலையைப் பிடித்தபடி இமை மூடி சுழல் நாற்காலியில் சரிந்திருந்த சித்தார்த்தனைப் பார்க்கும் போது அவள் மனதில் குற்றஉணர்வு படிந்தது.. அவளால்தானே

நெருங்கிய நண்பர்களுக்கிடையே விரிசல் தோன்றியுள்ளது என்ற வேதனை அவளுள் படர்ந்தது..

அதி முக்கியமான ஒப்பந்தத்தில் கையெழுத்திடத்தான் அன்று பிஸினெஸ் லன்ச் என்று ஸ்டார் ஹோட்டலுக்குப் போயிருந்தான் சித்தார்த்தன்.. இது போன்ற சந்திப்புக்களுக்கு தாமோதரன் இல்லாமல் அவன் சென்றதில்லை.. எப்போதும் அதுதான் அவர்களுக்குள் எழுதப்படாத ஓர் செயல்பாடாக இருந்தது..

அன்று மட்டும் எப்படி தாமோதரன் இல்லாமல் போய் வந்தான்..? அதுவும் அதுபோன்ற சந்திப்பிற்கு அவன் போகிறான் என்ற விவரத்தைச் சொல்லாமலே போய் விட்டானே.. ஏன்..?

சித்தார்த்தனுக்கு மன உளைச்சலாக இருந்தது.. ஒப்பந்தம் பற்றிய முக்கிய விவரங்களை அவன் சொல்லச் சொல்ல.. கம்யூட்டரில் அதை டைப் பண்ணிக் கொண்டிருந்த யாமினி.. அவனிடமிருந்து சப்தம் வராததில் விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள்..

அதே சமயத்தில் இமை திறந்து அவனும் அவளைப் பார்த்ததில் இருவரின் பார்வையும் மறுபடியும் சங்கமித்தன.. புரிதலுடன் கூடிய இந்த சங்கமத்தில்.. அவன்..

'இது செகண்ட் டைம்...' என்று நினைத்துக் கொண்டான்..

அவனைப் பற்றிய புரிதல் தாமோதரனிடம் மட்டுமே இருக்கும்.. சித்தார்த்தன் மனதில் நினைப்பதை அவன் வாய் விட்டுச் சொல்லாமலே அறிந்து கொள்ளும் புரிதல் உடைய நண்பன் அவன்..

நீரஜாவிடம் அந்தப் புரிதல் இருந்ததில்லை... அவள் என்ன நினைக்கிறாள் என்பதை மற்றவர்களால் அனுமானிக்கவும் முடியாது.. மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அவளும் அறிய நினைத்த தில்லை..

ஒரு அலட்சியப் பார்வையும்.. மிடுக்கான தோள் குலுக்கலும் நீரஜாவுக்குச் சொந்தமானவை..

அவளுக்கும் தாமோதரனுக்கும் இடையில் எப்படி அப்பேற்பட்ட அன்யோன்யம் ஏற்பட்டது என்று சித்தார்த்தன் அடிக்கடி ஆச்சரியப்படுவான்..

அதிலும் சித்தார்த்தனிடம் நெருப்பாக கொதிக்கும் தாமோதரன்.. நீரஜாவிடம் நீராக குளிர்ந்து போவதுதான் விந்தையிலும் விந்தையாக அவனுக்குத் தோன்றும்..

அந்தத் தாமோதரன் சித்தார்த்தனின் மனம் நோகப் பேசிவிட்டுப் போய் விட்டான்.. அவன் பேச்சில் வலி கொண்ட மனதிற்கு மருந்து தடவுவதைப் போல புரிதலான பார்வையுடன் யாமினி சித்தார்த்தனுக்கு எதிரில் உட்கார்ந்திருந்தாள்..

'இதைத்தான் தாமு சொன்னானோ.. நானும் யாமினி வந்ததிலிருந்து தாமுவை இக்னோர் பண்றேனோ..'

சித்தார்த்தனுக்கு மறுபடியும் தலையை வலித்துத் தொலைத்தது.. மௌனப் பார்வையுடன் யாமினி அங்கிருந்து அகன்றாள்..

'வேலையை பாதியில விட்டுட்டு இவ எங்கே போறா..?'

அதற்கு மேல் யோசிக்க முடியாமல் தலைவலி அவனைப் பாடாய்ப் படுத்தியதில் சித்தார்த்தன் தலையைப் பிடித்துக் கொண்டான்..

"இந்தா.."

அவன் முன்னால் வேண்டாத புருசனுக்கு பல்லைக் கடித்தபடி மனைவி கொடுக்கிற காபியைப் போல 'ணங்' என்ற ஓசையுடன் காபி கப் வைக்கப்பட்டது..

'இந்த லட்சணத்தில யாரு காபிக் கப்ப வைக்கிறது..?' கோபத்துடன் கண் திறந்து முறைத்த சித்தார்த்தன்.. எதிரில் அவனை விட அதிகமாக முறைத்தபடி நின்றிருந்த தாமோதரனைக் கண்டதும்..

"டேய் தாமு.." என்றான் வாயெல்லாம் பல்லாக..

"போதும்.. இந்த நடிக்கிற வேலையையெல்லாம் வேற யார்கிட்டயாவது வைத்துக்க.. என்கிட்ட வேணாம்.. இந்தா.. காபியோட சேத்து இந்த டேப்லெட்டையும் முழுங்கித் தொலை.."

இப்படிக் கொடுக்கப்படும் காபியையும், மாத்திரையும் மனிதன் தொட்டுப் பார்ப்பானா..?

சித்தார்த்தன் தொட்டுப் பார்த்தான்.. என்னவோ.. காணாததைக் கண்டவன் போல காபிக் கப்பைக் கைப்பற்றி மடக்.. மடக்கென்று குடித்து முடித்தான்..

"இந்த டேப்லெட்டை எவன் முழுங்குவான்..?"

"நான் முழுங்க மாட்டேன்.. போடா.."

"இம்சையைக் கிளப்பாதே.. ஹெட் ஏக்குன்னு தலையைப் பிடிச்சுக்கிட்டு உக்காந்திருக்கத் தெரியுதில்ல.. டேப்லெட்டைப் போட்டால்தான் ஹெட்ஏக் குறையும்ன்னு தெரியாது..?"

"தெரியாதுடா.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

சித்தார்த்தன் சந்தோசமாகச் சிரித்தான்.. தலைவலி போன சுவடே தெரியாமல் சிரித்த முகமாய் இருந்தவனை கேபினுக்கு வெளியே இருந்து பார்த்த யாமினியின் மனம் லேசானது..

அத்தியாயம் - 63

உன் இமையோரப் பார்வையிலே..

ஒளிந்திருக்கும் மர்மம் என்ன..?

நேற்றய கேள்வி இன்றில்லை..

இன்றைய கேள்வி நாளையில்லை..

'நோய் உடலிலா..

மனதிலா.. தேவனே..?'

அருமையான பாடல் வரிகள்..! யாமினி அடிக்கடி ரசித்துக் கேட்கும் பாடல் வரிகள்..! மனதை தட்டி எழுப்பும் பாடல் வரிகள்..!

உடல் நோய்க்கு மருந்துண்டு.. மனதில் ஏற்படும் நோய்க்கு மருந்து எது..? அதைக் கண்டு உணர்ந்தவர் யார்..?

அதைத்தான் கண்டு உணர்ந்து சித்தார்த்தனுக்கு தேடிக் கொடுத்தாள் யாமினி..

தலைவலி என்பது உடல் நோயால் ஏற்பட்டிருந்தால்.. யாமினி கொடுத்த காபியிலும், மாத்திரையிலும்.. அது சரியாகியிருக்கும்..

வலி மனதில் ஏற்பட்டிருந்ததினால்தான் சித்தார்த்தனின் தலைபாரம் குறையவில்லை.. அதற்கான மருந்து காபியும், மாத்திரையுமல்ல..

சித்தார்த்தனின் உயிர் நண்பன் தாமோதரன்...!

யாமினி சித்தார்த்தனனின் அறையை விட்டு வெளியேறி தாமோதரனின் கேபினுக்குப் போனாள்.. அறைக் கதவை ஒற்றை விரலால் லேசாகத் தட்டினாள்..

"டொக்.. டொக்.."

அங்கேயும் தலையைப் பிடித்துக் கொண்ட உட்கார்ந்திருந்த தாமோதரன் தனிமை கலந்த எரிச்சலுடன்..

"யார்..?" என்றான்..

"மே ஐ கமின் சார்..?" யாமினி தலையை நீட்டினாள்..

"அதான் வந்து தொலைச்சாச்சுல்ல..? அப்புறமும் எதுக்காக பெர்மிசன் வாங்கறதைப் போல ஆக்டிங் வேண்டிக் கிடக்கு..?" எரிந்து விழுந்தான் தாமோதரன்..

"கர்ட்டஸி சார்.." யாமினி உள்ளே வந்தாள்..

"அதைப் பத்தியெல்லாம் நீங்க ஏங்க பேசறிங்க..? அதுக்கும் உங்களுக்கும் ரொம்பத் தூரம்.. வந்த விவரத்த சட்டுப்புட்டுன்னு சொல்லிட்டு இடத்தக் காலி பண்ணுங்க.." கறாராகப் பேசினான் தாமோதரன்..

"உட்கார்ந்துக்கவா சார்..?"

பதிலை எதிர்பார்க்காமல் யாமினி உட்கார்ந்ததில் பல்லைக் கடித்த தாமோதரன் அவளை ஒரு தினுசாக பார்த்தபடி..

"ஒட்டகமும் நீங்களும் ஒன்னுங்கிறதைப் புரூவ் பண்றீங்க.." என்று ஒரு தினுசான குரலிலேயே சொல்லி வைத்தான்..

"புரியலையே.." என்றாள் யாமினி..

"உங்களுக்கா புரியாது..? ஊருக்கே பாடம் எடுக்கிறவங்க நீங்க.. இந்த ஒட்டகக் கதையை புரியாதுங்கறிங்க.. என்ன..? காது குத்தறிங்களா..?" தாமோதரன் முறைத்தான்..

"ஆமாம் சார்.. நான் உங்க தாய் மாமி பாருங்க.. உங்களுக்கு காதணிவிழா நடத்த வந்திருக்கேன்.." வெடுக்கென்று சொன்னாள் யாமினி..

"தாய் மாமியா..?"

டேபிள் வெயிட்டை உருட்டியபடி.. வெடுக் கெடுக்கென பதில் சொல்லும் யாமினியை யோசனையுடன் பார்த்தான் தாமோதரன்..

"ஆமாம்.. தாய் மாமிதான்.."

"இப்படி ஒரு சொல்லை இன்னைக்குத்தான் கேள்விப்படறேன்.. யாரு நீங்க.."

"அதையும் நீங்களே சொல்லிருங்க ஜி.எம்.சார்.."

"தமிழுக்கே அகராதி சொல்லித் தர்றவங்க இல்ல.. நீங்க இதையும் சொல்லுவீங்க.. இதுக்கு மேலேயும் சொல்லுவீங்க.."

"இதுக்கு மேலேயும் இருக்கா..? வேண்டாம் சார்.. அதுக்கு விளக்க உரை.. பொழிப்பு உரை சொல்ல என்னால முடியாது.. தாய் மாமன்தான காதணி விழாவில

முக்கியமான ஆளு.. அதான்.. தாய் மாமனுக்குப் பெண்பாலா தாய் மாமின்னு சொன்னேன்.."

"ஓ.."

"தாய் மாமியப்பத்தி நான் சொல்லிட்டேன்.. ஒட்டகக் கதையை நீங்க சொல்றீங்களா..?"

"சொல்லிட்டாப் போச்சு.. இடத்தக் கொடுத்தா.. மடத்தப் பிடுங்குமாம்.."

"எது..?"

"ஒட்டகம்தான்.. வேற எது..? முதல்ல கூடாரத்துக்குள்ள தலைய நீட்டுமாம்.. அப்புறம் கழுத்தைக் கொண்டு வருமாம்.. கடைசியில மொத்தமாக உள்ளே நுழைஞ்சுக்கிட்டு.. கஷ்டப்பட்டு கூடாரம் போட்டிருந்தவன வெளியே துரத்தி விட்டுட்டு இது மட்டும் ஹாயாய் படுத்துத் தூங்குமாம்.."

தாமோதரன் சொல்ல வருவது என்ன என்பதைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்டாள் யாமினி...

செக்கரட்டரி போஸ்டில் நுழைந்தவள்.. சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனிஸின் ஆணி வேரான தாமோதரனின் இடத்தை ஆட்டிப் பார்ப்பதாக அவன் நினைக்கிறான்.. அதைத்தான் ஒட்டகக் கதை மூலம் யாமினிக்கு உணர்த்துகிறான்..

"நான் ஒட்டகமில்லை சார்.." உண்மையாகச் சொன்னாள்..

தாமோதரன் உதட்டை இகழ்ச்சியாக வளைத்து சீட்டில் சாய்ந்து அமர்ந்து அவளைப் பார்த்து வைத்தான்.. அந்தப் பார்வை..

'உன்னை நம்ப நான் என்ன முட்டாளா..?' என்று கேட்டது..

"நீங்க நம்பினாலும் நம்பாவிட்டாலும் நான் ஒட்டகமில்லை.."

யாமினி அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.. ஏனோ தெரியவில்லை.. தாமோதரனின் உதாசீனப் பார்வை

அவளை வெகுவாக பாதித்தது.. அவன் அவளை நம்ப வேண்டும் என்று அவளது மனம் அடித்துக் கொண்டது..

"ஒட்டகமில்லைன்னா.. நீங்க ஒட்டகச் சிவிங்கியா..?"

"நாலுகால் பிராணிகளோடேயே என்னை இணை கூட்டனுமா சார்..? இரண்டு கால் மனுச ஜீவனா நினைச்சே பார்க்க மாட்டிங்களா..?" ஆற்றாமையுடன் கேட்டாள் யாமினி..

"நான் எப்படி நினைக்கனும்னு டியூசன் எடுக்க வந்திருக்கீங்களா..? வெரிகுட்..! தி கிரேட் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸின் ஜி.எம்.முக்கு.. நேற்று வந்த செக்கரட்டரி டியூசன் எடுக்கிறாங்க.. வாழ்க வளமுடன்..! கீப் இட் அப்.."

"சார்.. ப்ளீஸ்.."

"எனக்கேம்மா ப்ளீஸ் போடறிங்க..? நீங்க யாரு.. எவ்வளவு உயரத்தில இருக்கீங்கன்னு எனக்குத் தெரியாம போச்சேம்மா.. தெரிஞ்சிருந்தா நீங்க இண்டர்வியூக்கு வந்த அன்னைக்கே உங்ககிட்ட டியூசன் படிக்க வந்திருப்பேன்.."

"உங்களுக்கு டியூசன் சொல்லிக் கொடுக்கிற அளவுக்கு நான் அறிவாளியில்ல சார்.."

"உங்க அறிவைப் பத்தி நீங்க சொல்லக் கூடாதும்மா.. நான் சொல்லனும்.. வாட் எ கிளவர் லேடி யூ ஆவர்..!"

"இந்தப் பாராட்டை என் வேலையைப் பாராட்டி நீங்க சொல்லியிருந்தா நான் சந்தோசப் பட்டிருப்பேன் சார்.."

"சொல்லனும்னு எனக்கும் ஆசைதான்.. எங்கே..? அதுக்கான சான்ஸைத்தான் நீங்க கொடுக்கவே மாட்டேங்கறீங்களே.. வேலையைத் தவிர மத்த அத்தனையையும் பார்க்கறிங்க.."

அப்படி எதைப் பார்த்தேன் என்று கேட்டு விட வேண்டுமென்று யாமினியின் இதயம் துடித்தது.. அடக்கிக் கொண்டாள்.. இதுபோன்ற குதர்க்கமான குத்தல் பேச்சை யாமினி கேட்டதே இல்லை.. அனுராதாவைத் தாண்டி

எவரும் யாமினியை அணுக முடிந்ததில்லை.. மகளைப் பொத்தித் தன் சிறகுக்கடியில் பாதுகாத்து வளர்த்து வருபவள் அனுராதா.. இடக்காக ஒரு வார்த்தையைக் கேட்டு விட்டால்.. அதை விடப் பத்துமடங்கு அதிகமாக திருப்பிக் கொடுத்துக் கட்டி விடுவாள்.. அந்தத் தருணத்தில் அவள் மட்டும் அங்கிருந்து தாமோதரன் சொன்ன வார்த்தகளைக் கேட்டிருந்தால்.. பொங்கலோ பொங்கல் என்று பொங்கித் தீர்த்திருப்பாள்..

"அப்புடிங்களா..? என் மக வேலயத் தவிர வேற என்னத்தப் பாத்தான்னு நீங்க சொல்றீங்க..? உங்க வேல இதுதானா..? என்னமோ பெரிசா சீமையில இல்லாத ஜி.எம்முன்னு பீத்திக்கறீங்க.. இந்த லட்சணத்தில தான் உங்க ஸ்டாப்கிட்ட வேல வாங்குவீங்களா..? உங்களுக்குத்தான் காது வரைக்கும் வாய் கிழியும்ன்னு நினைச்சுக்காதீங்க.. எங்களுக்கு அதுக்கு மேலேயே கிழியும்.. வந்துட்டாரு வக்கணை பேச.. என் மகளைச் சொல்கிறீங்களே.. நீங்க மட்டும் பெரிய வள்ளலா..? ஜி.எம் வேலயத் தவிர மத்த அத்தன நொனனாட்டியத்தைத்தான் நீங்களும் பாத்துக்கிட்டிருக்கீங்க.. எங்கேயாச்சும் ஜி.எம் மாப்பட்ட வேலயில இருக்கிறவங்க இப்படிப் பேசக் கண்டிருக்கோமா..? இத எங்கே போய் சொல்கிறது..?" என்று ஆரம்பித்து.. தாமோதரன் அந்தக் கம்பெனியில் எத்தனை ஆணிகளைப் பிடுங்கியிருக்கிறான் என்பது வரைக்கும் பிடிபிடியென்று பிடித்து பாடம் சொல்லிக் கொடுத்திருப்பாள்..

அனுராதா அங்கில்லாவிட்டால் என்ன..? அனுராதாவின் மகாளாய் லட்சணமாய்.. அம்மா பொங்கும் பொங்கலைத் தானும் பொங்கிப் பார்த்தாலென்ன என்று யாமினிக்குத் தோன்றியது..

ஆனால்.. அதனால் வளரும் விரோதம் முன்னிலும் அதிகமாக தாமோதரனிடமிருந்து அவளைத் தள்ளி வைத்து விடும் என்பதினால் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமை காத்தாள்..

"எம்.டிக்கான அத்தனை மீட்டிங்கையும் அம்மாதான் பிக்ஸ் பண்றீங்க.. கம்பெனியோட ஜி.எம்முக்கு தெரியாத இன்பர்மேசனெல்லாம் மேடத்துக்குத்தான் தெரிஞ்சிருக்கு.." தாமோதரன் அடுக்க..

"இதெல்லாம் பர்சனல் செக்கரட்டரியோட வேலை தானே சார்..?" என்று பொறுமையாக கேட்டாள் யாமினி..

"வாட்..?" தாமோதரனின் பார்வையில் அனல் பறந்தது..

"என் வேலை எதுவோ.. அதைத்தானே சார் நான் பார்த்திருக்கேன்.. அன்னெசஸரியா எதையும் செய்யலையே.. அப்புறமும் எப்படி சார் நீங்க என்மேல பழி போடலாம்..?"

யாமினி நிதானமாக கேட்க வேண்டிய கேள்வியைக் கேட்டு விட்டாள்..

அத்தியாயம் - 64

என்றேனும் ஓர் நாளில்..

என் மனதை அறிவாயா..?

நீ பேச நினைப்பதையெல்லாம்..

நான் ஏன் கேட்க வேண்டும்..?

தாமோதரன் கண்கள் இடுங்க அலட்டிக் கொள்ளாமல் கேள்வி கேட்டவளை முறைத்துப் பார்த்தான்.. அவனுக்குள் எதற்காக அத்தனை கோப அலைகள் பரவுகின்றன என்று அவனுக்கே தெரியவில்லை..

"என்ன..? என்கூட சண்டை போட வந்தீங்களா..?"

"நோ சார்.. நான் வந்தது வேறு ஒரு மேட்டருக்காக.. நீங்கதான் எதையெதையோ பேசி என்னையும் எதையெதையோ பதில் சொல்ல வைத்துட்டிங்க.."

"ஷட் அப்.. அண்ட்.. கெட்லாஸ்ட்.. ஆப்டர் ஆல் ஒரு செக்கரட்டரி.. நீங்க.. கம்பெனியோட ஜி.எம் முக்கே புத்தி சொல்ல வந்திட்டிங்களா..? ஓ மை காட்..! கம்பெனி எங்கே போய்க்கிட்டு இருக்கு..?"

"எங்கேயும் போகலை.. இருக்கிற இடத்திலதான் இருக்கு.. உங்களுக்கு புத்திசொல்ற அளவுக்கு நான் அறிவாளியில்லைன்னு ஏற்கனெவே சொல்லிட்டேன் சார்.."

"ஸோ வாட்..? வாயை மூடுன்னு சொல்றீங்களா..?"

எதைச் சொன்னாலும் கேட்க மாட்டேன் என்று அடம் பிடிப்பவனை என்ன செய்வது என்று மனம் சோர்ந்து போனாள் யாமினி..

முன்னால் போனால் கடிப்பான்.. பின்னால் போனால் உதைப்பான் என்று எட்ட நின்று பேசினாலும் அவன் விடாப்பிடியாக நீ எங்கே நின்றாலும் உதைப்பேன் என்று மல்லுக்கு வந்தால் அவள்தான் பாவம் என்ன செய்வாள்..?

"நான் எதுவும் சொல்லலை சார்.."

"பின்னே.. என்ன அலுவலுக்காக என் கேபினுக்குள்ள வந்து உட்கார்ந்து என் வேலையைக் கெடுத்துக்கிட்டு இருக்கீங்க..? நீங்களும் வேலை செய்ய மாட்டிங்க.. மத்தவங்களையும் வேலை செய்ய விடமாட்டிங்கன்னு சொன்னா பெரிய ஆராஜகமால்ல இருக்கு.. இதில இவங்க வேலையை மட்டும்தான் பாக்கிறாங்களாம்.. விளக்கம் சொல்ல வந்துட்டாங்க.."

"சார்.."

"வெளியே போங்க.."

தாமோதரன் வாசலை நோக்கிக் கை காட்டினான்.. அதனால் முகம் சிறுத்துப் போவாள்.. மனம் குன்ற அழுது விடுவாள் என்றெல்லாம் அவன் ஆவலுடன் எதிர்பார்க்க.. யாமினி சலனமில்லாத முகத்துடன் அசையா மரமாய் உட்கார்ந்து தாமோதரனின் அத்தனை

எதிர்பார்ப்புகளையும் தவிடு பொடியாக்கினாள்.. தாமோதரனுக்கு ஏமாற்றமாக இருந்தது..

'அசைய மாட்டேங்கிறாளே..' பல்லைக் கடித்தான்..

அவளோ நான் ஏன் அசைய வேண்டும் என்ற ரீதியில் பல்லைக் கடித்தபடி சட்டமாக அமர்ந்திருந்தாள்..

"என்ன..? அழிச்சாட்டியம் பண்றிங்களா..?"

"நான் ஒரு சாட்டியமும் பண்ணலை சார்.."

"வெளியே போங்கன்னு சொன்னேன்.."

"கோபத்தில சொல்றிங்க சார்.."

"கோபத்திலதான் சொல்றேன்.. பின்னே.. உங்களைப் பாத்தா மகிழ்ச்சியா பொங்கும்..? ச்சை..! ஒரு தடவை சொன்னா உறைக்கனும்.. ஜி.எம் என்ன சொன்னாலும் ஒபே பண்ணக் கூடாதுங்கிற முடிவோட இருக்கீங்களா..?"

"உங்களோட எந்த ஆர்டரை சார் நான் ஓபே பண்ணாம இக்னோர் பண்ணினேன்..?"

"இப்ப இக்னோர் பண்ணிக்கிட்டு இருக்கீங்களே.."

"இது வேற சார்.."

"வேறன்னா..?"

"நான் சொல்ல வந்ததை சொல்லாமல் போகக் கூடாதுங்கிற திடம்.. இது ஜி.எம்மோட ஆர்டர இக்னோர் பண்ணினதா ஆகாது.."

"அப்படி நீங்களா ஒரு முடிவுக்கு வந்திராதீங்க.."

"நீங்க என்ன வேணும்னாலும் சொல்லிக்கங்க.. ஐ டோண்ட் கேர்.. நான் பேச வந்ததைப் பேசாம இங்கேயிருந்து போக மாட்டேன்.."

"என்ன திமிர்..!"

"இதைத் திமிர்ன்னு நினைச்சா நினைச்சுக்கங்க.."

"டோன்ட் பிளே வித் மீ.. நான் சித்தார்த்தனில்லை.. தாமு..! அண்டர்ஸ்டாண்ட்..?"

"அண்டர்ஸ்டாண்ட் சார்.."

எதற்கும் மசியாமல் அவள் பிடித்த பிடியிலேயே இருந்ததில் கொலை வெறியாகிப் போனான் தாமோதரன்.. கையிலிருக்கும் டேபிள் வெயிட்டால் அவள் மண்டையை உடைத்து விடலாமா என்று கூட யோசித்தான்.. பெண்களுக்கு எதிராக வன்முறையைப் பிரயோகிக்கக் கூடாது என்று மகாபாரதம் சீரியலில் பீஷ்மர் சொன்ன டயலாக் ஞாபகத்திற்கு வந்ததால் அந்த யோசனையைக் கைவிட்டான்..

யாமினியைப் பார்த்தால் டேபிள் வெயிட்டால் அடி வாங்கினால் கூட இடத்தைக் காலி பண்ண மாட்டாள் என்று தோன்றிது..

'இவ ஒரு முடிவோடதான் வந்திருக்கா..'

தாமோதரனின் நெற்றி சுருங்கியது.. அந்த முடிவு என்னவாக இருக்கக் கூடுமென்றுதான் அவனுக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

'கொடுமடா சாமி.. ஜி.எம் கூட பேச்சு வார்த்தை நடத்தியே தீருவேன்னு செக்கரட்டரி மல்லுக்கு நிற்கிறா.. எந்தக் கம்பெனியிலேயாவது இது போல நடந்து தொலைக்குமா..?'

இதற்காகவே சித்தார்த்தனை வீடு கட்டி அடிக்க வேண்டும் என்று அவனுக்குள் ஆத்திரம் மூண்டது..

'ஒரு வயலெட்டையே இந்தக் கம்பெனியில தாக்குப் பிடிக்க முடியல.. இதில இவ நூறு வயலெட்டுக்கு ஈக்குவலா இருப்பா போல இருக்கே..'

அவளுக்கு மந்திரித்து விட வேண்டும் என்று மனதுக்குள் முடிவு கட்டினான் தாமோதரன்..

'இவளுக்கு வேப்பிலை அடிக்காம அடங்க மாட்டா..'

அதற்கான நந்நாளாக எந்நாளையும் அவன் குறிக்க வில்லை.. அவன் வேப்பிலை அடிக்க வேண்டும் என்று முடிவு பண்ணி விட்டால் எல்லா நாள்களும் அவனுக்கு நல்ல நாள்கள்தான்..

'இருக்கு உனக்கு..' கருவிக் கொண்டான்..

அவன் மனதிற்குள் ஓடும் வன்மங்களைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாதவளாக யாமினி இருந்ததில் அவனுடைய வன்மம் அதிகமானது..

'திமிர்..?'

"இல்லை சார்.."

அவன் மனதில் ஓடும் எண்ணங்களை இழுத்துப் பிடித்து நிறுத்திப் படித்து விட்டுச் சொல்கிறவளைப்

போல யாமினி சொல்லி வைத்ததில் அவனுக்கு ஆச்சரியமெல்லாம் ஏற்படவில்லை..

'இவளே யட்சிணி..! தொண்டைக்குழியில இருக்கிற எண்ணத்தத் தோண்டி எடுக்கிறதுக்கு இவளுக்கு சொல்லியா தரனும்..?'

கால்மேல் கால் போட்டு தோரணையாய் அமர்ந்து..

"என்ன இல்லை சார்..?" என்று புருவங்களை உயர்த்தினான் தாமோதரன்..

"நீங்க நினைக்கிறதைப் போல இல்லை சார்.." அவளும் விடாப்பிடியாய் பதில் சொன்னாள்..

"நான் என்ன நினைச்சேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"தெரியும் சார்.."

"அதுதான் எப்படி..? வெத்தலையில மை தடவி ஜோசியம் பார்த்தீங்களா..?"

"இதுக்கெல்லாம் ஜோசியம் பாக்கணுமா சார்..? உங்க மனசில என்ன நினைப்பீங்கன்னு என்னால கண்டு பிடிக்க

முடியாதா..?"

இயல்பாக தலை சரித்தவளை புருவங்களை நெரித்தபடி முறைத்து வைத்தான் தாமோதரன்..

"நீங்க வேலைக்கு வந்து எத்தனை நாளிருக்கும்..?" மட்டம் தட்டும் விதத்தில் கேட்டும் வைத்தான்..

"நாளில்லை சார்.. மாதங்கள்.." அதற்கும் பதில் சொன்னால் யாமினி..

"கிரேட் மிஸ்டேக்கக் கண்டு பிடிச்சிட்டிங்க.. இரண்டு மாதம் வேலை செஞ்சா அது மாதங்களா ஆகிருமா..? கெட்டிக்காரங்கதான்.. பிழைச்சுக்குவீங்க.."

"தேங்க் யூ சார்.."

"இந்தத் திமிரைக் கொஞ்சம் மூட்டை கட்டி கடலில் போடுங்க.. எரிச்சல் வருது.. நேத்து இந்நேரம் வேலைக்குச் சேர்ந்துட்டு.. என்னவோ காலம் காலமா என்கூடப் பழகினதப் போல என் மனச கண்டு பிடிக்க முடியாதான்னு கேட்கறிங்க..?"

சொல்லிக் கொண்டே வந்த தாமோதரன்.. 'காலம்.. காலமாக..' என்ற அவனது வார்த்தையில் தலை நிமிர்ந்து அவனையே இமைக்காமல் பார்த்த யாமினியின் பார்வையில் தடுமாறிப் போனான்..

இது.. இது.. காலம்.. காலமாக அவன் அறிந்த பார்வை போல இருக்கிறதே.. ஏன்..?

'இவ வில்லங்கம் பிடிச்சவ..'

அவசரமாகப் பார்வையைத் திருப்பித் தப்பித்தான் தாமோதரன்..

"காலம் காலமா பழகிட்டா மட்டும்.. பழகின வங்களோட மன உணர்வுகளை நாம புரிஞ்சுக்கிறோமா என்ன..?"

அதற்கும் சுதாரித்து தன்னிலைக்கு திரும்பி விட்ட யாமினி கேட்டாள்..

"என்ன சொல்கிறீங்க..?" தாமோதரனின் புருவங்கள் உயர்ந்தன..

"எம்.டி சாரோட காலம் காலமா நீங்க பழகி என்ன பிரயோசனம்..? அவர் மனச புரிஞ்சுக்காம இங்கே வந்து உட்கார்ந்துட்டிங்களே.."

யாமினியின் குற்றச்சாட்டில் தாமோதரனுக்கு கோபம் வந்துவிட்டது..

அத்தியாயம் - 65

ஒரு கண்ணில் அடிபட்டால்...

மறு கண்ணும் வலிக்காதோ..

எதனாலும் பிரியாது..

இதயத்தில் தோன்றும் நேசம்..

மற்ற விசயங்களில் எப்படியோ.. சித்தார்த்தனின் விசயத்தில் தாமோதரன் அதிகமாக பொசசிவ்னெஸ்ஸோடு இருப்பான்.. என் நண்பன்தான் எனக்கு மட்டும்தான்னு பாட்டுப் பாடாத குறைதான்.. சொல்லி வைத்ததைப் போல சித்தார்த்தனும் தாமோதரனைத் தவிர மற்ற நண்பர்களிடம் அதிகமாக பழகியதில்லை.. அவனுக்கு உற்ற நண்பன், உயிர்நண்பன்.. எல்லாமே தாமோதரன் மட்டும்தான்..

அந்த ஒற்றை நண்பன்.. உயிர் நண்பனின் மனதைப் புரிந்து கொள்ளாமல் தாமோதரன் உட்கார்ந்திருக்கிறானா..?

"என்ன உளருகிறீங்க..?"

"உளறலை சார்.. உண்மையைத்தான் சொல்றேன்.."

"என்ன உண்மையைப் பெரிசா கண்டுட்டீங்க..?"

"கண்டதைத்தான் சொல்றேன்.. ஹெட் ஏக்குன்னு இதுவரைக்கும் நாலு கப் காபியோட நாலு டேப்லெட்ஸை

உள்ளே தள்ளியிருக்கார்.. தலைவலி குறைஞ்ச பாடாயில்லை.."

"என்னது..?..!"

தாமோதரனின் முகம் மாறியதில் யாமினி திருப்தியாக உணர்ந்தாள்.. அவளுக்குள் அமைதி வந்தது.. அவளால் பிணங்கி நிற்கும் நண்பர்களைப் பேச வைத்து விட்டால் போதும் அவளுக்கு.. வேறு எதுவும் வேண்டாம்..

"ஆமாம் சார்.. வலி தலையில இல்லை.. அவர் மனசில இருக்கு.. டேப்லெட்ஸாலே எப்படி அந்த வலியை விரட்ட முடியும்..? நீங்க கோபமா சத்தம் போட்டுட்டு இந்தப் பக்கம் வந்துட்டிங்க.. அந்தப் பக்கம் அவர் தலைலயைப் பிடிச்சுக்கிட்டு உட்கார்ந்தவர்தான்.. இன்னும் தலை தூக்கல.."

"என்ன ஆளு இவன்..? அக்ரிமெண்ட் சைன் ஆனத இம்மீடியட்டா ஃபைல் பண்ணியாகனுமே.. அதுக்கான டிக்டேசனைக் கொடுத்தானா இல்லையா..?"

"எங்கே சார்..? கொடுக்கிறார்.. கொடுக்கிறார்.. கொடுக்கிறார்.. அப்போதிருந்து இப்போ வரைக்கும் கொடுத்துக்கிட்டே இருக்கார்.."

"மை காட்..! பக்கம்.. பக்கமா டிக்டேட் பண்ணித் தொலைக்கிறானா..?"

"நீங்க வேற.."

யாமினி இயல்பாகச் சொல்லிவிட்டு நாக்கை கடித்துக் கொண்டாள்..

'இப்பத்தான் மலையிறங்கி... குணசாலியா சொல்றதைக் காது கொடுத்துக் கேட்டுக்கிட்டு இருக்கான்.. இதில பேசத் தெரியாம நான் பேசி வைச்சிட்டேன்.. இவன் இதுதான் சாக்குன்னு.. ஆமாம்மா.. நீ கம்பெனிக்குள்ள காலடி வைக்கிறது வரைக்கும் நானும் சித்தார்த்தனும் ஒன்னு மண்ணா.. பிய்த்தாலும் பிய்க்க முடியாத பிரண்ட்ஷிப்போட ஒட்டிப் பிறந்த ரெட்டைப் பிறவிகள் மாதிரிதான்

இருந்தோம்.. மகராசி நீ வந்து சேர்ந்த.. நான் வேற.. அவன் வேறன்னு ஆகிட்டோம்ன்னு பிலாக்கணம் பாட ஆரம்பிச்சிருவானே..'

நல்ல வேளையாக.. யாமினி பயந்ததைப் போல எதுவும் ஆகிவிடவில்லை.. தாமோதரன் மலையேற வில்லை.. மாறாக கவலையுடன் கேள்வி கேட்டான்..

"என்னம்மா செஞ்சு தொலைச்சான்..?"

"ஒரு வார்த்தை சொல்றாரு.. விட்டத்த விட்டத்தப் பாக்கிறாரு.."

"கிழிஞ்சது போங்க.."

"இன்னொரு வார்த்த சொல்றாரு.. ரூம் மூலையை உத்து உத்துப் பாக்கிறாரு.."

"விட்டத்திலயும்.. மூலையிலயும் என்ன இருக்கு..?"

"எனக்கும் தெரியலையே சார்.. ஒரு மணி நேரமா உக்காந்திருக்கேன்.. இதுவரைக்கும் எண்ணி ஆறே ஆறு வார்த்தைகளத்தான் டிக்டேட் பண்ணியிருக்காரு.."

"ஆறே வார்த்தைகளா..?"

"ஆமாம் சார்.. ஆமாம்.."

"இது தேறாத கேஸ்தான்.."

"அதனாலதான் உங்களைப் பார்க்க வந்தேன்.. நீங்க வந்தால்தான் அவரை சரி பண்ண முடியும்.. இப்படியே விட்டுட்டிங்கன்னா வீட்டுக்குக் கிளம்பறதுக்குள்ள ஃபீவரைக் கூட இழுத்து விட்டுக்குவார் போல இருக்கு.."

"ஃபீவரா..?"

"ஃபீவரேதான்.. அதிகமாக தலை வலிச்சா அது ஃபீவரிலதான போய் முடியும்..?"

தாமோதரன் எழுந்து விட்டான்.. சித்தார்த்தனின் மீதான அவனது அக்கறையில் உள்ளம் நெகிழ்ந்தாள் யாமினி.. அதுபோன்ற நட்பு அவள் வாழ்வில் இல்லை.. ஓர்நொடி

அந்த நண்பர்களுக்கிடையே நிலவிய நட்பில் அவளுக்கு பொறாமை வந்தது..

"நீங்க உங்க சீட்டுக்குப் போய் வேலையைப் பாருங்க.. அப்பத்தான் வாங்கற சம்பளம் செரிக்கும்.."

மறக்காமல் யாமினியை நோக்கி ஓர் சொல்லம்பையும் விட்டு விட்டுத்தான் அவன் சித்தார்த்தனைத் தேடிப் போனான்..

"தலையை வலிச்சா வீட்டுக்குப் போய் தொலைக்க வேண்டியதுதானே.."

சித்தார்த்தனின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தபடி அதட்டினான் தாமோதரன்.. தாயிடம் சலுகை கொள்ளும் மழலையாக நண்பனின் கையைப் பற்றிக் கொண்ட சித்தார்த்தன்..

"ஃபீவர் இல்லடா.." என்றான்..

"எங்களுக்கும் அது தெரியுது.. நான் கேட்டதுக்கு பதிலச் சொல்லு.."

"வேலையிருந்துச்சுடா.."

"அப்படி என்னத்தடா தலைவலியக் கூடத் தாங்கிக் கிட்டு நீ கிழிக்கிற அளவுக்கு அதி முக்கியமான வேலயக் கிழிச்சுக்கிட்டு இருந்த..?"

"பிஸினெஸ் லன்ச்சுக்குப் போனேனில்ல.."

சித்தார்த்தன் விவரம் சொல்ல ஆரம்பித்தான்.. நண்பனை புறக்கணித்து விட்ட பிஸினெஸ் லன்ச்சின் நினைவில் தன்னைத்தானே நொந்து கொண்டான்..

"கருமம் பிடிச்சவனுகடா.. வர்றேன்னு சொன்னது ஓர் நாளு.. வந்து நிக்கிறது ஓர் நாளு.. திடிர்ன்னு கால் வந்ததும் அரக்கப் பறக்க ஓடினதில உனக்கு இன்பர்ம் பண்ண மறந்திட்டேண்டா தாமு.."

"அதனால என்னடா.. லீவ் தட் மேட்டர்.."

அமைதியான குரலில் தாமோதரன் சொன்னான் என்பதற்காக அவன் அந்த விசயத்தை படு இலகுவாக எடுத்துக் கொண்ட புறம் தள்ளி மறந்து விட்டான் என்பதை சித்தார்த்தன் நம்பத் தயாராக இல்லை..

நிழலாக பின் தொடரும் நண்பனின் குணாதி சியத்தை சித்தார்த்தன் நன்கு அறிவானே..

தாமோதரனின் அமைதியான குரல் புயலை உள்ளடக்கியது.. அனுபவித்துப் பார்த்தவனுக்குத்தான் தெரியும்.. அந்த அமைதியின் ஆழம் எத்தகையது

என்பது..

"என்கிட்டச் சொல்லனும்னு எந்த அவசியமும் இல்லைடா சித்தார்த்.. யாரு நானு..? ஆப்டர் ஆல் ஒரு ஜி.எம். நீ பர்சனல் செக்கரட்டரிகிட்டச் சொல்லிட்ட இல்ல.. அதுதான் இம்பார்டண்ட்.."

"தாமு.. என்னை நீ மன்னிக்கவே மாட்டியாடா..?"

தாள முடியாமல் சித்தார்த்தன் தலையைப் பிடித்ததில் போனால் போகிறது.. பிழைத்துப் போகட்டும் என்று விட்டு விட்டான் தாமோதரன்..

சித்தார்த்தனுக்கு அது தெரியும்.. என்னதான் தாமோதரனின் தாவாங்கட்டையைப் பிடித்து தாஜா பண்ணினாலும் மலையேற வேண்டும் என்று அவன்

முடிவு பண்ணிவிட்டால் இறங்கவே மாட்டான் என்பதை அவன் நண்பனான சித்தார்த்தன் அறியாமல் வேறு எவர் அறிவார்..?

அதற்குப் பதிலாக தலை நோவு என்று தலையைப் பிடித்தால் மலையேறி மகாதேவனான தாமுக்குட்டி மலையை விட்டு 'டகார்' என்று குதித்து விடுவான் என்பதால் சித்தார்த்தன் டாட்டா சொல்லி விட்டுப் போன தலைவலி மறுபடியும் வந்து டேரா போட்டு விட்டதாக நடித்துத் தப்பித்தான்..

"தொலையுது விடு.."

தாமோதரன் கம்யூட்டரைப் பார்த்தபடி சொன்னதும் இவன் எவரைத் தொலையச் சொல்கிறான் என்று திரும்பிப் பார்த்தான் சித்தார்த்தன்.. அங்கே ஆதுரப் பார்வையுடன் யாமினி நின்றிருந்தாள்..

'இவளைத் தொலையச் சொல்கிறானா..?'

தாமோதரனைக் கேட்டால் அவன் கொஞ்சம் கூடத் தயவு தாட்சண்யம் பார்க்காமல் 'ஆமாம்' என்று அடித்துச் சொல்லி விடுவான் என்று நினைத்துக் கொண்ட சித்தார்த்தனுக்குச் சிரிப்பு வந்தது..

"எதுக்குடா சிரிக்கிற..?" தாமோதரன் சந்தேகமாக அவனைப் பார்த்தான்..

"சும்மா.." சித்தார்த்தன் கண் சிமிட்டினான்..

"கேர்ள் பிரண்டுகிட்ட பண்ண வேண்டிய வேலையை எல்லாம் பாய் பிரண்டுகிட்டக் காட்டுங்கடா.. விளங்கிடும்.." தாமோதரன் அலுத்துக் கொண்டான்..

"எனக்கேதுடா கேர்ள் பிரண்ட்..?" என்றான் சித்தார்த்தன்..

"இல்லேங்கறியா..?" ஆழமான குரலில் தாமோதரன் கேட்ட அதே நொடியில் அறைக்குள் யாமினி நுழைந்து வைத்தாள்..

தாமோதரனின் பார்வை உயர்ந்து யாமினியைப் பார்த்துவிட்டு சித்தார்த்தனின் மீது அர்த்த புஷ்டியுடன் படிந்தது..

"இதைத்தான் யட்சிணி வேலைங்கிறது.."

தாமோதரன் சத்தமாக சொல்லி வைத்ததில் யாமினி கேள்வியுடன் சித்தார்த்தனைப் பார்த்தாள்.. என்னடா இது என்று பதறிப்போன சித்தார்த்தன் அவள் எதைத்தான் என்று கேள்வி கேட்கும் முன்னால் அவசரமாக விட்டுப் போன ஆபிஸ் மேட்டரை டிக்டேட் பண்ண ஆரம்பித்தான்..

சொல்லி விட்டுச் சென்று விட்டாய்..

சொக்குவது என் மனமல்லவா..?

உனக்கும் எனக்குமான பந்தம்..

எவருக்கும் புரியாத சொந்தம்..

யாமினியின் கண் வீச்சில் தாக்கப்பட்டான்.. சித்தார்த்தன்.. அவள் விழிகளில் ஒளிரும் ஒளிர்வில் ஏன் அவன் சிறைபட்டு விடுகிறான் என்று அவனுக்குப் புரிந்து தொலைக்கவில்லை.. அவளைப் பார்த்து விட்டால் விழிகளை விலக்க முடியாமல் கலந்து விட அவளென்ன மாயம் செய்து வைத்திருக்கிறாள் என்று தன் மனதிற்குள் அவன் கேட்டுக் கொண்டான்.. தாமோதரனிடம் இதைக் கேட்டு விட முடியாது..

"அவள் மாயக்காரிதானேடா.." என்று ஆரம்பித்து விடுவான்..

'இவள் மாயக்காரியா..?'

அவள் பார்க்காத போது அவன் பார்த்து வைக்க.. மிகச்சரியாக அந்த நொடியில் அவள் விழியுயர்த்தி அவனைப் பார்த்து வைத்ததில் அவனுக்குள் திடுக்கிடல் வந்தது..

'இவள் மாயக்காரிதான்..'

நிச்சயமாக அவன் நம்பினான்.. தாமோதரனிடம் இதைச் சொன்னால் அவன் இனிப்பு சாப்பிட்டுக் கொண்டாடலாம் வா என்று குதித்து விடுவான் என்று நினைத்துக் கொண்டவனுக்கு சிரிப்பு வந்தது..

"இப்பத்தாண்டா நீ என்னோட பிரண்டு... ஒருவழியா நான் சொன்னதைப் புரிஞ்சுக்கிட்டே பார்த்தியா.. இவ மாயக்காரிங்கிற ஃபீலிங் உனக்கு வந்திருச்சுல்ல.."

இப்படித்தான் தாமு பேசி வைப்பான்.. அவன் அத்துடன் நிறுத்தி விட்டால் தேவலையே.. அப்படி அவன் நிறுத்தித்

தொலைக்க மாட்டானே.. அடுத்ததாக..

"உனக்கே இவ மாயக்காரின்னு தோணிப் போயிருச்சில்ல.. இனியும் ஏண்டா இவ சீட்டைக் கிழிக்காம விட்டு வைச்சிருக்க..?" என்று தொணத்த ஆரம்பித்து விடுவான்..

அதனாலேயே எல்லா விவரங்களையும் தாமோதரனுடன் பகிர்ந்து கொள்ளும் சித்தார்த்தனனால் யாமினியைப் பற்றிய உணர்வுகளைப் பற்றிய விவரங்களை தாமோதரனுடன் பகிர்ந்து கொள்ள முடியவில்லை..

அப்படி நண்பனிடமும் சொல்லாமல் மறைத்து யாமினியை அங்கேயே வேலைக்கு வைத்திருப்பதன் காரணம்தான் என்ன..?

தாமோதரன் திணுசு திணுசாக கேட்கும் இந்தக் கேள்விகளுக்கான விடை சித்தார்த்தனுக்குக் கிடைக்கவே யில்லை..

யாமினியைப் பார்த்ததும் அவன் உடலில் தோன்றும் அதிர்வு.. அவளை மீண்டும்.. மீண்டும்.. பார்க்கத் தூண்டும் மன உணர்வு.. அவளைப் பார்க்காவிட்டால் அவன் மனதில் தோன்றும் ஏக்கம்.. பார்த்து விட்டால் விழி விலக்க முடியாமல் கட்டுண்டு போகும் பந்தம்..

இவை அத்தனைக்குமான காரணம் எதுவாக இருக்கக்கூடும் என்று யோசித்து.. யோசித்து அலுத்து விட்டான் சித்தார்த்தன்..

'ஒரு வேளை.. இதுதான் காதலா..?'

அதுவும் தெளிவாகத் தெரிந்து தொலைக்கவில்லை.. கண்டதும் காதல் என்று சொல்லித் தொலைக்க முடியவில்லை.. யாமினியை முதன் முறையாக மகாபலி புரத்தில் கடற்கரையோரமாக ஐந்து ரதக் கோவிலில் சந்தித்த போது அவள் மீது அவனுக்குள் ஏற்பட்ட ஈர்ப்பிற்கு என்ன பெயரை வைப்பது என்று தெரியாமல் இன்னும் அவன் குழம்பிக் கொண்டிருக்கிறான் என்பதுதான் நிஜத்திலும் நிஜம்..

இதைத் தாமோதரனிடம் சொல்லி விட முடியாது.. ஏற்கனெவே யாமினியால் சித்தார்த்தன் குழம்பிப் போயிருப்பதாக அவன் தாம்தூமென்று குதித்துக் கொண்டிருக்கிறான்.. அது முக்காலும் உண்மை என்பதால் சித்தார்த்தனும் அந்தக் குற்றச்சாட்டை வாய்மீது ஒற்றை விரலை வைத்து மௌனமாக ஏற்றுக் கொண்டிருக்கிறான்.. இந்த லட்சணத்தில் இதுபோன்ற ஆய்வுகளையும் சித்தார்த்தன் சொல்லி வைத்தானென்றால் வேறு வினையே வேண்டாம்..

"யாமினியை வேலையில இருந்து தூக்கற வரைக்கும் நம்ம கம்பெனி முன்னாலே உண்ணாவிரதப் போராட்டத்தில் உட்காரப் போறேண்டா.." என்று உட்கார்ந்தாலும் உட்கார்ந்து விடுவான்..

ஆதலினால் அதுபோன்ற பரிட்சார்த்த பேச்சு வார்த்தைகளை நடத்தி விடாமல் சர்வ ஜாக்கிரதையாக நண்பனிடம் எதையும் சொல்லாமல் நாள்களை கடத்தி வந்தான் சித்தார்த்தன்..

கூடுமானவரை மௌனமாகப் போய் விடுவதே சாலச் சிறந்தது என்ற கொள்கையை அவன் கடைபிடித்துத் தொலைத்ததினால்தான் அதிமுக்கியமான பிஸினெஸ் டின்னரைப் பற்றித் தாமோதரனிடம் சொல்ல மறந்து ஓடி விட்டான்..

எதற்கும் இருக்கட்டுமென்று வெகு ஜாக்கிரதையாக யாமினியின் முகத்தைப் பார்க்காமல் விட்டத்தைப் பார்த்தபடி டிக்டேட் செய்தான் சித்தார்த்தன்..

யாமினி அவனுக்கும் மேலே இருந்தாள்.. அவன் விட்டத்தைப் பார்த்தால்.. இவள் தரையைப் பார்த்தபடி அவன் சொன்னதை லேப்டாப்பில் பதிவு செய்து கொண்டிருந்தாள்..

யாமினியின் பக்கதிலிருந்த சேரில் உட்கார்ந்து அவர்கள் இருவரையும் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான் தாமோதரன்.. அவர்கள் எதிரும் புதிருமாக பார்த்து வைத்ததில் அவனுக்கு சந்தேகம் வந்தது..

'இதுக ரெண்டும் எப்பவுமே இப்படித்தான் வேலை செய்யுதுகளா.. இல்ல.. நானிருக்கேன்னு பிலிம் காட்டுதுகளா..?'

அவனால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.. யாமினியின் முகத்தில் என்ன உணர்வுகள் பிரதிபலிக் கின்றன என்று அறிய விரும்பியவனாய் அவள் மனதைப் படிப்பதைப் போல உற்றுப் பார்த்தான்... அவள் சரேலென்று விழியுயர்த்தி பார்த்து வைத்ததில் தாமோதரன் மிரண்டு போய் விட்டான்..

ஆழமான அவளது பார்வை ஒரு ஆக்டோபஸைப் போல அவனை வளைத்து விழுங்குவதைப் போலத் தோன்றியதில்..

'அடக் கடவுளே..!' என்று தலையை சிலுப்பி முகத்தைத் திருப்பிக் கொண்டான்..

'எனக்கே இப்படித் தோணி வைச்சா இந்தப் பயலோட கதி என்ன..?'

சித்தார்த்தனை நினைத்துக் கவலை கொண்டான் தாமோதரன்.. சித்தார்த்தனைப் பார்த்தான்.. அவன் விட்டத்தில் இருந்த பார்வையை அகற்றுவேனா என்று அடம் பிடித்தான்..

'இவனுக்கு இந்தக் கொடுமை தேவைதானா..?' தாமோதரனுக்கு கோபம் வந்தது..

'தி கிரேட் சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி. எப்படிப்பட்ட மிடுக்கோடு இருக்கனும்..? இவனும் அப்படி இருந்து தொலைக்கிறவன்தானே..? இதுவே இந்த யாமினியைத் தவிர வேற ஒருத்தரா இருக்கட்டும்.. சித்தார்த்தன் பார்க்கிற பார்வையே வேற மாதிரியில்ல இருக்கும்..? இவன் முன்னாலே நின்று பேசக்கூட அத்தனை ஸ்டாபும் பயப்படுவாங்க.. இவன் என்னடான்னா இந்த யாமினி முகத்தைப் பார்க்கப் பயப்படறான்..' கருமாயப் பட்டான் தாமோதரன்..

பயப்படுவது சித்தார்த்தன் மட்டும்தானா என்று அவன் மனம் கிண்டல் செய்ததில் யாமினியை வெட்டவா இல்லை குத்தவா என்று முறைத்துப் பார்த்தான்.. அவள் அதையும் பார்த்து விட்டு 'என்ன..?' எனும் பாவனையில் புருவங்களை உயர்த்தினாள்..

'வேலையைப் பாரு..' தாமோதரன் சைகை செய்தான்..

'அதை நீ சொல்லித்தான் நான் பார்க்கனுமா..?' யாமினியின் விழிகள் கேள்வி கேட்டன..

தாமோதரனுக்கு அவளை நான்கு அப்பு அப்பினால் என்ன என்று வெறியாக வந்தது.. பெண்களை அடிப்பது முறையல்ல என்று அவன் கருதியதாலும்.. அப்படி அவன் அப்பினால் யாமினி ஒன்றும் மறு கன்னத்தைக் காட்டிக் கொண்டு நிற்க மாட்டாள் என்பதினாலும்.. கிளம்பிய கொலை வெறியை கட்டுப் படுத்திக் கொண்டான்..

"தட்ஸ் ஆல்.." சித்தார்த்தன் ஒரு வழியாய் டிக்டேட் பண்ணி முடித்து விட்டான்..

"ஒரு ஆணியைப் பிடுங்கிற சோலிக்கு.. மலையைப் பெயர்க்கிற உன்னை என்ன பண்றதுன்னே எனக்குத் தெரியலைடா.." தாமோதரன் பாய்ந்தான்..

"வாட் சார்..?" லேப்டாப்பை மூடியபடி யாமினி பவ்யமாக வினவினாள்..

"உங்களைச் சொல்லலைம்மா.. நீங்க இடத்தைக் காலி பண்ணுங்க.." அவள் முகத்தைப் பார்க்காமல் எரிந்து விழுந்தான் தாமோதரன்..

அவனை விரோதமாகப் பார்த்தபடி இடத்தைக் காலி செய்தாள் யாமினி..

"பாவம்.. அவ என்னடா பண்ணினா..?" சித்தார்த்தன் யாமினிக்காக பரிந்து கொண்டு வந்தான்..

"என்னன்னு உனக்குத் தெரியாதா..?"

"தெரியாமத்தானே கேக்கிறேன்.."

"வேண்டாம் சித்தார்த்.. நான் ஏற்கனவே கொலை வெறியில இருக்கேன்.. நீ வேற அதை அதிகப் படுத்தாதே.."

"இதைச் சொல்லு.." அலுத்துக் கொண்டான் சித்தார்த்தன்..

"எதைச் சொல்லச் சொல்ற..?"

"அவளைக் கண்டாலே உனக்குக் கொலைவெறிதான் வருது.."

"காணாட்டியும் வந்து தொலைக்குதுடா.. ஏன்னு தான் தெரியலை.."

"மொத்தத்தில அவ பேரைக் கேட்டாலே டென்சன் ஆகித் தொலைக்கிற.."

"இல்லேன்னு சொல்ல மாட்டேன்.."

"அதுக்குத்தான் கேட்கிறேன்.. அவ உன்னை என்ன பண்ணினா..? யு ஸீ தாமு..! நீதான் அவளைக் குறை சொல்லிக்கிட்டே இருக்க.. அவ ஒரு வார்த்தை கூட உன்னைப் பற்றிக் குறைவா பேசறதில்லை.. உயர்வாத்தான் பேசறா.."

"யார்கிட்டப் பேசினா..? உன் கிட்டேயா..?"

தாமோதரனின் சந்தேகமான கேள்வியில் அவனை இமைக்காமல் பார்த்து வைத்தான் சித்தார்த்தன்..

'எனக்கு என்ன ஆச்சு..?'

தாமோதரனுக்கு தன்மீதே கோபம் வந்தது..

இப்படிப்பட்ட அநாகரிகமான கேள்விகளைக் கேட்பது யார்..? அவன் தானா..?

தாமோதரனின் முகத்தில் பரவிய குற்ற உணர்வில்.. சித்தார்த்தனின் பார்வையைத் தழைத்துக் கொண்டான்..

"ஐ ஆம் ஸாரிடா.." தாமோதரன் தலையைப் பிடித்துக் கொண்டான்..

"இட்ஸ் ஆல் ரைட்டுன்னு சொல்ல மாட்டேன்.." இறுக்கமான குரலில் சொன்னான் சித்தார்த்தன்...

"சித்..."

"சந்தேகப் படறதுக்கும் ஓர் அளவு இருக்கனும்.. உனக்குப் பயந்து நான் அவ முகத்தைப் பார்த்துக்கூடப் பேசறதில்ல.."

"எனக்குப் பயந்துன்னு சொல்லாதே.."

அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் தாமோதரன்.. சித்தார்த்தனின் விழிகளில் கேள்வி வந்தது..

"என்ன பார்க்கிற..?"

"புரியலை.."

"உனக்கா புரியாது..? நீ உன்னைக் கண்டே பயப்படற சித்.. அதுதான் உண்மை.. அவ முகத்தைப் பார்த்தா விளங்காத சொந்தம் ஒண்ணு எனக்கேத் தோணித் தொலைக்குது.. எனக்கே இப்படின்னா உன்னைப் பத்திச் சொல்லவே வேண்டாம்.."

"தாமு.."

"நீ அந்த உணர்வுகளுக்குப் பயந்துதான் அவ முகத்தைப் பார்க்கிறதில்ல.. அதை விட்டுட்டு எனக்குப் பயந்துன்னு சொல்லாதே.. எனக்குப் பயந்திருந்தா நீ அவளை வேலைக்கு அப்பாயிண்ட் பண்ணியிருக்க மாட்ட.."

"அந்தக் குற்றத்திற்காக நீ தினமும் என்கூட மல்லுக்கு நிற்பியா தாமு..? ஏண்டா அவளை இந்த அளவுக்கு வெறுக்கிற...?"

வெறுக்கிறானா..? இல்லையென்றுதான் தோன்றியது தாமோதரனுக்கு.. அவனுக்கு யாமினியின் மீது உள்ள விரோதத்தின் அடிப்படை வெறுப்பல்ல..

"இது வெறுப்பில்லை சித்தார்த்.."

"பின்னே..? வேறென்ன..? பயமா..?"

"பயமா..? யாமினிகிட்டயா..?"

தாமோதரன் சித்தார்த்தனிடம் கேட்பதைப் போலத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.. சித்தார்த்தனின்

கேள்விக்கு இல்லவே இல்லை என்று ஏன் அவனால் மறுக்க முடியவில்லை..?

"அவ பெரிய இவ.. அவகிட்ட நான் பயப்படறேன்.. போடா பேசாம.."

"அப்ப இல்லேங்கறியா..?"

ஆழ்ந்த குரலில் கேட்டான் சித்தார்த்தன்... அந்தக் குரலில் பார்வையை உயர்த்திய தாமோதரன் சித்தார்த்தனின் பார்வையைச் சந்தித்தான்.. நண்பர்களின் விழிகளில் தோன்றிய உணர்வலைகள் ஒன்று பட்டதாக இருந்தன.. அதன் ஆழத்தைக் கண்டு அவர்களுக்குள் தோன்றிய சிலிர்ப்பில் பார்வையை விலக்கிக் கொண்டார்கள்..

"இந்தத் துயரத்துக்குத்தான் அவளை வேலைக்குச் சேர்க்க வேணாம்ன்னு சொன்னேன்.."

"விடு தாமு.. இந்தப் பேச்சுக்கு முடிவிருக்காது.."

"எதற்குமே முடிவிருக்காது.."

தாமோதரனின் பார்வை தொலை தூரத் தொடுவானைத் தேடுவதைப் போலச் சுவரில் ஆழப்பதிந்திருந்தது.. அவன் குரலில் தொனித்த கவலையில் சித்தார்த்தன் மௌனமாகிப் போனான்.. அந்த அறையின் சுவர்களைத் தாண்டி எங்கோ ஒரு

தொடு புள்ளியைத் தேடும் தாமோதரனின் மோன நிலையில் அவனுக்கும் ஐக்கியமாக வேண்டும் போல இருந்தது..

"சில சொந்தங்களுக்கும்... பந்தங்களுக்கும் முடிவிருக்காது சித்..! அது காலங்கள் கடந்தும் நம்மைத் தேடி வரும்.."

"சித்தரைப் போலப் பேசற.."

"சித்தார்த்தனின் நண்பனா நின்னு பேசறேன்.. இந்த யாமினி மற்ற பெண்களைப் போல இருந்திருந்தா நான் இந்த அளவுக்கு அப்செட் ஆகியிருக்க மாட்டேன்..

ஷி இஸ் டோட்டலி டிபரண்ட்.. அதனாலதான் அப்செட் ஆகிறேன்.. ப்ளீஸ்.. அண்டர்ஸ்டாண்ட் மீ.."

தழைந்து ஒலித்த தாமோதரனின் குரலில் உருகிப் போன சித்தார்த்தன்.. சட்டென அவன் கையைப் பிடித்துக் கொண்டான்..

சித்தார்த்தனின் விரலோடு விரல் பிணைந்த தாமோதரனின் கை.. நண்பனைக் காக்க முயல்வதைப் போல இறுகிப் பற்றிக் கொண்டதில் சித்தார்த்தன் தனக்குத் தானே கேள்வி கேட்டுக் கொண்டான்..

'காலங்கள் கடந்தும் தேடி வருவது காதல் மட்டும் தானா..?' இல்லையென்பதை தாமோதரனின் இறுகிய கரம் சொல்லியது..

அத்தியாயம் - 67

அடி மனதின் ஆழத்தில்..

அடிமைப் பட்ட நிழல் ஒன்று..

அடிமையென்னும் விலங்கினிலே...

அன்றொருநாள் கட்டுண்டிருந்தோம்..

கம்யூட்டரில் மூழ்கியிருந்த யாமினி ரேகாவின் குரல் கேட்டதும் உலுக்கி விட்டவளைப் போல நிமிர்ந்து பார்த்தாள்.. ரேகா புருவங்களை உயர்த்திச் சிரித்தாள்..

"என்னாச்சு யாமினி..? ஏன் இப்படி ஷாக் ஆகுற..?"

"ஒன்னுமில்லை.."

வெட்கத்துடன் சொன்னாள் யாமினி.. அவளுக்குச் சங்கடமாக இருந்தது.. அவளுக்கு இருக்கும் மனப்பிரச்னை

களைப் பற்றி ரேகா அறிவாளா என்ற நினைவுடன் சிரிக்க முயன்றாள்..

"வரலைன்னா விட்டிரு.." ரேகா இலகுவாகச் சொன்னாள்..

"எதை..?"

"சிரிப்பை..."

இப்போது யாமினி உண்மையாகவே சிரித்து விட்டாள்..

"இது பெட்டரா இருக்கு.. ஆமாம்.. ஆபிஸே காலியாகிருச்சு.. நீ மட்டும் என்னத்துக்கு கம்யூட்டருக்கு கழுத்த நீட்டினவ மாதிரி அதை உத்து உத்துப் பாத்துக்கிட்டு இருக்க..?"

"ஏய்ய்.."

யாமினி கையிலிருந்த ஃபைலைக் கொண்டு ரேகாவின் முதுகில் அடித்தாள்.. ரேகா விலகி நின்று இரண்டு கைகளின் விரல்களையும் தலைக்கு மேல் உயர்த்தி பழிப்புக் காட்டிச் சிரித்தாள்..

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் வயலெட்டிற்குப் பிடிக்காத யாமினியிடம் இயல்பான நட்புணர்வு ரேகாவுக்கு வந்து விட்டது.. தாமோதரனைக் கடுப்பேற்ற யாமினியிடம் பாசம் காட்ட வயலெட் முயன்றால்.. யாமினி அதற்கு இடம் கொடுக்காமல் முறைத்து விட்டாள்..

"அது என்ன மாயமோ.. மந்திரமோ தெரியலைடி.. இந்த யாமினியை ஜி.எம். அந்த கடி கடிக்கிறாரு.. இவ என்னடான்னா அந்த ஆளு மேல விரோதம் காட்டாம சூடம் காட்டி சாம்பிராணிப் புகையப் போட்டுக்கிட்டு இருக்கா.. இப்படியா ஒரு மனுஷி அந்த மனுசன் கத்துற கத்தல காதில போட்டுக்காம இருப்பா..? என்ன கடி கடிச்சாலும் கொசுக்கடியப் போலத் தட்டி விட்டு போயிக்கிட்டே இருக்காடி.."

தாள முடியாத கோபத்துடன் தர்ஷிணியிடம் வயலெட் புலம்பிக் கொண்டிருக்க.. அந்தப் பக்கமாக வந்த ரேகா..

"அதில உனக்கென்னடி பிரச்னை..?" என்று கேட்டு வைக்க.. அன்று ரேகாவுக்கும் வயலெட்டுக்கும் நீண்ட நேரம் சொற்போர் நடந்தது..

"எனக்குப் பிரச்னையாகிறது இருக்கட்டும்.. நான் இவகிட்டப் பேசறதில உனக்கென்ன பிரச்னை..?"

"சும்மா பேசினா பரவாயில்லை.. நீ.ஜி.எம்மப் பத்தியில்ல பேசற..?"

"தெரியாமத்தான் கேட்கிறேன்.. இத்தனை நேரமா நான் இவகிட்ட என் ஆற்றாமையைச் சொல்லிக்கிட்டு இருக்கேன்.. கேட்டுக்கிட்டு இருந்தவ உனக்கென்ன பிரச்னைன்னு கேட்கலை.. ஆனா இப்பத்தான் இந்தப் பக்கமா வந்து வழியோட போகிற நீ.. நின்னு.. இந்தக் கேள்வியைக் கேட்கிறேன்னா.. என்னடி அர்த்தம்..?"

"அதையும் நீயே சொல்லு.."

"பிரச்னை எனக்கில்ல.. உனக்குத்தான்னு அர்த்தம்.."

"ஊஹூம்..? எனக்கென்ன பிரச்னைன்னு நினைக்கிற..?"

"ஜி.எம்மைப் பத்தி வாயைத் திறந்தாலே உனக்குப் பிரச்னையாத்தான் இருக்கு.. கேளுடி தர்ஷிணி..! உச்சாணிக் கொம்பப் பாத்து ஏக்கப்பட்டுச்சாம் ஏதோ ஒன்னு.."

வயலெட் விசமமாகச் சொல்ல.. கேட்டுக் கொண்டிருந்த தர்ஷிணி கலவரமாகிப் போனாள்.. அவள் வம்பில் மாட்டிக் கொள்ளாமல் வம்பை செவி மடுக்கும் கேட்டகிரி.. யாரிடம் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் பேசி விடுவாள்.. அத்தனையையும் பேசி விட்டு மறக்காமல்..

"இதை நான் சொன்னேன்னு யார்கிட்டயும் சொல்லிராதேப்பா.. எனக்கெதுக்கு வம்பு..?" என்று சொல்லுவாள்..

அதைப்போல ஆபிசில் நிகழும் அத்தனை அக்கப் போர்களையும் காக்கா, குருவி வாய்க்குள் பறந்து கூடு

கட்டி.. குஞ்சு பொரிக்கும் அளவுக்கு 'ஆ'வென வாய் பிளந்து கேட்டு முடித்து விட்டு..

"விடுப்பா.. இதையெல்லாம் ஒரு பேச்சுன்னு பேச வந்திட்ட.. எனக்கெதுக்குப்பா ஊர் வம்பு..?" என்பாள்..

அப்படி சர்வ ஜாக்கிரதையாக வம்பு பேசி.. கேட்கும் பேர்வழி அவள்.. எதிலும் அகப்பட்டுக் கொள்ள மாட்டாள்.. நிர்வாகத்தை விரோதித்துக் கொள்ள மாட்டாள்.. சித்தார்த்தனுக்கு வணக்கம் சொல்கிறாளோ இல்லையோ.. தாமோதரனை அங்கே கண்டு விட்டால்.. இங்கே எழுந்து வணக்கம் சொல்லி விடுவாள்..

"சாமி வரம் கொடுக்கனும்னா பூசாரியப் பகைச்சுக்கக் கூடாதுடி.." என்று அதற்கான வியாக்கினமும் சொல்வாள்..

அப்பேற்பட்ட தர்ஷினியிடம் வயலெட் ஜாடை பேசினால் அவள் கலவரமாகி விட மாட்டாளா..? அவளே வயலெட் பேசும் வம்பை அவள் சுவராஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்ததை ரேகா பார்த்து விட்டாளே என்ற கவலையில் இருந்தாள்..

'போதாக் குறைக்கு இது வேறா..?'

மற்ற நேரமாக இருந்தால்.. வயலெட் பேசிய பொடியை அடக்கிய விசமப் பேச்சிற்கு தர்ஷிணி வேலையை மூட்டை கட்டிப் போட்டு விட்டு படு இண்ட்ரெஸ்டாக அவளைத் தூண்டி விட்டிருப்பாள்..

"யாருப்பா உச்சாணிக் கொம்பு..? யாருப்பா ஏக்கப் படறது..?" என்று நொட்டை விட்டுக் கேட்டிருப்பாள்..

அப்போது கதையே வேறு.. தாமோதரனைப் பற்றிய பேச்சை அவள் காது கொடுத்துக் கேட்டிருக்கவும் கூடும் என்று எவரேனும் சொன்னால் தாமோதரன்

நம்பாத அளவிற்கு தங்கக் கம்பியைப் போல வேசம் போட்டிருந்தவளுக்கு அந்த வேசம் கலைந்த பயம் வந்து விட்டது..

"பாருப்பா ரேகா.. இதுக்கும் எனக்கும் யாதொரு சம்பதமுமில்லை.." என்று கழன்று கொள்ள முனைந்தாள்..

"'இது'ன்னு யாரைச் சொல்ற.. 'இதையா..?'"

ரேகா வயலெட்டை அஃறிணையாக்கி கை காட்டிக் கேட்க.. வயலெட்டிற்கு முகம் ஜிவுஜிவுத்து விட்டது..

"இதுவா..?" அவள் பொங்கினாள்..

"நான் சொல்லலைடிம்மா.. இந்த தர்ஷிணிதான் சொன்னா.. உன் முன்னாலதான சொன்னா..? நீயும்தானக் கேட்ட.."

வயலெட்டின் முகத்தில் சற்றுமுன் தவழ்ந்த விசமச் சிரிப்பு இடம் மாறி இப்போது ரேகாவின் முகத்தில் தவழ்ந்தது.. வயலெட்டையும் தர்ஷிணியையும் கோர்த்து விட்டு.. அவள் வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்..

உண்மையில் வயலெட் தன் போக்கில்தான் போய் கொண்டிருந்தாள்.. தர்ஷிணிதான் அவளைக் கூப்பிட்டு.. வாயைக் கிளிறி.. உணக்கையாக வம்பு பேச வைத்து.. ஆனந்தமாக கேட்டுக் கொண்டிருந்தாள்..

'இப்ப என்னடான்னா.. இதுக்கும் எனக்கும் சம்பந்த மில்லைங்கிறாளே..' வயலெட் காளிஅவதாரம் எடுத்தாள்.. தர்ஷிணி அதற்கெல்லாம் அலட்டிக் கொள்ளவே

இல்லை.. நீ எந்த அவதாரம் எடுத்தாலும்.. எனக்கு என் வேலை மட்டும்தான் முக்கியம் என்பதில் அவள் திடமாக இருந்தாள்..

"இதுவா..? இதுன்னு 'எதைச்'சொல்ற..?"

'எதை' என்று சொல்லும் போது ரேகாவைப் பார்த்தபடி அழுத்தம் திருத்தமாக அந்த வார்த்தையை வயலெட் உச்சரித்தாள்..

'அடிப்போடி...!' அலட்சியப் புன்முறுவலுடன் வயலெட்டை மண்ணைக் கவ்வ வைத்தாள் ரேகா..

தர்ஷிணியோ வில்லாதி வில்லியிலும் கடைந் தெடுத்த வில்லியாக இருந்தாள்.. வயலெட்டை யாரோ.. எவரோ என்று.. முன்னே பின்னே அறிமுகமில்லாததைப் போலப் பார்த்து வைத்தாள்..

"பாரு வயலெட்..! உனக்கு ஒருத்தங்களைப் பிடிக்காதுங்கிறதுக்காக இப்படியெல்லாம் பேசக் கூடாது.."

தர்ஷிணி அறிவுரை சொல்லியதில் வயலெட் காண்டாகிப் போனாள்..

"எனக்கு யாரைப் பிடிக்காது..?"

"அதை என் வாயால சொல்ல விரும்பலை.."

"ஏண்டி..? வேற யாரோட வாயால சொல்ல விரும்பற..? என் வாயாலயா..?"

"உன் வாயால நீ சொல்றதுக்கெல்லாம் நான் பிணையில்லை.. எனக்கெதுக்கு வம்பு..? நானுண்டு.. என் வேலையுண்டுன்னு இருக்கிற இடம் தெரியாம வேலை பார்த்திட்டுப் போகிறவ நானு.."

"அட..! அப்படியா மேடம்..? அப்புறம் என்ன அலுவலுக்குடி வழியோட போன என்னக் கூப்பிட்டு வாயைக் கிண்டி கிழங்கை எடுத்த..?"

"யாரு..? நான்..? உன்னைக் கூப்பிட்டேன்..? குட்ஜோக்.. நீயா வந்தே.. ஏதோ பேசிக்கிட்டு இருந்த.. நீ என்ன பேசினேன்னு கூட நான் கவனிக்கலை.. நான் பாட்டுக்கு என் வேலையைப் பாத்துக்கிட்டு இருந்தேன்.. என்ன..."

"அடிப்பாவி..!"

ஆனானப்பட்ட வயலெட்டையே தர்ஷிணி பலகாரம் பண்ணிச் சாப்பிட்டதில் வயலெட் கொலைவெறி கொண்டாள்..

"நானாப் பேசிக்கிட்டு இருந்தேனா..?"

வயலெட்டுக்கு நெஞ்சுவலி வரும் போல ஆகிவிட்டது.. ரேகாவோ அதை அதிகப் படுத்துவதில் குறியாக

இருந்தாள்..

"இதில என்ன ஆச்சரியம் தர்ஷிணி..? இவ எப்பவும் பக்கத்தில இருக்கிறவங்ககிட்டப் பேச மாட்டாளே.. போனைக் காதில குடுத்து.. தானாத்தானே பேசிக்கிட்டு இருப்பா.. அதை ஜி.எம். சொல்லிக் காட்டறாருன்னு தான அவர் மேல குத்தம் சொல்லிக்கிட்டே இருக்கா.."

"ரேகா..!"

"எதுக்குடி கத்தற..? தர்ஷிணி பாவம் இன்னொஸெண்ட்.. நீ என்ன சொன்னேன்னு கூட இவளுக்குத் தெரியாதுங்கிறா.. அப்படித்தானே தர்ஷிணி..?"

"அப்சல்யூட்லி கரெக்ட் ரேகா.."

ரேகா பார்த்த பார்வையில் அடிபட்டுப் போனாள் வயலெட்..

அத்தியாயம் - 68

கத்தியின்றி ரத்தமின்றி

யுத்தம் செய்த நாள் அது..

சாகசங்களால் பின்னப்பட்ட

அந்த நாள்களை நீ மறந்தாயா..?

"ஷட் அப் தர்ஷிணி..! என்னைக்காவது ஒருநாள் என்கிட்டமாட்டுவ.. அப்ப இந்த வயலெட் யாருன்னு உனக்குக் காட்டறேன்.."

மங்கம்மா சபதம் போல வயலெட் சபதம் போட்டு விட்டுப் போய் விட்டாள்.. சற்று முன்பு தலையோடு தலைமோத கிசுகிசுப்பாக ரகசியம் பேசிக் கொண்டிருந் தவர்களை பரம எதிரிகளாக மாற்றி விட்டு எதுவுமே நடக்காததைப் போல தர்ஷிணியைப் பார்த்து சிநேகிதமாக (?) சிரித்து வைத்தாள் ரேகா..

"இப்ப மட்டும் இவ யாருன்னு தெரியாதா..?"

தர்ஷிணி கிடைத்தது சாக்கென்று ரேகாவுடன் கூட்டணி போட்டாள்.. அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா என்ற தர்ஷிணியின் மனோபாவத்தைத் தெள்ளத்

தெளிவாக புரிந்து வைத்திருந்த ரேகா.. ஒட்டாத பார்வை பார்த்தாள்..

"உனக்குத் தெரியாது ரேகா.. இவ எப்பப் பார்த்தாலும் ஜி.எம்.மைப் பத்தி இல்லாததையும்.. பொல்லாததையும் பேசிக்கிட்டே இருப்பா.." தர்ஷிணி போட்டுக் கொடுத்தாள்..

"யாருகிட்ட..?" நிதானமாக கேட்டாள் ரேகா..

"என்கிட்ட இல்லை.." அரண்டு போனாள் தர்ஷிணி..

"ஊஹூம்..?"

ரேகாவின் சிரிப்பிலிருந்து அவள் தர்ஷிணியின் பேச்சை நம்புகிறாளா.. இல்லையா என்று தெரியாமல் குழம்பிப் போனாள் தர்ஷிணி... மற்றவர்களிடம் செல்லுபடியாகும் அவளது சாகசங்கள் ரேகாவிடம் செல்லுபடியானதே இல்லை..

"நிஜம்தான் ரேகா.. நீ இதைப் பத்தி ஜி.எம். கிட்டச் சொல்லு.."

"ஏன்..? நீ சொல்ல வேண்டியதானே..?"

முகம் மாறாமல் ரேகா மடக்கியதில் அசடு வழிந்தாள் தர்ஷிணி..

"ஹி..ஹி.. எனக்கெதுக்கு வம்பு..?"

"எனக்கு மட்டும் வம்பு வந்தா பரவாயில்லைங் கறியா..?"

மறுபடியும் மடக்கினாள் ரேகா.. இப்படி மடக்கி மடக்கி அவள் கேள்வி கேட்டதில் ஒடிந்து போகும் நிலைக்கு ஆளானாள் தர்ஷிணி..

'இந்தத் தாக்கு தாக்கறாளே..'

ஈனஸ்வரத்தில் புலம்பிய அவளது மனதின் புலம்பல் ரேகாவின் காதுகளை எட்டியதாலோ என்னவோ.. அவள் தாக்கியவரை போதும் என்று நகர்ந்து விட்டாள்.. தர்ஷிணிக்கு வந்த தலைவலி போக வெகு நேரமானது..

இதைப் பற்றி யாமினியிடம் சொன்ன போது..

"வயலெட்டைக் கூட ஒரு வகையில் சேர்த்துரலாம்.. இந்த தர்ஷிணியைத்தான் எந்த வகையிலும் சேர்க்க முடியாது யாமினி.. அவள் டேன்ஜரஸ் கேட்டகிரி.." என்றாள் ரேகா..

"ஏன் அப்படிச் சொல்ற..?"

"வயலெட் எதையும் நேருக்கு நேரா பேசிருவா.. நீதானே இப்படிப் பேசினன்னு கேட்டா.. ஆமாம்ன்னு தைரியமா ஒப்புக்கிட்டு சண்டைக்கு வருவா.. தர்ஷிணி அப்படியில்லை.. பிளேட்டை மாத்திப் போட்டு மத்தவங்களை மாட்டி விடறதில அவ எக்ஸ்பர்ட்.."

ரேகா சொன்னதை யாமினி அனுராதாவிடம் சொன்னாள்.. மகளுக்காக பஜ்ஜி போட்டுக் கொண்டிருந்த அனுராதா.. சூடான பஜ்ஜிகளை தட்டில் போட்டு மகளிடம் நீட்டினாள்.. சமையல் மேடையில் ஏறி உட்கார்ந்து காலாட்டி தாயிடம் கதை பேசியபடி பஜ்ஜியை மொக்கிய மகளைக் காணும் போது அனுராதாவுக்கு மன நிறைவாக இருந்தது..

இதுபோல மகள் இருக்க வேண்டுமென்றுதானே அவள் ஆசைப்பட்டாள்..?

வேலைக்குப் போக ஆரம்பித்ததில் இருந்து யாமினியிடம் தென்படும் மாறுதலை அனுராதா கவனித்துக் கொண்டுதான் இருந்தாள்..

"உன் பிரண்டு வெள்ளைக்காரனுக மாதிரி.."

அனுராதா பஜ்ஜி போட்டபடியே இயல்பாக சொன்னாள்.. யாமினியின் கை அப்படியே நின்று விட்டது..

'வெள்ளைக்காரன்..!'

அவள் மனதில் குதிரை ஓடியது.. அதில் சிகப்புக்கலர் சராயும் தொப்பியுமாக.. துப்பாக்கிகளுடன் வெள்ளைக்கார சிப்பாய்கள் சுட்டார்கள்.. எங்கோ தொலைதுரத்தில் கதறல் ஒலி கேட்டது...

"யாமினி..!"

அனுராதாவின் அதட்டலில் யாமினி மிரண்டு விழித்தாள்..

"இன்னும் ரெண்டு பஜ்ஜி போடவான்னு கேட்டா.. இந்த முழி முழிக்கிற..? என்ன..? பழைய மாதிரி மெகாலு பிடிச்சிருச்சா..?"

அனுராதாவின் முறைப்பில் யாமினி சுதாரித்துக் கொண்டாள்..

"அதில்லைம்மா.. வெள்ளைக்காரங்களுக்கும் நம்ம ரேகாவுக்கும் என்ன சம்பந்தம்ன்னு யோசிச்சேன்.." என்று சமாளித்தாள்..

"அவ்வளவுதானா..?"

நிம்மதியுடன் அடுப்பைப் பார்க்கக் கிளம்பின அனுராதாவுக்கு அது அவ்வளவோடு நிற்கும் விசயமில்லை என்று தெரியவில்லை..

வாணலியின் சூடான எண்ணையில்

"சொய்ங்.. சொய்ங்.." என்ற சப்தத்ததுடன் பஜ்ஜிகள் பொரிந்து கொண்டிருந்தன..

கேஸ்-ஸ்டவ்வின் அனலைக் குறைத்தபடி அனுராதா பேசலானாள்..

"வெள்ளைக்காரனுக்கும் உன் பிரண்டுக்கும் என்ன சம்பந்தம் இருக்கப் போகுது..? வெள்ளைக்காரங்களோட நாட்டில வியாபாரம் பண்ற கம்பெனியில வேலை பார்க்கிற சம்பந்தம்தான் இருக்குது.. நான் அதைச் சொல்லலை.."

"வேற எதைம்மா சொன்னீங்க..?"

"வெள்ளைக்காரங்க இப்படித்தான்.. அவனுககிட்டக் காட்டிக் கொடுக்கிறவங்கள நம்ப மாட்டாங்களாம்.. அவங்களாலே

வெள்ளைக்காரங்களுக்கு நல்லதே நடந்தாலும்.. அவங்களை வைக்கிற இடத்திலதான் வைப்பானுகளாம்.. எதிரிகளை நம்பலாம்.. துரோகிகளை ஒருநாளும் நம்பக் கூடாதுங்கிறது அவங்க சொல்லி வைச்ச டயலாக்தான் யாமினி.."

"ஓ.."

யாமினியின் கண்களில் கனவு மிதந்தது.. அது அவளை சுதந்திரத்துக்கு முந்தைய ஆண்டுகளுக்கு இட்டுச் சென்றது.. எங்கோ..

'வந்தே மாதரம்..' என்ற முழக்கம் கேட்க.. அவளும்..

'வந்தே மாதரம்..' என்று முழங்கப் போனாள்..

நல்ல வேளையாக தட்டில் இருந்த சூடான பஜ்ஜியில் அவளது கை பட்டு விட்டது.. சூடு பட்ட கை அவளது சுயநினைவை இழுத்து வந்ததில் அவள் முழங்காமல் தப்பித்தாள்..

"இன்னைக்கு எங்ககிட்ட உங்க ஆளுகளைக் காட்டிக் கொடுத்ததைப் போல.. எங்களையும் ஓர்நாள் காட்டிக் கொடுக்க மாட்டிங்கன்னு என்ன நிச்சயம்ன்னு நாக்கைப் பிடுங்கிக்கிறதைப் போலக் கேப்பானுகளாம்.."

அனுராதா சொன்னதையே அன்று இரவு முழுவதும் நினைத்துக் கொண்டிருந்தாள் யாமினி.. அடுத்த சில நாள்களில் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸிக்கு சில வெளிநாட்டுக்காரர்கள் விஜயம் செய்தார்கள்..

சித்தார்த்தனைப் பார்க்க வந்தவர்களை எதிரிகளை முறைப்பதைப் போல முறைத்து வைத்தாள் யாமினி.. ஏன் அவ்வாறு செய்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை..

என்னவோ அவர்கள் அவளது சொத்தைப் பிடுங்கி விட்டதைப் போல பகையுணர்வு அவளுக்கு உண்டானது.. முறைப்புடன் நிமிர்ந்தவளை வியப்புடன் அவர்கள் பார்த்தார்கள்..

"சித்தார்த்ததைச் சந்திக்க வந்திருக்கிறோம்.."

தெளிவான ஆங்கிலத்துடன் சொன்னவர்களின் நேர்த்தியான உடையும்.. தோற்றமும்.. அவர்கள் அதி முக்கியமானவர்கள் என்பதை அறிவித்தும் யாமினி அலட்சியமாக அவர்களைப் பார்த்து..

"அப்பாயிண்மெண்ட் வாங்கியிருக்கீங்களா..?" என்று அதிகாரத் தொனியில் கேட்டாள்..

அவர்கள் முகத்தில் வியப்புப் படர்ந்தது.. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"வில்லியம் வந்திருப்பதாக அவரிடம் சொல் பெண்ணே..!" என்றான் அவர்களில் ஒருவன்..

"வில்லியம்ன்னா.. அவருக்குத் தெரிஞ்சிருமா..? நீங்கயார்.. எங்கிருந்து வந்திருக்கீங்க.. என்ன விவரமாய் அவரைப் பார்க்க வந்திருக்கீங்கன்னு அத்தனையும் சொல்லுங்க.. அவருக்கு அனுப்பி வைக்கிறேன்.. சார் உங்களைப் பார்க்க அலோவ் பண்ணினா பாருங்க.."

அவர்களின் முகம் பார்க்காமல் யாமினி கம்யூட்டரின் சின்னத்திரையில் கவனமாகப் பேசப்பேச.. அவர்களின் முகம் மாறியது.. செல்போனை ஒருவன் எடுக்க.. வில்லியம் அவனைத் தடுத்தான்..

"இந்தப் பெண் அவளுக்குக் கொடுக்கப்பட்ட வேலையைத்தான் செய்கிறாள்.."

அவன் பொறுமையாக அவனுடைய விசிட்டிங் கார்டைக் கொடுத்தான்.. இடது கையால் அதை வாங்கிக் கொண்ட யாமினி.. பியூனைக் கூப்பிட்டு அதைக் கொடுத்தாள்.. அதை வாங்கிக் கொண்டு நகர்ந்தவனை நிறுத்தி வைத்து கதை பேசினாள்..

"இதையும் கொண்டு போப்பா.."

பிரிண்ட் அவுட் எடுத்திருந்த பேப்பர்களை படு பொறுமையாக அடுக்கி.. பிரித்து.. பைல்களில் கோர்த்து.. அதைவிடப் பொறுமையாக ஃபைல்களை ஒன்று சேர்த்து

பியூனிடம் அவள் கொடுத்த போது இருபது நிமிடங்கள் கடந்திருந்தன..

எப்போதும் அப்படிச் செய்பவளல்ல யாமினி.. இப்போது ஏனென்றே தெரியாமல் அந்த வெள்ளைக் காரர்களின் மீது அவளுக்கு வெறுப்பு.. வெறுப்பாக வந்தது..

அத்தியாயம் - 69

செல்வம் கொழிக்கும் பாரதத்தை..

சிறையினிலே வைத்திருப்பதுவோ..?

சித்தார்த்தனின் அறைக் கதவைத் திறந்து கொண்டு போன பியூன் அலறியடித்துக் கொண்டு வெளியே ஓடி வந்தான்..

"என்னப்பா..?" புரியாமல் கேட்ட யாமினியிடம்..

"எம்.. எம்.. எம்.." என்று தந்தியடித்தபடி அறைக் கதவை சுட்டிக் காட்டினான்..

புயல் வேகத்தில் கதவைத் திறந்து கொண்டு வந்தான் சித்தார்த்தன்..

"வில்லியம்ஸ்.. என்ன இங்கே உட்கார்ந்திருக்கீங்க..?"

வரவேற்பில் உட்கார்ந்திருந்த வில்லியம்ஸிடமும் அவனது நண்பர்களிடமும் சித்தார்த்தன் பதறிய வேகத்தில் பியூனுக்கு குளிரும் காய்ச்சலும் வந்தது..

"நான் உட்காரச் சொல்லலை சார்.." அவன் பயத்துடன் அலறினான்..

"யாமினிதான் உட்காரச் சொன்னா.." வயலெட் தகுந்த நேரத்தில் யாமினியைப் போட்டுக் கொடுக்கும் தன் கடமையை செவ்வனே ஆற்றினாள்..

"வாட்..?" உக்கிரமானான் சித்தார்த்தன்..

"யெஸ் சார்.. வில்லியம் வந்தவுடன் நான் உங்களுக்கு இன்பர்ம் பண்ணப் போனேன்.. பட்.. ஏற்கனெவே ஒரு முக்கியமான கிளையன்ட் பத்தி நான் இன்பர்ம் பண்ணினதுக்கு என் வேலையில் நீ இண்டர்பியர் ஆகாதேன்னு மூஞ்சியில அடிச்சதைப் போல யாமினி பேசிட்டா.. ஸோ.. இன்னைக்கு நடக்கிறதை நான் கைகட்டி வேடிக்கைப் பார்க்கிறேதைப் போல ஆகிருச்சு.."

வயலெட் சொல்லச் சொல்ல.. சித்தார்த்தனுக்கு கண் மண் தெரியாத கோபம் வந்து விட்டது..

"என்ன செய்து வைத்திருக்கிறேன்னு உனக்குத் தெரியுமா..?"

அடிக்குரலில் அவன் சீறியபோது யாமினி நடுங்கிப் போனாள்..

ரத்தம் போல சிவந்த கண்களும்.. உறுமலுமாக.. அவன் அதுநாள்வரை அவள் பார்த்தறியாத சித்தார்த்தனாக இருந்தான்..

"இவர் இந்தக் கம்பெனியின் முக்கியமான கிளையண்ட்.. பாரினிலிருந்து என்னைப் பார்க்க பிளைட் பிடிச்சு வந்திருக்கிறார்.. இவரோட ஒவ்வொரு செகண்டும் விலை மதிப்பில்லாதது.. அவரோட பொன்னான நேரத்தை நீ வீணடிச்சிருக்கிற.."

அதற்கு முன்பு அவன் யாமினியை 'வா.. போ..' என்று ஏகவசனத்தில் பேசியதில்லை.. அவன் தாழ்ந்த குரலில் பேசியதால் அவனுடைய ஏக வசன அழைப்பு மற்றவர்களுக்குக் கேட்கவில்லையென்றாலும யாமினிக்கு அது கேட்டதே..

அவள் முகம் அவமானத்தில் கன்றி சிவந்து விட்டது.. அதை ரசித்தாள் வயலெட்.. செல்போனை காதுக்கு கொடுத்தபடி வந்து கொண்டிருந்த தாமோதரனைக் கண்டதும் யாமினியின் முகம் வெளுத்தது..

'சும்மாவே இவன் சாமியாடுவான்.. இப்போச் சரியான காரணம் சிக்கியிருக்கு.. சும்மாவா விடுவான்..?'

எப்போதும் தாமோதரன் மண்டகப்படி நடத்துவான்.. சித்தார்த்தன் காப்பாற்ற வருவான்.. இப்போதோ சித்தார்த்தனே மண்டகப்படியை ஆரம்பித்து வைத்திருக்கிறான்.. தாமோதரன் எப்படியெல்லாம் பேசப் போகிறானோ..

தாமோதரனுக்கு சரியான சான்ஸ் கிடைத்து விட்டது என்று தான் வயலெட்டும் கணித்தாள்.. இரட்டை நாயணமாக.. சித்தார்த்தனும் தாமோதரனும் கொடுக்கப் போகும் அர்ச்சனையை வேடிக்கை பார்க்க அவள் ஆவலுடன் காத்திருந்தாள்..

மும்முரமாக யாருடனோ பேசிக் கொண்டே வந்த தாமோதரன் ரிசப்சனில் இருந்த சூழலைப் பார்த்தவுடன் செல் போனைக் கட் பண்ணினான்.. ரேகாவிடம்

ஏதோ கேட்டான்.. அவள் தாழ்ந்த குரலில் விளக்கம் சொல்லியதில் அவன் என்னவெல்லாம் கத்தப் போகிறானோ என்று யாமினி குன்றிப் போனாள்..

ரேகா பேசியதைக் கேட்டபடி யாமினி இருக்கும் திசையில் பார்த்தான் தாமோதரன்.. யாமினியின் மனம் அடித்துக் கொண்டது.. தாமோதரன் சித்தார்த்தனிடம் வந்தான்..

'பார்த்துக்கிட்டியா.. நீ செலக்ட் பண்ணின உன் செக்கரட்டரியின் லட்சணத்தை.. சொன்னால் கேட்டியாடா.. இன்னைக்கு இவ பண்ணி வைக்சிருக்கிற வேலைக்கு இந்த வில்லியம்ஸ் எத்தனை மலையில ஏறப் போகிறானோ.. இவளுக்கு அறிவு இருக்குதா இல்லையா சித்தார்த்.. பாரின்ல இருந்து ஒருத்தன் பறந்து வந்தா.. அவன் கிட்ட அப்பாயிண்ட்மெண்ட் இருக்கான்னு கேட்டிருக்காளே.. முதல்ல இவ சீட்டைக் கிழடா..'

இப்படித்தான் தாமோதரன் எகிறப் போகிறான் என்று எதிர்பார்த்தாள் யாமினி.. தாமோதரனால் யாமினியின் வேலைக்கான சீட்டு கிழிபடப் போவதில் யாமினிக்கு யாதொரு வருத்தமும் இல்லை..

என்ன ஒன்று.. இனம் புரியாத ஓர் சொந்தத்தை அவளுக்குள் உண்டாக்கும் சித்தார்த்தனின் முகத்தை அவளால் பார்க்க முடியாமல் போய் விடும்.. அதுதான் அவளுக்குத் துயரம் தரும் விசயமாக இருந்தது..

'பார்த்து மட்டும் என்ன கிழிக்கப் போகிறேன்..?'

சோர்வுடன் நினைத்துக் கொண்டாள் யாமினி.. இன்னதென்று விளங்காத பந்தத்திற்கு எதிர்காலம் இருக்கப் போவதில்லை.. எதிர்காலமில்லாத ஓர் உணர்விற்காக ஏன் அவள் சுயமரியாதையை விட்டுக் கொடுத்து அந்தக் கம்பெனியில் நீடிக்க வேண்டும்..?

நடப்பது நடக்கட்டும் என்ற முடிவுக்கு வந்தாள் யாமினி.. அவளையே பார்த்தபடி அருகில் வந்தான் தாமோதரன்.. கண்களை மூடிக் கொண்டாள் யாமினி..

தாமோதரன் பேச ஆரம்பித்தால் எப்படியெல்லாம் பேசுவான் என்பது அவளுக்குத் தெரிந்த ஒன்றுதானே..

அவன் திட்டப் போகும் வார்த்தைகளை செவி மடுக்கக் காதுகளை கூர் தீட்டிக் கொண்டாள் அவள்..

"கூல் டவுன் சித்தார்த்.."

காதில் விழுந்த தாமோதரனின் வார்த்தைகளில் ஆச்சரியம் கொண்டவள் கண் திறந்து பார்த்தாள்.. தாமோதரன்தான் சித்தார்த்தனைச் சமாதானப் படுத்திக் கொண்டிருந்தான்..

'என்னங்கடா இது..!'

நம்ப முடியாமல் கண் கொட்டினாள் யாமினி.. காண்பது கனவா.. இல்லை நனவா என்ற சந்தேகம் கிளம்பியதில் கையைக் கிள்ளிப் பார்த்தாள்.. வலித்தது..

'நிஜம்தான் போல இருக்கே..'

அது நிஜமாகத்தான் இருந்தது.. அவ்வளவு பெரிய வேலையை செய்து வைத்திருந்த யாமினியை ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல் அட்லீஸ்ட் முறைப்

பதற்காகக் கூட அவள் பக்கம் திரும்பாமல் கடமையே கண்ணாக சித்தார்த்தனிடமும் வில்லியம்ஸிடமும் பேசிக் கொண்டிருந்தான் தாமோதரன்..

"ஆக்சுவலா அவங்க வேலையைக் கரெக்டா பண்ணினதுக்கு நீ அவங்களை அப்ரிசியேட் பண்ணனும்.."

"வேண்டாம் தாமு.. நான் செம கோபத்தில இருக்கேன்.."

"ஈஸிடா.. பாரு வில்லியம்ஸ் இதை எவ்வளவு ஸ்போர்டிவ்வா எடுத்துக்கிட்டார்.. அவர் கம்ப்ளெயிண்ட் பண்ணி.. நீ கோபப்பட்டா அதில ஓர் அர்த்தம்

இருக்கு.. அப்படியில்லாம நீயா கோபப்பட்டா எப்படி சித்தார்த்..?"

"என் செக்கரட்டரிக்கு யாரை எப்படி ட்ரீட் பண்றதுன்னு தெரிய வேணாமா..? அது முக்கிய மில்லையா..?"

"அதை இவங்களுக்கு அப்புறமா டீச் பண்ணு.. இப்ப அதைவிட முக்கியமானது வில்லியம்ஸோட டீலிங்ஸை பேசி முடிக்கிறது.. முதல்ல இதைக் கவனி.."

தாமோதரன் சித்தார்த்தனின் கவனத்தை திசை திருப்பி அழைத்துப் போய் விட்டான்.. யாமினிக்கு ஆச்சரியம் அடங்க வேயில்லை..

'லட்டு போல சான்ஸ் கிடைச்சும் ஏன் இவன் கேட்ச் பண்ணிக்கலை..?'

யோசனையுடன் அமர்ந்திருந்தவளிடம் சித்தார்த்தன் அழைப்பதாக பியூன் வந்து சொன்னான்..

"அந்த வில்லியம் இருக்கானா..?" யாமினி தயங்கினாள்..

"அவங்கள்ளாம் அப்பவே போயிட்டாங்களே.. இந்த வழியாத்தானே போனாங்க..? நீங்க பாக்கலையா..?" என்றான் பியூன்..

அவள் எங்கே அவர்களைப் பார்த்தாள்..? அவள்தான் தாமோதரனைப் பற்றிய யோசனையில் உட்கார்ந்து விட்டாளே..

சித்தார்த்தனின் அறைக்குள் தாமோதரனும் உட்கார்ந்திருந்தான்.. இமைக்காமல் அவளையே உறுத்துப் பார்த்த சித்தார்த்தனின் பார்வையில் தரையைப் பார்த்தாள் யாமினி.. தாமோதரன் ஏதும் பேசவில்லை..

"உங்க மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..?" சித்தார்த்தன் ஆரம்பித்தான்..

'வாங்க.. போங்கன்னு பேச ஆரம்பிச்சுட்டான்..' யாமினி நினைத்துக் கொண்டாள்..

"நீங்க என்ன செய்தாலும் நான் ஏன்னு கேட்க மாட்டேன்னு நினைச்சீங்களா..?"

தொடர்ந்து பத்துப் பதினாறு நிமிடங்களுக்கு அடைமழை போல பேசித் தீர்த்தான் சித்தார்த்தன்.. அசையாமல் உதட்டைக் கடித்தபடி நின்று கொண்டிருந்தாள் யாமினி.. சித்தார்த்தனின் கோபத்தைத் தாண்டி அவள் மனம் ஒரேயொரு கேள்வியைத்தான் கேட்டுக் கொண்டிருந்தது..

அத்தியாயம் - 70

நிழலாக வரும் உணர்வை..

நீ விரட்ட இயலாது..

உனையும் எனையும் இணைத்த கீதம்-நம்

உயிராய் மாறிய தேசியகீதம்..

மீண்டும்.. மீண்டும் யாமினியின் மனதில் எழுந்த கேள்வி ஒன்றுதான்..

அது.. எதற்காக தாமோதரன் அமைதி காக்கிறான் என்பது..

'என்னடா இது..? சித்தார்த்த கௌதம புத்தர் சீறிப் பாயறாரு.. தடியைத் தூக்கிக்கிட்டு தலையில சாத்த எப்படா சான்ஸ் கிடைக்கும்ன்னு தவமிருக்கிற தாமோதரத் தாண்டவராயன் அமைதி காக்கிறாரு..'

விசித்திரத்திலும் விசித்திரமான அந்த நிகழ்வை நினைத்து வியந்து கொண்டிருந்தாள் யாமினி.. அதிலும் முத்தாய்ப்பாக சித்தார்த்தனின் வசவு மழையை..

"சரி.. சரி.. விடுடா.." என்று தாமோதரன் நிறுத்திய போது வியப்பின் உச்சிக்கே போய் விட்டாள்..

"என்னடா நீயும் இவங்களுக்குச் சப்போர்ட் பண்ற..?"

"பொறுடா.. ஏன் இப்படிச் செஞ்சாங்கன்னு விசாரிப்போம்.."

"இதில விசாரிக்க என்ன இருக்கு..? திமிர்..! பொறுப்பான பதவியில இருக்கோம்.. நம்ம பவரைக் காட்டிப் பார்க்கலாம்ங்கிற திமிர்.. வேறென்ன..?"

"நீயா எதையாச்சும் சொல்லாதே.. மிஸ் யாமினி.. ஏன் அப்படிப் பண்ணினீங்க..?"

தாமோதரனின் கேள்விக்கு

"தெரியலை சார்.." என்று கையை விரித்தாள் யாமினி..

"தெரியலையா..?" சித்தார்த்தன் கோபமாக.. தாமோதரன் யாமினியின் முகத்தையே உன்னிப்பாகப் பார்த்தான்..

"நீங்க சொல்ற பதில் சைல்டிஷா இருக்கு யாமினி.."

"ஐ நோ சார்.. பட் என்னோட ஆன்சர் இதுதான்.. என்னன்னே தெரியலை சார்... அந்த வெள்ளைக் காரங்களைப் பாத்தவுடனே எனக்கு எரிச்சல் எரிச்சலா வந்துச்சு.. அவங்களை வெறுப்பேத்தனும்னு தோணுச்சு.. அவங்க கேட்டதைச் செய்யக் கூடாதுன்னு வீம்பு வந்துச்சு.. இதெல்லாம் எதனால தோணுச்சுன்னு எனக்குத் தெரியலை சார்.."

சித்தார்த்தன் திகைத்தான்.. யாமினியின் முகத்தில் இருந்த உண்மையை ஊன்றிப் பார்த்தவனுக்கு இனம் புரியாத

பெருமிதம் எழுந்தது.. ஏனோ.. யாமினியின் செயலை பாராட்ட வேண்டும் போல அவனுக்கு தோன்றி வைத்தது..

"நீயும் ஆரம்பிச்சுராதே.. ஆபிசுக்கு ஒரு ஆள் இருந்தால் போதும்.."

இலகுவாகச் சொல்லிய தாமோதரனின் பேச்சில் சித்தார்த்தன் ஒரு மார்க்கமாக அவனைப் பார்த்து..

"ஹி.. ஹி.." என்று சிரித்து வைத்தான்..

"சும்மாயிருடா.. பயமுறுத்தாதே.." என்ற தாமோதரன் யாமினியைப் பார்த்து..

"இதுதான் உங்க பிராப்ளம்ன்னா.. நீங்க இனிமே கவனமா இருந்துக்கப் பழகனும் யாமினி.. ஏன்னா.. நம்ம கம்பெனியோட முக்கியமான கிளையண்ட்ஸ் ஃபாரினர்ஸ் தான்.. அவங்களை டீஸ் பண்ணினா வேலைக்கு ஆகாது.." என்றான்..

"ஓகே சார்.. ஐ வில் கன்ட்ரோல் மை செல்ஃப்.." யாமினி சொன்னாள்..

"நீங்க போகலாம்.."

தாமோதரன் சொன்னவுடன் இவ்வளவுதானா என்று கேட்க நினைத்து வாயை இறுக்கி மூடிக் கொண்டு வெளியேறினாள் யாமினி..

அவள் பாட்டுக்கு அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்து.. அப்படியா.. இன்னும் கொஞ்சம் மாத்து வாங்க உனக்கு ஆசையா..? சித்தார்த்தா.. ஆரம்பிடா என்று கௌதம புத்தரானவனை.. மறுபடியும் தாமோதரன் ருத்ர தாண்டவம் ஆட வைத்து விட்டால் என்ன செய்வாள்..?

யாமினி போனதும்.. அறையில் இருந்த நண்பர்கள் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.. அவர்களுக்குள் புரிதலான ஓர் உணர்வு விரவியிருந்தது..

"ஆச்சரியமில்ல..?"

"ஆமாண்டா சித்தார்த்.."

"உனக்கும் எனக்கும்தான் இப்படித் தோணுதுன்னா.. இவளுக்கும் அதே மாதிரி தோணியிருக்கு.."

"அதைத்தான் நானும் யோசிக்கிறேன்.."

தாமோதரனின் நெற்றியில் சிந்தனை ரேகைகள் படிந்திருந்தன...

'இது எப்படி..?'

வெள்ளைக்காரர்களுடன் பிஸினெஸ் பண்ணும் சித்தார்த்தனுக்கு வெள்ளையர்களைப் பிடிக்காது.. அவர்களைக் கண்டால் கொலை வெறி வருகிறதென்பான்.. அதிசயத்திலும் அதிசயமாக தாமோதரனும் அதையே சொல்வான்.. இன்று யாமினிக்கும் அந்த உணர்வு வந்திருக்கிறதே..

சென்னை ஹை கோர்ட்டின் வாசலில் நின்ற காரில் சித்தார்த்தனும் தாமோதரனும் ஏறிக் கொண்டார்கள்.. தாமோதரன் காரை ஓட்ட.. சித்தார்த்தன் சீட்டில் சாய்ந்து உட்கார்ந்து..

"ஊப்ப்.." என்று வாயைக் குவித்து காற்றை ஊதினான்..

"என்னாச்சுடா.. அந்த லாயர் படுத்தி எடுக்கறாரா..?"

"ம்ம்ம்.. சீக்கிரமா இந்த லீகல் பிராப்ளத்தை முடிச்சுட்டாத் தேவலைடா தாமு.. நெக்ஸ்ட் ஸ்டெப்ப எடுக்கனும்.."

"முடிஞ்சுரும்.. டோன்ட் வொர்ரி.."

தாமோதரன் காரை வளைத்துத் திருப்பினான்.. ஹை கோர்ட்டு கட்டிடத்தைப் பார்த்த சித்தார்த்தன்..

"பிரிட்டிஷ்காரன் கட்டி வைச்ச கட்டிடம்.." என்றான்..

"ஒருவகையில வெள்ளைக்காரன் சிறந்த நிர்வாகிடா.. அட்மினிஸ்ட்ரேசனில அடிச்சுக்கிட்டு சிதறிக் கிடந்த இந்தியாவின் சிற்றரசுகளை அவங்கதான் ஒன்றுபடுத்தி ஒட்டு மொத்த இந்தியாவா நம்மகிட்டக் கொடுத்தாங்க.."

"இன்னொன்னையும் பாராட்டனும்.. மதவிசயங்களில அவங்க தலையிடல... நம்ம காஞ்சிபுரம் வரதராஜப்

பெருமாளுக்கு வைரநகை ஒன்னை ராபர்ட் கிளைவ் காணிக்கையாக கொடுத்திருக்கானே.."

"போரில் வெற்றி பெற்றதற்கு காணிக்கையா செழுத்தினானாம் சித்தார்த்.. எங்கப்பா சொல்லுவாரு.."

"அவர்தான் வரதராஜப் பெருமாள் கோவிலிலேயே குடியிருப்பாரே.." சித்தார்த்தன் சிரித்தான்..

"அதைச் சொல்லு..." கூடச் சேர்ந்து சிரித்தான் தாமோதரன்..

அவர்கள் இருவரின் மனதிலும் காஞ்சிபுரம் வந்து நின்றது.. விச்ராந்தியாக ஊர் பக்கம் சென்று வெகு நாள்களாகி விட்டது என்று தாமோதரன் சொன்னான்.. சித்தார்த்தன் ஆமோதித்தான்..

"ஒருநாள் எல்லா வேலைகளையும் ஏறக்கட்டிப் போட்டுட்டு ஊருப் பக்கம் போயிட்டு வரனும்.."

தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் தாமோதரன்.. சித்தார்த்தன் தாமோதரனின் பெற்றோரைப் பற்றி விசாரித்தான்.. குடும்ப விவரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தவர்களின் பேச்சு மறுபடியும் வெள்ளைக் காரர்களிடம் வந்து நின்றது..

"லண்டனில காலடியாத் திரிந்த ராபர்ட் கிளைவ் என்பவன் இந்தியாவுக்கு கிழக்கிந்திய கம்பெனியோட குமாஸ்தாவா வந்து வெறும் முந்நூறு சிப்பாய்களை வைச்சுக்கிட்டு ஆற்காட்டைப் பிடித்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கு வித்திட்டானாம் சித்தார்த்.. நம்ப முடியுதா..?"

"இப்படிச் சொல்வது பொய்யின்னு இங்கிலீஷ்காரங்க எழுதி வைச்சுட்டுப் போயிருக்கிற புத்தகங்களே சாட்சி சொல்லும் தாமு... அவங்க இந்தியாவில நடந்ததை தேதிவாரியா எழுதி வைச்சுட்டுப் போயிருக்காங்க.."

"பிரிட்டிஷ்காரனின் முதல் படையெடுப்பு ஆற்காடு படையெடுப்பில்ல.. தேவி கோட்டை மேலதான் முதன் முதலா அவங்க படையெடுத்திருக்காங்க.. கொள்ளிடத் தோட முகத்துவாரத்தில் இருக்கிறதால நாலாபக்கமும்

தண்ணீ சூழ்ந்திருக்கிறதால தீவுக் கோட்டைன்னு சொல்வாங்களாம் சித்தார்த்.. படிப்படியா அது தேவி கோட்டையா மாறியிருக்கு.."

"நம்ம ஊரில படிப்படியா பேர் மாறுகிறதைப் பத்திச் சொல்லனுமா என்ன..? காலடிப் பேட்டையோட பிகினிங் நேம் என்னன்னு தெரியுமாடா..?"

"எங்கப்பா சொல்லுவார்.. 'கோலட் பெட்' டாம்.. 'கோலட்'ங்கிற வெள்ளைக்கார கவர்னர் தன்மையாப் பழகினாராம்.. அதனால அந்தப் பகுதி மக்கள் அவர் பெயரையே அவங்க ஊருக்கு வைச்சாங்களாம்.. அங்கே கல்யாண வரதராஜப் பெருமாள் கோவிலை 'கோலட் பெட்' தான் கட்டினாராம்.. அந்தக் கோவிலில இருக்கிற மூலவர் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவிலில இருக்கிற மூலவரைப் போல அச்சு அசலாய் அப்படியே இருக்கிறாராம்.."

"வெள்ளைக்காரங்களில நல்லது பண்ணினவங்களும் இருக்காங்க தாமு.. உடன்கட்டை ஏறுகிற 'சதி'ங்கிற பழக்கத்தை ஒலித்தது.. குழந்தைத் திருமணத்தை தடுத்ததுன்னு சொல்லிக்கிட்டேப் போகலாம்.. அவங்கள்ளாம் விதி விலக்குதான்.. மெஜாரிட்டி பிரிட்டிஷ்காரங்க ஆணவத்தோட.. ஆளுமை மனப்பான்மையோடதான் இருந்திருக்காங்க.. நம்ம ஆளுக கிட்ட ஒத்துமை இல்லைடா.."

"அப்படி இருந்திருந்தா வெள்ளைக்காரன் உள்ளே வந்திருப்பானா..? காட்டிக் கொடுக்கிறதில கின்னஸ் ரிகார்டை படைச்சாங்க.. அவனுக சாதுரியமா போட்டு வாங்கி உள்ளார வந்து சட்டமாக உக்காந்துக்கிட்டானுக.. அதுக்கப்புறமா விழிப்பு வந்து விரட்டியடிக்க ஒன்னாச் சேர்ந்தாங்க.."

என்னவோ பக்கத்தில் இருந்து பார்த்தைப் போலப் பேசிக் கொண்ட அந்த நண்பர்கள் இருவருக்கும் நடப்புக் காலம் மறந்து விட்டது.. வெள்ளைக்காரர்களை விரட்டிய யடித்த அந்தக் காலத்திற்கே அவர்கள் சென்று விட்டார்கள்..

71

அன்று சிந்திய ரத்தத்தினால்..

இன்று விடுதலை கண்டோம்..

விடியலை வேண்டித்தானே..

விடிவதற்குள் சுதந்திரம் பெற்றோம்..?

காஞ்சி வரதராஜப் பெருமாளின் கோவில் பிரகாரத்தில் சுற்றி வந்து கொண்டிருந்தார் ஈஸ்வரன்..

"ஈசூ.." கைதட்டல் ஒலி கேட்டது..

'எவன்.. அவன்..?' திரும்பிப் பார்த்தார் ஈஸ்வரன்..

"என்னாப்பா.. ஏகாம்பரேஸ்வரர் கோவிலச் சேந்தவன் வரதராஜப் பெருமாள் கோவில் பக்கம் வந்திருக்க..?"

கேள்வி கேட்ட பிரகாசம் ஈசுவரனின் நெருங்கிய நண்பர்.. ஈஸ்வரனைப் போலவே ரிட்டயராகி.. பென்சன் பணத்தில் மாதச் செலவுகளை அடக்கி வாழ்பவர்..

"ஏம்ப்பா.. எதை வைச்சு நான் ஏகாம்பரேஸ்வரர் கோவிலை மட்டும் சேர்ந்தவன்னு முடிவுக்கு வந்த..?"

"ஈஸ்வரன் ஏகாம்பரேஸ்வரர் கோவிலைச் சேர்ந்த வனாத்தான இருக்க முடியும்..? ஹா.. ஹா.."

தனது நகைச்சுவையை ரசித்துத் தானே சிரித்து மகிழ்ந்து போன பிரகாசத்தை மருந்துக்குக் கூடச் சிரித்து வைக்காமல் விசித்திரமாக உற்றுப் பார்த்து ஒரு வழி பண்ணினார் ஈசுவரன்..

நொந்து போனார் பிரகாசம்..

'இவன் என்ன கேட்டகிரி..?'

அத்தனை வருடங்களாக நெருங்கிப் பழகும் அவராலேயே நண்பனின் குணத்தை கணிக்க முடிய வில்லை..

தாமோதரனிடம் கேட்டிருந்தால்.. இது உங்களுக்குத் தேவைதானா அங்கிள் என்று பிரகாசத்திடம் கேட்டிருப்பான்..

என் அப்பாவுக்காவது.. சிரிக்கத் தெரிகிறதாவது.. என்று தெளிவு படுத்தியிருப்பான்..

அப்படி மகனாலேயே கணிக்க முடிந்த நண்பரைக் கணிக்கத் தெரியாதவராக பிரகாசம் ஜோக்கடித்து மாட்டிக் கொண்டார்..

"ஜோக்கடிச்சா சிரிக்கனும் ஈஸ்வரா.." என்ற பிரகாசத்திடம்..

"நீ ஜோக்கடிச்சியா..? எப்ப..?" என்று கேட்டு சோதித்து வைத்தார் ஈஸ்வரன்..

"ஏண்டா இப்படியிருக்க..?"

"எப்படியிருக்கேன்..?"

"மனுசனாப் பிறந்தவனுக்குச் சிரிக்கத் தெரியனும்டா ஈஸ்வரா.."

"அதுக்கு முதல்ல அந்த மனுசனை சிரிக்க வைக்கிறது மாதிரி ஜோக்கடிக்கவும் உனக்குத் தெரியனும்டா பிரகாசம்.."

'இவன் கிட்டப் போய் சிரிப்பை எதிர் பார்த்தேன் பார்.. என்னைச் சொல்லனும்..'

சிரிப்பு ஈஸ்வரனுக்கு தேவைப்படாத ஒன்று என்பதால் அதைத் தவிர்த்து வேறு பேச்சை பேச நினைத்தார் பிரகாசம்.. அதற்கான ஆரம்ப முயற்சியாய்..

"என்னப்பா வேண்டிக்கிட்ட..?" என்று கேட்டார்..

"இந்த உலக மக்கள் நல்லா இருக்கனும்ன்னு வேண்டிக்கிட்டேன்னு சொன்னா நீ நம்பவா போற..?" இடக்காக கேட்டு வைத்துத் தான் ஈசுவரன் என்பதை

புரூவ் பண்ணினார் பிரகாசத்தின் ஆரூயிர் நண்பர்..

"இது வேறயா..?"

"ஆமாண்டா.. பின்ன என்ன..? கோவிலுக்கு வந்து சாமிகிட்ட என்ன வேண்டிக்குவாங்க..? நான் நல்லாயிருக்கனும்.. என் குடும்பம் நல்லாயிருக்கனும்.. அப்படின்னுதானே வேண்டிக்குவாங்க..? நான் மட்டும் மாத்தியா வேண்டிக்கப் போறேன்..?"

'நீ செஞ்சாலும் செய்வேடா..'

நினைத்ததை வெளியில் சொல்லாமல் நண்பருடன் இணைந்து நடந்தார் பிரகாசம்.. சிரிக்கக் கூலி கேட்கும் ஈஸ்வரனின் முகத்தைப் பார்த்தபோது அவருடன் வாழ்ந்து தாமோதரனுக்கும் அன்னையாகி விட்ட அம்பிகாவின் சாதனையின் மீது அவருக்கு எல்லை கடந்த பிரமிப்பு ஏற்பட்டது..

இந்த பிரமிப்பை தாமோதரன் கேள்வியாக தனது அன்னையிடம் கேட்டதை பிரகாசம் பலமுறை கேட்டிருக் கிறார்..

"எப்படிம்மா இவரைப் போயி கல்யாணம் பண்ணிக் கிட்டிங்க..?"

"நான் பண்ணிக்கலைடா.. வீட்டில பண்ணி வைச்சிட்டாங்க.."

"பெட்டியைத் தூக்கிட்டு பிறந்த வீட்டுக்குப் போயிருக்கலாமில்ல..?"

"தனியாப் போகச் சொல்றியா..?"

"துணைக்கு நானும் வரேன்ம்மா.."

மகனின் ஆலோசனையில் அம்பிகாவுக்கு சிரிப்பு வந்துவிடும்.. அவள் செல்லமாக மகனின் முதுகில் மொத்துவாள்..

"அடிதாண்டா வாங்கப் போற.. அப்பாவை விட்டு அம்மாவை பிரிஞ்சு போகச் சொல்கிறதுக்குத்தான் நீ பிள்ளையாய் பிறந்து வந்தியா..?"

"ம்ஹீம்.. உங்க நல்லதுக்கு சொன்னா அடிக்க வருவீங்களா..?"

விளையாட்டாய் முகத்தைத் தூக்கி வைத்துக கொள்ளும் தாமோதரன் தனது அம்மாவிற்கு 'வாழ்நாள் சாதனையாளர்' விருது கொடுக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப் போவதாக சொல்லிய கதையையும் பிரகாசம் அறிவார்..

ஈஸ்வரன் கோவில் கோபுரத்தை பார்த்து மனதுக்குள் ஏதோ வேண்டிக்கொண்டார்.. கூட நடந்த பிரகாசத்துக்கு சன்னமான பொறாமை வந்தது.. ஈஸ்வரன் கண்களை மூடி வேண்டிக் கொண்டிருந்தார்..

'என்னமோ காஞ்சி வரதராஜப் பெருமாளு இவனுக்கு மட்டும் சொந்தம் போல பிலிம் காட்டறானே..'

தாள முடியாமல் போன பிரகாசம்..

"போதும்ப்பா... பெருமாள மத்தவங்களும் கும்பிடனும்.. கண்ணைத் திற.." என்றார்..

கண் திறந்த ஈஸ்வரனின் பார்வை உனக் கென்னத்துக்குடா இம்புட்டுப் பொறாமை என்று கேட்டது.. அவரது பார்வையின் கூர்மையில்..

"ஏம்ப்பா.. என்னமோ பெருமாளு உன்கூடப் பேச வர்றதைப் போல இல்ல சீன் காட்டற..?" என்று சமாளித்தார் பிரகாசம்..

"இப்படித்தான் வெள்ளைக்காரன் காலத்தில நம்ம சென்னைப் பட்டினத்துக்கு கவர்னரா வந்த 'ஜோசப் கோலட்'ங்கிறவன் வீர ராகவன்ங்கிற நம்ம ஊரு ஆளப் பாத்துக் கேட்டு வைச்சான்.. அதனால என்ன நடந்தது தெரியுமா..?"

"சென்னைப் பட்டினமா..?

"அதாம்பா.. இப்ப சென்னையா இருக்கிறது அந்தக் காலத்தில மதராஸீப் பட்டினமா இருந்துச்சு.. ரெண்டையும் சேர்த்து சென்னைப் பட்டினம்ன்னு சொன்னேன்.."

"இதைப் பாருடா.. உனக்குச் சேர்க்கக் கூடத் தெரியுமா..?"

"நான் யாரைப் பிரிச்சிருக்கேன்..?"

"அதில்லப்பா.."

"என்ன நொதில்லப்பா.."

"தெரியாமச் சொல்லிட்டேம்ப்பா.. நீ என்ன நடந்துச்சுன்னு சொல்லு.."

நைசாக பேச்சை மாற்றி கதை கேட்பதைப் போல தப்பிக்க முனைந்தார் பிரகாசம்.. உன்னை எனக்குத் தெரியாதா என்று பார்த்து வைத்தார் ஈஸ்வரன்.. அந்தப் பார்வையில் நெளிந்த பிரகாசத்தை போனால் போகிறது பிழைத்துப் போகட்டும் என்று கருணையின் அடிப்படையில் விட்டு விட்ட ஈஸ்வரன் கதை சொல்ல ஆரம்பித்தான்..

"முந்நூறு வருசங்களுக்கு முன்னால 1717-ல ஜோசப் கோலட்ங்கிற வெள்ளைக்காரன் மெட்ராஸ் பட்டினத்துக்கு கவர்னரா வந்தான்.. அப்போ அங்கே உள்ளூர் நிர்வாகத்தில உதவி செய்ய வீரராகவர்ங்கிற குமாஸ்தா வேலைக்கு வந்தார்.. கவர்னர் கூடவே இருந்ததில வீரராகவர் மேல ஜோசப் கோலட்டுக்கு பிரண்ட் ஷிப் வந்துருச்சு.."

"இதப் பாருடா.."

"இருந்தாலும் வீர ராகவர்கிட்ட ஜோசப் கோலட்டுக்கு ஒரு பிரச்னை இருந்துச்சு.."

"அதானே பார்த்தேன்.."

"வீர ராகவர் தீவிரமான பெருமாள் பக்தர்.. நம்ம காஞ்சிபுர வரதராஜப் பெருமாள் கோவிலுக்கு அடிக்கடி வந்துருவாரு.. இதனால ஆபிசுக்கு லேட்டாப் போவாரு.. அது கோலட்டுக்குப் பிடிக்கல.. வீர ராகவருக்கு புத்தி சொல்ல நினைச்சானாம் அந்த கோலட்.."

"இதில புத்தி சொல்ல என்னப்பா இருக்கு..?"

"வெள்ளைக்காரனுக்கு அது தெரியலையே.. அவன் என்னவோ பெரிய இவனாட்டம் வீர ராகவரைக் கூப்பிட்டு நீங்க பெருமாளுக்காக இப்படி உருகறீங்களே.. இந்த செகண்டில காஞ்சியில உங்க பெருமாள் என்ன செய்துக் கிட்டு இருக்கார்ன்னு கேட்டானாம்."

"வெள்ளைக்காரனுக்கு இருக்கிற மிதப்பப் பாத்தியா.."

"அதுக்கு கண்களை மூடி உக்காந்துட்ட வீர ராகவர்.. பெருமாள் அந்த செகண்டில் தேரில உலா வந்துக்கிட்டு இருக்கிறாதாவும் அவரோட தேர்ச்சக்கரம் சேத்துல சிக்கிக் கிட்டதாவும் அதை மீட்கும் வேலைகள் நடந்துக்கிட்டு இருக்குன்னும் சொல்லியிருக்கார்.."

"நிஜமாவா ஈஸ்வரா..?"

"ஆமாம்ப்பா.. வீரராகவர் சொன்ன தகவல் சரியான்னு கோலட் காஞ்சிபுரத்தில இருந்த அதிகாரிகளைக் கேட்டப்ப அவங்க ஆமாம்ன்னு சொன்னாங்களாம்ப்பா.."

புல்லரித்துப் போய் விட்டது பிரகாசத்திற்கு.. இப்படியும் நடந்திருக்கிறதென்று அறிந்ததில் அவர் ஆச்சரியப்பட்டுப் போனார்.. வெள்ளைக்காரனான ஜோசப் கோலட்டிற்கும் புல்லரித்தது என்று ஈஸ்வரன் சொன்னார்..

"கோலட்டுக்கு ஜிம்முன்னு ஆகிப் போயிருச்சு.. வீர ராகவர் மேல மதிப்பு வைச்சு அவரோட வீட்டுக்குப் பக்கத்திலேயே பெருமாள் கோவிலைக் கட்டிக் கொடுத்தாராம்.."

"பரவாயில்லையே.. வெள்ளைக்காரன் நம்ம ஊருக்கு வந்து பெருமாள் கோவிலைக் கட்டிக் கொடுத்திருக்கான்.. எந்தக் கோவிலுப்பா அது..?"

"திருவொற்றியூருக்குப் பக்கத்தில காலடிப் பேட்டையில இருக்கிற கல்யாண வரதராஜப் பெருமாள் கோவில்தான் அது.. காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவிலப் போலவே அது கட்டப் பட்டிருக்குது.. மூலவர்கூட அச்சு அசல் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவிலோட மூலவர் போலவே இருப்பார்.."

"காலடிப் பேட்டையில கோலட் கட்டின பெருமாள் கோவில்..! இது கூட நல்லாயிருக்கே.."

"அந்த ஊருக்கு 'கோலட் பெட்'ன்னு அந்த வெள்ளைக்காரன் பேரைத்தான் வைச்சிருந்தாங்களாம்ப்பா.. நம்மாளுகதான் எப்பேர்ப்பட்ட பேரையும் ஒருவழி பண்ணிருவாங்களே.. கோலட் பெட்.. காலடிப் பேட்டையா மாறிப் போயிருச்சு.."

"வெள்ளைக்காரன் பேரை ஒருவழி பண்ணனும்னு நினைச்சிருப்பாங்க.."

பிரகாசம் என்னவோ ஒரு பேச்சுக்காகத்தான் சொல்லி வைத்தார்.. அந்தப் பேச்சுக்கு ஈஸ்வரன் வாய் விட்டுச் சிரித்ததில் அவர் வாய் தானாக 'ஆ' வென்று பிளந்து ஆச்சரியத்தை வெளிப்படுத்தியது..

72

அன்று சிந்திய குருதிக் கடல்..

ஈட்டித் தந்த சுதந்திரம் இது.

வெள்ளையரை விரட்டி விட்டோம்...

கொள்ளையரை விட்டு வைத்தோம்...

ஈஸ்வரனால் கூடச் சிரிக்க முடியும் என்பதை அன்று தான் கண்டார் பிரகாசம்.. அதிசயப்பட்டுப் போனவரின் மனதில்..

'இதனாலதான் இந்த மனுசன்கூட அம்பிகா தங்கச்சி குடித்தனம் பண்ணிக்கிட்டிருக்கோ..' என்ற நினைவு வந்தது..

"வாயை மூடுய்யா.. ஈ போயிரப் போகுது.."

இலகுவாக பேசி பிரகாசத்தின் ஆச்சரியத்தை அதிகப் படுத்தினார் ஈஸ்வரன்.. நண்பர்கள் கோவிலை விட்டு வெளியே நடந்தார்கள்..

"எங்கேப்பா போகிற..?" என்றார் பிரகாசம்..

"வீட்டுக்குத்தான் போறேன்.. வேற எங்கேயும் போகிற பழக்கம் எனக்கு இல்லப்பா.. நான் ஏகபத்தினி விரதன்.." ஈஸ்வரன் விட்டடிக்கிறேன் பேர்வழியென்று பிரகாசத்தை சோதித்து வைத்தார்..

'என்னடா இது.. எனக்கு வந்த சோதனை..!'

நொந்து போன பிரகாசம் ஈஸ்வரனை ஏற இறங்க ஒருமார்க்கமாக பார்த்து விட்டு..

'ஒரு பத்தினி இந்த மனுசன்கூட குப்பை கொட்டறதையே உலக சாதனைன்னு நினைச்சுக்கிட்டு இருக்கேன்.. இதில இந்த மனுசன் ஏகபத்தினி விரதன்னு பெருமை வேற பேசறான்.. பல பத்தினி விரதனா இவனிருக்கனும்னு நினைச்சாலும் எந்தப் பத்தினி இவன் கூடக் கும்மியடிக்க வரப் போறா.. எல்லாமே ஏமாளி அம்பிகாவப் போல இருப்பாங்களா..?' என்று நினைத்துக் கொண்டார்..

"என்னப்பா இப்புடிப் பாக்கிற..?" சந்தேகத்துடன் கேட்டார் ஈஸ்வரன்..

"ஹி..ஹி.. சும்மாதான் பார்த்தேன்ப்பா.." வழிந்தார் பிரகாசம்..

"நீ சும்மா பாக்கிற ஆளா..? நம்ப முடியலையே.."

நம்பாத பார்வையுடன் வீட்டைப் பார்த்து நடையைக் கட்டி விட்டார் ஈஸ்வரன்..

"ப்பா.. எப்பேற்பட்ட ஆளுய்யா இவன்... தப்பிச்சேண்டா சாமி.." பிரகாசம் தப்பிப் பிழைத்தவராக அவர் வீட்டை நோக்கி நடையைக் கட்டினார்..

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் 'கச்சி..' என்றும் 'கச்சிப் பேடு..' என்றும் வழங்கப்பட்டு வந்த நகரம்.. மெல்ல.. 'காஞ்சனம்..' என்ற பெயர் பெற்று மருவி 'காஞ்சி' என்று ஆனது.. காஞ்சனம் என்றால் பொன்னால் ஆன நகரம் என்று பொருள்..

காஞ்சிபுரத்தின் அழகைக் கண்டபோது அதைப் பொன்னால் ஆன நகரம் என்று வரலாறு வர்ணிப்பதில்

மிகையேதுமில்லை என்றே ஈஸ்வரனுக்குத் தோன்றியது..

அவருடைய வீடு இருக்கும் தெரு முனையை அணுகிய போது அவரைக் கடந்து சென்ற ஆட்டோ ஒன்று சடன்பிரேக் போட்டு நின்றது.. ஈஸ்வரன் அப்படியே நின்று விட்டார்..

'ஸ்கெட்ச் போட்டு என்னைத் தூக்க எவனும் வந்திருக்கானோ..'

பிரகாசம் மட்டும் ஈஸ்வரனின் பக்கத்திலிருந்து இந்த நினைப்பைப் பற்றி அறிந்திருந்தால்...

'தாங்க முடியலைடா சாமி..' என்று தெருவோரக் கடையின் சுவரில் தலையை மோதியிருப்பார்..

'இந்த மனுசனைத் தூக்க ஸ்கெட்ச் போட்டு வந்திருக்கிற மூஞ்சி எதுன்னு பார்த்துப்புடனும்..' என்று ஆட்டோக்காரனின் முகத்தை காதலியின் முகத்தைப் பார்க்கும் காதலனைப் போல உற்று உற்றுப் பார்த்து வைத்திருப்பார்..

நல்லவேளையாக.. இதுபோன்ற கொடுமைகளுக்கு ஆட்படாமல் தப்பிப் பிழைத்து அவர் வீடு நோக்கிப் போய் விட்டார்..

"ஆட்டோ வேணுமா சார்..?"

ஆட்டோக்காரன் எட்டிப் பார்த்துக் கேட்டதும் அவனை மொத்து மொத்தென்று மொத்தினால் என்ன என்ற வெறி கிளர்ந்தது ஈஸ்வரனுக்கு..

'ஏண்டா சவாரிபிடிக்கிறத ஆளைத் தூக்கறதைப் போலவா அரள வைச்சு செய்வீக..?' ஆட்டோக்காரனை முறைத்தவர்..

"வேணாம்ப்பா.. வீடு வரைக்கும் வந்திட்டு.. தெரு முனையில ஆட்டோப் பிடிச்சுப் போனா தகராறாகிரும்.." என்றார்..

"சொந்தக்காரங்க சண்டை போடுவாங்களா சார்..?"

"எம் பொண்டாட்டிதான் சண்டை போடுவாப்பா.."

"என்னது..? நீங்க யார் வீட்டுக்குப் போறீங்க..?"

"என் வீட்டுக்குத்தான் போறேன்ப்பா.."

இது தேறாத கேஸ் என்பதில் ஆட்டோக்காரன் முறைப்பெண்ணைப் போல ஈஸ்வரனை விட அதிகமாக அவரை முறைத்து விட்டு ஆட்டோவைக் கிளப்பிக் கொண்டு போனான்..

'இவன் என்னடா.. எம்பொண்டாட்டிய விட அதிகமா எம்மேல கோபப்படறான்.. தெருவில இறங்கி நடந்தாக் கூட அது தப்பா..?'

ஆதங்கப்பட்டபடி அவருடைய வீடு இருந்த தெருவில் திரும்பினார் ஈஸ்வரன்.. வீட்டு வாசலில் காய் வாங்கிக் கொண்டிருந்த அம்பிகாவும் அப்போதுதான் திரும்பி அவரைப் பார்த்து வைத்தாள்..

அண்ணலும் நோக்கினான்.. அவளும் நோக்கினாள்.. கண்ணோடு கண் கலந்ததில் காதல் வரவில்லை.. நொடிப்புத்தான் வந்தது..

"இந்தா இருக்கிற கோவிலுக்குப் போயிட்டு வர இத்தனை நேரமா..?"

"சீக்கிரமா வந்து என்ன பண்ணப் போறேன்...?"

"எதுவும் பண்ண வேண்டாம் சாமி.. கோவில்ல இருந்து மார்க்கெட் வழியாத்தான வந்திருப்பீங்க... ரெண்டு காய்கறிகயை வாங்கிட்டு வந்தா வரதராஜப் பெருமாள் வேணாம்ன்னு சொல்லிருவாரா..?"

"வாசல்லேயே காய்கறி வண்டி வருது.. அப்புறம் என்ன...?"

"இங்கே நாப்பது ரூபாய்க்கு வாங்கற காயை அங்கே இருபது ரூபாயில் வாங்கிரலாமே..."

அம்பிகா ஈஸ்வரனிடம் நொடிக்க.. அவருக்குப் பதில் காய்கறி வண்டிக்காரன் சண்டைக்கு வந்தான்..

"ஏம்மா.. அங்க விக்கிற காயை இங்க கொண்டு வந்து தாரதுக்கு ஆள் கூலி.. வண்டி வாடகையெல்லாம் யாரும்மா தருவாங்க..? நீங்களா தருவீங்க..?"

"நல்லாயிருக்கே உன் நியாயம்... நான் ஒருத்தி மட்டும்தான் உன்கிட்டக் காய் வாங்கறேனா..? இந்த ஏரியாவே வாங்குது..."

"அதான்.. உங்க ஒரு ஆளுகிட்ட மட்டும் காசை வசூலிக்காம ஒட்டுமொத்த ஆளுககிட்டயும் வசூல் பண்றதுக்காக இருபது ரூபா காயை நாப்பது ரூபாய்னு விக்கிறேன்.. வேணாம்ன்னா சொல்லுங்க.. ஒட்டு மொத்த காசையும் உங்ககிட்டேயே வசூல் பண்ணிக்கிறேன்..."

"தேவைதான் எனக்கு... நீ காயை ஒழுங்கா நிறுத்துப் போடு..."

அம்பிகா எரிச்சலுடன் காயை வாங்கிக் கொண்டு வீட்டுக்குள் போனாள்.. பின்னாடியே போன ஈஸ்வரன்..

"காய்கறிக்காரன் என்ன நமக்கு ஒட்டா... உறவா..? நீ பேசினா கேட்டுக்கிட்டுப் போறதுக்கு..? வீட்டுக் காரனைப் பேசணும்னா வீட்டுகுள்ளாரக் கூப்பிட்டுக்கிட்டு வந்து விளாசித் தள்ளனும்டி.. அத விட்டுட்டு வீட்டு வாசல்லேயே கச்சேரியை ஆரம்பிச்சா இப்படித்தான்.. காய்கறி வண்டிக்காரன் கூட சண்டைக்கு வருவான்..." என்றபடி சட்டையைக் கழற்றி ஹேங்கரில் மாட்டினான்..

"அடியாளு வைச்சிருக்கிற திமிரு...?" அம்பிகா கோபத்துடன் சமையலறைக்குள் போய் காய்கறிப் பையை தூக்கிப் போட்டாள்..

"அடியாளு..? நானு..? வைச்சிருக்கேன்..? ஏண்டி நீ வேற.. வெறும் ஆள நான் கூப்பிட்டாக்கூட ஏன்னு கேக்க மாட்டான்.. இதில் அடியாளு.. 'யெஸ் பாஸ்'ன்னு வந்து ஆஜராகப் போறானா..? என் லெவலுக்குத் தக்கபடி பேசு.."

"என்னத்தப் பேச..? பெத்தது ஒன்னு.. அதுவும் ஆம்பளைப் புள்ளையாப் போச்சு... பொண்ணைப் பெத்திருந்தாலாவது இந்நேரத்துக்கு கல்யாணத்தைப் பண்ணிக் கண் குளிரப் பார்த்து.. கிட்டக்கவே குடித்தனம் வைச்சிருப்பேன்.. உள்ளூரு மாப்பிள்ளையா தேடிப் பிடிச்சுப் பெண் கொடுத்திருப்பேன்.. இப்ப என்னடான்னா.. ஆம்பளப்புள்ள

வீடு தங்காம சென்னைக்கு ஓடிப் போயிருச்சு... அழகுபெத்த வீடு... நீங்களும் கூட வாங்கம்மான்னு கெஞ்சுது.. எங்கே...? காஞ்சிபுரத்தில் என்னைக் கட்டிக் கொடுத்திட்டாங்க... என்னைக் கட்டிக்கிட்ட மனுசனோ காஞ்சியை கட்டிக்கிட்டு இதைவிட்டு வெளியே வர மாட்டேன்னு அடம் பிடிக்கிறாரு.. அவருக்கு நேரா நேரத்துக்கு ருசிருசியா ஆக்கிப் போட காய்கறிக்காரன் கூட நான் சண்டைக்கு

நிக்க வேண்டியிருக்கு.. தானாப் பொங்கிச் சாப்பிட்டாத்தான் புத்தி வரும்ன்னு கிளம்பிரனும்.. அப்பத் தெரியும் இந்த அம்பிகாவோட அருமை..."

பாத்திரத்தை உருட்டியபடி புலம்பிக் கொண்டிருந்தாள் அம்பிகா.. சோபாவில் சாய்ந்து உட்கார்ந்திருந்த

ஈஸ்வரன் எழுந்து சமையலறையின் நிலைப்படியை பிடித்தபடி எட்டிப் பார்த்தார்.. திரும்பிப் பார்த்த அம்பிகா பல்லைக் கடித்தாள்..

'ஹீரோன்னு இந்த கிழவனுக்கு நினைப்பு.. போஸ் கொடுக்கிறதப் பாரேன்..'

"இப்ப உனக்கு என்ன வேணும்..? சென்னப்ப நாயக்கரோட பட்டினத்துக்குப் போகனும்.. அவ்வளவுதானே..? போயிட்டு வா.."

"சென்னைன்னா.. சென்னப்ப நாயக்கரோட பட்டினம்ங்கிறாரு.. காதும் பிட்டுக்குச்சா...?"

"அதெல்லாம் பிட்டுக்கலை.. நட்டக் குத்தலாத்தான் இருக்கு.. கிழக்கிந்தியக் கம்பெனிக்காரங்க சென்னப்ப நாயக்கர் கிட்டயிருந்து வாங்கின கோட்டையை விரிவாக் கட்டினாங்களாம்.. அந்தக் கோட்டையைச் சுத்தி உண்டான நகரத்த சென்னப்ப நாயக்கரோட நினைவா.. சென்னைப் பட்டினம்ன்னு சொன்னான்ங்களாம்.. பின்னாலே அந்தப் பட்டினம் மதராஸப் பட்டினமா மாறுச்சாம்.. இப்ப பழையபடி சென்னையிலே வந்து நிக்குது..."

"இப்ப வரலாறு பாடம் நடத்துங்கன்னு நான் கேட்டேனா..?"

"கேக்கலைதான்.. சொல்லனும்னு தோணுச்சு.. சொன்னேன்..."

"நீங்க சொல்றதைக் காது கொடுத்துக் கேட்க ஆள் வேணும்ன்னுதான என்னை இந்த வீட்டோட கட்டிப் போட்டு வைச்சிருக்கீங்க..."

"நீயா நினைச்சுக்கற.. உன் மகன்கிட்ட போகனும்னு நினைச்சா தாராளமா போயிட்டு வான்னு என்னைக்கோ சொல்லிட்டேன்.."

"தனியாவா...?"

"இம்புட்டு வாய் பேசற.. தனி என்ன தனி...?"

அம்பிகாவுக்கு வந்த கோபத்தில் கையில் இருந்த பாத்திரத்தைத் தூக்கிக் கடாசினாள்.. அது வேகமாக பறந்து போனது..

"கேட்ச்..." வீட்டுக்குள் வந்த தாமோதரன் அதைப் பிடித்தான்.

அத்தியாயம் - 73

கத்தியின்றி ரத்தமின்றிப்..

பெற்றதல்ல இந்த சுதந்திரம்..

புத்தியுடன் போராடி

பெற்றதிந்த சுதந்திரம்

"இதைப் பாருடா.."

கேட்ச் பிடித்த பாத்திரத்தைச் சுழற்றியபடியே தாமோதரன் ஆச்சரியப் பட்டான்..

'இவன் யாரைப் பார்த்துப் பாருடான்னு சொல்றான்..?'

ஈஸ்வரனுக்குள் சந்தேகம் முளைத்தது.. அந்த வீட்டில் தாமோதரனைத் தவிர ஆண்பிள்ளையென்று அவர்தான் இருந்தார்.. அவரைத்தான் அவன் 'பாருடா' என்று சொன்னானா..?

தாமோதரனிடம் இதைக் கேட்கவும் முடியாது என்பதில் டென்சன் ஆனார் ஈஸ்வரன்..

"ஏம்மா.. பேசாம இந்தியக் கிரிக்கெட் டீமில நீங்க சேர்ந்துக்கலாமே.. இப்படிப் பட்டயக் கிளப்பறீங்க.."

"பேசாமப் போயிருடா.. நானே செம கடுப்பில இருக்கேன்.."

"போகவா சொல்கிறீங்க..? ஆஹா..! நீங்களே இப்படிச் சொன்ன பின்னாலே நான் டாட்டாச் சொல்லாம இருந்தா நல்லா இருக்காது.. டாட்டா.. பை.. பை..! சென்னைக்குக் கிளம்பறேன்.."

தாமோதரன் கிளம்புவதைப் போலப் பாவ்லா செய்தான்.. அம்பிகா அவனையே இமைக்காமல் பார்த்தாள்.. தாமோதரனின் விளையாட்டுத் தனம் அவனுக்கு டாட்டாச் சொல்லிவிட்டு ஓடியே போய் விட்டது..

"ம்மா.."

அவன் கன்றுக்குட்டி தாய்ப்பசுவிடம் கொஞ்சுவதைப் போலக் கொஞ்சியபடி அம்பிகாவிடம் போனான்.. அவள் விழிகளில் கண்ணீர் அரும்பு கட்டியிருந்ததில் கிளீன் போல்டாகி கெஞ்ச ஆரம்பித்து விட்டான்..

"ஸாரிம்மா.. ப்ளீஸ்.. ப்ளீஸ்.."

"பெத்தவ நினைப்பில்லாம பிரண்டே கதின்னு சென்னையிலேயே தனிக்குடித்தனம் பண்ற.. ஆடிக்கொரு தரம் அமாவாசைக்கொருதரம்ன்னு காஞ்சிபுரத்துப் பக்கம் எட்டிப் பாக்கிற.. அதிலயும் பேசற பேச்சில சுழுவ எடுத்துக்கிட்டு திரும்பி ஓடுவியா..?"

அம்பிகா நியாயம் கேட்டுக் கொண்டிருந்தாள்.. தாமோதரன் சொன்ன 'பாருடா'வில் உழன்று கொண்டிருந்த

ஈஸ்வரனின் மனம் 'பாருடா..'வை விட்டு விட்டு.. அம்பிகா கூறிய 'பெத்தவ..'ளிடம் தாவியது..

'இவ மட்டும்தான் பிள்ளையைப் பெத்தவளா.. நான் பெத்தவன் இல்லையா.. அது என்ன 'பெத்தவ..'ன்னு தன்னை மட்டும் முன்னால வைச்சுக்கிறது.. பெத்தவங்கன்னு மொத்தமா சொல்றதுக்கு என்ன கேடு..?' அவரால் இதையும் வாய் விட்டுக் கேட்க முடியவில்லை.. அவருடைய ஈகோ தடுத்ததில் மனைவியை முறைத்து வைத்தார்..

அம்பிகாவுக்கு மகன் வந்திருக்கும் சந்தோசம்.. அவள் கணவரின் முறைப்பைக் கவனிக்காமல் மகனின் தலை முடியைக் கலைத்துத் தனது உரிமை கலந்த பாசத்தை நிலை நாட்டிக் கொண்டிருந்தாள்.. ஈஸ்வரனின் பொறாமை அதிகமானது..

"போதும்.. போதும்.." மனைவியை அதட்டினார்..

அவளோ அலட்டிக் கொள்ளாமல் மகனைக் கொஞ்சுவதில் மும்முரமாக இருந்தாள்.. தாமோதரனும் அவளுடன் கூட்டணி போட்டுக் கொண்டு கொஞ்சி மகிழ்ந்ததில் ஈஸ்வரன் கடுப்பாகிப் போனார்..

"வந்தவனுக்கு வாய்க்கு ருசியா சமைச்சுப் போடறதை விட்டுட்டு வெட்டியா என்ன பேச்சு வேண்டிக் கிடக்கு..?"

அந்த வெட்டிப் பேச்சில் அவரையும் இணைத்துக் கொள்ளாமல் தாயும் மகனுமாக பேசி மகிழ்கிறார்களே என்ற காண்டு அவருக்கு..

"எங்கம்மா என்ன சமையல்காரியா..?"

தாமோதரன் புருவங்களை உயர்த்தியதில்.. ஆஹா..! அவசரப்பட்டு மகன் ஆட்சேபிக்கக் கூடிய வார்த்தைகளை விட்டு விட்டோமே என்றிருந்தது ஈஸ்வரனுக்கு..

அதற்காக அப்படியில்லேப்பா என்று விளக்கம் சொல்லவும் அவரால் முடியவில்லை.. அவரைத்தான் காத்து கருப்பு பிடிப்பதைப் போல ஈகோ பிடித்து வைத்திருந்ததே..

"நீங்க கரண்டியக் கீழே போடுங்கம்மா.." தாமோதரன் ஆணையிட்டான்..

"போட்டேன்.." அம்பிகா கரண்டியைத் தூக்கிக் கடாசினாள்..

"கிச்சனை விட்டு வெளியே வாங்கம்மா.." என்றான் தாமு..

"வந்தேன்.." குதித்துக் கொண்டு வெளியில் வந்தாள் அம்பிகா..

"நாம இப்ப வெளியே போகப் போறோம்.. ரெடியாருங்க.." தாமோதரன் சொன்னதும்..

"இதோ.." என்று ஓடவும் போனாள்..

'எங்கே போகப் போகிறாங்க..? சென்னைக்கா..?'

ஈஸ்வரனை கிலி பிடித்துக் கொண்டது... மகனைப் பார்க்கப் போக வேண்டுமென்று அனத்திக் கொண்டிருந்தவள் மகனைக் கண்டதும் புருசனை அம்போவென விட்டுவிட்டுக் கிளம்பி விடுவதா..?

"ஏண்டா.. நீ காஞ்சிபுரத்துக்கு எதுக்கு வந்த..?" மகனிடம் பாய்ந்தார்..

"இதென்னப்பா வம்பா இருக்கு.. என்னைப் பெத்தவங்களப் பாக்க வந்தேன்.." என்றான் தாமோதரன்..

"பாக்க வந்தியா.. பிரிக்க வந்தியா..?" ஈஸ்வரன் கேட்ட கேள்வியில்..

"எம்டனுக்கு இருக்க குசும்பப் பாத்தியாடா.." என்றாள் அம்பிகா..

தாமோதரன் சிரித்து விட்டான்.. அம்பிகாவிடம் சரளமாகப் பேசுகிறதைப் போல ஈஸ்வரனிடமும் அவன் பேசுவான்தான்.. அவர்தான் முகத்தைத் தூக்கிக் கொண்டு முகமூடியைப் போட்டுக் கொள்வார்..

"சிரிப்பக் கிளப்பாதீங்கப்பா.. நாம வெளியே போய் ஹோட்டலில சாப்பிட்டுட்டு வரலாம்ன்னுதான் அம்மாவைக் கிளம்பச் சொன்னேன்.. எப்பவோ ஒரு தடவை உங்களைப்

பாக்கவர்றேன்.. அப்பயும் உக்காந்து பேச முடியாம அம்மா கிச்சனில அடைஞ்சு கிடக்கனுமா..?"

"அதெல்லாம் இந்த எம்டனுக்குத் தெரியாது.."

"எம்டன்.. எம்டன்ங்கறிங்களே.. அந்த எம்டன் எதுன்னு உங்களுக்குத் தெரியுமாம்மா..?"

"எதுவா..? அது வில்லங்கம் பிடிச்ச மனுசனில் லையா..?" இல்லை என்ற தாமோதரன் எம்டனைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தான்..

"எம்டன்னா கில்லாடின்னு அர்த்தம்மா.. அந்தக் கில்லாடி மனுசனில்ல.. ஒரு போர்க் கப்பல்..!"

தாமோதரன் சொன்ன செய்தியில்..

"என்னது..??..!!" என்று விழி விரித்தாள் அம்பிகா..

"ஆமாம்மா.. 'எம்டன்'ங்கிறது போர்க்கப்பல்தான்.. முதலாம் உலகப் போர் 1914-ல ஆரம்பிச்சுச்சு... 1918-ல முடிஞ்சுச்சு.. அந்தப் போரில பிரிட்டிஷ்காரங்களுக்கு எதிரா ஜெர்மனி சண்டை போட்டுச்சு.. அந்தச் சண்டையில ஏகப்பட்ட போர்க்கப்பல்களை இறக்குச்சு.. அந்தப் போர்க் கப்பல்கள்ல ஒன்னுதான் 'எம்டன்..'"

"ஊம்..?"

முகவாயில் கை வைத்து அதிசயித்து கதை கேட்டாள் அம்பிகா.. ஈஸ்வரனுக்கும் 'எம்டன்..' கப்பலைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசையாகத்தான் இருந்தது.. அதுநாள் வரை 'எம்டன்' என்றால் எவனோ ஒரு ஜெகஜால கில்லாடி என்றுதான் அவரும் நினைத்திருந்தார்.. அந்த 'எம்டன்' மனிதனல்ல.. ஒரு போர்க்கப்பல்..! என்ற விவரத்தில் அவருக்கு சுவராஸ்யம் ஏற்ப்பட்டது..

ஈஸ்வரன் புராண சம்பந்தமான புள்ளி விவரங்களை அள்ளி வீசுவதில்தான் கை தேர்ந்தவர்.. இதுபோன்ற போர் சம்பந்தமான விவரங்களில் பூஜ்யம்..!

அதை வெளிப்படுத்திக் கொள்ளாமல் அம்மாவும் மகனும் வெட்டிக்கதை பேசுவதைப் போல அவர் முகத்தை வைத்துக் கொண்டார்.. அவர்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கெடுக்க வேண்டாமே என்றுதான் அவர் உட்கார்ந்திருக்கிறாராம்.. மற்றபடி.. மனைவியும் மகனும் பேசிக் கொண்டிருக்கும் கதையில் ஒன்றும் அவருக்கு இண்ட்ரெஸ்ட் இல்லையாம்..

மிதப்பான அவர் முகத்தை ஜாடையாகப் பார்த்துக் கொண்ட தாயும் மகனும் சங்கேதமாய் சிரித்து அவருக்கு கடுப்பை உண்டாக்கினார்கள்..

"1914-ம் வருசத்தில செப்டம்பர் மாதம் 22-ந் தேதி செவ்வாய்கிழமை.. செண்பகராமன்ங்கிற தமிழர் மீனவனைப் போல மாறுவேசத்தில சென்னைக் கடற்கரையில வந்து வேவு பார்த்திட்டுப் போறாரு.."

"இரு.. இரு.. செண்பகராமன்ங்கிற தமிழரா..?"

"ஆமாம்மா.."

"அவருக்கு ஜெர்மனியில என்ன வேலை..?"

"அவர் கப்பல் வேலைகளில எக்ஸ்பர்ட்டானவர்ம்மா.. முதல் உலகப் போரில ஜெர்மானிய போர்க்கப்பல்கள் எதிர்ப்பு நாடுகளுக்கு பெருத்த சேலன்ஜா இருந்ததுக.. எப்படி..? நம்ம செண்பகராமனோட திறமையினாலம்மா.. 1920-ல் நேதராஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்திய விடுதலைப் போராட்டத்தில குதிச்சப்ப.. நேதாஜியோட சேர்ந்துக்கிட்டு.. 'ஜெய்ஹிந்த்..!'ங்கிற கோசத்தை உருவாக்கியது செண்பகராமன்தான்.."

ஈஸ்வரன் அசட்டையாக கேட்பதைப் போல நடிக்க வேண்டும் என்பதை மறந்தே போனார்.. வெகு சிரத்தையாக அவர் கதை கேட்க ஆரம்பித்ததில் அம்பிகாவும், தாமோதரனும் ரகசியமாக சிரித்துக் கொண்டார்கள்..

"இந்தியா பிரிட்டிஷ்காரங்க வசத்தில இருந்துச்சு.. அவர்களுக்கு ஆட்டம் காண்பிக்க நினைச்சது ஜெர்மனி.. 1914-ல் செப்டம்பர் மாதம் 22-ந் தேதியில எஸ்.எம்.எஸ். எம்டன்ங்கிற ஜெர்மானிய போர் கப்பல் சென்னையை

நெருங்குச்சு.. கடைசி செகண்டில விசயம் தெரிஞ்ச இங்கிலீஷ்காரங்க சென்னை சிட்டியையே இருட்டுக்குள்ள முங்க வைச்சாங்க.."

"எப்புடிடா..?"

அம்பிகாவின் அப்பாவித்தனமான கேள்வியில் அவளை இருட்டுக்குள் மூழ்க வைத்து எழுப்பிக் காட்டினால் என்ன என்ற கோபம் வந்தது ஈஸ்வரனுக்கு..

தாமோதரன் அப்படியில்லை.. பொறுமையாக விளக்கம் சொன்னான்..

"லைட்டையெல்லாம் ஆஃப் பண்ணிட்டா சிட்டியே இருட்டுக்குள்ள முங்கிருமில்லம்மா..?"

"அட..! ஆமாம்.."

'புத்திசாலி..!' மனதுக்குள் மெச்சிக் கொண்டார் ஈஸ்வரன்..

மகன் இருக்கும் போது அதை வெளிப்படையாகச் சொல்ல அவர் என்ன முட்டாளா..? எல்லாத் தாய்மார்களுக்கும் மகன்கள்தான் படைத் தளபதிகள் என்பதை அறியாத கூமுட்டையா அவர்..? அப்படி படைபலத்துடன் இருக்கும் தாயிடம் நிராயுதபாணியான தகப்பன் நேரடியாக மோதுவானா..?

"புல் தடுக்கி பயில்வான்களும் இந்த உலகத்தில இருக்கிறாங்கங்கிறத வெள்ளைக்காரங்க புரூவ் பண்ணினாங்க.. அத்தனை விளக்குகளையும் அணைச்சு வைச்சவங்க.. ஹை கோர்ட்டு விளக்கை மட்டும் அனைக்காம விட்டுட்டாங்க.."

"ஏண்டா..?"

"அப்போ ஹைகோர்ட்டு லைட்டுதான் கலங்கரை விளக்கமா இருந்துச்சும்மா.. இருட்டில வர்ற கப்பல்களுக்கு வழிகாட்டற கலங்கரை விளக்கு 'எம்டன்..' கப்பலுக்கும் வழியைக் காட்டினதில் குறிபார்த்து குண்டு வீசிட்டான் ஜெர்மன்க்காரன்.."

ஈஸ்வரனுக்கு கண் முன்னால் அந்தச் சம்பவம் நடப்பதைப் போலவே இருந்தது.. அவர் உடல் சிலிர்த்தது..

அத்தியாயம் - 74

மெல்லக் கொன்றது விசமல்ல..

நாஜிகளின் துரோகம்..

நினைத்துப் பார்க்கையில்

நெஞ்சம் குலுங்குது....

அம்பிகாவுக்கும் அதே உணர்வு ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்பியவராக அவள் முகம் பார்த்தார்.. அதே நொடியில் அவளும் அவரை பார்த்து வைத்ததில் திருடனுக்கு தேள் கொட்டியதைப் போல திருட்டு விழி விழித்தபடி அவசரமாக பார்வையைத் திருப்பிக் கொண்டார்..

'இந்த மனுசன் இருக்காரே..'

பற்களை நறநறத்த அம்பிகாவும் பார்வையைத் திருப்பி மகனைப் பார்த்தாள்.. அவன் கதையைத் தொடர்ந்தான்..

"குத்து மதிப்பா குண்டு வெடிச்சதில பெரிசா சேதமில்லை.. 130 தடவை குண்டு வெடிச்சது.. ஹார்பர்ல இருந்த எண்ணைக் கிடங்கு சிதறி வெடிச்சுச்சு.. பிடிக்கப் போன பிரிட்டிஷ் போர் கப்பல்ககிட்டயிருந்து எம்டன் எஸ்கேப் ஆகிருச்சு.."

"அதான் கில்லாடியான ஆளுகள 'எம்டன்'னு சொல்றாங்களா..?"

"யெஸ் மம்மி.. எம்டனை பிரிட்டிஷ் கடற்படையில பிடிக்க முடியலை.. 1908-ல அதை உருவாக்கினாங்களாம்.. 20 பீரங்கிகள் எம்டன் கப்பலிலே இருந்ததாம்.. 30

போர்க் கப்பல்களை ஸ்வாஹா பண்ணிருச்சாம்.. 'எம்டன்' கப்பல்ன்னா இங்கிலீஷ்காரனுக்கு சிம்ம சொப்பனமாம்.."

"அதுக்காகவே அதுக்கு பத்தி பொருத்தி வைச்சு சூடம் காட்டி சாம்பிராணிப் புகை போடனும்டா.."

"சிட்னி பக்கம் கொக்கோலஸ் தீவுப்பகுதிக்குப் போனா நீங்க எம்டன் கப்பலுக்கு சூடம் ஏத்தி சாம்பிராணி காட்டலாம்.. ஏன்னா 1914-ம் வருசம் நவம்பர் மாதத்தில எம்டன் கப்பல சுட்டுக் கடலில முழ்கடிச்சுட்டாங்க.. இன்னமும் 'எம்டன்' கப்பலோட முகப்புப் பகுதி தண்ணீருக்கு வெளியே தெரிந்து கொண்டிருக்கு.. அதில் ஜெர்மன் நாட்டுக்கொடி கம்பீரமாக பறந்து கொண்டிருக்கு.."

"என்னமோ போடா தாமு.. இன்னைக்கு நாம நிம்மதியா வாழ்ந்துக்கிட்டு இருக்கோம்.. ஒரு காலத்தில இந்த நிம்மதிய வெள்ளைக்காரங்ககிட்ட அடகு வைச்சிட்டு அடிமையாயில்ல வாழ்ந்திருக்கோம்..?"

மெய்தான் என்று தாமோதரன் வாயால் சொல்ல வில்லை.. அவனது முகத்தின் இறுகிய தசை நார்கள் அதைச் சொல்லின.. இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பற்றிப் பேசினால் அவன் இவ்வாறுதான் உணர்ச்சிப் பிழம்பாக மாறிவிடுவான்.. விட்டால் துப்பாக்கியைத் தூக்கி 'டுமீல்' என்று சுட்டு விடுபவனைப் போல தெறிப்பான்..

"இது நன்றி கொன்ற உலகம்மா.. செண்பகராமன் தேர்ந்த தொழில் நுட்பத்தோட இருந்தாரு.. முதல் உலகப் போரில அவரோட தொழில் திறமையினாலதான் ஜெர்மானியக் கப்பல் படை.. மத்த நாடுகளோட கப்பல் படையை ஒரு கை பார்த்துச்சு.. முதல் உலகப் போர் முடிஞ்சதுக்குப் பின்னால செண்பகராமனுக்கு நேதாஜி சுபாஷ் சந்திர போஸோட அறிமுகம் கிடைச்சுச்சு.. அவர் இந்திய தேசிய ராணுவத்தில ஐக்கியமானாரு.. 'ஜெய் ஹிந்த்' ங்கிற கோசத்தை உருவாக்கினதில செண்பக ராமனுக்கு முக்கிய பங்கிருந்துச்சு.. 'ஜெய் ஹிந்த்'ன்னு சொல்லும் போதே நமக்குள்ள ஒரு உத்வேகம் வரும்மா.. அது தாரக மந்திரம்..!

அந்த 'ஜெய் ஹிந்த்'ங்கிற தாரக மந்திரத்தை நேதாஜிக்கு அறிமுகப் படுத்தினது செண்பக ராமன்தான்.."

"அப்பேற்பட்ட மனுசருக்கு ஜெர்மனி நன்றிக்கடன் பட்டிருக்கு.."

"நீங்க வேற.. அவனுகதான் செண்பகராமனுக்கு விசம் வைச்சுக் கொன்றாங்க.."

"என்னடா சொல்கிற..?"

அம்பிகாவுடன் ஈஸ்வரனும் அதிர்ந்து விட்டார்.. நன்றி கெட்ட உலகம் என்று சொல்லாமல் 'நன்றி கொன்ற உலகம்..' என்று ஏன் தாமோதரன் சொன்னான் என்று அப்போதுதான் அவர்களுக்கு விளங்கியது..

"என்னத்தம்மா சொல்லச் சொல்கிறீங்க.. இங்கிலீஷ் காரங்களில இங்கிலாந்துக்காரன் வேற.. ஜெர்மன்காரன் வேறன்னு இல்லேம்மா.. ரெண்டு நாட்டுக்காரனுக்குமே மண்டைக்கனம் ஜாஸ்தி.. ஹிட்லர் ஒரு தடவை 'இந்தியர்களுக்கு நிர்வாகத் திறமை இல்லை.. இவங்க சுதந்திரம் வாங்கி என்ன செய்யப் போகிறாங்க..?'ன்னு பேசி வைச்சிட்டார்.. ஜெர்மனியில திறமையான உழைச்சுக்கிட்டு இருந்த செண்பகராமனுக்கு கோபம் வந்திருச்சு.. அவர் ஹிட்லர் சொன்னது தப்புன்னு ஆதாரங்களை அடுக்கிப் பேசி.. ஹிட்லரை மன்னிப்புக் கடிதம் எழுத வைச்சிட்டாரு.."

"அடேங்கப்பா..! ஹிட்லர்ன்னா உலகமே நடுங்கியிருக்கு.. அந்த ஹிட்லரையே மன்னிப்புக் கடிதம் எழுத வைச்சு எழுத்து மூலமா மன்னிப்புக் கேட்க வைச்சிருக்காரா நம்ம தமிழர்..!"

"ஆமாம்மா.. அதை ஜெர்மானிய நாஜிக்கள் மறக்கலை.. அவங்க செண்பகராமனோட சாப்பாட்டில மெல்லக் கொல்லும் விசத்தை வைச்சுட்டாங்க.. தான் சாகப் போகிறோம்ன்னு செண்பகராமனுக்குத் தெரிஞ்சிருச்சு.. தன்னோட வொய்ப் லட்சுமிபாய் கிட்ட அவரோட அஸ்திய இந்தியாவுக்கு கொண்டு வந்து கரமனை ஆத்தில கரைத்து

நாஞ்சில் வயல்களில தெளிக்கனும்னு கேட்டுக்கிட்டாரு.. லட்சுமிபாய் அப்படியே செய்கிறேன்னு வாக்குக் கொடுத்திருக்காங்க.. அடுத்த கொஞ்ச நாளிலேயே செண்பகராமன் இறந்து போனாராம்.. அவரோட அஸ்தியோட லட்சுமி பாய் 1936-ல இந்தியாவுக்கு திரும்பியிருக்காங்க.. 1966-லதான் இந்திய கவர்ண் மென்டுக்கு செண்பகராமனோட கடைசி ஆசையை நிறைவேத்தனும்னு மனசுவந்திருக்கு.. செண்பகராமனின் அஸ்தியை கரமனை ஆத்தில கரைச்சுட்டு மீதியை நாஞ்சில் வயல்களில தெளித்தாங்க.."

அம்பிகாவின் முகத்தில் சோகம் ததும்பியது..

அன்று முழுவதும் பெற்றவர்களுடன் இருந்தான் தாமோதரன்.. மாலையில் குடும்பமாக அவர்கள் காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரர் கோவிலுக்குச் சென்றார்கள்.. அம்பாளையும், ஈஸ்வரனையும் தரிசனம் செய்துவிட்டு, தீபாதரனை ஒளியைத் தொட்டுக் கண்களில் ஒற்றி குங்கும, விபூதி பிரசாதத்தைப் பெற்றுக் கொண்டு சன்னதியை வலம் வந்தார்கள்..

தாமோதரன் அம்பிகாவுடன் சன்னக்குரலில் பேசிக் கொண்டே வந்தான்.. தாய்க்கும் மகனுக்குமான அந்தப் பிணைப்பில் ஈசுவரன் பொறாமைப்பட்டார்.. அவரிடம் மட்டும் ஏன் அவன் இந்த நெருக்கத்தைக் காண்பிக்க மாட்டேன் என்கிறான்...?

அவர்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்தவர் களில் ஒரு பெண்மணி யதேச்சையாகத் திரும்பிப் பார்த்து விட்டு...

"தாமு..." என்றபடி நின்று விட்டாள்..

அம்பிகாவுடன் ரகசியம் பேசி உரத்த குரலில் சிரித்துக் கொண்டிருந்த தாமோதரன் அந்தப் பெண்மணியைக் கவனிக்கவில்லை...

'எனக்குத் தெரியாம இதுக மட்டும் ரகசியம் பேசிச் சிரிக்குதுக..' ஈஸ்வரனுக்கு கோபமான கோபம் வந்தது...

"தாமு...." உரத்த குரலில் அதட்டினார்..

அந்த அதட்டல் அந்தப் பெண்மணியின் அழைப்பை தாமோதரன் கவனிக்கவில்லை என்பதற்கானதல்ல என்பதை அவரின் ஆழ்மனமே அறியும்...

அவரின் அதட்டலில் தடபுடா என்று தாமோதரன் திரும்பிப் பார்த்து விடவில்லை.. அம்மாவுடனான ஆழ்ந்த உரையாடலை சன்னக் குரலில் பேசி முடித்து விட்டு... அதற்கு முத்தாய்ப்பாக உரத்த குரலில் சிரித்தும் வைத்து விட்டு வெகு சாவாதானமாக திரும்பி..

"என்னப்பா...?" என்றான்..

'எதுக்கு இப்படிச் சிரிக்கிறான்..?'

அதன் காரணம் எதுவாக இருக்கக்கூடும் என்று தலை முடியைப் பிய்த்துக் கொண்டார் ஈசுவரன்.. மகனிடம் அதைக் கேட்டு விடவும் அவரது சுயமரியாதை இடம் கொடுக்கவில்லை.. அவரையே ஆட்டத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை.. அந்த ஆட்டத்தைப் பற்றிக் கேட்க முடியுமா...?

"அங்கே பாருடா... யாரு உன்னைக் கூப்பிடறாங்கன்னு.."

தாமோதரனை அழைத்தபடி நின்றிருந்த பெண்மணியைச் சுட்டிக் காட்டினார் ஈசுவரன்...

தகப்பனார் சொல்கிறார் என்பதற்காகவே எவருக்கு வந்த விருந்தோ என்று பொன்னே.. பூவே என்று மிக மெதுவாக கழுத்தைத் திருப்பிப் பார்த்த தாமோதரன்..

"ஆண்ட்டி..." என்று முக மலர்ச்சியுடன் கூவினான்..

'அம்மான்னாலும் சரி.. ஆண்ட்டின்னாலும் சரி.. சத்தம்தான்.. அப்பான்னா மட்டும் பயல் ஊமை வேசம் கட்டறான்...' மனதுக்குள் குமைந்தார் ஈசுவரன்..

தாமோதரன் இரண்டே எட்டில் கூப்பிட்ட பெண்மணியை அணுகி அவள் பாதம் தொட்டு நிமிர...

"இந்தப் பதவிச நம்மகிட்டக் காட்டறானாடி...?" அம்பிகாவிடம் ஈசுவரன் கேட்க.. அவரை காட்டமாக முறைத்தாள் அம்பிகா..

'மகனைச் சொன்னா இவ உக்கிர காளியாகிருவாளே..'

"பேசாம இருங்க.. எனக்கு நல்லா வந்திரும் வாயில.. கோவிலாச்சேன்னு பாக்கறேன்.. யாருங்க அவங்க..?"

"சித்தார்த்தனோட அம்மா நிருபமா...!"

"தெரியுதில்ல.. அவங்ககிட்ட இன்னைக்கு நேத்தா அவன் மரியாதை காட்டறான்.. விவரம் தெரிந்த வயசில இருந்து மரியாதையாத்தானே பேசிப் பழகறான்...?"

ஈசுவரன் வாயை மூடிக் கொண்டார்.. அம்பிகா மரியாதையான சிரிப்புடன் நிருபமாவை அணுகினாள்..

"நல்லா இருக்கீங்களா..?" என்று நலம் விசாரித்தாள்..

"ரொம்ப நல்லா இருக்கோம்.. நீங்க எப்படி இருக்கீங்க..?"

"உங்களைப் போலச் சொல்ல எனக்கும் ஆசைதான்.. என்ன பண்றது..? சொல்ல முடியலையே.. நான் வாங்கி வந்த வரம் அப்படி..."

ஈசுவரனை முறைத்தபடி சொன்னாள் அம்பிகா.. அதை கண்டு கொள்ளாமல் சிரித்தாள் நிருபமா..

"தனியாவா வந்திருக்கீங்க ஆண்ட்டி..?"

"இல்லே தாமு.. நீரஜாவும் அவளோட டாடியும் வந்திருக்காங்க..."

நிருபமா கை தட்டியதில் விவேகானந்தனும் நீரஜாவும் திரும்பிப் பார்த்தார்கள்.. தாமோதரனின் இதயம் 'லப் டப்' என்று அடித்துக் கொண்டது.. பக்கத்தில் இருப்பவர்களை மறந்து 'பறக்காவெட்டி' போல அவன் நீரஜாவைப் பார்த்து வைக்க.. ஆழ்ந்த பார்வையுடன் அருகில் வந்தாள் நீரஜா..

"என்னம்மா கோவிலுக்கு வந்தியா..?" அபத்தமாக வினவி வைத்தார் ஈசுவரன்..

"இல்ல அங்கிள்... லைப்ரரிக்கு வந்தேன்..." சிரிக்காமல் பதில் சொன்னாள் நீரஜா..

'இவனோட சிநேகிதன் கூடப்பிறந்தது எப்படியிருக்கும்..? இவனைப் போலதானே இருக்கும்..?' அதற்கும் மகன் மீது குற்றம் கண்டு பிடித்தார் ஈசுவரன்.

விவேகானந்தன் சித்தார்த்தனின் கம்பெனி நிலவரத்தை விசாரிக்க ஆரம்பித்தார்.. அவர் கேட்ட விவரங்களை விரல் நுனியில் வைத்திருந்து சமர்ப்பித்த தாமோதரனை சிலாகித்து பார்த்து வைத்தாள் நீரஜா..

அத்தியாயம் - 75

ஊரடங்கும் வேளையிலே..

உனது முகம் நெஞ்சினிலே..

துப்பாக்கி முழக்கத்திலே..

தோன்றியது தேசியகீதம்..!

"காஞ்சிபுரத்துக்கு எப்ப வந்த..?"

"காலையிலதான் ஆண்ட்டி.."

"காலையில வந்திருக்க.. இன்னும் நம்ம வீட்டுப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்கலை.. என்னப்பா இது..?"

அம்பிகா சடைத்துக் கொண்டாள்.. ஆழ்ந்த பார்வையுடன் நின்றிருந்த நீரஜா..

"அது நம்ம வீடாச்சே மம்மி.. இவர் வீடில்லையே.." என்று சொன்னாள்..

சட்டென்று நிமிர்ந்து பார்த்த தாமோதரன் அவளை இமைக்காமல் பார்த்து வைத்தான்.. நீரஜாவின் இதழில் உதித்த குறுஞ்சிரிப்பும்.. விழிகளில் தெறித்து விழுந்த மின்னலும்.. அவர்களுக்குள் ஏதோ ஓர் நூதன இழை ஓடிக் கொண்டிருப்பதை சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பித்தன..

'ரொம்ப நாளாவே ஒரு மார்க்கமாத்தான் பார்த்துக்குதுக..'

அதற்கு மேல் நினைக்கக் கூட யோசனையாக இருந்தது ஈஸ்வரனுக்கு.. விவேகானந்தன் ராஜபரம் பரையைச் சேர்ந்தவர்.. நிருபமாவும் அப்படித்தான்.. காஞ்சிபுரத்தில் இருக்கும் அவர்களின் சொத்துக் கணக்குகளை சரி பார்க்க வேண்டுமென்றால் ஒருநாள் போதாது..

'இவன் என்னடான்னா அண்ணாந்து வானத்தைத் தான் பார்ப்பேன்னு அடம் பிடிக்கிறானே..'

ஏணி வைத்தாலும் எட்டாத தூரத்திலிருக்கும் விவேகானந்தனின் செல்வப் புதல்வியின் மீது ஈஸ்வரன் பெற்ற புதல்வன் அவ்வபோது மையல் பார்வைகளை வீசுவதன் மர்மம் என்னவென்று ஈஸ்வரனுக்கு பிடிபட மாட்டேன் என்றது..

அவர் கண்ட காட்சியை விவேகானந்தனும் நிருபமாவும் காணாமல் இருந்திருப்பார்களா என்ற அடுத்த மர்மம் அவர் மூளையைக் குடைந்தது..

எதுவுமே நடக்காததைப் போல வெகு இயல்பாக அவர்கள் தாமோதரனிடம் உரிமையுடன் பேசிப் பழகிய விதத்தில் அவர்கள் உள்ளத்தில் என்ன இருக்கிறது என்று தெரியாமல் பைத்தியம் பிடித்து விடும் நிலைமைக்கு ஆளானார் ஈஸ்வரன்..

'பணக்காரங்க மனசில என்ன நினைப்பிருக்குன்னு கண்டு தொலைக்க முடியாதே.. என்னப்பனே.. ஏகாம்பரேஸ்வரா..! என் மகனுக்கு பிடிச்ச பொண்ணு பொண்டாட்டியா வந்து வாய்க்கனும்.. அது இந்த நீரஜாவாக இருந்தாலும் சரி..'

ஏழைத் தகப்பனால் இதைத்தான் செய்ய முடியும்.. என் மகனுக்கு உன் பெண்ணைப் பிடித்திருக்கிறதைப் போலத் தெரிகிறது.. பெண்கொடு என்று கேட்கவா முடியும்..?

வெகுநேரம் அவர்கள் பேசிக் கொண்டு நின்றதில் பலத்த கால்வலிக்கு ஆளானார் ஈஸ்வரன்.. சிரித்த முகமாக நின்றிருந்த அம்பிகாவை பார்த்தவருக்கு..

'இவளுக்கு மட்டும் கால் வலிக்காதா..?' என்ற ஆச்சரியம் உண்டானது..

அவள்தான் அப்படியென்றால்.. அங்கிருந்த மற்ற நால்வரும் அதைப்பற்றிய பிரக்ஞையே இல்லாதவர்களைப் போல.. அசையாமல் நின்றபடி சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள்..

'அட்லீஸ்ட்.. காலை மாத்தியாவது நிக்குதுகளா..?' உற்றுப் பார்த்தார் ஈஸ்வரன்..

ஊஹூம்.. அவர்கள் கால்களை அசைக்கவே இல்லை..

'என்னங்கடா இது..'

ஈஸ்வரனின் அங்கலாய்ப்பை உணர்ந்தவர்களைப் போல ஒருவழியாக அவர்கள் பேச்சை முடித்துக் கொண்டார்கள்..

"வீட்டுக்கு வா தாமு.."

"இப்பத்தான் பார்த்து பேசிட்டோமே.. இன்னொரு நாள் வர்றேன் அங்கிள்.. நைட்டே சென்னைக்கு ரிட்டர்ன் ஆகிரனும்.. ஏகப்பட்ட மெயில்லை செக் பண்ணி ஒரு முடிவெடுக்க வேண்டியிருக்கு.. ஹோல் நைட் கண் விழிச்சாலும் வேலை முடியாது.."

"என்னவோ போ.. நீயும் சித்தார்த்தனும் காஞ்சிபுரத்திலதான் உங்களோட வேர் இருக்குங்கிறதை மறந்துட்டு சென்னையே கதின்னு இருக்கறிங்க.."

விவேகானந்தன் என்னவோ இதை இயல்பாகத்தான் சொல்லி வைத்தார்... அந்த வார்த்தைகளில் தாமோதரனுக்குள் ஏதோ ஓர்விதமான சிலிர்ப்பு உண்டானது.. நீரஜாவைப் பார்த்தான்.. அவள் கோவில் கோபுரத்தில் எதையோ தேடுவதைப் போல பார்வையால் துழாவிக் கொண்டிருந்தாள்.. அவன் பார்ப்பதை உணர்ந்து பார்த்தவளின் விழிகளில் பரிதவிப்பு தெரிந்தது..

இதுதான்.. இந்த இனம் தெரியாத ஈர்ப்பும், சொந்தமும்தான்.. அவனை அவளிடம் கவர்ந்து இழுத்தது..

'இதைப் போலதான் சித்தார்த்தனும் யாமினிகிட்ட ஃபீல் பண்றானோ..'

அந்த நினைவுடன் சென்னை திரும்பியவனால் வழக்கம் போல யாமினியிடம் கடுமை காட்ட முடிய வில்லை.. சில சமயங்களில் அவள் சித்தார்த்தனின் ரூமிற்கு ஃபைலில் சைன் வாங்க வரும்போது அங்கேயிருக்கும் தாமோதரன் அவளிடம் சிரித்துப் பேசக்கூடச் செய்தான்.. ஓர்நாள்

யாமினி நீட்டிய ஃபைலில் கையெழுத்துப் போடும்போது.. தாமோதரனைப் பார்த்த சித்தார்த்தன்..

"இந்தக் கம்பெனியப் பத்தி விசாரிடா தாமு.. மன்னார் அண்ட் கம்பெனி போல டுபாக்கூர் கம்பெனியோன்னு தோணுது.." என்றான்..

"உனக்கு எல்லாத்திலயும் சந்தேகம்தாண்டா.. இந்தியாவுக்கு அறவழியில போராடி விடுதலை வாங்கிக் கொடுத்தாங்க என்கிறதையே இல்லைன்னு சொல்ற ஆளாச்சே நீ.." என்றான் தாமோதரன்..

"கத்தியின்றி ரத்தமின்றி சுதந்திரம் பெற்றோம்ங்கிற தெல்லாம் சும்மாடா தாமு.. மறைக்கப்பட்ட இன்டியன் ஹிஸ்டரியைக் கரைச்சுக் குடிச்சுட்டுப் பேசறவங்க பேச்சைக் காதில வாங்க முடியாதுடா..?"

சிலகாலமாக தாமோதரன் இணக்கமாக பேசிவருவதால் தைரியம் பெற்ற சித்தார்த்தன் ஜாடையாக யாமினியைப் பார்த்தபடி சொன்னான்.. அதை ரசித்து நமட்டுச் சிரிப்பு சிரித்தான் தாமோதரன்.. யாமினிக்கு வேகம் வந்தது.. அவளுக்கு சரித்திரம் தெரியவில்லை என்று சித்தார்த்தன் எள்ளி நகையாடுவதைப் போல அவள் உணர்ந்தாள்..

"வரலாறில மறைக்கப்பட்ட வரலாறுன்னு ஒன்னு இருக்கா சார்..?" என்று சித்தார்த்தனிடம் சண்டைக்குப் போனாள்..

'ஆஹா..!' என்று ஆகிவிட்டது தாமோதரனுக்கு.. யாமினியும் சித்தார்த்தனும் மோதிக் கொள்வது அவனுக்குக் கண்கொள்ளாத காட்சியாக இருந்தது.. தீவிரமாக அவர்கள்

சண்டைபோட்டுக் கொண்டதில் அவன் மகிழ்ந்து போனான்..

'இப்படித்தான் இருக்கனும்..' கன்னத்தில் கை வைத்து மோதலை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தான்..

"ஷ்யூர்.." என்றான் சித்தார்த்தன்..

"என்ன ஷ்யூர்..? விளக்கம் சொல்லாம வெறும் ஒத்தை வார்த்தையில தப்பிச்சுரலாம்ன்னு நினைச்சிரக் கூடாது.."

"அந்த நினைப்பு எனக்கில்ல.. ஐ.என்.ஏ வோட பங்கு இம்பார்டண்டானது.. நேதாஜியோட ஃபோர்சைக் கண்டு பிரிட்டிஷ் கவர்ண்மெண்டு பயந்ததுங்கிறதுதான் உண்மை.. அதனாலதான் அவங்க இந்தியாவை விட்டு வெளியேறுகிற டிசிசனை எடுத்தாங்க.."

"நேதாஜிதான் சுதந்திரத்துக்கு பாடுபட்டார்.. காந்தி எதுவும் செய்யாம ராட்டையில நூல் நூற்றுக்கிட்டு இருந்தாருங்கறிங்களா..?"

"ஒரு வகையில அப்படித்தான்.. உலகம் பூராவும் சுத்தின நேதாஜி வெளிப்படையா அதைச் செய்யலை.. யாருக்கும் தெரியாம வீட்டுக்காவலில இருந்து தப்பினாரு.. ஒளிஞ்சு மறைஞ்சு.. நீர் மூழ்கிக் கப்பல்ல எல்லாம் ஐர்ன் பண்ணி வெளிநாடுகளோட ஆதரவைச் சம்பாதிச்சாரு.. ஐ.என்.ஏ வோட துப்பாக்கி எத்தனை வெள்ளைக் காரங்களை கொன்று குவிச்சதுன்னு தெரியுமா..? அவர் வெள்ளைக்காரனோட முகவாயைப் பிடித்துக் கெஞ்சி.. எங்க நாட்டை எங்களுக்கு விட்டுக் கொடுத்திருங்க.. உங்க ஊரைப் பார்த்து ஓடிப் போயிருங்கன்னு கேட்டுக்கிட்டு நிற்கலை.. ஆர்மி ஃபோர்ஸை ஃபார்ம் பண்ணினார்.. பிரிட்டிஷ் கவர்ண்மென்டை ஆர்மி ஃபோர்ஸோட எதிர்த்த இந்தியன் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்தான்.."

"இந்தியா அமைதிப் பூங்கா சார்.."

"அதுக்கு..?"

"அஹிம்சைதான் வெற்றிக்கான வழின்னு காந்தி நினைச்சதில என்ன தப்பிருக்கு..?"

"ஜாலியன் வாலாபாக் படுகொலையை கண்ணால் பார்த்த பின்னாடியும் அவர் அஹிம்சையைப் பத்திப் பேசினதுதான் எனக்குப் புரியலை.. அந்த அஹிம்சையை வெள்ளைக்காரனிடம் மட்டும்தான் அவர் காண்பிச்சார்.. இந்தியர்கள்கிட்டக் காண்பிக்கல.. பகத்சிங்கோட தூக்குத் தண்டனையை காந்தி நினைச்சிருந்தா தடுத்து நிறுத்தியிருக்கலாம்ன்னு அப்போக் காங்கிரஸ் கமிட்டியில இருந்தவங்களே பேசியிருக்காங்க.. பகத்சிங்குக்கு ஆதரவா காந்தி வெள்ளைக்கார இர்வின் பிரவுகிட்டப் பேசனும்னு எதிர்பார்த்தாங்க.. எங்கே..? காந்தி - இர்வின் ஒப்பந்தம்ன்னு ஒப்பந்தம் போடத்தான் காந்திக்கு யோசனை வந்தது.. பகத்சிங்கைக் காப்பாற்ற அவர் யோசிக்கலை.. உத்தம்சிங் கதையிலும் இப்படித்தான்.. ஜெனரல் டயரை எப்படிக் சொல்லலாம்ன்னு ஸ்ட்ராங்கா கண்டிச்சு அறிக்கை விட்டவர்தான் காந்தி.. அதை நேதாஜி ஆதரித்ததையும் அவரால ஏத்துக்க முடியலை.."

"வன்முறை வேண்டாம்ன்னு சொன்னா அது தப்பா..?"

"வன்முறைக்கு வன்முறைதானே தீர்வு..? காட்டுத் தீயை அணைக்க.. அதுக்கு எதிரான காட்டுத்தீயாலதான் முடியுமாம் அதைப் போலதான் இதுவும்.. நேதாஜி இதைத்தான் செய்தார்.."

"சும்மா நேதாஜி.. நேதாஜின்னு சொல்லாதீங்க.. அவர் செய்கையை காந்தி ஆதரிச்சிருந்தா அவர் ஜப்பானைக் கொண்டு வந்து இந்தியாவின் நடுப்பகுதியில் நிறுத்தியிருப்பார்.. நல்லவேளை.. இந்தியா தப்பிச்சது.."

"ஊஹூம்..? நாம என்ன செய்தோம்..? ரஷ்யாவைக் கொண்டு வந்து இந்தியாவின் நடு வீட்டில் வைக்கலையா..?"

"இது நட்பு உடன்படிக்கை..!"

"அது மட்டும் என்ன..?"

தாமோதரனுக்கு கைதட்ட வேண்டும் போல இருந்தது..

அத்தியாயம் - 76

புறக்கணிப்பை விட கொடிய தண்டனை..

இவ்வுலகில் ஏதுமில்லை...

அன்று சிந்திய ரத்தத்திற்கு

என்ன கைம்மாறை செய்திட்டோம்..?

"அதென்ன..? எதுக்கெடுத்தாலும் நேதாஜி.. நேதாஜிங்கறிங்க.. அவர்தான் வீரர்.. மத்தவங்கள்ளாம் சோடையா..? அப்ப பகத்சிங்கையும், உத்தம் சிங்கையும் என்னன்னு சொல்வீங்க..?"

யாமினி முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.. அதைப் பார்க்க சித்தார்த்தனுக்கு வேடிக்கையாக இருந்தது.. தாமோதரன்தான் ஏற்கனெவே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தானே..

"உங்களுக்கு ஒன்னும் தெரியாதுங்கிறது இப்ப புரூவ் ஆகிருச்சா..?"

"என்னது..?"

"ஹிஸ்டரியில சொல்றேங்க.."

சித்தார்த்தனின் கண்கள் சிரித்தன.. அவன் அதைத்தான் சொல்லியிருப்பானா என்பதில் யாமினிக்கு சந்தேகம் இருந்தது.. தாமோதரனின் முன்னிலையில் அந்தச் சந்தேகத்தை தெளிவு படுத்திக் கொள்ள முனையாமல்..

"அதானே பார்த்தேன்.." என்று ஏற்றுக் கொண்டாள்..

"பகத்சிங்கும், உத்தம்சிங்கும் சுத்த வீரர்கள்.. சமரசமற்ற போராளிகள்ன்னு நேதாஜி பாராட்டினார்.. காந்திதான்

கோபப்பட்டு அவங்களை வன்மையாக் கண்டிச்சார்.."

"இதையே எத்தனை தரம்தான் சொல்லுவீங்க..?"

"எத்தனை தடவை சொன்னாலும் நீங்க மறந்து போயிடறீங்களே.."

"காந்தி ஆன்மீகத்தின் அடையாளம்.."

"நேதாஜி விவேகானந்தரை தன்னோட மானசீக குருவா ஏத்துக்கிட்டவர்.. அரசியலுக்கு வருகிறதுக்கு முன்னாலேயே துறவியாகனும்ங்கிற ஆசையில வீட்டை விட்டு வெளியேறி சுவாமி பிரம்மானந்தரைத் தேடிப் போனவர்.. அவரோட அருளாசியோட திரும்பி வந்தவர்.."

"இவ்வளவுதானா..? இன்னும் இருக்கா..?"

"நிறைய இருக்குங்க.. இந்து ஆன்மீகத்தின் தாக்கம் இருந்தாலும் நேதாஜிகிட்ட மதவாதமோ, பழமைவாதமோ இருந்ததில்லை.. எமிலிங்கிற ஆஸ்திரிய நாட்டில் பிறந்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த பெண்ணைத் தான் மேரேஜ் பண்ணிக்கிட்டார்.. அவரை சமதர்வாதின்னு சொல்லிக்குவார்.."

ஒன்றைக் கவனித்தாள் யாமினி.. நேதாஜி சுபாஷ் சந்திரபோஸைப் பற்றிப் பேசும்போது சித்தார்த்தனின் முகம் ஒளிர்ந்தது.. காந்தியைப் பற்றிய பேச்சு வரும் போது தாமோதரனின் முகம் ஒளிர்ந்தது..

காலம் காலமாக நேதாஜியுடன் பழகியவனைப் போல அவரைப் பற்றிய அனைத்து விவரங்களையும் பிட்டுப் பிட்டு வைத்தான் சித்தார்த்தன்.. அவனுடன் வாதிட்ட அந்தப் பொழுது இன்பமானதாக யாமினிக்கு இருந்தது..

அந்த இன்ப உணர்வுகளுடன் அவள் வேலைகளைக் கவனித்தாள்.. அன்று முழுவதும் அவளிடத்தில் அந்த உற்சாகம் நீடித்தது.. சித்தார்த்தனிடம் கையெழுத்து வாங்கப் போன போது அவனும் அவளைப் போலவே உல்லாச மனப்பான்மையுடன் பாரதியின் பாடலை முணுமுணுத்துக் கொண்டருந்தான்..

"நின்னையே ரதியென்று..

நினைக்கிறேனடி கண்ணம்மா..

தன்னையே சகியென்று

சரணம் எய்தினேன்..

பொன்னையே நிகர்த்த மேனி

மின்னையே நிகர்த்த சாயல்..

பின்னையே நித்ய கன்னியே..!

கண்ணம்மா.."

கையெழுத்திட்டபடி அவன் அவளைப் பார்த்தான்.. தாமோதரன் அறையில் இல்லையென்ற சுதந்திர உணர்வுடன் அவளும் அவனைப் பார்த்தாள்..

அண்ணலும் நோக்கி.. அவளும் நோக்கியதில்.. கண்ணோடு கண் கலந்து.. ஏதோ ஒரு மாய உலகிற்கு அவர்களை இட்டுச் சென்றது..

கம்யூட்டரில் விழி பதித்திருந்த தாமோதரன் இன்டர் நெட்டில் வெளியாகியிருந்த செய்தியொன்றைப் படித்து விட்டு..

"இவங்களுக்கு வேற வேலையே இல்லை.." என்று அலுத்துக் கொண்டான்..

சித்தார்த்தனிடம் அன்றைய எங்கேஜ்மெண்டுகளை நினைவு படுத்த வந்த யாமினி புரியாமல் ஓர் பார்வை பார்த்து விட்டுப் பேசாமல் இருந்தாள்.. அவளால் கேட்க முடியாததை..

"யாரைடா சொல்ற..?" என்று சித்தார்த்தன் கேட்டு வைத்தான்..

"நேதாஜியோட தொடர்பில இருக்கிற அத்தனை ஃபைல்ஸையும் வெளியிடனுமாம்.. இதெல்லாம் நடக்கற காரியமா..?"

"ஏன் நடக்காது..? தகவல் அறியற உரிமைச் சட்டம் இதுக்கும் பொருந்தும்தானே..?"

"எல்லாத்துக்கும் பொருந்தாதுடா சித்தார்த்.. ஹைலி காண்பிடென்ஸியல்ன்னு சிலது இருக்கும்.. அதையெல்லாம் வெட்ட வெளிச்சமாக்கி விட முடியாது.."

"என்னவோ போ.. இவங்களும் நேதாஜியோட மரணத்தைப் பத்தி விசாரிக்க கமிசன் மேல கமிசனா போடறாங்க.. ஒரு பலனையும் காணோம்.."

"ஜஸ்டிஸ் முகர்ஜி கமிசன் கொஞ்சம் உண்மையைச் சொல்லுச்சே.."

"சொல்லுச்சு.. சொல்லுச்சு.. சுபாஷ் சந்திரபோஸ் தைவான் நாட்டு விமான விபத்தில் இறக்கலைன்னு சொல்லுச்சு ரஷ்யாவுக்குத் தப்பிப் போயிருக்கலாம்ன்னு சொல்லுச்சு.. ஜப்பானியக் கோவிலில் உள்ளது நேதாஜியின் அஸ்தியில்லைன்னு சொல்லுச்சு. 1970ல் லீலாராய்க்கு பகவான்ஜி எழுதிய கடிதம் நேதாஜி யோட கையெழுத்தோட இணைந்து போகுதுன்னு சொல்லுச்சு.. இத்தனையையும் எப்பச் சொல்லுச்சு..? 2005-ஆம் வருசம் சொல்லுச்சு.. பகவான்ஜி 1985-லேயே இறந்துட்டார்.. 2010-ல பகவான்ஜி நேதாஜியா இருக்க 100 ரூ வாய்ப்பிருக்குன்னு ஜஸ்டிஸ் முகர்ஜி சொன்னது டெலிகாஸ்ட் ஆகியிருக்கு.."

"ம்ஹீம்.. வாழும் காலத்தில ஒரு மாவீரனை நம்ம நாடு கண்டுக்கவே இல்லை.."

யாமினிக்கு வேதனையாக இருந்தது.. அவளுடைய இடத்திற்குச் சென்று அமர்ந்தவளின் வாய் தன்னையு மறியாமல்..

"நல்லதோர் வீணை செய்தே - அதை

நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ..

சொல்லடி சிவசக்தி..! - எனைச்

சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்.."

என்று உருகிப் பாடியது..

அப்பாடலில் சித்தார்த்தன் அவளைப் பார்த்தான்.. இருவர் பார்வையிலும் புரிதலுடன் கூடிய மனவலி இருந்தது.

அத்தியாயம் - 77

முகமறியா எதிரிகளை

முறியடிக்க வழியேது..?

மனதுக்குள்ளே புதைந்திருக்கும்

வலி தீர வழியேது ?

சென்னையிலிருந்து எழுபத்தியிரண்டு கி.மீ தொலைவில் இருக்கிறது காஞ்சிபுரம்..!

இது ஆயிரம் கோவில்களின் நகரம் என்று அழைக்கப் படுகிறது.. இந்துக்களின் ஏழு புனித நகரங்களில் ஒன்று காஞ்சிபுரம்.. என்று ஆன்மிகத் தலங்களைக் குறித்த வரலாறு எடுத்துரைக்கிறது..

பஞ்சபூதங்களில் நீராக திருவானைக் காவலிலும்.. நெருப்பாக திருவண்ணாமலையிலும்.. காற்றாக காளகஸ்தியிலும்.. ஆகாயமாக சிதம்பரத்திலும் தரிசனம் தரும் ஈசன்.. நிலமாக காட்சி தருவது காஞ்சிபுரத்தில் ஏகாம்பரேஸ்வரர் கோவில்தான்..

பல்லவர்களின் தலைநகரமாக விளங்கிய சிறப்பைக் கொண்டது காஞ்சிபுரம்..! இதன் மூலப் பெயர்கள் 'கான்ஜியாம்பட்டி' 'காஞ்சிவரம்' என்பவையாகும்.

காஞ்சிபுரம் ஒரு புனித தலம்..! ஏழாம் நூற்றாண்டின் பழமையான கைலாசநாதர் கோவில் இங்குதான் இருக்கிறது.. பல்லவ பெருமாள் கோவில், காரை திருநாதர் கோவில்களும் இங்குதான் உள்ளன.. விஷ்ணு கூர்ம (ஆமை) வடிவில் சிவனை வழிபட்ட கர் சர்பேஸ்வர கோவிலும் இங்குதான் உள்ளது.

வழக்கத்தீஸ்வரர் கோவிலும் இங்கேதான் உறைந்திருக்கிறது, இங்கே வழிபட்டால் வழக்குகள் தீரும் என்று நம்பப் படுகிறது..

இரவட்டேனசுர கோவில் பல்லவ மன்னர்களால் கட்டப்பட்டது.. தொல்பொருள் நினைவுச் சின்னமாக இந்தக் கோவில் பாதுகாக்கப் படுகிறது.. இந்தக் கோவிலில் உள்ள வட்டக் கருவறை பிரசித்தி பெற்றது.

ஆதிசங்கரர் ஸ்தாபித்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் என்ற காஞ்சிமடம் இங்குதான் உள்ளது.

காஞ்சியின் அடையாளமான அன்னை உமையவள் வசிக்கும் காஞ்சி காமாட்சியம்மன் கோவிலும் இங்குதான் உள்ளது.

உலகில் ஜனிக்கும் அத்தனை ஜீவராசிகளின் பாவ, புண்ணிய கணக்குகளை கணித்துக் கொண்டிருக்கும் 'சித்திர குப்தர்' கோவில் இங்கே இருக்கிறது.. சோழர்கள் கட்டிய கோவில் இது.. பஞ்சலோக சிலைகளாக அவரும், அருளாள தேவியும் இங்கு அருள் பாலிக்கிறார்கள்..

காஞ்சியின் புகழ்பெற்ற வரதராஜப் பெருமாள் கோவிலும் இங்குதான் உள்ளது.

பதினான்காம், பதினைந்தாம் நூற்றாண்டில் தஞ்சை நாயக்கர்கள் வழிபட்ட கோவில் இது.. சோழர்கள் கட்டியது.. 108 திவ்ய தேசங்களில் ஒன்று இந்த காஞ்சி வரதராஜப் பெருமாள் கோவில்..! இந்தக் கோவிலை விஸ்வகர்மா கட்டியதாகச் சொல்கிறார்கள்..

இலங்கை ஆதி கேசவப் பெருமாளின் கோவிலும் இங்கே இருக்கிறது.. எட்டு கைகளுடன் காட்சி தருகிறார் பெருமாள்..!

இவ்வாறு கோவில்களால் சூழப் பட்டிருப்பதால்

தான் காஞ்சியை ஆயிரம் கோவில்களின் நகரம் என்று அழைக்கின்றார்களோ என்னவோ..

காஞ்சி 'பட்டின் நகரம்..!' பட்டுப் புடவையென்றால் நினைவுக்கு வருவது காஞ்சிப் பட்டுதான்..

காஞ்சிப் பட்டு உடுத்தி..

கஸ்தூரி பொட்டு வைத்து

தேவதைபோல் நீ நடந்து

வர வேண்டும்.. - அந்த

திருமகளும் உன் அழகைப்

பெற வேண்டும்..

என்று திரைப்படப் பாடலே உண்டு.

இத்தகைய பெருமைகள் பல பெற்ற காஞ்சியின் பிரதான வீதியில் அரண்மனை போன்ற விவேகானந்தனின் மாளிகை இருந்தது.. அதன் நீண்ட சுற்றுச் சுவரின் மையத்திலிருந்த பிரம்மாண்டமான கேட்டை ஒட்டிக் கட்டப் பட்டிருந்த சிறிய அறையில் செக்யூரிட்டி காவல் காத்துக் கொண்டிருந்தான்.. வேகமாக வந்து நின்ற சித்தார்த்தனின் காரைக் கண்டதும் அவசரமாக வெளியில் ஓடி வந்து சல்யூட் வைத்து விட்டு கேட்டை அகலமாக திறந்து விட்டான்.. உள்ளே தள்ளி நின்ற மாளிகையை நோக்கி நீண்டு சென்ற சாலையில் சித்தார்த்தனின் கார் வழுக்கிக் கொண்டு சென்றது..

வீட்டிற்கு முன்னால் வழவழப்பான பெரிய தூண்களுடன் அகன்று இருந்த போர்டிகோவில் முப்பது கார்களுக்கு மேல் நிறுத்தலாம் போல பரப்பளவு இருந்து.. சித்தார்த்தனின் கார் நின்றதும்.. வீட்டுக்குள் இருந்து ஓடிவந்த வேலையாள் கார்கதவைத் திறந்து விட்டு.. சித்தார்த்தனின் பெட்டியை வாங்கிக் கொண்டான்..

"எப்படியிருக்க குமரகுரு..?"

"நல்லாயிருக்கேங்க சின்னய்யா.. எனக்கென்ன குறை..?"

"இன்னும் மேரேஜ் ஆகலையே.. அந்தக் குறையில்லையா..?"

சித்தார்த்தன் கேலியாக கேட்க.. அவனை விட இரண்டு வயது மூத்தவனான குமரகுரு என்னவோ பெண் பிள்ளையைப் போல முகம் சிவந்தான்.. அங்கே இல்லாத தூசியைத் தட்டியபடி சித்தார்த்தனுக்கு வணக்கம் சொல்வதையே தலையாய கடமையாகக் கொண்டிருந்த விமலாவை ஓரக்கண்ணால் பார்த்தான்..

"நம்ம வீட்டில வேல பாக்கிறவங்களுக்கு குறையே இருக்காதுங்க சின்னய்யா.. கல்யாணம் ஆகாட்டித்தான் என்ன..? தோதான பொண்ணக் கண்ணில காண்பிச்சு கட்டி வைக்க நம்ம வீடு இருக்குதுங்களே சின்னய்யா.." என்று ஜொள்ளினான்..

"தோதான பொண்ண கண்ணில காட்டுமா..? எது..? நம்ம வீடா..?"

ஆச்சரியத்துடன் கேட்ட சித்தார்த்தன் குமரகுருவின் பார்வை மையம் கொண்டிருந்த திசையைப் பார்த்து விட்டு..

"ஓ...!" என்று அர்த்த புஷ்டியோடு குரல் எழுப்பினான்.

"சின்னய்யா..?"

ஒன்றும் புரியாத சின்னக் கண்ணனைப் போல கேட்டபடி கேள்விக்குறியைப் போல உடலை வளைத்து நின்றான் குமரகுரு..

"நடத்து.. நடத்து.."

கேலியுடன் குமர குருவின் முதுகில் தட்டிக் கொடுத்துவிட்டு வீட்டுக்குள் நடந்தான் சித்தார்த்தன்.. அவன் பின்னாலே போகாமல் தேங்கி நின்ற குமரகுரு.. விமலாவை பார்த்து..

"ஹி..! ஹி..!" என்று இளித்து வைத்தான்..

"வாயை மூடுய்யா.. இப்பத்தான் கழுவி விட்ட வீட்ட ஜொள்ளு விட்டு ஈரமாக்கித் தொலைக்காதே.. இப்ப என்ன அலுவலுக்கு என்னப் பாத்து பல்லக் காட்டற..?" சிடுசிடுத்தாள் விமலா..

"என்ன விமலா இப்புடிச் சொல்லிப்புட்ட..?"

"எப்புடி சொல்லிப் புட்டேன்..?"

"என் மனசே தாங்கல விமலா.. நீயே இப்புடிச் சொல்லலாமா..?"

"யோவ்...! சும்மா நடிகர் திலகம் போல வேசம் கட்டின.. பொளந்து கட்டிருவேன்.. ஆமாம் சொல் லிட்டேன்.. மெட்ராஸே கதின்னு இருக்கிற சின்னய்யா.. அத்தி பூத்ததைப் போல காஞ்சிபுரத்துக்கு வந்திருக்காரு.. அவருக்கு ஒரு வணக்கம் வைக்க விடறியா நீ..? நந்தியைப் போல குறுக்கால வந்து நின்னுக்கிட்டு ஊடுசால் ஓட்டற.. எனக்கு நல்லா வந்திரும் வாயில.. சொல்லிட்டேன்.. ஆமா.. பாத்து இருந்துக்க.."

இப்படிச் சொன்ன விமலா.. இளமையாக வாளிப்பாக இருந்தாள்.. கருப்பாக இருந்தாலும் களையாக இருந்தாள்.. அவள் முகத்தில் பதித்த விழிகளை அகற்ற முடியாமல் தவித்தான் குமரகுருபன்..

"விமலா..."

"என்ன..?"

"ஏன் புள்ள எப்பப் பார்த்தாலும் சிடுசிடுன்னு பேசற..?"

"நீ எதுக்குய்யா என்னப் பாக்கற..?"

"உன்னப் பாக்காம யாரப் பாப்பேன்..?"

குமரகுரு கிடைத்த வாய்ப்பில் உருகி வழிய ஆரம்பித்தான்.. விமலாவின் முகம் கோவைப் பழமாய் சிவந்தது..

"பேசாம போயிரு.." எச்சரித்தாள்..

இல்லையென்றால் என்ன செய்வாய் என்று எகிறுபவனா குமரகுரு..? அவன் சரணாகதியின் மொத்த உருவமாகி..

"உன்கூடப் பேசலைன்னா நிசமாவே நான் போயிருவேன் விமலா.." என்று படு உருக்கமாக சொன்னான்..

"இப்புடிப் பேச எங்கேய்யா கத்துக்கிட்ட..?"

எப்படி பந்தை வீசினாலும் விடாமல் சிக்சர் அடிப்பவனிடம் வியந்து போனாள் விமலா.. குதூகலமாகி விட்டான் குமரகுரு..

"உன்னக் கண்டா அத்தனை வித்தாரமும் தானா வருது புள்ள.."

"வரும்.. வரும்.."

குமரகுருவுக்கு வந்த பதில் கட்டையான கனத்த ஆண்குரலாய் இருந்ததில்.. குயிலினும் இனிமையான விமலாவின் குரலுக்கு என்னவானது என்று பதறிப் போனான் குமரகுரு..

"இம்புட்டு நேரமும் நல்லாத்தான பேசிக்கிட்டு இருந்த விமலா..? இப்ப மட்டும் ஆம்பளக் குரல்ல பேசறியே.. என்னம்மா ஆச்சு..?"

"அவளுக்கு ஒன்னுமே ஆகலை.. ஆம்பள பேசினா ஆம்பளை குரல்லதான பேசுவான்..? மடையா..!"

"ஆம்பள பேசறானா..?"

திகைத்துப் போன குமரகுரு.. அவனுக்கு முதுகு காட்டி நிற்பது விமலாவா இல்லை சந்திரமுகியா என்று அரண்டுபோனான்..

"விமலா.." நடுக்கத்துடன் அவன் கூப்பிட்ட குரலுக்கு..

"என்ன..?" என்று கடுப்புடன் கேட்ட விமலாவின் குரல் அதே குயிலின் இனிமையோடுதான் இருந்தது..

"இப்ப நல்லாத்தான பேசறா.."

வாய் விட்டுச் சொன்ன குமரகுருவின் தோளை வலிமையான கரம் ஒன்று தட்டிக் கொடுக்கும் பாவனையில் ஓங்கி தட்டி வைத்தது..

"தோள் போச்சே.."

அலறியபடி திரும்பியவனின் எதிரே ஆஜானு பாகுவான ஜேம்ஸ் நின்றிருந்தான்.. அவன் கையில் சித்தார்த்தனின் கார் சாவி இருந்தது..

'டிரைவருக்கு வீட்டுக்குள்ள என்ன வேலை..?'

பொசபொசவென ஆத்திரம் கொண்ட நோஞ்சான் குமரகுரு.. ஜிம்பாடி ஜேம்ஸை.. விளக்கின் சுடர் போன்ற விமலா ஏறெடுத்தும் பார்த்துவிடக்கூடாதென்று ஊரில் உள்ள அத்தனை கடவுள்களிடமும்.. சைவ, வைணவ பேதமின்றி வேண்டுதல்களை வேண்டி வைத்தான்..

அவன் வேண்டுதல்கள் கடவுள்களுக்கு தாமதமாகப் போய் சேர்ந்து விட்டன போலும்.. விமலா ஜிம் பாடி ஜேம்ஸைப் பார்த்துப் புன்னகை பூத்து குமரகுருவின் மனதில் புயலைக் கிளப்பி விட்டாள்..

'சிறுக்கி மக..! என்னைக்காவது ஒருநாள்.. ஒரு பொழுது.. என்னைப் பாத்து இப்புடிச் சிரிச்சிருப்பாளா..?' வயிறெரிந்தான் குமரகுரு..

அந்த எரிச்சலைத் தாங்க மாட்டாதவனாக.. ஜேம்ஸிடம் சிடுசிடுத்தான் குமரகுரு..

"நீ ஓட்ட வேண்டிய காரு போர்டிகோவில நிக்குது ஜேம்ஸீ.. வீட்டுக்குள்ள நிக்கல.. காரை ஓட்ட வந்தா காரை மட்டும் ஓட்டு.."

"ஏன்ப்பா..? உன்ன ஓட்டக் கூடாதுன்னு சட்டம் கிட்டம் இருக்கா..? இல்ல மத்தவங்கள ஓட்டிட்டுப் போகக்கூடாதுன்னும் இருக்கா..?"

சாவாதானமாக கேட்ட ஜேம்ஸின் பார்வை விமலாவை மேய்ந்தது.. அதை விமலா ஆட்சேபிக்காததில் சஹாரா பாலைவனமாக வறண்டு போனது குமரகுருவின் மனது..

'நான் சும்மா பாத்தாக் கூட சத்தம் போடறா.. இவன் காஞ்ச மாடு கம்மங்கொல்லயப் பாக்கறதைப் போல பாத்து வைக்கிறான்.. சின்னதாக் கூட முறைக்காம போஸ் கொடுத்துக்கிட்டு நிக்கிறாளே..'

அவள் போஸ் கொடுத்ததுடன் நின்று தொலைக்காமல் வெட்கப் பட்டும் தொலைத்ததில் குமரகுருவுக்கு நெஞ்சுவலி வரும்போல இருந்தது.. அவன் நெஞ்சைப்

பிடித்தபடி ஜேம்ஸ் வீட்டை விட்டு வெளியில் போய்த் தொலைக்க மாட்டானா என்று ஏக்கத்துடன் பார்த்தான்.. ஜேம்ஸோ.. நகர்வேனா என்று சட்டமாக நின்றபடி விமலாவின் வெட்கத்தில் சிவந்த முகத்தைக் கடித்துத் தின்று விடுவதைப் போல பார்த்து வைத்தான்..

'இவன் விமலாவ ஓட்டிக்கிட்டுப் போகாம விட மாட்டான் போல இருக்கே.. கர்த்தரே..! காத்தருளும்..'

ஜேம்ஸைப் பற்றிய மனத்தாங்கலை ஏகாம்ப ரேஸ்வரரிடம் சொல்லி மதச் சண்டையை உண்டு பண்ணி விடக் கூடாது என்ற பொறுப்புணர்வுடன் கர்த்தரை அழைத்து கருணை மனுவை போட்டு வைத்தான் குமரகுரு..

கர்த்தர் குமரகுரவை காத்தருள வருவதற்குள் ஜேம்ஸ் விமலாவின் பக்கமாக நகர்ந்து விட்டான்..

பதறிப் போய் வழி மறித்த குமரகுரு..

"என்ன..? என்ன..?" என்று மூச்சிரைத்தான்..

"என்ன.. 'என்னயென்ன..'?"

"உனக்கு என்ன வேணும்..?"

"சம்பளம் கூட வேணும்.. தர்றியா..?"

ஜேம்ஸின் எகத்தாளமான கேள்வியில்..

"களுக்.." என்று சிரித்து வைத்தாள் விமலா..

'கழுத..!' மனதுக்குள் வைது தீர்த்தான் குமரகுரு..

"அதை முதலாளி தருவாரு.. நீ இப்ப நடையைக் கட்டு.."

"எப்ப நடையைக் கட்டனும்னு எனக்குத் தெரியும்.. நீ ஒன்னும் சொல்ல வேணாம்.. நீ முதலாளி இல்லேல்ல..? என்னப் போல நீயும் இந்த வீட்டில வேலை செய்யறவன் தான்.. அத மனசில வைச்சுக்கிட்டுப் பேசிப் பழகு.."

குமரகுருவிடம் பேசும் பேச்சு.. பேச்சாக இருக்க.. ஜேம்ஸின் பார்வை விமலாவிடம் பேசிப் பழகச் சொல்லிக் கேட்டுக்கொண்டிருந்தது.. அதையுணர்ந்த நாணப்

புன்முறுவலை அவள் சிந்த அதை அப்படியே அள்ளிக் கொண்டான் ஜேம்ஸ்.. குமரகுருவின் நெஞ்சுவலி அதிகமானது..

"ஆகட்டும்ப்பா.. இனிமே பாத்துப் பேசிப் பழகறேன்.."

ஜேம்ஸின் வழியை பின்பற்றினான் குமரகுரு..! ஜேம்ஸிடம் சிந்திய புன்முறுவலில் சிறு துளியையாவது அவனிடமும் விமலா சிந்த மாட்டாளா என்ற நப்பாசையுடன் அவளைப் பார்த்தான்.. பசை போட்டு ஒட்டியதைப் போல உதடுகளை இறுக மூடிய வண்ணம் அவள் இல்லாத தூசியைத் தொடர்ந்து துடைக்க ஆரம்பித்தாள்..

'அவனப் பாத்தா வர்ற சிப்பாணி என்னக் கண்டா மட்டும் ஏறக்கட்டி ஓடிப் போயிருது..'

சினத்துடன் விமலாவிடம் காட்ட முடியாத முறைப்பை ஜிம்பாடி ஜேம்ஸிடம் காண்பித்து வைத்தான் குமரகுரு.. அவன் புருவங்களை உயர்த்தியதில் மிரண்டு போனவனாக உடனடியாக ஜகா வாங்கி..

"ஹி.. ஹி.." என்று தழைந்தும் வைத்தான்..

'அஃது..' விறைப்பாக குமரகுருவை ஓர் பார்வை பார்த்து விட்டு..

"சின்னய்யாவோட கார் சாவிய கொடுக்க வந்தேன் விமலா.. சின்னய்யா எங்கே..?" என்று விமலாவிடம் கேட்டான் ஜேம்ஸ்..

'ஏண்டா.. என்னப் பாத்தா உனக்கு ஆளாத் தெரியலையா..? உன் கண்ணு முன்னால நிக்கிற என்ன விட்டுட்டு.. அங்கிட்டு நிக்கிறவகிட்டக் கேள்வி கேக்கறியே.. உன்ன என்ன செஞ்சா தகும்டா..?'

ஜேம்ஸை தன்னால் எதுவும் செய்ய முடியாதென்று தெரிந்தும் கொலை வெறியானான் குமரகுரு..

அத்தியாயம் - 78

நீ ஒரு கரையில்.. நான் ஒரு கரையில்..

இணைய முடியாமல் எதிரெதிர் திசையில்..

"இப்பத்தான் சின்னய்யா வந்தாரு.."

விமலா வாயெல்லாம் பல்லானாள்..

'அது இவனுக்குத் தெரியாதா..?' குமரகுரு வாயிலுள்ள பற்களையெல்லாம் கடித்து நொறுக்கியே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டவனாக பல்லைக் கடித்தான்..

'என் பேரத் தவிர.. வேற யார் பேரச் சொன்னாலும் இவளுக்கு பரவசம் வந்து கொட்டோ கொட்டுன்னு கொட்டிருமே..'

"அதான் எனக்குத் தெரியுமே.." கேலியாக சொன்னான் ஜேம்ஸ்..

அவன் என்னவோ அவள் கையைப் பிடித்து இழுத்து விட்டதைப் போல நாணிக் கோணிப் போன விமலா..

"போங்க.. உங்களுக்கு எல்லாமே கேலிதான்.." என்றாள்..

'போ.. 'ங்'.. கவா..?'

குமரகுருவின் காதுகளில் ஆசிட் பாய்ந்தது..

'என்னப் பாத்தா 'போ..'..? அவன்கிட்ட மட்டும் 'போங்க..' வா..?'

ஜேம்ஸை அவன் பார்த்த பார்வையில் கனல் தெரித்தது.. ஜேம்ஸோ குமரகுருவின் கனல்வீச்சை கண்டு கொள்ளாதவனாக.. அவனை ஓரக் கையால் ஒதுக்கி விட்டு..

"தள்ளுப்பா.. வழிய மறிச்சுக்கிட்டு நிக்கிற.." என்றான்..

அவன் ஒதுக்கி விட்டதே தள்ளி விட்டதைப் போலதான் இருந்தது.. சுவர் மீது விழுந்து வைத்த குமரகுரு.. அதை விமலா பார்த்து விட்டாளா என்று பதைபதைத்தான்..

அவள்தான் இதுபோன்ற குமரகுருவின் குப்புற விழுதல்களுக்காக காத்திருப்பதைப் போல அவன் மண் கவ்வுவதைப் பார்த்து வைப்பாளே..

"ஏய்யா.. அவரு ஒத்தக்கையால தள்ளி விட்டா இப்படியா விழுந்து வைப்ப..? சரியான புல்தடுக்கி பயில்வானுய்யா நீ.." என்று சொல்லி வைத்தாள்..

அவன் 'புல் தடுக்கி பயில்வான்..' என்றால் மெய்யான பயில்வான் யார்..?

கேட்கத்தான் நினைத்தான் குமரகுரு.. அதற்குள் விமலாவின் பார்வை ஜிம்பாடி ஜேம்ஸின் பாடியை அளந்து வைத்து மெய்யான பயில்வான் யார் என்பதை சொல்லாமல் சொல்லி வைத்தது..

அந்தச் சூழலில் இருந்து மீட்சியே கிடையாதா என்று ஏங்கிப் போன குமரகுருவின் ஆசிட் பாய்ந்திருந்த காதுகளில் அமிர்தம் வந்து பாய்ந்தது..

"இங்கே என்ன பண்ணற ஜேம்ஸ்..?"

பூஜையறையில் இருந்து வெளியே வந்த நிருபமா கேட்டு குமரகுரவிற்கு அவன் வேண்டிய மீட்சியைக் கொடுத்தாள்..

'அப்புடிக் கேளுங்கம்மா..' மனதுக்குள் குதூகலித் தான் அவன்..

"சின்னய்யா வந்திருக்காருங்கம்மா.."

குமரகுருவின் மனதை அவதானிப்பதைப் போல அவனைப் பார்வையால் கடுமையாக எச்சரித்தபடி நிருபமாவிடம் எதைச் சொன்னால் அவள் எப்பேற்பட்ட விசாரணையையும் மறந்து விடுவாளோ அதைச் சொன்னான் ஜேம்ஸ்..

"என்னது..! சித்தார்த் வந்திருக்கானா..?"

"ஆமாங்கம்மா.."

"எங்கே..? எங்கே..?"

நிருபமா பரபரத்தாள்... சித்தார்த்தனின் கார் சாவியைக் கொண்டு வந்திருந்த ஜேம்ஸீக்கு காரை விட்டு இறங்கி

வீட்டுக்குள் வந்த சித்தார்த்தன் எங்கே போனான் என்று தெரியவில்லை..

சித்தார்த்தனின் பெட்டியைக் கையில் வைத்திருந்த குமரகுருவுக்கு அது தெரிந்திருந்தது.. அதைச் சொல்லி நிருபமாவிடம் நல்ல பெயர் வாங்கிக் கொள்ளலாம் என்று அவன் வாய் திறக்க முனைந்த போது அவனை முந்திக் கொண்டு பதில் சொல்லி விட்டாள் விமலா..

"சின்னய்யா மாடிக்குப் போயிட்டாரும்மா.."

"அப்பவே என்கிட்ட வந்து சொல்றதுக்கென்ன..?"

"அதுக்குத்தான்ம்மா வந்துக்கிட்டு இருந்தேன்.. அதுக்குள்ள ஐயா நிறுத்திட்டுப் போன காரை ஷெட்டில பார்க் பண்ணிட்டு சாவியோட டிரைவர் வந்திட்டாரும்மா.. அதை வாங்கி வைச்சுட்டு உங்களுக்கு தகவல் சொல்ல வரலாமுன்னா அதுக்கு விடுவேனான்னு இந்த ஆளு வாய் வளத்துக்கிட்டு நிக்குதும்மா.."

குமரகுருவின் வலித்த நெஞ்சம் வெடித்து விடும்போல ஆகிவிட்டது.. விமலா அவனைப் போட்டுக் கொடுத்துப் புண்ணியத்தைக் கட்டிக் கொண்டதைக் கூட அவனால் பொறுத்துக் கொள்ள முடிந்தது..

'யாரு போட்டுக் கொடுத்தது..? விமலாதானே..'

ஆறுதல் ஜொள்ளத் தயாராகத்தான் இருந்தது அவனது நெஞ்சம்.. அந்த விமலா.. ஜேம்ஸை மட்டும் புருசன் பெயரைச் சொல்லாத அந்தக் காலத்து மனைவி மார்களைப் போல 'டிரைவர் வந்திட்டாரு..' என்று படு பதவிசாகச் சொல்லி விட்டு.. குமர குருவை எவனோ ஒரு தெருவில் போகிற வழிப்போக்கனைச் சொல்வதைப் போல 'இந்த ஆளு வாய் வளத்துக்கிட்டு நிக்குது..' என்று அஃறிணையில் சொன்னதைத்தான் குமரகுருவால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.. அதையும் அவள் ஜேம்ஸைக் காப்பாற்றுவதற்காகச் சொன்னாள் என்பதில் மலையுச்சியிலிருந்து குதித்து விடலாமா என்ற அளவுக்கு மனம் வெறுத்துப் போனான் குமரகுரு..

மகன் வந்து விட்ட செய்தியை உடனுக்குடன் அறிய முடியாமல் போய் விட்ட கோபத்தை அப்படியே குமரகுருவிடம் காண்பித்த நிருபமா அவனைக் காய்ச்ச ஆரம்பித்து விட்டாள்..

"உனக்கு எப்ப வாய் வளர்க்கனும்ங்கிற அறிவே கிடையாதா குமரா..?"

"இல்லேங்கம்மா.."

"என்ன இல்லே..? அறிவா..?"

"அதில்லம்மா.."

"அதுதான் இல்லேன்னு தெரியுதே.. ஜேம்ஸ் கார்ச் சாவியக் கொடுக்க வந்திருக்கான்.. விமலா அதை வாங்கி வைக்க நின்னிருக்கா.. ஊடே உனக்கு இங்கே என்ன வேலை..?"

"அம்மா.."

நெஞ்சைப் பிடித்து விட்டான் குமரகுரு.. ஜேம்ஸீக்கும் விமலாவுக்கும் ஊடே அவன் வந்து விட்டதாக நிருபமாவே சொல்லி விட்டாளே.. அப்படியென்றால் விமலா குமருகுருவுக்கு கிடைக்கவே மாட்டாளா..?

"கையில என்ன பெட்டி..?"

"சின்னய்யாவோடதும்மா.."

"அறிவு கெட்டவனே..! சித்தார்த்தோட பெட்டிய கையில பிடிச்சவன் அவன் பின்னாலேயே மாடிக்குப் போயி பெட்டியை அவன் ரூமில வைக்கனும்ங்கிற எண்ணமில்லாம இங்கே நின்னு வாய் வளர்த்துக்கிட்டு இருக்க.. உன்னை என்னதான் செய்கிறது..?"

"அம்மா.."

கடைசியில் தவறு செய்தவன் குமரகுருதான் என்று ஆகிவிட்டதே.. இல்லாத தூசியைத் துடைப்பதைப் போல பாவனை செய்து கொண்டிருந்த விமலாவும்.. அவளைக் கணக்குப் பண்ணக் கார் சாவியை சாக்காக வைத்துக்

கொண்டு வீட்டுக்குள் வந்து நின்றிருக்கும் ஜேம்ஸீம் கடமை தவறாத பணியாள்கள் என்று ஆகிவிட்டதே..

'இதுதான் உலகம்..!'

வாழ்வே மாயம் என்று ஆகிப் போன குமரகுருவை..

"இன்னும் ஏன் இங்கேயே நின்னுக்கிட்டு இருக்கே..?" என்று சுட்டெரிக்கும் விழிகளால் சுட்டெரித்தாள் நிருபமா..

'எங்கே போகச் சொல்றாங்க..? காவியை உடுத்திக் கிட்டு காசி, ராமேஸ்வரம்ன்னு போகச் சொல்கிறாங்களோ..' பற்றற்ற பார்வை பார்த்தான் குமரகுரு..!

"அடச்சீ..! என்னமோ கமண்டலத்த கையில பிடிச்சுக்கிட்டு நிக்கிறதைப் போல பாக்கறயே... சித்தார்த்தோட பெட்டியத்தான் கையில பிடிச்சுக்கிட்டு இருக்கே..? மாடிக்குப் போயி அவன்கிட்ட பெட்டியைக் கொடு.."

அவனுக்கான பாதையைக் காட்டி தடுத்தாட் கொண்டாள் நிருபமா.. அம்பிகையின் வடிவாய் நின்றவளை பக்திப் பரவசத்துடன் பார்த்தபடி தப்பித்தேன் பிழைத்தேன் என்று மாடியேறினான் குமரகுரு..

"விமலா.. ஜேம்ஸ்கிட்டக் கார்ச் சாவியை வாங்கி வைச்சுட்டு கிச்சனுக்குப் போயி பர்வதம் கிட்டச் சொல்லிச் சூடா காபி, டிபன் எடுத்துக்கிட்டு மாடிக்கு வா.."

நிருபமா உத்தரவிட்டு விட்டு விரைவாக மாடியேறினாள்.. தனித்து நிற்கும் ஜேம்ஸ் விமலாவிடம் என்னவெல்லாம் கடலை வறுக்கப் போகிறானோ என்று பதைத்துப் போன குமரகுருவால் மாடியிறங்க முடியாமல் போய் விட்டது..

அவன் பின்னாலே நிருபமா மாடியேறிக் கொண்டிருக்கிறாள் என்ற நினைவில்.. மாடிக்குப் போய்த்தான் ஆக வேண்டுமென்ற கட்டாயத்துக்கு ஆளானான் குமரகுரு..

ஓடோடிப் போய் சித்தார்த்தனின் ரூமில் பெட்டியை வைத்து விட்டுத் திரும்பி வந்து ஜேம்ஸின் கடலை வறுத்தலை

நிறுத்தியாக வேண்டும் என்ற கடமை உணர்ச்சியுடன் அவன் ஓடினான்..

என்னதான் அவன் ஓடினாலும்.. கிடைக்கும் ஓரிரு வினாடிகளில்கூட ஓராயிரம் கடலைகளை வறுத்து விடும் வல்லமை படைத்தவன் ஜேம்ஸ் என்ற உண்மை குமரகுருவின் நெஞ்சை வாள் கொண்டு அறுத்தது..

எதையும் தாங்கும் இதயம் படைத்த அவனாலேயே இதைத் தாங்க முடியவில்லை.. காற்றைப் போல வேகமாக ஓடி கதவைத் தட்டியவனை முறைத்தான் சித்தார்த்தன்..

"திறந்திருக்கிற டோரை ஏன் உடைக்கிற..?"

"பெட்டி சின்னய்யா.."

"வைச்சுட்டுப் போ.."

விட்டால் போதும் என்று பெட்டியை வைத்து விட்டு ஓடியவனை விசித்திரமாகப் பார்த்தான் சித்தார்த்தன்..

'இவனுக்கு என்னவாச்சு..?'

அதற்கு மேல் அவனை யோசிக்க விடாமல் அறைக்குள் வந்து விட்டாள் நிருபமா..

"சித்தார்த்.."

"மாம்.."

மகனைத் தழுவிக் கொண்டவளின் கண்களில் நீர்துளிகள்..

"என்னடா இப்படிப் பண்ணிக்கிட்டு இருக்க..?"

"எப்படிப் பண்ணிக்கிட்டு இருக்கேன்..?"

"சென்னையிலேயே ஸ்டே பண்றயே.. உன்னோட வேர் இந்த காஞ்சிபுரத்திலேதான் இருக்குது சித்தார்த்.. அதை மறந்திராதே.."

"என்ன சொன்னீங்க..?"

லேசான அதிர்வுடன் தாயைப் பார்த்தான் சித்தார்த்தன்.. அவன் மனதில் நிழலாக பல பிம்பங்கள் எழுந்தன..

"நரசிம்ம பல்லவா.." என்ற குரல் கேட்டது..

"சொல்வதைக் கேள் ஆதித்த கரிகாலா..!" மற்றொரு குரல் முதல் குரலைத் துரத்தியது..

"பாண்டியர்களின் அரியணையை எரித்ததிற்கான நியாயத்தைப் பெற்று வா மாறவர்மா..!" இன்னொரு குரல் கட்டளையிட்டது..

"இந்த ஒற்றை வைரத்தைக் கொண்டு உலகையே வாங்கலாம் ரவிவர்மரே..! ஒரு சின்னஞ்சிறு பெண்ணின் மனதை வாங்க முடியாது.." தேம்பியது ஒரு பெண்குரல்..

"நீ கங்காதேவியின் கணவனாக இருக்கலாம் குமார கம்பண்ணா..! இந்த மைதிலிக்கும் நீயே மணவாளன்..! ஒன்றை நினைத்து விட்டால் அதிலேயே நிலைத்து நிற்கும் இந்த மைதிலி உனக்காகவே வாழ்வாள்.. உனக்காகவே உயிரையும் விடுவாள்.." வீரத்துடன் முழங்கியது வேறொரு பெண்குரல்..

"ஆதவா..! காந்தியின் வசீகரம் ஓர்வகை.. நேதாஜியின் வசீகரம் அதற்கு நேர் எதிர் திசை.. எந்தத் திசையில் நீ பயணிக்கப் போகிறாய்..?" என்றது ஓர் குரல்..

தலையில் சுழன்ற குரல்களின் ஒலிக் கலவையில் தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டான் சித்தார்த்தன்..

"சித்..! உனக்கு என்ன ஆச்சு..?" நிருபமா பதறினாள்..

ஜேம்ஸீடன் தனித்துப் பேச கிடைத்த சந்தர்பத்தை பயன் படுத்திக் கொள்ள விடாமல் படிகளில் உருண்டு வந்து ஊடே எழுந்து நின்று விட்ட குமரகுருவை வாய்க்கு வந்தபடி திட்டியபடி காபி டிபனுடன் வந்த விமலா திகைத்தாள்..

'இப்பத்தானே சின்னய்யா ராஜா போல மாடியேறி வந்தாரு..?'

அவளுக்கு என்னவோ சித்தார்த்தனைப் பார்த்தால் ஓர் அரசனைப் பார்த்ததைப் போலதான் இருக்கும்.. சித்தார்த்தனின் கம்பீரம் அத்தகையது.. அவனுடைய

நிமிர்ந்த நடையும்.. நேர்கொண்ட கண்டிப்பான பார்வையும்.. உயரமான அளவான உடல் கட்டும்.. தோரணையும்.. 'நான் ராஜாதி ராஜன்..!' என்று சொல்லாமல் சொல்வதில் விமலா சித்தார்த்தனைக் கண்டு விட்டால் கைகட்டி வாய் பொத்தி நின்று விடுவாள்..

விமலாவை திரும்பிப் பார்த்த நிருபமா அவள் கையிலிருந்த காபிக் கப்பை எடுத்து சித்தார்த்தனிடம் நீட்டி..

"முதலில் இதைக் குடி சித்..! உன் தலைவலி பறந்து போயிரும்.." என்று கவலையுடன் சொன்னாள்..

'தலைவலிதானா..!' விமலா நிம்மதியானாள்..

அதற்குள் சுதாரித்துக் கொண்ட சித்தார்த்தன்..

"ஈஸி மாம்.." என்று அவள் கைவிரல்களைப் பற்றித் தட்டிக் கொடுத்தான்..

'பிள்ளைன்னா இப்படி இருக்கனும்..' விமலா நினைத்துக் கொண்டாள்..

சித்தார்த்தன் நிருபமாவிடன் பாசத்தைக் கொட்டுவான்.. ஒட்டுதலாக இருப்பான்.. 'மாம்.. மாம்..' என்று நிருபமாவின் பின்னாலே நிழலாகச் சுற்றுவான்..

அப்படியெல்லாம் அம்மாவிடம் பாசமழையைப் பொழிந்தவன் எம்.பி.ஏ படிக்க வெளிநாடு சென்று வந்து.. தனியாக சென்னையில் 'சித்தார்த்தன் குரூப் ஆஃப் கம்பெனிஸ்..' ஆரம்பித்த பின்பு அடியோடு மாறிவிட்டான்.. தண்ணீர் குடிப்பதைப் போல வெகு இயல்பாக வெளிநாடுகளுக்கு பறந்து கொண்டிருந்தவனுக்கு காஞ்சிபுரத்திற்கு வருவதற்கான வழி மறந்து போய் விட்டது என்று நிருபமா அடிக்கடி புலம்புவாள்.. பிள்ளைப் பாசத்தில் அவள் தவிக்க.. சித்தார்த்தனோ தாய்பாசத்தை மறந்து கம்பெனியே கதியென்று அல்லும் பகலும் அன்னையின் நினைவின்றி வேலையில் மூழ்கி விட்டான்..

"செம டிராபிக்..! நானே டிரைவ் பண்ணிக்கிட்டு வந்ததில தலைவலி.. ஜஸ்ட் கொஞ்ச நேரம் ரிலாக்ஸ் பண்ணினா

சரியாப் போயிரும்.. இதுக்குப் போயி பதட்டப் படுவாங்களா..?"

"இதுக்குத்தான் ஜேம்ஸைக் கூப்பிட்டுக்கிட்டுப் போயிருன்னு சொல்றேன்.. நீ கேட்டாத்தானே..?"

அன்னை, மகனின் உரையாடலைக் கேட்ட விமலாவின் அடி வயிறில் 'பகீர்' என்ற கலக்கம் ஏற்பட்டது.

'ஜேம்ஸ் சென்னைக்குப் போயிருவானா..?'

அவளால் நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை.. அதே சமயம் குமரகுருவுக்கு அந்த ஆணை வந்தால் அவன் விமலா இருக்குமிடத்தை விட்டுச் செல்ல மாட்டான் என்ற நிச்சயத்தில் அவள் மனம் ஆடியது..

அத்தியாயம் - 79

நிழல் ஆட்ட யுத்தங்களின்

களமாக என் இதயம்..!

நீரோட்டம் போல

நிழலாடும் எண்ணங்கள் மனதில் உதயம்

ஜேம்ஸைக் குறித்து ஏன் அந்த நிச்சயம் எழவில்லை..?

விமலாவுக்கு துயரமாக இருந்தது.. நிருபமாவின் ஆலோசனைக்கு சித்தார்த்தன் என்ன மறுமொழியைச் சொல்லப் போகிறானோ என்ற ஏக்கத்துடன் அவனைப் பார்த்தாள்..

"ஜேம்ஸீக்குத்தான் டிரைவிங் தெரியுமா..? என் கம்பெனியில வொர்க் பண்ற டிரைவர்ஸீக்கு டிரைவிங் தெரியாதா..?" என்று கேட்டு விமலாவின் கலக்கத்தைப் போக்கி காருண்யம் காட்டினான் சித்தார்த்தன்..

"ஏன் சித்..? நிருமபா குருப் ஆஃப் கம்பெனீஸ் உன்னுடையதில்லையா..? உன் கம்பெனின்னு பிரிச்சுப் பேசறியே.." வருத்தத்துடன் கேட்டாள் நிருபமா..

"நான் அப்படி மீன் பண்ணல மாம்..! என்னதான் இருந்தாலும் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனி என்னோட உழைப்பிலும் இன்வெஸ்ட்மெண்டிலும் உருவான கம்பெனியில்லையா..?"

சித்தார்த்தனின் கேள்வியில் பெருமைகொண்டாள் நிருபமா.. அவன் அப்படித்தான் இருந்தான்.. பரம்பரை கோடிஸ்வரன் அவனுக்கான மூலதனத்திற்கு பரம்பரைச் சொத்துக்களையும் பேங்க் பேலன்ஸையும் எதிர் பார்க்காமல் பேங்க் லோனையும், நண்பர்களிடம் கடனையும் வாங்கினான்.. தொழில் தொடங்கினான்.. வாங்கிய

கடனை வட்டியுடன் திரும்ப அடைத்தான்.. இது என் கம்பெனி என்று விஸ்வரூபம் எடுத்து தாயின் முன்னால் நின்றான்..

"என்னவோ போடா சித்..! எனக்குன்னு இருக்கிற ராஜ்யத்திலே ராஜாவா நான் உட்காருகிறதில என்ன பெருமை..? போரில ஜெயிச்சுக் கிடைக்கிற ராஜ்யத்திற்கு ராஜாவாகிறதுதான் எனக்குப் பெருமைன்னு நீ சொல்கிறதைப் போல இருக்கு.. இதை நீ சொல்லலைடா.. இந்தக் காஞ்சிபுரத்தோட மண் உன்னை இப்படியெல்லாம் சொல்ல வைக்குது.."

நிருபமா விமலாவின் கையிலிருந்த டிபன் தட்டையும் வாங்கிக் கொண்டு கையசைத்தாள்.. அந்தக் கையசைவில் வெளியேறி விட்டாள் விமலா.. காபிக் கப்பை அங்கிருந்த டீபாயில் வைத்த நிருபமா மகனிடம் டிபனை நீட்டினாள்..

"முதலில் இதைக் காலி பண்ணு.."

நிருபமா சொன்ன வார்த்தைகளில் நிலைத்து நின்ற சித்தார்த்தன் அதைக் கவனிக்கவில்லை..

'காஞ்சியின் மண்..!'

அவன் தலை சுழன்றது.. அந்த வார்த்தைகளில் பொதிந்து நின்ற ஏதோ ஒன்று அவனைச் சுற்றிச் சுற்றி வந்தது..

"சித்தார்த்.."

நிருபமாவின் அழுத்தமான அழைப்பில் அவள் நீட்டிய டிபன் தட்டை வாங்கிக் கொண்டான் சித்தார்த்.. ரசித்துச் சாப்பிட ஆரம்பித்தான்.. அதைக் கனிவுடன் பார்த்தாள் நிருபமா..

"செம டேஸ்ட் மாம்.."

"இந்த டேஸ்டுக்காகவாவது நீ அடிக்கடி காஞ்சிபுரத்துக்கு வந்துட்டுப் போகக் கூடாதா சித்..?"

"டைமே இல்லைம்மா.."

"நீ நினைச்சா டைமை உருவாக்கிக்க முடியும்.."

"பார்க்கலாம்.. ஆமாம்.. நீங்க ஏதோ சொன்னீங்களே.."

"என்ன சொன்னேன்..?"

"நான் சொல்லலை.. இந்தக் காஞ்சிபுரத்தோட மண் என்னை சொல்ல வைக்குதுன்னு சொன்னீங்க.."

"அதுவா..? இந்தக் காஞ்சிபுரத்தை ஆண்டவங்க அப்படிப்பட்ட மன்னர்களா இருந்திருக்காங்க சித்தார்த்..! பல்லவர்களோட காலம் காஞ்சியோட பொற்காலம்ன்னு சொல்லுவாங்க.. இந்தக் காஞ்சிபுரம் பல்லவ நாட்டின் தலைநகரமா இருந்தது.. மதுரையும், தஞ்சாவூரும் பாண்டிய, சோழ மன்னர்களோட தலைநகரமா பெருமயுடன் நின்னப்ப.. காஞ்சியைத் தலை நகரமாக்கி பெருமை கொள்ள வைத்தவங்க பல்லவ மன்னர்கள்.."

"அடேங்கப்பா..! ஹிஸ்டரியைக் கரைச்சுக் குடிச்சிருக்கீங்க.."

"என்னோட அப்பா பொலிடிகல் லீடர்ங்கிறத மறந்திட்டயா..?"

"மறக்க முடியுமா..? அவரோட பேரன்தான நீங்கிற ஐடெண்டியை மாத்த எந்த அளவுக்கு போராடியிருக்கேன்..!"

"எதுக்குப் போராடனும்..? தி கிரேட் வரதராஜனோட பேரன்னு நீ சொன்னா டெல்லியில உனக்குத் தனி

மரியாதையே கிடைக்கும்.. நீதான் தாத்தாவோட நேமை யூஸ் பண்ண மாட்டேன்னு சொல்லிட்ட.."

"எனக்கு எனக்கான மரியாதைதான் வேணும் மம்மி.. தி கிரேட் விவேகானந்தனோட நேமையே நான் யூஸ் பண்ணிக்கிட்டதில்ல.. அவரோட மகன்ங்கிற ஐடெண்டியில நான் வளர்கிறத விட சுயமா வளரனும்னு நினைக்கிறவன் நான்.. டாடி பெயரையே பயன் படுத்திகாதவன்.. தாத்தாவின் பெயரைப் பயன் படுத்திக்குவேனா..?"

"அப்படிச் சொல்லித்தான எலக்சனில நிக்க மாட்டேன்னு தட்டிக் கழிச்சிட்ட.. அப்ப மட்டும் நின்னிருந்தா இந்நேரத்துக்கு உன்னை எங்கப்பா பவர்புல்லான சென்ட்ரல் மினிஸ்டரா ஆக்கியிருப்பார்.. அவர் கிங் மேக்கர்டா.. அவரோட கட்சியில அவருக்கிருக்கிற செல்வாக்கைப் பத்தி உனக்குத் தெரியாது.. ஆறு தரம் எங்கப்பாதான் தமிழ்நாட்டுக் கிளைக்குத் தலைவரா இருந்திருக்கார்.. இப்பவும் இவர் சொல்கிற ஆள்களுக்குத்தான் தமிழ்நாட்டுக் கிளையோட தலைவர் பதவி கிடைக்குது.."

"மாம்..! எனக்கு இந்தப் பேச்சில இண்ட்ரெஸ்ட் இல்ல.."

"விட்டுட்டாப் போச்சு.."

"இந்தப் பேச்சைத்தான் விடச் சொன்னேன்.. காஞ்சியைப் பத்தின பேச்சை விடச் சொல்லலை.."

"காஞ்சியை தலைநகரமாக்கி இதன் அரியணையில உட்கார்ந்த நரசிம்ம பல்லவன் சாளுக்கியர்கள் மேல படையெடுத்து வாதாபியை ஜெயிச்சு அதுக்கும் மன்னன் ஆனான்.. அதன் மூலமா.. பரம்பரையா வந்த மன்னனா மட்டும் இல்லாம வாள் முனையில நாட்டை வென்று அதுக்கும் மன்னனா அரியணையில உட்கார்ந்தான்.."

டிபனை ஸ்பூனில் எடுத்துக் கொண்டிருந்த சித்தார்த்தனனின் கை அப்படியே நின்றது.. அவன் மனதில் ரதம் ஓடியது.. அதில் வாளேந்திய நரசிம்ம பல்லவனாக அவன் உட்கார்ந்திருந்தான்..

'என்னடா இது..?'

அவன் தலையைக் குலுக்கி அந்த நினைவை விரட்டியடித்தான்..

"அவனுக்கடுத்து இந்த காஞ்சியை வென்று மன்னனா ஆனவன் ஆதித்த கரிகாலன்..! சோழநாட்டின் பட்டத்து இளவரசனா இருந்தும் கடைசி வரைக்கும் சோழர்களின் தலைநகரமான தஞ்சாவூர் பக்கம் தலை வைத்துக் கூட படுக்காம அவன் ஜெயிச்ச காஞ்சியிலேயே குடியிருந்தவன்.."

"எனக்கு சோழவளநாடு தேவையில்லை பாட்டா..! தினவெடுத்த என் தோள்கள் உள்ளன.. கூரிய வாள் முனை உள்ளது.. யுத்தத்தில் நாடுகளை வென்று அதற்கு அரசனாக முடி சூட்டிக் கொள்வேன்.."

சித்தார்த்தனின் மனதில் கர்ஜனை எழுந்தது.. எங்கே அதை வாய் விட்டுச் சொல்லித் தொலைத்து விடுவோமோ என்று அஞ்சினவனாக இந்நினைவையும் தலையைக் குலுக்கி அனுப்பி வைத்தான் அவன்..

"ஆதித்த கரிகாலன்தான் இப்படின்னா.. மாறவர்மன் சுந்தரபாண்டியனும் இவனைப் போலவே இருந்தான்.. பாண்டியர்களோட அரியணையை எரிச்ச சோழர்களைப் பழி வாங்க காஞ்சிபுரத்தைத்தான் முதலில் அவன் கைப்பற்றி இதன் ராஜாவா ஆனான்.."

சித்தார்த்தனின் மனதில் குதிரை ஓடியது.. புயல் வேகத்தில் பறந்த புரவியின் மீதிருந்த வாலிபன் திரும்பிப் பார்த்தான்.. சித்தார்த்தனனின் இதயத் துடிப்பு அதிகரித்தது..

அந்த வாலிபனின் முகம் சித்தார்த்தனனின் முகம் போலவே இருந்தது..

"பாண்டியர்கள் கையில் இருந்த காஞ்சியை காப்பாற்றன்னு ஒரு மன்னன் வந்தான்.. அவன்தான் சேர நாட்டு ராஜா ரவிவர்மன்..! காஞ்சியை ஜெயித்து இதன் அரியணையில உட்கார்ந்தான்.."

புரவி போய் பளீரென்று ஒளிர் விட்ட ஒற்றை வைரமொன்று சித்தார்த்தனனின் கண்களை கூச வைத்தபடி தோன்றியது.. அதன் ஒளிர்வில் கண்களை

இறு மூடிய சித்தார்த்தனை நிருபமா கவனிக்கவில்லை.. அந்த ஒற்றை வைரம் ஒருவனது மார்பில் புரண்ட தங்கச் சங்கிலியில் பதிந்திருந்தத.. அந்தத் தங்கச் சங்கிலியை அணிந்திருந்தவன் சிவந்த நிறத்துடன் வெற்று மார்பை பட்டுத் துணியால் போர்த்தியிருந்தான்.. தலைமுடியை ஒரு பக்கமாக வாரி ஆண்டாள் போல கொண்டையிட்டிருந்தான்.. நெற்றியில் சந்தனத் தீற்றுடன் இருந்தவனின் கவர்ச்சியான முகம் சித்தார்த்தனைப் பார்த்து சிரித்தது..

'நானா..?'

சித்தார்த்தன் ஸ்தம்பித்தான்.. கேரளத்து ராஜா ரவிவர்மனின் முகம் சித்தார்த்தனின் முகம் போலவே இருந்ததில் சித்தார்த்தனின் மனதில் புயலடித்தது..

"ரவிவர்மன் காப்பாற்றிக் காத்த காஞ்சியைக் காக்க.. மதுரையை மீட்க வந்த குமார கம்பண்ணா வந்தான்.. விஜயநகரப் பேரரசின் இளவரசன் இவன்.. காஞ்சியை ஜெயிச்சு இதன் ராஜாவா அரியணையில உட்கார்ந்தான்.."

வைரத்தின் ஒளிர்விற்காக கண்களை இறுக மூடியிருந்த சித்தார்த்தனனின் மனக் கண்ணில் கனவு போல அந்த காட்சி தோன்றியது.

மதுரை மீனாட்சியம்மன் தோன்றி வாள் ஒன்றை வரமாக கொடுக்கிறாள்... கை கூப்பி மண்டியிட்டு அந்த வாளைப் பெற்றுக் கொள்கிறவனின் நெற்றியில் வைணவத்தின் அடையாளமான 'ல' நாமம் துலங்குகிறது..

அவன் ரங்கநாதரின் திருவுருவச் சிலையை தேரில் அமர்த்தி அரங்கனை முன்னிருத்திப் படையை நகர்த்துகிறான்..

போர் முழக்கமிட்டவனின் முகம் அச்சு அசப்பில் சித்தார்த்தனனின் முகம் போலவே இருந்ததில்

சித்தார்த்தன் கண்களை திறந்து விட்டான்..

"இப்படி.. காஞ்சிபுரத்தை ஆண்ட ராஜாக்கள் எல்லாம் உன்னைப் போல சின்ன வயசிலேயே ராஜ்யத்தைச் சுயமா ஜெயிச்சு அதன் ராஜாக்களா ஆனவங்களாத்தான் இருந்திருக்காங்க.. இந்த மண்ணில் பிறந்த நீ மட்டும் எப்படி இருப்ப..? அதைத்தான் சொன்னேன்.."

டிபனைக் காலி செய்து விட்ட மகனுக்கு காபிக் கப்பை எடுத்துக் கொடுத்தபடி சொன்னாள் நிருபமா.. காபியை உறிஞ்ச ஆரம்பித்த சித்தார்த்தனனின் தலைவலி சற்றுக் குறைவதைப் போல இருந்தது..

"நீரு எங்கேம்மா..?"

"அவ கம்பெனிக்கு போயிருக்கா.. நீ வந்திருக்கிறதச் சொன்னா டாடியும் அவளும் அடுத்த செகண்டிலேயே இங்கே இருப்பாங்க.. சொல்லட்டுமா..?"

"வேண்டாம்.. அவங்க வருகிறப்ப வரட்டும்.."

"அதுவும் சரிதான்.. சஸ்பென்ஸா இருக்கும்.. அதுக்குள்ள நீ கிளம்பி ஓடிற மாட்டயே..?"

"நோ.. நோ.. ஆக்சுவலா மாம்.. லாங் பீரியட் ஃபாரின் டிரிப்புக்கு நான் கிளம்ப வேண்டியிருக்கிறதாலதான் காஞ்சிபுரத்துக்கே நான் வந்தேன்.. நம்ம ஃபேமிலி கூட டைம் ஸ்பெண்ட் பண்ணனும்ங்கிற ஆசை.."

பாசத்துடன் மகனின் தலையைக் கோதிவிட்ட நிருபமா..

"நீ இங்கிருந்தே சென்னைக்குப் போய் வரலாம் சித்.. அதுக்கும் மாட்டேன்னு சொல்லிட்ட.." என்று மனத்தாங்கலுடன் சொன்னாள்..

"அது கன்வினியண்டா இருக்காதும்மா.."

"ம்ப்ச்.. மேரேஜ் பண்ணிக்கடா.. அப்பவாவது என் மகன் மேரேஜ் பண்ணிக்கிட்டு அவன் வொய்போட சென்னையில தனிக்குடித்தனம் பண்றான்னு எனக்கு நிம்மதியா இருக்கும்.."

"ஆரம்பிச்சுட்டிங்களா..?"

அடுத்த சிலநிமிடங்களில் மனதில் எழுந்த நிழல் போன்ற பிம்பங்களிலிருந்து வெளியே வந்து விட்டான் சித்தார்த்தன்.. தாயுடன் அரட்டை அடித்தான்..

"உனக்கேண்டா என் அப்பாவோட அரசியல் பார்வையைப் பிடிக்கலை..?"

"தெரியலை.. பட்.. பிடிக்கலை.."

"உன்னைப் பெரிய அளவில கொண்டு போகனும்னு அப்பா ஆசைப்பட்டார்.."

"இப்பவும் நான் படா பிக் மேன் தான் மம்மி.. தி கிரேட் பிஸினெஸ் மேக்னெட் சித்தார்த்தன்.."

"இல்லேன்னு யார் சொன்னது..?"

மகனைப் பார்த்த நிருபமாவின் விழிகளில் தாய்மை கலந்த பெருமிதம் வழிந்தோடியது.

"உன்னோட டாடி... காஞ்சிபுரத்தில இருக்கிற அவரோட பரம்பரைத் தொழிகளையெல்லாம் தாண்டி புதுசா ஒரு பிஸினெஸ் ஆரம்பிக்கனும்னு நினைச்சார்.. நிருபமா குருப் ஃஆப் கம்பெனிஸை ஆரம்பிச்சு ஜெயிச்சுக் காட்டினார்.. அவரோட மகன் நீ.. விவேகானந்தனோட மகன்ங்கிற அடையாளத்தையும் தாண்டி.. சித்தார்த்தோட டாடி விவேகானந்தன்னு சொல்ல வைச்சிட்ட.. ஐ ரியலி அப்ரிசியேட் யு.."

"எனக்கு அப்ரிசியேட் இல்லியா.. நிருபமா..?"

"எனக்கே அப்ரிசியேட் தர மாட்டாங்க.. உங்களுக்கு எப்படித் தருவாங்க டாட்..? மம்மிக்கு அவங்களோட செல்ல மகன்தான் உயர்த்தி.."

அறைவாசலில் குரல்கள் கேட்டன.. விவேகானந்தனும் நீரஜாவும் வந்து விட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்ட சித்தார்த்தன் திரும்பாமலே..

"ஏய்ய் வாலு..! உனக்கு எதுக்கு இத்தனை பொறாமை..?" என்றான்..

"டாடியை விட்டுட்டியே.."

"அவர் மம்மிகிட்ட ரிக்வஸ்ட்தான் பண்றார்.. உன்னைப் போல போட்டிக்கு வரலை.."

"டாடியையும் மடக்கிப் போட்டிருவியே.. யாரு நீ..?"

"உன் அண்ணன்..!"

அந்த வார்த்தைகளில் நெகிழ்ந்து போன நீரஜா சித்தார்த்தனனின் தோளில் தலை சாய்த்து பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்..

அத்தியாயம் - 80

எங்கோ ஓர் திசையில்..

ஏகாந்தமாய் ஓர்குரல் ஒலிக்கிறது..

ஆத்மார்த்தமான அக்குரல்

உன் மனதுக்குக் கேட்கிறதா ?

வெகுநாள்களுக்குப் பின்னால் குடும்பத்தினருடன் உட்கார்ந்து கதை பேசும் சூழல் கிட்டியிருந்ததில் சித்தார்த்தனின் மனதில் இதமான தென்றல் வீசியது.

கால்கள் இரண்டையும் மடித்து அவன் பக்கமாக திரும்பி சட்டமாக உட்கார்ந்து கொண்டாள் நீரஜா.. பேச்சுக்கு ஒருதரம் அண்ணனை மொத்தி வைத்தாள்..

"என் புள்ளய அடிக்காதேடி.."

செல்லமாக மகளைக் கடிந்தபடி சித்தார்த்தனின் முடியைக் கோதிவிட்ட நிருபமா இந்தப் பக்கமாக உட்கார்ந்நது

கொண்டதில் தாய்க்கும், தங்கைக்கும் இடையில் மாட்டிக் கொண்டான் சித்தார்த்தன்..

ஒருபக்கம் அவனை மொத்துவதற்குத் தோதாக திரும்பி அமர்ந்திருந்த நீரஜா சித்தார்த்தனனிடம் வம்பிழுத்து மொத்து.. மொத்தென்று மொத்தி வைத்தால்.. மறுபக்கம் மகனின் தலைமுடியைக் கலைப்பதையே தாய்மையின் வெளிப்பாடாக நினைத்துக் கொண்டிருக்கும் நிருபமா மகனுக்கு ஆதரவளிக்கிறேன் பேர்வழியென்று அவன் தலைமுடியைக் கலைத்து வைத்தாள்..

இருவருக்கும் மத்தியில் தலை கலைந்து சட்டை கசங்கி மாட்டிக் கொண்டிருந்தவனைப் பார்த்து ரசித்து சிரித்து வைத்து அவன் கடுப்பைக் கிளப்பினார் விவேகானந்தன்..

"என் பாடு உங்களுக்குச் சிரிப்பா இருக்கா டாட்..?"

"இந்தப் பாட்டுக்குத்தான் நீ நம்ம வீட்டிலேயே ஸ்டே பண்ணனும்னு சொல்றது.. தினமும் உன்னைப் பார்த்துக்கிட்டு இருந்தா இவங்களுக்கு உன்னைப் பிய்த்துத் திங்கனும் போல பாசம் பொத்துக்கிட்டு வருமா..? என்றைக்காவது ஒருநாள் கெஸ்ட் போல வந்து போனா இப்படித்தான் ஆகும்.."

"நான் இங்கேயே ஸ்டே பண்ணினாலும் இந்தக் கதைதான் நடக்கும் டாட்.. வருசத்திலே பாதி நாள்.. ஃபாரின் டூரிலேயே கழியுதே.."

"மீதி பாதி நாளை நீ எங்களுடன் ஸ்பெண்ட் பண்ணுவியே.."

விவேகானந்தன் மடக்கியதில் சித்தார்த்தன் பேச்சை மாற்றினான்..

"கம்பெனி எப்படிப் போய்க்கிட்டு இருக்கு டாட்..?"

"நம்ம கம்பெனி எப்படி போய்க்கிட்டு இருக்குன்னு கேள் சித்.."

கண்டிப்புடன் சொன்னார் விவேகானந்தன்.. நீரஜாவின் முகத்தில் இருந்த குறும்பு மறைந்தது.. சிரித்துக்

கொண்டிருந்த நிருபமா மகனைப் பார்த்தாள்.. அவன் நாக்கைக் கடித்துக் கொண்டான்..

"ஈஸி டாட்.. இதைக் கேசுவலாத்தான் நான் கேட்டேன்.."

"கேசுவலாக் கேட்கிறவன்தான் மனசில இருக்கிறதை மறைக்காம கேட்பான் சித்.. உன் மனசில நிருபமா குருப் ஆஃப் கம்பெனிஸின் மேல உரிமையுணர்வு இல்லை.. அதுதான் வார்த்தையில் வந்திருக்கு.."

"ஸோ வாட்..? எனக்குன்னு என் கம்பெனி இருக்கு டாட்.. புராபிட்.. இண்டர் நேசனல் லெவலில் பிஸினெஸ்ன்னு அது எங்கேயோ எட்டாத தொலைவுக்கு போய்க்கிட்டு இருக்கு.. நிருபமா குருப் ஆஃப் கம்பெனிஸை நான் நீரஜாவோடதுன்னு நினைக்கறதில தப்பேதும் இல்லையே.."

சித்தார்த்தனனின் கேள்விக்கு எதையோ சொல்லப் போன விவேகானந்தன் மகளின் முகத்தைப் பார்த்து விட்டு மௌனமானார்.. நிருபமா சங்கடம் கொண்டாள்.. நீரஜாவின் முகம் இறுகியது.. அதுவரை இருந்த விளையாட்டுத்தனம் மறைந்து போனவளாக அவள் சித்தார்த்தனை முறைத்துப் பார்த்து..

"இப்ப நீ என்னதான் சொல்ல வர்ற..?" என்று கடுமையாக கேட்டாள்..

"உனக்கேன் கோபம் வருது..?"

"உன்னோட ஆம்பளைங்கிற திமிர்த்தனமான பேச்சைக் கேட்டா கோபம் வராம என்ன செய்யும்..?"

"ஆம்பளைங்கிற திமிரா..?"

"யெஸ்.. தட்'ஸ் இட். உன் மனசில என்னதான் நினைச்சுக்கிட்டு இருக்கிற..? உன்னாலதான் ஒரு கம்பெனியை ஃபார்ம் பண்ண முடியுமா..? என்னால் முடியாதா..?"

"ஹேய் நீரு.. நான் அப்படி மீன் பண்ணலைப்பா.."

"வேற எப்படி ப்ரோ மீன் பண்ணின..? நீ மட்டும் தான் எம்.பி.ஏ படிச்சிருக்கயா..? நான் படிக்கலையா..?"

"அடடா..! இப்ப நான் என்ன சொல்லிட்டேன்னு சண்டைக்கு வர்ற..?"

"டாடியோட கம்பெனியை நீ ஒன்னும் எனக்கு விட்டுக் கொடுக்க வேண்டாம்.."

"ஓகே..! ஓ.கே..! பட்.. டாடியோட கம்பெனியில எனக்கு மட்டும்தான் ரைட்ஸ் இருக்கா..? உனக்கு இல்லையா..?"

"எனக்கும் இருக்கு.. அவ்வளவுதான்.. ஒட்டு மொத்தமாத் தூக்கி என்கிட்டக் கொடுத்து உன் தியாகத்தை புரூவ் பண்ணனும்னு நினைக்காதே.. ஐ டோன்ட் லைக் இட்.."

கோபமாக போய் விட்டாள் நீரஜா.. அழகான தருணம் கலைந்து போனதைப் போல உணர்ந்தான் சித்தார்த்தன்.. நீரஜாவின் கோபத்தில் நியாயம் உள்ளது என்பதைப்

போல விவேகானந்தன் மௌனப் பார்வை பார்த்தார்.. நிருபமா எதையும் பேசவில்லை.. மகளின் பின்னால் போகாமல் கை விரல்களைக் கோர்த்துப் பிரித்தபடி சிந்தனையாக இருந்தாள்..

"ஏன் டாட் இவ இப்படி இருக்கிறா..?"

தகப்பனாரிடம் நியாயம் கேட்டான் சித்தார்த்தன்.. அவரோ பதிலுக்கு அவள் எப்படியிருக்கிறாள் என்று கேட்டு வைத்தார்..

"சின்ன விசயத்த ஊதிப் பெரிசாக்கறா.."

"நோ சித்..! நீரு அப்படிப்பட்ட பெண்ணில்லை.. அவளைப் போல இண்டெலிஜென்ட் கேர்ளை நீ ரேராத்தான் பார்க்க முடியும்.. யோசிக்காம எதையும் பேச மாட்டா.."

சித்தார்த்தனுக்கு அது தெரியாதா என்ன..? நீரஜாவின் புத்திசாலித்தனமும்.. தெளிந்த நுட்பமான அறிவும்.. அளவாக ஓரிரு வார்த்தைகளில் பேசும் குணமும்.. அவர்களது உறவு வட்டாரத்தில் பிரசித்தி பெற்றதாயிற்றே..

"விவேகானந்தன் ஆண்சிங்கத்தையும், பெண் புலியையுமில்ல பெற்று வைத்திருக்கார்..!"

இப்படித்தான் பேசிக் கொள்வார்கள்.. உணர்ச்சி வசப்பட்டு எதையும் பேசி விடுபவளல்ல நீரஜா.. யோசித்துப் பேசுபவள்..

"இது பாரம்பர்யமான ராஜ குடும்பம் சித்..! மன்னர் பரம்பரையில வந்தவங்க நாம.. மன்னராட்சி மறைந்து போயிருக்கலாம்.. அவங்களுக்குன்னு இருக்கிற சில பாரம்பரிய பழக்க வழக்கங்கள் மறைஞ்சு போகாது.. ராஜ்யத்தை நாம விட்டுக் கொடுத்திருக்கலாம்.. பரம்பரையா கைமாறி நமக்குன்னு வந்துக்கிட்டு இருக்கிற சொத்துக் களையும் தொழில்களையும் விட்டுக் கொடுக்க முடியாது.."

"டாட்..!"

"இது நீ பிறந்த அரண்மனைடா..! இங்கேயிருக்கிற சொத்துக்களுக்கு நீதான் வாரிசு..! ராஜ குடும்பத்தில பிறந்த ஆண்பிள்ளைக கையில அசையாத பரம்பரைச் சொத்து வரும்.. பெண் பிள்ளைகளுக்கு அதுக்கு ஈடான நகைகளையும்.. புதுச் சொத்துக்களையும் கொடுப்பாங்க.. இதுதான் நம்ம குடும்ப வழக்கம்.. அந்த வழக்கப்படிப் பரம்பரையா வந்துக்கிட்டு இருக்கிற சொத்துக்களையும், தொழில்களையும், இந்த வீட்டையும் நீரஜாவுக்கு நான் கொடுக்க முடியாது.. இது அவளுக்கும் தெரியும்.."

"எந்த நூற்றாண்டில இருக்கீங்க டாட்..? இப்பப் போய் இதைப் போல பேசிக்கிட்டு.. பெற்ற பிள்ளைகளில வேறுபாடு காட்டலாமா..?"

"யாரு காட்டினது..? உனக்குத் தெரியுமா..? நீரஜா பெயரில சென்னையில நான் வாங்கிப் போட்டிருக்கிற புராப்பர்ட்டியோட மதிப்பு உனக்குக் கிடைக்கப் போகும் பரம்பரைச் சொத்துக்களை விட அதிகமானது.. அது போக இந்த வீட்டில் பிறந்த பெண்களுக்குன்னு ஒதுக்கி வைச்சிருக்கிற பரம்பரை வைர நகைகள்.."

"டாட்.. ப்ளீஸ்.. போரடிக்குது.."

"நம்ம பரம்பரையைப் பத்தி நான் பேச ஆரம்பிச்சாலே உனக்குப் போரடிக்க ஆரம்பிச்சிரும் சித்.. நீ எதில இருந்து தப்பிக்கப் பார்க்கிற..?"

விவேகானந்தனின் ஆழ்ந்த கேள்வியில் திடுக்கிட்டான் சித்தார்த்தன்.. எப்படி அவர் உணர்ந்தார்..?

"டாட்..!"

"எப்ப உனக்கு விவரம் தெரிய ஆரம்பிச்சதோ.. அந்த வயதிலிருந்து நீ காஞ்சியை விட்டுத் தள்ளியே நிற்கிற சித்.. முதல்ல படிப்புன்னு ஹாஸ்டலுக்குத் தப்பி ஓடின.. அதுக்கடுத்து மேல் படிப்புன்னு ஃபாரினுக்கு தப்பி ஓடின.. திரும்பி வந்ததும் சொந்தமா கம்பெனி ஆரம்பிக்கறேன்னு சென்னையிலேயே ஸ்டே பண்ணிட்ட.. ஏன் சித்..? காஞ்சிபுரத்தில எது உன்னைத் துரத்துகிறது..?"

சித்தார்த்தனின் ஆன்மாவைத் தொட்டு அசைத்துப் பார்த்தது அந்தக் கேள்வி.. சித்தார்த்தன் நிலை குலைந்தான்.. கண்களை இறுக மூடி மனதைச் சமன் செய்து கொள்ள வழியில்லாமல் நிருபமாவும் விவேகானந்தனும் அவனைப் பார்த்தபடியே இருந்ததில் எப்படி அவனை உணர்த்துவது என்று புரியாமல் தவியாய் தவித்தான்..

எது அவனைத் துரத்துகிறது..? யாமினியைச் சந்தித்த அந்த பொன்மாலைப் பொழுதில் மகாபலிபுரக் கடற்கரையில் அவள் உணர்ந்த அதே வினோத அனுபவத்தை அவனும் உணர்ந்தானே.. அதுதான் அவனைத் துரத்துகிறதா..?

நிழல் போல மனதில் ஒலிக்கும் பல குரல்களில் எந்தக் குரல் அவன் குரல்..? எந்தக் குரல் அவனுக்கான குரல்..? என்று தெரியாமல் தத்தளிக்கிறானே.. அந்தத் தத்தளிப்பு அவனைத் துரத்துகிறதா..?

அவனுக்காக காத்திருக்கும் காஞ்சிபுரத்தில் பொதிந்திருக்கும் நினைவலைகளில் கடந்த கால நினைவலைகள் அவனைத் துரத்துகிறதா..?

அவன் யார் என்ற கேள்வி அவனைத் துரத்துகிறதா..?

நரசிம்ம பல்லவனா..? ஆதித்த கரிகாலனா..? மாறவர்மன் சுந்தர பாண்டியனா..? ராஜா ரவிவர்மனா..? குமார கம்பண்ணனா..? ஆதவனா..? இல்லை.. நிகழ்காலத்தில் நிழல் ஆட்ட யுத்தத்தில் சிக்கியிருக்கும் சித்தார்த்தனா..?

யார் அவன்..?

அதற்கான விடை அந்தக் காஞ்சியில்தான் ஒளிந்திருக்கிறது என்று அவனது உள்ளுணர்வு சொல்லியது..

அந்த விடைதான் அவனைத் துரத்துகிறது.. அதைச் சந்திக்கும் தருணத்தைத் தள்ளி போடுவதற்காகத்தான் அவன் ஓரிடத்தில் நிலைத்து நிற்காமல் ஓடிக் கொண்டிருக்கிறானா..?

சித்தார்த்தனுக்கு தலையை வலிப்பதைப் போல இருந்தது.. மகனின் முகத்தில் தெரிந்த உணர்வுகளையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த நிருபமா..

"காபி வேணுமா சித்தார்த்..?" என்றாள்..

பார்க்கும் பார்வையிலேயே மகனின் நோவைக் கண்டு பிடித்து விடும் தாய்மையில் மனம் நெகிழ்ந்தான் சித்தார்த்தன்..

"நோ மாம்.."

நிருபமாவின் கலக்கத்தைப் போக்கும் வகையில் கண்களைச் சிமிட்டி உற்சாகமாக சிரித்தான்.. நிருபமா முகம் மலர்ந்தாள்..

"மேரேஜீக்கு ஓகே சொல்லு சித்..! தஞ்சாவூர்ல இருந்து போன் மேல் போன் போடறாங்க.. கால்கட்டு விழுந்தாலாவது நீ காஞ்சியிலேயே தேங்கி நிற்கிறயான்னு பாக்கலாம்.."

விவேகானந்தனின் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்வது என்று தாயின் வார்த்தைகளில் இருந்து கண்டு பிடித்து

விட்டான் சித்தார்த்தன்..

"எது என்னைத் துரத்துகிறதுன்னு கேட்டிகள்ல டாட்.. காஞ்சிபுரத்துக்கு வந்தா மம்மி எனக்குக் கால்கட்டு போட்டு விடுவாங்களோங்கிற பயம்தான் என்னைத் துரத்துகிறது.."

உரக்கச் சிரித்தவனின் சிரிப்பில் விவேகானந்தனும் கலந்து கொண்டார்.. இரவு உணவுக்குப் பின்னால் அவன் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்த போது நீரஜா அங்கே வந்தாள்..

அவளையே பார்த்த சித்தார்த்தனிடம்..

"ஸாரியெல்லாம் சொல்ல மாட்டேன்.." என்றாள்..

சித்தார்தனனின் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது.. தங்கையின் தலையில் செல்லமாக குட்டினான்.. இருவரும் அங்கிருந்த மர பெஞ்சில் உட்கார்ந்து பேச ஆரம்பித்தார்கள்..

ஊர் கதை.. உலகக் கதைகளையெல்லாம் பேசி முடித்த நீரஜா திடிரென்று..

"அவ எப்படியிருக்கா..?" என்றாள்..

"எவ..?" சித்தார்த்தனுக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

"அவதான்.. சாமினியோ.. யாமினியோ.."

'அடக் கடவுளே..!' என்றிருந்தது சித்தார்த்தனுக்கு..

இப்படியா அழகான யாமினியின் பெயரைக் குதறுவாள்..?

"அவ யாமினி..!"

"என்னவோ ஒன்னு.. அவகிட்டயிருந்து நீ தள்ளியே நில்லு.."

"ஏய்ய்.. என்ன பேசற நீ..? அது என் கம்பெனியில வொர்க் பண்ற ஸ்டாப்.. அவகூட நானெதுக்கு கம் போட்டு ஒட்டிக்கப் போறேன்..?"

"இன்னைக்கு ஒட்டிக்காம இருக்கலாம்.. நாளைக்கு ஒட்டிக்க மாட்டேன்னு என்ன நிச்சயம்..?"

'அப்படியா..?' சித்தார்த்தன் சிரித்துக் கொண்டான்..

யாமினிக்கும் அவனுக்கும் இடையில் இருக்கும் நூதன பந்தத்தைப் பற்றி விளக்கிச் சொன்னாலும் நீரஜா புரிந்து கொள்வாளா என்று யோசித்தான்.. அவனுக்கும் யாமினிக்கும் இடையில் காதல் வருமா..?

வராது என்று அவனால் அடித்துச் சொல்ல முடியவில்லையே.. அது ஏன்..? இரண்டு நாள்களை குடும்பத்துடன் செலவளித்து விட்டு வெளிநாட்டுக்குப் பறந்து விட்டான் சித்தார்த்தன்..

அத்தியாயம் - 81

கண்ணாமூச்சி விளையாட்டை..

கண்ணே..! நாமும் விளையாடலாமா..?

சிக்னல் 'செல்' என்று வழிவிட்டு பச்சை விளக்கை ஒளிர்ந்தது.. சீறிப் பாய்ந்த வாகனங்களுக்கு நடுவினில் யாமினியின் ஸ்கூட்டியும் பாய்ந்தது..

யாமினிக்கு ஏனோ உற்சாகமாக இருந்தது.. இன்னதென்று புரியாத ஓர் சந்தோச அலை மனதை வியாபிப்பதை உணர்ந்தாள்.. பார்க்கும் இடங்களெல்லாம் அவளுக்குச் சந்தோசத்தையே தந்தன.. முந்தைய தினத்தில் ஊற்றிய மழையால் கழுவி விடப்பட்டிருந்த சாலை கூட அவளுக்கான வரவேற்பை அளிப்பதைப் போல அவளுக்குத் தோன்றி வைத்தது.. பாட வேண்டும் போலத் தோன்றியதில் ஏதோ ஒரு பாடலை 'ஹம்' செய்து வைத்தாள்..

அவளுக்கு அருகில் பயணித்த புல்லட் இளைஞன் அவளது 'ஹம்மிங்' கில் கவரப்பட்டவனாக விசிலடித்தான்.. யாமினி லேசாக திரும்பிப் பார்த்ததும் புல்லட்டின் வேகத்தைக் கூட்டி அவனை.. ஹீரோ போல காட்டிக் கொண்டான்..

'போடா.. டேய்..'

யாமினி அவனை கண்டு கொள்ளாமல் ஹம்மிங்கைத் தொடர்ந்தாள்.. அவன் வேகம் குறைத்து அவளுக்கு இணையாக வண்டியை ஓட்டிப் பார்த்தான்.. யாமினி திரும்பியும் பார்க்காததில்..

'இது வேலைக்கு ஆகாது..' என்று பறந்து விட்டான்..

'இவனைப் பாக்கத்தான் வீட்டை விட்டு வெளியே வந்திருக்கேனா..?' உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள் யாமினி..

இந்தமுறை அவளருகில் சென்ற கார் வேகம் குறைத்தது..

'இப்ப யாரு..?'

காரை ஓட்டிக் கொண்டிருந்தவன் யாமினியை பார்த்த பார்வை அவளுடைய உதட்டுச் சுழிப்பு அவனுக்கானதா என்று கேட்டு வைத்தது..

'அதுக்குத்தானே கிளம்பி வந்திருக்கேன்..'

யாமினி முறைத்த முறைப்பில் அவன் ஆக்ஸிலேட்டரை ஓங்கி மிதித்தான் கார் பறந்தது..

'என்னங்கடா இது..! சுதந்திர இந்தியாவில ஒரு பாட்ட ஹம் பண்றதுக்கும்.. உதட்டைச் சுழிச்சு அழகு காட்டறதுக்கும் உரிமை இல்லாம போயிருச்சா..?'

இந்த வியாக்கினத்தை அவள் அனுராதாவிடம் சொல்லியிருக்க வேண்டும்..

"அது சரி.." என்றபடி அவள் ஒரு மார்க்கமாக மகளை தலையோடு கால்வரை ஒரு மார்க்கமாக பார்த்து வைத்திருப்பாள்..

"ரோட்டில வண்டியை ஓட்டறவ ரோட்டைப் பாத்து வண்டிய ஓட்டறதை விட்டுட்டு.. பாட்ட ஹம் பண்ணினாளாம்.. உதட்டச் சுழிச்சு அழகு காட்டினாளாம்.. இப்படியெல்லாம் பண்ணினா.. உன் பக்கத்தில வண்டிய ஓட்டறவன் உன்னைப் பாத்து வண்டிய ஓட்டுவானா இல்ல ரோட்டப் பாத்து வண்டிய ஓட்டுவானா..? இதில சுதந்திரத்த வேற நீ வம்புக்கு இழுக்கிற.. பக்கத்தில வண்டி ஓட்டறவன சுதந்திரமா வண்டி ஓட்ட விடாம நீ டிஸ்டர்ப் பண்றதுக்கு சுதந்திரம்தான் உன்னைக் காச்சு காச்சுன்னு காச்சனும்.."

மகளைப் போதுமான அளவுக்கு காய்ச்சி எடுத்து விட்டு..

"எத்தனை பேரை ஆக்ஸிடெண்ட் பண்ண வைச்சிருப்ப..?" என்று புள்ளி விவரம் வேறு சேகரித்திருப்பாள்..

'அம்மான்னா அம்மாதான்..'

யாமினிக்கு சிலாகிப்போடு கூடிய சிரிப்பு வந்தது.. முன்னால் போன பல்சரில் இருந்தவன் அவனுடைய வண்டியின் கண்ணாடி வழியாக யாமினியின் சிரிப்பைப் பார்த்து விட்டு வேகம் குறைத்தான்.. யாமினியை தெரிந்தவனைப் போல பார்த்து சிரித்து வைத்தான்..

'இவன் ஆரம்பிச்சிட்டானா..?'

யாமினி அவனை முறைத்தாள்.. அவனோ அவளது முறைப்பை 'சைட்' என நினைத்துக் கொண்டு அசடு வழிந்தான்.. அவனை ஒட்டினாற்போல ஸ்கூட்டியைச் செழுத்திய யாமினி..

"மிஸ்டர் பஃபேலோ..! இது உங்க டாடி வீட்டு ரோடா..?" என்று கேட்டு வைத்தாள்..

அவன் சரியான நக்கல் பிடித்தவனாக இருந்து தொலைத்தான்..

"நோ.. நோ.. என் அங்கிள்.. அதாவது உன்னோட டாடி வீட்டு ரோடு.." என்று சொல்லி வைத்தான்..

"அட..! எங்கப்பா உனக்கு அங்கிளா..?"

"பின்னே..? இல்லையா..?"

"இல்லை.. எங்க வீட்டில அப்பா மட்டும் இல்லை.. அண்ணனும் இருக்கிறான்.. அவனுக்கு ரோட்டோர ரோமியோக்களப் பாத்தா கையைக் காலை உடைக்கனும் போல வெறி வெறியா வரும்.. அப்படியொரு நேர்த்திக்கடன் அவனுக்கு.. இது வரைக்கும் ஆயிரம் ரோமியோக்கள புத்தூருக்கு கட்டுப் போட்டுக்கச் சொல்லி வழி காட்டி அனுப்பி வைச்சிருப்பான்.. நீ ஆயிரத்து ஒன்னு.. என்ன ஒரு கொடுப்பினை உனக்குக் கிடைச்சிருக்குன்னு பார்த்தியா.. என்ன..? எங்கண்ணனுக்கு போனைப் போடவா..?"

"என்ன..? மிரட்டறியா..?"

"இல்லேன்னு சொல்ல மாட்டேன்.. ஏன்னா எனக்குப் பொய் சொல்ல வராது.."

"உங்கண்ணன் என்ன பெரிய இவனா..?"

"உனக்குத் தில்லிருந்தா வண்டியை ஓரமா நிப்பாட்டிட்டு எங்கண்ணக்காக வெயிட் பண்ணு.. அவன் வந்தா உன் கொஸ்டினுக்கு ஆன்சர் கிடைச்சிரப் போகுது."

சைட் அடிக்க வந்தவனை ஃபைட்டுக்கு அவள் அழைத்ததில் அவன் எதற்கடா வம்பு என்று பறந்து விட்டான்..

'அஃது..' முறைப்புடன் ஸ்கூட்டியின் வேகத்தைக் கூட்டினாள் யாமினி..

'யாருகிட்ட..?'

எரிச்சல் வந்தாலும் மனதில் உல்லாசம் குறையவில்லை.. வந்த வேகத்திலேயே எரிச்சல் ஓடி விட.. யாமினி உற்சாகம் மறையாத மனநிலையுடன் கம்பெனியின் வளாகத்திற்குள் வண்டியைச் செழுத்தினாள்.. பார்க்கிங் கிற்கான இடத்தில் ஸ்கூட்டியை நிறுத்தி விட்டு நிமிர்ந்து பார்த்தாள்..

'சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனீஸ்..'

கரும்பச்சை நிறப் பளிங்குக் கல்லில் பொன்னிற எழுத்துக்களால் பொறிக்கப் பட்டிருந்த எழுத்துக்களின் மீது

அவளுக்குள் இனம் தெரியாத அபிமானம் உண்டானது.. அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தவளின் தோள் தட்டி..

"ஹாய்.. குட்மார்னிங்..!" என்றாள் ரேகா..

"வெரி குட்மார்னிங்.."

பொங்கிச் சிரித்தாள் யாமினி.. அவளை வியப்போடு பார்த்த ரேகா..

"ஒன் மன்த்தா உம்மணாம் மூஞ்சியா இருந்த.. இன்னைக்குத்தான் உன் முகத்தில சிரிப்பையே பார்க்க முடிஞ்சிருக்கு.." என்று சொன்னாள்..

"ஈஸிட்..?"

"ஷ்யூர்.."

அவர்கள் பேசியபடி கம்பெனியின் படிகளில் ஏறினார்கள்.. ரிசப்சனில் வழக்கம் போல வயலெட் போனை காதுக்குக் கொடுத்திருந்தாள்.. ரேகாவும் யாமினியும் சங்கேதமாய் பார்த்துக் கொண்டார்கள்..

"ஜி.எம் தினமும் வாங்கு.. வாங்குன்னு வாங்கித்தான் பாக்கறாரு.. இவ மாறவே மாட்டேங்கிறா.."

"உன்னையும், என்னையும் வேணும்னா மாறச் சொல்லுவாளாயிருக்கும் ரேகா.."

ரகசியக் குரலில் கிசுகிசுத்து சிரித்தவர்கள் ரிசப்சனைக் கடந்து போகாமல் நின்றதில் வயலெட் பேச்சை நிறுத்தாமல் புருவங்களை மட்டும் உயர்த்தினாள்..

"இவளுக்கு இருக்கிற தில் ஜி.எம்முக்கூட வராது.." சன்னக் குரலில் சொன்னாள் ரேகா..

இவளுக்கு ஜி.எம் என்ற வார்த்தையை நொடிக்கொருமுறை சொல்லாமல் இருக்க முடியாது என்று நினைத்துக் கொண்டாள் யாமினி.. தாமோதரனின் மீதான ரேகாவின் பிரேமை குறித்த பரிதாபம் அவளுக்குள் எழுந்தது.. தாமோதரனுக்கு ரேகாவிடம் எந்த வித ஈர்ப்பும் இல்லை

என்பதை யாமினி உணர்ந்திருந்தாள்.. அன்பான தோழியின் பிரியம் கானல் நீரின் மீது படிவதைக் கண்டும் காணாமல் இருக்க நேர்வதில் அவள் மனதில் சங்கடம் எழுந்தது..

சொல்லி விடலாம்.. வேண்டாம் ரேகா.. உனது ஆசை நிறைவேறாது.. ஜி.எம்மின் மனதில் நீயில்லையென்று உணர்த்தி விடலாம்.. அதற்கு முன்பாக ரேகா ஜி.எம்மின் மீது அவளுக்கு ஈர்ப்பு இருப்பதை ஒப்புக் கொள்ள வேண்டாமா..?

ரேகா எதையும் வாய்திறந்து.. மனம் திறந்து ஒப்புக் கொள்ளாத போது யாமினியாக அட்வைஸ் பண்ணுவது நாகரிகமாகுமா..?

'இது ஃபேவரிசமாகக் கூட இருக்கலாம்..'

பொய் சமாதானம் என்பதைத் தெளிவாக அறிந்திருந்தும் தன் மனதிற்கு சமாதானம் சொல்லி அடக்கி வைத்தாள் யாமினி..

"அர்ஜெண்டா ஒரு போன் கால் பண்ணனும் வயலெட்.." சத்தமாகச் சொன்னாள் ரேகா..

வயலெட்டின் கண்களில் சினம் வந்தது.. கையிலிருந்த போனின் வாய் பகுதியை மூடியபடி..

"உன்னோட செல்போன் எங்கே போச்சு..?" என்று சிடுசிடுத்தாள்..

"உன்னோட சொல்போன் எங்கே போச்சோ.. அங்கே போச்சு.." நெற்றியடியாய் போட்டுத் தாக்கினாள் ரேகா..

வயலெட்டின் முகம் அஷ்ட கோணலானது.. அதை செல்போனில் படம் பிடித்துக் கொள்ளச் சொல்லி ரகசியமாக அறிவுறுத்தினாள் ரேகா.. யாமினிக்கு சிரிப்பு வந்தது.. அதில் வயலெட்டுக்கு கடுப்பு வந்தது..

"ஆபிஸ் மேட்டரா பேசிக்கிட்டு இருக்கேன்.." ரேகாவை முறைத்தபடி சொன்னாள் வயலெட்..

"அட..! நானும் ஆபிஸ் மேட்டராத்தான் பேசனும் வயலெட் உன்னைப் போலவே என்னையும் நினைச்சிட்டயா..? நானெல்லாம் ஆபிஸ் போனை ஆபிஸ் மேட்டர் பேசறதுக்கு மட்டும் யூஸ் பண்ற ஜாதி..!"

"என்ன ரேகா.. வாய் நீளுது.."

"இல்லையே.. என் வாய் என் கிட்டத்தான் இருக்கு.. உன் வாய்தான் போன் பேசறப்ப சிரிக்கறேன் பேர்வழின்னு இந்தக் காதில இருந்து அந்தக் காது வரைக்கும் நீளுது.."

வயலெட்டிடம் இருக்கும் ஆபிஸ் போனை கைப் பற்றாமல் விடுவதில்லை என்ற கங்கணம் கட்டிக் கொண்டு விடாக் கண்டியாய் அங்கேயே நின்றாள் ரேகா..

வயலெட்டோ போனை கை விடக் கூடாதென்ற வைராக்கியத்துடன் அதை இறுகப் பிடித்தவளாக கொடாக் கண்டியாய் கேள்வி கேட்டாள்..

"உன் டேபிள் மேல இருக்கிற ஆபிஸ் போன் கனெக்சன் என்ன ஆச்சு..?"

"எதுக்கு கேட்கிற..?"

"உனக்கு இங்கே நின்னு பேச வசதிப்படாது.. உன் சீட்டுக்குப் போய் உட்கார்ந்து பேசு.. அதுதான் தோது.."

"யாருக்கு..?"

"உனக்கு.."

"எனக்கு எது தோதுன்னு நீ டிசைட் பண்ணாதே.. அதை நான்தான் டிசைட் பண்ணனும்.."

"இப்ப என்னதான் சொல்ல வர்ற..?"

"எனக்கு போன் வேணும்.."

"கொடுக்க முடியாது.."

"அப்ப நானே எடுத்துக்கறேன்.."

வயலெட் எதிர்பாராத சமயத்தில் அவள் கையிலிருந்த போனை ரேகா கைப்பற்றி விட.. அவசரமாக எழுந்து

அதைப் பறித்த வயலெட் போனை கட் பண்ணி அதன் இடத்தில் வைத்தாள்..

"இப்பப் பேசித் தொலை.."

"இதை அப்பவே சொல்றதுக்கென்ன..?"

"அப்பைக்கும்.. இப்பைக்கும் இடையே ரொம்ப நேரமாகிரலை.. ஜஸ்ட் எ மினிட்தான்.."

"அந்த ஒன்மினிட்ல எனக்கு பேசனும்கிற இண்ட்ரெஸ்டே போயிருச்சே.."

இப்படிச் சொன்னவளை கொலைவெறியுடன் முறைத்தாள் வயலெட்..

"காலையிலேயே வந்து கடுப்பைக் கிளப்பறியே.. உனக்கு அறிவுங்கறதே இல்லாம போயிருச்சா..?"

"ஆமா வயலெட்..! என்னத்தைச் செய்யறது.. இத்துனூண்டு அறிவை வைச்சுக்கிட்டு வாழறது இம்சையாத்தான் இருக்கு.. உன்கிட்டக் கடன் வாங்கலாம்ன்னா உன் தலையில களிமண்தான் இருக்கு.. மேல்மாடி காலியாயிருக்க உன்னை வைச்சுக்கிட்டு நான் என்ன செய்ய சொல்லு.."

வயலெட் எதைச் சொன்னாலும் அலட்டிக் கொள்ளாமல் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள் ரேகா.. யாமினிக்கு சிரிப்பு வந்தது.. சிரித்துத் தொலைத்தால் வயலெட்டின் கடுங்கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்பதால் சிரிப்பை அடக்கிக் கொண்டு சாதாரணமாக முகத்தை வைத்துக் கொள்ளும் பிரயத்தனங்களை மேற்கொண்டாள்.. என்னதான் அவள் பிரயத்தனங்களை மேற்கொண்டாலும் வந்து விட்ட சிரிப்பு போவேனா என்று அவளுடன் மல்லுக்கட்டி நின்று.. உனக்கும் பெப்பே.. உன் தோழி ரேகாவுக்கும் பெப்பே என்று போக்குக் காட்டியது..

'வராத சிரிப்ப வா.. வான்னு வெத்தல பாக்கு வைத்து அழைத்தாலும் வராது.. வந்து விட்ட சிரிப்பு போ.. போன்னு கையெடுத்துக் கும்பிட்டாலும் போகாது..'

யாமினியின் மனதில் தத்துவம் தோன்றித் தொலைத்தது.. இதை அப்புறமாய் ரேகாவிடம் சொல்ல வேண்டும் என்று மனதுக்குள் குறித்துக் கொண்டாள் யாமினி..

'இப்பேற்பட்ட ஆழ்ந்த தத்துவத்தைக் கேட்டால் ரேகா என்ன செய்வாள்..? சிரிப்பாளா..?'

யாமினியின் நகைச்சுவைக்கு முகம் மலர்வதை விட அதிகமாக தாமோதரனைப் பற்றிய பேச்சிற்குத்தான் அவள் முகம் மலர்வாள் என்று யாமினிக்குள் தோன்றியதில் வந்த சிரிப்பு தானாக யாமினியை விட்டு ஓடிப் போய் விட்டது..

மேல்மாடி காலியென்று ரேகா சொல்லி விட்டதில் கடுப்பாகி கனலாகியிருந்த வயலெட்..

"அப்படின்னா.. இதோ இருக்கா பாரு அறிவுஜீவி.. இவகிட்ட கொஞ்சம் அறிவைக் கடனா வாங்கிப் பிழைத்துக்க.." என்று யாமினியை கை காட்டினாள்..

"ஆஹா..! என் பிழைப்புக்கு நல்ல வழியைக் காட்டிட்ட வயலெட்.. நீ வாழ்க..! உன் கொடை வாழ்க..! பட்.. இவளோட அறிவை உனக்குக் கடன் கொடுக்கனும்னு இவ பிளான் பண்ணியிருக்களாம்.. உனக்குக் கடன் கொடுத்தது போக மிச்சம் மீதி அறிவு இவளுக்குக் கூட மிஞ்சுமான்னு தெரியலையாம்.. இதில நானும் கடன் கேட்டா என்ன செய்வா..? நினைத்துப் பாரு.."

இமைகளைக் கொட்டிக் கொட்டி ரேகா நியாயம் பேசியதில்..

"யு.. யு.." என கோபத்தில் மூச்சு வாங்கினாள் வயலெட்..

"நான்.. நான்தான்.."

போடி.. எனும் விதமாக அன்றைய வெறுப்பேற்றலை வெற்றிகரமாக முடித்து விட்டுக் கிளம்பிய ரேகா போகிற போக்கில் கேட்டாள்..

"ஏன் வயலெட்..? முக்கியமான ஆபிஸ் காலை பேசிக்கிட்டு இருக்கிறப்பவே கட் பண்ணிட்டு என்கூட பைட் பண்ணிக்கிட்டு இருக்கியே.. எப்படி..?"

வயலெட்டின் முகம் அஷ்ட கோணலாக மாறினது..

அத்தியாயம் - 82

மழையில் நனைந்த சிட்டுக்குருவி..

ஈரம் உலர்த்த கூட்டைத் தேடுகிறது..

"நீ இருக்கியே.."

நினைத்து நினைத்துச் சிரித்தாள் யாமினி.. அவளை அப்படிச் சரிக்க வைத்திருந்த ரேகாவோ கடமையே கண்ணானவளாய் கம்யூட்டரை உயிர்ப்பித்து ஈமெயிலை செக் பண்ணிக் கொண்டிருந்தாள்..

"ஆபிஸ் போனை பாதியிலேயே கட் பண்ணிட்டு பைட் பண்றியே.. எப்படின்னு கேட்டு வைச்சியே.. ஹா.. ஹா.."

"அவ ஆபிஸ் மேட்டரைப் பேசிக் கிழிச்சிட்டாலும்.."

"அவ முகம் விளக்கெண்ணையைக் குடிச்சதைப் போல ஆகிருச்சு.."

"இஞ்சி தின்ன குரங்கைப் போல ஆகிருச்சுன்னு சொல்லு.. அவ மூஞ்சி குரங்கு மூஞ்சிதானே..?"

தீவிரமான முகபாவனையுடன் ரேகா சொல்ல யாமினிக்கு மறுபடியும் சிரிப்பு வந்து தொலைத்தது.. கைப்பையில் மேக்-அப் பாக்ஸீடன் இருக்கும் வயலெட் அடிக்கடி தன் முகத்தை சீர் திருத்திக் கொள்வாள்..

'அவ மட்டும் இதைக் கேட்டிருக்கனும்..'

தலையை ஆட்டியபடி கம்யூட்டரின் மௌசைத் தொட்டவளின் எதிரே நிழல் படிந்தது.. அசட்டையாக நிமிர்ந்தாள்..

"இன்னைக்கு முக்கியமான மெயில் ஒன்னு வர வேண்டியிருக்கு.." என்றபடி தாமோதரன் நின்றிருந்ததில் எழுந்து விட்டாள்..

"ஏன் எழுந்துக்கறீங்க..? இதை மரியாதைன்னு நான் எடுத்துக்குவேன்கிற நினைப்பா..? ஆக்ட் பண்றீங்களா..?"

'என்ன கொடுமை இது..!' யாமினிக்கு வெறுத்துப் போய் விட்டது..

அவனைப் பார்த்ததும் இயல்பாக அவள் எழுந்து கொண்டது அவன் மீதான அவளின் மரியாதையை வெளிப் படுத்துகிறது.. என்னதான் அவன் அவளைக் காய்ச்சு காய்ச்சென்று காய்ச்சி படுத்தி எழுத்தாலும்.. அவன் மீது அவளது ஆழ்மனதில் ஆழ்ந்த மரியாதையும் அபிமானமும் உண்டு.. தாமோதரனைப் பற்றிக் கோபமாகவும் குறைவாகவும் ஓர்நாளும் யாமினி பேசியதில்லை..

அப்படியிருக்க அவளைப் பார்த்து அவன் நடிக்கிறாயா என்று கேட்கலாமா..?

"இது ஷீட்டிங் ஸ்பாட்டில்லை சார்.. கம்பெனி..! நீங்களும் ஃபிலிம் டைரக்டர் இல்லை சார்.. ஜி.எம். ஸோ.. இங்கே நான் ஆக்ட் பண்ண வேண்டிய அவசியம் எங்கேயிருந்து வரப் போகுது..?"

"அப்படியா..?"

அமர்த்தலாக அவன் கேட்ட விதத்தில் 'அப்படியே தான்..' என்று சொல்லிவிட வேண்டுமென்ற வெறி அவள் மனதில் எழுந்தது.. கோபத்தை அடக்கிக் கொண்டு..

"என்ன மெயில்ன்னு சொல்லுங்க சார்.." என்றபடி சீட்டில் உட்கார்ந்து கம்யூட்டரில் கவனமானாள்..

எதுவுமே நடக்காததைப் போல இயல்பாக முகத்தை வைத்துக் கொண்டு தாமோதரன் விவரம் சொன்னான்.. அதற்கான பதிலை எப்படி அனுப்ப வேண்டும் என்று யாமினி கேட்டபோது..

"இன்னும் இதையெல்லாம் நீங்க கற்றுக்கலையா..?" என்று அவள் மூக்கை உடைத்தான்..

'போடா டேய்..!' யாமினி மனதுக்குள் பொருமினாள்..

'உன்னை எனக்குத் தெரியாதா..? நானா பதில் அனுப்பனா இந்த ஆபிசில் நீ ஜி.எம்மா.. இல்லை நான் ஜி.எம்மான்னு கேட்ப.. அந்த அவதிக்கு இந்த அவதியே தேவலாம்..'

அவள் மனதிலிருப்பதை படிக்க முயல்பவனைப் போல உற்றுப் பார்த்தான் தாமோதரன்..

யாமினி அலட்டிக் கொள்ளவேயில்லை.. உடைந்த மூக்கைப் பற்றிய பிரக்ஞையே இல்லாதவளைப் போல..

"இல்லை சார்.. உங்ககிட்ட கற்றுக்கிட்டுத்தான் பதில் கொடுத்தாகனும்.." என்று சொன்னாள்..

"அப்படியா..?" என்று மறுபடியும் கேட்டு வைத்த தாமோதரனின் முகத்தில் உன்னை நானறிவேன் என்ற செய்தி எழுதி ஒட்டப் பட்டிருந்தது..

'நீ எப்படி வேணும்னாலும் நினைத்துக்க சாமி.. ஐ டோன்ட் கேர்..' அசையாமல் உட்கார்ந்திருந்தாள் யாமினி..

"ஓகே..! ஆன்சரை நோட் பண்ணிக்கங்க.."

தாமோதரன் டிக்டேட் பண்ண ஆரம்பித்தான்.. வெகு கவனமாக குறிப்பெடுத்துக் கொண்டாள் யாமினி..

"டவுட் இருக்கா..?"

"இல்லை சார்.."

"ம்ம்ம்.."

புருவங்கள் முடிச்சிட யாமினியைப் பார்த்தவனின் முகத்தில் ஏதோ ஒன்று இருந்தது.. அது என்னவாக இருக்கும் என்று குழம்பிப் போன யாமினியிடம் சாதாரணமாகச் சொல்வதைப் போல..

"இன்னைக்கு சித்தார்த்தன் ரிட்டர்ன் ஆகிறான்.. ஸோ.. ஆபிஸ் டீடெயில்ஸை சரிபார்த்து வைத்துக்கங்க.. அவன்

வந்ததும் கேட்பான்... சொல்ல வேண்டி யிருக்கும்.." என்றான்..

"எம்.டி இன்னைக்கு வருகிறாரா..?"

யாமினியின் முகம் ஜொலித்தது.. அவள் கண்களில் தெரிந்த எதிர்பார்ப்பு கலந்த குதூகலத்தில் தாமோதரன் புருவங்களைச் சுருக்கி அவளை முறைத்துப் பார்த்து அவன் அதை விரும்பவில்லையென்பதை பட்டவர்த்தனமாக உணர்த்தினான்..

மற்ற நேரங்களில் என்றால் யாமினி அந்த புருவச் சுருக்கத்தை உடனடியாக உணர்ந்திருப்பாள்.. அப்போது அப்படியல்லவே..

ஒரு மாதமாக காண முடியாமல் இருந்த சித்தார்த்தனை அன்று அவள் காணப் போகிறாள் என்பதில் அவள் மனம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது.. அன்று காலையிலிருந்து ஏன் அவள் மனம் அத்தனை குதியாட்டம் போட்டதென்று அவளுக்கு விளங்கி விட்டது..

சித்தார்த்தன் ஊர் திரும்பப் போவதை அவள் மனம் எப்படி அறிந்தது..?

அவள் முகத்தையே ஊன்றிப் பார்த்துக் கொண்டிருந்த தாமோதரன் கடுமை காட்டினான்..

"நீங்க சித்தார்த்தனனின் பெர்சனல் செக்கரட்டரி.."

அவள் இடம் எதுவென்பதை அவளுக்கு அறிவுறுத்துகிறானாம்..

'எனக்கு இது தெரியாதா..? நீ சொல்லித்தான் தெரியனுமா..?'

"அதை மனசில வைத்துக்கிட்டு வேலையைப் பாருங்க.."

வேறு எதையும் அவள் மனதில் வைத்துக் கொள்ளக் கூடாதாம்..

'வைத்துக்கிட்டா என்ன செய்வே..?'

"மறந்துராதீங்க.."

அவள் செக்கரட்டரி மட்டும்தான் என்பதை மறந்து விடக் கூடாதாம்..

'மறந்தா..?'

"உங்க வேலையைக் காப்பாத்திக்கிறது உங்க கையில்தான் இருக்கு.."

இல்லாவிட்டால் அவளை வேலையை விட்டுத் துரத்தி விடுவானாம்..

'துரத்தேன்.. யாரு வேண்டாம்ன்னு சொன்னது..?'

"வேலையை மட்டும் பாருங்க.."

சித்தார்த்தனை மட்டும் பார்க்கக் கூடாதாம்..

'பார்த்தா..?'

யாமினி மனதுக்குள் கேள்வி கேட்டுக் கொண்டிருப்பதை அறிந்து வைத்திருந்த ஆழ்ந்த முறைப்பை முறைத்துவிட்டு அன்றைய மண்டகப்படியை வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்துவிட்டு அங்கிருந்து நகர்ந்தான் தாமோதரன்..

"குட் மார்னிங் சார்.."

அக்கவுண்ட் செக்சனிலிருந்து வந்து கொண்டிருந்த ரேகா பரபரத்தாள்..

"வெரி குட் மார்னிங்.."

அவளிடம் மட்டும் சிரித்த முகமாய் பேசிவிட்டுப் போய் விட்டான் தாமோதரன்..

"நைஸ் கை.."

ரேகா சொன்னதற்கு யாமினியிடமிருந்து எந்த பதிலும் வராததில் யாமினியைப் பார்த்தவள்..

"ஆர் யு ஆல்ரைட்..?" என்று கேட்டாள்..

"நம்ம அன்பான ஜி.எம் வந்து போன பின்னால எப்படி ரேகா ஆல்ரைட்டா இருக்க முடியும்..?" என்று பதிலுக்கு கேட்டு வைத்தாள் யாமினி..

"வாட் எ பிட்டி..!"

ரேகா சலித்துக் கொண்டதில் யாமினியைத் திட்டியதற்காகத்தான் சலித்துக் கொள்கிறாள் என்று நினைத்துக் கொண்ட யாமினி..

"விடுப்பா.. இது தினசரி நடக்கிறதுதானே..?" என்றாள்..

"ஊஹூம்.. ஜி.எம் உன் சீட்டுக்கு வர்ற நேரம் எனக்குத் தெரியும் யாமினி.. அந்த டயத்தில நான் எங்கேயும் நகர மாட்டேன்.. இன்னைக்கு என்னடான்னா நான் அக்கவுண்ட்ஸ் செக்சனுக்குப் போயிட்டு வர்றதுக்குள்ள அவர் வந்துட்டுப் போயிட்டார்.." சோகமாக முகத்தை வைத்துக் கொண்டாள் ரேகா..

'இவள் இருக்காளே..' யாமினிக்கு வெறுத்துப் போய் விட்டது..

"அந்த உர்ருன்ன முஞ்சியைப் பார்க்கலைன்னா என்ன..?"

இவள் உர்ரென்று முகத்தை வைத்துக் கொண்டு எரிந்து விழுந்தாள்..

"என்னடி இது..? ஜி.எம்மைப் பத்தி நானென்ன புதுசாவா அப்ரிசியேட் பண்றேன்..? யூசுவலா பேசறதைப் போலதானே பேசறேன்..?" புரியாமல் விழித்தாள் ரேகா..

"பெரிய ஜி.எம். நீதான் அவரை மெச்சிக்கனும்.."

யாமினி கடுகடுப்புடன் வேலையைத் தொடர்ந்தாள்.. ரேகா யாருடனோ செல்போனில் பேசிவிட்டு... அணைத்தவள் யாமினி பக்கம் திரும்பி..

"ஹேய்.. யு நோ.. நம்ம எம்.டி ரிட்டர்ன் ஆகிக்கிட்டு இருக்காராம்.." என்று கூவினாள்..

'எனக்குத் தெரியாதா..?' யாமினியின் மனம் பூவாய் மலர்ந்தது..

அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் அசுவராஸ்யமாய் காட்டிக் கொண்டாள் யாமினி..

"வந்தா நமக்கென்ன..? அவர் இன்னைக்கு நேற்றா ஃபாரின் டூர் போறார்..? அடிக்கடி போய் வருகிறவர்தானே.. இதுக்குப் போய் இவ்வளவு எமோசனல் ஃபீல்ங்கைக் கொட்டற..?"

"இது யூசுவல் டிரிப்பில்லைடி யாமினி.. ஒரு மல்ட்டி இண்டர் நேசனல் கம்பெனியோட காண்ட்ராக்ட் சம்பந்தமாத்தான் நம்ம எம்.டி பாரின் போயிருந்தாள்.. டீலிங் வெற்றிகரமாக முடிஞ்சிருச்சாம்.. அந்தக் கம்பெனியோட காண்ட்ராக்ட் நம்ம கம்பெனிக்கே கிடைச்சிருச்சாம்.. வாட் எ பிளஸெண்ட் நியூஸ்ய்யா..! இதை செலபரேட் பண்ண பார்ட்டி கொடுக்கப் போகிறாங்களாம்.."

"எப்ப..?"

"நாளைக்கு.. இன்னக்கா கொடுக்க முடியும்..?"

"ஏனாம்..? இன்னைக்கு நாள் நல்லாயில்லையா..?"

"அப்படியில்லைடி யாமினி.. பார்ட்டின்னா.. அதுக்கான மூடே வேற மாதிரியிருக்கனும்.. ஃபரீ மைண்டா.. ஆபிஸ் பிராப்ளம்சை ஆபிஸிலேயே மூட்டை கட்டிப் போட்டுட்டு.. அழகாய் டிரெஸ் பண்ணிக்கிட்டுப் போகனும்.. அது பார்ட்டி..! அதை விட்டுட்டு ஆபிஸில் கான்சண்ட்ரேட் பண்ணின மைன்டோட அழுது வடியற டிரஸ்ஸோட.. ஆக்கப் பரக்க வேலைகளை முடிச்சுட்டு.. வீட்டுக்குப் போகிற அவசரத்தோடும்.. நினைவோடும் நின்றா அது பார்ட்டியா..?"

"நாளைக்கு மட்டும் ஆபிஸ் இருக்காதா..?"

"ஹோல் ஆபிஸீம்.. ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்கு ஆஜராகிடுவோம்.. லன்ச்சுக்கு மேலேதான் ஆபிஸீக்கு வருவோம்.. பார்ட்டியன்னக்குப் பார்க்கனுமே.. எல்லோருமே முகமூடியைக் கழற்றி வைச்சுட்டு.. ஃபிரண்ட்லியா பேசிப் பழகுவாங்க.. நம்ம எம்.டியும், ஜி.எம்மும் ஒருதடவை டான்ஸ் பண்ணுவாங்கன்னா பார்த்துக்கயேன்.."

'அட..!' ஆச்சரியத்துடன் நிமிர்ந்தாள் யாமினி..

"என்னடி சொல்ற..?"

"யெஸ் யாமினி..! அன்றைக்கு மட்டும் யாரும் யார்கிட்டயும் பந்தா காட்ட மாட்டாங்க.. டாமினேட் பண்ண மாட்டாங்க.."

"நிஜமாவே நம்ம எம்.டியும், ஜி.எம்மும் டான்ஸ் ஆடுவாங்களா..?"

"இதில் உனக்கென்னடி இத்தனை சந்தேகம்..?"

"நம்ப முடியலைடி.."

"நம்புடி.. நம்பிக்கைதான் வாழ்க்கை.."

"புல்லரிக்குது போ.."

"எதுக்கு..?"

"உன் தத்துவத்தைக் கேட்டு.."

"ஹா.. ஹா.."

"நம்ம எம்.டியைக்கூட ஒரு வகையில சேர்த்திரலாம்.. சம் டைம்ஸ்.. ஹி இஸ் எ ஜாலி பெர்சன்.. பட்.. இந்த ஜி.எம் உம்மணாம் மூஞ்சியாச்சே.. அவர் டான்ஸ் ஆடினாருன்னா நம்பத்தான் முடியலை.."

"நாளைக்குப் பார்க்கத்தானே போற.. அதுசரி.. அது என்ன ஜி.எம்மை மட்டும் உம்மணாம் மூஞ்சின்னு சொல்ற..?"

"நீதான் அவரை மெச்சிக்கனும்.."

"ரியலி ஹி இஸ் எ ஹீரோ யாமினி.."

யாமினி ரேகாவை பார்த்தாள்.. அவள் பார்வை தோழியை ஊடுறிவியது.. தாமோதரனுக்காக பரிந்து பேசியவளைக் காணக் காண அவள் மனம் வலித்தது..

'இவள் அருமையானவள்..!' யாமினிக்குள் விசனம் வந்தது..

அந்தக் கம்பெனியின் மீது ரேகாவுக்கு இருக்கும் ஈடுபாட்டை வார்த்தைகளால் சொல்லி விட முடியாது.. வார்த்தைக்கு வார்த்தை 'நம்ம கம்பெனி, நம்ம கம்பெனி..' என்று சொல்வாள்..

அந்த ஈடுபாடுகூட தாமோதரனுக்காக ஏற்பட்டிருக்க வேண்டும்.. அவன் அந்தக் கம்பெனியின் தூண் என்பதற்காக ஏற்பட்டிருக்க வேண்டும் என்று அவள் நினைத்துக் கொண்டாள்..

"என்னடி அப்படிப் பார்க்கற..?" வெள்ளையாய் சிரித்தாள் ரேகா..

"நத்திங்.." எதையும் சொல்ல முடியாத துயரம் யாமினியை ஒன்றுமில்லையென சொல்ல வைத்தது..

"உனக்கு ஒன்னு தெரியுமா யாமினி..?"

"என்னப்பா..?"

"நம்ம வயலெட் கூட பார்ட்டியப்ப மத்தவங்ககிட்ட சகஜமாய் பேசிச் சிரிப்பா.. இதைவிட ஆச்சரியமா பார்ட்டியப்ப செல்போனத் தொடக்கூட மாட்டான்னா பார்த்துக்கயேன்.."

"ரியலி..?"

"ஷ்யூர்.."

"பாருடா.. இதைப் பார்க்கவாவது பார்ட்டி சீக்கிரமா வந்து சேரனும்.."

"அதுக்கு முதல்ல எம்.டி சீக்கிரமா வந்து சேரனுமே.."

யாமினியின் பரபரப்பை உணர்ந்தவளைப் போலச் சொன்னாள் ரேகா.. சித்தார்த்தனும் வந்தான்.. டக்.. டக்கென்ற அவனது காலடியோசையில் யாமினியின் இதயம் எழும்பி தொண்டைக் குழியில் ஊஞ்சலாடியது..

காலம் காலமாக அவனைப் பிரிந்திருந்த உணர்வுடன் அவள் ஆவலாக அவனைப் பார்த்தாள்.. நேர் கொண்ட பார்வையுடன் கம்பீரமாக வந்து கொண்டிருந்த சித்தார்த்தன் அவனைத் தேடும் அவளது பார்வையின் துடிப்பில் நின்று விட்டான்..

உச்சி முதல் பாதம்வரை அளந்தது அவள் பார்வை.. அவளது கண்ணுக்குள் பார்த்த சித்தார்த்தனுக்குள் மயக்கம் வந்தது..

அது எங்கேயோ அவளைப் பார்த்த நினைவினால் வந்த மயக்கம்..!

அத்தியாயம் - 83

பார்த்த ஞாபகம் இருந்ததினால்..

பரிதவித்தேன்.. நீ யாரென்று..

அவளது விழிகளுக்குள் ஊடுறிவிய சித்தார்த்தனின் பார்வையில் யாமினி தடுமாறினாள்.. அலையடிக்கும் மனதுடன் அது அலுவலகம் என்பதை மறந்து அவளது பார்வைக்கானப் பதிலைக் கொடுத்தவனின் பார்வையுடன் பின்னிப் பிணைந்தது அவளின் பார்வை..

எங்கோ ஓர் பாடல் ஒலிப்பதைப் போல அவர்கள் உணர்ந்தார்கள்.. ஏதோ ஓர் நூலிலை அவர்களை இறுக்கிப் பிணைப்பதையும் உணர்ந்தார்கள்.. அவள் தவிப்பை அவன் உணர்ந்தான்.. அவன் தவிப்பை அவள் உணர்ந்தாள்..

ஒருவரையொருவர் அறிந்திடத் துடித்த அவர்களின் பார்வையின் ஊடே தாமோதரன் வந்து நின்றான்..

"என்னடா.. இங்கேயே நின்னுட்ட..?"

அவனின் அதட்டலில் பார்வையை விலக்கிக் கொண்ட சித்தார்த்தன் ஒன்றுமேயில்லையே என்ற பாவனையில் தோள்களைக் குலுக்கிக் கைகளை விரித்தான்..

"அப்ப.. வா போகலாம்.."

சித்தார்த்தனை கையைப் பிடித்து இழுக்காத குறையாக இழுத்துக் கொண்டு போய் விட்டான் தாமோதரன்.. அப்படியே உட்கார்ந்து விட்ட யாமினிக்கு ஓடிச்சென்று சித்தார்த்தனைக் கட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது..

'முட்டாள்..' அவள் மனம் அதட்டியது..

'எட்டாத கனிக்கு ஆசைப்படாதே.. அவனைப் பார்த்ததும் உனக்குள் உண்டாகும் உரிமையுணர்வுக்கும்.. ஆசைக்கும்.. எந்த விதமான எதிர்காலமும் இருக்கப் போவதில்லை.. ராஜ பரம்பரையில் பிறந்தவன் அவன்.. அவனுக்காக ஓர் ராஜகுமாரி காத்திருக்கலாம்.. மன்னர் பரம்பரை மறைந்து விடவில்லை.. மன்னராட்சி மறைந்து விட்டது என்பதெல்லாம் சும்மா.. அவர்களுக்கான பாரம்பர்யத்தைக் குலைய விடாமல் அவர்கள் காப்பாற்றிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.. உன்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டார்கள்..'

இது தேவையற்ற எண்ணம் என்று யாமினிக்குத் தோன்றியது.. சித்தார்த்தனின் மீது அவளுக்கிருக்கும் ஈடுபாட்டிற்கு பெயரேதும் வைக்க வேண்டிய அவசியமென்ன வந்தது..? ரேகாவுக்கு கூடத்தான் தாமோதரனின் மீது ஈடுபாடு இருக்கிறது.. அவள் பெயர் சூட்டும் வேலையை வைத்துக் கொண்டிருக்கிறாளா என்ன..?

நினைக்கும் போதே ரேகாவின் ஈடுபாடு ஒரு தலையான ஈடுபாடு என்பதை அவளது மனம் அறிவுறுத்தியது.. இங்கே அப்படியில்லை.. யாமினியின் ஈடுபாட்டிற்கு குறையாத ஈடுபாட்டைச் சித்தார்த்தனும் பிரதிபலிக்கிறான்..

யாமினிக்குள் துக்கம் வந்தது.. இது தீராத சோகம் என்று மனதுக்குள் மருகினாள் அவள்.. அவனருகே இருந்தும் அவன் அவளுக்கு எட்டாத தொலைவில் இருக்கிறான் என்றால் இது மாபெரும் துயரம் அல்லவா..?

"அம்மா.. எம்.டி உங்களைக் கூப்பிடறாரு.."

பியூன் வந்து சொன்னான்.. தன் மனைவியை இரண்டு குழந்தைகளுக்கு அம்மாவாக்கியிருக்கும் அந்தத் தடிமாட்டுத் தாண்டவராயனை முறைத்தபடி எழுந்தாள் யாமினி..

"மேடம்ன்னு கூப்பிடு.."

"சரிங்கம்மா.."

"உன்னைத் திருத்தவே முடியாது.."

சித்தார்த்தனிடம் கையொப்பம் வாங்க வேண்டிய ஃபைல்களை அடுக்கிக் கையில் எடுத்துக் கொண்டு அவன் அறைக்குப் போனாள் யாமினி.. அறைக்கதவை ஒற்றை விரலால் டொக், டொக் என்று தட்டினாள்..

"யெஸ் கமின்.." கம்பீரமான சித்தார்த்தனின் குரல் அவளை அழைத்தது..

'எங்கேயோ கேட்ட குரல்..!'

யாமினிக்குள் சுழல் வந்தது.. அந்தச் சுழலில் சிக்கி விடாமல் கவனமாக விலகித் தப்பித்தவள் உள்ளே சென்றாள்.. வழக்கம் போல சித்தார்த்தனின் பக்கத்தில் இருந்த நாற்காலியில் யாமினியை கண்காணிக்கத் தோதாக ஒரு பக்கமாக சரிந்து உட்கார்ந்திருந்தான் தாமோதரன்..

'இவன் என்ன சித்தார்த்தனின் நிழலா..?'

யாமினிக்குள் கோபம் வந்தது.. மனதுக்குப் பிடித்தவனை ஓர் பார்வைகூடப் பார்க்க விடாமல் முறைத்துக் கொண்டிருந்தால் என்னதான் அர்த்தம்..?

தாமோதரனை முறைத்தபடி சித்தார்த்தனிடம் ஃபைல்களை நீட்டினாள்.. அவள் முகத்தைப் பார்த்தபடி வாங்கிக் கொண்ட சித்தார்த்தன் தனது அதீத தைரியத்தை நிருபித்தான்.

'இவன் பார்த்திருவான்.. என் பாடுதான் திண்டாட்டம்..'

ரகசிய உணர்வுகளுக்குத் தடைபோடும் தாமோதரனின் கூரிய பார்வையில் முள்ளின் மீது நின்றிருப்பதைப் போல யாமினிக்கு இருந்தது..

'இவன் சீக்கிரமா சைன் பண்ணிட்டாத் தேவலாம்..'

அவள் தேடிய சித்தார்த்தனின் அருகாமையை விட்டு அகலத் துடித்தது அவளின் பெண் மனம்..

அடிப்பார்வையால் தாமோதரன் அவளைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறானா என்று பார்த்தாள்

அவள்..

இமைக்காத.. துளைக்கும் பார்வையுடன் அவளைத் துளைத்துக் கொண்டுதான் இருந்தான் தாமோதரன்..

'இம்சை..!'

யாமினி சித்தார்த்தனுக்கு புறமுதுகு காட்டித் திரும்பி நின்று கொண்டாள்..

'எதுக்கு வம்பு..? இந்த கட்டழகனை என் கட்டுக்குள்ள கொண்டு வரத் துடிக்கிறேன்னு இந்தத் தாமோதரன் பழி போடுவான்.. தேவையா..?'

அது வீண்பழியா என்று அவள் மனம் கேட்டது.. சித்தார்த்தன் அவளுக்குத் தேவையில்லையா என்ற துணைக் கேள்வியும் தொடுத்து வந்தது.. யாமினி ஆயாசமாகிப் போனாள்..

"இவங்களுக்கு என்ன ஆன்சர் பண்ணினீங்க யாமினி..?"

சித்தார்த்தனின் கேள்வியில் திரும்பினாள்.. அவன் கேட்டதற்குப் பதில் சொல்லும் போது அவன் பார்வையைத் தவிர்த்தாள்.. சித்தார்த்தனின் ஊடுறுவும் பார்வையில் அவளுக்குள் நடுக்கம் வந்தது.. அந்த நடுக்கத்தைச் சித்தார்த்தன் உணர்ந்து விடக் கூடாதே என்று அவள் அஞ்சி நடுங்கினாள்..

"சர்.. இதில என்ன பிராப்ளம்ன்னா.."

அவள் விளக்கம் சொல்ல ஆரம்பித்த போது தாமோதரன் குறுக்கே பேசினான்..

"ஆல்ரெடி.. இதைப்பத்தி போனில நாம டிஸ்கஸ் பண்ணிட்டோமே சித்தார்த்.."

'அதானே பார்த்தேன்.. இவனாவது.. என்னையும் சித்தார்த்தையும் பேச விட்டு விடுகிறதாவது..'

யாமினி உதட்டைக் கடித்தாள்.. அதை ஜாடையாகப் பார்த்த சித்தார்த்தன்..

"பொறு தாமு.. இவங்க பாயிண்ட் ஆஃப் வியூ என்னன்னு கேப்போம்.." என்று சொல்லி விட்டான்..

யாமினியின் மனதில் தென்றலடித்தது.. தாமோதரனை அடக்க விட்டுச் சித்தார்த்தன் அவளுடன் பேசுகிறானா..?

நெஞ்சில் ஆனந்த யாழை மீட்டினாள் அவள்.. பெயர் தெரியாத பட்சியொன்று இன்பமான கீதமொன்றை அவள் இதயத்தில் இசைத்தது.. உற்சாகத்துடன் சித்தார்த்தன் கேட்ட விளக்கத்தை மடை திறந்த வெள்ளம் போலக் கொட்ட ஆரம்பித்தாள்..

"ஆக்சுவலா சார்.." என்று ஆரம்பித்து.. வரைபடம் தீட்டி விளக்காத குறையாய அவள் மனதார விளக்கம் சொல்லி முடித்ததைக் குறுக்கிடாமல் கேட்ட தாமோதரன்..

"இந்த விளக்கமெல்லாம் என்கிட்ட வர மாட்டேங்குதே.." என்று இடக்காக சொல்லி வைத்தான்..

மின்வெட்டும் பார்வையொன்றை யாமினியின் மீது செழுத்தினான் சித்தார்த்தன்.. அவளுக்குள் குளிர் ஜீரம் வந்தது.. இதைப்போன்ற பார்வைகளை அவன் பார்க்காமருந்தால் தேவலாம் என்று நினைத்துக் கொண்டாள் அவள்..

இது ஒரு முரண்..!

ஆணுக்கும் பெண்ணுக்குமான கண்ணாமூச்சி உணர்வுப் போராட்டங்களில் இதுபோன்ற முரண் அடிக்கடி வந்து நிற்கும்..

அவனைப் பார்க்க வேண்டும்.. பேச வேண்டும் என்று உருகித் தவித்தவள்.. அவன் பார்த்துப் பேச ஆரம்பிக்கும் போது.. 'இது வேண்டாமே..' என்றும் தவிக்கிறாள் என்பது காதலில் மட்டுமே சாத்தியமாகும்..

யாமினி சித்தார்த்தனைக் காதலிக்கிறாளா..?

அவள் மனம் அதிர்ந்தது.. அதுவரை அப்படியொரு பேராசையை அவள் மனதில் சுமந்ததில்லை.. அவனைப்

பார்த்த நொடியில் தோன்றிய மன நெருக்கம் நட்பாகக் கூட இருக்கலாம்..

அதற்குக் காதல் என்று எப்படிப் பெயரிடுவாள்..?

'நட்பில் தேடுதல் வருமா..?'

இதற்கான பதில்தான் அவளுக்குள் வரவில்லை.. இமைகள் படபடக்க சித்தார்த்தனைப் பார்க்க முடியாத வளைப் பார்த்த சித்தார்த்தனுக்கு அவளை அனுப்பவே மனம் வரவில்லை..

அவன் வேண்டுமென்றே அது என்ன.. இது என்ன.. என்று அறியாபிள்ளைபோல வினவி அவளைப் போக விடாமல் நிறுத்திப் பேச வைத்தான்..

தடுமாறியபடி அவள் விளக்கம் சொன்ன போது என்னவோ அப்போதுதான் அவளை முதன் முதலாய் பார்ப்பதைப் போல முகத்தை உற்றுப் பார்த்து வைத்தான்..

'கடவுளே..!' வியர்த்துப் போனாள் யாமினி..

"ஏஸியோட டெம்பரேச்சரை அதிகப் படுத்தவா..?" அதற்கும் அக்கறையாக வினவி வைத்து அவளைப் படுத்தி எடுத்தான் அவன்..

தாமோதரனைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இப்படியெல்லாம் கேட்டு வைக்கிறானே என்று அவள் திணறினாள்.. அவள் நினைத்ததைப் போலவே..

"ஏன்..? நீ வேண்டும்ன்னா உன் முன்னாடி இருக்கிற ஃபைல்களில ஒன்னை உறுவி விசிறி விடேன்.." என்று சிரிக்காமல் சித்தார்த்தனுக்கு யோசனை சொன்னான் தாமோதரன்..

யாமினியின் முகம் சிவந்து விட்டது.. தாமோதரன் இப்படித்தான் பேசி வைப்பான் என்பதை அவள் அறிவாள்.. தாமோதரனுக்குப் பதில் சொல்லாமல் சித்தார்த்தன் சிரித்து வைத்ததில் அவளது முகச்சிகப்பு அதிகரித்தது.. சும்மாவும் இருக்காமல் அந்தச் சிரிப்போடு அவளை மின்வெட்டும் பார்வையொன்றையும் அவன் பார்த்து வைத்ததில் யாமினிக்குள் மின்சாம் பாய்ந்தது..

இத்தனையையும் செய்து வைத்த சித்தார்த்தனை விட்டுவிட்டு யாமினியை முறைத்து வைத்தான் தாமோதரன்..

'உனக்கு நான்தான் கிடைச்சேனா..? முதலில் உன் பிரண்டை முறை..' யாமினிக்கு கோபம் கோபமாக வந்தது.

'நண்பனை மயக்க வந்த நயவஞ்சகியே..!' என்பதைப் போல பார்த்து வைத்த தாமோதரனை மௌனப் பார்வை பார்த்துவிட்டு சித்தார்த்தன் கையொப்பமிட்டு முடித்திருந்த ஃபைல்களை எடுக்கப் போனாள்.. சித்தார்த்தன் ஃபைல்கள் மேல் கையை வைத்து அழுத்திப் பிடித்துக் கொண்டான்..

'இப்படிக் கையை வைச்சுக்கிட்டா எப்படி ஃபைல்களை எடுக்கிறது..?'

ரோமம் அடர்ந்த அவனது கையைப் பார்த்தவளுக்கு கிளர்ச்சி வந்தது.. எத்தனை வலிமையான கரம் என்ற நினைவு வந்தது..

'அழகான கரமும் கூட..' அறிவு ஜொள்ளியது..

ஏதோ ஒர்விதமான மயக்கம் அவன்மீது எப்போதிருந்து எழுந்தது என்று தெரியாமல் திணறிப் போனாள் யாமினி..

அது எப்படி வந்தது..? ஏன் வந்தது..?

திரும்பத் திரும்ப அவன் முகம் பார்க்கத் துடித்த விழிகளைக் கட்டுப் படுத்தப் போராடினாள் அவள்.. தாமோதரன் அவளையே பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற எச்சரிக்கை உணர்வு அவளது கிளர்ச்சியை விரட்டியடித்தது..

"சர்.." தடுமாறினாள்..

"யெஸ்.." புருவங்களை வசீகரமாக உயர்த்தி அவளை ஈர்த்துத் தொலைத்தான் சித்தார்த்தன்..

'இவன் ஒருத்தன்.. பண்ற அத்தனை வேலை களையும் அட்ராக்ட் பண்றதைப் போலப் பண்ணித் தொலைப்பான்..'

யாமினிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை.. சித்தார்த்தனின் பக்கத்திலேயே இருக்க வேண்டும் போல அவளுக்கு இருந்தது.. அதே சமயத்தில் தாமோதரனின் கண்காணிப்பு மிகுந்த பார்வையில் சித்தார்த்தனின் மீதான அவளது மயக்கம் அகப்பட்டு விடக் கூடாதென்ற ஜாக்கிரதை உணர்வும் அவளுக்கு இருந்தது..

அதுபோன்றதொரு சுழலில் போராடிக் கொண்டிருந்தவளை ஆழ்ந்து பார்த்து சோதித்து வைத்தான் சித்தார்த்தன்..

"ஃபைல்ஸ்.." யாமினி நினைவூட்டினாள்..

"சைன் போட்டுட்டேனே.." ஃபைல்களிலிருந்து கையை விலக்காமல் பதில் சொன்னான் சித்தார்த்தன்..

'அந்தக் கையை விலக்கித் தொலைன்னுதான் சொல்றேன்..'

கையைப் பிசைய முனைந்து கடைசி நொடியில் அது அபத்தமாக இருக்கும் என்று கைவிட்டாள் யாமினி..

"ஃபைல்ஸை நான் கொண்டு போகவா..?"

"ஓ.. யெஸ்.. பட்.. இப்பத்தானே வந்தீங்க..? அதுக்குள்ள ஏன் அவசரப் படறிங்க..?"

சித்தார்த்தனின் கேள்வியில் ஆச்சரியப்பட்டுப் போனாள் யாமினி.. அந்த அதீதமான தைரியம் எங்கிருந்து அவனுக்கு வந்தது..? தாமோதரனை நினைத்து அவன் பயப்படவில்லையா..?

'என்னடா இது..?'

என்னவோ பெற்ற தாய்க்கும்.. கட்டின பெண்டாட்டிக்கும் இடையே அல்லாடுகிறவனைப் போல.. தாமோதரனுக்கும்.. யாமினிக்கும் இடையே அல்லாடிக் கொண்டிருந்த சித்தார்த்தனுக்குள் புதிதாக முளைத்திருந்த தைரியத்தில் அவள் வியந்து பார்த்தாள்..

தாமோதரனுக்குள்ளும் அந்த எண்ணம் வந்திருக்க வேண்டும்.. அவனது நெற்றியில் கோடுகள் வந்தன..

கண்கள் இடுங்கின..

'போச்சுடா.. சூப்பர்வைசர் சார் வெளுத்து வாங்கப் போறாரு..' யாமினி நினைத்து முடிப்பதற்குள் அவன் ஆரம்பித்தான்..

"அவசரப்படாம அவங்களை என்ன செய்யச் சொல்ற சித்தார்த்..? வேலை பார்க்க வந்தவங்க வெட்டியா நின்னுக்கிட்டு இருக்க முடியுமா..? அதுக்கா நீ சம்பளம் தருகிற..? இது அவங்களுக்கும் தெரியனும்.."

அந்தப் பேச்சு சித்தார்த்தனுக்கானது மட்டுமல்ல என்பதில் யாமினியின் முகம் கன்றி விட்டது..

'கடவுள் இவனுக்கு நாக்குக்குப் பதிலா சவுக்கை வைச்சிருக்கார்..' மனம் நொந்து போன யாமினி..

"நான் ஃபைல்ஸை அப்புறமா பியூன்கிட்ட எடுத்துக்கிட்டு வரச் சொல்லிக்கறேன் சார்.. நீங்க ரீசெக் பண்ணுங்க.." என்று சொல்லி விட்டுத் திரும்பிப் பார்க்காமல் வெளியேறிவிட்டாள்..

சீட்டில் வந்த அமர்ந்தவளின் கண்கள் கலங்கியிருந்தன..

அத்தியாயம் - 84

உனக்காக பிறந்து வந்தேன்..

உன் நிழலைத் தொடர்ந்து வந்தேன்..

"ஹேய்.. யு ஆவர் ஸோ பியூட்டிபுல் டுடே.. வாவ்.. வாட் எ அட்ராக்டிவ் வுமன் யு.. ஆர்..!"

ரேகா விழிகள் விரிய பாராட்டினாள்.. யாமினி அவ்வாறுதான் இருந்தாள்.. ஐந்து நட்சத்திர ஓட்டலில் பார்ட்டி என்றதும் எப்போதும் சிரத்தையில்லாமல் ஒப்பனை செய்து கொள்பவள் அன்று சிரத்தை எடுத்து வெகு கவனமாக ஒப்பனை செய்து கொண்டிருந்தாள்..

அழுத்தமான மெரூன் கலரில் ஜரிகை பார்டரும் உடலெங்கும் ஜரிகை புள்ளிகளும் கொண்ட மைசூர் கிரேப் சேலை மென்மையாக அவளது உடலைத் தழுவியிருந்தது.. அவளது சிவந்த நிறத்திற்கு வெகு பொருத்தமாக அந்த சேலை இருந்ததில் அவளது அழகு அதிகரித்திருந்தது.. தளரப் பின்னிய கூந்தல்.. கழுத்தில் நீண்டிருந்த முத்து மாலையின் முகப்பில் மெரூன் வண்ணக் கற்கள் பதிக்கப் பட்ட தங்க டாலர் மின்னியது.. காதுகளில் மெரூன் வண்ணக் கற்களும் முத்துக்களும் கலந்த பெரிய ஜிமிக்கிகள் ஆடின.. கைகளில் முத்து வளையல்களின் ஊடே மெரூன் வண்ணக் கற்கள் பதிக்கப்பட்ட வளையல்கள்..

இமைகளுக்கு லேசாக மை தீட்டியிருந்தாள்.. நெற்றியில் வெள்ளைக்கல் பதிக்கப்பட்ட மெரூன் வண்ண ஸ்டிக்கர் பொட்டு..

அதிகமான அலங்காரமில்லை.. ஆனால்.. ஆளை ஈர்க்கும் அலங்காரம்.. பெரிதாக ஏதுமில்லை.. ஆனால் பார்த்தவர்களால் விழிகளைத் திருப்ப முடியவில்லை..

அனுராதா கூட மகளைப் பார்த்ததும் அயர்ந்து விட்டாள்.. அவள் ஆட்சேபிக்க வழியின்றி அனுராதா எப்போதும் அவள் விரும்பி உடுத்தும் மைசூர் கிரேப் புடவையில்தான் இருந்தாள்.. கழுத்தில் ஒரேயொரு முத்து மாலை.. காதுகளில் கூடுதலாக ஜிமிக்கிகள்..

இதில் ஆட்சேபிக்க ஏதுமில்லையே..

காட்டன் புடவையும், மெல்லிய செயினும்.. காதுகளில் விதம் விதமான தோடுகளும்.. ஒரு கையில் ஒற்றை வளையலும்.. மறு கையில் தங்கச் செயின் போட்ட வாட்ச்சுமாக கிளம்புகிறவளிடம் தெறிக்கும் எளிமையான பேரழகு சற்றுக் கூடிய ஒப்பனையில் அதீதமான பேரழகாக பரிமளித்ததிற்கு யாமினி பாவம் என்ன செய்வாள்..?

அவளது அழகு அப்படிப்பட்டது.. சுடர் விடும் விளக்கின் ஒளியைப் போன்ற அழகுடையவள்

அவள்.. மெருகேற்றப்பட்ட குத்துவிளக்கின் ஒளிச்சுடர் அனைவரையும் ஈர்த்தால் அந்த குத்துவிளக்கைக் குறை கூற முடியுமா..?

"இன்னைக்கேதும் விசேசமா யாமினி..?" நாசுக்காக விசாரித்தாள் அனுராதா..

"எங்க ஆபிசில் ஒரு பார்ட்டிம்மா.." என்றாள் யாமினி.

"ஓ.."

அப்படியானால் யாமினி இந்த அளவுக்காவது ஒப்பனை செய்து கொள்ளத்தானே வேண்டும் என்ற நினைவில் சிரிப்புடன் தலையசைத்து விடை கொடுத்தாள் அனுராதா..

"நாங்கள்ளாம் மாய்ஞ்சு மாய்ஞ்சு டிரெஸ் பண்ணி.. மேக்-அப் போட்டுக்கிட்டாலும்.. நீ சிம்பிளா டிரெஸ் பண்ணி எங்களை ஓவர் டேக் பண்ணி விடுகிற யாமினி.." பெறாமையுடன் சொன்னாள் தர்ஷிணி..

"ஈஸிட்..?" சின்னச் சிரிப்புடன் அவளை விட்டு விலகி ரேகாவின் பக்கத்தில் போனாள் யாமினி..

சாம்பல் வண்ண கோட் சூட்டில் இருந்த தாமோதரனை ரசித்துக் கொண்டிருந்தாள் ரேகா... யாமினியைக் கண்டதும்..

"நம்ம ஜி.எம் இன்னைக்கு செம ஹேண்ட்சம்மா இருக்காரில்ல..?" என்றாள்..

"மத்த நாள்களில குறைவா இருக்கார்ன்னா சொல்ற..?" வேண்டுமென்றே கொக்கி போட்டாள் யாமினி.

"சேச்சே..! அவர் எப்பவும் ஹேண்ட்சம்தான்.." மறுத்தாள் ரேகா..

அவளது பார்வை தாமோதரனையே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.. யாமினி உதட்டைக் கடித்தாள்..

'கேட்டு விடலாமா..?'

கேட்க அவளுக்கு மனம் வரவில்லை.. அது ரேகாவின் தனிப்பட்ட மனஉணர்வு என்ற நாகரிகம் யாமினியைத்

தடுத்தது..

"வயலெட் வரலையா..?" ரேகாவின் கவனத்தை திசை திருப்பினாள்..

"ஏன் வரலை..? அப்பவே வந்திட்டா.. அவளாவது பார்ட்டிக்கு வராம இருக்கிறதாவது.. நேத்து நைட் முழுவதும் பியூட்டி பார்லரில குடியிருந்திருப்பா போல.. செம மேக்-அப்.." ரேகா கண்சிமிட்டி சிரித்தாள்..

வயலெட் ரேகா வர்ணித்ததைப் போலதான் இருந்தாள்.. குடைபோல அடர்த்தியாக ஒட்டப் பட்டிருந்த செயற்கை இமைகளும்.. கிரீம் பூச்சும்.. பளீரென அடிக்கும் வண்ணத்தில் உதட்டுச் சாயமுமாக அந்த பார்ட்டி ஹாலை வலம் வந்து கொண்டிருந்தாள்..

"முடிக்கு கலர் பூசியிருக்காடி.." என்றாள் ரேகா..

யாமினி வயலெட்டைப் பார்த்தாள்.. செம்பட்டை வண்ண முடி சீராக வெட்டப்பட்டு வயலெட்டின் முதுகில் பரவிக் கிடந்தது..

"எல்லோரும் தலைக்கு கருப்புக் கலர் அடிப்பாங்க.. இவதான் எல்லாத்திலயும் தலைகீழாச்சே.. கருப்புக்கலரை செம்பட்டையாக்கிக்கிட்டு அளப்பறை பண்றா.." கமெண்ட் அடித்தாள் ரேகா..

யாமினிக்கு சிரிப்பு வந்து விட்டது.. பல்வரிசை தெரிய வாய் விட்டு அவள் சிரித்ததை பார்த்துக் கொண்டே பார்ட்டி ஹாலுக்குள் வந்த சித்தார்த்தனைக் கண்டதும் அவளது சிரிப்பு நின்று விட்டது..

அவளைப் பார்த்தவனின் கண்களில் வந்த மின்னலில் அவள் பொதிந்து போனாள்.. அவளுக்கான அவனது பிரத்யேகப் பார்வை அன்றைய நாளை அற்புதமான நாளாக மாற்றிக் காட்டி விட்டது..

"எம்.டி வந்திட்டார்.."

பார்ட்டி ஹாலில் சலசலப்பு பரவியது.. வயலெட் முன் வரிசையில் நின்று கொண்டாள்..

"இதுக்கு மட்டும் முந்துவா.. வேலைன்னா ஓடியே போயிருவா.. பார்ட்டியில வீடியோ எடுப்பாங்கள்ல.. அதில இந்தம்மா ஸ்டார் போல ஜொலிக்கனுமாம்.. அதுக்குத்தான் இந்தப் பாடு.." ரேகா முணுமுணுத்தாள்..

"லேடிஸ் அன்ட் ஜென்டில் மேன்..!"

பார்ட்டி ஹாலின் மேடையில் கம்பீரமாக ஏறிய சித்தார்த்தன் மைக்கைப் பிடித்துப் பேச ஆரம்பித்ததும் அங்கே நிலவிய சலசலப்பு காணாமல் போய் விட்டது..

"இன்றைய நாள் இனிதானது.." சித்தார்த்தனின் பார்வை யாமினியின் மீது படிந்து அது உன்னால்தான் என்றது..

யாமினிக்குள் உணர்வலைகள் பொங்கின.. சித்தார்த்தனின் பார்வை புதுவிதமாக இருந்ததில் அவளுக்குள் ரகசியமான கிளர்ச்சி எழுந்தது..

"நமது சித்தார்த் குருப் ஆப் கம்பெனி மிகப் பெரிய வெற்றியை அடைந்திருக்கிறது.. அந்த வெற்றி விழாவைக் கொண்டாட நாம் இங்கு கூடியிருக்கிறோம்.. இந்தப் பார்ட்டியின் நிமிடங்கள் உங்களுக்கானவை.. சுப்பீரியர் ஜீனியர் என்கிற வித்தியாசங்களை மறந்து இந்தக் கொண்டாட்டத்தில் அனைவரும் பங்கேற்க வேண்டும்.. லெட் அஸ் செலிபரேட் திஸ் மூமென்ட்.. பாடத் தெரிந்தவர்கள் பாடுங்கள்.. ஆடத்தெரிந்தவர்கள் ஆடுங்கள்.. அதன் பின்னால் அருமையான உணவு வகைகளுடன் கூடிய விருந்து நமக்காக காத்திருக்கிறது.. இந்தக் கொண்டாட்டத்தை நான் துவக்கி வைக்கிறேன்.."

சித்தார்த்தன் மைக்கின் முன்னால் நின்றிருந்தவர் களில் கடைசியாக நின்றிருந்த யாமினியைப் பார்த்தான்.. அவள் மனது படபடவென அடித்துக் கொண்டது..

'எப்படி துவக்கி வைக்கப் போகிறான்..?'

அதை அறிந்து கொள்ளும் ஆவல் அவள் கண்களில் மின்னியதை கவனித்தான் சித்தார்த்தன்..

அதீதமான சோபையோடு.. பெண்மையின் மிளிர்வோடு நின்றிருந்தவளின் அழகு அவனைத் தாக்கியது.. என்றைக்கும் இல்லாத வகையில் அன்றைக்கு அவன் அதிகமாக மயங்கிப் போனான்.. அவனை ஆகர்ஷிக்கும் அவளின் அழகில் கிறங்கிப் போனான்.. அங்கிருந்த பெண்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் அழகாக இருந்தார்கள்.. இன்னும் சொல்லப் போனால் சிலரின் சருமப் பொழிவு யாமினியிடம் இல்லை.. அதிகமாக அழகு நிலையங்களை நாடாதவளின் இயற்கை மேனியழகு அவனை ஈர்த்தது.. அவளை முதன் முதலாக மகாபலிபுரக் கடற்கரையின் ஐந்து ரதக் கோவிலில் பார்த்த போது உணர்ந்த மயக்கத்தை மீண்டும் உணர்ந்தான் சித்தார்த்தன்..

"எங்கேயோ பார்த்த மயக்கம்.."

அவன் ஆரம்பித்தவுடன் சட்டென்று உயர்ந்த யாமினியின் பார்வையில் அதிர்வு கலந்த மயக்கம் வந்து குடிகொண்டது.. அவர்கள் இருவருக்குமிடையேயான பார்வைப் பரிமாற்றத்தையும்.. பாடல் பரிமாற்றத்தையும் தடுத்து நிறுத்த முடியாமல் நடந்து கொண்டிருந்த பார்ட்டி வேலியிட்டுத் தள்ளி நிறுத்தியிருந்ததில் இயலாமை கலந்த கோபம் கொண்டான் தாமோதரன்..

'பொருத்தமான பாட்டப் பாடிப் போட்டுத் தாக்கறான் பாரு..'

அதை நீரஜாவிடம் சொல்ல வேண்டும் போல அவனுக்கு இருந்தது.. பார் உன் அண்ணன் செய்யும் அட்டூழியத்தை.. இவனைக் காவல் காத்து, காவல் காத்து.. களைத்துப் போய் விட்டேன்.. நீ வந்து மண்டகப்படி நடத்தி கொஞ்சம் திருத்து..

இவையெல்லாம் பிறகு செய்ய வேண்டிய செயல்கள்.. அப்போது நீரஜாவிடம் போட்டுக் கொடுக்க முடியாத சூழலில் தாமோதரன் பல்லைக் கடித்துக் கொண்டு கண்கள் இடுங்க சித்தார்த்தனையே முறைத்துக் கொண்டு நின்றிருந்தான்..

சித்தார்த்தன் தாமோதரனின் பக்கம் திரும்பவே இல்லை.. அவன் தேவதையைப் போன்ற வனப்புடன் இருந்த

யாமினியையே தின்று விடுவதைப் போலப் பார்த்துக் கொண்டே பாடிக் கொண்டிருந்தான்

"எங்கேயோ பார்த்த மயக்கம்..!

எப்போதோ வாய்த்த நெருக்கம்..

தேவதை இந்த சாலை ஓரம்..!

வருவது என்ன மாயம்..! மாயம்..!"

ஆழ்ந்த குரலில் அனுபவித்துப் பாடியவனின் பாடல் வரிகள் அவனது உணர்வுகளை அப்படியே பிரதிபலித்துக் கொட்டின.. கண்மூடி இமைதிறந்து அவனைப் பார்த்த யாமினியின் விழிகளிலும் அவனை எங்கேயோ பார்த்த மயக்கம் வந்து நிரம்பியிருந்தது..

"கண் திறந்து இவள்..

பார்க்கும் போது..

கடவுளை இன்று

நம்பும் மனது.."

யாமினியின் கண்கள் நிரம்பிவிட்டன.. மேடையில் பாடிக் கொண்டிருந்த கோடிஸ்வரனின் மனது அவளை நாடுகிறதா..? அவளால் நம்பவே முடியவில்லை.. சித்தார்த்தனின் பார்வை அவளைத் தேடியலைந்து படிந்ததைப் பார்த்தால் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை..

"இன்னும் கண்கள்..

திறக்காத செல்வம்..!

ஒரு கோடி..

பூப்பூக்கும் வெட்கம்..!

ஆண் மனதை

அழிக்க வந்த சாபம்..!

அறிவை மயக்கும்

மாய தாகம்..!"

சித்தார்த்தனின் பாடலில் வேகம் கூடியது.. யாமினியிடம் அவன் உணர்ந்த மாய தாகத்தைப் பற்றி அவன் பாடப் பாட தாமோதரனுக்கு கவலை அதிகரித்தது.. யாமினி மாய மோகினி என்பதைத் தெரிந்து கொண்டே அவள் மீது சித்தார்த்தன் மயக்கம் கொள்கிறானே என்றிருந்தது தாமோதரனுக்கு..

நண்பனின் கவலையைப் பற்றிய எண்ணமில்லாமல் யாமினியைப் பற்றிய மயக்க நினைவுகளுடன் உருகிக் கொண்டிருந்தான் சித்தார்த்தன்..

"இவளைப் பார்த்த

இன்பம் போதும்..

வாழ்ந்து பார்க்க

நெஞ்சம் ஏங்கும்.."

அவன் பாடலில்.. அவளுடன் வாழ வேண்டிய வாழ்வுக்கான ஏக்கத்தை யுகம்.. யுகமாக சுமந்து வந்த துயரம் தொனித்தது.. அவளைக் காண்பதற்காக அவன் காத்திருந்ததைப் போல கண்கள் மின்ன அவன் பாடிக் கொண்டிருந்தான்..

"கனவுகளில் வாழ்ந்த நாளை..

கண்ணெதிரே பார்க்கிறேன்..

கதைகளிலே கேட்ட பெண்ணை

திரும்பித் திரும்பிப் பார்க்கிறேன்.."

தாமோதரனின் இதயம் தடதடத்தது.. நண்பன் கண்ட கனவை அவனும் கண்டிருக்கிறானே.. நண்பன் கேட்ட கதைகளை அவனும் கேட்டிருக்கிறானே.. அந்தச் சுழலில் அவன் மாட்டிக் கொண்டு விடக் கூடாது என்று தாமோதரன் பட்ட பாடெல்லாம் வீணாகப் போய் விட்டதா..? சித்தார்த்தனின் மனம் மாயச் சுழலைத் தேடிச் சென்று விட்டதா..?

"அங்கும் இங்கும்..

ஓடும் கால்கள்..

அசைய மறுத்து வேண்டுதே..

இந்த இடத்தில்

இன்னும் நிற்க..

இதயம் கூட ஏங்குதே.."

இதை தாமோதரன் அறிவானே.. வருடத்தில் பாதி நாள்களை வெளிநாடுகளிலேயே கழித்த சித்தார்த்தன் யாமினியின் வரவுக்குப் பின்னால் அவற்றைத் தவிர்த்து சென்னையை விட்டு அசைய மறுத்து அலுவலகத்தி லேயே தேங்கி நின்று விட்டதை அவன் பலமுறை சித்தார்த்தனுக்குக் சுட்டிக் காட்டி அறிவுறுத்தியிருக் கிறானே.. வேறு வழியில்லாமல்தானே இந்த வெளிநாட்டுப் பயணத்தையும் சித்தார்த்தன் மேற்கொண்டான்..? அவனைத் தவிர வேறு எவரையும் அனுப்ப முடிந்திருந்தால் இந்த வெளிநாட்டுப் பயணத்தையும் சித்தார்த்தன் கட்டாயமாக தவிர்த்திருப்பான்.. கம்பெனியின் எம்.டிதான் வந்தாக வேண்டும் என்ற கட்டாயத்தில்தானே வேண்டா வெறுப்பாக அவன் வெளிநாட்டுக்குச் சென்றான்..

அவ்வாறு கால்களில் சக்கரங்களை கட்டிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தவனை ஓரிடத்தில் நிற்க வைத்த புண்ணியவதியல்லவா இந்த யாமினி..? இவளைக் கண்டாலே இவன் என்னென்னவாகவோ ஆகித் தொலைக்கிறானே.. இப்படியே போனால் சித்தார்த்தனின் நிலை என்னாகுமோ..

தாமோதரன் கவலைப் பட்டுக் கொண்டிருக்க..

"என்னானதோ.. ஏதானதோ..

கண்ணாடி போல்

உடைந்திடும் மனது.."

என்று பாடி தாமோதரனைக் கதி கலங்க வைத்தான் சித்தார்த்தன்..

பேசாமல் மேடையில் ஏறி மைக்கைக் கட்டிப் பிடித்திருக்கும் சித்தார்த்தனை இழுத்துக் கொண்டு வந்து விடலாமா என்று யோசித்தான் தாமோதரன்.. சித்தார்த்தனோ கவிதையைப் போலிருந்த யாமினியின் காவிய அழகில் கிறங்கிக் கொண்டிருந்தான்..

"கவிதை ஒன்று பார்த்துப் போக..

கண்கள் கலங்கி நானும் ஏங்க..

மழையின் சாரல் என்னைத் தாக்க..

விழிகள் எல்லாம் கேள்வி கேட்க.."

யாமினிக்கு அவன் தோள்களில் சாய வேண்டும் போல இருந்தது.. நீ எனக்குக் கிடைப்பாயா..? உன் மீதான எனது ஏக்கத்தைப் புரிந்து கொள்வாயா என்று கேட்க வேண்டும் போல இருந்தது.. உனக்காகவே நான் வாழ்வதைப் போல ஓர் உணர்வு எனக்குள் ஏற்பட்டிருக்கிறதே.. அது உனக்குள்ளும் ஏற்பட்டிருக்கிறதா என்று கண்கலங்க வேண்டும் போல இருந்தது..

அவனுக்கும் அவளுக்குமான இடைவெளி ஒன்றும் அதிகமில்லை.. கூட்டத்தின் பின்னால் நிற்பவள்.. கூட்டத்தின் முன்னால் ஓடி அவனருகே நின்று அந்த இடைவெளியையும் குறைத்து விடலாம்..

வாழ்வில் உள்ள இடைவெளி..? அதை எப்படிக் குறைப்பது..?

அவனோ ராஜகுமாரன்.. ராஜாதிராஜன்.. கோடிஸ்வரன்.. ராஜ வம்சத்தில் பிறந்தவன்.. அவனைக் கண்ணால் பார்க்கக்கூடத் தகுதியில்லாத யாமினியால் அவன் நெஞ்சில் முகம் புதைக்க முடியுமா..?

மருகல் எல்லாம் அவளுக்குத்தான்.. சித்தார்த்தனுக்கு அந்தக் கவலைகள் ஏதுமில்லை.. அவன் தெள்ளத் தெளிவாக அவன் மனதை அவளுக்குப் புரிய வைத்துக் கொண்டிருந்தான்..

"ஆதி அந்தமும் மறந்து உன்னருகில்..

கரைந்து நான் போனேன்.."

யாமினிக்குள் துன்பத்துடன் கூடிய இன்பம் துளிர்த்தது.. இது சித்தார்த்தனின் உண்மையான உணர்வுகளோ.. இல்லை.. வெறும் பாடலோ.. அவள் அறியாள்.. ஆனாலும் அது குறித்த சந்தேகம் எதுவும் கொள்ளாமல் அந்த நிமிடத்தில் உறைந்து நின்று அவனுடைய பாடல் வரிகளில் கரைந்து போனாள்..

"ஆண்கள் வெட்கப்படும்..

தருணம்..

உன்னைப் பார்த்த பின்பு

நான் கண்டு கொண்டேன்.."

யாமினியின் பார்வை அப்படியா என்று வினவியதில் சித்தார்த்தனின் முகத்தில் துளியளவு வெட்கம் வந்து போனது..

"இடி விழுந்த வீட்டில் இன்று

பூச்செடிகள் பூக்கிறதே..

இவள்தானே உந்தன் பாதி

கடவுள் பதில் கேட்கிறதே.."

கடவுளின் குரல் யாமினியின் காதுகளிலும் விழுந்ததைப் போல அவளுக்கு இருந்தது.. அவள் காலம் காலமாக தொடர்ந்து கொண்டிருந்த காதலன் அவன்தான் என்று அவளின் உள்மனது கூவியது.. சித்தார்த்தனின் பாடல் தொடர்ந்தது..

"வியந்து வியந்து..

உடைந்து உடைந்து..

சரிந்து சரிந்து..

மிரண்டு மிரண்டு.."

யாமினியின் விழிகளுக்குள் ஊடுறுவிப் பார்த்த சித்தார்த்தன்..

"இந்த நிமிடம்..

மீண்டும் பிறந்து..

உனக்குள் கலந்து..

தொலைந்து தொலைந்து.."

என்று உச்சஸ்தாதியில் பாடலை முடித்த போது யாமினி அவளாக இல்லாமல் தொலைந்து போயிருந்தாள்.

அது ஒரு கானகம்.. அருகருகே அவளும் சித்தார்த்தனும் இருந்தும் அவனால் அவளையும் அவளால் அவனையும் அடையாளம் காண முடியாத கானகம்..

அத்தியாயம் - 85

நீதானா அந்தக் குயில்..?

நான் நினைவினிலே தேடும் மயில்..!

அவளில் படிந்திருந்த சித்தார்த்தனின் பார்வைக்குள் பொதிந்திருந்த யாமினி அசையாமல் நெடுமரம் போல நின்றாள்.. பாடல் முடிந்ததைக்கூட அவள் உணர வில்லை.. பலத்த கரகோசத்தில் மலங்க மலங்க விழித்து அருகில் பார்த்தாள்..

"பெண்டாஸ்டிக் சாங்..!" என்றாள் ரேகா..

"ஆமாமாம்.." சுதாரித்துக் கொண்டு பதில் சொன்னாள் இவள்..

"அப்படின்னா ஏன் பேசாமல் நிக்கிற..? கை தட்டு.. உன்னோட அப்ரிஸியேசனை வேற எப்படித் தெரிவிப்ப..?"

"ஷ்யூர்.. ஷ்யூர்.."

பூம்பூம் மாடு போல தலையாட்டிய யாமினி மனதார கைதட்டினாள்..

அவளையே பார்த்த சித்தார்த்தனின் பார்வை அவளை ஆக்டோபஸைப் போலச் சுற்றி வளைத்து இழுத்தது..

'இப்படிப் பார்க்காதே..' மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்..

'உன் பார்வைக்குள் நான் தொலைந்து கொண்டிருக்கிறேன்.. என்னை மீட்க முடியாமல் மலைத்துக் கொண்டிருக்கிறேன்.. கருணை காட்டு..'

அவள் மனதின் குரல் சித்தார்த்தனை எட்டவில்லை.. அவன் அவளைப் பார்வையால் தின்பதை நிறுத்தவில்லை.. யாமினிக்குள் நிகழும் ரசாயன மாற்றங்களைக் குறித்த கவலை கிஞ்சித்தும் அவனிடம் இல்லை.. அதுவரை அவன்மீதான ஈர்ப்பிற்கு பெயர் தெரியாமல் இருந்தவளுக்கு பெயர் கிடைத்து விட்டதில் யாமினியால் அவன் பார்வையை நேருக்கு நேராக சந்திக்க முடியவில்லை.. அதே சமயத்தில் அவளால் அவனைப் பார்க்காமலும் இருக்க முடியவில்லை..

இமைகள் படபடக்க.. அரைப் பார்வையாய் விழிகளை உயர்த்தி அவனைக் கள்ளப்பார்வை பார்ப்பதும.. அவன் பார்த்து விட்டால் அரண்டு போய் பார்வையைத் தாழ்த்திக் கொள்வதுமாக அவள் இருந்தாள்.. அந்தக் கண்ணமூச்சி விளையாட்டை விரும்பி ரசித்தான் சித்தார்த்தன்.. அது புதுவிதமான அனுபவமாக அவனுக்கு இருந்தது.. அவளையே பார்ப்பதும்.. அவள் பார்வையைச் சந்தித்ததும் மின்னல் வெட்டியதைப் போல ஜொலிப்பதும்.. அதில் அரண்டு போய் அவள் பார்வையைத் தழைத்துக் கொள்ளும் போது குறுஞ்சிரிப்பை சிரிப்பதுமாக உல்லாசமாக அந்த நொடிகளை ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்தான் சித்தார்த்தன்..

அதுவரை தாமோதரன் போட்டிருந்த தடைகளுக்கு கட்டுப் பட்டிருந்தவன் தடைகளைத் தகர்த்து விட்டான்.. தடை

தாண்டும் அவனது ஓட்டத்திற்கு அணை கட்ட முடியுமா என்ற கவலைக்கு ஆளானான் தாமோதரன்..

நாளை விவேகானந்தனுக்கும் நிருபமாவிற்கும் சித்தார்த்தனின் இந்த ஈடுபாட்டைப் பற்றித் தெரிய வந்தால் அவர்கள் அவனைக் கேள்வி கேட்க மாட்டார்கள்.. தாமோதரனைத்தான் நிற்க வைத்து கேள்வி கேட்பார்கள்..

'இவனுக்கென்ன.. இவன் பாட்டுக்கு சைட் அடிச்சுட்டுப் போயிடுவான்.. பதில் சொல்றது நான்தானே..' அலுத்துக் கொண்டான் தாமோதரன்..

அதுவரை அது போன்ற சிக்கலான சூழ்நிலைகளை சித்தார்த்தன் தாமோதரனுக்கு ஏற்படுத்தியதில்லை.. பெண்களுடன் நட்பாய் பழகுவான்.. வித்தியாசமாய்

பழக முனையும் பெண்களிடமிருந்து விலகி நிற்பான்.. அவர்களை அருகில் வரக் கூட அனுமதிக்க மாட்டான்.. அவனிடம் காதல் சொல்லும் பெண்களிடம் நாசுக்காய் தனது மறுப்பைத் தெரிவிப்பான்..

"ஏண்டா..?" தாமோதரன் ஆச்சரியப்படுவதற்கு..

"இவங்க காதலிக்கிறது என்னையில்லைடா.. எனது பணத்தை.. ராஜ வம்ச பாரம்பர்யத்தை.. அரண்மனை வாழ்க்கையை.. என் ஸ்டார் இமேஜை.." என்று நிதானமாக பதில் சொல்வான்..

"பட் சித்.. இவங்க உன்னோட சொசைட்டியைச் சேர்ந்தவங்க.. உன்னைப் போலவே கோடிஸ்வரங்க.. ராஜ பாரம்பர்யத்தில பிறந்தவங்க... அரண்மனையில வாழ்கிறவங்க.. இவங்களிடம் இல்லாதது உன்னோட பிஸினெஸ் மேக்னெட்ங்கிற ஸ்டார் இமேஜ் மட்டும்தான்.."

"அதனாலதான் இவங்க என்னைச் செலக்ட் பண்ணியிருக்காங்க.. நான் இவங்களைப் போல பணக்காரனா.. ராஜ பாரம்பர்யத்தில பிறந்தவனா.. அரண்மனையில வாழ்கிறவனா இருக்கிறதாலேதான் என்னைத் தேடி வந்து காதல் சொல்கிறாங்க.. இது எதுவும்

இல்லாத சாதாரண ஆளா நானிருந்திருந்தா இவங்க என்னைத் திரும்பிக் கூடப் பார்த்திருக்க மாட்டாங்க.."

உண்மைதானே என்ற எண்ணம் தாமோதரனுக்குள் வந்தது என்னவோ உண்மைதான்... அதற்காக சித்தார்த்தனை அவன் போகும் போக்கில் விட்டு விட முடியாதே.. விவேகானந்தனுக்கும் நிருபமாவிற்கும் சித்தார்த்தனின் திருமணத்தைப் பற்றி ஆயிரம் எதிர்பார்ப்புகள் இருக்கின்றனவே.. அவர்களின் நிழலில் வளர்ந்த தாமோதரனால் அவர்கள் மனம் சங்கடம் கொள்வதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லையே..

தாமோதரன் யாமினியைப் பார்த்தான்.. அவளது கள்ளப் பார்வை சித்தார்த்தனைத் தொடர்ந்து கொண்டிருந்தது.. அவளின் அந்த ஈடுபாடு சித்தார்த்தனுக் கானது மட்டுமே என்பதில் தாமோதரனுக்கு கடுகளவும் சந்தேகமில்லை.. சித்தார்த்தனின் பின்புலத்தைப் பற்றிய சிந்தனையேதும் இல்லாதவள் யாமினி.. சித்தார்த்தனே சொன்னதைப் போல அவனின் இப்போதைய அடையாளங்கள் ஏதுமில்லாமல் அவன் நின்றாலும்.. அவனை அவனுக்காகவே யாமினி நேசிப்பாள் என்பது தாமோதரனுக்கு நன்றாகவே தெரியும்.. யாமினியிடம் மட்டும் வினோதமான நிழல் தடயங்கள் இல்லாமல் இருந்திருந்தால்.. அவளைப் போன்ற ஓர் காதலி கிடைக்க சித்தார்த்தன் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்பதை மனமார ஒப்புக் கொள்வான் தாமோதரன்..

அப்படி இல்லையே.. யாமினியைச் சுற்றியிருக்கும் நிழல்கள் தாமோதரனை அஞ்ச வைக்கிறதே.. அவளின் நிழல் நினைவுகள் சித்தார்த்தனின் மீதும் படறுவதில் தாமோதரனுக்கு விருப்பமில்லையே..

"சித்தார்த்.."

யாமினியையே விடாமல் சைட் அடித்துக் கொண்டிருந்த சித்தார்தனனின் தோளில் கடுமையாகத் தட்டி அவனது கவனத்தை திருப்பினான் தாமோதரன்..

"என்னடா..?"

சித்தார்த்தன் யாமினி எங்கிருக்கிறாள் என்று கவனித்தபடி கேட்டான்.. தாமோதரன் சித்தார்த்தனுக்குப் பக்கத்தில் வந்ததுமே அவள் நகர்ந்திருந்தாள்..

"என்னைப் பார்.."

"எதுக்கு..?"

"பாருடா.."

தாமோதரன் அதட்டியதில் அரை மனதாக அவன் முகத்தைப் பார்த்து வைத்தான் சித்தார்த்தன்.. அதில் நிலவிய கடுமையில்..

"ஏண்டா..?" என்றான்..

"என்ன.. 'ஏண்டா..?'"

"இப்ப என்னத்துக்காக என்னைப் பார்.. என் கண்ணைப் பார்ன்னு சிவந்த கண்களை உருட்டி முழிச்சு பூச்சாண்டி வேசம் கட்டற..?"

"அப்படியொரு வேண்டுதல்டா எனக்கு.."

"அதுக்கேன்டா என்னை இம்சை பண்ற..? உன் வேண்டுதலை நிறைவேற்ற நான்தான் கிடைச்சேனா..? அதோ.. அங்கே செம்பட்டை முடியை விரிச்சு விட்டுக்கிட்டு வயலெட் நிற்கிறா பாரு.. அவகிட்டப் போய் உன் பூச்சாண்டி வேசத்தைக் காட்டு.. ஹா.. ஹா.. ஹா.."

"சித்தார்த்.."

"போடா டேய்..! சும்மா சவுண்டு விடாம பார்ட்டியை என்ஜாய் பண்ணு.."

சித்தார்த்தன் தாமோதரனைக் கட்டித் தழுவி விட்டு யாமினியை சைட் அடிக்கத் தோதாக நகர்ந்து விட்டான்.. மேடையில் அக்கவுண்டன்ட் சபாபதி மிமிக்ரி செய்து கொண்டிருந்தார்.. நெற்றியில் விபூதிப் பட்டையுடன் கணக்குகளில் ஊறிப் போயிருப்பவரிடம் மறைந்திருக்கும் திறமையை நினைத்து வியந்து போனான் தாமோதரன்..

'இது போல பார்ட்டிகளிலதான் இவங்களோட திறமையெல்லாம் வெளிப்படுது.. அடிக்கடி இல்லைன்னாலும் ஆறு மாதத்திற்கு ஓர் தடவையாவது இப்படிப்பட்ட பார்ட்டிகளை அரேன்ஜ் பண்ணனும்..' தாமோதரன் நினைத்துக் கொண்டான்..

ஜோசபின் ஜோக் சொன்னாள்.. சிரிப்பு வரத்தான் செய்தது.. செக்யூரிட்டி குமார் கானாப் பாடல் ஒன்றைப் பாடி விட்டுப் போனான்.. தர்ஷிணி பக்திப் பாடல் பாடி அவள் மிகுந்த பக்த சிரோண்மணி என்று நிருபிக்க முயன்றாள்.. வயலெட் பாப் மியூஸிக்கைப் பாடினாள்.. ரேகா தாமோதரனைப் பார்த்தபடியே கவிதை சொன்னாள்.. அதுவரை மேடையைப் பார்த்துக் கொண்டிருந்த தாமோதரன் அப்போது மட்டும் விருந்து அயிட்டங்களை மேற்பார்வை பார்க்கிறதாய் பெயர் பண்ணி நகர்ந்து விட்டான்..

ரேகாவின் முகத்தில் ஏமாற்றம் சூழ்ந்தது.. தாமோதரனுக்குச் சங்கடமாக இருந்தது.. ரேகாவின் மனம் புரியாமல் இருக்க அவனொன்றும் முட்டாள் இல்லையே..

ஆனால்.. அவன் மனம் அவன் வசத்தில் இல்லையே.. அது ஆளுமை நிறைந்த நீரஜாவின் வசத்தில் அல்லவா இருக்கிறது..

கடைசியாக யாமினி மேடையேறினாள்.. சித்தார்த்தனின் முகத்தில் பரவிய வெளிச்சத்தில் தாமோதரனின் முகத்தில் இருள் படர்ந்தது.. யாமினியைப் பார்த்தான்.. அவள் சேலையை இழுத்துச் செறுகிக் கொண்டு அபிநயம் பிடித்தாள்..

'பரத நாட்டியம் ஆடறாளா..?'

தாமோதரனின் முகத்தில் திகில் பரவியது.. அவசரமாக சித்தார்த்தனைப் பார்த்தான்.. அவன் பயந்ததைப் போலதான் நடந்து கொண்டிருந்தது.. சித்தார்த்தனின் கண்கள் கூர்மையாக யாமினியின் ஆடலைப் பார்க்க ஆரம்பித்து விட்டன.. அவன் முகத்தின் தசைநார்கள் இறுகியதில் தாமோதரன் கவலைப்பட்டுப் போனான்..

மற்ற சமயங்களில் இலகுவாக இருக்கும் சித்தார்த்தன் பரத நாட்டிய நிகழ்ச்சியைப் பார்க்க நேர்ந்து விட்டால் வேறு ஒருவனாக மாறிப் போய் விடுவான்.. அவனது கண்களின் தேடலில்.. தாமோதரன் அரண்டு போய் சித்தார்த்தனை இழுத்துக் கொண்டு வந்து விடுவான்..

'இவளை யாரு பரத நாட்டியம் ஆடச் சொன்னது..?'

அவனுக்கு கடுப்பான கடுப்பாக இருந்தது.. அவனுடைய கடுப்பைப் பற்றி யாமினிக்கு என்ன தெரியும்..? அவள் பரத நாட்டியம் கற்றவள்.. எல்லோரும் அவரவரின் திறமையை வெளிப்படுத்திய மேடையில் அவளின் திறமையை வெளிப்படுத்த அவள் மேடையேறி விட்டாள்..

'இவனை இழுத்துக்கிட்டுப் போயிடனுமே..'

தாமோதரன் சித்தார்த்தனுக்கு அருகில் விரைந்தான்.. அவனுடன் அவன் வழக்காடிக் கொண்டிருந்தபோது.. அவன் முகத்திற்குப் பின்னால் மறைந்து நின்று மேடையைப் பார்த்தான் சித்தார்த்தன்..

"மறைந்திருந்தே பார்க்கும்..

மர்ம மென்ன..?

சுவாமி..!"

யாமினி பாடலில் கேட்டுவிட்டாள்.. சித்தார்த்தனின் முகஜொலிப்பு அதிகமானது.. அவன் மனதில் கடற்கரை மணலில் ஒலித்த கால்சலங்கைகளின் ஒலி கேட்டது..

தளிர் போன்ற விரல்களின் அபிநயம் தென்பட்டது..

'அவள் இவளா..?'

குழப்பத்துடன் பார்த்தான்.. ஆம் என்பதைப் போல் யாமினியின் தளிர்விரல்கள் அபிநயம் பிடிக்க ஆரம்பித்தன..

"மறைந்திருந்தே பார்க்கும்..

மர்மமென்ன..?

அழகர் மலை அழகா..?

இந்தச் சிலை அழகா.. என்று

மறைந்திருந்தே பார்க்கும்

மர்மமென்ன..?"

சித்தார்த்தனின் காதுகளில் குதிரையின் குளம்போசை கேட்டது.. எங்கோ உளி கொண்டு சிலையைச் செதுக்கும் சப்தம்.. இவை இரண்டையும் மீறிய நாட்டியத்தின் சலங்கையொலி..!

'யார் இவள்..?'

"நாதத்திலே தலைவன்

குரல் கேட்டேன்.. அந்த

நாதத்திலே என்னை

நான் மறந்தேன்.."

யாமினி சுழன்றாடி விழிகளால் சொக்கியபோது சித்தார்த்தனின் மனம் அதில் சிக்கிக் சொக்கியது..

"மோகத்திலே என்னை

மூழ்க வைத்து..

ஓர் ஓரத்திலே நின்று

கள்வனை போல்"

அவனுடன் அவள் இணைந்து ஆடியதைப் போல நிழலாக ஓர் தோற்றம் சித்தார்த்தனின் மனதில் வந்தது..

'ஆடாத மனமும் உண்டோ..?' என்று அந்த நாட்டியத்தில் யாமினி அவனைப் பார்த்துக் கேட்டாள்.. சித்தார்த்தனின் மனதில் எப்போதும் வரும் அந்த அதிர்வு வந்தது.. நிழலாக அவனுக்குள் ஓடிய தோற்றங்கள் நிஜமாகி கண் முன்னால் சதிராடுவதைப் போல அவன் உணர்ந்தான்.. யாமினியும் அவனைப் போல உணர்ந்தாளோ என்னவோ அவள் விழிகள் செறுகி ஓர் விதமான மோன நிலைக்குள்

சென்றிருந்தாள்.. ஆடியபடியே அவள் "இளவரசே...!" என்று முணுமுணுத்ததை சித்தார்த்தனும் தாமோதரனும் மட்டும் கேட்டார்கள்.. மற்றவர்களின் காதுகளில் அந்த வார்த்தை விழுகவில்லை..

அத்தியாயம் - 86

என் கால் சலங்கையின் ஒலி..

காலங்கள் கடந்தும் உன்னைத் தொடர்ந்து வரும்..

புரண்டு படுத்தான் சித்தார்த்தன்.. அவனுக்கு உறக்கம் வரவில்லை.. எழுந்து மணியைப் பார்த்தான்.. இரவு இரண்டு மணி என்றது.. ஏஸியை அணைத்து விட்டுப் பால்கனிக் கதவைத் திறந்து நின்றான்.. சில்லென்ற கடல்காற்று அவன் உடலைத் தழுவிச் சென்றது.. அங்கிருந்து பார்க்கும் போது ஒளிர்ந்த தெரு விளக்குகள் வீதிகளை வெளிச்சத்தினால் குளிப்பாட்டியிருந்தன..

சித்தார்த்தனுக்கு அயர்வாக இருந்தது.. அது சுகமான அயர்வு..! நினைத்து நினைத்து சுகம் கொள்ளும் நினைவுகளினால் ஏற்பட்ட அயர்வு.. யாமினியின் ஆடலும், பாடலும் அவனை மகிழ்வித்ததினால் உண்டாகியிருந்த அயர்வு..

"யாமினி..!"

அவள் பெயரைச் சொல்லிப் பார்த்தான்.. வாய் இனித்தது.. அவளை மோக வெள்ளத்தில் அவன் மூழ்க வைத்தானாமே.. கள்ளி..! இத்தனை காதலை மனதில் ஒளித்து வைத்துக் கொண்டு இத்தனை நாளாக எட்டி நின்றிருக்க எப்படித்தான் அவளால் முடிந்ததோ..

அவனுக்கும் அவளுக்கும் இடையினில் இருக்கும் பந்தத்தை எத்தனை அழகாக அவள் அபிநயித்தாள்.. அவன் எங்கிருந்தாலும் அவனை அவள் அறிவாள் என்றாளே.. அவளை விட்டால் வேறு யார் அறிவார் என்றும் கேட்டாளே..

"எங்கிருந்தாலும் உன்னை..

நானறிவேன் - உன்னை

என்னையல்லால் வேறு

யார் அறிவார்..?"

பாடலைப் பாடியபடி அவள் விழிகளால் வினவி அபிநயித்த போது அருகிலிருந்த தாமோதரனை மறந்து விட்டான் சித்தார்த்தன்.. யாமினியின் விழிகளுடன் அவன் விழிகள் கலந்தன.. அவளோ அவனை வம்புக்கிழுத்து..

"பாவை என் பதம்

காண நாணமோ..?

உந்தன் பாட்டுக்கு நான்

ஆட வேண்டாமா..?"

என்று கேட்டு வைத்தாள்..

சித்தார்த்தனனின் மனதில் தென்றலடித்தது.. அவனையுமறியாமல் அவன் கைகள் தாளம் போட்டதில் தாமோதரன் புருவங்களை உயர்த்தினான்.. சித்தார்த்தன் அவனைப் பார்க்காமல் யாமினியைப் பார்த்தான்.. அவளோ..

"தூயனே வேலவா..!

மாயனே.."

என்று சொல்லி விட்டு 'சண்முகா' என்று சொல்லாமல் சித்தார்த்தனைப் பார்த்த விதத்தில் அவள் மனதிற்குள் எவர் பெயரைச் சொல்லியிருப்பாள் என்பதை சித்தார்த்தன் உணர்ந்து கொண்டான்..

"மான் ஆட.. மலை யாட.. நதியாடா..

மங்கை இவள் நடனமாட..

கான் ஆட.. மண் ஆட.. ஒளியாட.. இடையாட..

கன்னி இவள் கைகள் ஆட..

தூயனே மாலவா..! மாயனே வேலவா..!

எனையாளும் நரசிம்மா வா..

மறைந்திருந்து பார்க்கும்

மர்மமென்ன..?"

யாமினி ஆடி முடித்த போது அசையாமல் நின்று விட்டான் சித்தார்த்தன்..

அவள் நரசிம்மா என்றா சொன்னாள்..? ஏன்..? சித்தார்த்தன் என்ற அவன் பெயரைச் சொல்லாமல் நரசிம்மன் என்று சொல்வதற்கான காரணம் என்ன..?

"அவளுக்கு நரசிம்மன்ங்கிற லவ்வர் இருக்கலாம்.." இரக்கமில்லாமல் சொன்னான் தாமோதரன்..

"நீ இப்படியே பேசிக்கிட்டு இரு.." சிடுசிடுத்தான் சித்தார்த்தன்..

"பின்ன என்னடா.. பார்ட்டியில பரத நாட்டியம் ஆடினவ பாட்டுக்குள்ளே ஏதோ ஒரு பெயரைச் சொன்னா அது யாரு.. எவரு.. குலம் கோத்திரம் என்னன்னு

நீ ஆரம்பிச்சுருவியா..? இதுக்கெல்லாம் இவ்வளவு இம்பார்டண்ட் கொடுத்தா நீ பிஸினெஸ் மேக்னெட்ங்கிற ஸ்டார் இமேஜைத் தக்க வைத்துக்கிறது கஷ்டம்டா சித்தார்த்.. சொல்லிட்டேன்.."

"கொஞ்ச நாளாவே நீ நல்ல வார்த்தைகளைப் பேசக் கூடாதுங்கிற விரதத்தில இருக்கிறடா தாமு.. எப்பப்பாரு.. எதையாச்சும் சொல்லிக்கிட்டு.. ஏண்டா இப்படி இருக்கிற..?"

"நான் கேட்க வேண்டிய கேள்வியை நீ கேட்கிற பாரு.. இதுதாண்டா நேரம்ங்கிறது.. டான்ஸை டான்ஸாப் பாத்துட்டுப் போவியா.. அதை விட்டுட்டு அதில ஆயிரத்தெட்டு நூனாயத்தைக் கண்ட பிடிச்சு சொல்லிக் கிட்டிருக்க.. உன்னை நம்பி இந்தக் கம்பெனி இருக்குது பாரு.. ம்ஹீம்.. என்ன ஆகப் போகுதோ.."

"அடி வாங்கப் போற தாமு.."

"எதுக்கு..? உண்மையைச் சொல்றதுக்கா..?"

"டேய்.. எனக்கென்னவோ நரசிம்மான்னு அவ சொன்னப்ப.. என்னைச் சொல்ற மாதிரியே இருந்துச்சுடா.."

அப்படித்தான் இருந்தது.. அதே உணர்வலை தாமோதரனின் மனதிலும் எழுந்தது.. அவன் சித்தார்த்தனைப் பார்த்து..

'இளவரசே..!'

என்று சொல்லத் தெரிந்தான்.. நல்ல வேளையாக வாய்வரை வார்த்தை வந்த போது சுயநினைவுக்கு வந்து சொல்லாமல் தடுத்து விட்டான்..

"ஒரு செகண்ட் என் பெயர் சித்தார்த்தனில்லை.. நரசிம்மன்னு தோணுச்சுடா.. காரை விட்டுட்டு தேரில் ஏறனும்.. குதிரைமேலே காற்றை விட வேகமா ஜர்ன் பண்ணனும்.. நீட்ட கத்தியை எடுத்துச் சுத்திச் சண்டை போடனும்.. இப்படியெல்லாம் மனசுக்குள்ள நிழலாய் தோணுச்சுடா தாமு.."

தாமோதரனுக்கும்தான் தோன்றி வைத்தது.. அவன் வெளியில் சொல்லிக் கொண்டு நிற்கிறானா என்ன..?

"பைத்தியம் போலப் பேசாதேடா.. போ.. போய் ரெஸ்ட் எடு.. சரியாப் போயிரும்.."

சரியாகவில்லை.. கண்களை மூடினால்.. வெகு இயல்பாக சேலையைச் செருகிக் கொண்டு மேடையில் நாட்டியம் ஆடிய யாமினி வந்து நின்றாள்.. சுழன்று ஆடினாள்..

"எனை ஆளும்..

நரசிம்மா..! வா.."

என்று பாடினாள்..

அவளது பார்வையும், பேச்சும், பாடலும், நாட்டியமும்.. தெவிட்டாத தேனமுதைப் போல இருந்தன.. பார்ட்டி முடிந்து கிளம்பும் வரை அவளது ரகசியப் பார்வைகள் சித்தார்த்தனைத் தேடி வந்து கிளர்ச்சி தந்து

கொண்டிருந்தன.. மின்வெட்டும் பொழுதுகளை அவள் தந்து கொண்டேயிருந்தாள்.. என்றைக்கும் இல்லாத வகையில் அன்று அவள் உரிமையெடுத்துப் பார்த்த விதமும்.. ரகசியப் பார்வைகளை வீசிய விதமும் சித்தார்த்தனின் மனதை கொள்ளை கொண்டன..

இணையற்ற வசீகரியாய் அவள் இருந்தாள்.. அந்தக் கூட்டத்தின் மத்தியில் நளினமும், சோபையும் கொண்ட தேவதையைப் போலத் தனித்துத் தெரிந்தாள்..

"தாமு..!" மயக்கத்துடன் நண்பனை அழைத்தான் சித்தார்த்தன்..

"எனக்கு வேலையிருக்கு.. நீ வீட்டுக்கு கிளம்பு.." முன் ஜாக்கிரதையாக கழன்று கொள்ள முனைந்தான் தாமோதரன்..

"இருடா.."

"எதுக்கு.."

"ஒரு விசயத்தை ஷேர் பண்ணிக்கனும்.."

"ஒன்னும் வேண்டாம்.. பேசாம இரு.."

"ஐ திங்.."

சித்தார்த்தன்.. ரேகாவுடன் பேசியபடி அவனையே பார்த்துக் கொண்டிருந்த யாமினியைப் பார்த்தபடி ஆரம்பிக்க..

"கொஞ்சம் நிறுத்தறியா.." என்று பட்டுக் கத்தரித்தான் தாமோதரன்..

"தாமு.. நான் என்ன சொல்ல வர்றேன்னா.."

"சித்..! நீ இந்தக் கம்பெனிக்கு எம்.டி. இதை நான் உனக்கு நினைவு படுத்த வேண்டியிருக்கு.. பெரிய அச்சீவ்மெண்ட்ட செலிபரேட் பண்ண பார்ட்டி கொடுத்துக் கிட்டு இருக்க.. நம்ம ஆபிஸ் ஸ்டாப்ஸ், கெஸ்டுன்னு இந்த பார்ட்டி ஹால் முழுக்க கூட்டம் நிரம்பியிருக்கு.. இந்த செகண்டில நீ எதையோ பேச வர்ற.. உனக்கே இது நல்லாயிருக்கா..?"

"தாமு.."

"உன்னோட வெற்றியை இவங்கள்ளாம் கொண்டாடிக்கிட்டு இருக்காங்க.. நீ எதைக் கொண்டாட நினைக்கிற சித்..?"

தாமுவின் கோபத்திலும் நியாயம் இருந்ததில் சித்தார்த்தன் சொல்ல நினைத்ததை சொல்லாமல் மற்றவர்களிடம் பேசப் போய் விட்டான்..

'தப்பிச்சேன்..'

தாமோதரன் வாயைக் குவித்து.. 'ஊப்ப்..' என்று காற்றை ஊதித் தள்ளினான்..

'இதுக்கு மேலேயும் தள்ளிப் போடக் கூடாது.. நீரஜாவைப் பார்த்துப் பேசிறனும்..' மனதுக்குள் தீர்மானம் நிறைவேற்றிய பின்னால்தான் அவனால் மற்ற வேலைகளைப் பார்க்க முடிந்தது..

விருந்து ஆரம்பமாகியது.. ரேகா யாருடனோ பேச நகர்ந்து போய்விட.. யாமினி தனித்து நின்றாள்.. இயல்பாகச் செல்வதைப் போல சித்தார்த்தன் அவளருகில் சென்றான்..

"என்ன தனியா நிற்கறிங்க..?"

அவன் கேள்வியில் ஏறிட்டுப் பார்த்தவளின் இமைகள் படபடத்து அவளது இதயத்தின் படபடப்பை உணர்த்தின.. அவன் வந்து பேசுவான் என்று எதிர் பார்த்திராததினால் தடுமாறினாள்..

"ரேகா ஜோஸிபின் கிட்டப் பேசப் போயிருக்கா.."

"ஓ..!"

சித்தார்த்தன் அவளையே ஊன்றிப் பார்த்தான்.. யாமினி கன்னம் சிவக்க தலையை லேசாக குனிந்து கொண்டாள்.. அவளின் அந்த வெட்கத்தை சித்தார்த்தனுக்குப் பிடித்திருந்தது..

"அழகாயிருக்கீங்க.." சொல்லி விட்டான்..

யாமினி வியப்புடன் அவனைப் பார்த்தாள்.. சித்தார்த்தனின் தீட்சண்யம் மிக்க பார்வையில் மீண்டும் தடுமாறினாள்..

"தேங்க்ஸ்.."

நீயும் அழகாக இருக்கிறாய் என்று சொல்ல வேண்டும்போல அவள் மனம் துடித்தது.. அவன் அழகாகத்தான் இருந்தான்.. உயரமாக, கம்பீரமாக, கருநீல கோட்சூட்டுடன் ஒரு அரசனைப் போன்ற தோரணையுடன் இருந்தான்..

அதை அவனிடம் சொல்ல முடியாமல் எதுவோ அவளைத் தடுத்தது..

"உங்க பாட்டும், டான்ஸீம் பெண்டாஸ்டிக்.."

"தேங்க்ஸ் எகெய்ன்.."

"உங்களுக்கு பரத நாட்டியம் தெரியும்ங்கிறது, இன்னைக்குத்தான் எனக்குத் தெரியும்.."

"முறைப்படி கத்துக்கிட்டேன்.. அரங்கேற்றமெல்லாம் நடந்தது.."

"வெரிகுட்..! சொல்லவே இல்லை பார்த்தீங்களா.."

"வேலைக்கான அப்ளிகேசன் ஃபார்மில உங்களுக்கு நாட்டியம் தெரியுமாங்கிற கொஸ்டின் இல்லை.. அதனால சொல்லலை.."

"ஹா.. ஹா.."

அவன் சிரிக்கும் போது தெறித்து விழுந்த அதீதமான கவர்ச்சியில் அவள் மனம் தடுக்கி விழுந்தது.. அவன் ஆழ்ந்த பார்வையொன்ற பார்த்து வைத்ததில் அவள் மனதில் மோகத்தீ மூண்டது.. அவன் மீதிருந்த வந்த ஃபெர்பியூமின் மணம் அவனுக்கே உரியதாக அவள் நாசியில் நுழைந்து மயக்கியது.. அவனது அருகாமையில் அவள் கிளர்ந்தாள்.. அவனது பார்வையும், பேச்சும் உணர்த்திய ரகசிய செய்தியில் கிறங்கினாள்..

அவர்கள் நின்றிருந்த இடத்தில் தொட்டிப் பூச்செடிகள் அடர்ந்திருந்தன.. மற்றவர்களின் பார்வையி லிருந்து அது அவர்களை மறைத்தது.. சித்தார்த்தன் நெருங்கி நின்றான்..

அதுவரை அவள் பார்த்துப் பழகிய சித்தார்த்தனா அவன் என்று ஆச்சரியமானாள் யாமினி.. கண்ணியமே வடிவானவனுக்கு காதல் பேசவும்

தெரியுமா..? மற்றவர்கள் அறியாமல் கள்ளப் பார்வை பார்க்கவும் வருமா..?

அவனுக்கு காதலும் தெரிந்திருந்தது.. கள்ளப் பார்வையும் வந்திருந்தது..

துளைக்கும் அவனது பார்வையில் சிலிர்த்தது அவளதுமேனி..

"யாமினி.."

ஆழ்ந்த அவனது குரலில் மயங்கிப் போனாள் யாமினி..

"ம்ம்ம்.."

"என் பெயர் சித்தார்த்தன்.."

"களுக்.." என்று சிரித்து வைத்தாள்..

"ஏன் சிரிக்கிற..?"

"எனக்கு இது தெரியாதா..?"

"அப்புறம் ஏன் நரசிம்மன்னு பாடின..?"

யாமினி அதிர்ந்து நிமிர்ந்து அவனைக் கலக்கத்துடன் பார்த்தாள்..

"தெரியலை.."

"தெரியலையா..?"

"ம்ம்ம்.. தெரியலை.. நான் உங்க பெயரைத்தான் சொன்னேன்.. அது நரசிம்மன்னு எப்படி மாறுச்சுன்னு தெரியலை.."

மலங்க மலங்க விழித்தவளை இழுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் போல அவனுக்கிருந்தது..

"தெரியலைன்னா விடு.. அதுக்கு பயப்படனுமா..?"

"பயமாத்தான் இருக்கு.."

"நானிருக்கிறப்ப எதுக்கு பயம்..?"

அவள் கைவிரல்களைப் பிடித்து அழுத்தினான் சித்தார்த்தன்.. யாமினியின் உடலில் மின்சாரம் பாய்ந்தது.. விரல்களை உறுவிக் கொள்ளும் நினைவின்றி அப்படியே நின்று விட்டாள்..

"சாப்பிடலாமா யாமினி..?"

ரேகா வந்து விட்டதில் சித்தார்த்தன் சட்டென்று விலகி மற்ற விருந்தினர்களுடன் பேசுவதைப் போல நின்று கொண்டான்..

"ம்ம்ம்..."

சற்றுமுன் உணர்ந்த சித்தார்த்தனின் ஸ்பரிசத்தின் உணர்வில் பேசமுடியாமல் தலையை ஆட்டினாள் யாமினி..

அன்று முழுவதும் அவளின் விரல்தொட்ட நினைவே சித்தார்த்தனின் மனதை ஆக்ரமித்து சுகமான அயர்வைத் தந்து அவனது தூக்கத்தை விரட்டியடித்துக் கொண்டிருந்தது..

அத்தியாயம் - 87

நீ தொட்டபோது - உன்

நிழல் தொட்டாள் மாது..

ஆழ்ந்த நீலத்தில் வெள்ளி ரிப்பன்களைப் போல அலைகள் தவழ்ந்து வந்து கரையில் மோதின.. சுருண்டு எழுந்து கரையில் மோதி தரையில் வீழ்ந்து கடலுக்குத் திரும்பிய அலைகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தாமோதரன் கைக்கடிகாரத்தில் மணியைப் பார்த்தான்..

"கரெக்டா சிக்ஸ் ஓ கிளாக்குன்னு வாட்ச் சொல்லும்.. ஒரு செகண்ட் கூட அதிகமாகியிருக்காது.."

அவனுக்குப் பின்னால் குரல் கேட்டதில் அவன் மனதில் உற்சாக வெள்ளம் பாய்ந்தது.. பரபரப்பைக் காட்டிக் கொள்ளாமல் திரும்பினான்.. அமர்த்தலான நடையுடன் அவனையே பார்த்தபடி அங்கே நீரஜா வந்து கொண்டிருந்தாள்..

"சும்மா மணி பார்த்தேன்.."

அவள் அப்படியா என்று கேட்கவில்லை.. தாமோதரன் உட்கார்ந்திருந்த மணல் மேட்டில் உட்காரலாமா என்ற யோசனையுடன் பார்த்தாள்.. ஜீன்ஸீம், குர்த்தாவுமாக இருந்தவளின் முடி சீராக வெட்டப்பட்டு முதுகில் பரந்திருந்தது..

தாமோதரன் கைக்குட்டையை எடுத்தான்.. அவனுக்குப் பக்கத்தில் மணல் மேட்டில் விரித்து விட்டான்..

"இப்ப உட்காருங்க.." என்றான்..

நான் கேட்டேனா என்பதைப் போலப் பார்த்த நீரஜா. தாமோதரனின் கைக்குட்டைய எடுத்து அவனிடமே கொடுத்தாள்.. கால்களை மடக்கி அவன் பக்கத்தில் உட்கார்ந்தாள்..

தாமோதரனுக்கு உலகமே வண்ணமயமாக ஆகி விட்டதைப் போல இருந்தது.. தனிமையில் அவர்கள் சந்தித்துக் கொண்டதில்லை.. சித்தார்த்தனோ, விவேகானந்தனோ.. இல்லை நிருபமாவோ கூட இருப்பார்கள்.. இவர்கள் இல்லாவிட்டால் வேறு யாராவது இருந்து வைப்பார்கள்..

அரிதாய் கிடைத்த தனிமையில் அரிதான பொருளைப் பார்ப்பதைப் போல அவளைப் பார்த்து வைத்தான் தாமோதரன்.. அவளது பார்வையில் இருந்தது ஆசையா, கோபமா என்று இனம் பிரித்துப் பார்க்க அவனால் முடியவில்லை..

பொருள் விளங்காத பார்வைகளைப் பார்ப்பதில் நீரஜாவுக்கு நிகர் நீரஜாதான்.. அவள் பார்வையை வைத்து.. அவள் மனதில் என்ன இருக்கிறது என்று யாராலும் கண்டு பிடித்து விட முடியாது..

"எதுக்கு வரச் சொன்னீங்க..?"

கறாராகக் கேட்டாள் நீரஜா.. இதற்குத்தான் வரச் சொன்னேனா என்று நொந்து போனான் தாமோதரன்..

இப்படியா ஒருத்தி சிடுசிடுவென இருந்து வைப்பாள்..? இருந்தும் அந்த சிடுமூஞ்சியின் பின்னால் அவன் மனம் ஓடித் தொலைக்கிறதே..

"வரச் சொல்லக் கூடாதா..?"

மனம் தாங்காமல் கேட்டு விட்டான் தாமோதரன்.. காத்திருத்தல் சுகம்தான்.. ஆனால் எதுவரை காத்திருக்க வேண்டும் என்பதற்கும் அளவு கோல் இருக்கிறதே.. காலமெல்லாம் காத்திருத்தலிலேயே கழிந்து விட்டால் வாழ்க்கையை எப்போதுதான் வாழ்வது..?

கேள்வி என்ன புதுமாதிரியாக வெளிவருகிறது என்று ஒரு மார்க்கமாக அவனைப் பார்த்து வைத்தாள் நீரஜா.. அதைப் பல மார்க்கங்களாகக் கவ்விக் கொண்டான் தாமோதரன்..

"என்ன்ன்ன்.....ன..?"

நீரஜா கேட்ட 'என்ன..?'வைப் போல யாரும் கேட்டு விட முடியாது என்று புல்லரித்துப் போனான் தாமோதரன்.. அவளிடம் சொன்னால் போர்வையிருந்தால் போர்த்திக் கொள்.. நான் துப்பட்டா போட்டுக் கொண்டு வரவில்லை.. இரவல் துப்பட்டாவைக் கொண்டு நீ போர்த்திக் கொள்ள முடியாது என்று கட் அண்ட் ரைட்டாக சொல்லியிருப்பாள்..

"ஒன்னுமில்லையே.."

ஒன்றுமில்லாததை ஒரு கோடி ஒளிந்திருப்பதைப் போல யாரும் சொல்லியும் விட முடியாது என்று பல்லைக் கடித்தாள் நீரஜா.. அதைப் பரவசம் என்று தப்புக் கணக்கு போட்ட தாமோதரன் அவளை ஆவலாக பார்த்து வைத்தான்..

"ஒன்னுமேயில்லாததுக்கா அப்படி ஒரு பில்ட்-அப் கொடுத்தீங்க..?"

"எப்படி பில்ட்-அப் கொடுத்தேனாம்..?"

"கப்பல் கவிழ்ந்து விட்டதைப் போல பில்ட்-அப்.."

"அப்படித்தான்னு வைத்துக்கங்களேன்.."

இரண்டாவது வார்த்தையில் மட்டும் அழுத்தம் கொடுத்து அவன் ஜொள்ளியதில்..

"என்னது..?" என்று கடுகடுத்தாள் நீரஜா..

"நான் கப்பல் கவிழ்ந்தைச் சொன்னேங்க.."

என்னைச் சொல்லவில்லை என்ற தாமோதரனின் மறைமுக ஒப்புதல் வாக்குமூலத்தில் அதுதானே பார்த்தேன் என்று கோபம் குறைந்தாள் நீரஜா..

'இவ 'நீரு' வா..? நெருப்பு..!'

அந்தக் கனல் வீசும் காரிகையின் மீது எதற்காக அவன் கொள்ளை கொள்ளையாய் ஆசையைக் கொண்டான்..?

"எந்தக் கப்பல் கவிழ்ந்ததாம்..?"

"டைட்டானிக் கப்பல்..!"

தாமோதரனின் பார்வை அவளை கப்பலின் முகப்பிற்குச் சென்று கைகளை விரித்து நிற்க அழைத்ததில்..

"ஓஹோ.." என்று இழுத்தாள் நீரஜா..

"என்னவோ போங்க.. காவல் காத்துக் காத்து ஓய்ந்து போயிட்டேன் காவலை மீறி காதல் வளர்ந்து தொலைக்குது.."

"யாருக்கு..?"

"எனக்கில்லைங்க.."

நீண்டதாக ஒரு பெருமூச்சை வெளியேற்றி நீரஜாவைத் திரும்பிப் பார்க்க வைத்தான் தாமோதரன்.. அவளது ஆழ்ந்த பார்வையில் அவன் மனதில் அலையடித்தது..

"அதுக்கெல்லாம் கொடுத்து வைச்சிருக்கனும்ங்க.."

"எதை..?"

"மனதை.."

நீரஜா ஓர் பார்வையை அவன்மீது வீசினாள்.. அலையோரமாக தவழ்ந்து வந்த பந்தை எடுக்க ஒரு குழந்தை ஓடி வந்தது.. கடலில் பொங்கி எழுந்து வந்த அலையில்..

"குழந்தை.." என்று பதறி எழுந்தாள்..

"இருங்க.. நான் பார்த்துக்கறேன்.."

தாமோதரன் வேகமாக ஓடி குழந்தையையும் பந்தையும் ஒரு சேர தூக்கிக் கொண்டு வந்து விட்டான்.. பிள்ளையைப் பெற்றவர்கள் காலில் விழாத குறையாக நன்றி நவின்று விட்டு பிள்ளையை வாங்கிக் கொண்டு போனார்கள்.. நீரஜாவின் பார்வை தாமோதரனின் மீது படிந்து..

'அடேய்.. ஹீரோ..!' என்று அழைத்தது..

'வாழ்க பந்து..' தாமோதரன் கிடைத்த பார்வையை விடாமல் பற்றிக் கொண்டு பதிலுக்கு பார்த்து வைத்தான்..

'இதிலெல்லாம் விவரம்தான்..' நீரஜா உதட்டைச் சுழித்தாள்..

'இருக்காதா பின்னே..?' தாமோதரன் புருவங்களை உயர்த்தினான்..

"ஆஹா.. எக்ஸ்பிரசன்னா இதுதான்ய்யா எக்ஸ்பிரசன்..! பாத்துக்கங்கய்யா.. நீங்களும் இருக்கீங்களே.. கேமராவை ஓடவிட்டுட்டு காதலாய் பாருங்கன்னா கடன் கேட்கிறதைப் போலப் பார்த்துக்கிட்டு.."

கதை டிஸ்கசனுக்கு கடற்கரைக்கு வந்திருந்த சினிமா கோஷ்டியில் டைரக்டராகப் பட்ட மகராஜன் நீரஜாவையும், தாமோதரனையும் காட்டி பாடம் எடுக்க ஆரம்பித்தான்.. தாமோதரன் சட்டைக் கையை ஏற்றி விட்டபடி முறைத்துப் பார்த்ததில் சினிமா கோஷ்டி நெடுந் தொலைவுக்கு இடம் மாறியது..

"சூப்பர்.." வாய் விட்டுச் சொன்னாள் நீரஜா..

'என்னைத்தானே..' தாமோதரன் மகிழ்ந்து போக..

"கடலையைச் சொன்னேன்.." என்றாள் அமர்த்தலாக..

'இவள் இருக்கிறாளே..'

அவள் அவ்வளவு தூரம் அழிச்சாட்டியம் பண்ணியும் அவள்மீது தாமோதரனுக்குக் கொஞ்சம் கூட கோபம் வந்து தொலைக்கவில்லை.. மாறாக பறக்கா வெட்டியைப் போல அவளை பருகு.. பருகு.. என பார்த்து வைத்தான்..

"வந்து ரொம்ப நேரமாச்சு.."

"இல்லையே.. இப்பத்தானே வந்தீங்க..?"

"மணியைப் பாருங்க.."

"அதைப் பார்த்து எனக்கென்னங்க ஆகப் போகுது..?"

"உங்களுக்கொன்னும் ஆகாது.. நேரம்தான் ஆகிக்கிட்டு இருக்கு.."

"ஆகட்டும்.."

தாமோதரனின் பிடிவாதத்தில் நீரஜாவின் இதழ்க் கடையில் சின்னச்சிரிப்பு உதித்தது.. கண்டிப்பான அவள் முகத்தில் வந்த கனிவையும் சிரிப்பையும் மழைக்கு ஏங்கிய சாதகப்பட்ஷி மழைச்சாரலில் நனைந்து மகிழ்வதைப் போலப் பூரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் தாமோதரன்..

நீரஜா தளர்வாக அமர்ந்தாள்.. விறைப்பை விடுத்த அவளின் செயலில் தாமோதரனின் மனம் நனைந்தது.. விச்ராந்தியாக கால்களை நீட்டி மணல் மேட்டில் சாய்வாக கைகளை ஊன்றி.. தலையை ஒருபக்கமாக சாய்த்து அவள் தாமோதரனைப் பார்த்த போது அவளை எதற்காக வரவழைத்தான் என்பதே தாமோதரனுக்கு மறந்து போய்விட்டது..

"ஊருக்கு வந்திருந்தீங்கள்ல..?"

"அதான் கோவிலிலே பார்த்தீங்களே.. அதுக்கப் புறமும் என்ன விசாரணை..? ஒருவேளை கோவிலில் பார்த்ததை

மறந்துட்டிங்களா..?"

"மறக்கிறதா..? நானா..?"

நீரஜாவின் பார்வை சுழன்று வினவியதில் தாமோதரன் தன்னை மறந்தான்..

"மறக்க மாட்டிங்களா..?" ஆழ்ந்த குரலில் கேட்டான்.

நீரஜாவின் முகத்தில் மந்தகாசம் படர்ந்தது.. முடியைக் கோதிப் பின்னுக்குத் தள்ளியபடி அவனைப் பார்த்த பார்வையில் சொந்தம் தெரிந்தது..

"மாட்டேன்.."

தாமோதரனின் முகம் மலர்ந்தது.. அருகாமையில் இருந்தவளின் கை தொட மனம் விரும்பினாலும் அவன் அவளைத் தொட முனையவில்லை.. அவளின் கம்பீரம் அவளைத் தொட அனுமதிக்கவில்லை..

காதலில் மரியாதை சாத்தியமா..?

நீரஜாவைப் போன்ற ஒருத்தியைக் காதலித்தால் நிச்சயம் சாத்தியமாகும்.

"அப்பா, அம்மா என்ன சொன்னாங்க..?"

"எப்போதும் போலதான் சொன்னாங்க.. காஞ்சி புரத்திலதான் நம்மவீடு இருக்குடா.. சென்னையில எதுக்காக தனிக் குடித்தனம் பண்றேன்னு திட்டினாங்க.. ஊருக்கு வந்துரச் சொன்னாங்க.."

"நீங்க என்ன சொன்னீங்க..?"

"என்ன சொல்ல..?"

"காஞ்சிபுரத்தில இருக்கிறது அப்பாம்மாவும் சொந்தவீடும் மட்டுமில்ல.."

நீரஜா முடிக்காமல் விட்ட வாக்கியம் 'நானும்தான்..' என்றது..

'புரிந்தது..' என்ற பார்வையைப் பார்த்த தாமோதரன்..

"நான் என்ன செய்யட்டும்..? சித்தார்த்தன் இங்கே தானே இருக்கான்.." என்றான்..

"அண்ணனை நீங்க காதலிக்கிறீங்களா..?"

சிரிக்காமல் கேட்டாள் நீரஜா.. சிரித்து விட்டான் தாமோதரன்..

"ஏங்க இப்படி..?" என்றும் கேட்டான்..

"கொடுமை பண்ணினா இப்படித்தான் கேள்வி வரும்.."

"சரிதான்.. அதுக்காக இப்படியா கேட்டு வைப்பீங்க..?"

"உங்க ரெண்டு பேரையும் பாத்தா அப்படித்தானே இருக்குது.."

"பொறாமையா..?"

மறுபடியும் ஆழ்ந்த குரலில் கேட்டான் தாமோதரன்.. நீரஜாவின் முகம் லேசாக சிவந்ததில் அவளுக்குள்ளிருந்த பெண்மையின் நளினம் வெளி வந்தது..

"இருக்கக் கூடாதா..?" அவளும் கேட்டு விட்டாள்..

'ஹ..!' மழைத் துளிகளின் சாரலில் சாதகப்பட்சி சிலிர்த்து சிறகை விரித்தது..

தாமோதரனின் மனம் அந்த நொடிகளின் இன்பத்தைச் சிந்தாமல் சிதறாமல் சேகரித்துக் கொண்டிருந்தது..

"கூடாதுன்னு நான் சொன்னேனா..?" அவனும் சொல்லி விட்டான்..

"சொல்லித்தான் பாருங்களேன்.." துள்ளலுடன் அவள் சொன்னாள்..

"சொல்ல மாட்டேன்னுதானே சொல்றேன்.."

"அப்படியென்ன அண்ணன் உங்களுக்கு உயர்த்தி..?"

"சிலசமயங்களில் நட்பு கூட காதலைப் போலதான் நீரஜா.."

அபூர்வமாகத்தான் அவள் பெயரைச் சொல்லி அழைப்பான் அவன்.. அந்தத் தருணம் அப்படியொரு அபூர்வமான

தருணமாக இருந்தது.. வார்த்தைக்கு வலிக்குமோ என்று மென்மையாக அவள் பெயரை அவன் உச்சரித்ததில் அவள் விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்தாள்.. அந்தப் பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்றில் கட்டுண்டான் தாமோதரன்..

தாமோதரனைக் கட்டி வைக்கும் வசியசக்தி நீரஜாவிடம் மட்டும் தான் இருந்தது.. ஈஸ்வரனிடம் அடங்காதவன், சித்தார்த்தனையே அடக்க முனைகிறவன், நீரஜாவின் முன்னால் ஆட்டுக்குட்டியைப் போல அடங்கிப் போனான்..

"இந்த அளவுக்கு மண்டி போடற ஆள் நீயாத்தாண்டா இருப்ப.. அப்படி என்னதான் நீரு மந்திரம் போட்டாளோ.. ஆனாலும் தாமு.. உன்போல ரோசக்காரன்.. என் தங்கையைப் போல ஆணவம் பிடிச்சவளிடம் அடங்கிப் போகிறதில எனக்கு ஆச்சரியமா இருக்குடா.. மத்தவங்க கிட்ட எப்படி இருக்கிற நீ.. அவ முன்னாலே மட்டும் இப்படி ஆகி வைக்கிறயேடா.." என்பான் சித்தார்த்தன்..

நீரஜா கடற்கரை மணலைக் கையில் அள்ளிப் பூவைப் போலத் தூவினாள்.. தாமோதரன் அதைப் பார்த்து விட்டு..

"வேண்டாம்.." என்றான்..

ஏன் என்னும் பாவனையில் அவள் மிதப்பாக புருவங்களை உயர்த்தினாள்.. எல்லோரும் சொல்வதைப் போல இவளுக்குத் திமிர் மிகவும் அதிகம்தான் என்று நினைவில் தாமோதரனின் இதழோரம் புன்னகை வந்தது.. எவருக்கும் பிடிக்காத அவளின் திமிரும், கர்வமும், ஆணவமும் அவனுக்கு மட்டும் ஏன் பிடித்துப் போனது..?

சித்தார்த்தன் மட்டும் அங்கிருந்தால் தங்கை யென்றும் பாராமல் நீரஜாவை முறைத்து விட்டு..

"தேவையாடா உனக்கு..?" என்று தாமோதரனை அதட்டியிருப்பான்..

'அவனுக்கென்ன தெரியும்..?' தாமோதரன் கனிவாக நீரஜாவைப் பார்த்தான்..

அவளின் ஆணவம் ஏன் அவனைப் பாதிக்கவில்லை..?

விடைதெரியாத கேள்வியை புறம் தள்ளி விட்டு இதமாக சொன்னான்..

"கை அழுக்காகிரும்.. இந்தாங்க.." கைக்குட்டையை நீட்டினான்..

"என்கிட்ட இருக்கு.." நீரஜா அவளின் கைக்குட்டையை எடுத்துக் காட்டி விட்டு மணல் தூவலை தொடர்ந்தாள்..

"ஏன்..? என் கர்சீஃபை யூஸ் பண்ண மாட்டிங்களா..?"

"மாட்டேன்.."

"ஓ..."

தாமோதரனின் குரலில் ஏதோ ஓர் வலி தொனிப்பதை உணர்ந்தவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.. மெதுவாகச் சொன்னாள்..

"பொதுவா நான் மத்தவங்க கர்சீஃபை யூஸ் பண்ண மாட்டேன்.. அவங்க கொடுத்தா வாங்கிக்கவும் மாட்டேன்.."

"நல்ல பழக்கம் தான்.. பட்.. மத்தவங்களும் நானும் ஒன்னா..?"

நீரஜாவின் பார்வையே இல்லையென்று அடித்துச் சொன்னது.. அது அவனுக்குப் போதுமானதாக இல்லை யென்பதால் கடலை வெறித்தான்..

அத்தியாயம் - 88

கடலலை தாலாட்டும் கடற்கரையில் - உன்

கருணை என்னைத் தாலாட்டாதா..?

"இல்லை.." என்றாள் நீரஜா..

"மத்தவங்களும் நீங்களும் ஒன்றாகி விட முடியாது.. உங்க கர்சீஃபை யூஸ் பண்றதில் எனக்கு எந்தப் பிரச்னையும்

இல்லை.."

தாமோதரனையே பார்த்தபடி அவள் சொல்லச் சொல்ல அவன் முகத்தில் வெளிச்சம் பரவியது.. அதில் நீரஜா நிம்மதி கொண்டாள்.. அவனது மன வலியும், வேதனையும் இந்த அளவுக்கா அவளைப் பாதிக்கிறது என்று தன்னைத்தானே கேள்வி கேட்டும் கொண்டான்..

நீரஜா கர்வி..! கோபக்காரி..! ஆணவக்காரி..! அகந்தை மிக்கவள்..

அப்படிப்பட்ட நீரஜா தாமோதரனின் முன்னால் கருணையுள்ளம் கொண்டவள்..!

எதனால் அப்படியென்று அவளுக்கே தெரியவில்லை..

"அப்புறம் என்ன..? ஏன் என் கர்ஃசீப்பை வாங்கிக்கலை..?"

"பட்.."

"பட்..?"

"ஒரு செண்டிமெண்ட் உண்டு.."

"செண்டிமெண்டா..?"

"யெஸ்..! யார்கிட்டயாவது நாம கர்சீஃபை வாங்கினோம்ன்னா அவங்களை விட்டுப் பிரிஞ்சுடு வோமாம்.."

இதைச் சொல்வதற்குள் நீரஜா திணறிப் போனாள்.. அவள் முகத்தில் மெலிதான வெட்கம் கூட வந்திருந்தது.. நம்ப முடியாமல் அவளையே இமைக்காமல் பார்த்தான் தாமோதரன்.. இதுபோதும் என்று தோன்றியது அவனுக்கு.. நீரஜாவுடன் வாழும் வாழ்க்கை கூட அவனுக்கு வேண்டாம்.. எதற்கும் மடங்காதவள்.. அவனுக்காக ஒரு செண்டிமெண்டை நம்புகிறாள் என்றால் அதைவிட அவனுக்கு வேறென்ன வேண்டும்..?

தாமோதரன் கைக்குட்டையை மடித்துச் சட்டைப் பையில் வைத்துக் கொண்டான்.. லேசான மனதுடன் வானத்தைப் பார்த்தான்.. மேகங்கள் அற்று அது நிர்மலமாக

கண்சிமிட்டியது.. அவனுக்கு விசிலடிக்க வேண்டும் போல இருந்தது.. உதடுகளைக் குவித்து விசிலடித்தான்.. நீரஜா ஓரக் கண்ணால் அவனைப் பார்த்தாள்.. அவனுடைய உற்சாகம் அவளை ஈர்த்தது.. அவனுடைய சந்தோசத்தில் அவளுக்கு சந்தோசம் வந்தது..

"அண்ணன் எப்படியிருக்கான்..?"

"அவனைப் பத்திப் பேசத்தான் வரச்சொன்னேன்.."

அதை விட்டுவிட்டு நம்மைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன் எனும் தொனியில் தாமோதரன் சொன்னதில் லேசாக சிரித்துக் கொண்டாள் நீரஜா..

"அந்தப் பெண்கூட மிங்கிளாகிறானா..?"

நேரடியாக அவள் கேட்ட கேள்வியில் ஆச்சரியமானான் அவன்..

"எப்படி.. டக்குன்னு பாயிண்டைப் பிடிச்சீங்க..?"

"இதில பாயிண்டைப் பிடிக்க என்ன இருக்கு..? அவனே பெரிய பிஸினெஸ் மேக்னெட்டுன்னு பெயர் வாங்கினவன்.. 'விவேகானந்தனோட சன்'ன்னு சொல்லிக் கிட்டிருந்தவங்களை 'சித்தார்த்தனின் ஃபாதர்தான் விவேகானந்தன்'னு சொல்ல வைச்சவன்.. ஸோ.. பிஸினெஸ்ஸில் எதுவும் பிரச்னை இருக்காது.. அப்படியே பிராப்ளம் வந்தாலும் அவனும் நீங்களும் ஹேண்டில் பண்ணிக்குவீங்க.. அவனோட பிஸினெஸில் ஐடியா சொல்கிற அளவுக்கு நானொன்னும் பெரிய அப்பாடக்கர் இல்லை.. இது வேற பிராப்ளம்.. அப்படியாப்பட்ட பிராப்ளம் அந்தப் பெண்ணாலதான வரமுடியும்..?"

நீரஜாவின் புத்திசாலித்தனத்தில் ஈர்க்கப்பட்டான் தாமோதரன்.. இதுபோன்ற புத்திசாலித்தனம்தான் மற்ற பெண்களிடமிருந்து அவளைத் தனித்துப் பிரித்துக் காட்டியது.. அந்த தனித்தன்மைதான் அவனை வசீகரித்தது..

"யாமினியிடம் அவ்வளவா பேசாமல்தான் இருந்தான்.."

"யாமினியா..? யார் அது..? ஓ.. அவளா...!"

இந்தக் கேள்வியில் தாமோதரன் ஆச்சரியமாக வில்லை.. இதைப் போல அவள் கேட்டிருக்கா விட்டால்தான் அவன் ஆச்சரியப் பட்டிருப்பான்.. நீரஜா எவரையும் ஒரு பொருட்டாக நினைக்காதவள்.. அவளாவது.. யாமினியின் பெயரைச் சரியாக நினைவில் வைத்திருப்பதாவது..

"அவளை வேலையில் சேர்க்கக் கூடாதுன்னுதான் சித்தார்த்தன்கூடச் சண்டை போட்டேன்.. வேற ஒரு பெண்ணை ரெகமெண்ட் பண்ணினேன்.. அந்தச் சமயத்திலே நீங்க எண்ட்ரி கொடுத்து என்னை ஒரு வழி பண்ணிட்டிங்க.." நினைவு படுத்தினான் தாமோதரன்..

அந்த நாளின் நினைவில் நீரஜாவின் முகத்தில் முதலில் சிரிப்பும் அதைத் தொடர்ந்த சிந்தனையும் வந்தது..

"அவளை மறக்க முடியாது.. எனக்கு நினைவிருக்கு.. அண்ணன்கிட்ட வார்ன் பண்ணினேன்.. அவன் ஆன்ஸர் பண்ணாம சிரித்துத் தப்பிச்சான்.."

"அப்படியேதான் செய்வான்.. அதிலேயெல்லாம் கெட்டிக்காரன்.."

"பிஸினெஸ்ஸிலும் கெட்டிக்காரன்தான்.."

சகோதர வாஞ்சையுடன் சொன்னாள் நீரஜா.. சித்தார்த்தனின் மீதான பிரியம் அவள் முகத்தில் தெரிந்தது.. இந்தப் பிரியத்தை வெளிப்படையாக தமையனிடம் காட்ட மாட்டாள்..

'அவனிடம் மட்டும்தானா..?'

வந்த பெருமூச்சை அடக்கிக் கொண்டான் தாமோதரன்.. நீரஜாவைப் போன்ற ஒருத்தியைக் காதலித்து விட்டுப் பெருமூச்சு விடுவதால் யாதொரு பலனும் இருக்கப் போவதில்லை..

"தள்ளியிருந்தவன் நெருங்கிப் போகிறதைப் போல எனக்குத் தோணுதுங்க.. அதனாலதான் உங்களை வரச் சொன்னேன்.."

"எதனால அப்படிப் ஃபீல் பண்றீங்க..?"

"அவன் ஃபாரின்லயிருந்து வந்த பின்னால அவ பின்னாலேயே சுத்தறான்.. யாமினி சைன் வாங்க வந்தா உடனே போட்டுக் கொடுக்காம நேரத்தைக் கடத்தறான்.. போதாக் குறைக்கு போனவாரம் நடந்த பிஸினெஸ் பார்ட்டியிலே அவ பரத நாட்டியம் ஆடறா.. உங்கண்ணன் ஜதி சொல்லாத குறையாத் தாளம் போட்டுக்கிட்டு அவ டான்ஸைப் பார்த்து 'ஜொள்ளு' விடறான்.."

"ஜொள்ளா..?"

"ஜொள்ளுன்னா தெரியாதா..?"

"ஏன் தெரியாது..? என்னைப் பார்த்ததும் உங்க முகத்திலே வடியுமே.. அதுக்குப் பேர்தானே 'ஜொள்ளு..'?"

"ஹா.. ஹா.."

சிரித்து மகிழ்ந்து போனான் தாமோதரன்.. பிரியத்துக் குரிய பெண்ணிடம் அவன் வழியும் வழியலை.. அந்தப் பிரியத்துக்குரியவள் உணர்ந்திருக்கிறாள் என்பதை அவள் வாயாலே சொல்லிக் கேட்பதில் உள்ள ஆனந்தத்திற்கு இணையேதும் இருக்கிறதா..?

"சிரித்தது போதும்.. மேட்டருக்கு வாங்க.."

"வந்துட்டேன்.."

"அவளுக்கு கிளாஸிகல் டான்ஸ் தெரியுமா..?"

"தெரியும்ங்கிறது இப்பத்தான் எனக்குத் தெரியும்.. இதில வேற.. என் முதுகுக்குப் பின்னாலே நின்றிருந்த சித்தார்த்தை மொச்சைக் கொட்டைக் கண்ணால் தேடிப் பிடிச்சுப் பார்த்துக்கிட்டு.. மறைந்திருந்தே பார்க்கும் மர்மம் என்னன்னு பாடி ஆடுகிறா.."

"ஓ.. அந்த அளவுக்கு வந்தாச்சா..?"

"வரப்போய்தானே நான் அடிச்சுக்கறேன்.."

"ஆமாம்.. அண்ணன் எதுக்காக உங்க முதுக்குப் பின்னால ஒளிஞ்சான்..? பயமா..? அவனுக்கா..?"

"அவன் ஏங்க பயப்படப் போறான்.. முதலிலாவது என்கிட்டப் பயப்படறதைப் போல ஃபிலிம் காட்டிக்கிட்டு இருந்தான்.. இப்ப அதுவும் இல்ல.. என் முன்னாலேயே அவளை சைட் அடிக்கிறான்.."

"அதில உங்களுக்கு ஏன் இத்தனை காண்டு..? பொறாமையா..?"

"சேச்சே.."

உடனடியாக யோசிக்காமல் தன்னிச்சையாக அவன் பதில் சொல்லிய விதத்தில் அவன்மீது பிரியம் பொங்கியது நீரஜாவுக்கு..

"அவ என் தங்கை மாதிரிங்க.."

"மாதிரியா.. இல்லை.. தங்கையேதானா..?"

"சில சமயம் அப்படிக்கூடத் தோணுதுங்க.."

குழப்பத்துடன் சொன்னான் தாமோதரன்.. நீரஜாவின் மனதில் துயரம் வந்தது.. இதுபோன்ற குழப்பங்களுடன் எதற்காக இறைவன் அவர்களைப் படைத்தான்..? இதற்கொரு முடிவே இல்லையா..?

"சித்தார்த்தன்கிட்ட அவளை நெருங்க விடக் கூடாதுன்னு மனசு அடிச்சுக்குது.. அவகிட்டக் கடுமையாப் பேசி வைக்கிறேன்.. அவ என்னடான்னா எருமை மாட்டு மேல மழை பெஞ்சதைப் போல எதுக்கும் அலட்டிக்காம எனக்கென்னன்னு நிக்கிறா.."

"யூசுவலா அப்படித்தானோ..? எதையும் கேர் பண்ணிக்காத டைப்போ..? யார் என்ன சொன்னாலும் மைண்டில் ஏத்திக்க மாட்டாளோ..?"

"இல்லையே.. ரொம்பவும் நிமிர்ந்த டைப்.. ஒருத்தர் ஒரு சொல்.. சொல்லிர முடியாது.. விட்டுக் கடாசிடுவா.. ஏன்..? சித்தார்த்தனே அவகிட்டப் பேசும் போது யோசிச்சுத்தான் பேசுவான்.. அப்படியொரு வணங்காமுடி.. உங்களைப் போலவேன்னு வைத்துக்கங்களேன்.."

'என்னைப் போல..' நீரஜாவின் உடல் சிலிர்த்தது..

அவளைப் போன்ற குண இயல்புடனும், நிமிர்வுடனும் ஒருத்தி இருக்க முடியுமா..? அவள் விவேகானந்தனின் செல்வப் புதல்வி..! காஞ்சிபுரமே அறிந்த பெரிய இடத்துப் பெண்..

அவளுக்கு யாமினி நிகராவாளா..?

'ஏன் ஆக மாட்டாள்..?' என்று கேட்டது அவள் மனது..

இதற்கு முந்தைய ஏதோ ஓர் தருணத்தில் அவளுக்கு நிகராக யாமினி நின்று காட்டியதைப் போல ஓர் நிகழ்வு அவள் மனதில் நிழலாக வந்து அதிர வைத்தது..

"அப்படிப்பட்டவ நீங்க பேசற சுடு சொல்லை தட்டி விட்டுப் போகிறாளா..?"

"ஆமாங்க.. ஒரு நாளைக்கு ஆயிரம் தடவைச் சொல்றேன்.. வேலையை விட்டுத் தூக்கிருவேன்னு.. கண்டுக்கவே மாட்டா.."

"உங்களாலே அவளை ஓட வைக்க முடியாதுங்கிற தெளிவோ என்னவோ.."

"இல்லைங்க.. இது அப்படியில்லை.. இந்த வேலையை நம்பி நானில்லைங்கிற தெனாவெட்டு..! என் வேலையை நான் சரியாச் செய்யறேன்.. நீ வேணும்னே பேசறங்கிறதை உணர்த்துகிற நிமிர்வு.. நீ என்ன வேணும்னாலும் பேசிக்க.. உன் பேச்சு என்னைப் பாதிக்காதுங்கிற பார்வை.."

"ஓ...!"

"இதில விசித்திரம் என்னன்னா.. அவளை விரட்டி விடத்தான் நானும் திட்டுவேன்.. திட்டின பின்னாலே என் மனசு வலிக்கும்.."

"ஏன்..?"

"தெரியலை.. அவ சித்தார்த்தனை நெருங்கி விடக் கூடாதுன்னு பாடாய் பட்டாலும் ஒரு அளவுக்கு மேலே அவ மனசைக் காயப்படுத்த என்னால முடியலை நீரஜா.. ஏன்..?"

என்னவோ எல்லாவற்றுக்கும் நீரஜாவிடம் விடையிருப்பதைப் போல அவன் கேட்டு வைத்தான்.. அப்படியிருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று நீரஜாவிற்கும் தோன்றியது..

எதற்கும் விடை தெரியாமல் குழம்பித் தவிக்கும் மனதுடன் எத்தனை காலம்தான் போராடுவது..?

அவள் ஏன் தாமோதரனைக் கண்டாள்..? கண்டதும் உருவான இனம் விளங்காத அந்தச் சொந்தத்திற்குப் பெயர் என்ன..?

கொந்தளிக்கும் மனதுடன் எழுந்து கடலை நோக்கிப் போனாள்.. கடலலைகள் கால் நனைக்க நின்றவளின் மீது வேகமாக வந்த அலை மோதியது.. உடல் முழுவதும் நனைய தடுமாறி விழ இருந்தவளைத் தாங்கிக் கொண்டது தாமோதரனின் வலிமையான கரம்..

அவனது கையில் சாய்ந்திருந்தவள் விழுந்த வேகத்தில் அவன் கழுத்தை வளைத்திருந்தாள்.. அதே போஸில் சாய்ந்து நின்றபடி அவன் முகத்தைப் பார்த்தவளுக்குள் ஓராயிரம் உணர்வலைகள்..!

முதன் முதலாக உணர்ந்த தாமோதரனின் ஸ்பரிசத்தில் சிலிர்த்துப் போனவளாய் அவளும்.. மயங்கிப் போனவனாக அவனும் அப்படியே நின்று விட்டார்கள்.. அடுத்து வந்த அலை அவர்களை அப்படியே நிற்க விடவில்லை.. ஓங்கியெழுந்த பேரலை அவர்கள் மீது விழுந்து திரும்பிய போது அவன் கையில் சாய்ந்து நின்றிருந்த நீரஜா அவனது கழுத்தைக் கட்டிக் கொண்டிருந்தாள்.. ஒரு கையால் அவளைத் தாங்கிப் பிடித்திருந்த தாமோதரன் இரு கைகளாலும் அவளைத் தழுவியிருந்தான்..

சொட்டச் சொட்ட நனைந்திருந்தவர்கள் விலக மனமில்லாமல் விலகி கடலோரமாக நடந்தார்கள்..

"முழுக்க நனைஞ்சிட்டிங்க.."

"ம்ம்ம்.."

"காரில் டவல் இருக்கு.. தரவா..?"

"வேண்டாம்.. இப்படிக் கடலோரமா நடந்தா கடல் காத்தில தானாவே துணி காய்ந்திரும்.."

"ஸாரி.."

"எதுக்கு..?

"உங்களைத் தொட்டுத் தாங்கினதுக்கு.."

"இல்லேன்னா நான் கடலோட போயிருப்பேன்.. பரவாயில்லையா..?"

"என்னங்க.. இப்படிக் கேட்கறிங்க..?"

"வேற எப்படிக் கேட்கச் சொல்கிறீங்க.. என்னவோ காப்பாத்தினதுக்கு கவலைப் படுகிறதைப் போல இருக்கு.."

"காப்பாத்தறது என் கடமைங்க.."

"ஸோ.. கடமைக்காகத்தான் தாங்கிப் பிடிச்சீங்க..?"

"நீரஜா.."

"சார் இவ்வளவு ஃபீல் பண்றதா இருந்தா எங்கேயோ இடிக்குதே.."

என்னவோ 'எங்கேயோ கேட்ட குரல்..' என்று சொல்வதைப் போல அவள் சொல்லிய விதத்தில் அரண்டு போனான் தாமோதரன்..

"என்னத்தைங்க இடிக்குது..?"

"உங்க கற்பு குறைஞ்சிருச்சுன்னு ஃபீல் பண்றீங்களோ.."

"கடவுளே..!"

"அவர் இதுக்கெல்லாம் ஓடி வரமாட்டார்.. ஆல்வேஸ் பிஸி மேன் அவர்..! இதைவிட படா வேலையெல்லாம் அவருக்கு இருக்கு.. ஸோ.. கடவுளை டிஸ்டர்ப் பண்ணாம பதிலைச் சொல்லுங்க.."

"என் கற்பு குறைஞ்சா அதைப் பத்திக் கவலைப்பட வேண்டியதில்லைங்க.."

"ஏன்..?"

"என் கற்புக்குச் சொந்தமானவங்கதானே அதைக் குறைத்திருக்காங்க.."

தாமோதரன் சொல்லி விட்டான்.. தெள்ளத் தெளிவாக அவன் காதலை சொல்லி விட்டான்.. என் கற்புக்கு சொந்தக்காரி நீதான் என்று சொல்லி விட்டான்.. அதுவரை விளையாடிய கண்ணாமூச்சி விளையாட்டை முடிவுக்கு கொண்டு வந்து விட்டான்..

"உங்க அளவுக்கு நான் பணக்காரன் இல்லைங்க.. ராஜ வம்சமும் இல்லை.. ஏணி வைச்சாலும் எட்ட முடியாத தொலைவில தொடுவானமாத்தான் நீங்க இருக்கீங்க.. அதுக்காக என் மனசும் உடம்பும் உங்களுக்கு மட்டும் தான் சொந்தம்ன்னு நான் அர்ப்பணிக்கிறது இல்லைன்னு ஆகிருமா..?"

இப்போது பதில் சொல்ல வேண்டிய நீரஜாவின் முறையானது..

"ஆகாது.."

அவள் பதில் சொல்லி விட்டாள்.. ஆகாயமும் கடலும் ஒன்றாக இணைந்து நிற்கும் தொலைதூர தொடுவானின் புள்ளியைப் பார்த்தபடி அவள் மனதைச் சொல்லி விட்டாள்..

அத்தியாயம் - 89

தேடுதல் நிறைந்த இவ்வாழ்வில்..

தேடிய யாவும் கிடைத்திடுமா..?

"உங்களை விட நான் பணக்காரியா இருக்கலாம்.. ராஜ வம்சத்தில் பிறந்தவளா இருக்கலாம்.. ஆனா எனக்குன்னு

ஒரு மனம் இருக்கே.. அந்த மனசில உங்க மேல மட்டும் நினைப்பிருக்கே.."

"நீரஜா.."

"என் மனசில நீங்கதான்.. இதை வீட்டில் சொல்லி மேரேஜை பிக்ஸ் பண்ணச் சொல்ல ரொம்ப நேரமாகாது.. ஜஸ்ட் எ மினிட்ல முடிச்சிருவேன்.. மம்மியும் டாடியும் என் விருப்பத்துக்கு தடை சொல்ல மாட்டாங்க.. அவங்களுக்கு உங்களை ரொம்பவே பிடிக்கும்.."

"அந்தப் பிடித்தம் வேற நீரு.."

காதலைச் சொல்லி அதற்கான பதிலைப் பெற்று விட்ட பின்பு தாமோதரனுக்குள் உல்லாசம் புகுந்து விட்டிருந்தது.. அவன் உரிமையுடன் அவள் பெயரைச் சுருக்கி அழைத்தான்.. அதில் அவள் மனதில் தென்றல் அடித்தது..

"எதனால வேறுன்னு சொல்றீங்க..?"

"நான் உன் அண்ணனோட பிரண்ட்..! அவன் கூடவே வளர்ந்தவன்.. அந்தப் பிரியத்திலே அவங்களுக்கு என்னைப் பிடிச்சிருக்கு.. மகனோட பிரண்டா இருக்கிறவன்கிட்டக் காட்டற பிரியம்.. அவனே மருமகனா வரப் போகிறான்னு தெரிய வரும் போது நிலைத்திருக்குமா..?"

"எல்லாம் இருக்கும்.. இந்த நீரஜா ஒன்றை நினைக்க மாட்டாள்.. நினைத்தால் அதைச் சாதிக்காமல் இருக்கவும் மாட்டாள்.. எனக்கு நீங்கதான்னு நான் கைகாட்டினா அவங்களாலே அதை மறுக்க முடியாது.."

"நீ கிடைத்தாலும் கிடைக்கலேன்னாலும் என் மனசு மாறாது நீரு.. இந்தப் பிறவியில எனக்கு நீதான்.."

'பிறவி...!' அப்படியே நின்று விட்டாள் நீரஜா..

உணர்ச்சிப் பெருக்குடன் பேசிய தாமோதரனும் அப்படியே நின்று விட்டான்.. அவர்களின் பார்வைகள் பின்னிப் பினைந்தன.. ஒருவர் பார்வையில் ஒருவர் எதையோ தேடினார்கள்.. அந்தத் தேடுதல் எதுவென்று அறியாமல்

நெடுமூச்சுடன் பார்வைகளை விலக்கிக் கொண்ட போதுதான் நீரஜா அந்த இளந் துறவியைக் கவனித்தாள்.. தாமோதரனிடமும் முணுமுணுத்தாள்.. அவளது முணுமுணுப்பில் தாமோதரனும் அவரைப் பார்த்தான்..

கைகளை மடித்து நின்றபடி அவர்களையே பார்த்துக் கொண்டிருந்த அந்த இளந்துறவிக்கு தாமோதரனின் வயதுதான் இருக்கும்.. வயதுக்குப் பொருந்தாத முதுமை அவர் முகத்தில் இருந்தது..

காவியுடை அணிந்திருந்தார்.. கையில் கமண்டலம் இல்லை.. தடித்த புத்தகமொன்றை வைத்திருந்தார்.. புத்தகத்தின் பெயர் என்ன என்பதைக் கவனித்தான் தாமோதரன்..

'சூநவாயதi னுநயன டிச ஹடiஎந' என்றிருந்தது..

'யார் இவர்..?' யோசித்தான்..

அவரிடமிருந்து பார்வையை விலக்க அவனால் முடியவில்லை.. ஏதோ ஓர் சொந்தம் மனதில் தோன்றியது.. அது ஏனென்றும் அவனுக்குப் புரியவில்லை..

அவரையே பார்த்தபடி நின்றிருந்தவனிடம் அவனையே பார்த்தபடி அவர் நெருங்கி வந்தார்.. ஆழ்ந்த அவரது பார்வைக்குள் இருந்த சுழல் தாமோதரனை இழுத்தது..

"யாரைத் தேடுகிறாய் மகனே..?"

உயிரை ஊடுறுவும் குரலில் கேட்டவருக்கு மறுமொழி சொல்லத் திணறினான் தாமோதரன்.. எவரையும் ஒரே பார்வையால் எடை போட்டு விடும் தாமோதரன்.. அவரை எடைபோட முடியாமல் தடுமாறினான்.. எந்தக் கேள்விக்கும் நொடிப் பொழுதில் பதிலளிக்கும் தாமோதரன்.. அந்த இளந்துறவியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் தவித்தான்..

"தெரியவில்லை.."

அவருக்கு ஏன் பதில் சொல்ல வேண்டும் என்று நினைக்க முடியாமல் மனதின் குழப்பத்தை அவரிடம் சொன்னான்

அவன்..

"தெரியாமலா தேடிக் கொண்டிருக்கிறாய்..?"

"ம்ம்ம்.."

"இந்த வாழ்க்கையே தேடல் நிறைந்ததுதான் மகனே..! சிலர் பணத்தைத் தேடுகிறார்கள்.. சிலர் புகழைத் தேடுகிறார்கள்.. சிலர் பதவியைத் தேடுகிறார்கள்.. அரிதாக வெகு சிலரே, உண்மையான அன்பைத் தேடுகிறார்கள்.. உனது தேடல் எதை நோக்கியது மகனே..?"

"அதுவும் தெரியவில்லை.."

"தெரிந்து கொள்ள நீ முனையவில்லையா..?"

"முனையவில்லை.."

"ஏன்..?"

"அதன் சுழல் மீது பயமாக இருக்கிறது.."

மனதில் உள்ளதை மறைக்காமல் சொன்னான் தாமோதரன்.. அவரிடம் எதற்காக இதையெல்லாம் சொல்ல வேண்டும் என்று நினைக்காமல் அவனது மனக் குழப்பத்தை அவரிடம் கொட்டிக் கவிழ்த்தான்.. நீரஜாவும் அதைத் தடுக்கவில்லை என்பதுதான் விந்தையிலும் விந்தை.. எவரையும் ஒரு பொருட்டாக நினைக்காதவள், அந்த இளந்துறவியையே பார்த்தபடி ஆழ்ந்த யோசனையுடன் நின்றிருந்தாள்..

"பயம் கொண்டு ஆகப் போவதென்ன மகனே..? நீ விலகி விலகி ஓடினாலும் உனைத் துரத்தும் ஊழ் வினை உன்னை விலகிப் போய்விட விட்டு விடுமா..?"

"சுவாமி..!"

"அப்பா என்று அழைக்கலாமே.."

பிரியத்துடன் சொன்ன துறவியை உற்றுப் பார்த்தான் தாமோதரன்.. அவனுக்கு சம வயதில் இருப்பவரை அப்பா என்று அழைப்பதா..? எப்படி..?

"உடலுக்குத்தான் வயதெல்லாம்.. ஆன்மாவுக்கு அது இல்லை மகனே..!"

'என் மனசில நான் நினைச்சது இவருக்கு எப்படித் தெரிஞ்சது..?'

"உன்னை அறிபவன் உன் நினைவை அறிய மாட்டேனா..?"

"சுவாமி..!"

"அப்பா என அழைக்க மாட்டாயா..?"

"அப்பா.."

தாமோதரன் அழைத்தான்.. அதைச் சொல்லும் போது அவன் உடல் எதற்காக சிலிர்த்தது என்று அவனுக்கே தெரியவில்லை.. அந்த இளந்துறவியின் விழிகளில் எல்லையற்ற மகிழ்வு தெரிந்தது..

"மகனே..!"

"சொல்லுங்கள்.."

"நீ பிறவிகள் ஆறைக் கடந்தவன்.."

குறி சொல்பவரைப் போல அவர் சொன்னார்.. தாமோதரனும் நீரஜாவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"பிறவிகள் ஏழு..! அனைத்து மனிதப் பிறவிகளும் பிறவியெனும் பெருங்கடலைத் தாண்டித்தான் ஆக வேண்டும்.. முற்பிறப்பில் நீ யார் என்பதோ.. வரும் பிறப்பில் யாராகப் பிறக்கப் போகிறாய் என்பதோ தேவ ரகசியம்..! மனிதர்களால் அதைக் கண்டுணர முடியாது.. இந்தப் பிறப்பில் நீ யார்.. உனது மூலம் என்ன என்று சிந்திக்க ஆரம்பித்து விட்டால் எனைப் போல துறவியாகி விடுவாய்.. உனக்காக பிறந்திருக்கும் இந்தப் பெண்ணுடன் கூடி வாழ வேண்டாமா..? எனைப் போல துறவியாகி விட நீ விரும்புகிறாயா..?"

"இல்லை அப்பா.."

"ஆஹா..! அப்பா என்ற உனது அழைப்பு எனது காதுகளில் தேவாமிர்தமாக பாய்கிறது மகனே..! கேள்.. இப்பிறவியில் நீ யார் என்பதை நீ தெரிந்து கொண்டுதான் ஆக வேண்டும்.. ஏனென்றால் பிறவிப் பெருங்கடலை நீ ஏறக்குறைய கடந்து விட்டாய்.."

"அப்பா.."

"ஆம் மகனே..! ஆறு பிறவிகளைக் கடந்து ஏழாவது பிறவியில் நீ இருக்கிறாய்.. இனிப் பிறவியென்பது

உனக்கு இல்லை.. இப்பிறவியில் நீ ஆற்ற வேண்டிய கடமையொன்று உள்ளது.. அதை நிறைவேற்று மகனே.."

"என்ன அது..?"

"ஆறு பிறவிகளிலும் நீ இந்தப் பெண்ணுடன் சேர்ந்து வாழ்ந்ததில்லை.. உனது முதல் பிறவியில் நீ நரசிம்ம பல்லவனின் தளபதியாகப் பிறந்தாய்.. இந்தப் பெண் நரசிம்மனின் ஒன்று விட்டத் தங்கையாக பிறந்திருந்தாள்.. அந்தப்பிறவியில் இவள் யாரோ.. நீ யாரோ.."

நீரஜா உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. காஞ்சியிலே அவள் பிறந்திருந்தாள் என்று அந்த இளந்துறவி சொல்லியதை மறுத்துப் பேச அவளால் முடியவில்லை.. அதுபோன்ற பல நிழல் நினைவுகள் அவள் மனதில் சிலசமயம் வந்து போனதுண்டு..

"இரண்டாவது பிறவிதான் அதி முக்கியமானது மகனே..! அந்தப் பிறவியின் நினைவுகள்தான் இந்தப் பிறவியில் உன்னைத் துரத்திக் கொண்டிருக்கின்றன.. உனது தேடுதலும் போராட்டமும் அதை நோக்கித்தான்.."

"புரியவில்லை அப்பா.."

"வாழ்க்கையின் ரகசியங்கள் யாருக்கும் புரியாது மகனே..! அந்தப் பிறவியில் நீ ஆதித்த கரிகாலனின் உயிர் நண்பனாக பிறந்திருந்தாய்.. 'வல்லவராயன் வந்திய தேவன்..' என்பது உனது பெயராகும்.. இதோ நிற்கும் இந்தப் பெண் ஆதித்த கரிகாலனின் தங்கை..! 'குந்தவைப்

பிரட்டி..' என்று சோழ ராஜ்யத்தில் இவளை அழைப்பார்கள்.. இந்த குந்தவை தேவி உன்னைக் காதலித்தாள்.. கல்யாணமும் செய்து கொண்டாள்.. அந்தப் பிறவியில் நீ வேறு இவள் வேறு அல்ல மகேன..! இருவரும் ஒருவராக வாழ்ந்தீர்கள்.."

நீரஜாவின் மனதில் மின்னல் வெட்டியது.. அவளுக்கும் தாமோதரனுக்குமான உறவின் ஆணிவேரை அவள் தெளிவாக புரிந்து கொண்டாள்.. எதனால் தாமோதரனின் மீது அவள் மனம் தாவியது, எதனால் அவனைக் கண்டவுடன் ஈர்ப்பு உண்டானது, எதனால் அவன்தான் அவளுக்கு என்ற முடிவுக்கு அவள் வந்தாள் என்ற அனைத்து முடிச்சுகளும் அவிழ்ந்து அவள் முன்பு பிறவி ரகசியங்கள் வெளிப்பட்டன..

"மூன்றாவது பிறவியிலும் நீயே இவளுக்கு மணவாளனாக ஆனாய்.. பாண்டிய மன்னன் மாறவர்மனின் ஒன்று விட்ட தங்கையாக பிறந்திருந்த இவளின் கரம் பிடித்தாய்.. ஆயினும் மகனே..! இரண்டாவது பிறவியில் இவள்மீது நீ கொண்டிருந்த பிரியத்தில் கால்வாசி அளவுகூட மூன்றாவது பிறவியில் உன்னிடம் இருந்த தில்லை.."

தாமோதரன் நீரஜாவைப் பார்த்தான்.. அவள் இவற்றையெல்லாம் நம்புகிறாளா.. இல்லையா என்று யோசித்தான்.. அவன் முகத்திலிருந்து எதையும் கண்டுணர முடியவில்லை.. அவள் அப்படித்தான்.. அகத்தில் இருப்பதை முகத்தில் காட்ட மாட்டாள்.. இரும்புப் பிறவி..!

"நான்காவது பிறவியில் நீ காஞ்சிபுரத்தில் வணிகரின் மகனாக பிறந்தாய்.. இந்தப் பெண் சேர மன்னன் ரவிவர்மனின் தங்கையாக பிறந்தாள்.. இந்தப் பிறவியில் இவள் யாரோ.. நீ யாரோதான்.."

நீரஜா கோபித்துக் கொள்வாளோ என்று தாமோதரனுக்குக் கவலையாக இருந்தது.. குறி பார்க்கக் கிளம்பி விட்டாயா என்று காய்ச்சி எடுக்கப் போகிறாள்..

அந்த இளந்துறவியோ பேச்சை நிறுத்திய பாடாக இல்லை.. அவர் பாட்டுக்கு பேசிக் கொண்டிருக்கட்டும் என்று நகர

அவனாலும் முடியவில்லை.. நீரஜா போயிருக்கலாமே என்று அவன் யோசித்தான்.. அப்படி அவள் போக நினைத்தால் யாரும் அவளைத் தடுக்கப் போவதில்லையே.. அப்புறமும் எதற்காக நின்றிருக்கிறாள்..?

"ஐந்தாவது பிறவியில் நீங்கள் இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்தீர்கள்.. பெற்றோர் நடத்தி வைத்த திருமணம் அது.. திருமணத்தின் பின்னால் வரும் ஆழ்ந்த அன்பே உங்கள் இருவரிடமும் நிறைந்திருந்தது.."

தேமே என்று கேட்டுக் கொண்டிருந்தான் தாமோதரன்.. அப்படியொரு கல்யாணம் தேவையா என்றிருந்தது அவனுக்கு.. இரண்டாவது பிறவியில் மாய்ந்து, மாய்ந்து காதலித்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டவன் முதல் பிறவியிலும், நான்காம் பிறவியிலும் யாரோ எவரோ என்றிருந்தானாம்.. மற்ற இரு பிறவிகளிலும் அரேன்ஜீடு மேரேஜ் நடந்ததாம்..

'என்ன கொடுமை சரவணா இது..!'

மனதுக்குள் சொல்லி விட்டு எந்தச் சரவணனிடம் இதைச் சொல்கிறோம் என்று அப்புறமாக அவன் யோசித்தான்..

அந்தச் சரணவன் யாராக இருக்கக் கூடும்..?

"ஆறாவது பிறவியில் நீயும் இந்தப் பெண்ணும் காதலர்கள் என்றாலும் அது முறைப் பெண், முறை மாப்பிள்ளைக்கு இடையே வரும் ஈர்ப்பாகவே இருந்தது மகனே..! அந்தப் பிறவியில் நீ இந்தப் பெண்ணின் கை பிடித்தாய்தான்.."

'அப்பாடி..' நிம்மதிப் பெருமூச்சு விட்டான் தாமோதரன்..

ஆக, ஆறு பிறவிகளில் நான்கு பிறவிகளில் அவனும் நீரஜாவும் சேர்ந்து வாழ்ந்திருக்கிறார்கள்..

'ஆறுக்கு நான்கு பொருத்தம் இருக்கில்ல..' கணக்குப் போட்டது அவன் மனது..

"நீயும் இந்தப் பெண்ணும் கொடுத்து வைத்தவர்கள்.. தேவ ரகசியத்தைக் கேள் மகனே..! இந்த ஆறு பிறவிகளிலும் சேர்ந்து வாழ முடியாத இரண்டு

ஆத்மாக்கள் இந்த ஏழாவது பிறவியிலாவது ஒன்று சேர்ந்து விட மாட்டோமா என்ற ஏக்கத்துடன் பிறந்திருக்கின்றன.. ஒரு வகையில் அவர்களின் இரண்டாவது பிறவியில் அவர்கள் ஒன்று சேர முடியாமல் போனதற்கு உனது காதலியாக பக்கத்தில் நிற்கும் இந்தப் பெண்ணே காரணமாவாள்.."

'போச்சு..' மானசீகமாக தலையில் கை வைத்தான் தாமோதரன்..

நீரஜா அவனை ஆய்ந்து விடப் போகிறாள்.. இளந் துறவியை வேடிக்கைப் பார்க்கச் சொல்லி கை காட்டினால்.. அவரைக் கூப்பிட்டு வைத்துக் குறி கேட்டு என்னைப் பழி வாங்குகிறாயா என்று அவனைப் போட்டு உலுக்கப் போகிறாள்.. இந்தத் திட்டம் எத்தனை நாள்களாக அவன் மனதில் இருந்தது என்று கேட்கப் போகிறாள்..

அத்தியாயம் - 90

ஏழேழு பிறவிகளில்..

எந்தப் பிறவி.. இந்தப் பிறவி..?

ஊஹூம்.. தாமோதரன் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை.. நீரஜா எதையும் கேட்கவில்லை.. இளந்துறவியின் வார்த்தைகளில் கோபம் கொள்ள வில்லை.. புருவங்கள் சுருங்க துறவியைப் பார்த்தபடி அசையாமல் நின்றவளின் இதழ்கள் துடித்தன.. கண்கள் பனித்திருந்தன..

'இவளைப் போய் இப்படிச் சொல்கிறாரே..'

தாமோதரன் ஆட்சேபித்து எதையோ சொல்லப் போனான்.. மறுப்பாக தலையை அசைத்து அவனைக் கட்டுப்படுத்தினாள் நீரஜா..

"அவர் பேசட்டும்.."

சன்னமான அவள் குரலின் கட்டளைக்குக் கீழ்படியாவிட்டால் அவன் தாமோதரன் அல்லவே.. என்றைக்கு அவள் கிழித்த கோட்டை அவன் தாண்டியிருக் கிறான்..?

அதற்கென்ன என்பதைப் போல ஒப்புதலாய் தலையை அசைத்து விட்டு பேசாமல் இருந்து விட்டான்..

"நீயும், இந்தப் பெண்ணும் பிறப்பெடுத்த ஆறு பிறவிகளில் நான்கு பிறவிகளில் சேர்ந்து வாழ்ந்தீர்கள்.. அதிலும் அந்த இரண்டாவது பிறவியில் ஆத்மார்த்தமான காதலை பகிர்ந்து கொண்டீர்கள்.. உங்களின் காதல் ஜெயித்தது.. ஆனால் பாவம்.. இந்தப் பெண்ணிற்கு அண்ணனாகவும், உனக்குத் தோழனாகவும் பிறந்திருந்த ஆதித்த கரிகாலனின் காதல் தோற்றது.."

"அதுக்கு நீரஜா எப்படி பொறுப்பாவாள் அப்பா..?"

"இவள்தான் பொறுப்பு மகனே..! இவள் நினைத்திருந்தால் இவளது அண்ணனின் காதலை வாழ வைத்திருக்கலாம்.. இவள் அப்படிச் செய்யவில்லை.. ஆதித்த கரிகாலன் ஊரில் இல்லாத சமயத்தில் அவனது காதலியான நந்தினியை சோழ தேசத்தை விட்டே அனுப்பினாள்.. பாண்டிய நாட்டுக்குத் துரத்தினாள்.."

"காரணமில்லாமல் அதைச் செய்திருக்க மாட்டாள் தானே.."

"காரணம் என்பது நம்மால் உருவாக்கப் படுவது.. நம்மால் உடைக்க முடியாதது அல்ல.."

"ஏதோ ஒரு பிறவியில் நடந்த தவறுக்கு இந்தப் பிறவியில் இவளால் என்ன பதிலைச் சொல்ல முடியும்..?"

"நடந்த கொடுமைக்கு பிராயச்சித்தம் செய்ய முடியும்.. ஆதித்த கரிகாலன் அநியாயமாக இறந்து போனான்.. அவனைக் கொல்ல நினைத்தவர்களுக்கு துணை போக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகி தானும் உயிரை விட்டாள் நந்தினி.. இந்த இரண்டு ஆத்மாக்களும் ஆறு பிறவிகளிலும் அமைதியில்லாமல் வாழ்ந்து ஏழாவது பிறவியில் ஒருவரையொருவர் அடையத் துடித்து

பிறந்திருக்கின்றன.. அவர்களை வாழ வைக்க உங்களிருவரால் மட்டுமே முடியும்.."

தாமோதரனாலும்.. நீரஜாவினாலும் மட்டும் என்ன செய்துவிட முடியுமென்று அவனுக்குத் தெரியவில்லை.. அந்த இரண்டும் தெளிவான ஜீவன்கள்.. யாருக்கு எப்படிக் கடுக்காய் கொடுக்க வேண்டும் என்ற புள்ளி விவரத்தை அடி முதல் நுனி வரை அறிந்தவர்கள்.. நீரஜாவுக்கும் பெப்பே.. தாமோதரனுக்கும் பெப்பே.. என்று ஒரே நேரத்தில் ஸேம் சைடு கோல் போடக்கூடியவர்கள்.. அவர்களுக்கு தாமோதரனின் உதவியும், நீரஜாவின் உதவியும் தேவைப்படுமா என்ன..?

"உதவி தேவைப்படாமல் போகலாம்.. எதிர்ப்பு இல்லாமல் இருக்க வேண்டுமல்லவா..?" என்றார் இளந்துறவி..

"இல்லை சுவாமி..! நான் எதிர்க்க மாட்டேன்.."

நீரஜாவின் வார்த்தைகளில் இமை கொட்டி விழித்தான் தாமோதரன்..

"என்னால் தடைபட்ட எனது அண்ணனின் காதல் இந்தப் பிறவியிலாவது நிறைவேற வேண்டும் சுவாமி.. நான் அதுக்குத் தடையா இருக்கவே மாட்டேன்.. ஆனால் சுவாமி.. அந்தப் பிறவியில் என் அண்ணனுக்கு ஆபத்தை உண்டாக்கிய அவனின் காதலி.. இந்தப் பிறவியிலும் அதைச் செய்ய மாட்டாள்ன்னு என்ன நிச்சயம்..?"

'அதானே..' தாமோதரனின் முகமும் இறுகியது..

"இதற்கான பதிலைச் சொல்ல என்னால் முடியாது அம்மா.. இது நிழல் ஆட்ட யுத்தம்..! கடந்து போன பிறவிகளின் காலடிச் சுவடுகள் நிழலாக உங்கள் நால்வரின் மனதிலும் நிகழ்த்திக் கொண்டிருக்கும் யுத்தம்..!"

"இதுக்கு முடிவே இல்லையா..?"

"உள்ளது மகனே..! அது காலத்தின் கைகளில் உள்ளது.. விதியின் விளையாட்டில் உள்ளது.. வாழ்க்கையின் ஏடுகளில் உள்ளது.."

"அந்தப் பிறவியிலும் என் அண்ணனின் உயிரைக் காக்கத்தான் நான் அவளை விலக்கி வைத்தேன்.. என் அண்ணனின் நன்மை மட்டுமே எனக்கு முக்கியமானதாக இருந்தது.. இந்தப் பிறவியிலும் அதையேதான் நினைக்கிறேன்.. அவன் காதல் நிறை வேறுவதைவிட அவன் பாதுகாப்பாக இருப்பது முக்கியமான ஒன்றில்லையா..?"

"இது உனது கோணம் அம்மா.. உன் தரப்பு நியாயம்..! காதல் நியாய, அநியாயங்களுக்கு அப்பாற்பட்டது.. கேள் மகனே..! முதல் பிறவியில் உன் நண்பன் நரசிம்ம பல்லவனாக பிறந்தான்.. அவனது காதலி சிவகாமியாக பிறந்தாள்.. அவர்களது காதல் நிறைவேறவில்லை.. நரசிம்ம பல்லவன் சிவகாமியை கைவிட்டு பாண்டிய ராஜகுமாரியை மணந்தான்.. சிவகாமி காலம் முழுவதும் கன்னியாக வாழ்ந்து முடித்தாள்.. இரண்டாவது பிறவியில் முதல் பிறவியில் காதலிக்குச் செய்த துரோகத்துக்கு ஈடு கட்டினான் ஆதித்த கரிகாலசோழன்.. கொல்வதற்காக அழைக்கிறாள் என்று தெரிந்திருந்தும் காதலியின் கைகளில் தன்னை ஒப்புக் கொடுத்து உயிரை விட்டான்.. காதலுடன் அவனும், வெஞ்சினத்துடன் நந்தினியும் இறுதிவரை போராடி உயிர் விட்டார்கள்.. மூன்றாம் பிறவியில் மாறவர்மன் சுந்தர பாண்டியனாக பிறந்து வந்தவனுக்கு ஹொய்சாள மன்னனின் மகள் நர்மதா தேவியாக மாலை சூட்டி சில நாள்கள் அவனுடன் வாழ்ந்து விட்டு.. அவனுக்காக தன் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றி இரண்டாம் பிறவியில் காதலனுக்கு செய்த துரோகத்துக்கு ஈடுகட்டி உயிரை விட்டாள் அவன் காதலி.. நான்காவது பிறவியில் அவன் சேரத்து மன்னன் ராஜா ரவிவர்மனாக பிறந்து வந்தான்.. இந்தப் பிறவியிலும் அவனை மணந்து கூடி வாழ்ந்து அவனுக்காகவே உயிரையும் விட்டாள் வசுந்தராவாக பிறந்திருந்த அவனது காதலி.. ஐந்தாவது பிறவியில் அவன் விஜயநகர அரசன் குமார கம்பண்ணாவாக பிறந்து வந்து தனது காதலியை மணக்காமல் அவள் கண் முன்னே மனைவியுடன் வாழ்ந்து முடித்தான்.. வாழ்நாள் முழுவதும் அவனை நினைத்து

நினைத்து ஏங்கியே உயிரை விட்டாள் மைதிலியாக பிறந்திருந்த அவனுடைய காதலி.. ஆறாம் பிறவியில் அவன் நேதாஜி சுபாஷ் சந்திர போஸை பின்பற்றிய ஆதவனாக பிறந்தான்.. அவனது காதலி தாமரையாக பிறந்தாள்.. முற்பிறப்பில் காதலியை மணக்க மறுத்து ஏங்க வைத்து உயிரை விட வைத்த கொடுமைக்கான தண்டனையாக ஆறாம் பிறவியில் அவனால் அவனை உயிருக்குயிராக காதலித்த காதலியை மணக்க முடியவில்லை.. கடைசிவரை திருமணம் செய்து கொள்ளாமலே உலகத்தாரின் கண்களுக்கு முன்னால் திருமணமானவர்களாக நடித்து அவர்களின் வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்து முடித்தார்கள்.. இது ஏழாவது பிறவி..! இதற்கடுத்த பிறவியில்லை.. இந்தப் பிறவியிலாவது அவர்கள் இருவரும் கடைசிக் காலம் வரைக்கும் சந்தோசமாக சேர்ந்து வாழ உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள்.."

நீண்ட பிரசங்கம் என்று நினைத்துக் கொண்டான் தாமோதரன்.. ஆனாலும் அலுப்புத் தட்டாத பிரசங்கம்.. ஆழ்ந்து கவனிக்கத் தூண்டிய பிரசங்கம்..

அப்படிப்பட்ட பிரசங்கங்களைக் கவனித்துப் பழக்கப்பட்டவன் அவன்.. நீரஜாவிற்குப் பழக்கமில்லை.. அவள் அதிகமாக பேச மாட்டாள்.. அதிகமாகப் பேசுபவர்களின் பக்கத்தில் கூட நிற்க மாட்டாள்..

'இப்ப மட்டும் எப்படி நிற்கிறா..?'

நீரஜாவைப் பார்க்காததைப் போல பார்த்து வைத்தான்.. தலையைச் சாய்த்து.. புருவங்களைச் சுருக்கி.. வெகு தீவிரமான முக பாவத்துடன் அவர் பேசுவதை கேட்டுக் கொண்டிருந்தாள்..

'கிழிஞ்சது போ..'

அந்த இளந்துறவி சொன்ன விவரங்களை அவனால் நம்பவும் முடியவில்லை.. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.. அவர் மீது இனம் விளங்காத பாசம் ஏற்பட்டுத் தொலைத்ததும் எதனால் என்று அவனுக்கு

விளங்கித் தொலைக்கவில்லை.. அந்த இருபதாம் நூற்றாண்டில் வந்து ஏழு பிறப்புகளில் தொடர்ந்து வரும் சொந்தங்களைப் பற்றி அவர் விளக்க முற்பட்டதில் சீரியஸாக அதை செவி மடுக்க சிரமப் பட்டுப் போனான் அவன்..

நீரஜாவிற்கு அதுபோன்ற சிரமங்கள் ஏதும் ஏற்பட வில்லையா..? ஜீன்ஸீம், டாப்ஸீம், விரித்து விடப்பட்ட முடியும், கூலிங்கிளாஸ்மாக அவள் வெகு சிரத்தையாக அந்தத் துறவி கூறிய பிறவிப் பெருங்கடலின் கதையை இந்தப் பக்கம், அந்தப் பக்கம் அசையாமல் நின்று கேட்டதைக் கண்டவனுக்கு இது நீரஜாதானா என்றிருந்தது..

"ஒன்று தெரியுமா மகனே..?"

துறவி வினவியபோது.. அந்த ஒன்று ஏழில் எந்த ஒன்று என்றுக் கேட்டுவிட வேண்டும் என்றுதான் நினைத்தான்.. தாமோதரன்.. துறவியின் பரிவு நிரம்பிய விழிகளைக் கண்டபோது அப்படிக் கேட்க அவனுக்கு மனம் வரவில்லை..

"ஏழு பிறவிகளிலும் இணை பிரியாமல் உன் நண்பனின் காதலி மட்டுமல்ல.. நீயும், இந்தப் பெண்ணும் உன் நண்பனைத் தொடர்ந்து வந்திருக்கிறீர்கள்.. இரு பிறவிகளில் உங்கள் இருவருக்கும் இடையே உள்ள சொந்தம்கூட மாறியிருக்கிறது.. ஆனால்.. உனது நண்பனுடன் உங்களிருவருக்கும் இருந்த சொந்தம் மாறவேயில்லை.."

'அட..! ஆமாம்..'

தாமோதரனுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.. நீரஜாவின் முகத்தில் இளக்கம் வந்திருந்தது.. அந்த சொந்தத்தில் அவள் நெகிழ்ந்து போயிருப்பதை தாமோதரனால் புரிந்து கொள்ள முடிந்தது..

"சில பிறவிகளில் நீ உன் நண்பனின் காதலிக்கு உடன்பிறந்த அண்ணனாக பிறந்தாய்.. சில பிறப்புகளில் உடன் பிறவாத சகோதரனாக அவளிடம் பிரியம் காட்டினாய்.."

'இந்தப் பிறவியில் மட்டும் அவளை நெருஞ்சி முள்ளாய் குத்துகிறேன் போல..'

யாமினியின் மீது வந்து தொலைக்கும் பாசத்திற்கு இதுதானா காரணம் என்று நினைத்துக் கொண்டான் தாமோதரன்..

"நரசிம்ம பல்லவனுக்கு நண்பனாக.. அவனது படைத்தளபதியாக நீ பிறந்தாய் மகனே..! இந்தப் பெண் அவனது ஒன்று விட்ட தங்கையாக பிறந்திருந்தாள்.. சிவகாமியிடம் நீ உடன் பிறவாத சகோதரனாக பாசம் காட்டினாய்.. இந்தப் பெண் வெறுப்பைக் காட்டினாள்.. ஆதித்த கரிகாலனின் உயிர் நண்பன் நீ.. வல்லவராயன் வந்திய தேவன்.. இந்தப் பெண் ஆதித்த கரிகாலனின் உடன் பிறந்த தங்கை.. குந்தவை.. நீ நந்தினியிடம் பரிவைக் காட்டாவிட்டாலும் வெறுப்பைக் காட்டிய தில்லை.. குந்தவை வெறுப்பைக் காட்டினாள்.. மாறவர்மன் சுந்தரபாண்டியனின் தோழனாகப் பிறந்தாய்.. நர்மதாவிடம் பரிவு காட்டினாய்.. அவனது சித்தப்பாவின் மகளாக ஒன்று விட்ட தங்கையாக பிறந்த இந்தப் பெண் நர்மதாவைப் புண்படுத்தினாள்.. ராஜாரவிவர்மனின் பிரியத்துக் குரியவனாக.. வசுந்தராவின் கூடப் பிறந்த அண்ணனாக நீ பிறந்தாய்.. ராஜா ரவிவர்மனின் தங்கையாக பிறந்த இந்தப் பெண் வசுந்தராவை வசை பாடினாள்.. குமார கம்பண்ணாவின் நண்பனாக.. மைதிலியின் அண்ணன் பார்த்திபனாக நீ பிறந்தாய்.. மைதிலியின் காதலைக் கண்டித்துக் கடுமை காட்டிய பிரியத்துக்குரிய அண்ணியாக.. குமார கம்பண்ணாவின் ஒன்று விட்ட சகோதரியாக இந்தப் பெண் பிறந்தாள்.. ஆதவனின் நண்பனான தனஞ்ஜெயனாக தாமரையின் கூடப் பிறந்த அண்ணணாக நீ பிறந்தாய்.. ஆதவனின் கூடப் பிறந்த தங்கையாக.. உன்னைக் கை பிடித்த காதலியாக இந்தப் பெண்ணும் போன பிறவியில் பிறந்தாள்.."

'ஹப்பா..' கேட்கும் போதே மூச்சு முட்டியது தாமோதரனுக்கு..

இதைத்தான்

'பிறவிப் பெருங்கடலில் நீந்தார் - நீந்துவார்..

இறைவனடி சேரா தவர்..'

என்று வள்ளுவப் பெருந்தகை சொல்லி வைத்தாரோ..?

"இந்தப் பிறவியிலும் அவனுடைய நண்பனாக நீ தொடர்ந்து வந்திருக்கிறாய்.. தங்கையாக இந்தப் பெண் பிறந்து வந்திருக்கிறாள்.. இப்படி இணைபிரியாமல் அவனைத் தொடர்ந்து வந்திருக்கும் பிறப்பு உங்களுடையது.."

இவை அனைத்தையும் அவர்களிடம் முக்காலமும் உணர்ந்த ஞானியைப் போலச் சொல்லிக் கொண்டிருக்கும் அந்தத் துறவி யார்..?

"உன்னைப் போல் ஒருவன்.." துறவி புன்னகைத்தார்.

"அது தெரிகின்றது.. என் வயதுதான் இருக்கும் உங்களுக்கு.. ஆனாலும் மகனேன்னு என்னைச் சொல்கிறிங்க.. போன பிறவிகளில நாங்க என்னவாக பிறந்தோம்ன்னு பிட்டுப்பிட்டு வைக்கறிங்க.. நீங்க யாருங்க..?"

"நீ கடந்து வந்த பிறவிகளில் ஏதேனும் ஓர் பிறவியில் உனக்கு உறவாக பிறந்திருப்பேன் போல.. அந்தப் பாசம்தான் உங்கள் இருவரையும் பற்றி என் மனக் கண்களுக்குத் தெரிவதையெல்லாம் சொல்ல வைக்கிறது.."

"உங்கள் பெயர் என்ன..?"

"போன பிறவியில் எனது நாமம் 'மருதானந்தா' என்பதாகும்.. இந்தப் பிறவியில் ரமணானந்தா என்ற பெயர் உண்டாகியுள்ளது.."

புன்னகையுடன் தாமோதரனின் தலையைத் தடவிக் கொடுத்த துறவியின் செய்கையில் கூச்சப்பட்டான் தாமோதரன்..

அவன் வயதை ஒட்டிய மனிதர் அவன் தலையைத் தடவிக் கொடுப்பதா..?

அவனது கூச்சத்தை உணர்ந்தவரைப் போல பின்னடைந்த துறவியின் முகத்திலிருந்த தேஜஸ் அவனைக் கடந்து போனவர்களை நின்று கவனிக்கச் செய்தது..

தாமோதரனும் நிரஜாவும் பார்த்துக் கொண்டிருக் கையிலேயே ஜனக்கூட்டத்தின் மத்தியில் கலந்து மறைந்து போனார் அவர்..

"ஈஸி நீரஜா.."

கடலை வெறித்துக் கொண்டிருந்தவளின் தோள் தொட்டுத் தன்பக்கமாகத் திருப்பினான் தாமோதரன்.. அவன் தோளில் தலைசாய்த்து விசும்பினாள் நீரஜா..

"ஏய்ய்.."

நம்ப முடியாமல் அவள் முகத்தை நிமிர்த்திப் பார்த்தான்.. கண்ணீர்க் கோடுகள் அவள் கன்னத்தை நனைத்திருந்தன..

"இது நீதானா நீரஜா..?"

"நானும் மனுஷிதான் தாமு.. எனக்கும் மனசு இருக்கு.."

விசும்பியவளை மார்புடன் அணைத்துக் கொண்டான்.. அவன் மார்பில் முகம் புதைத்திருந்தவளின் கண்ணீரில் அவனது சட்டை நனைந்தது.. அவள் முடி கோதி காதோரமாக ஆறுதல் சொல்லித் தேற்றினான்.. அழுது முடித்து விலகி நின்று கண்களைத் துடைத்த நீரஜாவின் முகத்தில் தீர்மானம் தெரிந்தது.. அவள் பழைய நீரஜாவாக தெளிவான குரலில் சொன்னாள்..

"என் அண்ணனுக்கு அந்த யாமினியாலே ஆபத்து வராதுன்னா அவளை என் அண்ணன்கூட சேர்த்து வைக்கிறதில இண்ட்ரெஸ்ட் காட்டுவேன் தாமு.. சப்போஸ்.. அவளாலே அண்ணனுக்கு ஆபத்து வரும்ன்னு தோணுச்சுன்னா அவ நிழலைக்கூட அண்ணனை நெருங்க விடாம துரத்தியடிப்பேன்.. இதில் மாற்றமில்லை.."

அவள் எதைச் சொல்கிறாளோ.. அதை வேதவாக்காய் எடுத்துக் கொள்ளும் தாமோதரன் சம்மதமாய் தலையை

அசைத்தான்..

அத்தியாயம் - 91

உன்னோடு வாழ்கின்ற வாழ்வுக்காக..

பிறவிகள் தோறும் தொடர்ந்து வந்தேன்..

ஸ்கூட்டியை ஓங்கி உதைத்தாள் யாமினி.. அது அசையவில்லை.. மீண்டும் உதைத்தாள்..

"பாவம்.. அதுக்கு வாயிருந்தா அழுதிருக்கும்.. வாயில்லா வண்டியைப் போட்டு இப்படியா இம்சை பண்ணுவீங்க..? எல்லோ கிராஸ் இல்லைங்கிற தைரியமா..?"

வழியோடு போன ராயல் என் பீல்டு அவளருகில் நின்றபோதே இதைப் போன்ற அறிவுரைகளைக் கேட்கத் தயாராக காதுகளைத் தீட்டி வைத்துக் காத்திருந்தாள் யாமினி..

அவளது எதிர்பார்ப்பை வீணாக்காமல் என்ஃபீல்டுக் காரன் வம்பு வளர்த்ததில்..

'ஆஹா..! வந்துட்டானுங்கய்யா.. வந்துட்டானுக..' என்று கடுப்பாகிப் போனாள்..

"யெல்லோ கிராஸா..?" அவனை முறைத்தாள்..

"ஆமாங்க.. யெல்லோ கிராஸ்தான்.."

"யெல்லோ லைன் கேள்விப் பட்டிருக்கேன்.. யெல்லோ கிராஸ்ன்னு இப்போத்தான் கேள்விப்படறேன்.. அது என்னங்க யெல்லோ கிராஸ்..?"

"ஹி.. ஹி.. வாயில்லா ஜீவன்களுக்கு புளூகிராஸ்.. அதைப் போல.."

"அதைப் போல..?"

"வாயில்லா வண்டிகளுக்கு யெல்லோ கிராஸ்ன்னு இருந்தா எப்படியிருக்கும்ன்னு நினைச்சேன்.. சொன்னேன்.."

"ஓ..! சார் நினைச்சதையெல்லாம் வழியில பார்க்கிறவங்ககிட்டச் சொல்லிக்கிட்டே போகிற கேட்டகிரி போல.. அப்படியொரு யெல்லோ கிராஸ் இருந்தா.. என்ஜினையும் ஆஃப் பண்ணாம.. வண்டியையும் ஓட்டாம.. புர்ரு.. புர்ருன்னு உறும விட்டுக்கிட்டு கடலை வறுத்துக்கிட்டு டிராபிக்கை டிஸ்டர்ப் பண்ணிக்கிட்டு இருக்கிற உங்களைத்தான் முதல்ல புடிச்சு உள்ளே போடுவாங்க.."

அதற்கு மேலேயும் அவன் ஏன் அங்கே நிற்கப் போகிறான்..? ராயல் என்ஃபீல்டு புயல் வேகத்தில் பறந்து விட்டது..

"ரைட்ல சிக்னல் போட்டுட்டு லெப்ட்ல ஓடிக்கிறான்.. இவனெல்லாம் பேச வந்திட்டான்.."

ஹெவி டிராபிக்கில் நின்று பழி வாங்கிக் கொண்டிருந்த ஸ்கூட்டியின் மீதிருந்த கோபத்தை வழியில் போனவனிடம் காட்டினாள் யாமினி.. சாலையோரமாக நிறுத்தியிருந்த ஸ்கூட்டிக்கு முகவாய் இருந்திருந்தால் அதைப் பிடித்துக் கெஞ்சியிருப்பாள்..

நிற்க முடியாமல் கால்கள் கெஞ்சின.. பிளாட்பாரத்தில் உட்காரலாம் என்றால்.. காலை நேரப் பரபரப்பில் ஜனத்திரள் நிற்காமல் ஓடிக் கொண்டிருந்தது..

'என்ன செய்கிறது..?'

கவலையுடன் ஸ்கூட்டியைப் பார்த்தபடி நின்றிருந்தவளின் அருகே ஒரு கார் பிரேக்கடித்து நின்றது.

'இவன் எந்த கிராஸைப் பத்திச் சொல்லப் போகிறானோ..? எவனாவது வாயைத் திறக்கட்டும்.. வெளுத்துக் கட்டிட்டுத்தான் மறுவேலை..! மகனே..! வேலையைப் பாத்துக்கிட்டுப் போகாம கடலை வறுக்கவாடா வருகிற..? இருக்குடா உனக்கு..'

கொலைவெறியுடன் பல்லைக் கடித்தபடி திரும்பியவளிடம் காரின் கண்ணாடிக் கதவை இறக்கி விட்டபடி..

"யார் அவன்..?" என்று விசாரித்தான் சித்தார்த்தன்..

"என் மாமன்.." எரிச்சலுடன் சொன்னாள் யாமினி..

"உனக்குப் பிடிக்காத மாமனா..?" விடாமல் விசாரணை கமிசன் வைத்தான் அவன்..

"என்ன சார் வேணும் உங்களுக்கு..?"

காலை வெயிலின் உக்கிரத்தில் வதங்கிக் கொண்டிருந்தவள் அந்தக் கோபத்தை அவனிடம் காட்டினாள்..

"நீங்கதான் வேணும்.." என்றபடி கார்க் கதவைத் திறந்து இறங்கினான் சித்தார்த்தன்..

சுள்ளென்று அடித்த காலை வெயில் யாமினிக்கு பனியின் குளுமையைப் போல மாறிப் போனது.. பிஸ்கெட் நிற சட்டையும்.. பேண்டுமாக.. ஹீரோவைப் போல அவன் இருந்தான்.. கூலிங்கிளாஸைச் சுழற்றியபடி அவளைப் பார்த்து புருவங்களை உயர்த்தினான்.. அதில் அவள் கிறங்கிப் போனாள்..

'இவன் ஒருத்தன்.. காலங்கார்த்தாலே.. நேரம் காலம் தெரியாம மயக்கப் பார்ப்பான்..'

வியர்வை வழியும் முகமும், மக்கர் செய்யும் ஸ்கூட்டியுமாக அவன் முன்னால் நிற்க லஜ்ஜையாக இருந்தது யாமினிக்கு..

"பேய் விரட்டறதைப் போல ஓடறான்..? என்ன சொல்லி விரட்டின..?" சித்தார்த்தன் கூலிங் கிளாஸை சரி செய்து கொண்டான்..

"என்னைப் பார்த்தா உங்களுக்குப் பேய் போல தோணுதா..?" யாமிணி சண்டைக்கு வந்தாள்..

"ரிலாக்ஸ்.. ரிலாக்ஸ்.. ஸ்கூட்டிக்கு என்ன ஆச்சு..?"

"உடம்புக்கு சரியில்லாமப் போயிருச்சு.."

"டாக்டர்கிட்ட.. ஐ மீன்.. மெக்கானிக்கிட்டக் காண்பிச்சிருக்க வேண்டியதுதானே..?"

"உங்களுக்கு இருக்கிற மூளை எனக்கு இல்லை பாருங்க.. அதான் காண்பிக்கலை.."

வெடுக்கென்ற வந்த பதிலை ரசித்தான் சித்தார்த்தன்.. மக்கர் பண்ணும் ஸ்கூட்டியிடம் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் அந்த நிலையிலும் மிளகாயின் காரத்தோடு பதில் சொன்னவளை பார்வையால் மேய்ந்தான்..

அவள் முகத்தில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகளை 'உஃப்' என்று வாயைக் குவித்து ஊதி உலர வைக்க வேண்டும் போல இருந்தது அவனுக்கு..

"எப்படியோ.. உண்மையை ஒப்புக் கொண்டா சரி.."

"வம்பிழுக்கத்தான் காரை விட்டு இறங்கினீங்களா..?"

"இல்லேன்னு உனக்கே தெரியும்.. நடு ரோட்டில ஸ்கூட்டியை மிதிமிதின்னு மிதிச்சுக்கிட்டு நீ நின்னா என்னோட கார் எப்படிக் கடந்து போகுமாம்..?"

உண்மையாக அவன் சொல்லியதில் அவளுக்கு உச்சி சூரியன் பௌர்ணமியாக மாறிப் போனது..

"காரில ஏறு.."

"என் ஸ்கூட்டி..?"

"இந்த ஓட்டை ஸ்கூட்டியை எவன் தொடுவான்..? காயலான் கடைக்காரன் கண்டாத்தான் டேன்ஜர்.."

"ஹலோ..! இது என்னோட ஸ்கூட்டி.."

"யாரு இல்லேன்னது.. இதுக்கு உரிமை கொண்டாட எனக்கென்ன மறையா கழண்டிருக்கு..?"

"உங்களுக்கு உங்க கார் உசத்தின்னா.. எனக்கு என் ஸ்கூட்டிதான் உசத்தி.."

"வைச்சுக்க.."

சித்தார்த்தன் சொன்னது ஸ்கூட்டியைத்தானா என்று சந்தேகப் பட்டாள் யாமினி.. அதற்கேற்றாற்போல அவன் பார்வையில் அவளை மேய்ந்தான்.. துளைக்கும் அவன் பார்வையில் முகம் சிவந்தவள்..

"எனக்கொன்னும் உங்க கார் வேண்டாம்.." என்று முகம் திருப்பிக் கொண்டாள்..

"நான் வேண்டாமா..?"

ஆழ்ந்த குரலில் அவன் கேட்டதும் 'விசுக்' கென்று தலைநிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.. அதற்காகவே காத்திருந்த அவனது துளைக்கும் பார்வை அவள் பார்வையை கவ்விக் கொண்டது..

"ஏய்ய்.. ஏறுடி.." அவன் அதட்டினான்..

"'டீ' யா..?"

"ஆமாண்டி.."

"சார் தண்ணீ குடிக்கிறதைப் போல ஃபாரினுக்கு பறந்துட்டு வருகிறவரு.."

"அதுக்கு...? காதலிக்கிறவளை வாடி, போடின்னு கூப்பிடக் கூடாதுன்னு ஏதும் எழுதி வைத்திருக்கா..?"

அடர்த்தியாக நகர்ந்து கொண்டிருந்த வாகனங்களுக்கு அருகில்.. நட்டு நடு சாலையில் சித்தார்த்தன் அவளிடம் காதல் சொல்லி வைத்தான்..

'காதல் சொல்கிறதுக்கு நல்ல இடம் பார்த்தான்..'

யாமினி சாலையில் ஓடிக் கொண்டிருந்த கார்களைப் பார்த்தாள்.. அவனைப் பார்த்தாள்..

"கடவுளே..!" என்றாள்..

"அவரை ஏன் டிஸ்டர்ப் பண்ற..?"

"இப்படியாப்பட்ட ஹெவி டிராபிக் மத்தியில.. ரிப்பேரா நிக்கிற ஸ்கூட்டியை சாட்சியா வைத்துக்கிட்டு.. காதலிக்கிறவ மேலே உரிமை கொண்டாடற காதலனை

எனக்குன்னு அனுப்பி வைச்சிருக்காரில்ல.. அதுக்கு தேங்க்ஸ் சொல்லத்தான்.."

யாமினி அவனுடைய காதலை ஏற்றுக் கொண்டதை உணர்த்தி விட்டாள்.. சித்தார்த்தனின் பார்வையில் வேகம் வந்தது..

யாமினிக்காக காத்திருந்த சித்தார்த்தனிடம் பேச முடியாமல் எங்கிருந்தோ வந்த வெட்கம் யாமினியை ஆக்ரமித்துக் கொண்டது.. அவன் பார்வையின் வேகம் தாளாமல் முகம் சிவந்தாள்..

"ஏறுன்னு சொல்கிறேனில்ல.?"

சித்தார்த்தனின் உரிமையான கோபத்தை அவளுக்குப் பிடித்திருந்தது.. அவளின் தயக்கத்தில் அவனது கோபம் அதிகரித்தது..

"எவனோ ஒருவனோட காரிலே ஏறப் போகிறதைப் போல இத்தனை தயக்கம் காண்பிக்கிற..?"

அவன் கோபத்தில் யாமினி பதறிப் போனாள்..

சித்தார்த்தன் அவளுக்கு எவனோ ஒருவனா..?

"அதில்லை.. ஸ்கூட்டி.."

"அதுக்கொரு ஏற்பாடைப் பண்றேன்.."

சித்தார்த்தன் யாருக்கோ போன் பண்ணினான்.. இரண்டே நிமிடங்களில் பக்கத்திலிருந்த மெக்கானிக் ஷாப்பிலிருந்து ஒரு மெக்கானிக் வந்து ஸ்கூட்டியைத் தள்ளிக் கொண்டு போய் விட்டான்..

"உன் ஓட்டை ஸ்கூட்டியை உருப்படியாக்கி கொடுத்துருவாங்க.. இப்பவாவது காரில ஏறுகிறயா..?"

சித்தார்த்தனின் காரில் ஏறி அவன் பக்கத்தில் உட்கார்ந்த யாமினிக்கு அது முதல் பயணம் போலத் தோன்றவேயில்லை..

காலம் காலமாக அவனுடன் பயணம் செய்ததைப் போன்ற உணர்வு அவளுக்குள் உண்டானது..

காரை ஓட்டியபடி அவளைத் திரும்பிப் பார்த்த சித்தார்த்தனின் கண்களிலும் அதே உணர்வுதான் இருந்தது..

அத்தியாயம் - 92

கைத்தளையிடும் காலத்தைக்

கடந்து வாழ்ந்திட பிறந்துவந்தோம்..

எப்படி அவனால் இத்தனை இலகுவாக அவளை உரிமை கொண்டாட முடிகிறது என்று திகைத்துப் போனாள் யாமினி.. அதைவிட அவன் அவளை உரிமை கொண்டாடுவதை வெகு இயல்பான ஒன்றாக எப்படி அவள் எடுத்துக் கொண்டாள்..?

அவன் 'வாடி, போடி..' என்றால் கேட்டுக் கொள்வதா..? 'வண்டியைக் கொடுத்து விட்டு வா..' என்றவுடன் 'தந்தேன்' என்று கையில் பிடித்திருந்த ஸ்கூட்டியை தாரை வார்த்து விடுவதா..?

அந்த மெக்கானிக்கை அவள் முன்பின் பார்த்திருக்கிறாளா..? யாரென்று அடையாளம்தான் தெரியுமா..? எப்போது ஸ்கூட்டி ரெடியாகும்..? என்ன ரிப்பேர்..? அதற்காகும் செலவுத்தொகை என்ன..?

இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் வண்டியை ஒப்படைத்து விட்டாளே.. இதை அனுராதா அறிந்தால் என்ன சொல்லுவாள்..?

'ஆஹா..! அருமையான வேலையைச் செய்தாயடி மகளே..!' என்று மகளை மெச்சிக் கொள்வாளா..?

இது எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததைப் போல அவன் கார்க்கதவைத் திறந்து "ஏறுடி.." என்கிறான்.. இவள் வாயே திறக்காமல் ஏறி உட்காருகிறாள் என்றால்.. என்னதான் நடக்கிறது..?

யாமினிக்குள் என்னென்னவோ நடந்து கொண்டிருந்தது... சித்தார்த்தனின் அருகாமையில் உரிமையுடன் அவள் உட்கார்ந்து பயணிப்பது கனவா.. இல்லை நனவா என்று புரியாமல் அவள் தடுமாறினாள்..

சித்தார்த்தனுக்கு அதுபோன்ற தடுமாற்றங்கள் இல்லைபோல.. அவன் உல்லாசமாக அவளைப் பார்த்து இமை சிமிட்டினான்.. யாமினியின் உடலில் 'ஜிவ்'வென்ற ஓர்விதமான உணர்வு புதுவெள்ளம் போல பாய்ந்தது.. காதுமடல் சூடேற அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு சாலையைப் பார்ப்பதைப் போல பார்வையைத் திருப்பிக் கொண்டு தப்பிக்க முயன்றாள்..

'இவன் ஃபாரினிலே படிச்சவன்.. ஃபாரின் கண்ட்ரீஸ்ல மெயினா பிஸினெஸ் பண்றவன்.. வருசத்தில முக்கால்வாசி நாள் அங்கேதான் குப்பை கொட்டறவன்னு சொல்லிக்கிறாங்க.. அதெல்லாம் பொய்யா..? இப்படிக் கண்ணடிக்கிறானே.. இதையா.. ஃபாரின்ல போய் கத்துக்கிட்டு வந்தான்..?'

"என்னடி யோசனை..?"

அடுத்து வந்த வளைவில் காரை ஒடித்துத் திருப்பியபடி கேட்டான் சித்தார்த்தன்.. திடிரென்று வந்த திருப்பத்தில் அவன் மீது விழுந்தாள் யாமினி.. அவள் முகத்தின்மீது உராய்ந்த அவனது சட்டை காலரின் நுனி அவள்.. மூக்கை நிரடியது.. முகர்ந்த வாசனையில் நிரம்பியிருந்த அவனது அடையாளம் அவளை மயக்க நிலைக்கு இட்டுச் சென்றது..

யாமினி கிறங்கிப் போனாள்.. அவனது தோள்களின் உராய்வில் அவளது உடலில் உள்ள அனைத்துச் செல்களும் உயிர் பெற்று உவகை கொண்டன.. அவன் தோளை விட்டு முகம் விலக்க அவளுக்கு மனம் வரவில்லை.. புதைத்த முகத்தை விலக்காமல் அப்படியே இரு என்று அவள் மனம் ஜொள்ளியது..

அவளது மூச்சுக் காற்றை உணர்ந்தான் சித்தார்த்தன்.. அவனது சட்டைக் காலரைத் தாண்டிக் கழுத்துப் பகுதியில் படிந்த உஷ்ணமான சுவாசக்காற்றில் அவன் தேகம்

சூடானது.. சந்தடி மிகுந்த நான்கு வழிச்சாலையை விட்டு சந்தடியில்லாத தெருவில் அவன் கார் திரும்பியது..

இருபுறமும் மரங்கள் அடர்ந்த சாலை அது.. ஆரஞ்சும் சிகப்பும் கலந்த அடர் வண்ணத்தில் பூக்கள் பூத்திருந்தன.. சாலையோரமாக அப்பூமரங்கள் பூக்களைக் கொட்டியிருந்தன.. சிதறியிருந்த பூக்கள் சாலையெங்கும் பரவி.. சித்ததார்த்தனுக்கும் யாமினிக்கும் பூப்பாதை போட்டு வரவேற்றன.. அப்பூப்பாதையைப் பார்த்த சித்தார்த்தனின் மனதில் உல்லாசம் குடி கொண்டது.. மனம் லேசானது.. இறகை விட லேசான மனது இறக்கை கட்டி அவனை மாய உலகுக்குள் இழுத்தது..

சித்தார்த்தன் தன்னை மறந்தான்.. தன் உயரத்தை மறந்தான்.. எட்டாத தொலைவிலிருக்கும் சூரியனைப் போன்றவன் அவன் என்ற பிம்பத்தையும் மறந்தான்.. ராஜ பாரம்பர்யத்தை மறந்தான்.. பரம்பரைக் கோடிஸ்வரன் என்பதையும் மறந்தான்.. மிகப் பெரிய தேசிய கட்சித் தலைவரின் மகள் அவனது தாய் என்ற அடையாளத்தையும் மறந்தான்.. பண பலம், அரசியல் பின்புலம், ராஜ பரம்பரை, பிஸினெஸ் மேக்னெட், நட்சத்திர அந்தஸ்து என்பன போன்ற அனைத்தையும் மறந்து.. யாமினியை மட்டுமே நினைவில் கொண்டவனாய் சாலையோரமாக இருந்த பெரிய மரத்தின் அடியில் காரை நிறுத்தினான்.. அவள் பக்கமாகத் திரும்பினான்.. கண் திறக்கவும் முடியாமல் கிறங்கிச் சரிந்திருந்த அவள் முகத்தை நிமிர்த்தி.. அவள் நெற்றியில் இதழ் பதித்தான்..

'ஹா..!'

சிலிர்த்துப் போனாள் யாமினி.. விலகி விடு என்று அவள் மனம் நடுங்கியது.. விலகாதே என்று அவள் உடல் கெஞ்சியது.. நெற்றியில் உணர்ந்த அவன் இதழ்களின் ஸ்பரிசம் அவளை எங்கோ இட்டுச் சென்றது.. இதழ்கள் துடிக்க அவள் கண் மூடிக் கிறங்கித் தவித்தாள்.. அடைக்கலம் தேடி அவள் கைகள் அவனது சட்டையின் காலரைக் கொத்தாகப் பிடித்தன..

சித்தார்த்தனின் உடல் அவளது உடலின் நடுக்கத்தை உணர்ந்தது.. குடை போலக் கவிழ்ந்து அவள் விழிகளை மூடியிருந்த இமைகள் படபடவென அடித்துக் கொண்டதில் அவளது அச்சமும், தயக்கமும் வெளிப்பட்டன..

அவனுக்கு அவளது அந்த நடுக்கத்தையும், பயத்தையும் பிடித்திருந்தது.. விசிறிபோலக் கவிழ்ந்திருந்த அவளது இமைகளின் மீது மெலிதாக முத்தமிட்டான்.. அடுத்த

'ஹ..!' அவளுள் எழுந்தது..

அவனது கை ஆதரவாக அவள் தோளில் படிந்து தடவிக்கொடுத்ததில் யாமினி கிளர்ந்தாள்.. அவளது தோளில் படிந்து இறங்கி அவள் முதுகுப் புறமாக பரவிப் பதிந்த அவனது கைகளில் வெதுவெதுப்பையும், வலிமையையும், தொடுகையையும் உணர்ந்தவளுக்குள் என்னென்னவோ மாற்றங்கள் நிகழ்ந்தன..

அவளது இமைகளில் இருந்து விலகிய அவனது உதடுகள் அவள் முகத்தை விட்டு விலகவில்லை.. மெதுவாக நகர்ந்த அவனது உதடுகளின் பயணத்தில் அவன் மீசையின் முடிகள் அவள் முகத்தில் உராய்ந்து இன்பத்தை உண்டாக்கின.. அவள் கன்னத்தில் அவன் உதடுகள் அழுந்தப் பதிந்து ஆழமாகப் புதைந்தன..

'அனுபவம் புதுமை..

அவனிடம் கண்டேன்..'

அவள் மனதின் ஓரத்தில் பாடல் ஒலித்தது.. ஒரு கையை அவளது முதுகில் பதித்து தன்புறமாக இழுத்துக் கொண்டவன்.. மறு கையால் அவள் முகத்தை அழுந்தப் பிடித்துக் கன்னத்தில் முத்தமிட்டதில் அவளது கன்னங்கள் வலித்தன.. முரட்டுத்தனமான அவனது விரல்களின் தடங்கள் அவளது கன்னத்தில் ஆழமாகப் பதிந்திருந்ததில் அந்த வலிக்கு ஒத்தடம் கொடுப்பதைப் போல அவன் முத்தமிட்டுக் கொண்டிருந்தான்..

'அந்நாளில் இல்லாத

பொல்லாத எண்ணங்களே..!

ஆஹா..! பொன்னான கை பட்டு

புண்ணான கன்னங்களே...!'

எங்கோ அவளை இழுத்துச் சென்ற உணர்வின் பேரலையில் மூச்சுத் திணற மூழ்கிக் கொண்டிருந்தாள் யாமினி.. பற்றுக்கோலைத் தேடும் கொடியாய்.. அவள் கன்னத்தைப் பிடித்திருந்த கையைப் பற்றிக் கொண்டாள்.. இறுக்கிப் பிடித்த அவள் தளிர் விரல்களின் மென்மையில் அவனது வேகம் குறைவதற்குப் பதிலாக அதிகரித்து வைத்தது..

சித்தார்த்தன் அவளது கன்னத்திலிருந்த உதடுகளை நகர்த்தி அவளது துடிக்கும் இதழ்களின் மீது படிய வைத்தான்..

யாமினி ஸ்தம்பித்தாள்.. அவன் கையை இறுக்கிப் பிடித்திருந்த அவளது விரல்கள் வெடவெடத்தன.. அதை சட்டை செய்யாமல் அவள் உதடுகளை அவனது உதடுகள் ஆக்ரமித்தன.. ஆழப்பதிந்த முத்தத்தில் இனித் தடுப்பதற்கு எதுவும் இல்லை என்று அவள் கரைந்து எதிர்ப்பைக் கைவிட்டு அவன் கழுத்தை வளைத்துக் கொண்டாள்..

சித்தார்த்தனின் விழிகள் மின்னின.. அவளது ஒப்புக் கொடுத்தலில் அவன் உத்வேகம் கொண்டான்.. தடைகள் தகர்ந்து போனதில் பரிபூரண வெற்றியை அவன் உணர்ந்தான்.. இன்னமும் அதிகமாக அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்..

கட்டித் தழுவிய அவர்களின் தழுவலில் ஆவேசம் இருந்தது.. கரையுடைத்த வெள்ளத்தின் ஆக்ரோசம் இருந்தது.. ஏதோ ஓர் பந்தத்தின் சுழலில் சிக்கித் தவித்தவர்கள்.. இதுதான் அந்தப் பந்தம் என்று பெயரிட்டு சுழலின் விலங்குகளைத் தகர்த்தெறிந்து வெளியில் வந்தார்கள்.. உனக்கு நான்.. எனக்கு நீ.. என்று ஒருவரில் ஒருவர் கலந்தார்கள்..

யாமினியின் முகமெங்கும் ஈரம் படிந்திருந்தது.. சித்தார்த்தனின் ஆவேசத் தழுவலுக்குள் அவளது மனப்

பிரமைகள் உடைந்து நொறுங்கிச் சுக்கு நூறாகிக் கொண்டிருந்தன..

'ஆலய மணியின் ஓசையை..

நான் கேட்டேன்..

அருள்மொழி கூறும் பறவையின்

குரல் கேட்டேன்..

உன் இறைவன் இவனே.. இவனே..

எனப் பாடும் ஒலி கேட்டேன்..

உன் தலைவன் இவனே.. இவனே..

எனும் தாயின் மொழி கேட்டேன்..'

யாமினியின் கண்கள் கண்ணீரைச் சொரிந்தன.. உள்ளம் விம்ம அவனைக் கட்டிக் கொண்டாள் அவள்.. மனதின் பாடலில் தன் கடந்த காலத்தைக் கண்களுக்குள் கொண்டு வந்தாள்.. அகால இரவுகளில்.. அலை கடலின் ஓசையில்.. தன்னந் தனியளாக.. பித்துப் பிடித்து அவள் தேடிக் கொண்டிருந்தது யாரை என்று இனம் கண்டு கொண்ட ஆனந்தத்தில் அவள் திளைத்தாள்..

"ம்ப்ச்..! அழக்கூடாது.."

அவள் கண்களைத் துடைத்து விட்டபடி கண்டிப்புடன் சொன்னான் சித்தார்த்தன்.. அந்த உரிமையில் அவள் மனம் சந்தோசம் கொண்டது.. சித்தார்த்தன் நெருக்கத்தை அதிகரித்தான்.. அவள் இடையில் பதிந்த அவனது கையின் வலிமையை அவள் உணர.. வழவழப்பை அவன் உணர்ந்தான்..

"பளிங்கு மேனிடி.. உன் மேனி.." காதோரமாக கிசுகிசுத்தான்..

யாமினி முகம் சிவந்தாள்.. இதுபோல அவன் நடந்து கொள்ளக் கூடும்.. பேசக்கூடும்.. என்று நினைத்துக் கூட அவள் பார்த்ததில்லை..

கம்பீரமாக.. நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட சலனமற்ற கண்டிப்பு நிறைந்த பார்வையுமாக வரும் சித்தார்த்தனா இவன்..?

"இவன் வேறடி.." சித்தார்த்தனின் உதடுகள் அவளது காது மடல்களைக் கவ்வின..

யாமினியால் பேச முடியவில்லை.. இதுபோன்ற சூழலில் பேச்சு மறந்து காற்றுத்தான் வெளியே வரும் என்று கண்டுணர்ந்து பாடிய கவிஞரின் கவித்திறமையை மனதிற்குள் வியந்து கொண்டாள் அவள்..

"இவன் யாமினியைக் கடிச்சுத் தின்னும் வெறியில் இருக்கிறவன்.. கண்ணியம்ன்னா கிலோ என்ன விலைன்னு கேட்பான்.."

சித்தார்த்தன் உரக்கச் சிரித்தான்.. யாமினிக்குள் வெட்கம் மண்டியது.. அவன் அப்படித்தான் இருந்து தொலைத்தான்.. அவன் கைகள் யாமினியின் உடலின் மீது ஊர்ந்து எங்கெங்கோ சென்றன.. அத்து மீறிய அந்த அழகான அசுரனின் அகோரப் பசிக்குத் தீனியாக ஆசை கொண்டாள் யாமினி..

"சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனீஸீன் எம்.டி பக்கா ஜெண்டில்மேன்னு எல்லோரும் பேசிக்கிறாங்களே.."

அவனது சட்டையின் காலரைப் பிய்த்து விடும் உத்தேசத்துடன் இழுத்து அவனுடன் பின்னிப் பிணைந்தபடி அவள் சொன்னாள்..

"எவன் சொன்னது..?"

கழுத்திலிருந்து தோளுக்கு இடம் மாறிய சித்தார்த்தனின் உதடுகள் கேட்டபடி தோளில் படிந்தன..

ஜிவ்வென்று எழுந்த உணர்வுகளின் சுழலில் சிக்கித் திக்குமுக்காடிப் போனாள் யாமினி..

"இவன் பக்காப் பொறுக்கி..!"

அந்தப் பொறுக்கி அவள் உடலை மேய ஆரம்பித்தான்.. கண்ணுக்கு முன்னால் இருப்பவளைப் பார்க்கக் கூட தாமோதரனிடம் அனுமதி வாங்கிக் கொண்டிருந்தவன்.. அனைத்தையும் தூக்கிக் கடாசி விட்டு அவளை வேட்டையாட ஆரம்பித்ததில் வியப்புக் கொண்டாள் யாமினி..

"பயமாயில்லையா..?" சீண்டினாள்..

"யாருக்குப் பயப்படச் சொல்கிற..? உன்னிடம் பயப்படச் சொல்கிறயா..?"

"உங்க பிரண்டுகிட்டப் பயப்படச் சொல்றேன்.."

"அது எதுக்கு..? தேவையில்லாம.."

"இத்தனை நாள் தேவையா இருந்ததே.."

"இப்ப வேற ஒன்னு தேவையா இருக்கே.."

சித்தார்த்தனின் கிசுகிசுப்பில் யாமினியின் வாய் மூடிக்கொண்டது..

"ச்சீய்.." வெட்கத்துடன் சிணுங்கினாள்..

அந்த வெட்கம் சித்தார்த்தனைத் தூண்டி விட்டுத் தொலைத்தது..

"ஏய்ய்ய்.." அவன் கிசுகிசுப்பை அதிகப்படுத்தினான்.

"போதும்.." தாள முடியாமல் அவன் கைகளைக் கிள்ளினாள் அவள்.

"யாமினி.."

"ம்ம்ம்.."

"என்னைப் பிடிச்சிருக்கா..?"

தாபத்துடன் அவன் முணுமுணுத்த போது அவளுக்குச் சிரிப்பு வந்து விட்டது..

"களுக்.." என்று சிரித்து வைத்தாள்..

வாய் பொத்தி சிரித்தவளின் மீது அவனுக்குள் காதல் பெருகியது..

"சொல்லுடி.." கெஞ்சினான்..

"இப்பக் கேட்கக் கூடாது எம்.டி சார்.."

"வேற எப்பக் கேட்கனும்டி..? நாலு குழந்தைகளைப் பெத்த பின்னாலக் கேட்கனுமா..?"

"ச்சீய்.."

"ஏண்டி..? என் குழந்தைகளுக்கு அம்மாவாகனும்கிற ஆசை உனக்கில்லையா..?"

அவனது ஆசை வேறு விதமாக இருந்ததை அவனது அலையும் பார்வை சொல்லியது.. விட்டால் ஆயிரம் குழந்தைகளுக்கு அவளை அம்மாவாக்கி விடும் துடிப்பு அவனிடம் இருந்ததை அவளது தேகம் உணர்ந்து உருகியது..

அவளுக்கு ஆசையாகத்தான் இருந்தது..

'சித்தார்த்தனின் குழந்தைகளுக்கு அம்மா..!'

நினைத்துப் பார்க்கும் போதே அவளுக்கு இனித்தது..

'நடக்குமா..?'

கிறக்கம் நிரம்பியிருந்த விழிகளில் அது அகன்று நிராசை சூழ்வதைக் கண்ட சித்தார்த்தன்..

"இப்ப என்ன..?" என்று அதட்டினான்..

"பேராசையெல்லாம் எனக்கு இல்லை.." துயரத்துடன் சொன்னாள் யாமினி..

"எதுடி பேராசை..? என் பிள்ளைகளுக்கு அம்மாவாகிறதா..?"

"ம்ம்ம்..."

"இம்சையைக் கிளப்பாதே யாமினி.. அடிச்சே கொன்னுடுவேன்.. இது எப்படிடீ பேராசையாகும்.. நியாயமான ஆசைன்னு சொல்லு.."

"நீங்க வானம்..!"

இதைச் சொல்லும் போது யாமினியின் மனதுக்குள் துக்கம் பொங்கியது.. பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும் அந்தக்குரல் அவள் காதுகளில் ஒலித்தது..

"என் அண்ணன் விண்..! நீ மண்..!"

'யார் அது..?' யாமினியின் மனதுக்குள் மறுபடியும் நிழல் ஆட்ட யுத்தம் ஆரம்பமானது..

'யார் இதைச் சொன்னது..?'

நினைவைக் கசக்கிப் பிழிந்து நினைவுக் குவியலுக்குள் தேடிப் பார்த்தாள்.. புகையாய் தெரிந்த உருவத்தின் முகம் தெரியவில்லை..

"ஆகாயம் பூமி ரெண்டும்

ஒன்றா..?

நீ அந்த வானம்..!

நான் இந்த பூமி..!

ஒன்றென்று யார் சொல்லுவார்..?"

"என்னது..?"

புருவங்களைச் சுழித்து சித்தார்த்தன் அதட்டிய போதுதான் அவள் வாய் விட்டுப் பாடிக் கொண்டிருப் பதையே உணர்ந்தாள் யாமினி..

"என்ன சொன்ன..?" திரும்பவும் கேட்டான் சித்தார்த்தன்..

"சொல்லலை.. பாடினேன்.." மென்று விழுங்கினாள் யாமினி..

தன்னையறியாமல் பேசி வைப்பதையும்.. பாடி வைப்பதையும்.. அவளுடைய குடும்பத்தினர் சகித்துக் கொள்வார்கள்.. சித்தார்த்தன் சகித்துக் கொள்வானா..?

முழுமையாக அவளைப் பற்றித் தெரிந்தால் அவன் என்ன சொல்லுவானோ..?

யாமினிக்குத் துயரமாக இருந்தது.. எட்டாத தொலைவில் அவனும், அண்ணாந்து பார்க்கக்கூட முடியாத நிலையில் அவளும், பிறந்திருக்கும் போது.. எந்த தைரியத்தில் அவள் அவனை காதலிக்கிறாள்..?

"பாடினயா..?" சித்தார்த்தன் அவளை ஒரு தினுசாக பார்த்தபடி விளக்கெண்ணையைக் குடித்ததைப் போல முகத்தை வைத்துக்கொண்டு வினவினான்..

'இதுக்கே இப்படிச் சொல்றானே..' யாமினி மனதுக்குள் அரண்டாள்..

"இந்த மாதிரியான சிச்சுவேசனில இப்படியொரு பாட்டைப் படிக்க உன்னாலதாண்டி முடியும்.. ஆமாம்.. இந்த மாதிரிப் பாட்டை எங்கேயிருந்து பிடிச்ச..?"

"பிடிக்கலை.. கேட்டேன்.."

"கேட்கிறதுக்கு உனக்கு வேற பாட்டே கிடைக்கலையா..?"

"இந்தப் பாட்டு ஏதோ ஒரு வகையில என்னை இம்ப்ரெஸ் பண்ணுச்சு.."

அது எந்த வகையில் என்பதை யாமினி மட்டுமே அறிவாள்.. நீ மண்..! என் அண்ணன் விண்..! என்ற குரல் காதில் ஒலிக்கும் போதெல்லாம் அவள் மனதில் துயரம் கவ்வும்.. எங்கோ ஒரு இருட்டு மூலையிலே புதைந்து கொள்ளச் சொல்லி மனம் கெஞ்சும்.. தொலைதூர தொடு வானை நோக்கி ஓடி விட வேண்டும் போல மனதுக்குள் சோகம் சூழும்..

அப்படியொரு சூழலில்தான் யாமினி அந்தப் பாடலைக் கேட்டாள்.. அவள் மனதில் இருந்த சோகம் அனைத்தையும் பாடலில் கொண்டு வந்து பாடியது ஆண்குரல்..!

'இதை நானில்ல பாடனும்..?' அவள் மனம் விம்மியது..

அத்தியாயம் - 93

விண்ணோடு நீயிருக்க..

மண் மீது நானிருந்தேன்..

அந்தப் பாடலின் மீதான அவளின் பிணைப்பு அப்போதிருந்துதான் ஆரம்பமானது.. அதன் பின்னால் எப்போதெல்லாம் அவள் மனதில் அந்தக் குரல் ஒலிக்கிறதோ.. அப்போதெல்லாம் அந்தப் பாடலை அவள் பாட ஆரம்பித்தாள்..

அதை சித்தார்த்தனிடம் எப்படிச் சொல்லுவாள்..?

முதன்முதலாக அவனை அவள் சந்தித்த மாலைப் பொழுது அவள் நினைவுக்கு வந்தது.. மகாபலிபுரக் கடற்கரையின் ஐந்து ரதக் கோவிலில்.. யாருமற்ற சூழலில்.. தன்னந்தனியளாக நின்று கொண்டு.. 'ஏழு ஸ்வரங்களுக்குள் எத்தனை ராகம்..?' என்று பாட அவளால் முடிந்தது.. அந்தப் பாடலைக் கேட்டு அவனைத் தேடி வந்த சித்தார்த்தனிடம்.. நிழலாக அவளைத் துரத்தும் நினைவுகளைப் பற்றி அவளால் பகிர்ந்து கொள்ள முடிந்தது.. புகை போல அவள் அடிக்கடி காணும் அமானுஷ்யத்தைப் பற்றிச் சொல்ல முடிந்தது..

அப்போது அவன் யாரோ.. அவள் யாரோ.. இயல்பாக எழுந்த நட்புணர்வில்.. தன் மனதிலிருந்ததை பகிர்ந்து கொண்டாள் யாமினி..

இப்போது அப்படியல்லவே.. அவனை அவள் மனம் விரும்புகிறதே.. ஏழேழு ஜென்மங்களாக.. இணை பிரியாமல் தொடர்ந்து வந்ததைப் போன்ற பந்தம் அவள் மனதில் எழுகிறதே.. அவன் தொட்டவுடன் கையைத் தட்டி விடாமல் அவன் மீது சாய்ந்து விடும் சொந்தம் அவளுக்குள் உருவாகி உள்ளதே.. அவள் என்ன செய்வாள்..?

இப்போதைய யாமினியால் அவளது பலவீனமான பக்கங்களை சித்தார்த்தனிடம் ஒப்பிக்க முடியாதே..

"சொந்தம் எப்போதும்

தொடர் கதைதான்..

முடிவே இல்லாதது..

எங்கே சென்றாலும்

தேடி இணையும்

இனிய கதை இது..

உன்னை என்னோடு

சேர்த்த தெய்வம்

எழுதும் புதுக்கதை இது.."

காரிலிருந்த எப்.எம் ரேடியோவை தன்னிச்சையாக யாமினி திருகி வைக்க.. பாடல் ஒலித்தது..

அந்தப் பாடலில் ஈர்க்கப்பட்டாள் யாமினி.. முடிவில்லாமல் தொடர்ந்து வரும் சொந்தத்தில் அவள் யார்..? சித்தார்த்தன் யார்..?

"ரொம்பவும் மனசைப் போட்டு உழட்டிக்காதே.." என்றான் சித்தார்த்தன்..

"நானா நினைக்கலை.. தானா நினைவு வருது.." யாமினி முணுமுணுத்தாள்..

"என்னைப் பத்தி மட்டும் நினைடி.. மத்த நினைப்பெல்லாம் தானா விலகி ஓடிரும்.." கை நீட்டினான் சித்தார்த்தன்..

அவன் பார்வையின் அழைப்பில் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டவளுக்கு அவள் வேறு.. அவன் வேறு என்று தோன்றவே இல்லை என்பது பெரும் விந்தையாக இருந்தது..

'எப்படி இது சாத்தியமானது..?'

"யோசிக்காதேன்னு சொன்னேனில்ல.."

அவள் தலையில் குட்டினான் சித்தார்த்தன்.. அண்ணாந்து அவன் முகம் பார்த்தவளுக்கு.. அந்த அணைப்பு நிலைக்குமா என்று சஞ்சலமாக இருந்தது..

அவன் எங்கே.. அவள் எங்கே..

மலையும், மடுவும் ஒன்றாக இணைய முடியுமா..?

"மறுபடியும் யோசனையா..?"

"ம்ம்ம்.."

"விட்டுத் தள்ளு யாமினி.."

"முடியலை.."

"ஏன்..?"

"உங்களுக்கும் எனக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது.."

"இதைப் பாருடா.. அம்மணி இப்படியெல்லாம் டயலாக் பேசுவாளா..? இது வரைக்கும் இது தெரியாம போச்சே.."

"கேலியா.."

அவன் மார்பில் செல்லமாக குத்தினாள் யாமினி.. உரக்கச் சிரித்தவன் அவள் கைவிரல்களைப் பற்றி முத்தமிட்டான்.. சிலிர்த்துப் போனாள் யாமினி..

"ஐ லவ் யு டி.."

"தெரியும்.."

"எப்ப..?"

"எப்பவோ.."

"நான் வாய் திறந்து சொல்லலையே.."

"வாயைத் திறந்து சொன்னால்தான் காதலா..?"

"ஆமாமில்ல.. உனக்கும் எனக்குமான கெமிஸ்ட்ரி.. உன்னைப் பாத்த முதல் நாளில இருந்து பத்திக்குச்சுடி.. தாமுதான் அதைக் கண்டுபிடிச்சு அணை போடப் பார்த்தான்.. நான் அடங்கலை.."

யாமினி பேசவில்லை.. சித்தார்த்தனின் சட்டைப் பொத்தான்களைத் திருகியபடி மௌனமாக இருந்தாள்..

"என்னாச்சு..?" சித்தார்த்தன் அவள் கன்னத்தை நிமிண்டினான்..

"ஸ்ஆ.." உதட்டைச் செல்லமாக சுழித்தவள்..

"ஒன்னுமில்லை.." என்று சொன்னாள்..

"ஒன்னுமில்லாததுக்கு இவ்வளவு யோசனை பண்றவ நீயாத்தாண்டி இருப்ப.. யோசிக்கிறதை அவாய்ட் பண்ணேன்.."

யாமினிக்கு சிரிப்பு வந்தது.. என்னவோ அவள் தான் வெற்றிலை பாக்கை வைத்து யோசனையை வா.. வா.. என்று அழைப்பதைப் போல அவன்பேசி வைத்ததை அவள் ரசித்தாள்.. அவள் மீதான அவனின் உரிமை கலந்த கோபம் அவளைத் தாலாட்டியது..

'இந்த அன்பு நிலைக்குமா..?'

ஏக்கமான அவளது பார்வையில் புருவங்களைச் சுருக்கினான் சித்தார்த்தன்..

"உன்னைப் பர்ஸ்ட் டைம் பார்த்தப்ப உன்கிட்ட தெரிந்த தைரியம்தான் என்னை இம்ப்ரெஸ் பண்ணுச்சு.. அந்த யாமினி எங்கே போனா..? இண்டர்வியுவுக்கு வந்தவ.. எம்.டி சீட்டில இருந்த என்னையே லெப்ட் அண்ட் ரைட் வாங்கினயேடி.. இப்ப என்னடான்னா.. மழையில நனைஞ்ச சிட்டுக் குருவியைப் போல நடுங்கிப் போய் ஒண்டற.. என்னடி ஆச்சு உனக்கு..?"

"சித்தார்த்.."

யாமினி அழுது விட்டாள்.. அவள் கண்ணீரைத் துடைத்து விட்ட சித்தார்த்தன்.. தன் கைகளுக்குள் அவள் முகத்தை ஏந்தி விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்.. அவள் விழிகளில் தெரிந்த கலக்கம் அவனை பாதித்தது.. பேச்சை மாற்ற விரும்பினவனாக..

"நீ நல்ல சின்க்கராச்சே.. பர்ஸ்ட் டைம் உன்னை மீட் பண்ணினப்ப 'ஏழுஸ்வரங்களுக்குள்..' பாட்டைப் பாடி அசத்தின.. இப்ப நடந்த பார்ட்டியிலே.. 'மறைந்திருந்தே பார்க்கும் மர்மம் என்ன..?'ன்னு என்னைக் கொக்கி போட்டு

இழுத்த.. இப்ப ஏதாச்சும் ஒரு பாட்டைப் பாடேன்.." என்றான்..

இத்தனையையும் உணக்கையாக நினைத்துச் சொன்னவன்.. சற்று முன் பாடிய அழுவாச்சிப் பாடலை மட்டும் பாடி விடாதே என்று சொல்ல மறந்து விட்டான்..

மனம் கனக்க.. முகம் துடைத்த யாமினி.. வகை தொகையாக.. அந்தப் பாடலைத்தான் பாட ஆரம்பித்தாள்..

"ஆகாயம் பூமி..

ரெண்டும் ஒன்றா..?

நீ அந்த வானம்..!

நான் இந்த பூமி..!

ஒன்றென்று யார் சொல்லுவார்..?

என்னை நானே.. கேட்கின்ற கேள்வி இது.."

'அட ராமா..!' தலையில் கை வைத்துக் கொண்ட சித்தார்த்தனை யாமினி கவனிக்கவே இல்லை..

மனம் முழுவதும் பாரமாய் கனத்துக் கொண்டிருந்த துக்கத்தை பாடல் வரிகளில் இறக்கி வைப்பதில் கவனமாக இருந்தாள் அவள்..

"சாமந்திப் பூவோ.. எட்டாத தூரம்..

ஊமத்தம் பூவோ.. என் வீட்டின் ஓரம்..

இதில் வாசம் இல்லை..

என் நெஞ்சில் பாசமில்லை..

அது பக்கம் இல்லை..

நான்கூட யோகமில்லை..

இது மேடையின்றி போடும் நாடகம்..

வானத்து மீனை

வலை போடச் சொன்னால்..

நானெங்கு போவதம்மா..?"

யாமினியின் குரலில் தெரிந்த துக்கத்தில் மலைத்துப் போனான் சித்தார்த்தன்.. அவள் தோள் பற்றி உலுக்கினான்.. எங்கோ வெறித்துக் கொண்டிருந்தவள்.. அவனுடைய உலுக்கலுக்கு மசியவில்லை.. பாடலை நிறுத்தவுமில்லை..

"வேதங்கள் எல்லாம்..

பேதங்கள் பேசும்..

நாம் வாழும் நாட்டில்..

ஏன் இந்தக் காதல்..?

இது சேரிக்காற்று..!"

யாமினியின் குரல் தேம்பி உடைந்தது.. சித்தார்த்தன்..

'என்ன கொடுமைடா இது..!' என்று சலித்துப் போனான்.. அவளுடைய துக்கத்தை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. தன்னைத் தாழ்த்திக் கொண்டு விசும்புகிறவள் யாமினிதானா என்று நம்ப முடியாத திகைப்புடன் அவளைப் பார்த்தான் அவன்..

"இது சேரிக் காற்று..!

ஊருக்கு ஆகாதம்மா..

இது ஏரித் தண்ணீர்..!

முத்துக்கள் இங்கேதம்மா..

கடல் மீனும் அந்த வானில்..

நீந்துமோ..?"

இந்தக் கேள்விக்கு என்ன பதிலைச் சொல்லுவான் சித்தார்த்தன்..? ஏண்டி நீந்தாது என்று அவள் கன்னத்தில் நான்கு அப்பு அப்பலாம்.. அது வேலைக்கு ஆகுமா..?

யாமினி கேட்ட கேள்வியில் இருந்த உண்மை அவனை தாக்கியது.. இதுபோன்ற ஆழமான சிந்தனைகளைக்

கொண்டுள்ளவளின் மனதில் உறைந்திருக்கும் நிழல்களை வெளிக் கொணர்ந்து அந்த நிழல் ஆட்ட யுத்தத்திற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுமென்ற ஆவேசம் அவனுக்குள் கிளர்ந்தது..

"நான் கொண்ட காதல்..

வேறல்ல கானல்..!

தாகத்தைத் தீர்ப்பதுண்டோ..?"

இப்போது நிஜமாகவே அறை வாங்கினாள் யாமினி..

"இது பாட்டு மாதிரித் தெரியலைடி.."

"இல்லைதான்.." யாமினி விம்மினாள்..

"என் மனசில இருந்ததை இந்தப் பாட்டு மூலமா வெளிப்படுத்தினேன்.."

"உன் மனசில அப்படி என்னதாண்டி இருக்கு..?"

"விண்ணுக்கும், மண்ணுக்கும் சம்பந்தமுண்டா..?"

"போச்சுடா.. இந்தக் கேள்வியைக் கேட்கனுமுன்னு எத்தனை நாளாடி யோசிச்ச..?"

"நான் கேட்கலை."

"வேற யார் கேட்டது..,"

சுற்று முற்றும் பார்த்தான் சித்தார்த்தன்.. நான்கு ஆள் உயரத்துக்கு உயர்ந்திருந்த காம்பவுண்டு சுவர்களைக் கொண்டிருந்த வீடுகள் நிரம்பிய தெரு அது.. ஒரு குருவியைக் கூடக் காணவில்லை..

"என் மனசுக்குள்ள ஒரு குரல் கேட்குது.." துக்கத்துடன் யாமினி சொன்ன போது..

'போச்சுடா..' என்றுதான் முதலில் நினைத்தான் சித்தார்த்தன்..

ஆனால்.. கலக்கம் நிறைந்த யாமினியின் முகத்தைப் பார்த்தபோது அந்த நினைவு அவனை விட்டு ஓடி

மறைந்தது..

நிழல் போன்ற நினைவுகள் அவளை மட்டுமா துரத்துகின்றன..? அவனைத் துரத்தவில்லையா..? அவள் மனதில் எழும் குரல்கள் அவன் மனதில் எழவில்லையா..?

'பட்.. எல்லாத்தையும் ஏறக் கட்டிட்டுத்தான நான் இத்தனை சாதனைகளையும் சாதிச்சிருக்கேன்.. இவ மட்டும் நிழலிலேயே புதைஞ்சு போனா எப்படி..?'

"அந்தக் குரல் சொல்றதிலயும் உண்மை இருக்கே.."

"என்ன உண்மையை கண்டுட்ட..?"

சித்தார்த்தன் கோபமாக கேட்டான்.. அவன் கோபத்தில் யாமினி துணுக்குற்றாள்.. அவளைச் சூழ்ந்திருக்கும் நிழல்கள் தொடுக்கும் யுத்தத்தில் அவன் அவளை விட்டு விலகிப் போய் விடுவானோ..?

அதைத்தான் தாமோதரனும் வலியுறுத்துகிறான் என்பது அசந்தர்ப்பமாக நினைவுக்கு வந்து தொலைத்தது.. யாமினி கண்ணீர் மல்க சித்தார்த்தனைப் பார்த்தாள்..

ஓர் அரசனைப் போல வெகு கம்பீரமான அழகுடன் இருந்தான் அவன்..

'இவனை இழந்தால் என்ன ஆவேன்..?'

அவள் மனம் அதிர்ந்தது... சித்தார்த்தனே சொன்னதைப் போல உன் கம்பெனியில் வேலையே வேண்டாம் என்று நிமிர்வாக வெளியேறியவள்தான் அவள்.. அந்த நிமிர்வு இப்போது எங்கே புல் மேயப் போய் விட்டது..?

"என்னை வெறுத்துருவீங்களா..?"

கலக்கத்துடன் கேட்டவளை இமைக்காமல் பார்த்தான் சித்தார்த்தன்.. அந்தப் பார்வையில் கலக்கம் பறந்தோட தைரியம் கொண்டாள் யாமினி..

"வெறுக்க முடியுமா..?"

சித்தார்த்தனின் கேள்வியில் அவளது தைரியம் வலிமை பெற்றது..

"என் மனசில ஏதேதோ குழப்பம்.."

"சரியாகிரும்.."

"சரியாகலைன்னா..?"

"இருந்துட்டுப் போகட்டும்ன்னு உன்னோட இருப்பேன்.. போதுமா..?"

அவன் இமைகளைச் சிமிட்டியதில் அவளுள் யுத்தம் புரிந்த நிழல்கள் அமிழ்ந்து போயின.. பெண்மைக்கே உரிய நாணம் வெளி வந்ததில்.. கன்னங்கள் சிவக்க..

"ச்சீ.." என்றாள் யாமினி..

"எதுக்கு இப்ப வெட்கப்படறே..?"

"இப்படியா பேசுவாங்க..?"

"எப்படிப் பேசினேன்..? உன்கூட இணை பிரியாம இருப்பேன்னு சொன்னேன்.. அது தப்பா..?"

அவன் கண்களில் சொட்டிய விசமம்.. அது தப்புத்தான் என்பதை முரசு கொட்டி அறிவித்தது.. அவளுடன் 'இருந்து' விட அவன் துடித்த துடிப்பை அவள் உடல் முழுவதும் மேய்ந்த அவன் கண்கள் சொல்லின.. அந்தப் பார்வையில் கிளர்ச்சி கொண்டாள் யாமினி.. பெண்ணென்று உணர வைக்கும் ஆண்மை ததும்பிய அவனது அருகாமையில் அவளது உணர்வுகள் ஆர்ப்பரித்தன..

"என்னடி..?" அவன் கண்களைச் சிமிட்டியதில் மிச்சம் மிதி இருந்த நிழல்களும் மறைந்து விட..

"என்னவாம்..?" என்று அவன் பாணியிலேயே உதட்டைச் சுழித்தாள் யாமினி..

"இருக்கலாமா..?"

அவனது அணைப்பு இறுகியது.. காதோரமாக கிசுகிசுத்த அவனது குரலில் மந்திரம் இருந்தது.. அவள் மயங்கிப் போனாள்.. அவளது கழுத்து வளைவில் முகத்தைப் புரட்டியவன் மூர்க்கமாக அவள்மீது புதைந்த போது.. அவளால் தடுக்க முடியவில்லை. முடிந்தவரை அவளைப்

புரட்டி எடுத்து விட்டு விடுவித்த சித்தார்த்தனுக்கு அவளைக் கூட முடியாத சூழலில் எரிச்சல் வந்தது..

"என் வீட்டுக்கு வாடி.." கெஞ்சினான்..

"வருகிறேன்.."

யாமினி சொன்னதும் உற்சாகமானவன்..

"காரைக் கிளப்பவா..?" என்று பறந்தான்..

"வெயிட்.. வெயிட்.."

"எதுக்கு இப்ப வெயிட் பண்ணச் சொல்ற..?"

"மேரேஜ்ன்னு ஒன்னு இருக்கு எம்.டி சார்.. ஊரறிய என் கழுத்தில மூணு முடிச்சைப் போட்டுட்டு.. அப்புறமா உங்க வீட்டுக்கு என்னைக் கூப்பிடுங்க.. சந்தோசமா பின்னாடியே வர்றேன்.."

"அதுக்கப்புறமா நீ என்னடி வர்றது..? நானே உன்னைக் குண்டுக்கட்டித் தூக்கிட்டுப் போயிற மாட்டேன்..?"

தீராத தாபத்தில் வாய்க்குள் முணுமுணுப்பாய் அவளைத் திட்டியபடி விலகி உட்கார்ந்தான் சித்தார்த்தன்.. கலைந்திருந்த முடியைக் காரின் கண்ணாடியில் பார்த்துச் சரி செய்த போது அவனுடைய கார் இருந்த தெருவின் முனையில் கம்பீரமாக நடந்து வந்த அந்த இளந்துறவியைக் கண்ணாடியில் பார்த்தான்..

'யார் அது..?'

அவரின் நடையின் வேகம் அவனை வசீகரித்தது.. அதுபோன்ற நடையும் காவியுடையும் பொருந்தி வராததில் அவன் யோசனையுடன் அவரைப் பார்த்தான்..

"யார் அது..? உங்களுக்குத் தெரிந்தவரா..?" யாமினி விசாரித்தாள்..

இல்லையென்று சொல்ல சித்தார்த்தனுக்கு மனம் வரவில்லை.. எங்கேயோ அவரைப் பார்த்திருப்பதைப் போல அவன் உணர்ந்தான்..

அவரைப் பார்த்திருக்கிறான்.. பேசியிருக்கிறான்.. பழகியிருகிறான்..

ஆனால் எங்கே..? புரியாமல் காரை விட்டு இறங்கி கார்க் கதவை மூடி விட்டு துறவியைப் பார்த்தான்..

அவனுக்குள் வந்த குழப்பம் அந்த துறவிக்கு வரவில்லை.. அவனையே பார்த்த வண்ணம் நடந்து வந்து கொண்டிருந்த துறவியின் தீட்சண்யம் மிகுந்த பார்வை சித்தார்த்தனைத் துளைத்தது..

இத்தனைக்கும் அந்தத் துறவி கண்ணாடி போட்டிருந்தார்.. அதையும் தாண்டிய அவரின் பார்வை வீச்சில் உறைந்து போனான் சித்தார்த்தன்..

அழகான மூக்கு.. செதுக்கி வைத்ததைப் போன்ற முக அமைப்பு.. சிவந்த நிறம்.. உயரம்.. கம்பீரமான உடல்வாகு என்று ஆளை வசீகரிக்கும் அழகுடன் திகழ்ந்த துறவி சித்தார்த்தனைப் போலவே இளைஞனாக இருந்தார்..

'இந்த வயதில் துறவறமா..?'

விவேகானந்தரைப் போல உடையணிந்திருந்தவர் சித்தார்த்தனைப் பார்த்த பார்வையை விலக்காமல் அருகில் வந்ததில் தன்னையுமறியாமல் கைகளைக் குவித்தான் சித்தார்த்தன்..

"வணக்கம்.."

பதிலுக்கு வணக்கம் சொல்லாமல் தலையசைத்து தோழமையுடன் புன்னகை புரிந்தார் அந்த இளம் துறவி..

"நலமா..?"

வெகு காலம் பழகியவரைப் போல அவர் நலம் விசாரித்ததில் ஆச்சரியமடைந்தான் சித்தார்த்தன்..

"நீங்கள் யார்..?" அவரிடமே கேட்டான்..

என்னைத் தெரிய வில்லையா என்பதைப் போல வசீகரமாக அவர் சிரித்த சிரிப்பு அவனைக் காந்தம் போலக் கவர்ந்து இழுத்தது..

அவரிடம் தெறித்து விழுந்த வசீகரத்தில் வியந்து போனான் சித்தார்த்தன்.. பார்த்தவுடன் அவர் பின்னாலே சென்று விட வேண்டும் போல ஏன் அவனுக்குத் தோன்றுகிறது..? இந்த அளவுக்கு அவனை வசீகரிக்கும் இந்த இளம் துறவி யார்..?

"யார், யார்.. யார் என்பதை காலமே அறியும்.."

புதிர் போலச் சொன்னாலும்.. அதைப் புன்னகையுடன் வசீகரமாகச் சொன்னார் துறவி..

"புரியவில்லை.."

"புரிந்து ஆகப் போவதென்ன..?"

இதையும் புன்னகையுடன்தான் அவர் சொன்னார்.. அவர் பேசப் பேச.. அவருடன் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் போல இருந்தது சித்தார்த்தனுக்கு..

அவன் காதலை மறந்தான்.. காருக்குள் அவனுக்காக காத்திருந்த யாமினியை மறந்தான்.. அவன் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி என்பதை மறந்தான்..

அத்தியாயம் - 94

விடை தெரியாத வினாக்களுக்கு..

விடை தேடுவதில் பலனில்லை..

அவனருகில் நின்ற துறவியின் ஆழ்ந்த பார்வை துளைப்பதைப் போல சித்தார்த்தனுக்குள் இறங்குவதை உணர்ந்தும் அசையாமல் நின்றான் சித்தார்த்தன்.. அவனுக்குள் சிலிர்ப்பு பரவியது.. இதுவரை உணர்ந்திராத புதியதோர் உணர்வை அந்த நொடியில் அவன் உணர்ந்தான்..

ஆழமாக ஊடுறிவிய அந்தத் துறவியின் பார்வையின் தீட்சண்யத்தில் சித்தார்த்தனின் கண்கள் கூசின.. அவர்

பார்வையை எதிர்கொள்ள முடியாமல் தடுமாறினான்.. அதை உணர்ந்தவரைப் போல மென்னகை பூத்தார் அந்த இளந்துறவி..

மெதுவாக வீசிய காற்று அவர்களைத் தழுவிச் சென்றது.. சாலையோர மரத்தின் மீதிருந்து உதிர்ந்த பூக்கள் துறவியின் மீது விழுந்ததில் பூமரம் அவர்மீது பூச்சொரிவதைப் போல பிரமித்துப் போனான் சித்தார்த்தன்..

அவனும் அவர் அருகில்தான் நிற்கிறான்.. அந்த மரம் ஏன் அவன்மீது பூக்களைச் சொரியவில்லை..? அந்தத் துறவியின் மீது மட்டும் பூக்களைச் சொரிந்ததிற்கான அர்த்தமென்ன..?

"எதையும் தேட யத்தனிக்காதே இளைஞனே..!" என்றார் துறவி..

'இளைஞனா..?' ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தான் சித்தார்த்தன்..

அவன் இளைஞன்தான்.. ஆனால்.. அவனை இளைஞன் என்று விளிக்கும் அந்தத் துறவி என்ன தடியூண்டும் தொண்டுக் கிழவரா..?

இல்லையே.. அவனுக்கு சம வயதில் இருப்பவரைப் போன்ற இளமையான தோற்றத்துடன்தானே அவர் இருக்கிறார்..?

"உடலுக்குத்தான் வயது.. மனதுக்கல்ல.." துறவியின் வார்த்தைகள் அவன் மனதின் கேள்விக்கு பதிலாக வந்தன..

'நான் மனசில நினைச்சதை இவர் எப்படித் தெரிஞ்சுக்கிட்டார்..?'

எதிரில் நின்ற துறவியைப் பார்த்தால் மாய, மந்திரம் தெரிந்தவரைப் போலத் தெரியவில்லை.. எவரிடமும் இல்லாத தேஜஸ் அவர் முகத்தில் தெரிந்தது.. ஆழ்ந்த

பார்வையுடன் கூடிய தீட்சண்யம் மிக்க விழிகள்.. அமைதியான புத்திசாலித்தனம் மிகுந்த முகபாவம்..

பார்க்கப் பார்க்கத் தெவிட்டவில்லை சித்தார்த்தனுக்கு.. அவரைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போல ஏன் அவனுக்குத் தோன்றுகிறது..?

"விடையில்லாத கேள்விகளுக்கு இவ்வுலகில் பஞ்சமில்லை இளைஞனே..!"

"ஏன் அப்படி..? விடை தேட முயன்றால்தான் என்ன..?"

"தேடினால் தொலைந்து போகும் அபாயமும் உள்ளதல்லவா..?"

"தேடாதே.. தொலைந்து போவாய்ன்னு சொல்கிறீங்களா..?"

"ஒரு வகையில் அப்படித்தான்... இதைச் சொல்வதற்கு தகுதியான நபர் என்னைத் தவிர வேறு யாருமில்லை.."

"எதனால் இப்படிச் சொல்கிறீங்க..?"

"சொல்ல நினைப்பதையெல்லாம் சொல்லி விட முடியாது.. இதில் ஆச்சரியம் என்னவென்றால்.. நான் நினைத்ததை நடத்தி முடித்தவன்.. இருந்தும் நிழலாக மறைந்து வாழ சபிக்கப் பட்டவன்.."

"இப்போதா..?"

"எப்போதோ.."

"ஏன் நீங்கள் வெளிப்படவில்லை.."

"நான் வெளிப்பட்டால் பல உண்மைகள் வெளிப்பட்டு விடும்.. பலரின் நலனுக்காக எனது நலனை பலி கொடுத்தேன்.."

"அவர்கள் உங்களைக் காக்க முன்வரவில்லையா..?"

துறவி பதிலளிக்காமல் சிரித்தார்... சிரிக்கும் போது வெளிப்பட்ட அவரின் அதீத வசீகரத்தில் ஆகர்ஷிக்கப்பட்டான் சித்தார்த்தன்.. காருக்குள் இருந்த

யாமினியைப் பார்த்தார் துறவி.. அவர் முகத்திலிருந்த சிரிப்பு மறைந்தது..

"பாவம்.." என்றார்..

சித்தார்த்தன் துணுக்குற்றான்... கார் கதவு மூடியிருந்ததில் கண்ணாடி ஜன்னலுக்குள் இருந்த யாமினியின் காதுகளில் துறவியின் வார்த்தைகள் விழுகவில்லை.. பதட்டத்துடன் துறவியைப் பார்த்தான்..

"யாரைச் சொல்கிறீங்க..?"

"உங்கள் இருவரையும்தான்.."

"ஏன்..? எதனால் அப்படிச் சொல்கிறீங்க..?"

"எதனால் என்ற கேள்வியைத் தவிர வேறு கேள்வி உன்னிடம் கிடையாதா..?"

"நீங்க பேசறது புரியலை.. எதனால்ன்னு கேட்காமல் எப்படி இருக்கிறது..?"

"புரிந்து என்ன செய்யப் போகிறாய்..?"

"ஏதாவது செய்ய முடிந்தால்தான் விசயத்தைத் தெரிந்து கொள்ளனும்னு இருக்கா..? என்னால் முடிந்ததைச் செய்வேனே.."

"உன்னால் முடியும்தான்.."

துறவியின் பார்வை வாஞ்சையுடன் சித்தார்த்தனை வருடியது... ஓர் அரசன் படைத்தளபதியைப் பார்க்கும் பார்வையாக அவர் பார்வை இருந்தது..

"நீ வல்லவன்.. போராளி..! ஆனால் இளைஞனே..! முகத்துக்கு முன்னால் நிற்கும் எதிரிகளுடன் நீ போராடலாம்.. நிழலுடன் எப்படிப் போராடப் போகிறாய்..?"

"நிழலா..?"

"ஆம்.. நிழல்தான்.. நிழல் ஆட்ட யுத்தம் தொடங்கப் போகிறது.. கத்தியினால் இல்லாமல் புத்தி சாதுர்யத்தால் நீ வெல்ல வேண்டிய யுத்தம் அது.. வெல்வாயா..?"

"நீங்க என்ன சொல்கிறீங்கன்னு எனக்குப் புரியவே மாட்டேங்குது.."

"புரிய வேண்டாம்.. புரிந்து கொள்ளவும் முயற்சிக்காதே.. விட்டு விடு.."

"எதை..?"

"என்னை.."

இதைச் சொன்ன இளந்துறவி மீண்டும் புன்னகைத்தார்.. அவரின் முகத்தின் வசீகரம் சித்தார்த்தனை ஈர்த்து அலை பாய வைத்தது..

'இவரை எனக்குத் தெரியும்.. எங்கோ இவரைப் பார்த்திருக்கிறேன்.. அது எங்கே..?'

"என்னை விடுவது சுலபமான ஒன்றுதான் இளைஞனே..! எனக்கு நெருக்கமான பலர் அதைத்தான் செய்தார்கள்.."

"சுவாமி.."

"நான் விவேகானந்தனல்ல.. அவரைப் பின் பற்றியவன்.."

அவனை ஆசிர்வதிப்பதைப் போல தன் வலக்கரத்தை அவனது உச்சந்தலையின் மீது வைத்தார் துறவி.. மின்சாரம் பாய்ந்ததைப் போன்ற உணர்வை அடைந்தான் சித்தார்த்தன்.. தன்னையுமறியாமல் விழிகளை மூடி விட்டான்.. அவன் கண் திறந்த போது துறவி அங்கில்லை..

பரபரப்பாக அவன் தேடுவதைக் கண்ட யாமினி கார்க் கதவைத் திறந்து இறங்கினாள்..

"யாரைத் தேடறிங்க..?"

சித்தார்த்தனுக்குள் அதிர்வு வந்தது.. 'தேடாதே..' என்ற துறவியின் குரல் அவன் காதுகளில் ஒலித்தது..

"இப்ப என்கூட பேசிக்கிட்டு இருந்தாரே.. அவர்தான்.."

"அவர் அப்பவே போயிட்டாரே.."

'போயிட்டாரா..?'

சித்தார்த்தனுக்குள் துக்கம் மண்டியது.. மறுபடியும் அவரைப் பார்க்க முடியுமா என்று மனம் ஏங்கியது.. முகவரி தெரியாத அவரை அவன் எங்கே சென்று தேடுவான்..?

'தேட யத்தனிக்காதே இளைஞனே..!'

ஏன் தேட யத்தனிக்கக் கூடாது..? அவர் யார்..?

"சித்தார்த்.." யாமினி பயத்துடன் அவன் தோளைத் தொட்டு அசைத்தாள்..

"ம்ம்ம்.." அலைபாய்ந்த பார்வையுடன் அவளைப் பார்த்தான் சித்தார்த்தன்..

"உங்களுக்கு என்ன ஆச்சு..? அந்தச் சாமியார் யாரு..?"

"தெரியலை யாமினி..!"

"தெரியலையா..? தெரியாமலா அவ்வளவு நேரமா நின்னு பேசிக்கிட்டு இருந்தீங்க..?"

"ம்ம்ம்.."

யாமினி வியப்படைந்தாள்.. சித்தார்த்தனும் அந்தத் துறவியும் ஒருவரை ஒருவர் பார்த்தபடி ஆழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்ததை கவனித்து விட்டு.. அவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று காருக்குள்ளேயே இருந்து விட்டவளுக்கு சித்தார்த்தன் சொன்னதைக் கேட்டதும் ஆச்சரியமாக இருந்தது..

"என்னங்க இது..? என்னமோ லவ்வர்ஸ் போல கண்ணுக்குள்ள பாத்துக்கிட்டு டீப்பாப் பேசிக்கிட்டு இருந்தீங்க.. பெர்சனலாப் பேசறப்ப நாம டிஸ்டர்ப் பண்ணக் கூடாதுன்னு காருக்குள்ளேயே நான் உட்கார்ந்திருந்தேன்.. இப்ப என்னடான்னா அவர் யாரு எவருன்னே உங்களுக்குத் தெரியாதுங்கறிங்க.. கேக்க ஆச்சரியமா இருக்கு.."

"உன்னைக் கூடத்தான் எனக்குத் தெரியாது.. ஆனா எங்கேயோ பார்த்ததைப் போல ஃபீல் வரலையா..? பர்ஸ்ட் டைம் பேசறப்பவே பழகினவங்களைப் போல நாம பேசிக்கலையா..?"

சித்தார்த்தன் படபடத்தான்.. யாமினிக்குப் புரிவதைப் போல இருந்தது.. கார் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்த சித்தார்த்தன் எதுவும் பேசாமல் அமைதியாக காரை ஓட்ட ஆரம்பித்தான்.. பக்கத்தில் உட்கார்ந்திருந்த யாமினி சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.. அவள் கையில் செல்போன் இருந்தது.. அதை நோண்டிக் கொண்டிருந்தவளின் முகம் மாறியது..

"ஏன் சித்தார்த்.. இவரைப் பார்த்தா உங்ககூடப் பேசின சாமியார் போலவே இருக்குல்ல..?"

அவள் நீட்டிய போனை காரை ஓட்டியபடி வாங்கிப் பார்த்த சித்தார்த்தன் காரை நிறுத்தி விட்டான்..

அந்த செல்போனில் இருந்த யாமினியின் பேஸ்புக் பக்கத்தில் எவரோ ஒருவர் போட்டிருந்த ஸ்டேட்டஸின் கீழ் நேதாஜியின் புகைப்படம் இருந்தது..

ராணுவ உடையில் இல்லாமல்.. சாதாரணமாக கண்ணாடியும்.. மேலே போர்த்தியிருந்த சால்வையுமாக இருந்தவரின் தீட்சண்யம் மிக்கப் பார்வை துறவியின் பார்வையாக இருந்தது..

"ஹௌ இஸ் இட் பாஸிமிள்..?"

"விடுங்க.. ஒரே மாதிரி ஏழு பேர் இருப்பாங்களாம்.."

சித்தார்த்தனால் விட முடியவில்லை.. அவன் நினைவு நேதாஜியின் புகைப்படத்தையே சுற்றிச் சுற்றி வந்தது..

அவன் பார்த்தது யாரை..? நேதாஜியின் மறுபிறவியையா..?

சித்தார்த்தனுக்கு தலை வலிக்க ஆரம்பித்தது.. ஆபிஸை கார் நெருங்கி விட்டதில் ஏக்கத்துடன் அவனைப் பார்த்தாள் யாமினி.. அந்த ஏக்கம் சித்தார்த்தனின் அலை பாய்ந்த மனதைச் சமனப் படுத்தியது..

"என்னடி..?" என்றான்..

அவன் காதலனாக மாறிப் பேசியதில் யாமினிக்குள் புத்துணர்வு உண்டானது..

"ஆபிஸ் வந்திருச்சு.."

"அது வரலை.. நாமதான் அதுகிட்டே வந்திருக்கோம்.."

"ஜோக்கு..?"

"அப்படித்தான் நினைச்சுச் சொன்னேன்.. சிரிப்பு வரலையா..?"

"வரலை.."

"நான் வரவா..?"

சித்தார்த்தன் கண் சிமிட்டினான்.. யாமினிக்குள் உயிர்ப்பு வந்தது.. இத்தனை காலமாக இந்தக் காதல் உணர்வு எங்கே ஒளிந்திருந்தது என்று மலைத்தாள் அவள்..

"வந்துட்டாலும்.."

அவள் உதட்டைச் சுழித்து அழகு காட்டியதில் அவனுக்குள் கள்ளூறும் வேகம் வந்தது..

"வந்து காட்டவா..?"

"அடங்கறிங்களா.. ஆபிஸ் வந்தாச்சு.."

"நாம வந்திட்டோம்ன்னு சொல்லு.."

"போதுமே.."

"யாமினி.."

"ம்ம்ம்.."

"ஆபிஸீக்குள்ளே போனதும் நீ செக்கரட்டரி.. நான் எம்.டின்னு மாறியாகனுமில்ல..?"

"வேற என்ன செய்கிறதாம்..?"

"எத்தனையோ இருக்கு.. எங்கே..? நீதான் அதைத் தெரிஞ்சுக்க மாட்டேன்னு அடம் பிடிக்கறயே.."

ரகசியக் குரலில் அவன் கூற.. யாமினி கன்னம் சிவந்து அவன் கையைக் கிள்ளினான்.. கிள்ளிய கையைப் பிடிக்க அவன் சரிந்த போது.. தாமோதரனின் கார் தென்பட்டது..

"தாமு வந்திட்டான்.."

உடல் விறைக்க விலகினான் சித்தார்த்தன்.. மனதுக்குள் அதிர்வை உணர்ந்தாள் யாமினி.. தாமோதரன் அவளுடைய காதலைப் பிரித்து விடுவானோ..?

சித்தார்த்தன் வேகம் கூட்டினான்.. தாமோதரனின் காரைப் பின்னுக்குத் தள்ளி அவன் கார் பாய்ந்தது..

"உங்க காரில் நானும் வந்திருக்கிறேன்கிறது தாமுவுக்குத் தெரியக் கூடாது.. அப்படித்தானே..?" சீறினாள் யாமினி..

"எதையும் குதர்க்கமாவே எடுத்துக்கக் கூடாது.. இப்பவே அவன்கூட மல்லுக் கட்டனுமா..? சொல்லு.."

"வேற எப்ப மல்லுக் கட்டப் போறிங்களாம்..?"

"நம்ம மேரேஜ் சமயத்தில மல்லுக் கட்டுவேன்.."

"மேரேஜா..? நமக்கா..? எனக்கென்னவோ அப்படியொன்னு நம்ம ரெண்டு பேருக்கும் இடையில நடக்கும்ன்னு தோணலை.."

"ஏண்டி..?"

"எனக்கு நம்பிக்கையில்ல.."

"அதுதான் ஏன்..?"

"காரில பக்கத்தில உட்கார்ந்துக்கிட்டு வர்றவ என் காதலிதான்னு சொல்லத் தைரியமில்லாதவர்.. கழுத்தில தாலியைக் கட்டப் போகிறாராம்.. நம்பவா முடியுது..?"

யாமினி கோபத்துடன் காரை விட்டு இறங்கி வேக நடையுடன் விரைந்து விட்டாள்.. அவளைச் சமாதானப் படுத்த முடியாத அலுவலகச் சூழலில் பெருமூச்சு விட்டான் சித்தார்த்தன்.. தாமோதரனின் கார் அப்போதுதான் உள்ளே நுழைந்தது..

"ஹாய் தாமு.."

உற்சாகமாக கூவியவனுக்குப் பதிலேதும் சொல்லாமல் காரைப் பார்க் பண்ணி விட்டு வந்த தாமோதரன்..

"அதுக்குள்ள காரில கூப்பிட்டுக்கிட்டு வருகிற அளவுக்கு வந்தாச்சா..?" என்று முறைத்தான்..

'இவன் என்ன என் நண்பனா..? இல்ல பெண்டாட்டியா..?'

சித்தார்த்தனுக்கு கோபம் வந்து விட்டது.. யாமினி சொல்லி விட்டுப் போயிருந்த வார்த்தைகள் அவன் மனதில் முள்ளாக தைத்திருந்தன.. அவள் சொல்லிக் காட்டியதைப் போலவே தாமோதரனும் பேசி வைத்ததில் அவன் காண்டாகிப் போனான்..

"ஆமாம்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

"என்னடா.. பேச்சு மாறியிருக்கு..?"

"ஆளே மாறியிருக்கேன்.. நீ பேச்சைப் பத்திச் சொல்ல வந்திட்ட.."

சித்தார்த்தன் வேகமாக போய் விட்டான்.. தனித்து நின்ற தாமோதரனின் முகத்தில் துயரத்தின் சாயல் படிந்தது.. பெருமூச்சுடன் அலுவலகத்தை நோக்கி நடந்தான்..

95

உன் வாழ்வைத்தான் உயர்த்தினேன்..

வேறு எதை நாடி வந்தேன்..!

உயரமான மலையிலிருந்து 'சோ'வென்ற பேரிரைச்சலுடன் வெள்ளித் தாரைகளாய் கொட்டிக் கொண்டிருந்தது அருவி..!

அதனடியில் தன் கையிலிருந்த சிவலிங்கத்தை வைக்கிறான் கதாநாயகன்.. நெற்றிக் கண்ணின் வெப்பம் தணிய நீர் வீழ்ச்சியின் அடியில் நிலை கொண்டார் சிவபெருமான்.. கூடியிருந்த கூட்டம்..

"ஆஹா..! அற்புதம்..!" என்று ஆர்ப்பரிக்கிறது..

'என்ன ஒரு படம்..!'

பிரமிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் யாமினி.. பக்கத்திலிருந்த அனுராதா அடிக்குரலில் காட்சியமைப்பு களைப் பற்றிச் சொல்லி வியந்து கொண்டிருந்தாள்.. பிரதாப்பும், யதுநந்தனும் மெல்லிய குரலில் அந்த விமரிசனத்தில் கலந்து கொண்டார்கள்..

"இதப் பாருடி.. ரோகிணியோட ஆக்சன.."

அனுராதாவின் கமெண்டிற்கு தலையாட்டியபடி திரும்பிய யாமினிக்கு உள்ளுணர்வில் ஏதோ நெருடியது.. அது என்னவாக இருக்கக் கூடும் என்ற சிந்தனையில் மனதை உழல விடாமல் திரைப்படம் ஆக்ரமித்துக் கொண்டதில் அவள் படத்தில் ஆழ்ந்தாள்..

"செம சீன்.."

யதுநந்தன் விசிலடிக்காத குறையாக சீட்டின் கைபிடியைத் தட்டினான்.. அந்தத் தட்டல் கைபிடியில் விழாமல்.. அதில் கை வைத்திருந்த யாமினியின் கைமீது விழுந்ததில் அவள் கையை உதறி..

"ஸ் ஆ.." என்றாள்..

"ஸாரி.. ஸாரி.. உன் கையைக் கவனிக்கல.. படத்தில இருந்த இண்ட்ரெஸ்டில எமோசனலா ஆகிட்டேன்.." மன்னிப்புக் கேட்டான் யதுநந்தன்..

"இதுக்குத்தான்.. உன் பக்கத்தில உட்கார மாட்டேன்னு சொன்னேன்.. அம்மாதான் கேட்கலை..."

கணவரையும் மகனையும் ஓரமாக உட்கார வைத்து.. நடுவிலிருந்த இரண்டு சீட்களில் மகளும் தானுமாக அமர்ந்திருந்த அனுராதா..

"ஏண்டி.. என்னைக்காவது ஒருநாள் படம் பார்க்கன்னு தியேட்டர் பக்கமா அத்திப் பூத்தாப்பல வந்து சேருகிறோம்.. அப்பவாச்சும் உங்க அப்பா பக்கத்தில உட்கார்ந்து படம் பார்க்கலாம்ன்னு பேராசைப் பட்டா உனக்கு அது பொறுக்கலையா..?" என்று நியாயம் கேட்டாள்..

"அது பொறுக்குதும்மா.. உங்க மகன், படத்தைப் பாத்துட்டு எம்பி எம்பி குதிச்சு என் கையைப் பதம் பார்க்கிறோனே.. அதுதான் பொறுக்கலை.." என்றாள் யாமினி..

"நீ ஞான சூன்யம்..! ரசிச்சுப் படம் பார்க்கிறவன் அப்படித்தான் பார்ப்பான்.. உன்னை யாரு சீட்டு மேல கையை வைச்சுக்கிட்டு ஒய்யாரமா படம் பாக்கச் சொன்னது..?"

"பின்னே..?"

"கைய்யி ரெண்டையும் மடிச்சுக் கட்டிக்கிட்டு படம் பார்த்துப் பழகு.." அநியாயமாக நியாயம் சொன்னாள் அனுராதா..

யதுநந்தனைப் பொறுத்த வரையில் அனுராதாவின் நியாயங்கள் இப்படிப் பட்டதாகத்தான் இருக்கும் என்ற நினைவில் சிரித்துக் கொண்டாள் யாமினி..

'கைகளை முன்னால் கட்டறதா..?'

அவளுக்கு சித்தார்த்தனுடன் பேசிக் கொண்டிருந்த போது வந்த இளந்துறவியின் ஞாபகம் வந்தது..

'அவரும் இப்படித்தானே கையைக் கட்டிக்கிட்டு நின்னாரு.. விவேகானந்தரைப் போல..'

கண் முன் ஓடிக் கொண்டிருந்த படத்தை மறந்து அந்த நாளின் நினைவுகளில் மூழ்கினாள் யாமினி..

அந்த நாளின் நெருக்கத்துக்குப் பின்னால்.. அவளுக்கும் சித்தார்த்தனுக்குமான நெருக்கம் அதிகரித்திருந்தது.. தாமோதரனைப் பற்றிய தயக்கம் தவிர்த்து யாமினியுடன் இயல்பாக பேசிப் பழகு ஆரம்பித்திருந்தான் சித்தார்த்தன்.. அவன் நினைவில் எழுந்து.. அவனுக்காக ஒப்பனைகள் செய்து.. அவனைப் பார்க்க ஆபிஸ் ஓடி.. அவனுடன் பேசிப் பழகும் மணித்துளிகளை மனதில் சேகரித்து.. அவனைப் பிரியும் ஏக்கத்துடன் வீடு திரும்பி.. மறுநாள் அவனைப் பார்க்கப் போகும் எதிர்பார்ப்புக் கலந்த இனிமையான நினைவுகளுடன் உறக்கமின்றி தவித்து.. மறுநாளின்

விடியலுக்காக காத்திருக்கும் காதலியாக மாறிப் போயிருந்தாள் யாமினி..

'இந்நேரம் அவன் என்ன செய்துக்கிட்டு இருப்பான்..? என்னை நினைப்பானா..?'

யாமினிக்கு சித்தார்த்தனைப் பார்க்க வேண்டும் போல இருந்தது.. அவர்களது உறவிற்கு எதிர்காலம் இருக்கிறதோ.. இல்லையோ.. அதைப் பற்றி அவளுக்குக் கவலை இல்லை.. அன்றைய நொடியில் அவளுடைய சித்தார்த்தனாக அவன் இருக்கிறான்.. அது ஒன்றே போதுமென்று அவளுக்குத் தோன்றி விட்டது..

"வாவ்.."

சித்தார்த்தனின் நினைவில் கைபிடியில் கையை வைத்து விட்ட யாமினி.. யதுநந்தனின் அடியை வாங்கினாள்..

"ஸ்ஆ..! ஏண்டா எருமை மாடே..! படம் பாத்தா பக்கத்தில இருக்கிறவங்களோட கையை நொறுக்கனும்னு சட்டம் கிட்டம் இருக்காடா..?" யதுநந்தனிடம் சண்டைக்குப் போனாள்..

"இந்தா பாரு.. உன்னைத்தான் கையை மடிச்சுக் கட்டிக்கிட்டுப் படம் பார்க்கச் சொல்லி அம்மா சொல்லிட்டாங்கள்ல.. அப்புறமும் என்ன அலுவலுக்கு கைபிடி மேல கையை வைச்ச..?"

"அடப்பாவி..! கையை வைக்கத்தாண்டா கைபிடி இருக்கு.. நீ அடிச்சு முறிக்கிறதுக்காக இல்லடா.."

"ஐ டோன்ட் நோ சிஸ்டர்...! படம் பாக்கிற இண்ட்ரெஸ்டில சில பல சேதாரங்கள் ஆகத்தான் செய்யும்.. நீதான் உன் கையைப் பத்திரமாப் பாத்துக்கனும்.. நான் உன் கைக்கு கேரண்டி கொடுக்க முடியாது.."

"ஆமாண்டா.. என் கையென்ன மிக்ஸியா..? நீ கேரண்டி கொடுக்கிறதுக்கு.. ஒழுங்கா மரியாதையா.. அடக்க ஒடுக்கமா சீட்டில அடங்கி உட்கார்ந்து படம் பாரு.."

"அது ஆம்பளைக செய்யற வேலையில்ல.. ஹ..!"

"உனக்குத் திமிர்டா.."

"ஆண்பிள்ளைங்கிற திமிர்.. அதையும் சேத்துச் சொல்லு.."

"உன்னை.." யாமினி பல்லைக் கடித்தாள்..

"என்னை..?" யதுநந்தன் எடுத்துக் கொடுத்தான்..

"திருத்தவே முடியாதுடா.."

"அதை வாரவ பார்த்துக்குவா.. உனக்கெதுக்கு அந்தக் கவலை.."

"பாவம் அவ.."

"எவ..?"

"உனக்கு வாக்கப்பட்டு வரப் போறவ.."

அண்ணனும் தங்கையும் சன்னக்குரலில் சண்டையிட்டுக் கொண்டிருக்க.. தலையில் அடித்துக் கொண்டு குறுக்கே வந்தாள் அனுராதா..

"ஏய்ய்..! இது சினிமா தியேட்டர்.. வீடு இல்லை.. படம் பார்க்க வந்திருக்கோம்.. திரையில படம் ஓடிக்கிட்டு இருக்கு.. நம்மைச் சுத்தி ஆளுகளா இருக்காங்க.. வாயை அடக்கிக்கிட்டு படத்தைப் பாக்கறீங்களா.. இல்லை.. ஆளுக்கு ஒன்னு போடவா..?"

"ம்மா.. இவன் பண்ற அநியாயத்தை ஏன்னு கேக்கவே மாட்டீங்களா..?"

"நீயேண்டி அவன் வம்புக்குப் போகிற..?"

"இது அநியாயம்மா... படத்தை ரசிக்கிறேன் பேர்வழின்னு என் கையை ஒடிச்சுக்கிட்டு இருக்கிறான்.. அதை ஏன்னு கேக்க மாட்டீங்களா..?"

"நீயேண்டி அவன் அடிக்கிற இடத்தில கையை வைச்சுக்கிட்டு இருக்கிற..? கையைக் கட்டிக்கிட்டு உட்காருன்னு சொன்னேனா இல்லையா..?"

'இது வேலைக்கு ஆகாது..'

வெறுத்துப் போனவளாக கைகளை மடித்துக் கட்டிக் கொண்டு படம் பார்க்க ஆரம்பித்தாள் யாமினி.. திரையில் போர்க்களம் விரிந்தது.. என்ன வியூகம் வகுக்க என்ற ஆலோசனைக்கு..

"திரிசூல வியூகம்.." என்று யோசனை சொன்னான் கதாநாயகன்..

திரிசூல வியூகம் எப்படியிருக்கும் என்பதைப் படத்தின் காட்சி அமைப்புக்கள் விவரித்தன.. சுவராஸ்யமாக படத்தைப் பார்த்துக் கொண்டிருந்த யாமினியின் மடிக்கப் பட்டிருந்த கைகளைத்தட்டி..

"பேஷ்..! பேஷ்..! ரொம்ப நன்னாயிருக்கு.." என்று ஆர்ப்பரிக்க ஆரம்பித்தான் யதுநந்தன்..

"இப்ப என்னம்மா சொல்கிறீங்க..?"

யாமினி படத்தை மறந்து அனுராதாவிடம் பஞ்சாயத்து வைத்தாள்.

"அடடா..! என்னவோ கைப்புள்ளைக ரெண்டைக் கக்கத்தில வைச்சுக்கிட்டுப் படம் பார்க்கிறதைப் போலவே இருக்கு.." அலுத்துக் கொண்ட அனுராதா.. மகளைப் பார்த்துக் கேட்டாளே ஒரு கேள்வி..!

"நீயேண்டி.. அவன் அடிச்சா அடிபடற தூரத்தில கையைக் கட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்க..?"

"ம்மா.. இது அராஜகம்..! வேற என்ன செஞ்சிருக்கனும்னு நீங்களே சொல்லுங்க.."

"பேசாம அடியை வாங்கிக்க.."

மகளுக்கு ஆலோசனை சொல்லி விட்டு 'வேலை முடிந்தது..' என்று புறமுதுகு காட்டித் திரும்பி உட்கார்ந்து படம் பார்க்க ஆரம்பித்து விட்டாள் அனுராதா..

"தூள்..!"

யதுநந்தன் உற்சாகத்துடன் அடிக்க வந்தான்.. படத்தை பார்ப்பதை விட்டு விட்டு.. அவன் கையைப் பார்த்தபடி

உஷாராக காத்திருந்த யாமினி.. அவன் கையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள்..

"கையை விடு.."

"மாட்டேன்.. விட்டா நீ என் கையை ஒடிச்சிருவ.."

"சின்ன அடியைக்கூட நீ தாங்க மாட்டியா..?"

"சரிதான்.. அடி வாங்கறது என் கைடா.. உன் கையில்ல.."

"ஓகே.. ஓகே.. இனி உன் பக்கம் என் கை வராது.."

"என்ன கேரண்டி..?"

"உன் கையே மிக்ஸியில்லேங்கிறப்ப.. நான் மட்டும் மிக்ஸியாகிருவேனா..? கேரண்டிங்கிற பேச்சுக்கே இங்கே வேலையில்ல தொங்காச்சி.."

"சரிடா நொண்ணா.."

யது நந்தனிடம் வழக்கடித்தபடி யதேச்சையாக பக்கவாட்டிலிருந்த வரிசையைப் பார்த்த யாமினிக்கு தூக்கி வாரிப் போட்டது..

அங்கே கோட்டும் சூட்டுமாக.. ரேமண்ட் கம்பெனியின் விளம்பர மாடலைப் போல அமர்ந்திருந்த மனிதன் யாமினியையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவனின் ஆழ்ந்த பார்வை திரையரங்கின் மெல்லிய வெளிச்சத்திலும் யாமினியை துளைத்தது..

அந்தப் பார்வையைத்தான் யாமினியின் உள்ளுணர்வு உயர்த்தியிருக்கிறது..

'யார் அவன்..?'

யாமினி அவனைப் பார்ப்பதைத் தவிர்த்தாள்.. யதுநந்தனின் அடியை மறந்து... ஓரக்கண்ணால்.. பக்கவாட்டு வரிசையில் இருக்கிறவன் அவளைப் பார்க்கிறானா என்று கண்காணித்தாள்.. அவன் அவளையே தான் பார்த்துக் கொண்டிருந்தான்..

'என்னடா இது..' யாமினிக்கு வியர்க்க ஆரம்பித்து விட்டது..

அவனுடைய பார்வையில் விகல்பமில்லை.. பாசம் இருந்தது.. அது யாமினியைக் குழப்பியது.. தவறாகப் பார்த்தால் அவன் பார்வையைத் தவிர்த்து விடலாம்.. வெறும் பார்வைக்கு யதுநந்தனிடம் புகார் சொல்ல முடியாது.. அப்படிச் சொல்லி விட்டால் யதுநந்தன் சும்மா விட மாட்டான்.. பார்ப்பவனைப் புரட்டி எடுத்து விடுவான்.. எதற்கு வம்பு என்று சினிமாவைப் பார்க்க ஆரம்பித்து விடலாம்..

அப்படியில்லாமல் அவன் பார்வை ஆழ்ந்த பார்வையாக.. பாசத்தை யாசிக்கும் பார்வையாக இருந்ததில் யாமினிக்கு என்னவோ போல இருந்தது..

'ஏன் இப்படிப் பார்க்கிறான்..? இவன் யார்..? நான் யார்..?'

அந்த மனிதனுக்கு பிரதாப்பின் வயதுதான் இருக்கும்.. அப்பாவைப் போன்ற வயதில் இருப்பவனின் பார்வையில் தெரியும் விகல்பமில்லாத பாசத்தின் அர்த்தம் என்ன என்று புரியாமல் அலை பாய்ந்தாள் யாமினி..

அதற்குள் அவளை நான்கைந்து முறை நொறுக்கி எடுத்து விட்ட யதுநந்தன் அவள் சண்டைக்கு வராததில் ஆச்சரியமானவனாக.. தங்கையைப் பார்த்தான்.. அவள் படத்தைக் கவனிக்காமல் யாரோ ஒரு மனிதனைக் கவனித்துக் கொண்டிருந்ததைக் கவனித்தவனுக்கு சினிமா மறந்து போனது..

"என்ன யாமினி..?" கோபமாக கேட்டான்..

"ஒன்னுமில்லை.." யாமினி மறைத்தாள்..

"அந்த ஆளு யாரு..?"

"யாருக்குத் தெரியும்..?"

"உனக்குத் தெரியாதா..?"

"தெரியாது.."

"வாட்..? அன்நோன் பெர்சனா உன்னை உத்து உத்துப் பாத்துக்கிட்டு இருக்கான்..?"

யதுநந்தன் கோபத்துடன் பார்த்த போது அந்த மனிதன் உட்கார்ந்திருந்த சீட் காலியாக இருந்தது..

"ஓடிட்டான்.. பேடிப்பயல்..!" யதுநந்தன் கோபத்துடன் முணுமுணுத்தான்..

'பேடின்னு சொல்லாதே..'

ஏனோ யாமினிக்கு அழ வேண்டும் போல இருந்தது.. அந்த மனிதனின் பார்வையிலிருந்த பாசமும், ஏக்கமும், கோரிக்கையும் அவள் மனதைத் தாக்கின.. அவளிடம் அவன் வேண்டுவது எதை என்று யோசித்தாள் அவள்..

"நம்ம அப்பா வயசு இருக்கும் போல.. மகளைப் போல இருக்கிற உன்னைப் பாக்கிற பார்வையைப் பாரேன்.. பொறுக்கி..!"

"அண்ணா..! ப்ளீஸ்.."

யாமினி தலையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சியதில் யதுநந்தன் பேச்சை நிறுத்தி விட்டு படத்தைப் பார்க்க ஆரம்பித்தான்.. தங்கைக்கு சங்கடம் என்ற நினைவு அவனுக்கு.. யாமினிக்கோ தலையில் வண்டு குடைவதைப் போல இருந்தது..

"என்னடா இப்புடி பொசுக்குன்னு முடிச்சுட்டாங்க..?"

"செகண்ட் பார்ட் வரப் போகுதும்மா.."

"வரட்டும்டா.. அதுக்காக இப்படியா தலையு மில்லாம.. வாலுமில்லாம படத்தை முடிக்கனும்..? சஸ்பென்ஸ் தாங்கலை.."

"அதுதானே அவங்களுக்கு வேணும்..? இப்ப எப்படா செகன்ட் பார்ட் ரிலிஸாகும்ன்னு நீங்கள்ளாம் காத்திருப்பீங்களா இல்லையா..?"

"இந்த டிரிக்கையெல்லாம் சீரியலிலதானடா யூஸ் பண்ணுவாங்க..? இப்ப சினிமாக்கும் கொண்டு வந்திட்டாங்களா..?"

ஆற்றாற்றுப் போனாள் அனுராதா.. படம் முடிந்து வெளியேறிய கூட்டத்தில் ஒருத்தியாக கலந்து வெளியே வந்து கொண்டிருந்த யாமினியின் கண்களில் தியேட்டரின் வாசலில் நின்றிருந்த அந்த மனிதன் தென்பட்டான்..

'மிஸ்டர்.. எக்ஸ் வீடு போய் சேரலையா..? இங்கேயே நின்னுக்கிட்டு இருக்காரா..? எதுக்கு..?'

அவன் பார்வை அவளுக்காக என்றது.. ஒரு யாசகனைப் போல அவளிடம் இறைஞ்சிய பார்வையுடன் வெளிநாட்டுக் காரின் மீது சாய்ந்து நின்றிருந்தான் அந்த மனிதன்..

'பாத்தா கோடிஸ்வரனைப் போலத் தெரியுது.. அப்புறம் எதுக்கு பிச்சைக்காரனைப் போல பாத்துக்கிட்டு நிக்கிறான்..?'

யதுநந்தன் பார்க்கிங் பிளேசில் இருந்து காரை எடுத்து வரப் போயிருந்தான்.. படத்தைப் பற்றி விமிர்சித்தபடி காருக்காக மற்ற மூவரும் காத்து நின்றார்கள்.. யாமினி அந்த மனிதன் நின்று கொண்டிருக்கிறானா என்று பார்த்தாள்..

அவன் இல்லை..

'போய் விட்டான் போல..'

அவன் இறைஞ்சுவது எதை என்ற குழப்பத்துடன் குடும்பத்தினருடன் காரில் ஏறிக் கொண்டாள் யாமினி.. வீட்டை நோக்கி விரைந்த காரின் பின் சீட்டிலிருந்தவள் தற்செயலாக திரும்பிப் பார்த்தபோது.. அந்த மனிதன் சாய்ந்து நின்றிருந்த கார் அவர்களின் காரைத் தொடர்ந்து வருவதைக் கண்டாள்.. காருக்குள் அந்த மனிதன் இருந்தான்..

அத்தியாயம் - 96

எனைத் தேடும் இந்தக் குரல்..

எங்கேயோ கேட்ட குரலா..?

"என்னத்தடி பார்க்கிற..?"

அனுராதா அதட்டியதில் நேராக உட்கார்ந்து கொண்டாள் யாமினி.. மனது திரும்பவும் திரும்பிப் பார் என்றது.. மனதின் குரலை லட்சியம் செய்யாமல் இருக்க முயன்றாள்.. அனுராதாவின் முறைப்பு என் கேள்விக் கென்ன பதிலென்று கேட்க..

"ச்சும்மா.. வேடிக்கை பார்த்தேன்ம்மா.." என்றாள்..

"இதென்னடி வேடிக்கையாய் இருக்கு.. எல்லோரும் கார் கண்ணாடிக் கதவுக்கு வெளியிலே சைடில வேடிக்கை பார்ப்பாங்க.. இல்லேன்னா.. முன்னாடி தெரியற ரோட்டை வேடிக்கை பார்ப்பாங்க.. இவ என்னடான்னா கழுத்தைத் திருப்பி.. அது வலிச்சா வலிக்கட்டும்ன்னு பின்னாடி வேடிக்கைப் பார்க்கிறாளாம்.. என்ன கொடுமைடா யதுநந்தா..!"

"சொல்லாதீங்கம்மா.. முடியல.."

யதுநந்தனின் இடக்கில்.. இதற்குத்தானே ஆசைப்பட்டாய் யதுநந்தனா என்ற பார்வையை வீசி வைத்தாள் யாமினி..

"இப்படித்தான் அன்னைக்கு ஒரு நாளு.."

அனுராதா ஆரம்பித்தாள்.. யாமினி அந்த ஒரு நாளில் என்ன பித்துக் குளித்தனத்தைச் செய்தாள் என்பதை அவள் விவரிக்க.. யதுநந்தன் விழுந்த விழுந்து சிரித்தபடி காரோட்டியதில்.. காரானது மது அருந்தியதைப் போலத் தள்ளாடி ரோடின் இரு பக்கமும் ஓடி பின்னால் வந்த கார்களைச் சோதித்து வைத்தது..

"ஏண்டி..?"

பிரதாப்பின் கோபத்தில் நீ அடங்கவே மாட்டாயா என்ற கேள்வியும் தொக்கி நின்றது..

அனுராதா சுதாரித்தாள்.. யதுநந்தனுக்கு உற்சாகம் கொப்பளித்தால் என்னவெல்லாம் சேதாரம் ஆகுமென்று அவன் பிறந்ததிலிருந்து கண்டுணர்ந்திருந்ததால் வாயை மூடிக் கொண்டு சீட்டில் சாய்ந்து உட்கார்ந்தாள்..

"அப்புறம்..?" தூண்டினான் யதுநந்தன்..

"சப்புரம்..! ரோட்டைப் பார்த்து வண்டியை ஓட்டுடா.." பிரதாப் அதட்டினார்..

"ஹலோ அப்பா..! நான் உங்களுக்கு டிரைவரில்ல.."

"தெரியுது.. டிரைவரா இருந்தா இந்நேரத்துக்கு சீட்டைக் கிழிச்சிருப்பேன்.."

மகனிடம் அது முடியவில்லையே என்ற பிரதாப்பின் ஆற்றாமை அவரையும் அறியாமல் வெளிப்பட்டு விட..

"என்ன சொன்னீங்க..?" என்று பாய ஆரம்பித்து விட்டான் யதுநந்தன்..

யாமினியும் சரி.. அனுராதாவும் சரி.. யதுநந்தனின் கோபத்தைத் தணித்து சண்டையை நிறுத்த முற்பட வில்லை.. ஏன் பிரதாப்பே வாயை அடக்கிக் கொண்டு உட்கார்ந்திருப்போம் என்றில்லாமல் மகனிடம் கூடப்கூடப் பேசி சண்டையை வளர்த்தார்.. அதற்கு வலுவான காரணம் ஒன்று இருந்தது..

அந்தக் காரணமாகப்பட்டது யாதெனில்.. யதுநந்தனுக்கு உற்சாகம் வந்தால்தான் அவன் எம்பி எம்பிக் குதிப்பான்.. காரும் ரோட்டின் இருபக்கமும் மாறி மாறி ஓடி நாட்டியம் ஆடும்.. கோபம் வந்து விட்டால் விறைப்பாக உட்கார்ந்து விடுவான்.. காரும் படுவேகத்தில் சீராக ஓடி வைக்கும்..

"வீடு போய் சேரனும்டி.."

அனுராதா முணுமுணுத்ததில் யாமினிக்கு சிரிப்பு வந்தது.. அதைப் பார்த்து விட்ட யதுநந்தனின் கோபம் இடம் மாறியது.. பிரதாப்பை விட்டு விட்டு யாமினியை அவன் காய்ச்ச ஆரம்பித்ததில் பின் தொடர்ந்து வந்த காரை மறந்து விட்டாள் யாமினி.. அண்ணனும் தங்கையும் அடித்துக் கொண்டதை விலக்கி விடாமல் தாயும், தந்தையும் வேடிக்கை பார்க்க.. ஒரு வழியாக கார் வீட்டுக் காம்பவுண்டில் நுழைந்து போர்டிகோவில் நிலை கொண்டது..

"அப்பாடி..!"

நிம்மதிப் பெருமூச்சுடன் காரை விட்டு இறங்கினாள் அனுராதா.. அண்ணனுடன் நடந்த சண்டையை தற்காலிகமாக நிறுத்தி வைத்து விட்டு உடை மாற்றப் போனாள் யாமினி.. அவள் திரும்பி வந்த போது..

"ஹா.. ஹா.." என்று தரையில் புரண்டு கொண்டிருந்தான் யதுநந்தன்..

"இப்ப என்னவாம்..?" தாயிடம் ரகசியமாக வினவினாள்..

"டி.வியைப் பாரு.." தோசைக் கல்லில் தோசை மாவை ஊற்றியபடி சொன்னாள் அனுராதா..

டி.வியில் காமெடி ஷோ ஓடிக் கொண்டிருந்தது.. அதை ஒன்றாக உட்கார்ந்து ரசித்துக் கொண்டிருந்த பிரதாப்பையும், யதுநந்தனையும் பார்த்தபோது யாமினிக்கு மன நிறைவாக இருந்தது.. அனுராதாவைப் பார்த்தாள். இதுதான் குடும்பம் என்ற ரீதியில் அவள் புன்னகைத்தாள்.. யாமினி யதுநந்தனின் பக்கத்தில் உட்கார்ந்து தானும் சிரிப்பில் கலந்து கொண்டாள்..

பார்த்து விட்டு வந்த படத்தைப் பற்றிய விமரிசனங்களோடு இரவு உணவு முடிந்தது.. எல்லோரும் அவரவரின் ரூமுக்கு என்று உறங்கப் போனார்கள்.. யாமினி கட்டிலில் சரிந்து கண் மூடப் போன போது.. அவளது காதுக்கு அருகாமையில்..

"நந்தினி..! நந்தினி..!" என்ற அழைப்பு கேட்டது..

"யார்..? யார் அது..?"

பதறிப் போய் எழுந்த யாமினி அறை விளக்கைப் போட்டாள்.. ஒளிர்ந்த ஒளி வெள்ளம் அறையில் யாருமில்லை என்று சொன்னதில் அவளுக்கு வியர்த்து விட்டது..

ஏஸி ஓடிக் கொண்டிருந்த அறையில் வியர்த்து வழிந்ததில் அதுவரை உணராத அச்சத்தை உணர்ந்தாள் யாமினி.. அறை விளக்கை அணைக்க யோசனையாக இருந்தது..

'இது நான்தானா..?'

இந்த எண்ணம் உதித்ததும் சட்டென அறை விளக்கை அணைத்து விட்டுப் படுத்து விட்டாள்.. மறுபடியும் அந்தக் குரல் தெளிவாக காதுக்குப் பக்கத்தில்..

"நந்தினி..! நந்தினி..!" என்று கூப்பிட்டது..

இப்போது யார் அது என்று கேட்காமல் அசைவின்றி படுத்திருந்தாள் யாமினி.. விழித்த விழிகள் அறையைச் சுற்றிப் பார்வையைச் சுழல விட்டன.. கண்ணாடி ஜன்னலை மறைத்திருந்த திரை விலகியிருந்தது.. யாமினிதான் விலக்கியிருந்தாள்.. படுப்பதற்கு முன்னால் எப்போதும் ஜன்னல் திரையை இழுத்து மூடி விட்டுத்தான் படுப்பாள்.. அன்று அசதியாக இருந்ததில் அப்படியே படுத்து விட்டாள்..

கண்ணாடி ஜன்னலில் ஓர் நிழலுருவம் படிந்திருந்தது.. யாமினியின் தொண்டை உலர்ந்தது..

'பயப்படாதே..' தனக்குள் சொல்லிக் கொண்டாள்..

இதுபோன்ற அமானுஷ்ய நிகழ்வுகளை அவள் சந்திப்பது புதிதா என்ன..?

சத்தமில்லாமல் எழுந்து சென்று கண்ணாடி ஜன்னலைத் திறந்தாள்.. அங்கே.. தியேட்டரிலிருந்து அவளைத் தொடர்ந்து வந்த அந்த மனிதன் நின்று கொண்டிருந்தான்.. யாமினி சத்தம் போட வாய் திறந்த போது..

"பொறு மகளே..!" என்றான்..

அவனுடைய செந்தமிழுக்கும் அவன் உடுத்தியிருந்த கோட், சூட்டிற்கும் பொருத்தமில்லாமல் இருந்தது..

"சப்தம் எழுப்பாதே.. நான் உனது தந்தை..!"

"என்னது..?"

"ஆம் மகளே..! நான் உனது தந்தையேதான்.."

"லுக் மிஸ்டர்..! இந்த புருடா விடுகிற வேலையை யெல்லாம் வேற எங்கேயாவது போய் வைத்துக்க.. என்னோட அப்பா இந்த வீட்டில்தான் நிம்மதியா தூங்கிக்கிட்டு இருக்கார்.."

"பிரதாப்பையா சொல்கிறாய்..?"

"எனக்கு நல்லா வந்திரும் வாயில.. என்னோட அப்பான்னு சொன்னா அது அவர்தானே.. இதில பிரதாப்பையா சொல்கிறன்னு விளக்கம் என்ன வேண்டிக் கிடக்கு..?"

"இல்லை மகளே..! என் கேள்வியின் பொருளே வேறு.."

"முதல்ல ஒழுங்காப் பேசுங்க.. இதென்ன.. சரித்திர கால டிராமா டயலாக் மாதிரி கொடுந்தமிழில பேசி இம்சை பண்றீங்க..?"

"ஹா.. ஹா.. நகைச்சுவையாக பேசுகிறாய் மகளே..!"

"தேவைதான் எனக்கு.. யார் சார் நீங்க..? தியேட்டர்ல என்னன்னா படம் பாக்க விடாம உத்து உத்துப் பாத்துக்கிட்டு இருந்தீங்க.. எங்க காரை ஃபாலோ பண்ணிக்கிட்டு வீடு வரைக்கும் வந்திருக்கீங்க.. இப்ப என்னடான்னா என்னோட ரூம் ஜன்னல் பக்கத்தில

நைட் டயத்தில நின்னுக்கிட்டு இருக்கீங்க.. பாத்தா ஜெண்டில்மேன் மாதிரி தெரியறீங்க.. பட், பண்றதெல்லாம் பொறுக்கி வேலையாயில்ல இருக்குது..?"

யாமினி படபடத்தாள்.. அவளுடைய பேச்சினால் பாதிக்கப்படாதவனாக நின்றிருந்த அந்த மனிதனின் முகத்தில் வட இந்திய சாயல் தெரிந்தது..

'இந்திக்காரனைப் போல இருக்கான்.. இத்தனை தெளிவா செந்தமிழைப் பேசறான்..'

அனுராதாவைக் கூப்பிடலாமா என்று யோசித்தாள் யாமினி.. அவள் வந்தால் வந்திருப்பனைச் சும்மா விட மாட்டாள்.. வண்டை, வண்டையாக கேட்டு விட்டு யதுநந்தனைக் கூப்பிட்டு வந்திருப்பனைப் துவைத்துக் கிழித்துப் பிழிந்து தெருவோரத்தில் குவித்து விட்டு வரச் சொல்லி விடுவாள்..

"எங்கம்மாவைக் கூப்பிட்டேன்னா தெரியும் சேதி.. உங்களை உண்டு இல்லைன்னு ஆக்கிடுவாங்க.. பேசாம வந்த வழியைப் பாத்து ஓடியே போயிருங்க.."

"எதற்காக இத்துனை கடுமை மகளே..?"

"ஈஸ்வரா..! இது தேறாத கேஸாயில்ல இருக்குது.. யோவ்.. உன் முகத்தப் பாத்தா திருட வந்தவனைப் போலத் தோணலை.. மகளேன்னும் கூப்பிட்டுத் தொலைக்கிற.. அதான் வெறுமனே நின்னு பேசிக்கிட்டிருக்கேன்.. வேற மாதிரி என் மனசுக்குப் பட்டிருந்ததுன்னா நடக்கறதே வேற.. போலிஸீக்கு போன் பண்ணியிருப்பேன்.. ஓடிப் போயிரு.."

"சென்ற பிறவிகளில் நான் ஓடி ஒளிந்தது போதாதா மகளே..? இப்பிறவியிலும் அதைச் செய்ய வேண்டுமா..?"

'என்னடா இது..!' என்று ஆகி விட்டது யாமினிக்கு..

எவனோ ஒரு பைத்தியக்காரன் இப்படியா அவள் வீடு தேடி வந்து உயிரை எடுப்பான்..?

"ஊஹூம்.. நீ நல்ல வார்த்தையாப் பேசினா இடத்தைக் காலி பண்ண மாட்ட.. எங்க வீட்டில இருக்கிற அத்தனை பேரையும் எழுப்பி விட்டாத்தான் சரிப்படுவ.."

யாமினி 'அம்மா..' என்று கூப்பிட வாய் திறந்த போது..

"உனது தந்தையான இந்த வீரபாண்டியனை மறந்து விட்டாயா நந்தினி..?" என்று அந்த மனிதன் பரிதாபமாக கேட்டான்..

யாமினியின் திறந்த வாய் ஒலியெழுப்ப மறந்து மூடிக் கொண்டது.. அவளது விழிகள் விரிந்தன.. மனக் கண்ணில் புகையாய் சில காட்சிகள் தெரிந்தன.. அதை உணர்ந்து கொண்டவனைப் போல அந்த மனிதன் பேச ஆரம்பித்தான்..

"உன் முற்பிறவியில் நீ வீரபாண்டியனின் மகளாகப் பிறந்திருந்தாய் மகளே..! நானே வீரபாண்டியன்..! அந்தப் பிறவியில் உனது நாமம் நந்தினி என்பதாகும்.. எனைக் கொன்ற ஆதித்த கரிகாலனை நீ கொன்று பழி வாங்கினாய்.."

"என்னது..? நான் கொன்றேனா..?"

"ஆம் மகளே..! நீதான் கொன்றாய்.. எனக்காக கொன்றாய்.. உன் கண் முன்னால் எனைக் கொன்ற ஆதித்த கரிகாலனை நீ கொன்று பழி தீர்த்து எனக்குப் பெருமை சேர்த்தாய் மகளே..!"

"இல்லை.. நீ பொய் சொல்கிற.."

"உன் மனதைக் கேட்டுப் பார்.. அது சொல்லும்.. காஞ்சியில் இருந்த ஆதித்த கரிகாலனுக்கு லிகிதம் வரைந்து நீதான் அழைத்தாய்.. அவனைக் கொன்று பழி தீர்த்தாய்.."

"இப்ப போகப் போறியா.. இல்லையா..?"

"மகளே..!"

"இன்னும் கொஞ்சம் நேரம் நீ இங்கே நின்னா உன்னைக் கொன்று பழி தீர்த்திருவேன்.. போடா.."

யாமினி வெறி பிடித்ததைப் போலக் கத்தியதில் வீடு விழித்து எழுந்தது.. மற்ற அறைகளில் விளக்குகள் எரிய ஆரம்பித்தன.. யாமினியின் அறைக் கதவு தட்டப் பட்டது..

"யாமினி.. யாமினி.."

கலவையான குரல் ஒலிகளில் அந்த மனிதன் பின் வாங்கினான்.. வேகமாக போய் விட்டான்.. யாமினி பாய்ந்து அறைக் கதவைத் திறந்தாள்.. வெளியே பிரதாப்பும், அனுராதாவும் நின்றிருந்தார்கள்.. யதுநந்தன் வாசல் கதவைத் திறந்து வெளியே போய் பார்த்து விட்டு வந்தான்..

"அம்மா.."

யாமினி அனுராதாவைக் கட்டிக் கொண்டாள்.. பிரதாப் பக்கத்தில இருக்கும் போது அவள் அப்பாவைத் தேடாமல் அம்மாவைத் தேடி ஒன்றிக் கொண்டதில் அனுராதாவின் தாய் மனம் நெகிழ்ந்து போனது..

"என்னடிக் கண்ணு..? என்னம்மா ஆச்சு..? ஏன் பயப்படற..?"

மழையில் நனைந்த சிட்டுக் குருவியைப் போல நடுநடுங்கிக் கொண்டிருந்த மகளை அணைத்துக் கட்டிலில்

உட்கார வைத்தாள் அனுராதா.. அவள் கையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் யாமினி..

"என்னைத் தனியா விட்டுட்டுப் போயிராதீங்கம்மா.."

அதுவரை அறிந்திராத மகளின் பயத்தில்..

"யது..! என்னடா இது..?" என்று அழுது விட்டாள் அனுராதா..

"வீட்டுக்குப் பக்கத்தில கார் கிளம்பிப் போன சத்தம் கேட்டதும்மா.. இவ எதையோ கண்டு பயந்திருக்கா.. என்னன்னு சொல்லு யாமினி.."

யதுநந்தன் வற்புறுத்தினான்.. யாமினி பதில் சொல்ல முடியாமல் மனதுக்குள் மறுகினாள்.. எப்படிச் சொல்லுவாள்..? இனம் புரியாத மனபிரமைகள் நிழல் உருவங்களாக அவள் மனதில் உலா வந்து கொண்டிருக்கும் போது வந்து போன மனிதன் சொல்வதெல்லாம் பொய்யென்று எப்படிச் சுட்டு விரல் நீட்டிக் குற்றம் சாட்டுவாள்..?

'எதையோ கண்டு பயப்படலைண்ணா.. அவன் சொன்னதைக் கேட்டுப் பயந்து போயிருக்கிறேன்..'

சொல்லி அழ வேண்டும் போல இருந்தது.. சொன்னால் கேட்டுக் கொள்ள பிரதாப் இருக்கிறார்.. நான்கு திட்டு திட்டினாலும் யோசித்து யோசனை சொல்ல அனுராதா இருக்கிறாள்.. கேலி செய்தாலும் அவளைக் காவல் காக்க யதுநந்தன் இருக்கிறான்..

ஆனால் சொல்லி அழ முடியவில்லையே.. அது ஏன்..?

"என்னைத் தனியே விட்டுட்டுப் போயிராதீங்கம்மா.."

யாமினியின் கெஞ்சலில் அனுராதாவின் கண்ணீர் அதிகரித்தது..

"இப்படிக் கெஞ்சறாளேடா.. பயம்ன்னா கிலோ என்ன விலைன்னு கேட்பாளேடா.. அர்த்த ராத்திரி ஜாமத்திலே கடலோரமா போய் நின்னுட்டு வருவாளேடா.. கொஞ்சம் கூட பயம் பத்தில்லாம நட்ட நடு ராத்திரியிலே தோட்டத்து

ஊஞ்சலிலே ஆடிக்கிட்டு இருப்பாளேடா.. இப்ப என்னடான்னா பயமாயிருக்குன்னு அழுகிறாளேடா.. என்னடா நடக்குது..?"

யதுநந்தனின் முகம் இறுகிப் போனது.. அனுராதா யாமினியின் பக்கத்தில் படுத்து மகளைத் தட்டிக் கொடுத்து உறங்க வைத்தாள்.. யதுநந்தனும், பிரதாப்பும் அவர்களுடைய அறைகளுக்குப் போகாமல் யாமினியின் அறைக்கு வெளியே பெட்சீட்களை விரித்துத் தலையணைகளைப் போட்டுக் காவல் காத்தபடி படுத்து விட்டார்கள்..

'இந்தக் காவல் என்னைக் காத்து விடுமா..?'

யாமினியின் இமையோரம் கண்ணீர் வழிந்து இறங்கி தலையணையை நனைத்தது..

அத்தியாயம் - 97

காற்றை விட வேகம் கொண்ட..

மனதுக்கு ஏது வேலி..?

நீரஜாவின் புருவங்கள் சுருங்கின.. அவள் முகம் மாறியது.. முதன் முதலாக அவளுடன் படத்துக்கு வந்திருந்த சந்தோசத்துடன் படத்தைப் பார்க்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்த தாமோதரன் திகைத்தான்..

"வாட் ஹேப்பன் நீரு..?"

"அங்கே பாருங்க.."

திரையரங்கின் மெலிதான வெளிச்சத்தில் நீரஜாவின் சுட்டுவிரல் சுட்டிக் காட்டிய திசையைக் கூர்ந்து பார்த்த தாமோதரனின் முகமும் மாறியது..

"அவன் அகர்வால் இல்ல..?" என்றான்..

"அவனேதான்.. ஜெயில்ல இருந்து வெளியே வந்துட்டான் போல.."

"யெஸ்.. லாஸ்ட் மன்த்துதான் ரிலீஸ் ஆனான்.."

"ஏன் என்கிட்டச் சொல்லலை..?"

"எங்கே சொல்கிறது..? அதை விட முக்கியமாய் சித்தார்த்தைப் பத்தின கவலை என்னை அரிச்சுக்கிட்டு இருக்குதே.."

"இவன்தான் அண்ணாவுக்கான முதல் கவலை தாமு.. அண்ணாவை டிஸ்டர்ப் பண்ண என்ன வேணும்னாலும் செய்வான்.. பிஸினெஸ்ஸில் ஜெயிக்க எந்த குறுக்கு வழியையும் யூஸ் பண்ணுவான்.. தொழில் ரீதியா அண்ணன்கூட மோதி ஜெயிக்க முடியாத பேடி இவன்.. அண்ணனோட கம்பெனியில அத்து மீறி நுழைஞ்சு சேதம் பண்ணப் போனவன்.. சரியான டயத்தில நீங்க அதைக் கண்டுபிடிச்சு போலிஸீக்கு இன்பர்ம் பண்ணினதிலே ஜெயிலுக்குப் போனான்.. இப்ப ரிலிஸ் ஆகி வந்திருக்கான்.. என்ன பண்ணக் காத்திருக்கானோ..?"

"என்ன பண்ணிருவான்..?"

"கொலையும் பண்ணுவான்.. அந்த அளவுக்கு அண்ணன் மேல காண்டா இருக்கான்.."

"சித்தார்த் மேல துரும்பு பட்டாலும் போலிஸ் இவன் மேலதான் முதல்ல சந்தேகப் படும்.. அது தெரியாம கை வைக்கிற அளவுக்கு இவன் முட்டாளில்ல.. பக்கா கிரிமினல்.."

"ஐ நோ.."

நீரஜா படத்தையும், தாமோதரனையும் மறந்து அகர்வாலையே பார்த்துக் கொண்டிருந்தாள்.. அகர்வாலோ வேறு யாரையோ பார்த்துக் கொண்டிருந்தான்..

'யாரைப் பார்க்கிறான்..?'

அவன் பார்வை சென்ற திக்கில் பார்த்த நீரஜா அதிர்ந்தாள்..

"தாமு..!"

தாமோதரனின் விரலைச் சுரண்டிக் கை காட்டினாள்..

அங்கே யாமினி குடும்பத்துடன் உட்கார்ந்து படம் பார்த்துக் கொண்டிருந்தாள்..

"இவன் எதுக்கு அவளைப் பார்க்கிறான்.. தெரிஞ்சவனோ..?"

தாமோதரனின் புருவங்கள் முடிச்சிட்டன.. பார்வை கூர்மையானது.. யாமினியையே உற்றுப் பார்த்தவன் தலையை ஆட்டினான்..

"இல்லே நீரு.. அப்படித் தெரியலை.."

"அப்படியா சொல்கிறீங்க..?"

"யெஸ்.. பார்த்தா அப்படித்தான் தெரியுது.. இவன்தான் யாமினியைப் பார்க்கிறான்.. அவள் ஒன்னும் இவனைப் பார்க்கலை.. குடும்பத்தோட படம் பார்க்க வந்திருக்கா.."

நீரஜாவுக்கு டென்சனாக இருந்தது.. நகத்தைக் கடித்துத் துப்பினாள்.. படத்தையும் பார்க்காமல், பக்கத்திலிருந்த தாமோதரனையும் பார்க்காமல்.. அகர்வாலையே பார்த்துக் கொண்டிருந்தாள்..

"தேவையில்லாமல் அப்செக்ட் ஆகாதே நீரஜா.."

"இல்லை தாமு.. இதில் ஏதோ இருக்கு.. படம் பார்க்க வந்தவன் படத்தைப் பார்க்காம யாமினியை ஏன் பார்க்கிறான்..?"

யோசிக்க வேண்டிய விவரமாகத்தான் அது இருந்தது.. திரையரங்கின் ஏஸி குளிரில் இதமாக காதலியின் கை விரல்களைப் பற்றிக் கொண்டு புதுமையான ஓர் கதையைப் படமாக பார்க்கும் இனிய அனுபவத்திற்காக அங்கே வந்திருந்த தாமோதரன்.. அது தொலைந்து போன எரிச்சலுடன் அகர்வாலை வெட்டவா.. இல்லை குத்தவா என்ற வன்மத்தோடு முறைத்து வைத்தான்..

'இவனை யாரு இந்தத் தியேட்டருக்கு வந்து படம் பார்க்கச் சொன்னது..? வேற தியேட்டரே அகப்படலையா..?'

அகர்வாலைப் பார்த்தால் படம் பார்க்க வந்தவனைப் போலத் தெரியவில்லை.. யாமினியைப் பார்க்க வந்ததைப் போலதான் தெரிந்தது.. வைத்த கண் வாங்காமல்.. பார்வையை அகற்றாமல் யாமினியையே அவன் பார்த்த விதத்தில் ஓர்விதமான தீவிரம் இருந்தது..

தாமோதரனின் மனதிலிருந்த உல்லாசம் மறைந்தது.. நீரஜாவின் கவலையில் ஓர் அர்த்தம் இருப்பதை அவன் மனம் உணர்ந்தது.. திரையரங்கின் மெலிதான வெளிச்சத்தில் தெரிந்த அகர்வாலின் பார்வை தாமோதரனின் மனதை அரித்தது..

"இவன் ஏதோ திட்டத்தோடதான் யாமினியை பார்க்கிறான்னு நினைக்கிறேன் தாமு.." யோசனையுடன் சொன்னாள் நீரஜா..

"வெறும் பார்வையிலே என்னத்தைக் கிழிச்சிர முடியும்ன்னு நினைக்கிற..?" அலட்சியம் போல பதில் சொன்னான் தாமோதரன்...

"அப்படி அலட்சியப் படுத்திற முடியாது தாமு.. யாமினியை ஸ்டடி பண்ண நினைக்கலாமில்ல..."

தாமோதரனுக்கும் அந்த எண்ணம்தான் என்றாலும்.. நீரஜாவிடம் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தோள்களைக் குலுக்கினான்..

"இவளை ஸ்டடி பண்ணிட்டாலும்.. காமெடி பண்ணாம இருக்கியா..? சிரிப்பை மூட்டிக்கிட்டு.. யாமினியை ஸ்டடி பண்ண யாமினியாலேயே முடியாது.. உனக்கு அது தெரியுமா..?"

"எனக்கு அது தெரியுதோ இல்லையோ.. இவன் வேலையில்லாம டயத்தை வேஸ்ட் பண்ண மாட்டான்கிறது மட்டும் தெரியுது.. என் மனசுக்குள்ள டேன்ஜர் லைட் எரியுது தாமு.. யாமினியை ஸ்டடி பண்ண நினைக்கலைன்h.. அவள் கவனத்தைக் கவர நினைக் கிறானோ என்னவோ.."

"கவர்ந்து என்ன செய்யப் போகிறானாம்..? பேசிப் பழகப் போகிறானா..? அவன் வயசென்ன.. யாமினியின் வயசென்ன..? அதோட யாமினிக்குத்தான் சித்தார்த்தன் செட் ஆகிட்டானே.."

"சீச்சீ.. என்ன பேச்சுன்னு பேசறிங்க.. நான் சொன்னதே வேற.."

"ஒழுங்காச் சொன்னாலே எனக்குப் புரியாது.. இதில வேற, வேறன்னு பிரிச்சுச் சொன்னேன்னு வைய்யி.. ஒரு மண்ணும் புரியாது.. இவனெல்லாம் ஓர் ஆளுன்னு இவனைப் பாக்கிறதை விட்டுட்டு படத்தைப் பாரு.."

நீரஜாவை அதட்டி விட்டு இவன் மட்டும் படத்தைப் பார்க்காமல் அகர்வாலையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்... ஒரு கட்டத்தில் யதுநந்தன் அகர்வாலைப் பார்த்து விட்டுக் கோபப்படுவதைப் பார்த்தவன் அதை நீரஜாவின் காதோரமாக சரிந்து சுட்டிக் காட்டினான்..

"யார் அது..?"

"யாமினியின் அண்ணன்.. பெயர் யதுநந்தன்.."

"அவனுக்கு என்ன..?"

"அகர்வால் யாமினியை நோட் பண்றதை இவன் பார்த்துட்டான்.. கோபப் படறான்.."

"அடிச்சிருவானோ..?"

"யார் கண்டது..? செய்தாலும் செய்வான்.."

"அந்தக் கண்கொள்ளாக் காட்சியை நான் பார்த்தாகனுமே.."

நீரஜா ஆசைப்பட்டாள்.. அவளைவிட அதிகமாக அந்த ஆசையை மனதில் புதைத்திருந்த தாமோதரன்.. அகர்வால் அடிவாங்கும் போது தானும் ரெண்டு சாத்து சாத்த வேண்டும் என்று மனதுக்குள் தீர்மானித்துக் கொண்டான்.. அடிக்க ஏதுவாக அகர்வால் அமர்ந்திருக்கிறானா என்று

கோணம் பார்க்க அவன் முயன்றபோது.. அகர்வால் சீட்டில் இல்லை.

"ம்ஹீம்.. நாம கொடுத்து வைச்சது அவ்வளவுதான்.." தாமோதரன் சொன்னான்..

"என்ன..?"

"உனக்கு மட்டுமா அகர்வால் அடிபடுகிறதைப் பார்க்கனும்கிற ஆசை இருந்தது..? எனக்கும்தான் அந்த ஆசை கழுத்து வரைக்கும் நிறைஞ்சிருந்துச்சு.. கூடுதலா யதுநந்தன் அகர்வாலைப் பின்னிப் பெடலெடுக்கிறப்ப நானும் ஜாயின் பண்ணி அகர்வாலோட எழும்பை எண்ணி விடனும்னு ஐடியா பண்ணியிருந்தேன்.. எப்படியோ நழுவிட்டானே.."

நீரஜா அவசரமாக அகர்வால் உட்கார்திருந்த சீட்டைப் பார்த்தாள்.. அது காலியாக இருந்தது..

"பரவாயில்லையே.. முறைச்சே அகர்வாலை ஓட்டி விட்டுட்டானே.."

யதுநந்தன் இருந்த திக்கை மெச்சுதலோடு நீரஜா பார்த்ததை தாமோதரன் விரும்பவில்லை..

"படத்தைப் பாரு.." கடினமான குரலில் சொன்னான்..

படுபுத்திசாலியான நீரஜா அவன் மனதை கண்டு பிடித்து விட்டாள்..

'பொறாமை..?' அவள் மனதில் சாரல் அடித்தது..

"ஏனாம்.. உங்களைப் பார்க்கக் கூடாதா..?"

மெலிதான வெளிச்சத்தில் அவன் முகம் பார்த்தவளின் விழிகளோடு விழி கலந்தான் தாமோதரன்.. தொலைந்து போயிருந்த உல்லாசம் மீண்டு வந்து அவன் மனதில் குடி புகுந்தது..

'மழையும் நீயே..

வெயிலும் நீயே..'

அவன் மனதில் பாடல் வந்தது.. ஒரு கண்ணில் காருண்யமும் மறு கண்ணில் கண்டிப்புமாக இருக்க நீரஜாவால் மட்டும்தான் முடியும் என்ற நினைவில் அவன் உதடுகளில் மந்தஹாசம் வந்தது..

'கொஞ்சம் நிலவு..!

கொஞ்சம் நெருப்பு..!

ஒன்று சேர்ந்தால்..

எந்தன் கண்கள்..'

என்று சொல்லாமல் சொல்லிய நீரஜாவின் விழிகளின் மீது கவிந்திருந்த இமைகளின் மீது முத்தமிட ஆசை கொண்டான் தாமோதரன்..

"ம்ஹீம்.." ஏக்கப் பெருமூச்சு அவனிடம் எழுந்தது..

"என்னாச்சு..?" அவள் துக்கம் விசாரித்தாள்..

"உங்கண்ணன் கொடுத்து வைச்சவன்.. காத்து வாங்க மகாபலிபுரக் கடற்கரைக்குப் போனான்.. யாமினியை வாங்கிட்டு வந்தான்.. அவ என்னடான்னா மறைந்திருந்தே பார்க்கும் மர்மம் என்ன..? எங்கிருந்தாலும் உன்னை நானறிவேன்.. என்னை விட்டால் வேறு யாரறிவார்ன்னு பாடித் தள்ளறா.. உன் அண்ணன் என்னடான்னா.. எங்கேயோ பார்த்த மயக்கம்ன்னு பாடித் தள்ளறான்.. போன மாதம் என்னடான்னா.. ரெண்டும் காரில ஒன்னா வருதுக.."

"இதைத்தான் தினமும் ரெண்டு தடவையாவது சொல்லிப் புலம்பியாகிறதே.. வேற புதுசா எதையாவது சொல்லுங்க.."

"சொல்லவா..?"

"சொல்லுங்கன்னுதானே சொல்றேன்.."

"சொல்லிருவேன்.."

"பயமுறுத்தறிங்களா..?"

"ஆமான்னுதான் வைத்துக்கயேன்.."

இரண்டாவது வார்த்தையில் அவன் அழுத்தம் கொடுக்க.. நீரஜா அவன் கையை அழுத்திக் கிள்ளினான்..

"டபுள் மீனிங்கா..?"

"ஒரு மீனிங்கிற்கே வழியைக் காணோம்.. இதில டபுள் மீனிங்கைச் சொல்லிட்டாலும்.."

"போதும்.. ரொம்பத்தான் அலுத்துக்காதீங்க.. என்னவோ சொல்லப் போறேன்.. சொல்லப் போறேன்னு பயமுறுத்தினீங்கள்ல.. அதைச் சொல்லுங்க.."

"புதிதாத்தான சொல்லச் சொல்ற..? கேட்டுக்க.."

தாமோதரன் அவள் பக்கமாக சரிந்து காதோரமாக சொல்ல ஆரம்பித்தான்.. அவனது உராய்தலில் நீரஜா கிளர்ந்தாள்.. இதமான நறுமணம்.. இது என் மணம் என்று அவளது நாசியில் நுழைய.. அந்தக் கிறக்கத்துடன் அவன் சொல்வதைக் கேட்பதைப் போல அவன் பக்கமாக அவளும் சரிந்து ஒன்றிக் கொண்டாள்..

"நீர் புதிது.. நிலம் புதிது..

நிலத்தோடு கலந்திருக்கும்

காற்றும் புதிது..

வான் புதிது.. கான் புதிது..

கானகத்தில் பூத்திருக்கும்

பூவும் புதிது..

நீ புதிது.. நான் புதிது..

நம்மிருவரின் மனதிலிருக்கும்

காதலும் புதிது.."

நீரஜாவின் செவியை உராய்ந்த தாமோதரனின் உதடுகள் கவிதையைச் சொல்லி முடித்து விட்டு சிறு முத்தத்தைப் பதித்ததில் நீரஜா மயங்கிப் போனாள்..

தாமோதரனின் விரல்கள்.. அவள் விரல்களுடன் பிணைந்ததில் நீரஜா அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்.. அவளது உச்சந்தலையில் முத்தம் பதித்த தாமோதரன் மெல்லிய குரலில் பேச.. அவள் அதைவிட மெல்லிய குரலில் பதில் சொல்ல என்று.. ரம்யமான உலகில் அவர்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்த போது திரையரங்கில் விளக்குகள் ஒளிர்ந்தன..

"படம் முடிஞ்சிருச்சா..?"

ஏமாற்றத்துடன் விலகி உட்கார்ந்தான் தாமோதரன்.. படத்தின் முடிவைப் பற்றி ஜனங்கள் பேசிக் கொண்டே நகர்ந்ததில் அந்த முடிவு என்னவாக இருக்கும் என்று அவர்கள் ஒருவருக்கொருவர் கேட்டு விட்டு..

'நல்லாப் படம் பாக்க வந்தோம்..' என்ற நினைவுடன் சிரித்துக் கொண்டார்கள்..

"அதோ.. அங்கே யாமினி போய்கிட்டு இருக்கா..?"

தாமோதரனிடம் சுட்டிக் காட்டிய நீரஜா அப்படியே நின்று விட்டாள்..

"ஆக்சுவலா நீரு.." என்று எதையோ சொல்ல ஆரம்பித்த தாமோதரன் நீரஜாவின் முகத்தைக் கண்டதும்.. அரண்டு போய் விட்டான்..

"நீரு.." அவள் தோள் தொட்டு உலுக்கியதில் அவள் விரல் யாமினியை விட்டு நகர்ந்து தியேட்டரின் வாசலைச் சுட்டிக் காட்டியது..

"அகர்வாலா..?" தாமோதரனின் புருவங்கள் சுருங்கின..

"அந்த நாயேதான்.. இன்னும் வீடு போய் சேரலை.. ஏன்..?"

"படம் இப்பத்தானே முடியுது.."

"அவன் படமா பார்த்தான்..? பாதியிலேயே யாமினியின் அண்ணனுக்குப் பயந்து ஓடிட்டானே.."

"ஓடினவன் இங்கே எதுக்கு நிக்கிறான்..?"

"அதைத்தானே நானும் கேட்கறேன்.."

அவர்களின் மனதிலிருந்த இதமான காதல் உணர்வுகள் மறைந்து போனதில் தாமோதரனுக்குள் எரிச்சல் மண்டியது..

'எங்கேயிருந்து முளைச்சுத் தொலைச்சான் இவன்..?'

நீரஜா பக்கத்தில் தாமோதரன் வந்து கொண்டிருப் பதையே மறந்து போனவளாக அகர்வாலையே கண்காணித்துக் கொண்டிருந்தாள்..

'அண்ணன் மேல காட்டற பாசத்தில கொஞ்சத்தையாவது உன் கண்ணன் மேலேயும் காட்டுடி..'

தாமோதரனால் மனதிற்குள்தான் திட்ட முடிந்தது.. வெளிப்படையாக நீரஜாவிடம் அதைச் சொல்லும் தைரியம் அவனிடம் இல்லை..

"தாமு அவன் கார் பார்க்கிங் பக்கமாகத்தான் போறான்.. க்விக்.. அவனை நாம ஃபாலோ பண்ணியாகனும்.."

'இது வேறா..?'

தாமோதரன் ஏக்கத்துடன் வானத்தைப் பார்த்தான்.. அன்று பௌர்ணமி நிலவு வானில் பவனி வரும் நாள்.. அவனும் நீரஜாவும் படம் பார்த்து முடித்து விட்டு.. மொட்டை மாடி ரெஸ்ட்டாரெண்டில் முழுநிலவை ரசித்தபடி 'நிலா டின்னர்..' சாப்பிட வேண்டுமென்று பிளான் பண்ணியிருந்தார்கள். அகர்வால் அவர்களின் கண்களில் பட்டு அத்தனை பிளானையும் தவிடு பொடியாக்கிக் கொண்டிருந்தான்..

அவர்களின் கார் அகர்வாலைத் துரத்திக் கொண்டு பின்னால் போக.. அகர்வாலின் காரோ.. யாமினியின் காரைத் துரத்திக் கொண்டு பின்னால் போனது..

"இந்த அகர்வால் யாமினியை ஃபாலோ பண்றான்.."

அந்த உண்மை தாமோதரனுக்கும் நீரஜாவுக்கும் உவப்பானதாக இருக்கவில்லை..

அத்தியாயம் - 98

உன்னுடனே நான் பிறக்க..

ஊனுருக தவம் செய்தேன்...

பௌர்ணமியின் ஒளி நிலவு, பட்டப் பகலைப் போல வெளிச்சத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது..

அடர்ந்த இலைகளுடன் கூடிய மரத்தின் பின்னால் தாமோதரனின் கார் மறைந்து நின்றது.. இலைகளும் கிளைகளும் பரப்பிய நிழலில் இருள் சூழ்ந்திருந்தது.. அது தாமோதரனின் கார் மறைவாக நிற்க ஏதுவாக இருந்தது..

அகவர்வால் யாமினியின் வீட்டை ஒட்டியிருந்த வேப்ப மரத்தின் அடியில் காரை நிறுத்தியிருந்தான்..

அவன் யாமினியைப் பின் தொடர.. அவனைப் பின் தொடர்ந்து தாமோதரனும் நீரஜாவும் வந்திருந்தார்கள்..

சுற்று முற்றும் பார்த்து விட்டு அகர்வால் காரை விட்டு இறங்கினான்..

"என்ன செய்ய போறான்..?" நீரஜா கிசுகிசுத்தாள்..

"திருட்டுப் பயல்.. சுவரேறி குதிச்சு கொள்ளை யடிக்கப் போறானோ என்னவோ.." என்றான் தாமோதரன்..

அவன் சொல்லி வாய் மூடவில்லை.. அகர்வால் யாமினியின் வீட்டுச் சுவவேறி குதித்தான்.. நீரஜா அசந்து போனாள்..

"எப்படி தாமு இவ்வளவு கரெக்டாச் சொன்னீங்க..?" என்றாள்..

"இதுக்குப் போயி எதுக்காக இம்புட்டு பில்ட்-அப் கொடுக்கிற..? திருட்டுப் பயல்.. இதைத்தான் செய்வான்ங்கிற கணக்குத்தான்.. வேற என்னத்தைச் செய்யப் போறான்..?" தாமோதரன் காரை விட்டு இறங்கியபடியே சொன்னான்..

"எங்கே போறீங்க..?"

"அவன் யாமினி வீட்டுக் காம்பவுண்டு சுவரேறிக் குதிச்சுப் போயிருக்கான்.. அது எதுக்காகன்னு நமக்குத் தெரிஞ்சாகனும் நீரு.. இவனே கோடிஸ்வரன்.. யாமினியோட வீட்டில கொள்ளையடிக்கப் போயிருப் பான்னு காமெடிக்காக சொல்லலாம்.. உண்மை அதில்லன்னு உனக்கும் தெரியும்.. எனக்கும் தெரியும்.."

"பொறுங்க.. நானும் கூட வர்றேன்.."

"உன்னால சுவரேறிக் குதிக்க முடியாது.. அதோட அகர்வால் கண்ணில நீயும், நானும் பட்டு விடக் கூடாது.. சுதாரிச்சுருவான்.. நான் மட்டும்னா ஈஸியா அவனை ஃபாலோ பண்ணிருவேன்.. நீயும் கூட வந்தா அது கஷ்டம் நீரு.."

தாமோதரனின் விளக்கத்தில் அரை மனதாக..

"ஓகே.. நான் வரலை.. நீங்க மட்டும் போயிட்டு வாங்க.." என்று சம்மதித்தாள் நீரஜா..

அகர்வாலைப் போலவே தாமோதரனும் சுவரேறி குதித்ததில்..

'நம்ம ஆளுக்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு..' என்று இதழ் மடித்துச் செல்லமாக சிலாகித்துக் கொண்டாள்..

பனித்துளிகள் சிந்திக் கொண்டிருந்த பௌர்ணமி இரவு அது.. அவளின் காதலன் அருகில் இருக்கிறான்.. அவன் மீது காதலுடன் அவளும் இருக்கிறாள்..

'இருந்து என்ன பண்ண..?'

நகத்தைக் கடித்துத் துப்பினாள் நீரஜா.. டென்சன் அதிகமானால் அவள் இதைத்தான் செய்வாள்..

"இது பேட் ஹேபிட்.." நிருபமா அதட்டிப் பார்த்து விட்டாள்..

"ஹை சொசைட்டியில இல்லாத பழக்கம் இது.." விவேகானந்தன் நாசுக்காக அறிவுறுத்திப் பார்த்து விட்டார்..

ஊஹூம்.. நீரஜாவின் அந்தப் பழக்கம் மாறவே யில்லை..

வெளிச்ச வெள்ளத்தில் யாமினியின் வீடு தெள்ளத் தெளிவாக தெரிந்தது.. தனியே உட்கார்ந்திருக்க நீரஜாவுக்கு பயமாக இருந்தது..

'தாமு சீக்கிரமாக வந்துட்டாத் தேவலை..'

அதற்கு அகர்வால் வந்து தொலைக்க வேண்டுமே..

'ராஸ்கல்..'

நீரஜாவுக்கு கோபம் கோபமாக வந்தது.. இப்படியா ஒரு மனிதன் அடுத்தவரின் வீட்டுச் சுவரேறிக் குதிப்பான்..?

'ஆள்தான் ஹை சொசைட்டி.. செய்கிறதெல்லாம் லோகிளாஸ் வேலை..'

கடித்துக் கடித்து நகங்கள் தீர்ந்து விரல்கள் மட்டும் எஞ்சியிருந்த நிலையில்.. அதற்கு மேலும் நீரஜாவை சோதிக்காமல் சுவர் ஏறிக் குதித்து வந்தான் அகர்வால்..

'நம்ம ஆளைக் காணோமே..' நீரஜா பரபரப்பானாள்..

அகர்வால் காரில் ஏறி ஓடிப் போய்விட.. யாமினியின் வீட்டில் விளக்குகள் ஒளிர்ந்து கொண்டிருந்ததை அப்போதுதான் கவனித்தாள் நீரஜா..

'தாமு வரலையே..'

அகர்வாலுக்குப் பதில் தாமோதரன் அகப்பட்டுக் கொண்டு விடுவானோ என்று அவளுக்குக் கவலையாக இருந்தது.. யதுநந்தன் வேறு வாசல் கதவு வரை வந்து நின்று தெருவை ஆராய்ந்து விட்டுப் போனான்.. அடர்ந்த மரக் கிளைகளின் நிழல் போர்வையில் மறைந்து நின்ற தாமோதரனின் கார் அவன் கண்களுக்குத் தட்டுப் படவில்லை..

'நல்ல வேளை..!'

நீரஜா நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.. யதுநந்தன் வீட்டுக்குள் போன மறுநிமிடம் தாமோதரன் காம்பவுண்டு சுவரிலிருந்து குதித்து காருக்கு வந்தான்..

"அவனுக்குப் பதில் நீங்க மாட்டிக்கு வீங்களோன்னு பயந்துபோனேன்.. தெரியுமா.." என்றாள் நீரஜா..

அவளுக்குப் பதில் சொல்லாமல் காரைக் கிளப்பிய தாமோதரனின் முகம் இறுகியிருந்தது.. அங்கிருந்து கிளம்பி விட நினைக்கிறான் போல என்று நினைத்துக் கொண்டாள் நீரஜா..

'அந்த யாமினியின் அண்ணன் பாட்டுக்கு போலிசுக்கு போன் பண்ணித் தொலைச்சிட்டா வீண் வம்பு வந்து சேர்ந்து தொலைச்சிருமே.. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ.. அவ்வளவு சீக்கிரமா இந்த இடத்தை விட்டுக் காலி பண்ணி விடுவதுதான் நல்லது..'

கார் விரைந்து ஈ.ஸி.ஆர் ரோட்டின் போக்கு வரத்தில் கலந்தது.. வேகம் குறைக்காமல் காரை ஓட்டிக் கொண்டிருந்தான் தாமோதரன்.. விவரம் கேட்க நினைத்து அவன் முகத்தைப் பார்ப்பதும், அதிலிருந்த இறுக்கத்தில் வாயை மூடிக் கொள்வதுமாக இருந்தாள் நீரஜா..

ஒரு வழியாக கார் அவர்கள் இரவு உணவை உண்ண நினைத்திருந்த கார்டன் ரெஸ்டாரெண்டின் வாசலில்

போய் நின்றது.. நீரஜா அண்ணாந்து மொட்டை மாடியை பார்த்து விட்டு..

"ஃபுல் மூன் டின்னர்.." என்றாள்..

அதற்கும் பதில் சொல்லாமல் இறங்கினான் தாமோதரன்..

'எதுக்கு இவ்வளவு பில்ட்-அப்பைக் கொடுக்கிறான்..?'

நீரஜாவுக்கு எரிச்சல் வந்தது.. அகர்வால் என்ன அலுவலுக்காக யாமினியின் வீட்டுச் சுவரேறிக் குதித்தான் என்ற விவரத்தைச் சொல்லாமல் பாறை முகத்துடன் இருந்தால் அவளும்தான் என்ன செய்வாள்..?

ரெஸ்டாரெண்டின் மொட்டை மாடியில் தோட்டம் போடப் பட்டிருந்தது.. தோட்டத்தின் நடுவில் அமைந்திருந்த செயற்கை நீருற்று கலர் விளக்குகளால் நிறமேற்றப் பட்டிருந்ததில் அந்த இடமே வண்ண மயமானதாக

இருந்தது.. இங்கும் அங்கும் ஓடிக் கொண்டிருந்த முயல் குட்டிகளைப் பார்த்த நீரஜா..

"வொண்டர்புல்.." என்றாள்..

தாமோதரன் வெறுமையாக அவளைப் பார்த்து விட்டு.. அவர்களுக்காக ரிசர்வ் செய்யப் பட்டிருந்த மேஜையின் பக்கத்தில் இருந்த நாற்காலிகளில் ஒன்றை நீரஜாவுக்காக இழுத்து வைத்தான்..

'இதிலொன்னும் குறைச்சல் இல்ல..'

உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள் நீரஜா..

"என்ன ஆர்டர் பண்ணலாம்..?"

அவளுக்கு எதிரே உட்கார்ந்த தாமோதரன் கேட்டான்..

'கற்சிலை இப்பத்தான் வாயைத் திறந்திருக்கு..' நீரஜா இமைக்காமல் அவனையே பார்த்தாள்..

அவளையே பார்த்த தாமோதரனின் பார்வையில் இருந்த ஏதோ ஒன்றில் பதறிப் போனாள் நீரஜா..

இத்தனை துக்கத்தை ஏன் அவன் தனது பார்வையில் பொதித்து வைத்திருக்கிறான்..?

"வாட்'ஸ் தி மேட்டர் தாமு..?"

"சொல்றேன்.."

தாமு விட்ட பெருமூச்சில் காலம், காலமாக தொடர்ந்து வந்து கொண்டிருந்த வேதனை இருந்தது.. ஆர்டர் செய்யப்பட்ட உணவு வகைகளை டேபிளில் பரத்தி விட்டுப் போனான் சர்வர்.. அவன் அகன்றதும் தாமோதரன் சொல்ல ஆரம்பித்தான்.. கேட்டுக் கொண்டிருந்த நீரஜாவின் கண்களில் தீயின்ஜ்வாலை தெரிந்தது..

"என்ன அநியாயம் இது..? இவனுக்கு தமிழே வராது.. இதில செந்தமிழை எப்படிப் பேசினான்..?"

"அதான் எனக்கும் டவுட்டா இருக்கு நீரு.."

அகர்வாலுக்கு தமிழ் தெரியாது.. அவன் இந்திக்காரன்.. ஆனால் யாமினியுடன் பேசும் போது வெகு சரளமாக செந்தமிழில் பேசியிருக்கிறான்.. எப்படி..?

"அதை நானே என் காதால் கேட்டேன் நீரு.."

நீரஜாவுக்கு சாப்பிட மனம் வரவில்லை.. யாமினியை அணுகியிருக்கும் அகர்வாலின் புதிய உறவு முறையில் அவள் அச்சம் கொண்டாள்..

"யாமினி என்ன சொன்னா..?"

"அவ தெளிவாத்தான் பேசினா.. இவன் பேசினதில பயந்து போய் அலறினா.. பட் நீரு.. இந்தத் தெளிவு எத்தனை நாளைக்கு நிலைக்கும்..?"

"எனக்கும் அதுதான்.."

பேச முடியாத மௌனம் அவர்களை அரணாகச் சூழ்ந்து கொண்டது.. வானத்தைப் பார்த்த நீரஜாவுக்கு துக்கமாக இருந்தது..

"எங்க வாழ்க்கையில் நீங்க வராமல் இருந்திருக்கலாம்.."

"ஏன்..?" துளைக்கும் பார்வையுடன் கேட்டான் தாமோதரன்..

"எங்க பகையின் நிழல் உங்களையும் துரத்துதே.. பாருங்க.. உங்க லல்வர் கூட 'மூன் லைட் டின்னர்..' சாப்பிடனும்னு ஆசைப்பட்டிங்க.. ஒரு காதலனா

நியாயமான ஆசையைக்கூட உங்களாலே நிறைவேத்திக்க முடியலை.."

"ஸோ..?"

"நீங்க வேற யாரையாவது லவ் பண்ணியிருக் கலாம்..?"

துயரத்துடன் சொன்ன நீரஜாவை நிமிர்ந்து பார்த்த தாமோதரனின் பார்வை அவளைத் துளைத்தது..

"யாரை லவ் பண்ணியிருக்கலாம்ன்னு நினைக்கிற..? அதையும் நீயே சொல்லிரு.." தீர்க்கமான பார்வையுடன் நிதானமாக கேட்டான்..

"ரேகா.." மெதுவான குரலில் சொன்னாள் நீரஜா..

தாமோதரனின் முகம் மாறியது.. எப்போதாவது ஒரு தடவை சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸின் ஹெட் ஆபிஸ் பக்கம் வந்து போகிறவள் இதை எப்படிக் கண்டுபிடித்தாள் என்று திகைத்துப் போனான்..

நீரஜாவின் நுண்ணறிவு எதையும் அறியும் என்பதில் சங்கடமும் கொண்டான்..

"உளராதே.."

"இது உளறலில்லைங்கிறதை உங்க மனச்சாட்சியே சொல்லும்.."

"ப்ம்ச்.. எனக்கு இந்தப் பேச்சே பிடிக்கலை.. வேற பேசு.."

"ஏன்..? ரேகாவை உங்களுக்குப் பிடிக்காதா..?"

"ஷட் அப் நீரஜா..! உன் கூட வேற யாரையாவது நான் ஜோடி சேர்த்துப் பேசினா நீ அதை ஏத்துக்குவியா..? சொல்லு.."

"யாரை ஜோடி சேர்த்துப் பேசுவீங்க..? அந்த யாமினியோட அண்ணனையா..?"

"என்ன சொன்ன..?"

நாற்காலியைத் தள்ளி விட்டு எழுந்து நின்று அவள் முகத்துக்கு எதிராக ஒற்றை விரலை எச்சரிக்கும் பாவனையில் நீட்டி விட்டான் தாமோதரன்.. மற்ற டேபிள்களில் உட்கார்ந்திருந்தவர்கள் திரும்பிப் பார்த்ததில் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டு உட்கார்ந்தவனின் முகம் ஜிவுஜிவுவென இருந்தது..

டேபிள்கள் தோறும் மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன.. நிலவொளியும்.. மெழுகுவர்த்தியின் ஒளியும் சேர்ந்த 'மூன் லைட் டின்னர்..' அது.. அந்த மொட்டை மாடியில் உட்கார்ந்திருந்த அனைவருமே இளம் வயதினராக இருந்ததினால் தாமோதரனிடமிருந்து கவனத்தைத் திருப்பித் தங்களுக்குள் பேச ஆரம்பித்து விட்டார்கள்..

நீரஜாவை முறைத்தான் தாமோதரன்.. அவன் பார்வையைச் சந்திக்காமல்.. தன் கைவிரல்களைக் கோர்த்துப் பிரித்தபடி வேறு திசையில் பார்த்தபடி இருந்தாள் நீரஜா..

"எப்படிடீ இப்படியொரு வார்த்தையைச் சொன்ன..?"

தாமோதரனின் கோபத்தில் அவன் 'வாடி, போடி' என்று ஆரம்பித்து விட.. அதை உணராத நீரஜாவின் மனம் அதிர்வில் இருந்தது.. எப்படிச் சொன்னாள்..? ஏன் சொன்னாள்..?

"உன் அண்ணனோட மச்சினன்தான் உனக்கு ஹஸ்பெண்டா வரனும்னு மனசுக்குள்ளத் தோணிருச்சா..?"

"ஷட் அப் தாமு.."

"பதிலுக்குப் பதில் சொல்றியா.."

"இந்த எகிறுகிற வேலையெல்லாம் என்கிட்ட வேண்டாம் தாமு.. அந்த ரேகாவுக்கு உங்க மேலே ஒரு ஷாப்ட்-கார்னர் இருக்கிறதைப் பத்தி எனக்குத் தெரியும்.. அது உங்களுக்கும் தெரியும்கிறதும் எனக்குத் தெரியும்.."

"ஏய்ய்.."

"இல்லேன்னு சொல்லுங்க பார்ப்போம்.."

"அவளுக்கு ஏதோ ஃபேவரிசம்.. அதைப் போய் பெரிசா எடுத்துக்கறியே நீரு.."

"நோ தாமு.. இட் இஸ் நாட் எ ஃபேவரிசம்.. அவளுக்கு உங்களைப் பிடிச்சிருக்கு.. உங்களைப் பத்தி யார் குறைவாப் பேசினாலும் சண்டைக்குப் போய் விடுகிறா.. இது ஜஸ்ட் எ ஃபேவரிசம்ன்னு ஒற்றை வரியில சப்பைக் கட்டுக் கட்டி விடுகிற மேட்டரில்ல.."

"ஓகே.. நான் உன் பாயிண்டுக்கே வர்றேன்.. அவளுக்கு என்னைப் பிடிச்சிருக்குன்னு சொல்றயே.. எனக்கு யாரைப் பிடிச்சிருக்குன்னு சொல்லு பார்ப்போம்.. அவளைத்தான் பிடிச்சிருக்கா..?"

ஆழ்ந்த குரலில் கேட்டான் தாமோதரன்.. நீரஜாவின் முகத்தில் இளக்கம் வந்தது.. அடிப்பார்வையாய் விழிகளை உயர்த்தி தாமோதரனைப் பார்த்தாள்.. தாமோதரன் புருவங்களை வினவும் பாவனையில் உயர்த்தியதில் அவள் விழிகளில் மின்னல் தெறித்தது..

"எப்பவுமே ரேகாவை நான் என்கரேஜ் பண்ணியதில்லை நீரு.. தனிப்பட்ட பார்வை, சின்னப் பேச்சுன்னு அவ மனசைச் சலனப்படுத்தற மாதிரி நடந்துக் கிட்டதே இல்லை.. அவ குட் வொர்க்கர்.. டீ சண்ட் பெர்சனாலிட்டி.. ஆபிஸ் வேலையைத் திறமையாய் பார்ப்பா.. தேவையில்லாம யாரைப் பத்தியும் வம்பு பேச மாட்டா.. அப்படிப் பேசறவங்ககிட்ட பேச்சு வைச்சுக்க மாட்டா.. இத்தனைக்கும் மேலா இது என் கம்பெனிங்கிற விசுவாசம் அவளிடம் இருக்கு நீரு.. என்னை அந்த விசுவாசம்தான் இம்ப்ரெஸ் பண்ணுச்சு.. அகர்வால் மாதிரி ஆள்கள் இருக்கிற இந்த பிஸினெஸ் உலகத்தில.. ரேகாவைப் போல விசுவாசமான வொர்க்கர்ஸ் ரேராத்தான் கிடைப்பாங்க நீரு.. அந்த வகையில்தான் அவளை எனக்குப் பிடிக்கும்.."

தாமோதரனின் நீண்ட விளக்கத்தைக் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டாள் நீரஜா.. அகர்வாலைப் பற்றிய பேச்சு வந்ததும் ரேகாவை மறந்து போனவளாக கவலையில் ஆழ்ந்தாள்..

"இந்த அகர்வால் வேற குட்டையைக் குழப்பறானே.. நிஜமாவே இவன் வீரபாண்டியனோட மறுபிறவியா..?"

"சான்ஸே இல்லை.. இத்தனை நாளா இந்த மறுபிறவி அப்பா எங்கே போயிருந்தானாம்..?"

"ஜெயிலுக்குப் போயிருந்தானே.. மறந்துட்டிங்களா..?"

"அது ஒரு வருசமாத்தானே.. அதுக்கு முன்னாலே எங்கே போயிருந்தானாம்..?"

தாமோதரனின் கேள்விக்கான விடை நீரஜாவிடம் இல்லை..

அத்தியாயம் - 99

ஓடுகின்ற மேகங்களாய்..

ஓடுகின்ற வாழ்க்கை இது..

"டிரை புரூட்ஸ் எங்கேயிருக்கு..?"

"அதோ.. அந்த ரேக்கில இருக்கு மேம்.."

சுடிதாருக்கு மேலே சீருடை போன்ற கோட்டை அணிந்திருந்த பெண் கை காட்டினாள்.. டிபார்மெண்டல் ஸ்டோரும், லைப்ரரியும் ஒன்று என்று நினைத்தபடி

அந்தப் பெண் கை காட்டிய அடுக்கின் பக்கமாக போனாள் யாமினி..

'லைப்ரரியிலயும் வரிசை, வரிசையா ரேக் இருக்கு.. டிபார்ட்மெண்டல் ஸ்டோரிலயும் அப்படித்தான்.. அங்கே எல்லா விதமான எழுத்துக்களையும் படிக்க முடியும்.. இங்கே எல்லா விதமான திங்ஸையும் வாங்க முடியும்..'

யாமினி லைப்ரரிக்கும், டிபார்ட்மெண்டல் ஸ்டோருக்குமான ஒற்றுமைகளை அலசி ஆராய்ந்தபடி அடுக்கின் மேல் பகுதியிலிருந்த உலர்ந்த திராட்சைகள் கொண்ட பாக்கெட்டை எம்பி எடுத்தாள்..

"வணக்கம் தேவி..!"

அவள் பின்னாலிருந்து குரல் கேட்டது.. யாரோ ஒருவன், எவளோ ஒரு தேவிக்கு வணக்கம் போடுகிறான் என்ற நினைவில் உலர்ந்த திராட்சையின் பாக்கெட்டை ரேக்கில் போட்டு விட்டு நகர்ந்தாள் யாமினி..

"தங்களைத்தான் நந்தினி தேவி..!"

'நந்தினி..?'

யாமினி அதிர்ந்து போய் நின்று விட்டாள்.. அவளைக் கூப்பிட்ட ஆள் அவள் முன்னால் வந்து கை கூப்பினான்..

மெலிதான நீல நிறம் கொண்ட சட்டையில் அடர்ந்த நீலத்தில் பட்டையாக கோடுகள் போடப்பட்டிருந்த சட்டையைப் போட்டிருந்தான்.. சட்டையை இன் பண்ணி 'டை' கட்டியிருந்தான்.. திருத்தமான முகம்.. மெஸ்மரிசம் செய்வதைப் போன்ற ஊடுறுவும் பார்வை.. யது நந்தனின் வயதுதான் அவனுக்கும் இருக்கும் என்று கணக்கிட்டாள் யாமினி..

'யார் இவன்..? எதுக்காக என்கிட்ட வந்து நந்தினின்னு கூப்பிடறான்..?'

சும்மாவும் கூப்பிடவில்லை.. நந்தினி தேவியென்று கூப்பிடுகிறான் என்பதை அவளது மனம் சுட்டிக் காட்டியதில் யாமினியின் உடல் நடுங்கியது.. அந்த நடுக்கத்தை மறைக்க முயன்றபடி..

"ஹலோ.. ஐ ஆம் யாமினி.. நாட் நந்தினி.." என்று படபடத்தாள்..

"அப்புறம் எதற்காக தேவி, நந்தினி தேவியென்று அழைத்தவுடன் தாங்கள் திரும்பிப் பார்த்தீர்கள்..?" நிதானமாக அவன் கேட்டதில் யாமினி பயந்து போனாள்..

'கடவுளே..! இவனும் செந்தமிழில பேசறான்..' சுற்று முற்றும் பார்த்தாள்..

இங்கொருவர், அங்கொருவராக இருந்தவர்களும் தள்ளி நின்றிருந்ததில் அவளது பயம் அதிகரித்தது..

"நாம் பேசுவது எவர் செவிகளையும் எட்டாது தேவி..!" அவன் தொடர்ந்து சொன்னான்..

'ஏண்டா கடுப்படிக்கிற..? நீயும் நானும் என்ன லவ்டயலாக்கா பேசறோம்..? மத்தவங்க காதில விழுந்தா விழுந்துட்டுப் போகுது..'

"பேச வேண்டியதை அச்சமின்றிப் பேசலாம்.."

'என்னத்தடா பேசச் சொல்ற..?'

எதிரில் நிற்பவன் பைத்தியக்காரனல்ல என்பதில் யாமினிக்கு அசைக்க முடியாத உறுதி இருந்தது..

எந்தப் பைத்தியக்காரன் நேர்த்தியாக உடையுடுத்தி நுனி நாக்கு ஆங்கிலத்துடன் வலம் வருவான்..? அப்படியும் சில பைத்தியங்கள் இருக்கலாமென்றாலும்.. அவளை ஊடுறுவும் பார்வை கொண்டிருந்த 'அவன்' மற்றவர்களை பைத்தியமாக்குகிறவனைப் போல இருந்து வைத்தான்..

அவன் பார்வையும், பேச்சும்.. யாமினிக்குள் அச்ச அலைகளை உற்பத்தி பண்ணிக் கொண்டிருந்தன..

"லுக் மிஸ்டர்.. நீங்க யாருன்னே எனக்குத் தெரியாது.. தேவையில்லாம என்கிட்ட வம்பு பண்றீங்கன்னு இந்த டிபார்மெண்ட் ஸ்டோரோட ஓனர்கிட்டக் கம்ப்ளெயிண்ட் பண்ணினா என்னவாகும் தெரியுமா..?"

"என்ன ஆகும் தேவி..? அதையும் தங்களின் திருவாயால் கூறி விடுங்களேன்.."

"திரும்பத் திரும்பத் தேவின்னு உயிரை எடுத்த.. நான் சும்மாயிருக்க மாட்டேன்.."

"தாங்கள் தேவிதான்.. தேவி..! எங்களின் நந்தினி தேவி..!"

'அடப் போடா..'

யாமினி வேகமாக நகரப் போனாள்.. அவன் வழி மறிப்பதைப் போல நின்று கொண்டான்.. அவனை முறைத்துப் பார்க்க முயன்ற யாமினியின் பார்வை அவனுடைய ஊடுறுவும் பார்வையைச் சந்திக்க அஞ்சி, விலகி, வேறு திசையில் படிந்து வைத்தது..

"நான்தான் ரவிதாஸன் தேவி.."

"என்னது..?"

யாமினி கலவரமடைந்தாள்.. அந்தப் பெயர் அவளுக்குப் பரிச்சயமான பெயராக இருந்ததில் நகர முடியாமல் அப்படியே தேங்கி நின்று விட்டாள்.. கால்களில் இரும்புக்

குண்டைக் கட்டி விட்டதைப் போல அவளால் ஓர் அடியைக் கூட எடுத்து வைக்க முடியவில்லை..

"ரவிதாஸனா..?"

"ஆம் தேவி.."

வினயமாக அவன் பதில் சொல்லிக் கொண்டிருந்த போது.. அவனுடைய செல்போன் ஒலித்தது.. எடுத்துப் பேசியவன்.

"யெஸ்.. பரத்குமார் ஸ்பீக்கிங்.. யா.. யா.." என்று நுனி நாக்கு ஆங்கிலத்தில் வெளுத்துக் கட்டினான்..

'இவனா தேவி.. தேவின்னு செந்தமிழில உயிரை எடுத்தான்..?' யாமினி விழித்தாள்.. செல்போனில் பேசி முடித்தவன் அதை அணைத்துப் பாக்கெட்டில் போட்டு விட்டு நிதானமாக அவளைப் பார்த்தான்..

'இவன் யார்..? ரவிதாசனா..? பரத்குமாரா..?'

யாமினியின் தலை சுழன்றது.. அதை அறிந்தவனைப் போல அவளையே அவன் கூர்ந்து பார்த்து வைத்ததில் அவளுக்கு கோபம் வந்தது..

"என்ன மிஸ்டர்..! என்ன நினைச்சுக்கிட்டு இருக்கீங்க..? டிபார்ட்மெண்டல் ஸ்டோரில சாமான் வாங்கிக்கிட்டு இருக்கிறவகிட்ட வந்து நான்தான் ரவிதாசன்ங்கறிங்க.. நந்தினி தேவிங்கறிங்க.. செல் போன் அடிச்சா.. அதக் காதுக்கு கொடுத்து பரத்குமார் ஸ்பீக்கிங் அப்படிங்கறிங்க.. என்கிட்ட செந்தமிழில பேசி கொடுமை பண்றீங்க.. போனில என்னன்னா ஆக்ஸ்போர்டு இங்கிலிஷில பிச்சுப் பிச்சு உதறுகிறீங்க.. உங்களுக்கு என்னைப் பாத்தா எப்படித் தோணுது..?"

நீ சொல்வதையெல்லாம் தலையைத் தலையை ஆட்டிக் கேட்டுக் கொண்டிருக்கும் கேணச்சியைப் போலத் தோன்றுகிறதா என்று கேட்கத்தான் அந்தக் கேள்வியை முதலில் கேட்டாள் யாமினி.. அவனோ அதையே பிடித்துக் கொண்டவனாக..

"எங்களின் நந்தினி தேவியாக தோன்றுகிறது.." என்று சொல்லித் தொலைத்தான்..

"அடப்பாவி..!" வாய்விட்டுச் சொல்லி விட்டாள் யாமினி..

"பாவியல்ல தேவி.. தங்களின் சேவகன் நான்.."

"சும்மா சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கிட்டு இருந்தீன்னா மெண்டல் ஆஸ்பிடலுக்குப் போன் போட்டிருவேன்.. ஜாக்கிரதை.."

"அப்படியா..? இதைச் சொல்லும் நான், மனநல மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டுமென்றால்.. இன்று காலையில்.. தங்களின் அறையைப் பூட்டிக் கொண்டு.. கண்ணாடிக்கு எதிரில் நின்று.. 'ஆதித்த கரிகாலா..! உன் நந்தினி உன்னை மறுபடியும் கொல்வதற்கு துணை போய் விடுவாளா..?' என்று தங்களின் பிம்பத்தைப் பார்த்துத் தாங்களே கேள்வி கேட்டீர்களே.. தங்களை எந்த மனநல மருத்துவ மனைக்கு அனுப்புவது..?"

"என்னது..?"

யாமினி விழிகள் தெறித்து வெளியே விழுந்து விடுவதைப் போல மிரண்டு விழித்தாள்..

அவள் வீட்டில்.. அவளது படுக்கையறைக்குள்.. பூட்டிய கதவுகளுக்குப் பின்னால்.. நான்கு சுவர்களுக்குள்.. கண்ணாடியைப் பார்த்து.. அதில் தெரிந்த அவளின் உருவத்திடம் யாமினி கேட்ட கேள்வியை எதிரில் நிற்பவன் எப்படி அறிந்தான்..?

அவளின் சொந்த வீட்டுக்குள், தனிப்பட்ட அறைக்குள்.. அவள் நடமாடும் நடமாட்டங்களை மாற்றார் அறிவதென்றால்.. இந்த நாடு சுதந்திரம் வாங்கி என்னத்தைக் கிழித்து விட்டது..?

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்கான வரையறை களை வரையறுத்த தேசப் பெருந்தலைவர்களும், அரசியல் நிபுணர்களும், அம்பேத்காரும் இதைத்தான் வரையறுத் தார்களா..?

தனியொரு மனிதரின் வாழ்க்கை கண்காணிக்கப் படலாம்.. எங்கே..? பொது வெளியில்.. பொது நிகழ்வில்..

அதுவே.. அவளுக்கென்று இருக்கும் வீட்டிற்குள் அவளது குடும்பத்தின் அன்றாட பேச்சுக்களையும், நிகழ்வுகளையும் எங்கோ இருக்கும் ஒருவர் கண்காணித்துச் சொல்வதென்றால்.. இது சுதந்திர நாடென்பதற்கு அர்த்தம் என்ன உள்ளது..?

இதற்காகத்தான் வெள்ளையரை விரட்டி விட்டு.. நேதாஜியும், காந்திஜியும்.. இந்தியாவுக்கு சுதந்திரத்தைப் பெற்றுத்தந்தார்களா..?

வெள்ளையர்கள் ஆட்சியில் இதுபோல நடக்க விட்டிருக்க மாட்டார்கள் என்று யாமினிக்குத் தோன்றியது.

அவர்கள் தனிமனித சுதந்திரத்தை மதிப்பவர்கள்.. அதற்கு ஒரு இடர் வந்தால் நாடே பொங்கி எழுந்து விடும்.

நமது இந்தியத் திருநாட்டில்தான் அப்படி யில்லையே.. தனி ஒருவனுக்கு இடர் வந்தால் மற்றவர்கள் நமக்கென்ன வந்தது என்று தள்ளி நின்று வேடிக்கை பார்ப்பார்களே..

அன்பு வந்தால் கொஞ்சுவதற்கும்.. கோபம் வந்தால் கத்துவதற்கும் நான்கு சுவர்கள் வேண்டும் என்றுதானே 'வீடு' என்ற ஒன்றையே மக்கள் தோற்றுவித்தார்கள்..?

ஒருவரின் வீட்டுக்குள் எட்டிப் பார்க்கும் உரிமையை யார் இவர்களுக்குக் கொடுத்தது..?

"நீங்கள் நீலக்கலர் சேலையை அணிந்திருந்தீர்கள் தேவி.. நாவல் பழக்கலரில் கைப்பை வைத்திருந்தீர்கள்.. உடலில் வாசனைத் திரவியங்களைப் பூசிக் கொண்டீர்கள்.."

விவரித்தவனை வெட்டிப் புதைத்து விட்டால் என்ன என்று ஆங்காரமானாள் யாமினி..

எத்தனை தைரியமாகச் சொல்கிறான்..! இந்த தைரியம் எப்படி இவனுக்கு வந்தது..? இவன் எதைச் செய்தாலும் தட்டிக் கேட்க மாட்டார்கள் என்ற துணிவை எது இவனுக்குக் கொடுத்தது..?

பணபலமா..? இல்லை படை பலமா..? இவன் வீசி எறியும் எழும்புத் துண்டுகளுக்கு இவனைச் சுற்றியிருப் பவர்கள் மனச்சாட்சியைக் கழற்றி வைத்து விட்டு வாய் பிளப்பது எப்படி..?

"எனக்குத் தெரியும் தேவி.. தங்களுக்குத் தெரியுமா..? தங்களின் முற்பிறவித் தந்தையான வீரபாண்டியன், இப்பிறவியில் 'அகர்வால்' என்ற பெயரில் மறுபிறப்பெடுத்திருக்கிறார்.. அவருக்கு இந்தி மொழியும், ஆங்கில மொழியும் மட்டுமே தெரியும்.. அவர் எப்படித் தங்களிடம் செந்தமிழில் பேசினார் தேவி..?"

அமைதியாக அவன் கேட்ட கேள்வியில் அரண்டு போனாள் யாமினி..

"என்ன சொல்கிறீங்க..? அவருக்குத் தமிழ் தெரியாதா..?"

"தெரியாது தேவி.. இதுவரை அவர் தமிழில் பேசியதேயில்லை.. அவரைப் பற்றித் தெரிந்தவர்களிடம் தாங்கள் விசாரணை மேற்கொள்ளலாம்.. ஏன்.. தங்களின் காதலனான ஆதித்த கரிகாலனிடமும், அவருடைய நண்பணான வந்திய தேவனிடமும் தாங்கள் விவரத்தைக் கேட்டறியலாமே.."

அவன் அடுத்த குண்டைத் தூக்கிப் போட...

'ஆத்தாடி...!' என்று உட்கார்ந்து விட்டாள் யாமினி..

"எழுந்திருங்கள் தேவி.. இது வியாபாரஸ்தலம்.."

"போய்யா பேசாம.. சும்மா செந்தமிழலில பேசி நெஞ்சு வலியை வர வைச்சுக்கிட்டு..."

"அமைதி கொள்ளுங்கள் தயே...!"

"தாய்ன்னு பாசத்தைப் பிழிஞ்ச.. மண்டையை உடைச்சிருவேன்.. தடிமாட்டுத் தாண்டவராயன் போல இருக்கிற.. உனக்கு நான் தாயா...? எங்கேயிருந்துப்பா வந்து சேர்ந்தீங்க..?"

"மற்றவர்கள் நம்மைக் கவனிக்கக் கூடும்..."

"கவனிச்சாக் கவனிக்கட்டும்.. நீ போ பேசாம.."

"தங்களை இந்த நிலையில் விட்டுவிட்டு எப்படி தேவி நான் செல்வேன்..?"

"படுத்தாதேய்யா.. இந்த நிலைமைக்கு ஆளாக்கினதே நீதானே.."

"தாங்கள் முற்பிறவியில் நந்தினி தேவியாக அவதரித்தீர்கள் அம்மா..."

"அம்மாவா..? உனக்கே இது நல்லாயிருக்கா..? உன் வயசென்ன.. என் வயசென்ன...?"

"இது வயது சம்பந்தப்பட்ட வார்த்தையல்ல தேவி.. உணர்வுபூர்வமான அழைப்பு..."

"தேவையா...? நான் கேட்டேனா...?"

"தாங்கள் கேட்டாலும், கேட்காவிட்டாலும் தங்களின் சேவகனான நான் இவ்வாறுதான் தங்களை அழைக்க இயலும்..."

"கடவுளே..! என்னைக் காப்பாற்று..."

"காப்பாற்றவில்லையே தேவி..! முற்பிறவியில் தங்களையும், தங்களின் தந்தையான வீரபாண்டியரையும் அவர் காப்பாற்றவில்லையே.. தங்களின் கண் முன்னே.. தங்களின் தந்தையான வீரபாண்டியரை.. தங்களின் காதலனான ஆதித்த கரிகாலன் வெட்டிக் கொன்றான்..."

யாமினியின் கண்களுக்குள் பார்த்தபடி அவன் சொல்லச் சொல்ல அவள் பதறிப் போனாள்.. தலைக்குள் விர்ரென்று வீரபாண்டியனின் தலை சுழல்வதைப் போல இருந்தது.

"தாங்கள் தடுத்தீர்கள் தேவி...! கெஞ்சினீர்கள்.. கதறினீர்கள்.. கரம் குவித்து மன்றாடினீர்கள்.. கேட்க வில்லையே.. கருணையற்ற அந்த ஆதித்த கரிகாலன் தங்களின் மன்றாடலுக்கு மதிப்புக் கொடுக்கவில்லையே தேவி..? துளியும் கருணையில்லாமல் தங்களின்

தந்தையான அகர்வாலின் தலையை வெட்டிக் கொன்றானே..."

"அகர்வாலா..?"

"ஆம் தேவி..! அவர்தானே தங்களின் தந்தை...!"

"என்னோட அப்பா பேரு பிரசாத்..."

"இவர் இந்தப் பிறவியின் தந்தை.. அகர்வால் சென்ற பிறவியின் தந்தை.. அகர்வாலை வெட்டிக் கொன்றான் சித்தார்த்தன்.."

"சித்தார்த்தனா..? என்ன மிஸ்டர்.. விளையாடறீங்களா..?"

"இல்லை தேவி..! சித்தார்த்தன்தான் அகர்வாலைக் கொன்றான்..."

"அந்த அகர்வால்தான் கல்லுக்குண்டப் போல இருக்கரானில்ல..? அப்புறமும் என்ன அலுவலுக்கு பழி போடற..?"

"பழியல்ல தேவி..! சென்ற பிறவிகளில் ஒரு பிறவியில் அகர்வால் தங்களின் தந்தை வீரபாண்டியராக பிறப்பெடுத்திருந்தார்..."

"அந்தக் கருமத்தத்தான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கிட்டு இருக்கியே.. இதில சித்தார்த்தன ஏண்டா கோர்த்து விடற...?"

"கோர்த்து விடவில்லை தாயே..! நடந்த நிகழ்வுகளின் கோர்வையைக் கூறுகிறேன்.. தங்களின் தந்தையான வீரபாண்டியரை ஆதித்த கரிகாலன் ஈவு, இரக்கமின்றி வெட்டிக் கொன்றான்.."

'சொல்லாதே....' துடித்துப் போனவள் வாய் திறக்காமல் வாயை இறுக மூடிக் கொண்டாள்..

எந்த விதப் பற்றுமில்லாததைப் போலக் காட்டிக் கொண்டிருக்கும் போதே இந்தப் பாடு படுத்துகிறார்கள்.. வீரபாண்டியனின் கொலையைப் பற்றிக் கேட்டால் அவள்

மனம் பதறுகிறது என்பதை அறிந்தால் எப்படியெல்லாம் பாடாய் படுத்த மாட்டார்கள்..?

இப்பேற்பட்ட கொடுஞ்சுழலில் வாயை மூடிக் கொண்டிருப்பதே உசிதமானது என்று தோன்றிப் போனதில் யாமினி வாயை 'கம்' வைத்து ஒட்டாத குறையாக தாழ் போட்டு வைத்தாள்.

"அவரே அகர்வால்.." என்றான் அவன்

'போடா டேய்...' என்றிருந்தது யாமினிக்கு.. இந்த விளக்கத்தை அவள் கேட்டாளா..? எவனோ ஒரு அகர்வால்.. ஏதோ ஒரு பிறவியில் உன் அப்பாவாகப் பிறந்திருந்தேன் என்று உறவு கொண்டாடிக் கொண்டு வரவில்லையென்று அவள் கையைக் காலை உதைத்துக் கொண்டு அழுது வைத்தாளா..? பின் எதற்காக இப்படியொரு இம்சை கிளம்பி வந்திருக்கிறது...?

"அவரை வெட்டிக் கொன்ற ஆதித்த கரிகாலன்தான் இப்பிறவியில் சித்தார்த்தனாக பிறப்பெடுத்திருக்கிறான் தேவி..! விடாதீர்கள் தேவி..! அவனை விட்டு வைக்காதீர்கள்.. இப்பிறவியிலும் பகையை முடியுங்கள்.. தேவி.."

வெறிகொண்டவனாக அவன் பேசப்பேச.. யாமினி அப்படியே மயங்கி சரிந்தாள்..

அத்தியாயம் - 100

கடந்து வந்த பிறவிகளின்

காலடிச் சுவடுகளா இவை...?

"விலகுங்க.. காத்து வரட்டும்...."

"தண்ணி இருந்தா முகத்தில் அடிங்க.. மயக்கம் தெரியும்..."

"உடம்பு சரியில்லையே...?"

"பாத்தா ஹெல்த்தியான பொண்ணு போலதான் தெரியிது.. இந்தக் காலத்துப் பொண்ணுதான் டயட்.. அது.. இதுன்னு பாதி நேரம் சாப்பிடாம பட்டினியாக் கிடக்குதுகளே இதுவும் அந்தக் கேஸாத்தான் இருக்கும்.."

சுற்றிலும் ஒலித்த கவலையான குரல்கள் மயக்கத்தை ஓட்டக் கண் விழித்தாள் யாமினி..!

அவளை மடியில் கிடத்தியிருந்த பெண்ணின் முகத்தை எங்கேயோ பார்த்திருப்பதைப் போல அவளுக்குத் தோன்றியது.. மேல் தட்டு வர்க்கத்தைச் சேர்ந்தவள் அந்தப் பெண் என்பதை அவளது தோற்றமும்.. காது,கை, கழுத்துகளில் அவள் அணிந்திருந்த வைர நகைகளும் சொல்லியதில் அவசரமாக அவள் மடியை விட்டு எழுந்து கொண்டாள் யாமினி..

"இப்ப எப்படியிருக்கு..?" அந்தப் பெண் கேட்டாள்..

"எனக்கு என்ன ஆச்சு..?" அவளிடம் யாமினி கேட்டாள்..

அவளை உற்றுப் பார்த்த அந்தப் பெண்ணின் விழிகளில் கடுப்பு தெரிந்தது..

"இந்த டயலாக்கை ஹாஸ்பிடலில் கண் விழிச்சுப் பார்க்கிறவங்கதான் கேட்கனும்.. டிபார்ட்மென்டல் ஸ்டோரில திங்ஸ் வாங்க வந்திட்டு மயக்கம் போடறவங்க கேட்கக்கூடாது..." அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள் அந்தப் பெண்..

சுற்றியிருந்தவர்கள் சிரித்ததில் யாமினிக்கு என்னவோ போல ஆகிவிட்டது.. மயக்கம் போட்டிருந் தவளை மடியில் போட்டுக் கொள்வானேன்..? மயக்கம் தெரிந்ததும் 'நோஸ் கட்' கொடுப்பானேன்.. என்று மனதிற்குள் வெகுண்டாள்..

"இந்தப் பெண்கூட யாரோ ஒருத்தன் நின்னு பேசிக் கிட்டு இருந்தானே.. எங்கே அவன்...?"

அங்கிருந்த பெண்களில் ஒருத்தி கேட்க.. இன்னொருத்தி பதில் சொன்னாள்..

"அவன் அப்பவே போயிட்டானே.."

"அப்பன்னா..?"

"இந்தப் பெண் மயக்கம் போட்டு விழுந்தப்பவே போயிட்டான்.."

"நல்ல மனுசன்..! இப்படித்தான் இருக்கனும்.."

மெச்சிக் கொண்ட பெண்ணின் வார்த்தைகளில் இருந்த கேலியில் கூடியிருந்தவர்கள் 'கொல்..' எனச் சிரித்தனர்..

'இந்த உலகம் இப்பேற்பட்ட நல்லவர்களால்தான் நிரம்பியுள்ளது...' சோர்வுடன் நினைத்துக் கொண்டாள் யாமினி..

"ஆர் யு ஆல்ரைட்..?" அந்தப் பெண் கேட்டாள்..

"யெஸ் ஐ ஆம்.. தேங்க்ஸ்... ஃபார் யுவர் கைண்ட்னெஸ் அண்ட் ஹெல்ப்..." யாமினி தள்ளாடினாள்.

"என்னைப் பிடிச்சுக்க.."

அந்தப் பெண் உதவிக்கு வந்ததில் ஒரு குறையும் சொல்ல முடியாதுதான்.. ஆனால்.. அந்த உதவியைச் செய்பவள் 'வா,போ...' என்று அழைத்ததுதான் யாமினிக்கு குறையாகத் தென்பட்டது.

"இவங்களோட திங்ஸை பேக் பண்ணி பில் போட்டிருங்க.." அந்தப் பெண் யாமினியை தோளில் சாய்த்துக் கொண்டு நடந்தபடி கிரெடிட் கார்டை நீட்டினாள்.

"என் ஹேண்ட் பேகில் பணமிருக்கு..." பலவீனமாக முணுமுணுத்தாள் யாமினி..

"இருக்கட்டும்..."

"நான் வாங்கற திங்ஸீக்கு நீங்க ஏன் பணம் கொடுக்கனும்...?"

நடக்க முடியாமல் தள்ளாடியபடி அவள் தோளில் சாய்ந்திருந்த யாமினி பண்ணிய அழும்பில் அவளை ஓர்முறை ஆழ்ந்து பார்த்த அந்தப் பெண்..

"விதி...!" என்றாள்..

"அப்படின்னா..."

"அதை விளக்கமா சொல்ல முடியாது..."

"நீங்க பணம் கொடுக்கக் கூடாது..."

"பணம் கொடுக்கலை... கிரெடிட் கார்டைக் கொடுத்திருக்கேன்.."

"அதையும்தான் ஏன் கொடுக்கனும்...?"

"அதுதான் சொன்னேனே.. 'விதி'ன்னு.."

யாமினியின் பொருள்கள் அடங்கிய பையை அந்தப் பெண்ணின் கண்ணசைவில் கார் டிரைவர் ஓடி வந்து வாங்கிக் கொண்டு போனான்..

"என்னோட திங்க்ஸ்.. என்னோட திங்க்ஸ்..." யாமினி அரற்றினாள்...

"அனத்தாம சும்மா வா.. நான்தான பணம் கொடுத்தேன்..? அப்புறம் எப்படி அது உன்னோட திங்ஸ் ஆகும்..?"

"நான்தான எடுத்து வைச்சேன்..."

"இதைத்தான் எடுத்து வைத்தாலும் கொடுத்து வைத்திருக்கனும்னு நம்ம ஊரு பாட்டிக சொல்லுவாங்க.. காரில ஏறு.."

"எதுக்கு..?"

"உன் வீட்டுக்குப் போக..."

"என்னோட ஸ்கூட்டியில போய்க்குவேன்.."

குடிகாரனைப் போல தள்ளாடியவளின் தோள் பற்றி நிறுத்திய அந்தப் பெண்..

"இந்த லட்சணத்தில ஸ்கூட்டியை ஓட்டிக்கிட்டுப் போக முடியுமா..?" என்று கேட்டாள்..

"அதுக்காக உங்க காரில வர முடியுமா..?"

வழக்கடித்த யாமினியை எரிச்சலுடன் பார்த்தாள் அந்தப் பெண்..

"தெரிந்தவர்களா மேம்..?" என்று கேட்ட டிரைவரிடம்

"யெஸ்..." என்று தலையை ஆட்டினாள்..

யாமினியை விட்டுத் தொலைக்க முடியாத கோபம் அவர் கண்களில் பட்டவர்த்தமாகத் தெரிந்தது..

"உன்னைக் 'கிட்நாப்' பண்ணிக்கிட்டுப் போகிற உத்தேசமெல்லாம் எனக்கில்ல.. காமெடி பண்ணாம காரில ஏறு.."

"என் ஸ்கூட்டி..."

"சாவியைக் கொடு.. உன் வீட்டுக்குப் போய் சேர்ந்திடும்.."

யாமினியின் அனுமதியை எதிர்பார்க்காமல் அவள் கையிலிருந்த ஹேண்ட் பேகைப் பிடுங்கி.. ஆதிலிருந்த ஸ்கூட்டியின் சாவியை எடுத்துக் கார் டிரைவரிடம் கொடுத்து..

"காரை ஃபாலோ பண்ணிக்கிட்டு வா ஜேம்ஸ்..." என்றாள் அந்தப் பெண்..

அந்த 'ஜேம்ஸ்' யாமினியைப் பார்த்த பார்வையில் துளிக் கூட சிநேகிதமில்லை.. கருணையில்லாமல் எதிரிக் காரியை முறைப்பதைப் போல முறைத்து வைத்தான்.

'சடை..! பாக்கிறதைப் பாரு.. அப்படியே முண்டக் கன்னியம்மன் முழிக்கிறதைப் போல முழிச்சு பாக்குது.. ஏஸி காரில சொகுசா டிரைவிங் வேலையைப் பார்த்துக்கிட்டு இருந்தவன.. உச்சி வெயிலில இதோட ஓட்டை ஸ்கூட்டிய ஓட்டிக்கிட்டு வர வைக்குது..'

அவனது முறைப்பை இனம் காண முடியாத அரை மயக்க நிலையில் இருந்த யாமினி.. ஆள்காட்டி விரலை உயர்த்தி...

"ஸ்கூட்டி பத்திரம்.." என்று எச்சரித்து வைத்தாள்..

"என்னது..?" கொதித்துப் போனான் ஜேம்ஸ்...

அவன் கார் ஓட்டக் கற்றுக் கொண்டதே.. காஞ்சி புரத்தின் முதன்மையான பணக்காரரான விவேகானந்தனின் அரண்மனையில் நிற்கும் வெளிநாட்டுக் கார்களை ஓட்ட வேண்டும் என்பதற்காகத்தான்..

அதற்காக எத்தனை பெரிய இடத்தின் சிபாரிசுகளை யெல்லாம் அவன் சேகரித்தான் என்பது அவனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்..

அப்படியெல்லாம் வன்பாடு பட்டு வேலைக்குச் சேர்ந்து.. ஆசைப்பட்டபடி விதம்விதமான வெளிநாட்டுக் கார்களை ஓட்டிக் கொண்டிருப்பவனை ஓட்டை ஸ்கூட்டியை ஓட்ட வைத்து விட்டு அது பத்திரம் என்று எச்சரிப்பவளை என்ன செய்தால் தகும் என்று அவன் உக்கிரமானதை அந்தப் பெண் மட்டுமே உணர்ந்து கொண்டாள்..

"ஜேம்ஸ்..." கண்டிப்பான அவளுடைய அதட்டலில்..

"மேம்..!" என்று பணிவானான் ஜேம்ஸ்...

"இவங்களை ஏன் முறைக்கிற...?"

"இல்லை மேம்.. என்னைப் பார்த்தா ஸ்கூட்டியை திருடிக்கிட்டு ஓடிப்போகிறவனைப் போலவா இருக்கு...?"

"இவங்க அந்த மீனிங்கில சொல்லலை..."

"வேற எந்த மீனிங்கில சொன்னாங்களாம் மேம்..?"

கனல் கண்ணனாக கொந்தளித்தபடி அடக்க ஒடுக்கமாக கேள்வி கேட்டான் ஜேம்ஸ்..

"ஸ்கூட்டியை நீ பத்திரமா.. எந்தக் கீறலுமில்லாம.. ஓட்டிக்கிட்டு வரணுமேங்கிற கவலையில சொல்லி யிருப்பாங்க.."

"இது மேல கீறல் போட்டாலும்..."

அரதப் பழசான ஸ்கூட்டியை முதன் முதலாக வாங்கிய ஸ்கூட்டியைப் பிரிய மனமில்லையென்று சென்டிமெண்டாக கட்டிப் பிடித்துக் கையில் வைத்திருந்த யாமினியை ஏற இறங்கப் பார்த்த ஜேம்ஸின் கண்களில் கொலை வெறி இருந்தது..

"காயலான் கடைக்குப் போக வேண்டியத கையில பிடிச்சுக்கிட்டு என்னமா சவுண்டு விடறாங்க பாருங்க மேம்.."

"அதைப் பத்தி உனக்கென்ன வந்துச்சு..? அவங்க ஸ்கூட்டி இது.. எந்தக் கண்டிசனில இருக்குன்னு பார்த்துச் சொல்லச் சொல்லி உன்கிட்டச் சாவியைக் கொடுக்கலை.. காரை ஃபாலோ பண்ணி ஓட்டிக்கிட்டு 'வா'ன்னு சொல்லிச் சாவியைக் கொடுத்திருக்கேன்.. மைண்ட் இட்..."

திட்டு வாங்கிய ஜேம்ஸ்.. அதற்கும் யாமினிதான் காரணமென்று அவளை முறைத்து விட்டு.. அவள் மீதிருந்த அத்தனை கோபத்தையும் ஸ்கூட்டியின் மீது காட்டி ஓங்கி ஒரு உதை உதைத்தான் ஸ்கூட்டி அலறிக் கொண்ட கிளம்பியது..

"ஸ்கூட்டிய ஹார்ஸா ஹேண்டில் பண்ணாதீங்க.." யாமினி சண்டைக்கு வந்தாள்..

இரும்பினால் ஆக்கப்பட்ட பொருளை உயிருள்ள ஜீவனாக அவள் பாவித்த விதம் கண்டு அந்தப் பெண்ணின் கண்களில் மென்மை வந்தது...

"டோண்ட் வொர்ரி.. உன் ஸ்கூட்டி பத்திரமா உன் வீடு வந்து சேரும்.. நீ கவலைப்படாம வா.."

யாமினியை காரில் இழுத்துப் போட்டுக் கொண்டு காரைக் கிளப்பினாள் அவள்..

"நீங்க யார்...?" யாமினி கேட்டாள்..

"இப்பவாவது இதைக் கேட்கனும்னு உனக்குத் தோணுச்சே.. தேங்க் டு காட்... நான் நீரஜா..!"

அவளுடைய பெயரைக் கேட்டதும் யாமினியின் அரைகுறை மயக்கம்.. 'இட்ஸ் கான்..' என்று மாயமாகி விட்டது..

"சித்தார்த்தின் தங்கை..?" பரபரப்பானால்..

"யெஸ்..." காரை ஓட்டியபடி தலையை ஆட்டினாள் நீரஜா..

அவள் முகத்தை எங்கேயோ பார்த்ததைப் போல ஏன் தனக்குத் தோன்றியது என்பது யாமினிக்குத் தெளிவானது..

சித்தார்த்தனின் ஜாடையில் இருந்தாள் நீரஜா.. அதனால்தான் அவளுடைய முகம் பழகிய முகம் போல யாமினிக்குத் தோன்றியது..

"என்னை உங்களுக்குத் தெரியுமா..?"

"தெரியும்.. உனக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை அனுப்பச் சொன்னதே நான்தான்.. உன்னை செலக்ட் பண்ண வேணாம்ன்னு தாமோதரன் ஒற்றைக் காலில நின்னார்.. முழு மூச்சா அண்ணனோட ஃபைட் பண்ணினார்.. நான்தான் தலையிட்டு அவரை சம்மதிக்க வைச்சேன்.. என் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து அவர் பேசாம இருந்துட்டார்.. இப்ப நினைச்சுப் பார்க்கும் போது ஏன் நான் அவரைத் தடுத்தேன்னு எனக்குக் கோபம் கோபமா வருது.. அவரை நான் தடுத்திருக்கக் கூடாது.. உன்னை வேலைக்குச் செலக்ட் பண்ண வைத்திருக்கக் கூடாது.. தப்புப் பண்ணிட்டேன்.."

யாமினியின் பக்கம் திரும்பாமல் பேசிய நீரஜாவின் வார்த்தைகளில் பாதிக்கப்பட்டாள் யாமினி.. அவளை வேலையில் சேர்த்தது அந்த அளவுக்குத் தவறானதா..?

"யெஸ்.." இரக்கமில்லாமல் சொன்னாள் நீரஜா..

"உன்னை அண்ணா பக்கத்தில நெருங்க விட்டிருக்கக் கூடாது.. தள்ளியே நிறுத்தியிருக்கனும்.. தாமு அதைத்தான் செய்ய நினைத்தார்.. நான் தலையிடாம இருந்திருந்தா அதுதான் நடந்திருக்கும்.. நான்தான் முட்டாள்தனமா இன்வால்வ் ஆகி.. அத்தனையையும் கெடுத்துட்டேன்.."

இதற்குப் பதில் கன்னம் கன்னமாக அறைந்திருக் கலாமே என்று தோன்றியது யாமினிக்கு.. மனதில் வாங்கும் அடிகள் தரும் வலிகளை விட.. கன்னத்தில் வாங்கும் அடி அதிகமான வலியைத் தந்து விடாது..

"நான் என்ன செய்தேன்னு இத்தனைக் கடுமையா பேசறிங்க.. நீரஜா.. ஐ லவ் ஹிம்.. இதைத்தான் சொல்ல வர்றீங்களா..?" நேரடியாக கேட்டு விட்டாள் யாமினி..

"இல்லை.." தலையை ஆட்டி மறுத்தாள் நீரஜா..

"நாங்க ஹை சொசைட்டியா இருக்கலாம்.. ராஜ வம்சமா இருக்கலாம்.. இதுக்காக எல்லாம் என் அண்ணன் மனசக்குப் பிடிச்ச பெண்ணைக் காதலிக்கக் கூடாதுன்னு நான் சொல்ல மாட்டேன்.." அழுத்தமாக பதில் சொன்னாள்..

"நீங்க ஸ்டேட்டஸ் பார்த்துத்தான் பேசுவீங்கன்னு கேள்விப்பட்டேன்.."

"யார் சொன்னது..?"

"ஆபிசில் பேசிக்கிட்டாங்க.."

"இருக்கலாம்.." தோள்களைக் குலுக்கினாள் நீரஜா..

"என்னோட ஹேபிட்டா அது இருக்கலாம்.. அதை மாத்திக்க நான் டிரை பண்ணினதில்லை.. நேச்சரா இருக்கிற குணத்த ஏன் நான் மாத்திக்கனும்..? அதில ஒன்னும் தப்பில்லையே.. என் சைடில என் நேச்சர் கரெக்டுதான்.. பட் இதுக்கும், சித்தார்த்தோட காதலுக்கும் என்ன சம்பந்தம்..? அவன் நேச்சர் வேற.. எல்லோரோடயும் கலந்து பேசுவான்.. பழகுவான்.. அதை நான் அப்ஜெக்ட் பண்ணினதே இல்லையே.."

நீரஜாவின் இந்த குண இயல்பும், தெளிவான விளக்கமும் யாமினியை ஈர்த்தது.. நான் இப்படித்தான்.. என் குணம் இப்படித்தான் என்று கம்பீரமாக கூறுபவள்.. அவளிடமிருந்து மாறுபட்ட குணங்களையுடைய சித்தார்த்தனின் குண இயல்புகளை குற்றம் கூறவில்லை.. ஆட்சேபிக்கவில்லை.. மாற்ற முனையவுமில்லை..

நான் நானாக இருக்கிறேன்.. நீ நீயாக இரு.. என் குண இயல்புகள் என்னுடன் பிறந்தவை.. அவை சரியா, தவறா என்ற ஆராய்ச்சியை நீ செய்யாதே.. இதுவே என் குணம்.. இதை மாற்றி.. நான் வேறாக மாற நான் விரும்பவில்லை.. அதுபோல உன் குண இயல்புகள் உன்னுடன் பிறந்தவை.. அவற்றை சரியா, தவறா என்று நான் ஆராய்ச்சி செய்ய மாட்டேன்.. உன் குணத்தை மாற்றி நீ வேறாக மாற வேண்டும் என்று வற்புறுத்த மாட்டேன்..

எவ்வளவு தெளிவாக இருக்கிறாள்..! யோசிக்கிறாள்..!

'இவள் காணக் கிடைக்காதவள்..'

நீரஜாவின் மீது மரியாதை கொண்டாள் யாமினி.. யாரையும் சட்டை பண்ணாத தாமோதரன் எதனால் நீரஜாவிடம் அடிமைப் பட்டுப் போயிருக்கிறான் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடிந்தது..

"இந்த ஜி.எம்மோட ஆட்டமெல்லாம் நம்மகிட்டத் தான்.. எம்.டியோட சிஸ்டர் வந்தாப் போதும்.. கையைக் கட்டி வாயைப் பொத்தாத குறையா அவங்க பின்னாடியே சுத்துவார்.."

தரங்கிணியிடம் வயலெட் ஓர்முறை புலம்பிக் கொண்டிருந்ததை தற்செயலாக யாமினி கேட்க நேர்ந்தது..

"அப்படியா ரேகா..? எம்.டியே ஜி.எம் கிட்டப் பயப்படறாரு.. நம்ம ஜி.எம் எம்.டியோட சிஸ்டர்கிட்டப் பயப்படறாரா..?"

யாமினி ஆச்சரியத்துடன் கேட்டபோது ரேகாவின் முகத்தில் துயரத்தின் நிழல் படிந்ததைக் கண்கூடாகக் கண்டாள்..

மனதுக்கு இனியவனின் மனதுக்குப் பிடித்தவனைப் பற்றிய பேச்சு வந்ததினால் ஏற்பட்ட துயரத்தின் நிழல் அது.

"ஆமாம் யாமினி.. ஜி.எம் அப்படித்தான்.. எம்.டியைத் தன்னோட கண்ட்ரோலில வைச்சிருப்பார்.. பட்.. இவரைக் கண்ட்ரோல் பண்றதுக்கு ஒரு ஆள் இருக்காங்கன்னா அது எம்.டியோட சிஸ்டர்தான்.."

"அவங்ககிட்டப் பயப் படுவாரா..?"

"அதைப் பயம்ன்னு சொல்ல முடியாது யாமினி.."

அதற்கு மேலும் விளக்கம் சொல்ல முடியாமல் அன்று ரேகா மௌனமாகி விட்டதை இன்று நினைத்துப் பார்த்தாள் யாமினி..

இந்த நீரஜா தாமோதரனைக் கட்டுப் படுத்தியிருக் கிறாள்.. சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸில் யாமினிக்கு வேலை கொடுக்கக் கூடாது என்று சண்டை போட்ட தாமோதரனிடம் யாமினிக்கு வேலை கொடுக்கச் சொல்லியிருக்கிறாள்.. அது ஏன்..?

அத்தியாயம் - 101

கரையாத உணர்வுகளுடன்..

கரைகின்றேன் உன் நினைவுகளுடன்..

"ஏன்..?"

விரக்தியாகத் தனக்குத்தானே கேட்டபடி சிரித்துக் கொண்டாள் நீரஜா..

"ஏன்னு ஒற்றைவரியில சொல்லிரமுடியாது.. அது பெரிய கதை.."

"சுருக்கமாச் சொல்லுங்களேன்.."

"அதுவும் கூட முடியாமப் போயிருச்சே.."

"ஏங்க..?"

"ஏனா..? நீதான் என் அண்ணனுக்கு வினையாக நின்று தொலைக்கிறாயே.."

நீரஜா பொருமினாள்.. அந்தப் பொருமலில் திகைத்துப் போனாள் யாமினி.. அவள் சித்தார்த்தனுக்கு வினையா..?

எப்படி..?

"அது அப்படித்தான்.. உன்னை தாமோதரனுக்குத் தெரியுமா..? இண்டர்வியூவில்தான் உன்னைப் பார்த்திருக் கிறார்.. பார்த்த அடுத்த செகண்டிலியே உனக்கு வேலை கொடுக்கக் கூடாதுன்னு ஏன் சித்தார்த்துடன் மல்லுக் கட்டினார்..?"

"தெரியலையே.."

"உனக்குத் தெரியாத பல உண்மைகள் இருக்கின்றன யாமினி.. அதில் முக்கியமான உண்மை என்னன்னு தெரியுமா..? உன்னால் என் அண்ணனுக்கு நன்மையை விட தீமைதான் அதிகமா நடக்கும்.."

"நீரஜா.."

யாமினி ஏறக்குறைய அலறினாள்.. அவள் மனதில் வியாபித்திருந்த சித்தார்த்தனின் மீதான காதல் உணர்வுகள் அதிர்ந்தன.. அவனது பார்வையும், பேச்சும், ஸ்பரிசமும் மாறி மாறி நினைவுக்கு வந்து அவனுக்கா அவள் தீமை செய்து விடுவாள் என்று நியாயம் கேட்டன..

"உண்மை கசக்கத்தான் செய்யும்.. உன்னால் என் அண்ணனுக்கு ஆபத்து வரும்ன்னு தாமு நினைச்சார்.. வேலைக்கு உன்னைச் சேர்க்கக் கூடாதுன்னு போராடினார்.. நான் அவர் பக்கம் நின்னிருக்கனும்.. அதை விட்டுட்டு அண்ணன் பக்கமா யோசிச்சுட்டேன்.. இப்ப இந்த அளவுக்கு வந்து நிற்குது.."

"எந்த அளவுக்கு வந்திருக்கு..?"

"அகவர்வாலும், அவனுடைய கைத்தடியும் உன்னை ரகசியமா மீட் பண்ணிப் பேசுகிற அளவுக்கு வந்து நிற்குதே.."

"நீரஜா..!"

இது எப்படி இவளுக்குத் தெரியும் என்று தடுமாறிப் போனாள் யாமினி.. நீரஜாவின் முகத்தில் ஆயிரமாயிரம் உணர்வலைகள்..

"இவளுக்கு எப்படித் தெரியும்ன்னு பார்க்கிறயா..?"

"நானா அவங்களைத் தேடிப் போகலை.."

"அவங்கதான் உன்னைத் தேடி வந்திருக்காங்க.. வராம என்ன செய்வாங்க..? நீதான் மனச்சாட்சியைக் கழட்டி வைத்துவிட்டு பகை முடிக்கத் துணை போகிறவளாச்சே.."

"நீரஜா.."

"மனக் குழப்பம் இல்லாத மனிதர்கள் இல்லை யாமினி.. ஆழ்ந்து உறங்கி விட்டு எழுந்திருக்கும் போது நாம் யார் என்ற குழப்பம் வரும்.. நம் வாழ்க்கையில் நடக்கும் சில நிகழ்வுகளை நாம் முன்கூட்டியே தெரிந்து வைத்திருக்கிறதைப் போல.. ஏற்கனெவே நம்ம வாழ்க்கையில நடந்ததைப் போலத் தோணும்.. சிலரை மீட் பண்றப்ப அவங்களை எங்கேயோ பார்த்திருக்கிறதைப் போல ஃபீலிங் வரும்.."

"இதுதான்.. இதுவேதான்.. எனக்கும் இதைப் போலதான் தோணுது.. கூடுதலா புகை போல ஓர் தோற்றம்.. நான் பார்த்துக்கிட்டு இருக்கிறப்பவே கலைஞ்சு, கரைஞ்சு, மறைஞ்சு போகுது.."

அவசரமாகப் பேசியவளை அனுதாபத்துடன் பார்த்தாள் நீரஜா..

'இவள் இரக்கப்பட வேண்டியவள்.. ஆனால் சித்தார்த்..?'

அவள் மனம் இறுகியது.. யாமினியின் மீதான அனுதாபத்தை சித்தார்த்தனின் மீதான பாசம் விரட்டியடித்தது..

"ஸோ வாட்..? இதுக்காக யார் என்ன சொன்னாலும் கேட்டுக்கிட்டு நிற்கனுமா என்ன..? எந்தப் பிறவியில் யாரோ, யாரையோ கொன்றால்.. இந்தப் பிறவியில் என் அண்ணனைப் பழி வாங்க நீ கிளம்பிருவியா..?"

"ஏங்க இப்படியெல்லாம் பேசறிங்க..?"

"நீ என்னை பேச வைக்கிற.. உன்னால் என் அண்ணனுக்கு ஆபத்து வந்துரும்ன்னு என் மனசு சொல்லுது.. நீ அவனை விட்டு விலகிப் போயிரு.."

"என்னது..?"

யாமினியின் கண்கள் கலங்கி விட்டன.. நீரஜாவை அந்தக் கண்ணீர் பாதித்தாலும் அவள் அதைக் காட்டிக் கொள்ளாமல் இரும்பு மனுஷியாய் காரை ஓட்டிக் கொண்டிருந்தாள்..

"நினைச்சேங்க.. நீங்க இங்கேதான் வந்து நிப்பீங்கன்னு நினைச்சேன்.. நீங்க உச்சத்தில இருக்கிறவங்க.. நான் மிடில்கிளாஸ் ஃபேமிலியில பிறந்து வளர்ந்தவ.. உங்க அண்ணனுக்கு நான் இணையில்லை.. இதைத்தானே சொல்ல வர்றீங்க..? அதுக்கு ஏங்க என்மேல பழி போடறீங்க.. சித்தார்த் எனக்கு உயிர்ங்க.. அவருக்கு என்னால் ஆபத்து வருமா..?"

"இது ஸ்டேட்டஸைப் பத்தின பேச்சில்லைன்னு ஏற்கனவே சொல்லிட்டேன் யாமினி.. திரும்பத்திரும்ப.. அதுக்காகத்தான் உன்னை விலகிப் போகச் சொல்கிறேன்னு சொல்லாதே.. இப்பவும் சொல்றேன்.. என் அண்ணன் விண்..! நீ வெறும் மண்தான்.. அவனைப் பத்தி என்னன்னு நினைச்சே.. அவனோட ஒரு சின்னப் பார்வைக்காக ஏங்கி நிற்கிறவங்க எத்தனை பேருன்னு உனக்குத் தெரியுமா..?"

"தெரியாதுங்க.. ஆனா.. ஏழேழு பிறவியிலும் தொடர்ந்து வரும் சொந்தம் எங்க சொந்தம்ங்கிறது மட்டும் தெரியும்ங்க.."

"இதையெல்லாம் உணக்கையாய் சொல்லிரு.. ஏழேழு பிறவியிலும் தொடர்ந்து வரும் சொந்தம் உன் சொந்தம் மட்டுமில்லை.. என் சொந்தமும்தான்.. இதை மறந்திராதே.. பிறவிக் கதைகளை விட்டுட்டு உன்னைக் காதலிக்கிறவனைக் காப்பாற்ற என்ன செய்யனும்னு யோசி."

"அவரை நான் காப்பாத்தறதா..?"

"வேற வழி..? அவன் ஹீரோதான்.. ஹிமேன்தான்.. ஆயிரம் எதிரிகளை எதிர்த்து நிற்கிற வில்பவர் கொண்டவன் தான்.. அவங்களை அழிச்சு நிமிர்ந்து நிற்கிறவன்தான்.. என்ன இருந்து என்ன செய்ய..? எதிரிகளை அழிக்கலாம்.. துரோகிகளை என்ன செய்கிறது..?"

"நான் துரோகியா..?"

"இல்லேன்னு சொல்ல மாட்டேன்.."

"இதுக்குப் பதில் என்னை நீங்க கொன்று போட்டிரலாம்.."

"தேவைப்பட்டால் அதையும் செய்வேன்.. தேவையில்லாம உன்னை எதுக்காக நான் கொல்லனும்..? நீ சித்தார்த்ததை விட்டு விலகி நின்று விட்டால் யாருக்கும் பிரச்னையில்லை.."

"அவரை நான் காதலிக்கிறேங்க.."

"அதுதான் என்னுடைய பயமே.. யாராலேயும் நெருங்க முடியாத சித்தார்த்தை ஈஸியா நீ நெருங்கி விடலாம்.. யாரையும் சந்தேகப்படும் சித்தார்த் உன்னைச் சந்தேகப் படாமல் நம்பிக்கிட்டு இருக்கான்.. எதிரிகளிடம் அலர்ட்டா இருக்கிறவன் உன்னிடம் இயல்பா இருக்கான்.. இதுதான் அவனுக்கான வீக் பாயிண்டாவும் அகர்வாலுக்கான ஸ்ட்ராங் பாயிண்டாவும் இருக்கு.. உன்னோட மனக் குழப்பத்தை அவங்களுக்குச் சாதகமா அவங்க யூஸ் பண்ணிக்கப் பார்க்கிறாங்க.. இதைக்கூட அடையாளம் தெரிஞ்சுக்காத அளவுக்கு நீ என்ன முட்டாளா..?"

யாமின் துடித்துப் போனாள்.. நீரஜாவின் குற்றச் சாட்டில் இருக்கும் உண்மை தீயாக அவளை வளைத்துக் கொண்டது.. அந்த வெப்பத்தில் அவள் மூச்சுத் திணறினாள்..

"ஏழு பிறவி கதையைச் சொன்னயே.. உனக்கு ஒன்று தெரியுமா..? இதுக்கு முன்னாலே சித்தார்த்தும் நீயும் பிறந்த ஆறு பிறவிகளிலும் உன்னால் உன் காதலனுடன் ஒன்று

சேர முடியாமல் போய் விட்டது.. இது ஏழாவது பிறவி.. இந்தப் பிறவியிலாவது உன் காதலை தக்க வைத்து அவனுடன் சேர்ந்து வாழ்ந்து காட்டுவாய்ன்னு நினைச்சுத்தான் உனக்கு வேலை போட்டுக் கொடுக்கச் சொன்னேன்.. நீ என்னடான்னா இந்தப் பிறவியிலும் என் அண்ணனின் நிம்மதியைக் கொல்லும் பகையாளியாய் நின்னு தொலைக்கிற.. வேணாம் யாமினி.. விலகிப் போய்விடு.."

"அப்ப ஏழு பிறவிக் கதையை நீங்களும் நம்பறிங்களா..?"

நீரஜா யாமினியைத் திரும்பிப் பார்த்தாள்.. அவளது கூர்மையான பார்வையில் வாயடைத்துப் போனாள் யாமினி.

"நம்பறேன்னு சொன்னா என்ன செய்யப் போகிற..? அந்த அகர்வால்கிட்ட ஓடிப் போய் மண்டி போட்டு.. 'அப்பா..'ன்னு உறவு கொண்டாடப் போறயா..? அந்த கேடுகெட்ட பரத்குமார் கிட்டப் போய்.. 'ரவிதாசா..!' கத்தியை எடுத்துக்கிட்டு வா.. சித்தார்த்தனைக் குத்திக் கொல்லலாம்ன்னு சொல்லப் போறியா..?"

"நீரஜா..!"

"வேண்டாம் யாமினி..! உன் மனக்குழப்பத்தை ஜெயிக்கிற சக்தி உனக்கு இல்லை.. நீ ஆபத்தானவள்.. அகர்வாலோட பார்வை உன்மேல பட்டுருச்சு.. இதுக்கு மேலேயும் உன்னை சித்தார்த்தன் கூட பழக விட முடியாது.."

"நான் அவரை விட்டு விலக முடியாதுன்னு சொன்னா..?"

"விலக வைப்பேன்.."

யாமினியின் வீட்டுக்கு முன்னால் காரை நிறுத்தினாள் நீரஜா.. அவர்களுக்கு முன்னதாகவே ஸ்கூட்டியில் பறந்து வந்து யாமினியின் வீட்டுக்கு முன்னால் நின்றிருந்த ஜேம்ஸ்.. காரைக் கண்டதும் ஓடி வந்து கதவைத் திறந்து விட்டான்.. நீரஜாவும் யாமினியும் இறங்கினார்கள்.. தயங்கி நின்ற யாமினி..

"வீட்டுக்குள்ள வந்துட்டுப் போங்களேன்.." என்று அழைத்தாள்..

"நோ.. தேங்க்ஸ்.." உடனடியாக மறுத்து விட்டாள் நீரஜா.. மோட்டார் பைக்கின் சப்தம் கேட்டது.. யதுநந்தன் வருகிறான் என்று புரிந்து கொண்ட யாமினி.. அவனிடம் நீரஜாவை என்ன சொல்லி அறிமுகப் படுத்துவது என்ற அவசர யோசனையில் ஆழ்ந்தாள்.. 'புடு..புடு..' சப்தத்ததுடன் வந்து நின்ற மோட்டார் பைக்கில் ஆரோகணித்திருந்த யது நந்தன் நீரஜாவைக் கண்டதும் புருவங்களை உயர்த்தி ஏற இறங்கப் பார்த்து வைத்தான்.. அவனைவிட அதிக தெனாவெட்டாக பார்வையிட்டாள் நீரஜா.. கூலிங்கிளாஸை எடுத்து மாட்டிக் கொண்டாள்..

'ராணி ரங்கம்மா மாதிரி இருக்காளே..'

'திமிர் பிடிச்சவனா இருக்கானே..'

'என்னமோ மகாராணியப் போல போஸ் கொடுக்கிறா..'

'என்னவோ ஜேம்ஸ்பாண்ட் 007 போல விறைப்பா நிக்கிறான்..'

'பணக்காரிங்கற ஹெட் வெயிட்..!'

'ஆம்பளைங்கிற ஆணவம்..'

'ஒரு ஹலோ சொல்றாளான்னு பாரு..'

'ஒரு ஹாய் சொல்கிறானான்னு பாரு..'

இருவரும் பரஸ்பரம் தங்களின் மனதில் திட்டித் தீர்த்தபடி வெளியில் சாதாரணமாய் பார்ப்பதைப் போலப் பார்த்துக் கொண்டார்கள்..

"அண்ணா.. இவங்க நீரஜா..!"

'எந்த நாட்டுக்கு ராணி..? வெறுமனே நீரஜான்னு சொன்னா ஆஹான்னு நான் புரிஞ்சுக்குவேனா..?'

யதுநந்தன் மனதுக்குள் இப்படியாகத்தான் நினைத்து வைப்பான் என்பதை நீரஜா கணித்திருந்தாள்.. அவனும்

அவள் கணிப்பைப் பொய்யாக்காமல் ஓர் எழுத்துக் கூட மாற்றி யோசிக்காமல் அப்படியே நினைத்து வைத்தான்..

"ஓஹோ.."

லேசாகத் தலையை ஆட்டியவன்.. உனக்கு இதுவே அதிகம் என்பதைப் போல கெத்தாகப் பார்த்தபடி.. வண்டியை விட்டு இறங்கினான்.. வண்டிச் சாவியை விரலில் சுழற்றியபடி மீண்டும் ஓர்முறை நீரஜாவை ஏற இறங்க பார்த்து வைத்தான்..

'அடங்க மாட்டேங்கிறானே..'

நீரஜாவின் முறைப்பைக் கூலிங் கிளாஸையும் தாண்டிக் கண்டு கொண்டான் யதுநந்தன்..

"என்னன்னா ஓஹோங்கிற..?"

"வேற என்னத்தைச் சொல்லச் சொல்ற..?"

"இவங்க யாருன்னு தெரியுமா..?"

"இந்தியாவோட பிரைம் மினிஸ்டரா..?"

"அண்ணா.."

"வேற யாருன்னு சொல்லு.. பெயரை மட்டும் சொன்னா என்ன தெரியும்..?"

"எங்க எம்.டி யோட தங்கை.."

'இதுக்குத்தான் இம்புட்டு பில்ட்-அப்பா..?' யதுநந்தன் நீரஜாவை முறைத்து வைத்தான்..

'என் தங்கைக்குத்தான் உன் அண்ணன் எம்.டி. எனக்கில்லை..' அவன் முறைப்பு சொல்லாமல் சொல்லியது..

"அப்படியா..?"

அலட்சியமாகச் சொன்னவனை அவனை விட அலட்சியமாகப் பார்த்து வைத்தாள் நீரஜா.. அந்த முறைப்பையும் கூலிங்க கிளாசைக் கழட்டி விட்டுத்தான் முறைத்தாள்..

"பை யாமினி.. நான் சொன்னதை நினைவில் வைத்துக்க.."

படு அலட்சியமாகக் காரில் ஏறிப் பறந்து விட்டாள் நீரஜா.. கார் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்த யதுநந்தன்..

"செம ராங்கிக்காரியா இருப்பா போல இருக்கே.. அது என்ன.. உன்னை வா, போன்னு கூப்பிடறா.." என்று முகத்தைச் சுளித்தான்..

"அவ, இன்னு சொல்லாதேண்ணா.." கோபப் பட்டாள் யாமினி..

"அதுசரி.. உனக்கு அவ மரியாதை கொடுக்கலைன்னு நான் கேட்டுக்கிட்டு இருக்கேன்.. நீ என்னடான்னா அவளுக்கு நான் மரியாதை கொடுக்கலைன்னு சண்டைக்கு வர்ற.. தேவைதான் எனக்கு.. நீயாச்சு உன் எம்.டியோட தங்கையாச்சு.. எனக்கென்ன வந்துச்சு..?"

அவளை விடக் கோபமாக எகிறிவிட்டு வீட்டுக்குள் போய்விட்டான் அவன்..

பெருமூச்சு விட்டாள் யாமினி.. யதுநந்தனின் கோபத்தில் இருந்த சொந்தத்தில் அவள் மனம் இதமானது.

நீரஜா அவளை ஏக வசனத்தில் பேசியதை யாமினியும் ரசிக்கவில்லைதான்.. இருவரும் சம வயதினராக இருந்தாலும்.. யாமினி நீரஜாவை மரியாதையுடன் அழைக்கும் போது அவள் மட்டும் யாமினியை 'வா.. போ..' என்று பேசியது யாமினியின் மனதுக்கும் நெருடலாகத்தான் இருந்தது.. அவளுக்கு மட்டும் தன் மரியாதை குறைவதில் ஆசையா என்ன..?

சில சமயங்களில் சித்தார்த்தனும்.. சில சமயங்களில் தாமோதரனும் அவளிடம் 'வா.. போ..' என்று ஏக வசனத்தில் பேசி விடுவார்கள்.. யாமினிக்கு மனம் உறுத்தும்.. சற்றுப் பொழுதிலேயே அவர்கள் சரியாகி பழையபடி பேச ஆரம்பித்து விட்டாலும் அந்த உறுத்தல் மறைய வெகு நேரமாகும்..

நீரஜா அவர்களையும் தாண்டி விட்டாள்.. எடுத்த எடுப்பிலேயே ஏகவசனத்தில் பேச ஆரம்பித்து விட்டாள்..

இதையெல்லாம் எதற்காக யாமினி பொறுத்துக் கொள்கிறாள்..? அவளுடைய இயல்பு இதுவல்லவே..

அந்தக் காரணத்தை நினைக்கும் போதே யாமினியின் மனதை இதமான பூங்காற்று வருடிச் சென்றது..

'மயிலிறகே..! மயிலிறகே..!

மனம் வருட வந்தாயா..?'

மனதுக்குள் பாடல் வந்தது.. சித்தார்த்தனும், தாமோதரனும் எவரோ ஒருவரல்ல என்ற சொந்தம் அவள் மனதில் இருக்கும்போது அவர்கள் ஏகவசனத்தில் பேசுவது எப்படி அவளைப் பாதிக்கும்..?

அதிலும் சித்தார்த்தன் இப்போதெல்லாம் 'வாடி.. போடி..' என்றுதான் பேசுகிறான்.. அதிலிருந்த தனிப்பட்ட சொந்தம் பிடித்துப் போனதில் யாமினியும் அதை வெகுவாக ரசித்து விரும்பினாள்..

அந்த சித்தார்த்தனின் தங்கையிடம் எப்படி அவள் கோபப் படுவாள்..

'ஆனாலும்.. அண்ணனின் காதலியை 'வா.. போ..'ன்னா கூப்பிடுவாங்க..?'

மனம் சிணுங்கியபோதே.. நீரஜா சித்தார்த்தனையே அவன், இவன் என்றுதான் அழைப்பாள் என்ற நினைவு வந்தது..

வீட்டுக்குள் போனாள்.. உடை மாற்றி டிவியின் முன்னால் சரிந்திருந்த யதுநந்தன் அவளைப் பார்த்ததும்..

"டாட்டா சொல்லிட்டு வர இவ்வளவு நேரமா..? எங்கே நீ பாட்டுக்கு அவ காருக்குப் பின்னாலே தொடுத்துக் கிட்டு ஓடிட்டயோன்னு நினைச்சேன்.." என்றான்..

"உனக்கு ஏன் அவங்களைப் பிடிக்கலை..?"

"அவங்களா..? அவன்னு சொல்லு.. அவளும்.. அவளோட பணக்காரத் திமிர் காட்டற தோரணையும்.. பிடிக்கலை.. இவங்களை மாதிரி ஆளுககிட்ட இருந்து தள்ளியே நில்லு யாமினி.. அதுதான் நல்லது.."

'யாருக்கு..?' யாமினியின் கண்களில் கண்ணீர் அரும்பியது..

அத்தியாயம் - 102

எனதுயிராய் நீயிருக்க..

உனதுயிரை நான் பறிப்பேனா..?

"இப்ப எதுக்காக என்கூட சண்டைக்கு நிற்கிற..? நான் என்ன உன் எதிரியா..?"

சித்தார்த்தன் யாமினியின் தோள்மீது கை போட்டு தன் பக்கமாக இழுத்துக் கொண்டபடி கேட்டான்.. 'எதிரியா..?' என்ற கேள்வியில் யாமினியின் மனம் குழுங்கியது.. நடுக்கத்துடன் சித்தார்த்தனின் மார்பில் ஒன்றிக் கொண்டாள்.. அவளுடைய மருட்சியை வெகுவாக ரசித்தான் சித்தார்த்தன்.. சில சமயங்களில் உலகத்தில் உள்ள ஒட்டு மொத்த அறிவையும் தன்னிடத்தில் கொண்டிருப்பவளைப் போல பேசும் யாமினி.. பல சமயங்களில் யாரோ அவளைத் துரத்திக் கொண்டிருப் பதைப் போல அஞ்சி நடுங்குவது அவனுக்கு விந்தையாக இருந்தது..'

'எதைப் பார்த்து இவள் பயப்படுகிறாள்..?'

அதுதான் அவனுடைய கேள்வியாக இருந்தது.. அவளிடம் கேட்டால் அவள் மலங்க, மலங்க விழித்தாள்.. அதட்டிக் கேட்டால் விசும்பினாள்.. ஆதரவாகக் கேட்டால் தேம்பி அழுது அவன் தோளில் சாய்ந்தாள்..

"உன் மனசில என்னதாண்டி இருக்கு..?" அலுப்புடன் கேட்டவனுக்கு..

"நீங்கதான் இருக்கீங்க.." என்று பதில் கிடைத்தது..

"யாமினி.."

உணர்ச்சிப் பெருக்குடன் அவளை இறுக்கிக் கொண்டான் சித்தார்த்தன்.. வலிமையான மரத்தின் மீது ஆதரவு தேடிப் படர்ந்து நிற்கும்.. பூங்கொடியாய் அவனைத் தழுவி.. மார்பில் முகம் புதைத்து.. கைகளை அவன் முதுகில் பரத்தி.. அழுந்தப் பிடித்து.. பிணைந்து நின்றாள் யாமினி..

அவளுடைய சரணாகதி அவனை ஈர்த்தது.. எல்லாம் நீயே என்று அவன் மார்பில் ஒன்றி நின்றவளின் மீது அவனுக்கு ஆசை பெருகியது.. தன் காதலால் அவனை வசீகரித்தாள் யாமினி..

'இப்படிப்பட்டவ ஏன் என்கூட சண்டைக்கு நிற்கிறா..?'

அதுதான் அவனுக்கு விளங்கவில்லை.. வேண்டு மென்றே காரணங்களைக் கண்டுபிடித்து அவனைச் சண்டைக்கு இழுத்தாள் யாமினி.. அந்தச் சண்டையை விளையாட்டுச் சண்டையாக்க அவன் முயன்றால்.. தீவிரமான சண்டையாக்கஅவள் முயன்றாள்..

'ஏன்..?'

இந்தக் கேள்விதான் இரவும் பகலும் சித்தார்த்தனின் மனதைப் போட்டுத் துளைத்தது..

அவன்மீது அவள் கொண்டிருக்கும் மயக்கத்தின் ஆழத்தை அவன் அறிவான்.. அதுபோல அவள்மீது அவன் கொண்டிருக்கும் மயக்கத்தின் அளவையும் அவள் அறிவாள்.. ஒருவருக்காக ஒருவர் பிறந்ததைப் போன்ற உணர்வை முதல் சந்திப்பிலேயே உணர்ந்தவர்கள் அவர்கள்.. எதற்காகவும், யாருக்காகவும், அவளை இழந்து விடக் கூடாதென்ற பிடிவாதம் சித்தார்த்தனின் மனதில் நிலை கொண்டிருந்தது.. உயிருக்குயிரான நண்பனிடமே யாமினியை வேலைக்குச் சேர்த்துத்தான் ஆக

வேண்டுமென்று சண்டை போட்டவன் சித்தார்த்தன்.. அப்படிப்பட்ட காதலனிடமா அவள் சண்டை போட்டு விலக நினைக்கிறாள்..?

"ஏண்டி..?"

சித்தார்த்தனின் மனக்குமுறலுக்கு யாமினியின் மௌனமான விசும்பல்தான் பதிலாக கிடைத்தது.. சித்தார்த்தனின் கேள்விக்கான விடையைச் சொல்லி விடு யாமினி என்பதைப் போலக் கால் நனைத்த கடல் அலைகளின் ஸ்பரிசத்தில் அவள் உடல் தூக்கிப் போட்டது.

"எதுக்குப் பயப்படற..?"

"சும்மா.. அலை வரவும் பயந்துட்டேன்.."

'இதைச் சொல்வது யாமினியா..?'

சித்தார்த்தனால் நம்பவே முடியவில்லை.. மகாபலிபுரக் கடலோரம் பிறந்து வளர்ந்தவள், கடலைக் கண்டால் அச்சமில்லையென்று சொல்பவள், நள்ளிரவில் கூட கடற்கரைக்கு வந்து கடலை வெறித்துப் பார்க்கும் விசித்திரமான குண இயல்பைக் கொண்டவள், கடலைக் கண்டு பயப்படுகிறாளா..?

'இது எத்தனை நாளா..?'

சித்தார்த்தனின் புருவங்கள் நெரிந்தன.. அன்றைய தினத்தின் சந்திப்புக்கான இடமாக மகாபலிபுரத்தை யாமினிதான் தேர்ந்தெடுத்தாள்..

"ஹேய்..! அது உன்னோட ஊரில்லையா..?" சித்தார்த்தன் ஆச்சரியப்பட்டான்..

"இருந்தா என்ன..?" விட்டேற்றியாகக் கேட்டாள் யாமினி..

"என்னடி இப்படிக் கேட்கிற..? தனியா மீட் பண்றது எதுக்கு..? இங்கே ஆபிசில கண்ணெதிர்க்க நீயிருந்தாலும் தொட முடியாம எம்.டிங்கிற பொஸிசனில கையைக் கட்டிப் போட்டதைப் போலத் தவிக்கிறேனில்ல.. அந்தத் தவிப்பு

அடங்கறதுக்காக.. தனியா மீட் பண்றப்ப நான் சும்மாயிருப்பேனா..?"

சித்தார்த்தனின் கண் சிமிட்டலில் முகம் சிவந்தாள் யாமினி.. சும்மா இருக்காமல் அவன் என்னவெல்லாம் செய்வான் என்ற நினைவில் அவள் உடலில் மின்சாரம் பாய்ந்ததைப் போல ஜிவ்வென்று ஆனது..

"அந்த மாதிரிச் சமயத்திலே உன் வீட்டைச் சேர்ந்தவங்களோ.. இல்லை.. உன்னைத் தெரிஞ்சவங் களோ நம்மைப் பார்த்து வைச்சிட்டா என்ன ஆகும்..?"

யாமினி விழிகளை உயர்த்தி அவனைப் பார்த்த பார்வையில் எதுவோ இருந்தது.. அது என்னவென்று தெரியாமல் குழம்பிப் போனான் சித்தார்த்தன்..

மறைந்திருந்தே பார்க்கும் மர்மம் என்ன என்று பாடியவளின் மனதில் என்ன மர்மம் ஒளிந்திருக்கிறது..?

"என்ன ஆகும்..?"

அவன் கேட்ட கேள்வியையே அவள் திருப்பிக் கேட்டாள்.. அதுகூடத் தெரியாத அளவிற்கு அவள் சிறு குழந்தையல்ல என்பதில் சித்தார்த்தனின் கண்கள் இடுங்கின..

"நீ என்ன பப்பாவா..?"

"இல்லைன்னு என்னைவிட உங்களுக்குத்தான் நல்லாத் தெரியுமே.."

யாமினியின் இந்தப் பதிலில் சித்தார்த்தனின் இடுங்கின கண்கள் விரிந்தன.. விரிந்த கண்களில் மின்னல் வந்தது..

"ஏய்ய்ய்..!" உடலில் உஷ்ணம் ஏறிவிட்டதை அவன் குரல் உணர்த்தியது..

யாமினி உதட்டைக் கடித்துக் கொண்டாள்.. அவளுக்கும், அவனுக்குமான பிரத்யேக வார்த்தைப் பிரயோகங்களில் ஒளிந்திருக்கும் உணர்வலைகளில் அவள் மனம் மூழ்கித் திளைத்தது.. இப்படிப்பட்டக் காதலை அவள் இழந்து விடுவாளா என்ற விசனம் எழுந்தது..

"கிளப்பி விடாதேடி.. இது ஆபிஸ்.."

"தெரியுது.."

"என்னத்தைத் தெரியுது..? அப்படியே உன்னைக் கடிச்சுத் திங்கனும் போல எனக்கு இருக்கு.. அடக்கி வைச்சுக்கிட்டு இருக்கேன்.. அத்தனை வேகத்தையும் நீ தனியா என்கிட்ட அகப்படறப்போ காட்டுவேனா இல்லையா..?"

"அதுக்கென்னவாம்..?"

"அப்படியாப்பட்ட இடம்.. பிரைவசியான இடமா இருக்கனும்டி.. நீ பிறந்து வளர்ந்த ஊரா இருக்கக் கூடாது."

"பயப்படறீங்களா..?"

ஒரு தினுசாகக் கேட்டாள் யாமினி.. இந்தக் கேள்வியை விளையாட்டாகவும் உச்சரிக்கலாம்.. வம்பிழுக்கவும் உச்சரிக்கலாம்.. ஆதங்கத்திலும் உச்சரிக்கலாம்.. ஆதரவாகவும் உச்சரிக்கலாம்..

வார்த்தைகள் ஒன்று போல இருந்தாலும் உச்சரிக்கும் விதமும், தொனியும் அவற்றின் அர்த்தங்களை மாறு படுத்திக் காட்டும்.. யாமினி உச்சரித்த விதமே வேறு..

குற்றம் சாட்டும் பாவனையில் அவள் கேட்டாள்..

"என்னடி..? பேச்சு ஒரு மார்க்கமா இருக்கு..?"

"எல்லாம் சரியாத்தான் இருக்கு.. நான் பிறந்த ஊரில என்னைச் சந்திச்சுப் பேச ஏன் பயப்படறீங்க..? விசயம் என் வீட்டுக்குத் தெரிஞ்சுட்டா.. என்னவாகிறதுன்னு யோசிக்கறீங்களா..?"

'ஓ..! இவள் இப்படி வருகிறாளா..?'

எதையும் நேருக்கு நேராகப் பேசிவிடும் யாமினி சுற்றி வளைத்துப் பேசிய பேச்சில் வேறு ஒரு யாமினியை அவன் உணர்ந்தான்..

'இவ இப்படியெல்லாம் குதர்க்கமா நினைக்க மாட்டாளே..'

அவள் நினைத்தாள்.. அதை அவனிடம் சொல்லவும் செய்தாள் என்பதில்.. அவன் காதலி அவனை விட்டுத் தொலை தூரமாக விலகிச் செல்வதைப் போல அவனுக்கு இருந்தது..

"உன் வீட்டுக்குத் தெரிஞ்சா என்னவாகிரும்..? உன் அண்ணன் என் சட்டையைப் பிடிப்பானா..?"

சித்தார்த்தன் கோபமாக கேட்டான்.. யதுநந்தன் அதைத்தான் செய்வான் என்பதில் யாமினி துயர் கொண்டாள்.. சித்தார்த்தன் யாமினியுடன் வேலை பார்ப்பவனாக இருந்தால் யதுநந்தன் கோபத்தைக் குறைத்துக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.. எம்.டி என்பதில் யதுநந்தன் சந்தேகம் கொள்வான்.. தங்கையுடன் பிறந்த அண்ணனுக்கேயுரிய ஜாக்கிரதை உணர்வு அவனிடம் வெளிப்படும்.. பரம்பரை கோடிஸ்வரன் ஆத்மார்த்தமாக காதலிக்கிறான் என்பதை யதுநந்தன் நம்ப மாட்டான்.. நிச்சயமாக சித்தார்த்தனின் சட்டையைப் பிடித்துக் கேள்வி கேட்பான்..

"ம்ப்ச்.."

"பதிலைச் சொல்லு.."

"இப்ப எதுக்காக என்னோட அண்ணனைப் பேச்சில இழுக்கறிங்க..?"

"நான் இழுக்கலை.. உன் வீட்டை நீதான் இழுத்த.."

"என்னையும், உங்களையும் தெரியாதவங்க மத்தியிலேதான் சந்திக்கனும்னு நீங்க சொன்னா அதை என்னன்னு நான் எடுத்துக்கிறது..?"

"என்னன்னு எடுத்துக்கலாம்ன்னு இருக்கிற..?"

"நீங்க அலர்ட்டா இருக்கீங்கன்னு எடுத்துக்கத் தோணுது.."

"அலர்ட்டா இருக்கேனா..? உன்னிடமா..? அது எதுக்குடி..?"

"தப்பிக்கத்தான்.."

இப்படிச் சொன்னவளை இமைக்காமல் பார்த்தான் சித்தார்த்தன்..

'இவள் யாமினிதானா..?'

இப்படிப் பேச எப்படி அவளுக்கு மனம் வந்தது..? யாரிடமிருந்து யார் தப்பிப்பது..? ஒருவருக்காக ஒருவர் பிறந்திருக்க.. தப்பித்து ஓடி எதைச் சாதிக்கப் போகிறான்.. எதையோ தேடும் தேடலில் காலத்தைக் கழித்த அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் சந்தித்த முதல் நொடியிலேயே.. அவர்களின் தேடுதல் முடிந்து விட்டதைப் போல உணர்ந்தார்களே.. அவனுக்கான தேடலில் அவளும்.. அவளுக்கான தேடலில் அவனும் காலங்களைக் கடந்ததைக் கண்டுணர்ந்தார்களே.. அவை அத்தனை யையும் இவள் மறந்தாளா..?

"தப்பிச்சு என்னடி செய்யப் போகிறேன்..?" அவன் நிதானமாக கேட்டான்.. யாமினிக்கு அழுகை வந்தது..

'என்னிடமிருந்து தப்பிக்க இவன் நினைப்பானா..?' விசனத்துடன் மனதுக்குள் விம்மினாள்..

அவளுடைய சித்தார்த்தன் அப்படிப்பட்ட வனில்லையே..

அவளுக்கு வேறு வழியிருக்கவில்லை.. நாளுக்கு நாள் அகர்வாலின் தொந்தரவு அதிகரித்துக் கொண்டே யிருந்தது.. தமிழ்பேசி அறியாதவன் 'மகளே..!' என்று செந்தமிழில் பேசிக் கொன்றதில் நிஜமாகவே அவன் வீரபாண்டியனின் மறுபிறவிதான் என்று நம்ப ஆரம்பித்திருந்தாள் யாமினி.. இதில் வேறு..

"ரவிதாசன் வணங்குகிறேன் தேவி..!" என்று ஊடும் பாடும் கண்களில் பட்டு உயிரை எடுத்தான் பரத்குமார்..

கூடவே ஒட்டுப் புல்லைப் போல ஒட்டிக் கொண்டு வந்த வடஇந்திய வாலிபனை..

"தங்களின் இளவல் தேவி..!" என்று அறிமுகம் செய்தும் வைத்தான்..

"இளவலா..?" யாமினிக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

"ஆம் தேவி.. தங்களின் இளவல்தான்.. வீரபாண்டிய மன்னரின் புதல்வர்.. இப்பிறவியில் இவருக்கு முகேஷ் என்ற நாமமாகும்.."

வரவழைத்துக் கொண்ட பணிவுடன் தலை தாழ்த்தி வாய் பொத்தாத குறையாக பரத்குமார் இதைச் சொல்லி முடித்ததும.. அந்த வட இந்திய வாலிபனின் நெற்றியில் நாமம் இட்டிருக்கிறானா என்று கூர்ந்து பார்த்தாள் யாமினி.. அது 'பப்பரப்பா..' என்று வெட்டவெளியாக இருந்தது..

"என்ன பார்க்கறீர்கள் தமக்கையே..?"

தமிழ் தெரியாத அந்த வட இந்திய வாலிபன் 'தமக்கையே' என்று அழைத்து யாமினியின் உயிரைக் குறைத்தான்..

"இத்தனை காலமாக தாங்கள் எங்கிருந்தீர்கள் என்ற ஏக்கத்துடன் தேவி தங்களைப் பார்க்கிறார் இளவரசே..!" என்று பரத்குமார் படுத்தி எடுத்தான்..

'போங்கடா..'

யாமினிக்கு எங்காவது ஓடிவிட வேண்டும் போல இருந்தது..

"அதெல்லாம் ஒன்னுமில்ல.. நாமம்ன்னு சொன்னீங்கள்ல.. அதான்.. இவர் நாமம் போட்டிருக் காரன்னு பார்த்தேன்.."

பெருமாளின் பக்தையான யாமினி விளக்கம் சொன்னதற்கு அந்த பரத்குமாரும், இன்னொருவனும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்..

'இவனுகளுக்குச் சிரிக்கக் கூடத் தெரியுமா..?' யாமினிக்கு கடுப்பாக இருந்தது..

"நாமம் என்றால் பெயர் என்று பொருளாகும் தேவி.." பரத்குமார் சிரிப்பை நிறுத்தாமல் சொன்னான்..

"அதை நேரடியாச் சொல்லித் தொலைக்கிறதுக்கு என்ன..? மத்தவங்ககிட்ட இப்படியா பேசறிங்க..?"

"அவர்களும் தாங்களும் ஒன்றா தேவி..? தாங்கள் வீரபாண்டிய மன்னரின் தவப் புதல்வி..! எங்களின் தேவி..!"

"மிஸ்டர் பரத்..!"

"அடியேனின் நாமம் ரவிதாசன் என்பதாகும் தேவி..!"

"இப்ப அடிதான் வாங்கப் போறிங்க.. படுத்தி எடுக்காதீங்க.. இவர் யார்..?"

"அதுதான் சற்று முன்னர் உரைத்தேனே.."

"அதில் உரைப்புப் பத்தல.. திரும்பவும் உரையுங்க.."

"இப்பிறவியில் இவர் முகேஷ்.. தங்களின் முற்பிறவித் தந்தையான வீரபாண்டியன் இப்பிறவியில் அகர்வால்

என்று பிறப்பெடுத்திருக்கிறார் அல்லவா..? அவரின் தவப்புதல்வர் இவர்.."

'கடவுளே..!' என்றிருந்தது யாமினிக்கு..

இவர்களிடமிருந்து தப்பிக்க மார்க்கமே இல்லையா..? இவை யாவும் பொய்யா.. இல்லை மெய்யா..?

தலையைப் பிடித்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது அவளுக்கு.. எதிரில் பரத்குமார் இருக்கும் நினைவில் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டாள்.. அவளின் மனக் குழப்பங்களைப் பற்றி அவர்கள் தெரிந்து கொள்ளக் கூடாது.. அது இன்னமும் அதிகமான இம்சைகளைக் கொண்டு வந்து நிறுத்தி விடும்..

"இவர் அகர்வாலோட சன்..! அவ்வளவுதானே..? இதைச் சொல்லவா தலையைச் சுற்றி மூக்கைத் தொட்டீங்க..?"

"அது மட்டுமல்ல தேவி..!"

"இதுவே தாங்கலை.. இன்னமும் இருக்கா..?"

"ஆம் தேவி..! முற்பிறவிகளில் ஓர் பிறவியில் தாங்கள் நந்தினி தேவியாகவும்.. அகர்வால் அவர்கள் வீரபாண்டிய மன்னராகவும் பிறப்பெடுத்திருந்தபோது.. இந்த முகேஷ் வீரபாண்டிய மன்னரின் மகனாக ஜனித்திருந்தார்.."

"என்னது..? ஜன்னி கண்டிருந்தாரா..?"

"ஜனித்திருந்தார் தேவி..! அப்படியென்றால் ஜனனம் எடுத்திருந்தார் என்று பொருள்.."

"என்ன கருமமோ.. அதையெதுக்கு என்கிட்டச் சொல்லிக்கிட்டு இருக்கீங்க..? உங்களுக்குத்தான் வேலை வெட்டி இல்லை.. எனக்கு அப்படியில்லை.. தலைக்கு மேல் வேலையிருக்கு.."

"ஒட்டுதல் இல்லாமல் பேசக் கூடாது தேவி..! இவர் யார்..?"

"அகர்வாலோட சன்..! அப்படித்தானே சொன்னீங்க..?"

"அது இந்தப் பிறவியில் தேவி.. கடந்த பிறவிகளில் ஒன்றில் இவர் தங்களின் இளைய சகோதரனாக பிறப்பெடுத்தார்.. இவருக்கு நட்ட நடுநிசியில் யாருமற்ற கானகத்தில் பாண்டிய நாட்டின் மன்னனாகத் தாம் முடி சூட்டினீர்கள்.. மறந்து விட்டீர்களா..?"

நொந்து போனாள் யாமினி.. எதை மறக்க நினைக்கிறாளோ.. அதையே நினைவு படுத்தும் பரத்குமாரை ஈவு இரக்கமற்ற ராட்சசனே என்பதைப் போல பார்த்து வைத்தாள்..

அதற்கெல்லாம் மனம் இரங்குபவனா பரத்குமார்..? எதுவுமே நடக்காததைப் போன்ற இயல்பான பார்வையுடன்..

"தாங்கள் கூடக் காலையில் பாடினீர்களே தேவி..! காலங்கள் தோறும் உன் மடி தேடி கலங்கும் என் மனமேன்னு அழுதீங்களே.. அப்ப மஞ்சள் கலரில நைட்டி போட்டிருந்தீங்க.. தலைமுடியைப் பின்னல் போடாம விரிச்சு விட்டிருந்தீங்க.. நெத்தியில ஸ்டிக்கர் பொட்டு ஒட்டறதுக்கு முன்னாலே ஐடெக்ஸ் மையால பொட்டு வைச்சு.. அதன் மேலே ஸ்டிக்கர் பொட்டை ஒட்டினீங்க.." என்று செந்தமிழும் வழக்குத் தமிழும் சேர்த்து செய்த கலவையில் விவரித்தான்..

'பாவிகளா..!'

யாமினிக்கு வியர்த்து விட்டது.. அவள் வீட்டில் அவள் நடமாடுவதை எங்கிருந்தோ ஒருவன் தெள்ளத் தெளிவாக எப்படி ஒப்பிக்கிறான்..?

அத்தியாயம் - 103

உள்ளிருக்கும் மனதோடு போராடி..

ஓடிக்கொண்டிருக்கும் இவள் வாழ்வு..!

யாமினியால் அதற்கு மேலும் அவன் சொல்வதைக் கேட்டுக் கொண்டு நின்று கொண்டிருக்க முடியவில்லை.. ஓட்டமும் நடையுமாக அங்கிருந்து நகர்ந்து ஸ்கூட்டியை எடுக்கப் போனால் அங்கே கைகளை மடித்துக் கட்டியபடி காரில் சாய்ந்து நின்ற நீரஜா அவளை முறைத்தாள்..

"என்ன..? ஸ்கெட்ச் போட்டு முடிச்சிட்டயா..?" என்று கேட்டாள்..

"ஸ்கெட்ச்சா..?" யாமினி திருதிருத்தாள்..

"ஸ்கெட்ச்தான்ம்மா.. சித்தார்த்தன எங்கே.. எப்படிப் போட்டுத் தள்ளரதுங்கிறதுக்கான ஸ்கெட்ச்..! அதுக்காகத் தானே அந்த அகர்வாலோட மகனும், பெர்சனல் மேனேஜரும் உன்னை மீட் பண்ண வந்திருந்தானுக.."

"பெர்சனல் மேனேஜரா..? யார் அது..?"

"தெரியாத மாதிரியே பிலிம் காட்டற பார்த்தியா.. அந்த அகர்வாலோட கம்பெனியில பெர்சனல் மேனேஜரா இருக்கிற பரத்குமார்தானே உன்னோட நியு பாய் பிரண்ட்..?"

"நீரஜா..!"

உடல் விதிர்விதிர்க்க கத்தி விட்டாள் யாமினி.. அதற்கெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் முகம் முழுக்க வெறுப்பை நிரப்பியபடி நின்றிருந்தாள் நீரஜா..

யாமினியால் நீரஜா சொன்ன வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

"அவன்தான் உன்னை அடிக்கடி மீட் பண்ணி ரகசியம் பேசறானே.. சித்தார்த்தன் கூடக்கூட நீ இவ்வளவு ரகசியமா பேசியிருக்க மாட்ட.. இவன்கூடப் பின்னிப் பிணையறயே.."

"போதும் நீரஜா.. நீங்க லிமிட் தாண்டிப் பேசறிங்க.."

"லிமிட்டைப் பத்தி நீ பேசக்கூடாது.. லாஸ்ட் மன்த்ல என்னடான்னா.. அந்த அகர்வால் மிட்நைட்டில உன் வீட்டுக் காம்பவுண்டுச் சுவரேறிக் குதிச்சு உன்கிட்ட ரகசியம் பேசிட்டு வர்றான்.. அதுக்கப்புறம் என்னடான்னா அகர்வால் கம்பெனியோட பெர்சனல் மேனேஜர் உன்னைப் ஃபாலோ பண்ண ஆரம்பிக்கிறான்.. இன்னைக்கு என்னடான்னா அகர்வாலோட மகனே உன்னைப் பார்க்க வந்திட்டான்.. இதுக்கு மேலேயும் என்னைப் பேசாம இருக்கச் சொல்றியா..?"

"அதுக்காக சித்தார்த்தனைத் தூக்க பிளான் பண்ணினேன்னு பேசலாமா..?"

"வாட் எ லவ்வர் யு ஆர்..! உன்னோட காதலனை கண்ட இடத்தில சுட்டுத் தள்ளனும்கிற வெறியோட அலையறவன்தான் அந்த அகர்வால்..! அது கூடத் தெரியாமலா சித்தார்த்தனை நீ காதல் பண்ற..?"

"நீரஜா.."

"போய் விடு யாமினி..! உன்னைக் கையெடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக்கறேன்.. சித்தார்த்தனை விட்டுத் தூரமா விலகிப் போய்விடு.. அது உனக்கு நல்லதோ இல்லையோ எனக்குத் தெரியாது.. சித்தார்த்தனுக்கு நல்லது.."

உறைந்து நின்ற யாமினியைப் பொருட்படுத்தாமல் போய் விட்டாள் நீரஜா.. அன்று இரவு தூக்கத்தைத் தொலைத்து விடியும் வரை அழுது கொண்டிருந்தாள் யாமினி..

அவள் வீரபாண்டியனின் மரணத்துக்குப் பழி தீர்க்க வேண்டுமா..? ஆதித்த கரிகாலனின் மறு பிறவியான

சித்தார்த்தனைக் கொல்ல வேண்டுமா..? அதன் பின்னால் அவள் உயிர் தரிப்பாளா..?

அந்த அகர்வால் உண்மையிலேயே வீரபாண்டியனின் மறு பிறவிதானா.? தமிழ் தெரியாதவன் செந்தமிழில் பேசித் தள்ளுவது எப்படி..? அவனுடைய மகனும் அதே போல செந்தமிழிலில் பின்னிப் பெடலெடுக்கிறானே.. அது எப்படி..?

பரத்குமார் என்பவன் ரவிதாசன் என்று கதை பிணைகிறானே.. அவள் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் அவள் உடுத்தியிருக்கும் துணிகளின் கலர்கள் முதற் கொண்டு அவள் பேசுகின்ற விவரங்கள் வரை அனைத்தையும் பக்கத்தில் இருந்துப் பார்த்தவனைப் போல ஒப்பிக்கிறானே.. அது எப்படி..?

எங்கு சென்றாலும் அவளைப் பின் தொடர்ந்து யாரோ வருகிறதைப் போல யாமினி உணர்ந்திருந்தாள்.. அது எவர்..? யார் அனுப்பி அவளை நிழல் போலத் தொடரும் வேலைகளைச் செய்கிறார்கள்..? அவர்களுக்கும் அவளுக்கும் என்ன பகை..? அவளை மட்டும் அவர்கள் குறி வைப்பதற்கான காரணம் என்ன..?

இதற்கெல்லாம் விடை தெரியாமல் களைத்துப் போனாள் யாமினி.. இந்த நிழல் ஆட்ட யுத்தத்திற்கான முடிவு எப்போது வரும்..? யாரால் வரும்..? இந்த சுதந்திர இந்தியாவில் அவளுடைய சுதந்திரத்திற்காக குரல் கொடுக்க யார் வருவார்..?

விடை தெரியாத இவ்வினாக்களுடன் போராடிப் போராடி அவள் ஓய்ந்து போனாள்.. விடிகின்ற வேளையிலே அவள் மனம் ஓர் முடிவுக்கு வந்திருந்தது..

காதல் என்பது எது..? காதலிப்பவரைப் காப்பது..

காதலனைக் காப்பதற்காக காதலை விட்டுக் கொடுத்தால்தான் என்ன..? யாமினி சித்தார்த்தனை விட்டு விலகும் முடிவை எடுத்தாள்.. அதற்கான முதல் கட்டமாக

அவளும் சித்தார்த்தனும் அடுத்துச் சந்திக்கும் இடமாக மகாபலிபுரக் கடற்கரையை முடிவு செய்தாள்..

"அது உன் ஊருடி.." தயங்கிய சித்தார்த்தனிடம்..

"ஊருக்கும் என் குடும்பத்துக்கும் தெரிஞ்சுட்டா வேறு வழியில்லாம என்னை மேரேஜ் பண்ணிக்க வேண்டியிருக்கும்ன்னு பயப்படறீங்களா..?" என்று சண்டைக்குப் போனாள்..

"எனக்கெதுக்குடி பயம்..? உன்னை விட்டுட்டுப் போகனும்னு நினைச்சாத்தான் மாட்டிக்கிருவோமோன்னு பயம் வரும்.. உன்னை விட்டுப் போகும் எண்ணம் எனக்கில்லைடி.. ஸோ.. பயம் என்னைக் கண்டா பயப்படும்.. புரியுதா..?"

புரிகிறது என்று சொல்லாமல் சூன்யவெளியை வெறித்துப் பார்த்தாள் யாமினி..

இப்படி ஒரு காதலன் கிடைக்க அவள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.. என்ன இருந்து என்ன பண்ண..? அவனுடன் சேர்ந்து வாழும் கொடுப்பினை அவளுக்கு இல்லாமல் போய் விட்டதே..

சித்தார்த்தனுக்கு அவளால் ஆபத்து ஏற்பட்டு விடும் எனும் சூழல் நிலவும்போது அவளால் என்ன செய்ய முடியும்..? அவனைக் காக்க அவனை விட்டு அவள் விலகி நிற்க வேண்டுமென்றால் அவள் அதைச் செய்துதான் ஆக வேண்டும்..

மகாபலிபுரத்துக்கு வந்த போது யாமினியின் உடலில் ஓர் அதிர்வு வந்தது.. வழக்கமான அதிர்வாக அது இருக்க வில்லை.. அவளும் சித்தார்த்தனும் சேர்ந்து நடந்து கடலலையில் கால் புதைத்தபோது காதுகளில் சலங்கையின் ஒலியைக் கேட்டாள் யாமினி..

"ஏகாம்பரேஸ்வரா..!" வாய் விட்டு முணுமுணுத்தாள்.

அவளை ஆச்சரியமாகப் பார்த்தான் சித்தார்த்தன்..

"நீ பெருமாள் பக்தையாச்சே.."

"அதுக்கென்ன இப்ப..?"

"இல்லே.. விட்டா ஆண்டாளைப் போல பெருமாள் பெயரைச் சொல்லிக்கிட்டு பஜனை பாடக் கிளம்பி விடறவளைப் போல இருக்கிறவ.. எங்க ஊரு ஏகாம்பரேஸ்வரரைக் கும்பிடறயே..."

"ஹலோ..! எல்லாக் கடவுளையும் கும்பிடலாம்.. அது கூடாதுன்னு சாமியே சொல்றதில்லை.. நீங்க என்ன சொல்றது..?"

"தப்புத்தாண்டி.. கன்னத்தில வேணும்னா போட்டுக்கவா..?"

அவன் கள்ளச் சிரிப்போடு கேட்டான்.. காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரரை அவள் வணங்கியதில் அவனுக்குக் கொள்ளைப் பெருமை..

"இப்பவே புருசன் வீட்டு சாமியை தாஜா பண்ணிக்கறயா..?" என்று கிண்டல் செய்தான்..

'புருசன் வீட்டுச் சாமி..!'

காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரரை மனதுக்குள் வணங்கிக் கொண்டாள் யாமினி.. அவள் பெருமாள் பக்தைதான்.. அவள் மனதில் ஏகாம்பரேஸ்வரரைக் குறித்த பக்தி எப்படி எழுந்தது என்று அவளுக்கே தெரியவில்லை.. அவள் மனதின் ஓர் மூலையில் ஏகாம்பரேஸ்வரரின் கோவில் தெரிந்தது.. அதில் சுழன்றாடிய சலங்கையின் நாதம் கேட்டது..

"சித்தார்த்..."

துரத்தும் நினைவுகளிடமிருந்து தப்பிக்க சித்தார்த்தனின் மார்பில் அடைக்கலம் புகுந்தாள் யாமினி.. அவளைக் கட்டித் தழுவிக் கொண்டான் அவன்.. இருவரும் சுற்றுப்புறத்தை மறந்து நின்றபோது..

"யாமினி.." என்ற கோபமான குரல் கேட்டது..

'யது..!'

யாமினி அவசரமாக சித்தார்த்தனை விட்டு விலகினாள்..

"ஏன்..?" அவன் விட மறுத்தான்..

"அண்ணன்..!" யாமினி நடுங்கினாள்..

சித்தார்த்தனின் முகம் மாறியது.. யாமினியிடம் இத்தனை நடுக்கத்தை அவன் எதிர்பார்க்கவில்லை.. சித்தார்த்தனைக் காதலிக்கிறேன் என்று அவள் வீட்டாரிடம் ஒப்புக் கொள்வதற்கு அந்த அளவுக்கு அவள் நடுங்க வேண்டுமா..?

"ஸோ வாட்..? அதுக்காக இந்த அளவுக்கு பயப்படனுமா..?" சித்தார்த்தனின் குரலில் கண்டனம் இருந்தது..

"அவ என் தங்கை..! எங்க வீட்டுப் பெண்..! பயப்படத்தான் செய்வா.."

பக்கத்தில் வந்த யதுநந்தன் யாமினியின் கையைப் பிடித்துத் தன் பக்கமாக இழுத்து நிறுத்தியபடி சொன்னான்..

"மிஸ்டர் யதுநந்தன்..! ஐ ஆம் சித்தார்த்தன்.."

அவனிடம் கை நீட்டிய சித்தார்த்தனின் கை பிடித்துக் குழுக்காமல் அவனை முறைத்தான் யதுநந்தன்..

"சித்தார்த்தன்னு மொட்டையாச் சொன்னா எப்படி..? நீ என்ன பெரிய இவனா..?"

சித்தார்த்தனுக்குள் கோபம் குமிழிட்டது.. கட்டுப் படுத்திக் கொண்டான்..

'இவன் யாமினியின் அண்ணன்..!'

அந்த ஒரு காரணத்தினாலே தழைந்து போக நினைத்தவனை எதிரிக்காரனைப் போல முறைத்து வைத்தான் யதுநந்தன்..

"நான் ஒன்னும் பெரிய இவனில்லை யதுநந்தன்.. யாமினி வேலை பார்க்கிற சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி மட்டும்தான் நான்.."

"உன் கம்பெனியில என் தங்கை வேலை பார்த்தா காதல்ன்னு ஆசை காட்டிருவியா..?"

"யதுநந்தன்.."

"ஏய்.. உன்னைப் பத்தித் தெரியும்டா.. ராஜ வம்சத்தில பிறந்த பரம்பரைப் பணக்காரன்.. என் தங்கையைக் கல்யாணம் பண்ணிக்குவானா..? நீங்கள்ளாம் சமதையா நின்னு பேசக்கூட யோசிப்பீங்கடா.. என் தங்கை கழுத்தில நீ தாலியைக் கட்டிருவியா..? நீ விளையாடிப் பார்க்க என் தங்கை என்ன களிமண் பொம்மையா..?"

"வி லவ் ஈச் அதர்.."

"அப்படிச் சொன்னாத்தானே என் தங்கை உன் பின்னால் வருவா.. உங்களை மாதிரிப் பணக்காரங்க எங்களை மாதிரி மானம், மரியாதை பார்க்கிறவங்ககிட்ட காதல்ங்கிற பேரைத்தானே யூஸ்பண்ணி ஏமாத்தப் பார்ப்பீங்க..?"

"ஷட் அப் யதுநந்தன்.."

"யு ஷட் அப் சித்தார்த்தன்.. இவ என்னோட தங்கை.. நீ சொடக்குப் போட்டுக் கூப்பிட்டதும் உன் பின்னாலே ஓடி வருகிறதுக்கு நீ வேற ஆளைப் பாரு.. என் தங்கை உன் விளையாட்டுக்குச் சரிப்பட மாட்டா.. வா யாமினி.."

"நில் யாமினி.. போகாதே.."

"ஏய்.. நீ நில்லுன்னா நிற்கிறதுக்கு வேற ஆளைப் பாருன்னு சொல்லிட்டேனில்ல.. அதுக்கப்புறமும் எதுக்காக என் தங்கையின் வழிக்கு வருகிற..?"

"நாம பொறுமையா பேசலாம் யதுநந்தன்.."

"எதுக்குப் பேசனும்..? உன்னை எனக்குப் பிடிக்கலை.. உன்னை மாதிரியான பணக்காரனுகளை என்னைக்குமே நான் நம்பறதில்லை.."

"உங்க தங்கைக்கு என்னைப் பிடிச்சிருக்கு.. அவ என்னை நம்பறா.."

"இவளுக்கு என்ன தெரியும்..? சில விசயங்களில இவ பச்சை மண்ணு.. எல்லோரையும் நல்லவங்கன்னு நம்பிருவா.."

"நான் கெட்டவனா..?"

"மிஸ்டர் சித்தார்த்தன்.. உன் கம்பெனியில என் தங்கைக்கு வேலை கிடைச்சப்ப பெரிய கம்பெனியில என் தங்கைக்கு வேலை கிடைச்சிருக்குன்னு சந்தோசப் பட்டேன்.. இப்ப உன்கூட அவளைச் சேர்த்துப் பார்த்தப்ப பெரிய இடத்தில என் தங்கைக்கு வாழ்க்கை கிடைக்கப் போகுதுங்கிற சந்தோசம் எனக்கு வரலை.. பயம்தான் வருது.."

"இல்லை யதுநந்தன்.. இது தேவையில்லாத பயம்.."

"எனக்குத் தேவையான பயம்.. நீயாரு..? தி கிரேட் இண்டஸ்ட்ரியலிஸ்ட் விவேகானந்தனோட மகன்.. உன் அம்மா பெரியக் கட்சித் தலைவரோட மகள்.. ராஜ பரம்பரையில பிறந்த உன் அப்பா.. ராஜ பரம்பரையில பிறந்த உன் அம்மாவைத்தான் கல்யாணம் பண்ணியிருக்காரு.. பாரம்பர்யமா வேற குடும்பங்களில் இருந்து நீங்க பெண் கொடுத்துப் பெண் எடுக்கறதில்லை.."

"அது போன ஜெனரேசன்.. இந்த ஜெனரேசனே வேறு.."

"எல்லா ஜெனரேசனிலயும் உன்னைப்போல பரம்பரைப் பெருமையோட கோடிஸ்வரனாப் பிறந்தவனோட மெண்டாலிட்டி ஒன்னாத்தான் இருக்கும்.. இப்பக் காதல் மயக்கத்தில சமத்துவம் பேசுவ.. நாளைக்கே உன்னை உட்காரவைத்து உன்னைப் பெத்தவங்களும், கூடப் பிறந்தவளும், பரம்பரைப் பெருமையை எடுத்துச் சொல்லி உபதேசம் பண்ணினா காதலை மறந்து அவங்க கைகாட்டற பெண்ணோட கழுத்தில தாலியைக் கட்டிருவ.. அதான் உன் தங்கையை அன்னைக்குப் பாத்தேனே.. என்ன திமிர்..! என்ன தெனாவெட்டு..! நீங்கள்ளாம் ஒரே குட்டையில ஊறின மட்டைக.. உங்க சகவாசமே எங்களுக்கு வேணாம்.."

யாமினியை இழுத்துக் கொண்டு போய் விட்டான் யதுநந்தன்.. யாமினி மறுக்காமல் அவனுடன் போய் விட்டதில் மனம் வெறுத்துப் போனான் சித்தார்த்தன்.. அவனும் யதுநந்தனும் வாதாடிக் கொண்டிருந்த போது.. ஊடே ஒரு வார்த்தைகூட யாமினி பேசவில்லை என்பதை அவன் மனம் நினைவு படுத்தியது..

மறுநாள் காலையில் வேலைக்கு வருபவளை ஒரு பிடி பிடிக்க வேண்டுமென்ற ஆக்ரோசத்துடன் கம்பெனிக்குப் போனான்.. அங்கே யாமினி இல்லை.. அவளுடைய ராஜினாமாக் கடிதம்தான் இருந்தது..

"என்னடா இது..?" தாமோதரன் புருவங்களை உயர்த்தினான்..

"உன் மனதுப்பிரகாரம் அவள் வேலையை விட்டுட்டுப் போயிட்டா.. இனி நிம்மதியா இருப்பேல்ல.." சித்தார்த்தன் எரிந்து விழுந்தான்..

அன்று முழுவதும் ஆபிசில் கண்ணில் படுகிறவர் களையெல்லாம் கடித்துக் குதறுகிறவனாய் பாடாய் படுத்தி எடுத்து விட்டான் சித்தார்த்தன்.. ஒரு நாளும் இல்லாத திருநாளாய் வயலெட்டின் முகத்தில் அவன் ஃபைலை வீசியடித்ததாக அலுவலகத்தில் செய்தி பரவியது..

"ஸ்வீட் எடு.. கொண்டாடு.." என்று அந்தச் செய்திக்காக இனிப்பு வழங்கிக் கொண்டாடி மகிழ்ந்த அலுவலகப் பெருமக்கள் அதைப்பற்றி வயலெட்டிடம் கேட்ட போது.. அவள் அச்செய்தியில் துளியளவும் உண்மையில்லை என்று மறுத்தாள்..

"யு ஆர் தி பெஸ்ட் வொர்க்கர்ன்னுதான் எம்.டி என்னை அப்ரிசியேட் பண்ணினாரு.. வேற ஒன்னுமில்லை.."

முழுப்பூசணிக்காயை அவள் சோற்றில் மறைத்தாள்.. நம்பாத முகபாவனையுடன் அவள் சொன்னதைக் கேட்டுக் கொண்டவர்கள்.. அவள் தலை மறைந்ததும்..

"நீ வேற.. யு ஆர் தி வொர்ஸ்ட் வொர்க்கர்ன்னுதான் எம்.டி இவ முகத்தில ஃபைலை வீசி எறிஞ்சாராம்.. எப்படி பிளேட்டை மாத்திப் போடறா பாரு.." என்று பேசிக் கொண்டார்கள்..

என்னதான் மாட்டிக் கொண்டவர்களைப் பற்றிப் பேசிச் சிரித்தாலும்.. தாங்களும் அந்த லிஸ்டில் மாட்டிக் கொண்டு விடக் கூடாதென்ற உதைப்பு அனைவரிடமும் இருந்தது.. 'பதக்.. பதக்..' என்ற மனக்கவலையுடன் அன்றைய நாளைக்

கடந்தவர்கள் அலுவலகம் முடிந்த அடுத்த செகண்டிலேயே.. தப்பித்தேன், பிழைத்தேன் என்று வீட்டைப் பார்த்து ஓட்டம் பிடித்தார்கள்..

அன்று இரவே சித்தார்த்தன் வெளிநாட்டுக்குப் பறந்து விட்டான்..

அத்தியாயம் - 104

பிரிவதற்கா பிறந்து வந்தோம்..?

சரிவதற்கா மணல் வீடு கட்டினோம்..?

'மணல் வீடு போல என் காதல் ஆகி விட்டது..'

முழங்கால்களைக் கட்டிக் கடற்கரை மணலில் அமர்ந்திருந்த யாமினி பெருமூச்சு விட்டாள்.. அவள் முன்னால் மணலால் கட்டப் பட்ட அழகான வீடு இருந்தது.

'எந்த நொடியிலும் இந்த மணல் வீடு சரிந்து விடும்.'

அவளுக்குத் துயரமாக இருந்தது.. இது நடக்க வேண்டுமென்றுதானே அவள் நினைத்தாள்.. அதற்காகத் தானே மகாபலிபுரத்துக்குப் போகலாம் வா என்று சித்தார்த்தனைக் கூப்பிட்டாள்.. அவள் பிறந்து வளர்ந்த ஊர் அது.. அங்கே அவர்கள் சந்தித்துக் கொண்டால் தெரிந்தவர்களின் கண்களில் பட்டு விடும் அபாயம் இருக்கிறது என்று சித்தார்த்தன் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்காமல் பிடிவாதமாக அவனை அங்கே அழைத்துச் சென்றாள்.. மறுத்தவனைப் பார்த்து பயப்படுகிறாயா என்று கேட்டு உசுப்பேற்றி விட்டாள்..

இத்தனையையும் செய்தது எதற்காக..?

சித்தார்த்தன் கணித்தபடி.. அவளைத் தெரிந்தவர்களின் பார்வையில் அவர்கள் பட்டு விடவேண்டும் என்பதற்காக..

யாமினியின் ஆசைப்படி.. அவளுடைய கூடப்பிறந்த அண்ணனே அவர்களைப் பார்த்து விட்டான்.. சித்தார்த்தனின் சட்டையைப் பிடிக்காத குறையாக கேள்வி கேட்டு விட்டு அவளைக் கைப்பிடியாய் இழுத்துக் கொண்டு வந்து விட்டான்.. அதுதான் சாக்கென்று யாமினியும் வேலையை விட்டு விட்டாள்..

நீரஜா கேட்டுக் கொண்டதைப் போல சித்தார்த்தனை விட்டு விலகி நின்று விட்டாள்.. மனதில் மட்டும் அமைதியில்லாமல் புயல் அடித்துக் கொண்டிருந்தது..

"யாமினி.."

நிமிர்ந்தாள்.. யதுநந்தன் நின்று கொண்டிருந்தான்.. உயிர்ப்பில்லாத குரலில்..

"உட்காரு.." என்றாள்..

அவன் யாமினியின் பக்கத்தில் உட்கார்ந்தான்.. அவள் கட்டியிருந்த மணல் வீட்டைப் பார்த்தான்..

"பெரிய அலையா ஒன்னு வந்து கரையில விழுந்தா.. இந்த மணல் வீடு கலைஞ்சிரும்.." விரக்தியாகச் சொன்னாள் யாமினி..

யதுநந்தனின் பார்வை கூர்மையாக அவள்மீது படிந்தது..

"கலைஞ்சிரப் போகுதுன்னு தெரிஞ்சபின்னாலும் எதுக்காக வேலை மெனக்கெட்டு மணல் வீட்டைக் கட்டனும்..?"

யாமினி வெறுமையாக சிரித்து வைத்தாள்.. யதுநந்தனின் கேள்விக்கு என்ன பொருளென்று அவளுக்கா புரியாது..?

"ஆக்சுவலா இது கல் கோட்டை அண்ணா.. உன்னால்தான் அதை உணர முடியாது.. ஏழு பிறவிகளாய் தொடர்ந்து வரும் உணர்வுப் போராட்டங்களைப் பற்றி உனக்கு எதுவும் தெரியாது.. சொன்னாலும் நம்ப மாட்ட.. ஏழேழு பிறவிகளாய் எனைத் தொடர்ந்து அவர் வந்து கொண்டிருக்கிறார்.."

யதுநந்தனுக்கு கவலையாக இருந்தது.. தங்கையின் புத்தி சுவாதீனத்தை அவன் சந்தேகித்தான்.. இப்படி எவருக்கும் புரியாமல் விசித்திரமாகப் பேசுகிறாளே என்றிருந்தது அவனுக்கு..

"ஏழு பிறவிகளாய் தொடர்ந்து வருகிறானா..?"

விளக்கெண்ணையைக் குடித்தவனைப் போல முகத்தை வைத்துக் கொண்டவனைப் பார்க்காமல் கடலை வெறித்த வண்ணம் தலையை ஆட்டினாள் யாமினி..

"நீ பாட்டுக்கு உன் பிரண்ட்ஸ், அக்கம் பக்கம்ன்னு பேசறவங்ககிட்ட இதைப் போல பினாத்தி வைக்காதே.." யதுநந்தன் எச்சரித்தான்..

"ஏன்..?"

"ஏனா..? உன்ன மெண்டல்ன்னு முடிவு பண்ணிருவாங்க.."

"ம்ப்ச்.. இதுக்குத்தான் சொன்னேன்.. நீ நம்ப மாட்டேன்னு.."

"நானுன்னு இல்லை.. யாரும் நம்ப மாட்டாங்க.."

"நம்பாட்டிப் போ.."

"அவனை மறந்துரு யாமினி.. உன் நல்லதுக்குத்தான் சொல்றேன்.."

யாமினி சிரித்தாள்.. அவள் சிரித்த விதத்தில் தங்கைக்கு ஏதோ ஆகி விட்டது என்று யதுநந்தன் பயந்து போனான்.. சிரித்து முடித்தவள் யதுநந்தனைப் பார்த்து நிதானமாகச் சொன்னாள்..

"மறக்கத்தான் டிரை பண்றேன் அண்ணா.. என் நல்லதுக்காக இல்லை.. சித்தார்த்தனோட நல்லதுக்காக.."

இப்படியொரு விசித்திரப் பதிலைச் சொல்லும் வினோதப் பிறவிக்கு அண்ணனாகப் பிறந்து தொலைத்து விட்டோமே என்று ஆற்றாற்றுப் போனான் யதுநந்தன்..

அவன் என்ன சொல்கிறான்.. அவள் என்னத்தைச் சொல்லித் தொலைக்கிறாள்..

"உனக்கென்ன குறை யாமினி..?"

"நானே குறைதான் அண்ணா.."

பெருமூச்சுடன் சொன்னவளின் பேச்சு பக்கத்தில் உட்கார்ந்திருப்பவர்களின் காதுகளில் விழுந்து தொலைத் திருக்குமோ என்ற பதட்டத்துடன் சுற்று முற்றும் பார்த்தான்.. நல்ல வேளையாக அன்றைக்கென்று பார்த்து மகாபலிபுரக் கடற்கரையில் அவ்வளவாக கூட்டமில்லை.

"நீ ஒரு முடிவோடதான இருக்கியா..?"

"ஏன் இப்படிச் சொல்ற..?"

"எதைப் பேசினாலும் வில்லங்கமாவே பேசி வைக்கிற.. இந்த உச்சி வெயிலில பீச் மணல்ல வீடு கட்டிக்கிட்டு இருக்கிற ஒரே ஆள் நீயாத்தான் இருப்ப.. எழுந்திருச்சு வீட்டுக்குப் போ.."

"அங்கே போய் என்ன செய்ய..?"

"அம்மாவுக்குப் போன் போட்டு.. பரணில கிடக்கிற மரப்பாச்சி பொம்மை, நடைவண்டி, செப்பு சாமான்கள்ன்னு எல்லாத்தையும் இறக்கிக் கடை பரத்தி வைக்கச் சொல்றேன்.. பீச்சில விளையாடற சின்னப் புள்ளை விளையாட்ட வீட்டிலேயே விளையாடு.."

கடுப்போடு பேசினவனிடம் சண்டைக்கு வராமல் சோர்வாக பார்த்து விட்டு.. வீட்டைப் பார்த்துப் போன யாமினியின் நடை தொய்ந்திருந்தது.. யதுநந்தனுக்கு வேதனையாக இருந்தது.. என்னதான் அனுராதாவின் அகராதிப்படி.. 'மெகாலு..' பிடித்தவளைப் போல இருந்தாலும்.. யதுநந்தன் சீண்டிவிட்டால் அத்தனை மன பிரமைகளையும் உதறித் தள்ளி விட்டு அவனுடன் சண்டைக்குக் கிளம்பி விடுவான்..

'அந்த யாமினியா இவள்..?'

சித்தார்த்தனைப் பிரிவதினால் இந்த அளவுக்கு ஒடிந்து போவாள் என்றால் எதற்காக யாமினி எதிர்த்துப் போராடவில்லை..? என்னவோ சித்தார்த்தனை விட்டு விலகுவதற்காக காத்திருந்ததைப் போல யதுநந்தன்

சொன்னதும் 'பொசுக்' கென்று வேலையை விட்டு விட்டாளே..

'ஒருவேளை.. இவ ஏதோ ஒரு நிர்பந்தத்தில சித்தார்த்தனைக் காதலிப்பதைப் போல நடிச்சாளோ..?'

யாமினியின் கண்ணீர்முகம்.. யதுநந்தனின் அந்த சந்தேகத்தைப் பொய் என்றது..

எப்படி யோசித்தாலும் விடை கிடைக்காமல் போனதில் ஆயாசத்துடன் எழுந்து கொண்டான் யதுநந்தன்.. கடல்காற்றில் முடிபறக்க.. பேண்ட் பாக்கெட்டில் கை விட்டபடி நடந்து வந்தவன் மேல் எதிரில் வந்த பெண் மோதி வைத்தாள்..

"ஏங்க.. பார்த்து வர மாட்டிங்களா..?"

எரிச்சலுடன் விலக்கி விட்டவன் அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்ததும்.. உதடுகளைச் சுழித்து..

"நீங்களா..? அதுதானே பார்த்தேன்.. எங்க ஊர் பொண்ணுக எல்லாம் கூலிங்கிளாஸை மாட்டிக்கிட்டுக் கண்ணு தெரியாம யார் மேலயும் இடிச்சு வைக்க மாட்டாங்களேன்னு நினைச்சேன்.. என் நினைப்பு சரியானதா இருக்கு.." என்றான்..

கூலிங்கிளாஸ் போட்டிருந்த நீரஜாவின் முகம் சிவந்து விட்டது..

"திமிரா..?" என்றாள்..

"கொழுப்பான்னு ஏன் கேட்கலை..? அதெல்லாம் உங்களைப் போல கோடிஸ்வரங்களுக்குத்தான் இருக்கும்ன்னு முடிவே பண்ணிட்டிங்களா..?"

"மிஸ்டர்.."

"போங்க.. போய் உங்க அண்ணன்கிட்டச் சொல்லுங்க.."

"என்ன சொல்ல..?"

"செக்கரட்டரிகிட்ட ஆபிஸ் வேலையை மட்டும்தான் சொல்லனும்.. காதல் அது இதுன்னு சொல்லி அவ

மனசைக் குழப்பி விடக்கூடாது.."

"என் அண்ணன் உங்க தங்கையோட மனசைக் குழப்பி விட்டானா..? ஹா.. ஹா.."

"எதுக்கு இந்த சிப்பு..?"

"சிப்புச் சிப்பா வருது.. இந்த இயரோட குட் ஜோக்கே இதுதான்.. குழப்பி விடற அளவுக்கு தெளிஞ்ச மனசிருக்கிற தங்கையோடப் பிறந்தவரைப் போல ரோசமாய் பேசக் கூடாது.. அது ஏற்கனெவே குழம்பிப் போயிருக்கிற குட்டை.. இதில் என்னோட அண்ணன் வந்து உங்க தங்கையோட தெளிஞ்ச நீரோடையான மனசைக் குழப்பி விட்டுட்டானாம்.. எப்படித்தான் இப்படிப் பேசறிங்களோ.."

நீரஜாவின் ஏளனத்தில் முகம் கருத்தான் யதுநந்தன்.. யாமினியைப் பற்றி எவ்வளவு எளிதாகப் பேசுகிறாள் இவள் என்ற கோபம் அவனுக்குள் வந்தது..

"ஓ..! குழம்பிப் போன குட்டைங்கிறதினாலதான் உங்க அண்ணன் அதில மீன் பிடிக்கப் பார்க்கிறானா..?"

இப்போது முகம் கருப்பது நீரஜாவின் முறையாகிப் போனது..

"என் அண்ணன் மீன் பிடிக்கப் பார்த்தா உன் தங்கை எதுக்காக அதுக்கு இடம் கொடுக்கிறா..?"

நன்றாகத்தான் கேட்டு வைத்தாள் நீரஜா.. பல்லைக் கடித்தான் யதுநந்தன்..

"பெண்ணுக்குப் பெண்தாங்க எதிரி.."

"இருந்துட்டுப் போறோம்.."

"உங்க அண்ணன்கிட்ட என் தங்கை வேலை செய்ய மாட்டா.."

"குட்நியூஸ்.."

"உங்க அண்ணனும் அதைப்போல விலகிப் போயிடனும்.."

"அவன் வெளிநாட்டுக்கே போயிட்டான்.."

"திரும்பி வந்ததும் யாமினியைத் தேடி வரக்கூடாது.."

"இதை உங்க தங்கையிடம் சொல்லுங்க.. அவ சித்தார்த்தனைத் தேடி வராமல் இருந்தால் சரி.."

அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் சளைக்காமல் சண்டை போட்டுக் கொண்டிருந்த போது கையிரண்டிலும் இரு ஐஸ்கிரிம் கப்புகளோடு அங்கே வந்தான் தாமோதரன்.. நீரஜாவை புன்னகை மன்னனாக நெருங்கியவன் யதுநந்தனைப் பார்த்ததும் முகத்தைச் சுளித்தான்..

"இவன்கூட உனக்கென்ன பேச்சு..?" நீரஜாவை அதட்டினான்..

'இவனா..?'

தாமோதரனை முறைத்த யதுநந்தன் வேண்டு மென்றே நீரஜாவை உச்சந்தலை முதல், உள்ளங்கால் வரை பார்த்து வைத்தான்.. அதில் வெறியாகிப் போன தாமோதரன் யதுநந்தனுடன் மணலில் புரண்டு சண்டை போடத் தயாரானவனாக சண்டைக் சேவலைப் போல சிலிர்த்தான்..

"அடங்குடா.. இவங்ககிட்டப் பேசனும்னு யாரும் இங்கே நாக்கைத் தொங்கப் போட்டுக்கிட்டு ஜொள் விட்டுக்கிட்டு அலையலை.. அதை முதலில் மனசில ஏத்திக்க.. கோடி ரூபாய் கொடுத்தாலும் கோடிஸ்வரியை நான் சைட் அடிக்க மாட்டேன்.. எனக்கெல்லாம் காலையில நான் கண் விழிக்கறப்போ.. மங்களகரமா ஈரத்தலையைத் துண்டால சுத்திக்கிட்டு.. நெத்தியில ஸ்டிக்கர் பொட்டும்.. உச்சி வகிட்டில குங்குமமுமா.. சேலை கட்டிக்கிட்டு கையில காபித் தம்ளரோட நிற்கிற பொண்ணுதான் வேணும்.. எனக்கு குளிக்க டவல் கொடுத்து.. சோப் கொடுத்து.. முடிஞ்சாக் குளிப்பாட்டி விட்டு.. ஈரத்தலையைத் துவட்டி விட்டு.. பேண்ட், சர்ட்டை செலக்ட் பண்ணிக் கொடுத்துச் சட்டை பட்டனைப் போட்டு விடற பொண்டாட்டிக்காகத்தான் நான் காத்திருக்கேன்.. இதெல்லாம் இந்தப் பொண்ண சைட் அடிச்சாக் கிடைச்சுருமா..?" யதுநந்தன் அலட்சியமாக நீரஜாவைப் பார்த்தான்..

"இண்ட்ரெஸ்டிங்.." அடிக்குரலில் நீரஜா முணுமுணுக்க..

"நீயென்ன சவலைப் பிள்ளையாடா..?" என்று கேட்டு வைத்தான் தாமோதரன்..

"என்னடா உடன்பிறப்பே..! இப்படிக் கேட்கிற..?"

"உடன்பிறப்பா..?"

"ஆமா.. மச்சான்னு சொன்னா முறையே மாறிராதா..? நீ மச்சான்னு ஆனா.. இந்தப் பொண்ணு எனக்குத் தங்கச்சி முறையா ஆகிரும்.. அந்த அளவுக்கு நான் ஜெண்டில் மேன் இல்லைடா.. இந்தப் பொண்ணை சைட் அடிக்கிற மனசு எனக்கில்லைதான்.. அதுக்காக.. இதை தங்கை யேன்னு கூப்பிடற பரந்த மனசும் எனக்கில்லைடா சகலை.."

"நீ செமத்தியா என்கிட்ட உதை வாங்கப் போற.."

"ஆமாண்டா.. நீ உதைப்ப.. என் கால் புட் பால் விளையாடிக்கிட்டு இருக்கும்.. பதிலுக்கு நானும் உதைப் பேண்டா.. எங்கே வந்து யாரை உதைப்பேன்ங்கிற.. இது என்னோட ஊர்.. ஒரு சவுண்டு கொடுத்தா ஊரே ஒன்னு கூடி என் பின்னால நின்னுரும்.. என்ன..? சவுண்டு விடவா..?"

யதுநந்தன் சட்டையின் கைப்பகுதியை மடித்து மேலே ஏற்றியபடி தாமோதரனை நெருங்க.. தாமோதரன் கையிலிருந்த ஐஸ்கிரிம் கப்புகளை நீரஜாவிடம் கொடுத்து விட்டு.. அவன் பங்குக்கு அவனுடைய சட்டையின் கைப்பகுதியை மடித்து மேலே ஏற்றினான்..

"வெயிட்.. வெயிட்.."

இருவரையும் தடுத்து நிறுத்திய நீரஜா..

"எனக்கு ரொம்ப நாளா ஒரு டவுட்டு.." என்றாள்..

"அதை சண்டை முடிஞ்ச பின்னால கேளு.." என்றான் தாமு..

"ஊஹூம்.. அதுவரைக்கும் தாங்காது.."

"என்னன்னு சொல்லித்தொலை.."

"இந்த ஜென்ட்ஸெல்லாம் ஃபைட் பண்ணனும்னா சட்டையை ஏன் மடிச்சு விட்டுக்கறாங்க..? சும்மா ஃபைட் பண்ணினா ஆகாதா..?"

எப்படிப்பட்ட சூழலில் எப்படிப்பட்ட சந்தேகத்தைக் கேட்கிறாள் இவள் என்று தாமோதரன் பற்களை நறநறக்க.. சேர்கின்ற அத்தனையும் யாமினியைப் போல மறை கழண்ட கேஸாகவே சேர்கிறதே என்று யதுநந்தன் வெறுத்துப் போனான்..

"அதுவாங்க.. அந்தக் காலத்தில யுத்தம் தொடங்கறதுக்கு முன்னாலே சங்கை ஊதுவாங்க.. இந்தக் காலத்தில சட்டையை மடிச்சுக்கிறாங்க.. விளக்கம் போதுமாங்க.." என்று கேட்டான்..

"அந்த விளக்கத்தை நான் சொல்லிக்குவேன்.. நீ உன் வேலையைப் பாரு.." தாமோதரன் முறைத்தான்..

"இருந்தாலும் உனக்கு இத்தனை பொஸஸிவ்னெஸ் ஆகாது சகலை.. நான்தான் போட்டிக்கு வர்ற உத்தேசமே இல்லைங்கறேன்.. நீ திரும்பத்திரும்ப காண்டாகிற.. ஏங்க.. உங்க பெயரென்னவோன்னு யாமினி சொன்னாளே.. ஆ.. நினைவுக்கு வந்திருச்சு.. நீரஜா.."

"இப்ப என்னத்துக்கு இவ பெயரைச் சொல்லிக் கூப்பிடற..?"

"கலந்துரையாடத்தான்.. ஆளைப் பாரு.. இந்த ஃபைட் பத்தின விவரத்த அம்மணி எங்கே பார்த்தாங்கன்னு தெரிஞ்சுக்கத்தான்.."

"இப்ப நீ அளந்தே பாரு.. கையில காபி.. கழுத்தில டவல்ன்னு.. சினிமாவில நீ பார்த்து கற்பனை பண்ணிக் கிட்டு உட்கார்ந்திருக்கிறதைப் போல.. இவளும்

ஏதாச்சும் ஒரு சினிமாவில இதைப் பார்த்திருப்பா.. ஆமாம்.. தெரியாமல்தான் கேட்கிறேன்.. உனக்கென்ன கையில்லையா.. காலில்லையா..? ஸ்கூலுக்குப் போகிற வயசில இருக்கிற பப்பாப்பையனா..? நீயாக்குளிச்சு.. பேண்ட்சர்ட் போட்டுக்க மாட்டியா..? கருமம்டா சாமி.."

தாமோதரன் தலையில் அடித்துக்கொள்ள நீரஜா வாய்விட்டுச் சிரித்தாள்..

அத்தியாயம் - 105

பிறவிகளைப் பற்றிய

பிரமையில் நான் தொலைந்தேன்..

"பாருடா.. சகலை விட் அடிச்சுட்டாராம்.. அம்மணி மகிழ்ந்து போய் சிரிக்கிறாங்க.." யதுநந்தன் ஒரு மார்க்கமாக பார்த்தபடிச் சொன்னான்..

"ஷட் அப் மிஸ்டர்.. யாமினியோட அண்ணன்ங்கிற தினாலதான் பொறுமையா ஹேண்டில் பண்றேன்.. வேற யாராவது இப்படிப் பேசியிருந்தா நடக்கிறதே வேற.." நீரஜா சீறினாள்..

"ஹெய்யோ..! ஹையய்யோ..! பயமாய் இருக்கே.. மேடம் என்னை வார்ன் பண்றாங்களே.." யதுநந்தன் பயப்படுவதைப் போல நடித்தான்..

பொறுமையிழந்த தாமோதரன் யதுநந்தனை நெருங்கப் போக.. ஊடே புகுந்தாள் நீரஜா..

"வேண்டாம் தாமு.. இவன் யாமினியோட பிரதர்.."

"அவன், இவன்னா பல்லைக் கழட்டிருவேன்.. மரியாதையா பேசு.. அதென்ன யாமினி மேல அவ்வளவு சொந்தம் வேண்டிக்கிடக்கு..? உன்னோட அண்ணன அவ திரும்பிக்கூடப் பார்க்க மாட்டா.."

"இது இப்ப வந்த பந்தமில்ல.."

"போன பிறவியில வந்த பந்தமா..?"

"உனக்கெப்படித் தெரியும்..?"

"இப்பத்தானே தெரியுது.. ஒன்னும் தெரியாத என் தங்கச்சி மனசில மறுபிறவிக் கதையை ஊன்றி வளர்த்து விட்டது யாருன்னு.. ஏம்மா.. உனக்கு வேற வேலையே இல்லையா..? படிச்சவதானே நீ.. மறுபிறவியாவது.. மண்ணாவது.."

"இல்லை மிஸ்டர்.. மறுபிறவின்னு யாமினி சொல்றதில உண்மை இருக்கு.."

"அப்ப போன பிறவியில உனக்கும் அவளுக்கும் உறவிருக்குன்னு சொல்ற..?"

"ஆமாம்.. நான் அவளோட அண்ணனோட வொய்பா பிறந்திருந்தேன்.."

நீரஜா என்னவோ தாமோதரன்தான் தனஞ்ஜெயன் என்ற நினைவோடுதான் அதைச் சொன்னாள்.. அதைக் கேட்டுக் கொண்டிருந்த ஆண்பிள்ளைகள்தான் அவளை வேறு வேறு விதமாக பார்த்து வைத்தார்கள்..

யதுநந்தனின் பார்வை ஒரு மார்க்கமாக இருக்க.. தாமோதரனின் பார்வையில் தனல் எரிந்தது..

"அப்படின்னா நான் உன்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்கிறயா..?"

நிதானமாக யதுநந்தன் கேட்டு வைத்ததில் நீரஜாவுக்கு தூக்கி வாரிப் போட்டது.. அவசரமாக தாமோதரனைப் பார்த்தவள் அவனது அனல் பார்வையில் கையைப் பிசைந்தாள்..

"நான் அந்த மீனிங்கில சொல்லலை தாமு.."

"ஷட் அப் நீரு.. இந்த லட்சணத்தில பேசினா இவன் இப்படித்தான் கேட்டு வைப்பான்.. பேசத் தெரிஞ்சாப் பேசனும்.. இல்லேன்னா வாயை வைச்சுக்கிட்டு சும்மாயிருக்கனும்.."

"எதுக்குக் கோபப்படற சகலை..? அம்மணி என் கேள்விக்கான பதிலைச் சொல்லட்டும்.. அதுக்குப் பின்னால ஒட்டு மொத்தமா கோபப்படு.. சொல்லு நீர..ஜா..! உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிற உத்தேசம்

எனக்கில்லை.. அப்ப மறுபிறவிங்கிறதெல்லாம் டுபாக்கூர்தான..?"

நீரஜா ஏதோ சொல்ல வாயெடுத்தாள்.. தாமோதரன் அவள் கையிலிருந்த ஐஸ்கிரிம் கப்புகளைப் பிடுங்கிக் கடற்கரை மணலில் எறிந்தான்.. நீரஜாவின் கையைப் பிடித்து இழுத்தபடி காரை நோக்கிப் போனான்..

"ஹேய் சகலை..! என்னப்பா.. என் கேள்விக்கு அம்மணி இன்னும் பதிலையே சொல்லலை.. அதுக்குள்ள தள்ளிக்கிட்டு போற.. நில்லுப்பா.. அட.. நில்லுப் பாங்கறேன்.. நான்தான் உன்னோட ஆளக் கல்யாணம் பண்ணிக்கிறதா இல்லேங்கிறேன்.. அப்புறமும் என்ன பயம்..?"

காரை நோக்கிப் போய் கொண்டிருந்த தாமோதரனை இந்த வார்த்தை பாதித்து விட்டது.. அவன் நீரஜாவை விட்டு விட்டு வெறியோடு திரும்பப் போனான்.. இப்போது நீரஜா அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்..

"வேண்டாம் தாமு.. வாங்க போய் விடலாம்.."

கெஞ்சியபடி காரை நோக்கி அவனை இழுக்க ஆரம்பித்தாள்..

"ஆஹாஹா..! கண்கொள்ளாக் காட்சியாயிருக்கே.. ஒன்னு அம்மணி கையைப் பிடிச்சு நீ இழுக்கிற.. இல்லேன்னா அம்மணி உன் கையைப் பிடிச்சு இழுக்குது.. இப்படி மாறி மாறி கையைப் பிடிச்சு இழுத்துக்கறிங்களே.. நீங்கதான் போன பிறவியில லவ்வர்ஸா பிறந்திருக்கனும்.."

'ஆமாடா.. அப்படித்தான் பிறந்திருந்தோம்..'

நீரஜா கூவப் போனாள்.. தாமோதரன் இருக்கிற வெறியையெல்லாம் சேர்த்து அவள்மீது காட்டி.. அவள் வாயை இறுகப் பொத்திக் காருக்குள் தள்ளினான்..

"இதில இருந்தே தெரியலையா.. மறுபிறவி கதையெல்லாம் பொய்யிங்கிறது..?"

நீ பாட்டுக்கு சொல்லிக் கொண்டிரு.. நாங்கள் பாட்டுக்கு கிளம்பிப் போகிறோம் என்று தாமோதரன் காருக்குள் ஏறி உட்கார்ந்து கார் கதவை ஓங்கி அறைந்து சாத்தியதில் நீரஜாவின் உடல் தூக்கிப் போட்டது.. தாமோதரனின் கோபத்தை அதுவரை அவள் பார்த்ததில்லை.. அதில் உதட்டைக் கடித்க் கொண்டாள் அவள்.. புயல் வேகத்தில் கார் கிளம்பியது.. மற்ற வாகனங்களை சட்டை செய்யாமல் கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஓட ஆரம்பித்தது..

தாமோதரனின் முகம் ஜிவுஜிவுவென இருந்ததில் நீரஜா பேசத் தயங்கினாள்.. அவள் முன்னால் தாமோதரன் கோபப் பட்டதில்லை.. முதன்முறையாக அவன் கோபத்தைப் பார்த்தவளுக்கு அந்த கோபத்தையும் பிடித்திருந்தது.. ரசிக்கத் தோன்றியது.. மெதுவாக நகர்ந்து தாமோதரனின் தோள்மீது தலை சாய்த்துக் கொண்டாள்.. காரின் வேகம் குறைந்து சீரானது.. தாமோதரன் கோபத்தைக் கைவிடாமல் சிடுசிடுத்தான்..

"இதிலொன்னும் குறைச்சலில்ல.. அவன்தான் குதர்க்கம் பிடிச்சவனா இருக்கானே.. அவன்கிட்ட அப்படியென்ன பேச்சு வேண்டிக் கிடக்கு..?"

"இல்ல தாமு.. ஐ ஃபீல் கில்ட்டி.. சித் அப்ராடு போனதில் இருந்து என்கூடப் பேசறதில்ல.. போனைக் கட் பண்றான்.. டாடியும் மம்மியும் சஃபர் ஆகிறாங்க.. இதெல்லாம் என்னால்தான்னு மனசுக்குள்ள பாரமா இருக்கு.. அவன் யாரை விரல் நீட்டினாலும் ஓகேன்னு சொல்லி மருமகளா ஏத்துக்கிட்டு அவனுக்கு மேரேஜ் பண்ணி வைக்க அவங்க தயாரா இருக்காங்க.. இவ்வளவு இருந்தும் சித்தார்த்தோட காதல் நிறைவேற மாட்டேங்குதே.."

"எனக்கும் அப்படித்தான்.. என்கூடவும் அவன் பேசறதில்லை.. யாமினி வேலையை ரிசைன் பண்ணினதும் இதைத்தானேடா நீ எதிர்பார்த்த அப்படின்னு கேட்டான்.. அதுக்கு மேலே ஒருவார்த்தை கூடப் பேசாம அன்னைக்கே ஃபிளைட் ஏறிப் பறந்திட்டான்.."

"யாமினியை விலகிரு.. விலகிருன்னு நான்தான் படுத்தி எடுத்தேன்.. அவளும் விலகிப் போயி தன் காதலோட பவர் என்னங்கிறதைக் காண்பிச்சுட்டா.. அவ விலகிப் போயிட்டா சித்தார்த்தன் அவனா இருக்க மாட்டான் தாமு.."

"யெஸ்.. ஐ அக்ரி வித் திஸ் வெர்ட்ஸ்.. சித்தார்த்தனோட நல்லது எது..? இப்படி வெறி பிடிச்சு, கம்பெனியையும், குடும்பத்தையும் மறந்து உலகத்தைச் சுத்தறதா..? யாமினி இல்லாத வாழ்க்கையை அவன் வாழ்ந்தா இப்படித்தான் வாழ்ந்து தொலைப்பான்.."

"அதுக்கு அவகூட சேர்ந்து வாழ்ந்து வரப்போகிற ஆபத்துக்களை ஃபேஸ் பண்றது பெட்டர்ன்னு தோணினாலும்.. அவனுக்கு யாமினியாலே ஆபத்து வரப் போகுதுன்னு தெரிஞ்சும் அதை அலோவ் பண்ணனு மான்னு மனசுக்குள்ள கொஸ்டின் கிளம்புது தாமு.."

"இதைப் பத்திப் பேசத்தான இங்கே வந்தோம்..? அந்த யதுநந்தனுக்கு மறுபிறவிங்கிறது உண்மைதான்னு பாடம் எடுக்கவா இங்கே வந்தோம்..?"

"அவன் அங்கே வந்து தொலைப்பான்னு யார் கெஸ் பண்ணினது..?"

"அங்கே அவன் வராம இருந்திருந்தாலும் யாமினியைப் பார்க்க அவள் வீட்டுக்குப் போகிறப்ப.. அவன் அங்கே உட்கார்ந்துதானே இருப்பான் நீரு..? இவன் கிட்டப் பேசாம வந்திருக்க முடியுமா..? பிராப்ளம் அவன்கிட்ட இல்லை.. நீ பேசற விதத்தில் இருக்கு.. எவ்வளவு பெரிய உயரத்தில இருந்தாலும் சிலசமயங்களில யோசிக்காம பேசிருவாங்கங்கிறதுக்கு நீயும் எக்ஸாம்பிள் ஆகிட்டயே.."

'எவ்வளவு பெரிய உயரத்தில் இருந்தாலும் பெண்ணாக இருப்பதினாலேயே ஆண்களிடம் பேச்சு வாங்க வேண்டியிருக்கிறது..' நீரஜா நினைத்துக் கொண்டாள்..

"நீ பர்ஸ்ட் டைம் யதுநந்தனைப் பார்த்தப்பவே இதைப் போலதான் பேசி வைச்ச..." முகம் இறுகச் சொன்னான் தாமு..

'என்ன பேசினேன்..?'

யோசித்தாள் நீரஜா.. யதுநந்தனையும் அவளையும் இணைத்து பொருள்வரும்படி அவள் பேசி விட்டது நினைவுக்கு வர..

'தாமு சொல்கிறதும் சரிதான் போல இருக்கு.. சம்டைம்ஸ், நானும் சொதப்பறேன்..' என்று உதட்டைக் கடித்துக் கொண்டாள்..

அதைப் பார்த்த தாமோதரனின் முகம் மென்மையானது..

"நீ யாரு.. எப்பேற்பட்டவ.. உன் மனசில என்ன இருக்கிறதுங்கிறதெல்லாம் எனக்குத் தெரியும்.. மத்தவங்களுக்குத் தெரியுமா..?"

'முக்கியமா யதுநந்தனுக்குத் தெரியுமான்னு இவன் கேட்கிறான்..' நீரஜாவின் இதழ்களில் புன்னகை வந்தது.

தாமோதரனின் அந்த உரிமை உணர்வு அவளைத் தாலாட்டியது.. அவளுக்குப் பிடித்தமானவன்.. அவளைக் காவல் காக்க முற்பட்டதில் இதமான இன்ப உணர்வு எழுந்து அவள் மனதை ஆக்ரமித்தது.. மொட்டு மலர்ந்து மணம் பரப்பும் பேரானந்த நிலையை அவள் அனுபவித்தாள்..

'இது போலதானே யாமினியும் ஃபீல் பண்ணியிருப்பாள்..' என்ற நினைவில் நீரஜாவின் மனம் வேதனைப் பட்டாலும்.. யாமினியால் சித்தார்த்தனுக்கு ஆபத்து வரக்கூடும் என்ற நினைவு அந்த வேதனையைத் தடுத்தது..

"காரைத் திருப்புங்க தாமு.." என்றாள்..

"எங்கே..?"

"யாமினியின் வீட்டுக்கு.."

"அங்கே யது இருப்பானே.."

"அவனோட பேரண்டுஸீம் இருப்பாங்கள்ல..?"

"அப்படிங்கிற..?"

"ஆமாம்கிறேன்.."

"யாமினியிடம் என்ன பேசலாம்..?"

"அவளோட ரெசிக்னேசனை நீங்க அக்செப்ட் பண்ணிக்கலைன்னு சொல்லுங்க.. அவளை வேலையில ஜாயின் பண்ணச் சொல்லுங்க.."

"நீயா இதைச் சொல்ற நீரு..?"

"யெஸ் நானேதான் சொல்றேன்.. யாமினியை சித்தார்த்தனை விட்டு விலகிப் போன்னு சொன்ன நீரஜாதான் இதைச் சொல்றேன்.."

"நீ இதில உறுதியா இருக்கியா நீரு..?"

"ம்ம்ம்.. உறுதியாத்தான் இருக்கேன்.."

"அந்த அகர்வால் யாமினியை பிரெயின் வாஷ் பண்ணிக்கிட்டு இருக்கான்.. ஏற்கனெவே மறுபிறவி ஞாபகங்களில தடுமாறிக்கிட்டு இருக்கிற யாமினிக்கு அவமேலேயே நம்பிக்கையில்லை.. இப்படிப்பட்டவளை மறுபடியும் சித்தார்த்தனோட வாழ்க்கையில வர வைக்கனுமா..?"

"வேற வழி என்ன இருக்கு..? அவ சித்தார்த்தனோட வாழ்க்கையில வந்தாத்தான் அவனும் தன்னோட வாழ்க்கைக்குத் திரும்புவான்.."

"அவங்களைச் சேத்து வைக்கத்தான் நானும் நினைக்கிறேன்.. பட்.. யாமினியாலே அவனுக்கு ஆபத்து வந்திருமோன்னுதான் என் மனசு கிடந்து அடிச்சுக்குது.."

"அவங்களைச் சேர்த்து வைக்கிறது பிரிக்கிறதுக் காகத்தான்.."

நிதானமாக நீரஜா சொன்னதும் தாமோதரன் காரின் பிரேக்கில் கால் வைத்து அழுத்தினான்..

"கீச்.." என்ற அலறலுடன் கார் கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஓரம் கட்டி நின்றது..

"என்ன..? என்ன சொன்ன..?" நம்ப முடியாமல் கேட்டான் தாமோதரன்..

"அவங்களைப் பிரிக்கறதுக்காகத்தான் சேர்த்து வைக்கப் போகிறேன்னு சொன்னேன்.."

சொன்னதையே மாற்றிச் சொல்லி அவன் நெற்றியில் கோடுகளை வர வைத்தாள் நீரஜா..

"எனக்குப் புரியலை.."

"அன்னைக்கு பீச்சில நாம மீட் பண்ணினவர் ஏழு பிறவிகளைப் பத்திச் சொன்னாரில்ல.."

"ஆமாம்.. அதுக்கென்ன..?"

"ஆறு பிறவிகளிலும் ஒன்னு சேர முடியாதவங்க ஏழாவது பிறவியிலேயும் ஒன்னு சேர முடியாமலே போகட்டும்.."

"நீரஜா.."

"யாமினி ஆறுபிறவிகளிலும் காதலனோட நினைவோடு வாழ்ந்து செத்திருக்கா.. நிறைவேறாத அந்தப் பிறவிகளின் காதல் அவள் மனசில் பழி வாங்கற எண்ணத்தைக் கொண்டு வந்திருக்கலாமில்ல..?"

இந்தக் கேள்விக்கு இல்லை, அப்படியிருக்காது என்று அடித்து மறுத்துப் பேச தாமோதரனால் முடியவில்லை.. அவன் மனதிலும் அந்த பயம் இருந்தது.. யாமினியை நேரில் பார்ப்பதற்கு முன்னால் போட்டோவில் அவன் பார்த்தபோது உணர்ந்த பிரளயம் அவன் மனதில் மீண்டும் எழுந்தது..

"எனக்குச் சித்தார்த்தன்தான் முக்கியம்.."

சிந்தனையோடு சொன்னவனைக் காதலோடு பார்த்தாள் நீரஜா.. அவளுடைய அண்ணனின் உயிர் காக்கும் தோழன் அவளுடைய காதலன் என்பதில் எல்லையில்லாப் பிரியம் அவள் மனதில் வந்தது..

"நாம இதை மட்டுமே நினைப்போம் தாமு.. யாமினியைப் பிரிவதில்தான் சித்தார்த்தோட நன்மை அடங்கியிருக்குன்னா அவளை சித்தார்த்தை விட்டுப் பிரிச்சு வைத்தாகனும்.."

"அவதான் பிரிஞ்சு போயிட்டாளே.."

"பட்.. அண்ணனும் நம்மையும், கம்பெனியையும் மறந்து பிரிஞ்சு நிக்கிறானே.."

"என்னதான் செய்யலாம்கிற..?"

"லிஸன் தாமு.. நாம பிரிச்சு வைச்சாத்தானே அண்ணன் நம்மமேல கோபப்படுவான்..? இப்படி எது மேலயும் நினைப்பில்லாம உலகத்தைச் சுத்திக்கிட்டு இருப்பான்..? இதுவே அவனா யாமினியை விட்டுப் பிரிஞ்சுட்டா..?"

"ஏய்ய்.."

ஆச்சரியத்துடன் நீரஜாவைப் பார்த்தான் தாமோதரன்.. அவளின் ஆழ்ந்த புத்திகூர்மை அவனை வசீகரித்தது.. கம்பீரமும் புத்தி சாதுர்யமும் கலந்த அழகியொருத்தியின் மனதில் அவனுக்கென்று தனி இடம் இருக்கிறது என்பதில் அவன் பெருமை கொண்டான்..

"யெஸ் தாமு.. நாம் சித்தார்த்தையும் யாமினியையும் சேர்த்து வைப்போம்.. அதுக்குப் பின்னாலே சித்தார்த்தா யாமினியை வேணாம்ன்னு சொல்கிற சிச்சுவேசனை உருவாக்குவோம்.. அவன் தானா யாமினியை விட்டுப் பிரிஞ்சு வரனும்.. அதை நாம செய்ததா இருக்கக் கூடாது.. அப்படி மட்டும் நடந்திருச்சுன்னா நம்ம சித்தார்த் ஷேஃபா இருப்பான்.."

"நடக்குமா..?"

"நடக்கனும்.."

நீரஜாவின் திட்டத்தை வரவேற்றான் தாமோதரன்.. யதுநந்தனை மறந்து காரை யாமினியின் வீட்டைப் பார்த்துத் திருப்பி ஓட்டினான்.. அவர்கள் போன போது யதுநந்தன் வீட்டு வாசலில் அனுராதாவுடன் பேசியபடி நின்றிருந்தான்.. இவர்களைக் கண்டதும்..

"எங்கே வந்தீங்க..?" என்று முறைத்தான்..

"யாருடா இவங்க..?" புரியாமல் கேட்டாள் அனுராதா.

"யாமினி வேலைபார்த்த கம்பெனியோட ஜி.எம் இவர்தான்ம்மா.. மேடம் எம்.டியோட சிஸ்டராம்.."

அனுராதாவுக்குப் பயந்து கொஞ்சமாக மரியாதை கலந்து யதுநந்தன் பேசியதில் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்ட தாமோதரனும், நீரஜாவும் யதுநந்தனை விட்டுவிட்டு அனுராதவிடம்..

"வணக்கம்ங்க.." என்று கோரஸாக கை நீட்டினார்கள்..

'மேலிடத்தைப் பிடிச்சுருச்சுகளாம்..' பல்லைக் கடித்தான் யதுநந்தன்..

வேலையை விட்ட நாள் முதலாய் பழைய பித்துக்குளித்தனங்கள் அதிகமாக தலை தூக்க.. மூலையில் புதைந்து கிடந்த மகளை மீட்க வந்த தேவதூதர்களைப் பார்ப்பதைப் போல அவர்களைப் பார்த்து வைத்தாள் அனுராதா..

யாமினி வேலைக்குத் திரும்ப வேண்டுமென்ற அவர்களின் கோரிக்கையை அனுராதா முழுமனதாக ஆதரித்ததில் யாமினி வேலைக்குத் திரும்பி விட்டாள்..

அத்தியாயம் - 106

அன்றொரு நாள் நாம் சந்தித்த நிலவை..

என்றாவது காண்போமா..?

"ஒருநாள்..! அந்த ஒருநாள்..!

உன்னை முதலில் கண்ட

அந்தத் திருநாள்..!

அது மறந்து போகுமா..?"

கைகளில் மைக்கைப் பிடித்தபடி யாமினி பாடலில் கேட்ட கேள்வியில் அப்போதுதான் அந்த ஹாலுக்குள் நுழைந்து

கொண்டிருந்த சித்தார்த்தன் அப்படியே அசைவில்லாமல் நின்று விட்டான்..

யாமினியின் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ள வில்லை.. அவள்வீடு தேடிச் சென்றுச் சமாதானப் படுத்தியதில் அவள் வேலைக்குத் திரும்பி விட்டாள் என்ற செய்தி தாமோதரனிடமிருந்து சித்தார்த்தனுக்குப் பறந்ததில் அவனும் இந்தியாவுக்கு பறந்து திரும்பி விட்டான்.. அவனையும் யாமினியையும் சேர்த்து வைத்து மகாபலிபுரக் கடற்கரையில் பார்த்த நிகழ்வை யதுநந்தன் தன் வீட்டில் சொல்லவே இல்லை என்பது தாமோதரனுக்கும், நீரஜாவுக்கும் சாதகமாக இருந்ததை தாமோதரன் சித்தார்த்தனிடம் எடுத்துச் சொன்னான்..

"ஆச்சரியம்டா சித்..! எதற்கெடுத்தாலும் குதர்க்கமாவே பேசிக்கிட்டு இருந்தாண்டா அவன்.. ஆனாலும் பாரு.. உனக்கும் யாமினிக்கும் இடையில இருக்கிற காதலைப் பத்திக் கடைசிவரைக்கும் அவன் வாயையே திறக்கலை.. அங்க நிக்கிறாண்டா அவன்.."

"ஆச்சரியமா இருக்கு.."

"ம்ம்ம்.. எங்களுக்கும் அப்படித்தான் இருந்தது.. அந்த அளவுக்கு தங்கை மேல பாசமா இருக்கான்.. உனக்கு யாமினியை மேரேஜ் பண்ணிக் கொடுக்கிறதுக்கு

அவனுக்கு சம்மதேயில்லை.. அதே சமயம்.. வேலையை விட்டுட்டதினால யாமினியோட மனசு பாதிக்கப் பட்டிருக்குங்கிறதையும் அவன் தெரிஞ்சு வைச்சிருக்கான்.. அவனுக்குப் பிடித்தமேயில்லன்ன போதும் யாமினியோட நன்மைக்காக அவள் வேலைக்குத் திரும்பறதைத் தடுக்காம நின்னான் பாரு.. அங்கே நிக்கிறாண்டா அவன்.."

"அவன் அங்கேயே நிற்கட்டும்.. யாமினி எங்கே..?"

"இன்னைக்கு நம்ம ஆபிஸ் அக்கவுண்டண்ட் சபாபதியோட டாட்டரோட மேரேஜ் ரிசப்சன்.. ஆபிஸ் ஸ்டாபெல்லாம் ஈவினிங் பெர்மிசன் போட்டுட்டு அங்கே போயிட்டாங்க.. நானும் கிளம்பிக்கிட்டு இருந்தேன்.. நீ வந்திட்ட.. வா

சேர்ந்தே போகலாம்.. வர்றியா இல்ல.. வீட்டுக்குப் போறியா..?"

சித்தார்த்தனுக்கு யாமினியை உடனே பார்த்தாக வேண்டும் போல இருந்தது.. பயணக் களைப்பு நீங்க வீட்டுக்குப் போய் குளித்துச் சாப்பிட்டு.. ஓய்வெடுக்க வேண்டுமென்று தோன்றவில்லை.. அவன் அவளுடன் போனில் பேச முயன்றால் கூட முடியவில்லை..

எப்போது அவன் போன் பண்ணினாலும் இனிமையான பெண் குரல் வந்து போன் ஸ்விட்ச் ஆஃபில் இருக்கிறது என்று சொல்லி உயிரை வாங்கியது.. இந்தப் போன்களில் ரிகார்டு செய்து வைக்கப்பட்டிருக்கும் குரல்கள் எல்லாம் பெண்களின் குரல்களாகவே ஏன் இருக்கின்றன..? ஆண்கள் இந்தப் பதில்களைச் சொல்ல மாட்டார்களா என்ற ஆராய்ச்சியெல்லாம் சித்தார்த்தனின் மனதில் வந்து எரிச்சலை மூட்டியது..

யாமினியைச் சந்தித்த முதல் நாளின் நினைவு அவனை அலைக்கழித்தது.. அவளின் பாடலும், தெளிவான பேச்சும், அவளைச் சூழ்ந்து நிற்கும் நிழல்களைப் பற்றிய அவளின் தனிப்பட்ட உணர்வுகளை ஒரு சிநேகிதனிடம் பகிர்ந்து கொள்வதைப் போல அவனிடம் பகிர்ந்து கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையும் அவன் மனதை விட்டு அகலவே யில்லை..

யாமினியின் நினைவிலேயே பித்துப் பிடித்தவனைப் போல உலகத்தைச் சுற்றிக் கொண்டிருந்தவன், யாமினி வேலைக்குத் திரும்பி விட்டாள் என்ற செய்தி கிடைத்ததும் பறந்து வந்து விட்டான்..

வந்தவுடன் நேராக கம்பெனிக்குத்தான் ஓடி வந்தான்.. எவள் முகத்தைப் பார்ப்பதற்கு ஆவலுடன் அவன் வந்திருந்தானோ.. அந்த யாமினி அவன் வரவை அறியாதவளாக சபாபதியின் மகளின் திருமண வரவேற்பில் கலந்து கொள்ளச் சென்று விட்டாள்..

அவன் அவளைப் பார்க்கப் போவானா..? இல்லை.. வீட்டில் படுத்து உறங்கப் போவானா..?

"நானும் வருகிறேன்.."

சித்தார்த்தன் இதைத்தான் சொல்வான் என்பதை உணர்ந்திருந்த தாமோதரன் சிரித்தான்..

"வா.. போகலாம்.."

அவர்கள் ரிசப்சன் நடந்த ஹோட்டலை அடைந்த போது சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸில் வேலை பார்ப்பவர்கள், தனித்தனியாகவும், குடும்பத்துடனும் ஹோட்டலுக்குள் போய்க் கொண்டிருந்தார்கள்..

"நான் காரைப் பார்க் பண்ணிட்டு வர்றேன்.. நீ முன்னாடி போ.."

சித்தார்த்தனின் மனநிலையைப் புரிந்தவனாகச் சொன்னான் தாமோதரன்.. லிப்டில் புகுந்து வேகமாக வெளிப்பட்ட சித்தார்த்தன் ரிசப்சன் ஹாலை அடைந்த போது யாமினியின் பாடல் அவனை வரவேற்றது..

"இதோ.. நம்ம எம்.டி..!"

சபாபதி பரபரப்புடன் வந்து அவனுக்கு கைகுவித்து வரவேற்றார்.. நடுங்கிய அவரின் விரல்கள் அவரின் ஆனந்தத்தை வெளிப்படுத்தின..

"உங்க டாட்டரோட மேரேஜ் ரிசப்சன்னு தாமு சொன்னான்.. ஏர்போர்ட்டில் இருந்து நேரா வந்துட்டேன்.." சித்தார்த்தன் அவரின் ஆனந்தத்தை அதிகப் படுத்தினான்.

அவனைப் பார்த்து விட்ட அதிர்ச்சியில் பாட மறந்து அப்படியே நின்று விட்டாள் யாமினி..

"நம்ம ஆபிஸ் ஸ்டாப்ஸ்தான் பாடனும்னு சபாபதி சொல்லிட்டார் சார்.. மாறி மாறி நாங்கதான் பாட்டுப் பாடி ரிசப்சனை செலபரேட் பண்ணிக்கிட்டு இருக்கோம்.." என்றாள் ரேகா..

அவளின் விழிகள் தாமோதரன் எங்கேயென்று தேடின.. சித்தார்த்தன் அவனைத் தேடிய யாமினியின் விழிகளைப் பார்த்தபடி வெகு சுவாதீனமாக மேடையேறினான்..

மேடையிலிருந்த இன்னொரு மைக்கை கையில் எடுத்துக் கொண்டான்..

"ஒருநாள்..! அந்த ஒருநாள்..

உன்னை முதலில் கண்ட

அந்தத் திருநாள்..!

அது மறந்து போகுமா..?

கனவா..? வெறும் கதையா..?

இளநெஞ்சை வருடும்

நல்ல இசையா..?

அது கரைந்து போகுமா..?"

யாமினியின் விழிகளைப் பார்த்தபடி அவளது கேள்விக்கான பதிலை அவன் பாடலில் சொன்னதில் யாமினியின் உயிர் துடித்தது..

"உன் நினைவைத் தழுவி இருந்தேன்..

அந்தத் துயிலைத் தழுவ மறந்தேன்..

நீ அறிவாயோ..?"

விம்மலைப் பாடலாக அளித்தவளுக்கு சித்தார்த்தன் அளித்த பதிலில் தாமோதரன் திடுக்கிட்டான்.. அதுவரை அந்தப் பாடலை அவன் கேட்டதில்லை.. அது ஒரு திரைப்படத்தில் வரும் பாடலென்று ரேகா கூறினாள்.. அவனிடம் பேச ஒரு சந்தர்ப்பம் கிடைத்து விட்ட மகிழ்வு அவள் முகத்தில் தெரிந்தது.. மற்ற சமயமாக இருந்திருந்தால் தாமோதரன் அந்த மாற்றத்தைக் கவனித்திருப்பான்.. விலகி நின்றிருப்பான்.. அன்று சித்தார்த்தன் பாடிய பாடலில் ஆடிப் போயிருந்தவன் அதைக் கவனிக்காமல் ரேகாவுடன் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தில் அங்கே வந்திருந்த நீரஜா பல்லைக் கடித்தாள்..

சித்தார்த்தன் வந்து விட்ட செய்தியை தாமோதரன் தான் அவளுக்குப் போன் பண்ணிச் சொன்னான்.

"சபா சாரோட டாட்டருக்கு மேரேஜ் ரிசப்சன்.. யாமினி அங்கே போயிருக்கான்னு தெரிஞ்சவுடனே இவனும் கிளம்பிட்டான்.. நானும் அங்கேதான் போறேன்.. நீயும் வா.."

சித்தார்த்தனின் காரை பார்க்கிங் பகுதியில் இருந்து எடுக்கப் போகும் போதே நீரஜாவுக்கு செய்தியைக் கடத்தி விட்டான் தாமோதரன்.. அவளும் வேகமாக அங்கே வந்து சேர்ந்து விட்டாள்.. வந்து பார்த்தால் அவளுடைய காதலன் அவள் வரவை மறந்து விட்டு ரேகாவிடம் ஆழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருக்கிறான்..

நீரஜாவுக்கு எப்படியிருக்கும்..?

அதைப் பற்றியெல்லாம் யோசிக்க முடியாத நிலைமையில் இருந்தான் தாமோதரன்..

சித்தார்த்தன் பாடி வைத்த வரிகள் அப்படிப்பட்ட ஜ்வாலையைத் தன்னுள் பொதித்திருந்தவை..

"உனைப் பார்க்க அன்று பிறந்தேன்..

அதனால் இறக்க மறந்து போனேன்..

நீ அறிவாயோ.."

தாமோதரனின் நெஞ்சம் குழுங்கியது.. சித்தார்த்தனின் காதலின் வேகத்தில் அவன் கதி கலங்கினான்.. மதி மயங்கிய நிலையில் இருக்கும் ஒருத்தியின் மீது இந்த அளவுக்கு காதல் கொண்டிருக்கும் நண்பனின் கதி என்னவாகுமோ என்று அவன் மனம் பதறியது..

யாமினியின் முகம் பிரகாசித்தது.. காலங்களைக் கடந்து அவள் நினைவு பறந்தது.. காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரர் சன்னதியில் நரசிம்ம பல்லவனின் நினைவுகளுடன் அவள் சுழன்றாடினாள்.. வரதராஜப் பெருமாளின் சன்னதியில் ஆண்டாளைப் போலக் கொண்டையிட்டு பெருமாள் பக்தையான நந்தினி தேவியாக சிரம் தாழ்தினாள்..

"காலம் காலம் கடத்தலாம்..

காதல் சாகாது..

வாழ்வின் எல்லை மீறலாம்..

எதுதான் ஆகாது..?"

யாமினியின் அழைப்பில் தாமோதரனை மறந்தாள் நீரஜா.. இவள் எதற்காக அழைக்கிறாள் என்று மனம் பதைத்தாள்..

கூடிவாழ அழைக்கிறாளா இல்லை.. பகை முடிக்க அழைக்கிறாளா..?

தங்கையின் தவிப்பு நிறைந்த கேள்விகளைப் பற்றிச் சித்தார்த்தனுக்கு என்ன தெரியும்..? அவன் மதுவின் மயக்கத்தை விழிகளில் உணர்த்தியபடி கிறக்கத்துடன் யாமினியை அள்ளிப் பருகுவதைப் போலப் பார்த்தபடி பாடலைத் தொடர்ந்தான்.. அவன் பாடிய பாடலில் பெண்ணிடம் மயங்காத திடசித்தம் கொண்ட சித்தார்த்தனா இவன் என்று தாமோதரன் திகைத்துப் போனான்..

"மயக்கங்கள் மறக்க..

மடியொன்று வேண்டும்..

மறுக்க வேண்டாம் என் அன்பே..!"

நீரஜாவின் கண்களில் கண்ணீர் திரண்டது.. இப்படியொரு வேகத்துடன் இருக்கும் அண்ணனின் ஆசையை நிராசையாக்க வேண்டிய துக்கத்தில் அவள் இமைகளை மூடிக் கண்ணீரைக் கட்டுப் படுத்தினாள்..

"மறுபடி பிறக்க..

மது கொஞ்சம் வேண்டும்..

தடுக்க வேண்டாம் என் அன்பே..!"

யாமினி.. தடுப்பதாக இல்லை.. சித்தார்த்தனின் ஆவலுக்குக் குறையாத ஆவல் அவள் விழிகளில் தெரிந்தது.. கூடவே அலைபாய்தலும் தெரிந்ததில் நீரஜா பயம் கொண்டாள்..

தன் மனதின் போராட்டங்களுக்கு அணைகட்ட முடியாத பலவீன மனமுள்ளவளின் மீதா சித்தார்த்தன் அன்பு செலுத்துகிறான்..? அந்த அன்பு அவனை பலவீனமான வனாக மாற்றி விடாதா..?

"தனிமை தாகம்...

தணிந்தாக வேண்டும்...

சபதம் காப்பேன்..."

யாமினியின் பாடலில் தாமோதரனின் திடுக்கிடல் அதிகரித்தது.. தலையைத் திருப்பியவன் நீரஜா அங்கே நிற்பதைக் கண்டு விட்டான்.. ரேகாவை மறந்து நீரஜாவின் பக்கத்தில் அவன் வந்ததில் நீரஜா பெருமிதம் கொண்டாள்.. ரேகா துயரம் கொண்டாள்..

"விழிகள் உறவில்...

கலந்தாட வேண்டும்...

கரும்பின் ஊற்றே...!"

யாமினியின் பாடல் சித்தார்த்தனின் கோரிக்கைகளை 'மறுக்காமல் தருவேன் வா...' என்று இருகரம் நீட்டி அழைத்தது.. அந்தப் பாடலின் இடையே வந்த 'சபதம் காப்பேன்..' என்ற வார்த்தைகளில் நீரஜாவின் மனம் பதைத்தது..

"ஏழு புவனம்

சென்று வந்தேன்...

நான் உன் முன்னே

தோல்விதான் கண்டேன்.."

சித்தார்த்தன் ஆதித்த கரிகாலனாகி பாடிய போது.. அன்று கிடைக்காத அண்ணனின் காதலி இன்று கிடைத்து விட்டாளே என்று ஏன் என்னால் சந்தோசம் கொள்ள முடியவில்லையென்று தன்னைத் தானே சாடிக் கொண்டாள் நீரஜா..

யாமினியின் பார்வை கடந்த காலத்துக்கு அவள் சென்று விட்டதை நீரஜாவுக்கும் தாமோதரனுக்கும் அறிவித்தது.. மற்றவர் உணர முடியாத மனதின் வலியை யாமினியின் விழிகளில் அவர்கள் இருவரும் உணர்ந்தார்கள்.. அது காதலனோடு சேர முடியாமல் போன வலி...! காதலை முன்னிருத்திக் காதலனை அழைத்து அவன் சாவுக்கு காரணமாக நேர்ந்து விட்ட விதியின் கொடுமையை நினைத்து நினைத்து நெஞ்சம் மருகிய வலி..!

'இவள் பாவம்...'

நீரஜாவுக்கு இரக்கமாக இருந்தது...

'என் எதிரிக்குக்கூட இவள் போன்ற நிலைமை வந்து விடக் கூடாது...' அவள் மனம் பிரார்த்தித்தது..

"அருகினில் அன்று

உனைக் கண்ட போது..

தூர தூரம் நின்றேன்.."

சித்தார்த்தனின் இமைகள் யாமினியின் பாடலில் துயரத்துடன் மூடித் திறந்தன.. அன்று கைக்கெட்டும் தூரத்தில் பெரிய பழுவேட்டரையரின் மனைவியென்ற பெயரில் அணுக முடியாத தொலைவில் எட்ட நின்றவளை இன்று கிட்டத்தில் அவன் பார்த்தான்...

அன்று கை பிடிக்க முடியாதவளை இன்று கை நழுவ விட்டு விடக்கூடாதென்ற வெறி அவன் மனதில் வந்தது.. அவள் பிரிந்து விடுவாளோ என்ற துடிப்பில் நீண்ட தூரம் பிரிந்து சென்று உலக நாடுகளைச் சுற்றிக் கொண்டிருந்தவன் அவள் திரும்பி விட்டாள் என்று அறிந்த அடுத்த கணம் விமானத்தில் ஏறிப் பறந்து அவளைத் தேடி வந்து நின்றிருப்பதை அவளறிவாளா என்று தனக்குள் கேட்டுக் கொண்டான் அவன்...

"நீண்ட தூரம்

நீ சென்ற போதும்

உந்தன் அருகே இருந்தேன்..."

யாமினி தன் காதலை பாடலில் உணர்த்தி விட்டாள்..

"காதல் உலகில் மேற்கோடு

வெளிச்சம் முடிப்பதில்லை..."

சித்தார்த்தன் பாடினான்.. யாமினியின் இமைகள் அவன் சொல்வதற்கு ஒப்புதல் அளிப்பதைப் போலத் துடித்தன..

"கனவு தேடும்

கனவு வேண்டாம்..

நம் உண்மையின்

ராகங்கள் வேண்டும்.."

சித்தார்த்தன் பாடியதைப் கேட்ட யாமினி கனவுகளிலிருந்து விடுபடத்தான் விரும்பினாள்.. அவளைத் தேடி வந்து விட்டக் காதலனின் தோள்களில் சாய்ந்து பிறவிகள் தோறும் பிரிந்து நின்ற வேதனை குறைய இளைப்பாறத்தான் நினைத்தாள்...

அதற்கு விட்டு விடுவோமா என்பதைப் போல கூட்டத்தின் மத்தியில் நின்ற அகர்வாலும், பரத்குமாரும் அவளையே முறைத்தார்கள்..

அத்தியாயம் - 107

காலங்கள் கடந்து

பிறந்து வந்தது எதற்காக...?

"அவளுக்கு பணத்தாசை கிடையாதுன்னு எப்படிச் சொல்கிற...?"

நிதானமாகக் கேட்டாள் நீரஜா.. சித்தார்த்தன் முகம் கருத்தான்.. அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது இடையூறு செய்து விடக் கூடாது என்ற முன்ஜாக்கிரதை

உணர்வுடன் காரைத் துடைப்பதை நிறுத்திவிட்டு காம்பவுண்டு கேட்டை நோக்கிப் போகும் பாதையில் போய் கொண்டிருந்த ஜேம்ஸைப் பார்த்தான்..

ஜேம்ஸ் மட்டும்தான் என்றில்லை.. அந்த வீட்டில் வேலை பார்த்த எல்லோருமே அடிப்படை நாகரிங்களுடன் தான் இருப்பார்கள்.. நிருபமா கூறிக் கொடுத்திருந்த பாடம் அது..

தோட்டத்துப் பூச்செடிகளில் ஈரம் சொட்டிக் கொண்டிருந்தது.. தோட்டத்தின் மையத்தில் செயற்கை நீருற்று இயற்கைக் காற்றில் ஈரப்பசையைத் தடவி அளித்துக் கொண்டிருந்தது..

அந்தக் காலையிளம் வேளையில் நீரஜாவுடன் உட்கார்ந்து பேச சித்தார்த்தனுக்குப் பிடித்திருந்ததுதான்.. அவள் அவனுடைய பாசம் மிக்க ஒரே தங்கை.. அவள் பேசிய விவரம் தான் அவனுக்கு எட்டிக்காயைப் போல கசந்து பிடிக்காமல் போனது..

'யாமினிக்கு பணத்தாசையா..?'

அவனுக்கு அதைக் காது கொடுத்துக் கேட்கக் கூடப் பிடிக்கவில்லை..

"உண்மை கசக்கும்தான்.. அதுக்காக உண்மை, உண்மையில்லைன்னு ஆகிருமா..?"

"ரப்பிஷ்..! நீயா இப்படிப் பேசறன்னு இருக்கு.. வேண்டாம் நீரு.. நீ என் தங்கையா இருந்தாலும் உன்மேல எனக்கொரு ரெஸ்பெக்ட் இருக்கு.. அதைக் கெடுத்துக்காதே.."

"வேணும்னே அவமேல நான் பழி போடறேன்னு நினைக்கறியா..?"

"நீ அந்த கேட்டகிரியில்ல.. அந்த அளவுக்கு இறங்கிப் பேசற ஆள் நீயில்ல.. யாமினியை நீ சரியாய் புரிஞ்சுக்கலைன்னு நினைக்கறேன்.. தட்ஸ் ஆல்.."

"நீ மட்டும் என்னத்தைப் புரிஞ்சுக்கிட்ட..?"

'அகர்வால் பின்னும் சதிவலையில் மீள முடியாமல் யாமினி மாட்டிக் கொண்டிருப்பதை இவன் அறிவானா..?' என்ற

எரிச்சலுடன் கேட்டாள் நீரஜா..

அதைப் புளிப்போட்டு விளக்கி அவனிடம் தெளிவு படுத்தவும் முடியாது.. அவன் அப்படியா என்று யாமினியிடம் போய் கேட்டு வைப்பான்.. அவள் ஆமாம் என்று சொல்லி விட்டுத்தான் மறுவேலை பார்ப்பாளா..? அவள் மாட்டிக் கொண்டிருப்பது சதிவலை என்ற பிரக்ஞையே இல்லாமல் அவையெல்லாம் முற்பிறவியின் 'எச்சங்கள்' என்ற குழப்பத்தில் இருக்கிறவளாயிற்றே அவள்.. 'அப்படிப்பட்டவளை இவன் மாய்ந்து மாய்ந்து காதலிக்கிறான்..'

அந்த மாய்தலில்.. அவளுடைய அண்ணன் மாய்ந்து போய் விடுவானோ என்ற பயம் அவளைப் பிடித்து ஆட்டி வைத்தது..

"அவளைக் காலம் காலமா புரிஞ்சுக்கிட்டு வாழ்ந்த ஃபீலிங் எனக்குள்ள இருக்குன்னு சொன்னா உன்னால அதைப் புரிஞ்சுக்க முடியாது நீரு.. லீவ் திஸ் டாபிக்.."

கண்டிப்புடன் சொன்னான் சித்தார்த்தன்.. அவனைக் கணிவுடன் பார்த்த நீரஜாவின் மனம் அவளுடைய பாசத்தைப் புரிந்து கொள்ளாமல் அவளுடைய அண்ணன் பேசுகிறானே என்று கண்ணீர் விட்டது..

காலங்கள் தோறும் அவன் மடியைத் தேடிய காதலியாக யாமினி இருந்திருக்கலாம்... அந்தக் காலகட்டங்களிலெல்லாம் அவனுடைய தங்கையென்ற உறவு முறையில் அவனுடனே பிறந்து வளர்ந்து வந்த நீரஜாவின் பாசத்தைப் பற்றிய நினைவலைகள் சித்தார்த்தனின் மனதில் எழவில்லையா...?

"உன்னோட மறுபிறவிக் கதைக்கே நான் வர்றேன் அண்ணா..."

"உனக்கு அதில நம்பிக்கையில்லைன்னா அதைப் பற்றி நாம டிஸ்கஸ் பண்றதே வேஸ்ட் நீரு..."

அவளுக்கா நம்பிக்கையில்லை....?

வெறுமையாகப் புன்னகைத்தாள் நீரஜா... சித்தார்த்தனுக்குள் எழும் மறுபிறவியின் ஞாபகங்கள் அவளுக்குள்ளும் எழுந்து கொண்டிருக்கின்றன என்ற உண்மையை அவள் ஒர்நாளும் அவனிடம் பகிர்ந்து கொண்டதில்லை.. தாமோதரனும் அப்படித்தான்.. கடந்த காலத்தின் நிழல் ஆட்ட யுத்தங்கள்.. நிகழ் காலத்தைப் பாதித்து விடாமலிருக்கும் படி திடமான மனதுடன்தான் அவன் இருந்தான்..

அவர்கள் இருவரும் அப்படி இருந்ததினால்தான் யாமினியின் மனக்குழப்பத்தை ஊன்றிக் கவனிக்க முடிந்தது.. அவளால் சித்தார்த்தனுக்கு ஆபத்து ஏற்பட்டு விடக் கூடாதென்று யோசிக்க முடிந்தது..

நேற்றய வாழ்வு நேற்றோடு...

இன்றைய வாழ்வு நம்மோடு...

இந்த சித்தாந்தத்தில் நீரஜாவும், தாமோதரனும் தெளிவாக இருந்ததினால்தான் அவர்களால் மறுபிறவி களைப் பற்றிய விவரங்களை எவருக்கோ நடந்ததைப் போல எடுத்துக் கொள்ள முடிந்தது... அவற்றின் நிழல்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் பிறவியில் படிந்து விடாமல் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொண்டு சித்தார்த்தனையும் காப்பாற்றி விட வேண்டுமென்று போராட முடிந்தது..

"ஓகே ஃபிரதர்...! எனக்கு நம்பிக்கையில்லைன்னே வைத்துக்க.. உனக்கு அதில நம்பிக்கையிருக்குதானே..?"

"மலையளவுக்கு இருக்கு.. யாமினி எனக்காகவே பிறந்தவள்.. அவளும் நானும் மீட் பண்ணனும்ங்கிறது காலத்தின் கட்டாயம்.. ஆறு பிறவிகளில் வாழ முடியாத வாழ்வை இந்த ஏழாவது பிறவியில் நாங்கள் வாழ்ந்து முடிக்கலாம் என்பது வாழ்க்கை எங்களுக்குத் கொடுத்த வரம்.. அவளை நான் சந்தித்தே ஆகனும்ங்கிறது விதி வகுத்த கட்டளை.. காலம் எங்களைச் சந்திக்க வைத்த தோழன் நீரஜா..."

"ஓகே... ஓகே..! எமோசனலாகாதே... நீ சொன்ன படியே இருக்கட்டும்.. நான் கேட்கிறது என்னன்னா.. நீ சொன்ன ஆறு பிறவிகளிலேயும் யாமினி உனக்குச் சமமான ஸ்டேட்டஸில்தான் பிறந்திருந்தாளா..?"

நீரஜா எதற்காக இப்படியொரு கேள்வியைக் கேட்கிறாள் என்று புரியாமல் திகைத்த சித்தார்த்தன் யோசித்தான்.. அவன் மனதில் நரசிம்ம பல்லவன் காஞ்சியின் மாமன்னனாக வந்து நின்றான்.. அங்கே ஏழை ஆயனரின் மகள் சிவகாமியாக யாமினி ஏகாம்பரேஸ்வரின் ஆலயத்தில் நடனமாடினாள்..

அவன் ஆதித்த கரிகாலச் சோழனாக காஞ்சியை வென்று அங்கே பொன் மாளிகையை நிர்மாணித்த போது.. யாமினி நந்தினியாகப் பிறந்து.. தாய்,தந்தை எவரென்று தெரியாத அநாதைப் பெண்ணாக.. பெருமாளை வணங்கும் பக்தையாக.. ஆண்டாள் போலக் கொண்டையிட்டுத் தென் மதுரைநகர் நோக்கிப் பயணித்தாள்..

பாண்டியரின் குலகௌரவம் காக்கும் மாறவர்மன் சுந்தர பண்டியனாக அவன் வந்த போது யாமினி.. ஹொய்சாள மன்னனின் பலராணிகளில் ஒரு ராணியின் மகளாக அவனிடம் காதலை யாசித்து ஏகாம்பரேஸ்வரரின் ஆலயத்தில் அவனை மணக்க வேண்டும் என்று வேண்டி நின்றாள்..

ஒரு பேராசையே விலைக்கு வாங்கி விடும் விலை மதிப்புக் கொண்ட ஒற்றைக்கல் வைரத்தைப் பதக்கமாகக் கொண்டத் தங்கச்சங்கிலி மார்பினில் புரள... தென்னகத்தைக் காக்க வாளேந்தி வந்து காஞ்சியின் மன்னனாக அதை வென்று அரியணையில் அமர்ந்த சேர மன்னன் ரவிவர்மனாக அவன் உயரத்தில் நின்ற போது... யாமினி ஓர் வணிகரின் மகளான வசுந்தராவாக பிறப்பெடுத்து நின்றிருந்தாள்..

40 வருடங்களாக அடைபட்டுக் கிடந்த அன்னை மீனாட்சியம்மனின் ஆலயக் கதவுகளைத் திறந்து வைக்கும் சபதத்தையும்... தனக்கென்று நிர்மானிக்கப்பட்ட

திருவரங்கக் கோவிலில் கொழுவிருக்க முடியாமல் திருப்பதியில் வாசம் செய்த ரங்கநாதரின் சிலையை ஸ்ரீரங்கத்தில் கொண்டு வந்து சேர்க்கும் சபதத்தையும் செய்து.. அவற்றை வெற்றிகரமாக முடித்தும் காட்டிய குமார கம்பண்ணனாக அவன் வெற்றி முழக்கமிட்ட போது அவனைக் கைபிடிக்க முடியாத மைதிலியாக.. குறுநில மன்னர்களின் பரம்பரையில் பிறந்த பெருமையை மட்டும் பெரிதாகச் சொல்லிக் கொள்பவளாக யாமினி அவன் முன்னால் நடமாடினாள்..

"ஐந்து பிறவிகளில் அவ எனக்குச் சமமான ஸ்டேட்டஸில பிறக்காதவளா இருந்திருக்கலாம்.. ஆறாவது பிறவியில.. எனக்குச் சமமான ஸ்டேட்டஸில்.. இன்னும் சொல்லப் போனா என்னை விடக் கூடுதலான ஸ்டேட்டஸில்தானே அவ பிறந்திருந்தா...?"

ஆதவனின் காதலியான தாமரையின் தந்தை தணிகாசலம் பொன் விளைந்த களத்தாரின் முதன்மையான பணக்காரர் என்பதை நினைவு படுத்தினான் சித்தார்த்தன்..

"உனக்கு தெரிந்தது அவ்வளவுதான்.." நொடித்தாள் நீரஜா..

"உனக்குத் தெரிந்ததைத்தான் சொல்லேன்.."

"சொல்லத்தானே போகிறேன்..? அண்ணா.. நீ சொன்ன மறு பிறவிக் கதைகளில எனக்குச் சுத்தமா நம்பிக்கையில்ல.. பட்.. விசயம் இப்ப அது இல்ல.. நீ சொன்ன ஆங்கிள்படியே பார்த்தாலும்.. தாமரை திண்ணைப் பள்ளிக்கூடத்தைத் தாண்டாதவ.. ஆதவன் அந்தக் காலத்திலேயே பெரிய படிப்பைப் படிச்சவன்.. தாமரையைப் போலக் கிணற்றுத் தவளையா பொன் விளைந்த களத்தாரிலேயே இருக்காம நேதாஜியோட ஃபாலோயரா உலகத்தைச் சுற்றியவன்.. ஐ.என்.ஏ விலே முக்கியப் பொறுப்பில் இருந்தவன்.. தாமரையை விட அவன் உயர்வுதானே..?"

"அதுக்கு...?"

"எல்லாப் பிறவிகளிலேயும் அவளை விட நீ உயர்வா இருந்திருக்க.. அதனாலதான் அவ உன்னை காதலிச்

சிருக்கிறா.. இந்தப் பிறவிலேயேயும் அதுதான் கண்டினியூ ஆகுது.. தி கிரேட் சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனிஸீக்கு நீ எம்.டி.. அவ உன்கிட்ட வேலை பார்க்கிற ஸ்டாப்.. ஸோ.. உன்னை மேரேஜ் பண்ணிக்கிட்டா ஹை சொசைட்டி லைஃபை என்ஜாய் பண்ணி வாழலாம்ன்னு அவ கணக்குப் போட்டிருப்பா.. உன்னோட கணக்குப் படியும் பார்த்தா மத்த ஆறு பிறவிகளிலேயும் இதே கணக்குத்தான் அவ மனசில இருந்திருக்கு..."

சித்தார்த்தன் கோபமானான்.. அவன் முகத்தில் வந்த ரௌத்திரத்தில் ஆடிப் போகாமல் அவனையே பார்த்தபடி அசையாமல் உட்கார்ந்திருந்தாள் நீரஜா.. அவள் விழிகளில் தெரிந்த சவாலில் சித்தார்த்தன் பொங்கி விட்டான்..

"அதை புரூப் பண்ணு..."

அவன் கோபத்தில் இதுதாண்டா அண்ணா எனக்கு வேணும் என்று மனதுக்குள் குதூகலித்தாள் நீரஜா..

அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் இறுக்கமாக முகத்தை வைத்தபடி..

"புரூவ் பண்ணிட்டா..?" என்று கேட்டாள்..

"நீ என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன்..."

தங்கை விரித்த வலையில் விழுந்து விட்டான் சித்தார்த்தன்..

"வார்த்தை மாற மாட்டியே.."

"நான் சித்தார்த்தன்..! விவேகானந்தன், நிருபமா வோட மகன்..! வார்த்தை மாறுகிற வம்சத்தில் நான் பிறக்கலை..."

"நானும் அதேபோல்தான்ங்கிறதை மறந்துட்டியா..? இத்தனையையும் சொன்னவன் நீரஜாவோட அண்ணன் நான்ங்கிறதைச் சொல்லாம விட்டுட்டியே.. அண்ணா.."

"நீ சேலன்ஜிக்கு வா.."

"வந்தாச்சு.. இந்த சேலன்ஜில் நான் வின் பண்ணிட்டா நான் என்ன சொன்னாலும் நீ கேட்பேன்னு வாக்குக்

கொடுத்திருக்க.. மறந்திராதே..."

"அதுக்கு முதலில உன் சேலன்ஜில் நீ ஜெயித்தாகனும்.. அதையும் நீ மறந்திராதே.."

சித்தார்த்தன் கோபமாக போய் விட்டான்.. அவனுக்கான காபி பலகாரங்களுடன் தோட்டத்துக்கு வந்த நிருபமா மகனைக் காணாமல்..

"எங்கேடி உன் அண்ணன்..?" என்று தேடினாள்..

"இருங்க மம்மி.. என் துப்பட்டா முனையில முடிஞ்சு வைச்சிருக்கேனான்னு தேடறேன்.." நீரஜா சுடிதாரின் மீதிருந்த துப்பட்டாவை உதறிக் காட்டினாள்..

"போடி.. உனக்கு எல்லாமே கிண்டல்தான்.."

காபி, டிபன் இருந்த டிரேயைக் கையில் பிடித்திருந்த விமலா பின் தொடர மகனைத் தேடி மாடிக்குப் போய் விட்டாள் நிருபமா..

மகன் மீதான அவளது தேடலில் நீரஜாவுக்கு பெருமூச்சு வந்தது.. அந்த மகன் உயிராக நினைக்கும் பெண்.. அவனது உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியவள் என்பதை அறிந்தால் அந்தத் தாயின் மனம் என்ன பாடுபடும் என்று நினைத்துப் பார்த்த நீரஜாவுக்கு மனது பாரமானது..

'என்னை மன்னித்து விடு அண்ணா..' மனதுக்குள் சித்தார்த்தனின் மன்னிப்பை யாசித்தாள் அவள்..

'எனக்கு வேறு வழியில்லை.. இந்தப் பிறவியிலாவது உன் காதல் நிறைவேறி.. யாமினியுடன் வாழ்ந்து விடவேண்டும் என்று நீ நினைக்கிறாய்.. இந்தப் பிறவியிலாவது அவள் ஆட்டி வைக்கும் பொம்மையாய் நீ ஆடாமல் உன்னைக் காத்து உயிர் வாழ வேண்டுமென்று நான் நினைக்கிறேன்... என்ன செய்வேன் நான்..? யாமினியின் ஆறு பிறவிகளில் இரண்டாவது பிறவியை மட்டும் முன்னால் நிறுத்தி.. நீதான் நந்தினியென்று அவளுடைய நினைவின் அலைகளைத் தட்டி எழுப்பு கின்றார்களே... அமிழ்ந்து கிடக்கும் அந்த ஆவேச நினைவுகள் கரையை உடைத்துக் கொண்டு மேலே

கிளம்பி விட்டால், உன்னைப் பழி தீர்க்க நினைப்பவர் களுக்கு அவள் துணை போய் விடுவாள் அண்ணா.. என்னால் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது..'

தோட்டத்தின் தனிமையில் வெகு நேரம் அமர்ந்திருந்தாள் நீரஜா.. கம்பெனியிலிருந்து வந்த விவேகானந்தன் காரை விட்டு இறங்கி வீட்டுக்குள் போகாமல் தேங்கி நின்று தோட்டத்தில் தனித்திருந்த மகளைப் பார்த்தார்.. அவர் புருவங்கள் உயர்ந்தன.. மகளிடம் போனார்..

"நீரும்மா..."

மென்மையான தந்தையின் குரலில் சிந்தனை கலைந்தவளாக...

"டாட்.." என்று முகமலர்ச்சியுடன் விவேகானந்தனைப் பார்த்தாள் நீரஜா..

"என்னடாம்மா.. இங்கே தனியா உட்கார்ந்திருக்க..?"

"ச்சும்மா.. நத்திங் எல்ஸ்.."

"கம்பெனிக்கு ஏன் வரலை...?"

"சித் வந்திருக்கானே டாடி.. அவன் கூடப் பேசிக்கிட்டு இருந்தேன்.. கம்பெனிக்கு வரனும்னு தோணலை.."

"சித்தார்த் எங்கே...?"

"அவன் ரூமில் இருப்பான்.. இப்பவரைக்கும் என்கூட தோட்டத்தில உட்கார்ந்து பேசிக்கிட்டு இருந்தான்.. இப்பத்தான்.. மாடிக்குப் போனான்.. மம்மி அவனுக்கு காபி டிபன் கொண்டு வந்திட்டு அவனை இங்கே காணோம்ன்னு அவன் ரூமுக்குத் தேடிப் போயிருக்காங்க.."

"அவ அப்படித்தான்.. மகன் வந்தாப் போதும்.. உன்னையும், என்னையும் மறந்திடுவா...?"

"ஊஹூம்...? நீங்க மறக்க மாட்டிங்களா..?"

"யாரை...?"

"என்னையும், மம்மியையும்..! உங்களுக்கும் சித்தார்த் தானே உயர்வு..? என் மகன், என் மகன்னு சொல்வீங்களே.."

"ஹா... ஹா..."

தந்தையுடன் இணைந்து சிரித்த போது.. அவர் மகனைக் காப்பாற்றி அவரிடம் ஒப்படைத்து விடவேண்டு மென்ற வைராக்கியம் நீரஜாவின் மனதில் வந்தது..

அத்தியாயம் - 108

உனக்காக உயிர் வாழ்பவள்

உன்னுயிரைப் பறிப்பாளா...?

"இவ தான் யாமினி மம்மி..."

சித்தார்த்தன் அறிமுகம் செய்து வைத்த போது.. மத்திய மந்திரி ஒருவரின் மனைவியுடன் பேசிக் கொண்டிருந்த நிருபமா..

"எக்ஸ்யூஸ் மி..." என்று சொல்லி விட்டு யாமினியின் பக்கத்தில் வந்து அவளைக் கூர்ந்து பார்த்தாள்..

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அணுவணுவாய் அலசிப் பார்த்த அவளது பார்வையை யாமினி உணர்ந்து விடாத விதத்தில் இதமான மென்சிரிப்புடன் அவள் பார்த்ததில் யாமினிக்கு ஆழ்ந்த மரியாதை உள்ளது...

என் மகனுக்கு இவள் தகுதியானவள்தானா என்று ஆராயும் நிருபமாவின் பார்வையில் திருப்தி வர வேண்டும் என்று மனதுக்குள் வேண்டிக் கொண்டாள் யாமினி..

"எப்படியிருக்கம்மா..?" நிருபமாவின் பார்வையில் திருப்தி தெரிந்தது.

"ஃபைன் மேம்.." சந்தோசப் பட்டுப் போனாள் யாமினி..

"மேம்ன்னு சொல்லாதேம்மா.. ஆண்ட்டின்னு சொல்லு.."

"தேங்க் யு ஆண்ட்டி.."

யாமினிக்கு வானத்தில் பறப்பதைப் போல இருந்தது. மிகப் பெரிய தேசியக் கட்சியின் தமிழகக் கிளையின் தலைவர் பதவியில் இருப்பவரின் மகள்... அரச பாரம் பர்யத்தில் பிறந்தவள்.. கோடிஸ்வரி.. கோடிஸ்வரரின் மனைவி.. ஸ்டார் இமேஜைக் கொண்ட பிஸினெஸ் மேக்னெட் சித்தார்த்தனின் தாய்.. யாமினியைப் பாத்து 'ஆண்ட்டி' என்று கூப்பிடச் சொல்கிறாள்...

"மம்மிக்கு உன்னைப் பிடிச்சுப் போச்சு..."

சித்தார்த்தன் அவளிடம் கிசுகிசுத்த போது யாமினியின் பாதங்கள் தரையில் பாவவே இல்லை.. உல்லாச ஊஞ்சலில் ஆடுவதைப் போல் உணர்ந்தாள்.

"டாட்..! ஷி இஸ் யாமினி..!"

விவேகானந்தனிடம் அவளைக் காட்டிச் சித்தார்த்தன் சொன்ன போது... ஊடுறிவிய அவரின் பார்வையில் நடுநடுங்கிப் போனாள் யாமினி.. அவருக்கு யாமினியை மருமகளாக்கிக் கொள்ளும் எண்ணம் வர வேண்டுமே என்று உலகில் உள்ள அத்தனை தெய்வங்களிடமும் விண்ணப்பம் வைத்தாள்..

"உன் பேரண்ட்ஸ் என்ன செய்கிறாங்கம்மா..?"

அவரின் கனிவான கேள்வியில் பச்சைவிளக்கு ஒளிர்ந்ததில் யாமினியின் கண்களும் ஒளிர்ந்தன..

"அப்பா கலைப் பொருள்களின் விற்பனைக் கூடம்ன்னு ஒரு ஷாப் நடத்திக்கிட்டு இருக்கார் சார்.. மகாபலிபுரத்தில்தான் அந்த ஷாப் இருக்கு.. அம்மா ஹவுஸ் வொய்ப்..."

"ஈஸிட்...? சார்ன்னு சொல்லாதேம்மா.. அங்கிள்ன்னு சொல்லு.. உனக்கொரு அண்ணன் இருக்கிறதா சித்தார்த் சொன்னானே..."

"ஆமாம் அங்கிள்.. யதுநந்தன்னு பெயர்.. கல்பாக் கத்திலே வொர்க் பண்றான்.. கவர்ண்மெண்ட் ஜாப்.."

தான் பேசிக் கொண்டிருப்பது தமிழகத்தின் மிகப் பெரிய பணக்காரரான விவேகானந்தனிடம் என்ற பிரமிப்பில் பேச முடியாமல் திக்கித் திணறிப் பதில் சொன்னாள் யாமினி.. நிருபமாவைப் போல அவரும் வெகு சுவாதீனமாக அங்கிள் என்று அழைக்கச் சொன்னதில் அவளுக்குக் கண்ணீரே வந்து விட்டது..

'எப்படி...?'

அவளால் நம்பவே முடியவில்லை.. இவையெல்லாம் எப்படி சாத்தியப்பட்டன..? சித்தார்த்தனின் பெற்றோர் அவளை மருமகளாக ஏற்றுக் கொண்டார்களா..? அவளுக்கும் சித்தார்த்தனுக்குமான காதலை அங்கீகரித்து விட்டார்களா..?

"இந்தப் பார்ட்டியே அவங்களுக்கு உன்னை அறிமுகப் படுத்தறதுக்காக நான் அரேஜ்ச் பண்ணின பார்ட்டிதான்.. என்னோட பார்த்டே பார்ட்டியை காஞ்சி புரத்திலதான் கொண்டாடுவேன்.. என்ன வேலையிருந் தாலும் டாட் அதை போஸ்ட்போன் பண்ணிடுவார்.. மம்மி கேன்சலே பண்ணிடுவாங்க.. நீரஜா கெத்து காண்பிச்சாலும் என் சம்பந்தப்பட்ட எல்லாத்துக்கும் பர்ஸ்ட் பிரிப்பரன்ஸ் கொடுத்து இம்பார்ட்டண்ட் கொடுப்பா.. தாமுவைப் பத்திச் சொல்லவே வேண்டாம்.. என்னோட நிழல் அவன்.. நான் முகம் பார்க்கும் கண்ணாடி..! இந்தப் பார்ட்டியிலே வேற ஒரு விசயமும் இருக்கு.. எங்களோட ஸ்கூல், காலேஜ் டேஸ் பிரண்ட்ஸ் எல்லாரும் என் பார்த்டே பார்ட்டியை மிஸ் பண்ணவே மாட்டாங்க.. இதையெல்லாம் தூக்கிச் சாப்பிடறதைப் போல.. வீடு.. வீடை விட்டா ஆபிஸ்.. ஆபிஸ் விட்டா கோவில்ன்னு... ஒரே வட்டத்துக்குள்ள சுத்திக் கிட்டு இருக்கிற ஈஸ்வரன் அங்கிளும்.. அவருக்கு வாழ்க்கைப் பட்டுட்ட ஒரே காரணத்தாலேயே அவர் போட்டிருக்கிற வட்டத்துக்குள்ள சதுரமாகிட்ட அம்பிகா ஆண்டியும் தட்டிக் கழிக்காம என் பார்த்டே பார்ட்டிக்கு வந்திருவாங்க.."

"அவங்க யாரு...?"

"தாமுவோட பேரண்ட்ஸ்... வா.. அவங்களுக்கும் உன்னை இன்ட்ரெடியூஸ் செய்கிறேன்..."

ஏறக்குறைய அந்தப் பார்ட்டிக்கு வந்திருந்த அனைவரிடமும் யாமினியை அறிமுகப்படுத்தி விட்டான் சித்தார்த்தன்.. அவளுடைய பெயரைக் கேட்டவுடன் புரிந்து கொண்ட பாவனையுடன் அவர்கள் பார்த்த பார்வையில் அப்போதே திருமதி சித்தார்த்தனாக ஆகி விட்டதைப் போல உணர்ந்தாள் யாமினி.. அந்த சந்தோசத்தை அவள் நெஞ்சில் நிறையச் செய்தவனைப் பார்த்தாள்... யாரோ ஒருவரிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த சித்தார்த்தன் அவள் பார்வையைக் கண்டதும் ரகசியமாகக் கண்சிமிட்டினான்...

'கள்ளன்...' யாமினியின் முகம் சிவந்து விட்டது..

அதை ரசனையுடன் பார்த்தபடி அவளருகில் வந்தவன் கிசுகிசுப்பான குரலில்

"பிடிச்சிருக்கா...?" என்று கேட்டான்..

வெட்கத்துடன் அவனைப் பார்த்தவளுக்கு அவனை ரொம்ப.. ரொம்ப பிடித்திருந்தது.. அதை அந்தக் கூட்டத்தின் மத்தியில் எப்படிச் சொல்வது என்று அவள் திகைத்து நிற்பதைப் பார்த்தவன் குனிந்து அவள் விழிகளுக்குள் பார்த்தபடி..

"என் பேமிலியைச் சொன்னேன்டி.." என்று மறுபடியும் கண்சிமிட்டினான்..

யாமினிக்கு சந்தோசமாக இருந்தது.. அதுவரை அப்படியொரு சந்தோசத்தை அவள் வாழ்நாளில் உணர்ந்ததே இல்லை என்பதைப் போல அவள் மிக.. மிக.. அதிகமாக சந்தோசப்பட்டாள்.. சித்தார்த்தன் எங்கே சென்றாலும் தேடிச் சென்ற அவளது பார்வையை.. ஏதேனும் ஓர் மூலையில் நின்றபடி அவனும் சந்தித்துக் கொண்டே இருந்தான்.. அன்றைய தினத்தின் நொடிகள் நகராமல் அப்படியே நிலைத்து நின்று விடக் கூடாதா என்று யாமினியின் மனம் ஏங்கியது..

சித்தார்த்தனின் பிறந்தநாள் பார்ட்டியில் கலந்து கொள்ள அனுரதாவிடம் கெஞ்சிக் கூத்தாடி அனுமதி வாங்கியிருந்தாள்...

"காஞ்சிபுரத்துக்குப் போகிறயா..?"

யதுநந்தன் கடுமை காட்டினான்.. யாமினியின் கெஞ்சுதலான முகபாவனையில்..

"உன் நல்லதுக்குத்தான் சொல்றேன் யாமினி.. அவங்க பணக்காரங்க.. எதையும் லேசா நினைச்சுத் தூக்கி போட்டிருவாங்க.. உன் மனசுதான் வேதனைப்படும்.. பார்த்து நடந்துக்க..." என்று சொன்னதோடு விட்டு விட்டான்..

பார்ட்டியில் சித்தார்த்தனின் நண்பர்கள் ஆடினார்கள்.. நீரஜா கூட ஆங்கிலப் பாடல் ஒன்றைப் பாடினாள்.. மெலிதான.. ஆழ்ந்த குரலில் அவள் அப்பாடலைப் பாடிய போது பார்ட்டியில் இருந்தவர்கள் மௌனமாகி அவளுடைய இசையில் கட்டுண்டு நின்று விட்டார்கள்.. வேற்று மொழிப் பாடல்களுக்கும் மக்களின் கவனத்தையும், ரசனையையும் ஈர்க்கும் ஆற்றலுண்டு என்று அன்று கண்டு கொண்டாள் யாமினி.. சித்தார்த்தனும் தாமோதரனும் இணைந்து பாடி ஆட ஆரம்பித்ததும் அவர்களின் நண்பர்களும் நீரஜாவும் பாட்டின் தாளலயத்துக்கு ஏற்பக் கைதட்டி அவர்களை உற்சாகப் படுத்தினார்கள்.. யாமினியும் அதில் கலந்து கொண்டாள்..

"காட்டுக் குயிலு மனசுக்குள்ள

பாட்டுக்கேதும் பஞ்சமில்ல.. பாடத்தான்.."

சித்தார்த்தன் பாடலை ஆரம்பித்து வைக்கத் தாமோதரன் அதைத் தொடர்ந்தான்...

"கவலைத் கட்டு விட்டுப்புட்டு

தவிலைத்தட்டு துள்ளிக்கிட்டு.. ஆடத்தான்.."

அவர்கள் இருவரும் ஆட ஆரம்பிக்க.. அவர்களின் நண்பர்களும் சேர்ந்து கொண்டார்கள்..

"எல்லோரும் மொத்தத்திலே....

சந்தோச சத்தத்திலே...

ஒன்னான நேரத்திலே...

உல்லாச நெஞ்சத்திலே..."

சித்தார்த்தனின் நண்பர்கள் மட்டுமே ஆடிக் கொண்டிருக்க அதை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்த யாமினி யதேச்சையாக நீரஜாவைப் பார்த்தாள்.. அவளையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்த நீரஜா யாமினியின் பார்வையைச் சந்தித்ததும் லேசாக புன்னகைத்தாள்.. பதிலுக்கு புன்னகை செய்த யாமினிக்கு ஏதும் வித்தியாசமாக தோன்றவில்லை.. அன்றைய விழாநாளின் குதூகலம் அவள் மனதில் புகுந்திருந்ததில் வேறு எந்த சஞ்சலமும் அவளை அணுகவில்லை..

"போடா எல்லாம் விட்டுத்தள்ளு...

பழசையெல்லாம் சுட்டுத் தள்ளு...

புதுசா இப்போப் பிறந்தோமுன்னு

எண்ணிக் கொள்ளடா..."

கைகளை விரித்துத் தாமுவைக் கட்டிக் கொண்டபடி பாடினான் சித்தார்த்தன்.. நீரஜாவின் முகம் விகசித்தது..

"பயணம் எங்கே போனாலென்ன..?

பாதை நூறு ஆனாலென்ன...

தோட்டம் வைச்சவன் தண்ணீர்விடுவான்..

சும்மா நில்லடா.. டோய்..."

தாமோதரன் பதிலுக்கு கைகளை வீசிப் பாடியதில் யாமினி உள்ளம் நெகிழ்ந்தாள்...

'எப்பேர்பட்ட ஆழ்ந்த நட்பு இது..!'

"ஊதக்காத்து வீச...

உடம்புக்குள்ள கூச...

குப்ப கூடம் பத்த வைச்சுக்

காயலாம்..."

அவர்கள் இருவரையும் சேர்த்துக் கட்டிக் கொண்ட ஒருநண்பன் பாட.. அடுத்தவன்...

"தை பொறக்கும் நாளை...

விடியும் நல்ல வேளை...

பொங்கப் பானை வெல்லம் போலப்

பாயலாம்..."

என்று சேர்ந்து கொள்ள மற்றவர்களும் சங்கமித்து ஒரே குரலில்..

"அச்சு வெல்லம் பச்சரிசி...

வெட்டி வைச்ச செங்கரும்பு...

அத்தனையும் தித்திக்கிற நாள்தான்..."

என்று கோரசாக பாடினார்கள்..

அந்த நாள் மார்கழியின் கடைசி நாள்.. விடிந்தால் தை மாதம் பிறக்கப் போகிறது என்பது உண்மைதான்...

'இவன் மாதங்களில் மார்கழியா...?'

சித்தார்த்தனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள் யாமினி.. அவளுக்கான பிரத்யேகப் பார்வைக்காக அவள் மனம் ஏங்கியது.. அவன் அவளைப் பார்க்கவில்லை.. அவனது பார்வையெல்லாம் தாமோதரனின் மீதே இருந்தது...

"பந்தம் என்ன..? சொந்தம் என்ன..?

போனா என்ன..? வந்தா என்ன..?

உறவுக்கெல்லாம் கவலைப்பட்ட

ஜென்மம் நானில்ல...

பாசம் வைக்க... நேசம் வைக்க...

தோழன் உண்டு வாழ வைக்க..

அவனைத்தவிர உறவுக்காரன்..

யாரும் இங்கில்ல..."

சித்தார்த்தனின் பாடலில் யாமினி துணுக்குற்றாள்... இதற்கான அர்த்தம் என்ன..? தாமுதான் சித்தார்த்தனுக்கு அனைத்தும் என்றால் அவளுக்கான இடம் இது...? அனைத்து நேரத்தையும், பாசத்தையும் தாமோதரனுக்கே அவன் அள்ளி வழங்கி விட்டால் யாமினிக்கென்று என்ன மிஞ்சப் போகிறது...? தாமோதரனுக்கு கொடுத்தது போக மிகுந்திருக்கும் மிச்சம் மீதி நேரத்தையும், பாசத்தையும்தான் சித்தார்த்தன் அவளுக்குக் கொடுக்கப் போகிறானா...?

வெறும் திரையிசை பாடல்தானே என்று விட்டு விட அவளால் முடியவில்லை.. சித்தார்த்தனைப் பற்றி அவளுக்குத் தெரியும்.. ஆத்மார்த்தமான அன்பில்லாத எதையும் அவன் சொல்லில் உதிர்க்க மாட்டான்.. யாமினி அவன் வாழ்வில் வருவதற்கு முன்னரே தாமோதரன் வந்து விட்டான் என்ற போதிலும்.. அவளுக்கென்று சித்தார்த்தனின் மனதில் தனி இடம் இருக்க வேண்டு மென்று அவள் மனம் பதைத்தாள்..

தாமோதரன் சித்தார்த்தனைக் கட்டிக் கொண்டு அவன் முகம் பார்த்தான்.. உணர்ச்சிப் பெருக்கில் கண்கள் கலங்கி அவனுடைய உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.. அவன்தான் பெரிது என்று சொன்ன சித்தார்த்தனின் நட்பில் அவன் நெகிழ்ந்து போயிருந்தான்..

"உள்ள மட்டும் நானே...

என் உசிரக் கூடத்தாரேன்...

என் நண்பன் கேட்டா

வாங்கிக்கன்னு சொல்லுவேன்..

என் நண்பன் போட்ட சோறு..

நிதமும் திண்ணேன் பாரு...

நட்பைக்கூடக் கற்பைப் போல

எண்ணுவேன்..."

தாமோதரனின் தழதழத்த குரலில் சித்தார்த்தன் அவனை இறுக்கி அணைத்துக் கொண்டான்.. அந்த நண்பர்களின் பிணைப்பில் அங்கிருந்த அத்தனை பேரும் கண்கள் பனிக்க.. நெகிழ்ந்து நின்று விட்டார்கள்.. அந்த நெகிழ்ச்சியான சுழலை மாற்றுவதற்காக மற்ற நண்பர்கள் களத்தில் குதித்து கும்மாளத்துடன்..

"சோகம் விட்டு.. சொர்க்கம் தொட்டு..

ராகம் இட்டு.. தாளம் கொட்டிப்

பாட்டுப் பாடும் வானம்பாடி நாம்தான்.."

என்று கைதட்டிப் பாடியதில் விழாநாளின் உற்சாகம் மீண்டும் அங்கே நிரம்பியது...

யாமினி விலகிச் சென்றாள்.. அவளை விட தாமோதரனுக்குத்தான் சித்தார்த்தன் அதிக அளவில் முக்கியத்துவம் கொடுப்பான் என்ற உண்மையில் அவள் தனிமையாக உணர்ந்தாள்..

"இங்கே என்ன பண்ற..?" நீரஜாவின் குரலில் திரும்பியவள்..

"சும்மா..." என்று முறுவலித்தாள்..

"தனியா வந்து நின்னிருக்கியே...?"

"வீடு அழகாய் இருக்கு.. அதான் ரசிச்சுக்கிட்டு இருந்தேன்.."

"வீடு மட்டும்தான் அழகாய் இருக்கா..? இந்த டயமெண்ட் நெக்லெஸ் அழகாய் இல்லையா...?"

நீரஜா தொட்டுக் காட்டிய பின்னால்தான் அவள் கழுத்தில் இருந்த அந்த வைர அட்டிகையைக் கவனித்தாள் யாமினி..

மிக நுணுக்கமான வேலைப் பாடுகளுடன் இருந்த அட்டிகையின் அமைப்பில்

"வாவ்...!" என்று வியந்து போனாள்..

உடனே அதைக் கழட்டி யாமினியின் கழுத்தில் போட்டுவிட்டு யாமினி அணிந்திருந்த மெல்லிய தங்க நெக்லெஸை தன் கழுத்தில் போட்டுக் கொண்டாள் நீரஜா..

"வேண்டாம்ங்க..." பதறிப் போய் நீரஜாவின் வைர அட்டிகையை கழட்ட முயன்றாள் யாமினி..

"இருக்கட்டும்..." நீரஜா தடுத்தாள்..

"தயவு செய்து வேண்டாம்.. மத்தவங்க ஜ்வல்லை நான் போட்டுக்கறதில்ல..."

"நான் மத்தவளா..? உனக்கு நாத்தனாராக வரப் போகிறவள்.."

"இருக்கட்டுமே.. உங்க சொந்தம் மட்டும் இருந்தாப் போதும்.. ஜ்வல்ஸ் வேண்டாம்.. எனக்கு அன்ஈஸியா இருக்கு.."

"நீ ஆசைப்பட்ட அட்டிகையைப் போட்டுக்கறதில இத்தனை வழக்கா..?"

"இல்லைங்க.. நான் இந்த டயமெண்ட் நெக்லெஸ் மேல ஆசைப் படலை.. அழகாயிருக்குன்னுதான் சொன்னேன்.."

"ஏதோ ஒன்னு.. நீ அப்ரிசியேட் பண்ணின ஜ்வலை நீ போட்டிருக்கனும்னு நான் ஆசைப்படறேன் யாமினி.. அட்லீஸ்ட் இந்த பார்ட்டி முடிகிறவரைக்குமாவது போட்டுக்கயேன்.. ப்ளீஸ்.. எனக்காக..."

'என்னடா இது சோதனை...!'

யாமினிக்கு வியர்த்துக் கொட்டியது.. ஏறக்குறைய நீரஜாவிடம் அவள் மன்றாடினாள்..

"என்னைப் புரிஞ்சுக்கங்க நீரஜா..! எனக்கு ஜ்வல்ஸ் மீது என்னைக்குமே ஆசை இருந்ததில்லை.. ஆச்சுவலா எனக்கு நகை போட்டுக்கவே பிடிக்காது.. நீங்க கேட்டதாலே நல்லாயிருக்குன்னு பாராட்டிட்டேன்.. அதுக்காக இவ்வளவு பெரிய பனிஷ்மெண்டா..?"

"நகை போட்டுக்கறது பனிஷ்மெண்டா...?"

சிரித்தபடியே கேட்டாலும் நீரஜாவின் பார்வையில் இருந்த ஏதோ ஒன்றில் மனம் பதறினாள் யாமினி.. அவள் கழுத்தில் இருந்த வைர அட்டிகை முள்ளாய் அவள் கழுத்தில் குத்தியது..

நீரஜா யாமினியை விட்டு நகர்ந்து யாரிடமோ பேசுவதைப் போல விலகிச் சென்று விட்டாள்.. நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்த சித்தார்த்தனின் தோள் தட்டினாள்.. திரும்பிப் பார்த்தவனிடம் தனியே வா என்று சைகை காட்டினாள்.. அவனும் வந்தான்..

"அங்கே பார்.." யாமினியைக் காட்டினாள்..

"அவளுக்கென்ன..?" சித்தார்த்தன் எரிச்சலுடன் கேட்டாள்.

"லுக் மை டியர் பிரதர்.. அவளுக்கென்னன்னு ஈஸியாக் கேட்டுட்ட.. நான் பதிலைச் சொன்னா உன்னால தாங்கிக்க முடியுமோ.. முடியாதோ..."

"நீ சொல்லு.. முடியுதா.. முடியலையான்னு அப்புறம் பார்க்கலாம்..."

"வெல்.. உன் ஆசையைக் கெடுப்பானேன்.. கேட்டுக்க.. உன் காதலிக்கு என்னோட டயமெண்ட் நெக்லெஸ் மேல ஆசை வந்துருச்சு.. அவளுக்கு வேணும்னு கேட்டா.. நான் யோசிச்சேன்.. சித்தார்த்தனோட வுட்-பிக்கு ஒரு டயமெண்ட் நெக்லெஸ் மேலேகூட உரிமை யில்லையான்னு கோபப்பட்டா.. மம்மியிடம் நியாயம் கேட்கப் போகிறேன்னு கிளம்பினா.. உனக்கே மம்மியோட குணம் என்னன்னு தெரியும்.. இவ கேட்டவுடனே அவங்க கழுத்தில இருக்கிற டயமெண்ட் நெக்லெஸைக் கழட்டிப் இவ கழுத்தில போட்டு விட்டிருவாங்க.. அது டாடி அவர்களோட வெட்டிங்டே அன்னிவர்சரிக்காக பிரசண்ட் பண்ணின டயமெண்ட் நெக்லெஸ்.. அதை இவ வாங்கிப் போட்டுக்கிட்டா நல்லாயிருக்குமா..? நோ அதர் வே.. நான் என்னோட டயமெண்ட் நெக்லெஸைக் கழட்டிப் போட்டு விட்டுட்டேன்.."

நீரஜா பிணைந்த கதையில் சித்தார்த்தனின் கண்கள் சிவந்தன..

அத்தியாயம் - 109

நிழல் ஆட்ட யுத்தம்...!

நிஜ அன்பைக் கொல்லுமா...?

"இந்த நெக்லெஸ் அழகாயிருக்கே..."

பார்ட்டிக்கு வந்திருந்த பெண்களில் ஒருத்தி கேட்டாள்.. யாமினிக்கு சங்கடமாக இருந்தது.. அவள் பார்வை நீரஜாவைத் தேடியது.. அவள் கழுத்தில் கிடக்கும் வைர அட்டிகையின் ஒளிர்வு மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதை உணர்ந்தவளுக்கு அவளுக்குச் சொந்தமில்லாத பொருளை உரியவளிடம் சேர்த்து விடவேண்டுமென்ற பதட்டம் வந்தது..

"எத்தனை பவுன்..?" ரசித்தவள் விடாமல் கேட்டாள்..

"இது டயமெண்ட் நெக்லெஸ்.." தயக்கத்துடன் சொன்னாள் யாமினி..

"அதான் இந்த ஹாலையே வெளிச்சத்தில் நிரப்புது.."

யாமினியின் கழுத்தை பொறாமையுடன் பார்த்தாள் அந்தப் பெண்.. உதட்டைக் கடித்தபடி யாமினி திரும்பிய போது எதிரில் வந்தான் சித்தார்த்தன்.. அவள் விழிகளில் மின்னல் வந்தது.. அந்த மின்னலில் அவன் புருவங்கள் முடிச்சிட்டன.. அப்படியே அவன் நின்று விட்டான்.. யாமினி ஆவலுடன் அவன் பக்கத்தில் போனாள்..

"தோட்டத்துக்குப் போ... உன்னிடம் பேச வேண்டியிருக்கு.."

சன்னமான குரலில் முணுமுணுத்து விட்டு அவன் வேகமாய் அகன்று விட்டதில் யாமினிக்குள் அதிர்வு வந்தது.. அவன் குரல் ஒட்டாத தன்மையுடன் ஒலித்ததைப் போல அவள் உணர்ந்தாள்..

'சேச்சேச்சே...! அதெல்லாம் இருக்காது.. மெதுவாய் பேசினதாலே அப்படித் தோணுது.. அவனாவது.. ஒட்டாம பேசறதாவது..'

தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டவள் சித்தார்த்தனின் வீட்டுப் பக்கவாட்டுப் பகுதியிலிருந்த கதவின் வழியாக வெளியேறி.. தோட்டத்திற்கு நடந்தாள்.. அங்கிருந்த மர பெஞ்சில் உட்கார்ந்தவளுக்குத் தோட்டத்தின் சூழல் பூங்காவை நினைவு படுத்தியது.. சித்தார்த்தனின் வீடோ ஒர் அரண்மனையைப் போல அவளை அச்சுருத்தியது..

அவள் வீட்டை விட்டு வெளியேறுவதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தான் சித்தார்த்தன்.. நீரஜாவிடம் சவால் விட்டிருந்தவன் தோற்றுப் போய் விட்டானே..

அதை யாமினி அறிவாளா என்றகோபம் அவனுக்குள் கொந்தளித்தது.. பேசிக் கொண்டிருந்தவர்களிடம் லேசாக தலை அசைந்து விட்டு அவன் வாசல் பக்கமாக வந்தான்.. வீட்டின் பக்கவாட்டுக் கதவுப் பகுதியையே பார்த்துக் கொண்டிருந்த யாமினி வாசல் பக்கமாக வருபவனை பார்க்கவில்லை.. அங்கே நின்று கொண்டிருந்த நீரஜாவும் தாமோதரனும்தான் அவனைப் பார்த்தார்கள்..

தாமோதரனின் விழிகளில் நிரம்பியிருந்த அனுதாபம் சித்தார்த்தனைக் கொன்று தின்றது.. மிகப்பெரிய உயரத்தில் இருக்கும் நீரஜா அனைத்தையும் மறந்து தாமோதரனின் அன்பை மட்டுமே பெரிதாக நினைப்பதை நினைத்துப் பார்த்தவனுக்கு தாமோதரன் கொடுத்து வைத்தவன் என்ற பொறாமை எழுந்தது..

'இவனை இவனுக்காகவே நேசிக்கும் காதலி கிடைத்திருக்கா...'

சித்தார்த்தனுக்கு மட்டும் ஏன் அப்படியொரு காதலி கிடைக்கவில்லை...? பிறவிகள் கடந்து தேடி வந்த அவனுடைய காதலி.. ஒவ்வொரு பிறவியிலும் அவனுடைய பணத்தையும் உயரிய நிலையையும்தான் நேசித்தாளா..?

"டேக் இட் ஈஸி சித்தார்த்.." தாமோதரன் இதமாக எடுத்துச் சொன்னான்..

'உனக்கென்ன..? ஈஸியா சொல்லிருவ.. உடைஞ்சு போயிருக்கிறது நான்தானே..' கசப்புடன் நினைத்துக் கொண்டான் சித்தார்த்தன்..

"எனக்கும் இது கஷ்டமாத்தான் இருக்கு அண்ணா.. பட்.. நீ மின்மினியை நட்சத்திரம்ன்னு நினைச்சு ஏமாந்திரக் கூடாது.. அதனாலதான் இந்த சேலன்ஜைப் பண்ணினேன்.. ஐ ஆம் ஸாரி.." மனமார்ந்த வருத்ததுடன் சொன்னாள் நீரஜா..

இட்ஸ் ஆல் ரைட் என்று சொல்ல வாய் வரவில்லை சித்தார்த்தனுக்கு.. கசப்புடன் யாமினியை நோக்கிப் போகத் திரும்பியவன் ஸ்தம்பித்து நின்று விட்டான்..

"என்ன ஆச்சு...?"

நீரஜா தாமோதரனைப் பார்க்க.. இருவரும் சித்தார்த்தன் பார்த்த திசையில் பார்த்தார்கள்.. அதிர்ந்தார்கள்..

அங்கே அகர்வாலும், பரத்குமாரும் யாமினியிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.. நீரஜா முகம் மாறினாள்..

"இவன் எப்படி நம்ம வீட்டுத் தோட்டத்துக்கு வந்தான்..? தாமு.. செக்யூரிட்டியைக் கூப்பிடுங்க.."

"வெயிட் நீரு.. அவனுக ரெண்டு பேரும் யாமினி கூட ரொம்ப நாளாப்பேசிப் பழகினவங்களைப் போலக் கேசுவலாப் பேசறாங்களே.. எப்படி...?"

"அதை என்கிட்டக் கேட்காதே.. உன் காதலிகிட்டக் கேளு.. போ..."

நீரஜாவின் கடுமையில் சித்தார்த்தனின் புருவங்கள் சுருங்கின..

சித்தார்த்தன் வருகிறானா என்று வழிமேல் விழி வைத்துப் பார்த்துக் கொண்டிருந்த யாமினி அருகில் நிழலாடியதில் யாரென்று நிமிர்ந்து பார்த்தாள்.. அகர்வாலும், பரத்குமாரும் புன்னகைத்ததில் பதறிப் போனவளாக...

"நீங்களா..?" என்றாள்..

அவள் விழிகள் பதட்டத்துடன் சற்று முற்றும் பார்த்தன..

"அஞ்ச வேண்டாம் மகளே..! நம்மை எவரும் கவனிக்கவில்லை..."

தமிழ் தெரியாத இந்தி அகர்வால் செந்தமிலில் பேசி அவளை சோதித்தான்..

"நீங்க எதுக்காக இங்கே வந்தீங்க..? யாராச்சும் பார்த்திட்டா என்னைத்தான் தப்பா நினைப்பாங்க.. போயிருங்க.." யாமினிக்கு நடுங்கினாள்..

"தங்களைப் பற்றியும்.. தங்களின் பிம்பம் கலைந்து விடக் கூடாது என்பதைப் பற்றியும்தான் தங்களுக்குக் கவலை.. தங்களின் தந்தையாரின் உயிரைக் குடித்தவனின் உயிரைப் பறிக்கும் கடமை தங்களுக்கு இருப்பதை மறந்து.. பகைவனுடன் சல்லாபம் செய்ய விழைகிறீர்கள்.. நன்றாக உள்ளது.." பரத்குமார் கடினமான முகத்துடன் பேசினான்..

"எங்கப்பா மகாபலிபுரத்தில கடையைப் பார்த்துக் கிட்டு இருக்காரு.. சும்மா என் உயிரைக் குடிக்காம இடத்தைக் காலி பண்ணுங்க.." யாமினி சுள்ளென்று பேசினாள்..

"உனது கைப்பையா அம்மா..?" அகர்வால் யாமினியின் ஹேண்ட் பேகை கையில் எடுத்து அழகு பார்த்தான்..

"ஹேய் மிஸ்டர்.. அதை எதுக்கு எடுக்கறிங்க..?" யாமினி தடுத்தபோது..

"தங்களது மனதைத் தொட்டுக் கூறுங்கள் தேவி..! முற்பிறவியின் ஞாபகங்களில் தங்கள் மனது உழலவில்லையா..? நேற்றய தினத்தில் ஊதா வண்ண இரவு உடையில்.. தங்களது படுக்கையறையின் சாளரத்துக்கருகே நின்று கண்ணீர் விட்டீர்களே.. அது முற்பிறவி ஞாபகத்தினால் வந்த கண்ணீர்தானே..? அதற்கு முந்தய தினத்தில் ஆரஞ்சு வண்ண இரவு உடையனிந்து தங்களின் அலமாரியிலிருந்த வரலாற்றுப் புதினத்தை எடுத்து அறுபதாம் பக்கத்தை ஆழ்ந்து படித்தீர்களே.. அந்த வரலாறு.. தங்களின் கடந்த பிறவிகளில் ஒரு பிறவியான நந்தினி தேவியைப் பற்றிய வரலாறு அல்லவா..? அந்தப்

புதினத்தின் நாமம் 'பொன்னியின் செல்வன்..' என்பதுதானே..?"

பரத்குமார் பேசப்பேச.. அகர்வாலின் கையிலிருந்த ஹேண்ட் பேகை மறந்து..

"அடப்பாவி..!" என்று அவன் பக்கமாக திரும்பி விட்டாள் யாமினி..

அவளுடைய ரத்தம் கொதித்தது.. பூட்டிய அறைக்குள் அவள் நடமாடுவதை.. உடுத்தியிருக்கும் உடையின் வண்ணங்கள் முதற்கொண்டு இவன் பிட்டுப்பிட்டு வைக்கிறானே.. அது எப்படி..?

"நீ நல்லாவே இருக்க மாட்டேடா.. நாசமாப் போயிருவ.. இந்த நேரத்தில நான் எதைச் சொல்லி சபித்தாலும் அது பலிக்கும்டா.. நீயும் உன் கூட்டாளிகளும் விளங்காமப் போயிருவீங்க.. எனக்கென்னன்னு என் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போய்க்கிட்டிருக்கிற பொண்ண டார்ச்சர் பண்றீங்களேடா.. உங்க வீட்டுப் பெண்களுக்கு இதே கதி கிடைக்காதுனா நினைக்கறீங்க..? கிடைக்கும்டா.. என் வயிறு எரிய எரிய உன் வீட்டுப் பொம்பளைக அதில எரிஞ்சு சாம்பலாப் போயிருவாங்கடா.. பாதிக்கப்பட்ட பெண்ணின் சாபம் எப்படிப் பட்டதுன்னு காலம் உங்களுக்கு உணர்த்தும்டா.. உங்களோட அழிவைக் கண்ணால பார்க்காம நான் போக மாட்டேண்டா.."

"பொறுமை தேவி.. பொறுமை.. எதற்காக இந்த கோபம்..?"

"என் செருப்பைக் கழட்டினேன்னு வைய்யி.. உன்னைக் கந்தலாக்காம நான் விட மாட்டேன்.. எடுபட்ட நாய்களா..! விருந்தாளிகளுக்குப் பொறந்த மகன்களா..! நல்லதாய் வயித்திலே பொறந்திருந்தா உங்களுக்கு நல்ல புத்தி இருந்திருக்கும்.. உன்னப் போல நாதாரியப் பெத்துப் போட்டவ எப்படிப் பட்டவளா இருப்பா..?"

யாமினியின் கோபத்தைக் கண்டு கொள்ளாமல் அகர்வாலை பார்த்தான் பரத்குமார்.. இவன் கண்களின் சமிக்ஞைக்கு அவன் விழிகளில் பதில் கிடைத்தது..

"உனது கைப்பையை நான் ஆராயக் கூடாதா..? ஆகட்டும்.. நீயே எடுத்துக் கொள்.."

ஹேண்ட் பேகை நீட்டி விட்டு அகர்வால் நடையைக் கட்ட.. வந்த வேலை முடிந்தது என்பதைப் போல பரத்குமார் அவனைத் தொடர்ந்து போய் விட்டான்..

அத்தியாயம் -110

முன் வரும் கத்தியை
எதிர்கொள்ளலாம்
முதுகில் நிரடும் கத்தியை

எப்படி எதிர்கொள்வது ?

"அவளோட ஹேண்ட் பேகில எதையோ அகர்வால் வைத்தானே.. என்னவாயிருக்கும்..?" நீரஜா கேட்டாள்..

"தெரியலையே நீரு.." தாமோதரன் கவலைப்பட்டான்..

அவர்கள் வாசல்பக்கமாக விரைந்தார்கள்.. சித்தார்த்தன் யாமினியிடம் போனான்.. ஹேண்ட் பேகைத் திறந்து பார்க்க முனைந்து கொண்டிருந்தவள் பழக்கமான காலடியோசையில் சந்தோசமாக நிமிர்ந்தாள்..

"ஏன் லேட்..? நீங்கதானே தோட்டத்துக்குப் போன்னு சொன்னீங்க..? என்னை அனுப்பி வைச்சுட்டு நீங்க லேட்டா வந்தா எப்படியாம்..?"

யாமினி சிணுங்கினாள்.. அந்த அழகை சித்தார்த்தனால் ரசிக்க முடியவில்லை.. அவன் மனம் முழுவதும் அகர்வாலிடமும், பரத்குமாரிடமும் இருந்தது.. அவர்கள் வந்து போனதைப்பற்றி யாமினி அவனிடம் ஏதும் சொல்லவில்லை என்பதை அவன் மனம் குறித்துக் கொண்டது.. யாமினியின் மீதான அவன் நம்பிக்கை ஆட்டம் கண்டது.. அவன் விழிகள் யாமினியின் கழுத்தை அலங்கரித்த வைர அட்டிகையைப் பார்த்தன.. அந்த அட்டிகையில் அவளது அழகு கூடியிருந்ததும் அவன் மனதில் பதியத்தான் செய்தது.. ஆனால்.. அப்போது

அவனிருந்த மனநிலையில் அவளின் அழகு அவனை மயக்கவில்லை..

"என்ன அப்படிப் பாக்கறீங்க..?" யாமின் முகம் சிவந்தாள்..

"ம்ம்ம்.. உன் அழகு கூடித் தெரியுதே.. அதைத்தான் பார்த்தேன்.."

இறுக்கமான குரலில் சொன்னான் சித்தார்த்தன்.. யாமினி அதைக் கவனிக்கவில்லை.. அவளுடைய சித்தார்த்தனுடன் அவள் தனிமையில் பேசிக் கொண்டிருக்கிறாள் அந்த சந்தோசம் அவளுக்கு..

"எதனால கூடித் தெரியுதாம்..?"

"ம்ம்ம்.. அடுத்தவங்க கழுத்தில இருக்கிற வைர நெக்லெஜைப் பிடுங்கிப் போட்டா அழகாத் தெரிய மாட்டியா..?"

சித்தார்த்தனின் வெறுப்பான பேச்சில் இதயத்தில் அடி வாங்கினாள் யாமினி.. அவளுடைய சித்தார்த் இப்படிக்கூடப் பேசுவானா..?

"சித்தார்த்..?"

"ச்சீ.. என் பெயரைச் சொல்லிக் கூப்பிடாதே.. அதுக்கான உரிமையும், தகுதியும் உனக்கில்லை.. குப்பை மேட்டில கிடக்கிற உன்னைப் போய் கோபுரத்தில உட்கார வைக்க நினைச்சேனே.. கடைசியில உன் புத்தி என்னன்னு காட்டிட்டயே.."

"நான் குப்பை மேடா..?"

யாமினியின் தன் மானம் சிலிர்த்து எழுந்தது..

"கடைசியில் உங்க புத்தியை நீங்களும் காட்டிட் டீங்களே.. பணக்காரன்கிற திமிரைக் காட்டிட்டீங்களே.. என்னைப் பார்த்துக் குப்பைமேடுன்னு எப்படி நீங்க சொல்லலாம்..? பணமிருக்கிறவங்கதான் கோபுரம்.. பணமில்லாதவங்க குப்பை மேடா..? உங்களைவிட நாங்க எந்த வகையில குறைஞ்சு போயிட்டோம்..?"

"ஏய்ய்.. அந்தப் பணத்து மேல ஆசைப் பட்டுத் தானேடி என்னிடம் நீ காதல் நாடகம் ஆடின.. இப்ப உன் சாயம் வெளுத்துப் போச்சுடி.."

"உங்க சாயம்தான் வெளுத்துப் போச்சு.. என்னை உண்மையாக் காதலிக்கறீங்கன்னு நினைச்சேன்.. காதலுக்கும் உங்களுக்கும் எட்டாத தூரம்ங்கிறது இப்பத்தானே தெரியுது.. பணத்திமிர் உங்க கண்ணை மறைச்சிருக்கு.."

"ஷட் அப்.."

"யு ஷட் அப்.. இந்தாங்க உங்க தங்கையோட டயமெண்ட் நெக்லெஸ்.. நான் ஒன்னும் இது மேல ஆசைப்படலை.. அவங்கதான் பார்ட்டி முடிகிற வரைக்கும் நான் இதைக் கட்டாயமா கழுத்தில போட்டிருக்கனும்னு வற்புறுத்தி என் கழுத்தில் போட்டு விட்டாங்க.. அது ஏன்னு இப்பத்தானே எனக்குப் புரியுது.. எனக்காகன்னு அவங்க சொன்னதினாலே இந்தக் கருமத்தைக் கழுத்தில் போட்டுக் கிட்டேன்.. அதில இத்தனை சூதிருக்கும்ன்னு எனக்குத் தெரியாம போச்சே.."

"மாட்டிக்கிட்டதும் பிளேட்டைத் திருப்பிப் போடறியா..?"

"அதுக்கு அவசியமேயில்லை எம்.டிசார்.. குட் பை.. உங்ககிட்ட பார்த்த வேலைக்கும்.. உங்களுக்கும் மொத்தமா சேர்த்து குட்பை சொல்லிட்டேன்னு உங்க தங்கைகிட்டச் சொல்லுங்க.. இனி உங்களுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை.. உங்களை விட்டு விலகிப் போகச் சொல்லி அவங்க சொன்னாங்க.. அதுக்காகவே உங்களை மகாபலிபுரத்துக்கு கூப்பிட்டுக்கிட்டுப் போய் என் அண்ணனிடம் மாட்ட வைச்சு விலகிப் போனேன்.. அப்படிப்பட்டவ கிட்ட மறுபடியும் விலகிப் போன்னு அவங்க ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமே.. அதை விட்டுட்டு இப்படி தேர்ட் ரேட் வில்லி போல டிராமா போட்டிருக்க வேண்டாமே.."

யாமினியின் கொதிப்பில் இருந்த உண்மையில் சித்தார்த்தன் யோசித்தான்.. அகர்வாலின் நினைவு

வந்ததும் அவன் மனது மறுபடியும் கரும்பாறையைப் போல் கடினமாகி விட்டது.. அதற்குள் நீரஜாவும், தாமோதரனும் அங்கே அவசரமாக வந்து சேர்ந்தார்கள்.. யாமினி நீரஜாவை முறைத்தாள்.. நீரஜாவோ பரபரப்பாக யாமினியின் ஹேண்ட் பேகை பிடுங்கினாள்.. உள்ளேயிருந்த பொருளை அவள் எடுத்து..

"கன்..!" என்று அதிர்ந்தாள்..

"துப்பாக்கி.." என்று இமை கொட்டினான் தாமு..

"ரெண்டும் ஒன்னுதான் தாமு.. நீங்க கொஞ்சம் சும்மாயிருக்கீங்களா.. இது என்ன யாமினி..? உன் ஹேண்ட் பேகில் எதுக்காக துப்பாக்கியை வைத்திருக்க.. டெல் மீ.. எனக்கு கான்ஸ்ரீட் ரீசன் வேணும்.."

"உங்க அண்ணனைக் கொல்லத்தான்.. போதுமா..?"

யாமினி நீரஜாவின் கையிலிருந்த துப்பாக்கியைப் பறித்தாள்..

"என்னோட பாதுகாப்புக்குன்னு நான் வைச்சிருக்கிற பொம்மைத் துப்பாக்கி இது.. போதுமா..? சின்னவயசில இருந்து எங்கம்மா எனக்குச் சொல்லிக் கொடுத்தது..

இந்த ஹேண்ட்பேகில பொம்மைத் துப்பாக்கி மட்டும் இருக்காது.. சின்ன மடக்குக்கத்தி, மிளகாய் பொடின்னு ஏகப்பட்ட வஸ்துக்கள் இருக்கும்.. அது அத்தனையையும் உன் அண்ணனுக்காகத்தான் வைச்சிருக்கிறேன்னு சொல்லிருவியா..?"

"பொம்மைத் துப்பாக்கியா..? எப்பவும் வைச்சிருப்பியா..?"

"யெஸ்.. யெஸ்.. யெஸ்.. ஆளை விடுங்க சாமி.. உங்க சகவாசமே எனக்கு வேண்டாம்.. உங்க கூட இருந்தா என்னைச் சந்தேகப் பட்டே சாகடிச்சுருவீங்க.."

ஹேண்ட் பேகில் துப்பாக்கியைத் திணித்தபடி வேகமாக போய் விட்டாள் யாமினி..

"வெயிட் யாமினி.. போகாதே.."

நீரஜா அவள் பின்னால் ஓடினாள்.. அதற்குள் வாசலுக்குப் போன யாமினியின் அருகில் ஒருகார் வந்து நின்றது.. அதில் உட்கார்ந்திருந்த முகேஷ்..

"ரதத்தில் ஏறுங்கள் தமக்கையே..! வெற்றிகரமாக பழி தீர்த்து வந்து விட்டீர்களா..?" என்றபடி கார்கதவைத் திறந்து விட்டான்..

'இந்த லூசு இன்னும் போகலியா..?'

எரிச்சல் பட்டாலும்.. பின்னாலேயே வரும் நீரஜாவின் முகத்தைப் பார்க்கப் பிடிக்காமல் காருக்குள் ஏறிவிட்டாள்.. உள்ளே உட்கார்ந்த பின்னால்தான் காரின் பின்சீட்டில் அகர்வாலும், பரத்குமாரும் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள்..

'இதுகளும் கூட இருக்கா..?'

பேசாமல் காரை விட்டு இறங்கி விடலாமா என்று யோசித்த யாமினி அங்கே நீரஜா நின்றிருப்பாளே என்ற எண்ணத்தில் அந்த யோசனையைக் கைவிட்டாள்.. கார் வேகமாகப் பறந்தது..

"ஸ்டாப்.. அந்தக் காரை ஸ்டாப் பண்ணு.."

செக்யூரிடியிடம் கத்தினாள் நீரஜா.. ஓடிக் கொண்டிருக்கும் காரை எப்படி ஸ்டாப் பண்ண என்று தெரியாமல் திருதிருத்தான் செக்யூரிட்டி..

'கயிறு கட்டியா இழுத்து நிப்பாட்ட முடியும்..?'

அதுவரை அதுபோன்ற கட்டளைகளை நீரஜா பிறப்பித்ததில்லை.. அறிவார்ந்த கட்டளைகளைத்தான் பிறப்பிப்பாள்.. அன்று ஏன் அப்படிக் கூறினாள் என்று ஆராய்ச்சியில் அமிழ்ந்தான் செக்யூரிட்டி..

"வாட் ஹேப்பன் நீரு..?" சித்தார்த்தன் எரிச்சலுடன் வந்தான்..

"யாமினி அகர்வாலோடகாரில் ஏறிப் போயிட்டா அண்ணா.."

நீரஜா பதறினாள்.. அவளைச் சமாதானப் படுத்த நினைத்தவனாக கையைப் பிடித்தான் தாமோதரன்.. அவள் கையை உதறினாள்..

"என்மேல் என்ன கோபம்..?"

"ம்ப்ச்.. நேரம் காலம் தெரியாம விளையாடாதீங்க தாமு.. கேள் அண்ணா.. யாமினியோட ஹேண்ட்பேகில அந்த அகர்வால் துப்பாக்கியை வைத்ததை நான் பார்த்தேன்.. யாமினி என்னடான்னா அவ ஹேண்ட் பேகில எப்பவுமே பொம்மைத் துப்பாக்கியை வைத்திருப்பான்னு சொல்கிறா.."

"ஸோவாட்...? அவ எப்படியோ போகட்டும்.. அகர்வால் கூட இவளுக்கென்ன பிரண்ட்ஷிப் வேண்டியிருக்கு..?"

"புரியாம பேசாதேண்ணா.. தோட்டத்தில.. யாமினி உட்கார்ந்திருந்த பென்சுக்குப் பின்னாலே இந்த பொம்மைத் துப்பாக்கி கிடந்தது.."

நீரஜா காட்டிய பொம்மைத் துப்பாக்கிக்கும்.. யாமினியின் ஹேண்ட்பேகில் இருக்கும் துப்பாக்கிக்கும் வித்தியாசமே தெரியவில்லை...

"அப்படின்னா...?" சித்தார்த்தனுக்கு ஏதோ புரிவதைப் போல இருந்தது..

"யெஸ்.. அந்த அகர்வால் நாய் பொம்மைத் துப்பாக்கியை வெளியில் கடாசிட்டு நிஜத் துப்பாக்கியை உள்ளே வைத்திருக்கான்... அது தெரியாம யாமினி பொம்மைத் துப்பாக்கியோட ஸ்டிக்கரில விரலை அழுத்திட்டா பிரச்னையாகிடும் அண்ணா.."

எக்கேடோ கெடட்டும் என்று விட்டு விட சித்தார்த்தனால் முடியவில்லை.. யாமினியின் மீது நீரஜா வைத்த குற்றச்சாட்டை பொய் என்று மறுத்துவிட்டாள் யாமினி.. அதில் உண்மையும் இருந்தது.. ஆனால் அகர்வாலுடன் ஏன் பேசினாள்.. என்றுதான் அவனுக்கு விளங்கவேயில்லை.. அந்த விளக்கத்தையும் நீரஜாவே சொன்னாள்..

"இவ எங்கே அவனை மீட் பண்ணிப் பேசினா..? அவன்தான் இவ பின்னாலே ரோந்து சுத்தறான்.."

"என்னது..? எப்பயிருந்து இது நடக்குது...?"

"நீ ஃபாரின் டூர் போனயே.. அதுக்குக் கொஞ்ச நாள் முன்னாடிதான் இது ஆரம்பிச்சது..."

நீரஜா விவரித்தாள்.. அவளும் தாமோதரனும் சினிமாப் பார்க்கப் போன போது அங்கே யாமினியின் குடும்பம் வந்திருந்ததையும் அகர்வால் யாமினியைப் பின் தொடர்ந்ததையும் சொன்னாள்..

"எப்படின்னு தெரியலை.. இந்த நாய் வாயில தமிழ் நுழையாது.. ஆனா அட்சரச் சுத்தமா செந்தமிழிலில் பேசிவைக்கிறான்.. அந்த பரத்குமார் என்னடான்னா.. யாமினி வீட்டுக்குள்ளே என்னென்ன பேசினா.. என்ன கலரில டிரஸ் போட்டிருந்தான்னு அத்தனையையும் பக்கத்தில இருந்து பார்த்தவனைப் போலச் சொல்றான்.. ஏற்கனவே முதல் பிறவிகளோட ஞாபகத்தில இருந்த யாமினி மனசு தடுமாறிருவாளோன்னு நான் பயந்தேன்.. நோ அதர் வே.. உன்னிடமிருந்து தள்ளிப் போகச் சொல்லி நான்தான் அவளிடம் சொன்னேன்.. என் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு உன்னை அவ பிரிஞ்சா... நீ இந்தியாவிலேயே இருக்காம ஃபாரின் டூருக்கு ஒடிப் போயிட்ட.. உன்னை இந்தியாவுக்கு திரும்ப வைக்க யாமினியை உன் கம்பெனிக்குத் திரும்ப வைத்தோம்.."

தன்மீது பழிவந்தாலும் பரவாயில்லையென்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நீரஜாவின் மீது சித்தார்த்தனுக்குக் கோபம் வரவில்லை.. பாசம்தான் வந்தது.. என் தங்கை எப்பேற்பட்டவள் என்று தோன்றியது..

சித்தார்த்தனின் நன்மைக்காகத்தான் என்றாலும்.. அவனுடைய வாழ்வில் நுழைந்து அவன் காதலைப் பிரிக்க நீரஜாவுக்கு உரிமையில்லை.. அவள் தனி மனித சுதந்திரத்தை மதிப்பவள்.. இருந்தும் சித்தார்த்தனின் விசயத்தில் அதை மீறினாள்.. அதை ஒப்புக் கொள்ளவும் செய்தாள்..

"நான் என்ன செய்யட்டும்..? யாமினி ஸ்டராங்கான மனசோடு எதுத்துப் போராட வேண்டாமா..? இவ அதைச் செய்யாம மயக்கம் போட்டு விழுகிறாளே.. அவங்க எண்ணம் நிறைவேற இவளை யூஸ் பண்ணிக்கு வாங்களோங்கிற பயம் எனக்கு வந்திருச்சு.. அதனால்தான் உங்க காதலை பிரிக்க நினைச்சேன்..."

"நீ பிரிக்க நினைச்சா அது பிரிந்திடுமா நீரு...? ஏழு பிறவிகளிலும் என்னைத் தொடர்ந்து வருகிறவ அவ.. இந்தப் பிறவியில் மட்டும் என்னை விட்டுப் பிரிஞ்சு போயிருவாளா...?"

"நான் அதை நினைக்கலை அண்ணா.. உனக்கு அவளாலே ஆபத்து வந்து விடக் கூடாது.. அது மட்டும்தான் எனக்கு.. அதுக்காக நான் என்ன வேண்டும்னாலும் செய்வேன்..."

"யாமினி பணத்தாசை பிடித்தவன்னு சீன் கிரியேட் பண்ணுவ..."

"உனக்கு அதுவும் தெரிஞ்சிருச்சா..? யெஸ்.. நான்தான் யாமினியை ஃபோர்ஸ் பண்ணி அவ கழுத்தில என் டயமெண்ட் நெக்லெஸைப் போட்டு விட்டேன்.. அவ வேண்டாம்ன்னு பதறினா.. அவளுக்கு நகை மேலே இன்ட்ரெஸ்ட் இல்லைன்னா.. உன்னை உனக்காகத்தான் அவ காதலிக்கிறா.. என்ன இருந்து என்ன பண்ண..? இந்த அகர்வால் அவளை பிரெயின் வாஷ் பண்ணிக்கிட்டு இருக்கானே..."

"இப்பவும் அவன் காரில்தான் அவ ஏறிப் போயிருக்கிறா.."

"அதை மறந்திட்டோமே.. அண்ணா காரை எடு.."

அவர்கள் மூவரும் காருக்குள் பாய்ந்தார்கள்.. சித்தார்த்தன் புயல் வேகத்தில் காரை ஓட்டினான்.. நீரஜா நகத்தைக் கடிக்க ஆரம்பித்தாள்..

வழியில் தென்பட்ட பஸ் ஸ்டாப்பில் காரை நிறுத்தச் சொன்னாள் யாமினி.. காரை நிறுத்தாமல் ஓட்டிக் கொண்டிருந்தான் முகேஷ்.. இருபுறமும் மரங்கள் அடர்ந்த

ஆளரவற்ற சாலையில் காரை நிறுத்தியவன்.. பரத்குமாரிடம் இந்தியில் பேசினான்..

'இப்ப மட்டும் இவனுக்கு செந்தமிழ் மறந்து போச்சா..?'

யாமினி காரின் கதவைத் திறக்க முயன்றாள்.. முடியவில்லை..

"பிரயத்தனம் வேண்டாம் தேவி..." என்றான் பரத்குமார்..

"இந்த டிராமாவை விட்டுவிடு பரத்குமார்.. ஆர்ட்டிபிஷியலா இருக்கு.. எனக்குத்தான் உண்மை தெரிஞ்சிருச்சே.. எதுக்காக இன்னும் அதையே கண்டினியு பண்ற..?" என்று வெறுப்புடன் கேட்டாள் யாமினி..

"இது நாடகமல்ல தேவி.. தாங்கள் பகை முடித்து விட்டீர்களா..? அதைக் கூறுங்கள்.." பரத்குமார் சலனமில்லாமல் கேட்டான்..

"என்ன பகையை முடிக்கச் சொல்கிற..? எந்தப் பகையை முடிக்கச் சொல்கிற..? எனக்கு யாரோடும் பகையில்லை.."

"அப்படியென்றால் தங்களின் கைப்பையில் இருக்கும் இரட்டைக்குழல் ஆயுதத்தை தாங்கள் பிரயோகிக்க வில்லையா..?"

"அது பொம்மைத் துப்பாக்கி.. அதை யூஸ் பண்ணி ஒரு புல்லைக் கூடச் சுட முடியாது.. ஜோக்கடிக்காம கார் கதவைத் திறந்து விடு.."

"இது நகைச்சுவையில்லை தேவி.. பொம்மை ஆயுதத்தை அகற்றி விட்டு உண்மையான ஆயுதத்தைத்தான் தங்களின் கைப்பையில் நாங்கள் வைத்தோம்.. தாங்கள் பார்க்கவில்லையா..?"

"என்னது...?"

முகம் வெளுக்கக் ஹேண்ட் பேகிலிருந்த துப்பாக்கியை கையில் எடுத்துப் பார்த்தாள் யாமினி.. அவள் விரல்கள் நடுநடுங்கின..

'இதை மட்டும் நீரஜா அழுத்திப் பார்த்துக் குண்டு வெடிச்சிருந்தா...?'

கடவுளே என்று அவள் மனம் அரற்றியது.. சித்தார்த்தனைக் கொல்வதற்காக அகர்வாலிடமிருந்து துப்பாக்கியை வாங்கி வைத்திருக்கிறாள் என்று சித்தார்த்தன் நினைத்திருப்பானே..

"உன்னைக் கொல்லனும்டா முதலில..."

யாமினி சீற்றத்துடன் அகர்வாலின் பக்கம் திரும்பிச் சுட்டதில் அவன் கையில் குண்டு பாய்ந்து விட்டது..

"அரே பேக்கு..." என்று ஆரம்பித்த அகர்வால் சராமாரியாக இந்தியில் அவளைத் திட்ட ஆரம்பித்தான்..

"என்னடா கத்தற.. உன் செந்தமிழ் எங்கே போச்சு.."

யாமினி துப்பாக்கியைக் காட்ட.. முகேஷ் கார் கதவைத் திறந்து சாலையில் குதித்தான்.. பெற்ற மகனுக்கே அக்கறை இல்லாத போது எனக்கென்ன போச்சு என்று பரத்குமாரும் இந்தப் பக்கமாக சாலையில் குதிக்க..

"பார்த்துக்க..." என்றாள் யாமினி..

அகர்வால் பார்க்கும் நிலைமையில் இல்லை.. பெருகிக் கொண்டிருந்த ரத்தத்துடன் தட்டுத் தடுமாறி அவன் கார் கதவை திறந்த போது..

"மகளே..! உன் தந்தையை மறந்தாயா..?" என்ற செந்தமிழ் வசனம் கேட்டது..

'இவன் வாயை மூடிக்கிட்டு வலியில முணங்கிக் கிட்டு இருக்கானே.. எங்கேயிருந்து இந்த டயலாக் வருது..?'

உற்றுக் பார்த்த யாமினியின் கண்களில் பட்டது அகர்வாலின் கோட் காலரில் மறைவாக பொருத்தப் பட்டிருந்த பெரிய பட்டன்..

'இதில இருந்துதான் சத்தம் வருது...'

வெளியே குதிக்க முனைந்தவனின் கோட்டைப் பிடித்து யாமினி இழுத்ததில் கோட் அவள் கையோடு வந்து விட்டது..

அதை ஆராய்ச்சியாய் பார்த்தபடி காரை

விட்டு இறங்கினாள் யாமினி.. முகேஷீம் பரத்தும் ஓட ஆரம்பித்தார்கள்..

அகர்வாலால் அவர்களின் வேகத்துக்கு ஈடு கொடுத்து ஓட முடியவில்லை.. இருந்தாலும் தள்ளாடியபடி அவன் ஓட..யாமினி கோட்டின் காலரிலிருந்த பட்டனைத் தடவினாள்..

"பகை முடிப்பாய் நந்தினி.. இது உனது தந்தையான வீரபாண்டியன் உனக்கு இடும் கட்டளை.." என்றது பட்டன்..

'என்னடா இது..' விழி பிதுங்கியது யாமினிக்கு..

"இதோ இருக்கிறா.."

அவளருகில் வந்து நின்ற காரிலிருந்து எட்டிப் பார்த்த நீரஜா கூவினாள்.. தாமோதரன் இறங்கி வந்தான்.. அவள் கையிலிருந்த துப்பாக்கியைப் பார்த்து விட்டு..

"சுட்டுட்டாபோல இருக்கு சித்தார்த்.." என்று தலையில் கை வைத்தான்..

"யாரைச் சுட்ட..?" சித்தார்த்தன் அதட்டினான்..

பதில்சொல்லாமல் பட்டனிலேயே கவனமாக இருந்தாள் யாமினி.. நீரஜாவும் சித்தார்த்தனும் காரை விட்டு இறங்கி வந்தார்கள்..

"இது யாரோட கோட்..?" முகம் சுளித்தான் சித்தார்த்தன்..

"அகர்வாலோடது.." தன் போக்கில் பிரக்ஞை இல்லாமல் பதில் சொன்னாள் யாமினி..

"அவன் கோட்டை நீயேன் வைச்சிருக்கிற..? தலையைச் சுற்றி எறி.."

"இல்லை.. இதில் இருந்து செந்தமிழ் டயலாக்கா கேட்டுது.."

"வாட்..?"

சித்தார்த்தன் கோட்டைப் பிடுங்கி பட்டனை ஆராய்ந்து விட்டு..

"தாமு.. இது மினி டேப் ரிகார்டர்டா.." என்றான்..

"இப்பத்தான் இந்திக்காரன் செந்தமிழில பேசின தோட சீக்ரெட் என்னன்னு புரியுது.. இதை கோட்டில் பிக்ஸ் பண்ணிட்டு.. யாமினிகிட்டப் பேசும்போது நைசா விரலால் நிரடி ஆன் பண்ணி விட்டு வாயை அசைப்பான் போல.." தாமோதரன் வியப்புடன் சொன்னான்..

"இப்படிக்கூடச் செய்வாங்களா..?" அப்பாவியாய் கேட்டாள் யாமினி..

"உன்னைப் பார்த்தா எப்படியும் செய்வாங்க.." எரிந்து விழுந்தாள் நீரஜா..

"முதல்பிறவியில வீரபாண்டியனாப் பிறந்தவன் பகை முடிக்க வாளைக் கொடுக்கிறதுக்குப் பதிலா துப்பாக்கியைக் கொடுத்தானாம்.. இவளும் வாங்கிக்கிட்டாளாம்.. இப்பேற்பட்ட மைண்ட்லெஸ் வுமனை என்ன செய்கிறதுடா தாமு..?" சித்தார்த்தன் கேட்டான்..

"கழுத்தில மூணு முடிச்சப் போட்டு உன் பக்கத்திலேயே வைச்சுக்க.. அதுதான் இவளுக்கு ஷேஃப்.." தாமோதரன் சிரித்தான்..

"அதுக்கு முதல்ல இவ துப்பாக்கியாலே யாரைப் போட்டுத் தள்ளினான்னு கேளுடா.." யாமினியின் கையிலிருந்த துப்பாக்கியை காட்டினான் சித்தார்த்தன்..

"அகர்வாலைத்தான் சுட்டேன்.. அவன் செத்துத் தொலைக்கலை.." வெறுப்புடன் சொன்னாள் யாமினி..

"ஆர் யு ஷ்யூர்..? அகர்வாலை நீ சுட்டயா..?" பரபரப்புடன் கேட்டாள் நீரஜா..

"ம்ம்ம்.." புரியாமல் தலையசைத்தாள் யாமினி..

"ஓ.. மைடியர் யாமினி.. உனக்குப் புரியலையா.. உன் மனபயத்தை நீ ஜெயிச்சுட்ட.. அகர்வாலாலே உன்னை பிரெயின் வாஷ் பண்ண முடியலை.. உன்னோடபோன பிறவி பாதர்ன்னு அவன் பொய் சொன்ன போதும் அதை மனதில ஏத்திக்காம அவனைச் சுடத் துணிஞ்சே பாரு...

இனிமே உன்னைப் பத்தி நான் பயப்படத் தேவையே இல்லை.. அண்ணா.. உன் யாமினி தைரியசாலியா ஆகிட்டா.. உன் விரல் நகத்துக்குக் கூட ஆபத்தை உண்டு பண்ண மாட்டா.. மத்தவங்களாலே ஆபத்து வரவும் விட மாட்டா.. இனி உங்க மேரேஜ் நடக்கறதில எனக்கு எந்த அப்ஜெக்சனும் இல்லை.."

நீரஜா நிம்மதியுடன் சொன்னதை நம்ப முடியாமல் இமைகொட்டினாள் யாமினி.. மலை போல யாமினியின் வாழ்வை மறித்து நின்றவள் பனி போல விலகி விட்டதை அவளால் நம்ப முடியவில்லை..

அவர்களைக் கவனித்தபடி யதேச்சையாக தலையைத் திருப்பிய தாமோதரன்..

"டேய்.. டேய்.. லாரிடா.." என்று கூவினான்..

சித்தார்த்தனின் காரைப் பார்த்ததும் ஓட்டத்தை அதிகப் படுத்திய முகேஷீம், பரத்குமாரும் அகர்வாலையும் இழுத்துக் கொண்டு ஓடும் மும்முரத்தில் காலையின் திருப்பத்தில் திரும்பிய லாரியைக் கவனிக்காமல் அதில் மோதி எகிறி விழுந்தார்கள்..

அடித்துப் போட்ட லாரி நிற்காமல் போய்விட.. லாரியின் நம்பரைக் குறிக்கப் போன தாமோதரனை..

"என்ன அலுவலுக்கு குறிக்கறிங்க.." என்று அதட்டினாள் நீரஜா..

"இதைக் கையில வைச்சுக்கிட்டு என்ன பண்ற..?"

யாமினியின் கையிலிருந்த துப்பாக்கியைப் பிடுங்கி. கைக்குட்டையால் சுத்தமாகத் துடைத்து விட்டு அகர்வாலின் உடல்மீது எறிந்தான் சித்தார்த்தன்..

"குட் ஜாப்.." மெச்சிப் போனாள் நீரஜா..

"அவன் கையில துப்பாக்கிக் குண்டு பாய்ஞ்ச அடையாளம் இருக்கு.. போலிஸ் பாட்டுக்கு அந்த ஆங்கிள்ல என்கொயர் பண்ண ஆரம்பிச்சுட்டா வம்பு.. இந்தத் துப்பாக்கி இவனோடது.. இவனைச் சுட்டது இவனோட மகனா இல்லை

பரத்தான்னு போலிஸ் முடிவு பண்ணிக்கட்டும்.. நாம நம்ம வேலையைப் பார்க்கப் போகலாம்.. மேரேஜீக்கான வேலைகளைப் பார்த்தாகனுமே.. ஒரே மேடையில இரண்டு மேரேஜ் நடக்கப் போகுது.. இந்த காஞ்சிபுரத்தையே கலக்கனும்னு டாடியும் மம்மியும் சொல்லிக்கிட்டு இருக்காங்க.. அதுக்கான ஏற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டாமா..?"

யாமினியைப் பார்த்துக் கண் சிமிட்டினான் சித்தார்த்தன்.. உயிர்ப்பில்லாமல் இருந்த யாமினியின் முகத்தில் உயிர்ப்பு வந்தது.. உதடுகள் துடிக்க ஏதோ சொல்ல விழைகிறவளைப் போல சித்தார்த்தனைப் பார்த்தவளின் பார்வையில் ஏதோ ஒரு செய்தி மறைந்திருந்ததில் சித்தார்த்தன் புருவங்களைச் சுருக்கி அவளை உற்றுப்பார்த்தான்..

சித்தார்த்தனிடம் எதையோ சொல்லத் துடித்தவளாய் யாமினியும் அவனையே பார்த்தாள்.. சங்கடங்கள் விலகிப் போய்விட்ட சந்தோசத்துடன் தங்களுக்குள் ரகசியமாக பேசி சிரித்துக் கொண்டிருந்த நீரஜாவும்.. தாமோதரனும் சற்றுத் தள்ளி நடக்க.. சித்தார்த்தன் பதட்டத்துடன் யாமினியை நெருங்கி.. அவள் தோள்களைப் பற்றி உலுக்கி..

"என்னடி..?" என்று கேட்டான்..

"சித்தார்த்.." தாழ்ந்த குரலில் தவித்தாள் யாமினி..

"சொல்லு யாமினி.. எதையோ சொல்லனும்னு நீ தவிக்கிற தவிப்பை என்னால் புரிஞ்சுக்க முடியுது.. அது என்னன்னுதான் தெரியலை.. எதுவா இருந்தாலும் என்னிடம் சொல்லுடி.. நான் உன்னுடைய சித்தார்த்தன்.."

"இது போதும் எனக்கு.."

சித்தார்த்தனின் சட்டைக் காலரை கொத்தாக இறுக்கிப் பிடித்தபடி நிற்க முடியாமல் தொய்ந்தவளாய் அவன் தோளில் சாய்ந்தாள் அவள்.. அவள் உடலின் பாரத்தை முழுதாக தன்மீது சுமத்திக் கொண்டவனாக அவளைத்

தாங்கிப் பிடித்துக் கொண்ட சித்தார்த்தன் தவித்துப் போனான்..

"உன் மனசில என்னதாண்டி இருக்கு..?"

"நீங்க மட்டும்தான் இருக்கீங்க.. இந்தப் பிறவியில மட்டுமில்லை.. ஏழு பிறவிகளிலும் உங்களைத் தவிர வேறு யாரையும் நான் மனசால் கூட நினைச்சதில்லை.."

"யாமினி..! மை டியர்..! இதுதான் எனக்குத் தெரியுமே.."

"உங்களுக்குத் தெரியாதது நிறைய இருக்கு சித்தார்த்.. அதை உங்களிடம் சொல்ல முடியாம நான் பயந்தேன்.."

"யாமினி.."

"ம்ம்ம்.. இப்பச் செத்துப் போனானே அகர்வால்..! இவனும் இவனோட கூட்டமும் நான் எங்கே போனாலும் என்னை ஃபாலோ பண்றாங்கன்னு எனக்குத் தெரியாது சித்தார்த்.. அடுத்த முறை என்னைப் பார்க்கிறப்ப.. நீ இந்த இடத்துக்குப் போன.. இந்த நபரை மீட் பண்ணின.. இத்தனை செகண்ட்ஸ்ல இன்ன விவரத்தைப் பேசினன்னு புள்ளி விவரத்தோட செந்தமிழில சொல்லி என்னை அரள வைச்சாங்க.. வெளியிலதான் இப்படின்னா.. வீட்டுக்குள்ள கிச்சன்ல நான் வேலை செய்கிறது முதற்கொண்டு.. ரூமில நான் ஃபெர்பியூம் போட்டுக்கிறது முத வரைக்கும் லிஸ்ட் போட்டு என் முன்னாடி வைச்சாங்க.. என்கிட்ட இருக்கிற சேலைகளில எந்தச் சேலை எனக்கு ராசியான சேலை.. அது என்ன கலரில.. என்ன டிசைனில இருக்கும்.. எந்தச் சேலை எனக்கு ராசியில்லாத சேலை.. அது என்ன கலரில.. டிசைனில இருக்கும்ன்னு எனக்கே எடுத்துச் சொன்னாங்க.. படுத்தவுடன் நான் தூங்கிருவேனா.. இல்லை.. புரண்டு புரண்டு படுத்து பெட் பூராவும் சுத்தி வருவேனான்னு தீவிரமா ஆராய்ச்சி பண்ணி என்கிட்ட ரிப்போர்ட் சப்மிட் பண்ணினாங்க.. எதையும் அவங்க விட்டு வைக்கலை சித்தார்த்.. அக்கம் பக்கத்தில இருக்கிறவங்ககூட நான் பேசறது முதற்கொண்டு அத்தனையையும் வாட்ச் பண்ணி என்கிட்ட டெலிகாஸ்ட் பண்ணினதில நான் களைச்சுப் போயிட்டேன்.."

"நீ தைரியமானவன்னில்ல நினைச்சுக்கிட்டு இருந்தேன்..?"

"எதிராளிகள் கோழைகளாச்சே சித்தார்த்.. பேடிகளாச்சே.. கண்ணுக்கு முன்னால் கத்தியெடுத்துச் சண்டை போடற ஆம்பளை சிங்கமாயிருந்தா வந்து பாருங்கடா வட்டப் பாறைக்குன்னு நானும் கத்தியை உறுவி சண்டைக்குப் போயிருக்கலாம்.. இவனுக அப்படியில்லையே.. பெண்கூட யுத்தம் பண்ண நிழலைப் போல மறைந்து நின்னு.. 'நிழல் ஆட்டம்..' போடறவங்களாச்சே.. இவங்க கூட எப்படிப் போராட..?"

"என்கிட்டச் சொல்லியிருக்கலாமேடி..?"

"சொன்னா நீங்க நம்புவீங்களா..? மறுபிறவிக் கதைகளை நம்பலாம் சித்தார்த்.. அதில நேரடியான போராட்டமிருந்தது.. இந்தப் பிறவியில அப்படி யில்லையே.. இதைப் போல நிழல் ஆட்ட யுத்தத்தில கத்தியெடுத்து நான் யாரைக் குத்த..?"

"யாமினி.."

"பெண்ணில்லாத உலகத்தில இந்தப் பேடிகள் பிறக்கலை சித்தார்த்.. ஒரு ஆணோட வயிற்றில இந்த ஆண்மையில்லாதவங்க கருவா குடியிருக்கலை.. இவங்களைப் பெத்ததும் பெண்.. கூட வளர்ந்த அக்கா, தங்கைகளும் பெண்கள் தான்.. இவனுகளுக்கு மகளாப் பொறக்கிற விதி படைச்ச பரிதாப ஜீவன்களும் பெண்கள்தான்.. ஆனா.. இந்த நாய்கள் அதையெல்லாம் யோசிக்காம லிமிட்டைத் தாண்டி என்னை டார்ச்சர் பண்ணிக்கிட்டு இருந்தானுக சித்தார்த்.."

"முட்டாள்..! போலிஸ்கிட்டப் போகிறதுக்கென்ன..?"

"என்னன்னு அவர்களிடம் சொல்றது..? இப்படி யெல்லாம் நடக்குமான்னு என்னையே அவங்க கேள்வி கேட்பாங்க.. விளக்கம் சொல்லி நான் களைச்சுப் போய் விழுகறதுதான் மிச்சமாகும் சித்தார்த்.."

"மீடியாங்கிற மிகப் பெரிய சக்தி நம்ம முன்னாடி இருக்கே.."

"அந்த மீடியாவே அவங்க கையில இருக்கே.. உங்களுக்குத் தெரியாது சித்தார்த்.. எந்த வார இதழ் மேல நான் ரொம்பவும் மதிப்பு, மரியாதை வைச்சிருந்தேனோ.. அந்த வார இதழ் இவங்களுக்கு சப்போர்ட்டா நிக்குது.. உலகம் பூராவும் விரும்பிப் பாக்கற டி.வி சேனல் இவங்க கையில இருக்கு.. இதைத் தாண்டின மீடியாவுக்கு நான் எங்கே போவேன்..? இத்தனைக்கும் மேலா ஒன்னு இருக்கு சித்தார்த்.."

"என்னடி அது..?"

"பணம் சித்தார்த்..! செல்வாக்குல கொடி கட்டிப் பறக்கிற இவங்ககிட்டக் கோடி கோடியாய் பணம் கொட்டிக் கிடக்கே.. என்கிட்ட என்ன இருக்கு..? நான் சாமானியப் பெண் சித்தார்த்.. போராடி வாழ்க்கையில முன்னேறினவ.. மிடில் கிளாஸ்..! உலகம் பூராவும் விலைக்கு வாங்க முடியற பொசிசன்ல இருக்கிறவங்க செய்கிற குற்றத்தை விரல் நீட்டி நான் சொன்னா கேட்கிறதுக்கு யாரிருக்காங்க..? எனக்கு நியாயம் சொல்ல யார் வருவாங்க..?"

"நானிருக்கேன் யாமினி.. உனக்கு நானிருக்கேன்.."

"உங்களைத்தான் என் கையாலே கொல்ல வைக்கனும்னு இவனுக பாடாய் பட்டானுகளே.. என்னால முடியலை சித்தார்த்.. அதனால.."

"அதனால..?"

"நான் உயிரோட இருந்தாத்தானே இவனுக என்னை வீட்டுக்குள்ளேகூட நிழலா ஒட்டிக்கிட்டு வந்து உயிரை குடிப்பாங்கன்னு விசத்தைக் குடிச்சிட்டேன்.."

யாமினியின் குரல் பலவீனமாகி தேய்ந்தது.. அவன் மேல் தொய்ந்து சாய்ந்திருந்தவள்.. உணர்வு குறைந்த நிலையில் அவன்மீது சரிந்து விழுந்ததில் அவளைத் தாங்கிப் பிடித்து மடியில் கிடத்திக் கொண்ட சித்தார்த்தன்.. அவள் கன்னங்களில் தட்டி.. உணர்வைத் தட்டி எழுப்ப முயன்றபடி..

"யாமினி..!..." என்று கத்தினான்..

சாலையோர மரத்தில் சாய்ந்து நின்று.. அதையொட்டிய வயல்களின் பசுமையை ரசித்தபடி.. திருமணத்திற்குப் பின்னால் தேநிலவுக்கு எங்கே போகலாம் என்று கிசுகிசுத்துக் கொண்டிருந்த நீரஜாவும், தாமோதரனும் அந்த சப்தத்தில் தேநிலவுக் கனவுகளைத் துரத்தி விட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்..

"தாமு..! யாமினிக்கு என்னவோ ஆகியிருக்கு.."

நீரஜா பதட்டத்துடன் ஓடினாள்.. அவளை முந்திக் கொண்டு முன்னால் ஓடிய தாமோதரன் சாலையில் மண்டியிட்டுத் தன் மடியில் யாமினியைக் கிடத்தியிருந்த சித்தார்த்தனிடம்..

"என்னடா..? என்னடா ஆச்சு..?" என்று பதறினான்.

"இவ விசத்தைக் குடிச்சிருக்காடா..?" சித்தார்த்தன் பதறினான்..

"வாட்..?" நீரஜா வாய் பொத்தினாள்..

"எப்ப அண்ணா..? நம்ம வீட்டுப் பார்ட்டிக்கு வந்த பின்னாலே பாய்சன் சாப்பிட்டுட்டாளா..? மை காட்..! நான் நடத்தின டிராமாவாலே இந்த முடிவை எடுத்திட்டாளா..?"

"இல்லை நீரஜா.."

சோகையாக தலையசைத்து மறுத்தாள் யாமினி.. அவளது கை வெகு பிரியத்துடன் நீரஜாவின் கையைப் பிடித்துக் கொண்டது.. அவள் முகத்தில் தெரிந்த வாத்சல்யத்தில் குற்ற உணர்வுடன் கண்ணீர் விட்டாள் நீரஜா..

"வருத்தப்படாதீங்க.. உங்கமேல எந்தக் குற்றமும் இல்ல.. சித்தார்த்தை என்கிட்டயிருந்து காப்பாத்தனும்னு நீங்க துடிச்சதைப் போலதான் நானும் துடிச்சேன்.. என்னால என்னோட சித்தார்த்துக்கு ஆபத்து வந்திருமோன்னு நீங்க பயந்ததைப் போலதான் நானும் பயந்தேன்.. என்கிட்டயிருந்து சித்தார்த்தை விலக்கி வைக்கனும்னு

நீங்க முடிவு பண்ணினதைப் போலதான் நானும் முடிவு பண்ணினேன்.. இந்தப் பார்ட்டியில நீங்கவேற ஒரு டிராமா

பண்ணி என்னை சித்தார்த்கிட்டயிருந்து விலக்கி வைக்க பிளான் பண்ணியிருக்கீங்கன்னு எனக்குத் தெரியாது.. அதனால வீட்டில இருந்து கிளம்பறப்பவே விசத்தைக் குடிச்சிட்டுத்தான் கிளம்பி வந்தேன்.."

"யாமினி.."

"அழுகாதீங்க நீரஜா..! உங்க பேரண்ட்ஸ் என்னை மருமகளா ஏத்துக்கத் தயாரா இருக்காங்களே.. அது போதும் எனக்கு.. உங்களுக்கும் என் மேலயிருந்த கோபம் போய் பாசம் வந்துருச்சு.. இதைவிட வேற எனக்கு என்ன வேணும்..? நான் சந்தோசமா செத்துப் போவேன்.."

"சாகவாடி பிறந்து வந்த..?"

சித்தார்த்தன் யாமினியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.. பலவீனமாக இருந்த யாமினி அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் விழி செறுக.. தாமோதரன் அவன் கைபிடித்துத் தடுத்தான்..

"கன்ட்ரோல் யுவர் ஷெல்ப் சித்தார்த்.."

"என்னவெல்லாம் பேசறாடா.. இத்தனை பிறவிகளிலும் வாழ முடியாத வாழ்க்கையை வாழ ஏழாவது பிறவியில பிறந்து வந்திருக்கோம்டி.. அதையும் பொய்யாக்கி சாகப் போகிறியா..? நான் உன்னைச் சாக விட மாட்டேண்டி.. உன்னைக் கூப்பிட்டுப் போக தெய்வங்க வந்தா நிற்க வைச்சுக் கேள்விகளைக் கேட்பேண்டி.."

சித்தார்த்தன் யாமினியைத் தூக்கிக் கொண்டு காருக்கு விரைந்தான்.. தாமோதரன் டிரைவிங் சீட்டில் மின்னல் வேகத்தில் பாய்ந்து உட்கார்ந்தான்.. யாமினியை மடியில் கிடத்திய சித்தார்த்தன் பின் சீட்டில் சாய்ந்து விட.. நீரஜா முன் சீட்டில் உட்கார்ந்தாள் கார் பறந்தது.. அடுத்த ஆறாவது நிமிடத்தில் நெடுஞ்சாலையில் இருந்து பிரபலமான பெரிய மருத்துவமனையில் கார் நுழைந்தது..

டாக்டர்களிடம் யாமினியை ஒப்படைத்த சித்தார்த்தன் உன்மத்தம் பிடித்தவனைப் போல அங்கும் இங்குமாக நடந்து அலை பாய்ந்து கொண்டிருக்க.. தாமோதரன்

செல்போனை எடுத்தான்.. யாமினியின் வீட்டுக்குப் போனைப் போட்டு விவரத்தைச் சொன்னான்.. சுவரில் சாய்ந்து நின்று விசனத்துடன் கண்களை மூடிக் கொண்டான்.. அவன் மனதில் அவன் எப்பேற்பட்ட சுடுசொல்களை வீசினாலும் சிரித்த முகத்துடன் அவற்றைப் பொருட்படுத்தாமல் அவனிடம் பேசும் யாமினியின் முகம் வந்தது.. துயரம் எழுந்தது..

'நீ பிழைச்சுக்கனும் யாமினி.. இல்லேன்னா.. நானும் நீரஜாவும் வாழ்க்கையிலே சேரவே மாட்டோம்.. எங்களால் எங்களை மன்னிக்கவே முடியாமல் போய்விடும்.. எங்களுக்காக நீ பிழைத்து வா..'

அத்தியாயம் -111

ஓங்காரியே ! சுழன்றாடி வா ..

உன் மகளைக் காக்க வா ..

கைகுவித்தேன் காமாட்சி ..!

காஞ்சியின் தேவதையே ..!

எமைக் காத்து நிற்பாய்

விழாக்கோலம் பூண்டிருந்தது காஞ்சி..!

நரசிம்ம பல்லவன் காலத்தில் பூண்டிருந்த விழாக்கோலம் போல அந்நாள் இருந்தது.. பொன்னால் வேயப்பட்ட நகரம் என்பதற்கினங்க அன்று அது ஜொலிஜொலித்தது..

இல்லையா பின்னே..? அந்தநாள் எப்படிப்பட்ட நாள்..? காஞ்சியின் ராஜ வம்சத்தைச் சேர்ந்த விவேகானந்தன் பெற்ற மகன் சித்தார்த்தனுக்கும், யாமினிக்கும்.. அவருடைய பெற்ற மகள் நீரஜாவுக்கும், தாமோதரனுக்கும் திருமணம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாள் அல்லவா அது..!

இந்தியாவின் அனைத்து வி.ஐ.பிக்களும் அங்குதான் குவிந்திருந்தனர்.. நிருபமாவின் அப்பா அரசியல் கட்சியின் தலைவர் என்பதால் மத்திய, மாநில மந்திரிகள்

வந்து கொண்டே இருந்தார்கள்.. காஞ்சிக்குள் வரும் அனைத்துச் சாலைகளும் போக்குவரத்து நெருக்கடியுடன் கார்களால் நிறைந்திருந்தன.. வாண வேடிக்கையும், கொண்டாட்டமுமாக வந்து கொண்டிருக்கும் விருந்தினர் களை விவேகானந்தன் குருப் ஆஃப் கம்பெனிஸில் வேலை பார்ப்பவர்கள் வரவேற்றுக் கொண்டிருந்தார்கள்..

சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனி வெளிநாடுகளில் வர்த்தகம் செய்வதால்.. அவனுடைய திருமணத்தில் கலந்து கொள்ள வந்திருந்த வெள்ளைக்காரர்கள் இந்திய பாரம்பர்ய முறைப்படி நடக்கும் சித்தார்த்தனின் திருமணத்தை விழி அகலப் பார்த்தார்கள்..

மணமேடையில் அமர்ந்திருந்த யாமினி.. லேசாக விழிகளைத் திருப்பி மாப்பிள்ளைக் கோலத்தில் பட்டு வேட்டியும், சட்டையுமாக உட்கார்ந்திருந்த சித்தார்த்தனைப் பார்த்தாள்.. கம்பீரமான அவனது அழகில் அவள் மனம் மயங்கியது.. அதே சமயத்தில் ஹோமப் புகை கண்களைக் கரிக்க அவளைப் பார்த்த சித்தார்த்தன் லேசாக கண்சிமிட்டி வைத்தான்.. யாமினியின் முகம் சிவந்தது..

'கள்ளன்..!'

அந்த உள்ளம் கவர் கள்வன் அவள் கழுத்தில் தாலியைக் கட்டியபோது அவளையுமறியாமல் மணக் கோலத்தில் தாமோதரனின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த நீரஜாவைப் பார்த்தாள் யாமினி.. அவள் விழிகள்..

'விண்ணுக்கும், மண்ணுக்கும் உறவு உண்டாகி விட்டது.. மண்ணுக்கு விண் கிடைத்து விட்டது..' என்று சொல்லாமல் சொல்லியதைப் புரிந்து கொண்ட பாவனையுடன் இமைமூடித் திறந்தாள் நீரஜா..

சித்தார்த்தனின் கரம் பற்றி.. அக்கினியை வலம் வந்தபோது யாமினியின் மனம் விகசித்தது.. அவள் மனதில் பாடல் எழுந்தது..

'அந்த வானத்தைப் போல

மனம் படைச்ச மன்னவனே..!

பனித்துளியைப் போல

குணம் படைச்ச தென்னவேன..!

மஞ்சளிலே ஒரு நூலெடுத்து..

அந்த விண்ணுக்கும் மண்ணுக்கும்

சம்பந்தம் உண்டுன்னு

சொன்னது யாரு..?

அது மன்னவ்ன தேரு..!'

யாமினி பிழைத்து விட்டாள்.. தாமோதரனின் பிரார்த்தனையும் நீரஜாவின் மருகலும்.. சித்தார்த்தனின் துடிப்பும் அவளை மரணத்தில் வாயிலில் இருந்து மீட்டு வந்து விட்டன..

சித்தார்த்தன் புயல் வேகத்தில் செயல்பட்டான்.. யாமினிக்கான தொந்தரவுகளை மாநில முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு போனான்..

"பெண்களுக்கெதிரான வன்முறைக்கே கடுமையான சட்டங்கள் இருக்கிறப்ப.. இதைப் போல டார்ச்சர்களுக்கு அதைவிட கடுமையான தண்டனை இருக்கு மிஸ்டர் சித்தார்த்தன்.. பாதிக்கப்பட்டவங்க கம்ப்ளெயிண்ட் பண்ணினாத்தானே நடவடிக்கை எடுக்க முடியும்..?" என்று கேட்ட முதலமைச்சர் யாமினியின் வீட்டைச் சோதனை போட உத்தரவிட்டார்..

வீட்டின் அனைத்துப் பகுதிகளிலும் நுணுக்கமான கேமராக்கள் கிடைத்தன.. அவற்றை யாமினியிடம் காட்டி..

"பார்.. இதை வைச்சுத்தான் அவனுக ஆருடம் சொல்லியிருக்கானுக.. அது தெரியாம பயந்தியே.."

என்று செல்லமாக அவள் தலையில் குட்டு வைத்தான் சித்தார்த்தன்..

குற்றவாளிகள் சாலை விபத்தில் இறந்து விட்டதால் கடவுளே அவர்களைத் தண்டித்து விட்டாரென்று கேஸின்

ஃபைல் முடித்து வைக்கப் பட்டது.. யாமினி மன பயங்களில் இருந்து முழுமையாக விடுபட்டு வெளியில் வந்தாள்..

இதோ.. நிழல் ஆட்ட யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு தெளிந்த மனதுடன் சித்தார்த்தனுக்கு மனைவியாகி அக்கினியை வலம் வந்து கொண்டிருக்கிறாள்..

அதே மேடையில் நீரஜாவுக்கும், தாமோதரனுக்கும் திருமணம் நடந்தது.. அம்பிகாவின் கண்கள் பனித்தன.. மனம் விரும்பிய பெண்ணே மகனுக்கு மனைவியாகி விட்டதில் ஈஸ்வரனின் மனம் நிறைந்தது..

மணமக்கள் நால்வரும் காஞ்சிபுரத்தின் ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்திற்கு தரிசனம் செய்யப் போனார்கள்.. யாமினியின் மனதில் சிவகாமி வந்தாள்.. சித்தார்த்தனோ தன்னை நரசிம்ம பல்லவனாகவே உணர்ந்தான்..

அன்று பிரிந்த அவர்கள் இருவரும் ஏழாவது பிறவியில் ஒன்று சேர்ந்து விட்டதை எண்ணி அவர்களின் மனங்கள் நெகிழ்ந்தன.. முதல்பிறவியில் பிரிந்தவர்கள்.. ஏழாவது பிறவியில் ஒன்று சேர்ந்து வணங்கி நின்ற போது.. அவர்களை ஒன்று சேர்த்த ஏகாம்பரேஸ்வரர் கோவிலின் மணியை ஒலிக்க வைத்து அவரின் ஆசி அவர்களுக்குப் பரிபூரணமாக கிட்டியிருப்பதை உணர்த்தினார்.. அம்பிகையையும் வணங்கியபின்னால் மணமக்கள் வரதராஜப்பெருமாள் கோவிலுக்குப் போனார்கள்.. பெருமாளையும், நாச்சியாரையும் மனம் குளிர சேவித்து விட்டு.. காஞ்சியின் மற்ற கோவில்களுக்கும் சென்றார்கள்..

அது விவேகானந்தன், நிருபமாவின் விருப்பம்..

"இது கோவில் நகரம்டா சித்தார்த்.. நீயும் உன் தங்கையும் இந்த ஊரில் பிறந்து வளர்ந்தவங்க.. மேரேஜ் முடிஞ்சதும் இந்த ஊரில இருக்கிற எல்லாக் கோவில்களுக்கும் போய் ஆசி வாங்கிட்டு வந்திருங்க.. இது எங்களோட வேண்டுதல்டா.."

பெற்றவர்களின் வேண்டுதல்களை பிள்ளைகள் நிறைவேற்றினார்கள்..

இந்து மதத்தைச் சார்ந்தவர்களின் ஏழு புனித நகரங்களுள் ஒன்றான காஞ்சிபுரத்தில் கோவில்கள் நிறைந்திருந்தன.. அது கோவில் நகரம்..! பஞ்சபூதங்களில் நிலமாக சிவபெருமான் காட்சிதருவது காஞ்சி, ஏகாம்பரேஸ்வர் கோவில்தான்.. ஏழாம் நூற்றாண்டின் பழமையான கைலாசநாதர் கோவிலில் அம்பிகையையும் அவரையும் வணங்கி விட்டு.. மணமக்கள் நால்வரும் பல்லவ பெருமாள் கோவிலுக்குச் சென்றார்கள்.. அம்பாளையும், பெருமாளையும் சேவித்த பின்னால் காரைத் திருநாதர் கோவிலுக்குப் போனார்கள்.. கார் சர்பேஸ்வரர் கோவிலுக்குப் போனபோது..

"இந்த தலத்தில்தான் மகாவிஷ்ணு கூர்ம வடிவில்.. அதான்.. ஆமை வடிவில சிவனை வழிபட்டாராம்.." என்று யாமினிக்கு ஸ்தல புராணம் சொன்hனன் சித்தார்த்தன்..

"பார்த்தியா.. புதுமாப்பிள்ளை தன் பெண்டாட்டிக்கு கைடு வேலை பார்க்கிறார்.." தாமோதரன் கிண்டலடித்தான்.

"யாமினி கொடுத்து வைத்தவள்.. இங்கேதான் அதுக்கான வழியைக் காணோமே.." நீரஜா அவன் காலை வாரினாள்..

"எங்கே..? நீயும் நானும் இதே ஊரில பிறந்து வளர்ந்தவங்க.. உனக்கு எப்படி நான் கைடு வேலையைப் பார்க்கிறது..?" தாமு சலித்துக் கொண்டதில் நால்வரும் சேர்ந்து சிரித்தார்கள்..

வாழ்க்கை வண்ணமயமாக இருப்பதைப் போல இருந்தது யாமினிக்கு.. இது போல மனம் விட்டுச் சிரித்து வாழும் வாழ்வு அவளுக்கு கை கூடியிருக்கிறதா..? வழக்கருதீஸ்வரர் கோவிலில் வணங்கியபோது..

"இந்தக் கோவிலில் வழிபட்டால் வழக்குகள் தீருமாம்.." என்றான் சித்தார்த்தன்..

"நமக்குள்ள இருந்த வழக்குகள்தான் முடிவுக்கு வந்திருச்சே.." நீரஜா சிரித்தாள்..

இரவட்டனேசுவர கோவிலுக்குச் சென்றார்கள்.. பல்லவ மன்னர்களால் கட்டப்பட்ட அந்தக் கோவில் தொல்பொருள் நினைவுச் சின்னமாக பாதுகாக்கப் படுவதைச் சொன்னான் சித்தார்த்தன்.. ஆதிசங்கரர் ஸ்தாபித்த ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடத்தை தரிசித்து விட்டு.. காஞ்சியின் காவல் நாயகியான காமாட்சியம்மனின் அருள் வேண்டி அவள் ஆலயத்தில் கை கூப்பி நின்றார்கள் அவர்கள்.. குமரகோட்டம் போனவர்கள்.. சித்திர குப்தரின் கோவிலுக்குப் போனபோது யாமினி ஆச்சரியப்பட்டாள்.

"நம்ம அக்கவுண்டண்ட் சபாபதியெல்லாம் என்ன கணக்குப் பார்க்கிறாரு..? இவரோட கணக்குக்கு முன்னாலே யாரோட கணக்கும் நிக்க முடியாது.. கணக்கில இவர்தான் நம்பர் ஒன்.." சித்தார்த்தன் சிலாகித்தான்..

"பயமே இல்லாம பேசறிங்களே.." யாமினி சிலிர்த்தாள்..

"என்ன பயம்..? இவர் வேலையை இவர் செய்கிறார்.. நாம இப்ப இவரைக் கும்பிடற வேலையைச் செய்வோம்.." என்றான் சித்தார்த்தன்..

பஞ்சலோக தெய்வச் சிலைகளாக இருந்த சித்திரகுப்தரையும் அவருடைய அருமை தேவியையும் தரிசனம் செய்துவிட்டு இலங்கை ஆதிகேசவப்பெருமாள் கோவிலுக்குப் போனார்கள்.. எட்டு கைகளுடன் நின்ற பெருமாளையும், தேவியையும் தரிசனம் செய்து விட்டு வீடு திரும்பியவர்களின் மனம் நிறைந்திருந்தது..

பட்டின் நகரமான காஞ்சியில் இருக்கும் போது மனம் பட்டைப் போல மென்மையானதாக ஆகி விட்டதைப் போல உணர்ந்தாள் யாமினி.. மறுவீட்டு விருந்துக்கு அழைக்க மறுநாள் வருவதாகச் சொல்லி விட்டு யாமினியின் குடும்பத்தினர் கிளம்பி விட்டனர்.. விவேகானந்தனின் வீட்டில் ஆரத்தி எடுத்து யாமினியை அழைத்துக் கொண்டனர்..

'இனி இதுதான் என் வீடு..!'

புகுந்த வீடு இனிமையான மல்லிகைப் பந்தலாக இருந்தது.. தாமோதரனும் நீரஜாவும் தாமோதரனின் வீட்டிற்குப் புறப்பட்டார்கள்.. அவர்களுடன் சித்தார்த்தனும் யாமினியும் போனார்கள்.. நீரஜாவின் பிறந்த வீட்டைப் போல மாளிகையாக இல்லாவிட்டாலும்.. சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியின் ஜி.எம்மின் வீடு பெரிதாகவும்.. அழகாகவும் இருந்தது..

தன் பிறந்த வீட்டை விட கணவனின் வீட்டில் வசதிகுறைவாக இருக்கிறது என்ற எண்ணமே நீரஜாவின் முகத்தில் தெரியவில்லை.. என்னவோ.. அவளது பிறந்த வீட்டை விடப் பெரிதான அரண்மனையில் வாழ வந்திருப்பவளைப் போல சந்தோசத்தில் முகம் மலர்ந்திருந்தாள் அவள்..

"இந்த வீட்டுக்கு மகாலட்சுமி வந்தாச்சும்மா.." அம்பிகா மருமகளை அன்போடு அழைத்துக் கொண்டாள்..

இரவு வரை அங்கே இருந்து விட்டு சித்தார்த்தனின் வீட்டுக்கு யாமினியும் சித்தார்த்தனும் திரும்பியபோது அவர்களுக்கான முதலிரவு அறை அலங்கரிக்கப் பட்டு அவர்களுக்காக காத்திருந்தது..

"தாமு வீட்டிலேயே சாப்பிட்டுட்டோம் மம்மி.. பசிக்கலை.."

சித்தார்த்தன் மாடியேறி விட.. தயங்கி நின்றாள் யாமினி..

"வாம்மா.." அன்புடன் அவளை அழைத்து மெலிதான அலங்காரம் பண்ணி சித்தார்த்தனின் அறை வாசல் வரைக்கும் வந்து..

"ஆல் த பெஸ்ட்.." என்று புன்னகையுடன் விலகிச் சென்றாள் நிருபமா..

தனியறையில் முதல்முதலாக கணவன் என்ற உறவு முறையில் தன் காதலனைச் சந்திக்கப் போகும் நடுக்கத்துடன் காலடியை எடுத்து வைத்தாள் யாமினி..

"இவ்வளவு நேரமா..?"

வேகத்துடன் அவளை ஆக்ரமித்துக் கொண்ட சித்தார்த்தனின் கண்களில் தாகம் இருந்தது.. ஆறு பிறவிகளாய் சேர்த்து வைத்திருந்த தாபங்களை அவளிடம் கொட்டிக் கவிழ்த்தான் அவன்.. ஈடு கொடுத்தாள் அவள்.. தேக்குமரத்தைத் தழுவிக் கொண்டது பூங்கொடி.. விடியும்வரை சுகித்திருந்தவர்கள்.. விடியலின் அருகாமையில் உறங்க நினைத்தபோது.. யாமினியின் இதழ்கள் அவளையுமறியாமல் பாடின..

"ஏழு தினங்கள் ஒரு வாரம்..!

ஏழு ஸ்வரங்கள் ஒரு ராகம்..!

ஏழு முறைதான் பிறவி வரும் - அந்த

ஏழிலும் நமக்குள் காதல் வரும்.."

- முற்றும் -